Koviloor Digital Library

பெரிய புராணம்


இரண்டாங் காண்டம்

(திருஞான சம்பந்தர் புராணம்)

KOVILOOR ANDAVAR
A. No. 3127
LIBRARY, KOVILOOR

Koviloor Digital Library

Koviloor Digital Library



திருஞானசம்பந்தசுவாமிகள்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பெரியபுராணம்.

இரண்டாங்காண்டம்.

ஐந்தாவது-வம்பறுவரிவண்டுச்சருக்கம்.

ஆளுடையபிள்ளையாரென்னும் திருஞானசம்பந்தசுவாமிகள் புராணம்.

கடவுள்வாழ்த்து.

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவ
னிலவு லாவிய நீர்மலி வேணிய
னலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

நூல்.

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

இதனதுபதப்பொருள்.

வேதநெறிதழைத்தோங்க=வைதிகமார்க்கந்தழைத்து எந்நாளும் நிலை பெறவும்; மிகுசைவத்துறைவிளங்க=மேன்மைமிக்க சைவமார்க்கம் நிலை பெறவும்; பூதபரம்பரைபொலிய=பரிசுத்தமாகிய அவ்வைதிகசைவ பரம்பரா நிலைபெற்றோங்கவும்; புனிதவாய்மலர்ந்தழுத=(சிவஞானங்கமழும்) பரிசுத்தமான திருவாய்மலர்ந்தழுத; சீதவள வயற்புகலித் திருஞானசம்பந்தர் =குளிர்ந்தநீர் வளமிக்கவயல்சூழ்ந்த சீகாழியிலவதரித்த ஆளுடையபிள்ளையாரது; பாதமலர்தலைக்கொண்டு=திருவடித்தாமரைகளைச் சிரத்தின்மேற்

Koviloor Digital Library

கொண்டு ; திருத்தொண்டு பரவுவாம்=(சிவபெருமானருள்வழிப்பட்டொழுகிய) அவரது திருத்தொண்டின் நிலைமையையாம்வாழ்த்துவாம்—எ-று.

யாம் என்றது தோன்ருவெழுவாய்.

வேதமெல்லாமதங்கட்கு மூலமாதலின் அதன்வழித்தாய அவ்வைதிக மார்க்கம் நிலைபெறவென்பார் வேதநெறிதழைத்தோங்கவென்றும், அவ்வேதமூலமான சமயங்களெல்லாவற்றினும் சித்தாந்தசைவமுயர்ந்ததென்பார் மிகுசைவத்துறையென்றும், வேதநெறிதழைத்தோங்குங்கால் அதன்சாரபூதமானசித்தாந்த சைவம்நிலைபெற்றுவிளங்குமென்பார் விளங்கவெனவும், அவ்விரண்டும் நிலைபெறவே பரிசுத்தமான அவ்வைதிகசைவபரம்பரைகள்பொலியுமென்பார் பூதபரம்பரை பொலியவெனவும், இவ்வாறு புறச்சமயங்கள் பாழ்பட வேதமார்க்கமும் வேதசாரமாகிய சித்தாந்தசைவமும் ஓங்குதற்குக் காரணம் பரஞானப்பாலுண்ணும்பொருட்டுத் திருவாய்மலர்ந்தழுதலென்பார் புனிதவாய் மலர்ந்தழுதவென்றுங் கூறினர். பூதம்-பரிசுத்தம். மிகுசைவமென்றது சித்தாந்தசைவத்தையாதலின் ஈண்டுவேதநெறியென்றது வைதிகசைவத்தை ; அது "மரபிரண்டுஞ் சைவநெறிவழிவந்த கேண்மையினர்" எனக்கூறியவாற்ருற்போந்தமையும்சைவமும்வைதிகமுமாகியஇவ்விரண்டுமே சிறந்தனவென்பது சைவவைதிகமுந் தழைத்தோங்கவெனவும் ; "வைதிகமுடன்சைவமும் நிறுத்துமமிழ்தவெண்டிரைவைகையும்" எனவுங் கூறியவாற்ருற் போந்தமையுமறிக. (க)

சென்னிவளர் மதியணிந்த சிலம்பணிசே வடியார்த
மன்னியசை வத்துறையின் வழிவந்த குடிவளவர்
பொன்னிவளந் தருநாடு பொலிவெய்த நிலவியதாற்
கன்னிமதின் மருங்குமுகி னெருங்குகழு மலமூதூர்.

(இ-ள்.) சென்னிவளர்மதியணிந்த=திருமுடியில்வளராநின்ற சந்திரகலையையணிந்த ; சிலம்பணிசேவடியார்தம்=(வேதமாகிய) சிலம்பையணிந்த சிவந்த திருவடிகளையுடைய நடராஜப்பெருமானது ; மன்னிய சைவத்துறையின்=அழியாதநிலைபெற்ற சைவமார்க்கத்தின்நெறியிலே ; வழிவந்தகுடிவளவர்=இடையருது தோன்றியகுடிப்பிறப்பினையுடைய(அனபாயச்சக்கிரவர்த்திமுதலிய) சோழர்கள் (அரசுசெலுத்தும் ;) பொன்னிவளந்தருநாடுபொலிவெய்த=காவிரிபலவளங்களையுந் தராநின்ற சோழநாடு எந்நாட்டினுந்தலைமைபெற ; கன்னிமதில்மருங்கு=அழியாதமதிலின்பக்கத்து ; முகில்நெருங்குகழுமலமூதூர்நிலவியது=மேகங்கள்தவழும் சீகாழியென்னும் தொன்றுதொட்டுள்ள நகரம்விளங்கியது—எ-று.

ஊழிதோறுமழியாது நிலைபெறுதலின் மூதூர்என்ருர். ஆல்-அசை. (உ)

அப்பதிதா னந்தணர்தங் கிடைகளரு மறைமுறையே
செப்புமொழி வளர்பூகச் செழுஞ்சோலை புறஞ்சூழ

Koviloor Digital Library 2|1

வொப்பினக ரோங்குதலா லுகக்கடைநா ளன்றியே
யெப்பொழுதுங் கடன்மேலே மிதப்பதென விசைந்துளதால்.

(இ-ள்.) அப்பதி=அந்தச்சோழநாட்டில் ; அந்தணர்தங்கிடைகள்=பார்ப்பனச்சிறுவர் குழாங்கள் ; அருமறைமுறையே செப்புமொலி=அரியவேதங்களைப் பதபாணிக்கிரமமுதலிய வரிசைகளுடன் ஓதுமொலியோடு ; வளர்பூகச்செழும் சோலைபுறஞ்சூழ=வளர்ந்த செழுமைபொருந்திய கமுகஞ்சோலைகளும் பக்கத்திற்சூழ ; ஒப்பில் நகரோங்குதலால்=ஒப்பில்லாத அச்சீகாழிநகரமானது விளங்குதலால் ; உகக்கடைநாளன்றி=ஊழியிறுதியினல்லாமல் ; கடல்மேலெப்பொழுதும்மிதப்பதென=கடலினிடத்தெக்காலத்தும்மிதப்பதென்று சொல்லும்படி ; இசைந்துளது=பொருந்தியுள்ளது—எ-று. (ரு)

அரியயனே முதலமர ரடங்கவெழும் வெள்ளங்கள்
விரிசுடர்மா மணிப்பதண மீதெறிந்த திரைவரைகள்
புரிசைமுதற் புறஞ்சூழ்வ பொங்கோதங் கடைநாளில்
வரியரவ மந்தரஞ்சூழ் வடம்போல வயங்குமால்.

(இ-ள்.) அரியயனேமுதல் அமரர் அடங்க எழும்வெள்ளங்கள்=திருமால்பிரமன்முதலிய தேவர்கள் அடங்கும்படி எழாநின்றகற்பாந்தவெள்ளங்கள் ; விரிசுடர் மாமணிப்பதணமீதெறிந்ததிரைவரைகள்=விரிந்தகிரணங்களையுடைய மாணிக்கமழுத்தியமதிலின் உள்ளுயர்த்தமேடையின்மீது வீசிய அலையின்கிற்றுகள் ; புரிசைமுதற்புறம்சூழ்வ=மதிலின்முதற்பக்கத்துச் சூழ்வனவாய்ப்;பொங்கு ஓதம்கடைநாளில்=பொங்குகின்றதிருப்பாற்கடலைக்கடைந்தகாலத்து ; மந்தரம்சூழ்வரியரவவடம்போல வயங்கும்=மந்தரமலையிற் பூட்டியவரிகளையுடைய வாசுகி என்னும் வடத்தைப்போல விளங்காநிற்கும். —எ-று.

பிரமனது ஆயிரம் சதுர்யுகங்கொண்ட பகல் நீக்கத்துக்கற்பாந்தவெள்ளம்வரும் ; அப்பொழுது பூமி அந்தரம்சுவர்க்கமெனு மூவுலகமும் முழுகியழிவுறும்; அக்காலத்துவிண்மீன்களுடன் சோமசூரியர்களும் தேவர்களும்பொன்றுவர் ; மாறியபதினைன்கு மநுக்களுடன் இந்திரர்களும் முனிவர்களும் மகலோகத்தையடைவர்.; பிரமன்சிருட்டித்தொழிலின்றித்துயிலுறுவன் ; விண்டுபாலனமின்றிவாளாகிற்பர் ; அதனால், அரியயனே முதலமரர் அடங்க எனப்பொதுச்சொல்லாற் கூறினர். (சு)

வளம்பயிலும் புறம்பணைப்பால் வாசப்பா சடைமிடைந்த
தளம்பொலியும் புனற்செந்தா மரைச்செவ்வித் தடமலராற்
களம்பயினீர்க் கடன்மலர்வ தொருபரிதி யெனக்கருதி
யிளம்பரிதி பலமலர்ந்தாற் போல்பவுள விலஞ்சிபல.

Koviloor Digital Library

(இ-ள்.) வளம்பயிலும் புறம்பணைப்பால்=வளம்பொருந்திய நகரத்தின் புறம்பேயிருக்கின்ற வயலின்பக்கத்து ; இலஞ்சிபல=பலபொய்கைகள். ; பாசடையிடைந்த=பசிய இலைக்கிடையேநெருங்கிய ; தளம்பொலியும்=இதழோடுபொலிவுபெற்ற ; புனல்=நீரின்கண்ணுள்ளவாய ; வாசச்செந்தாமரை=வாசனைபொருந்திய செந்தாமரையின் ; செவ்வித்தடமலரால்=அழகியபெருமைபொருந்திய பூக்களால் ; களம்பயில் நீர்க்கடல் மலர்வது=இடமகன்ற நீர்மயமான கடலில் உதிப்பது ; ஒரு பரிதியெனக்கருதி=ஒரு சூரியனெனக் கருதி ; இளம்பரிதி பலமலர்ந்தாற் போல்பவுள=இளஞ்சூரியர்கள் பலவற்றைத்தாம் உற்பவித்தாற்போல்பவாயுள்ளன—எ-று.

போல்ப-முற்றெச்சம். (ரு)

உளங்கொண்மறை வேதியர்த மோமதூ மத்திரவுங்
கிளர்ந்ததிரு நீற்றொளியிற் கெழுமியநண் பகலுமலர்ந்
தளந்தறியாப் பல்லூழி யாற்றுதலா லகலிடத்து
விளங்கியவம் மூதூர்க்கு வேறிரவும் பகலுமிகை.

(இ-ள்.) உளங்கொள்மறை=வேதத்தை அத்தியயனஞ்செய்து அதன் பொருளுணர்ந்து யாகவிதிகளையும் அதற்குரிய மந்திரப்பிரயோகங்களையும் மனதிலமைத்துக்கொண்ட ; வேதியர்தம்=பிராமணரது ; ஓமதூமத்திரவும்=யாகதூமத்தாலாய இராப்பொழுதும் ; கிளர்ந்ததிருநீற்றொளியிற்கெழுமியநண்பகலும்=(அந்நகரத்தார் விதிவழியணிந்த) விளங்காநின்ற விபூதியின்பிரகாசத்தினுலுண்டான மத்தியானமும் ; மலர்ந்து அளந்தறியாப் பல்லூழி யாற்றுதலால்=தோன்றி யளவுசெய்தற்கரிய பல்லூழிகாலத்தையும் அந்நகர் செய்தலால் ; அகலிடத்துவிளங்கியவம்மூதூர்க்கு=உலகின்கண்விளங்கிய அப்பழைய சீகாழிநகரத்திற்கு ; வேறிரவும் பகலுமிகை=இவைகட்குவேறாய இராப்பொழுதும் பகற்பொழுதும் அதிகமாம்—எ-று.

ஓமதூமத்தாலாய இரவும் நீற்றொளியாலாய பகலுமே காலவரையறை செய்தலால் பொதுவான இரவும்பகலும் அந்நகரத்திற்குப்பயனிழந்தன. உளங்கொள்மறை என்பது மறைஉளங்கொள் என்று மாற்றியுரைக்கப்பட்டது.

பரந்தவிளை வயற்செய்ய பங்கயமாம் பொங்கெரியில்
வரம்பில்வளர் தேமாவின் கனிகிழிந்த மதுநறுநெய்
நிரந்தரநீ ளிலைக்கடையா லொழுகுதலா னெடிதவ்வூர்
மரங்களுமா குதிவேட்குந் தகையவென மணந்துளதால்.

(இ-ள்.) பரந்தவிளைவயல் செய்யபங்கயமாம் பொங்கெரியில்=(அந்நகரத்தின்புறத்துப்) பரவியநெல்விளைகின்ற வயல்களில்மலர்ந்த செந்தாமரைமலர்களாகிய சுவலிக்கின்றவோமத்தீயில் ; வரம்பில்வளர் தேமாவின்க

Koviloor Digital Library

னிகிழிந்த மதுநறுநெய்=அவ்வயலின் பக்கத்தோங்கிய தேமாமரங்களினது இனியகனிகிழிதலாலுண்டாய தேனாகிய நறுநெய்யானது; நிரந்தரம் நீளிலைக் கடையாலொழுகுதலால்=இடையீடின்றி எந்நாளும் நீண்ட இலைநுனியின்வழியாய் ஒழுகுதலால்; நெடிதவ்வூர்மரங்களுமாகுதி வேட்கும்தகையவென மணந்துளது=நெடுங்காலம் அச்சீகாழிநகரத்தின்கணுள்ள தேமாமரங்களும் ஆகுதிசெய்யுந் தன்மையுடையன என்னும்படி பொருந்தியுள்ளன—எ-று.

ஒழுக்குதல் எனப்பாடமாயின் நறுநெய்யை நீளிலைக்கடையாய சுருவத்தாற் பெய்தலால் எனப்பொருள்கொள்க. கிழிந்துஎனப்பாடமாயின் கிழிந்து என்னும் சினைவினையை ஒழுக்குதலென்னும் முதல்வினையோடு முடிக்க. ஆல்—அசை. மரங்களுமென்றது உயர்வுசிறப்பும்மை. (எ)

வேலையழற் கதிர்படிந்த வியன்கங்குல் வெண்மதியஞ்
சோலைதொறு நுழைந்துபுறப் படும்பொழுது துதைந்தமலர்ப்
பாலணைந்து மதுதோய்ந்து தாதளைந்து பயின்றந்தி
மாலையெழுஞ் செவ்வொளிய மதியம்போல் வதியுமால்.

(இ-ள்.) வேலையழற்கதிர் படிந்தவியன் கங்குல்=சூரியன்மேற்கடலிலத்தமிக்குங்காலுண்டாய பெரிய இராக்காலத்து; வெண்மதியஞ் சோலைதொறும் நுழைந்து புறப்படும்பொழுது=வெள்ளியசந்திரன் அந்நகரிலுள்ளசோலைகள்தோறும் நுழைந்து புறப்படும்பொழுது; துதைந்தமலர்ப்பாலணைந்து=நெருங்கிய மலரிடங்களைப்பொருந்தி; மதுதோய்ந்து தாது அளைந்து பயின்று=அம்மலர்களிலுள்ளதேனில்மூழ்கி மகரந்தங்களையளாவி அச்சோலையில் நெடுநேரம்பழகி; அந்திமாலையெழுஞ் செவ்வொளியமதியம்போல்வதியும்=அந்திப்போதிலே எழும் சிவந்தகிரணங்களையுடைய சந்திரன்போலவிளங்கும்—எ-று. ஆல் அசை. (அ)

காமர்திருப் பதியதன்கண் வேதியர்போற் கடிகமழுந்
தாமரையும் புல்லிதழுந் தயங்கியநூ லுந்தாங்கித்
தூமருநுண் டுகளணிந்து துளிவருகண் ணீர்ததும்பித்
தேமருமென் சுரும்பிசையாற் செழுஞ்சாமம் பாடுமால்.

(இ-ள்.) காமர்திருப்பதியதன்கண் வேதியர்போல்=அழகிய சீகாழிப்பதியின்கணமர்ந்த பிராமணர்போல; கடிகமழும்தாமரையும்=வாசனைகமழும் தாமரைமலர்களும் புல்லிதழுந்தயங்கிய நூலுந்தாங்கி=புறவிதழையும் விளங்காநின்ற நூலையுமேற்கொண்டு; தூமருநுண் துகளணிந்து=பரிசுத்தமான நுண்ணிய துகள்களையணிந்து; துளிவரு கண்ணீர் ததும்ப=துளிக்கும்படியான கண்ணீர்சிந்த; தேமருமென் சுரும்பிசையால்=தேனுண்ணும்படி வந்த

Koviloor Digital Library

வண்டுகளின் இனிய ஓசையினால் ; செழுஞ்சாமம்பாடும்=இனிமைமிக்க சாம வேதம்பாடாநிற்கும்—எ-று.

தாமரையாகரத்தில், கண்ணீரைக் கள் நீரெனப்பிரித்தும், அந்தணர்பரத்தில், புல்லிதழைப்புல்லினது இதழ் (தருப்பைப்பவித்திரம்) எனப்பிரித்தும், பொருள்கொள்க. அந்தணர்முப்புரிநூல்மேற்கொண்டு புல்லாலாய பவித்திரம்தரித்து, வெண்பொடியாகிய நீற்றினையணிந்து ஆனந்தக்கண்ணீர்ததும்பச் சாமவேதம்பாடுவரதுபோல் தாமரைமலர்களும் புல்லிதழாகிய புறவிதழையும் நூலையுங்கொண்டு வெள்ளியபராகத்தா லழகுசெய்யப்பெற்று, தேன்ததும்ப வண்டின் கீதத்தால் கானம்பாடும். அதனாற்சிலேடை போந்தவாறுகாண்க. மருவுமென்னும் பெயரெச்சம் மருவெனவும், ததும்பவென்னும் செயவென்வாய் பாட்டுநிகழ்காலவினையெச்சந் ததும்பியெனவும் திரிந்தன.

தாமரையுமென்றும்மை உயர்வுசிறப்பு. (சு)

புனைவார்பொற் குழையசையப் பூந்தானை பின்போக்கி
வினைவாய்ந்த தழல்வேதி மெழுக்குறவெண் சுதையொழுக்குங்
கனைவான முகிற்கூந்தற் கதிர்செய்வட மீன்கற்பின்
மனைவாழ்க்கைக் குலமகளிர் வளம்பொலிவ மாடங்கள்.

(இ-ள்.) மாடங்கள்=மண்டபங்கள் ; புனைவார்பொற் குழையசைய=அணிந்தநீண்டபொன்னாலாகியகுண்டலங்களசையாநிற்க; பூந்தானைபின்போக்கி=பொலிவாகியபட்டாடையின் முன்தானையைப் பின்பக்கத்திற் செருகி ; வினைவாய்ந்ததழல்வேதி=தமக்குரிய சமஸ்காரங்களாகிய தொழில்களை முற்றச்செய்த தக்கணாக்கினி, கார்கபத்தியம், ஆகவனியமென்னும் முத்தியமைந்தவேதிகைகள்;மெழுக்குற=மெழுகுதலைப்பொருந்த ; வெண்சுதையொழுக்கும்=வெள்ளிய சுண்ணப்பொடியை அதன்மேலொழுக்கிக்கோலமிடும்; கனைவானமுகிற்கூந்தல்=ஒலிக்கும் மேகம்போலும் கரியகூந்தலையும் ; கதிர்செய்வடமீன்கற்பின்=விளக்கத்தைச்செய்யும் அருந்ததிக்கொத்த கற்பினையுமுடைய ; மனைவாழ்க்கைக்குல மகளிர்வளம்பொலிவ = இல்வாழ்க்கைக்குரிய பார்ப்பனகுலப்பெண்களால் வளம்பொருந்தியிருக்கின்றன—எ-று. (எ)

வேள்விபுரி சடங்கதனை விளையாட்டுப்பண்ணைதொறும்
பூழியுற வகுத்தமைத்துப் பொன்புனைகிண் கிணியொலிப்ப
வாழிமணிச்சிறுதேருர்ந் தவ்விரதப் பொடியாடும்
வாழிவளர் மறைச்சிறுர் நெருங்கியுள மணிமறுகு.

(இ-ள்.) மணிமறுகு=அழகிய பார்ப்பனவீதிகள் ; வேள்விபுரி சடங்கதனை=அந்தணர்செய்யும் வேள்விச்சடங்குகளை ; விளையாட்டுப்பண்ணைதொறும் பூழியுற வகுத்தமைத்து=விளையாடுங்குழாங்கள்தோறும் புழுதிகளால் யாகசாலை,குண்டம், வேதிமுதலியனவாய்ப்பொருந்தவகுத்துச்செய்து;(அவ்

Koviloor Digital Library

விளையாட்டின்முடிவில்) பொன்புனைகிண்கிணியொலிப்ப=பொன்னாற்செய்த சிறுசதங்கைகள் ஆரவாரிக்க ; ஆழிமணிச்சிறுதேருர்ந்து=உருளைபூண்ட இரத்தினமழுத்திய சிறுதேருருட்டி ; அவ்விரதப்பொடியாடும்=அந்தச் சிறுதேர்களிலெழுந்த புழுதிகளில் ஸ்நானஞ்செய்யும் ; வளர்மறைச்சிறார் நெருங்கியுள=வளரும்பருவத்தையுடைய அப்பார்ப்பனச் சிறுவர்குழாங்களால் நெருங்கியுள்ளன—எ-று.

யாகச்செயல்முடிவில் அவபிருதஸ்நானம் செய்தவுடன்தேருர்ந்து நகர்வலஞ்செய்து வீடுபுகுவது அந்தணர்க்குவழக்காதலின் அவர் சிறுவருமவ்வாறு செய்வாராயினர். (கக)

விடுசுடர்நீண் மணிமறுகின் வெண்சுதைமா ளிகைமேகந்
தொடுகுடுமி நாசிதொறுந் தொடுத்தகொடி சூழ்கங்கு
லுடுவெனுநாண் மலரலர் வுறுபகலிற் பலநிறத்தா
னெடுவிசும்பு தளிர்ப்பதென நெருங்கியுள மருங்கெல்லாம்.

(இ-ள்.) விடுசுடர் நீண்மணிமறுகின் மருங்கெல்லாம்=ஒளிவீசுகின்றநீண்ட அழகிய வீதியின் பக்கங்களெல்லாம் ; வெண்சுதைமாளிகை மேகந்தொடு குடுமி நாசிதொறும்=வெள்ளிய சுண்ணச்சாந்து பூசிய மேகமண்டலத்தைத் தோயும் மண்டபங்களின் சிகர நாசிகள்தோறும் ; தொடுத்த கொடிசூழ்கங்குல் உடுவெனும் நாள் மலரலர=இராக்காலத்து வருகின்ற நட்சத்திரமென்னும் தம்மிடத்தழுத்திய நவமணிகளாகிய புதுமலர்கள் அலராநிற்க; உறுபகலில்=உறுகின்றபகற்காலத்து ; பலநிறத்தால்நெடுவிசும்புதளிர்ப்பதெனநெருங்கியுள=பலநிறங்களால் பகற்காலத்துப்பெரிய ஆகாயந்தளிர்ப்பது போலநெருங்கியிருக்கின்றன—எ-று.

கொடியின்கண்ணுள்ளனவாய மணிகளையுடுவென்பார் கங்குலுடுவெனுநாண்மலரெனவும் வானத்தைத் தோயக்கட்டிய கொடிகள் பலநிறத்தனவென்பார் பலநிறத்தால் நெடுவிசும்புதளிர்ப்பதென வெனவுங்கூறினர். (கஉ)

மடையெங்கு மணிக்குப்பை வயலெங்குங் கயல்வெள்ளம்
புடையெங்கு மலர்ப்பிறங்கல் புறமெங்கு மகப்பொலிவு
கிடையெங்குங் கலைச்சூழல் கிளர்வெங்கு முரலளிக
ளிடையெங்கு முனிவர்குழா மெயிலெங்கும் பயிலெழிலி.

(இ-ள்.) மடையெங்கும் மணிக்குப்பை=நீர்மடைகள்தோறும் முத்துகளின் குவியலாம் ; வயல் எங்கும் கயல் வெள்ளம்=வயலிடங்கள்தோறும் கயல்மீன்கூட்டங்களாம்; புடையெங்கும் மலர்ப்பிறங்கல்=அவ்வயலின் பக்கவிடங்கள்தோறும் மலரின்பொலிவுகளாம் ; புறமெங்கு மகப்பொலிவு=அந்நகரத்தின் புறமெங்கும் யாகங்களின் விளக்கமாம் ; கிடையெங்குங்கலைச்

Koviloor Digital Library

குழல்=வேதமோதும் பார்ப்பனச்சிறுவர் குழாங்களிருக்குமிடந்தோறும்
வேதமும் அதன் அங்க நூல்களுமாகிய தொகுதியாம் ; கிளர்வெங்கும் முர
லளிகள்=மலர்ச்செறிவுகள்தோறும் ஒலிக்கும் வண்டுகளின் கூட்டமாம் ;
இடையெங்கும் முனிவர்குழாம்=நடுவிடங்களெல்லாம் முனிவர்களின் கூட்ட
ங்களாம் ; எயிலெங்கும் பயிலெழிலி=அந்நகர்சூழ்ந்த மதில்கள்தோறும் இ
டைவிடாது தவழும் மேகக்கூட்டங்களாம்—எ-று- (௧௬)

பிரமபுரம் வேணுபுரம் புகலிபெரு வெங்குருநீர்ப்
பொருவிறிருத் தோணிபுரம் பூந்தராய் சிரபுரமுன்
வருபுறவஞ் சண்பைநகர் வளர்காழி கொச்சைவயம்
பரவுதிருக் கழுமலமாம் பன்னிரண்டு திருப்பெயர்த்தால்.

(இ-ள்.) பிரமபுரம்=பிரமபுரமெனவும்; வேணுபுரம்=வேணுபுரமென
வும் ; புகலி=புகலியெனவும் ; பெருவெங்குரு=பெருமைபொருந்திய வெங்
குருவெனவும் ; பொருவில் திருத்தோணிபுரம்=ஒப்பில்லாத திருத்தோணிபு
ரமெனவும் ; பூந்தராய்=பூந்தராயெனவும் ; சிரபுரம்=சிரபுரமெனவும்; முன்
வருபுறவம்=எல்லாஸ்தலங்களிலும்முற்பட்டபுறவமெனவும்; சண்பைநகர்=
சண்பைநகரெனவும்; வளர்காழி=ஓங்கியசீகாழியெனவும்; கொச்சைவயம்=
கொச்சைவயமெனவும்; பரவுதிருக்கழுமலம்=துதிக்கத்தக்க திருக்கழுமலமென
வும் ; ஆம் பன்னிரண்டு திருப்பெயர்த்து=காரணங்களால் ஆகின்ற பன்
னிரண்டு திருப்பெயர்களை அந்நகருடையது—எ-று.

பிரமனால் பூசிக்கப்படுதலினால் பிரமபுரமெனவும், இந்திரன்வேணுவாய்
வழிபட்டமையால் வேணுபுரமெனவும், சூரபன்மனால் தோல்வியுற்ற இந்தி
ரன்முதலிய தேவர்கள் பிரமபுரமன்றி நமக்குவேறுபுகலில்லை என்றுகருதிப்
புகலடைந்தமையால் புகலிஎனவும், தேவகுரு அகங்காரத்தால் வெங்குருவா
தலைத்தவிர்த்தலின் வெங்குருவெனவும், மூவுலகத்தையுமூடும் கற்பாந்தவெ
ள்ளத்தில் தோணிபோல் மிதந்தமையால் தோணிபுரமெனவும், சங்கநிதி பது
மநிதி என்னும் இருநிதியும் மாறாதுகொடுக்கும் வரத்தைப்பெறுங்காரணமா
கப்பூந்தாராய் இருந்து பூசித்தமையால் பூந்தராயெனவும், திருமாலானவர்
பாற்கடல்கடைந்து அமிர்தம் பகுக்குங்கால் தேவரோடுசேர்ந்துமறைந்து அ
முதுண்டு சட்டுவத்தால் வெட்டுண்ட அசுரரிருவர்களது சிரங்களும் அமுது
ண்டமையால் அழியாது-இராகு-கேதுவாதலைவிரும்பி வழிபட்டமையால் சிர
புரமென்றும், கௌதமசாபத்தால் புறாவடிவமைந்த பிரசாபதி முனிவன்த
ன் சாபம்நீங்க புறவாயிருந்து வழிபட்டமையின் புறவமெனவும், துருவாச
முனி தன் சாபப்படி சண்பைக்கதிர்களால் கோபாலகுமாரர்கள் மடியச்
செய்தபாவம் நீங்கப்பூசித்தமையால் சண்பை எனவும், காழிஎன்னும் மாநா
கம் பூசித்தமையால் காழிஎனவும், பராசரமுனிவர் மற்ச கந்தியைப்புணர்ந்
து உடல்நாற்கந்தம் நீங்கப்பூசித்து மற்றமுனிவர்கள் இகழாதிருக்கும் வய

Koviloor Digital Library

த்தைப்பெற்றமையால் கொச்சைவயமெனவும், அந்நகரில் வசிப்பாரது மயக்கத்தைப்போக்குதலால் கழுமலமெனவும் காரணம் போந்தவாறு கண்டு கொள்க.

கொச்சைவயமென்றது "சாலநல்வேலையோசை தருமாடவீதி கொடியாடு கொச்சைவயமே" என்னும் திருப்பதிகத்தானுமுணர்க. அதுமருவாய்த் "தொச்சையைமெச்சினை" எனவும்வரும். (௧௪)

அப்பதியி லந்தணர்தங் குடிமுதல்வ ராசின்மறை
கைப்படுத்த சீலத்துக் கவுணியர்கோத் திரம்விளங்கச்
செப்புநெறி வழிவந்தார் சிவபாத விருதயரென்
றிப்புவிவா ழத்தவஞ்செ யியல்பினா ருளரானார்.

(இ-ள்.) அப்பதியிலந்தணர்தங் குடிமுதல்வர்=அந்நகரத்தி லிருக்கும் அந்தணர்களது குலத்தின் முதன்மைபெற்றவரும்; ஆசின்மறை கைப்படுத்த சீலத்து=குற்றமற்ற வேதநெறியைத் தம்வழிப்படுத்திய நல்லொழுக்கங்களையுடைய; கவுணியர் கோத்திரம்விளங்க=கவுணியர் கோத்திரம் மேன்மையடையும்படி; செப்புநெறி வழிவந்தார் கவுணியர் கோத்திரத்திற்குறிய சூத்திரம் விதிக்கும் அந்நெறியின்வழியே ஒழுகுபவருமாய் சிவபாதவிருதயரென=சிவபாத இருதயரென்று; இப்புவிவாழத் தவஞ்செய் இயல்பினருளரானார்=இவ்வுலகம் வாழத்தவஞ்செய்யு மியல்பினையுடையார் ஒருவரிருந்தார்—எ-று. (௧௫)

மற்றவர்தந் திருமனையார் வாய்ந்தமறை மரபின்வரு
பெற்றியினா ரெவ்வுலகும் பெறற்கரிய பெருமையினார்
பொற்புடைய பகவதியா ரெனப்போற்றும் பெயருடையார்
கற்புமேம் படுசிறப்பாற் கணவனார் கருத்தமைந்தார்.

(இ-ள்.) மற்றவர்தம் திருமனையார்=மேற்கூறிய அச்சிவபாத இருதயரது திருமனைவியார்; மறைவாய்ந்த மரபின்வருபெற்றியினார்=(சிவபாத இருதயர் விவாகஞ்செய்தற்குரிய) வேதத்தில் விதித்த கோத்திரமமைந்த ஒத்தகுடிப்பிறப்புடையாரும்; எவ்வுலகும் பெறற்கரிய பெருமையினார்=எவ்வுலகின்கண்ணுள்ள கற்பின்மகளிரும் பெறுதற்கரிய மேம்பாட்டையுடையவரும்; பொற்புடையபகவதியா ரெனப்போற்றும் பெயருடையார்=அழகினையுடையபகவதியாரென்று பலருந் துதிக்கும் திருநாமமுடையவரும்; கற்பின்மேம்படுசிறப்பால் கணவனார்கருத்தமைந்தார்=மேம்பட்டகற்பின் சிறப்பினால் தமதுகணவன் குறிப்பின் வழியமைந்தவராய் ஒருவரிருந்தார்—எ-று. (௧௬)

மரபிரண்டுஞ் சைவநெறி வழிவந்த கேண்மையினா
ராவணிந்த சடைமுடியா ரடியலா லறியாது

Kovilor Digital Library

பரவுதிரு நீற்றன்பு பாலிக்குந் தன்மையராய்
விரவுமறை மனைவாழ்க்கை வியப்பெய்த மேவுநாள்.

(இ-ள்.) மரபிரண்டுஞ்சைவநெறி வழிவந்தகேண்மையினர்=தாய்வழி தந்தைவழியாகிய இரண்டு மரபும் வைதிகசைவநெறிவழிவந்த உரிமையினை யுடைய அவ்விருவரும்; அரவணிந்தசடைமுடியார் அடியலாலறியாது=சர்ப்பமணிந்த சடைமுடியையுடைய சிவபெருமானது திருவடிகளையன்றி மற்றொன்றினையும் பொருளென்றுணராது; பரவு திருநீற்றன்பு பாலிக்குந்தன்மையராய்=துதிக்கத்தக்க விபூதியினது அன்பையேவளர்ப்பிக்கும் தன்மையுடையராய்; விரவுமறை மனைவாழ்க்கை வியப்பெய்தமேவுநாள்=ஒற்றுமைப்பட்ட வேதவிதிவழுவாத இல்லறவாழ்க்கையில் கண்டோர்பலரும் அதிசயிக்கவாழுங்காலத்து—எ-று. (கள)

மேதினிமேற் சமண்கையர் சாக்கியர்தம் பொய்ம்மிகுத்தே
யாதியரு மறைவழக்க மருகியர னடியார்பாற்
பூதிசா தனவிளக்கம் போற்றல்பெறு தொழியக்கண்
டேதமில்சீர்ச் சிவபாத விருதயர்தா மிடருழந்தார்.

(இ-ள்.) மேதினிமேற்சமண்கையர் சாக்கியர்தம்பொய்மிகுத்து=உலகின்கண் கீழ்மக்களாகிய சமணர் புத்தர் இவர்களுடைய பொய்மார்க்கமானது அதிகரித்து; ஆதியருமறைவழக்கமருகி=தொன்று தொட்டுவருகின்ற அரிய வைதிக மார்க்கங்குன்றி; அரனடியார்பால்=சிவபிரானடியாரிடத்து; பூதிசாதனவிளக்கம்போற்றல் பெறுதொழியக்கண்டு=(அக்கீழ்மக்கள் செய்யுமிடையூற்றால்)விபூதிஉருத்திராக்க பஞ்சாக்கரமென்னுஞ் சாதனங்கள் பரிபாலித்தலின்றி ஒழிதலைக்கண்டு; ஏதமில் சீர்ச்சிவபாத இருதயர் தாமிடருழந்தார்=குற்றமில்லாத சிறப்பினையுடைய சிவபாதவிருதயர் துன்பமுற்றார்-எ-று. ()

மனையறத்தி லின்பமுறு மகப்பெறுவான் விரும்புவா
ரனையநிலை தலைநின்றே யாடியசே வடிக்கமல
நினைவுறமுன் பரசமய நிராகரித்து நீறாக்கும்
புனைமணிப்பூண் காதலனைப் பெறப்போற்றுந் தவம்புரிந்தார்.

(இ-ள்.) மனையறத்திலின்பமுறு மகப்பெறுவான் விரும்புவார்=இல்லறத்தின்கண் இன்பமடைதற்குக் காரணமான புத்திரனைப்பெறுதலைவிரும்புமவராய சிவபாத இருதயர்; அனையநிலை தலைநின்று=அப்புத்திரப் பேற்றைவிரும்பிய நிலைமையினின்று; ஆடியசேவடிக்கமலம் நினைவுறகனகசபையின்கண் நடனஞ்செய்தருளிய சிவந்த திருவடித்தாமரைகள் தங்கருத்தைப்பொருந்த; பரசமயம் நிராகரித்து நீறாக்கும்=புறச்சமயங்களை வென்றுபொடிபடுத்தும்; புனைமணிப்பூண் காதலனை=அலங்கரிக்கும் இரத்தினாபரணங்களை

Koviloor Digital Library

யணிந்தபுத்திரனை; பெறப்போற்றுந் தவம்முன்புரிந்தார்=பெறுதற்பொருட்டு துதிக்கும் தவத்தை முன்னேசெய்தார்—எ-று.

சேவடிக்கமலம் நினைவிலுறும்படி பரசமயங்களை நிராகரித்து நீருக்குங் காதலனைப்பெறப் போற்றுந்தவத்தினைமுன்னேசெய்தார் எனக்கூட்டுக. (கக)

பெருத்தெழுமன் பாற்பெரிய நாச்சியா ருடன்புகலித்
திருத்தோணி வீற்றிருந்தார் சேவடிக்கீழ் வழிபட்டுக்
கருத்துமுடிந் திடப்பரவுங் காதலியார் மணிவயிற்றி
லுருத்தெரிய வரும்பெரும்பே றுலகுய்ய வுளதாக.

(இ-ள்.) பெருத்தெழுமன்பால்=அதிகரித்துத் தன்மனத்திலெழும் பேரன்பினால்; பெரியநாச்சியாருடன் புகலித்திருத்தோணி வீற்றிருந்தார்=திருப்புகலியின்கண் பெரியநாச்சியாருடன் எழுந்தருளிய சிவபிரானது; சேவடிக்கீழ்வழிபட்டு=சிவந்த திருவடிக்கண் வழிபாடுசெய்து; கருத்துமுடிந்திடப்பரவும்=தங்கணவனெண்ணம் முடியவென வணங்கும்; காதலியார்மணிவயிற்றில்=சிவபாதவிருதயரது திருமனைவியாராகிய பகவதியாரது அழகிய திருவுதரத்தில்; உருத்தெரியவரும்பெரும்பேறு=ஆளுடையபிள்ளையாரது திருவுருவம் வெளிப்படுங்காரணமான பெரும்பேறான கருப்பம்; உலகுய்ய உளதாக=உலகின்கண்ணுள்ளார் பிழைக்கும்படிஉண்டாக—எ-று.

கணவன்கருத்து முடிந்திடச் சேவடிக்கீழ்வழிபடுதலே அவர்க்குத்தவமென்பார் கருத்துமுடிந்திடப் பரவுங்காதலியார் எனக்கூறினர். எனவே மனைவியாரது தவமும் கூறினாராயிற்று. (உ)

ஆளுடையா ளுடன்றோணி யமர்ந்தபிரா னருள்போற்றி
மூளுமகிழ்ச் சியிற்றங்கண் முதன்மறைநூன் முறைச்சடங்கு
நாளுடைய வீரைந்து திங்களினு நலஞ்சிறப்பக்
கேளிருடன் செயல்புரிந்து பேரின்பங் கிளர்வுறுநாள்.

(இ-ள்.) ஆளுடையாளுடன் தோணியமர்ந்தபிரானருள்போற்றி=ஆளுந்தன்மையுடைய பெரியநாயகியாரோடு தோணியப்பரது திருவருளையுந்துதித்து; மூளுமகிழ்ச்சியில்= (கருப்போற்பத்தி காரணமாகத்தம்மனதினிடத்து) எழுகின்றமகிழ்ச்சியினால்; தங்கண்முதன்மறைநூன்முறைச்சடங்கு=தங்கட்குரிய முதன்மையாகிய வேதநூலிற் கூறியமுறையே செய்யுஞ்சடங்குகளை; நாளுடைய ஈரைந்துதிங்களினும்=நாளெண்ணிக்கையோடுகூடிய பத்துமாதங்களினும்; நலஞ்சிறப்ப=நன்மைமிக; கேளிருடன்செயல்புரிந்து=தமதுறவினரோடுசெய்து (சிவபாதஇருதயர்); பேரின்பங்கிளர்வுறுநாள்=பெரிய இன்பத்தோடு விளங்குங்காலத்தில்—எ-று.

Koviloor Digital Library

முப்பதுநாளிற்குறைந்தும் அதிகரித்தும் வருமாதவளவைநீக்கி முற்று நாட்கொண்ட மாதவளவு கோடற்குநாளுடைய ஈனாத்துத்திங்களென்றார்.

அருக்கன்முதற் கோளனைத்து மழகியவுச் சங்களிலே
பெருக்கவலி யுடனிற்கப் பேணியநல் லோரையெழத்
திருக்கிளரு மாதிரைநாட் டிசைவிளங்கப் பரசமயத்
தருக்கொழியச் சைவமுதல் வைதிகமுந் தழைத்தோங்க.

(இ-ள்.) அருக்கன்முதற்கோளனைத்தும்=உச்சமாதற்குரிய சூரியன்முதலிய கோள்களெல்லாம் ; அழகிய உச்சங்களிலே பெருக்கவலியுடனிற்க=சிறந்த உச்சஸ்தானங்களிலே (பாவக்கோள்களது பார்வையின்றி)வலிமிகக்கூடிநிற்க ; பேணியநல்லோரையெழ=சோதிடநூலாரால் விரும்பத்தக்க நல்ல முகூர்த்தகாலம் வரவும் ; திருக்கிளருமாதிரை நாட்டிசைவிளங்க=மங்கலமிகுந்த திருவாதிரை நட்சத்திரத்தில் திசைமுழுதும் கீர்த்திவிளங்கவும் ; பரசமயத்தருக்கொழிய=புறச்சமயங்களின் அகங்காரம்நீங்கவும் ; சைவமுதல் வைதிகமுந்தழைத்தோங்க=சைவமுதலாக வைதிகமார்க்கமும் தழைத்து நிலைபெறவும்—எ-று.

அந்நாளில் ஆதிரைநாட்கு உச்சமாதற்குரியன அருக்கன்முதலியன என்பார் ஏற்புழிக்கோடலால் அருக்கன்முதற்கோளனைத்து மென்றார் அவை அங்ஙனம்நிற்க எனவே உச்சமாகாதனவாய கிரகங்கள் ஆட்சிமுதலியதானம்பெறுமென்பது அருத்தாபத்தியாற்போதரும்.

திருவாதிரைநாள் சிவபிரானதுநாளென்பார் திருக்கிளரும் எனவும் அந்நாளே ஆளுடையபிள்ளையாரது திருநட்சத்திரமாமென்பார் ஆதிரைநாட்டிசை விளங்க எனவுங்கூறினர். (உஉ)

தொண்டர்மனங் களிசிறப்பத் தூயதிரு நீற்றுநெறி
யெண்டிசையுந் தனிநடப்ப வேழுலகுங் குளிர்தூங்க
வண்டர்குல மதிசயிப்ப வந்தணரா குதிபெருக
வண்டமிழ்செய் தவநிரம்ப மாதவத்தோர் செயல்வாய்ப்ப.

(இ-ள்.) தொண்டர்மனங்களிசிறப்ப=சிவனடியாரதுமனங்களிப்படையவும் ; தூயதிருநீற்றுநெறி=பரிசுத்தமான விபூதிசாதனநெறி ; எண்டிசையுந்தனிநடப்ப=எட்டுத்திக்கிலும் ஒப்பின்றிநிலைபெறவும் ; ஏழுலகுங்குளிர்தூங்க=ஏழுலகங்களிலுள்ளாருங் களிப்படையவும் ; அண்டர்குலமதிசயிப்ப=தேவர்குழாங்களதிசயமடையவும்; அந்தணராகுதிபெருக=வேதியர்செய்யும்யாகங்கள் இடையூறின்றி வளரவும் ; வண்டமிழ்செய்தவநிரம்ப=வளம்பொருந்திய தமிழ்நாட்டின்கண்ணுள்ளார் செய்தவமானது நிரம்பவும் ; மாதவத்தோர்செயல்வாய்ப்ப = பெரியதவத்தினர் செய்யும் தவவொழுக்கம் மேம்படவும்—எ-று. (உ௩)

Koviloor Digital Library

திசையனைத்தின் பெருமையெலாந் தென்றிசையே வென்றேற
மிசையுலகும் பிறவுலகு மேதினியே தனிவெல்ல
வசைவில்செழுந் தமிழ்வழக்கே யயல்வழக்கின் றுறைவெல்ல
விசைமுழுது மெய்யறிவு மிடங்கொள்ளு நிலைபெருக.

(இ-ள்.) திசையனைத்தின் பெருமையெலாம்=எல்லாத் திசைகளின்பெருமைகளையும்; தென்றிசையேவென்றேற=தெற்குத்திசையொன்றே வெற்றிகொண்டு ஓங்கவும்; மிசையுலகும் பிறவுலகும்=தேவருலகையும்பாதலத்தையும்; மேதினியேதனிவெல்ல=பூவுலகொன்றே ஒப்பின்றிவெல்லவும்; அசைவில் செழுந்தமிழ்வழக்கே=நிலைபெற்ற செந்தமிழ்வழக்கொன்றே; அயல்வழக்கின்றுறைவெல்ல=ஏனையபாடைகளினதுவழக்கின்பகுதிகளைவெல்லவும்; இசைமுழுதுமெய்யறிவு மிடங்கொள்ளும் நிலைபெருக=இசைநூற்பொருளுணர்ச்சியும் மெய்ந்நூற்பொருளுணர்ச்சியுமாய இவ்விரண்டும்பரவும் நிலையோடு ஓங்கவும்—எ-று. (உச)

தாளுடைய படைப்பென்னுந் தொழிற்றன்மை தலைமைபெற
நாளுடைய நிகழ்கால மெதிர்கால நவைநீங்க
வாளுடைய மணிவீதி வளர்காழிப் பதிவாழ
வாளுடைய திருத்தோணி யமர்ந்தபிரா னருள்பெருக.

(இ-ள்.) தாளுடைய படைப்பென்னுந் தொழிற்றன்மைதலைமைபெற=முயற்சியையுடைய மக்கட்படைப்பென்னும் பிரமனது தொழிற்குணமானது முதன்மைபெறவும்; நாளுடைய நிகழ்கால மெதிர்காலம் நவைநீங்க=நாள்வரையறையுடைய நிகழ்காலமும் எதிர்காலமும் குற்றமின்றி விளங்கவும்; வாளுடைய மணிவீதிவளர்காழிப் பதிவாழ=ஒளிபொருந்திய அழகிய வீதிகளுடைய சீகாழியென்னுந் திருப்பதிவாழவும்; ஆளுடைய திருத்தோணியமர்ந்த பிரானருள் பெருக=நம்மையாளாகவுடைய பெருமைபொருந்திய தோணியப்பரது திருவருள்பெருகவும்—எ-று.

விதிவிலக்குணர்ந்துஇம்மைமறுமைவீடென்னும்புருடார்த்தங்களை அடைதற்குரியராதலின் மக்களைத்தாளுடைய பிறப்பெனப்பட்டனர்.

இறுகாறுமில்லாத தலைமைமிக்க பிள்ளையாரது திருவவதாரம் அப்படைப்புத் தொழிலுளடங்குதலால் அத்தொழிற்றன்மை தலைமைபெறவெனவும் பிள்ளையாரவதாரஞ்செய்வதற்கு முற்காலமாய இறந்தகாலம் குற்றமுடைமையால் நிகழ்காலமெதிர்காலம் நவைநீங்கவெனவுங்கூறினர். (உரு)

அவம்பெருக்கும் புல்லறிவி னமண்முதலாம் பரசமயப்
பவம்பெருக்கும் புரைநெறிகள் பாழ்படநல் லூழிதொறுந்
தவம்பெருக்குஞ் சண்பையிலே தாவில்சரா சரங்களெல்லாஞ்
சிவம்பெருக்கும் பிள்ளையார் திருவவதா ரஞ்செய்தார்.

Koviloor Digital Library

(இ-ள்.) அவம்பெருக்கும் புல்லறிவினமண்முதலாம்=தீநெறியைபெருகச்செய்யும் புல்லறிவினையுடைய சமண்முதலிய; பரசமயப்பவம்பெருக்கும் புரைநெறிகள்பாழ்பட=புறச்சமயங்களென்னும் பாவத்தைவளர்க்கும் குற்றவழிகள்கெடவும்; நல்லூழிதொறுந்தவம்பெருக்குஞ் சண்பையிலே=நல்லூழிக்காலங்கடோறுந்தானழியாது நின்று தவத்தைவளர்க்குஞ் சீகாழியில்; தாவில்சராசரங்களெல்லாம்=கெடுதலில்லாத இயங்கியற்பொருளும் நிலையியற்பொருளுமாகிய உயிர்வர்க்கங்கள்தோறும்; சிவம்பெருக்கும் பிள்ளையார் திருவவதாரஞ் செய்தார்=நன்மையை உண்டாக்குமாறுடைய பிள்ளையார் திருவவதாரஞ்செய்தருளினார்—எ-று.

ஆளுடையாளென்றுஞ்செய்யுள்முதல்இதுகாறுஞ்செய்யுளும்குளகம் ()

வேறு.

அப்பொழுது பொற்புறு திருக்கழு மலத்தோ
ரெப்பெயரி னோருமய லெய்துமிடை யின்றி
மெய்ப்படு மயிர்ப்புளக மேவியறி யாமே
யொப்பில்களி கூர்வதொ ருவப்புற வுரைப்பார்.

(இ-ள்) அப்பொழுதுபொற்புறுதிருக்கழுமலத்தோர் எப்பெயரினோரும்=பிள்ளையாரவதாரஞ்செய்த அந்நாளில் அழகுமிக்க சீகாழியிலுள்ள எவ்வகைவருணத்தாரும்; அயலெய்து மிடையின்றி=அயலிற்செல்லுதற்கு இடமில்லாமல் (ஒரிடத்தில்வந்துகூடி); மெய்ப்படுமயிர்ப்புளகமேவி=மெய்யினிடத்துண்டாகும் ரோமாஞ்சிதம் உடையராய்; அறியாமே=தம்மையறியாமல் ஒப்பில்களிகூர்வதொருவப்புற=ஒப்பில்லாதகளிப்பை யதிகரிக்கச்செய்கிறமகிழ்ச்சியுண்டாக;உரைப்பார்=(ஒருவரோடொருவர்கலந்து)பேசுவார்—எ-று.

சிவனரு ளெனப்பெருகு சித்தமகிழ் தன்மை
யிவணிது நமக்குவர வெய்தியதெ னென்பார்
கவுணியர் குலத்திலொரு காதல னுதித்தா
னவன்வரு நிமித்தமிது வென்றதி சயித்தார்.

(இ-ள்.) சிவனருளென=சிவபிரானது திருவருளைப்போல; பெருகு சித்தமகிழ்தன்மையிது=மிக்க மனமகிழுந் தன்மையாய இது; இவண் நமக்குவரவெய்துவது என்னென்பார்=இவ்விடத்து நமக்கு வருதற்குக்காரணம் யாதென்று வினவுவர் (அதற்குத்தரமாக); கௌணியர் குலத்திலொருகாதல னுதித்தான்=கௌணிய கோத்திரத்தில் ஒரு புத்திரனுதித்தார்; அவன்வரு நிமித்தமிதுவென் றதிசயித்தார்=அப்புத்திரனுதிக்குநிமித்தமே இவ்வாறுநிகழ்ந்ததென்று கூறி அதிசயமடைந்தார்—எ-று. (உஅ)

பூமுகை யவிழ்ந்துமண மேவுபொழி லெங்குந்
தேமருவு தாதொடு துதைந்ததிசை யெல்லாந்
தூமருவு சோதிவிரி யத்துக ளடக்கி
மாமலய மாருதமும் வந்தசைய மன்றே.

Koviloor Digital Library

(இ-ள்.) திசையெல்லாம்=திசையெல்லாவற்றினுமுள்ள; பூமுகையவிழ்ந்து மணமேவுபொழிலெங்கும்=பூவரும்புகள் முகையவிழ்ந்து வாசனைவீசுகின்ற சோலையிடங்களெங்கும்; தேமருவுதாதொடுதுதைந்த=தேனொடுசேர்ந்த மகரந்தங்களினால் நெருங்கின; அமருவுசோதிவிரியத்துகளடக்கி=அச்சோலையிடங்களில் சுத்தமானவொளிவிரியும்படி மகரந்தப்பொடியைத் தன்னுடன்சேர்த்துக்கொண்டு; மாமலயமாருதமும் வந்தசையும்பெரியபொதியாசலத்திற்றோன்றிய இளந்தென்றற்காற்றும் வந்து வீசாநிற்கும்—எ-று.

அன்று-ஏ-அசை. (உக)

மேலையிமை யோர்களும் விருப்பொடு கரப்பில்
சோலைமலர் போலமலர் மாமழை சொரிந்தே
ஞாலமிசை வந்துவளர் காழிநகர் மேவுஞ்
சீலமறை யோர்களுட னோமவினை செய்தார்.

(இ-ள்.) மேலையிமையோர்களும்=விண்ணுலகின் கண்ணுள்ள தேவர்களும்; விருப்பொடுகரப்பில்=விருப்பத்துடனொழிவின்றி; சோலைமலர்போல=சோலைகள் மலரைச்சொரிவதுபோல; மலர்மாமழைசொரிந்து=புஷ்பமழைகளைப்பொழிந்து; ஞாலமிசைவந்து=பின்நிலவுலகின்கண்வந்து; வளர்காழி நகர்மேவும்=ஊழியில்வளர்ந்து பிரளயவெள்ளத்தின்மேல் நிற்கும் சீகாழியில்வாசஞ்செய்யும்; சீலமறையோர்களுடன்=நல்லொழுக்கத்தையுடையவேதியர்களுடன்; ஓமவினைசெய்தார்=யாகவினையைச்செய்தார்கள்.எ-று. ()

பூதகண நாதர்புவி வாழவருள் செய்த
நாதனரு ளின்பெருமை கண்டுநல முய்ப்பா
ரோதுமறை யோர்பிறி துரைத்திடினு மோவா
வேதமொழி யாலொலி விளங்கியெழு மெங்கும்.

(இ-ள்.) பூதகணநாதர்=பூதகணங்கட்குத் தலைவராய சிவகணங்கள்; புவிவாழ அருள்செய்த=உலகுய்யும்பொருட்டு ஆளுடையபிள்ளையாரை அவதரிக்கச்செய்த; நாதர் அருளின்பெருமைகண்டு=சிவபிரானதுதிருவருளின் பெருமையைக்கண்டு; நலமுய்ப்பார்=பிள்ளையாரைப்பேணுதல் முதலியநன்மைகளைச்செய்வார்; ஓதுமறையோர் பிறிதுரைத்திடினும்=தம்மை அதிகரித்து ஓதும் அந்தணர்கள் அவ்வோதற்றொழிலின்றி அங்குயாகத்திற்கு உபயோகமான சில வேறுமொழிகளை யுரைத்தாராயினும்; ஓவாவேதமொழியால்=பரந்து நீர்த்தரங்கம்போல் ஒன்றன்பின்னொன்று நீங்காது உதிக்கும் வேதபதவாக்கியங்களால்; ஒலிவிளங்கியெழுமெங்கும்=எவ்விடத்தும்ஒலிவிளங்கித்தோன்றும்—எ-று.

பதவாக்கியங்கள் நட்டமுற்று நீர்த்தரங்கம்போல்இடையீடின்றிஒன்றன்பின்னொன்றுதோற்றும் இசைத்தன்மை யுடைமையின் பிறிதுரைத்திடினும்ஓவாவொலியென்றார். உரைத்திடினுமென்றும் உம்மை எதிர்மறைப்பொருளது.

Koviloor Digital Library

இவ்வாறன்றி ஒருமறையோர் பிறிதுணர்த்திடினும் ஓவாவேதமொழியென்றுங்கால் பிள்ளையார் அவதாரஞ்செய்தமை குசிக்கு நிமித்தம் அவருணாயிற்கலந்து சாவித்தியமாய் தெய்வத்தன்மையாலொலிக்கும் வேதவாக்கியங்களாலாய வொலியெனினுமொக்கும். (ருக)

பயன்றருவ பஃறருவும் வல்லிகளு மல்கித்
தயங்குபுன லுந்தெளிவ தண்மையுட னன்றும்
வயங்கொளி விசும்புமலி னங்கழியு மாறு
நயம்புரிவ புள்ளொலிக ணல்லதிசை யெல்லாம்.

(இ-ள்.) திசையெல்லாம் பயன்தருவபல்தருவும் வல்லிகளுமல்கி=எத்திசையின்கண்ணும் பலவிருக்ஷங்களுங் கொடிகளும் விருத்தியடைந்து பலனைக்கொடுப்பனவாயின; தண்மையுடன் தயங்குபுனலுந்தெளிவ=குளிர்ச்சியோடுபொருந்திய நீர் நிலைகளுந் தெளிவடையாநின்றன; வயங்குஒளிவிசும்பு மலினங்கழியும்=பிரகாசிக்கின்ற சந்திரசூரியர்களையுடைய ஆகாயமுமாசறத்தோன்றாநிற்கும்; புள் ஒலிகள் மாறுநயம்புரிவநல்ல=புள்ளொலிகள்ஒன்றோடொன்று மாறுபட்டுச் சுபசூசனத்தைச் செய்வனவாய் நல்லனவாயின —எ-று.

திசையெல்லாம் என்பதை முற்றுக்கள்பலவற்றுடனுங் கூட்டியுரைக்க. ()

அங்கண்விழ விற்பெருகு சண்பையகன் மூதூர்
சங்கபட கங்கருவி தாரை முதலான
வெங்கணு மியற்றுபவ ரின்றியு மியம்பு
மங்கல முழக்கொலி மலிந்தமறு கெல்லாம்.

(இ-ள்.) அங்கண்விழவிற்பெருகுசண்பை அகன்மூதூர்=அழகியவிடங்கடோறும் இவ்வாறான சுபசூசனங்களாலும் மங்கலவிழாவினாலும் பெருமையடைந்திருக்கின்ற இடமகன்ற பழையசீகாழிப்பதியில்; சங்கபடகங் கருவி தாரைமுதலான=சங்கமும் ஓர்கட்பறையும் நரம்புக்கருவியுஞ் சின்னமுங்காளமுமாகியவிவ்வாத்தியங்கள்; எங்கணுமியற்றுபவரின்றியும் = எவ்விடங்களிலுந் தம்மை ஊதுதல் கொட்டுதல் முதலிய செயலாலியம்புவாரின்றியும்; இயம்பு மங்கலமுழக்கு ஒலிமலிந்த மறுகெல்லாம் = தெய்விகமாகத்தானேயொலிக்குமங்கலவொலிகளாலும் நிறைந்தன வீதிகளெல்லாம்—எ-று.

இன்றியுமென்பதில் உம்மை எதிர்மறைப்பொருளது. (ருஉ)

இரும்புவன மித்தகைமை யெய்தவவர் தம்மைத்
தருங்குல மறைத்தலைவர் தம்பவன முன்றிற்
பெருங்களி வியப்பொடு பிரானருளி னாலே
யருந்திரு மகப்பெற வணைந்தவனி செய்வார்.

Koviloor Digital Library

(இ-ள்.) இரும்புவனம் இத்தகைமை எய்த=பெருமைபொருந்திய அச் சீகாழிநகரம் இவ்வகைப்பட்ட குதூகலத்தையடைய ; அவர் தம்மைத்தரும் குலமறைத்தலைவர்=ஆளுடையபிள்ளையாரைப்பெற்ற நான்கு வேதத்திற்குந் தலைவராகிய சிவபாத இருதயர் ; தம்பவன முன்றில்=தமது திருமாளிகை யின் முற்றத்து ; பெருங்களிவியப்பொடு=மிக்ககளிப்பினாலும் அதிசயத்தா லும் ; பிரான் அருளினாலே=சிவபிரானது திருவருளினாலே ; அருந்திரு மகப் பெறஅனைந்த அணிசெய்வார்=அரியபுத்திரனைப் பெறுதல்காரணமாகத்தாம் செய்யும் விழவிற்குப்பொருந்தியநல்லஅலங்காரத்தைச்செய்வார்-எ-று. (௩௪)

காதல்புரி சிந்தைமகி ழக்களி சிறப்பார்
மீதணியு நெய்யணி விழாவொடு திளைப்பார்
சூதநிகழ் மங்கல வினைத்துழனி பொங்கச்
சாதக முறைப்பல சடங்குவினை செய்வார்.

(இ-ள்.) காதல்புரிசிந்தை மகிழக்களிசிறப்பார்=விருப்பஞ் செய்கின்ற தமதுமனமகிழ்தல் காரணமாகக்களிப்படைவார் ; மீதணியும் நெய்யணிவிழா வொடுதிளைப்பார்=மேலேபூசும் நெய்விழாவினால் சந்தோஷமடைவார் ; சூத நிகழ்மங்கலவினைத் துழனிபொங்க = பிள்ளையாரது அவதாரங்காரணமாகச் செய்யுமங்கலத்தொழிலினாலாய ஆரவாரங்களதிகரிக்க ; சாதகமுறைப்பல சடங்குவினைசெய்வார்=சாதகருமஞ்செய்யும் விதிக்குரிய பலசடங்குகளையுஞ் செய்வார்—எ-று.

சூதம்-நழுவுதல். அது ஈண்டுப்பிறப்பின்மேலது மறைத்தலைவரென்னும் எழுவாயைத்தனித்தனி பிரித்துக்கூட்டுக. (௩௫)

மாமறை விழுக்குல மடந்தையர்க டம்மிற்
றூமுறு மகிழ்ச்சியொடு சாயன்மயி லென்னத்
தூமணி விளக்கொடு சுடர்க்குழைகண் மின்னக்
காமர்திரு மாளிகை கவின்பொலிவு செய்வார்.

(இ-ள்.) மாமறைவிழுக்குல மடந்தையர்கள்=பெருமைபொருந்திய மேன்மையையுடைய வேதியர்குலப்பெண்கள் ; தம்மிற்றூமுறுமகிழ்ச்சியொடு =தம்முள்ளே தாமிக்கமகிழ்ச்சியுடனே ; சாயல்மயிலென்ன=சாயலையுடைய மயில்போல ; தூமணிவிளக்கொடு சுடர்க்குழைகள்மின்ன=தமது கையிலேந் திய பரிசுத்தமான இரத்தினவிளக்குடன் ஒளியையுடைய காதணிகளும் பிர காசிக்க ; காமர்திருமாளிகைகவின்பொலிவுசெய்வார்=அழகியபிள்ளையார் அ வதாரஞ்செய்தருளிய சிவபாத இருதயரது திருமாளிகையை அழகுபெற அ லங்காரஞ்செய்வார்—எ-று.

சாயல்-கண்டோரால் விரும்பப்படும் ஒசிவுமுதலியதோற்றம். அதுமயி லின்கண்ணுள்ளது. அதற்கொத்ததோற்றம் மகளிர்கண்ணும் உள்ளனவென்

Koviloor Digital Library

பார் சாயல்மயிலென்னவென்றார். விளக்கொடுசுடர்க் குழைகள் மின்ன என் பதில் ஒடு ஒருவினையொடுச்சொல் என்றும்சகாரத்ததிருதியை. அதுபிரதான மென்றும் குழையின் வினையாகிய மின்னஎன்றும் வினையொடுமுடிந்தது. ()

சுண்ணமொடு தண்மலர் துதைந்ததுகள் வீசி
யுண்ணிறை விருப்பினுட னேகையுரை செய்வார்
வெண்முளைய பாலிகைகள் வேதிதொறும் வைப்பார்
புண்ணிய நறும்புனல்கொள் பொற்குட நிரைப்பார்.

(இ-ள்.) சுண்ணமொடுதண்மலர்துதைந்ததுகள் வீசி=வாசனைப்பொடி யொடுகுளிர்ந்த மலரின்கணுள்ள பராகங்களைக்கலந்து ஒருவர்மேலொருவர் வீசி; உண்ணிறைவிருப்புடன் ஒகையுரைசெய்வார்=தமதுமனத்தில்நிறைந்த விருப்பத்தோடு ஒருவர்க்கொருவர் பிரியவார்த்தைகளாடாநிற்பர்; வெண்மு ளையபாலிகைகள் வேதிதொறும்வைப்பார்=வெள்ளியமுளைகளையுடைய பாலி கைகளைத் திண்ணைகள்தோறும் வையாநிற்பர்; புண்ணியநறும்புனல்கொள் பொற்குடம் நிரைப்பார்=புண்ணியத்தைவிளக்கும் நறுமணங்கமழும் (காவி ரிமுதலிய நதிகளிற்பூரித்த) சலத்தைக்கொண்ட பொற்குடங்களை வரிசை யாக வையாநிற்பர்—எ-று. (௬எ)

செம்பொன்முத லாயபல தானவினை செய்வார்
நம்பரடி யாரமுது செய்யநல முய்ப்பார்
வம்பலர் நறுந்தொடையல் வண்டொடு தொடுப்பார்
நிம்பமுத லானகடி நீடுவினை செய்வார்.

(இ-ள்.) செம்பொன்முதலாயபல தானவினைசெய்வார்=சிவந்தபொன் முதலியபலதானவினைகளைச்செய்யும் (சிவபாதவிருதயரது) சுற்றத்தார்; நம் பர் அடியார் அமுது செய்யநலமுய்ப்பார்=சிவனடியார்கள் அமுதுசெய்தரு ள நன்மையான சாமக்கிரிகளைக்கொடுப்பாராய்; வம்பலர் நறுந்தொடையல் வண்டொடுதொடுப்பார்=வாசனையோடுமலர்ந்த நல்லமலர்மாலைகளை வண்டுக ளுடன் (பந்தல்களிற்) றொடுப்பாராய்; நிம்பமுதலானகடி நீடுவினைசெய்வார் =வேப்பிலைசெருகல்முதலாய காப்புவினைகளைச்செய்வாராயும்—எ-று.

பூதானமுதலியவுமடங்குதற்குச்செம்பொன்முதலாயபலதானமென்றார்

ஐயவி யுடன்பல வமைத்தபுகை யாலு
நெய்யகி னறுங்குறை நிறைத்தபுகை யாலும்
வெய்யதழ லாகுதி விழுப்புகையி னாலுந்
தெய்வமண நாறவரு செய்தொழில் விளைப்பார்.

(இ-ள்.) ஐயவியுடன்பலவமைத்தபுகையாலும்=வெண்கடுகுடனே(குங் குருக்கமுதலிய) பலபொருள்களாலமைத்த காப்புப்புகையினாலும்; நெய்ய

Koviloor Digital Library

தில் நறுங்குறைநிறைத்த புகையாலும்=நெய்யுடன் வாசனையுடைய அகிலந் துண்டுகளால் நிறையச்செய்த புகையினாலும் ; வெய்யதழல் ஆகுதி விழுப்புகையினாலும்=வெப்பத்தைத்தரும் ஓமத்தீயில் (சமித்துகளை) ஆகுதிசெய்யுமிடத்துண்டாகியபுகையினாலும் ; தெய்வமணநாறவருசெய்தொழில்விளைப்பார்=தெய்வத்தன்மையான வாசனைகமழும்படியான செயல்களைச் செய்வாராயும்—எ-று. (௯௬)

ஆயபல செய்தொழில்க ளன்றுமுதல் விண்ணோர்
நாயக னருட்பெருமை கூருநலமெய்தத்
தூயதிரு மாமறை தொடர்ந்தநடை நூலின்
மேயவிதி யையிரு தினத்தினும் விளைத்தார்.

(இ-ள்.) விண்ணோர் நாயகன் அருட்பெருமை கூருநலமெய்த=தேவர்பிரானாகிய சிவபிரானது திருவருளின் பெருமையை யாவரும் அடையு நன்மைபொருந்த ; தூயதிருமாமறைதொடர்ந்த நடைநூலின்மேயவிதி=பரிசுத்தமாகிய அழகியபெருமைபொருந்திய வேதங்களினெறியை அநுசரித்த ஸ்மிருதிகளிற்கூறிய விதியாகிய ; ஆயபலசெய்தொழில்கள்=திருமாளிகைக்கண் காப்பிடுதல் மாலைநாற்றுதல் முதலிய பலதொழில்களை ; அன்றுமுதல்=திருவவதார நாள்முதல் ; ஐயிருதினத்திலும் விளைத்தார்=பத்துத்தினத்திலும் வழுவாதுசெய்தார்கள்—எ-று.

நடைநூல்-ஆசாரங்களைக்கூறும் ஸ்மிருதிகள்.

நலமுய்ப்பார் என்பதுமுதல் தொழில்விளைப்பார் என்பது இறுதியாய முற்றுக்களை விளைத்தாரென்னும் வினைக்கு விசேடணமாக்குக. இதனைவடநூலார் வினைவிசேடணமென்பர்.

செப ஓமாதிகளுமடங்கப்பலதொழிலென்றார். (௪௰)

நாமகர ணத்தழகு நாள்பெற நிறுத்திச்
சேமவுத யப்பரிதி யிற்றிகழ் பிரானைத்
தாமரை மிசைத்தனி முதற்குழவி யென்னத்
தூமணி நிரைத்தணிசெய் தொட்டிலமர் வித்தார்.

(இ-ள்.) அழகுபெற நாமகரணத்து நாள்நிறுத்தி=அழகுபெறும்படியாக நாமகரணத்துக்குரிய (பதினோராம்) நாளில் (ஆளுடையபிள்ளையார்) எனத் திருநாமமிட்டு ; சேமவுதயப்பரிதியிற்றிகழ்பிரானை= (உலகத்தார்க்கு) க்ஷேமத்தைச்செய்யும் பாலசூரியனைப்போல விளங்காநின்ற ஆளுடையபிள்ளையாரை ; தாமரைமிசைத்தனி முதற்குழவியென்ன=திருமாலது உந்தித்தாமரையில்தோன்றிய ஒப்பில்லாத முதன்மையையுடைய பிரமனைப்போல ; தூமணி

Koviloor Digital Library

நிரைத்தணிசெய் தொட்டிலமர்வித்தார்=பரிசுத்தமாகிய இரத்தினங்களை நிரைபடப்பதித்து அழகுசெய்யுந்தொட்டிலின்கண் அமர்வித்தார்—எ-று. (௪௧)

பெருமலை பயந்தகொடி பேணுமுலை யின்பால்
அருமறை குழைத்தமுது செய்தருளு வாரைத்
தருமறைவி யார்பரமர் தாள்பரவு மன்பே
திருமுலை சுரந்தமது செய்தருளுவித்தார்.

(இ-ள்.) பெருமலைபயந்தகொடி=பெரிய இமயமலையரசன்பெற்ற பெரியநாயகியாரது; பேணுமுலையின்பால்=விரும்பத்தக்க திருமுலைப்பாலோடு; அருமறைகுழைத்தமுதுசெய்தருளுவாரை=அரியவேதப்பொருளைக் குழைத்து ஊட்ட அமுதுசெய்தருளும் ஆளுடையபிள்ளையாரை; தருமறைவியார்=பெற்ற சிவபாத இருதயரது மனைவியாராகியபகவதியார்; பரமர்தாள்பரவுமன்பே=சிவபிரானது திருவடிகளைத்துதிக்கும் பேரன்பையே; திருமுலைசுரந்தமுது செய்தருளுவித்தார்=திருமுலைகளினின்றுஞ்சுரந்து அமுதுசெய்தருளச்செய்தார்—எ-று.

சிவஞானத்துக்கு அன்பு காரணமென்பார் சிவஞானங் குழைத்துண்பார்க்கு மறைவியார் பரமர் தாள்பரவு மன்பே சுரந்து அமுதுசெய்வித்தாரென்றார்.

பிள்ளையாரிடைத்தொடர்பாலுண்டாகும் அன்பிற்கு இத்திருமுலைப்பாலுஞ்சககாரியாய் நின்றுவளர்வித்தலிற்பால் அன்பென உபசரிக்கப்பட்டது. ()

ஆறுலவு செய்யசடை யையரருளாலே
பேருலகி னுக்கென வரும்பெரிய வர்க்கு
வேறுபல காப்புமிகை யென்றவை விரும்பார்
நீறுதிரு நெற்றியி னிறுத்திநிறை வித்தார்.

(இ-ள்.) ஆறு உலவு செய்ய சடை ஐயரருளாலே=கங்காநதி சஞ்சரிக்கின்ற சிவந்தசடையையுடைய சிவபிரானது திருவருளினாலே; பேருலகினுக்கெனவரும் பெரியவர்க்கு=இவ்வுலகிற்கு ஓர்பெரும்பேறென்று யாவருஞ் சொல்ல அவதரித்தபெரியவராகிய ஆளுடையபிள்ளையாருக்கு; வேறுபல காப்பு மிகையென்று=மட்காப்புமுதலிய பலவேறு காப்புகள் குற்றமாமென்று; அவைவிரும்பார்=அக்காப்பை விரும்பாராய்; நீறுதிருநெற்றியில் நிறுத்தி நிறைவித்தார்=திருநீற்றுக்காப்பினைத் திருநெற்றியிலிட்டுப் பொலியச்செய்தார்—எ-று.

இதற்குமறைவியார் எழுவாய். விரும்பாரென்பது-முற்றெச்சம்.

மலமாயை கன்மங்களை நீறுபடுத்தலால் விபூதி நீறெனப்படும். (௪௫)

Koviloor Digital Library

தாயர்திரு மடித்தலத்துந் தயங்குமணித் தவிசினிலுந்
தூயசுடர்த் தொட்டிலினுந் தூங்குமலர்ச் சயனத்துஞ்
சேயபொருட் டிருமறையுந் தீந்தமிழுஞ் சிறக்கவரு
நாயகனைத் தாலாட்டு நலம்பலபா ராட்டினர்.

(இ-ள்.) தாயர்திருமடித்தலத்தும்=நற்றாயர் முதலியோர் தமது மடியிலும்; தயங்கு மணித்தவிசினிலும்=விளங்காநின்ற இரத்தினமழுத்திய மெத்தைகளிலும்; தூயசுடர்த்தொட்டிலினும்=பரிசுத்தமாகிய வொளியையுடைய தொட்டிலினிடத்தும்; தூங்குமலர்ச் சயனத்தும்=தூங்குகின்ற பூந்தொட்டிலினும்; சேயபொருட் டிருமறையுந் தீந்தமிழுஞ்சிறக்கவரும் நாயகனை=கிட்டுதற்கரிய பொருளமைந்த வேதங்களும் இனியதமிழுஞ் சிறந்தோங்க அவதரித்த ஆளுடையபிள்ளையாரை; தாலாட்டு நலம்பல பாராட்டினர்=தாலாட்டுதலால் அவரது பல விசேடமானநன்மைகளையு மெடுத்துச்சொல்லிப்பாராட்டினர்—எ-று.

தாயர்-எழுவாய். பாராட்டினர்-பயனிலை.

தாயரென்பதனால் நற்றாய் கைத்தாய் செவிலித்தாய் முதலியோருங் கொள்க. தாலாட்டு என்பது நாவசைத்துத் தொட்டிலாட்டும் பாட்டு, இதனைத்தாலாட்டு நலம்பல பாராட்டினர் என்பதினாலுமறிக.

தாலாட்டுப்பருவம் ஐந்தாமாதத்தது.

தாலென்றுமோசையோடு தொட்டிலையாட்டுமோர்பாட்டெனினுமமையும். ()

வருமுறைமைப் பருவத்தில் வளர்புகலிப் பிள்ளையா
ரருமறைக டலையெடுப்ப வாண்டதிரு முடியெடுத்துப்
பெருமழுவர் தொண்டல்லாற்பிறிதிசையோ மென்பார்போற்
றிருமுகமண் டலமசையச் செங்கீரை யாடினர்.

(இ-ள்.) வருமுறைமைப்பருவத்தில்=(தாலாட்டுப்பருவத்தின்) முறையேவருகின்ற சப்பாணிப்பருவத்தில்; வளர்புகலிப்பிள்ளையார்=வளராநின்ற சீகாழியில் அவதரித்த ஆளுடையபிள்ளையார்; அருமறைகள் தலையெடுப்ப=அரியவேதங்கள் தலையெடுக்காநிற்க; ஆண்டதிருமுடியெடுத்து=நம்மையாட்கொண்ட திருமுடியைமேலேயெடுத்து; பெருமழுவர் தொண்டல்லாற்பிறிதிசையோ மென்பார்போல்=பெரிய மழுவாயுதத்தையுடைய சிவபிரானுடைய திருத்தொண்டினையல்லாமல் மற்றொன்றற்கும் யாம் உடன்படோமென்று மறுப்பார்போல; திருமுகமண்டலமசையச் செங்கீரையாடினர்=அழகிய முகமண்டலம் அசையா நிற்கச்செங்கீரையாடியருளினார்—எ-று.

செங்கீரையாடல் செவ்வியசொல்லைச் சொல்லத் தலைநிமிர்த்து எத்தனித்தல். இப்பருவம் ஏழா மாதத்தது.

Koviloor Digital Library

திருமுடியெடுத்தல் மறைகள் தலையெடுத்தற்குக் காரணமாதலால் எடுப்பவென்னும் செயவெனெச்சம் காரியப்பொருளாயிற்று. தாலாட்டுப்பருவமேழாமாதமும் செங்கீரைப்பருவ மைந்தாமாதமு மாக வேறுபடக்கூறிய தென்னை?

தாலாட்டுப்பருவத்தின்முன் செங்கீரையும் செங்கீரைப்பருவத்தின்பின் தாலாட்டுமாய் வருதலுமுளவாகலிற் சேக்கிழார்சுவாமிகள் ஈண்டு முன்பின்னாகக்கூறினரென்க. (சடு)

நாமறியோம் பரசமய முலகிலெதிர் நாடாது
போமகல வென்றங்கை தட்டுவதும் புனிதன்பாற்
காமருதா ளம்பெறுதற் கொத்துவதுங் காட்டுவபோற்
றாமரைச்செங் கைகளினாற் சப்பாணி கொட்டினார்.

(இ-ள்.) நாமறியோம் பரசமயம் உலகிலெதிர் நாடாது=(வேற்றுச்சமயிகளை நாம் உமது) மதங்களைமதியோம், (அதனால்நீவிர்) உலகின்கண்நம்மெதிரில் நில்லாது; போம் அகலவென்று அங்கைதட்டுவதும்=நீங்கி அகலப் போமென்று திருக்கரங்களைத்தட்டுதலும்; புனிதன்பால் காமருதாளம் பெறுதற்கு ஒத்துவதுங்காட்டுவபோல்=நின்மலனாகிய சிவபிரானிடத்து அழகிய பொற்றாளம் பெறும் பொருட்டுத் திருக்கரங்களால் ஒத்தறுத்தலுங் காட்டுதலைப்போல; தாமரைச்செங்கைகளினால் சப்பாணிகொட்டினார்=தாமரைமலர்போன்ற சிவந்த திருக்கரங்களினால் சப்பாணிகொட்டியருளினார்—எ-று.

ஒத்தறுத்தல் - தாளத்துக்குரிய மாத்திரைகளை வரையறுத்துத் தாளம் போடுதல். ஆதலின் ஈண்டு ஒத்துவது தாளம்போடுதல்.

சப்பாணிகொட்டுதல் பாணியுடன் பாணிசேரத்தட்டுதல். இப்பருவம் ஒன்பதாம் மாதத்தது.

அறியோமென்னுமுற்று மதியாமையைக்குறிப்பாலுணர்த்தலின் போமென்றது வெறுப்புப்பொருள்மேல் நின்றது. (சசு)

விதிதவறு படும்வேற்றுச் சமயங்க ளிடைவிழுந்து
கதிதவழ விருவிசும்பு நிறைந்தகடி வார்கங்கை
நதிதவழுஞ் சடைமுடியார் ஞானமணித் திடவுரியார்
மதிதவழ்மா ளிகைமுன்றின் மருங்குதவழ்ந் தருளினார்.

(இ-ள்.) விதிதவறுபடும் வேற்றுச்சமயங்கள்=வேதவிதிதவறிய சமண்பௌத்தம் என்னும் புறச்சமயங்கள்; இடைவிழுந்து கதிதவழ=இடையே முறிந்து வேகமின்றி மந்தகதியாய்த் தவழ்ந்துசெல்ல; இருவிசும்பினிறைந்த கடிவார்கங்கை நதிதவழுஞ் சடைமுடியார்=பெரிய ஆகாயத்தில் நிறைந்து வாசனைபொருந்திய நீண்ட கங்காநதி தவழ்ந்து செல்லுஞ்சடை முடியினையுடைய சிவபிரானார்; ஞானமணித்திடவுரியார்=ஞானத்தை அருளுதற்குரிய ஆளுடையபிள்ளையார்; மதிதவழ் மாளிகைமுன்றின் மருங்குதவழ்ந்

Koviloor Digital Library

தருளினர்=சந்திரன் தவழுந்திருமாளிகையின் முற்றத்தின்பக்கத்தில் தவழ்ந்தளினர்—எ-று. (சஎ)

சூழவரும் பெருஞ்சுற்றத் தோகையருந் தாதியருங்
காழியர்தஞ் சீராட்டே கவுணியர்கற் பகமேயென்
றேழிசையும் பலகலையு மெவ்வுலகுந் தனித்தனியே
வாழவரு மவர்தம்மை வருகவரு கெனவழைப்ப.

(இ-ள்.) சூழவரும் பெருஞ்சுற்றத் தோகையருந் தாதியரும்=தம்மைச் சூழவரும் பெரும் உறவினராகிய மயிலின்சாயலையுடைய பார்ப்பனப்பெண்களும் தாதிமாரும்; காழியர்தஞ் சீராட்டே=காழிப்பதியின் உள்ளாரது செல்வமே; கவுணியர் கற்பகமேயென்று=கவுணியர்கோத்திரத்தார் தம் கற்பகத்தருவேயென்று; ஏழிசையும் பலகலையும் எவ்வுலகுந் தனித்தனியே வாழவருமவர்தம்மை=குரல் முதலிய வேழிசைகளும் வேதவேதாங்க முதலிய பலநூல்களும் எல்லாவுலகங்களும் வேறு வேறு வாழும்படி அவதரித்த ஆளுடையபிள்ளையாரை; வருகவரு கெனவழைப்ப=வருக வருகவென்று அழையாநிற்பர்கள்—எ-று.

வருக வருகவென்றது உவகைப்பொருளில் வந்த அடுக்கு. (சஅ)

திருநகையா லழைத்தவர்தஞ் செழுமுகங்கண் மலர்வித்தும்
வருமகிழ்வு தலைசிறப்ப மற்றவர்மேற் செலவுகைத்தும்
உருகிமனங் கரைந்தலைய வுடனணைந்து தழுவியுமுன்
பெருகியவின் புறவளித்தார்பெரும்புகலிப் பிள்ளையார்.

(இ-ள்.) பெரும்புகலிப் பிள்ளையார் திருநகையால் அழைத்தவர்தம் செழுமுகங்கள் மலர்வித்தும்=பெரியசீகாழியின்கண் அவதரித்த ஆளுடையபிள்ளையார் (கைகொட்டியழைத்த) தாய்தந்தைமுதலியவர்களுடைய சிறந்தமுகாரவிந்தங்களை அழகிய புன்னகையாலே மலரச்செய்தும்; வருமகிழ்வுதலைசிறப்ப அவர்மேல் செலவுகைத்தும்=இடையறாத மகிழ்ச்சி (மனத்தில்) சிறந்தோங்க அவர்களிடத்துத் தவழ்ந்துசென்று திருவடி ஒச்சியுதைத்தும்; மனம் உருகிக்கரைந்து அலைய உடனணைந்துதழுவியும்=மனமுருகிக்கரைந்து இளகவிரைந்து அவர்கண் முன்சென்றுதழுவியும்; பெருகிய இன்பு உற அளித்தார்=ஓங்கிய இன்பத்தை அவர்களுக்குமிகத் தந்தருளினர்—எ-று.

முகமலர்வித்தலாலும் திருவடியோச்சுதலாலும் உடனணைந்து தழுவுதலாலுமாய இன்பம் பெரிதென்பார் பெருகிய இன்புறவென்றார். (சகூ)

வளர்பருவ முறையாண்டு வருவதன்முன் மலர்வரிவண்
டுளர்கருமென் சுருட்குஞ்சி யுடனலையச் செங்கின்று
கிளரொளிக்கிண் கிணியெடுப்பக் கீழ்மைநெறிச் சமயங்க
டளர்நடையிட் டறத்தாமுந் தளர்நடையிட் டருளினர்.

Koviloor Digital Library

(இ-ள்.) வளர்பருவ முறையாண்டு வருவதன்முன்=இவ்வண்ணம் பல ர்க்குமகிழ்ச்சிதந்து) வளரும்பருவ முறையில் ஒருவருடம் வருதற்குமுன் ; மலர்வரிவண்டு ஊர்கருமென் சுருள்குஞ்சி உடன் ஆலயச்செங்கின்று=மல ரில் வரிகளையுடைய வண்டுகள்படிந்த கரியமிருதுவாகிய சுருண்டகுடுமி யோடலையா நிற்கச்செவ்வே நின்றருளி ; கிளர்ஒளிகிண்கிணி எடுப்ப=விளங் குங்கிரணத்தையுடைய திருச்சாற்சதங்கைகள் ஒலிப்ப ; கிழ்மைநெறிச்சமய ங்கள் தளர்நடை இட்டு அற=புல்லியமார்க்கங்களையுடைய புறச்சமயங்கள் தளர்ந்த நடையிட்டு வருந்திக்கெட ; தாமும் தளர்நடை இட்டு அருளினர்= அருளுடையபிள்ளையாரும் (தத்தடியிட்டு) தளர்நடைப்பருவம் அடைந்தரு ளினர்—எ-று. (௬0)

தாதியர்தங் கைப்பற்றித் தளர்நடையி னசைவொழிந்து
சோதியணி மணிச்சதங்கை தொடுத்தவடம் புடைசூழ்ந்த
பாதமலர் நிலம்பொருந்தப் பருவமுறை யாண்டொன்றின்
மிதணைய நடந்தருளி விளையாடத் தொடங்கினர்.

(இ-ள்.) தாதியர்தம் கைபற்றித்தளர்நடையின் அசைவு ஒழிந்து=வள ர்த்ததாய்மார்களின் கைகளை ப்பிடித்துத் தளர்ந்த நடையாலுண்டாகியவரு த்தம்நீங்கி ; சோதியணிமணிச் சதங்கைதொடுத்த வடம்புடைசூழ்ந்த= அழகிய கிரணங்களையுடைய இரத்தினங்களழுத்திய சதங்கைபுனைந்த அரை ப்பட்டிகை மருங்கிற்சூழ ; பாதமலர் நிலம்பொருந்த=பாத தாமரைகளைப்பூ தேவியடையாநிற்க ; பருவமுறையாண்டொன்றின்மீதுஅணைய=பருவமுறை யேழாண்டின்மேல் விளையாடற்பருவம் வாராநிற்க ; நடந்தருளி விளையாட த்தொடங்கினர்=நடந்துவிளையாடியருளினர்—எ-று. (௬க)

சிறுமணித்தேர் தொடர்ந்துருட்டிச் செழுமணிச்சிற்றில்களிழைக்கு
நறுநுதற்பே தையர்மருங்கு நடந்தோடி யடர்ந்தழித்துங்
குறுவெயர்ப்புத் துளியரும்பக் கொழும்பொடியா டியகோல
மறுகிடைப்பே ரொளிபரப்ப வந்துவளர்ந் தருளுநாள்.

(இ-ள்.) சிறுமணித்தேர் தொடர்ந்துருட்டி=சிறிய இரத்தினமிழைத்த சிறுதேரைப்பற்றித் தொடர்ந்துருட்டி ; செழுமணிச்சிற்றில்கள் இழைக்கும் நறுநுதல்பேதையர் மருங்குநடந்தோடி யடர்ந்தழித்தும்=செழுமைபொருந் திய மணிகளால் சிற்றில்கோலி விளையாடும் நல்லநெற்றியையுடைய பேதைப் பருவத்துச் சிறுமியர் பக்கத்துநெருங்கிச்சென்று அச்சிற்றிலையழித்தும் ; கு றுவெயர்ப்புத்துளியரும்பக்கொழும்பொடிஆடியகோலம்=சிறியவெயர்வைத் துளி திருமேனியிலரும்பக் கொழுவியபுழுதிபடிந்ததிருக்கோலம் ; மறுகிடை ப்பே ரொளிபரப்ப=வீதியினிடத்துப்பெரிய வொளியைவிச ; வந்துவளர்ந்த ருளுநாள்=விளையாடிவளர்ந்தருளுங்காலத்தில்—எ-று. (௬உ)

Koviloor Digital Library

மங்கையோ டுடனாகி வளர்தோணி வீற்றிருந்த
திங்கள்சேர் சடையார்தந் திருவருட்குச் செய்தவத்தி
னங்குரம்போல் வளர்ந்தருளி யருமறையோ டுலகுய்ய
வெங்கள்பிரா னீராண்டின் மேலோராண் டெய்துதலும்.

(இ-ள்.) மங்கையோடு உடனாகி வளர்தோணிவீற்றிருந்த=பெரியநாயகியாரோடு கலந்தருளி ஊழிதோறுமோங்கும் திருத்தோணி ஆலயத்தில் எழுந்தருளிய; திங்கள்சேர்சடையார்தம் திருவருட்கு=சந்திரகலையைத் தரித்த சடாமகுடத்தையுடைய திருத்தோணியப்பரது திருவருளாகிய பயிருக்கு; எங்கள்பிரான் செய்தவத்தின் அங்குரம்போல் அருமறையோடு உலகுய்யவளர்ந்தருளி=ஆளுடையபிள்ளையார் சிவபாத இருதயர் செய்த தவமாகியவித்துக்கு அரியவேதங்களோடு முலகமுய்யமுளைபோல் வளர்ந்தருளி; ஈராண்டின்மேல் ஓராண்டெய்துதலும்=மூவாண்டுப்பருவம் அடையவும்—எ-று.(௩௩)

நாவாண்ட பலகலையு நாமகளு நலஞ்சிறப்பப்
பூவாண்ட திருமகளும் புண்ணியமும் பொலிவெய்தச்
சேவாண்ட கொடியவர்தஞ் சிரபுரத்துச் சிறுவர்க்கு
மூவாண்டி னுலகுய்ய நிகழ்ந்ததனை மொழிகின்றேன்.

(இ-ள்.) நாவாண்டபலகலையும்நாமகளும் நலஞ்சிறப்ப=நாவினாலோதுதற்குரிய வேதமுதலிய பலநூல்களுங் கலைமகளுமேம்பட்டுவிளங்கவும்; பூவாண்டதிருமகளும் புண்ணியமும் பொலிவெய்த=தாமரைப்பூவில் வசிக்குந்திருமாதும் புண்ணியப்பகுதியும் விளங்காநிற்கவும்; சேவாண்ட கொடியவர்தம் சிரபுரத்துச் சிறுவர்க்கு=இடபக்கொடியை யுடைய சிவபிரான் வீற்றிருக்கும் சிரபுரத்தில் அவதரித்த ஆளுடையபிள்ளையாருக்கு; மூவாண்டின் உலகுய்ய நிகழ்ந்ததனை மொழிகின்றேன்=மூன்றும் பருவத்தில் உலகங்களீடேற நடந்தசெய்தியை யான்சொல்லாநின்றேன்—எ-று.

சிரபுரத்துத்தம்சிறுவர்க்குஎனக்கூட்டியுரைப்பினுமமையும். (௩௪)

பண்டுதிரு வடிமறவாப் பான்மையோர் தமைப்பரமர்
மண்டுதவ மறைக்குலத்தோர் வழிபாட்டி னளித்தருளத்
தொண்டினிலை தரவருவார் தொடர்ந்தபிரி வுணர்வொருகாற்
கொண்டெழுலும் வெருக்கொண்டாற் போலமுவர் குறிப்பயலாய்.

(இ-ள்) பண்டுதிருவடிமறவாப்பான்மையோர்=முற்காலத்தில்சிவபிரானது திருவடித்தாமரைகளை மறவாதபேரன்புடையபிள்ளையார்; பரமர்தம்மை மண்டுதவமறைக்குலத்தோர் வழிபாட்டின்அளித்தருள=சிவபிரானார் தம்மை மிக்க தவத்தைச்செய்யுஞ் சிவபாதஇருதயர் வழிபாட்டிற் கிரங்கித்தந்தருளுதலால்; தொண்டினிலைதரவருவார்=அச்சிவபிரானது திருத்தொண்டினில

மையிலங்க அவதரிப்பாராயினார்; (அதனாலவர்) தொடர்ந்த பிரிவு உணர்வு =அவரோடு உடனாய் நிற்றலை நீங்குதலாலாய பிரிவுணர்ச்சி; ஒருகால்கொண்டெழலும்=(நாடோறும்) ஒரோர் காலத்து மேற்கொண்டெழாநிற்கவும்; குறிப்பயலாய் வெருக்கொண்டார்போல் அழுவர்=(கண்டார்க்குப் பிள்ளைத் தன்மை மருட்சியால்) வெருக்கொண்டு அழுவார்போலக் குறிப்புவேறாய் அழுவார்—எ-று. (௫௫)

மேதகைய விந்நாளில் வேறொருநாள் வேதவிதி
நீதிமுறைச் சடங்குநெறி முடிப்பதற்கு நீராடத்
தாதையார் போம்பொழுது தம்பெருமா னருள்கூடச்
சோதிமணி மனைமுன்றிற் றொடர்ந்தழுது பின்சென்றார்.

(இ-ள்) மேதகைய இந்நாளில் வேறொருநாள்=(இவ்வாறு) மேம்பட்டு நிகழும் இந்நாளில் மற்றொருதினத்தில்; வேதவிதி நீதிமுறைச் சடங்குநெறி முடிப்பதற்கு=வேதவிதியினின்றும் வழுவாத சிரௌதம் சுமார்த்தமென்னும் கிரியைகளை முடிக்கும்பொருட்டு; நீராடத்தாதையார் போம்பொழுது=ஸ்நானஞ்செய்தற்குத் தமதுபிதாவாகிய சிவபாத இருதயர் செல்லுங் காலத்தில்; தம்பெருமான் அருள்கூட=சிவபிரானது திருவருள்கைகூட; சோதிமணி மனைமுன்றில் தொடர்ந்து அழுது பின்சென்றார்=ஒளியையுடைய அழகிய திருமாளிகையின் முற்றத்தினின்று தமது பிதாவைத்தொடர்ந்து அழுதுக்கொண்டு அவர்பின்போனார்—எ-று.

காலம் செயல் முதலியனதம்பெருமானருள்கூடுவதற்குநிமித்தமாதலின் அவையும் அடங்கத்தாதையார் போம்பொழுதென்றார். (௫௬)

பின்சென்ற பிள்ளையார் தமைநோக்கிப் பெருந்தவத்தோர்
முன்செல்கை தனையொழிந்து முனிவார்போல் விலக்குதலு
மின்செய்பொலங் கிண்கிணிக்கால் கொட்டியவர் மீளாமை
யுன்செய்கை யிதுவாகிற் போதென்றங் குடன்சென்றார்.

(இ-ள்.) பின்சென்றபிள்ளையார்தமைநோக்கி=தமதுபின்னேவந்தருளும் அருளுடையபிள்ளையாரைப்பார்த்து; பெருந்தவத்தோர்=பெரியதவத்தையுடைய சிவபாத இருதயர்; முன்செல்கைதனையொழிந்து=தாம் அவர்முன்புசெல்லுதலைத்தவிர்ந்து; முனிவார்போல்விலக்குதலும்=கோபிப்பவர்போலத் (தமது பின் பிள்ளையார்) வரவைவிலக்குதல்செய்யவும்; மின்செய்பொலம் கிண்கிணிக்கால்=ஒளிவிளங்கும் பொன்னாலாகிய சிறு சதங்கையணிந்த திருவடிகளை; கொட்டியவர் மீளாமை=பூமியிற்கொட்டி அவ் வருளுடையபிள்ளையார் தமது திருமாளிகைக்குத் திரும்பாதிருத்தலை (நோக்கி); உன்செய்கையிதுவாகிற்போதென்று அங்கு உடன்சென்றார்=உனதுசெய்கை யிவ்வாறாயின் என்னுடன்போதக்கென்று அவருடன்போனார்—எ-று. (௫௭)

Koviloor Digital Library

கடையுகத்திற் றனிவெள்ளம் பலவிரிக்குங் கருப்பம்போ
லிடையறுப் பெருந்தீர்த்த மெவற்றிற்கும் பிறப்பிடமாய்
விடையுயர்த்தார் திருத்தோணிப் பற்றுவிடா மேன்மையதாந்
தடமதனிற் றுறையணைந்தார் தருமத்தின் றலைநின்றார்.

(இ-ள்.) தருமத்தின்தலைநின்றார்=தருமமார்க்கத்தின்முற்பட்டுவிளங்குகின்றசிவபாதஇருதயர்; கடையுகத்தில் தனிவெள்ளம்பலவிரிக்கும் கருப்பம்போல்=யுகக்கடையில் ஒப்பற்றபலவெள்ளங்களைவிரித்தற்குரிய ஒருகருப்பத்தையொத்து; இடையறுப்பெருந்தீர்த்தம் எவற்றினுக்கும் பிறப்பிடமாய்=(காலவிசேடங்களில்) தன்னை நீங்காதிருக்கின்ற மான்மியத்தையுடைய புஷ்கரம் பிரபாசம் முதலியதீர்த்தங்களெல்லாவற்றிற்குந்தான்பிறத்தற்கிடமாகி; விடையுயர்த்தார் திருத்தோணி பற்றுவிடா மேன்மையதாம்=இடபக்கொடியையுடைய சிவபிரானது திருத்தோணியென்னும் ஆலயத்தெல்லையில் நீங்காமலிருக்கு மேன்மைபொருந்திய; தடமதனில் துறையணைந்தார்=முலைப்பாற்றீர்த்தத்தின் கரையினையடைந்தார்—எ-று.

கருப்பத்தையொத்துப்பிறத்தற்கிடமாய தடமெனமுடிக்க. எழுகடலும் மூவுலகையு மூடுங்கால் அவ்வெள்ளங்களெல்லா மிதனிடத்துநின்றுவிரிந்தன போலத்தோன்றுமென்பார் தனிவெள்ளம் பலவிரிக்குங் கருப்பம்போலென்றும், காலவிசேடங்களில் ஏனையதீர்த்தங்கள் அதனைச்சேருதலின் இடையறுப் பெருந்தீர்த்தமென்றுங்கூறினார் இடையறுப் பெருந்தீர்த்தமென்புழி வற்றாத பெரியாதி சரோவரமுதலிய பெருந்தீர்த்தமெனினுமமையும். (௫அ)

பிள்ளையார் தமைக்கரையில் வைத்துத்தாம் பிரிவஞ்சித்
தெள்ளுநீர் புகமாட்டார் தேவியொடுந் திருத்தோணி
வள்ளலா ரிருந்தாரை யெதிர்வணங்கி மணிவாவி
யுள்ளிழிந்து புனல்புக்கா ருலகுய்ய மகப்பெற்றார்.

(இ-ள்.) உலகுய்யமகப்பெற்றார்=எல்லாவுலகங்களு மீடேற ஆளுடைய பிள்ளையாரைப்பெற்ற சிவபாத இருதயர்; பிள்ளையார் தமைக்கரையில்வைத்து=ஆளுடைய பிள்ளையாரைத் தீர்த்தக்கரையில்வைத்து; தாம் பிரிவு அஞ்சி=தாம் அவரைப்பிரிதற்கு அச்சமுற்று; தெள்ளுநீர்புகமாட்டார்=தெளிந்ததீர்த்தமதிலிழிதற்கு உடன்படாதவராய்; தேவியொடுந்திருத்தோணி வள்ளலார் இருந்தாரை எதிர்வணங்கி=பெரியநாயகியாருடன் திருத்தோணியின்கண் எழுந்தருளியிருந்த தோணியப்பரை யெதிரேநின்று (அவரைப்பாதுகாக்கும்படி) வணங்கி; மணிவாவியுள்ளிழிந்துபுனல்புக்கார்=அழகியவாவியினுள்ளிறங்கித் தீர்த்தத்தையடைந்தார்—எ-று. (௫௯)

நீராடித் தருப்பித்து நியமங்கள் பலசெய்வார்
சீராடுந் திருமகனார் காண்பதன்முன் செய்ததற்பி
னாராத விருப்பினு லகமருடம் படியவடி
போதா மூழ்கினார் பெருங்காவல் பெற்றாராய்.

Koviloor Digital Library

(இ-ள்.) நீராடித்தருப்பித்து நியமங்கள் பல செய்வார்=தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து அதன்பின் ஸ்நானாங்க தருப்பணம் சந்தியாவந்தனம் சிவபூசை ஔபாசனமுதலிய பலநியமங்களைச்செய்யும் சிவபாத இருதயர்; சிராமர்திருமகனார் காண்பதன்முன் செய்ததற்பின்=செல்வமிக்க தமது திருமகனார் தம்மைப்பாராமல் வேறுநோக்கி யிருக்குங்கால் சங்கற்பம் ஸ்நானம் சுத்த படனம் மார்ச்சனமுதலியபசில ஸ்நானங்கங்களைச் செய்து முடித்து அதன்மேல்; ஆராதவிருப்பினுல் அகமருடம் அடிபெயராதபடிய=நீங்காத விருப்போடு அகமருட ஸ்நானஞ்செய்பு நிமித்தம் (நாசி முதலியவற்றைச் சண்முகமுத்திரையினால்மூடி பிராணவாயு இயங்காமல்கும்பித்து)தான் நின்றவிடத்தினின்றும் நீங்காதுசலத்திற்படிய; பெருங்காவல்பெற்றாராய்மூழ்கினார்=சலத்தால் தன்னைச்சூழ வளைத்தலாகிய பெரிய காவலையுடையராய் ஸ்நானஞ்செய்தார்—எ-று.

படியவென்றும் செயவெனெச்சம் முடிக்குஞ்சொல்லா லுணரப்படுந் தொழிலோடு முற்பிற்பாடின்றி உடனிகழ்தலின் நிகழ்காலமாயிற்று படிய மூழ்கினாரென வினைமுதல்வினைகொண்டது. செய்வார்-செய்து-பெற்றாராய்-படிய மூழ்கினாரெனக்கூட்டுக. அகமருடமென்றது வடமொழி; பாவத்தைக்கெடுத்தலென்னும் பொருளது. பெருங்காதலென்றும்பாடம். (கூ0)

மறைமுனிவர் மூழ்குதலு மற்றவர்தம் மைக்காணு
திறைதரியா ரெனுநிலைமை தலைக்கிடா வீசர்கழன்
முறைபுரிந்த முன்னுணர்வு மூளவழத் தொடங்கினார்
நிறைபுனல்வா விக்கரையி னின்றருளும் பிள்ளையார்

(இ-ள்.) நிறைபுனல்வா விக்கரையில் நின்றருளும் பிள்ளையார்=நிறைந்ததீர்த்தக்கரையில் நின்றருளும் ஆளுடையபிள்ளையார்; மறைமுனிவர்மூழ்குதலும்=வேதங்களைபுணர்ந்த சிவபாதஇருதயர்மேற்கூறியவாறுசலத்திலமுழ்கிஅகமருட ஸ்நானம்செய்யுங்கால்; அவர்தம்மைக்காணாது=அப்பிதாவாகிய சிவபாத இருதயரைக்காணாமல்; இறைதரியார் எனுநிலைமைதலைக்கிடா=இறைப்பொழுதும் அவரைப்பிரியாரென்று நிலைமையானது மேற்கொண்டு; ஈசர்கழல்முறை புரிந்தமுன் உணர்வுமூள=சிவபிரானது திருவடிக்கண் காட்டோறும்வரும் பேரன்பானது உண்டாக; அழத்தொடங்கினார்=திருவாய்மலர்ந்தழத்தொடங்கினர்—எ-று. (கூக)

கண்மலர்க ணீர்ததும்பக் கைமலர்க ளாற்பிசைந்து
வண்ணமலர்ச் செங்கனிவாய் மணியதரம் புடைதுடிப்ப
வெண்ணனின்மறை யொலிபெருக வெவ்வுயிருங் குதுகலிப்பப்
புண்ணியக்கன் றனையவர்தாம் பொருமியழு தருளினார்

(இ-ள்.) கண்மலர்கள் நீர்ததும்ப =இருகண்களாகிய தாமரைமலர்களில் கண்ணீர்ததும்புதலைச்செய்ய; கைமலர்களால்பிசைந்து=திருக்கரங்க

Koviloor Digital Library

ளாகியமலர்களால் பிசைந்து ; வண்ணமலர்ச்செங்கனிவாய்மணியதரம்புடை துடிப்ப=அழகிய தாமரைமலரையும் சிவந்த கொவ்வைக்கனியையும் ஒத்ததிருவாயின் அழகிய அதரம்புடைபெயர்ந்து துடிக்காநிற்கவும் ; புண்ணியக்கன்றனையவர்=புண்ணியவடிவான ஓர் யானைக்கன்றையொத்த ஆளுடையபிள்ளையார்; பொருமி அழுதருளினார்=பொருமிப்பொருமி அழுதருளினார்—எ-று.

பொருமல்-தேம்பல். தாம் அசை. (கூஉ)

மெய்ம்மேற்கண் டுளிபனிப்ப வேறெங்கும் பார்த்தழுவார்
தம்மேலைச் சார்புணர்ந்தோ சாரும்பிள் ளைமைதானோ
செம்மேனி வெண்ணீற்றார் திருத்தோணிச் சிகரம்பார்த்
தம்மேயப் பாவென்றென் றழைத்தருளி யழுதருள.

(இ-ள்.) மெய்ம்மேற்கண்துளிபனிப்ப=தமது திருமேனியின்மேல் கண்ணீர்த் திவலைகள் சிந்தும்படி; வேறு எங்கும்பார்த்து அழுவார்=(தந்தையாரிழிந்ததுறையையும்) வேறிடங்களையும்பார்த்தழும் ஆளுடையபிள்ளையார் ; தம்மேலைச்சார்பு உணர்ந்தோ=சிவபிரானிடத்துத்தமக்குப் பண்டுள்ள தொடர்ச்சியைக்கருதியோ; சாரும்பிள்ளைமைதானோ=அவரிடத்துள்ளபிள்ளைமைத்தன்மையாலோ(இவ்விரண்டனுள் ஒன்றைக்காரணமாகக் கூறுதற்குயாமறியோம் என்றபடி) ; செம்மேனிவெண்ணீற்றார் திருத்தோணிச்சிகரம்பார்த்து=சிவந்த திருமேனியில் வெள்ளியவிபூதியைப்பரவப் பூசியசிவபிரானார் எழுந்தருளிய திருத்தோணியென்னு மாலயத்தின் சிகரத்தைநோக்கி ; அம்மே அப்பா என்று என்று அழைத்தருளி அழுதருள=அம்மே அப்பாவெனப் பலமுறை கூறியழைத்து அழுதருள—எ-று.

பிள்ளையாரிடத்து மேலைச்சார்பான வுணர்ச்சியும் அப்பொழுதின்கண் உள்ளனவாய பிள்ளைத்தன்மையும் உண்மையின் அவர் திருத்தோணிச்சிகரம்பார்த்து அம்மே அப்பாவென்று அழைத்து அழுதற்குக்காரணம் இவ்விரண்டனையுங் கூறல் கௌரவதோடத்திற் கிடமாதலின் ஐயப்பாற்படுத்தி அதிசயித்தாராயிற்று: உலகவழக்கிற்சிறுவர்கள் அம்மேயப்பா என்று அழைத்தல்போல் அழைத்தாரென்றமையால் பிள்ளைமையும் திருத்தோணிச் சிகரம்பார்த்து அழைத்தமையால்மேலைச்சார்பும் தோன்றுமேனும் பிள்ளைமைகாரியகாரியன்மையின் ஆண்டுமேலைச்சார்பானே அவ்வாறழைத்தாரென்பது குறிப்பு.

அந்நிலையிற் றிருத்தோணி வீற்றிருந்தா ரருணோக்கான்
முன்னிலைமைத் திருத்தொண்டு முன்னியவர்க் கருள்புரிவான்
பொன்மலைவல் லியுந்தாமும் பொருவிடைமே லெழுந்தருளிச்
சென்னியிளம் பிறைதிகழச் செழும்பொய்கை மருங்கணைந்தார்.

(இ-ள்.) அந்நிலையில் திருத்தோணிவீற்றிருந்தார்=அப்பொழுது திருத்தோணியில் (ஒப்பின்றி) எழுந்தருளியிருந்த சிவபிரானார்; அருள்நோக்கால்=தமது திருவருட்பார்வையால் ; முன்னிலைமைத் திருத்தொண்டுமுன்னியவர்

Koviloor Digital Library

க்கு=பண்டுள்ள திருத்தொண்டினிலைமையைக் கருதியழாநின்ற பிள்ளையாருக்கு ; (முன்னிலைமைத் திருத்தொண்டுமுன்னி அவர்க்கு=அவரது பழையதிருத்தொண்டின் நிலைமையைக்கருதி அப்பிள்ளையாருக்கு எனினுமமையும்) அருள்புரிவான்=அருள்செய்யும்பொருட்டு ; பொன்மலைவல்லியுந்தாமும்பொருவிடைமேல் எழுந்தருளி=இமயமலைமன்னன் புத்திரியாகிய உமாதேவியுந்தாமும் போர்செய்தற்குரிய இடபவாகனத்தின்மேலெழுந்தருளி ; சென்னி இளம்பிறை திகழச்செழும் பொய்கைமருங்கு அணைந்தார்=திருமுடியின்கண் இளமையானசந்திரகலை பிரகாசிக்கச்செழுமைதங்கிய வாவிக்கரையில் எழுந்தருளினார்—எ-று. (௬௪)

திருமறைநூல் வேதியர்க்குந் தேவியர்க்குந் தாங்கொடுத்த
பெருதவர நினைந்தோதான் றம்பெருமைக் கழல்பேணு
மொருநெறியில் வருஞானங் கொடுப்பதனுக் குடனிருந்த
வருமறையா ளுடையவளை யளித்தருள வருள்செய்வார்.


(இ-ள்.) திருமறைநூல் வேதியர்க்கும் தேவியர்க்கும் தாங்கொடுத்த பெருதம்வரநினைந்தோ=அழகியவேதங்களையுணர்ந்த சிவபாத இருதயர்க்கும்அவர்மனைவியராகிய பகவதியார்க்கும் தாம்அருளிய மிக்கவரத்தைத் திருவுளங்கொண்டோ ; தம்பெருமைக்கழல்பேணும் ஒருநெறியில் வருஞானங்கொடுப்பதனுக்கு=தமது பெருமைபொருந்திய திருவடிகளைத்தியானிக்கும் (கேவலசகலங்களின் பாற்படும் மயக்கவிகற்பங்களாகிய பலவுணர்வின்றி) ஏகாக்கிரமானசித்த நிரோதத்திற்றோன்றும் ஒருமைப்பட்டசிவஞானத்தை அவர்க்குக்கொடுத்தருளும்பொருட்டு; உடனிருந்தஅருமறையாளுடையவளை=தமது வாமபாகத்திருந்த வேதரூபியான அருந்தன்மையையுடைய பெரியநாயகியாரை ; அளித்தருள அருள்செய்வார்=கொடுத்தருளும்படி யருளிச்செய்வார்—எ-று.

ஓதுவார் கலிவலிகெடப் பதிகம்பாடும்படி பிள்ளையார்க்குச் சிவபிரான் கொடுத்த பெரிய வரத்தினின்றும் பிரித்தலின்ஓகாரம் பிரிநிலை. அவ்வரம்முன்னிலைமைத் திருத்தொண்டென்பதினாலும் பெறப்படும் எனவேசிவபிரானார் முன்னிலைமைத் திருத்தொண்டு முன்னியருளுங்காரணத்துக்குச் சிவபாதஇருதயர் பகவதியார் இவ்விருவருக்கும் கொடுத்தவரமும் சககாரியாதலின் அதனையுமுடன் கூறுவார் பெருதவர நினைந்தோ என்றார். (௬௫)


அழுகின்ற பிள்ளையார் தமைநோக்கி யருட்கருணை
யெழுகின்ற திருவுள்ளத் திறையவர்தா மெவ்வுலகுந்
தொழுகின்ற மலைக்கொடியைப் பார்த்தருளித் துணைமுலைகள்
பொழிகின்ற பாலடிசில் பொன்வள்ளத் தூட்டென்ன.

(இ-ள்.) அருட்கருணை எழுகின்ற திருவுள்ளத் திறையவர்=பேரருளும் பெருங்கருணையுமாகிய இவ்விரண்டும் உதித்தற்கிடமாகிய திருவுள்ளத்தை

Koviloor Digital Library



சீகாழி.



சிவபெருமான் பிராட்டியாரை ஞானப் [illegible] பிள்ளையாருக்குத்
[illegible] அருளியது

Koviloor Digital Library

யுடைய சிவபிரானார் ; அழுகின்றபிள்ளையார்தமைநோக்கி=அழாநின்றபிள்ளையாரைப்பார்த்து (இவர்க்கு) அருள்செய்யுங்கருத்தால்; எவ்வுலகுந்தொழுகின்றமலைக்கொடியைப் பார்த்தருளி=எல்லாவுலகங்களுந்தொழாநின்ற உமாதேவியைக்கடைக்கணித்தருளி ; துணைமுலைகள் பொழிகின்ற பாலடிசில் பொன்வள்ளத்தூட்டென்ன=(பரஞானமும் அபரஞானமுமாகிய) இரண்டுதிருமுலைகளும் பொழியாநின்ற திருமுலைப்பாலென்னும் அமுதை பொற்கிண்ணத்திற் கறந்து ஊட்டாநிற்பையென்றுசொல்ல—எ-று. தாம்-அசை. (௬௬)

ஆரணமு முலகேழு மீன்றருளி யனைத்தினுக்குங்
காரணமாய் வளம்பெருகு கருணைதிரு வடிவான
சீரிணங்கு சிவபெருமா னருளுதலுஞ் சென்றணைந்து
வாரிணங்கு திருமுலைபொன் வள்ளத்துக் கறந்தருளி.

(இ-ள்.) ஆரணமும் உலகேழும் ஈன்றருளி=வேதங்களையும் ஏழுலகங்களையும் படைத்தருளி ; அனைத்தினுக்குங் காரணமாய் வளம்பெருகுங்கருணைதிருவடிவான சீரிணங்கு சிவபெருமான் அருளுதலும்=எப்பொருள்கட்குங்காரணமாய் மேன்மைபொருந்திய கருணையே திருவுருவான சிறப்பு விளங்கும் உமாதேவியார் சிவபெருமான் (பாலடிசிலூட்டென்ன) அருளிச்செய்யவும் ; சென்றணைந்துவார் இணங்குதிருமுலைபொன் வள்ளத்துக்கறந்தருளி=(அவனாக்கிட்டிக்) கச்சேர்டியைந்த திருமுலைகளினின்றும் பொன்வள்ளத்தில் திருமுலைப்பாலைக்கறந்தருளி—எ-று. (௬௭)

எண்ணரிய சிவஞானத் தின்னமுதங் குழைத்தருளி
யுண்ணடிசி லெனவூட்ட வுமையம்மை யெதிர்நோக்குங்
கண்மலர்நீர் துடைத்தருளிக் கைகிற்பொற் கிண்ணமளித்
தண்ணலையங் கழுகைதீர்த் தங்கணா ரருள்புரிந்தார்.

(இ-ள்) உமை அம்மை எண்ணரிய சிவஞானத்து இன்னமுதங்குழைத்தருளி=பெரியநாயகியார் அளவிடுதற்கரிய சிவஞானத்தோடு திருமுலைப்பாலைக் கூட்டியருளி ; எதிர்நோக்குங்கண்மலர் நீர்துடைத்தருளிகையிற்பொற்கிண்ணம் அளித்து=தம்மைஎதிரே நோக்கும்பிள்ளையாரது கண்ணீரைத்துடைத்து அவர்கையில்பொற்கிண்ணத்தைக்கொடுத்து; அடிசில் உண்என ஊட்ட=அப்பாலடிசிலை நீ யுண்பாயென வூட்டியருள ; அங்கணனார் அங்கு அண்ணலை அழுகைதீர்த்து அருள்புரிந்தார்=சிவபெருமான் அவ்விடத்து ஆளுடையபிள்ளையாரது அழுகையை நீக்கிக்கிருபைசெய்தார்—எ-று.

அழுகின்றபிள்ளையாரென்பது முதல் இம்மூன்றுங்குளகம். (௬௮)

யாவர்க்குந் தந்தைதா யெனுமவரிப் படியளித்தா
ராவதனா லாளுடைய பிள்ளையா ராயகில
தேவர்க்கு முனிவர்க்குந் தெரிவரிய பொருளாகுந்
தாவிறனிச் சிவஞான சம்பந்த ராயினார்.

Koviloor Digital Library

(இ-ள்.) யாவர்க்குந்தந்தைதாய் எனும் அவர்இப்படியளித்தார்=எல்லார்க்குந்தந்தைதாயரென்று சொல்லப்படும் அவர்கள் இவ்வண்ணம் திருமுலைப்பாலை யூட்டியருளிச் சிவஞானத்தை விளக்கியருளினார்; ஆவதனால் ஆளுடைபிள்ளையாராய்=அக்காரணத்தால் ஆளுடையபிள்ளையாரென்னுந் திருநாமத்தையுடையவராய்; அகிலதேவர்க்கு முனிவர்க்கும் தெரிவரியபொருளாகும்=எல்லாத்தேவர்கட்கு முனிவர்கட்கும் உணர்தற்கரிய மெய்ப்பொருளாகிய; தாவில்தனிச் சிவஞான சம்பந்தராயினார்=எக்காலத்துங் கெடுதலில்லாத ஒப்பற்றசிவத்தையுணரும் ஞானத்தோடு சம்பந்தமுடையரென்னுங்காரணத்தால் திருஞானசம்பந்தரென்னுந் திருநாமத்தை யுடையவராயினார்—எ-று.

பிள்ளையார்க்குசிவபிரானாலும்பிராட்டியாராலும்ஆளுதலுடைமையின்ஆளுடையபிள்ளையாரென்றும் சிவத்தையுணருந் திருவருள்ஞானத்தோடுசம்பந்தமுடைமையின் சிவஞானசம்பந்தரென்றும்காரணப்பெயர்ஆயினவாறுகாண்க.

சுத்தமாயையுடன்கூடிய மூலப்பகுதியை யதிட்டிக்கும் சத்திரூபத்தாலும் அச்சத்தியையபேதமாய் நடத்தும்புருஷரூபத்தாலும் சரம் அசரம் என்றும் ஆன்மகோடிகளை யுதிப்பித்தலின் யாவர்க்குந்தந்தைதாயென்றார்.

யாவர்க்குமென்றது உயர்வுபற்றியவழக்கென்க. எனவே விலங்குபுள்தாவரங்களுங்கொள்ளப்படும்.

எல்லாத்தேவர்கட்கும் தம்முலகின்பமேயன்றி சிவஞானமுடையரல்லரென்பார் அகிலதேவர்க்கென்றும், முனிவரில் சிவஞானமுடையாரை நீக்குதற்கு விசேஷணமின்றிப் போதப்படக்கூறினர். (௬௬)

சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங் கியஞான
முவமையிலாக் கலைஞான முணர்வரிய மெய்ஞ்ஞானந்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தா ரந்நிலையில்.

(இ-ள்.) தவமுதல்வர்சம்பந்தர்=(வைதிகத்துஞ் சைவத்துங்கூறும் சன்மார்க்கமானதவங்களை நிறுத்துதலால்) அத்தவங்கட்கு முதல்வராய ஆளுடைபிள்ளையார்; சிவன் அடியேசிந்திக்கும் திருப்பெருகுசிவஞானம்=சிவபிரானது திருவடியொன்றினையேயுணர்ந்துதெளிந்துசிந்திக்கும் செல்வமிக்க சிவஞானத்தையும்; பவமதனைஅறமாற்றும்பாங்கினில் ஓங்கியஞானம்=பிறப்பையும்இறப்பையும் மீண்டுவாராமல் நீக்கும்படிசெய்யுங் குணத்தோடுகூடிய அபரஞானத்தையும்; உவமையிலாக்கலைஞானம்=ஒப்பில்லாத அறுபத்துநான்காகியகலைஞானத்தையும்; உணர்வரியமெய்ஞ்ஞானம்=எவைகளையுணர்ந்தாலன்றி வேதநூற்பொருளை யுணர்தற்குரிய சொல்லின்பாகுபாடுகளையும் பொருளின்பாகுபாடுகளையும் உணர்தலியலாவோ அவ் வியாகரணமும் தருக்கமீமாம்சையுமாகிய கருவிநூல்களின் ஞானத்தையும்; அந்நிலையில் உணர்ந்தார்=திருமுலைப்பாலுண்டருளிய அக்கணத்தே அறிந்தருளினார்—எ-று. தாம்-அசை.

Koviloor Digital Library

சிவனடியேசிந்திக்கும் திருப்பெருகு சிவஞான மென்றதனால் ஏது திருஷ்டாந்தங்களாலன்றி ஒருங்கிய சுத்தமனத்தால் பொதுவியல்பென்னுந் தடத்த இலக்கணமொழித்துச் சிறப்பியல்போர்ந்து மெய்யுணர்ச்சிவாயிலாய் முதல்வன் திருவடியொன்றினையே சிந்திக்கும் பரஞானமென்பது பெறப்படும். பரஞானமெனினும் அபரோட்சஞானமெனினு மொக்கும். பரமென்பது உத்கிருஷ்டஞானமென்று பொருள். அது அவ்வாறாதல் "ஏதுக்களாலு மெடுத்தமொழியாலு மிக்குச் சோதிக்கவேண்டா சுடர்விட்டுளன் தூய சோதி," என்றும் "ஒருநெறியமனம்வைத்துணர்ஞானசம்பந்தனென்றும்" கூறிய திருக்கடைக்காப்பாலும் "பொதுநீக்கித் தனைநினையவல்லார்க்கென்றும் பெருந்துணையைப்பெரும்பற்றப் புலியூரானைப் பேசாதநாளெல்லாம் பிறவாநாளே" என்றும் "தெள்ளித்தேறித் தெளிந்து தித்திப்பதோருள்ளத் தேறலமுதவொளிவெளி" யென்றும் கூறியதேவாரத்தாலும் காண்க. ஏகாரம் பசுபாசஞானங்களை விலக்குதலின் பிரிநிலைப்பொருளது.

பவமதனையறமாற்றும் பாங்கினிலோங்கிய ஞானமென்றதனால், மேற்கூறியபரஞானமென்னும் அபரோட்ச சாட்சாத்காரத்திற்கு வேறாய் அதற்கு நேரேசாதனமாய அபரஞானமென்பது பெறப்படும். அபரஞானமெனினும் பரோட்சஞானமெனினுமொக்கும். அபரமென்பது பரத்துக்கு வேறாயதென்று பொருள். பவமென்றது ஈண்டுஜெனனத்தின் மேற்று. மரணம், உபலட்சணம். குருமுன்னிலையில் வழிபட்டுக்கேட்கும் அவ் வபரஞானமென்னும் பரோட்சஞானம் பவமதனையறமாற்றலாவது புத்திக்கண்ணவாய பாவங்களையும் சம்சயங்களையும் போக்கி ஏதுதிருஷ்டாந்தங்களால் உணரப்படும் மெய்யுணர்ச்சியால் மேல் சுத்தபுவன போகாந்தத்தின் பின்னாவது ஜன்மாந்தரத்திலாவது தன்னையதிகரித்தவன் கீழ்ப்படாதுநற்குலத்துதிப்பித்துப் பரஞானங்கொடுத்தல். இதனால், அபரஞானம் பரஞானத்திற்கு நேரேசாதனமாதல் பெறப்படும். அதவ்வாறாதல், "கல்லாநெஞ்சினில்லானீசன் சொல்லாதாரோடல்லோநாமே." என்னுந்திருக்கடைக்காப்பாலும் "கற்றீண்டுமெய்ப்பொருள் கண்டார்" என்னுந் திருக்குறளாலுமுணர்க. அவ்வபரஞானம் புண்ணியலோகத்தைக் கொடுத்து ஞானத்தைப்பயக்குமென்பது "மேவாது தப்பினவர் மேலாயபதங்கட் கிட்டிய புண்ணியநாதராகி யின்பமினிதினுகர்ந்தரனருளா லிந்தப்பார்மேல் நாட்டிய நற்குலத்தினில் வந்தவதரித்துக்குருவால் ஞானநிட்டையடைந்தடைவர் நாதன்றாளே." என்னுஞ் சிவஞானசித்தித்திருவிருத்தத்தாலுமுணர்க.

உவமையிலாக்கலைஞானமென்றதனால் ஓர் சித்திக்கெட்டா அணிமாதியெண்சித்திக்கும் அறுபத்துநான்கென்னும் பாகுபாடுகளையுணர்த்தும் கலைஞானங்களறுபத்துநான்கென்பதுபெறப்படும். கலைஞானமதவாதல் "அருமறையாகமமங்க மருங்கலைநூல்" என்னுஞ் சிவஞானசித்தித் திருவிருத்தத்தாலுமுணர்க. அது இம்மைக்கண்பயப்பனவாகிய வியாதிநீக்கம் ஆரோக்கியமுதலிய பயன்களைக்கொடுத்தலின் உவமையிலாவென விசேடிக்கப்பட்டது.

Koviloor Digital Library

உணர்வரிய மெய்ஞ்ஞானமென்றதனுல் முதனூற்பொருளையுணர்தற்குறி ன்றியமையாக் கருவியாகிய சத்தநூல் அருத்தநூல்களென்பது பெறப்படும். மெய்யை விளக்குதற்குச் சாதனமாய ஞானத்தைமெய்ஞ்ஞானமென்றது உப சாரம். சுடுபாறையிற்கிடத்தல், தலைபறித்தல், சீவரம்போர்த்து உண்டிசுருக் கல்முதலிய புறச்சமயர்களது போலித்தவங்களைமறுத்து வேதங்களுக்குடன் பாடான யாகம் சிவபூசை சிவபக்திமுதலிய முத்திநெறியாகிய தவங்களையும் விபூதிருத்ராட்சங்களாகிய தவவேடங்களையும் நிலைப்படுத்துதலின் தவமுத லவரொன்ருர்.

சிவஞானமான அபரோட்சம் சிறந்தமையின்முன்னும், அதற்குப்பரோட் சம்சாதனமாதலின் அதன்பின்னும், கலைஞானம் ஆயுள் ஆரோக்கியங்களோடு யோகங்கங்களையுமுணர்த்திஞானங்கட்குச்சாதனமாய்நிற்றலின்அதன்பின்னு ம், இவ்வைதிகசைவநூலாகிய முதனூற்பொருளை யுணர்த்தும் கருவிநூல்களா தலின்சத்தார்த்தநூல்கள் அதன்பின்னுமாக. எதிர்நிரனிறையாய் சாதனசா த்தியமுறைப்படிவைத்தமைகாண்க.

இதற்குச் சிவனடியேசிந்திக்குந் திருப்பெருகு சிவஞானமாகிய உணர் வரியமெய்ஞ்ஞானம் பரஞானமென்றும், பவமதனையறமாற்றும்பாங்கினிலோ ங்கிய ஞானமாகிய உவமையிலாக்கலைஞானம் அபரஞானமெனினுமாம் (௭௰)

எப்பொருளு மாக்குவா னீசனே யெனுமுணர்வு
மப்பொருடா ளுளுடையா னடியார்க ளெனுமறிவு
மிப்படியா லிதுவன்றித் தம்மிசைவு கொண்டியலுந்
துப்புரவில் லார்துணிவு துகளாகச் சூழ்ந்தெழுந்தார்.

(இ-ள்.) எப்பொருளும் ஆக்குவான் ஈசனே எனுமுணர்வும்= (அச்சிவ ஞானம்பெற்றதி சித்துப்பொருளுஞ் சடப்பொருளுமாகிய உலகப்பொருள்) எல்லாவற்றையுஞ் சிருட்டித்துத் திதித்துச் சங்கரித்துத் திரோபவித்து அநு க்கிரகிப்பவன் (சர்வைசுவரியசம்பன்னுன) சிவபெருமானேஎன்னுமுணர்வும்; அப்பொருள்தான் ஆளுடையான் அடியார்களெனுமறிவும் = அவ்வுணர்ச்சி வழி (அச்சிவபெருமானுகவுணர்ந்து வழிபடுதற்குரியவிடம்) ஆளுடையான து திருமேனியும் அவனடியாரது திருமேனியுமாமென்னுமுணர்வும் ; இப்படி யால்=சாதகர்க்கு உபாசிக்கும்பொருளும் உபாசிக்குமிடமும் அதிஷ்டிக்கும் பொருளும் அதிஷ்டிக்குமிடமுமாகிய சம்பந்தங்கொண்டுமெய்யுணர்ச்சிவழிக் கொள்ளுதலால் ; இதுவன்றி=இவ்வாறன்றி ; துப்புரவு இல்லார்தம் இசைவு கொண்டு இயலும் துணிவுதுகளாகச்சூழ்ந்தெழுந்தார்=தமக்கோர் நன்னெறி யாகிய பிரயோசனமில்லாத சமணர் பௌத்தர்கள்கொண்ட வுணர்வாகிய ஞானம்குற்றமுடையதென யோசித்து நிராகரித்து மேற்கூறியவதனைமேற் கொண்டார்—எ-று.

ஆக்குவான் என்றதனுல் திதிமுதலிய உபலக்கணம்.

Koviloor Digital Library

எப்பொருளுமாக்குவானென்றதனல் சித்துஞ்சடமுமாகிய பொருள்கள் பஞ்சகந்தச் சார்பிற்றேன்றுவனவென்னும் பௌத்தர்கொள்கையும், ஐம்பூதங்காரணமாய்ச் சிலபொருள்தோற்றும் உலகுநித்தியமாமென்னும் சைனர் கொள்கையும், பிரகிருதியும் விகிர்தியுமாய் ஒன்றற்கொன்றுகாரணமாய்இருபத்து நான்காந்தத்துவமாய பிரகிருதியில் உலகந்தானே தோற்றுமென்னும் நிரீஸ்வரசாங்கியர்மதமும், பொருந்தாதனவாம் என்பார் வினைமுதல்தோன்ற எப்பொருளுமாக்குவானென்றார்.

இல்லதற்குத்தோற்றங் கூடுதல்பொருந்தாமையின் சத்திருபத்தால் உள்ளனவாய் சொல்லும்பொருளுமாய சடப்பிரபஞ்சத்தை மாயையினின்று முதிப்பிக்குமாறுபோல உள்பொருளாய் அனுதியேகேவலப்பட்டு நிற்கும் ஆன்மாக்களுக்கு உடல்கரணங்களைக்கூட்டி யுணர்வுதொழில்களைக் கொடுத்தலே சிருட்டியெனப்படும்.

சிருட்டியாதி ஐந்தொழில்கள் சடத்துக்குமூன்றும், சித்துக்கு ஐந்துமாமெனல் ஏற்றபெற்றியாற் பெறப்படும்.

வினைமுதல்உண்டென்பார் மதத்தும் புருடவிசேடனே யீசுவரனென்னும் சேசுரசாங்கியனையும், நாராயணனே வினைமுதலென்னும் பாஞ்சராத்திரிகனையும், மறுத்தற்கு ஈசனேயென்றுங்கூறினர்.

ஒகாரம் பிறரல்லர் என பிறிதினியைபுநீக்கியது. இதனைவடநூலார் அன்னியயோக வியவச்சேதமென்பர்.

அவ்வாறுநிச்சயித்த வுணர்வுவழிபட்டாலன்றிப் பயன்படாமையின் அப்பொருளாக வழிபடுதற்குரியவிடம் ஆளுடையானது திருமேனியும் அடியார்களுடைய திருமேனியும் ஆமென்பார் அப்பொருடான் ஆளுடையானடியார்களெனு மறிவுமென்றார்.

சூழ்ந்தெழுதல் அவ்வுணர்வை மேற்கொண்டொழுகுதல். (எக)

சீர்மறையோர் சிவபாத விருதயருஞ் சிறுபொழுதி
னீர்மருவித் தாஞ்செய்யு நியமங்கண் முடித்தேறிப்
பேருணர்விற் பொலிகின்ற பிள்ளையார் தமைநோக்கி
யாரளித்த பாலடிசி லுண்டதுநீ யெனவெகுளா.

(இ-ள்.) சீர்மறையோர் சிவபாத இருதயரும்=சிறப்புமிக்க வேதியராகியசிவபாத இருதயரும்; சிறுபொழுதில் நீர்மருவித்தாம்செய்யும் நியமங்கள் முடித்தேறி=பிள்ளையாரது பிரிவால் காலநீட்டியாது கலையில் ஸ்நானஞ்செய்துதாம்முடிக்குஞ் (சந்தியாவந்தனம்செபம் சூரிய நமஸ்காரமுதலிய) நியமங்களை முடித்துக்கரையேறி; பேருணர்விற்பொலிகின்றபிள்ளையார் தமைநோக்கி= (பிள்ளைத்தன்மையறிவொழிந்து) பேரறிவால் விளங்குகின்ற ஆளுடையபிள்ளையாரைப்பார்த்து; நீ உண்டது ஆர் அளித்த பால் அடிசில் எனவெகுளா=நீயுண்டது ஆரளித்தபாலடிசிலென்று கோபித்து—எ-று.

Koviloor Digital Library

திருவருள்ஞானம் விளங்குதலால் பேருணவிற்பொலிகின்ற பிள்ளையா ரென்றார்.

திருமுலைப்பால் கடைவாயின்வழியொழுகுதலால் ஆரளித்தபாலடிசிலெ னவுங்கூறினர். (எஉ)

எச்சின்மயங் கிடவுனக்கி திட்டாரைக் காட்டென்று
கைச்சிறிய தொருமாறு கொண்டோச்சக் காலெடுத்தே
யச்சிறிய பெருந்தகையா ரானந்தக் கண்டுளிபெய்
துச்சியினி லெடுத்தருளு மொருதிருக்கை விரற்சுட்டி.

(இ-ள்.) எச்சில்மயங்கிட உனக்கிது இட்டாரைக்காட்டென்று= (அன்னியரது) உச்சிட்டங்கலக்க உனக்கு இப்பாலூட்டினரைக்காட்டுவையென்று; கைச்சிறிய தொருமாறுகொண்டு ஓச்ச அச்சிறியபெருந்தகையார் கால் எடுத்து=தமதுகையில் சிறியதாகிய வொருகோலைக்கொண்டு ஓங்க அந்தச்சிறுவராகிய (அளப்பரிய) பெருந்தகைமையையுடைய பிள்ளையார் திருவடியைப் புடைபெயர்த்து (அவ்வோச்சுதல் தந்திருமேனியிற்படாதநின்றருளி) ; ஆனந்தக்கண்டுளி பெய்து=கண்களினின்றும் ஆனந்தபாஷ்பம்பொழிந்து ; உச்சியின்மேல் எடுத்தருளும் ஒருதிருக்கைவிரல்சுட்டி=தமது திருமுடியின்மேல் (சிவபெருமானைச் சுட்டிக்காட்டுநிமித்தம்) எடுத்த வலத்திருக்கை விரலாற் சுட்டி—எ-று.

வேறொருவருணத்தார்பால் உண்ணில் உச்சிட்டமயங்குமாதலால் எச்சில் மயங்கிடவெனவும், தந்தையார் ஓச்சு மாறுதந்திருமேனியிற்படின் அவர்க்கு விசனத்தையுங் குற்றத்தையும் விளைக்குமாதலின் காலெடுத்தெனவுங்கூறினர்.

விண்ணிறைந்த பெருகொளியால் விளங்குமழ விடைமேலே
பண்ணிறைந்த வருமறைகள் பணிந்தேத்தப் பாவையுட
னெண்ணிறைந்த கருணையினு னின்றானை யெதிர்காட்டி
யுண்ணிறைந்து பொழிந்தெழுந்த வுயர்ஞானத்திருமொழியால்.

(இ-ள்.) விண்ணிறைந்த பெருகு ஒளியால் விளங்குமழவிடைமேலே= ஆகாயத்தில் நிறைந்த மிக்கவொளியோடுவிளங்காநின்ற இளமைபொருந்திய இடபத்தின்மேலே ; பண்ணிறைந்த அருமறைகள்பணிந்தேத்த=இசையோடு நிறைந்த அரியநான்குவேதங்களுந் துதித்துவாழ்த்த ; பாவையுடன் எண்ணிறைந்த கருணையினால் நின்றானை எதிர்காட்டி=உமாதேவியாரோடு அளவிடற்கரிய பெருங்கருணையோடு எழுந்தருளிநின்றசிவபிரானை யெதிரேகாண்பித்து உண்ணிறைந்துபொழிந்து எழுந்த உயர்ஞானத்திருமொழியால்=தமது திருவுள்ளத்தில் நிறைந்துதேக்கிட்டு வழிந்தெழுந்த திருவருள்ஞானம் நிறைந்த தமது திருவாக்கினால்—எ-று.

Koviloor Digital Library



சிவபாதஇருதயர்பிள்ளையாரைக்கோபிக்க அவர் சிவ
பிரானைச்சுட்டிக்காட்டியது.

Koviloor Digital Library

உண்ணிறைந்து பொழிந்தெழுதலாவது தேனுண்டுமிழ்வான்றிறம்போல சிவானந்தானுபவம் தம்முள்ளம்நிரம்புங்கால் அதனோடுகலந்தெழுதல். (எச)

எல்லையிலா மறைமுதன்மெய் யுடனெடுத்த வெழுதுமறை
மல்லனெடுந் தமிழாலிம் மாநிலத்தோர்க் குரைசிறப்பப்
பல்லுயிருங் களிகூரத் தம்பாடல் பரமர்பாற்
செல்லுமுறை பெறுவதற்குத் திருச்செவியைச் சிறப்பித்து.

(இ-ள்) எல்லையிலாமறைமுதல்=அளவுபடாத வேதத்தின்முதலாய பிரணவத்தை; மெய்யுடன் எடுத்த எழுதுமறை=தகர மெய்யெழுத்தோடு முதலிற்சேர்த்து எடுத்து எழுதும்வேதமாகிய; மல்லல்நெடுந்தமிழால் = வளப்பந்தருகின்ற மிக்கதமிழ்மொழியினால்; மாநிலத்தோர்க்கு உரைசிறப்ப=பெரிய நிலவுலகத்தவர்க்கு வேதப்பொருள் சிறந்துவிளங்கவும்; பல்லுயிருங்களிகூரத்தம்பாடல்=பலஜன்மகோடிகளுங் கேட்டுக்களிப்படைய தமதுதிருப்பாடல்; பரமர்பாற்செல்லுமுறைபெறுவதற்கு=சிவபிரானுடைய திருச்செவிக்குப் பொருந்தும்முறைமையைப்பெறுதற்கு; திருச்செவியைச்சிறப்பித்து=திருச்செவியினைச்சிறப்பித்துக்கூறி—எ-று.

வேதமூலமாகியபிரணவம் மங்களகுணம்நிறைந்த சிவபரமான்மாவினது வாசகமாதலின் இதுவும்வேதமேயென்றுதோன்ற அதனைமுதலில்வைத்துத்தகரமும்மங்களத் தன்மையையுடைய கணமாதலின் உடன்சேர்க்கப்பட்டது. எழுதுமறையென்பது எழுதாமறைக்கு வேறுதல்தோன்ற என்க. வேதத்தில் சிவபெருமானையே பரம்பொருளெனக் கூறுந்துணிபொருள் இத்தமிழ்வேதத்தால் தெளிவுபடத்தோன்றுதலின் மாநிலத்தோர்க்குரை சிறப்பவென்றும், தேவர்மக்களையன்றி விலங்குபுள்முதலியனவும் மரங்களும் இசைத்தன்மை கேட்டுஉருகுதலைச்செய்தலின்பல்லுயிருங்களி கூரத்தம்பாடலென்றார். (எரு)

செம்மைபெற வெடுத்ததிருத் தோடுடைய செவியனெனு
மெய்ம்மைமொழித் திருப்பதிகம் பிரமபுர மேவினார்
தம்மையடை யாளங்க ளுடன்சாற்றித் தாதையார்க்
கெம்மையிது செய்தபிரா னிவனன்றே யெனவிசைத்தார்.

(இ-ள்.) செம்மைபெற எடுத்த திருத்தோடுடைய செவியனெனும் மெய்ம்மைமொழித்திருப்பதிகம்=அழகாக (உலகத்தார் உய்யும்பொருட்டு) எடுத்தருளியதோடுடைய செவியனெனும் மங்களமொழியோடுகூடிய திருப்பதிகத்தில்; பிரமபுரம்மேவினார் தம்மை அடையாளங்களுடன்சாற்றி=சீகாழியிலெழுந்தருளிய சிவபிரானை (வேற்றுத்தேவர்பால் செல்லாத சிறப்பியல்பென்றுந் தடத்தலட்சணமாகிய அவரதியல்பை விடையேறுதல்முதலிய) அடையாளங்களால் எடுத்துக்காட்டியருளி; தாதையார்க்குஎம்மை இதுசெய்தபிரான் இவன் அன்றே எனவிசைத்தார்=தமது தந்தையாராகியசிவபாத இதயருக்கு இவ்வாறுதிருமுலைப்பால் ஊட்டுவித்துத்திருவருள் ஞானத்தைப்பாலித்த சிவபெருமான் இவனென்று கூறியருளினார்—எ-று.

Koviloor Digital Library

அன்று அசை. சீர்மறையோனொன்றதுமுதல் இருகாறுங்குளகம். விடையேறதல் முதலிய, பதிகத்திற் போந்தவாறுகாண்க. அதில்சுடலையென்பது மகாசம்மாரகாலத்தை. அக்காலத்திற் பிரபஞ்சங்கள் தகிக்கப்படும். பூதி பொடியெனப்படும். (எசு)

திருப்பிரமபுரம் - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிப்பூசியென துள்ளங்கவர்கள்வ
னேடுடையமல ரான்முனநாட் பணிந்தேத்தவருள்செய்த
பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மா னிவனன்றே. (க)

முற்றலாமையிள நாகமோடேன முளைக்கொம்பவைபூண்டு
வற்றலோடுகல னாப்பலிதேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
கற்றல்கேட்டலுடை யார்பெரியார்கழல் கையாற்றொழுதேத்தப்
பெற்றமூர்ந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. (உ)

நீர்பரந்தநிமிர் புன்சடைமேலோர் நிலாவெண்மதிசூடி
ஏர்பரந்தவின வெள்வளைசோரவென் னுள்ளங்கவர்கள்வ
னூர்பரந்தவுல கின்முதலாகிய வோரூரிதுவென்னப்
பேர்பரந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே (ங)

விண்மகிழ்ந்தமதி லெய்ததுமன்றி விளங்குதலையோட்டி
லுண்மகிழ்ந்துபலி தேரியவந்தென துள்ளங்கவர்கள்வன்
மண்மகிழ்ந்தவர வம்மலர்க்கொன்றை மலிந்தவரைமார்பிற்
பெண்மகிழ்ந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. (ச)

ஒருமைபெண்மையுடையன்சடையன்விடையூருமிவனென்ன
வருமையாகவுரை செய்யவமர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
கருமைபெற்றகடல்கொள்ளமிதந்ததோர் காலம்மிதுவென்னப்
பெருமைபெற்றபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. (ரு)

மறைகலந்தவொலி பாடலொடாடல ராகிமழுவேந்தி
யிறைகலந்தவின வெள்வளைசோரவென் னுள்ளங்கவர்கள்வன்
கறைகலந்தகடி யார்பொழில்நீடுயர் சோலைக்கதிர்சிந்தப்
பிறைகலந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. (சு)

சடைமுயங்குபுன லன்னனலன்னெரி வீசிச்சதிர்வெய்தி
யுடைமுயங்குமர வோடுழிதந்தென துள்ளங்கவர்கள்வன்
கடல்முயங்குகழி சூழ்குளிர்கானல் பொன்னஞ்சிறகன்னம்
பெடைமுயங்குபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. (எ)

Koviloor Digital Library

வியரிலங்குவரை யுந்தியதோள்களை வீரம்விளைவித்த
வுயரிலங்கையரை யன்வலிசெற்றென துள்ளங்கவர்கள்வன்
றுயரிலங்குமுல கிற்பலவூழிக டோன்றும்பொழுதெல்லாம்
பெயரிலங்குபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. (அ)

தாணுதல்செய்திறை காணியமாலொடு தண்டாமரையானு
நீணுதல்செய்தொழி யந்நிமிர்ந்தானென துள்ளங்கவர்கள்வன்
வாணுதல்செய்ம்மக ளிர்ம்முதலாகிய வையத்தவரேத்தப்
பேணுதல்செய்பிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. (கூ)

புத்தரோடுபொறி யில்சமணும்புறங் கூறநெறிநில்லா
வொத்தசொல்லவுல கம்பலிதேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
மத்தயானைமறு கவ்வுரிபோர்த்ததோர் மாயமிதுவென்னப்
பித்தர்போலும்பிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. (ய)

அருநெறியமறை வல்லமுனியகன் பொய்கையலர்மேய
பெருநெறியபிர மாபுரமேவிய பெம்மானிவன்றன்னை
யொருநெறியமனம் வைத்துணர்ஞானசம் பந்தன்னுரை செய்த
திருநெறியதமிழ் வல்லவர்தொல்வினை தீர்த்தலெளிதாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இந்தத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர்-பிரமபுரீசர்-தேவியார்-திருநிலைநாயகியம்மை.
திருத்தோணியில் வீற்றிருப்பவர் தோணியப்பர்.

மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையிற்
கண்ணுதலான் பெருங்கருணை கைக்கொள்ளு மெனக்காட்ட
வெண்ணமிலா வல்லரக்க னெடுத்துமுறிந் திசைபாட
வண்ணலவற் கருள்புரிந்த வாக்கப்பா டருள்செய்தார்.

(இ-ள்.) மண்ணுலகில்வாழ்வார்கள்பிழைத்தாலும்=நிலவுலகின்கண் வாழுமவர்கள் தவறுசெய்யினும்; வந்தடையில் கண்ணுதலான் பெருங்கருணைகைக்கொள்ளுமெனக்காட்ட= (தமது திருவடியை) வந்தடைவரேல் சிவபிரான் தமது மிக்ககிருபையால் அவர்களையாண்டுகொள்ளுமென்பதைத்தெரிவிக்க; எண்ணமிலாவல்லரக்கன் எடுத்துமுறிந்து இசைபாட= (சிவபிரானது மான்மியத்தை) மதியாவலிய இராவணன் திருக்கைலையையெடுத்துத் (தனதுவலிகெட்டு) இருபதுதோளும்நெரிந்து (தன்தவறுகருதி அச்சிவபிரானை) சாமகீதத்தால் பாடுதல்செய்ய; அண்ணல் அவற்கு அருள்புரிந்த வாக்கப்பாடு அருள்செய்தார்=சிவபிரான் அவ்விராவணனுக்குக் கிருபைசெய்த கிருபாமிகுதியையும் (எட்டாம்பாடலில்) அருள்செய்தார்—எ-று. (எஎ)

Koviloor Digital Library

தொழுவார்க்கே யருளுவது சிவபெருமா னெனத்தொழார்
வழுவான மனத்தாலே மாலாய மாலயனு
மிழிவாகுங் கருவிலங்கும் பறவையுமா யெய்தாமை
விழுவார்க ளஞ்செழுத்துந் துதித்துய்ந்த படிவிரித்தார்.

(இ-ள்.) தொழுவார்க்கே அருளுவது சிவபெருமான் எனத்தொழார்= (எவ்வகைமேம்பாட்டாருள்ளும்) தம்மைவழிபடுமவர்க்கே சிவபிரான் திருவருள்செய்வதெனக்கருதி அவனைவணங்காராய்; வழுவானமனத்தாலேமாலாயமாலயனும்=தவறுபட்டமனதினாலேமயக்கமடைந்த மாலும் பிரமனும்; இழிவாகும் கருவிலங்கும் பறவையுமாய் எய்தாமை விழுவார்கள்=இழிந்த பன்றியும் அன்னமுமாய் (அச்சிவபிரானது திருவடியையுந் திருமுடியையுந் தேடி) கண்டறியாமல் செருக்கொழிந்தவர்கள்; அஞ்செழுத்துந்துதித்து உய்ந்த படிவிரித்தார்=திருவஞ்செழுத்தினைத்துதித்து ஈடேறியவகையினையும்(ஒன்பதாம்பாடலிற்) கூறியருளினார்—எ-று.

மேல்மண்ணுலகில்வாழ்வாரிற்பிழைத்தார்க்குஇராவணனைக்காட்டுதலின் விண்ணுலகில்வாழ்வாரிற்பிழைத்தார்க்கு அரிபிரமனைக்காட்டியவாறு. (எஅ)

வேதகா ரணராய வெண்பிறைசேர் செய்யசடை
நாதனெறி யறிந்துய்யார் தம்மிலே நலங்கொள்ளும்
போதமிலாச் சமண்கையர் புத்தர்வழி பழியாக்கு
மேதமே யெனமொழிந்தா ரெங்கள்பிரான் சம்பந்தர்.

(இ-ள்.) எங்கள் பிரான்சம்பந்தர் வேதகாரணராய வெண்பிறைசேர் செய்யசடை=எமது தலைவரான ஆளுடையபிள்ளையார் வேதங்களாலெடுத்தோது முதற்பொருளாயவெள்ளிய பிறைசேர்ந்த சிவந்தசடைமுடியையுடைய; நாதனெறியறிந்து உய்யார்தம்மிலே=சிவபிரானால் விதிக்கும் நன்னெறியாகிய (வைதிகசைவமார்க்கங்களை) யறிந்து அவ்வழிநடந்து (இம்மைமறுமைவீடென்னும் புருடார்த்தங்களைப்பெற்று) உய்யாத புறச்சமயிகளுள்; நலங்கொள்ளும்போதமிலாச் சமண்கையர்புத்தர்வழிபழியாக்கும்=(வேதநெறியை ஒருவாற்றானுமுடன்படும்) விவேகமில்லாத சமணர் புத்தர் தம்நூலிற் கூறுமார்க்கங்கள் குற்றத்தைவிளைக்குமாதலின்; ஏதமேயெனமொழிந்தார்= அவைகள் குற்றமுடையனவேயாமென்று (பத்தாம்பாடலில்) அருளிச்செய்தார்—எ-று.

வேதத்திற்கூறுங் காரணவாக்கியங்கள் சிவபிரானையே பிரமமாகக்குறித்தலின் வேதகாரணராயவென்றும், புறச்சமயிகளுள் வேதமார்க்கங்கொண்டு சிவபிரானை வழிபடாதாருள்ளு மிக இழிந்தவராதலின், நலங்கொள்ளும் போதமிலாச்சமண்கையர்புத்தரென்றும். (எகூ)

Koviloor Digital Library

திருப்பதிக நிறைவித்துத் திருக்கடைக்காப் புச்சாத்தி
யிருக்குமொழிப் பிள்ளையா ரெதிர்தொழுது நின்றருள
வருட்கருணைத் திருவாள னாருள்கண் டமரரெலாம்
பெருக்கவிசும் பினிலார்த்துப் பிரசமலர் மழைபொழிந்தார்.

(இ-ள்.) இருக்குமொழிப்பிள்ளையார் திருப்பதிகநிறைவித்துத் திருக்கடைக்காப்புச்சாத்தி=வேதப்பொருளைத்தமது பதிகங்களில் அமைத்துப்பாடியருளிய ஆளுடையபிள்ளையார் (மேற்கூறியவாறு திருவடையாளங்களுடன் சிவபெருமானியல்பையும் அவர்பேரருளையும் புறமும் புறப்புறமுமாகிய பாஞ்சராத்திரிசமணர்புத்தர் முதலியோரது இழிவையுங்காட்டித் தோடுடையசெவியனெனத் தாம்முதலிலெடுத்த) திருப்பதிகத்தை நிறைவித்துப்பதிகத்தினிறுதியில் திருக்கடைக்காப்புக்கூறி ; எதிர்தொழுது நின்றருள=சிவபிரான் திருமுன்வணங்கிநிற்க ; அருட்கருணைத்திருவாளன்ஆர்அருள்கண்டு = பெருங்கருணைச்சீமானாகிய சிவபிரானதுதிருவருளின்பெருமையைநோக்கி; அமரர் எலாம்பெருக்கவிசும்பினில் ஆர்த்துப்பிரசமலர் மழைபொழிந்தார்=தேவர்கள்யாவரும் ஆகாயத்தில் மிகவும் ஆரவாரித்துத் தேன்சிந்தும் புட்பவருடத்தைப்பொழிந்தார்கள்—எ-று. (அம)

வந்தெழுமங் கலமான வானதுந் துபிமுழக்குங்
கந்தருவர் கின்னரர்கள் கானவொலிக் கடன்முழக்கு
மிந்திரனே முதற்றேவ ரெடுத்தேத்து மிசைமுழக்கு
மந்தமில்பல் கணநாத ரரவெனுமோ சையினடங்க.

(இ-ள்.) வந்தெழுமங்கலமான வானதுந்துபிமுழக்கும்=வானின்கணின்றெழாநின்ற மங்கலகரமான தேவதுந்துபியின் முழக்கொலியும் ; கந்தருவர் கின்னரர்கள்கான ஒலிக்கடன்முழக்கும்=தேவச்சாதியரான கந்தருவர்களுங் கின்னரர்களும் செய்கின்றகானத்தினொலியாகிய கடலினொலியும் ; இந்திரனேமுதல்தேவர் எடுத்தேத்தும் இசைமுழக்கும்=இந்திரன்முதலியதேவர்கள் வாழ்த்தெடுத்துத்துதிக்கும் ஒலியின்முழக்கமும் (ஆகியவிவ்வொலிகள்) ; அந்தமில் பல்கணநாதர் அரவெனும் ஓசையின் அடங்க=அளவில்லாத பலசிவகணநாதர்கள் அரவென்றுதுதிக்கும் ஓசையுளடங்கி வியாப்பியமாகவும்—எ-று. (அகூ)

வேறு.

மறைகள்கி ளர்ந்தொலி வளரமு ழங்கிட வானோர்தந்
நிறைமுடி யுந்திய நிரைமணி சிந்திட நீள்வானத்
துறையென வந்துல கடையநி றைந்திட வோவாமெய்ப்
பொறைபெரு குந்தவ முனிவரொ துங்கடல் புடைசூழ.

(இ-ள்.) மறைகள்கிளர்ந்து ஒலிவளரமுழங்கிட=நான்குவேதங்களும் ஒலிமிக்குவளரும்படி யாரவாரிக்கவும் ; வானோர்தம்நிறைமுடி உந்திய மணி

Koviloor Digital Library

நிலாசிந்திட=தேவர்களது மணிநிறைந்தகிரீடம் ஒன்றேடொன்று உரோஞ்ச அம்முடிகளினின்றுஞ் சிந்திய இரத்தினங்கள் வரிசையாகச்சிதறலால்; நிலவானத்து உறையெனவந்து உலகடைய நிறைந்திட=அகன்றமேகத்தின் கணின்றும் நீர்த்துளிகள் சிதறினாற்போல் பூமியில்வந்து முழுமையுநிறையவும்; ஒவாமெய்ப்பொறை பெருகுந்தவமுனிவர் எனுங்கடல்புடைசூழ=தம்மினின்றும் நீங்காதமெய்ம்மையும் பொறுமையும் மிக்க தவத்தையுடைய முனிவரென்றுங்கடல்பக்கத்திற்சூழவும்—எ-று. (அஉ)

அணைவுற வந்தெழு மறிவுதொ டங்கின வடியார்பா
லிணையில்ப வங்கிளர் கடல்களி கந்திட விருதாளின்
புணையரு ளங்கணர் பொருவிடை தங்கிய புணர்பாகத்
துணையொட ணைந்தனர் சுருதிதொ டர்ந்த பெருந்தோணி.

(இ-ள்.) அணைவுறவந்தெழும் அறிவுதொடங்கின அடியார்பால்=தமது திருவடியை அடையுங்காரணமாய் (மலபரிபாகத்தால்) தோன்றி எழாநின்ற (மோட்ச இச்சையையிலைந்நும் சத்திநிபாதமென்றும்) உணர்வு உதித்த அடியார்களிடத்து; இணையில்பவங்கிளர்கடல்கள் இகந்திட=ஒப்பில்லாதபிறவிகளென்றும் பெரியகடலைக்கடக்கும்படி; இருதாளின்புணைஅருள் அங்கணர்=தமதுதிருவடிகளென்றும் இன்பத்தைச்செய்யும் மரக்கலத்தையருளும் காருண்ணியரான சிவபெருமான்; பொருவிடைதங்கிய புணர்பாகத்துணையொடு அணைந்தனர்=போராச்செய்யும் இடபவாகனத்தின்மேல் தமது இடப்பாகம் நீங்காது எழுந்தருளியபெரியநாயகியாரோடும் எழுந்தருளினர்; சுருதிதொடர்ந்தபெருந்தோணி=வேதங்கள் நீங்காதிருக்கின்ற பெரியதிருத்தோணியென்றும் ஆலயத்தில்—எ-று. (அங)

அண்ணல ணைந்தமை கண்டுதொ டர்ந்தெழு மன்பாலே
மண்மிசை நின்றம றைச்சிறு போதக மன்னாருங்
கண்வழி சென்றக ருத்துவி டாதுக லந்தேகப்
புண்ணியர் நண்ணிய பூமலி கோயிலி னுட்புக்கார்.

(இ-ள்.) அண்ணல் அணைந்தமைகண்டு தொடர்ந்தெழும் அன்பால்=சிவபிரானார் (திருத்தோணியில்) எழுந்தருளினமைகண்டு (தம்மிடத்தவனை நீங்காத) தொடர்ந்து உதிக்கும்பேரன்பினாலே; மண்மிசைநின்ற மறைச்சிறுபோதகம் அன்னாரும்=பூமியின்கணிற்கின்ற வேதவுணர்ச்சியின்மிக்க சிறியயானைக்கன்றையொத்த ஆளுடையபிள்ளையாரும்; கண்வழிசென்ற கருத்துவிடாது கலந்தேக=கண்ணாகிய பொறிவழியே (சிவபிரானைவிடையிசரித்துச்) சென்ற தமது எண்ணம் நீங்காத (அவரோடுடனாய்) கலந்துபின்செல்ல; புண்ணியர் நண்ணிய பூமலிகோயிலின் உள்புக்கார்=புண்ணிய சொரூபியாகிய சிவபிரானார் எழுந்தருளிய பொலிவுமிக்க கோயிலினுட்சென்றருளினார்—எ-று.

Koviloor Digital Library

புறநூலுணர்ச்சியுள்ளார்கண்டஞ்சத்தக்க மெய்ந்நூலுணர்ச்சியின் மிக்காராதலின் மறைச்சிறுபோதகமன்னுறொன உவமித்தார். கண்பொறியும் சிவபிரான் புலனுமாதலின், கண்வழிசென்றகருத்தெனவும், வேதாகமங்களில்விதிக்கும் அறங்களைத்திருமேனியாகவுடைமையின்புண்ணியரொனவுங்கூறினர்.

கண்முதலியனபொறியெனவும் அவற்ருலுணருமுருவமுதலியன புலமெனவும்படும். அது "பொறிப்புலன்களைப் போக்கறுத்து உள்ளத்தை நெறிப்படுத்து நினைபவர்நெஞ்சுளே" என்னும்திருக்குறுந் தொகையானுமுணர்க.

ஈறில்பெ ருந்தவ முன்செய்து தாதையெ னப்பெற்ருர்
மாறுவி ழுந்தம லர்க்கைகு வித்தும கிழ்ந்தாடி
வேறுவி ளைந்தவெ ருட்சிவி யப்புவி ருப்போடுங்
கூறும ருந்தமி ழின்பொரு ளானகு றிப்போர்வார்.

(இ-ள்.) ஈறில்பெருந்தவமுன்செய்துதாதையெனப்பெற்ருர் = முடிவில்லாததவத்தைத் தாம்முன்னேசெய்து அதனுல் ஆளுடையபிள்ளையார்க்குஇப்பிறப்பில் தந்தையாரென்றுசொல்லும் பேற்றினையடைந்த சிவபாத இருதயர்; மாறுவிழுந்தமலர்க்கைகுவித்து மகிழ்ந்தாடி=ஒச்சவெடுத்த மாருனது தானேநழுவிய தாமரைமலர்போன்றகைகளைச் சிரசின்மேற்குவித்துத் தம்மையறியாதெழுமகிழ்ச்சிகாரணமாகக்கூத்தாடி; வேறுவிளைந்தவெருட்சி வியப்புவிருப்போடும்=தனித்தனியுண்டாய அச்சம் அதிசயம் உவகை ஆகியவிவைகளோடும்; கூறும் அருந்தமிழின்பொருளான குறிப்புஓர்வார்=பிள்ளையார் அருளிய அரிய திருநெறித்தமிழின்பொருளாய அதிநுட்பங்களையோர்பவராய்—எ-று.

வெருட்சி, வியப்பு, விருப்புகள், ஒன்றுபோயவழி, அதன்பின்மற்ருென்று உதித்தலின், வேறுவிளைந்த வெருட்சிவியப்புவிருப்பொடுமென்ருர்.

அருள்வழிப்பட்டுநிற்கும் ஆளுடையபிள்ளையாரைத்தம்வழிப்பட்டவராய்க்கருதி அவர்க்கு உணர்வுகூட்டுநிமித்தம் மாருேச்சுதலாகிய பிழையின் பொருட்டு அச்சமும், இதுகாறும்யாண்டும் யாவரிடத்தும் நிகழாத நிகழ்ச்சியாகிய தெய்வத்தன்மை கருதி வியப்பும், புறச்சமயங்கள்பாழ்படவேண்டுமென்று தாம்கருதிச்செய்த தவப்பயன்காரணமாக சிவபிரானது திருவருள் இவ்வாறுகூட்டிற்றேயென விருப்பும், அவரிடத்து நிகழ்ந்தனவென்க. (அரு)

தாணுவி னைத்தனி கண்டுதொ டர்ந்தவர் தம்மைப்போற்
காணுதல் பெற்றில ரேனுமி கழ்ந்தன கண்டுள்ளார்
தோணிபு ரத்திறை தன்னரு ளாதறு ணிந்தார்வம்
பேணும னத்தொடு முன்புகு காதலர் பின்சென்ருர்.

(இ-ள்.) தாணுவினைத்தனிகண்டுதொடர்ந்தவர்தம்மைப்போல்=தோணியப்பரை இடபவாகனத்திற் பெரியநாயகியாரோடுந் தான்தனியேகண்டு தரிசித்து அவர்பின்தொடர்ந்துசென்ற அவ்வாளுடைய பிள்ளையாரைப்போல்;

Koviloor Digital Library

காணுதல்பெற்றிலரேனும் நிகழ்ந்தனகண்டுள்ளார்=தாம் அத்தோணியப்பரை க்கண்டு தரிசித்திலராயினும் அங்குநிகழ்ந்த அற்புதத்தைக்கண்டவராயினர் ; (அதனாலவர்) தோணிபுரத்து இறைதன் அருளாதல்துணிந்து=இந்நிகழ்ச்சி தோணிபுரத்து இறைவரது அருளாதலையூகித்துணர்ந்து ; ஆர்வம்பெறுமனத் தொடு முன்புகுகாதலர்பின்சென்றார்=அன்புமிக்கமனத்தோடு முன்னேசென் ற ஆளுடையபிள்ளையார் பின்போயினார்—எ-று.

நாதையெனப்பெற்றார் ஓர்வாராய்க்கண்டுள்ளாரெனக்கூட்டுக. (அசு)

அப்பொழு தங்கண ணைந்தது கண்டவ ரல்லாதார்
முப்புரி நூன்மறை யோர்களு ரோமமு கிழ்ப்பெய்தி
யிப்படி யொப்பதோ ரற்புத மெங்குள தென்றென்றே
துப்புறழ் வேணியர் கோயிலின் வாய்தல்பு றஞ்சூழ.

(இ-ள்.) அப்பொழுது அங்கண் அணைந்ததுகண்டவரல்லாதார் = அச் சமயத்தில் அவ்விடத்தில் நிகழ்ந்ததெய்விகநிகழ்ச்சியைப் பார்த்தவர்களும் (அங்ஙனம்பாராது) கேட்டவர்களுமாகிய; முப்புரிநூல்மறையோர்கள் உரோ மம் முகிழ்ப்பெய்தி=முப்புரிநூலையணிந்த பிராமணர்கள் உரோமாஞ்சிதமு டையராய் ; இப்படி ஒப்பதோர் அற்புதம் எங்குளது என்றுஎன்று=இதை யொத்த ஆச்சரியம் எவ்விடத்து உள்ளதென்று ; துப்புறழ் வேணியர்கோயி லின்வாய்தல் புறஞ்சூழ=பவழம்போலச்சிவந்த சடாமுடியையுடைய சிவபி ரானது கோயில்வாயிலின்புறத்தில் சூழ்ந்துநிற்க—எ-று. (அஎ)

பொங்கொளி மால்விடை மீதுபு குந்தணி பொற்றோணித்
தங்கியி ருந்தபெ ருந்திரு வாழ்வுத லைப்பட்டே
யிங்கெனை யாளுடை யானுமை யோடுமி ருந்தானென்
றங்கெதிர் நின்றுபு கன்றனர் ஞானத் தமுதுண்டார்.

(இ-ள்.) ஞானத்தமுதுண்டார் = ஞானபோனகம்செய்த ஆளுடையபி ள்ளையார் ; பொங்கு ஒளிமால்விடைமீதுபுகுந்து = விளங்குங்கிரணத்தையு டைய பெரியஇடபத்தின்மேல்(முன்)காட்சிகொடுத்தருளி : அணிபொன்தோ ணி தங்கியிருந்த பெருந்திருவாழ்வுதலைப்பட்டே=அழகியதோணியின்கண் (பின்) எழுந்தருளியிருந்த பெரியஞானச்செல்வரான சிவபிரானையடைந்து ; இங்கு எனையாளுடையான் உமையோடுமிருந்தானென்று=இவ்விடத்து என் னையாளுந்தன்மையையுடைய சிவபெருமான் உமாதேவியாரோடும் எழுந்தரு ளி இருந்தாரென்று ; அங்கெதிர்நின்றுபுகன்றனர்=அவ்விடத்துத் திருமுன் னிலையில்நின்று (தம்மைப்புறஞ்சூழ்ந்து நிற்குந்தந்தையார்முதலியோர்கேட் கும்படி) அருளிச்செய்தனர்—எ-று.

புறஞ்சூழப் புகுந்திருந்த வாழ்வைத் தலைப்பட்டுப் புகன்றனரெனக் கூட்டுக. (அஅ)

Koviloor Digital Library

இன்னிசை யேழுமி சைந்தசெ ழுந்தமி ழீசர்க்கே
சொன்முறை பாடுதொ ழும்பருள் பெற்றதொ டக்கோடும்
பன்மறை வேதியர் காணவி ருப்பொடு பானறும்
பொன்மணி வாயினர் கோயிலி னின்றுபு றப்பட்டார்.

(இ-ள்.) இன் இசை ஏழும் இசைந்தசெழுந்தமிழ் ஈசர்க்கே=இனியகுரல்முதலிய இசையேழும்பொருந்திய தீந்தமிழைச்சிவபெருமானுக்கே; சொன்முறைபாடும்தொழும்பு அருள்பெற்றதொடக்கோடும்=அச்சிவபிரானது குணங்களோடு சின்னத்தையும் அவரது கிருபையியல்பையும் சமண்புத்தரது இழிவையும் அமைத்துப்பாடித் திருக்கடைக்காப்பு அருளியபடியே பாடுகின்றதொண்டாகிய அருளைத்தாம்பெற்ற இயல்போடும்; பன்மறைவேதியர்காண=பலவேதங்களையுணர்ந்த பிராமணர்காணும்படி; விருப்பொடுபால்நாறும் பொன்மணிவாயினர்=விருப்புடன் திருமுலைப்பால்கமழும் அழகியமாணிக்கம்போல் சிவந்த திருவாயினையுடைய ஆளுடையபிள்ளையார்; கோயிலினின்று புறப்பட்டார்=திருக்கோயிலினின்று புறமெழுந்தருளினார்—எ-று.

இராகமும் தாளமும் ஒத்தபண் ஏழிசையாலமைதலின் இன்னிசையேழுமிசைந்தவென்றார். ஏழிசையால் இராகமேயன்றித் தாளமுமமையுமெனச்சங்கீதநூலார்கூறுவர். (அக)

பேணிய வற்புத நீடருள் பெற்றபி ரான்முன்னே
நீணிலை யிற்றிகழ் கோபுர வாயிலி னேரெய்தி
வாணில விற்றிகழ் வேணியர் தொண்டர்கள் வாழ்வெய்துந்
தோணிபு ரத்தவர் தாமெதிர் கொண்டு துதிக்கின்றார்.

(இ-ள்.) பேணிய அற்புதநீடு அருள்பெற்றபிரான்முன்னே=யாவராலும் விரும்பத்தக்க ஆச்சரியமிக்கசிவபிரானது திருவருளைப்பெற்ற ஆளுடைய பிள்ளையார் திருமுன்னே; நீள்நிலையில் திகழ்கோபுரவாயிலின் நேரெய்தி=(அவர்கோயிலினின்று மெழுந்தருளுங்கால்) உயர்ந்த நிலைகளால்விளங்கும் கோபுரவாயிலின்முன்னேசென்று; வாணிலவிற்றிகழ்வேணியர் தொண்டர்கள்=ஒளியையுடைய சந்திரகலையால்விளங்கும் சடாமகுடத்தையுடைய சிவபெருமான் அடியாராய்; வாழ்வெய்துந் தோணிபுரத்தவர்தாம்=வாழ்வடைந்ததோணிபுரத்தின்கணுள்ளார் யாவரும்; எதிர்கொண்டுதுதிக்கின்றார்=ஆளுடையபிள்ளையாரை எதிர்கொண்டுதுதிக்கின்றார்கள்—எ-று.

தாம்-அசை யெனினுமமையும். (கஉ)

வே று.

காழியர் தவமே கவுணியர் தனமே கலைஞானந்
தாழிய கடலே யதனிடை யமுதே யடியார்முன்
வாழிய வந்திம் மண்மிசை வானோர் தனிநாத
னேழிசை மொழியா டன்றிரு வருள்பெற் றனையென்பார்.

Koviloor Digital Library

(இ-ள்.) காழியர்தவமே கவுணியர்தனமே=சோழியில் உள்ளவர்கள்செய்ததவப்பயனே, கவுணியகோத்திரத்தார் பெற்றபெருஞ்செல்வமே; கலைஞானத்தாழியகடலே, அதனிடையமுதே=வேதமுதலிய கலைஞானங்களின் மிக்கவுணர்ச்சிக்கு ஆழ்ந்தசமுத்திரமே, அச்சமுத்திரத்தின்கண் (சாரருபமாய்த்திரட்டியெடுத்த) அமுதமே; இம்மண்மிசை அடியார்முன்வாழியவந்த=இந்நிலவுலகத்தின்கண் அடியார்கள் முற்பட்டுவாழ எழுந்தருளி; வானோர்தனிநாதன் ஏழிசைமொழியாள்தன் திருவருள்பெற்றனையென்பார்=ஒப்பற்றதேவாதிபரான சிவபிரானையும், ஏழிசைபோல இனியவார்த்தையுடைய உமாதேவியாரையும், ஆகியதிருவருளை நீபெற்றாயென்று துதிப்பார்—எ-று. (கக)

மறைவளர் திருவே வைதிக நிலையே வளர்ஞானப்
பொறையணி முகிலே புகலியர் புகலே பொருபொன்னித்
துறைபெறு மணியே சுருதியி னொளியே வெளியேவந்
திறையவ னுமையா ளொடுவரு டரவெய் தினையென்பார்.

(இ-ள்.) மறைவளர்திருவே வைதிகநிலையே வளர்ஞானப்பொறையணிமுகிலே=வேதமார்க்கம் வளர்தற்குரியபெருஞ்செல்வமே, அவ்வேதமார்க்கம்நின்று நிலவுமோரிடமே, குறையாதுவளரும்ஞானமாகியநீர்கொண்டமேகமே; புகலியர்புகலே=சோழிப்பதியிலுள்ளோர்க்குப் புகலிடமே; பொருபொன்னித்துறைபெறுமணியே=கரையோடுதிரைபொராநின்ற காவிரியின்துறைபெற்ற நன்முத்தமே; சுருதியின் ஒளி இறையவன் உமையாளுடன் வெளிவந்து அருள்தர எய்தினையென்பார்=சுருதிமுடிவின்கண் விளங்கும்பேரொளியாகிய சிவபிரான் உமாதேவியாருடன் திருமேனிகொண்டெழுந்தருளி அருள்செய்ய நீ திருவவதாரஞ்செய்தனையென்று துதிப்பார்—எ-று. (கஉ)

புண்ணிய முதலே புனைமணி யரைநா ணொடுபோதுங்
கண்ணிறை கதிரே கலைவளர் மதியே கவின்மேவும்
பண்ணியல் கதியே பருவம தொருமூ வருடத்தே
யெண்ணிய பொருளாய் நின்றவ ரருள்பெற் றனையென்பார்.

(இ-ள்.) புண்ணியமுதலே புனைமணி அரைநாணொடுபோதும் கண்ணிறைகதிரே=புண்ணியத்துக்குமுதல்வரே, மணிகள்வேய்ந்த அரைநாணொடுவராநின்ற கட்புலனுக்குநிறைந்தவிளஞ்சூரியனே; கலைவளர்மதியே = கலைவளர்கின்ற இளந்திங்களே; கவின்மேவும் பண்ணியல்கதியே=செவிக்கு இனிமையைத்தரும் பண்கள்நடக்கின்ற மந்தமுதலியகதியே; பருவமது ஒருமூவருடத்தே=ஒருமூன்றுவருடப்பருவத்தில்; எண்ணியபொருளாய்நின்றவர் அருள்பெற்றனையென்பார்=மேலோர்கருதும் மெய்ப்பொருளாய்நின்ற சிவபெருமானார்திருவருளை நீபெற்றாயென்றுசொல்லுவர்—எ-று. (கங)

வேறு.

என்றினைய பலகூறி யிருக்குமொழி யந்தணரு மேனை யோரு,
நின்றுதுதி செய்தவர்தா ணின்முடிகண் மேலேந்தி நிரந்த போது,

Koviloor Digital Library

சென்றணைந்த தாதையார் சிவபாத விருதயர்தாந் தெய்வ ஞானக்,கன்
றினைமுன் புக்கெடுத்துப் பியலின்மேற் கொண்டுகளி கூர்ந்து செல்ல.

(இ-ள்.) என்று இனைய பலகூறி இருக்குமொழி அந்தணரும் ஏனையோரும்=என்று இவ்வாறுன பலதுதிகளைச்சொல்லி வேதத்தையுணர்ந்த பிராமணரும் ஏனையஅடியார்களும்; நின்றுதுதிசெய்து=நின்றுதோத்திரங்கூறி; அவர்தாள் நீண்முடிகண்மேலேந்தி நிரந்தபோது=அவரதுதிருவடிகளை யுயர்ந்த சிரசின்மேல்சூடிச்சூழ்ந்துநின்றகாலத்து; சென்று அணைந்ததாதையார் சிவபாத இருதயர்தாம் = பிள்ளையார்பின்சென்றுவந்த தாதையாராகிய சிவபாதஇருதயர்; தெய்வஞானக்கன்றினைமுன்புக்கெடுத்து=தெய்வத்தன்மையான ஞானபோதகத்தை முன்சென்றெடுத்து; பியலின்மேற்கொண்டு களிகூர்ந்துசெல்ல=தோளின்மேல்வைத்துத் தாங்கிக்கொண்டு களிப்படைந்துசெல்ல.

போதகம்-யானைக்கன்று தாம்-அசை. (கச)

மாமறையோர் குழாத்தினுடன் மல்குதிருத் தொண்டர்குழா ம
ருங்கு சூழ்ந்து, தாமறுவை யுத்தரியந் தனிவிசும்பி லெறிந்தார்க்குந்
தன்மை யாலே, பூமருகு சிவானந்தப் பெருக்காறு போதவதன் மீ
து பொங்கும், காமர்நுரைக் குமிழியெழுந் திழிவனபோல் விளங்கு
பெருங் காட்சித் தாகும்.

(இ-ள்.) மாமறையோர்குழாத்தினுடன்=பெருமைபொருந்திய வேதங்களையுணர்ந்த பிராமணருடன்; மல்குதிருத்தொண்டர்குழாம் மருங்குசூழ்ந்து=நிறைந்த ஏனையதிருத்தொண்டர்குழாம் அருகிற்சூழ்ந்து; தாம்அறுவை உத்தரீயம்=தாங்கள் உடையின்மேற்சுற்றிய ஆடையினையும் உத்தரீயங்களையும்; தனிவிசும்பில் எறிந்து ஆர்க்கும் தன்மையாலே=ஒப்பில்லாத ஆகாயத்தின்கண்வீசி ஆரவாரிக்குந்தன்மையால்; பூமருகு சிவானந்தப் பெருக்காறு போத=பொலிவுபொருந்திய சீகாழிவீதியானது சிவானந்தமென்னும் பெருக்கையுடைய ஆறுபெருகுங்கால்; அதன்மீது பொங்கும் = அவ்வாற்றின்மீதுதிக்கும்; காமர்நுரைக்குமிழிஎழுந்து இழிவனபோல் விளங்குபெரும் காட்சித்தாகும்=அழகியநுரைகளோடுகூடிய குமிழிகளெழுந்துபின்கீழ்ப்பட்டு அடங்குவனபோல்விளங்காநின்றபெரிய தோற்றத்தையுடைத்தாம்—எ-று.

உத்தரியமென்றது குறுக்கல்விகாரம். (கரு)

நீடுதிருக் கழுமலத்து நிலத்தேவர் மாளிகைமே னெருங்கி யங்
கண், மாடுநிறை மடவார்கண் மங்கலமா மொழிகளால் வாழ்த்தி வா
சத், தோடுமலி நறுமலருஞ் சுண்ணமும்வெண் பொரியினொடுந் தூ
வி நிற்பார், கோடுபயில் குலவரைமேன் மின்குலங்கள் புடைபெயரு
ங் கொள்கைத் தாக.

(இ-ள்.) நீடுதிருக்கழுமலத்து நிலத்தேவர்மாளிகைமேல்=செல்வமிக்க சீகாழியின்கணுள்ள பிராமணர்களது திருமாளிகையின்கண்; நெருங்கி அங்

Koviloor Digital Library

கண்மாடுநிறைமடவார்கள்=நெருங்கி அவ்விடத்துப்பக்கங்களில்நிறைந்த பார்ப்பனப்பெண்கள்; மங்கலமாமொழிகளால்வாழ்த்தி=மங்கலத்தன்மையான வாழ்த்தொலிகளால்வாழ்த்தி ; வாசத்தோடுமலிநறுமலரும் சுண்ணமும்வெண்பொரியினொடுந்தூவிநிற்பார்=வாசனைபொருந்திய இதழ்கள் நிறைந்த நல்லபூக்களையும் வாசனைப்பொடியையும் வெள்ளியபொரியுடன்தூவுவார் ; கோடுபயில் குலவரைமேல் மின்குலங்கள்புடைபெயருங்கொள்கைத்தாக=கொடுமுடிகளையுடைய (இமயாசலமுதலிய) குலமலைகளின்மீது மின்னற்கூட்டங்கள் புடைபெயர்ந்து செல்லுந்தோற்றம்போல—எ-று.

மடவார்கள் கொள்கைத்தாகவாழ்த்தித்தூவிநிற்பாரெனக்கூட்டுக. (௧௬)

மங்கலதூ ரியந்துவைப்பார் மறைச்சாமம் பாடுவார் மருங்கு
வேதிப், பொங்குமணி விளக்கெடுத்துப் பூரணகும் பமுநிரைப்பார்
போற்றி செய்வா, ரங்கவர்கண் மனத்தெழுந்த வதிசயமும் பெருவி
ருப்புமன்பும் பொங்கத், தங்குதிரு மலிவீதிச் சண்பைநகர் வலஞ்
செய்து சாருங் காலை.

(இ-ள்.) தங்குதிருமலிவீதிச் சண்பைநகர்வலஞ்செய்து சாருங்காலை=நிலைபெற்ற செல்வமிகுந்த வீதியையுடைய சீகாழிநகரத்தைப் பிரதட்சணஞ்செய்துவரும்பொழுது; அங்கவர்கள்மனத்து எழுந்த அதிசயமும் பெருவிருப்பும் அன்பும்பொங்க = அந்நகரத்தி லிருக்கின்றவர்கள் தமதுமனத்தின்கண் தோற்றியவியப்பும் பெரியவிருப்பமும் அன்பும் அதிகரிக்க ; மங்கலதூரியம் துவைப்பார் மறைச்சாமம்பாடுவார் = மங்கலவாத்தியங்களை ஒலிப்பாராயும் சாமவேதத்தைப் பாடுவாராயும் ; மருங்குவேதிப் பொங்குமணிவிளக்கெடுத்துப் பூரணகும்பமும் நிரைப்பார் போற்றிசெய்வார்= வேதிகையின் மருங்கு, பொலிவு பொருந்திய இரத்தினவிளக்குகளை ஏந்திப்பூரணகும்பங்களை நிரைப்பாராயும் துதிசெய்வாராயும்—எ-று.

அங்கவர்பொங்க எனக்கூட்டுக. (௧௭)

தந்திருமா ளிகையின்க ணெழுந்தருளிப் புகும்பொழுது சங்க
நாத, மந்தாதுந் துபிமுதலா வளவில்பெரு கொலிதழைப்ப வணைந்
து புக்கார், சுந்தரப்பொற் றோணிமிசை யிருந்தபிரா னுடனணைந்த
துணைவி யாகும், பைந்தொடியா டிருமுலையின் பாலறு மதுரமொழி
ப் பவள வாயார்.

(இ-ள்.) சுந்தரப்பொன்றோணிமிசை இருந்தபிரானுடன் = அழகிய பொற்றோணியில் எழுந்தருளியிருந்த சிவபிரானுடன் ; அணைந்ததுணைவியாகும்பைந்தொடியாள் திருமுலையின்பாலறுமதுரமொழிப்பவளவாயார் ; எழுந்தருளியிருந்ததலைவியாகும் உமாதேவியாரது திருமுலைப்பால் கமழும் மதுரமொழியோடுகூடிய பவளம்போலும் திருவாயையுடைய ஆளுடையபிள்ளையார் ; தந்திருமாளிகையின்கண் எழுந்தருளிப்புகும்பொழுது சங்கநாதம் அந்நாது

Koviloor Digital Library

ந்துபிமுதலா அளவில்பெருகொலிதழைப்ப அணைந்துபுக்கார்=தமது திருமாளிகையின்கண் எழுந்தருளிப்போங்கால் சங்கொலியும் தேவதுந்துபிமுதலிய அளவில்லாத வாத்தியங்களின்பேரொலியும் உண்டாகச்சென்றருளினர்—எ-று.

சுந்தரப்பொன் தோணிமிசை இருந்தபிரான் உடன் அணைந்த துணைவியாகும் பைந்தொடியாள் திருமுலையின் பாலமுமதுரமொழிப்பவளவாயர் சண்பைநகர்வலஞ்செய்து சாருங்காலே, அங்கவர்கள்துவைப்பாராயும், பாடுவாராயும் நிறைப்பாராயும், போற்றிசெய்வாராயும் மனத்தெழுந்த அதிசயமும் பெருவிருப்பமும் அன்பும்பொங்கத் தந்திருமாளிகையின்கண் எழுந்தருளிப் புகும்பொழுது பெருகொளிதழைப்ப அணைந்துபுக்கார் எனக்கூட்டுக.

மேலையசெய்யுள் முதலிவ்விரண்டுங் குளகம். (கூஅ)

தூமணிமா ளிகையின்க ணமர்ந்தருளி யன்றிரவு தொல்லைநாத,
மாமறைக டிரண்டபெருந் திருத்தோணி மன்னிவீற் றிருந்தார்செய்
ய, காமருசே வடிக்கமலங் கருத்திலுற விடையறுக் காதல்கொண்டு,
நாமநெடுங் கதிருதிப்ப நண்ணினர் திருத்தோணி நம்பர்கோயில்.

(இ-ள்.) தூமணிமாளிகையின்கண் அமர்ந்தருளி=பரிசுத்தமான இரத்தினங்களழுத்திய திருமாளிகையிலெழுந்தருளி ; அன்று இரவு தொல்லைநாத மாமறைகள்திரண்ட பெருந்திருத்தோணி மன்னிவீற்றிருந்தார் செய்யகாமருசேவடிக்கமலம்=அந்நாளிரவில் பழமையான பதவாக்கியமென்னும் ஒலிவடிவான அளவில்லாதவேதங்கள் ஒருருவான பெரியதிருத்தோணியில் நிலைபெற்று வீற்றிருந்தருளும் சிவபிரானது சிவந்த அழகியதிருவடித்தாமரைகள் ; கருத்திலுற இடையறுக்காதல்கொண்டு நாமநெடுங்கதிர் உதிப்ப=தமது உள்ளத்தின்கண் நிலைபெறும்படி நீங்காதவிருப்பங்கொண்டு புகழ்பெற்ற மிக்ககிரணத்தையுடைய சூரியன் உதிக்குங்கால் ; நண்ணினர் திருத்தோணிநம்பர்கோயில்=திருத்தோணியென்னும் ஆலயத்திலெழுந்தருளிய பிரமபுரீசரது திருக்கோயிலைப்பிள்ளைபாரடைந்தார்—எ-று.

கருத்திலுற அன்றிரவு அமர்ந்தருளிக்கதிருதிப்பக்காதல்கொண்டு பிள்ளையார் நம்பர்கோயில் நண்ணினரெனக்கூட்டுக. (கூகூ)

காதலுட னணைந்துதிருக் கழுமலத்துக் கலந்துவீற் றிருந்த
தங்க, டாதையா ரையும்வெளியே தாங்கரிய மெய்ஞ்ஞானந் தம்பால்
வந்து, போதமுலை சுரந்தளித்த புண்ணியந்நா யாரையுமுன் வணங்
கிப்போற்றி, மேநகைய வருள்பெற்றுந் திருக்கோலக் காவிறைஞ்ச
விருப்பிற் சென்றார்.

(இ-ள்.) காதலுடன் அணைந்து திருக்கழுமலத்துக்கலந்து வீற்றிருந்த தங்கள் தாதையாரையும்=விருப்பத்துடன் அத்திருக்கோயிலுட் சென்றருளி சீகாழியின்கணிங்காது எழுந்தருளி இருந்த தமதுதந்தையாராகிய தோணி

யப்பனையும் ; தம்பால்வெளியேவந்து தாங்கரியமெய்ஞ்ஞானம் போதமுலைசுரந்து அளித்த புண்ணியத்தாயாரையும்=தம்மிடத்துத்திருமேனிதாங்கி வெளிப்பட்டு தரித்தற்கரிய சிவஞானந்தமக்காம்படி திருமுலைப்பாலைச்சுரந்து அளித்தருளிய புண்ணியருபியாகிய பெரியநாயகியாரையும் ; முன்வணங்கிப் போற்றி=அவரது திருமுன் நமஸ்கரித்துத்துதித்து ; மேதகைய அருள்பெற்றுத் திருக்கோலக்கா இறைஞ்சவிருப்பிற் சென்றார்=மேன்மையான அவரது திருவருளைப்பெற்றுத் திருக்கோலக்காவென்னுந் தலத்தைத்தரிசிக்க விருப்பத்தோடெழுந்தருளினார்—எ-று.

தாங்கரிய என்றது அடங்காமைமேற்று. ஞானத்தாலாயவின்பமேன்மேற்கிளைக்குங்கால் அதனையடைந்த உயிருணர்வு அதன்வழித்தன்றித் தன்வழித்தாய் நில்லாமையின் : போதமெய்ஞ்ஞானம் முலைசுரந்தெனக்கூட்டி மெய்ஞ்ஞானபோதத்தை திருமுலைசுரந்தளித்தவெனக் கூறிறுமமையும். (௰)


பெருக்கோலிட் டலைபிறக்குங் காவிரிநீர் பிரசமலர் தரளஞ்சிந்த,
வரிக்கோல வண்டாட மாதரார் குடைந்தாடு மணிநீர் வாவித், திருக்
கோலக் காவெய்தித் தேவர்பிரான் கோயில்வலஞ் செய்து முன்
னின், றிருக்கோலிட் டரிவரிய திருப்பாத மேத்துவதற் கெடுத்து
க்கொள்வார்.

(இ-ள்.) பெருக்கு ஒலிட்டு அலைபிறங்கும் காவிரிநீர்பிரசமலர் தரளஞ்சிந்தி=பெருகுதலுடன் ஆரவாரஞ்செய்து திரைகளையெறியுங் காவிரிநீரானது தேன்பொருந்தியமலர்களையு முத்துக்களையுமொருபால்சிதற; வரிக்கோலவண்டாட மாதரார்குடைந்தாடுமணிநீர்வாவித் திருக்கோலக்கா எய்தி=இசைபொருந்திய அழகியவண்டுகள் ஏழிசையால் சூழ்ந்தொலிக்கப் பெண்கள் நீர்ப்படிந்து முழுகும் அழகிய நீர்வாவிகளையுடைய திருக்கோலக்காவென்றுந்தலத்தையடைந்து ; தேவர்பிரான் கோயில்வலஞ்செய்து முன்னின்று=தேவாதிபரான சிவபிரானது கோயில்வலமாகவந்து திருமுன்னின்று ; இருக்கோலிட்டு அறிவரிய திருப்பாதம் ஏத்துவதற்கு எடுத்துக்கொண்டார்=வேதங்கள் ஒலிட்டுத் தாம்பலவாறுதுதித்தும் சிறப்பியல்பை ஒருவாற்றானன்றி முற்ற இலக்கணவகையால் கூறவறியாத திருவடித்தாமரைகளைத் துதிப்பதற்குத் தொடங்கியருள்பவராய்—எ-று. (௰௧)

மெய்ந்நிறைந்த செம்பொருளாம் வேதத்தின் விழுப்பொருளை
வேணிமீது, பைந்நிறைந்த வரவுடனே பசுங்குழவித் திங்கள்பரித்த
ருளுவானை, மைந்நிறைந்த மிடற்றானை மடையில்வாளைகள்பாய வெ
ன்னும் வாக்கால், கைந்நிறைந்த வொத்தறுத்துக் கலைப்பதிகங் கவுணி
யர்கோன் பாடுங்காலை.

(இ-ள்.) மெய்ந்நிறைந்த செம்பொருளாம் வேதத்தின்விழுப்பொருளை=மெய்ம்மைநிறைந்த செம்பொருளையுடையவேதங்களின் அந்தரித்தபொருளை ;

Koviloor Digital Library



பரமசிவன் திருக்கோலக்காவில் பிள்ளையாருக்குப் பொற்றாளம்
அருள, தேவியார் ஓசைதந்தருளியது.

Koviloor Digital Library

வேணிமீதுபைநிறைந்த அரவுடனே பசுங்குழவித்திங்கள்பரித்தருளுவானை=சடைமுடியின்மேல் படத்தையுடையபாம்புடனே பசிய இளம்பிறையையுந் தரித்தவனை ; மைநிறைந்தமிடற்றானை=ஆலாகலத்தால் கருமையடைந்தகண்டத்தையுடையவனை ; மடையில்வாளைகள் பாயஎன்னும்வாக்கால்=மடையில் வாளைபாயவென்னும் பதிகமுதலோடு ; கைநிறைந்த ஒத்தறுத்துக் கலைப்பதி கங்கவுணியர்கோன் பாடுங்காலை=ஆளுடையபிள்ளையார் தமது திருக்கரங்களால் நிறைவான (பண்ணிற்கமைந்த) தாளமாத்திரையின் காலத்தைவரையறுத்து வேதமுதலியகலைகளின் பொருளையுடைய திருப்பதிகத்தை அருளிச்செய்யுமிடத்து—எ-று. (௱உ)

திருக்கோலக்கா-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீ
ழுடையுங் கொண்ட வுருவமென்கொலோ. (க)

பெண்டான் பாக மாகப் பிறைச்சென்னி
கொண்டான் கோலக் காவுகோயிலாக்
கண்டான் பாதங் கையாற் கூப்பவே
யுண்டா னஞ்சை யுலக முய்யவே. (உ)

பூணற் பொறிகொ ளரவம் புன்சடைக்
கோணற் பிறையன் குழகன் கோலக்கா
மாணப் பாடி மறைவல் லானையே
பேணப் பறையும் பிணிக ளானவே. (௩)

தழுக்கொள் பாவந் தளர வேண்டுவீர்
மழுக்கொள் செல்வன் மறிசே ரங்கையான்
குழுக்கொள் பூதப் படையான் கோலக்கா
விழுக்கா வண்ண மேத்தி வாழ்மினே. (௪)

மயிலார் சாயன் மாதோர் பாகமா
வெயிலார் சாய வெரித்த வெந்தைதன்
குயிலார் சோலைக் கோலக் காவையே
பயிலா நிற்கப் பறையும் பாவமே. (௫)

வெடிகொள் வினையை வீட்ட வேண்டுவீர்
கடிகொள் கொன்றை கலந்த சென்னியான்
கொடிகொள் விழவார் கோலக் காவுளெம்
மடிகள் பாத மடைந்து வாழ்மினே. (௬)

நிழலார் சோலை நீல வண்டினங்
குழலார் பண்செய் கோலக் காவுளான்
கழலான் மொய்த்த பாதங் கைகளாற்
றொழுவார் பக்கற் றுயர மில்லையே. (எ)

எறியார் கடல்சூ ழிலங்கைக்கோன் றன்னை
முறியார் தடக்கை யடர்த்த மூர்த்திதன்
குறியார் பண்செய் கோலக் காவையே
நெறியாற் றொழுவார் வினைக ணீங்குமே. (அ)

நாற்ற மலர்மே லயனு நாகத்தி
லாற்ற லணைமே லவனுங் காண்கிலாக்
கூற்ற முதைத்த குழகன் கோலக்கா
வேற்றான்பாத மேத்தி வாழ்மினே. (௯)

பெற்றமாசு பிறக்குஞ் சமணரு
முற்ற துவர்தோ யுருவி லாளருங்
குற்ற நெறியார் கொள்ளார் கோலக்கா
பற்றிப் பரவப் பறையும் பாவமே. (௰)

நலங்கொள் காழி ஞான சம்பந்தன்
குலங்கொள் கோலக் காவு ளானையே
வலங்கொள் பாடல் வல்ல வாய்மையா
ருலங்கொள் வினைபோ யோங்கி வாழ்வரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

கையதனா லொத்தறுத்துப் பாடுதலுங் கண்டருளிக் கருணைகூர்ந்த
செய்யசடை வானவர்த மஞ்செழுத்து மெழுதியசெம் பொற்றாளங்க
ளையரவர் திருவருளா லெடுத்தபா டலுக்கிசைந்த வளவாலொத்த
வையமெலா முய்யவரு மறைச்சிறுவர் கைத்தலத்து வந்தவன்றே.

(இ-ள்.) கையதனால் ஒத்தறுத்துப்பாடுதலும்=தமது திருக்கரங்களினால் தாளத்தைவரையறுத்து (ஆளுடையபிள்ளையார்) பாடாநிற்கவும்; கண்டருளிக்கருணைகூர்ந்த=அதனைக்கண்டருளி அவரிடத்துக்கிருபைவைத்த; செய்யசடைவானவர்தம்=சிவந்த சடையையுடைய சிவபிரானது; அஞ்செழுத்தும் எழுதியசெம்பொற்றாளங்கள்=திரு அஞ்செழுத்தையுமெழுதிய செம்பொன்னாலாகிய தாளங்கள்; ஐயரவர் திருவருளால் எடுத்தபாடலுக்கிசைந்த அளவால் ஒத்த=அச்சிவபிரானது திருவருளினால்தொடங்கிய திருப்பதிகங்களுக்குப் பண்ணுக்கிசைந்த முறைமையால் தாளம்வரையறுக்க; வையமெலாம் உய்யவருமறைச்சிறுவர்கைத்தலத்துவந்த=உலகங்களெல்லாம் உய்யும்பொருட்டு அவதரித்த பிராமணகுலச்சிறுவராகிய ஆளுடையபிள்ளையாரது திருக்கரத்திலேவந்தன—எ-று.

Koviloor Digital Library

நற்செம்பொற்றாளம் வந்தது என்றும் பாடம். வாசகத்தோடுவாச்சியத் திற்குரிய இயைபுதோன்ற செய்யசடைவானவர் தம் அஞ்செழுத்தென்றார்.

காழிவரும் பெருந்தகையார் கையில்வருந் திருத்தாளக் கருவி கண்டு, வாழியதந் திருமுடிமேற் கொண்டருளி மனங்களிப்ப மது ரவாயி, லேழிசையுந் தழைத்தோங்க வின்னிசைவண் டமிழ்ப்பதிக மெய்தப்பாடித், தாழுமணிக் குழையார்முன் றக்கதிருக் கடைக்கா ப்புச் சாத்தி நின்றார்.

(இ-ள்.) காழிவரும்பெருந்தகையார் கையில்வரும் திருத்தாளக்கருவி கண்டு=சீகாழியில் அவதரித்த ஆளுடையபிள்ளையார் தமது திருக்கரத்தில்வ ந்த திருத்தாளமாகிய கருவியைக்கண்டு ; வாழியதந்திருமுடிமேல்கொண்ட ருளி=வாழ்வடைந்த தமது திருமுடியின்மேற்சூடியருளி ; மனங்களிப்ப ம துரவாயில் ஏழிசையுந்தழைத்தோங்க=தமது மனங்களிப்படையும்படி மது ரமானதிருவாயில் நின்றும் ஏழிசைகளும்வழுவின்றி நிரம்பியோங்க ; இன் னிசைவண்டமிழ்ப்பதிகம் எய்தப்பாடி=இனிய இசையையுடைய வளம்நிறை ந்த தமிழ்ப்பதிகத்தைப் பொருந்தப்பாடியருளி ; தாழுமணிக்குழையார்முன் தக்க திருக்கடைக்காப்புச்சாத்திநின்றார்=தொங்குகின்ற அழகியகுண்டலத் தையுடைய சிவபிரானார் திருமுன்னேபொருந்திய திருக்கடைக்காப்புச் சா த்திநின்றருளினார்—எ-று.

மாத்திரையை வரையறுத்தல் தாளம். அதுகருவிக்குமானமையிற் திரு த்தாளக்கருவியென்றார்.

திருக்கடைக்காப்பாவது திருப்பதிகங்களினிறுதியில் தமது திருப்பெய ரால் அமைத்தருளிய திருப்பாடல். (௱௪)

உம்பருல கதிசயிப்ப வோங்கியநா தத்தளவி னுண்மை நோக்கித், தும்புருநா ரதர்முதலாஞ் சுருதியிசைத் துறையுளோர் துதித்து மண்மேல், வம்பலர்மா மழைபொழிந்தார் மறைவாழ வந்தருளு மத லை யாருந், தம்பெருமா னருள்போற்றி மீண்டருளிச் சண்பைநகர் சாரச் செல்வார்.

(இ-ள்.) உம்பர் உலகு அதிசயிப்ப ஓங்கியநாதத்தளவின் உண்மைநோ க்கி=விண்ணுலகின்கண் உள்ளார் வியக்க உயர்ந்தபதிகவிசையின் அளவின து உண்மையைப்பார்த்து ; தும்புருநாரதர் முதலாம்சுருதி இசைத்துறையு ளோர்துதித்து=தும்புரு நாரதர்முதலிய சுதியோடுகூடிய இசைநூலில்வல் லவர்கள் ஆளுடைய பிள்ளையாரைவாழ்த்தி ; மண்மேல்வம்பலர் மாமழை பொழிந்தார்=நிலவுலகின்மேல் வாசனைபொருந்திய பூமழையைப்பொழிந் தார்கள் ; மறைவாழவந்தருளுமதலையாரும்=வேதங்கள்வாழ அவதரித்த ஆ ளுடையபிள்ளையாரும் ; தம்பெருமான் அருள்போற்றி மீண்டருளிச்சண்பை நகர்சாரச்செல்வார்=திருக்கோலக்காவிலெழுந்தருளிய சத்தபுரியீசனார்துதி

Koviloor Digital Library

த்த திருக்கோலக்காவினின்று மீண்டருளிச் சீகாழிநகரத்தையடையும்படி யெழுந்தருள்பவராய்—எ-று.

உண்மை என்பது மந்தம், மத்திமம், தாரமுதலியவற்றின்சாதித்தன்மை.

செங்கமல மலர்க்காத்துத் திருத்தாளத் துடனடந்து செல்லும் போது, தங்கள்குலத் தாதையார் தரியாது தோளின்மேற் றரித்துக் கொள்ள, அங்கவர்தந் தோளின்மிசை யெழுந்தருளி யணைந்தார்சூழ்ந் தமர ரேத்துந், திங்களணிமணிமாடத் திருத்தோணி புரத்தோணிச் சிகரக்கோயில்.

(இ-ள்.) செங்கமல மலர்க்கரத்துத் திருத்தாளத்துட னடந்துசெல்லும்போது=சிவந்த தாமரைமலரையொத்த திருக்கரத்திலேந்திய திருத்தாளத் துட னடந்தெழுந்தருளுங்கால்; தங்கள்குலத்தாதையார் தரியாதுதோளின் மேல் தரித்துக்கொள்ள=தங்கள் குலத்துக்குரிய தந்தையராகிய சிவபாத இதயர் பிள்ளையார் பூமியிலெழுந்தருளுவதைச் சகிக்காது தமது திருத்தோளின் மேல் தாங்கிக்கொண்டுசெல்ல; அங்கவர்தம் தோளின்மிசை எழுந்தருளி அணைந்தார்=அச்சிவபாத இதயரது திருத்தோளிலெழுந்தருளி அடைந்தருளினர்; சூழ்ந்து அமரர் ஏத்தும் திங்கள் அணிமணிமாடத் திருத்தோணி புரத் தோணிச் சிகரக்கோயில்=வலஞ்செய்து தேவர்கள் துதிக்குஞ் சந்திரன்தவழும் அழகியமணிகளையுடைய மாடங்கள்நெருங்கிய சீகாழியில் திருத்தோணி யென்னுஞ் சிகரத்தையுடைய கோயிலை—எ-று.

மறைவாழவந்தருளும் மதலையார்செல்வாராய்க் கோயிலை யணைந்தாரெனக்கூட்டுக. (௱௬)

திருப்பெருகு பெருங்கோயில் சூழவலங் கொண்டருளித் திரு முன்னின்றே, யருட்பெருகு திருப்பதிகமெட்டொருகட் டளையாக்கி யவற்று ளொன்று, விருப்புறுபொற் றிருத்தோணி வீற்றிருந்தார் தமைப்பாட மேவுகாதற், பொருத்தமுற வருள்பெற்றுப் போற்றி யெடுத் தருளினர் பூவார்கொன்றை.

(இ-ள்.) திருப்பெருகு பெருங்கோயில் சூழவலங்கொண்டருளி=செல்வமிக்க பெரியதிருக்கோயிலைப் பிரதட்சணஞ்செய்தருளி; திருமுன்னின்று அருட்பெருகு திருப்பதிகம் எட்டொருகட்டளையாக்கி=சிவபிரானது சந்நிதியில்நின்று திருவருள்நிறைந்த திருப்பதிகமெட்டையுங் ஒரு கட்டளையாக்கி; அவற்றுள் ஒன்று விருப்புறுபொன் திருத்தோணி வீற்றிருந்தார் தமைப்பாட மேவுகாதல்பொருத்தமுற அருள்பெற்று=அவ்வெட்டினுள் ஒன்றை விருப்பமிக்கபொன்னுலாய திருத்தோணியிலெழுந்தருளிய சிவபிரானைப்பாட அடைகின்ற விருப்பானதுபொருத்தமாக உண்டாக அவரது திருவருளைப்பெற்று; போற்றி எடுத்தருளினர் பூவார்கொன்றை=துதித்துப் பூவார்கொன்றையென முதலில் அடியெடுத்துப் பாடியருளினர்—எ-று.

Koviloor Digital Library

அருட்பெருகு திருப்பதிகமெட்டொரு கட்டளையாக்கி என்றது தக்கராகத்துக்குரிய கட்டளை ஏழனுள் திருக்கோலக்காவிலருளிய பதிகமொன்று நீக்கிப்பூவார்கொன்றை முதல் ஒருவிகற்பமான செய்யுளையுடைய திருப்பதிகமெட்டினை ஓர் கட்டளையாக்கி என்றறிக. (௱எ)

எடுத்ததிருப் பதிகத்தி னிசைதிருத்தா ளத்தினு லிசையவொத்தி,
யடுத்தநடை பெறப்பாடி யார்வமுற வணங்கிப்போந் தலைநீர்ப்பொ
ன்னி, மடுத்தவயற் பூந்தரா யவர்வாழ மழவிளங்கோ லத்துக்காட்சி
கொடுத்தருளி வைகினார் குறைவிலாநிறைஞானக் கொண்டலார்தாம்.

இ-ள்.) குறைவு இலா நிறை ஞானக்கொண்டலார்=குறைபாடின்றி நிறைந்த ஞானமுகிலாகிய ஆளுடையபிள்ளையார்; எடுத்ததிருப்பதிகத்தின் இசை திருத்தாளத்தினால் இசைய ஒத்தி=தரம்பாட எடுத்தருளிய திருப்பதிகத்தின் ஓசையைத்திருத்தாளக்கருவியினால் பொருந்தவளையறுத்து; அடுத்த நடைபெறப்பாடி=பொருந்திய அப்பதிகத்துக்கிசைந்த பண்பொருந்தும்படி பாடியருளி; ஆர்வமுறவணங்கிப்போந்து=அன்போடுவணங்கிப்போய்; அலைநீர்ப்பொன்னி மடுத்தவயல்பூந்தராயவர்வாழ=திரைகளையுடைய நீர்மிக்க காவிரியைத்தன்னுட்கொண்ட வயலையுடைய சீகாழிப்பதியின்கண் உள்ளார் வாழும்படி; மழவிளங்கோலத்துக் காட்சிகொடுத்தருளிவைகினார்=இளம்பருவத் திருக்கோலத்திற்கியைந்த காட்சிகொடுத்துத் திருமாளிகையிலெழுந்தருளினார்—எ-று. (௱அ)

சீகாழி - பண் - தக்காரம்

திருச்சிற்றம்பலம்.

பூவார் கொன்றைப் புரிபுன் சடையீச
காவா யெனநின் றேத்துங் காழியார்
மேவார் புரமூன் றட்டா ரவர்போலாம்
பாவா ரின்சொற் பயிலும் பரமரே.
காரார் வயல்சூழ் காழிக்கோன் றனைச்
சீரார் ஞான சம்பந்தன் சொன்ன
பாரார் புகழப் பாடல் வல்லவ
ராரார் வானத் தினிதா யிருப்பரே.

திருச்சிற்றம்பலம்.

திருக்கழுமலம்-திருத்தாளச்சதி-பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்

பந்தத்தால் வந்தெப்பால் பயின்றுநின்றவும்பரப்பாலேசேர்வா
யேனோர்கான் பயில்கண முனிவர்களுஞ், சிந்தித்தேவந்திப்பச்சிலம்
பின் மங்கை தன்னொடுஞ் சேர்வார்நாளு ணீள்கயிலைத் திகழ்தரு பரி

Koviloor Digital Library

சதெலாஞ், சந்தித்தே யிந்தப்பார்ச் சனங்கணின்றுதங்கணுற் றுமே காணு வாழ்வாரத் தகவுசெய் தவனதிடங், கந்தத்தா லெண்டிக்குங் கமழ்ந்திலங்கு சந்தனக் காடார்பூவார் சீர்மேவுங் கழுமல வளநகரே.

கஞ்சத்தே னுண்டிட்டே களித்துவண்டு செண்பகக் கானேதே னேபோராருங் கழுமல நகரிறையைத், தஞ்சத்தார் சண்பைக்கோன் சமைத்த நற்கலைத்துறை தாமேபோல்வார் தேனேரார் தமிழ்விர கன் மொழிக, ளெஞ்சத்தே வென்றிக்கே யிமைத்திசைத்தமைத்தகொண் டேழேயேழே நாலேமூன் றியலிசை யிசையியல்வா, வஞ்சத்தே வி ன்றிக்கே மனங்கொளப் பயிற்றுவோர் மார்வேசேர்வாள் வானோர்சீர் மதிநுதன் மடவாலே.

திருச்சிற்றம்பலம்.

அங்கியிலே லாளுடைய பிள்ளையார் தமைமுன்ன மளித்ததா யார், முன்னுதிக்க முயன்றதவத் திருநன்னி பள்ளிமுதன் மறையோ ரெல்லா, மன்னுபெரு மகிழ்ச்சியுடன் மங்கலதூ ரியந்துவைப்ப ம றைகளோதிக், கன்னிமதிற் சண்பைநகர் வந்தணைந்து கவுணியர்கோ ன் கழலிற்றாழ்ந்தார்.

(இ-ள்.) அங்கியில் ஆளுடையபிள்ளையார்தமை=அச்சமயத்தில் ஆளு டையபிள்ளையாரை; அளித்ததாயார் முன்னுதிக்க=பெற்றருளியபகவதியார் (பிள்ளையாரவதாரத்திற்கு) முன்னே தம்மரபிலவதரிக்க; முன்னம் முயன்ற தவத்திருநனிபள்ளிமுதல் மறையோரெல்லாம்=முன்னேபுரிந்த தவத்தையு டைய திருநனிபள்ளிமுதலிய தலங்களிலுள்ள பிராமணர்களெல்லோரும்; ம ன்றுபெருமகிழ்ச்சியுடன் மங்கலதூரியந்துவைப்ப மறைகளோதி=நிலைபெற் றபெரியசந்தோஷத்துடன் மங்கலவாத்தியங்கள் ஒலிப்ப வேதங்களையோதி; கன்னிமதில் சண்பைநகர் வந்தணைந்து கவுணியர்கோன் கழலில்தாழ்ந்தார்= அழியாதமதில்சூழ்ந்த சீகாழிநகரில்வந்துசேர்ந்து கவுணியர்கோத்திரத்திற்கு த்தலைவரான ஆளுடையபிள்ளையார் திருவடிகளைவணங்கினார்கள்—எ-று.

மங்கலமா மெய்ஞ்ஞான மண்களிப்பப் பெற்றபெரு வார்த்தை யாலே, யெங்கணுநீள் பதிமருங்கி லிருபிறப்பா ளருமல்லா வேனை யோரும், பொங்குதிருத் தொண்டர்களு மதிசயித்துக் குழாங்கொண் டு புகலியார்தஞ், சிங்கவிள வேற்றின்பால் வந்தணைந்து கழல்பணியு ஞ் சிறப்பின்மிக்கார்.

(இ-ள்.) மங்கலமாமெய்ஞ்ஞான மண்களிப்பப்பெற்ற பெருவார்த்தை யாலே=மங்கலத்தன்மையோடுகூடிய சிவஞானத்தை நிலவுலகின்கணுள்ளா ர் குதகலிக்க (தோணியப்பர் திருவருளால்) பெற்றபெரும்புகழ்காரணமாக; எங்கணு நீள்பதிமருங்கில் இருபிறப்பாளருமல்லா ஏனையோரும்= பெருமை

Koviloor Digital Library

மிக்க தலங்களெவ்விடத்துமுள்ள பிராமணர்களும் அவரொழிந்த மற்றையவருணத்தாரும் ;பொங்குதிருத்தொண்டர்களும்அதிசயித்துக்குழாங்கொண்டு=(பூதிமுதலியசாதனங்களினல்) பொலிவுபெற்ற திருஅடியார்களும் ஆச்சரியமடைந்து தம்முள் குழாங்குழாமாய்க்கூடி ; புகலியார்தஞ் சிங்கவிளவேற்றின்பால் வந்தணைந்து=சிகாழியின்கணுள்ளார்க்கு இளமைதங்கிய சிங்கஏற்றையொத்த ஆளுடையபிள்ளையாரையடைந்து ; கழல்பணியும்சிறப்பின்மிக்கார்=அவரது திருவடியை வணங்குஞ்சிறப்பினல் மேம்பட்டாராயினர்—எ-று.

சிங்கவிளவேறென்றது விசேடகுணசாமியம் உணர்த்தலின் இலக்கணை.

சாதியானுயபிறப்பொன்றும் உபநயனமுதலிய சமஸ்காரத்தானுய பிறப்பொன்றும் ஆக இருபிறப்புடைமையின் அந்தணர் இருபிறப்பாளரெனப் பட்டனர். (௩௰)

வந்ததிருத் தொண்டர்க்கு மல்குசெழு மறையவர்க்கு மற்று ளோர்க்குஞ், சிந்தைமகிழ் வுறமலர்ந்து திருவமுது முதலான சிறப்பின் செய்கை, தந்தமள வினில்விரும்புந் தகைமையினுற் கடனுற்றுஞ் சண்பை மூதூர், செந்தைபிரான் சிவலோக மெனவிளங்கி யெவ்வுலகு மேத்து நாளில்.

(இ-ள்.) வந்ததிருத்தொண்டர்க்கு மல்குசெழுமறையவர்க்கு மற்றுளோர்க்கும்=மேற்கூறியவாறு வந்தருளிய அடியார்களுக்குந் (தமக்குரிய ஒழுக்கங்களில் வழுவாது) நிறைந்த செல்வமிக்க பிராமணர்க்கும் அவரொழிந்த ஏனையோர்க்கும் ; சிந்தைமகிழ்வுற மலர்ந்து திருவமுது முதலான சிறப்பின் செய்கை=மனமகிழ்ச்சியோடு முகமலர்ந்து அவர்க்கு திருவமுதுசெய்வித்தல் முதலிய சிறப்பினையுடைய செய்கைகளை ; தந்தம் அளவினில் விரும்புந்தகைமையினல் கடனுற்றுஞ் சண்பைமூதூர்=(அந்நகரிலுள்ளோர்) தத்தமக்குரிய பொருளளவிற்கேற்ப பிரியங்கூருந் தன்மையினல் அவரவர்க்கேற்ற உபசாரங்களை செய்தற்கிடனுய பழைய சீகாழிநகரம் ; எந்தைபிரான் சிவலோகமென விளங்கி எவ்வுலகும் ஏத்துநாளில்=எமது பிதாவாகிய சிவபிரானது சிவலோகம்போலத் திருக்கூட்டங்களால் விளக்கமுற்று எவ்வுலகத்தாராலுந் துதிக்கப்படுங்காலத்தில்—எ-று. (௩௰௧)

செழுந்தாளப் பொன்னிசூழ் திருநன்னி பள்ளியுள்ளோர் தொழுது திங்கட், கொழுந்தணியுஞ் சடையானை யெங்கள்பதி யினிற் கும்பிட் டருள வங்கே, யெழுந்தருள வேண்டுமென விசைந்தருளித் தோணிவீற் றிருந்தார் பாதந், தொழுந்தகைமை யாலிறைஞ்சி யருள் பெற்றுப் பிறபதியுந் தொழமுன் செல்வார்.

(இ-ள்.) செழுந்தரளப்பொன்னி சூழ் திருநனிபள்ளியுள்ளோர் தொழுது=செழுமைபொருந்தியமுத்தங்களைத் திரைக்கரத்தால் ஒதுக்கும் காவிரிசூழ்ந்த திருநனி பள்ளியிலுள்ள பிராமணர்கள்வணங்கி ; திங்கள் கொழுந்

அ

Koviloor Digital Library

தணியுஞ் சடையானை எங்கள்பதியினிற் கும்பிட்டருளவங்கே எழுந்தருள வேண்டுமென=இளம்பிறையையணிந்த சடாமகுடத்தையுடைய சிவபிரானை எங்கள்தலத்தில் வணங்கியருள்செய்ய அவ்விடத்தெழுந்தருள வேண்டுமென் றிரப்ப; இசைந்தருளித்தோணி வீற்றிருந்தார்பாதம்=அதற்குடன்பட்டுத்திருத் தோணியிலெழுந்தருளிய தோணியப்பருடைய திருவடியை; தொழுந்தகைமையாலிறைஞ்சி=அட்டாங்கமுறைப்படி வணங்கி; அருள்பெற்றுப் பிறபதியும் தொழமுன்செல்வார்=அவரது திருவருளைப்பெற்றுத் திருநனிபள்ளியுடன்தலைமுதலிய பிறதலங்களையும் வணங்கும்படி முன்னெழுந்தருள்வாராயினர்—எ-று. (௱௰௨)

தாதவிழ்செந் தாமரையி னகவிதழ்போற் சிறடிக டரையின்மீது, போதுவதும் பிறரொருவர் பொறுப்பதுவும் பொருவன்பு புரிந்த சிந்தை, மாதவஞ்செய் தாதையார் வந்தெடுத்துத் தோளின்மேல் வைத்துக் கொள்ள, நாதர்கழ றம்முடிமேற் கொண்டகருத் துடன்போந்தார் ஞான முண்டார்.

(இ-ள்.) தாதவிழ்செந்தாமரையின் அகவிதழ்போல் சிறடிகள் தரையின் மீது=பூந்தாதோடுமலர்ந்த செந்தாமரையினது அகவிதழ்போன்ற அவரது சிறியதிருவடிகள்பூமியின்மேலே; போதுவதும் பிறரொருவர் பொறுப்பதுவும் பொருவன்புபுரிந்த சிந்தைமாதவஞ்செய்தாதையார் = பொருந்தச்செல்லுதலையும் வேறொருவர் அவைகளைத் தாங்கிச்செல்லுதலையும் தான்பொறாத அன்புமிக்க சிந்தையோடு பெரியதவஞ்செய்த சிவபாத இதயர்; வந்தெடுத்துத் தோளின்மேல்வைத்துக்கொள்ள=தாம்வந்து அவ் ஆளுடையபிள்ளையாரை யெடுத்துத் தமது திருத்தோளின்மேல் வைத்துக்கொண்டுசெல்ல; நாதர்கழல் தம்முடிமேல்கொண்ட கருத்துடன்போந்தார் ஞானமுண்டார்=சிவபிரானது திருவடிகளைத் தமது சிரத்தின்மேற்கொண்ட திருவுள்ளத்தோடு சென்றருளினார்சிவஞானத்தை யமுதசெய்த ஆளுடையபிள்ளையார்—எ-று.

தாங்குதற்கு முன்தவஞ்செய்தமைதோன்ற மாதவஞ்செய்தாதையாரென்றார்.

சிந்தையோடு வந்தெடுத்தெனக்கூட்டுக. (௱௰௩)

தேனலருங் கொன்றையினர் திருநன்னி பள்ளியினைச் சாரச் செல்வார், வானணையு மலர்ச்சோலை தோன்றுவதெப் பதியென்ன மகிழ்ச்சி யெய்திப், பானல்வயற் றிருநன்னி பள்ளியெனத் தாதையார் பணிப்பக் கேட்டு, ஞானபோ னகர்தொழுது நற்றமிழ்ச்சொற் றொடைமாலை நவில லுற்றார்.

(இ-ள்.) தேன் அலருங்கொன்றையினர் திருநனிபள்ளியினைச் சாரச் செல்வார்=தேனொடுமலர்ந்த கொன்றைமாலையை அணிந்த சுற்றிலையப்பரது திருநனிபள்ளியென்னும் அத்தலத்தைப்பொருந்த அதன்சமீபத்தை யடைவா

Koviloor Digital Library

ராகிய ; ஞானபோனகர்=சிவஞானத்தைத்திருவமுதுசெய்த அருளுடைய பிள்ளையார் ; வான் அணையுமலர்ச்சோலை தோன்றுவது எப்பதியென்ன=மேகந்தவழுமலர்களையுடைய சோலைதோன்றாநிற்பது எத்தலமென்று வினவியருள ; பானல்வயல் திருநனிபள்ளியெனத் தாதையார் பணிப்பக்கேட்டு=நீலோற்பலங்கள் மலரும் வயல்சூழ்ந்த திருநனிபள்ளியென்று சிவபாத இதயர் சொல்லக்கேட்டருளி ; மகிழ்ச்சியெய்தி தொழுது நற்றமிழ்ச்சொற்றொடைமாலை நவிலலுற்றார்=அதனால் திருவுளமகிழ்ந்து கைகுவித்துவணங்கி நல்ல திருநெறித்தமிழ் வேதமாகிய பதிகத்தைப் பாடியருளினார்—எ-று. (ாயச)

வேறு.

காரைகள் கூகை முல்லை யெனநிகழ் கலைசேர் வாய்மைச்
சீரியற் பதிகம் பாடித் திருக்கடைக் காப்புத் தன்னி
னாரியோர் பாகர் வைகு நனிபள்ளி யுள்கு வார்தம்
பேரிடர் கெடுதற் காணை நமதெனும் பெருமை வைத்தார்.

(இ-ள்.) காரைகள் கூகைமுல்லை எனநிகழ்கலை சேர்வாய்மைச் சீரியல் பதிகம்பாடி=காரைகள் கூகைமுல்லையென்னுமுதலோடு தமது திருவாக்கின் கண்ணிகழ்ந்த வேதப்பொருளையுடைய மெய்ம்மையான சிறப்பமைந்த திருப்பதிகத்தைப்பாடியருளி ; திருக்கடைக்காப்புதன்னில் நாரியோர்பாகர்வைகும் நனிபள்ளியுள்குவார்தம்பேரிடர் கெடுதற்காணை நமதெனும் பெருமை வைத்தார் = திருக்கடைக்காப்பின்கண் உமாதேவிபாகராகிய நற்றுணையப்பரெழுந்தருளிய திருநனிபள்ளியைச் சிந்திப்போரது மிக்கதுன்பங்கள் கேடடைதற்கைய மின்றென திருவாணை நமதென்னும் பெருமையையும் வைத்தருளினார்—எ-று. (ாயரு)

திருநனிபள்ளி - பண், பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

காரைகள் கூகை முல்லை களவாகை யீகை படர்தொடரி கள்ளி கவினிச், சூரைகள் பம்மி விம்மு சுடுகா டமர்ந்த சிவன்மேய சோலை நகர்தான், தேரைகள் சாரை சாய மிதிகொள் ளவாளை குதிகொள்ள வள்ளை துவள, நாரைக ளாரல் வார வயன்மேதி வைகு நனிபள்ளி போலு நமர்காள்.

சடையிடை புக்கொ டுங்கி யுட்டங்கு வெள்ளம் வளர்திங்கள் கண்ணி யயலே, யிடையிடை வைத்த தொக்கு மலர்தொத் துமாலை யிறைவன் னிடங்கொள் பதிதான், மடையிடை வாளை பாய முகிழ் வாய் நெரிந்து மணநாறு நீல மலரு, நடையுடை யன்னம் வைகு புனலம் படப்பை நனிபள்ளி போலு நமர்காள்.

Koviloor Digital Library

கடல்வரை யோத மல்கு கழிகானல் பானல் கமழ்காழி யென்று கருதப், படுபொரு ளாறு நாலு மூளதாக வைத்த பதியான ஞான முனிவ, னிடுபறை யொன்ற வத்தர் பியன்மே லிருந்து விசையா லுரைத்த பனுவல், நம்விரு ளாடு மெந்தை நனிபள்ளி யுள்க வினைகெடுத லாணை நமதே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - நற்றுணையப்பர். தேவியார்-பர்வதராசபுத்திரி.

திருப்பதிகம் - ௩.

ஆதியார் கோயில் வாயி லணைந்துபுக் கன்பு கூரு
நீதியாற் பணிந்து போற்றி நீடிய வருண்முன் பெற்றுப்
போதுவார் தம்மைச் சூழ்ந்து பூசுரர் குழாங்கள் போற்றுங்
காதல்கண் டங்க மர்ந்தார் கவுணியர் தலைவ ஞர்தாம்.

(இ-ள்.) ஆதியார்கோயில்வாயில் அணைந்துபுக்கு=முதற்கடவுளாகிய சிவபிரானது திருக்கோயிலின் திருவாயிலையடைந்து உள்ளேயெழுந்தருளி; அன்புகூருநீதியால் பணிந்துபோற்றி நீடிய அருள்முன்பெற்று=அன்புமிக்க முறைமையோடு விதிப்படி வணக்கித்துதித்து அவரது நிறைந்ததிருவருளைத் திருமுன்னேபெற்று; போதுவார் கவுணியர்தலைவனார் தம்மைச்சூழ்ந்து பூசுரர்குழாங்கள் போற்றுங்காதல்கண்டு அங்கு அமர்ந்தார்=எழுந்தருள்பவராகிய கவுணியர்கோத்திரத்தலைவரான ஆளுடையபிள்ளையார் தம்மைச்சூழ்ந்து அவ்வூரிலிருக்கும் பிராமணத்தொகுதிகள் தாமங்குவசிக்கும்விருப்பால் தம்மைத் துதிக்கும் விருப்பத்தைக்கண்டு அவ்விடத்தெழுந்தருளினார்—எ-று. (ரயசு)

அம்பிகை யளித்த ஞான மகிலமு முய்ய வுண்ட
நம்பெருந் தகையார் தம்மை யெதிர்கொண்டு நண்ண வேண்டி
யும்பரும் வணங்கு மெய்ம்மை யுயர்தவத் தொண்ட ரோடு
தம்பெரு விருப்பால் வந்தார் தலைசையந் தணர்க ளெல்லாம்.

(இ-ள்.) அம்பிகை அளித்தஞானம் அகிலமும் உய்யவுண்ட நம்பெருந் தகையார்தம்மை எதிர்கொண்டு நண்ணவேண்டி=உமாதேவியார் கொடுத்தருளிய சிவஞானமாகிய திருவமுதை எல்லா வுலகமுமுய்யும்பொருட்டுத் திருவமுதுசெய்த நமது பிரானுகிய ஆளுடையபிள்ளையாரைத் தமது திருப்பதிக்கு எழுந்தருளும்விருப்பால் எதிர்கொண்டு அழைத்தற்குத் தாம் திருநனிபள்ளியையடையவிரும்பி; தலைசையந்தணர்கள்எல்லாம்தம்பெருவிருப்பால்= திருத்தலைச்சங்காட்டில் வசிக்கும் பிராமணர்களெல்லாரும் தமக்குண்டான பெருவிருப்பத்தால்; உம்பரும் வணங்குமெய்ம்மை உயர்தவத்தொண்டரோடு வந்தார்=தேவர்களும் வணங்கத்தக்க வுண்மையோடுயர்ந்த தவநெறியையுடைய அடியார்கூட்டத்தோடும் அத்திருநனிபள்ளியில் வந்தார்கள்—எ-று.

Koviloor Digital Library

3127
Q23

காவணை மெங்கு மிட்டுக் கமுகொடு கதலி நாட்டிப்
பூவணை தாமந் தூக்கிப் பூரண கும்ப மேந்தி
யாவண வீதி யெல்லா மலங்கரித் தண்ண லாரை
மாவணை மலர்மென் சோலை வளம்பதிக் கொண்டு புக்கார்.

(இ-ள்.) காவணம் எங்கும் இட்டுகமுகொடுகதலிநாட்டி=எவ்விடத்தும் நடைக்காவணமிட்டு கமுகுடன் வாழையையும் நிறுத்தி; பூவணைதாமம் தூக்கி பூரணகும்பம் ஏந்தி=பூமலரால் தொடுத்த மாலையைத்தூக்கி நிறைகுடங்களைக்கையிலேந்திக்கொண்டு; ஆவணவீதியெல்லாம் அலங்கரித்து=திருவாவணவீதிகளையெல்லாம் அலங்காரஞ்செய்து; அண்ணலாரை மாவணைமலர் மென்சோலை வளம்பதிகொண்டுபுக்கார்=அவர்கள் ஆளுடையபிள்ளையாரை வண்டுகள்வாசஞ்செய்யு மிருதுவான பூக்கள்பொருந்திய சோலையினையுடைய தமது செல்வமிக்க திருப்பதிக்கு அழைத்துக்கொண்டுபோனார்கள்—எ-று.

நாட்டித்தூக்கி அலங்கரித்துக் கும்பமேந்திக்கொண்டுபுக்காரெனமுடிக்க.

திருமறை யோர்கள் சூழ்ந்து சிந்தையின் மகிழ்ச்சி பொங்கப்
பெருமறை யோசை மல்கப் பெருந்திருக் கோயி லெய்தி
யருமறைப் பொருளா னாைப் பணிந்தணி நற்சங் கத்தின்
றருமுறை நெறியக் கோயில் சார்ந்தமை யருளிச் செய்தார்.

(இ-ள்.) திருமறையோர்கள் சூழ்ந்து சிந்தையில்மகிழ்ச்சிபொங்க=மங்கலமான வேதத்தையுணர்ந்த பிராமணர்கள்சூழ்ந்து தமது மனத்தில் சந்தோஷமிகும்படியாக; பெருமறையோசைமல்கப் பெருந்திருக்கோயிலெய்தி=பெரியவேதங்களையோதுகின்ற வொலிநிறையும்படி பெரியதிருக்கோயிலையடைந்து; அருமறைப்பொருளானைப்பணிந்து=அழகியவேதப்பொருளாகிய தலைச்சங்காட்டீசனைவணங்கி; அணிநற்சங்கத்தின் தருமுறைநெறியக்கோயில் சார்ந்தமையருளிச்செய்தார்=அழகிய நல்லவலம்புரிச்சங்கினது வடிவத்தைக்காட்டுமுறைமையினால் அத்திருக்கோயில் அமைந்தமையைப்பதிகத்தில் அருளிச்செய்தார்.

விமானத்திற்கு ஐந்திரம் நாகரம் கசப்பிருட்டம் முதலிய பேதமிருத்தல் போல் வலம்புரிவடிவமும் உண்டென்பார் நற்சங்கத்தின் றருமுறைநெறியக் கோயிலென்றார்—எ-று. (காயசு)

கறையணி கண்டர் கோயில் காதலாற் பணிந்து பாடி
மறையவர் போற்ற வந்து திருவலம் புரத்து மன்னு
மிறைவனைத் தொழுது பாடுங் கொடியுடை யேத்திப் போந்து
நிறைபுனற் றிருச்சாய்க் காடு தொழுதற்கு நினைந்து செல்வார்.

(இ-ள். கறையணிகண்டர்கோயில் காதலால்பணிந்துபாடி=விடம்பொருந்திய திருமிடற்றையுடைய தலைச்சங்காட்டீசரது ஆலயத்தைவிருப்பத்தோடுவணங்கிதிருப்பதிகம்பாடி; மறையவர்போற்றவந்து திருவலம்புரத்துமன்

Koviloor Digital Library

றும்=அங்குள்ள பிராமணர்கள்துதிக்க எழுந்தருளிதிருவலம்புரத்தின்கண் எழுந்தருளிய; இறைவரைத்தொழுதுபாடுங் கொடியுடையேத்திப்போர்த்து=வலம்புரிநாதரைவணங்கித் தாம் அவரைப்பாடுக்கொடியுடையென்றுமுதலையுடைய திருப்பதிகத்தைத்துதித்து அங்குநின்றெழுந்தருளி; நிறைபுனல் திருச்சாய்க்காடு தொழுதற்குநினைந்துசெல்வார்=நீர்நிறைந்த திருச்சாய்க்காடென்னுந் திருப்பதியைவணங்கத் திருவுளங்கொண்டு எழுந்தருளும்பிள்ளையார்—எ-று.

திருவலம்புரம் - பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

கொடியுடை மும்மதி லூடுருவக் குனிவெஞ் சிலைவாங்கி
யிடிபட வெய்த வமரர்பிரா னடியா ரிசைந்தேத்தத்
துடியிடை யாளையோர் பாகமாகத் துதைந்தா ரிடம்போலும்
வடிவுடை மேதி வயல்படியும் வலம்புர நன்னகரே.

நல்லிய னன்மறை யோர்புகலித் தமிழ்ஞான சம்பந்தன்
வல்லிய தோலுடை யாடையினான் வலம்புர நன்னகரைச்
சொல்லிய பாடல்கள் பத்துஞ்சொல்ல வல்லவர் தொல்வினைபோய்ச்
செல்வன சேவடி சென்றணுகிச் சிவலோகஞ் சேர்வாரே.

திருச்சிற்றம்பலம்.

வலம்புரநாதர் - வடுவகிர்க்கண்ணம்மை.

திருப்பதிகம் - ச.

பன்னகப் பூணி னாரைப் பல்லவ னீச்சரத்துச்
சென்னியால் வணங்கி யேத்தித் திருந்திசைப் பதிகம் பாடிப்
பொன்னிசூழ் புகாரி னீடு புனிதர்தந் திருச்சாய்க் காட்டு
மன்னுசீர்த் தொண்ட ரெல்லாம் மகிழ்ந்தெதிர் கொள்ளப் புக்கார்.

(இ-ள்.) பன்னகப்பூணினாரைப் பல்லவனீச்சரத்தில்= சர்ப்பாபரணமணிந்த பூரணேசரைப் பல்லவனீச்சரமென்னுந் திருக்கோயிலின்கண்; சென்னியால்வணங்கி யேத்தித்திருந்திசைப்பதிகம்பாடி=சிரசால்வணங்கித்துதித்து திருந்தியவிசையோடுகூடிய திருப்பதிகத்தையருளிச்செய்து; பொன்னிசூழ்புகாரினீடு புனிதர்தந்திருச்சாய்க்காட்டு=காவிரிசூழ்ந்தபூம்புகாரின்கண் எழுந்தருளிய சாயாவனேசரது திருச்சாய்க்காடென்னுந்தலத்தில்; மன்னுசீர்த்தொண்டரெல்லாம் மகிழ்ந்து எதிர்கொள்ளப் புக்கார்=வசிக்கும் சிறப்பினையுடைய அடியார்களெல்லாம் மகிழ்ச்சியடைந்துவணங்கி எதிர்கொள்ள அத்தலத்திற்கெழுந்தருளினார்—எ-று.

பூம்புகார் காவிரிப்பூம்பட்டினம். (௩௨௧)

வானளா வுயர்ந்த வாயி லுள்வலங் கொண்டு புக்குத்
தேனலர் கொன்றை யார்தந் திருமுன்பு சென்று தாழ்ந்து

Koviloor Digital Library

மாலிடந் தரித்தார் தம்மைப் போற்றுவார் மண்பு காரொன்
றூனெலா முருக வேத்தி யுச்சிமேற் குவித்தார் செங்கை.

(இ-ள்.) வானளவுயர்ந்த வாயிலுள்வலங்கொண்டுபுக்க=விண்ணுலகளவுயர்ந்தகோபுரவாயிலினுள்ளே எழுந்தருளிப்பிரதட்சணஞ்செய்து; தேனலர் கொன்றையார் தந்திருமுன்புசென்றுதாழ்ந்து=தேனுடைமலர்ந்த கொன்றை மாலையை யணிந்த சாயாவனேசரது திருமுன்னேசென்றுவணங்கி; மானிடந்தரித்தார்தம்மைப்போற்றுவார் மண்புகாரொன்று=மானை இடக்கரத்தில்தரித்த அச்சிவபெருமானைத்துதிப்பவர் மண்புகாரொன்று (திருப்பதிகத்தின்முதலில் எடுத்தருளி); ஊனெலாமுருகவேத்தி உச்சிமேற்குவித்தார்செங்கை=தமது திருமேனிமுழுதும் உருகும்படிதுதித்து சிரசின்மேல் சிவந்ததிருக்கரங்களைக் குவித்தருளினர்—எ-று. (ஙஉஉ)

திருச்சாய்க்காடு - பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

மண்புகார் வான்புகுவர் மனமிளையார் பசியாலுங்
கண்புகார் பிணியறியார் கற்றாருங் கேட்டாரும்
விண்புகா ரெனவேண்டா வெண்மாட நெடுவீதித்
தண்புகார்ச் சாய்க்காட்டெந் தலைவன்றாள் சார்ந்தாரே.

நொம்பந்து புடைத்தொல்கு நூபுரஞ்சேர் மெல்லடியா
ரம்பந்தும் வரிக்கழலு மாவஞ்செய் பூங்காழிச்
சம்பந்தன் றமிழ்பகர்ந்த சாய்க்காட்டுப் பத்தினையு
மெம்பந்த மெனக்கருதி யேத்துவார்க் கிடர்கெடுமே.

திருச்சிற்றம்பலம்.

சீரினிற் றிகழ்ந்த பாட்டிற் றிருக்கடைக் காப்புப்போற்றிப்
பாரினிற் பொலிந்த தொண்டர் போற்றிடப் பயில்வார் பின்னு
மேரிசைப் பதிகம் பாடி யேத்திப்போந் திறைவர் வெண்கா
டாருமெய்க் காதலோடும் பணிவதற் கணைந்தா ரன்றே.

(இ-ள்.) சீரினிற்றிகழ்ந்த பாடற்றிருக்கடைக் காப்புப்போற்றி = சிறப்பமைந்த தமது அத்திருப்பதிகத்தில் திருக்கடைக்காப்பைச்செய்தருளி; பாரினிற்பொலிந்த தொண்டர்போற்றிடப் பயில்வார்=நிலவுலகின்கண் விளங்கிய அடியார்கள்துதிக்க அங்கெழுந்தருளிய ஆளுடையபிள்ளையார்; பின்னும் ஏரிசைப்பதிகம்பாடி யேத்திப்போந்து=மீளவும் அழகிய இசையையுடைய திருப்பதிகத்தைப்பாடித்துதித்து அங்குநின்றெழுந்தருளி; இறைவர்வெண்காடாருமெய்க் காதலோடும் பணிவதற்கணைந்தார்=சுவேதாரண்ணியேசுவரர் எழுந்தருளிய திருவெண்காட்டை நிறைந்தவுண்மையான அன்புடன்வணங்குவதற்குச் சென்றருளினர்—எ-று. (ஙஉங)

Koviloor Digital Library

திருச்சாய்க்காடு - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

நித்த லுநிய மஞ்செய்து நீர்மலர் தூவிச்
சித்த மொன்றவல் லார்க்கரு ளுஞ்சிவன் கோயின்
மத்த யானையின் கோடும்வண் பீலியும் வாரித்
தத்து நீர்ப்பொன்னி சாகர மேவுசாய்க் காடே.

ஏனை யோர்புகழ்ந் தேத்திய வெந்தைசாய்க் காட்டை
ஞான சம்பந்தன் காழியர் கோனவில் பத்து
மூன மின்றி யுரைசெய வல்லவர் தாம்போய்
வான நாடினி தாள்வரிம் மாநிலத் தோரே.

திருச்சிற்றம்பலம்.

சாயாவனேசர் - குயில்மொழியம்பிகை.

திருப்பதிகம் - ச.

பொன்னிதழ்க் கொன்றை வன்னி புனலிள மதியி னீடு
சென்னியர் திருவெண் காட்டுத் திருத்தொண்ட ரெதிரே வந்திங்
கின்னதன் மையர்களானா ரெனவொணா மகிழ்ச்சி பொங்க
மன்னுசீர்ச் சண்பை யாளு மன்னனைக் கொண்டு புக்கார்.

(இ-ள்.) பொன்னிதழ்க்கொன்றைவன்னி புனலிளமதியினீடுசென்னியர்=பொன்போலும் இதழ்களையுடைய கொன்றைப்பூவும் வன்னிப்பத்திரமும் கங்காநதியும் இளம்பிறையும் ஆகிய இவைகளால் விளங்கிய சடாமகுடத்தையுடைய அச்சிவபிரானது; திருவெண்காட்டுத் திருத்தொண்டர் எதிரேவந்து=திருவெண்காட்டின்கணுள்ள திருத்தொண்டர்களெல்லாம் எதிர்கொண்டுவந்து; இங்கு இன்னதன்மையர்களானாரெனவொணா மகிழ்ச்சிபொங்க=இவ்விடத்து இத்தன்மையரானாரென எடுத்துச்சொல்லவொண்ணாதமகிழ்ச்சிமேம்பட; மன்னுசீர்ச்சண்பையாளு மன்னனைக்கொண்டுபுக்கார் = நிலைபெற்ற கீர்த்தியையுடைய சீகாழியை ஆளாநின்ற ஆளுடையபிள்ளையாரை அழைத்துக்கொண்டு சென்றார்கள்—எ-று. (௱உச)

முத்தமிழ் விரகர் தாமு முதல்வர்கோ புரத்து முன்னர்
சித்தநீ டுவகை யோடுஞ் சென்றுதாழ்ந் தெழுந்து புக்குப்
பத்தரா மடியார் சூழப் பரமர்கோ யிலைச்சூழ் வந்து
நித்தனார் தம்முன் பெய்தி நிலமுறத் தொழுது வீழ்ந்தார்.

(இ-ள்) முத்தமிழ்விரகர்தாமும்=இயலிசைநாடகமென்னு முத்தமிழின் பாகுபாடுகளை யுணர்ந்த ஆளுடையபிள்ளையாரும்; முதல்வர்கோபுரத்துமுன்

Koviloor Digital Library

னர்=திருவெண்காட்டீசரது திருக்கோபுரத்தின்முன்னே ; சித்தநீடு உவகையோடும் சென்றுதாழ்ந்தெழுந்துட்புக்கு=மனதில்மிக்கமகிழ்ச்சியோடுஞ் சென்று வணங்கிவிழுந்து உள்ளேபுகுந்து ; பத்தராம் அடியார்சூழப் பரமர்கோயிலைச்சூழ்வந்து=சிவபத்தராகிய அடியார்கள் தம்மருகில்சூழ்ந்துவர அச்சிவபிரானுர் திருக்கோயிலைப் பிரதட்சணஞ்செய்து ; நித்தனுர்தம்முன்பெய்தி நிலமுறத்தொழுது விழ்ந்தார்=நித்தராகிய அச்சிவபிரானது திருமுன்னேசென்று பூமியிற்றிருமேனிதீண்ட சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தருளினுர்—எ-று

மெய்ப்பொரு ளாகி னுளை வெண்காடு மேவி னுளைச்
செப்பரும் பதிக மாலை கண்காட்டு நுதன்முன் சேர்த்தி
முப்புரஞ் செற்றுர் பாதஞ் சேருமுக் குளமும் பாடி
யொப்பரு ஞான முண்டா ருளமகிழ்ந் தேத்தி வாழ்ந்தார்.

(இ-ள்.) மெய்ப்பொருளாகினுளை வெண்காடுமேவினுளை=உண்மைப் பொருளாயுள்ளவனை சுவேதாரண்ணியேசனை ; செப்பரும்பதிகமாலை கண்காட்டுநுதன்முன் சேர்த்தி = சொல்லுதற்கரிய திருப்பதிகமாகியமாலையை கண்காட்டுநுதலென முதலடியில்வைத்து (அப்பதிகத்தில்) ; முப்புரஞ்செற்றுர்பாதஞ் சேருமுக்குளமும்பாடி=திரிபுரத்தையெரித்தருளிய அச்சிவபிரானுர் திருவடிகளைச்சேரச்செய்யும்முக்குளத்தையும் அப்பதிகத்திற்பாடியருளி; ஒப்பரும்ஞானமுண்டார் உளமகிழ்ந்தேத்திவாழ்ந்தார்=ஒப்பில்லாத சிவஞானப்பாலையுண்டருளிய ஆளுடையபிள்ளையார் மனமகிழ்ந்து அச்சிவபிரானை த்துதித்து பேரானந்தவாழ்வை அடைந்தருளினுர்—எ-று.

சந்திரன் சூரியன் அக்கினியென்னும் முத்தேவரதுவடிவான அம்முக்குளமும் தன்கண்மூழ்குவார்க்கு சிவபிரானது திருவடிஞானத்தை விளைக்கும் சிவபுண்ணியத்தைக்கொடுத்தலின் பாதஞ்சேருமுக்குளமென்றுர்.

சிவபிரான் இம்மை மறுமையென்னும் அழிவுபாட்டினையுடைய பயன்கட்குவேருய நிரதிசயமான நித்தியவின்பத்தைக் கொடுப்பவராதலின் மெய்ப்பொருளாயினுரெனவுங்கூறினர்.

பாதஞ்சேருமுக்குளமென்புழி சமீப இலக்கணையால் ஆலயத்தின்கண்ணுள்ள முக்குளமென்றுரைப்பினும் அமையும். (௱உசு)

திருவெண்காடு-பண்-சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

கண்காட்டு நுதலானுங் கனல்காட்டுங் கையானும்
பெண்காட்டு முருவானும் பிறைகாட்டுஞ் சடையானும்
பண்காட்டு மிசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டி லுறைவானும் விடைகாட்டுங் கொடியானே. (க)

Koviloor Digital Library

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினே டுள்ளநினை
வாயினவெ லாம்பெறுவ ரையுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே. (உ)

தண்பொழில்சூழ் சண்பையர்கோன் றமிழ்ஞான சம்பந்தன்
விண்பொலிவெண் பிறைச்சென்னி விகிர்தனுறை வெண்காட்டைப்
பண்பொலிசெந் தமிழ்மாலை பாடியபத் திவைவல்லார்
மண்பொலிய வாழ்ந்தவர்போய் வான்பொலியப் புகுவாரே. (ந)

திருச்சிற்றம்பலம்.

சுவேதாரணியேசர். பிரமவித்தியாநாயகி.

திருப்பதிகம்—சு.

அருமையாற் புறம்பு போந்து வணங்கியங் கமரு நாளிற்
திருமுல்லை வாயி லெய்திச் செந்தமிழ் மாலை சேர்த்தி
மருவிய பதிகண்மற்றும் வணங்குவார் மறையோ ரேத்தத்
தருமலி புகலிவந்து ஞானசம் பந்தர் சார்ந்தார்.

(இ-ள்.) அருமையாற்புறம்புபோந்து வணங்கியங்கமருநாளில்=(அத்தலத்தில் அச்சிவபிரானைப்பிரிந்துசேறற்கரிய) அருமைப்பாடுடன் நமஸ்கரித்துப்புறம்பேசென்று அத்தலத்திலெழுந்தருளி யிருக்குநாளில்; திருமுல்லைவாயிலெய்திச் செந்தமிழ்மாலைசேர்த்தி=(தென்) திருமுல்லைவாயிலென்னும் திருப்பதியையடைந்து செந்தமிழாலாய திருப்பதிகமாலையை முல்லைவனநாதரது திருவடிகளில் சாத்தியருளி அத்திருமுல்லைவாயிலைச்சமீபித்த; மருவியபதிகண்மற்றும் வணங்குவார் = மற்றத்திருப்பதிகளையும் வணங்குவாராய்; மறையோர் ஏத்தத்தருமலிபுகலிவந்து ஞானசம்பந்தர் சார்ந்தார்=பிராமணர்கள் துதிக்கப் (பலசாதியான) தருக்கள் மிகுந்தசீகாழியை ஞானசம்பந்தர் எழுந்தருளியடைந்தார்—எ-று. (௱உஎ)

திருமுல்லைவாயில்-பண்-பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

துளிமண்டி யுண்டு நிறம்வந் தகண்ட மடைமன்னு துன்னு சுடரோ
டொளிமண்டி யும்ப ருலகங் கடந்த வுமைபங்க னெங்க ளரனூர்
களிமண்டு சோலைக் கழனிக் கலந்த கமலங்க டந்த மதுவின்
றெளிமண்டி யுண்டு சிறைவண்டு பாடு திருமுல்லை வாயி லிதுவே.

Koviloor Digital Library

அணிகொண்ட கோதை யவணன்று மேத்த வருள்செய்த வெந்தை மருவார், திணிகொண்ட மூன்று புரமெய்த வில்லி திருமுல்லைவாயி லதன்மேற், றணிகொண்ட சிந்தை யவர்காழி ஞான மிகுபந்தனொன்ட மிழ்களி, னணிகொண்ட பத்து மிவைபாடு பத்த ரகல்வானமாள்வர் மிகவே. (உ)

திருச்சிற்றம்பலம்.

முல்லைவனநாதர். அணிகொண்டகோதை.

திருப்பதிகம்—க.

தோணிவீற் றிருந்தார்தம்மைத் தொழுதுமுன் னின்று தூய
வாணியாம் பதிகம்பாடி யருட்பெரு வாழ்வு கூரச்
சேணுயர் மாடமோங்கு திருப்பதி யதனிற் செய்ய
வேணியார் தம்மைநாளும் போற்றிய விருப்பின் மிக்கார்.

(இ-ள்.) தோணிவீற்றிருந்தார் தம்மைத்தொழுது முன்னின்று=திருத்தோணியப்பரைவணங்கி அவர்திருமுன்னின்று ; தூய ஆணியாம்பதிகம்பாடி =பரிசுத்தமான வேதாகமங்களின் பொருளிற்கு உரையாணியாகிய திருப்பதிகத்தைப்பாடியருளி ; அருட்பெருவாழ்வு கூர=திருவருளாகிய பேரானந்தப் பெருவாழ்வு அதிகரிக்க ; சேணுயர்மாடமோங்கும் திருப்பதியதனில்=விண்ணுலகமளவுமுயர்ந்த மாடங்களோங்கிய அச்சீகாழியென்னுந் திருப்பதியின்கண் (எழுந்தருளிய ;) செய்யவேணியார்தம்மை நாளும்போற்றியவிருப்பின் மிக்கார்=சிவந்த சடைமுடியையுடையதோணியப்பரை நாடோறுந்துதிக்கும் விருப்பத்தில்மிக்க ஆளுடையபிள்ளையார்—எ-று. (ஈஉஅ)

வைகுமந் நாளிற்கீழ்பான் மயேந்திரப் பள்ளி வாசஞ்
செய்பொழிற் குருகாவூருந் திருமுல்லை வாயி லுள்ளிட்
டெய்திய பதிகளெல்லா மின்புற விறைஞ்சி யேத்தித்
தையலாள் பாகர்தம்மைப் பாடினார் தமிழ்ச்சொன் மாலை.

(இ-ள்.) வைகும் அந்நாளில்=அவ்வாறு சீகாழியிலெழுந்தருளி யிருக்குங்காலத்து ; கீழ்பான் மயேந்திரப்பள்ளி வாசஞ்செய் பொழிற்குருகாவூருந் திருமுல்லைவாயிலுள்ளிட்டெய்திய பதிகளெல்லா மின்புறவிறைஞ்சியேத்தி = அச்சீகாழியின்கீழ்பாலுள்ள திருமயேந்திரப்பள்ளியையும் வாசனைகமழும் சோலைசூழ்ந்த திருக்குருகாவூரையுந் திருமுல்லைவாயிலையும் உள்ளிட்டுப் பொருந்திய திருப்பதிகளையெல்லாம் தம்மனத்தில் ஆராவின்பமிக வணங்கி வாழ்த்தி ; தையலாள்பாகர்தம்மைப் பாடினார்தமிழ்ச்சொன்மாலை=அத்தலங்களி லெழுந்தருளிய உமாதேவிபாகரான சிவபிரானைத்தமிழ்வேதமாகிய பதிகமாலையாற் பாடியருளினார்—எ-று. (ஈஉக)

Koviloor Digital Library

திருமயேந்திரப்பள்ளி-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

திரைதரு பவளமுஞ் சீர்திகழ் வயிரமுங்
கரைதரு மகிலொடு கனவளை புகுதரும்
வரைவிலா வெழில்லெய்த மயேந்திரப் பள்ளியு
ளரவனை யழகனை யடியிணை பணிமினே. (௧)

வம்புலாம் பொழிலணி மயேந்திரப் பள்ளியு
ணம்பனர் கழலடி ஞானசம் பந்தன்சொ
லம்பரம் மிதுவென நாவினு னவில்பவர்
ரும்பரா ரெதிர்கொள வுயர்பதி யணைவரே. (௨)

திருச்சிற்றம்பலம்.

திருமேனியழகர். முல்லைநகைவடிவாள்.

திருப்பதிகம்—௧.

அவ்வகை மருங்குசூழ்ந்த பதிகளி லரனூர் பொற்றாண்
மெய்வகை ஞானமுண்ட வேதியர் விரவிப் போற்றி
யுய்வகை மண்ணுளோருக் குதவிய பதிகம் பாடி
யெவ்வகை யோருமேத்த விறைவனை யேத்து நாளில்.

(இ-ள்.) அவ்வகைமருங்குசூழ்ந்தபதிகளில் அரனூர்பொற்றாண் மெய்வகைஞானமுண்ட வேதியர் விரவிப்போற்றி=அவ்வாறு (திருக்குருகாவூர்முதலிய) தலங்களின் சமீபத்திலுள்ள (சீகாழிக்குச்சமீபமான) தலங்களில் எழுந்தருளிய சிவபிரானது அழகிய திருவடிகளை உண்மைச்சிவஞானவமுதையுண்டருளியவருடையபிள்ளையார் அடைந்துதுதித்து ; உய்வகைமண்ணுளோருக் குதவியபதிகம்பாடி=நிலவுலகின்கணுள்ளார் உய்யுநெறியைக்கொடுக்கும் திருப்பதிகங்களைப்பாடியருளி ; எவ்வகையோருமேத்த இறைவனையேத்துநாளில்=எவ்வகைப்பட்ட மேம்பாட்டோரும்தம்மைத்துதிக்க சீகாழியின்கணெழுந்தருளியதோணியப்பரைத்துதித்தெழுந்தருளியிருக்குங்காலத்தில்—எ-று.

மேல், திருநீலகண்டப்பெரும்பாணரைப்பிள்ளையார் சீகாழியின்கண் எதிர்கொண்டமைகூறுதலின், ஈண்டு உய்வகைமண்ணுளோருக் குதவியபதிகம் பாடி, எவ்வகையோரும் ஏத்த இறைவனை ஏத்துநாளிலென்றது, சீகாழியின்கண்தோணியப்பரையென்பது பெற்றாம். (௱௯௰)

வேறு.

திருநீல கண்டத்துப் பெரும்பாணர் தெள்ளமுதின்
வருநீர்மை யிசைப்பாட்டு மதங்கசூ ளாமணியா
ரொருநீர்மை யுடனுடைய பிள்ளையார் கழல்வணங்கத்
தருநீர்மை யாழ்கொண்டு சண்பையிலே வந்தணைந்தார்.

Koviloor Digital Library

(இ-ள்.) திருநீலகண்டத்துப் பெரும்பாணர் தெள்ளமுதின்வருநீர்மை இசைப்பாட்டு மதங்கசூளாமணியார்=திருநீலகண்ட யாழ்ப்பாணநாயனார்தெள்ளிய அமுதையொத்து செவிக்கு இன்பத்தைவிளைக்கும் தன்மையையுடைய இசைப்பாட்டில்வல்ல அவர்மனைவியராய மதங்கசூளாமணியாரோடு ; ஒருநீர்மையுடன் உடையபிள்ளையார்கழல்வணங்க=ஒருங்குபட்ட பத்திமையுடன் ஆளுடையபிள்ளையார் திருவடிகளை வணங்கும்பொருட்டு ; தருநீர்மையாழ் கொண்டு சண்பையிலேவந்தணைந்தார்=இன்பத்தைத்தரும் யாழினையெடுத்துக்கொண்டு சீகாழியில்வந்துசேர்ந்தார்—எ-று. (௱௯௧)

பெரும்பாணர் வரவறிந்து பிள்ளையா ரெதிர்கொள்ளச்
சுரும்பார்செங் கமலமலர்த் துணைப்பாதந் தொழுதெழுந்து
விரும்பார்வத் தொடுமேத்தி மெய்ம்மொழிக ளாற்றுதித்து
வரும்பான்மை தருவாழ்வு வந்தெய்த மகிழ்சிறந்தார்.

(இ-ள்.) பெரும்பாணர் வரவறிந்து பிள்ளையார் எதிர்கொள்ள=திருநீலகண்டப்பெரும்பாணரது வரவினை ஆளுடையபிள்ளையார்தெரிந்து அவரை எதிர்கொண்டருள ; சுரும்பார் செங்கமலமலர்த்துணைப்பாதந்தொழுதெழுந்து=வண்டுகள் ஆரவாரிக்குஞ் செந்தாமரைமலர்போன்ற பிள்ளையாரது இரண்டு திருவடிகளையுந் தமது பத்தினியாரோடுந் திருநீலகண்ட யாழ்ப்பாணர்வணங்கியெழுந்து ; விரும்பார்வத்தொடு மேத்திமெய்ம்மொழிகளாற்றுதித்து=விரும்பிய மெய்யன்போடு அஞ்சலிசெய்து மெய்கலந்தவாக்கினால்துதித்து ; வரும்பான்மைதருவாழ்வு வந்தெய்தமகிழ்சிறந்தார்=(தாம் அவரைத்தரிசிக்கவேண்டுமென) வரும் ஒருமைப்பட்டபேரன்பாலாயபயனானவின்பம் தரிசித்தமாத்திரத்தில் தம்மைவந்தடைய அதனால் மகிழ்ச்சியடைந்தவராயினார்—எ-று.

அளவிலா மகிழ்ச்சியினார் தமைநோக்கி யையர்நீ
ருளமகிழ விங்கணைந்த வுறுதியுடை யோமென்றே
யிளநிலா நகைமுகிழ்ப்ப விசைத்தவரை யுடன்கொண்டு
களநிலவு நஞ்சணிந்தார் பாலணையுங் கவுணியனார்.

(இ-ள்.) அளவிலாமகிழ்ச்சியினார் தமைநோக்கி ஐயர்நீர்=அளவில்லா மகிழ்ச்சியையுடைய திருநீலகண்டயாழ்ப்பாணரைப் பார்த்தருளி ஐயரோநீர் ; உளமகிழவிங்கணைந்த வுறுதியுடையோமென்றே=மனமகிழும்படியிங்கு வந்ததனால் வரும்பயனாகிய வுறுதியினையுடையோமென்று ; இளநிலாநகை முகிழ்ப்பவிசைத்து அவரையுடன்கொண்டு=இளமையான நிலாவை திருநகைதோற்றுவிக்கும்படி கட்டளையிட்டு அத்திருநீலகண்டயாழ்ப்பாணரைத்தம்மோடுடன்கொண்டு ; களநிலவு நஞ்சணிந்தார் பாலணையுங்கவுணியனார்=கண்டத்தில்விளங்கும் நஞ்சினையணிந்த தோணியப்பரது சந்நிதியிற்செல்லும் ஆளுடையபிள்ளையார்—எ-று. (௱௯௩)

Koviloor Digital Library

கோயிலினிற் புறமுன்றிற் கொடுபுக்குக் கும்பிடுவித்
தேயுமிசை யாழுங்க ளிறைவருக்கிங் கியற்றுமெனை
வாயபுகழ்ப் பிள்ளையா ரருள்பெற்ற வதற்கிறைஞ்சி
மேயதொடைத் தந்திரியாழ் வீக்கியிசை விரிக்கின்றார்.

(இ-ள்.) கோயிலினிற்புறமுன்றிற் கொடுபுக்குக்கும்பிடுவித்து = திருக்கோயிலின் திருமுற்றத்தின்புறத்தில் அவரை அழைத்துக்கொண்டுசென்று வணங்கச்செய்து ; இங்கு உங்கள் இறைவருக்கு ஏயும் இசையாழ் இயற்றுமென= இவ்விடத்தில் உங்கள்பிரானுருக்கு இசையோடுகூடிய யாழைப்பாடுமென்று பிள்ளையார் அருளிச்செய்ய ; ஆயபுகழ்ப்பிள்ளையார் அருள்பெற்ற அதற்கிறைஞ்சி=உலகின்கண்ணிறைந்த கீர்த்தியையுடைய ஆளுடையபிள்ளையாரது திருவருளை இசைபாடும்பொருட்டுத் தாம் பெற்றதைக்கருதி அப்பிள்ளையாரைவணங்கி ; மேயதொடைத்தந்திரியாழ்வீக்கி இசைவிரிக்கின்றார்= இசைபொருந்திய தொடையினையுடைய தந்திரிகளோடு கூடியயாழின் மாடகமுதலியனபிணித்து யாழ்வாசிக்கின்றார்—எ-று.

தந்திரியென்பது-யாழ்முதலியவற்றின்நரம்பு. (௩௬௪)

தானநிலைக் கோல்வடித்துப் படிமுறைமைத் தகுதியினு
லானவிசை யாராய்வுற் றங்கணர்தம் பாணியினை
மானமுறைப் பாடினியா ருடன்பாடி வாசிக்க
ஞானபோ னகர்மகிழ்ந்தார் நான்மறையோ ரதிசயித்தார்.

(இ-ள்.) தானநிலைக்கோல்வடித்து=மந்தர மத்திமதாரமென்னும் மூவகைநாதங்களை அளந்துகட்டிய எல்லையின் நிலைமையோடுகூடிய யாழினைப்பண்ணுறுத்தி ; படிமுறைமைத்தகுதியினால் ஆன இசை ஆராய்வுற்று=அத்தானங்களில் மூவகைநாதங்களும்பொருந்து முறைமையான தகுதியோடும் ஆகின்ற குரல்முதலிய ஏழிசைகளைத் தனித்தனிதானம் ஒவ்வொன்றிலும் ஆராய்ந்து ; அங்கணர்தம்பாணியினை=சிவபிரான் பரமானபண்ணிற்கமைந்தபாடலை; மானமுறைப்பாடினியாருடன்பாடி வாசிக்க=ஏழிசையின்கால அளவை முதலிய இலக்கணங்களையுணர்ந்த பாடினியாருடன் திருநீலகண்டப்பெரும்பாணர்பாடி யாழினைவாசிக்க ஞானபோனகர்மகிழ்ந்தார் நான்மறையோர் அதிசயித்தார் = அதைக்கேட்டஞானவமுதுண்ட ஆளுடையபிள்ளையார் மகிழ்ச்சியடைந்தார் ; அங்குள்ள நான்குவேதங்களையுணர்ந்த பிராமணர்களும் வியப்படைந்தனர்—எ-று. (௩௬௫)

யாழிலெழு மோசையுட னிருவர்மிடற் றிசையொன்றி
வாழிதிருத் தோணிபுளார் மருங்கணையு மாட்சியினைத்
தாழுமிரு சிறைப்பறவை படிந்ததனி விசும்பிடைநின்
றேழிசைநூற் கந்தருவர் விஞ்சையரு மெடுத்திசைத்தார்.

Koviloor Digital Library

(இ-ள்.) யாழில் எழும் ஓசையுடன் இருவர் மிடற்றிசையொன்றி=நரம்புக்கருவியாகிய யாழின்கண் உண்டாகும் ஓசையுடன் திருநீலகண்டயாழ்ப்பாணரும் அவர் பத்தினியாரும் ஆகிய இவ்விருவரது கண்டத்தெழும் இசைகளுமொன்றுபட்டு ; வாழிதிருத்தோணியுளார் மருங்கணையுமாட்சியினை= திருத்தோணி அப்பரது திருச்செவியின்பால் பொருந்தும்பெருமையை ; தாழும் இருசிறைப்பறவை படிந்ததனிவிசும்பிடை நின்று=சந்திரமண்டலத்தினின்றும் இசைக்குருகி வீழாநின்ற கின்னர மிதுனங்கள் நெருங்கியபெரிய ஆகாயத்தின்கண்நின்று ; ஏழிசைசூழ் கந்தருவர் விஞ்சையருமெடுத்திசைத்தார்=ஏழிசைகளோடு கூடிய சாந்தருவவேதத்தில்வல்லகாந்தருவரும் விஞ்சையர்களும் இவ்விசையைவிதந்தெடுத்துக் கூறினர்—எ-று. (௱௬௬)

எண்ணருஞ்சீர்த் திருத்தோணி யெம்பெருமான் கழல்பரவிப்
பண்ணமையா ழிசைகூடப் பெரும்பாணர் பாடியபின்
கண்ணுதலா ரருளினாற் காழியர்கோன் கொடுபோந்து
நண்ணியுறை யிடஞ்சமைத்து நல்விருந்து சிறந்தளிப்ப.

(இ-ள்.) எண்ணருஞ்சீர் திருத்தோணி எம்பெருமான் கழல்பரவி=அளவிடற்கரிய சிறப்போடுகூடிய திருத்தோணியப்பரது திருவடிகளைவணங்கி ; பண்ணமையாழ் இசைகூடப்பெரும்பாணர் பாடியபின்=பண்ணிற்கமைந்த யாழின்கண் ஏழிசைகளும்பிறழாது பொருந்தும்படி திருநீலகண்டப்பெரும்பாணர் சிவபிரானது பாணியினைப்பாடியபின்பு ; கண்ணுதலார் அருளினால்காழியர்கோன் கொடுபோந்து ; தோணியப்பரது திருவருளினால் ஆளுடையபிள்ளையார் அத்திருநீலகண்டயாழ்ப்பாணரை மீட்டும் உடன்கொண்டுசென்று ; நண்ணியுறை இடஞ்சமைத்து நல்விருந்து சிறந்தளிப்ப=இருக்கைக்கெழுந்தருளி பொருந்திவசித்தற்கு ஓர் உறையுளை அமைத்து நல்ல அறுசுவையோடுகூடிய விருந்தினை மனமகிழ்ந்து செய்தருள—எ-று. (௱௬௭)

பிள்ளையா ரருள்பெற்ற பெரும்பாணர் பிறையணிந்த
வெள்ளநீர்ச் சடையாரை யவர்மொழிந்த மெய்ப்பதிக
முள்ளபடி கேட்டலுமே யுருகுபெரு மகிழ்ச்சியராய்த்
தெள்ளமிர்த மருந்தினர்போற் சிந்தைகளி யுறத்தொழுதார்.

(இ-ள்.) பிள்ளையார் அருள்பெற்ற பெரும்பாணர்=ஆளுடையபிள்ளையாரது திருவருளைப்பெற்ற திருநீலகண்ட யாழ்ப்பாணர் ; பிறையணிந்தவெள்ளநீர்ச்சடையாரை அவர் மொழிந்தமெய்ப்பதிகம்=சந்திரகலையைச்சூடிய கங்காநதி தவழும் சடைமுடியையுடைய சிவபெருமானை அவ்வாளுடையபிள்ளையார் பாடியருளிய மெய்ம்மையான திருப்பதிகங்களை ; உள்ளபடி கேட்டலுமே உருகுபெருமகிழ்ச்சியராய்=அவர் அருளியவண்ணம் (திருக்கூட்டங்களால்பாடியருள்) அதனைக்கேட்டவளவில் மனமுருகி (அதனால்) பெருமகி

Koviloor Digital Library

ழ்ச்சியுடையராய் ; தெள்ளமிர்த மருந்தினர்போல் சிந்தைகளியுறத்தொழு தார்=தெள்ளியவமிர்தமூண்டார்போல் உளம் களிப்படைய அப்பதிகமான் மியங்களைச்சிந்தித்து த்தொழுதார்—எ-று. (ாகூஅ)

காழியார் தவப்பயனுங் கவுணியர்தந் தோன்றலா
ராழிவிட முண்டவர்த மடிபோற்றும் பதிகவிசை
யாழின்முறை மையினிட்டே யெவ்வுயிரு மகிழ்வித்தா
ரேழிசையும் பணிகொண்ட நீலகண்ட யாழ்ப்பாணர்.

(இ-ள்.) காழியர்தவப்பயனும் கவுணியர்தம் தோன்றலார்=சீகாழியின் கண் உள்ளாரது தவப்பயனாகிய கவுணியர்கோத்திரத்துத் தலைவராகிய ஆளு டையபிள்ளையார் ; ஆழிவிடம் உண்டவர்தம் அடிபோற்றும் பதிகவிசை=தி ருப்பாற்கடலில்தோன்றிய ஆலாகலத்தைத் (தேவர்கள் உய்யும்பொருட்டு) உண்டருளிய சிவபிரானது திருவடிகளைத்துதிக்கும் திருப்பதிகங்களின் இ சையை ; யாழின்முறைமையின் இட்டே எவ்வுயிருமகிழ்வித்தார்=(தாம்வை த்திருக்கும்) யாழில் (பதிகத்துக்கமைந்த) பண்முறைசேர்த்து வாசித்துச் (ச ரம் அசரங்களாகிய) எவ்வகைப்பட்ட ஆன்மாக்களையு மகிழச்செய்வித்தார் ஏழிசையும் பணிகொண்ட நீலகண்டயாழ்ப்பாணர்=(குரல்முதலிய) ஏழிசை களையும் தம்வழித்தாய் நிற்கச்செய்த திருநீலகண்ட யாழ்ப்பாணர்—எ-று. ()

சிறியமறைக் களிறளித்த திருப்பதிக விசையாழி
னெறியிலிடும் பெரும்பாணர் பின்னுநீ ரருள்செய்யு
மறிவரிய திருப்பதிக விசையாழி லிட்டடியேன்
பிறிவின்றிச் சேவிக்கப் பெறவேண்டு மெனத்தொழுதார்.

(இ-ள்.) சிறியமறைக்களிறு அளித்ததிருப்பதிக இசையாழில் நெறியி லிடும் பெரும்பாணர்=சிறிய மறைப்போதமாகிய ஆளுடையபிள்ளையார் திரு வாய் மலர்ந்தருளிய திருப்பதிகங்களின் இசையை யாழிலேற்றி முறைப்படி வாசிக்கும் திருநீலகண்ட யாழ்ப்பாணர் ; பின்னும் நீர் அருள்செய்யும் அறிவ ரிய திருப்பதிகவிசை= (இப்பொழுது சுவாமிகளது திருவருளையடியேன்பெ ற்று அருளிய திருப்பதிகங்களை யாழிலிட்டுவாசித்தேன்) இன்னும் சுவாமிக ளருளிச்செய்யும் அறிதற்கரிய திருப்பதிகங்களி னிசையையும் ; யாழிலிட்டு அடியேன்பிறிவின்றிச் சேவிக்கப்பெறவேண்டுமெனத் தொழுதார்=யாழிலே ற்றி அடியேன் தேவரீரைப்பிரியாமல் சேவித்து ஒழுகுதலைப்பெறவேண்டுமெ ன்று வணங்கினார்—எ-று.

பெரும்பாணர் வணங்கினரெனக்கூட்டுக. (ாசம)

மற்றதற்குப் பிள்ளையார் மனமகிழ்வுற் றிசைந்தருளப்
பெற்றவர்தாந் தம்பிரா னருளிதுவே யெனப்பேணிச்
சொற்றமிழ்மா லையினிசைகள் சுருதியாழ் முறைதொடுத்தே
யற்றைநாட் போலென்று மகலாநண் புடனமர்ந்தார்.

Koviloor Digital Library

(இ-ள்.) மற்றதற்குப் பிள்ளையார் மனமகிழ்வுற்று இசைந்தருளப்பெற்றவர்தாம்=அவ்வேண்டுகோளுக்கு ஆளுடையபிள்ளையார்திருவுளமகிழ்ந்து அருள்செய்யப்பெற்ற திருநீலகண்டயாழ்ப்பாணர்; தம்பிரான் அருளிதுவே எனப்பேணி=(பிள்ளையார் திருவருள்செய்த இசைவாகிய) இதுசிவபிரானது திருவருளேயென்று அவ்வுடன்பாட்டை விரும்பி; சொற்றமிழ்மாலையின் இசைகள்சுருதியாழ் முறைதொடுத்து=பாடிய திருப்பதிகங்களின் இசைகளைச் சுருதியையுடைய யாழில்முறைமையாகத்தொடுத்து; அற்றைநாட்போலென்றும் அகலாநண்புடன் அமர்ந்தார்=அந்நாள்போல் எந்நாளும் நீங்காத நண்புடன் மகிழ்ந்திருந்தார்—எ-று. (௩௪௧)

சிரபுரத்தி லமர்ந்தருளுந் திருஞான சம்பந்தர்
பரவுதிருத் தில்லைநடம் பயில்வாரைப் பணிந்தேத்த
விரவியெழும் பெருங்காதல் வெள்ளத்தை யுள்ளத்திற்
றரவிசையுங் குறிப்பறியத் தவமுனிவர்க் கருள்செய்தார்.

(இ-ள்.) சிரபுரத்தில் அமர்ந்தருளுந் திருஞானசம்பந்தர்=சீகாழியிலெழுந்தருளியிருக்கின்ற திருஞானசம்பந்தப்பிள்ளையார்; பரவுதிருத்தில்லைநடம் பயில்வாரைப்பணிந்தேத்த=யாவராலும் துதித்தற்குரிய சிதம்பரத்தின்கண் ஆனந்த நடனஞ்செய்தருளும் நடேசப்பிரானை வணங்கித்துதிக்க; உள்ளத்தில் விரவி எழும்பெருங்காதல் வெள்ளத்தை=தமது திருவுள்ளத்தில்; கலந்து எழாநின்ற பெரிய ஆசையாகிய வெள்ளத்தை; தரவிசையுங் குறிப்பறியத் தவமுனிவர்க்கருள்செய்தார்=(அச்சிவபிரானது திருவருள்) நிகழ்விக்க அதற்குத் தாம் திருவுள்ளமிசைந்த குறிப்பினையறியும்படி தமதுதந்தையாராகிய சிவபாத இதயருக்கு அருளிச்செய்தார்—எ-று. (௩௪௨)

பிள்ளையா ரருள்செய்யப் பெருந்தவத்தாற் பெற்றெடுத்த
வள்ளலார் தாமுமுடன் செல்வதற்கு மனங்களிப்ப
வெள்ளிமால் வரையென்னத் திருத்தோணி வீற்றிருந்த
புள்ளிமா னுரியாரைத் தொழுதருளாற் புறப்பட்டார்.

(இ-ள்.) பிள்ளையார் அருள்செய்யப் பெருந்தவத்தால் பெற்றெடுத்த=ஆளுடையபிள்ளையார் (சிதம்பரத்திற்கெழுந்தருளுங் குறிப்பினை) தந்தையார்க்கருளிச்செய்ய பெரியதவத்தால் அவரைப்பெற்ற; வள்ளலார்தாமுமுடன் செல்வதற்கு மனங்களிப்ப=சிவபாத இதயரும் அப்பிள்ளையாருடன் செல்ல (வொருப்பட்டு) தமதுமனத்தில்களிப்படைய; வெள்ளிமால்வரையென்னத் திருத்தோணிவீற்றிருந்த=பெரியவெள்ளிமலைபோல் விளங்கித் திருத்தோணியிலெழுந்தருளிய; புள்ளிமான் உரியாரைத்தொழுது அருளால் புறப்பட்டார்=புள்ளியையுடையமான்தோலை உடையாகவுடுத்த தோணியப்பரைவணங்கி அவருடைய திருவருள்பெற்று திருத்தில்லைக்கெழுந்தருளினர்—எ-று. (௩௪௩)

Koviloor Digital Library

தாவில்யாழ்ப் பாணரொடுந் தாதையார் தம்மோடு
மேவியசி ரடியார்கள் புடைவரவெங் குருவேந்தர்
பூவின்மே லயன்போற்றும் புகலியினைக் கடந்துபோய்த்
தேவர்கடம் பெருந்தேவர் திருத்தில்லை வழிச்செல்வார்.

(இ-ள்.) வெங்குருவேந்தர் தாவில்யாழ்ப்பாணரொடும் தாதையார்தம்மோடும் மேவியசிர் அடியார்கள்புடைவர=சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார் கெடுதலில்லாத திருநீலகண்டயாழ்ப்பாணரோடும் தந்தையாராகிய சிவபாத இருதயரோடும் தம்மோடுடன்வருஞ்சிறந்த அடியார்கள்பக்கத்திற்சூழ்ந்துவர ; பூவின்மேல் அயன்போற்றும் புகலியினைக்கடந்துபோய்=தாமரைப்பூவில்வசிக்கும் பிரமனால்பூசிக்கப்பட்ட சீகாழியைக்கடந்து சென்றருளி ; தேவர்கள்தம்பெருந்தேவர் திருத்தில்லைவழிச்செல்வார்=(திருமால் பிரமன்முதலிய தேவர்களுக்கு அதிதேவராகிய நடேசப்பெருமானது திருத்தில்லையின் வழியேசெல்பவரானார்—எ-று. (௩சச)

வேறு.

நள்ளி ருட்கணின் றுடுவா றுறைபதி நடுவுகண் டனபோற்றி,
முள்ளி டைப்புற வெள்ளிதழ்க் கேதகை முகிழ்விரி மணஞ்சூழப்,
புள்ளு டைத்தடம் பழனமும் படுகரும் புடைகழிந் திடப்போந்து,
கொள்ளி டத்திரு நதிக்கரை யடைந்தனர் கவுணியர் குலதீபர்.

(இ-ள்.) நள்ளிருட்கண் நின்றுடுவார் உறைபதி நடுவுகண்டனபோற்றி=மகாசம்மாரகாலமாகிய நடுயாமத்து (தம்மோடுநிற்பார் யாருமின்றிப் பெருந்தேவியார்காண அம்மாமசானத்து) நிருத்தஞ்செய்தருளும் சிவபிரான் எழுந்தருளிய ஸ்தலங்கள் (சீகாழிக்குங்கொள்ளிடத் தென்கரைக்கும்) இடையிற்கண்ட திருக்குருகாவூர்முதலியவற்றைவணங்கி ; முள்ளிடைப் புறவெள்ளிதழ்க்கேதகை முகிழ்விரிமணஞ்சூழ=புறத்தில் இடையிடையே முட்களையுடைய வெள்ளியவிதழோடுகூடிய தாழையின்பூவரும்புவிரிந்து அதனால் நறுமணமெங்குஞ்சூழ ; புள்ளுடைத்தடம் பழனமும்படுகரும் புடைகழிந்திடப்போந்து=பறவைகளையுடைய அகன்றவயல்களும் நீர்நிலைகளும் வழியினிருமருங்கும் கழியச்சென்றருளி ; கொள்ளிடத்திரு நதிக்கரையடைந்தனர் கவுணியர் குலதீபர்=கொள்ளிடமென்னுந் திருநதியின்கரையை யடைந்தார் கவுணியர்கோத்திரத் தலைவராகிய ஆளுடையபிள்ளையார்—எ-று.

கவுணியர்குலதீபர் அடைந்தனரெனமுடிக்க. (௩சரு)

வண்டி னத்தொழு செழுமலர்ப் பிறங்கலு மணியுமா ரமுமுந்தித், தண்ட லைப்பல வளத்தொடும் வருபுன றுழ்ந்துசே வடிதாழந், தெண்டி ரைக்கடற் பவளமும் பணிலமுஞ் செழுமணித் திரண்முத்துங், கொண்டி ரட்டியுந் தோதமுங் கெதிர்கொளக் கொள்ளிடங் கடந்தேறி.

Koviloor Digital Library

(இ-ள்.) வண்டிரைத்தெழுசெழுமலர்ப் பிறங்கலுமணியும் ஆரமும் உந்தி=வண்டுகள் ஆரவாரித்துத் தேனுண்ணத்திரியும் செழுமையானபூக்களின் அடுக்கலையும் முத்துக்களையும் சந்தனத்தையும் வாரிக்கொண்டு; தண்டலைப்பலவளத்தொடு வருபுனல்தாழ்ந்து சேவடிதாழ=சோலையிலுள்ள பலவளங்களோடு வருகின்ற கொள்ளிடவெள்ளமானது அடங்கி பிள்ளையாரது திருவடிக்கிழ்தாழவும்; தெண்டிரைக்கடல் உந்து ஓதம் பவளமும் பணிலமும் செழுமணித்திரண்முத்தும்கொண்டு இரட்டி அங்கெதிர்கொளக்கொள்ளிடம் கடந்தேறி=தெள்ளிய அலைகளையுடையகடலினின்றும்வருகின்ற ஓதமானது பவளத்தையும் சங்குகளையும் இரத்தினங்களையும் முத்துக்களையும் வாரிக்கொண்டு அலைவழியே வீசி அங்கேதம்மையெதிர்கொள்ளவும் கொள்ளிட நதியைக்கடந்தேறி—எ-று. (௱௬௪)

பல்கு தொண்டர்தங் குழாத்தொடு முடன்வரும் பயின்மறை யவர்சூழச், செல்க திப்பயன் காண்பவர் போற்களி சிந்தைகூர் தரக்கண்டு, மல்கு தேவரோ முதலனைத் துயிர்களும் வணங்கவேண் டினவெல்லா, நல்கு தில்லைசூழ் திருவெல்லை பணிந்தனர் ஞானவா ரமுதுண்டார்.

(இ-ள்.) பல்குதொண்டர்தம்குழாத்தொடுமுடன்வரும் பயில்மறையவர்சூழ=நிறைந்த அடியார்கள் திருக்கூட்டங்களோடும் உடன்வரும் தம்மோடு பயின்ற மறையவர்சூழவும்; செல்கதிப்பயன் காண்பவர்போற்களி சிந்தைகூர்தரக்கண்டு=சிவகதிப்பேற்றைத் தமது திருக்கண்களால் காண்பவர்போலக் களிப்பு தமது திருவுள்ளத்திலோங்கப்பார்த்தருளி; மல்குதேவரே முதலனைத்துயிர்களும்வணங்க=நிறைந்த தேவர்முதல் எல்லாவுயிர்களும் நமஸ்கரிக்க; வேண்டினவெல்லாம் நல்குதில்லைசூழ் திருவெல்லைபணிந்தனர் ஞானவாரமுதுண்டார்=அடியார்கள்வேண்டியபொருள்களியாவையும் வேண்டியாங்கு அருள்செய்யும் திருத்தில்லையைச்சூழ்ந்த திருவெல்லையைவணங்கினர்—எ-று.

செங்க ணேற்றவர் தில்லையே நோக்கியித் திருந்துல கினிற்கெல்லா, மங்க லந்தரு மழவிளம் போதகம் வருமிரு மருங்கெங்குந், தங்கு புள்ளொலி வாழ்த்துரை யெடுத்துமுன் றுமறை மதுவாசப், பொங்கு செம்முகை கரங்குவித் தலர்முகங் காட்டின புனற்பொய்கை.

(இ-ள்.) செங்கண் ஏற்றவர் தில்லையேநோக்கி=சிவந்தகண்களையுடைய இடபத்தைவாகனமாகவுடைய நடேசப்பிரானெழுந்தருளிய திருத்தில்லையே நோக்கியருளி; இத்திருந்து உலகினிற்கெல்லாம்=இந்தத்திருத்தமான எல்லாவுலகங்களுக்கும்; மங்கலந்தரும் மழவிளம்போதகம் வருமிருமருங்கெங்கும்=மங்கலத்தைத்தந்தருளும் இளங்களிறுகிய ஆளுடையபிள்ளையா ரெழுந்தருளுகின்ற இரண்டுபக்கங்களிலும்; தங்குபுள்ளொலி வாழ்த்துரையெடுத்து=தங்கியிருக்கின்றபறவைகளின் ஒலியால் மங்கலவாழ்த்துகூறி; முன்றாமரைமது

Koviloor Digital Library

வாசப்போந்து செம்முகைகரங்குவித்து அலர்முகம்காட்டின புனற்பொய்கை=முன்னே தேன்சமழுகின்ற செந்தாமரையின் அரும்புகளாகிய கைகளைக்குவித்து அத்தாமரைமலர்களாகிய முகங்களை அலர்ந்துகாட்டின நீர்நிறைந்த தடாகங்கள்—எ-று. (௱௪௮)

கலவ மென்மயி லினங்களித் தழைத்திடக் கடிமணக் குளிர்கால் வந், துலவி முன்பணிந் தெதிர்கொளக் கிளர்ந்தெழூந் துடன்வருஞ் சுரும்பார்ப்ப, விலகு செந்தளி ரொளிநிறந் திகழ்தர விருகுழை புடையாட, மலர்மு கம்பொலிந் தசையமென் கொம்பர்நின் றுடுவ மலர்ச்சோலை.

(இ-ள்.) மலர்ச்சோலை=மலரையுடையசோலைகளில்; கலவமென்மயில் இனங்களித்து அழைத்திட=கலாபத்தையுடைய மிருதுவான மயிற்கூட்டங்கள் மகிழ்ந்து அழைக்காநிற்கவும்; கடிமணக் குளிர்கால்வந்து உலவிமுன் பணிந்து எதிர்கொள=வாசமிக்க குளிர்ந்த தென்றற்காற்று முன்னேவந்து உலாவி வணங்கி யெதிர் கொள்ளவும்; கிளர்ந்தெழுந்துடன்வரும் சுரும்பார்ப்ப=நெருங்கி மேலெழுந்து தென்றலோடுவரும் வண்டுகள் ஆரவாரிக்கவும்; இலகுசெந்தளிர் ஒளி நிறம் திகழ்தர இருகுழைபுடையாட=விளங்கும் சிவந்ததளிராகிய செவ்வொளிநிறம் விளங்கவும் பெரியகுழைகள் பக்கங்களிலாடவும்; மலர்முகம்பொலிந்து அசையமென்கொம்பர்நின்று ஆடுவமலர்ச்சோலை=மலராகிய முகம்பொலிவடைந்து அசையவும் மெல்லிய பூங்கொம்புகள் ஆடுவனவாம்—எ-று.

குழை-இலைக்கொத்து. (௱௪௯)

இழைந்த டங்கொங்கை யிமயமா மலைக்கொடி யின்னமு தெனஞானங், குழைந்த ளித்திட வமுதுசெய் தருளிய குருளையார் வரக்கண்டு, மழைந்த மந்தமா ருதத்தினு னறுமலர் வண்ணநுண் டுகடூவித், தழைந்த பொங்கெழின் முகஞ்செய்து வணங்கின தடம்பணை வயற்சாலி.

(இ-ள்.) இழைந்தடம் கொங்கை இமயமாமலைக்கொடி இன்னமுதெனஞானம்=ஆபரணமணிந்த உயர்ந்தஸ்தனங்களையுடைய பெரிய இமயமலைபெற்ற பெரியநாயகியார் இனிய அமுதமென்று சிவஞானத்தை; குழைந்து அளித்திட அமுதுசெய்தருளிய குருளையார்வரக்கண்டு=குழைத்தூட்டியருளத் திருவமுதுசெய்த இளஞ் சிங்கத்தையொத்த ஆளுடையபிள்ளையார் எழுந்தருளிவர அவரைப்பார்த்து; மழைந்தமந்தமாருதத்தினுல் நறுமலர்வண்ணநுண் டுகள்தூவி=குளிர்ந்த சிறுதென்றலால் நல்லவாசமுள்ளமலர்களையும் அழகிய நுண்ணிய பூந்துகளையும்தூவி; தழைந்தபொங்கெழில் முகஞ்செய்து வணங்கின தடம்பணை வயல்சாலி=தழைவான தோற்றத்தோடுகூடிய முகத்தை மலர்ந்துவணங்கின விசாலமான மருதநிலத்திற்பொருந்திய வயல்களிலுள்ள நெற்பயிர்கள்—எ-று. (௱௫௰)

Koviloor Digital Library

ஞால முய்ந்திட ஞானமுண் டவரெழுந் தருளுமந் நலங்கண்டு, சேல லம்புதண் புனற்றடம் படிந்தணை சீதமா ருதம்வீசச், சால வும்பல கண்பெறும் பயன்பெறுந் தன்மையிற் களிகூர்வ, போல சைந்திரு புடைமிடைந் தாடின புறம்பணை நறும்பூகம்.

(இ-ள்.) ஞாலம் உய்ந்திடஞானமுண்டவர் எழுந்தருளும் அந்நலங்கண்டு=உலகின்கணுள்ளார் உய்யும்பொருட்டுச் சிவஞானத்தை அமுதுசெய்தருளிய பிள்ளையார் எழுந்தருளும் அந்நலத்தைநோக்கி; சேலலம்பு தண்புனல் தடம்படிந்தணை சீதமாருதம்வீச=கெண்டைமீன்கள் கலக்குகின்ற சீதநீரையுடைய தடாகங்களில் படிந்துவருகின்ற குளிர்ந்த தென்றற்காற்று வீசவும்; சாலவும் பலகண்பெறும் பயன்பெறுந்தன்மையில்=மிகவும்பலகண்களைத் தாம்பெறுதலினால் ஆயபலனை அடையுந்தன்மையால்; களிகூர்வபோல் அசைந்து இருபுடை மிடைந்தாடின புறம்பணை நறும்பூகம்=களிப்புமிக்கனபோல் அசைந்து இருபக்கத்திலும்நெருங்கி ஆடினமருதநிலத்தின்கணுள்ள வயலின் புறத்தேநிற்கும் நல்லகமுருகள்—எ-று. (௩௫௧)

பவந்த விர்ப்பவர் தில்லைசூ ழெல்லையின் மறையவர் பயில்வேள்விச், சிவந்த ரும்பய னுடையவா குதிகளின் செழும்புகைப் பரப்பாலே, தவந்த ழைப்பவந் தருளிய பிள்ளையார் தாமணை வுறமுன்னே, நிவந்த நீலநுண் டுகில்விதா னித்தது போன்றது நெடுவானம்.

(இ-ள்.) பவந்தவிர்ப்பவர் தில்லைசூழ் எல்லையில் மறையவர்பயில்வேள்வி=தம்மையடைந்த அடியார்களது பிறவியை நீக்கியருளும் நடேசப்பெருமானது திருத்தில்லையைச்சூழ்ந்த எல்லையில் வாசஞ்செய்யும் அந்தணர்செய்கின்ற யாகத்தில்பெய்த; சிவந்தரும்பயனுடைய ஆகுதிகளின்செழும்புகைப் பரப்பாலே=நன்மைகளைத்தரும் பயன்களையுடைய நெய்முதலிய ஆகுதியிலுண்டாகும் செழுமைபொருந்திய புகையின்பரப்பினால்; தவம் தழைப்பவந்தருளியபிள்ளையார் தாம் அணைவுற=தவநெறிகள் தலையெடுப்பவந்து அவதரித்தருளிய பிள்ளையாரெழுந்தருளு நிமித்தம்; முன்னே நீலநுண் துகில்விதானித்ததுபோன்றது நெடுவானம்=பெரிய ஆகாயமானது முற்பட்டு உயர்ந்த நீலநிறமான நுண்ணியவஸ்திரத்தை விதானஞ்செய்தாற்போன்றது.

விதானம்-மேற்கட்டி. விதானஞ்செய்தல் விதானமாகக்கட்டுதல்—எ-று.

கரும்பு செந்நெல்பைங் கமுகொடு கலந்துயர் கழனியம் பணைநீங்கி, யரும்பு மென்மலர் தளிர்பல மூலமென் றனைத்தினு காமான, மருங்கி னந்தன வனம்பணிந் தணைந்தனர் மாடமா ளிகையோங்கி, நெருங்கு தில்லைசூழ் நெடுமதிற் றென்றிரு வாயினே ரணித்தாக.

(இ-ள்.) கரும்புசெந்நெல் பைங்கமுகொடுகலந்து உயர்கழனி அம்பணை நீங்கி=கரும்பும் செந்நெற்பயிரும் பசியகமுகமரங்களோடுங்கலந்து உயர்ந்த வயல்களோடுங்கூடிய மருதநிலத்தைநீங்கி; அரும்புமென்மலர்தளிர்பலமூல

Koviloor Digital Library

மென்று அனைத்தின் ஆகரமானமருங்கினந்தன வனம்பணிந்து அணைந்தனர்=முகைகளுமெல்லிய மலர்களும் தளிர்களும் பழங்களும் கந்தங்களும் என்று சொல்லப்பட்ட எல்லாப்பொருள்களுக்கும் பிறப்பிடமான தில்லையின்பக்கத்திலுள்ள திருநந்தனவனத்தைப்பணிந்து எழுந்தருளினர்; மாடமாளிகையோங்கி நெருங்குதில்லைசூழ் நெடுமதிற் றென் திருவாயில் நேர்அணித்தாக=மாடங்களு மாளிகைகளும் உயர்ந்து நெருங்கிய தில்லையைச்சூழ்ந்த நெடியமதிலின் தென்றிசைத் திருவாயிலினேரே சமீபமாக—எ-று. (௫௬௩)

பொங்கு கொங்கையிற் கறந்தமெய்ஞ் ஞானமாம் போனகம் பொற்குன்ற, மங்கை செங்கையா லூட்டவுண் டருளிய மதலையார் வந்தாரென், றங்கண் வாழ்பெருந் திருத்தில்லை யந்தண ரன்பர்க ளுடனீண்டி, யெங்கு மங்கல வணிமிக வலங்கரித் தெதிர்கொள வணைவார்கள்.

(இ-ள்.) பொங்குகொங்கையிற் கறந்த மெய்ஞ்ஞானமாம் போனகம்=பூரித்த தமதுகொங்கையினின்று கறந்த உண்மைஞானமாகிய திருவமுதினை; பொற்குன்றமங்கை செங்கையால் ஊட்ட உண்டருளிய மதலையார் வந்தார் என்று=இமயமலை பயந்த உமாதேவியார் தமது சிவந்ததிருக்கரங்களால் ஊட்ட அமுதுசெய்தருளிய பிள்ளையார் எழுந்தருளினரென்று; அங்கண்வாழ் பெருந்திருத்தில்லை அந்தணர் அன்பர்கள் உடன் ஈண்டி=அவ்விடத்து வாழ்கின்ற பெருமைபொருந்திய தில்லைமூவாயிரவரொன்றும் மறையவர்கள் அடியார்களோடுகூடி; எங்குமங்கல அணிமிக அலங்கரித்து எதிர்கொள அணைவார்கள்=எவ்விடங்களிலு மங்கலகரமான அழகுமிக அலங்காரஞ்செய்து பிள்ளையாரை யெதிர்கொள்ளவருபவர்களானார்கள்—எ-று. (௫௬௪)

வேத நாதமு மங்கல முழக்கமும் விசும்பிடை நிறைந்தோங்கச், சீத வாசநீர் நிறைகுடந் தீபங்க டிசையெலா நிறைந்தாரச், சோதி மாமணி வாயிலின் புறஞ்சென்று சோபன வாக்கமுஞ்சொல்லிக், கோதி லாதவர் ஞானசம் பந்தரை யெதிர்கொண்டு கொடுபுக்கார்.

(இ-ள்.) வேதநாதமு மங்கலமுழக்கமும் விசும்பிடைநிறைந்து ஓங்க=வேதவோசையும் மங்கலவாழ்த்தொலியும் விண்ணுலகத்தில் நிறைந்து ஓங்கவும்; சீதவாச நீர்நிறைகுடம் தீபங்கள் திசையெல்லாம் நிறைந்து ஆர=குளிர்ந்த நறுமணங்கமழுஞ் சலத்தை நிறைத்த கும்பங்களுந் தீபங்களும் திக்குகளெல்லாம் நிறைந்திருக்கவும்; சோதிமாமணி வாயிலின் புறஞ்சென்று சோபன ஆக்கமுஞ்சொல்லி=ஒளியையுடைய பெரிய இரத்தினங்களழுத்திய தென்மதில் திருவாயிலின் புறம்பேசென்று மங்கலகரமான ஆசீர்வசனங்களைச் சொல்லி; கோதிலாதவர் ஞானசம்பந்தரை எதிர்கொண்டு கொடுபுக்கார்=குற்றமில்லாத அத்தில்லைவாழந்தணர்கள் ஆளுடையபிள்ளையாரை எதிர்கொண்டழைத்துச்சென்றார்கள்—எ-று.

கோதிலாரிய தில்லைமூவாயிரவர் கொண்டுபுக்காரெனமுடிக்க. (௫௬௫)

Koviloor Digital Library

செல்வ மல்கிய தில்லைமூ தூரினிற் றென்றிசைத் திருவாயி, லெல்லை நீங்கியுள் புகுந்திரு மருங்குநின் றெடுக்குமேத் தொலிசூழ, மல்லலாவண மறுகிடைக் கழிந்துபோய் மறையவர் நிறைவாழ்க்கைத், தொல்லை மாளிகை நிரைத்திரு வீதியைத் தொழுதணைந் தனர்தூயோர்.

(இ-ள்) செல்வமல்கிய தில்லைமூதூரினில் தென்றிசைத் திருவாயில்= செல்வம்நிறைந்த திருத்தில்லையாகிய பழைய திருப்பதியின் தென்றிசைக்கணுள்ள திருவாயிலின்; எல்லைநீங்கி உள்புகுந்து இருமருங்குநின்று எடுக்கும் ஏத்தொலிசூழ=எல்லைநீங்கி உள்ளேபுகுந்து இருபக்கங்களினும் வேதியர்முதலோர்நின்று கூறும் வாழ்த்தொலிசூழவும் ; மல்லல் ஆவணமறுகிடை கழிந்துபோய்=வளங்களையுடைய திரு ஆவணவீதியை நீங்கிச்சென்று ; மறையவர்நிறைவாழ்க்கைத்தொல்லை மாளிகைநிரைத் திருவீதியைத் தொழுதணைந்தனர்தூயோர்=தில்லைமூவாயிரவர் நிறைந்து வாழ்தலைச்செய்யும் பழைய திருமாளிகைப்பத்தியோடுகூடிய திருவீதியை ஆளுடைய பிள்ளையார் வணங்கியெழுந்தருளினர்—எ-று.

ஆவணவீதியாவது திருக்கோபுரவாயிலின் நேரிலிருக்கும் நெடுந்தெரு.

மலர்ந்த பேரொளி குளிர்தரச் சிவமணங் கமழ்ந்துவான் றுகண் மாறிச், சிலம்ப லம்புசே வடியவர் பயில்வுறுஞ் செம்மையாற் றிருத் தொண்டு, கலந்த வன்பர்தஞ் சிந்தையிற் றிகழ்திரு வீதிகண் களிசெய்யப், பலன்கொண் மைந்தனு செழுநிலைக் கோபுரம் பணிந்தெழுந் தனர்போற்றி.

(இ-ள்.) மலர்ந்தபேரொளி குளிர்தரச்சிவமணம்கமழ்ந்து வான்துகள் மாறி=தன்னிடத்துண்டான பேரொளியானது குளிர்ச்சியைத்தர சிவமணம் வீசிக் குற்றத்தினின்று நீங்கியும் ; சிலம்பு அலம்பு சேவடியவர்பயில் உறும் செம்மையால்=சிலம்புகளொலிக்குஞ் சிவந்த திருவடியையுடைய நடேசப்பெருமான் பொருந்தியிருக்குந்தன்மையினாலும் ; திருத்தொண்டுகலந்த அன்பர்தம்சிந்தையில் திகழ்திருவீதிகண்களிசெய்ய = திருத்தொண்டுடன்கூடிய அடியார்களது இதயத்தையொக்கும் திருவீதிகளானவை தமது திருக்கண்களுக்கு பேரானந்தத்தை விளைக்க ; பலன்கொள்மைந்தனுர் எழுநிலைக்கோபுரம் பணிந்தெழுந்தனர்போற்றி = உண்மைப்பயனைக்கொண்ட ஆளுடையபிள்ளையார் எழுநிலைக்கோபுரத்தைத் துதித்துவணங்கியெழுந்தார்—எ-று.

சிலேடைகொள்ளுங்கால் சிலம்பலம்பு சேவடியவர்பயில்வுறல் அடியவர் சிந்தைக்கும் வீதிக்கும் ஒக்குமாதலின் அடியர் சிந்தைபரத்தில் அவருள்ளத்தின்கண்மலர்ந்த ஞான ஒளிகுளிர்ச்சியைத்தருதலும் சிவமணம் வீசுதலும் ஆணவமுதலிய மும்மலங்களினீக்கமும், வீதிபரத்தில், சந்திரகாந்தமாளிகைவீசும் பேரொளிகுளிர்ச்சிசெய்தலும் மணங்கமழ்தலும் சிற்பநூலிற்கூறும் இலக்கணம் அமைதலில் குற்றமின்றாதலும்கொள்க. (௩௫௭)

Koviloor Digital Library

நீடு நிணிலைக் கோபுரத் துள்புக்கு நிலவிய திருமுன்றின், மாடு செம்பொனின் மாளிகை வலங்கொண்டு வானுற வளர்திங்கள், சூடு கின்றபே ரம்பலந் தொழுதுபோந் தருமறை தொடர்ந்தேத்த, வாடு கின்றவர் முன்புற வணைந்தன ரணிகிளர் மணிவாயில்.

(இ-ள்.) நீடுநிணிலைக்கோபுரத்துள்புக்கு=உயர்ந்துநீண்ட எழுநிலைகளையுடைய திருக்கோபுரத்தினுள்ளே புகுந்தருளி; நிலவியதிருமுன்றின்மாடுசெம்பொனின் மாளிகைவலங்கொண்டு=விளங்காநின்ற திருமுற்றத்தின் அருகே செம்பொன்னாலாய திருமாளிகையைப்பிரதட்சணம்செய்து; வானுறவளர்திங்கள் சூடுகின்றபேரம்பலம் தொழுதுபோந்து=விண்ணுலகளவும் உயர்ந்து வளர்கின்ற இளம்பிறையைச்சூடிய பேரம்பலமென்னும் சபையைவணங்கிச் சென்றருளி; அருமறைதொடர்ந்தேத்த ஆடுகின்றவர் முன்புறவணைந்தனர் அணிகிளர்மணிவாயில்=அரிடவேதங்கள் பின்றொடர்ந்து துதிக்க ஆனந்தநடனஞ்செய்யுஞ் சபாநாயகர் திருமுன்னே அழகாகவிளங்கும் திருவணுக்கனுந் திருவாயிலையடைந்தருளினார்—எ-று. (௱௫அ)

நந்தி யெம்பிரான் முதற்கண நாதர்க ணலங்கொள்பன் முறை கூட, வந்த மில்லவ ரணுகிமுன் றொழுதிரு வணுக்கனுந் திருவாயில், சிந்தை யார்வமும் பெருகிடச் சென்னியிற் சிறுச்செய்ய கையேற, வுய்ந்து வாழ்திரு நயனங்கள் களிகொள்ள வுருகுமன் பொடுபுக்கார்.

(இ-ள்.) நந்தியெம்பிரான் முதல்கணநாதர்கள் நலங்கொள்பன்முறை கூட=எமதுபிரானாகியதிருநந்தி தேவர் முதலியசிவகணநாதர்கள் நன்மைமிக்கபலவரிசைகளாய்கூடிநிற்கவும்; அந்தமில்லவர் அணுகிமுன்தொழுதிரு அணுக்கனும்திருவாயில்=திருமால்பிரமன்முதலியதேவர்களு முனிவர்களுமாகிய எண்ணிறந்தவர்கள் கிட்டிமுன்னின்றுவணங்கும் திருவணுக்கனென்னுந்திருவாயிலில்; சிந்தையார்வமும்பெருகிடச் சென்னியில் சிறுச்செய்யகையேற=மனதிலப்பிரியம் அதிகரிக்கசிரசில்சிறிய சிவந்ததிருக்கரங்கள் குவிந்துஏறவும்; உய்ந்தவாழ்திருநயனங்கள்களிகொள உருகும்அன்பொடுபுக்கார்=சிவபிரானைத்தரிசித்து அதனால்உய்ந்தவாழும்திருவிழிகள் களிப்படையவும்மனமிளக்குருகும் அன்பினுடன்புகுந்தருளினார்—எ-று.

அணுக்கனுந்திருவாயில் என்றது தன்னைஅடைந்தாரை சிவபிரான்சமீபனுகச்செய்யும்வாயில் அதனால்அதுஅணுக்கன்திருவாயிலென்றும்- (௱௫௯)

அன்ன லார்தமக் களித்தமெய்ஞ் ஞானமே யானவம் பலமுந்தம், முன்னணி றைந்தஞா னத்தெழு மானந்த வொருபெருந் தனிக்கூத்துங், கன்னின் முன்புறக் கண்டிடும் பிட்டெழுங் களிப்பொடுங் கடற்காழிப், புன்னணி யக்கொழுந் தனையவர் போற்றுவார் புனிதநா டியபொற்பு.

Koviloor Digital Library

(இ-ள்) அண்ணலார்தமக்களித்த மெய்ஞ்ஞானமே ஆன அம்பலமும்= சிவபிரான் தமக்கருளிய சிவஞானரூபமேயானதிருவம்பலமும்; தம் உள்நிறைந்தஞானத்து எழும் ஆனந்தவொருபெரும் தனிக்கூத்தும்=தமது நின்மல கேவல உணர்வில் உதித்து நிறைந்த திருவருள்ஞானத்தினால் உண்டாகின்ற சிவானந்தரூபமேயான ஒப்பில்லாத திருக்கூத்தையும்; கண்ணில் முன்புறக் கண்டு கும்பிட்டு=(தமது திருவருள் ஞானக்கண்ணினால் பிரத்தியக்ஷமாய் வேறறக்கண்டாற்போல) ஊனக்கண்ணின் சம்யோகத்தாலாகும் பிரத்தியக்ஷத்தில் தம்முன்னே பொருந்தத் தரிசித்து கும்பிட்டு; எழுங்களிப்போடும் கடற்காழி புண்ணியக்கொழுந்தனையவர் போற்றுவார் புனிதராடிய பொற்பு=உட்புறம் பென்னாது வேறறவுதிக்கும் பேரானந்தத்தோடுங் கடல் சூழ்ந்த சீகாழியில் அவதரித்த சிவபுண்ணியமாகிய தருவின்கொழுந்து போல்பவராகிய ஆளுடைய பிள்ளையார் சிவபிரானது ஆனந்தத்திருக்கூத்தின் பொலிவைத் துதிப்பாராயினார்—எ-று.

சிவஞானமும் சிவஞானத்தாலாகிய சிவானந்தமுமே திருவம்பலமும் நடேசப்பெருமானது திருக்கூத்துமாம். அவற்றொடு வேற்றுமையின்றென்பார் ஞானமேயான அம்பலமெனத்தேற்றேகாரங்கொடுத்தும், ஞானத்தெழும் ஆனந்த உருவமார்திருக்கூத்தென்றுங் கூறினர். அது அவ்வாறாதல் "உணர்வில் நேர்பெறவரும் சிவபோகத்தை" என்னும் அடுத்ததிருவிருத்தத்தாலும், "தானதுவாய் அன்றானன் தானதுவாய்த்தோன்றானே, தானதுவாய்க்காணுந்தவர்க்கு" என்னுஞ்சிவஞானபோதத்தாலுங்காண்க.

உணர்வி னேர்பெற வருஞ்சிவ போகத்தை யொழிவின்றி யுருவின்க, ணணையு மைம்பொறி யளவினு மெளிவர வருளினை யெனப்போற்றி, யிணையில் வண்பெருங் கருணையே யேத்திமுன் னெடுத்த சொற் பதிகத்திற், புணரு மின்னிசை பாடினராடினர் பொழிந்தனர் விழிமாரி.

(இ-ள்) உணர்வினேர்பெற வருஞ் சிவபோகத்தை = (மெய்யுணர்ச்சிவாயிலாய்) நின்மல கேவல வுணர்விற்பொருந்தவரும் சிவபோகத்தை; ஒழிவின்றி யுருவின்கண் அணையும் ஐம்பொறியளவினும்எளியவர் அருளினையெனப்போற்றி=நீக்கமின்றி உடம்பின்கண் பொருந்திய கண்முதலிய ஐம்பொறிப் பிரமாணத்துக்கும் எளிதாக வுணரும்வண்ணம் அருள்செய்தனையென்று துதித்து; இணையில்வண் பெருங்கருணையே ஏத்தி=ஒப்பில்லாத வள்ளற்றன்மையையுடைய நடேசரது பேரருளையே துதித்து; முன்எடுத்தசொற்பதிகத்தில், புணரும் இன்னிசைபாடினர் ஆடினர் பொழிந்தனர் விழிமாரி=முன் எடுத்தருளிய திருப்பதிகத்தைப்பொருந்திய இனிய இசையோடு பாடினார் திருக்கண்களினின்றும் ஆனந்தக்கண்ணீர் சொரிந்தருளினார்—எ-று.

சிவபோகம் அறிவில் ஒற்றித்து உடனாய்வருதலினுணர்வினேர்பெறவருமென்றும், சககாரியத்தி லொருகாரியமாகிய சிவபோகத்தின் பின்வருதலிற்

Koviloor Digital Library

சிவபோகமென்றும், அச்சிவபோக மூனக்கண்ணூற் றரிசிக்குந்தோறு முருகி வளர்தலின் ஒழிவின்றியென்றுங் கூறினர். அது ஞானக்கண்ணிற்குமவ்வா முதல்முன்விருத்தத்திறுரையில் "கண்ணின்முன்னுறக்கண்டு" என்புழிஉரைத் தாம். ஒழிவின்றியைம்பொறியளவிறுமெளிவரனெனக்கூட்டுக. புணருமின் னிசைபாடினராடினர் என்றதனால், அப்பொருளடங்கியதிருப்பதிகமொன்றை முன்னருளிச்செய்தன ரென்பது போந்தவாறுணர்க. (கசுக)

வே று.

ஊழிமு தல்வர்க் குரியமைத் தொழிற்சிறப்பால்
வாழ்திருத் தில்லைவா முந்தணரை முன்வைத்தே
யேழிசையு மோங்க வெடுத்தா ரெமையாளுங்
காழியர்தங் காவலனார் கற்றாங் கெரியோம்பி.

(இ-ள்.) ஊழிமுதல்வர்க்குரிமைத்தொழிற் சிறப்பால் வாழிதிருத்தி ல்லை வாழ் அந்தணரைமுன்வைத்தே=எல்லாப்பொருள்களும் அழியும் ஊழி க்காலத்திலும் தாம் அழியாது நிற்கு முதல்வராய நடேசப்பெருமானுக்கு ரிய பூசைக்கமைந்த இன்றியமையாச்சிறப்பினவாய பணிவிடைகளைச்செய் யுஞ்சிறப்பால் திருத்தில்லையின்கண்வாழுந்தில்லைமூவாயிரவரைப் பதிகமுதலி ரண்டடியிற்சிறப்பித்து; ஏழிசையுமோங்க எடுத்தார் எமையாளும்காழியர்தம் காவலனார் கற்றாங்கெரியோம்பி=எம்மை அடிமைகொண்டருளுஞ் சீகாழிக்கு த்தலைவராகிய ஆளுடையபிள்ளையார் கற்றுங்கெரியோம்பி யென்னுந்திருப்ப திகத்தை, ஏழிசைகளும் நிரம்பும்படி பாடியருளினார்—எ-று. (கசுஉ)

கோயில்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார்வாழ் தில்லைச் சிற்றம் பலமேய
முற்றாவெண் டிங்கண் முதல்வன் பாதமே
பற்றாநின் றாரைப் பற்றா பாவமே.

பறப்பை படுத்தெங்கும் பசுவேட் டெரியோம்புஞ்
சிறப்பர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
பிறப்பில் பெருமானைப் பின்றாழ் சடையானை
மறப்பிலார் கண்டீர் மைய றீர்வாரே.

ஞாலத் துயர்காழி ஞான சம்பந்தன்
சீலத்தார் கொள்கைச் சிற்றம் பலமேய
சூலப்படையானைச் சொன்ன தமிழ்மாலை
கோலத்தாற் பாட வல்லார் நல்லாரே.

திருச்சிற்றம்பலம்.

அம்பிகைபர் சபாநாதர் தேவியார் சிவகாமியம்மை.

Koviloor Digital Library

பண்ணார் பதிகத் திருக்கடைக்காப் புப்பரவி
யுண்ணாடு மென்பு முயிருங் கரைந்துருக்கும்
விண்ணா யகன்கூத்து வெள்ள வெளி யேதிளைத்துக்
கண்ணா ரமுதுண்டார் காலம் பெறவழுதார்.

(இ-ள்.) பண்ணார்பதிகத் திருக்கடைக்காப்புப்பரவி=பண்ணமைந்த அப் பதிகத்தின் திருக்கடைக்காப்பையும் அருளி; உண்ணாடும் என்பும் உயிருங்கரைந்து உருக்கும் விண்ணாயகன் கூத்து=உள்ளேயமைந்த எலும்பு முயிருங் கரைந்துருகச்செய்யுந் தேவர்க்கதிபராகிய நடேசரது ஆனந்தத் திருக்கூத்தினை; வெள்ளவெளியே திளைத்துக் கண்ணாரமுதுண்டார் காலம் பெறவழுதார்=விராட்டினது இதயாகாசமாகிய திருவம்பலத்தில் தரிசித்துத் தமதுதிருக்கண்களால் நிறைந்த ஆனந்தவமிர்தத்தை யுண்டருளினாராகிய திருஞானசம்பந்தர் முன்பரிபாககாலம்வந்த காரணத்தால் அழுதுசிவஞான வமுதினையுண்டவர்—எ-று. (கசுரு)

முன்மா லயனறியா மூர்த்தியார் முன்னின்று
சொன்மாலை யாற்கால மெல்லாந் துதித்திறைஞ்சிப்
பன்மா மறைவெள்ளஞ் சூழ்ந்து பரவுகின்ற
பொன்மா ளிகையைவலங் கொண்டு புறம்போந்தார்.

(இ-ள்.) முன்மாலயன் அறியாமூர்த்தியார் முன்னின்று=முற்காலத்துத் திருமாலும் பிரமனும் வராகரூபமாயும் அன்னரூபமாயும் இடந்தும் பறந்தும் அடியையும் முடியையுந் தேடியறியாத நடேசப்பெருமானது திருமுன்னே நின்று; சொன்மாலையால் காலமெல்லாந் துதித்திறைஞ்சி=திருப்பதிக மாலையால் பூசைக்குரிய காலங்கள்தோறும் துதித்துவணங்கி; பன்மா மறைவெள்ளம் சூழ்ந்துபரவுகின்ற=பெருமைபொருந்திய எல்லாவேதங்களுஞ் சூழ்ந்து இடைவிடாது துதிக்கின்ற; பொன்மாளிகையை வலங்கொண்டு புறம்போந்தார்=கனகசபையைப் பிரதட்சணஞ்செய்துகொண்டு புறம்பேயெழுந்தருளினார்—எ-று. (கசுசு)

செல்வத் திருமுன்றிற் றாழ்ந்தெழுந்து தேவர்குழா
மல்குந் திருவாயில் வந்திறைஞ்சி மாதவங்க
ணல்குந் திருவீதி நான்குந் தொழுதங்கண்
அல்குந் திறமஞ்சு வார்சண்பை யாண்டகையார்.

(இ-ள்.) செல்வத்திருமுன்றில் தாழ்ந்தெழுந்து=செல்வம்நிறைந்த திருமுற்றத்திற் பணிந்தெழுந்து; தேவர்குழாமல்கு திருவாயில்வந்திறைஞ்சி=திருமால்முதலிய தேவர்கூட்டங்கள்நிறைந்த தெற்கின்கணுள்ள திருவணுக்கன் திருவாயிலைவணங்கி; மாதவங்கள் நல்குந் திருவீதி நான்குந்தொழுது=மிக்கதவங்களை அடைந்தார்க்கருளும் நான்குதிருவீதிகளையும் வணங்கி; அங்கண் அல்குந்திறமஞ்சுவார் சண்பை ஆண்டகையார்=அத்தலத்து வசித்தருளுதற்கு ஆளுடையபிள்ளையார் அஞ்சுவாராயினார்—எ-று (கசுரு)

Koviloor Digital Library

செய்ய சடையார் திருவேட் களஞ்சென்று
கைதொழுது சொற்பதிகம் பாடிக் கழுமலக்கோன்
வைகி யருளுமிட மங்காக மன்றுடும்
ஐயன் றிருக்கூத்துக் கும்பிட் டணைவுறுநாள்.

(இ-ள்.) கழுமலக்கோன்=சீகாழித்தலைவராகிய அவ்வாளுடைய பிள்ளையார்; செய்யசடையார் திருவேட்களஞ்சென்று=சிவந்த சடையையுடையபாசுபதேசுவரரது திருவேட்களமென்னுந் தலத்தையடைந்து; கைதொழுது சொற்பதிகம்பாடி=கைகூப்பிவணங்கிச் சொல்நிறைந்த திருப்பதிகம் பாடியருளி; வைகியருளுமிடம் அங்காக=தாம் இருந்தருளுமிடம் அத்தலமாகக் கொண்டு; மன்றுடும் ஐயன் திருக்கூத்துக்கும்பிட்டு அணைவுறுநாள்=கனகசபையில் ஆனந்தத்தாண்டவம்புரிந்தருளும் நடேசப்பெருமானது திருநடனத்தை நாடோறும்வணங்கி வருநாளில்—எ-று. (கசுசு)

திருவேட்களம்-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

அந்தமு மாதியு மாகியவண்ண லாரழ லங்கை யமர்ந்திலங்க, மந்த முழவ மியம்ப மலைமகள் காண நின்றுடிச், சந்த மிலங்கு நகுதலை கங்கை தண்மதி யம்மய லேததும்ப, வெந்தவெண் ணீறுமெய் பூசும்வேட்கள நன்ன கராரே.

விண்ணியன் மாடம் விளங்கொளி வீதி வெண்கொடி யெங்கும் விரிந்திலங்க, நண்ணிய சீரவர் காழி நற்றமிழ் ஞான சம்பந்தன், பெண்ணிநல் லாளொரு பாக மமர்ந்து பேணிய வேட்கள மேன்மொழிந்த, பண்ணியல் பாடல்வல் லார்கள் பழியொடு பாவ மிலாரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - பாசுபதேசுவரர். தேவியார்-நல்லநாயகியம்மை.

கைம்மான் மறியார் கழிப்பாலை யுள்ளணைந்து
மெய்ம்மாலைச் சொற்பதிகம் பாடி விரைக்கொன்றைச்
செம்மாலை வேணித் திருவுச்சி மேவியுறை
யம்மானைக் கும்பிட் டருந்தமிழும் பாடினார்.

(இ-ள்.) கைம்மான்மறியார் கழிப்பாலையுள்ளணைந்து=திருக்கரத்தில்மான்கன்றையேந்திய பரம்வண்ணநாதர் எழுந்தருளிய திருக்கழிப்பாலை யென்னுந் தலத்தையடைந்தருளி; மெய்ம்மாலை சொற்பதிகம்பாடி=மெய்நிறைந்த சொல்லாகிய திருப்பதிகமாலையைத் திருவாய்மலர்ந்தருளி; விரைக்கொன்றை

Koviloor Digital Library

ச்செம்மாலை வேணித்திருவுச்சி மேவியுறை அம்மானைக்கும்பிட்டு அருந்தமிழும்பாடினார்=வாசனைபொருந்திய கொன்றைமலராலாகியமாலையைச்சிவந்த சடைமுடியில் தரித்த திருநெல்வாயிலில் திருவுச்சியென்னும் ஆலயத்திலெழுந்தருளிய உச்சேசரைத்தொழுது அரிய திருப்பதிகத்தையும் பாடியருளினார்—எ-று. (கசுஎ)

திருக்கழிப்பாலைப்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

புனலா டியபுன் சடையா யரணம்
மனலா கவிழித் தவனே யழகார்
கனலா டலினாய் கழிப்பா லையுளா
யுனவார் கழல்கை தொழுதுள் குதுமே.

கழியார் பதிகா வலனைப் புகலிப்
பழியா மறைஞா னசம்பந் தன்சொல்
வழிபா டிவைகொண் டடிவாழ்த் தவலார்
கெழியா ரிமையோ ரொடுகே டிலரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-பால்வண்ணநாதர். தேவியார்-வேதநாயகி.

திருப்பதிகம்—அ.

பாடும் பதிகமிசை யாழ்ப்பா ணரும்பயிற்றி
நாடுஞ் சிறப்பெய்த நாளுநடம் போற்றுவார்
நீடுந் திருத்தில்லை யந்தணர்க ணீண்மன்று
ளாடுங் கழற்கணுக்க ராம்பே றதிசயிப்பார்.

(இ-ள்.) பாடும்பதிக விசையாழ்ப்பாணரும் பயிற்றிநாடுஞ்சிறப்பெய்த=தாம் அருளிச்செய்கின்ற திருப்பதிகங்களி னிசையைத் திருநீலகண்ட யாழ்ப்பாணரும் யாழினிடத்துச் சேர்த்துவாசித்து யாவராலும் துதிக்கத்தக்க சிறப்பினையடைய; நாளும்நடம்போற்றுவார்=நாடோறுந் திருநடனத்தைத் துதிக்குங்கருத்துடைய பிள்ளையார்; நீடுந்திருத்தில்லை அந்தணர்கள்=செல்வமிகுந்த தில்லைவாழந்தணர்கள்; நீள்மன்றுளாடுங் கழற்கணுக்கராம்பேறு அதிசயிப்பார்=உயர்ந்தகனகசபையின்கண் ஆடியருளும் குஞ்சிதபாதத்திற்குத் திருவணுக்கராயிருக்கும் பேற்றினைத் திருவுளத்திற்கருதி அதிசயமடைவாராயினார்—எ-று. (கசுஅ)

ஆங்கவர்தஞ் சீலத் தளவின் மையுநினைந்தே
யோங்கி யெழுங்காத லொழியாத வுள்ளத்தார்
தேங்கமழுஞ் சோலைத் திருவேட் களங்கடந்து
பூங்கிடங்கு சூழ்புலியூர்ப் புக்கணையும் போழ்தின்கண்.

Koviloor Digital Library

(இ-ள்.) ஆங்கவர்தஞ் சீலத்தளவின்மையும் நினைந்து=அங்குவசிக்கும் அத்தில்லைவாழந்தணர்களது ஒழுக்கமிகுதியையுங்கருதி; ஓங்கியெழுங்காதல் ஒழியாதவுள்ளத்தார்=மிக்கெழுகின்றபெருவிருப்பானது நீங்காதவுள்ளத்தை யுடைய ஆளுடையபிள்ளையார்; தேன்கமழுஞ்சோலைத் திருவேட்களங்கடந்து =தேனானது கமழ்கின்றசோலையினையுடைய திருவேட்களத்தினின்றும்நீங்கி; பூங்கிடங்குசூழ் புலியூர்புக்கணையும் போழ்தின்கண்=மலர்கணிறைந்த அகழ்சூழ்ந்தசிதம்பரத்தை அடைந்தருளுங்காலத்து—எ-று (௧௬௧)

அண்டத் திறைவ ரருளா லணிதில்லை
முண்டத் திருநீற்று மூவா யிரவர்களுந்
தொண்டத் தகைமைக் கணநாத ராய்த்தோன்றக்
கண்டப் பரிசுபெரும் பாணர்க்குங் காட்டினார்.

(இ-ள்.) அண்டத்திறைவர் அருளால் அணிதில்லை முண்டத் திருநீற்றுமூவாயிரவர்களும் = அண்டங்களுக்கெல்லாம் முதல்வராகிய சிவபிரானாரது திருவருளினால் அழகிய தில்லையின்கண் வாழுந் திருநீற்றுப் புண்டரமணிந்த தில்லைவாழந்தணர்கள் யாவரும்; தொண்டத்தகைமைக்கணநாதராய்த்தோன்றக்கண்டு=தொண்டின் தன்மைபூண்டொழுகுஞ் சிவகணநாதராய்க் காணவதனைப்பார்த்தருளி; அப்பரிசு பெரும்பாணர்க்குங்காட்டினார்=அவர் அத்தன்மையாதலைத் திருநீலகண்ட பெரும்பாணர்க்குங் காட்டியருளினார்—எ-று.

செல்வம் பிரிவறியாத் தில்லைவா ழந்தணரு
மெல்லையில்சீர்ச் சண்பை யிளவே றெழுந்தருளி
யொல்லை யிறைஞ்சாமுன் றாமு முடனிறைஞ்சி
மல்ல லணிவீதி மருங்கணைய வந்தார்கள்.

(இ-ள்.) செல்வம்பிரிவறியாத் தில்லைவாழந்தணரும்=திருவருட்செல்வத்தினின்றும்நீங்காத தில்லைமூவாயிரவர்களும்; எல்லையில்சீர்ச் சண்பையிளவேறு எழுந்தருளி=அளவுபடாத சிறப்பினையுடைய சீகாழியில் அவதரித்த இளஞ்சிங்கம்போலும் ஆளுடையபிள்ளையா ரெழுந்தருளி; ஒல்லையிறைஞ்சா முன்றாமும் உடனிறைஞ்சி = விரைந்து வணங்குதற்குமுன் தாங்களுமுடனேவணங்கி; மல்லல் அணிவீதிமருங்கு அணையவந்தார்கள்=வளப்பமிக்க அழகியதிருவீதியின்கண் பிள்ளையாரது இருமருங்குஞ்சூழவந்தார்கள்—எ-று.

பொங்கி யெழுங்காதல் புலனாகப் பூசுரர்தஞ்
சிங்க மனையார் திருமுடியின் மேற்குவித்துப்
பங்கயத்தின் செவ்வி பழித்து வளப்போங்குஞ்
செங்கையொடுஞ் சென்று திருவாயி லுட்புக்கார்.

(இ-ள்.) பொங்கியெழுங்காதல் புலனாகப் பூசுரர்தம் சிங்கமனையார்= மிக்கெழுகின்ற விருப்பமே தம்மைச் சிவபிரானை அடைவிக்கும் வாயிலாகப் பிராமணர்குலத்துக்குத் தலைமையான சிங்கத்தையொத்த ஆளுடையபிள்ளை

Koviloor Digital Library

யார்; திருமுடியின்மேற்குவித்துப் பங்கயத்தின் செவ்விபழித்து வனப்பு ஒங்கும்=தமது திருமுடியின்மேற் குவிக்கப்பட்டுத் தாமரையினது பொலிவை இகழ்ந்து அழகுவாய்ந்த; செங்கையொடுஞ்சென்று திருவாயில் உட்புக்கார்=திருக்கரங்களோடு மெழுந்தருளித் திருக்கோபுரத்தின் திருவாயிலினுள்ளே புகுந்தருளினர்—எ-று. (கஎஉ)

ஒன்றிய சிந்தை யுருக வுயர்மேருக்
குன்றனைய பேரம் பலமருங்கு கும்பிட்டு
மன்று ணிறைந்தாடு மாணிக்கக் கூத்தரெதிர்
சென்றணைந்து தாழ்ந்தார் திருக்களிற் றுப்படிக்கீழ்.

(இ-ள்) ஒன்றியசிந்தையுருக உயர்மேருக்குன்று அனைய பேரம்பல மருங்கு கும்பிட்டு=ஒருப்பட்ட தமது திருவுள்ளம் உருகும்படி உயர்ந்த மேருமலையையொத்த பேரம்பலத்தின்கண் வணங்கி; மன்றுள்நிறைந்தாடு மாணிக்கக்கூத்த ரெதிர்சென்றணைந்து=கனகசபையின்கண்ணே நிறைந்து ஆடியருளிய மாணிக்கம்போன்ற நடேசப்பெருமானது திருமுன்னே சென்றருளி; தாழ்ந்தார் திருக்களிற்றுப்படிக்கீழ்=திருக்களிற்றுப்படிக்கீழேவிழுந்து பணிந்தருளினர்—எ-று. (கஎங)

வே று.

ஆடி னாய்நறு நெய்யொடு பாறயி ரென்றெடுத் தார்வத்தாற்
பாடி னார்பின்னு மப்பதி கத்தினிற் பரவிய பாடலொன்றி
னீடு வாழ்தில்லை நான்மறை யோர்தமைக் கண்டவந் நிலையெல்லாங்
கூடு மாறுகோத் தவர்தொழு தேத்துசிற் றம்பல மெனக்கூறி.

(இ-ள்.) ஆடினாய் நறுநெய்யொடு பால்தயிர் என்றெடுத்து ஆர்வத்தால் பாடினார்=ஆடினாய் நறுநெய்யொடு பால்தயிரென அடியெடுத்து அன்போடு திருப்பதிகத்தைப்பாடியருளினர்; பின்னும் பதிகத்தினில் பரவியபாடல் ஒன்றில்=பின்னும் அத்திருப்பதிகத்தினுள் கட்டளையிட்டருளிய மூன்றுவதுபாசுரத்தில்; நீடுவாழ் தில்லைநான்மறையோர்தமைக்கண்டவந்நிலையெல்லாம் கூடுமாறு கோத்து=செல்வமிக்கதில்லைமூவாயிர மறையவர்களைச் சிவகணநாதராகத்தாம் பார்த்தருளிய அவ்வடையாளங்களையெல்லாம் (நீலத்தாற் கரியமிடற்றார், நல்லநெற்றிமேலுறை கண்ணினர், பற்றுசூலத்தார், சுடலைப்பொடிநீறணிவார், வார்சடையார்) எனப்பொருந்துமாறு சேர்த்து; அவர் தொழுதேத்து சிற்றம்பலமெனக்கூறி=அச் சீலமுடையார்கள் வணங்கித்துதிக்கும் சிற்றம்பலமெனத் திருவாய்மலர்ந்தருளி—எ-று. (கஎச)

திருக்கோயில்-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

ஆடி னாய்நறு நெய்யொடு பாறயி ரந்தணர்பிரியா தசிற் றம்பல நாடி னாயிட மாநறுங் கொன்றை நயந்தவனே, பாடினாய்மறையோடு, பல் கீதமும் பல்சடைப்பனி கால்கதிர் வெண்டிங்கள், சூடினாயருளாய் சுருங்க வெம தொல்வினையே.

Koviloor Digital Library

நாறு பூம்பொழி னண்ணிய காழியு ணான்மறைவல்ல ஞானசம் பந்தன், ஊறுமின்றமி ழாலுயர்ந் தாருறை தில்லைதன்னு, ளேறு தொல்புக ழேந்து சிற் றம்பலத்தீச னையிசை யாற்சொன்ன பத் திவை, கூறு மாறுவல் லாருயர்ந் தாரொடுங் கூடுவரே.

திருச்சிற்றம்பலம்.

இன்ன தன்மையி லின்னிசைப் பதிகமுந் திருக்கடைக் காப் பேத்தி, மன்னு மானந்த வெள்ளத்திற் றிளைத்தெதிர் வந்துமுன் னின்றாடும், பின்னு வார்சடைக் கூத்தர்பே ரருள்பெறப் பிரியாத விடைபெற்றுப், பொன்னி னம்பலஞ் சூழ்ந்துதாழ்ந் தெழுந்து போந் தணைந்தனர் புறமுன்றில்.

(இ-ள்.) இன்னதன்மையில் இன்னிசைப்பதிகமும் திருக்கடைக்காப்பேத்தி=இத்தன்மையால் இனிய இசையையுடைய திருப்பதிகத்தையும் அதில்திருக்கடைக்காப்பையும்பாடியருளி; மன்னும்ஆனந்தவெள்ளத்திற்றிளைத்து எதிர்வந்து முன்னின்றாடும்=நிலைபெற்ற பேரானந்த வெள்ளத்தில்படிந்து தமது திருக்கண் காணவந்து எதிரேநின்று ஆனந்தநிருத்தஞ் செய்தருளும்; பின்னுவார்சடைக்கூத்தர்பேர் அருள்பெறப் பிரியாத விடைபெற்று=பின்னிய நீண்டசடாமகுடத்தையுடைய நடேசப்பெருமானது மிக்கதிருவருளைப்பெற்ற காரணத்தால் அவரினின்றும் பிரியாத விடைபெற்று; பொன்னின் அம்பலஞ்சூழ்ந்து தாழ்ந்து எழுந்துபோந்து அணைந்தனர்புறமுன்றில்=கனகசபையைப் பிரதட்சணஞ் செய்து வணங்கியெழுந்து திருமுன்றிலின் பக்கலில் அடைந்தருளினார்—எ-று. (௧௭௫)

அப்பு றத்திடை வணங்கியங் கருளுட னணிமணித் திருவாயில் பொற்பு றத்தொழு தெழுந்துடன்போதரப் போற்றியபுகழ்ப்பாணர், நற்ப தந்தொழு தடியனேன் பதிமுத னதிநிவாக் கரைமேய, வொப் பிறானங்கள் பணிந்திட வேண்டுமென் றுரைசெய வதுநேர்வார்.

(இ-ள்.) அப்புறத்திடைவணங்கி அங்கு அருளுடன்அணிமணித்திருவாயில் பொற்புறத் தொழு தெழுந்துடன் போதர=அவ்விடத்து நின்று வணங்கி அங்கே சிவபெருமான் திருவருளோடும் அழகிய மணிகளிழைத்த திருவணுக்கன் திருவாயிலை நன்றாக வணங்கியெழுந்து திருநீலகண்ட யாழ்ப்பாணருடன் கோயிலின் புறம்பே யெழுந்தருள; போற்றிய புகழ்ப்பாணர் நற்பதந்தொழுது=தம்மை விரும்பிய புகழையுடைய திருநீலகண்ட யாழ்ப்பாணர் ஆளுடைய பிள்ளையாரது நன்மைமிக்க திருவடிகளைவணங்கி; அடியனேன் பதிமுதல் நதிநிவாக்கரைமேய=அடியேனது ஜனன ஊராகிய திருவெருக்கத்தம்புலியூர் முதலாகநிவாவென்னும் நதியின்கரையிற்பொருந்திய; ஒப்பில்தானங்கள் பணிந்திடவேண்டுமென்று உரைசெய அதுநேர்வார் = ஒப்பில்லாத

Koviloor Digital Library

திருப்பதிகளை வணங்கவேண்டுமென்று விண்ணப்பிக்க அதற்கு உடன்பட்ட ஆளுடையபிள்ளையார்—எ-று.

இக்காலத்து நிவாவென்பது வடவெள்ளாறென்று வழங்கும். (களசு)

பொங்கு தெண்டிரைப் புனிதநீர் நிவாக்கரைக் குடதிசைமிசைப் போந்து, தங்கு தந்தையா ருடன்பரி சனங்களுந் தவமுனி வருஞ் செல்லச், செங்கை யாழ்த்திரு நீலகண் டப்பெரும் பாணனா ருடன் சேர, மங்கை யார்புகழ் மதங்கசூ ளாமணி யாருடன் வரவந்தார்.

(இ-ள்.) பொங்குதெண்டிரைப்புனிதநீர் நிவாக்கரைக் குடதிசைமிசைப் போந்து=பொங்குகின்ற தெள்ளிய அலைகளோடுகூடிய பரிசுத்தமான நீரையுடைய நிவாவென்னு நதியின் கரையின்மேற்றிசையில் எழுந்தருளி; தங்குதந்தையார் உடன் பரிசனங்களும் தவமுனிவரும் செல்ல=தம்மைவிட்டு நீங்காத தந்தையாராகிய சிவபாத இதயரோடு அடியார் திருக்கூட்டமும் தவத்தையுடைய முனிவர் கூட்டமுஞ் சூழ்ந்துவராநிற்க; செங்கையாழ் திருநீலகண்டப்பெரும்பாணனார் உடன்சேர=சிவந்த கையில் யாழேந்திய திருநீலகண்ட யாழ்ப்பாணரோடுகூட; மங்கையார்புகழ் மதங்கசூளாமணியாருடன் வர=பெண்கள்புகழும் மதங்கசூளாமணியாரு முடன்வர; வந்தார்=எழுந்தருளிவந்தார்—எ-று.

அது நேர்வார், எழுந்தருளிவந்தாரெனக்கூட்டுக. (களஎ)

இருந்த டங்களும் பழனமுங் கடந்துபோ யெருக்கத்தம் புலியூரின், மருங்கு சென்றுற நீலகண் டப்பெரும் பாணனார் வணங்கிக் கார், நெருங்கு சோலைசூ ழிப்பதி யடியனேன் பதியென நெடிதின் புற், றருங்க லைச்சிறு மழவிளங் களிறனா ரங்கணைந் தருள்செய்வார்.

(இ-ள்.) இருந்தடங்களும் பழனமுங்கடந்து போய் எருக்கத்தம்புலியூரின்மருங்குசென்றுற=பெரியவாவிகளையும் வயல்களையுங் கடந்து போய்த் திருஎருக்கத்தம்புலியூரின் பக்கலிற்சென்றருள; நீலகண்டப்பெரும்பாணனார் வணங்கி=திருநீலகண்ட யாழ்ப்பாணர் பிள்ளையாரைவணங்கி, கார்நெருங்கு சோலைசூழிப்பதியடியனேன்பதியென=மேகம்நெருங்கியசோலைசூழ்ந்த இத்தலம் அடியேனுக்கு ஜனனஸ்தலமென்றுகூற; நெடிதுஇன்புற்று அருங்கலைச் சிறுமழவிளங்களிறனார்=மிகமகிழ்ச்சி கூர்ந்து அரியவேதமுதலிய கலைகளில் வல்லசிறிய இளங்களிற்றினை யொத்த பிள்ளையார்; அங்கணைந்து அருள்செய்வார்=அத்தலத்தை அடைந்தருளி (திருநீலகண்ட யாழ்ப்பாணரை நோக்கி) அருளிச்செய்வாராயினார்—எ-று. (களஅ)

ஐயர் நீரவ தரித்திட விப்பதி யளவின்மா தவமுன்பு, செய்த வாறெனச் சிறப்புரைத் தருளியச் செழும்பதி யிடங்கொண்ட, மைகொள் கண்டர்தங் கோயிலி னுட்புக்கு வலங்கொண்டு வணங்கிப்பா, ருய்ய வந்தவர் செழுந்தமிழ்ப் பதிகமுந் திசையுட னுரைசெய்தார்.

Koviloor Digital Library

(இ-ள்.) ஐயர் நீர் அவதரித்திட இப்பதி அளவில் மாதவமுன்புசெய்த வாறெனச் சிறப்புரைத்தருளி=ஐயரே நீர் திரு அவதாரஞ்செய்ய இத்திருப்பதி அளவில்லாத பெரிய தவத்தை முன்பு செய்தவகைமை நன்கிருந்ததென அவரால் அத்தலத்திற் காஞ்சிறப் பினைக்கூறியருளி; அச்செழும்பதி இடங்கொண்டமை கொள்கண்டர் தங்கோயிலினுட்புக்கு=அந்தச் செழுமையானதிருப்பதியை இடமாகக் கொண்டருளிய கரியகண்டத்தை யுடைய சிவபிரானது திருக்கோயிலி னுள்ளேபுகுந்து; வலங்கொண்டு வணங்கிப்பாருய்ய வந்தவர் செழுந்தமிழ்ப் பதிக மங்கு இசையுடன் உரைசெய்தார்=பிரதட்சணஞ்செய்து வணங்கி உலகங்களெல்லா மீடேற அவதரித்த பிள்ளையார் வளப்பமிக்க திருப்பதிகத்தை இசையுடன் அருளிச்செய்தார்—எ-று. (களக)

திருஎருக்கத்தம்புலியூர்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

படையார் தருபூதப் பகடா ருரிப்போர்வை
யுடையா னுமையோடு முடனா யிடுகங்கைச்
சடையா னெருக்கத்தம் புலியூர்த் தகுகோயில்
விடையா னடியேத்த மேவா வினைதானே.

ஏரா ரெருக்கத்தம் புலியூ ருறைவானைச்
சீரார் திகழ்காழித் திருவார் சம்பந்தன்
ஆரா வருந்தமிழ் மாலையிவை வல்லார்
பாரா ரவரேத்தப் பதிவா னுறைவாரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - நீலகண்டநாயகர். தேவியார் - நீலமலர்க்கண்ணம்மை.

திருப்பதிகம்—க.

அங்கு நின்றெழுந் தருளிமற் றவருட னம்பொன்மா மலைவல்லி, பங்கர்தாமினி துறையுநற் பதிபல பரிவொடும் பணிந்தேத்தித், துங்க வண்டமிழ்த் தொடைமலர்பாடிப் போய்த் தொல்லை வெங்குருவேந்தர், செங்க ணேற்றவர் திருமுது குன்றினைத் தொழுதுசென் றணைகின்றார்.

(இ-ள்) அங்கு நின்றெழுந்தருளி மற்றவருடன் அம்பொன்மாமலை வல்லிபங்கர்தாம்=அத்தலத்தினின்றுமெழுந்தருளித் திருநீலகண்டயாழ்ப்பாணரோடு இமயமலையின் புத்திரியாகிய உமாதேவியை யிடப்பாகத்திலுள்ள சிவபிரானார்; இனிதுறையும் நற்பதி பல பரிவொடும் பணிந்தேத்தி=எழுந்தருளிய திருஎருக்கத்தம்புலியூருக்குத் தென்திசையிலுள்ள கூடலையாற்றூர்முதலிய தலங்களை அன்புடனே வணங்கித் துதித்து; துங்கவண்டமிழ்த் தொடைமலர் பாடிப்போய்=வண்மை பொருந்திய மேலாகிய தமிழ்ச்சொன் மலரால்

Koviloor Digital Library

தொடுத்த பதிகமாலையையவ்விடங்களிற் பாடிச்சென்று; தொல்லைவெங் குருவேந்தர்=பழைய சீகாழிக்குத்தலைவராகிய ஆளுடைய பிள்ளையார்; செங்கணேற்றவர் திருமுது குன்றினைச் சென்று எதிர் அணைகின்றார்=சிவந்த கண்ணையுடைய இடபத்தை வாகனமாகக் கொண்ட பழமலை நாத ரெழுந்தருளிய விருத்தாசலத்தைக்குறித்துச் சென்று அங்கெழுந்தருளுகின்றாராய்—எ-று.

மொய்கொண்மாமணி கொழித்துமுத்தாறுசூழ் முதுகுன்றை யடைவோமென், றெய்துசொன்மலர் மாலைவண்பதிகத்தை யிசையொடும் புனைந்தேத்திச், செய்தவத்திரு முனிவருந் தேவருந் திசையெலாநெருங்கப்புக், கையர்சேவடி பணியுமப் பொருப்பினி லாதரவுடன்சென்றார்.

(இ-ள்.) மொய்கொள்மாமணி கொழித்துமுத்தாறுசூழ் முதுகுன்றையடைவோமென்று=கூட்டமான பெரியமுத்துகளைக் கொழித்து மணிமுத்தாநதிசூழும் திருமுதுகுன்றை யடைவோமென்று; எய்து சொன்மலர்மாலை வண்பதிகத்தை இசையொடும் புனைந்து=ஏத்திய்பொருளமைந்த சொன்மலராலாகிய வளம்பொருந்திய பதிகமாலையை யிசையுடனே பாடித்துதித்து; செய்தவத் திருமுனிவரும் தேவருந் திசையெலாம் நெருங்கப்புக்கு=செய்யுந்தவத்தையுடைய அழகிய முனிவர்களுந் தேவர்களுமெல்லாத் திசைகளிலும் நெருங்கப்புகுந்து; ஐயர் சேவடிபணியும் அப்பொருப்பினில் ஆதரவுடன் சென்றார்=பழமலைநாதரது திருவடிகளை வணங்கும் அத்திருமுது குன்றினில் விருப்பத்துடன் சென்றருளினார்—எ-று.

வெங்குருவேந்தர் அணைகின்றாராய்ச் சென்றாரெனமுடிக்க.

முதுமை=பழமை. முதுகுன்றென்றது பிரளயத்தும் அழியாதுநிற்குங் குன்றெனப்போதரும். இதனை—"மூடுகாணமூடும் வெள்ளத்துயர்ந்தது முதுகுன்றே" என்னுந் திருக்கடைக் காப்பானுணர்க. (கஅக)

திருமுதுகுன்றம்-பண்-நாட்டபாஷை.

திருச்சிற்றம்பலம்.

மத்தா வரைநிறுவிக் கடல்கடைந்தவ் விடமுண்ட
தொத்தார் தருமணிநீண் முடிச்சுடர்வண் ணனதிடமாங்
கொத்தார் மலர்குளிர்சந் தகிலொளிர்குங் குமங்கொண்டு
முத்தா றுவந்தடிவீழ் தருமுதுகுன் றடைவோமே.

தழையார் வடவியவீ தனிற்றவமே புரிசைவ
னிழையா ரிடைமடவா ளொடுமினிதா வுறையிடமா
மழைவா னிடைமுழவவ் வெழில்வளைவா ளுகிரெரிகண்
முழைவா ளரிகுமிறும் முயர்முதுகுன் றடைவோமே.

Koviloor Digital Library

முகில்சேர் தருமுதுகுன் றுடையானை மிகுதொல்சீர்ப்
புகலிநகர் மறைஞான சம்பந்த னுரைசெய்த
நிகரில்லன தமிழ்மாலைக ளிசையோ டிவைபத்தும்
பகரும் மடியவர்கட் கிடர்பாவ மடையாவே.

திருச்சிற்றம்பலம்.

வானநாயகர் திருமுதுகுன்றினை வழிபட வலங்கொள்வார்
தூநறுந்தமிழ்ச் சொல்லிருக்குக்குறட் டிணைமலர் மொழிந்தேத்தி
ஞானபோனகர் நம்பர்தங்கோயிலை நண்ணியங் குள்புக்குத்
தேனலம்புதண் கொன்றையார்சேவடி திளைத்த வன்பொடு தாழ்ந்தார்.

(இ-ள்.) வானநாயகர் திருமுது குன்றினை வழிபடவலங் கொள்வார் ஞானபோனகர்=விண்ணுலகத்தார்க்கு இறைவராகிய பழமலைநாதரது திருமுதுகுன்றத்தை வழிபடுங் காரணமாய்ப் பிரதட்சணஞ் செய்வாராகிய ஆளுடைய பிள்ளையார்; தூநறுந்தமிழ்ச்சொல் இருக்குக்குறள்துணைமலர் மொழிந்தேத்தி=புனிதமாகிய நல்ல தமிழ்ச்சொல்லாலாகிய திரு இருக்குக்குறளென்னும் அளவொத்த பதிகமாலையைத் திருவாய் மலர்ந்து துதித்து; நம்பர் தம் கோயிலை நண்ணி அங்கு உள்புக்கு=பழமலை நாதரெழுந்தருளிய ஆலயத்தினுள்ளே சென்றருளி; தேன் அலம்பு தண் கொன்றையார் சேவடி திளைத்த இன்பொடு தாழ்ந்தார்=தேனானது ததும்புகின்ற குளிர்ந்த கொன்றைப் பூமாலையை யணிந்த பழமலைநாதரது சிவந்த திருவடிக்கீழ்க் கலந்தபேரானந்தத்தோடு பணிந்தருளினர்—எ-று.

வானநாயகர், இனச்சுட்டில்லாப்பண்புகொள் பெயராதலின், விசேடம் பற்றி அவர்க்குத் தலைவரென்பது படநின்றது. மண்ணுலகத்தாரை விலக்கியதன்று. (கஅ௨)

திருமுதுகுன்றம்-திருவிருக்குக்குறள்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

நின்றுமலர்தூவி யின்றுமுதுகுன்றை
நன்றுமேத்துவீர்க் கென்றுமின்பமே.

நின்றுமுதுகுன்றை நன்றுசம்பந்தன்
ஒன்றுமுரைவல்லா ரென்றுமுயர்வாரே.

திருச்சிற்றம்பலம்.

தாழ்ந்தெழுந்துமுன் றூசதிர்ந்தெழுமெனுந் தண்டமிழ்த்தொடைசாத்தி, வாழ்ந்துபோந்தங்கண் வளம்பதியதனிடை வைகுவார்மணிவெற்புச், சூழ்ந்ததண்புனல் சுலவுமுத்தாறொடு தொடுத்தசொற்றொடைமாலை, வீழ்ந்தகாதலாற் பலமுறைவிளம்பியே மேவினர்சில நாள்கள்.

Koviloor Digital Library

(இ-ள்-) முன் தாழ்ந்து எழுந்து முரசதிர்ந்து எழுமெனும்தண்டமிழ்த் தொடைசாத்தி=திருமுன்னே பணிந்தெழுந்து முரசதிர்ந்து எழுமென்னு முதலினையுடைய திருமுக்காலென்னும் தண்ணிய தமிழ்ப்பதிகமாலையைத் திருவடியில் சாத்தி ; வாழ்ந்து போந்து அங்கண் வளம்பதியத னிடைவைகுவார்=பேரானந்த வாழ்வடைந்து ஆலயத்தி னின்றும் புறம்பே யெழுந்தருளி அழகிய இடத்தையுடைய வளம்பொருந்திய திருமுதுகுன்றின்கண் எழுந்தருளி யிருக்கும் ஆளுடைய பிள்ளையார் ; மணிவெற்புச் சூழ்ந்த தண் புனல் சுலவுமுத்தா றுடுதொடுத்த சொற்றொடைமாலைபல=அழகிய திருமுதுகுன்றினை வளைந்த குளிர்ந்த நீரானது அலைவீசுகின்ற திருமணி முத்தாநதியோடு சேர்த்துப் பாடியருளிய சொல்லானய பதிகமாலைகள் பலவற்றை ; வீழ்ந்தகாதலால் பலமுறை விளம்பியே சிலநாள்கள் மேவினார்=தம்உள்ளத்தில் உண்டாய விருப்பத்தினால் பலமுறையுந் திருவாய் மலர்ந்து சிலநாள் அங்கமர்ந்தருளினார்—எ-று.

மத்தாவென்னும் பதிமுதலிய பதிகங்க ளெல்லாவற்றினுங் கூறிய முத்தாறென்னும் விசேடண மடங்கப்பலமுறையென்றார். (கஅரு)

திருமுதுகுன்றம் - திருமுக்கால்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

முரசதிர்ந்தெழுதிரு முதுகுன்றமேவிய
பரசமர்படையுடையீரோ
பரசமர்படையுடை யீருமைப்பாவுவா
ரரசர்களுலகிலாவாரே.

மூடியசோலைசூழ் முதுகுன்றத்தீசனை
நாடியஞானசம்பந்தன்
பாடியஞானசெந்தமிழ்
பாடியவவர்பழியிலரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-பழமலைநாதர். தேவியார்-பெரியநாயகியம்மை.

திருப்பதிகம்.—கக.

ஆங்குநாதனைப் பணிந்துபெண்ணாகட மணைந்தரு மறையோசை
யோங்குதூங்கானை மாடத்துளமர்கின்ற வொருதனிப் பரஞ்சோதிப்
பாங்கணைந்துமுன் வலங்கொண்டுபணிவுற்றுப் பாவுசொற்றமிழ்மாலை
தீங்குதீங்குவீர் தொழுமின்களெனுமிசைப் பதிகமுந்தெரிவித்தார்.

(இ-ள்.) ஆங்கு நாதனைப்பணிந்து பெண்ணாகடம் அணைந்து=அத்தலத்தில் பழமலைநாதனை வணங்கிப் பெண்ணாகடமென்னும் திருப்பதியைச்சேர்ந்

Koviloor Digital Library

து; அருமறையோசை ஒங்கு தூங்கானைமாடத்துள் அமர்கின்ற ஒருதவிப்ப ரஞ்சோதி பாங்கணைந்து=அரியவேதங்களின் ஓசைமிக்க திருத்தூங்கானைமா டமென்னுந் திருக்கோயிலில் எழுந்தருளிய ஒப்பில்லாத சுடர்க்கொழுந் தீச ரது பக்கத்திலடைந்தருளி; வலங்கொண்டு முன்பணிவுற்று=பிரதட்சணஞ் செய்து திருமுன்னே வணங்கி; நீங்கு நீங்குவீர் தொழுமின்களென்றும்=குற் றம் நீங்குவீர் தொழுங்கள் என்றும் (இறுதியோடு) பரவுசொற்றமிழ்மாலை இசைப்பதிகமுந் தெரிவித்தார்=துதிக்கும் தமிழ்ச்சொல்லானாய இசையோடு கூடிய பதிகமாலையையும் அருளிச்செய்தார்—எ-று- (கஅச)

திருத்தூங்கானைமாடம்-பண்-பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

ஒடுங்கும்பிணிபிறவி கேடென்றிவை யுடைத்தாயவாழ்க்கை யொ ழியத்தவ, மடங்குமிடங்கருதி நின்றீர்செல்லா மடிகளடிநிழற்கீழாளா ம் வண்ணங், கிடங்குமதிலுஞ்சு லாவியெங்குங் கெழுமனைகடொறு மறையின்னொலி, தொடங்குங்கடந்தைத் தடங்கோயில்சேர் தூங்கா னைமாடந் தொழுமின்களே.

மண்ணார்முழுவதிரு மாடவீதி வயற்காழிஞானசம் பந்தனல்ல, பெண்ணாகடத்துப் பெருங்கோயில் பிறையுரிஞ்சுந்தூங்கானை மாட மேயான், கண்ணார்கழல்பரவு பாடல்பத்துங் கருத்துணரக்கற்றாருங் கேட்டாரும்போய், விண்ணாருலகத்து மேவிவாழும் விதியதுவேயா கும் வினையுமாயுமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-சுடர்க்கொழுந்தீசர். தேவியார்-கடந்தைநாயகியம்மை.

திருப்பதிகம்—உ.

கருவறைப்பிற் புகாதவர் கைதொழு
மொருவனைத்தொழு துள்ள முவந்துபோய்ப்
பெருவரத்தினிற் பெற்றவர் தம்முடன்
றிருவரத்துறை சேர்துமென் றேகுவார்.

*(இ-ள்.) கருவறைப்பில் புகாதவர் கைதொழும்=பிறப்பாகிய எல்லைக் கண் அணுகாத அடியார்கள் வணங்கும்; ஒருவனைத்தொழுது உள்ளமுவந்து போய்=ஒப்பில்லாத சுடர்க்கொழுந் தீசனைவணங்கி மனமகிழ்ந்து அங்குநின் றெழுந்தருளி; பெருவரத்தினில் பெற்றவர் தம்முடன்=மிக்கதவப் பயனால் தம்மைப்பெற்ற சிவபாத இருதயரோடும்; திருவரத்துறை சேர்துமென் றேகு வார்= (நிவாக்கரையிலிருக்கின்ற) திருநெல்வாயில் அரத்துறையை அடை வோமென்று எழுந்தருளுவாராயினார். (கஅரு)

Koviloor Digital Library

முந்தைநாள்களோ ரோவொரு கான்முது
தந்தையார்பியன் மேலிருப் பார்தவிர்ந்
தந்தணா ரவரரு கேசெலச்
சிந்தைசெய்விருப் போடுமுன் சென்றனர்.

(இ-ள்.) முந்தைநாள்கள் ஒரோஒருகால் முதுதந்தையார் பியன்மேல்இருப்பார்=முன்னாட்களில் ஒவ்வொருநாள் தமது முதியதந்தையாராகிய சிவபாத இருதயரது திருத்தோண்மேல் எழுந்தருளிச் செல்வாராகிய பிள்ளையார்; தவிர்ந்து அந்தணாளர் அவரருகேசெல=அவ்வா திருத்தலை நீங்கி வேதியர்கள் தம் அருகேசூழ்ந்துவர; சிந்தைசெய் விருப்பொடு முன்சென்றனர்=திருவரத்துறையைத் தரிசிக்கவேண்டுமென்று கருதிய விருப்பத்துடன் அவர்களுக்குமுன்னே எழுந்தருளினர்—எ-று. (கஅசு)

ஆதியார்தம ரத்துறை நோக்கியே
காதலாலணை வார்கடி தேகிடத்
தாதையாரும் பரிவுறச் சம்பந்தர்
பாததாமரை நொந்தனபைப்பய.

(இ-ள்.) ஆதியார்தம் அரத்துறை நோக்கியே=முதற்காரணராகிய சிவபிரானது திருவரத்துறையை நோக்கி; காதலால் அணைவார் கடிதேகிட=விருப்பத்தோடு அணையுங் கருத்துடையராய் விரைந்து எழுந்தருள; தாதையாரும் பரிவுற=சிவபாத இருதயரும் திருவடிகள் நிலத்தில் தீண்டல் பொறாதுவருந்த; சம்பந்தர் பாததாமரை நொந்தன பைப்பய=ஆளுடைய பிள்ளையாரது திருவடித் தாமரைகள் சிறிது சிறிது வருத்தமடைந்தன—எ-று. (கஅஎ)

மறையனைத்து மொருவடி வாமென
நிறைமதிப்பிள்ளை நீணிலஞ் சேர்ந்தெனத்
துறையலைக்கங்கை சூடு மரத்துறை
யிறைவரைத்தொழு வான்விரைந்தேகினர்.

(இ-ள்.) மறையனைத்து மொருவடிவாமென=வேதங்களெல்லாந் திரண்டு ஒருதிருவுருக்கொண்டு வந்தாற்போலவும்; நிறைமதிப்பிள்ளை நீணிலஞ் சேர்ந்தென=நிறைந்தகலைகளோடுகூடிய இளஞ்சந்திரன் நீண்ட நிலவுலகின்கண் சேர்ந்ததுபோலவும்; துறையலைக்கங்கைசூடும்அரத்துறைஇறைவரை=துறையின்கண் அலைகளை வீசுங் கங்காநதியைச்சூடிய அரத்துறை நாதரை; தொழுவான் விரைந் தேகினர்=தொழும் பொருட்டு விரைந்து எழுந்தருளினர்—எ-று. (கஅஅ)

பாசமற்றில ராயினும் பார்மிசை
யாசைசங்கரற் காயின தன்மையாற்
றேசுமிக்க திருவுரு வானவ
ரீசனைந்தொழு தேதொழு தேகினர்.

Koviloor Digital Library

(இ-ள்.) பார்மிசைப் பாசமற்றிலராயினும் = உலகின்கண் (அறம்பொருள் இன்பங்களானுய) பற்றுப்பிறிதொன்றில ராயினும் ; ஆசைசங்கரற்காயின தன்மையால்=சிவபிரானிடத்து ஆசையாகிய பற்றுஒன்று உண்டாய தன்மையால் ; தேசுமிக்க திருவுருவானவர்=ஒளிமிக்க திருவுருவத்தையுடைய ஆளுடைய பிள்ளையார் ; ஈசனைத்தொழுதே தொழுதேகினர்—சிவபெருமானை இடைவிடாமல் வணங்கிக்கொண் டெழுந்தருளினர்—எ-று.

அடுக்கு நீங்காமைமேற்று. அது வழிவருத்தத்தின் சலியாமையை விளக்கியது. எனவே, ஆக்கங்கேடுகளிலுஞ் சலியாது நிலைபெற்றோங்கிய பிள்ளையாரது பத்திமையைப் புலப்படுத்தினராயிற்று. (கஅகூ)

இந்தமாநிலத் தின்னிரு ணீங்கிட
வந்தவைதிக மாமணி யானவர்
சிந்தையாரமு தாகிய செஞ்சடைத்
தந்தையார்கழ ருழ்ந்தெழுந்தேகினர்

(இ-ள்.) இந்தமாநிலத்தின் இருள்நீங்கிட=இந்தநிலவுலகின்கணுள்ள மானிடரது அஞ்ஞானவிருள் நீங்கும்படி ; வந்தவைதிக மாமணியானவர்=அவதரித்தவைதிக ஞானமணியாகிய ஆளுடைய பிள்ளையார் ; சிந்தை ஆரமுதாகிய செஞ்சடைத் தந்தையார் கழல்தாழ்ந்தெழுந்தேகினர்=தமதுளத்தின்கண் நிறைந்த அமுதமாகிய சிவந்த சடையையுடைய சிவபிரானது திருவடிகளை வணங்கிக்கொண்டு எழுந்தருளினர்—எ-று. (கக௰)

மாறன்பாடி யெனும்பதி வந்துற
வாறுசெல்வருத் தத்தி னசைவினால்
வேறுசெல்பவர் வெய்துறப் பிள்ளையா
ரேறுமஞ்செழுத் தோதியங் கெய்திட.

(இ-ள்.) மாறன்பாடி எனும்பதிவந்துற=அப்பொழுது மாறன்பாடியென்னும் பதியினைவந்தடைய;ஆறுசெல் வருத்தத்தின் அசைவினால்=அங்குவழியிற்செல்லும் வருத்தத்தினாலாய தளர்ச்சியினால் ;வேறுசெல்பவர்வெய்துற=தம்மோடுசூழ்ந்து வரும்திருக்கூட்டங்களுமிளைப்படைய ; பிள்ளையார்ஏறும் அஞ்செழுத்துஓதி அங்குஎய்திட=அதனால் ஆளுடைய பிள்ளையாரு மேம்பட்ட திருஅஞ்செழுத்தையோதி யருளி அங்கே சென்றருள—எ-று. (கககக)

உய்யவந்தசம் பந்த ருடன்வந்தார்க்
கெய்துவெம்மை யிளைப்பஞ்சி னன்போலக்
கைகளாயிரம் வாங்கிக் கரந்துபோய்
வெய்யவன்சென்று மேல்கடல் வீழ்ந்தனன்.

(இ-ள்.) உய்யவந்தசம்பந்தன் உடன்வந்தார்க்கு=உலகத்தா ருய்யும் பொருட்டு அவதரித்த ஆளுடைய பிள்ளையாருடன் வந்ததிருக்கூட்டத்தார்க்கு ; எய்தும் வெம்மை இளைப்பஞ்சினன்போல=தனதுகிரணஉஷ்ணத்தாலாய

Koviloor Digital Library

இனைப்பினைக்கண்டு பயந்தவனைப்போல கைகள் ஆயிரம் வாங்கிக்கரந்து போய்=ஆயிரங்கைகளையுஞ் சுருக்கிமறைந்துபோய் ; வெய்யவன் சென்று மேல்கடல் விழ்ந்தனன்=சூரியன்மேல் கடலிற்சென்று விழ்ந்தான்—எ-று. ()

அற்றைநாளிர வப்பதி யின்னிடைச்
சுற்றுநீடிய தொண்டர்கள் போற்றிடப்
பெற்ற மூர்ந்தபி ரான்கழல் பேணுவார்
வெற்றிமாதவத் தோருடன் மேவினர்.

(இ-ள்.) அற்றைநாளிரவப் பதியின்னிடை=அந்நாளிரவில் அம்மாறன் பாடி யென்னுந் தலத்தினிடத்தில் ; சுற்றுநீடிய தொண்டர்கள் போற்றிட= தம்மைச்சூழ்ந்து நெருங்கியிருக்கின்ற திருத்தொண்டர் குழாங்கள்துதிக்க ; பெற்றமூர்ந்தபிரான் கழல்பேணுவார்=இடபத்தை வாகனமாகக்கொண்ட சிவபிரானது திருவடியை வழிபாடுசெய்யும் ஆளுடைய பிள்ளையார் ; வெற்றி மாதவத்தோருடன் மேவினர்=வெற்றிபொருந்திய தவமுனிவருடன் எழுந்த ருளியிருந்தார்—எ-று. (ககரு)

இந்நிலைக்க ணெழில்வளர் பூந்தராய்
மன்னனார்தம் வழிவருத் தத்தினை
யன்னமாடுந் துறைநீ ரரத்துறைச்
சென்னியாற்றர் திருவுளஞ் செய்தனர்.

(இ-ள்.) இந்நிலைக்கண் எழில்வளர் பூந்தராய் மன்னனார்தம்வழிவருத் தத்தினை=இவ்வாறு நிகழுங்கால் அழகின்மிக்க சீகாழியில் அவதரித்த ஆளு டைய பிள்ளையாரது வழிநடந்த வருத்தத்தை; அன்னமாடுந் துறைநீர் அரத் துறை=அன்னங்கள் குடைந்தாடும் நிவாநதியின் நீர்த்துறை சூழ்ந்த திரு நெல்வாயில் அரத்துறையி லெழுந்தருளிய ; சென்னியாற்றர் திருவுளஞ்செய் தனர்=சிரசின்கண் கங்காநதியைத்தரித்த அரத்துறை நாதர் தமதுதிருவுளத் திற் கொண்டருளினர்—எ-று. (ககச)

ஏறுதற்குச் சிவிகை யிடக்குடை
கூறியூதக் குலவுபொற் சின்னங்கண்
மாறின்முத்தின் படியினன் மன்னிய
நீறுவந்த நிமல ரருளுவார்.

(இ-ள்.) ஏறுதற்குச்சிவிகை இடக்குடை=எழுந்தருளுதற்கு முத்துச்சி விகையும் பிடித்தருள முத்துக்குடையும் ; கூறியூதக்குலவு பொற் சின்னங் கள்=தமதுதிருநாமத்தை யாவருமறியக்கூறி ஊதுதற்குவிளங்குகின்றபொன் னாலாய திருச்சின்னங்களும் ; மாறின்முத்தின்படியினால் மன்னியநீறுவந்த நிமலர் அருளுவார்=ஒன்றற்கொன்று மாறுபடாதமுத்தின் வகையினா லாகி யவைகளை விபூதியை யுவந்த திருவரத்துறைநாதர் அருளுவாராய்—எ-று.

ம்க

Koviloor Digital Library

நீடுவாழ்பதி யாகுநெல் வாயிலின்
மாடமாமனை தோறு மறையோர்க்குக்
கூடுகங்குற் கனவிற் குலமறை
தேடுசேவடி தோன்றமுன் சென்றுபின்.

(இ-ள்.) நீடுவாழ்பதியாகும் நெல்வாயிலின் மாடமாமனை தோறுமறையோர்க்கு=தொன்றுதொட்டு மறையோர்வாழும் பதியாகிய திருவரத்துறையில் மேன்மாடங்களோடுகூடிய மாளிகைமனைகள் தோறுமுள்ள பிராமணர்களுக்கு; கங்குல்கூடு கனவிற்குல மறைதேடு சேவடிதோன்ற முன்சென்று பின்=அன்றிரவில் உண்டாகும் சொற்பன வவத்தையில் நான்குவேதங்களுந் தேடுகின்ற தமதுசிவந்த திருவடிகள்காண்வர அவர்முன்சென்று பின்பு—()

ஞானசம்பந்த னம்பா லணைகின்றான்
மானமுத்தின் சிவிகை மணிக்குடை
யானசின்னநம் பாற்கொண் டருங்கலைக்
கோனவன்பா லணைந்து கொடுமென.

(இ-ள்.) ஞானசம்பந்தன்நம்பால்அணைகின்றான்=திருஞானசம்பந்தன் நம்மிடத்துவருகின்றான்; மானமுத்தின் சிவிகை மணிக்குடையான சின்ன நம்பால்கொண்டு=பெரியமுத்துச் சிவிகையையும் முத்துக்குடையையும் முத்துச் சின்னத்தையும் நம் ஆலயத்தினின்றெடுத்துக்கொண்டு; அருங்கலை கோனவன்பால் அணைந்துகொடுமென=அரிய (வேதமுதலிய) கலைஞானங்கட்கு அதிபனாகிய அத்திருஞான சம்பந்தனிடத்துக் கொடுமென்று—எ-று.

நம்பாலென்றது=ஆலயத்திற்கானமையின் இலக்கணையென்க. (கக௭)

அந்தணாளர்க் குரைத்தவப் போழ்தினில்
வந்துகூடி மகிழ்ந்தற் புதமுறுஞ்
சிந்தைபோடுஞ் செழுநீ ரரத்துறை
யிந்துசேகரர் கோயில்வந் தெய்தினர்.

அந்தணாளர்க்குரைத்தஅப்போழ்தினில்=அம்மறையவர்களுக்குச்சிவபிரான் திருவாய் மலர்ந்தருளிய சமயத்தில் அவரெல்லாம்; வந்துகூடிமகிழ்ந்தற் புதமுறுஞ்சிந்தையோடு=ஒருங்குதிரண்டுமகிழ்ச்சியடைந்து அதிசயமிக்க மனதோடும்; செழுநீர் அரத்துறை இந்து சேகரர் கோயில்வந்தெய்தினார்=செழுமைமிக்க நீர்வளம் பொருந்திய திருவரத்துறையி லெழுந்தருளியசந்திரசேகரராகிய திருவரத்துறை நாதரது திருக்கோயிலை வந்தடைந்தார்கள்—எ-று. (கக௮)

அங்குமற்ற வருளடி யாருட
னெங்குநிகோயிலுள் ளார்க்குமுன் னாயிட
வீங்கிதென்ன வதிசய மென்பவர்
தாங்களம்மறை யோர்க்குமுன் சாற்றினர்.

Koviloor Digital Library

அங்கு மற்றவருள் அடியாருடன் ஓங்குகோயில் உள்ளார்க்கு முண்டா யிட=அச்சொற்பன ரூபமான திருவருள் அங்கிருக்கும் அடியாருடன் திருக் கோயிலில் உள்ள அகத்தொண்டர்களுக்கும் உண்டாக ; ஈங்கிதென்ன வதிச யமென்பவர் தாங்கள் அம்மறையோர்க்கு முன்சாற்றினர்=இவ்விடத்து இது, கண்டறியாத அதிசயமென்று கூறுமவர்களாய் அவர்களும் அங்குவந்து கூடியபிராமணர்களுக்கு முன்னே தெரிவித்தார்கள்—எ-று.

ஈண்டு அகத்தொண்டர் என்பது ஆதிசைவரை என்க. (கககூ)

சாலமிக்கவி யப்புறு தன்மையின்
பாலராதலும் பள்ளி யெழுச்சியின்
காலமெய்திடக் காதல் வழிப்படுஞ்
சீலமிக்கார் திருக்காப்பு நீக்கினர்.

(இ-ள்.) சாலமிக்க வியப்புறு தன்மையின் பாலராதலும்=இவ்வாறு அங்குசேர்ந்த யாவரும்மிகச்சிறந்த அதிசயமுற்றதன்மையின் பகுதியாராத லும் ; பள்ளியெழுச்சியின்காலம் எய்திட=திருப்பள்ளி யெழுச்சிக் குரிய வைகறைக் காலம்வர ; காதல்வழிப்படுஞ் சீலமிக்கார்திருக்காப்புநீக்கினர்= பத்திவழிப்பட்ட நல்லொழுக்கமிக்க அவ்வந்தணர்கள் திருவாயிலின் திருக் காப்பினைநீக்கினர்கள்—எ-று. (உ0)

திங்கணீர்மைச் செழுந்திரண் முத்தினற்
றுங்கவெண்குடை தூய சிவிகையும்
பொங்கவூதும் பொருவருஞ் சின்னமு
மங்கணாத ரருளினற் கண்டனர்.

(இ-ள்.) திங்கள் நீர்மைச்செழுந்திரண் முத்தினல்=சந்திரன்போலும் தண்ணியவொளியமைந்தசெழுமைபொருந்தியதிரண்டமுத்தினலாகிய;துங்க வெண்குடைதூயசிவிகையும்=உயர்ந்தவெள்ளியதிருக்குடையும்பரிசுத்தமான முத்துச்சிவிகையும் ; பொங்கவூதும் பொருவருஞ் சின்னமும்=பொலிவோடூ துகின்ற ஒப்பில்லாத திருச்சின்னமும் ; அங்கண் நாதர் அருளினல் கண்ட னர்=சிவபிரானது திருவருளினல் உண்டாயிருந் தமையை அவ்விடத்து அ வர்கள்கண்டார்கள்—எ-று. (உ0க)

கண்டபின்னவர் கைதலை மேற்குவித்
தெண்டிசைக்கும் விளக்கிவை யாமெனத்
தொண்டரோடு மறையவர் சூழ்ந்தெழுந்
தண்டர்நாடு மறிவுற வார்த்தனர்.

(இ-ள்.) கண்டபின் அவர்கைதலைமேற்குவித்து=அவ்வாறுகண்டபின்பு அவ்வந்தணர்கள்தமதுகைகளைத் தலையின்மேற்கூப்பி ; எண்டிசைக்கும் விளக் கிவையாமென=எட்டுத்திக்குகளுக்கும் இவைவிளக்காமென்றுதுதிக்க ; தொ

Koyiloor Digital Library

ண்டரொடு மறையவர் சூழ்ந்தெழுந்து=அடியார்களோடுமற்றப் பிராமணர்களும் ஒருங்குதிரண்டெழுந்து; அண்டர்நாடும் அறிவுறவார்த்தனர்=மண்ணுலகன்றித்தேவருலகமும் அறியும்படி ஆரவாரித்தார்கள்—எ-று. (உளஉ)

சங்குதுந்துபி தாரை பேரிமுதற்
பொங்குபல்லிய நாதம் பொலிந்தெழ
வங்கணனரு ளாலவை கொண்டுடன்
பொங்குகாத லெதிர்கொளப் போதுவார்.

(இ-ள்.) சங்குதுந்துபி தாரை பேரிமுதல்பொங்குபல்லியநாதம்பொலிந்தெழ=சங்கமும் துந்துபியும்தாரையும்பேரிகையுமுதலியசிறந்தபல்வகைவாத்தியங்களினோசை அதிகரித்து எழாநிற்க; அங்கணன் அருளால் அவைகொண்டு உடன்=சிவபிரானது திருவருளால் அவைகளை யுடன்கொண்டு; பொங்கு காதல் எதிர்கொளப் போதுவார்=அதிகரித்த விருப்பத்தோடு பிள்ளையாரை எதிர்கொள்ளும்படி போகின்றவராய்—எ-று.

பொங்குகாதல் எதிர்கொள என்றுங் கால் தாமணுகி யெதிர் கொள்ளுமுன் தமதுகாதல் விரைந்து எதிர் கொள்ள எனினு மமையும். இது அவாதுசிவரேச மிகுதியைப் புலப்படுத்தியது. (உளங)

மாசில்வாய்மைநெல் வாயின் மறையவ
ராசில்சீர்ச்சண்பை யாண்டகை யார்க்கெதிர்
தேசுடைச்சிவி கைமுத லாயின
வீசரின்னரு ளாற்றாங்கி யேகினர்.

(இ-ள்.) மாசில்வாய்மைநெல்வாயின்மறையவர்=குற்ற மற்றமெய்ப்பத்தியையுடையநெல்வாயில்அரத்துறையில்வசிக்கும்அந்தணர்கள்;ஆசில்சீர்ச்சண்பை ஆண்டகையார்க்கெதிர்=குற்ற மற்ற சிறப்பினையுடைய சீகாழியில் அவதரித்த ஆளுடைய பிள்ளையார்க்கெதிராக; தேசுடைச் சிவிகை முதலாயின=பிரகாசத்தை யுடைய முத்துச் சிவிகை முதலாயினவற்றை; ஈசர் இன்னருளால் தாங்கியேகினர்=சிவபிரானது இனிய திருவருளால் எடுத்துக்கொண்டு சென்றார்கள்—எ-று.

போதுவாராய் நெல்வாயில் மறையவர் ஏகினரெனக் கூட்டுக. (உளச)

இந்தலையிவ ரின்னண மேகின
ரத்தலைச்சண்பை நாதர்க்கு மவ்விரா
முத்தநற்சிவி கைமுத லாயின
வுய்த்தளிக்கும் படிமுன் னுணர்த்துவார்.

(இ-ள்.) இத்தலை இவர்இன்னணமேகினர்=இவ்விடத்துபிராமணர் முதலியநெல்வாயிலின் கணுள்ளஅடியார்கள் இவ்வாறுசென்றார்கள்; அத்தலைச் சண்பை நாதர்க்கும் அவ்விரா=மாறன் பாடியாகிய அவ்விடத்தில் எழுந்தரு

Koviloor Digital Library

ளிய சீகாழித்தலைவராகிய பிள்ளையார்க்கும் அவ்விராப்போதில்;முத்தநற் சிவிகை முதலாயின=நல்லதிருமுத்துச்சிவிகை முதலாயினவற்றை ; உய்த்து அளிக்கும் படிமுன் உணர்த்துவார்=ஏறிச்செலுத்தும் வண்ணம் அவர்க்கு முன் அறிவிப்பவராய்—எ-று. (௨௱௫)

அள்ளனீர்வயல் சூழு மரத்துறை
வள்ளலார்நா மகிழ்ந்தளிக்கு மவை
கொள்ளலாகுங்கொண் டுய்த்தல்செய் வாயென
வுள்ளவாறருள் செய்ய வுணர்ந்தபின்.

(இ-ள்.) அள்ளல் நீர்வயல்சூழும்அரத்துறைவள்ளலார்=சேறுபொருந்தியநீர்வளமிக்கவயல்சூழ்ந்த திருவரத்துறையிலெழுந்தருளிய வள்ளலாகிய திருவரத்துறைநாதர் ; நாம்மகிழ்ந்துஅளிக்கும்அவைகொள்ளலாகும்=நாம்உளமகிழ்ந்து கொடுக்கு மவைகளை கைக்கொள்ளுதல் பொருந்தும் (அதனால்) ; கொண்டு உய்த்தல்செய்வாயென உள்ளவாறு அருள்செய்ய உணர்ந்தபின்= அவைகளை அங்கீகரித்துக்கொண்டு சிவிகையை யேறிச்செலுத்துவா யென்று திருவரத்துறையில் அருளியவகையை யுள்ளவண்ணம் அருளிச்செய்யப்பிள்ளையார் துயில்நீங்கித் திருக்கண் விழித்தபின்பு—எ-று.

உணர்த்து வாராகிய அரத்துறைவள்ளல் அருள்செய்பஎனக்கூட்டுக. (௨௱௬)

சண்பையாளியார் தாங்கண்ட மெய்யருட்
பண்புதந்தையார் தம்முடன் பாங்கமர்
தொண்டருக்கருள் செய்து தொழாமுனம்
விண்புலப்பட வீங்கிரு ணீங்கலும்.

(இ-ள்.) சண்பை யாளியார் தாங்கண்ட மெய்யருட்பண்பு=சீகாழியில் அவதரித்த ஆளுடைய பிள்ளையார் தாம் அன்று கண்டதிருவருளாகிய பண்பினை ; தந்தையார் தம்முடன் பாங்கமர் தொண்டருக்கருள் செய்து தொழாமுனம்=தந்தையாருடன்பக்கத்திற்சூழ்ந்த அடியார்களுக்கும் அருளிச்செய்து திருவருளை வணங்குமுன்னமே ; விண்புலப்பட வீங்குஇருள்நீங்கலும்=ஆகாயம்கண்களுக்குப் புலப்பட அதிகரித்த இருளானது நீங்கவும்—எ-று.

ஆகாயம் கட்புலனுகா வென்பாரை மறுத்து ஆகாயத்திற்பருந்துதோன்றுகிறது என்னும் நியாயத்தால் புலப்படுமென்பார் விண்புலப்பட வென்றார் இருள் ஒளியினது அபாவமென்றும் ஓர்பொருளென்றும் கூறுவாருமுளர்.

மாலையாமம் புலர்வுறும் வைகறை
வேலைசெய்வினை முற்றிவெண் ணீறணி
கோலமேனிய ராய்க்கை மலர்குவித்
தேலவஞ்செழுத் தோதி யெழுந்தனர்.

Koviloor Digital Library

(இ-ள்.) மாலையாமம் புலர்வுறும் வைகறைவேலை=மாலைப் பொழுதோ டேகூடிய இராக்காலம் நீங்கும் விடியற்காலத்தில்; செய்வினைமுற்றி வெண்ணி றணி கோலமேனியராய் கைம்மலர்குவித்து=சந்தியாவந்தன மல்லாத ஸ்நா னமுதலிய நித்தியகடன்கள் முடித்து வெள்ளிய விபூதிதரித்த அழகிய திரு மேனியை யுடையவராய்க் கரகமலங்கள் கூப்பி; ஏல அஞ்செழுத்து ஓதியெ ழுந்தனர்=பொருந்த (திருவரத்துறையைக்கருதிச்) செல்லும்படித் திரு வஞ்செழுத்தை உச்சரித்துக்கொண்டெழுந்தருளினார்—எ-று.

பிள்ளையார்க்கக்காலத்து உபநயன மின்மையிற் சந்தியாவந்தனம் வில க்கப்பட்டது. (உ௱அ)

போதஞானப் புகலிப் புனிதரைச்
சீதமுத்தின் சிவிகைமே லேற்றிடக்
காதல்செய்பவன் போலக் கருங்கடன்
மீதுதேரின்வந் தெய்தினன் வெய்யவன்.


(இ-ள்.) போதஞானப் புகலிப்புனிதரை=உண்மை ஞானத்தையுடைய சீகாழியில் அவதரித்த ஆளுடைய பிள்ளையாரை; சீதமுத்தின் சிவிகைமேலே ற்றிடக்காதல் செய்பவன்போல=குளிர்ந்த முத்துச் சிவிகையின்மே லேற்ற விருப்ப முற்றான்போல; கருங்கடன் மீது தேரின்வந் தெய்தினன் வெய்ய வன்=கரியகடலி னிடத்துப் பொற்றேரின்மேல் சூரியனுதித்தான்—எ-று. ()

ஆயபோழ்தி னரவென வார்ப்புடன்
றூயமுத்தின் சிவிகை சுடர்க்குடை
மேயசின்னங்கள் கொண்டுமெய் யன்பரோ
டேயவந்தணர் தாமெதிர் தோன்றினார்.

(இ-ள்.) ஆயபோழ்தினரவெனும் ஆர்ப்புடன்=அதுசமயத்து அரவென் னும் ஓசையோடு; தூயமுத்தின் சிவிகை சுடர்க்குடை மேயசின்னங்கள் கொண்டு=களங்கமில்லாத முத்துச் சிவிகையையும் ஒளியையுடைய குடை யையும் பொருந்திய திருச்சின்னங்களையும் எடுத்துக்கொண்டு; மெய்யன்ப ரோடேய வந்தணர் தாமெதிர் தோன்றினார்=மெய்ப்பத்தியையுடைய அடி யார்களோடு பொருந்த அந்தத்திருவரத்துறையின்கண் வாழும் பிராமணர்க ளும் பிள்ளையார் சந்நிதியில் வந்தார்கள்—எ-று. (உ௱௯)

வந்துதோன்றிய வந்தணர் மாதவர்
கந்தவார்பொழிற் காழிநன் னாடர்முன்
னந்தமில்சி ரரத்துறை யாதியார்
தந்தபேரரு ளாங்குவி ரென்றனர்.

(இ-ள்.) வந்து தோன்றிய அந்தணர் மாதவர்=வந்து பிள்ளையாரது திருமுன்னே தோன்றிய பிராமணர்களும் தவத்தையுடைய அடியார்களும்;



௫

தலயாத்திரைசெய்து மாறனபாடிககெழுந்தருள-அரத்துறைநாதர்முத்துச்சிவிகை-முத்துக்குடை முதலியவையளிக்க-வணங்கிநமஸ்கரித்

Koviloor Digital Library

கந்தவார் பொழிற்காழி நன்னாடர்முன்=வாசனையுடைய நீண்டசோலைகள் சூழ்ந்த சீகாழியென்னும் நல்ல திருநாட்டையுடைய பிள்ளையார் திருமுன் னின்று; அந்த மில்சீரரத்துறை யாதியார் தந்தபேர் அருள் தாங்குவீர் என்ற னர்=அளவில்லாத சிறப்பினையுடைய அரத்துறைநாதர் தந்தருளிய பெரிய திருவருளாகுய இவைகளைச் கைக்கொள்வீரென்று வணங்கிக்கூறினர்—எ-று.

காரியத்தைக்காரணமாக உபசரித்துப்பேரருளென்ருர். (௨௧௧)

என்றுதங்களுக் கீச ரருள்செய்த
தொன்றுமங்கொழி யாமை யுரைத்துமுன்
னின்றுபோற்றித் தொழுதிட நேர்ந்தது
மன்றுளாரரு ளென்று வணங்கினர்.

(இ-ள்.) என்று தங்களுக் கீசருள் செய்தது=இவ்வாறு தங்களுக்குத் திருவரத்துறை நாதர் அருளிச்செய்தது; ஒன்றுமங் கொழியாமை யுரைத்து முன்னின்று போற்றித்தொழுதிட= ஒன்றையும் பிள்ளையாரிடத்து ஒழியாது கூறித்திருமுன்னின்று துதித்துவணங்க; நேர்ந்தது மன்றுளார் அருளென்று வணங்கினர்=இவ்வாறு நிகழ்ந்தது நடேசப்பெருமானது திருவருளேஎன்று பிள்ளையார் பணிந்தருளினர்—எ-று.

நேர்ந்ததென்றதனுல், சிவபிரான் சொற்பனம் நிகழ்த்தியதும் யானமுத லியன அளித்ததும் குறிப்பித்ததுணர்க. (௨௧௨)

எந்தையீச னெனவெடுத் திவ்வருள்
வந்தவாறுமற் றிவ்வண மோவென்று
சிந்தைசெய்யுந் திருப்பதி கத்திசை
புந்தியாரப் புகன்றெதிர் போற்றுவார்.

(இ-ள்.) எந்தை யீசனெனஎடுத்து=எந்தையீசனென அடியெடுத்து; இவ்வருள் வந்தவாறுமற்று இவ்வணமோவென்று=இவ்வருள் வந்தவழிஇத் திருவருள் வந்தவாறு (வழிவருத்தத்தில்சிவபிரானைச் சிந்தித்துவந்த) வண்ணமோவென்று; சிந்தைசெய்யும் திருப்பதிகத்து=தாம் கருதிய பொருளையு டைய திருப்பதிகத்தின் கண்; இசைபுந்தியாரப் புகன்றெதிர் போற்றுவார்= இசையோடு திருவுளம் பொருந்த திருவாய் மலர்ந்தருளி ஆலயத்தின் எதிரே நின்று துதிக்கும் ஆளுடைய பிள்ளையார்—எ-று. (௨௧௩)

மெய்ம்மைபோற்றி விடாத விருப்பினாற்
றம்மையுன்னும் பரிசுதந் தாள்பவர்
செம்மைநித்தில யானச் சிறப்பரு
ளெம்மையாளுவப் பானின் றளித்ததே.

(இ-ள்.) மெய்ம்மைபோற்றி விடாதவிருப்பினால்=உண்மையை யோம் பி நீங்காதபத்தியினால்; தம்மையுன்னும்பரிசுதந்தாள்பவர்=தம்மைஎக்காலத்

Koviloor Digital Library

தும் இடைவிடாது சிந்திக்கும் பெரும்பேருன பரிசினை எமக்குத் தந்து ஆளு ஞ்சிவபிரானுல் ; செம்மை நித்தில யானச்சிறப்பருள்=அழகிய முத்துச்சிவிகையாகிய சிறப்பினை யருளுந் திருவருள் ; எம்மை யாளுவப்பா னின்றளித்தது=எம்மையாளாக உவக்கும்பொருட்டு இன்று அளிக்கப்பட்டது—எ-று.

எம்மை யாட்கொள்ளும் பொருட்டு நித்திலயானச் சிறப்பருள் அளித்ததெனக் கூட்டுக. அளித்ததெனச் செய்யப்படு பொருளை வினைமுதலாகவைத்து அதன்மேல் வினைமுதல்வினை ஏற்றப்பட்டது. (உகச)

(*)

திருநெல்வாயில் - திருஅரத்துறை- பண்-பியந்தைக்காந்தாரம்.
திருச்சிற்றம்பலம்.

எந்தையீசனெம்பெருமா னேறமர்கடவு ளென்றேத்திச்
சிந்தைசெய்பவர்க்கல்லால் சென்றுகைகூடுவ தன்றாற்
கந்தமாமலருந்திக் கடும்புனனிவாமல்கு கரைமே
லந்தண்சோலைநெல்வாயி லரத்துறையடிகடம் மருளே.

ஈரவார்சடைதன்மே லிளம்பிறையணிந்தவெம்பெருமான்
சீருஞ்செல்வமுமேத்தாச் சித்தர்கடொழச்செல்வதன்றால்
வாரிமாமலருந்தி வருபுனனிவாமல்குகரைமே
லாருஞ்சோலைநெல்வாயி லரத்துறையடிகடம்மருளே.

பிணிகலந்தபுன்சடைமேற் பிறையணிசிவனெனப்பேணிப்
பணிகலந்துசெய்யாத பாவிகடொழச்செல்வதன்றான்
மணிகலந்துபொன்னுந்தி வருபுனனிவாமல்குகரைமே
லணிகலந்தநெல்வாயி லரத்துறையடிகடம்மருளே.

துன்னவாடையொன்றுடுத்துத் தூயவெண்ணீற்றினராகி
யுன்னிநைபவர்க்கல்லா லொன்றுங்கைகூடுவதன்றாற்
பொன்னுமாமணியுந்திப் பொருபுனனிவாமல்குகரைமே
லன்னமாருநெல்வாயி லரத்துறையடிகடம்மருளே.

வெருகுரிஞ்சுவெங்காட்டி லாடியவிமலனென்றுள்கி
யுருகிநைபவர்க்கல்லா லொன்றுங்கைகூடுவதன்றான்
முருகுரிஞ்சுபூஞ்சோலை மொய்ம்மலர்சுமந்திழிநிவாவந்
தருகுரிஞ்சுநெல்வாயி லரத்துறையடிகடம்மருளே.

உரவுநீர்ச்சடைக்கரந்த வொருவனென்றுள்குளிர்ந்தேத்திப்
பரவிநைபவர்க்கல்லாற் பரிந்துகைகூடுவதன்றாற்
குரவநீடுயர்சோலைக் குளிர்புனனிவாமல்குகரைமே
லரவமாருநெல்வாயி லரத்துறைபடிகடம்மருளே.

Koviloor Digital Library

நீலமாமணிமிடற்று நீறணிசிவனெனப்பேணுஞ்
சீலமாந்தர்கட்கல்லாற் சென்றுகைகூடுவதன்றாற்
கோலமாமலருந்திக் குளிர்புனனிவாமல்குகரைமே
லாலுஞ்சோலைநெல்வாயி லரத்துறையடிகடம்மருளே.

செழுந்தண்மால்வரையெடுத்த செருவலியிராவணனலற
வழுந்தவூன்றியவிரலான் போற்றியெனபார்க்கல்லதருளான்
கொழுங்கனிசுமந்துந்திக் குளிர்புனனிவாமல்குகரைமே
லழுந்துஞ்சோலைநெல்வாயி லரத்துறையடிகடம்பருளே.

நுணங்குநூலயன்மாலு மிருவருநோக்கரியானை
வணங்கிநைபவர்க்கல்லால் வந்துகைகூடுவதன்றால்
மணங்கமழ்ந்துபொன்னுந்தி வருபுனனிவாமல்குகரைமே
லணங்குஞ்சோலைநெல்வாயி லரத்துறையடிகடம்மருளே.

சாக்கியப்படுவாருஞ் சமண்படுவார்களுமற்றும்
பாக்கியப்படகில்லாப் பாவிசடொழச்செல்வதன்றாற்
பூக்கமழ்ந்துபொன்னுந்திப் பொருபுனனிவாமல்குகரைமே
லார்க்குஞ்சோலைநெல்வாயி லரத்துறையடிகடம்மருளே.

கரையினார்பொழில்சூழ்ந்த காழியுண்ஞானசம்பந்த
னுறையும்பூம்புனல்பரந்த வரத்துறையடிகடம்மருளை
முறைமையாற்சொன்னபாடன் மொழியுமாந்தர்தம்வினைபோய்ப்
பறையுமையுறவில்லைப் பாட்டிவைபத்தும்வல்லார்க்கே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-அரத்துறைநாதர். தேவியார்-ஆநந்தநாயகியம்மை.

பொடியணிந்த புராண னரத்துறை
யடிகடம்மரு ளேயிது வாமெனப்
படியிலாதசொன் மாலைகள் பாடியே
நெடிதுபோற்றிப் பதிக நிரப்பினார்.

(இ-ள்.) பொடியணிந்த புராணனரத்துறை யடிகடம்மருளே யிதுவாமென=விபூதியணிந்த திருமேனியையுடைய பழையோனாகிய திருவரத்துறையிலெழுந்தருளிய இறைவன் திருவருள் (சிந்தை செய்பவர்க்கன்றி கைகூடுத லில தென்னும்) இத்தன்மையதேயாமென்று; படியிலாத சொன்மாலைகள் பாடி=ஒப்பில்லாத செந்தமிழ்ச் சொல்லாலாகிய செய்யுண்மாலைகளைப்பாடியருளி; நெடிதுபோற்றிப் பதிகம் நிரப்பினார்=அச்செய்யுள்கள் தோறும் அப்

Koviloor Digital Library.

பொருளமைத்துத் துதித்துத் திருக்கடைக் காப்பையும் அருளிப்பதிகத்தை நிரப்பினார்—எ-று.

போற்றுவார் எந்தை யீசனெனவெடுத்து அடிகடம் அருளிறுவாமெனப் பாடிப் போற்றிப் பதிகத்தை நிரப்பினாரெனமுடிக்க. (உகரு)

சோதிமுத்தின் சிவிகைசூழ் வந்துபார்
மீதுதாழ்ந்துவெண் ணீற்றொளி போற்றிநின்
றாதியாரரு ளாதலி லஞ்செழுத்
தோதியேறினா ருய்ய வுலகெலாம்.

(இ-ள். சோதிமுத்தின் சிவிகைசூழ்வந்து=ஒளிபொருந்திய முத்தாறு ய சிவிகையினைப்பிரதட்சணஞ்செய்து ; பார்மீது தாழ்ந்து=பூமியின்மேல் திருமேனிதோயப்பணிந்து ; வெண்ணீற் றொளிபோற்றி நின்று=வெள்ளிய விபூதியின் ஒளிபோன்ற வொளியினுடைய முத்தச்சிவிகையின் ஒளியைத்துதித்துநின்று ; ஆதியாரருளாதலி லஞ்செழுத் தோதியேறினா ருய்யவுலகெலாம்= அத்திருமுத்தின் சிவிகை அரத்துறைநாதர் திருவருள் வடிவாதலால் திருவஞ்செழுத்தை யோதியருளி எல்லாவுலகமும் ஈடேற அதில் எழுந்தருளினார்—எ-று.

பிள்ளையார் சூழ்வந்து தாழ்ந்து போற்றி நின்று அஞ்செழுத்தோதி ஏறினாரெனமுடிக்க.


"உலகெலாம்" என்றது இறைவனெடுத்த மங்கலமொழியாதலின் முதற் கண்ணும், "நிலவி உலகெலாம்" என இறுதிக்கண்ணும், வைத்தவாறுபோல, இடையிலும், "உய்ய உலகெலாம்" எனவைத்தா ரென்றல் ஆன்றோர்வழக்கு. (உகசு)

வேறு.

தொண்டரார்த்தனர் சுருதிகளார்த்தன தொல்லை
யண்டரார்த்தன ரகிலமுமார்ப்புட னெய்தக்
கொண்டலார்த்தன முழவமுமார்த்தன குழுமி
வண்டருப்பொலி மலர்மழையார்த்தது வானம்.

(இ-ள்.) தொண்டரார்த்தனர்=அடியார்கள் அரவென ஆரவாரித்தனர்; சுருதிகளார்த்தன=வேதங்கள் ஆரவாரித்தன ; தொல்லையண்டரார்த்தனர்= பழையவிண்ணுலகின் கண்வாழும் தேவர்களும் ஆரவாரித்தனர் ; அகிலமுமார்ப்புட னெய்தக்கொண்டலார்த்தன=எல்லாப்பொருள்களும்ஆரவாரத்தாலுய ஒலியைப்பொருந்தும்படி மேகங்களும் ஆரவாரித்தன ; குழுமிமுழவமுமார்த்தன=நெருங்கித் தேவதுந்துபியும் ஆரவாரித்தன ; வண்டருப்பொலி மலர் மழையார்த்ததுவானம்=வண்டுகள்நீங்காத பொலிவையுடைய பூமழையும் வானத்தின்கண் ஆரவாரித்தது—எ-று.

Koviloor Digital Library



ஜகநீசனளித்த - சிவிகைமீதாரேகணித்து திருவாத்துறைஆலயத்தின் செல்லல்.

Koviloor Digital Library

எல்லாப்பொருளும் ஆர்ப்புடனெய்தலாவது, மேகத்தொலி பேரொலி யாதலின், அது கம்பமுண்டாக, மூர்த்தப்பொருளோடியைதலாம்; ஒலியானது விபுகுணம், அதுமூர்த்தகுணம் அமூர்த்தகுணம் என இருவகையாதலின்

வளையுமார்த்தன வயிர்களுமார்த்தன மறையின்
கிளையுமார்த்தன கிளைஞருமார்த்தனர் கெழுவுங்
களைகணார்த்ததோர் கருணையினார்த்தனமுத்து
விளையுமாக்கதிர் வெண்குடையார்த்தது மிசையே.

(இ-ள்.) வளையுமார்த்தன=சங்குகளும் ஒலித்தன; வயிர்களுமார்த்தன கொம்புகளும் ஒலித்தன; மறையின் கிளையுமார்த்தன=வேதங்களின் சாகைகளும் ஆரவாரித்தன; கிளைஞருமார்த்தனர்=உறவினர்களாகிய வேதியர்களும் ஆரவாரித்தனர்; கெழுவுங்களைக ணார்த்ததோர் கருணையினார்த்தன=ஆன்மாக்களிடங்கூடி உயிர்க் குயிராய் நின்ற சிவபிரானது கிருபையினால்; முத்து விளையுமாக்கதிர் வெண்குடை யார்த்தது மிசையே=முத்தினாலாகிய பெரியகிரணத்தையுடைய வெள்ளிய குடையும் மேலே (கவிக்கப்பட்டு) ஆரவாரித்தது—எ-று.

கருணையினார்த்தன என்புழி ஆர்த்தல் = கட்டுதல் ஈண்டு இயைபினால் பிணித்தல் மேற்று. ஓர்=அசைநிலை. களைகணாரது என்றது, களைகணார்த்த தெனவிகாரமாயிற்று. (உகஅ)

பல்குவெண்கதிர்ப் பத்திசேர்நித்திலச் சிவிகை
புல்குநீற்றொளி யுடன்பொலிபுகலிகா வலனா
ஈல்குவெள்வளை யலைத்தெழுமணிநிரைத் தரங்க
மல்குபாற்கடல் வளர்மதியுதித்தென வந்தார்.

(இ-ள்.) பல்குவெண்கதிர் பத்திசேர்நித்திலச்சிவிகை=நிறைந்த வெள்ளிய கிரணத்தையுடைய முத்துகளின் பத்திசேர்ந்த சிவிகையில்; புல்கு நீற்றொளியுடன் பொலிபுகலி காவலனார்=நீங்காத திருநீற்று ஒளியோடு விளங்கும் சீகாழிக்குத் தலைவராகிய ஆளுடைய பிள்ளையார்; அல்குவெள்வளை யலைத் தெழுமணிநிரைத் தரங்கமல்கு=பொருந்திய வெள்ளிய சங்குகளை அலைத்தெழாநின்ற அழகிய வரிசையான அலைகள் நிறைந்த; பாற்கடல் வளர் மதியுதித்தெனவந்தார்=பாற்கடலில் வளர்கின்ற இளம்பிறை உதித்தாற்போல எழுந்தருளி வந்தார்—எ-று. (உகக)

நீடுதொண்டர்கண் மறையவரேனையோர் நெருங்கி
மாடுகொண்டெழு மகிழ்ச்சியின் மலர்க்கைமேற் குவித்தே
யாடுகின்றன ரபர்ந்தன ரளவிலா னந்தங்
கூடுகின்றகண் பொழிபுனல்வெள்ளத்திற் குளித்தார்.

Koviloor Digital Library

(இ-ள்.) நிடுதொண்டர்கண்மறையவரேனையோர் நெருங்கி = பத்தியி குந்த அடியார்களும் வேதியர்களும் அவர் ஒழிந்த ஏனையோரும் இடமின்றி நெருங்கி (அத்திருப்பொலிவைநோக்கி) ; மாடுகொண் டெழுமகிழ்ச்சியின் மலர்க்கை மேற்குவித்தே=தமது (மனத்திலிடத்து) இடம்கொண்டு நிகழாநின்ற மகிழ்ச்சியினல் மலர்போலும் கைகளைசிரசின்மேல்கூப்பி ; ஆடுகின்றனரயர்ந்தன ரளவிலானந்தம்=ஆனந்தக்கூத்து ஆடுகின்றவராயும் அதனால் பரவசம் அடைந்தவராயும் அளவுபடாத ஆனந்தத்தால் ; கூடுகின்ற கண்பொழி புனல் வெள்ளத்திற் குளித்தார்=கண்களினின்றும் பொழியும் ஆனந்தபாஷ்பமாகிய வெள்ளத்தில் மூழ்கினர்—எ-று. (௨௨0)

செய்யபொன்புனை வெண்டாளத்தணி சிறக்கச்
சைவமாமறைத் தலைவர்பாற்பெறுந்தனிக் காளம்
வையமேழுடன் மறைகளுநிறைதவத் தோரு
முய்யஞானசம் பந்தன்வந்தானென வூத.

(இ-ள்.) செய்யபொன்புனை வெண்டாளத் தணிசிறக்க=சிவந்தபொன்னால் வினைந்து வெள்ளியமுத்துகளினால் அழகுபெற ; சைவமாமறைத் தலைவர்பாற் பெறுந்தனிக்காளம்=பெரிய சைவவைதிகங்களுக்குத்தலைவராகியஅரத்துறை நாதரிடத்து பெற்ற ஒப்பில்லாத திருமுத்துக் காளமானது ; வையமேழுடன் மறைகளு நிறைதவத்தோரும் உய்ய=ஏழுலகங்களோடு வேதங்களும் நிறைந்த தவத்தினரும் ஈடேற ; ஞானசம்பந்தன் வந்தானெனவூத=திருஞான சம்பந்தப் பிள்ளையார் வந்தா ரென்று திருமுன் னூதா நிற்பவும்—எ-று. (௨௨௧)

சுற்றுமாமறைச் சுருதியின்பெருகொலி நடுவே
தெற்றினர்புர மெரித்தவர் தருதிருச் சின்ன
முற்றுமானவன் ஞானமேமுலைசுரந் தூட்டப்
பெற்றபாலறு வாயன்வந்தானெனப் பிடிக்க.

(இ-ள்.) சுற்றுமாமறைச் சுருதியின் பெருகொலி நடுவே=பிள்ளையாரைச் சூழ்ந்தபெரிய வேதங்களின் மிக்க ஆரவாரத்தினிடையே ; தெற்றினர் புரமெரித்தவர் தருதிருச்சின்னம்=மாறுபட்டபகைவரது திரிபுரங்களைப் புன்னகை செய்து எரித்த அரத்துறைநாதர்தந்தருளிய திருச்சின்னம் ; முற்றுமானவன் ஞானமே முலைசுரந் தூட்டப்பெற்ற= (சித்தும்சடமுமாயபொருள்) முழுவது நிறைந்தவளாகிய உமாதேவியார் ஞானத்தையே திருமுலைசுரந்து உண்பிக்கப்பெற்ற ; பாலறுவாயன் வந்தானெனப்பிடிக்க=பால்மணம் விட்டு நீங்காத திருவாயர் எழுந்தருளினரென்று ஊதவும்—எ-று. (௨௨௨)

புணர்ந்தமெய்த்தவக் குழாத்தொடும்போதுவார் முன்னே
யிணைந்தநித்திலத் திலங்கொளிநலங்கிளர் தானா
யணைந்தமாமறை முதற்கலையகிலமு மோதா
துணர்ந்தமுத்தமிழ் விரகன்வந்தானென வூத.

Koviloor Digital Library

(இ-ள்.) புணர்ந்த மெய்த்தவக் குழாத்தொடும் போதுவார்முன்னே= தம்மோடு உடன்சென்ற மெய்த் தவத்தையுடைய அடியார் கூட்டங்களுடன் எழுந்தருளும் பிள்ளையார் திருமுன் ; இணைந்த நித்தி லத்திலங்கொளி நலங்கி ளர்தாரை=தம்முள்மாறுபடாத முத்துக்களால் விளங்கும் ஒளியின்நலம்மிக்க முத்தின்தாரை ; அணைந்தமாமறை முதற்கலை யகிலமும் ஓதாதுஉணர்ந்த= தம்மையடையப் பெரிய வேதமுதலிய எல்லாநூல்களையும்ஓதாது உணர்ந்த; முத்தமிழ் விரகன்வந்தா னெனவூத=முத்தமிழ் விரகன்வந்தானென்று ஒலியாநிற்பவும்—எ-று.

முன்னர்நூலாசிரியர், பொங்கலூதும் பொருவருஞ்சின்னமும் அங்கணுதரருளினற் கண்டனர் என்றதனல் ஈண்டு - காளம், தாரை, என்பனபரியாயங்களாய் முத்தின் சின்ன மொன்றனையே குறித்ததெனின்:—

ஞானசம்பந்தன், பாலறுவாயன், முத்தமிழ் விரகன், என்னும் மூன்றுதிருநாமங்களையும் ஒருங்கு கூறிச்சின்னம் பிடிக்கவென முடித்தலமையும். அவ்வாறு கூருது அந்நாமங்கண் மூன்றையு முறையே விதந்து கூறிச்சைவ மாமறைத்தலைவர் பாற் பெறுந்தனிக்காள மூதவெனவும், தெற்றினர் புரமெரித்தவர் தருதிருச்சின்னம் பிடிக்கவெனவும், நலங்கிளர் தாரையூதவெனவும், வெவ்வேறு செய்யுட் கூறுதலானும் பின்னும் சின்னம், தனிக்காளம், தாரை, சிரபுரத்தாண்டகை வந்தானென்னுந் தகைமைவிளம்ப ஏற்ற திருப்பெயர் சாற்ற வெனக் கூறுதலானும்,மூன்றுமேபெற்றனவென்பது, கருத்தாகக்கூறினவென்பது கொள்ளக்கிடத்தலின், அதுபொருந்தாதென்க. (உ௩)

தெருளுமெய்க்கலை விளங்கவும்பாருளோர் சிந்தை
யிருளுநீங்கவு மெழுதுசொன்மறையளிப் பவர்தாம்
பொருளுஞானமும் போகமும்போற்றியென் பாருக்
கருளுமங்கணர் திருவரத்துறையைவந் தணைந்தார்.

(இ-ள்.) தெருளுமெய்க் கலைவிளங்கவும் பாருளோர்சிந்தையிருளும்நீங்கவும்=தெளிவடையச்செய்யும் மெய்ந்நூல்களாகிய வேதாகமநூல்கள் உலகின்கண் நிலைபெறவும் அதனல் உலகின்கண் உள்ளாரது மனத்திருளாகிய அஞ்ஞானம் நீங்கவும் ; எழுதுசொன்மறை யளிப்பவர்தாம்=எழுதும்தமிழ்ச் சொல்லானுய வேதத்தை அருளித்தருளும் பிள்ளையார் ; பொருளும் ஞானமும் போகமும் போற்றியென்பாருக் கருளும்=பொருளினையும் ஞானத்தினையும் போகத்தினையும் இம்மைக்கண் துதிக்கும் அடியாருக்குக்கொடுக்கும் ;அங்கணர் திருவரத்துறையை வந்தணைந்தார்=காருண்ணியத்தை யுடைய சிவபெருமானது திருவரத்துறையைவந்து அடைந்தருளினர்—எ-று.

இருளுமென்ற உம்மையால் கன்மமாயைகளுங்கொள்க.

அடியார்க்கு மறுமையென்னும் புண்ணிய வுலகடையும் இச்சையின்மையின் இம்மைக்கண்ணே ஞானமும் போகமும் சிவபெருமா னருள்வனென

Kovilpatti Digital Library

க்கூறப்பட்டது. ஆவ்வாறுதல் பிள்ளையார் முதலியோரது சரிதத்தில் ஞான மளித்தலும் பொருளளித்தலும் சிவிகைமுதலிய போகமளித்தலும் போந்த வாறுணர்க. (உஉச)

வந்துகோபுர மணிநெடுவாயில்சேய்த் தாகச்
சந்தமுத்திலச் சிவிகைநின் றிழிந்துதாழ்ந் தெழுந்து
சிந்தையார்வமு மகிழ்ச்சியும் பொங்கிமுன் செல்ல
வந்திநாண்மதி யணிந்தவர்கோயிலுள் ளடைந்தார்.

(இ-ள்.) கோபுரமணி நெடுவாயில் சேய்த்தாகவந்து=திருக்கோபுரத்தி னது மணிகள் அழுத்திய நெடிய திருவாயிலுக்குச் சிறிதுதூரத்தே வந்தருளி; சந்தமுத்திலச்சிவிகை நின்றிழிந்து தாழ்ந்தெழுந்து=அழகுள்ள முத்துச்சிவி கையினின்றும் பூமியிலிழிந்தருளி அத்தூலலிங்கமாகிய கோபுரத்தை வணங் கி யெழுந்து; சிந்தையார்வமும் மகிழ்ச்சியும் பொங்கிமுன்செல்ல=திருவு ளத்தில் சிவநேசமும் அதனால் மகிழ்ச்சியும் அதிகரித்து முன்செல்ல; அந்தி நாண்மதி யணிந்தவர்கோயிலுள் ளடைந்தார்=அந்திப்போதில் தோன்றும் இளம்பிறையை யணிந்த இறைவரது திருக்கோயிலுள்ளாகும் அடைந்தரு ளினார்—எ-று. (உஉரு)

மன்னுகோயிலை வலங்கொண்டு திருமுன்பு வந்து
சென்னியிற்கரங் குவித்துவீழ்ந்தன்பொடு திளைப்பா
ரென்னையும்பொரு ளாகவின்னருள்புரிந் தருளும்
பொன்னடித்தலத் தாமரைபோற்றியென் றெழுந்தார்.

(இ-ள்.) மன்னுகோயிலை வலங்கொண்டு திருமுன்புவந்து=நிலைபெற்ற திருக்கோயிலைப் பிரதட்சணஞ்செய்து ஸ்வாமி சந்நிதியில்வந்து; சென்னி யிற் கரங்குவித்து வீழ்ந் தன்பொடு திளைப்பார்=தமது சிரதலில் திருக்கரங் களைக்கூப்பி நிலத்தில் வீழ்ந்து அன்பில் மூழ்கியபிள்ளையார்; என்னையும்பொ ருளாக வின்னருள் புரிந்தருளும்=அடியேனையும் ஒருபொருளுளாகக் கருதி இனிய திருவருளைச்செய்தருளும்; பொன்னடித் தலத்தாமரைபோற்றியென் றெழுந்தார்=பொன்போலும் திருவடித்தாமரைமலர்களுக்கு நமஸ்காரமென் று எழுந்தார்—எ-று. (உஉசு)

வேறு.

கூடினார்கர கமலங்கள்சொரிந்திழி கண்ணீ
ராடினார்திரு மேனியிலரத்துறை விரும்பி
நீடினார்திரு வருட்பெருங் கருணையே நிகழப்
பாடினார்திருப் பதிகமேழிசையொடும் பயில.

(இ-ள்.) கூடினார் கரகமலங்கள்=கரங்களாகிய தாமரைமலர்களை மேற் கூப்பி; திருமேனியிற் சொரிந்திழிகண்ணீராடினார்=தமது திருமேனிமுழுதும்

Koviloor Digital Library

கண்களினின்றும் (இடைவிடாது) சிந்தும் ஆனந்தபாஷ்பவெள்ளத்தில் மூழ்கினர் ; அரத்துறைவிரும்பி நீடினர் திருவருட்பெருங் கருணையேநிகழ=திருவரத்துறையை விரும்பி நிலைபெற்று எழுந்தருளிய சிவபிரானது திருவருளாகிய பெருங்கருணையையேபொருந்தும்படி ;பாடினர்திருப்பதிகமேழிசையொடும்பயில=குரல்முதலிய ஏழிசைகளும் அமையத் திருப்பதிகம் பாடியருளினர்—எ-று. (உ௨எ)

இசைவிளங்கிட வியல்பினிற்பாடிநின் றேத்தி
மிசைவிளங்குநீர் வேணியாரருளினுன் மீண்டு
திசைவிளங்கிடத் திருவருள்பெற்றவர் சிலநா
ளசைவில்சீர்த்தொண்டர் தம்முடனப்பதி யமர்ந்தார்.

(இ-ள்.) இசைவிளங்கிட வியல்பினிற்பாடி நின்றேத்தி=ஏழிசைகளும் விளங்கமுறைப்படித் திருப்பதிகத்தைப் பாடிநின்று துதித்து ; மிசைவிளங்குநீர் வேணியா ரருளினுன் மீண்டு=வானத்தின்கண் விளங்கிய கங்கையையணிந்த சடாமகுடத்தையுடைய அரத்துறைநாதர் திருவருளினால் ஆலயத்தினின்றும் மீண்டு ; திசைவிளங்கிடத் திருவருள் பெற்றவர்=எத்திசையிலுள்ளோருஞ் சிவஞானத்தால் விளங்கும்படித் திருவருளைப்பெற்ற பிள்ளையார் ; அசைவில் சீர்த்தொண்டர் தம்முடன் சிலநாள் அப்பதியமர்ந்தார்=சலியாத பக்திச்சிறப்பினையுடைய அடியாரோடு அரத்துறையென்னுந் திருப்பதியில் சிலநாள் வீற்றிருந்தருளினர்—எ-று.

அசைவில் சீர்த்தொண்டர் என்பது=ஆக்கம் கேடுகளான்வரும் துன்பவின்பங்களில் வசப்படாமை.

"பூதமைந்து நிலையிற் கலங்கிலும் மாதொர்பாகர் மலர்த்தாள் மறப்பிலார்"என்றதனுலுமுணர்க. (உ௨அ)

தேவர்தம்பிரான் றிருவரத்துறையினி லிறைஞ்சி
மேவுநாள்களில் விமலனூர்நெல்வெண்ணெய் முதலாத்
தாவிலன்பர்க ளம்முடன் றொழுதுபின் சண்பைக்
காவலாரருள் பெற்றுடன் கலந்துமீண் டணைந்தார்.

(இ-ள்.) தேவர்தம்பிரான் றிருவரத்துறையினி லிறைஞ்சி=தேவர்பெருமானாகிய பரமசிவத்தின் திருவரத்துறையை வணங்கி ; மேவுநாட்களில்விமலனூர் நெல்வெண்ணெய்முதலா=அமர்ந்தருளி யிருந்தகாலத்தில் வெண்ணெயப்பரது திருநெல்வெண்ணெய்முதலியதிருப்பதிகளை ; தாவிலன்பர்கள் தம்முடன் றொழுது=புனிதராகிய அடியார்களுடன் வணங்கி விடைகொண்டு ; பின்சண்பைக் காவலாரருள் பெற்றுடன் கலந்து மீண்டணைந்தார்=பின்பு சீகாழிப்பிள்ளையார் திருஅருள்பெற்றுத் திருக்கூட்டத்தோடு சேர்ந்துமீளவும் அரத்துறையை அடைந்தருளினர்—எ-று. (உ௨௯)

Koviloor Digital Library

விளங்குவேணுபு ரத்திருத்தோணி வீற்றிருந்த
களங்கொள்கண்டர்தங் காதலியாருடன் கூட
வுளங்கொளப்புகுந் துணர்வினில் வெளிப்பட வுருகி
வளங்கொள்பூம்புனற் புகலிமேற்செலமனம் வைத்தார்.

(இ-ள்.) விளங்குவேணு புரத்திருத் தோணிவீற்றிருந்த களங்கொள்கண்டர்=செல்வங்களால் விளங்காநின்ற சீகாழியில் திருத்தோணி யென்னும் ஆலயத்தில் எழுந்தருளிய விஷத்தைத்தரித்த கண்டத்தையுடைய தோணியப்பர்; தங்காதலி யாருடன்கூட=தமதுபிராட்டியாராகிய பெரியநாயகியாரோடு; உளங்கொளப் புகுந்துணர்வினில்வெளிப்பட = தமது திருவுள்ளத்தில் பொருந்தும்படி எழுந்தருளி அறிவின்கண் விளங்க; உருகி வளங்கொள் பூம்புனற் புகலிமேற் செலமனம் வைத்தார்=அதனால் மனம் உருகிபல் வளங்கள் பொருந்திய பொருளினை யுடைய நீர்மிக்க சீகாழிக்குச் செல்லத்திருவுள்ளங் கொண்டார்—எ-று. (உரு0)

அண்ணலார்திரு வரத்துறையடிகளை வணங்கி
நண்ணுபேரரு ளால்விடைகொண்டுபோய் நடங்கொண்
டுண்ணிறைந்தபூங் கழலினையுச்சிமேற் கொண்டே
வெண்ணிலாமலர் நித்திலச்சிவிகைமேற் கொண்டார்.

(இ-ள்.) அண்ணலார் திருவரத்துறை யடிகளைவணங்கி=பெருமையிற் சிறந்த அரத்துறை நாதனைவணங்கி; நண்ணுபேரருளால் விடைகொண்டு போய் நடங்கொண்டு=நிலைபெற்ற அவரது பெரிய திருவருளால்விடைபெற்றுக்கொண்டு மீண்டு ஆனந்தக் கூத்தாடி; உண்ணிறைந்த பூங்கழலினை உச்சிமேற்கொண்டு=தமது திருவுள்ள முழுதும் நிறைந்த பொலிவினையுடைய திருவடிகளைச் சிரசின்மேற்கொண்டு; வெண்ணிலாமலர் நித்திலச்சிவிகை மேற்கொண்டார்=வெள்ளியகிரணம் விரிந்த திருமுத்துச்சிவிகையின்மேற்கொண்டருளினர்—எ-று.

எவ்வயிற் பெயரும் வெளிப்படத்தோன்றி அவ்வயின் நிலையல் செவ்விதென்ப என்றதனால் இச்செய்யுள்கள் தோன்று எழுவாயுடையன இவ்வாறு வந்துழி யெல்லாம் கொள்க. (உருக)

சிவிகைமுத்தினிற் பெருகொளிதிசையெலாம் விரிக்கக்
கவிகைவெண்மதிக் குளிரொளிகதிர்செய்வான் கலப்பக்
குவிகைமேற்கொண்டு மறையவர்குணலையிட் டாடப்
புவிகைமாறின்றிப் போற்றவந்தருளினர் போந்தார்.

(இ-ள்.) சிவிகை முத்தினிற் பெருகொளி திசையெலாம் விரிக்க=திருமுத்துச் சிவிகையின் முத்துக்களாலாய பெருகிய ஒளியானதுதிக்குகள்தோறும் விரியாநிற்கவும்; கவிகைவெண் மதிக்குளிரொளி கதிர்செய்வான்கலப்ப=முத்துக் குடையாகிய வெள்ளிய சந்திரனது குளிர்ந்த ஒளியானது சூரிய

Koviloor Digital Library

கிரணத்தால் விளங்குகின்ற ஆகாயத்தில் பரவவும் ; குவிகைமேற் கொண்டு மறையவர் குணலையிட்டாட=குவித்த கைகளை உச்சிமேற்கொண்டு பிராமணர் கள் குணலையிட்டுக் கூத்தாடவும் ; புவிகை மாறின்றிப் போற்ற வந்தருளினார் போந்தார்=நிலவுலகத்தாரால் யாதொருகைம்மாறுமின பலனையும் அடையாமல் அவரை இரட்சிக்கஎழுந்தருளியஆளுடையபிள்ளையார் போந்தருளினர்—எ-று.

குணலை என்பது மகிழ்ச்சியின் மிகுதியால் வாயினின்றும் வெளிப்படும் ஓர் ஒலி. (உ௯உ)

மறைமுழங்கின தழங்கினவண்டமிழ் வயிரின்
குறைநரன்றன முரன்றனவளைக்குலங் காள
முறையியம்பின வியம்பலவொலித்தன முரசப்
பொறைகறங்கின பிறங்கினபோற்றிசெய் யரவம்.

(இ-ள்.) மறைமுழங்கின தழங்கின வண்டமிழ்=வேதங்கள் ஆரவாரித்தன வண்மையையுடைய திருநெறித்தமிழ் வேதமும் ஒலித்தன ; வயிரின்குறை நரன்றன=ஊது கொம்புக ளொலித்தன ; முரன்றன வளைக்குலங்காளம்=சங்குகளும் காளங்களும் ஒலித்தன ; முறையியம்பின வியம்பலவொலித்தன=முறையாக உளதுவனவாகிய பலவாத்தியங்களும் ஒலித்தன ; முரசப்பொறை கறங்கின=கொட்டுகின்ற முரசமாகிய பெரியவாத்தியங்களும் ஒலித்தன ; பிறங்கின போற்றி செய்யரவம்=அரவென்று துதிசெய்கின்ற ஓசைகள் ஒலித்தன—எ-று.

பொறையென்பது மலை பொறை போன்றிருத்தலிற் பொறையென்றார்.

உடையபிள்ளையார் வருமெல்லையுள்ளவப் பதியோர்
புடையிரண்டினுங் கொடியொடுபூந்துகில் விதான
நடைசெய்காவணந் தோரணம்பூகநற் கதலி
மிடையுமாலைகள் நிறைகுடம் விளக்கொடு நிரைத்தார்.

(இ-ள்.) உடையபிள்ளையார் வருமெல்லை யுள்ளவப்பதியோர்=நடுநாட்டின்கண் நிவாநதிக்கரையைச்சேர்ந்த திருவரத்துறைமுதலிய ஸ்தலங்களை ஆளுடையபிள்ளையார் தெரிசித்துக்கொண்டு சீகாழிக்கு எழுந்தருளும் சமயத்து இடையிலுள்ளபெரும்புலியூர் முதலிய திருப்பதிகளிலிருக்கும் அடியார் கள் ; புடையிரண்டினுங்கொடியொடு பூந்துகில்விதானம்=இரண்டுபக்கங்களிலும் கொடிகளோடு பொலிவினையுடைய புடைவைகளாறுய மேற்கட்டிகளையும் ; நடைசெய் காவணந்தோரணம்=நடைக்காவணங்களையும் தோரணங்களையும் ; பூகநற்கதலி=கமுகுகளையும் நல்லவாழைமரங்களையும் ; மிடையுமாலைகள் நிறைகுடம்விளக்கொடு நிரைத்தார்=நெருங்கிய பூமாலைகளையும் நிறைகுடங்களையும் விளக்கோடு வரிசையாக வைத்தார்கள்—எ-று.

நடைக்காவணம் நடைப்பந்தல். (உ௯௩)

Koviloor Digital Library

அனையசெய்கையா லெதிர்கொளும்பதிகளா னவற்றின்
வினைதரும்பவந் தீர்ப்பவர்கோயில்கண் மேவிப்
புனையும்வண்டமிழ் மொழிந்தடி பணிந்துபோந் தணைந்தார்
பனைநெடுங்கைமா வுரித்தவர்மகிழ்பெரும் பழுவூர்.

(இ-ள்.) அனையசெய்கையால் எதிர்கொளும் பதிகளானவற்றின்=அத்தன்மையான செய்கைகளோடு எதிர்கொண்டுவணங்கும் அத்திருப்பதிகளில்; வினைதரும் பவந்தீர்ப்பவர் கோயில்கண்மேவி=இருவினைகாரணமாக வரும் பிறவிகளை நீக்கியருளும் சிவபிரானார் எழுந்தருளிய திருக்கோயில்களையடைந்து ; புனையும்வண்டமிழ்மொழிந்து=சொற்களால் புனைந்தருளிய வளம்பொருந்திய திருப்பதிகங்களைப்பாடியருளி ; அடிபணிந்து அத்தலங்களில் சிவபிரானது திருவடிகளைவணங்கி அங்குநின்று ; பனைநெடுங்கை மாவுரித்தவர்மகிழ்பெரும்பழுவூர்போந்தணைந்தார்=பனைபோலும் நீண்டதுதிக்கையையுடைய கயாசுரனென்னும் யானையுரித்த வடமூலநாதர் எழுந்தருளிய திருப்பழுவூர் விரட்டத்தை யடைந்தருளினார்—எ-று. (உ௫௫)

வேறு.

அங்கணைந் திளம்பிறை யணிந்தசென்னியார்
பொங்கெழிற் கோபுரந் தொழுதுபுக்கபின்
றுங்கநீள் விமானத்தைச் சூழ்ந்து வந்துமுன்
பங்கயச் சேவடி பணிந்து பாடுவார்.

(இ-ள்.) அங்கணைந்திளம்பிறை யணிந்தசென்னியார் = அத்தலத்தையடைந்து இளம்பிறையணிந்த சடாமகுடத்தையுடைய சிவபிரானாரது ; பொங்கெழிற் கோபுரந்தொழுதுபுக்கபின்=பொலிந்தவழகினையுடைய திருக்கோபுரத்தைவணங்கி உள்ளேசென்றருளியபின் ; துங்கநீள்விமானத்தைச் சூழ்ந்துவந்துமுன்=மிகவும் உயர்ந்த திருவிமானத்தை பிரதட்சணஞ்செய்து திருமுன்னேநின்று ; பங்கயச்சேவடிபணிந்து பாடுவார்=தாமரைமலர்போன்ற சிவந்த திருவடிகளைவணங்கித் திருப்பதிகம்பாடும் ஆளுடையபிள்ளையார். ()

மண்ணினிற் பொலிகுல மலையர் தாந்தொழு
தெண்ணில்சீர்ப் பணிகள்செய் தேத்துந் தன்மையி
னண்ணிய வகைசிறப் பித்துநாதனைப்
பண்ணினிற் றிகழ்திருப் பதிகம் பாடினார்.

(இ-ள்.) மண்ணினிற்பொலிகுல மலையர்தாந்தொழுது=நிலவுலகிற்பொலிவடைந்த மறையவர்குலத்தினராய மலையாளர்வணங்கி ; எண்ணில்சீர்ப்பணிகள் செய்தேத்தும் தன்மையின்=அளவில்லாதசிறப்பினையுடைய அகம்படிமைத்தொண்டுசெய்துவணங்குந்தன்மையால் ; நண்ணியவகைசிறப்பித்து=

Koviloor Digital Library

அப்பிராமணரை "மண்ணின்மிசையாடி மலையாளர் தொழுதேத்தி" எனப் பொருந்தியவகையால் சிறப்பித்து ; நாதனைப்பண்ணினிற்றிகழ் திருப்பதிகம் பாடினர்=வடமூலநாதனைபண்களால் விளங்கும் திருப்பதிகத்தில் பாடியருளினர்—எ-று. (உ௯எ)

திருப்பழுவூர்திருவிராகம்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

எண்ணுமொரெழுத்து மிசையின் கிளவிதேர்வார்
கண்ணுமுதலாய கடவுட்கிட மிதென்பார்
மண்ணின்மிசைபாடி மலையாளர் தொழுதேத்திப்
பண்ணினொலிகொண்டு பயில்கின்ற பழுவூரே.

அந்தணர்களான மலையாள ரவரேத்தும்
பந்தமலிகின்ற பழுவூரர னையாரச்
சந்தமிகுஞான சம்பந்த னுரைபேணி
வந்தவணமேத்து மவர்வான முடையாரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-வடமூலநாதர். தேவியார்-அருந்தவநாயகியம்மை.

பாவின திசைவழி பாடி யங்ககன்
றியாவருந் தொழுதுட னேத்தவெய்தினா
மூவுல குய்யநஞ் சுண்டமூர்த்தியார்
மேவிய பெருந்திரு விசய மங்கையில்.

(இ-ள்.) பாவினதிசை வழிபாடி யங்ககன்று யாவருந் தொழுதுட னேத்த=பாடற்கேற்றவிசைவழியே திருப்பதிகம் பாடியருளி அத்திருப்பதியினின்று நீங்கி எல்லாரும்வணங்கி விரைந்துவாழ்த்த ; மூவுலகுய்யநஞ்சுண்டமூர்த்தியார்மேவிய பெருந்திருவிசய மங்கையில் எய்தினர்=மூன்றுலகத்தாரும் உய்யும்பொருட்டு நஞ்சையுண்டருளிய சிவபிரான் எழுந்தருளியசெல்வமிக்க திருவிசயமங்கையில் சென்றருளினர்—எ-று. (உ௯அ)

அந்தணர் விசயமங் கையி னிலங்கணர்
தந்தனி யாலயஞ் சூழ்ந்து தாழ்ந்துமுன்
வந்தனை செய்துகோ தனத்தை மன்னிய
செந்தமிழ் மாலையிற் சிறப்பித் தேத்தினர்.

(இ-ள்.) அந்தணர் விசயமங்கையினிலங்கணர் தந்தனியாலயஞ்சூழ்ந்து தாழ்ந்துமுன் வந்தனைசெய்து=அந்தணர்கள் வழிபாடுசெய்யும் திருவிசயமங்கையில் எழுந்தருளிய விசயநாதரது ஒப்பற்ற திருவாலயத்தை பிரதட்சண

Koviloor Digital Library

ம்செய்து திருமுன்வணங்கிநின்று துதித்து ; கோதனத்தைமன்னிய செந்தமிழ்மாலையிற் சிறப்பித்தேத்தினர்=அத்தலம்முன் பசுவால்வழிபட்டமையால் அப்பசுவினை நிலைபெற்ற திருப்பதிகமாலையில் கோதனம்வழிபடவெனச் சிறப்பித்துத் துதித்தார்—எ-று.

கோதனம் என்பது பசுவை, அது கோதனங்களின் பால்கறந்தாட்ட என்றும் திருப்புன்கூர்பதிகத்தாலும் உணர்க. (உ௲௧)

திருச்சிற்றம்பலம்.

திருவிசயமங்கை-பண்-காந்தாரபஞ்சமம்.

கீதமுன் னிசைதரக் கிளரும் வீணையர்
பூதமுன் னியல்வுடைப் புனிதர் பொன்னகர்
கோதனம் வழிபடக் குலவு நான்மறை
வேதியர் தொழுதெழு விசய மங்கையே.

விண்ணவர் தொழுதெழு விசய மங்கையை
நண்ணிய புகலியுண் ஞான சம்பந்தன்
பண்ணிய செந்தமிழ் பத்தும் வல்லவர்
புண்ணியர் சிவகதி புகுத றிண்ணமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-விசயநாதர். தேவியார்-மங்கைநாயகியம்மை.

விசயமங் கையினிட மகன்று மெய்யர்தா
னசைவில்வை காவினி லணைந்து பாடிப்போந்
திசைவளர் ஞானசம் பந்த ரெய்தினர்
திசையுடை யாடையர் திருப் புறம்பயம்.

விசயமங்கையினிடமகன்றுமெய்யர்தான் அசைவில்வைகாவினிலணைந்து பாடிப்போந்து=திருவிசயமங்கையினின்று நீங்கி சிவபிரானர் நீங்காதெழுந்தருளிய திருவைகாவினை அடைந்து திருப்பதிகம்பாடி அங்குநின்று எழுந்தருளி ; இசைவளர் ஞானசம்பந்தர் திசையுடையாடையர் திருப்புறம்பயம் பெய்தினர்=புகழ்வளராநின்ற பிள்ளையார் திகம்பரரான சாக்ஷிநாதர் எழுந்தருளிய திருப்புறம்பயமென்னும் ஸ்தலத்தையடைந்தருளினர்—எ-று.(உ௲௨)

திருவைகா-திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

கோழைமிடறாககவி கோளுமிலவாகவிசை கூடும்வகையா
லேழையடியாரவர்கள் யாவைசொனசொன்மகிழு மீசனிடமாந்
தாழையிளநீர்முதிய காய்கமுகின்வீழநிறை தாறுசிதறி
வாழையுதிர்வீழ்கனிக ளூறிவயல்சேறுசெயும் வைகாவிலே.

Koviloor Digital Library

முற்றுநமையாளுடைய முக்கண்முதல்வன்றிரு வைகாவிலதனைச்
செற்றமவினுர்சிர புரத்தலைவன் ஞானசம் பந்தனுரைசெய்
யுற்றதமிழ்மாலையீ ரைந்துமிவைவல்லவ ருருத்திரரெனப்
பெற்றமரலோகமிக வாழ்வர்பிரிபாரவர் பெரும்புகழொடே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-வில்வவனேசர். தேவியார்-பவளக்கைநாயகியம்மை.

புறம்பயத் திறைவரை வணங்கிப் போற்றிசெய்
திறம்புரி நீர்மையிற் பதிகச் செந்தமிழ்
நிறம்பயி லிசையுடன் பாடி நீடிய
வறந்தரு கொள்கையா ரமர்ந்து மேவினர்.

(இ-ள்.) புறம்பயத்திறைவரை வணங்கிப்போற்றிசெய் திறம்புரிநீர்மையிற் பதிகச்செந்தமிழ்=திருப்புறம்பயத்தி லெழுந்தருளிய சாக்ஷிநாதரை நமஸ்கரித்து துதிசெய்யுந்திறத்தின்பகுதியால் அருளியதன்மையோடுகூடிய தமிழ்ப்பதிகத்தை ; நிறம்பயிலிசையுடன் பாடிநீடிய அறந்தருகொள்கையாரமர்ந்துமேவினர்=குணத்தோடுகூடிய இசையுடன்பாடி மிக்கதருமங்களமைந்த கொள்கையையுடையபிள்ளையார் அத்தலத்தில்விரும்பி அமர்ந்தருளினர்.

திருப்புறம்பயம் - பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

மறம்பய மலைந்தவர் மதிட்பரி சறுத்தனை
நிறம்பசுமை செம்மையொ டிசைந்துனது நீர்மை
திறம்பய னுறும்பொரு டெரிந்துணரு நால்வர்க்
கறம்பய னுரைத்தனை புறம்பய மமர்ந்தோய்.

கருங்கழி பொழிந்திரை கரைக்குலவு முத்தந்
தருங்கழு மலத்திறை தமிழ்க்கிழமை ஞானன்
சுரும்பவிழ் புறம்பய மமர்ந்ததமிழ் வல்லார்
பெரும்பிணி மருங்கற வொருங்குவர் பிறப்பே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-சாக்ஷிநாதர். தேவியார்- கரும்படுசொன்னாயகியம்மை.

அத்திருப் பதிபணிந் தகன்று போயனற்
கைத்தலத் தவர்பதி பிறவுங் கைதொழு
முத்தமிழ் விரகரா முதல்வர் நண்ணினர்
செய்த்தலைப் பணிலமுத் தீனுஞ் சேய்ஞலூர்.

Koviloor Digital Library

(இ-ள்.) அத்திருப்பதி பணிந்தகன்றுபோயனற் கைத்தலத்தவர் பதிபிறவுங்கைதொழும்=அத்திருப்புறம்பயத்தைவணங்கி அத்தலத்தினின்றும் எழுந்தருளி அக்கினியைத்தரித்த திருக்கரங்களையுடைய சிவபிரான் எழுந்தருளிய பிறபதிகளையும் வணங்குகின்ற ; முத்தமிழ்விரகராமுதல்வர் செய்த்தலைப்பணிலமுத்தீனுஞ்செய்ஞலூர்நண்ணினர்=முத்தமிழ்களின் பாகுபாடுகளை உணர்ந்த ஆளுடையபிள்ளையார் வயலினிடத்து சங்குகள் முத்துகளை ஈனும் திருச்சேய்ஞலூரை அடைந்தார்—எ-று. (உசஉ)

திருமலி புகலிமன் சேரச் சேய்ஞலூ
ரருமறை யவர்பதி யலங்க ரித்துமுன்
பெருமறை யொடுமுழ வொலி பிறங்கவே
வருமுறை யெதிர்கொள வந்து முந்தினர்

(இ-ள்.) திருமலிபுகலிமன் சேரச்சேய்ஞலூர் அருமறையவர்பதியலங்கரித்து=செல்வமிக்க சீகாழிக்குத் தலைவராகிய ஆளுடையபிள்ளையார் எழுந்தருள அதனால் திருச்சேய்ஞலூரின்கண்வாழும் அரியவேதங்களையுணர்ந்தபிராமணர்கள் அத்தலத்தை யலங்காரஞ்செய்து ; முன்பெருமறையொடு முழவொலிபிறங்கவே= தம்முன்னே பெரியவேதங்களோடு முழவப்பறையினது ஒலியும்பெருக ; எதிர்கொளவருமுறைவந்து முந்தினர்=எதிர்கொள்ளுதற்குவரும் முறைப்படி பூர்ணகும்பம் முதலியனகொண்டு அடைந்தார்கள். ()

ஞானசம் பந்தரு நாயனர் சடைத்
தூநறுந் தொடையன்முன் சூட்டும் பிள்ளையார்
பான்மையில் வரும்பதி யென்று நித்தில
யானமுன் னிழிந்தெதி ரிறைஞ்சி யெய்தினர்.

(இ-ள்.) ஞானசம்பந்தரு நாயனர்சடைத்தூ நறுந்தொடையன்முன் சூட்டும்பிள்ளையார்=திருஞானசம்பந்தப்பிள்ளையாரும் சிவபிரானர் தமதுசடையிற்சூடிய பரிசுத்தமான நறுமணம் பொருந்திய திருமாலையை முன்னே சூட்டியருளும் சண்டேசப்பிள்ளையார் ; பான்மையில் வரும்பதியென்று=பத்திநெறியால் அவதரித்த திருப்பதியென்று ; நித்திலயானமுன்னிழிந்தெதிரிறைஞ்சியெய்தினர்=திருமுத்தச் சிவிகையினின்றும் இறங்கியருளி யெதிரேவணங்கி யத்திருப்பதியிலடைந்தருளினர்—எ-று. (உசச)

மாமறை யாளர்வண் புகலிப் பிள்ளையார்
தாமெழுந் தருளிடத் தங்கள் பிள்ளையார்
காமுறும் பதியில்வந் தருளக் கண்டன
ராமகிழ் வுடன்பணிந் தாடி யார்த்தனர்.

(இ-ள்.) மாமறையாளர்வண்புகலிப் பிள்ளையார் தாமெழுந்தருளிட= அத்திருப்பதியிலுள்ளபெரிய அந்தணர்கள்வளப்பமுடைய சீகாழியிலவதரித்

Koviloor Digital Library

தஆளுடையபிள்ளையாரெழுந்தருள ; தங்கள்பிள்ளையார் காமரும்பதியில்வந்தருள=தங்கள்மரபில் தோன்றிய சண்டீசப்பிள்ளையார் விரும்பத்தக்க தமது திருப்பதியில் மீளவும்வந்தருள ; கண்டனராமகிழ்வுடன் பணிந்தாடியார்த்தனர்=கண்டார்போலும் மகிழ்ச்சியோடு வணங்கி ஆனந்தக்கூத்தாடி ஆரவாரித்தார்கள்—எ-று. (உ௪௫)

களித்தனர் புண்ணியக் கரக வாசநீர்
தெளித்தனர் பொரிகளு மலருஞ் சிந்தினர்
துளித்தனர் கண்மழை சுருதி யாயிர
மளித்தவர் கோயிலு ளவர்முன் பெய்தினார்.

(இ-ள்.) களித்தனர்புண்ணியக் கரகவாசநீர்தெளித்தனர்=சந்தோஷித்தார்கள் புண்ணியருபமான தமது கமண்டலத்திலுள்ள வாசமூட்டியநீரைத் தெளித்தார்கள் ; பொரிகளும் மலருஞ் சிந்தினர்=நற்பொரிகளையும் மலரையும் தூவிக்கண்களினின்றும் ஆனந்தபாஷ்பம்சிந்தினார்கள் ; துளித்தனர்கண்மழை சுருதியாயிரம் அளித்தவர் கோயிலுளவர் முன்னெய்தினர்=அளவில்லாதவேதங்களை அளித்தருளிய சத்தகிரி ஈசர்திருக்கோயிலுள் அப்பிள்ளையார் முன்பு அடைந்தார்கள்—எ-று. (உ௪௬)

வெங்குரு வேந்தரும் விளங்கு கோயிலைப்
பொங்கிய விருப்பினாற் புடை வலங்கொடு
செங்கைகள் சென்னிமேற் குவித்துச் சென்றுபுக்
கங்கணர் முன்புற வணைந்து தாழ்ந்தனர்

(இ-ள்.) வெங்குருவேந்தரும் விளங்கும் கோயிலைப் பொங்கியவிருப்பினாற்புடைவலங்கொடு=சீகாழியிலவதரித்த ஆளுடையபிள்ளையாரும்விளங்காநின்ற திருக்கோயிலை அதிகரித்தவிருப்பத்தோடு பக்கத்தில்பிரதட்சணம்செய்து ; செங்கைகள் சென்னிமேற்குவித்துச்சென்றுபுக்கு=சிவந்த திருக்கரங்களைத் தமதுசிரசின்மேல் கூப்பிச்சென்று உள்ளேயெழுந்தருளி ; அங்கணர் முன்புற அணைந்து தாழ்ந்தனர்=சிவபிரானார் திருமுன்னேசென்று எழுந்தருளினர்—எ-று. (உ௪௭)

வேதியர் சேய்ஞலூர் விமலர் தங்கழல்
காதலிற் பணிந்தவர் கருணை போற்றுவார்
தாதைதா டடிந்ததண் டீசப் பிள்ளையார்
பாதகப் பயன்பெறும் பரிசு பாடினார்.

(இ-ள்.) வேதியர் சேய்ஞலூர் விமலர் தங்கழல் காதலிற் பணிந்தவர்கருணை போற்றுவார்=பிராமணர்கள் வசிக்கும் திருச்சேய்ஞலூரில் எழுந்தருளிய சத்தகிரீசர் திருவடிகளை விருப்பத்தோடு வணங்கி அவரது திருவருளைப் போற்றும் ஆளுடைய பிள்ளையார் ; தாதைதாடடிந்த சண்டீசப் பிள்ளையார் பாதகப்பயன் பெறும் பரிசு பாடினர்=தாம்செய்யும் சிவபூசைக் கிடையூ

Koviloor Digital Library

றுசெய்த தந்தையின் பாதத்தை வெட்டியருளிய சண்டேசநாயனுர் அப்பாதகத்தால் சிவபிரானது திருவருளாகிய பயனையடைந்த பரிசை "பீரடைந்தபாலதாட்ட" என்னும் முதலுடைய திருப்பதிகத்தில் "வேரடைந்து பாய்ந்ததாளை வேர்தடிந்தான் றனக்குத்தா ரடைந்த மாலைசூட்டித்தலைமைவகுத்தலென்னே" எனச்சிறப்பித்துப் பாடியருளினுர்—எ-று. (உ௪அ)

திருச்சேய்ஞலூர்-பண்-பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

பீரடைந்த பாலதாட்டப் பேணு தவன்றாதை
வேரடைந்து பாய்ந்ததாளை வேர்தடிந் தான்றனக்குத்
தாரடைந்த மாலைசூட்டித் தலைமை வகுத்தலென்னே
சீரடைந்த கோயின்மல்கு சேய்ஞலூர் மேயவனே.

சேயடைந்த சேய்ஞலூரிற் செல்வன் சீர்பரவித்
தோயடைந்த தண்வயல்சூழ் தோணி புரத்தலைவன்
சாயடைந்த ஞானமல்கு சம்பந்த னின்னுரைகள்
வாயடைந்து பாடவல்லார் வானுல காள்பவரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-சத்தகிரீசர். தேவியார்-சகிதேவிநாயகியம்மை.

இன்னிசை வண்டமிழ் பாடி யேத்தியு
நன்னெடும் பதியுளோர் நயக்க வைகிய
பின்னர்வெண் பிறையணி வேணிப் பிஞ்ஞகர்
மன்னிய திருப்பனந் தாள் வணங்கினுர்.

(இ-ள்.) இன்னிசை வண்டமிழ்பாடி யேத்தியுநன்னெடும்பதியுளோர் நயக்க வைகிய பின்னர்=இனிய இசையோடு கூடிவளம்பொருந்திய தமிழ்ப்பதிகத்தைப் பாடி யருளி நன்மைமிக்க அத்திருப்பதியி லுள்ளோர் நயக்க எழுந்தருளிய பின்னர்; வெண்பிறை யணிவேணிப்பிஞ்ஞகர் மன்னிய திருப்பனந்தாள் வணங்கினுர்=வெள்ளிய சந்திரனையணிந்த சடையப்பநாதர் எழுந்தருளிய திருப்பனந்தானை அடைந்துவணங்கினுர்—எ-று. (உ௪௯)

ஆங்கணி சொன்மலர் மாலை சாத்தியப்
பாங்குபந் தணைநலூர் பணிந்து பாடிப்போய்த்
தீங்குதீர் மாமறைச் செம்மை யந்தண
ரோங்குமோ மாம்புலி யூர்வந் துற்றனர்.

(இ-ள்.) ஆங்கணி சொன்மலர் மாலைசாத்தி அப்பாங்கு பந்தணைநல்லூர் பணிந்து பாடிப்போய்=அத்திருப்பதியில் அழகிய சொன்மலராலாய பதிக

Koviloor Digital Library

மாலையைச் சாத்தியருளி அத்திருப்பதியின் பக்கத்திலுள்ள பந்தண நல்லூரை யும் வணங்கித் திருப்பதிகம் பாடிச்சென்றருளி; தீங்குதீர் மாமறைச்செம்மை யந்தணர் ஓங்குமோமாம் புலியூர் வந்துற்றனர்=குற்றத்தினின்று நீங்கிய பெ ரிய வேதங்களை உணர்ந்த நல்லொழுக்கத்தையுடைய பிராமணர்கள் மிக்கிருக் கும் திருவோமாம்புலியூர் வந்தடைந்தருளினார்—எ-று. (உருஅ)

திருப்பனந்தாள் திருத்தாடகையீச்சரம் - பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

கண்பொலி நெற்றியி னன்றிகழ் கையிலோர் வெண்மழுவான்
பெண்புணர் கூறுடை யான்மிகு பீடுடை மால்விடையான்
விண்பொலி மாமதி சேர்தரு செஞ்சடை வேதியனூர்
தண்பொழில் சூழ்பனந் தாட்டிருத் தாடகை யீச்சரமே.

தண்வயல் சூழ்பனந் தாட்டிருத் தாடகை யீச்சரத்துக்
கண்ணய லேபிறை யானவன் றன்னைமுன் காழியர்கோ
னண்ணிய செந்தமி ழான்மிகு ஞானசம் பந்தனல்ல
பண்ணியல் பாடல்வல் லாரவர் தம்வினை பற்றறுமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-சடையப்பநாதர். தேவியார்-பெரியநாயகியம்மை.

திருப்பந்தணநல்லூர் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

இடறினார்கூற்றைப் பொடிசெய்தார்மதிலை யிவைசொலி யுல கெழுந்தேத்தக், கடறினாவர் காற்றுளாரவர் காதலித் துறைதரு கோயில், கொடிறனார்யாதுங் குறைவிலார்தாம்போய்க் கோவணங் கொண்டுகூத்தாடும், படிறனார்போலும் பந்தணைநல்லூர் நின்றவெம் பசுபதியாரே.

கல்லிசைபூணக் கலையொலியோவாக் கழுமல முதுபதிதன்னில், நல்லிசையாளன் புல்லிசைகேளா நற்றமிழ் ஞானசம்பந்தன், பல்லி சைபகுவாய் படுதலையேந்தி மேவிய பந்தணநல்லூர்ச், சொல்லிசை பாடல்பத்தும் வல்லார்மேற் றொல்வினை சூழகிலாவே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - பசுபதீசர். தேவியார் - காம்பன்னதோளியம்மை.

திருஓமாம்புலியூர்-பண்-புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

பூங்கொடிமடவா ளுமையொருபாகம் புரிதருசடைமுடியடிகள், வீங்கிருணட்ட மாடுமெம்விகிர்தர் விருப்பொடு முறைவிடம்வினவிற்,

Koviloor Digital Library

தேங்கமழ்பொழிலிற் செழுமலர்கோதிச் செறிதரு வண்டிசைபாடு, மோங்கியபுகழா ரோமாம்புலியூ ருடையவர் வடதளியதுவே.

விளைதருவயலுள் வெயில்செறிபவள மேதிகண் மேய்புலத்தி டறி, பொளிதாமல்கு மோமாம்புலியூ ருடையசீர் வடதளியரனைக், களிதருநிவப்பிற் காண்டகுசெல்வக் காழியுண் ஞானசம்பந்த, னளி தருபாடல் பத்தும்வல்லார்க ளமரலோகந் திருப்பாரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்.துயர்தீர்த்தசெல்வர்.தேவியார்-பூங்கொடிநாயகியம்மை.

மற்றநற் பதிவட தளியின் மேவிய
வற்புத ரடிபணிந் தலர்ந்த செந்தமிழ்ச்
சொற்றொடை பாடியங் ககன்று சூழ்மதிற்
பொற்பதி வாழ்கொளி புத்தூர் புக்கனர்.

(இ-ள்.) மற்றநற் பதிவடதளியின்மேவிய அற்புதனடிபணிந்து=அந்த நல்ல திருப்பதியின்கண் வடதளியென்றும் ஆலயத்தில் எழுந்தருளிய துயர் தீர்த்த செல்வர் திருவடியைவணங்கி; அலர்ந்தசெந்தமிழ்ச் சொற்றொடை பாடியங்ககன்று=மலர்ந்த செந்தமிழ்ச் சொல்லானுப திருப்பதிகமாலையைப் பாடி யருளி அத்திருப்பதியி னின்று மெழுந்தருளி; சூழ்மதில் பொற்பதி வாழ்கொளி புத்தூர் புக்கனர்=மதில் சூழ்ந்த அழகிய திருப்பதியாகிய வாழ் கொளி புத்தூரை வந்தடைந்தருளினார்—எ-று. (உருக)

சீர்வளர் கோயிலை யணைந்து தேமலர்க்
கார்வளர் கண்டர்தாள் பணிந்து காண்பவர்
பார்புகழ் பதிகங்கள் பாடி நீடுவார்
வார்பொழிற் கடம்பையும் வணங்கி மீண்டனர்.

இ-ள்.) சீர்வளர்கோயிலை யணைந்து தேமலர்க் கார்வளர் கண்டர்தாள் பணிந்து காண்பவர்=செல்வமிக்க திருக்கோயிலை அடைந்தருளி வாசனையு டைய குவளைமலர்போலும் கரியகண்டத்தையுடைய மாணிக்கவண்ணரது தி ருவடியினைவணங்கித் தெரிசிக்கும் ஆளுடையபிள்ளையார்; பார்புகழ் பதிகங் கள் பாடிநீடுவார்=உலகத்தார் புகழும்திருப்பதிகங்களை அங்குபாடியருளி அத் தலத்தினின்று மெழுந்தருள்பவராய்; வார்பொழிற் கடம்பையும் வணங்கி மீண்டனர்=நீண்டசோலை சூழ்ந்ததிருக்கடம்பை யென்னும் திருப்பதியையும் வணங்கி அதை நீங்கி திருவாவூருக்கு எழுந்தருளினார். (உருஉ)

திருவாழ்கொளிபுத்தூர்- பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

பொடியுடைமார்பினர் போர்விடையேறிப் பூதகணம்புடைசூழக்
கொடியுடையூர் திரிந்தையங் கொண்டுபலபல கூறி

Koviloor Digital Library

வடிவுடைவாணெடுங் கண்ணுமைபாக மாயவன் வாழ்கொளிபுத்தூர்
கடிகமழ்மாமல ரிட்டுக்கறைமிடற் றானடி காண்போம்.

கல்லுயர்மாக்கட னின்றுமுழங்குங் கரைபொரு காழியமூதூர்
நல்லுயர்நான்மறை நாவனற்றமிழ் ஞான சம்பந்தன்
வல்லுயர்சூலமும் வெண்மழுவாளும் வல்லவன்வாழ்கொளிபுத்தூர்
சொல்லியபாடல்கள் வல்லார்துயர் கெடுத லெளிதாமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-மாணிக்கவண்ணர்.
தேவியார்-வண்டமர்பூங்குழலம்மை.

நம்பனை நலந்திகழ் நாரையூரினிற்
கும்பிடும் விருப்பொடு குறுகிக் கூடிய
வம்பலர் செந்தமிழ் மாலை பாடிநின்
றெம்பிரான் கவுணியர் தலைவரேத்தினர்.

(இ-ள்.) நம்பனை நலந்திகழ் நாரையூரினிற்கும்பிடும்விருப்பொடு குறுகி=சௌந்தரேசரை நன்மைமிக்க திருநாரையூரின்கண் வணங்கும் விருப்பத்தோடு அவர் திருமுன்சென்று; கூடியவம்பலர் செந்தமிழ்மாலைபாடிநின்று=இசையோடு பொருந்திய காம்பினைவென்ற மென்றோளியென்று முதலையுடைய தெய்வமணம் வீசுஞ்செந்தமிழ்ப் பதிகமாலையை யருளிச்செய்து; எம்பிரான் கவுணியர்தலைவரேத்தினர்=எமதுபிரானாகிய ஆளுடையபிள்ளையார் துதித்தருளினர்—எ-று. (உ௫௬)

திருநாரையூர் - பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

காம்பினைவென்ற மென்றோளிபாகங் கலந்தா னலந்தாங்கு
தேம்புனல்சூழ் திகழ்மாமடு விற்றிருநாரையூர் மேய
பூம்புனல்சேர்புரி புன்சடையான்புலி யின்னுரி தோன்மேற்
பாம்பினைவீக்கிய பண்டரங்கன் பாதம்பணிவோமே.

தண்மதிதாழ்பொழில் சூழ்புகலித்தமிழ் ஞான சம்பந்த
னொண்மதிசேர்சடை யானுறையுந்திரு நாரையூர் தன்மேற்
பண்மதியாற்சொன்ன பாடல்பத்தும் பயின்றார் வினைபோகி
மண்மதியாதுபோய் வான்புகுவர் வானோ ரெதிர்கொளவே.

திருச்சிற்றம்பலம்.

கடலிடைவெங்கடு நஞ்சமுண்ட கடவுள்விடையேறி
யுடலிடையிற் பொடிப்பூச வல்லானுமையோ டொருபாக

Koviloor Digital Library

ணடவிடையிற் சிலைதாங்கி யெய்தவம்மா னடியார்மேல்
நடலைவினைத்தொகை தீர்த்துகந்தா னிடநாளை யூர்தானே.

பாடியலுந் திரைசூழ் புகலித்திருஞான சம்பந்தன்
சேடியலும் புகழோங்கு செம்மைத்திருநாளை யூரான்மேற்
பாடியதண் டமிழ்மாலை பத்தும்பாவித் திரிந்தாக
வாடியசிந் தையினர்க்கு நீங்குமவலக் கடல்தானே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - சௌந்தரேசர். தேவியார் - திரிபுரசுந்தரியம்மை.

அப்பதி பணிந்தருந் தமிழ் புனைந்துத
மெய்ப்படு விருப்பொடு மேவுநாளரன்
பொற்பதி பலவுமுன் பணிந்து போந்தனர்
பைப்பணி யவர்கருப் பறிய லூரினில்.

(இ-ள்.) அப்பதிபணிந்து அருந்தமிழ்புனைந்து=அந்தத்திருநாளை யூரை வணங்கி அரியதமிழ்ப் பதிகத்தைப் பாடியருளி ; தம்மெய்ப்படு விருப்பொடு மேவுநாள்=தமது மெய்ந்நிறைந்த அன்போடு எழுந்தருளி யிருக்குநாளில் ; அரன்பொற்பதிபலவுமுன்பணிந்து=அதற்குச் சமிபத்திற் சிவபிரா னெழுந்தருளிய திருப்பதிகள் பலவற்றையும் வணங்கிக்கொண்டு ; பைப்பணியவர் கருப்பறியலூரினில் போந்தனர்=சர்ப்பாபரணத்தை யணிந்த குற்றம்பொறுத்த நாதரெழுந்தருளிய திருக்கருப்பறியலூர் என்னுந்தலத்திற்கு ஆளுடைய பிள்ளையார் எழுந்தருளினர்—எ-று. (உ௰௪)

பரமர்தந் திருக்கருப் பறிய லூரினிற்
சிரபுரச் சிறுவர்கை தொழுது செந்தமி
முரையிசை பாடியம் மருங்கி னுள்ளவாஞ்
சுரர்தொழும் பதிகளுந் தொழுதுபாடினர்.

(இ-ள்.) சிரபுரச்சிறுவர் பரமர்தங்கழல் கருப்பறியலூரினில் கைதொழுது=சீர்காழியி லவதரித்த ஆளுடையபிள்ளையார் குற்றம் பொறுத்தநாதர்திருவடிகளைத் திருக்கருப்பறிய லூரில்வணங்கி ; செந்தமிழ் உரையிசைபாடி=செந்தமிழ்ச் சொல்லாலாய விசையோடு கூடிய திருப்பதிகத்தைப் பாடியருளி ; அம்மருங்கினுள்ளவாம் சுரர்தொழும் பதிகளும் தொழுதுபாடினர்=அத்திருப்பதியின் பக்கத்திலுள்ளனவாய் சீர்காழிக்குச் சமீபமான எதிர்கொள்பாடி திருநின்றியூர்முதலிய தேவர்கள் வணங்கும் திருப்பதிகளையும் வணங்கிப்பாடியருளினர்—எ-று. (உ௰௫)

Koviloor Digital Library

திருக்கருப்பறியலூர் தேவாரம்.

திருச்சிற்றம்பலம்.

சுற்றமொடு பற்றவை துயக்கற வறுத்துக்
குற்றமில் குணங்களொடு கூடுமடி யார்கள்
மற்றவரை வானவர்தம் வானுலக மேறக்
கற்றவ னிருப்பது கருப்பறிய லூரே.

நலந்தரு புனற்புகலி ஞானசம் பந்தன்
கலந்தவர் கருப்பறியன் மேயகட் வுள்ளைப்
பலந்தரு தமிழ்க்கிளவி பத்துமிவை கற்று
வலந்தரு மவர்க்குவினை வாடலெளி தாமே.

சுவாமிபெயர் - குற்றம்பொறுத்தநாதர்.

தேவியார்-கோல்வளைநாயகியம்மை.

திருச்சிற்றம்பலம்.

மண்ணுலகு செய்ததவப் பயனுயுள்ள வள்ளலா ரப்பதிகள் வணங்கியேகி, யெண்ணின்முரா சிரங்கியெழப்பணிலமார்ப்ப விலங்கிய காளஞ்சின்ன மெங்குமூதக்,கண்வளர்மென் கரும்புமிடை கதிர்ச்செஞ்சாலிகதலிகமு குடனோங்குங் கழனிநாட்டுத், தெண்ணிலவு சூடிய தம் பெருமான்வைகுந் திருப்பிரம புரஞ்சாரச் செல்லும்போது.

(இ-ள்.) மண்ணுலகு செய்ததவப்பயனு யுள்ளவள்ளலா ரப்பதிகள் வணங்கியேகி=நிலவுலகத்தார் செய்தவத்தின் பயனாய் விளங்குகின்ற ஆளுடைய பிள்ளையார் திருப்பதிகளை வணங்கிக்கொண்டு எழுந்தருளி; எண்ணின் முரசிரங்கி யெழப்பணிலம் ஆர்ப்ப இலங்கிய காளம்சின்ன மெங்குமூத= அளவில்லாத முரசப்பறைக ளாரவாரித்து எழவும் சங்குகள் ஒலிக்கவும் விளங்குகின்ற எக்காளமும் திருச்சின்னங்களும் எவ்விடத்துமூதவும்; கண் வளர்மென் கரும்புமிடைகதிர்ச் செஞ்சாலி கதலிகமுகுடன் ஓங்குங்கழனி நாட்டு=கண்கணிறைந்த மெல்லிய கரும்புகளும் நெருங்கிய கதிர்களையுடைய செந்நெற்பயிர்களும் வாழைகளும் கமுகுகளோடு சேர்ந்துயர்ந்து நிற்கும் வயல் சூழ்ந்த சோழநாட்டில்; தெண்ணிலவுசூடிய தம்பெருமான் வைகும் திருப்பிரமபுரம்சார்ந்து செல்லும்போது=தெள்ளிய கிரணத்தையுடைய விளம்பிறையைச் சூடியருளுந் தமதுபிரானாகிய தோணியப்பர் எழுந்தருளிய சீகாழியையடையச்சென்றருளுங்காலத்து—எ-று. (௨௫௬)

பிள்ளையா ரெழுந்தருளக் கேட்டசெல்வப் பிரமபுரத் தருமறையோர் பெருகுகாத, லுள்ளமகிழ் சிறந்தோங்கத் தோணிமேவு முமைபாகர் கழல்வணங்கி யுவகைகூர, வெள்ளமறை யொலிபெருகு மறுகு

Koviloor Digital Library

தோறுமிடைமகரதோரணங்கள்கதலிபூகந், தெள்ளுபுனனிறைகுடங்க ளுபதூபஞ்செழுங்கொடிக ணிரைத்தெதிர்கொள் சிறப்பிற்செல்வார்.

(இ-ள்.) பிள்ளையாரெழுந்தருளக் கேட்ட செல்வப் பிரமபுரத்தருமறையோர்=ஆளுடையபிள்ளையார் தமது திருப்பதிக்கு எழுந்தருளுதல் செய்யவதனைக்கேட்ட செல்வமிக்க சீகாழியின் கண்வாழுமரிய மறைகளையுணர்ந்தபிராமணர்கள்; பெருகுகாதலுள்ள மகிழ்சிறந்தோங்க=மிக்கவிருப்பத்தால் தமதுள்ளத்தில் உவகையதிகரித் தோங்கவும்; தோணிமேவு முமைபாகர்கழல் வணங்கியுவகைகூர=திருத்தோணியி லெழுந்தருளிய வுமாதேவி பாகராகிய தோணியப்பரது திருவடிகளை வணங்கி ஆளுடைய பிள்ளையாரது வரவுநோக்கியதனாற்பிரிய முண்டாகவும்; வெள்ளமறை யொலிபெருகு மறுகுதோறும்=தொகுதியான வேதங்களினது ஒலிமிக்க வீதிகடோறும்; மிடைமகரதோரணங்கள் கதலிபூகம்=நெருங்கிய மகரதோரணங்களையும் வாழைகளையும் கமுகமரங்களையும்; தெள்ளுபுனனிறை குடங்கள்தீபதூபஞ்செழுங்கொடிகள் நிரைத்தெதிர்கொள் சிறப்பிற்செல்வார்=தெளிந்தநீரா னிறைத்தகுடங்களையும் தீபங்களையும் தூபங்களையும் செழியகொடியாடைகளையும் வரிசைபட நிரைத்து எதிர்கொள்ளுதற்குரிய சிறப்போடு செல்பவராய்—எ-று.

மகரதோரணம் என்பது சுறவின்வடிவாய்ச் செய்ததோரணம். (உருஎ)

ஆரணங்கண் மதுரவொலி பெழுந்துபொங்க வரசிலையுந் தருப்பையும்பெய் தணிந்தவாசப், பூரணகும் பங்கணிறை கரகமேந்திப் புதுமலரு நறுந்துகளும் பொரியுந்தூவி, வாரணங்கு முலையுமையாள் குழைத்தசெம்பொன் வள்ளத்தி லமுதுண்ட வள்ளலாரைச், சீரணங்கு மணிமுத்தின் சிவிகைமீது செழுந்தாளக் குடைநிழற்கீழ்ச் சென்றுகண்டார்.

(இ-ள்.) ஆரணங்கண் மதுரவொலிபெழுந்து பொங்க=வேதங்களின் இனியவோசையெழுந்து மேற்கொள்ளவும்; அரசிலையும் தருப்பையும் பெய்து=அரசிலையையும் தருப்பையும் மேல்வைத்து; அணிந்தவாசப் பூரணகும்பங் கணிறைகரக மேந்தி=அலங்கரித்த வாசனைபொருந்திய நிறைகுடங்களையும் நிறைந்த கரகங்களையும் தாங்கிக்கொண்டு; புதுமலரு நறுந்துகளும் பொரியுந் தூவி=அன்றலர்ந்த மலர்களையும் நல்லவாசனைப் பொருள்களையும் பொரிகளையும் சொரிந்து; வாரணங்கு முலையுமையாள் குழைத்தசெம்பொன் வள்ளத்திலமுதுண்ட வள்ளலாரை=கச்சினைவருத்தும் தனங்களுடைய உமாதேவியார் சிவந்தபொற்கிண்ணத்தில் சிவஞானத்தோடு குழைத்த திருமுலைப்பாலையுண்டருளியபிள்ளையாரை; சீரணங்குமணிமுத்தின் சிவிகைமீது=அழகுவிளக்கும் முத்தாலாகிய திருச்சிவிகையின்மேல்; செழுந்தாளக்குடை நிழற்கீழ்ச்சென்று கண்டார்=செழுமைபொருந்திய முத்துக்குடையின் நிழற்கீழ் எழுந்தருளுங்கால் அவர்திருமுன்சென்று கண்டுதரிசித்தார்கள்.

Koviloor Digital Library

செல்லும்போது பிரமபுரத்தருமறையோர் செல்வராய் எழுந்துபொங்க
ஏர்திருவி கண்டாரெனக்கூட்டுக—எ-று. (௨௫அ)

கண்டபொழு தேகைக டலைமேற்கொண்டு கண்களிப்ப மனங்
களிப்பக் காதல்பொங்கித், தொண்டர்களு மறையவருஞ் சென்றுசூ
ழ்ந்து சொல்லிறந்த மகிழ்ச்சியினாற் றுதித்தவோசை, யெண்டிசையு
நிறைவித்தா ராடைவீசி யிருவிசும்பின் வெளிதூர்த்தா ரேறுசீர்த்தி,
வண்டமிழ்நாயகருமிழிந் தெதிரேசென்று வணங்கியவ ருடன்கூட ம
கிழ்ந்துபுக்கார்.

(இ-ள்.) கண்டபொழுதேகைகள் தலைமேற்கொண்டு=கண்ட அப்போ
தே தமதுகைகள் சிரத்தின்மேல்கூப்பி ; கண்களிப்ப மனங்களிப்பக் காதல்
பொங்கி=கண்களிகூரவும் மனங்களிக்கவும்அன்பதிகரித்து ; தொண்டர்களும்
மறையவரும்சென்று சூழ்ந்து=அடியார்களும் பிராமணர்களும் திருமுன்னே
சென்று சூழ்ந்து ; சொல்லிறந்த மகிழ்ச்சியினால் துதித்தவோசை=வசனித்
தலுக்கெட்டாத நல்லமகிழ்ச்சியினால் துதித்தவோசையை ; எண்டிசையு நி
றைவித்தார்=எட்டுத்திக்குகளிலும் நிறையச்செய்தார்கள் ; ஆடைவீசியிருவி
சும்பின் வெளிதூர்த்தார்=தமதுஉத்தரீயங்களை மேலேவிசிபெரிய ஆகாயத்தின்
வெளியைமறைத்தார்கள் ; ஏறுசீர்த்திவண்டமிழ் நாயகரும் இழிந்து எதிரே
சென்றுவணங்கி யவருடன் கூடமகிழ்ந்துபுக்கார்=மிக்ககீர்த்தியை யுடையவ
ளம்பொருந்திய தமிழ்த்தலைவராகிய ஆளுடையபிள்ளையாரும் திருச்சிவிகை
யினின்றும் இறங்கியருளி அத்திருக்கூட்டத்து எதிரேநின்று வணங்கி அவர்க
ளோடுகூடமகிழ்ச்சியடைந்து சீகாழிநகரத்திற்புகுந்தருளினார்—எ-று. (௨௫௯)

திங்களணி மணிமாட மிடைந்தவீதி சென்றணைந்து தெய்வம
றைக் கற்பின்மாதர், மங்கலவாழ்த் திசையிரண்டு மருங்குமல்க வான
வர்நா யகர்கோயின் மருங்குசார்ந்து, துங்கநிலைக் கோபுரத்தை யிறை
ஞ்சிப்புக்குச் சூழ்ந்துதிருத் தோணிமிசை மேவினார்க, டங்கடிரு மு
ன்புதாழ்ந் தெழுந்துநின்று தமிழ்வேதம் பாடினார் தாளம்பெற்றார்.

(இ-ள்.) திங்களணி மணிமாடமிடைந்த வீதி சென்றணைந்து=சந்திரன்
தவழு மிரத்தினங்க ளழுத்தியமாடங்கள் நெருங்கிய திருவீதியைச் சாரப்
போய் ; தெய்வமறைக்கற்பின்மாதர் மங்கலவாழ்த்திசை யிரண்டு மருங்கு
மல்க=தெய்வத்தன்மை பொருந்திய மறையவர்குலத்திற்றோன்றிய கற்பினை
யுடைய பார்ப்பனிகளது மங்கலவாழ்த்தாகிய ஓசையிரண்டு பக்கத்திலும் நி
ரம்ப ; வானவர்நாயகர் கோயின்மருங்குசார்ந்து=தேவர்கட்குத்தலைவராகிய
சிவபிரானது திருக்கோயிலின் பக்கத்தைஅடைந்து ; துங்கநிலைக்கோபுரத்தை
யிறைஞ்சிப்புக்கு= உயர்ந்தநிலைகளையுடைய கோபுரத்தைவணங்கி உள்ளேபு
குந்தருளி ; சூழ்ந்து திருத்தோணிமிசைமேவினார்கள் தங்கடிருமுன்பு தாழ்ந்

Koviloor Digital Library

தெழுந்த=பிரதட்சணஞ்செய்து திருத்தோணியின்மேலெழுந்தருளிய தோணியப்பருடன் பெரியநாயகியாரது திருமுன்னே வணங்கியெழுந்துநின்றருளி; தமிழ்வேதம் பாடினர் தாளம்பெற்றார்=சிவபிரானிடத்தில் திருத்தாளம்பெற்ற ஆளுடையபிள்ளையார் தமிழ்வேதத்தைப்பாடியருளினர்—எ-று. (உசு0)

பரவுதிருப் பதிகவிசை பாடிநீடும் பரன்கருணைத் திருவருளின் பரிசுபோற்றி, விரவுமலர்க் கண்பனிப்பக் கைகள்கூப்பி வீழ்ந்தெழுந்து புறம்போந்து வேதவாய்மைச், சிரபுரத்துப் பிள்ளையார் செல்லும்போது திருநீல கண்டயாழ்ப் பாணர்பின்னே, வரவவரை வளம்பெருகு மனையிற்போக வருள்செய்து தந்திருமாளிகையின்வந்தார்.

(இ-ள்.) பரவுதிருப்பதிகவிசைபாடி=யாவரும்புகழுந் திருப்பதிகத்தை இசையொடு பாடியருளி; நீடுபரன்கருணைத் திருவருளின் பரிசுபோற்றி= அழியாத நிலைபெறும் சிவபிரானது திருவருளின் தன்மையைத்துதித்து; விரவுமலர்க்கண்பனிப்பக் கைகள்கூப்பி=கருணையோடு கூடிய தாமரைமலர் போன்ற கண்கள் ஆனந்தபாஷ்பஞ்சிந்த திருக்கரங்களைக்குவித்து; வீழ்ந்தெழுந்து புறம்போந்து=பூமியில்விழுந்து நமஸ்கரித்து புறம்பேபோந்து; வேதவாய்மைச் சிரபுரத்துப் பிள்ளையார் செல்லும்போது=வேதங்களின் உண்மையை யுணர்ந்த ஆளுடையபிள்ளையார் அங்குநின்று எழுந்தருளுங்கால்; திருநீலகண்ட யாழ்ப்பாணர் பின்னேவர=திருநீலகண்டயாழ்ப்பாணர் அவரைப்பின் தொடர்ந்துசெல்ல; அவரைவளம்பெருகு மனையிற்போக வருள்செய்து=அப்பெரும் பாணரையவரிருக்கும் வளமிக்க திருமனைக்குச்செல்லும்படி அருள்செய்து; தந்திருமாளிகையின் வந்தார்=தமது திருமாளிகைக்கண் எழுந்தருளினர்—எ-று. (உசுக)

மறைபவர்க ளடிபோற்றத் தந்தையாரு மருங்கணைய மாளிகையிலணையும்போதி, னிறைகுடமு மணிவிளக்கு முதலாயுள்ள நீடுமறைக் குலமகளிர் நெருங்கியேந்த, விறைவர்திரு நீற்றுக்காப்பேந்தி முன் சென்றின்றதா யார்சாத்தி யிறைஞ்சியேத்த, முறைமையவர்க் கருள்செய்து மடத்திற்புக்கார் முதல்வர்பான் மணிமுத்தின் சிவிகை பெற்றார்.

(இ-ள்.) மறையவர்களடிபோற்றத் தந்தையாரு மருங்கணைய மாளிகையிலணையும்போதில்=பிராமணர்கள் தமதுதிருவடிகளைவணங்கத் தந்தையாராகிய சிவபாதஇருதயரும் தன்பக்கலில்வர திருமாளிகையில் எழுந்தருளுங்கால்; நிறைகுடமுமணிவிளக்கு முதலாயுள்ள நீடுமறைக் குலமகளிர் நெருங்கியேந்த=பூரணகும்பமும் இரத்தினதீபமும் முதலிய மங்கலப்பொருள்களையுடையர்ந்தபார்ப்பனிகள் கூடித்திருமுன்னே தாங்கிவரவும்; இறைவர் திருநீற்றுக்காப்பேந்தி முன்சென்று ஈன்றதாயார்சாத்தியிறைஞ்சியேத்த=சிவபிரானது

Koviloor Digital Library



ஸ்ரீஞானசமபநதருககு-உபநயனச்சடஙகுசெய்விததல்.

Koviloor Digital Library

திருநீற்றுக்காப்பினைக் கையிலெடுத்து திருமுன்னேசென்று பகவதியார் திருநெற்றியிலிட்டு தோணியப்பரைவணங்கிப் பிள்ளையாரைத் துதிக்க; முறைமையவர்க்கருள்செய்து மடத்திற்புக்கார் முதல்வர்பான் மணிமுத்தின் சிவிகைபெற்றார்=அவரவர்க்கேற்றவண்ணம் திருவருள்செய்து திருமடத்திற் புகுந்தார் சிவபிரானிடத்து அழகிய முத்தின்சிவிகைபெற்ற பிள்ளையார்—எ-று.

செல்வநெடு மாளிகையி லமர்ந்துநாளுந் திருத்தோணிமிசையானைச் சென்றுதாழ்ந்து, மல்குதிருப் பதிகங்கள் பலவும்பாடி மனமகிழ்ந்து போற்றிசைத்து வைகுநாளி, லொல்லைமுறை யுபநயனப் பருவமெய்த வுலகிறந்த சிவஞான முணரப்பெற்றார், தொல்லைமுறைவிதிச்சடங்கு மறையோர்செய்யத் தோலொடுநூ லுஞ்ஞான்றுங்கினார் சுரர்கள் போற்ற.

(இ-ள்.) செல்வநெடுமாளிகையிலமர்ந்து நாளுந்திருத்தோணி மிசையானைச்சென்று தாழ்ந்து=செல்வமிக்க உயர்ந்ததிருமாளிகையிலெழுந்தருளி நாடோறும் தோணியப்பரைவணங்கி; மல்குதிருப்பதிகங்கள் பலவும்பாடிமனமகிழ்ந்து போற்றிசைத்து வைகுநாளில்=வளமிக்க திருப்பதிகங்கள் பலவற்றையும்பாடி யருளி திருவுளமகிழ்ந்து, தோணியப்பரைத்துதித்து அங்கு எழுந்தருளி யிருக்கும்நாளில்; ஒல்லைமுறை யுபநயனப் பருவமெய்த உலகிறந்த சிவஞான முணரப்பெற்றார்=விரைந்து வேதவிதிப்படி செய்யும் உபநயன காலம்வந்தடைய உலகத்தாரால் உணரக்கூடாத சிவஞானத்தை யுணர்ந்த ஆளுடையபிள்ளையார்; தொல்லைமுறை விதிச்சடங்கு மறையோர்செய்யத் தோலொடுநூலுஞ்ஞான்றுங்கினார் சுரர்கள்போற்ற=தொன்றுதொட்ட முறைப்படியானவிதி அமைந்த உபநயனச்சடங்கினைப் பிராமணர்கள்செய்ய கிருஷ்ணாஜினத்தோடு சேர்ந்த உபவீதத்தை தேவர்கள் துதிக்கும்படி தரித்தருளினார்—எ-று.

தோலொடுசேர்ந்த நூலாவது இரண்டங்குலம்பூணூலினளவாய்ச்செய்த கிருட்டிண மிருகத்தின்தோலொடுசேர்ந்தநூலென்க. இனம்பற்றித் திருவரையின் மவுஞ்சிநாணும் தாங்கினரென்க. அக்கிருட்டிணாசினம் பரிசுத்தியின் பொருட்டும் மவுஞ்சிநாண் பிராணபானனை நிறுத்தும்பொருட்டுந் தாங்குக எனக் கூறப்படும். (௨௬௫)

ஒருபிறப்பு மெய்தாமை யுடையார்தம்மை யுலகியல்பி னுபநயன முறைமையாகு, மிருபிறப்பி னிலைமையினைச் சடங்குகாட்டி யெய்துவிக்கு மறைமுனிவ ரெதிரேநின்று, வருதிறத்தின் மறைநான்குந் தந்தோமென்று மந்திரங்கண் மொழிந்தவர்க்கு மதுரவாக்காற், பொருவிறப்ப வோதினார் புகலிவந்த புண்ணியனா ரெண்ணிறந்த புனித வேதம்.

(இ-ள்.) ஒருபிறப்பு மெய்தாமை யுடையார்தம்மை=தேவர்முதலிய எழுவகைப்பிறப்பினுள் ஒருபிறப்பேனும் தம்மைவந்தடையாமையையுடைய ஆளுடையபிள்ளையாரை ; உலகியல்பி னுபநயன முறைமையாகும்=பிராமணர் முதலிய வருணத்தார்க்குரிய ஒழுக்கப்படிசெய்யும் உபநயன விதியாகும் ; இருபிறப்பினிலைமையினைச் சடங்குகாட்டி யெய்துவிக்கு மறைமுனிவரெதிரே நின்று=சற்கன்மங்கட்குரிய துவிசனுந்தன்மையைத் தாம்செய்யும்சடங்கால் காட்டி அடையச்செய்யும் வேதப்பிராமணர்கள்பின் அவரெதிரேநின்று ; வருதிறத்தின் மறைநான்குந்தந்தோமென்று மந்திரங்கள் மொழிந்தவர்க்கு=சிட பரம்பரையாய் ஓதியுணரவரும் வகைமையினையுடைய நான்கு வேதங்களையும் உமக்குத்தந்தோமென்று; சுஸ்திவாசமந்திரங்களைக்கூறும்அப்பிராமணர்களுக்கு ; புகலிவந்த புண்ணியனார் மதுரவாக்கால்=சீகாழியிலவதரித்த ஆளுடையபிள்ளையார் மதுரம்பொருந்திய திருவாக்கால் ; பொருவிறப்ப எண்ணிறந்த புனிதவேதம் ஓதினார்=(பதம், சடை, கிரமம், முதலிய இலக்கணங்கள் பொருந்த இவ்வாறு ஓதவார் உலகின்கண்யாவரும் இலராதலின்) ஒப்பெடுத்துரைத்தல் இல்லாவண்ணம் எண்ணில்லாத பரிசுத்தமான வேதங்களைக் கேட்கும்வண்ணம் ஓதியருளினார்—எ-று.

தந்தோமென்புழி தந்து ஓமெனப்பிரித்து கொடுத்து ஓம் என்றுகூறி உரைத்தலுமொன்று. உலகியல் உலகாடை அதுபிராமணர்முதலிய வருணத்தாரது ஒழுக்கத்தின்மேற்று. இருபிறப்பாதல் மங்கலமாம் மெய்ஞ்ஞானம் என்னும் நூற்று ஒருபதாம்பாட்டில் முற்கூறப்பட்டது. (௨௬௪)

சுருதிபாயிரமோதி யங்கமான தொல்கலைகளெடுத்தியம்புந்தோன்றலாரைப், பரிதியாயிரகோடி விரிந்தாலென்னப் பரஞ்சோதி யருள்பெற்ற பான்மைமேன்மை, கருதியா தரவோடும் வியப்புற்றேத்துங் கலைமறையோர் கவுணியனார் தம்மைக்கண்முன், வருதியானப்பொருளென் றிறைஞ்சி,நிந்தாமுன் வல்லமறை கேட்டையந் தீர்ந்துவாழ்ந்தார்.

(இ-ள்.) சுருதியாயிரமோதி=இருக்கு, எசுர், சாமம் என்னும் வேதங்களை அதனதன்பகுதிகளோடு எடுத்துச்சொல்லி ; அங்கமான தொல்கலைகளெடுத்தியம்புந்தோன்றலாரை=அவைகட்கு அங்கமானசிட்சை, வியாகரணம், சந்தசு, நிருத்தம், சோதிடம், கல்பம் என்னும் பழமைபொருந்திய ஆறையும் எடுத்து அருளிச்செய்யும் ஆளுடைய பிள்ளையாரை ; பரிதியாயிரகோடி விரிந்தாலென்னப் பரஞ்சோதிபருள்பெற்ற பான்மை மேன்மைகருதி=ஆயிரகோடி சூரியர்கள் உதித்தாற்போல மேலானசோதிருபரான திருத்தோணியப்பர் திருவருளைப்பெற்ற மேன்மையைச்சிந்தித்து ; ஆதரவோடும் வியப்புற்றேத்துங் கலைமறையோர்=விருப்பத்தோடும் அதிசயித்து வணங்கும் எல்லாநூல்களிலும் வல்லபிராமணர்கள் ; கவுணியனார் தம்மைக்கண்முன் வருதியானப்

Koviloor Digital Library

பொருளென்றிறைஞ்சி=ஆளுடைய பிள்ளையாரைத் தம்முன் பிரத்தியட்சமாக வரும் தியானப்பொருளான பரமபதியே என்றுவணங்கி; தாமுன்வல்லமறைகேட்டு ஐயந்தீர்ந்து வாழ்ந்தார்=தாம் முன் ஓதியவேதப்பொருள்களை ஐயமற வினவி அதனால் சந்தேகம்நீங்கி வாழ்ந்தார்கள்—எ-று.

வேதங்கள் மூன்றும் சாகோபசாகைகளால் பலவாவிரிந்திருத்தலில் சுருதியாயிரமென்றும், தியானப்பொருள் பிரத்தியட்சமாதல்போல் அவர் கண்முன் பிள்ளையார் நிற்றலின்கண்முன் வருதியானப் பொருளென்றுங்கூறினர்.

மந்திரங்க ளானவெலா மருளிச்செய்து மற்றவற்றின்வைதிகநூ
ற் சடங்கின்வந்த, சிந்தைமயக் குறுமையந் தெளியவெல்லாஞ்செழு
மறையோர்க் கருளியவர் தெளியுமாற்றான், முந்தைமுதன் மந்திரங்க
ளெல்லாந்தோன்று முதலாகு முதல்வனா செழுத்தஞ்சென்பா, ரந்தி
யினுண் மந்திரமஞ் செழுத்துமேயென் றஞ்செழுத்தின் றிருப்பதிக
மருளிச்செய்தார்.

(இ-ள்.) மந்திரங்களானவெலாம் அருளிச்செய்து=வேதத்திலுள்ளமந்திரங்களான வெல்லாவற்றையும் திருவாய்மலர்ந்து; மற்றவற்றின் வைதிக நூற்சடங்கின்வந்த=(இம்மந்திரமிவ்விடத்துப் பிரயோகிக்கத்தக்கதென) அம்மந்திரத்தும் யாகக்கிரியைகளினும் அவர்க்குண்டான; சிந்தைமயக்குறுமையந் தெளிய=மனசைக் கலக்கும் சந்தேகம்தீர; எல்லாஞ் செழுமறையோர்க் கருளி=மேற்கூறிய வைகளெல்லாம் செவிக்கு இன்பத்தைக்கொடுக்கும் வேதங்களை யுணர்ந்த பிராமணர்களுக்கு அருளிச்செய்து; அவர்தெளியுமாற்றான்=அப்பிராமணர்கள் தெளியும்வண்ணம்; முந்தைமுதன் மந்திரங்களெல்லாந் தோன்றும் முதலாகுமுதல்வனா ரெழுத்தஞ்சென்பார்=குடிலாசத்தியில் நாதரூபமா யுதித்த பழையமுதன்மைபொருந்திய மந்திரங்களெல்லாம் உதித்ததற்குக்காரணம் சிவபிரானுரைத்த திரு அஞ்செழுத்தென்றும் ஆளுடைய பிள்ளையார்; அந்தியினுண்மந்திர மஞ்செழுத்துமே யென்றஞ்செழுத்தின் திருப்பதிகமருளிச்செய்தார்=அந்தியினுண்மந்திரம் அஞ்செழுத்துமேஎன்றும் இறுதியையுடைய ஸ்ரீபஞ்சாக்கரத்திருப்பதிகத்தை அருளிச்செய்தார்—எ-று.

வேதத்தில் யாகமுதலிய அநுஷ்டானத்தில் எடுத்துப் பிரயோகித்தற்குரியன மந்திரமெனவும், அக்கினிகோத்திரம் செய்கவென விதிப்பனபோலும் விதிவாக்கியம் பிராமணம் எனவும், பிராமணசேஷம் அருத்தவாதம் எனவும்படும்; எனவே வைதிகநூற் சடங்கின் வந்தஎன்றதனால் பிராமணமும் பிராமணசேஷமும் எடுத்தோதினரென்றும்.

சிருட்டியில் பொருள்வடிவின்முன் சொல்வடிவான மந்திரமுதித்தலின் முந்தைமுதன் மந்திரமென்றும் அவைகளையெல்லாம் உதிப்பிக்கும் பராசத்தியிற்றோன்றிய ஆரணி, ஜெனனி, ரோதயித்திரி என்னும் மூன்றுசத்திகளின் புறவுருவான ஈசானி, பூரணி, ஆர்த்தி, வாமை, மூர்த்தி என்னும் ஐந்தொழிற்கு

Koviloor Digital Library

ரியசத்தியாய் திருவைந்தெழுத்து இருத்தலின் எல்லாம்தோன்றும்முதலாகும் முதல்வனூர் எழுத்து ஐந்து என்பார் என்றும், ஔபாசனஞ்செய்யும் பிராமணர்கள் உச்சியில் சிவபூசை முதலியகாலங்களில் ஓதற்குரியனவாயினும் சாயங்கால ஔபாசனத்தில் எல்லாமந்திரங்களும் தெய்வதங்களும் அங்குச்சாவித்தியமாதலின் அக்காலம் அவர்க்கு சிறந்ததென்னுங் கருத்தால் அந்தியினுண் மந்திரம் அஞ்செழுத்துமே என்று அருளியபடி யென்பார்அந்தியினுண் மந்திரம் அஞ்செழுத்துமே யென்றஞ்செழுத்தின் திருப்பதிகம் அருளிச்செய்தார் எனவும் கூறினர் "திருப்பதிகத்தில் செந்தழலோம்பிய" என்றதனுல்வைதிகசைவரான சிரௌதிகளென்பது பெறப்படும். அந்தணருள் சிரௌதிகள் சிறப்புடையராதலின்முற் கூறப்பட்டனர். (௨௬௬)

ஸ்ரீபஞ்சாட்சரப்பதிகம் - பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

துஞ்சலுந் துஞ்சலி லாதபோழ்தினு
நெஞ்சக நைந்து நினைமி னுடொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்சவு தைப்பன வஞ்செழுத்துமே.

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையு ணின்றவர் தம்மை யாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்
கந்தியுண் மந்திர மஞ் செழுத்துமே.

ஊனிலுயிர்ப்பை யொடுக்கியொண்சுடர்
ஞானவிளக்கினை யேற்றிநன்புலத்
தேனைவழிதிறந் தேத்துவார்க்கிட
ரானகெடுப்பன வைந்தெழுத்துமே.

நல்லவர்தீய ரெனுதுநச்சினர்
செல்லல்கெடச்சிவ முத்திகாட்டுவ
கொல்லநமன்றமர் கொண்டுபோமிடத்
தல்லல்கெடுப்பன வஞ்செழுத்துமே.

கொங்கலர்வன்மதன் வாளியைந்தகத்
தங்குளபூதமு மஞ்சவைம்பொழிற்
றங்கரவின்பட மஞ்சுந்தம்முடை
யங்கையிலைவிர லஞ்செழுத்துமே.

Koviloor Digital Library

தும்மலிரும லிடர்ந்தபோழ்தினும்
வெம்மைநரகம் விளைந்தபோழ்தினு
மிம்மைவினையடர்த் தெய்தும்போழ்தினு
மம்மையினுந்துணை யஞ்செழுத்துமே.

வீடுபிறப்பை யறுத்துமெச்சினர்
பீடைகெடுப்பன பின்னைநாடொறு
மாடுகொடுப்பன மன்னுமாநட
மாடியுகப்பன வஞ்செழுத்துமே.

வண்டமரோதி மடந்தைபேணின
பண்டையிராவணன் பாடியுய்ந்தன
தொண்டர்கள்கொண்டு துதித்தபின்னவர்க்
கண்டமளிப்பன வஞ்செழுத்துமே.

கார்வணனான்முகன் காணுதற்கொணாச்
சீர்வணச்சேவடி செவ்விநாடொறும்
பேர்வணம்பேசிப் பிதற்றும்பித்தர்கட்
கார்வணமாவன வஞ்செழுத்துமே.

புத்தர்சமண்கழுக் கையர்பொய்கொளாச்
சித்தத்தவர்க டெளிந்துதேறின
வித்தகநீறணி வார்வினைப்பகைக்
கத்திரமாவன வஞ்செழுத்துமே.

நற்றமிழ் ஞானசம் பந்த னான்மறை
கற்றவன் காழியர் மன்ன னுன்னிய
வற்றமின் மாலையீ ரைந்து மஞ்செழுத்
துற்றன வல்லவ ரும்ப ராவரே.

திருச்சிற்றம்பலம்.

அத்தகைமை பிள்ளையா ரருளிச்செய்ய வந்தணர்க ளருடலை மேற் கொண்டுதாழ்ந்து, சித்தமகிழ் வொடுசிறப்பத் தாமுந்தெய்வத் திருத்தோணி யமர்ந்தாரைச் சென்றுதாழ்ந்து, மெய்த்தவிசைப் பதிகங்கள் கொண்டுபோற்றி விரைமலர்த்தாள் மனங்கொண்டு மீண்டு போந்து, பத்தருடனினிதமரும் பண்புகூடப் பரமர்தாள் பணிந் தேத்திப் பயிலுநாளில்.

(இ-ள்.) அத்தகைமை பிள்ளையாரருளிச்செய்ய=அவ்வாறு ஆளுடைய பிள்ளையார் ஸ்ரீபஞ்சாட்சரத் திருப்பதிகத்தைப் பாடியருள; அந்தணர்கள்

Koviloor Digital Library

அருள் தலைமேற்கொண்டுதாழ்ந்து சித்தமகிழ்வொடு சிறப்ப=சீகாழியிலுள்ள பிராமணர்கள் பிள்ளையாரதுதிருவருளைச் சிரமேற்கொண்டு அவரைவணங்கிம கிழ்ச்சியோடு சிறக்கும்படி ; தாமுந் தெய்வத்திருத்தோணியமர்ந்தாரைச்சென்று தாழ்ந்து=தாமும் அம்மறையவரோடு திருத்தோணி யப்பரைச்சென்று வணங்கி ; மெய்த்தவிசைப்பதிகங்கள் கொண்டுபோற்றி விரைமலர்த்தாண்மனங்கொண்டுமீண்டுபோந்து=மெய்ம்மைபொருந்திய இசையோடுகூடியதிருப்பதிகங்களால் துதித்து தோணியப்பரது வாசனைபொருந்தியதாமரைமலர் போன்ற திருவடிகளைத் தமதுமனதில்பதித்து திருமாளிகைக்குளெழுந்தருளி; பத்தருடனினிதமரும் பண்புகூடப்பரமர் தாள்பணிந்தேத்திப்பயிலுநாளில்= அடியார்களோடு இனிதுகூடி எழுந்தருளும் திருக்கூட்டப்பொலிவுபொருந்த சிவ பிரானது திருவடிகளை வணங்கித் துதித்து எழுந்தருளி யிருக்கும் நாளில்—எ-று. (உ௬௭)

வே று.

பந்தணைமெல் விரலாளும் பரமரும்பாய் விடைமீது
வந்துபொன்வள் ளத்தளித்த வரம்பின்ஞானத் தமுதுண்ட
செந்தமிழ்ஞான சம்பந்தர் திறங்கேட்டிறைஞ்சு தற்காக
வந்தணர்பூந் தராய்தன்னி லணைந்தனர்நா வுக்கரையர்.

(இ-ள்.) பந்தணைமெல்விரலாளும் பரமரும்பாய் விடைமீதுவந்து=பந்துபொருந்திய மெல்லியவிரல்களையுடைய பெரியநாயகியாரும் திருத்தோணியப்பரும் பாய்ந்து செல்லும் இடபவாகத்தின்மேல் எழுந்தருளி ; பொன்வள்ளத்தளித்த வரம்பின் ஞானத்தமுதுண்ட=பொற்கிண்ணத்தில் அருளிய அளவில்லாத சிவஞானமாகிய திருவமுதினை உண்டருளிய ; செந்தமிழ்ஞான சம்பந்தர் திறங்கேட்டு=செந்தமிழாலுயதிருப்பதிகங்களை ஓதியருளும் ஆளுடையபிள்ளையாரது பெருமையைக்கேள்வியுற்று ; இறைஞ்சுதற்காக அந்தணர் பூந்தராய் தன்னிலணைந்தனர் நாவுக்கரையர்=அவரைவணங்கும்பொருட்டு பிராமணர்கள் வாழும்சீகாழியில் திருநாவுக்கரசர் அடைந்தருளினார்—எ-று.

வாக்கின்பெரு விறன்மன்னர் வந்தணைந்தா ரெனக்கேட்டுப்
பூக்கமழ்வா சத்தடஞ்சூழ் புகலிப்பெருந் தகையாரு
மாக்கியநல் வினைப்பேறென் றன்பர்குழாத் தொடுமெய்தி
யேற்கும்பெரு விருப்போடு மெதிர்கொளவெய் தும்பொழுதில்.

(இ-ள்.) வாக்கின்பெருவிறல்மன்னர் வந்தணைந்தாரெனக்கேட்டு=திருநாவுக்கரசர் சீகாழியில் தம்மைக்காணும்பொருட்டெழுந்தருளினாரெனக்கேள்வியுற்று ; பூக்கமழ் வாசத்தடஞ்சூழ் புகலிப்பெருந்தகையாரும்=தாமரை மலர்கள் வாசனைகமழுகின்ற பொய்கைசூழ்ந்த சீகாழியிலவதரித்த பெருந்தகையாகிய பிள்ளையாரும் ; ஆக்கியநல்வினைப் பேறென்று அன்பர்குழாத்தொடும் எய்தி=நாம்செய்த நல்வினையின் பயன்இவ்வாறு எழுந்தருளிற்றென்று

Koviloor Digital Library

அடியார் கூட்டத்தோடும் எழுந்தருளி; ஏற்கும் பெருவிருப்போடும் எதிர்கொள எய்தும்பொழுதில்=அவரையெதிர்கொள்ளும் மிக்கவிருப்பத்தோடு வாகீசமுனிவரது திருமுன்பு எழுந்தருளுங்காலத்து—எ-று. (உ௬௯)

சிந்தையிடை யறுவன்புந் திருமேனி தனிலசைவுங்
* கந்தமிகை யாங்கருத்துங் கையுழவா ரப்படையும்
வந்திழிகண் ணீர்மழையும் வடிவிற்பொலி திருநீறு
மந்தமிலாத் திருவேடத் தரசுமெதிர் வந்தணைய.

(இ-ள்.) சிந்தையிடையறு அன்பும் திருமேனி தனிலசைவும்=திருவுள்ளத்தின்கண் நீங்காத அன்பும் திருமேனியில் ஆனந்தபரவசத்தாலாய தளர்நடையும்; கந்தமிகையாங்கருத்தும்=இந்திரியங்களால் உணரப்படும் விஷயத்தொகுதிகள் குற்றமென்னும் கருத்தும்; கையுழவாரப்படையும்=திருக்கரத்திலேந்திய திருவுழவாரமும்; வந்திழிகண்ணீர் மழையும்=இடையறு அன்புகாரணமாக வந்திழிக்கும் ஆனந்தபாஷ்பமாகிய மழையும்; வடிவிற்பொலிதிருநீறும்=திருவுருவில் விளங்கும் திருவெண்ணீறும் ஆகிய; அந்தமிலாத்திருவேடத் தரசும் எதிர்வந்தணைய=அளவுபடாததிருவேடப் பொலிவினையுடைய வாகீசமுநிவரும் தம்எதிரில் எழுந்தருளிவர—எ-று.

கந்தம் தொகுதி, அது விஷயங்களின்மேற்று. (உ௭௦)

கண்டகவு ணியக்கன்றுங் கருத்திற்பரவு மெய்க்காதற்
றொண்டர்திரு வேடநேரே தோன்றியதென்று தொழுதே
யண்டரும்போற்ற வணைந்தங் கரசுமெதிர் வந்திறைஞ்ச
மண்டியவார் வம்பெருக மதுரமொழி யருள்செய்தார்.

(இ-ள்.) கண்டகவுணியக்கன்றும் கருத்திற் பரவுமெய்க்காதற் றொண்டர் திருவேட நேரேதோன்றியதென்று தொழுதே=அவ்வாறுவாகீசர் எழுந்தருளும் தோற்றத்தைக்கண்டருளிய ஆளுடையபிள்ளையாரும் தமதுதிருவுள்ளத்தில் சிவபிரானைத் துதிக்கும்மெய்ப்பத்தியையுடைய அடியாரது திருவேடம் எதிரேகாணப்பட்டதென்று கைதொழுது; அண்டரும்போற்ற அணைந்து அங்கு அரசும் எதிர்வந்திறைஞ்ச=தேவர்களும் துதிக்க அடைந்தருளி அவ்விடத்து ஆண்டஅரசும் எதிரேவந்துவணங்க; மண்டிய வார்வம்பெருக மதுரமொழி அருள்செய்தார்=நெருங்கிய அன்பானது அதிகரிக்க மதுரமான மொழிகளை அவருடன் அருளிச்செய்தார்—எ-று.

உம்மையால் வாகீசமுனிவரும் அவ்வாறு பிள்ளையாருடன் மதுரமொழிகளை அருளிச்செய்தாரென்க.

மெய்யடியார் வேடம்தோன்றுங்கால் தொழாதொழிதல் மிக்கபழுதாதலில் தோன்றிய தென்றுதொழுதே என்றார். கவுணியக்கன்றும் தொழுது அரசணைந்து இறைஞ்ச அருள்செய்தார் எனமுடிக்க. (உ௭௧)

* கந்தம் - இந்தியம். மிகை - குற்றம்.

Koviloor Digital Library

பேரிசை நாவுக்கரசைப் பிள்ளையார்கொண் டுடன்போந்து
போர்விடையார் திருத்தோணிப் பொற்கோயிலுட் புகும்போதி
லார்வம்பெருக வணையுமவ ருடன்கும்பிட் டருளாற்
சீர்வளர்தொண் டரைக்கொண்டு திருமாளிகை தனிற்சேர்ந்தார்.

(இ-ள்.) பேரிசைநாவுக்கரசைப் பிள்ளையார் கொண்டு உடன்போந்து= பெரியகீர்த்தியையுடைய திருநாவுக்கரசை ஆளுடையபிள்ளையார் அழைத்துக் கொண்டுசென்றருளி; போர்விடையார் திருத்தோணிபொற்கோயிலுள்புகும் போதில்=போர்செய்தற்குரிய விடபத்தை வாகனமாகவுடைய திருத்தோணி யென்றும் பொன்னாலாகிய கோயிலுள்ளே சென்றருளுங்காலத்து; ஆர்வம் பெருக அணையுமவருடன் கும்பிட்டருளால்=ஆர்வம் அதிகரிக்கத்தம்முடனே முந்தருளும் திருநாவுக்கரசுடன் தோணியப்பரை வணங்கி அவரது திருவரு ளால்; சீர்வளர் தொண்டரைக்கொண்டு திருமாளிகைதனிற் சேர்ந்தார்=ஞா னச்செல்வமிக்க வாண்டவரசைத்தம்முடன்கொண்டு திருமாளிகைக் கெழுந் தருளினார்—எ-று. (உஎஉ)

அணையுந்திருத் தொண்டர்தம்மோ டாண்டவா சுக்குமன்பா
லிணையிறிரு வமுதாக்கி யியல்பாலமுது செய்வித்துப்
புணரும்பெரு கன்புநண்பும் பொங்கியகா தலிற்கும்பிட்
டுணருஞ்சொன்மா லைகள்சாத்தி யுடன்மகிழ்வெய்தி யுறைந்தார்.

(அணையும் திருத்தொண்டர் தம்மோ டாண்ட அரசுக்குமன்பால் = எ முந்தருளிய திருத்தொண்டர்களுடன் அவ்வாண்ட அரசுக்கும் அன்பினால்; இணையில் திருவமுதாக்கி இயல்பால் அமுதுசெய்வித்து=ஒப்பில்லாத திருவ முது சமைப்பித்து முறைமையால் திருவமுதுசெய்யச்செய்வித்து; புணரும் பெருகன்பும் நண்பும் பொங்கிய காதலிற்கும்பிட்டு=ஆண்ட வரசுடன்கூடிய காரணத்தால் மிக்கவன்பும் சிநேகமும் நாடோறும்வளர திருத்தோணியப் பரைப் பத்தியினால்வணங்கி; உணருஞ்சொன்மாலைகள் சாத்தி உடன்மகிழ் வெய்தி உறைந்தார்=பொருளுணர்தற்குரிய சொல்லாலாகிய பதிகமாலையைப் பாடியருளித் திருத்தோணியப்பரது திருவடிகளிற்சூட்டி ஆண்டவரசுடன் மகிழ்ச்சியடைந்து எழுந்தருளியிருந்தார்—எ-று. (உஎங)

அந்நாள்சில நாள்கள்செல்ல வருட்டிருநா வுக்கரையர்
மின்னார்சடை யண்ணலெங்கு மேவிடங்கும் பிடவேண்டிப்
பொன்மார்பின் முந்நூல்புனைந்த புகலிப்பிரா னிசைவோடும்
பின்னாகவெய்த விறைஞ்சிப் பிரியாதநண் பொடுபோந்தார்.

(இ-ள்.) அந்நாள் சிலநாள்கள்செல்ல=பிள்ளையாரோடுசீகாழியில் உட னுறையும் நாளாக சிலநாட்செல்ல; அருட் டிருநாவுக்கரையர்=திருவருளை யுடைய திருநாவுக்கரையர்; மின்னார்சடையண்ணல் எங்குமேவிடம் கும்பிட

Koviloor Digital Library

வேண்டி=மின்னலையொத்த சடாமகுடத்தையுடையசிவபிரான் எழுந்தருளிய திருப்பதிகளெவ்விடத்தும் வணங்கவிரும்பி ; பொன்மார்பில் முந்நூல்புனைந் தபுகலிப்பிரானிசைவோடும்=அழகிய திருமார்பில் உபவீதத்தைத்தாங்கியருளி ய ஆளுடையபிள்ளையா ருடன்பாட்டுடன் ; பின்னுகவெய்தவிறைஞ்சிப் பிரி யாதநண்பொடுபோந்தார்=தமதுபின்னே யெழுந்தருள அவரைவணங்கியவ ருடன் நீங்காதபெரியநண்புடன் ஆண்டவரசு எழுந்தருளினார்—எ-று. (உ௭௪)

வாக்கின் றனிமன்னரோக மாருத்திரு வுளத்தோடும்
பூக்கமழும் பணைசூழ்ந்த புகலியின்மீண் டும்புகுந்து
தேக்கியமா மறைவெள்ளத் திருத்தோணிவீற் றிருந்தாரைத்
தூக்கின்றமிழ் மாலைபாடித் தொழுதங்குறை கின்றநாளில்.

(இ-ள்.) வாக்கின்றனி மன்னரோக மாருத்திருவுளத்தோடும்=ஒப்பில் லாததிருநாவுக்கரசர் சென்றருள அவருடன் பிரியாத நண்புநிலைமை நீங்காத் திருவுள்ளத்துடன் ; பூக்கமழும் பணைசூழ்ந்த புகலியின் மீண்டும் புகுந்து= தாமரைமலர்கள் வாசனைவீசும் வயல்சூழ்ந்த சீகாழிக்கு மீளவும்சென்றருளி; தேக்கியமாமறைவெள்ளத் திருத்தோணி வீற்றிருந்தாரை=பெரியவேதங்கள் நிறைந்த திருத்தோணியப்பரை ; தூக்கின்றமிழ் மாலைபாடித் தொழுதங் கு றைகின்றநாளில்=செய்யுளாலாய திருப்பதிகமாலையைப்பாடி வணங்கி அச்சீ காழியில் எழுந்தருளியிருக்குநாளில்—எ-று. (உ௭௫)

செந்தமிழ் மாலைவிகற்பச் செய்யுட்களான் மொழிமாற்றும்
வந்தசொற்சீர் மாலைமாற்றும் வழிமொழியெல் லாமடக்குஞ்
சந்தவியமக மேகபாதந் தமிழிருக்குக் குறள்சாத்தி
யெந்தைக்கெ ழுகூற்றிருக்கை யீரடி யீரடிவைப்பு.

(இ-ள்.) செந்தமிழ்மாலை விகற்பச் செய்யுட்களான் மொழிமாற்றும்= செந்தமிழ்ப்பதிக விகற்பமான செய்யுட்களினால் திருமொழிமாற்றும் ; வந்த சொற்சீர் மாலைமாற்றும்=முன்வந்த சொல்லோடு கூடியசீராலாய அடியை மாற்றிச்சொல்லும் மாலைமாற்றும் ; வழிமொழி=பூமியில்தாம் அவதரித்த வ ழியைக்கூறும் வழிமொழியும் ; எல்லா மடக்குஞ் சந்தவியமகம்=எல்லா அடிகளினும் மடக்காய் வருகின்ற ஓசையோடு கூடியதிருஇயமகமும் ; ஏகபா தம்=திருவேகபாதமும் ; தமிழிருக்குக் குறள்சாத்தி=தமிழிற்குரிய திருவிரு க்குக் குறளுமாகிய இவைகளைப்பாடி ; எந்தைக் கெழுகூற்றிருக்கை=எமது பிரானாகிய திருத்தோணி யப்பருக்கு திருவெழுகூற்றிருக்கையும் ; ஈரடி ஈர டி வைப்பு=ஈரடியும் அதன்மேல்வைப்பீரடியும் ஆகிய ஈரடி ஈரடிவைப்பை யும் பாடியருளினார்—எ-று.

பாடினொன்றும் பயனிலை தந்துணைக்கப்பட்டது. (உ௭௬)

Koviloor Digital Library

திருமொழிமாற்று - பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

* காடதணிகலங் காரரவம்பதி காலதனிற்
றோடதணிகுவர் சுந்தரக்காதினிற் றூச்சிலம்பர்
வேடதணிவர் விசயற்குருவம்வில் லுங்கொடுப்பர்
பீடமதணிமணி மாடப்பிரம புரத்தாரே.

கல்லுயர்கழுமல விஞ்சியுண்மேவிய கடவுடன்னை
நல்லுயர்ஞானசம் பந்தன்ஞானத்தமிழி னன்குணர்தல்
சொல்லுதல்கேட்டல்வல் லோர்தொல்லைவானவர் தங்களோடுஞ்
செல்குவர்சீரரு ளாற்பெறலாஞ்சிவ லோகமதே.

திருச்சிற்றம்பலம்.

சீகாழி திருமாலைமாற்று.

திருச்சிற்றம்பலம்.

யாமாமா நீயாமாமா
யாழீகா மாகாணுகா
காணுகா மாகாழீயா
மாமாயா நீமாமாயா.

இதன்பொருள்.

யாமாமா என்பது - எனது ஆத்மபோதசேட்டையுங் கருவிகளின் சேட்டையும் இவைகளால் அவைகள் ஆமா றெவ்வாறெனில், நீயாமா - அறிவுக்கறிவாய்நிற்கின்ற நினது சேட்டையொழிந்து வேறொன்றற்ற சற்காரியமாயுள்ளவனே, மாயாழீ என்பது - மிகுதிப்பட்டு மேலாயிருந்துள்ள நாதசொரூபமா யிராநின்றயாழையுடையானே, அத்தன்மை மிகுதிப்பட்டு நலஞ்சிறந்துள்ள யாழை யிடைவிடாமல் தடவி வாசித்தலான் மகா நல்ல வீணைதடவியென்றும் பொருள், கா - இது இடைநிலை, மாகாணுகா என்பது - பரமாகாசத்தரைச் சிறப்படுத்தப்பட்டு மலைகளுக்கெல்லாங் குலமலையாகிய ஸ்ரீகயிலாயத்தின் கண்ணே யெழுந்தருளி யிருப்பவனே, காணுகா என்பது என்றுள்ளக்கண்ணுக்குத் தோன்றப்பட்டுள்ள திருமேனியையுடையானே, மாகாழீயாஎன்பது ஊழிகாலத்தின்கண்ணும் அழிவின்மையாகிய மேன்மையைப்பொருந்தியுள்ள காழியையுடையானே, மாம் என்பது - ஈங்ஙன தருள்பெறுத பேரிழப்பையுடையமாகிய எம்மை, ஆயானீ - இடபவாகனத்தின் கண்ணே யேறிவந்

* காடது - பதி. அணிகலம் - காரரவம் - காலதனில் - தூச்சிலம்பர் - தோடதணிகுவர் - சுந்தரக்காதினில் - வேடதணிவர் - உருவம் - விசயற்கு வில்லுங்கொடுப்பர் இங்ஙனம் மொழிமாற்றத்தக்கது.

Koviloor Digital Library

தெனக்குப் பொய்கைக் கரையின்கண்ணே வெளிப்பட்டவனே, மாமாயாஎன்பது - மாமாயையாகிய குடிலையைக்கொண்ட சுத்தமாயையிலுள்ள தத்துவங்களை யுண்டாக்கிக் கன்மம் பொசித்தல் காரணமாகத் திரோதாயி சத்தியாலே மறைத்துள்ள மயக்கமே யறிவாகப் பெத்தத்தைச் செலுத்தப்பட்டவனே இடையே நிறுத்தின, கா என்பது - அந்தமாயாமயக்கம், எனதறிவிற்சேவியாமல் ஒழித்து, உன்னை யெனக்குள்ளபடி தந்து என்னை நீ நிகழாமற்கொண்டு இவ்வாறு நீ மிரண்டறவாழ்ந்து இரட்சிப்பாயாக—என்றவாறு.

திருச்சிற்றம்பலம்.

நேரக ழாமித யாசழிதா
யேனொநி யேனொநி ளாயுழிகா
காழியு ளாநினை யேநினையே
தாழிசை யாதமி ழாகரனே.

இதன்பொருள்.

நேரக ழாமித யாசைழிநா என்பது - மானைக்காட்டி மானைப்பிடிப்பதுபோல வெனற்பால திருமேனி கொண்டருளி யென்னை யொருகாலத்திலும் விட்டு நீங்கப்படாமல் என்னிடத்திலே மிகுதியாகச் சேவிக்கப்பட்ட மலத்திரயங்களாகிய குற்றங்களை அழியாநின்றுள்ளவனே, ஏனொநி என்பது - உனது பரிபூரணமான அறுவுருவநிலையில் எனக்குண்டான தாசோகநிலையெல்லா நீயே, ஏனொநிளாயுழி என்பது - என்னிடத்திலே நின்று என்னையொழித்துக் கோதிலாவமுதாக நீயே வாழப்பட்டு என்னைச் சிறிதுந் தோன்றவிடாமல் இரட்சியாநின்றுள்ளவனே, காழியுளா இத்தன்மையான பிரமசாயுச்சித்யதை அடியேற்குப் பிரசாதிப்பான்பொருட்டாக காழியென்னும் பதியைப் படைத்துளானே என தொருவிண்ணப்பத்தைக் கேட்டருள்வாயாக, நினையே நினையே தாழிசை, உன்னைச் செய்யுட் கருத்தாக வுடைய இம்மாலை மாற்றென்னும் பெயரையுடையதுமாய் விரிந்துள்ள பாடலானது, ஆதமிழாகரனே - ஐயோ தமிழுக்குப் படுதுறையாகியயான் எனது போதத்தாற்பாடிய பாடலென்று உலகத்தா ருரைசெய்வதே யாதலால் நீயறிய யான் பாடியதில்லையென்கின்ற செய்தி யுனக்கே நிகழுமாதலால் இப்பாடலையேத்தத் தவஞ்செய்தாருமடிமை குலையாத சாயுச்சியத்தைப் பெறுவார்கள்—என்றவாறு.

திருச்சிற்றம்பலம்.

திருவழிமொழித்திருவிராகம் - பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

சுரருலகு நரர்கள்பயிறரணிதல முரணழிய வரணமதின்முப்
புரமெரிய விரவுவகை சரவிசைகொள் கருமுடைய பரமனிடமாம்
வரமருள வரன்முறையி னிரனிரைகொள் வருசுருதி சிரவுரையினாற்
பிரமனுய ரரனெழில்கொள் சரணவிணை பரவவளர் பிரமபுரமே.

Koviloor Digital Library

ஒழுகலரி தழிகலியி னுழியுலகு பழிபெருகும் வழியைநினையா, முழுதுடலி லெழுமுயிர்க டழுவுமுனி குழுவினொடு கெழுவுசிவனைத், தொழுதுலகி லிழுகுமல மழியும்வகை கழுவுமுரை கழுமலநகர்ப், பழுதிலிறை யெழுதுமொழி தமிழ்விரகன் வழிமொழிகள் மொழிதகையவே.

திருக்கோமூத்திரி - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பூமகனூர் புத்தேளுக் கிறைவனூர் குறைவிலாப் புகலிபூமேன் மாமகளூர் வெங்குருநற் றோணிபுரம் பூந்தராய் வாய்ந்தவிஞ்சிச், சேமமிகு சிரபுரஞ்சீர்ப் புறவநிறை புசழ்ச்சண்பை காழிகொச்சை, காமனைமுன் காய்ந்தநுதற் கண்ணவனூர் கழுமலநாங் கருதுமூரே.

அம்மான்சேர் கழுமலமாச் சிரபுரம்வெங் குருகொச்சை புறவமஞ்சீர், மெய்ம்மானத் தொண்புகலி மிகுகாழி தோணிபுரந் தேவர்கோனூர், அம்மான்மன் னுபர்சண்பை தராயயனூர் வழிமடக்கு மாவின்பாய்ச்சல், தம்மானென் றியஞான சம்பந்தன் றமிழ்கற்போர் தக்கோர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

திருக்கழுமலம் - இயமகம்.

திருச்சிற்றம்பலம்.

உற்றுமைசேர்வது மெய்யினையே யுணர்வதுநின்னருண் மெய்யினையே
* கற்றவர்காய்வது காமனையே கனல்விழிகாய்வது காமனையே
† யற்றமறைப்பது முன்பணியே யமரர்கள்செய்வது முன்பணியே
பெற்றுமுகந்தது கந்தனையே பிரமபுரத்தை யுகந்தனையே.

மற்றவை வெளிப்படை.

பருமதின்மதுரைமன்னவை யெதிரே பதிகமதெழுதிலை யவ்வெதிரே
வருநதியிடைமிசை வருகரனே வசையொடுமலர்கெட வருகரனே
கருதலிலிசைமுரல் தருமருளே கழுமலமமரிறை தருமருளே
மருவியதமிழ்விர கன்மொழியே வல்லவர்தம்மிடர் திடமொழியே.

* கற்றவர் காய்வது காமனையே என்பது - உனது சத்தியதரிசனத்தை யிலைவறக்கற்றவர்கள் விடப்பட்டது பசுத்துவம்பொருந்திய க்ஷேத்திரமாகிய தேகாதிபிரபஞ்சமே.

† அற்றமறைப்பது முன்பணியே என்பது உனதுநிருவாணத்தைமறைப்பது முன்தொங்கலான பாம்புகளே.

Koviloor Digital Library

இதன்பொருள்.

பருமதின் மதுரைமன்னவை யெதிரே என்பது - பருத்தமதில்சூழ்ந்த மதுரைக்குப் பதியாகிய பாண்டியராசனது சபைக்குமுன்பே, பதிகமது எழுது என்பது-திருப்பதிகம் எழுதப்பட்ட, இலைட்வை - ஏடுகளானவை, வருநதியிடைமிசைவருகரனே என்பது - வருகின்றதை வகையாற்றினடுவே எதிரிட்டுப் போம் வகைதுணைசெய்து செலுத்திப்போக்குகின்ற திருக்கரங்களையுடையவனே, வசையொடும் அலர்கெட என்பது - ஏடெதிர்போக விசயஞ்செய்து சமணரது புறனுரையும் பரிபவச்சொல்லும் கெடுவான் பொருட்டு, அருகு என்பது - சமணரை அரனே என்பது - கெடுக்கப்பட்டவனே, கருதலிலிசைமுரல் தருமருளே என்பது - கேட்போரது கருத்தையழிக்கும், இசைத்திறத்துக்குரியாருமாய்த் தன்மசீலருமாகிய மறையோர்வாழ்கின்ற, கழுமலம் அமர் இறைதருமருளே என்பது திருக்கழுமலத்தின்கண் வீற்றிருக்கும் தம்பிரான் பிரசாதத் திருவருளை, மருவியதமிழ்விரகன்மொழியே என்பது இடைவிடாமற் பொருந்திய தமிழ்விரகனாகிய யான் பாடியபாடலையே, வல்லவர்தம்மிடர் திடமொழியே என்பது சொல்கின்றவர்களுடைய பிறவித்துன்பமானது விட்டு நீங்குமது சத்தியமே—என்றவாறு.

திருச்சிற்றம்பலம்.

திருஏகபாதம் - பண் - வியாளக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்.

இதன்பொருள்.

பிரம புரத்துறை பெம்மா னெம்மான் என்பது பிரமம் ஞானாகாசமாகிய பராசத்தியை, புரத்து அந்தப் பரிபூரணத்தை, உறை மிகுதியாக வியக்கப்பட்ட, பெம்மான் பெருமான், எம்மான்எந்தப்பெரியோன்,—(இனிப்பொழிப்பு.) ஞானாகாசமாகிய பராசத்தியான பரிபூரணத்தை மிகவும் வியந்து அந்தப் பராசத்திக்கு அதீதமாகிய சுகமே வடிவாய், முதல் நடுவிறுதிகாணாத வஸ்து - எந்தப்பெரியோன், பிரம புரத்துறை பெம்மா னெம்மான் என்பது பிரமம் மேல், புரம் நிலம், உறை - நீர், பெம் - விருப்பம், மான் - மான் போலும் விழியையுடைய பெண், எம் - எம்மை, நீங்காத -நிலைமையையுடைய, ஆன் - ஆத்மா, —(இனிப்பொழிப்பு.) ஆகாசத்தின்கண்ணே யோடுகின்ற கங்காதேவியை விரும்பித் திருமுடியிலே வைத்தவன், என்னை நீங்காத நிலைமையையுடைய எனதுயிர், பிரமபுரத்துறை பெம்மா னெம்மான் - பிரமம்

Koviloor Digital Library

என்பது - பிரமத்துவம், புரம் - சரீரம், உறை - என்றுதல், பெம் என்பது ஆசை, ஆன் - அமையாமை, எம்மான் - என்னை யொக்கவந்தவன்,—(இனிப் பொழிப்பு.) பிரமரூபத்திலே யெண்ணப்பட்ட என்னை முத்தியிலே விடுகைக்கு அமையாத இச்சையனாய்வந்தவன் என்னை யொத்த தன்மையன், பிரம புரத்துறை பெம்மா னெம்மான் என்பது பிரமபுரம் என்கின்றதிருப்பதியிலே யுறைகின்ற கர்த்தாவானவன் என்னுடையசுவாமி—என்றவாறு.

திருச்சிற்றம்பலம்.

கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை.

இதன்பொருள்.

கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை-கழுமல் என்பது மிகுதிப்பட்ட குற்றம், அமுது என்பது நீர், பதிக்க என்பது விளைவிக்க, உணியன் என்பது, உள்ளார், கட்டு என்பது வடிவாகக்கட்டுண்டல், உரை என்பது தேய்தல் (இனிப்பொழிப்பு.) மிகுதிப்பட்ட தோஷமாயுள்ள சுக்கிலசுரோணிதமாகிய விருந்நீரின் கண்பதிந்து விளைதற்குள்ள தந்தமமைதிருவேயாம லெக்கண்ணும்விட்டு விளங்குகிற, கழுமல முதுபதிக் கவுணியன்கட்டுரை கழும் என்பது மயக்கம், அலம் என்பது அலக்கண்படுதல், அமுதுஎன்பது அமுதம் பதி என்பது கர்த்தா, க என்பது சிரசு, உணியன் என்பது உண்ணப்பட்டவன், கட்டு என்பது விளக்கம், உரைஎன்பதுபொன்,— (இனிப்பொழிப்பு.) மாயாமயக்கத்தின் கண்ணே மயங்கிப் பெத்த முத்தியிரண்டுந் தெரியாமல் திண்டாடப்பட்ட மலபோதர்க்கு அமுதம்போன்ற சித்தாயுள்ளவனுமாய்விட்டு விளங்காநின்ற பொன்னுருவுடையவனாய்ச் சிருட்டிக்குக் கர்த்தாவாகிய பிரமாவினது கபாலத்திலே பிச்சைகொண்டு நகருங்கருணையாளன் கழுமலமுதுபதிக் கவுணியன் கட்டுரை, மேற்சொன்ன பதியின்கண் கவுணியகோத்திரத்து வந்தமறையோனாகிய எனது, கட்டு காட்டாகியபாடலை, உரை உரைப்பீராக, காட்டு என்பது கட்டெனக் குறுகிநின்றது,— (இனிப்பொழிப்பு.) திருக் கழுமலமென்று மூவாப்பழங்கிழமைப் பன்னிருபெயர்பெற்ற அநாதிமூலமாகிய பதியிடத்துக் கவுணிய கோத்திரத்தில் உற்பவமான நான் நிவேதிக்கப்படுங் காட்டாகிய இப்பாடலை மேற்சொன்னவற்றிலும் மலத்திரயங்களிலும் அழுந்தாநின்ற ஒருத்தராகிலும் பலராகிலும் உரைசெய்வார் உயர்ந்தார்களாதலால் இப்பாடலை இடைவிடாமல் உரைசெய்வீராக—என்றவாறு.

இத்திருவுளக்கருத்துகள் கண்ணுடையவள்ளலார் செய்தருளியவை.

திருச்சிற்றம்பலம்.

Koviloor Digital Library

திருப்பிரமபுரம்-திருவிருக்குக்குறள்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

அரனை யுள்குவீர் பிரம னூருளெம்
பரனை யேமனம் பரவி யுய்ம்மினே
தொழு மனத்தவர் கழுமல்த்துறை
பழுதில் சம்பந்தன் மொழிகள் பற்றுமே.

திருச்சிற்றம்பலம்.

திருவெழுகூற்றிருக்கை.

திருச்சிற்றம்பலம்.

ஒருருவாயினை மானாங்காரத், தீரியல்பாயொரு விண்முதல்பூதல, மொன்றியவிருசுட ரும்பர்கள்பிறவும், படைத்தளித்தழிப்பமும் மூர்த்திகளாயினை யிருவரோடொருவ னாகிநின்றனை, யோரானீழ லுன்கழலிரண்டு, முப்பொழுதேத்திய நால்வர்க் கொளிநெறிகாட்டினை, நாட்டமூன்றுகக்கோட்டினை, யிருநதியரவமோ டொருமதிசூடினை, யொருதாளீரயின் மூவிலைச்சூல, நாற்கான்மான்மறி யைந்தலையரவமேந்தினை, காய்ந்தநால்வாய் மும்மதத்திருகோட் டொருகரியீடழித் துரித்தனை, யொருதனுவிருகால் வளையவாங்கி, முப்புரத் தோடு நானிலமஞ்சக், கொன்றுதலத்துற வவுணரையறுத்தனை, யைம்புல னாலா மந்தக்கரண, முக்குணமிருவளி பொருங்கியவானோ ரேத்தநின்றனை யொருங்கியமனத்தோ டிருபிறப்போர்ந்து, முப்பொழுது குறைமுடித்து நான்மறையோதி, யைவகைவேள்வி யமைத்தாறங்க முதலெழுத்தோதி, வரன்முறைபயின்றெழு வான்றனைவளர்க்கும்பிரமபுரம்பேணினை, யறுபதமுரலும் வேணுபுரம் விரும்பினை, யிகலியமைந்துணர் புகலியமர்ந்தனை, பொங்குநாற் கடல்சூழ் வெங்குரு விளங்கினை, பாணிமூவுலகும் புதையமேன்மிதந்த தோணிபுரத்துறைந்தனை, தொலையாவிருநிதி வாய்ந்தபூந்தரா யேய்ந்தனை, வரபுரமென்றுணர் சிரபுரத்துறைந்தனை, யொருமலையெடுத்த விருதிறலரக்கன், விறல்கெடுத்தருளினை புறவம்புரிந்தனை, முந்நீர்த்துயின்றோ னான்முகனறியாப், பண்பொடுநின்றனை சண்பையமர்ந்தனை, யையுறுமமணருமறுவகைத்தேரரு, மூழியுமுணராக் காழியமர்ந்தனை, யெச்சனேழிசையோன் கொச்சையைமேச்சினை, யாறுபதமு மைந்தமர்கல்வியு மறைமுதனான்கு மூன்றுகாலமுந் தோன்றநின்றனை, யிருமையினொருமையு மொருமையும் பெருமையு மறுவிலாமறையோர், கழுமலமுதுபதிக் கவுணியன்கட்டுரை கழுமல முதுபதிக் கவுணியனறிவு, மிளையதன்மையை யாதலினின்னை, நினையவல்லவ ரில்லைநீணிலத்தே.

திருச்சிற்றம்பலம்.

Koviloor Digital Library

ஈரடிமேல்வைப்பு-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

தக்கன்வேள்வி தகர்த்தவன் பூந்தராய்
மிக்கசெம்மை விமலன் வியன்கழல்.

சென்றுசிந்தை யில்வைக்க மெய்க்கதி
நன்றதாகிய நம்பன் றனே.

புந்தியான்மிக நல்லவர்பூந்தரா
யந்தமில்லெம தடிகளை ஞானசம்

பந்தன்மாலைகொண் டேத்தி வாழுநும்
பந்தமார் வினைபா றிடுமே.

திருச்சிற்றம்பலம்.

நாலடிமேல் வைப்புமேன்மை நடையின்முடு குமராகஞ்
சால்பினிற்சக் கரமாதி விகற்பங்கள்சாற் றும்பதிக
மூலவிலக் கியமாக வெல்லாப்பொருள் கோளுமுற்ற
ஞாலத்துயர் காழியாரைப் பாடினார்ஞான சம்பந்தர்.

(இ-ள்.) நாலடிமேல் வைப்பு=நாலடிமேல் வைப்பும்; மேன்மைநடையின் முடுகுமராகம்=மேன்மையான ஓசைநடையின் கண்முடுகுதலையுடைய திருவிராகமும்; சால்பினிற் சக்கரமாதி விகற்பங்கள் சாற்றும்பதிகம்=தகுதியினால் திருச்சக்கரமாற்று முதலிய விகற்பங்களால் அருளும் பதிகங்களையும்; மூலவிலக்கிய மாகவெல்லாப்பொருள் கோளுமுற்ற=செய்யுள் இலக்கண அமைதற்கு மூலமான ஓர் இலக்கியமாக அதில் அச்செய்யுளுக்குரிய அணிமுதலிய பொருள்களெல்லாம் அமைய; ஞாலத்துயர் காழியாரைப் பாடினார் ஞான சம்பந்தர்=நிலவுலகத்தின்கண் உயர்ந்த சீகாழியின்கண் எழுந்தருளிய தோணியப்பரை ஆளுடைய பிள்ளையார் பாடியருளினார்—எ-று. (உஎஎ)

நாலடிமேல்வைப்பு.

திருச்சிற்றம்பலம்.

இயலிசை யெனும்பொரு ளின்றிறமாம்
புயலன மிடறுடைப் புண்ணியனே
கயலன வரிநெடுங் கண்ணியொடு
மயலுல கடிதொழ வமர்ந்தவனே.
கலனுவது வெண்டலைகடிபொழிற் புகலிதன்னு
ணிலநாடொறு மின்புறநிறைமதி யருளினனே.

Koviloor Digital Library

புண்ணியர் தொழுதெழு புகலிந்நகர்
விண்ணவ ரடிதொழ விளங்கினனை
நண்ணிய ஞானசம் பந்தன்வாய்மை
பண்ணிய வருந்தமிழ் பத்தும் வல்லார்.

நடலையவையின்றிப் போய்நண்ணுவார் சிவனுலக
மிடரானவை யின்றித்தாமெய்துவா தவநெறியே.

திருச்சிற்றம்பலம்.

திருச்சண்பைநகர்திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

எந்தமது சிந்தைபிரி யாதபெரு மானென விறைஞ்சி யிமையோர், வந்துதுதி செய்யவளர் தூபமொடு தீபமலி வாய்மையதனு, லந்தியமர் சந்திபல வர்ச்சனைகள் செய்பவமர் கின்றவழகன், சந்தமலி கொந்தளநன் மாதினொடு மேவுபதி சண்பைநகரே.

வாரின்மலி கொங்கையுமை நங்கையொடு சங்கரன் மகிழ்ந்தமரு மூர், சாரின்முரல் தெண்கடல் விசும்புற முழங்கொலிகொள் சண்பைநகர்மேற், பாரின்மலி கின்றபுகழ் நின்றதமிழ் ஞானசம் பந்தனுரைசெய், சீரின்மலி செந்தமிழ்கள் செப்புமவர் சேர்வர்சிவ லோகநெறியே.

திருச்சிற்றம்பலம்.

திருச்சக்கரமாற்று-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

விளங்கியசீர்ப் பிரமனூர் வேணுபுரம் புகலிவெங் குருமேற் சோலை, வளங்கவருந் தோணிபுரம் பூந்தராய் சிரபுரம்வண் புறவமண் மேற், களங்கமிலூர் சண்பைகமழ் காழிவயங் கொச்சைகழு மலமெ ன்றின்ன, விளங்குமான் றன்னைப்பெற் றிமையவர்தம் பகையெறிவித் திறைவனூரே.

அக்காஞ்சேர் தருமனூர் புகலிபூந்தராய் தோணிபுர மணிநீர்ப் பொய்கை, புக்காஞ்சேர் புறவஞ்சீர்ச் சிலம்பனூர் புகழ்க்காழி சண் பைதொல்லூர், மிக்காஞ்சீர்க் கழுமலமே கொச்சைவயம் வேணுபுர மயனூர்மேவிச், சக்காஞ்சீர்த் தமிழ்விரகன்முன் சொன்னதமிழ் தரிப்போர்தவஞ் செய்தோரே.

திருச்சிற்றம்பலம்.

Koviloor Digital Library

இன்னிசைபா டினவெல்லாம் யாழ்ப்பெரும்பாண ணார்தாமு
மன்னுமிசை வடிவான மதங்கசூளா மணியாரும்
பன்னியவே ழிசைபற்றிப் பாடப்பதி கங்கள்பாடிப்
பொன்னின்றிருத் தாளம்பெற்றார் புகலியிற்போற்றி யிருந்தார்.

(இ-ள்.) இன்னிசைபாடின எல்லாம்=இனியவிசையோடு பாடியதிருப்பதிகங்களை எல்லாம்; யாழ்ப்பெரும்பாணனார்தாமும்=திருநீலகண்டயாழ்ப்பாணரும்; மன்னும் இசைவடிவான மதங்கசூளாமணியாரும்=நிலைபெற்றஇசையே ஓர் வடிவங்கொண்டாற்போன்ற மதங்கசூளாமணி என்னும்பெயருடைய அவர்திருமனைவியாரும்; பன்னியஏழிசைபற்றிப்பாட=இசைநூலிற் கூறிய குரல்முதலிய ஏழிசைகளும் அமைத்துப்பாட; பொன்னின்திருத்தாளம்பெற்றார் புகலியிற் போற்றியிருந்தார்=பொன்னாலாகிய திருத்தாளம்பெற்ற ஆளுடையபிள்ளையார் சீகாழியில் திருப்பதிகங்கள்பாடி தோணியப்பனைத்துதித்து எழுந்தருளியிருந்தார்—எ-று. (உஎஅ)

அங்கணமர் கின்றநாளி லருந்தமிழ்நா டெத்தினுள்ளுந்
திங்கட்சடை யண்ணலார்தந் திருப்பதியா வையுங்கும்பிட்
டெங்குந்தமிழ் மாலைபாடி யேத்தியிங்கெய் துவனென்று
தங்குலத்தா தையாரோடுந் தவமுனிவர்க் கருள்செய்தார்.

(இ-ள்.) அங்கணமர் கின்றநாளில்=அச்சீகாழித் திருப்பதியில் எழுந்தருளியிருக்கின்றகாலத்தில்; அருந்தமிழ்நாடெத்தினுள்ளும்=அரியதமிழ் நாடெல்லாவற்றினுள்ளும்; திங்கட்சடையண்ணலார்தம் திருப்பதியாவையுங் கும்பிட்டு=இளம்பிறையைச்சூடிய சடாமகுடத்தையுடைய சிவபிரானது திருப்பதிகளெல்லாவற்றையும் வணங்கி; எங்கும் தமிழ்மாலைபாடி ஏத்தியிங் கெய்துவனென்று=அத்திருப்பதிகளெல்லாவற்றினும் திருப்பதிகமாலைகளைப் பாடித்துதித்து மீட்டித்திருப்பதிக் கெழுந்தருளுவேன் என்று; தங்குலத்தாதையாரோடும் தவமுனிவர்க்கருள்செய்தார்=தங்குலத்தந்தையாராகிய சிவபாத விருதயரோடும் தவத்தையுடைய பிராமணர்களுக்கும் அருளிச்செய்தார்—எ-று. (உஎகூ)

பெருகுவிருப் புடனோக்கிப் பெற்றகுலந் தாதையாரு
மருமையாலும் மைப்பயந்த வதனாற்பிரிந் துறைவாற்றே
னிருமைக்கு மின்பமளிக்கும் யாகமும்யான் செயவேண்டு
மொருமையாலின் னஞ்சிலநா ளுடனெய்துவ னென்றுரைத்தார்.

(இ-ள்.) பெற்றகுலத்தாதையாரும் பெருகுவிருப்புடன் நோக்கி=பிள்ளையாரைப்பெற்ற குலச்சிரேட்டராகிய சிவபாத இருதயரும் மிக்க விருப்பத்தோடும்பார்த்து; அருமையாலும்மைப்பயந்த அதனால்பிரிந்துறைவாற்றேன்=அரியதவத்தால் உம்மையான் பெற்றமையால் உம்மைப்பிரிந்து இருத்தலைச்

Koviloor Digital Library

சகிக்கமாட்டேன் ; இருமைக்கு மின்பம் அளிக்கும் யாகமும் யான்செயவே ண்டும்=இம்மைமறுமை யென்னுமிரண்டிற்கும் இன்பத்தைக்கொடுக்கும் பசுபந் தமுதலிய யாகங்களையும் யான்செய்யவேண்டும் ; ஒருமையால் இன்னம் சில நாள் உடனெய்துவனென்றுரைத்தார்=இன்னும் சிலகாலம் ஒருமைப்பாட் டோடு பிரியாதிருப்பேனென்று கூறினர்—எ-று. (௨௪௰)

ஆண்டகையாரு மிசைந்தங்கம் பொற்றிருத் தோணிமேவு
நீண்டசடை யாரடிக்கீழ்ப் பணிவுற்றுநீ டருள்பெற்றே
யீண்டுபுகழ்த் தாதையார்பின் னெய்திடயாழ்ப் பாணரோடுங்
காண்டகு காழிதொழுது காதலினாற் புறம்போந்தார்.

(இ-ள்.) ஆண்டகையாரு மிசைந்தங்கு=அவ்விடத்து ஆளுடையபிள்ளை யாரும் திருவுள்ளம் இசைந்தருளி; அம்பொற்றிருத்தோணி மேவும் நீண்ட சடையார் அடிக்கீழ்ப் பணிவுற்று நீட்டருள்பெற்று=அழகிய பொன்னாலாகிய திருத்தோணியி லெழுந்தருளிய நீண்டசடாமகுடத்தையுடைய சிவபிரானது திருவடிக்கீழ் வணங்கி அழிவில்லாத அவரது திருவருளைப்பெற்று ; ஈண்டு புகழ்த்தாதையார் பின்னெய்திட=நெருங்கிய கீர்த்தியையுடைய சிவபாதவிரு தயரும் தமதுபின்னேவர ; யாழ்ப்பாணரோடும் காண்டகுகாழிதொழுது கா தலினாற் புறம்போந்தார்=திருநீலகண்ட யாழ்ப்பாணரோடும் காட்சியமைந்த சீகாழியை வணங்கி விருப்பத்தோடு அத்தலத்தி னின்றும் புறம்பே யெழுந் தருளினர்—எ-று. (௨௪௧)

அத்திருமூ தூரினுள்ளா ரமர்ந்துடன் போதுவார்போத
மெய்த்தவரந் தணர்நீங்கா விடைகொண்டு மீள்வார்கண்மீள
முத்தின்சிவிகை மேல்கொண்டு மொய்யொளித் தாமநிரைத்த
நித்திலவெண் குடைமீது நிறைமதிபோல நிழற்ற.

(இ-ள்.) அத்திருமூதூரி னுள்ளார் அமர்ந்துடன் போதுவார்போத= அந்தஅழகிய பழையசீகாழியில் வசிப்பவருள்விரும்பி உடன்செல்லும்கருத்து டையவர் செல்லவும்; மெய்த்தவ அந்தணர் நீங்காவிடைகொண்டு மீள்வார்க ள்மீள=உண்மைத்தவத்தையுடைய பிராமணர்களுள் பிள்ளையார் அநுமதிபெ ற்றுத் திரும்புவார்கள் திரும்பவும் ; முத்தின் சிவிகைமேல்கொண்டு=முத்தா லாகிய திருச்சிவிகையின்மேல் கொண்டருளி; மொய்யொளித்தாமநிரைத்த நித்தில வெண்குடைமீது நிறைமதிபோல நிழற்ற=திரண்ட ஒளிமிக்க காந் தியை எங்கும்பரப்பிய முத்தாலாகிய வெண்குடை திருமுடியின்மேல் பூரண சந்திரன்போல நிழல்செய்யவும்—எ-று. (௨௪௨)

சின்னந்தனிக்கா ளந்தாரை சிரபுரத்தாண் டகைவந்தா
ரென்னுந்தகை மைவிளங்க வேற்றதிருப் பெயர்சாற்ற
முன்னெய்மருங்கு நிரந்தமுரசுடைப்பல் லியமார்ப்ப
மன்னுந்திருத் தொண்டரானர் வந்தெதிர் கொண்டுவணங்க.

Koviloor Digital Library

(இ-ள்.) சின்னம் தனிக்காளம் தாரை=திருமுத்துச்சின்னமும் ஒப்பில்லாத திருமுத்தின் காளமும் திருமுத்தின் தாரையும் என்னும் இம்மூன்றும்; சிரபுரத்தாண்டகை வந்தாரென்னுந் தகைமைவிளங்க = சீகாழியிலவதரித்த ஆளுடையபிள்ளையாரெழுந்தருளினாரென்னும் தன்மைகேட்போர்யாவர்க்கும் புலப்பட; ஏற்றதிருப்பெயர் சாற்ற=பிள்ளையாருக்குப் பொருந்திய பாலருவாயன் ஞானசம்பந்தன் முத்தமிழ்விரகன் முதலிய திருநாமங்கள் மூன்றையும் முறையே ஒலிக்கவும்; முன்னெம் மருங்கு நிரந்தமுரசுடைப்பல்லிய மார்ப்ப=முன்னே எப்பக்கத்திலும் வரிசையாயுள்ள முரசத்தை முதலாகவுடைய பலவாத்தியங்கள் ஒலிக்கவும்; மன்னுந்திருத்தொண்டரானார் வந்தெதிர்கொண்டு வணங்க=நிலைபெற்ற திருத்தொண்டரா யுள்ளார் எதிர்கொண்டு வந்துவணங்கவும்—எ-று. (உஅரு)

சங்கநாதங்க ளொலிப்பத் தழங்குபொற் கோடுமுழங்க
மங்கலவாழ்த் துரையெங்கு மல்கமறை முன்னியம்பத்
திங்களும் பாம்புமணிந்தார் திருப்பதியெங்கு முன்சென்று
பொங்கியகா தலிற்போற்றப் புகலிக்கவு ணியர்போந்தார்.

(இ-ள்.) சங்கநாதங்க ளொலிப்ப=சங்கொலிகள் முழங்க; தழங்குபொற்கோடு முழங்க=விளங்கியபொன்னாலாகிய கொம்புவாத்தியங்கள் சத்திக்கவும்; மங்கலவாழ்த் துரையெங்குமல்க=மங்கலவாழ்த்தாலாகிய வோசையெங்கும் நிரம்பவும்; மறைமுன்னியம்ப=வேதங்கள்முன்னே ஒலிக்கவும்; திங்களும்பாம்பும் அணிந்தார் திருப்பதியெங்கும் முன்சென்று=இளம்பிறையையும் பாம்பையும் அணிந்த சிவபிரானுரது திருப்பதிகளெவ்விடத்தும்முன்னே சென்று; பொங்கியகாதலாற்போற்ற=நிறைந்த விருப்பத்தால்வணங்க; புகலிக்கவுணியர் போந்தார்=சீகாழியிலவதரித்த பிள்ளையார் எழுந்தருளினர். ()

திருமறைச்சண் பையராளி சிவனூர்திருக்கண் ணூர்கோயில்
பெருவிருப்பா லணைந்தேத்திப் பிஞ்ஞகர்கோ யில்பிறவு
முருகியவன் பாலிறைஞ்சி யுயர்தமிழ்மாலை கொண்டேத்தி
வருபுனற் பொன்னிவட பாற்குடதிசை நோக்கிவருவார்.

(இ-ள்.) திருமறைச் சண்பையராளி=மங்கலமிக்க வேதங்களை யுணர்ந்த சீகாழியிலுள்ளார்க்கு அதிபராகிய ஆளுடையபிள்ளையார்; சிவனூர் திருக்கண்ணூர்கோயில் பெருவிருப்பால் அணைந்தேத்தி=கண்ணாயிரநாதர் எழுந்தருளிய திருக்கண்ணூர் கோயிலைமிக்க விருப்பால் அடைந்து துதித்து; பிஞ்ஞகர் கோயில் பிறவும் உருகிய அன்பால் இறைஞ்சி=சிவபிரான் எழுந்தருளிய திருக்கடை முடிமுதலிய தலங்கள் பலவற்றையும் மனதையுருக்கும் பேரன்பால்வணங்கி; உயர்தமிழ் மாலைகொண்டேத்தி=உயர்ந்த திருப்பதிகங்களாற் துதிசெய்து; வருபுனல் பொன்னிவடபால் குடதிசை நோக்கிவருவார்=பிரவாகிக்கின்ற நீரையுடைய காவிரியின் வடபால்மேற்றிசைநோக்கி எழுந்தருளும் ஆளுடையபிள்ளையார்—எ-று. (உஅ௬)

Koviloor.Digital Library

திருக்கண்ணார்கோயில்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

தண்ணார்திங்கட் பொங்கரவந்தாழ் புனல்சூடிப்
பெண்ணாணாய பேரருளாளன் பிரியாத
கண்ணார்கோயில் கைதொழுவார்கட் கிடர்பாவ
நண்ணாவாகு நல்வினையாய நணுகும்மே.

காமருகண்ணார் கோயிலுளானைக் கடல்சூழ்ந்த
பூமருசோலைப் பொன்னியன்மாடப் புகலிக்கோ
னாமருதொன்மைத் தன்மையுண்ஞான சம்பந்தன்
பாமருபாடல் பத்தும்வல்லோர்மேற் பழிபோமே.

சுவாமிபெயர் - கண்ணாயிரேசர்.

தேவியார் - முருகுவளர்கோதையம்மை.

திருச்சிற்றம்பலம்.

போற்றியகா தல்பெருகப் புள்ளிருக்குந் திருவேளூர்
நாற்றடந்தோ ளுடைமூன்று நயனப்பிரான் கோயினண்ணி
யேற்றவன்பெய்த வணங்கியிருவர் புள்வேந்த ரிறைஞ்சி
யாற்றியபூ சனைசாற்றி யஞ்சொற் பதிகமணிந்தார்.

(இ-ள்.) போற்றியகாதல் பெருகப்புள்ளிருக்குந் திருவேளூர்=துதிக்கும் வண்ணம் அன்பு அதிகரிக்க புள்ளிருக்கும் வேளூரின்கண்எழுந்தருளிய; நாற்றடந்தோளுடைய மூன்றுநயனப்பிரான் கோயில்நண்ணி=நான்குபெரிய திருப்புயங்களையுடைய முக்கண்ணரான வயித்தியநாதர் எழுந்தருளிய திருக்கோயிலை அடைந்தருளி; ஏற்றவன்பெய்த வணங்கி=பொருந்தியவன்போடு சாஷ்டாங்கமாக நிலந்தோயவணங்கி; இருவர்புள்வேந்தரிறைஞ்சி ஆற்றிய பூசனைசாற்றி யஞ்சொற்பதிகமணிந்தார்=சம்பாதிசடாயுவென்னும் புள்ளரசரிருவர் வணங்கிச் செய்தபூசனைகளை (தள்ளாயசம்பாதி சடாயுவென்பார் தாமிருவரொன) எடுத்துக்கூறித் திருப்பதிகத்தைச் சாத்தியருளினார்—எ-று.()

திருப்புள்ளிருக்கும்வேளூர்-பண்-சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதிய
முள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானா ருறையுமிடந்
தள்ளாய சம்பாதி சடாயுவென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கும் வேளூரே.

Koviloor Digital Library

செடியாய வுடல்தீர்ப்பான் தீவினைக்கோர் மருந்தாவான்
பொடியாடிக் கடிமைசெய்த புள்ளிருக்கும் வேளூரைக்
கடியார்ந்த பொழிற்காழிக் கவுணியன்சம் பந்தன்சொன்
மடியாது சொல்லவல்லார்க் கில்லையா மறுபிறப்பே.

சுவாமிபெயர் - வயித்தியநாதர் - தேவியார் - தையனாயகியம்மை.

திருச்சிற்றம்பலம்.

நீடுதிருநின்றியூரினிமலனார் நீள்கழலேத்திக்
கூடியகாதலிற்போற்றிக் கும்பிட்டுவண் டமிழ்கூறி
நாடுசீர்நீடூர்வணங்கி நம்பர்திருப்புன் கூர்நண்ணி
யாடியபாதமிறைஞ்சி யருந்தமிழ்பாடி யமர்ந்தார்.

(இ-ள்.) நீடுதிருநின்றியூரின் நிமலனார் நீள்கழலேத்தி= செல்வமிக்க திருநின்றியூரி லெழுந்தருளிய லட்சுமீசரது நீண்டதிருவடிகளை வணங்கி; கூடியகாதலிற் போற்றிக்கும்பிட்டு வண்டமிழ்கூறி=பொருந்திய அன்பினால் துதித்து வணங்கி வளம்பொருந்திய தமிழ்ப்பதிகத்தைப்பாடியருளி; நாடுசீர் நீடூர்வணங்கி=யாவரும் ஆராயும்சிறப்புமிக்க திருநீடூரைப்பணிந்து; நம்பர் திருப்புன்கூர் நண்ணி=சிவலோகநாதர் எழுந்தருளிய திருப்புன்கூரை யடைந்து; ஆடியபாதமிறைஞ்சி அருந்தமிழ்பாடியமர்ந்தார்=கனகசபையில் ஆனந்தநிருத்தம்செய்யும் திருவடிகளைவணங்கி அரியதமிழ்ப்பதிகத்தைப்பாடி அத்திருப்பதியில் எழுந்தருளினார்—எ-று. (உ௮எ)

திருநின்றியூர் - பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

சூலம்படை சுண்ணப்பொடிசாந்தஞ் சுடுநீறு
பாலம்மதிபவளச் சடைமுடிமே லதுபண்டைக்
காலன் வலிகாலன்னொடுபோக்கிக் கடிகமழும்
நீலம்மலர்பொய்கை நின்றியூரின் னிலையோர்க்கே.

குன்றம்மதுவெடுத்தா னுடல்தோளுந் நெரிவாக
நின்றங்கொருவிரலா லுறவைத்தா னின்றியூரை
நன்றார்தருபுகலித் தமிழ்ஞானம் மிகுபந்தன்
குன்றாத்தமிழ்சொல்லக் குறைவின்றி நிறைபுகழே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-லட்சுமீசர். தேவியார் - உலகநாயகியம்மை.

Koviloor Digital Library

திருப்புன்கூர் - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

முந்தி நின்ற வினைக ளவைபோகச்
சிந்தி நெஞ்சே சிவனுர் திருப்புன்கூ
ரந்த மில்லா வடிக ளவர்போலுங்
கந்த மல்கு கமழ்புன் சடையாரே.

மாட மல்கும் மதில்சூழ் காழிமன்
சேடர் செல்வ ருறையுந் திருப்புன்கூர்
நாட வல்ல ஞான சம்பந்தன்
பாடல் பத்தும் பரவி வாழ்மினே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-சிவலோகநாயகர். தேவியார்-சொக்கநாயகியம்மை.

அங்குநின்றேகியப்பாங்கிலரனுர்மகிழ்கோயிலான
எங்கணுஞ்சென்றுபணிந்தேயேத்தியிமவான்மடந்தை
பங்கருறைபழமண்ணிப்படிக்கரைக்கோயில்வணங்கித்
தங்குதமிழ்மாலைசாத்தித்திருக்கொறுக்கைப்பதிசார்ந்தார்.

(இ-ள்.) அங்குநின்றேகி யப்பாங்கிலரனுர் மகிழ்கோயிலான எங்கணும் சென்று பணிந்தேயேத்தி=அத்திருப்பதியினின்றும்சென்றருளி அதன்பக்கத்தில் சிவபிரான் எழுந்தருளிய தலங்கள் எவ்விடத்தும் சென்றுவணங்கித் துதிசெய்து திருப்பதிகமோதி; இமவான் மடந்தைபங்கருறை பழமண்ணிப் படிக்கரைக் கோயில்வணங்கி=இமவான்புத்திரியாகிய உமாதேவியை இடப்பாகத்துடைய நீலகண்டேசர் எழுந்தருளிய பழமண்ணிப்படிக்கரைக் கோயிலைவணங்கி; தங்குதமிழ்மாலை சாத்தி=பொருந்திய தமிழ்ப்பதிகங்களை யவர்க்குச்சாத்தி; திருக்கொறுக்கைப் பதிசார்ந்தார்=திருக்கொறுக்கைத் திருவீரட்டத்தை அடைந்தருளினுர்—எ-று. (உஅஅ)

திருக்கொறுக்கைப்பதிமன்னித்திருவீரட்டானமமர்ந்த
பொருப்புவில்லாளரையேத்திப்போந்தன்னியூர்சென்றுபோற்றிப்
பருக்கைவரையுரித்தார்தம்பந்தணநல்லூர்பணிந்து
விருப்புடன்பாடலிசைத்தார்வேதந்தமிழால்விரித்தார்.

(இ-ள்.) திருக்கொறுக்கைப் பதிமன்னித் திருவீரட்டானமமர்ந்த=திருக்கொறுக்கை என்னும் திருப்பதியில் எழுந்தருளி அந்த திருவீரட்டானத்தில் வீற்றிருந்த; பொருப்பு வில்லாளரை யேத்திப்போந்து=மாமேருவை வில்லாகவுடைய வீரட்டேசரைத் துதித்து அத்திருப்பதியினின்றும் எழுந்தருளி

Koviloor Digital Library

அன்னியூர்சென்று போற்றி=திருவன்னியூரை அடைந்துதுதித்து; பருக்கை வரை யுரித்தார் தம்பந்தணநல்லூர் பணிந்து=பருத்த துதிக்கையையுடைய கயாசுரனென்னும் யானையை யுரித்துப் போர்த்தபசுபதி ஈசர் எழுந்தருளிய பந்தண நல்லூரைவணங்கி; விருப்புடன் பாடலிசைத்தார் வேதந்தமிழால் விரித்தார் = விருப்பத்தோடு திருப்பதிகம் ஓதியருளினார் வேதப்பொருளைத் தமிழ்ப்பதிகங்களால் விரித்தருளிய ஆளுடையபிள்ளையார்—எ-று. (உ௯௯)

அப்பதிபோற்றியகல்வாரரனார்திருமணஞ்சேரி
செப்பருஞ்சீர்த்தொண்டரோடுஞ்சென்றுதொழுதிசைபாடி
யெப்பொருளுந்தருமீசரெதிர்கொள்பாடிப்பதியெய்தி
யொப்பில்பதிகங்கள் பாடியோங்குவேள்விக்குடியுற்றார்.

(இ-ள்.) அப்பதிபோற்றி யகல்வார்=அத்திருப்பதியைத்துதித்து அங்கு நின்று எழுந்தருளும் ஆளுடையபிள்ளையார்; அரனார்திருமணஞ்சேரி செப்பருஞ் சீர்த்தொண்டரோடுஞ் சென்று தொழுதிசைபாடி=வள்ளல்நாயகரது திருமணஞ்சேரி என்னும் திருப்பதியை சொல்லுதற்கரிய சிறப்பினையுடைய அடியார்கூட்டத்துடன் அடைந்து வணங்கித் திருப்பதிகம்பாடி; எப்பொருளுந் தருமீசரெதிர்கொள்பாடிப் பதியெய்தி=எல்லாப்பொருள்களையும் உதிப்பிக்கும் அயிராவதேசரது திருஎதிர்கொள்பாடி என்னும் திருப்பதியையடைந்தருளி; ஒப்பில்பதிகங்கள் பாடியோங்குவேள்விக் குடியுற்றார்=ஒப்பில்லாத திருப்பதிகம் பாடியருளி மேன்மைமிக்க திருவேள்விக் குடியை அடைந்தருளினார்—எ-று. (உ௱)

திருமணஞ்சேரி-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

அயிலாருமம்பதனாற்புரமூன்றெய்து
குயிலாருமென்மொழியாளொருகூறாகி
மயிலாருமல்கியசோலைமணஞ்சேரி
பயில்வானைப்பற்றிநின்றார்க்கில்லைபாவமே.

கண்ணாருங்காழியர்கோன்கருத்தார்வித்த
தண்ணார்சீர்ஞானசம்பந்தனற்றமிழ்மாலை
மண்ணாருமாவயல்சூழ்ந்தமணஞ்சேரிப்
பண்ணாரப்பாடவல்லார்க்கில்லைபாவமே.

சுவாமியார்-வள்ளல்நாயகர்.

தேவியார்-யாழின்மென்மொழிநாயகி யம்மை.

திருச்சிற்றம்பலம்.

Koviloor Digital Library

செழுந்திருவேள்விக்குடியிற்றிகழ்மணவாளநற்கோலம்
பொழிந்தபுனற்பொன்னிமேவும்புனிதத்துருத்தியிரவிற்
றழும்பியதன்மையுங்கூடத்தண்டமிழ்மாலையிற்பாடிக்
கொழுந்துவெண்டிங்களணிந்தார்கோடிகாவிற்சென்றடைந்தார்.

(இ-ள்.) செழுந் திருவேள்விக்குடியில்=செழுமை பொருந்திய திருவேள்விக்குடியில் ; திகழ்மணவாள நற்கோலம்=(பகலில்விளங்குகின்ற) திருமணவாளக்கோலம் ; பொழிந்தபுனற் பொன்னிமேவும் புனிதத்துருத்தி யிரவிற்றழும்பிய தன்மையும்=சையமலையிற் பொழிந்தபுனலையுடைய காவிரியினிடையே பொருந்திய பரிசுத்தமாகிய திருத்துருத்தியென்னும்திருப்பதியின்கண் இரவில்பொருந்திய தன்மையும் துருத்தியார் இரவில் வேள்விக்குடியிற் சேருந்தன்மையும் ; கூடத் தண்டமிழ்மாலையிற்பாடி=(ஆகிய இவ்விரண்டும்) பொருந்தக் குளிர்ந்ததமிழ்ப்பதிகத்தில் பாடியருளி ; கொழுந்து வெண்டிங்களணிந்தார் கோடிகாவிற் சென்றடைந்தார்=இளமைபொருந்திய வெண்பிறையணிந்த சடாமகுடத்தையுடைய கோடிகாவீசர் எழுந்தருளிய திருக்கோடிகாவைச் சென்றருளினர்—எ-று.

தழும்பிய தன்மையும் என்றவிடத்து எச்ச உம்மையால் துருத்தியார் திருவேள்விச்குடியில் இரவிற்சேருந்தன்மையும் போந்தவாறுகாண்க. (உ௧௧)

திருத்துருத்தியும்திருவேள்விக்குடியும்-பண்-சதாரி.

திருச்சிற்றம்பலம்.

ஓங்கிமேலுழிதருமொலிபுனற்கங்கையையொருசடைமேற்
றாங்கினாரிடுபலிதலைகலனாக்கொண்டதம்மடிகள்
பாங்கினாலுமையொடும்பகலிடைப்புகலிடப்பைம்பொழில்சூழ்
வீங்குநீர்த்துருத்தியாரிரவிடத்துறைவர்வேள்விக்குடியே.

விண்ணுலாம்விரிபொழில்விரைமணற்றுருத்திவேள்விக்குடியு
மொண்ணுலாமொழிகழலாடுவாரரிவையோடுறைபதியை
நண்ணுலாம்புகலியுள்ளருமறைஞானசம்பந்தன்சொன்ன
பண்ணுலாமருந்தமிழ்பாடுவாராடுவார்பழியிலரே.

திருச்சிற்றம்பலம்.

திருத்துருத்தி - சுவாமியார்-முத்தாவதேசர்.

தேவியார் - அமிர்தமுகிழம்பிகையம்மை.

திருவேள்விக்குடி-சுவாமியார்-கல்யாணசுந்தரர்.

தேவியார் - பரிமளசுகந்தநாயகியம்மை.

திருக்கோடிக்காவிலமர்ந்ததேவர்சிகாமணிதன்னை
பெருக்கோடிதழியும்பாம்புமிசைந்தணிந்தானைவெள்ளேனப்
பருக்கோடுபூண்டபிரானைப்பணிந்துசொன்மாலைகள்பாடிக்
கருக்கோடிநீப்பார்கள்சேருங்கஞ்சனூர்கைதொழச்சென்றார்.

Koviloor Digital Library

(இ-ள்.) திருக்கோடி காவிலமர்ந்த தேவர்சிகாமணிதன்னை=திருக்கோடிகாவென்றும் திருப்பதியிலெழுந்தருளிய திருமால்முதலிய தேவர்க்கு அதிபனை; எருக்கோடிதழியும் பாம்புமிசைந்தணிந்தானை=எருக்கம்பூமாலையோடு கொன்றைமாலையும் பாம்பையும் கருத்திசைந்து அணிந்தகோடிகாவீசனை; வெள்ளேனப் பருக்கோட ணிந்தபிரானை=வெள்ளியபன்றியின் பெரியகொம்பினை அணிந்தமுதல்வனை; பணிந்து சொன்மாலைகள்பாடி=வணங்கித் திருப்பதிகங்கள் பாடியருளி; கருக்கோடிநீப்பார்கள் சேருங்கஞ்சனூர் கைதொழச் சென்றார்=எண்ணிறந்த பிறவிகளை நீக்கிக்கொள்ளும் அடியார்கள் வசிக்கும் கஞ்சனூர் என்னும் திருப்பதியை வணங்கச்சென்றருளினார்—எ-று. (உகஉ)

திருக்கோடிகா - திருவிராகம்-பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

இன்றுநன்றுநாளைநன்றென்றுநின்றவிச்சையாற்
பொன்றுகின்றவாழ்க்கையைப்போகவிட்டுப்போதுமின்
மின்றயங்குசோதியான்வெண்மதிவிரிபுனற்
கொன்றைதுன்றுசென்னியான்கோடிகாவுசேர்மினே.

கொந்தணிகுளிர்பொழிற்கோடிகாவுமேவிய
செந்தழலுருவனைச்சீர்மிகுதிறலுடை
யந்தணர்புகலியுளாயகேள்விஞானசம்
பந்தனஃதமிழ்வல்லார்பாவமானபாறுமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமியார்-கோடீசுவரர். தேவியார்-வடிவாம்பிகையம்மை.

கஞ்சனூ ராண்டதங்கோவைக்கண்ணுற்றிறைஞ்சிமுன்போந்து
மஞ்சணிமாமதில்சூழுமாந்துறைவந்துவணங்கி
யஞ்சொற்றமிழ்மாலைசாத்தியங்ககன்றன்பர்முன்னாகச்
செஞ்சடைவேதியர்மன்னுந்திருமங்கலக்குடிசேர்ந்தார்.

(இ-ள்.) கஞ்சனூராண்ட தங்கோவைக் கண்ணுற்றிறைஞ்சிமுன்போந்து=திருக்கஞ்சனூரைத் திருப்பதியாகக்கொண்ட அக்கினிசுரைத் தரிசித்து திருமுன்னே வணங்கி அங்குநின்றெழுந்தருளி; மஞ்சணிமாமதில் சூழுமாந்துறை வந்துவணங்கி=மேகங்கள் தவழும் பெரியமதில்சூழ்ந்த திருமாந்துறையைவந்துவணங்கி; அஞ்சொற்றமிழ்மாலை சாத்தி=அழகிய சொன்மலரால் தொடுத்தபதிகமாலையைச்சாத்தி; அங்ககன்று அன்பர்முன்னாக=அத்திருப்பதியினின்று நீங்கி அடியார்களெதிர்கொள்ள; செஞ்சடைவேதியர் மன்னுந் திருமங்கலக்குடி சேர்ந்தார்=சிவந்த சடாமகுடத்தையுடைய வேதமுதல்வரான புராணவரதேசர் எழுந்தருளிய திருமங்கலக் குடியென்னும் திருப்பதியை அடைந்தருளினார்—எ-று. (உகங)

Koviloor Digital Library

திருமக்கலக்குடி-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

சீரினார்மணியும்மகில்சந்துஞ்செறிவரை
வாரிநீர்வருபொன்னிவடமங்கலக்குடி
நீரின்மாமுனிவன்னெடுங்கைகொடுநீர்தனைப்
பூரித்தாட்டியர்ச்சிக்கவிருந்தபுராணனே.

மந்தரமாம்பொழில் சூழ்மங்கலக் குடிமன்னிய
வெந்தையையெழி லார்பொழிற்காழியர்காவலன்
சிந்தைசெய்தடி சேர்திருஞான சம்பந்தன்சொன்
முந்திபேத்தவல் லாரிமையோர் முதலாவரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-பிராணபதேசர். தேவியார்-மங்களநாயகியம்மை.

வெங்கண்விடை மேல்வருவார் வியலூரடி களைப்போற்றித்
தங்கியவின் னிசைபாடுந் தமிழ்ப்பதிகத் தொடைசாத்தி
யங்கணமர்வார் தம்முன்னே யருள்வேடங் காட்டத்தொழுது
செங்கண்மாலுக் கரியார்தந் திருந்துதேவன் குடிசேர்ந்தார்.

(இ-ள்.) வெங்கண் விடைமேல் வருவார் வியலூரடிகளைப்போற்றி= கோபக்கண்ணையுடைய இடபத்தின்மேல் எழுந்தருள்பவராகிய திருவியலூரி லெழுந்தருளிய யோகானந்தேசரை வணங்கி; தங்கியவின்னிசைகூடுந்தமிழ்ப் பதிகத்தொடைசாத்தி=நிலைபெற்ற இனியவிசையோடு கூடியதமிழ்ச்சொன்ம லரால்தொடுத்த திருப்பதிகமாலையைச்சாத்தி; அங்கணமர்வார்தம் முன்னேய ருள்வேடங்காட்டத்தொழுது=அத்திருப்பதிக்கண் எழுந்தருளியிருக்கும்பிள் ளையார் முன்பு திருந்துதேவன் குடியிலெழுந்தருளிய கற்கடேசர் தமது அருள்வேடத்தைத் தரிசிப்பிக்கவணங்கி; செங்கண்மாலுக்கரியார்தந்திருந்து தேவன்குடிசேர்ந்தார்=சிவந்தகண்களையுடைய திருமாலுக்கரிய அச்சிவபிரா னது திருந்து தேவன்குடியை அடைந்தருளினார்—எ-று. (உ௱௪)

திருவியலூர்-பண்-நட்டபாஷை.

திருச்சிற்றம்பலம்.

குரவங்கமழ் நறு மென்குழ லரிவை யவள்வெருவப்
பொருவெங்கரி பட வென்றதனுரிவை யுடலணிவோ
னரவும்மலைபுன லும்மிளமதியுந் நகுதலையும்
விரவுஞ்சடை முடி கட்கிடம் விரிநீர் விய லூரே.

Koviloor Digital Library

விளங்கும்பிறை சடை மேலுடைவிகிர்தன் வியலூரைத்
தளங்கொண்டதொர்புக லித்தகுதமிழ்ஞான சம்பந்தன்
றுளங்கில்தமிழ்பர வித்தொழு மடியா ரவரொன்றும்
விளங்கும்புக ழதனோடுயர் விண்ணுமுடையாரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-யோகாநந்தேசர். தேவியார்-சவுந்தரநாயகியம்மை.

திருந்துதேவன் குடிமன்னுஞ் சிவபெருமான் கோயிலெய்திப்
பொருந்தியகா தலிற்புக்குப் போற்றிவணங் கிப்புரிவார்
மருந்தொடுமந் திரமாகி மற்றுமிவர் வேடமாமென்
றருந்தமிழ்மா லைபுனைந்தா ரளவின்ஞானத் தமுதுண்டார்.

(இ-ள்.) திருந்துதேவன்குடி மன்னுஞ்சிவபெருமான் கோயிலெய்தி= திருந்துதேவன்குடியி லெழுந்தருளிய கற்கடேசரதுதிருக்கோயிலை அடைந்தருளி; பொருந்திய காதலிற்புக்குப்போற்றிவணங்கிப்புரிவார்=தம்மிடத்துண்டாய விருப்பத்தோடு உள்ளேபுகுந்துதுதித்து நமஸ்கரித்துவிரும்புவாராகி; மருந்தொடு மந்திரமாகி மற்றுமிவர்வேடமாமென்று=மருந்தொடுமந்திரமாகிய பிறவும் இவரதுதிருவேடமாமென்று; அருந்தமிழ்மாலைபுனைந்தார் அளவில் ஞானத்தமுதுண்டார்=அழகியதிருப்பதிகத்தைப்பாடியருளினர் அளவில்லாத சிவஞானத்தைத் திருமுலைப்பாலோடு அமுதுசெய்தருளியபிள்ளையார்—எ-று.

சிவபிரானுக்குத் திருமேனியும் உபாங்கங்களான ஆயுதமாபரண முதலிய வேடங்களும் நிரஞ்சனசாம்பவ மந்திரங்களாதலின் அவைகளேமருந்து மந்திரமாகி அவற்றோடுகலந்து வியாதிக்கமுதலியவேண்டிய சித்தியைக்கெடுக்கும் அல்வழி அவைகொடுக்காவென்பார், மருந்து முதலாகியமற்றும் அவர் வேடமென்றார் மற்றுமென்றது பிறவுமென்றுபொருளாதலின்மணியுமென்க; மணிஇரசகுளிகை இவ்வேடம் இவையன்றி ஏனையபயன்களாயுமிருத்தல் அத்திருப்பதிகத்தானுணர்க. (உசுடு)

திருந்துதேவன்குடி-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

மருந்துவேண் டில்லிவை மந்திரங் கள்ளிவை
புரிந்துகேட் கப்படும் புண்ணியங் கள்ளிவை
திருந்துதே வன்குடித் தேவர்தே வெய்திய
வருந்தவத் தோர்தொழு மடிகள்வே டங்களே.

சேடர்தே வன்குடித் தேவர்தே வன்றனை
மாடமோங் கும்பொழில் மல்குதண் காழியா
னாடவல்ல தமிழ் ஞானசம் பந்தனற்
பாடல்பத் தும்வல்லார்க் கில்லையாம் பாவமே.

திருச்சிற்றம்பலம்.

Koviloor Digital Library

சுவாமிபெயர்-கர்க்கடேசர். தேவியார்-அருமருந்துநாயகியம்மை.

மொய்திகழ்சோலையம் மூதூர்முன்னகன்றந் நெறிசெல்வார்
செய்தருசாலி கரும்புதெங்குபைம்பூகத்திடைபோய்
மைதிகழ்கண்டர்தங் கோயின்மருங்குள்ளவெல்லாம்வணங்கி
யெய்தினர்ஞானசம் பந்தரின்னம் பரீசர்தங்கோயில்.

(இ-ள்.) மொய்திகழ் சோலையம்மூதூர்=கூட்டமாய் விளங்குகின்றசோலைசூழ்ந்த அந்தப்பழமை பொருந்திய திருந்துதேவன் குடியென்னும் திருப்பதியை; முன்னகன்றந் நெறிசெல்வார்=முன்னே நீங்கி அவ்வழியில்செல்வராய்; செய்தருசாலி கரும்பு தெங்குபைம்பூகத்திடைபோய்=வயலினிடத்து வளர்கின்ற நெற்பயிரும் கரும்பும் தெங்கும் பசியகமுகுமாகிய இவற்றிடையே சென்று; மைதிகழ்கண்டர் தங்கோயின் மருங்குள்ளவெல்லாம் வணங்கி= கருமைவிளங்கிய கண்டத்தையுடைய சிவபிரானது திருக்கோயில்கள் பக்கத்திலுள்ளன எல்லாவற்றையும் வணங்கி; ஞானசம்பந்தர் இன்னம்பர் ஈசர்தங் கோயில் எய்தினர்=திருஞானசம்பந்தர் திருஇன்னம்பர் என்னும் தலத்திலெழுந்தருளிய எழுத்தறிந்தநாதரது திருக்கோயிலை அடைந்தருளினார்—எ-று.

செல்வாராய் போய்வணங்கி எய்தினரெனக்கூட்டுக. (௨௯௬)

இன்னம்பர்மன்னும் பிரானையிறைஞ்சி யிடைமடக்கான்
பன்னுந்தமிழ்த்தொடை மாலைப்பாடல் புனைந்துபரவிப்
பொன்னங்கழலிணை போற்றிப்புறம்போந் தணைந்துபுகுந்தார்
மன்னுந்தடங்கரைப் பொன்னிவடகுரங் காடுதுறையில்.

(இ-ள்.) இன்னம்பர்மன்னும் பிரானையிறைஞ்சி=திருவின்னம்ப ரென்னும் திருப்பதியிலெழுந்தருளிய எழுத்தறிந்த நாதனைவணங்கி; இடைமடக்கான பன்னுந்தமிழ்த்தொடைமாலைப்பாடல்புனைந்து பரவி=இரண்டாமடியை மூன்றாமடியிற் சேர்த்து இடைமடக்கா யுள்ளயாவருந் துதிக்கும் தமிழானுயதொடையமைந்தபாடலையுடைய திருமுக்காலென்னும் திருப்பதிகத்தையணிந்து துதித்து; பொன்னங்கழலிணைபோற்றிப்புறம்போந்தணைந்து=பொன்போலு மழகிய திருவடிகளைவணங்கி அத்தலத்தினின்றும்புறம்பேசென்று; பொன்னித் தடங்கரைமன்னும் வடகுரங்காடு துறையில் புகுந்தார்=காவிரியினது பெரிய கரையின்கணிருக்கும் வடகுரங்காடு துறையென்னும் திருப்பதியில் எழுந்தருளினார்—எ-று. (௨௯௭)

திருஇன்னம்பர்-திருமுக்கால்- பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

எண்டிசைக்கும்புக ழின்னம்பர்மேவிய
வண்டிசைக்குஞ்சடையீரோ
வண்டிசைக்குஞ்சடை யீருமைவாழ்த்துவார்
தொண்டிசைக்குந்தொழிலோரே.

Koviloor Digital Library

ஏடமர்பொழிலணி யின்னம்பரீசனை
நாடமர்ஞானசம்பந்த
ஞடமர்ஞானசம் பந்தன்நற்றமிழ்
பாடவல்லார்பழியிலரோ.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-எழுத்தறிந்தநாதர். தேவியார்-பூங்கொம்பனையம்மை.

வடகுரங்காடுதுறை யில்வாலியார்தாம் வழிபட்ட
வடைவுந்திருப்பதி கத்திலறியச்சிறப் பித்தருளிப்
புடைகொண்டிறைஞ்சினர் போந்துபுறத்துள்ளதானங்கள்போற்றி ப்
படைகொண்டமூவிலை வேலார்பழனத்திருப் பதிசார்ந்தார்.

(இ-ள்.) வடகுரங்காடுதுறையில் வாலியார்தாம்வழிபட்ட அடைவும்= வடகுரங்காடுதுறை என்னுந் திருப்பதியின்கண் வாலிபூசித்து; வழிபட்ட முறைமையையும்; திருப்பதிகத்திலறியச் சிறப்பித்தருளி=தாமருளிய திருப் பதிகத்தின் கண்வாலியார் வழிபடவென யாவருமறியச் சிறப்பித்தருளி; புடைகொண்டிறைஞ்சினர் போந்து புறத்துள்ள தானங்கள்போற்றி=ஆளு டைய பிள்ளையாருகிற் சூழ்ந்து வணங்கினவரா யெழுந்தருளிப் புறம்புள் ள திருப்பதிகளையுந் துதித்து; படைகொண்ட மூவிலைவேலார் பழனத்திருப் பதி சார்ந்தார்=ஆயுதமாகக்கொண்ட மூவிலைவேலையுடைய ஆப்தசகாய ரெ ழுந்தருளிய திருப்பழனமென்னுந் திருப்பதியை யடைந்தருளினர்—எ-று.

உம்மையால் ஏனைச்சிறப்பையும் என்க. (உகஅ)

திருக்குரங்காடுதுறை-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

கோங்கமேகுரவமே கொழுமலர்ப்புன்னையே கோகுடிமுல்லை
வேங்கையேஞாழலே விம்முபாதிரிகளே விரைவியெங்கு
மோங்குமாகாவிரி வடகரையடைகுரங் காடுதுறை
வீங்குநீர்ச்சடைமுடி யடிகளாரிடமென விரும்பினரோ.

தாழிளங்காவிரி வடகரையடைகுரங் காடுதுறைப்
போழிளமதிபொதி புரிதருசடைமுடிப் புண்ணியனைக்
காழியானருமறை ஞானசம்பந்தன் கருதுபாடல்
கோழையாவழைப்பினுங் கூடுவார்நீடுவா னுலகினூடே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-அழகுசடைமுடிநாதர். தேவியார்-குவலநாயகியம்மை.

Koviloor Digital Library

பழனத்துமேவிய முக்கட்பரமேட்டியார் பயில்கோயி
லுழைபுக்கிறைஞ்சிநின் றேத்தியுருகிய சிந்தையராகி
விழைசொற்பதிகம் விளம்பிவிரும்புடன் மேவியகல்வா
ரழனக்கபங்கய வாவியையாறுசென் றடைகின்றார்.

(இ-ள்.) பழனத்துமேவிய முக்கட்பரமேட்டியார் பயில்கோயில், உழை புக்கு=திருப்பழனமென்னுந் திருப்பதியின்கணுள்ள மூன்றுகண்களை யுடைய ஆப்தசகாய ரெழுந்தருளிய திருக்கோயிலின்கண்புகுந்து ; இறைஞ்சி நின் றேத்தி யுருகிய சிந்தையராகி=வணங்கிநின்று துதித்துக் கனிந்துருகிய சிந் தையுடையராகி ; விழைசொற்பதிகம் விளம்பி விருப்புடன் மேவியகல்வார்= யாவரும் விரும்புந்தமிழ்ச்சொல்லாலாய திருப்பதிகத்தை அருளிச்செய்து வி ருப்பத்தோடு அத்திருப்பதியில் சிலநாளெழுந்தருளி அங்குநின்று நீங்கும் ஆ ளுடைய பிள்ளையார் ; அழனக்கபங்கயவாவியை யாறுசென்றடைகின்றார்=அ ழலைப் பழிக்குஞ் செந்நிறம்வாய்ந்த தாமரைமலர்கள் பொருந்திய பொய்கை கள்சூழ்ந்ததிருவையாறென்னுந்தலத்தைச்சேர்கின்றாராயினார்—எ-று.(உகூ)

திருப்பழனம்-பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

வேதமோதி வெண்ணூல்பூண்டுவெள்ளை யெருதேறிப்
பூதஞ்சூழப் பொலியவருவார் புலியி னுரிதோலார்
நாதாவெனவு நக்காவெனவு நம்பா வெனநின்று
பாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார் பழன நகராரே.

வேய்முத்தோங்கி விரைமுன்பரக்கும் வேணு புரந்தன்னு
ளுவுய்த்தனைய திறவான்மிக்க ஞானசம்பந்தன்
பேசற்கினிய பாடல்பயிலும் பெருமான் பழனத்தை
வாயிற்பொலிந்த மாலைபத்தும் வல்லார் நல்லாரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-ஆபத்சகாயர். தேவியார்-பெரியநாயகியம்மை.

மாடநிரை மணிவீதித் திருவையாற் றினில்வாழு மல்குதொண்டர்
நாடுய்யப் புகலிவரு ஞானபோ னகர்வந்து நண்ணினாரென்
றாடலொடு பாடலறா வணிமூதூ ரடையவலங் காரஞ்செய்து
நீடுமனக் களிப்பினொடு மெதிர்கொள்ள நித்திலயா னத்துநீங்கி.

(இ-ள்.) மாடநிரைமணி வீதித்திருவை யாற்றினில் வாழுமல்குதொண் டர்=மண்டபங்களி னிரையோடுகூடிய அழகிய வீதிகளையுடைய திருவையாற்

Koviloor Digital Library

தில் வசிக்கும் மிக்கஅடியார்கள் ; நாடுய்யப்புகலிவருஞான போனகர் வந்து நண்ணினுரென்று=உலகினரீடேறும்பொருட்டு சீகாழியிலவதரித்த ஆளுடையபிள்ளையா ரெழுந்தருளிவந்தாரென்று ; ஆடலொடுபாடலரு அணிமூதூர்= ஆடலுடன் பாடலும் நீங்காத அழகிய பழமை பொருந்திய திருப்பதியை ; உடைய அலங்காரஞ்செய்து=முழுதும் அலங்கரித்து ; நீடுமனக்களிப்பினொடு மெதிர்கொள்ள=மிக்கமனக்களிப்பனேடு எதிர்கொண்டுவர ; நித்திலயானத்து நீங்கி=முத்துச்சிவிகையினின்றும் இறங்கியருளி—எ-று. (௩௱)

வந்தணைந்து திருத்தொண்டர் மருங்குவர மானேந்து கையர்தம்பா
னந்திதிரு வருள்பெற்ற நன்னகரை முன்னிறைஞ்சி நண்ணும்போதி
லைந்துபுல னிலைகலங்கு மிடத்தஞ்ச லென்பார்த மையாறென்று
புந்திநிறை செந்தமிழின் சந்தவிசை போற்றிசைத்தார் புகலிவேந்தர்.

(இ-ள்.) வந்தணைந்த திருத்தொண்டர்மருங்குவர=தம்மோடுகூடவந்த அடியார்கள் பக்கத்தில்சூழ்ந்துவர ; மானேந்துகையர் தம்பால்=மான்கன்றையேந்திய திருக்கரத்தையுடைய செம்பொற்சோதி நாதரிடத்து ; நந்திதிருவருள்பெற்ற நன்னகரை=திருநந்திதேவர் திருவருள்பெற்ற நல்லதிருவையாற்றை ; முன்னிறைஞ்சி நண்ணும்போதில்=முன்னேவணங்கி யடையுங்காலத்து ; ஐந்துபுலனிலைகலங்கு மிடத்து அஞ்சலென்பார்தம் ஐயாறென்று= புலன்களைந்தும் (தமக்குரிய பொறியினின்று) நீங்கிநிலைகலங்கு மிடத்து அஞ்சலென்றருள் செய்யுஞ் சிவபெருமா னெழுந்தருளிய ஐயாறிதுவென்று; புந்திநிறை செந்தமிழின் சந்தவிசை போற்றிசைத்தார் புகலிவேந்தர்=தமது திருவுள்ளத்தின்கண் நிறைந்த (புலனைந்தென்னு முதலையுடைய) செந்தமிழாலாய இசைநிறைந்தபதிகத்தை ஆளுடையபிள்ளையார்பாடியருளினர்—எ-று.()

திருவையாறு-பண் - மேகராகக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி யறிவழிந்திட் டைமேலுந்தி
யலமந்த போதாக வஞ்சேலென் றருள்செய்வா னமருங்கோயில்
வலம்வந்த மடவார்க ணடமாட முழவதிர மழையென் றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி முகில்பார்க்குந் திருவையாறே.

அன்னமலிபொழில்புடைசூ ழையாற்றெம் பெருமானையந்தண்காழி
மன்னியசீர் மறைநாவன் வளர்ஞான சம்பந்தன் மருவுபாட
லின்னிசையா லிவைபத்து மிசையுங்கா லீசனடி யேத்துவார்கள்
தன்னிசையோ டமருலகிற் றவநெறிசென் றெய்துவார்தாழாதன்றே.

திருச்சிற்றம்பலம்.

Koviloor Digital Library

மணிவீதி யிடங்கடந்து மாலயனுக் கரியபிரான் மன்னுங்கோயி,
லணிநீடு கோபுரத்தை யணைந்திறைஞ்சி யுள்ளெய்தி யளவில்காத,
றணியாத கருத்தினுடன் றம்பெருமான் கோயில்வலங் கொண்டு தா
ழ்ந்து, பணிசூடு மவர்முன்பு பணிந்துவிழ்ந் தெழுந்தன்பாற் பரவு
கின்றார்.

(இ-ள்.) மணிவீதி யிடங்கடந்து மாலயனுக்கரியபிரான் மன்னுங்கோயில்=அழகிய திருவீதியினிடத்தைக்கடந்தருளித் திருமாலுக்கும் பிரமனுக்கும் அடியையு முடியையுந் தேடியறிதற்கரிய சிவபிரானெழுந்தருளிய திருக்கோயிலின்கண்ணுள்ள ; அணிநீடுகோபுரத்தை யணைந்திறைஞ்சி யுள்ளெய்தி=அழகோடுயர்ந்த திருக்கோபுரத்தை யடைந்து வணங்கியுள்ளே சென்றருளி ; அளவில்காதல் தணியாத கருத்தினுடன்=வரம்புகடந்த விருப்பமதிகரித்ததிருவுள்ளத்தோடு ; தம்பெருமான்கோயில் வலங்கொண்டுதாழ்ந்து=தமதுதலைவராகிய செம்பொற் சோதிசரொழுந்தருளிய திருக்கோயிலைப் பிரதட்சணஞ் செய்து வணங்கி ; பணிசூடுமவர் முன்புபணிந்து விழ்ந்தெழுந் தன்பாற்பரவுகின்றார்=சற்பாபரணத்தைத் தரித்த அச்சிவபிரான் திருமுன்வணங்கியெழுந் தன்போடு துதிக்கு மாளுடைய பிள்ளையார்—எ-று. (ருாஉ)

கோடல்கோங் கங்குளிர்கூ விளமென்னுந் திருப்பதிகக் குலவு
மாலை, நீடுபெருந் திருக்கூத்து நிறைந்ததிரு வுள்ளத்து நிலைமைதோ
ன்ற, வாடுமா றதுவல்லா னையாற்றெம் மையனே யென்றுநின்று,
பாடினா ராடினார் பண்பிறெடுங் கண்பொழிநீர் பரந்துபாய.

(இ-ள்) நீடுபெருந்திருக் கூத்துநிலைமை நிறைந்த திருவுள்ளத்துத் தோன்ற=திருவம்பலத்தின்கண் ஆடியருளும் பெரியதிருக்கூத்தின் னிலைமை நிறைவடைந்த தந்திருவுள்ளத்து ஆங்குத்தோன்றியகாரணத்தால் ; கோடல் கோங்கங்குளிர் கூவிளமென்னுந் திருப்பதிகக் குலவுமாலை=கோடல் கோங்கங்குளிர் கூவிளமென்னும் முதலடியை யுடைய திருப்பதிகமாலையில் ; ஆடுமாறது வல்லானையாற்றெம்மையனேயென்று=ஆடுமாறு வல்லானுமையாறுடை யையனெயென்று ; நின்றுபாடினார் பண்பிறெடுகண் பொழிநீர்பரந்து பாயஆடினார்=திருமுன்னின்று பாடினாராய் அப்பண்போடு கண்களினின்று பொழியுமானந்த பாஷபம் தமது திருமேனியில் பரவிப்பாயும்படி ஆடியருளினார்—எ-று.

ஈண்டுபரவுகின்றார் பாடினாராய் பரந்துபாய ஆடினார் எனக்கூட்டுக அவ்வாறன்றி பரவுகின்றார் என்றும் எழுவாய்க்குப்பாடினார் ஆடினார் என்பவைகளைத் தனித்தனிபயனிலைகளாகக் கோடலுமொன்று. (ருாரு)

Koviloor Digital Library

திருவையாறு - பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

கோடல்கோங்கங் குளிர்கூவிளமாலை குலாயசீ
ரோடுகங்கை யொளிவெண்பிறைசூடு மொருவனூர்
பாடல்வீணை முழவங்குழன் மொந்தை பண்ணாகவே
யாடுமாறுவல் லானுமையாறுடை யையனே.

பலிதிரிந்துழல் பண்டங்கன் மேயவையாற்றினைக்
கலிகடிந்தகை யான்கடற்காழியர் காவல
னொலிகொள்சம்பந்த னொண்டமிழ்பத்தும்வல் லார்கள்போய்
மலிகொள்விண்ணிடை மன்னியசீர்பெறு வார்களே.

திருச்சிற்றம்பலம்.

பலமுறையும் பணிந்தெழுந்து புறம்போந்து பரவுதிருத் தொண்டரோடு, நிலவுதிருப் பதியதன்க ணிகழுநா ணிகரிலா நெடுநீர்க்கங்கை, யலையுமதி முடியார்தம் பெரும்புலியூர் முதலான வணைந்து போற்றிக், குலவுதமிழ்த் தொடைபுனைந்து மீண்டணைந்து பெருகார்வங் கூருநாளில்.

(இ-ள்.) பலமுறையும் பணிந்தெழுந்து புறம்போந்தபரவுதிருத்தொண்டரோடு=பலகாலும் வணங்கியெழுந்து ஆலயத்தின்புறம்பேசென்றருளித் துதிக்கும் அடியார் திருக்கூட்டத்தோடு ; நிலவுதிருப்பதியதன்க ணிகழுநாள்=விளக்கு மத்திருப்பதியி லெழுந்தருளி இருக்கும் அந்நாளில் ; நிகரிலா நெடுநீர்க்கங்கை யலையும்=ஒப்பில்லாதமிக்க நீரையுடைய கங்காநதி உவட்டெடுக்கும் ; மதிமுடியார் தம்பெரும்புலியூர் முதலான வணைந்து போற்றி=சந்திரனையணிந்த சடைமுடியையுடைய வியாக்கிர புரீசரது திருப்பெரும்புலியூர்முதலிய தலங்களையடைந்து துதித்து ; குலவுதமிழ்த்தொடை புனைந்து மீண்டணைந்து=விளங்குகின்ற திருப்பதிக மாலையைச்சாத்தி அங்குநின்று மீளவும் அத்திருவை யாற்றையடைந்து ; பெருகார்வங் கூருநாளில்=மிக்க ஆர்வங் கூர்ந்து வசிக்குங்காலத்தில்—எ-று. (௯௱௪)

திருப்பெரும்புலியூர்-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

மண்ணுமோர் பாகமுடையார் மாலுமோர்பாகமுடையார்
விண்ணுமோர் பாகமுடையார் வேதமுடைய விமலா
கண்ணுமோர் பாகமுடையார் கங்கைசடை யிற்கரந்தார்
பெண்ணுமோர் பாகமுடையார் பெரும்புலியூர் பிரியாரே.

Koviloor Digital Library

பிறைவளரு முடிச்சென்னிப் பெரும்புலி யூர்ப்பெருமானை
நறைவள ரும்பொழிற்காழி நற்றமிழ்ஞானசம் பந்தன்
மறைவளருந் தமிழ்மாலை வல்லவர்தந் துயர்நீங்கி
நிறைவளர்நெஞ் சினராகி நீடுலகத் திருப்பாரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - வியாக்கிரபுரீசர். தேவியார் - சௌந்தரநாயகியம்மை.

குடதிசைமேற் போவதற்குக் கும்பிட்டங் கருள்பெற்றுக் குறிப்பினொடும், படருநெறி மேலணைவார் பரமர்திரு நெய்த்தானப் பதியினண்ணி, யடையுமன முறவணங்கி யருந்தமிழ்மா லைகள்பாடி யங்குநின்றும், புடைவளர்மென் கரும்பினொடு பூகமிடை மழபாடி போற்றிச்சென்றார்.

(இ-ள்.) குடதிசைமேற் போவதற்குக் கும்பிட்டங்கருள்பெற்றுக் குறிப்பினொடும்=மேற்குத்திக்கில் யாத்திரை செய்வதற்கு வணங்கி அத்திருவையாற்றி லெழுந்தருளிய செம்பொற் சோதீசரிடத்து திருவருளைப் பெற்று அவர் அருள்வழிச்செல்லுந் திருவுள்ளக்குறிப்பினோடும்; படநெறி மேலணைவார்=கொாகுவழிச்செல்லும் மார்க்கத்தில் சென்றருளும் பிள்ளையார்; பரமர் திருநெய்த்தானப் பதியில்நண்ணி=நெய்யாடியப்ப ரெழுந்தருளிய திருநெய்த்தான மென்னுந் திருப்பதியை யடைந்து; அடையுமனமுற வணங்கி யருந்தமிழ் மாலைகள்பாடி=சிவபிராணிடத்து ஒருங்கியடையுந் திருவுள்ளத்தோடுபொருந்த வணங்கி அரியதிருப்பதிகமாலைகளைப்பாடியருளி; அங்குநின்றும் புடைவளர் மென்கரும்பினொடு பூகமிடைமழபாடி போற்றிச்சென்றார்=அத்தலத்திலின்று மெழுந்தருளிப் பக்கங்களில் வளர்ந்த மெல்லிய கரும்போடு கமுகுகள் நெருங்கிய திருமழபாடி யென்னுந் திருப்பதியைத்துதித்து அங்குச் சென்றருளினார்—எ-று. (ருாடு)

திருநெய்த்தானம் - பண் - நட்டபாஷை.

திருச்சிற்றம்பலம்.

மையாடிய கண்டன்மலை மகள்பாகம துடையான்
கையாடிய கேடில்சரி யுரிமூடிய வொருவன்
செய்யாடிய குவளைமலர் நயனத்தவ ளோடு
நெய்யாடிய பெருமானிட நெய்த்தானமெ னீரே.

தலமல்கிய புனற்காழியுட் டமிழ்ஞானசம் பந்த
னிலமல்கிய புகழான்மிகு நெய்த்தானனை நிகரில்
பலமல்கிய பாடல்லிவை பத்தும்மிக வல்லார்
சிலமல்கிய செல்வன்னடி சேர்வார்சிவ கதியே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-நெய்யாடியவப்பர். தேவியார்-வாலாம்பிகையம்மை.

Koviloor Digital Library

செங்கைமான் மறியார்தந் திருமழபா டிப்புறத்துச் சேரச்செ ல்வா, ரங்கையா ரழலென்னுந் திருப்பதிக மெடுத்தருளி யணைந்தபோ ழ்தின், மங்கைவாழ் பாகத்தார் மழபாடி தலையினால்வணங்குவார்கள், பொங்குமா தவமுடையா ரெனத்தொழுது போற்றிசைத்தே கோயி ல்புக்கார்.

(இ - ள்.) செங்கைமான் மறியார் தந்திருமழபாடிப் புறத்துச்சேரச் செல்வார்=சிவந்த திருக்கரத்தில் மான்கன்றை யேந்திய வச்சிரத்தம்பநாயக ரெழுந்தருளிய திருமழபாடியி லடைய (விரும்பிச்) செல்லும்பிள்ளையார் ; அங்கையாரழலென்னுந் திருப்பதிகமெடுத்தருளி யணைந்தபோழ்தின்=அங்கை யாரழலென்னும் முதலோடுகூடிய திருப்பதிகத்தை யெடுத்துப்பாடி அங்கு அடைந்தருளுங்காலத்தில் ; மங்கைவாழ்பாகத்தார்மழபாடிதலையினால் வணங் குவார்கள்=உமாதேவிவாழும் பாகத்தாராகிய வச்சிரத்தம்பநாயகரெழுந்தரு ளிய திருமழபாடியைத்தம்தலையினால் வணங்குமடியார்கள் ; பொங்குமாதவ முடையாரெனத் தொழுது போற்றிசைத்தே கோயில்புக்கார்=பொலிவுபொ ருந்திய மிக்கதவத்தினையுடையாரென வணங்கித்துதித்து ஆலயத்திற்சென்ற ருளினார்—எ-று. (௫௱௯)

திருமழபாடி-பண்-கவுசிகம்.

திருச்சிற்றம்பலம்.

அங்கையாரழ லன்னழகார்சடைக்
கங்கையான்கட வுள்ளிடமேவிய
மங்கையானுறை யும்மழபாடியைத்
தங்கையாற்றொழு வார்தகவாளரே.

மந்தமுந்து பொழின்மழபாடியு
ளெந்தைசந்த மினிதுகந்தேத்துவான்
கந்தமார்கடற் காழியுண்ஞானசம்
பந்தன்மாலைவல்லார்க் கில்லைபாவமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-வச்சிரதம்பநாயகர். தேவியார்-அழகம்மை.

மழபாடி வயிரமணித் தூணமர்ந்து மகிழ்கோயில் வலங்கொண் டெய்திச், செழுவாச மலர்க்கமலச் சேவடிக்கீழ்ச் சென்றுதாழ்ந் தெ ழுந்துநின்று, தொழுதாடிப் பாடிநறுஞ் சொன்மாலைத் தொடையணி ந்து துதித்துப்போந்தே, யொழியாத நேசமுட னுடையவனைக் கும் பிட்டங்குறைந்தார்சின்னாள்.

Koviloor Digital Library

(இ-ள்.) மழபாடி வயிரமணித் தூணமர்ந்து மகிழ்கோயில்வலங்கொண் டெய்தி=திருமழபாடியில் வச்சிரத்தம்ப நாயகர் விரும்பித் திருவுளமகிழ்ந்து எழுந்தருளியதிருக்கோயிலைப்பிரதட்சணஞ்செய்துபோந்து; செழுவாசமலர்க் கமலச்சேவடிக்கீழ்ச்சென்று தாழ்ந்தெழுந்துநின்று=செழுமை பொருந்திய மணங்கமழும் தாமரைமலர்போன்ற சிவந்ததிருவடியின் கீழ்ச்சென்றுவணங் கி யெழுந்துதிருமுன்னின்று; தொழுதாடிப்பாடி நறுஞ்சொன்மாலைத் தொ டையணிந்து துதித்துப்போந்து=திருக்கரங்களை சிரசின்மேற்கூப்பி வணங்கி ஆடுதல் பாடுதல்செய்து நல்லதமிழ்ச் சொன்மாலைகளாகிய பதிகமாலையைச் சாத்தித் தோத்திரஞ்செய் தங்குநின்றெழுந்தருளி; ஒழியாத நேசமுடனுடை யவரைக்கும் பிட்டங்குறைந்தார் சின்னாள்=நீங்காதநேசத்துடன் தம்மையா ளாக உடைய வச்சிரத்தம் பநாயகரை வணங்கி அத்திருப்பதியில் சிலநாளெ ழுந்தருளி இருந்தார்—எ-று. (௯௱௭)

அதன்மருங்கு கடந்தருளாற் றிருக்கானூர் பணிந்தேத்தி யான்ற
சைவ, முதன்மறையோ ரன்பிலா லந்துறையின் முன்னவனைத் தொ
ழுதுபோற்றிப், பதநிறைசெந் தமிழ்பாடிச் சடைமுடியார் பயில்பதி
யும் பணிந்துபோற்றி, மதகரட வரையுரித்தார் வடகரைமாந் துறை
யணைந்தார் மணிநூன்மார்பர்.

(இ-ள்.) அதன்மருங்கு கடந்தருளாற் றிருக்கானூர் பணிந்தேத்தி=அத் திருப்பதியின் பக்கத்து நீங்கிச்சென்று சிவபிரானது திருவருளால் திருக்கா னூரி லெழுந்தருளிய செம்மேனி நாதரை வணங்கித்துதித்து; மணிநூன்மார் பர் ஆன்றசைவமுதன் மறையோர்=அழகிய பூணூலையணிந்தமார்பும்நிறைந் த சைவத்துக்குமுதல் மறையோரும் ஆகிய பிள்ளையார்; அன்பிலாலந்துறை யின் முன்னவனைத்தொழுது போற்றி=அன்பிலாலந்துறையி லெழுந்தருளிய சத்தியவாகீசரைத் தொழுதுதுதித்து; பதநிறை செந்தமிழ்பாடி=சொற்கள் நிறைந்த திருப்பதிகம் பாடியருளி; சடைமுடியார் பயில்பதியும் பணிந்து போற்றி=சடாமகுடத்தையுடைய சிவபிரானெழுந்தருளிய பிறபதிகளையும்வ ணங்கித்துதித்து; மதகரடவரை யுரித்தார் வடகரை மாந்துறையணைந்தார்= மதம்பாய் சுவட்டையுடைய யானையை யுரித்துப் போர்த்தருளிய ஆம்பிரவ னேச ரெழுந்தருளிய காவிரியின் வடகரையிலுள்ள திருமாந்துறை என்னும் திருப்பதியை யடைந்தருளினார்—எ-று. (௯௱௮)

திருக்கானூர்-பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

வானார்சோதி மன்னுசென்னி வன்னிபுனங்கொன்றை
தேனார்போது கானார்கங்கை திங்களொடுசூடி
மானேர்நோக்கி கண்டங்குவப்ப மாலையாடுவார்
கானார்மேய கண்ணார்நெற்றி யானார்செல்வரே.

Koviloor Digital Library

கழுதுதுஞ்சுங் கங்குலாடுங் காறூர்மேயானைப்
பழுதின்ஞான சம்பந்தன்சொற் பத்தும்பாடியே
தொழுதுபொழுது தோத்திரங்கள்சொல்லித் துதித்துநின்
றழுதுநக்கு மன்புசெய்வா ரல்லலறுப்பாரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-செம்மேனிநாயகர். தேவியார்-சிவயோகநாயகியம்மை.

திருஅன்பிலாலந்துறை - பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

கணைநீடெரிமா லரவம் வரைவில்லா
இணையா வெயின்மூன் றுமெரித்த விறைவர்
பிணைமா மயிலுங் குயில்சேர் மடவன்ன
மணையும் பொழிலன்பி லாலந் துறையாரே.

அரவார் புனலன்பி லாலந் துறைதன்மேற்
கரவாதவர் காழியுண் ஞானசம் பந்தன்
பரவார் தமிழ்பத்தி வைபாட வல்லார்போய்
விரவா குவர்வானிடை வீடெளி தாமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-சத்திபவாகீசர். தேவியார்-சவுந்தரநாயகியம்மை.

சென்றுதிரு மாந்துறையிற் றிகழ்ந்துறையுந் துறைநதிவாழ் செ ன்னியார்த, முன்றில்பணிந் தணிநெடுமா ளிகைவலஞ்செய் துள்புக் குமுன்புதாழ்ந்து, துன்றுகதிர்ப் பரிதிமதி மருத்துக்க டொழுதுவழி பாடுசெய்ய, நின்றநிலை சிறப்பித்து நிறைதமிழின் சொன்மாலை நிகழ ப்பாடி.

(இ-ள்.) சென்றுதிருமாந்துறையிற் றிகழ்ந்துறையுந் துறைநதிவாழ் சென்னியார்தம்=திருமாந்துறையி லடைந்தருளி அங்குவிளங்கி யெழுந்தரு ளிய விசுகின்ற திவலைகளையுடைய கங்காநதிவாழ்கின்ற சடாமகுடத்தையு டைய அம்பிரவனேசரது ; முன்றில்பணிந் தணிநெடுமாளிகை வலஞ்செய் துள்புக்கு முன்புதாழ்ந்து=திருமுன்றில் வணங்கி அழகிய உயர்ந்ததிருமாளி கையை வலஞ்செய்துள்ளே புகுந்து திருமுன்புபணிந்து ; துன்றுகதிர்ப்பரி திமதி மருத்துக்கடொழுது வழிபாடுசெய்யநின்ற நிலைசிறப்பித்து=நெருங் கிய கிரணத்தையுடைய சூரியனுஞ் சந்திரனும் மருத்துகளும் வணங்கிவழி பாடு செய்யும்படி யெழுந்தருளிய நிலைமையை (இரவியும் மதியமும் பராவி னர் பணிந்தேத்த மருதவானவர் வழிபடு மலரடிவணங்குதல் செய்வோமே) எனச்சிறப்பித்து ; நிறைதமிழின் சொன்மாலை நிகழப்பாடி=நிறைந்த திருப் பதிகமாலையைத் திருக்கடைக் காப்போடும் பாடியருளி—எ-று. (௩௱௬)

Koviloor Digital Library

திருமாந்துறை-பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

பெருகுசந்தனங் காரகில்பீலியும் பெருமர நிரந்துந்திப்
பொருதுகாவிரி வடகரைமாந்துறைப் புனிதனெம்பெருமானைப்
பரிவினாலிருந் திரவியுமதியமும் பாரவினர் பணிந்தேத்த
மருதவானவர் வழிபடுமலரடி வணங்குதல் செய்வோமே.

வரைவளங்கவர் காவிரிவடகரை மாந்துறை யுறைவானைச்
சிரபுரம்பதி யுடையவன் கவுணியன் செழுமறை நிறைநாவ
னரவெனும்பணி வல்லவன்ஞானசம் பந்தனன் புறுமாலை
பரவிடுந்தொழில் வல்லவரல்லலும் பாவமு மிலர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-ஆம்பிரவனேசர்.

தேவியார் - அழகாலமர்ந்தநாயகியம்மை.

அங்கணகன் றம்மருங்கி லங்கணர்தம் பதிபிறவு மணைந்துபோற்றிச், செங்கமலப் பொதியவிழச் சேல்பாயும் வயன்மதுவாற் சேறுமாறுப், பொங்கொலிநீர் மழநாட்டுப் பொன்னிவட கரைமிசைப்போய்ப் புகலிவேந்தர், நங்கள்பிரான் றிருப்பாச்சி லாச்சிரா மம்பணிய நண்ணும்போதில்.

(இ-ள்.) அங்கணகன்றம் மருங்கி லங்கணர்தம் பதிபிறவு மணைந்து போற்றி=அத்திருப்பதியினின்று நீங்கி அதன்பக்கத்திலுள்ள சிவபிரானுரது திருப்பதிகள் பலவற்றையு மடைந்துவணங்கி; செங்கமலப் பொதியவிழச் சேல்பாயும் வயன்மதுவாற் சேறுமாறு=செந்தாமரையின் அரும்புகள் முகைவிண்டலரச்சேல்கள் பாயும்வயல்கள் தேன்பெருக்கால் அளறுபடுதல்நீங்காத; பொங்கொலி நீர்மழநாட்டுப் பொன்னிவடகரைமிசைப்புகலி வேந்தர்போய்=மிக்க ஆரவாரத்தையுடைய நீர்சூழ்ந்த மழநாட்டின் கண்ணுள்ள காவிரியினது வடகரையின்மேல் சீகாழிபி லவதரித்த பிள்ளையார்சென்றருளி; நங்கள் பிரான் றிருப்பாச்சிலாச் சிராமம்பணிய நண்ணும்போதில்=நமது பிரானாகிய நீலகண்டேசரது திருப்பாச்சிலாச்சிர மத்தைவணங்க அடைந்தருளுங்காலத்தில்—எ-று. (ஈகய)

அந்நகரிற் கொல்லிமழ வன்பயந்த வரும்பெறலா ரமுதமென்சொற், கன்னியிளா மடப்பிணையாங் காமருகோ மளக்கொழுந்தின் கதிர்செய்மேனி, மன்னுபெரும் பிணியாகு முயலகன்வந் தணைவுறமெய் வருந்தமெய்தித், தன்னுடைய பெருஞ்சுற்றம் புலம்பெய்தத் தானுமனந் தளர்வுகொள்வான்.

Koviloor Digital Library

(இ-ள்.) அந்நகரிற் கொல்லிமழவன் பயந்தவரும் பெறல் ஆரமுதமென் சொற்கன்னி=அத்திருப்பதியில் கொல்லிமலைக்குரியனுகிய மழநாட்டரசன் தான்பெற்றபெறுதற்கரிய நிறைந்த அமுதம்போன்ற மெல்லிய சொல்லினையுடைய கன்னிகையும்; இளமடப்பிணையாம்=இளமைபொருந்திய மடமையான பெண்மானை யொத்தவளுமாகிய; காமருகோமளக்கொழுந்தின் கதிர்செய் மேனி=அழகிய மிருதுவான கொழுந்துபோல்வாளது ஒளிவீசும் தேகத்தின் கண்; மன்றுபெரும்பிணி முயலகன் பாருவந்தணைவுற=நிலைபெற்ற பெரும் பிணியாகிய முயலகன் என்னும் வலிவந்தடைய; மெய்வருந்த மெய்த்தன்னுடைய பெருஞ்சுற்றம் புலம்பெய்தத்தானு மனந்தளர்வு கொள்வான்=அப் புத்திரியின் சரீரம் வருத்தமுற அதனால் தன்னுடைய பெரியசுற்றத்தாரும்வருந்தத்தானும் வருந்துவானுயினன்—எ-று. (ரூகக)

மற்றுவே றொருபரிசாற் றவிராமை மறிவளருங் கையார்பாதம், பற்றியே வருங்குலத்துப் பான்மையினு லதலினுற் பரிவுதீரப், பொற்றொடியைக் கொடுவந்து போர்க்கோலச் சேவகராய்ப் புரங்கண்மூன்றுஞ், செற்றவர்தங் கோயிலினுட் கொடுபுகுந்து திருமுன்பே யிட்டுவைத்தான்.

(இ-ள்.) மற்றுவேறொரு பரிசாற் றவிராமை=மருந்து மந்திரமுதலிய நோய் தீர்க்கு முபாயங்கள் பலவுள்ளும் வேறொருபாயத்தாலும் அந்நோய் நீங்காமைகண்டு; மறிவளருங்கையார் பாதம்பற்றியேவருங் குலத்துப்பான்மையினு லதலினல்=மானேந்தியதிருக்கரத்தையுடைய சிவபெருமானுரது திருவடிகளை வழிவழியாகக்கருதிவழிபட்டுவரும் மரபின்தன்மையையுடையோனாதலால்; பரிவுதீரப்பொற்றொடியைக் கொடுவந்து=அந்நோயானுய துன்பம்நீங்கப் பொன்னுலாகிய வளையலை யணிந்ததமது புத்திரியைக்கொண்டுவந்து; போர்க்கோலச் சேவகராய்ப் புரங்கள்மூன்றும் செற்றவர்தம்கோயிலின் உட்கொடுபுகுந்து=போர்த்திருக்கோலங்கொண்ட சேவகராய்த் திரிபுரங்களையும் நகைத்தெரித்தருளிய நிலகண்டேசரது திருக்கோயிலினுள்ளே கொண்டுவந்து; திருமுன்பே யிட்டுவைத்தான்=திருவாயில்ன்முன்னே இட்டுவைத்தான்—எ-று. (ரூகஉ)

அவ்வளவி லாளுடைய பிள்ளையா ரெழுந்தருளி யணுகவெய்தச், செவ்வியமெய்ஞ் ஞானமுணர் திருஞான சம்பந்தன் வந்தானென்றே, யெவ்வுலகுந் துயர்நீங்கப் பணிமாறுந் தனிக்காளத் தெழுந்தவோசை, வெவ்வுயிர்க்கு மவன்கேளா மெல்லியலை விட்டெதிரே விரைந்துசெல்வான்.

(இ-ள்.) அவ்வளவிலாளுடைய பிள்ளையாரெழுந்தருளி அணுகவெய்த=அக்காலயில் ஆளுடையபிள்ளையார் முத்துச்சிவிகையி லெழுந்தருளி அத்திருப்பதியைப் பொருந்த அடைந்தருள; செவ்விய மெய்ஞ்ஞானம் உணர்திருஞானசம்பந்தன் வந்தான் என்றே=செப்பமான உண்மைஞானத்தையுணர்ந்த

Koviloor Digital Library

திருஞானசம்பந்தப் பிள்ளையார் வந்தருளினுரென்று ; எவ்வுலகும் துயர்நீங் கப்பணிமாறும் தனிக்காளத்து எழுந்தவோசை=எவ்வுலகின்கண் உள்ளாரும் துன்பத்தினின்று நீங்கப்பணிமாறும் ஒப்பில்லாத திருமுத்துக்காளத்தினின்று எழுந்த ஓசையை ; வெவ்வுயிர்ச்கும் அவன்களா=விசனத்தால் பெருமூச் செறியும் கொல்லிமழவன் கேட்டு மெல்லியலைவிட்டு ; எதிரேவிரைந்துசெல் வான்=தமது புத்திரியை நீலகண்டேசர் சந்நிதியில்விட்டு எதிர்கொள்ள வி ரைந்து செல்வானுயினுன்—எ-று.

சுவர்க்கமுதலியனவு மடங்க எவ்வுலகுமென்றூர். பணிமாறல் குழூஉக்கு றியாய் ஊதுதல்மேற்று. முன்னர்த் திருஞானசம்பந்தன் வந்தானெனக் காளம் பணிமாறும், அதனுல் அதுகேட்டு சின்னந்தானை ஒலிக்குமுன் விரைந் துசென்றுனென்றுராயிற்று. (௩௯௩)

மாநகர மலங்கரிமின் மகரதோ ரணநாட்டு மணிநீர்வாசத், தூந றும்பூ ரணகும்பஞ் சோதிமணி விளக்கினெடு தூபமேந்தும், ஏனை யணி பிறவுமெலா மெழில்பெருக வியற்றுமென வேவித்தானும், வா னவர்நா யகர்மகனுர் வருமுன்பு தொழுதணைந்தான் மழவர்கோமான்.

(இ-ள்.) மாநகரம் மலங்கரிமின் மகரதோரணம்நாட்டும்=பெரிய நகரத் தை அலங்கரியுங்கள் சுருமீன் வடிவமாகச்செய்ததோரணங்களைநாட்டுங்கள்; மணிநீர் வாசத்தூநறும் பூரணகும்பம் சோதிமணி விளக்கினெடுதூபம் ஏந் தும்=அழகிய நீர்நிறைந்த வாசனையுடைய பரிசுத்தமாகிய நல்லபூரணகும்பங் களும் பிரகாசத்தையுடைய இரத்தின தீபங்களுமாகிய மங்கலப்பொருள்க ளோடு நறும்புகையையும் ஏந்துங்கள் ; ஏனைஅணிபிறவுமெலாம் எழில்பெருக இயற்றுமென=இவையொழிந்தபிற அலங்காரங்களும் ஆகியஎல்லாவற்றையும் அழகுபெறச் செய்யுங்களென்று அந்நகரிலுள்ளாரை ஏவி ; மழவர்கோமான் தானும் வானவர் நாயகர்மகனுர் வருமுன்பு தொழுது அணைந்தான்=கொல்லி மலைக் குரியனுன மழநாட்டரசனும் தேவாதிபரான சிவபிரான் திருமகனுர் எழுந்தருளும் மார்க்கத்தில் எதிர்கொள்ளும்படி கைகுவித்துவணங்கிக்கொண் டு சென்றணைந்தான்—எ-று. (௩௯௪)

பிள்ளையா ரெழுந்தருளப் பெற்றேனென் றுனந்தம் பெருகுகா தல், வெள்ளநீர் கண்பொழியத் திருமுத்தின் சிவிகையின்முன் வீழ் ந்தபோது, வள்ளலா ரெழுகவென மலர்வித்த திருவாக்கான் மலர் க்கைசென்னி, கொள்ளமகிழ்ந் துடன்சென்று குலப்பதியின் மணி வீதி கொண்டுபுக்காள்.

(இ-ள்.) பிள்ளையா ரெழுந்தருளப் பெற்றேனென்று=ஆளுடைய பிள் ளையார் இங்கு எழுந்தருளும்படியான பேற்றினையான் பெற்றேனென்றுகூறி; ஆனந்தம் பெருகுகாதல் வெள்ளநீர்கண்பொழிய=அதனுலுண்டாய ஆனந்தத் தால் பெருகுகின்ற ஆனந்தபாஷ்பவெள்ளம் தனதுகண்களினின்றும் இடை

யாருதசொரிய ; திருமுத்தின் சிவிகைமுன் வீழ்ந்தபோது=அவரது முத்தாலாய திருச்சிவிகையின் முன்னேபணிந்தகாலத்து ; வள்ளலாரெழுகவென மலர்வித்த திருவாக்கால்=ஆளுடைய பிள்ளையார் மழவனே! எழக்கடவை என்று திருவாய் மலர்ந்தருளிய திருவாக்கினால் ; மலர்க்கை சென்னிகொள்ள மகிழ்ந்துடன்சென்று=அவனெழுந்து மலர்போன்ற தனதுகைகள் சிரசின் மேற் குவித்தேற மகிழ்ந்து பிள்ளையாருடன் சென்று ; குலப்பதியின் மணிவீதி கொண்டுபுக்கான்=மக்கட்டொகுதியையுடைய அழகியதிருவீதியில் அழைத்துக்கொண்டு போயினான்—எ-று.

பக்குவமிக்க சீடன் உத்தமாசிரியனை வணங்குங்கால் அவ்வாசிரியன் எழுகவென அநுமதிகொடுத்தன்றி எழானென்னும் வழக்குந்தோன்ற வள்ளலார் எழுகவென வென்றார்.. (௫௧௫)


மங்கலதூ ரியமுழங்கு மணிவீதி கடந்துமதிச் சடையார்கோயிற்,
பொங்குசுடர்க் கோபுரத்துக் கணித்தாகப் புனைமுத்தின் சிவிகைநின்
று, மங்கணிழிந் தருளுமுறை யிழிந்தருளி யணிவாயில் பணிந்துபுக்
குத், தங்கள்பிரான் கோயில்வலங் கொண்டுதிரு முன்வணங்கச் சாரு
ங்காலை.

(இ-ள்.) மங்கல தூரியமுழங்கு மணிவீதி கடந்து=மங்கல வாத்திய மொலிக்கும் அழகிய வீதிகளைக்கடந்து ; மதிச்சடையார் கோயில் பொங்குசுடர்க்கோபுரத்துக் கணித்தாக=சந்திரனையணிந்த சடாமகுடத்தையுடைய நீலகண்டேசரது திருக்கோயிலின் முன்பொலிவு பெற்றிருக்கும் ஒளிபொருந்திய திருக்கோபுரத்துக்குச் சமீபமாக ; புனைமுத்தின் சிவிகைநின்றும்=அலங்கரிக்குந் திருமுத்தின் சிவிகையினின்றும் ; அங்கணிழிந்து அருளுமுறை யிழிந்தருளி=அவ்விடத்துத்தாம் இறங்கி அருளும்முறைப்படி இறங்கி அருளி ; அணிவாயில் பணிந்துபுக்கு=அழகிய திருவாயிலைவணங்கி உள்ளேசென்று ; தங்கள்பிரான் கோயில்வலங்கொண்டு திருமுன்வணங்கிச்சாருங்காலை=தமது பிரானாரது திருக்கோயிலைவலமாகவந்து அவரது திருமுன்னேபணிந்து, ஆளுடையபிள்ளையார்செல்லுங்காலத்து—எ-று. (௫௧௬)

கன்னியிளங் கொடியுணர்வு கழிந்துநிலன் சேர்ந்ததனைக் கண்டு
நோக்கி, யென்னிதுவென் றருள்செய்ய மழவன்று னெதிரிறைஞ்சி
யடியேன்பெற்ற, பொன்னிவளை முயலகனும் பொருவிலரும் பிணி
பொருந்தப் புனிதர்கோயின், முன்னணையக் கொணர்வித்தே னிதுபு
குந்த படியென்று மொழிந்துநின்றான்.

(இ-ள்.) கன்னியிளங்கொடி யுணர்வுகழிந்து நிலன்சேர்ந்த தனைக்கண்டு நோக்கி=மழவன் புத்திரியாகிய இளங்கொடி போன்றவள் அறிவழிந்து பூமியின்மேல் மயங்கிக்கிடந்ததைப் பிள்ளையார்திருநோக்கஞ்செய்து ; என்னிதுவென்றருள்செய்ய=இவள் இவ்வாறிருத்தற்குக் காரணமியாதென்றுவினு

Koviloor Digital Library



திருப்பாச்சிலாச்சிராமத்தரசனதுபுத்திரிக்குத்தமுயலகன்நோயின்வரலாறறை உரைத்தல்

Koviloor Digital Library

வியருள ; மழவன்கு னெதிரிறைஞ்சி= அதுகேட்ட மழநாட்டரசன் திருமுன்புவணங்கி ; அடியேன்பெற்ற பொன்னிவளை முயலகனும் பொருவிலரும்பிணி பொருந்த=அடியேன் பெறப்பட்ட புத்திரியாகிய இவளை ஒப்பில்லாத பெரிய முயலகனென்னும் பிணிஅடைய அக்காரணத்தால் ; புனிதர்கோயில்முன்னணையக் கொணர்வித்தேன்=பரிசுத்தரான நீலகண்டேசரது திருக்கோயில்முன் பொருந்தக் கொண்டுவந்துவிடச்செய்தேன் ; இதுபுகுந்தபடியென்று மொழிந்துநின்முன்=இது நிகழ்ந்தவாறென்றுசொன்னான்—எ-று.()

வேறு.

அணிகிளர்தா ரவன் சொன்ன மாற்ற மரு ளொடுங்கேட்டந் நிலையினின்றே, பணிவளர்செஞ் சடைப் பாச்சின் மேய பரம் பொருளாயினு னைப்பணிந்து, மணிவளர்கண் டரோ மங்கையைவாட மயல்செய்வதோவிவர் மாண்பதென்று, தனிவில்பிணி தவிர்க் கும்பதி கத்தண்டமிழ் பாடினர் சண்பைநாதர்.

(இ-ள்.) அணிகிளர் தாரவன் சொன்னமாற்றம் அருளொடுங்கேட்டு=அழகுவிளங்கும்மாலையையணிந்த அம்மழநாட்டரசன் சொன்னவார்த்தையைக்கிருபையோடுங்கேட்டருளி ; அந்நிலையினின்றே=கேட்டருளிய இடத்திலேயே நின்றருளி ; பணிவளர் செஞ்சடைப் பாச்சின் மேயபரம்பொருளாயினுனைப்பணிந்து=பாம்பணிந்த சிவந்த சடையையுடைய திருப்பாச்சிலாச்சிராமத்தின்கண் ணெழுந்தருளிய நீலகண்டேசனை வணங்கி ; மணிவளர்கண்டர் இவர்மாண்பு மங்கையை வாடமயல் செய்வதோ என்று=நீலகண்டராகிய இவரதுதிருவருள் இப்பெண்ணை நோயால் வாடும்படி மயங்கச்செய்வதோ என்று திருப்பதிக விறுதியில் முடித்து ; தனிவில் பிணிதவிர்க்கும் பதிகத்தண்டமிழ்பாடினர் சண்பைநாதர்=நீங்குதலில்லாத முயலகனென்னும்நோயைநீக்கும் துணிவளர் திங்களென்னும் முதலையுடைய குளிர்ந்த தமிழ்ப்பதிகத்தை யாளுடைய பிள்ளையார் பாடியருளினர்—எ-று.

திருநீலகண்டம் அடியர் நோய்க்கும் இடர்க்கும் மருந்தாதலின் அத்திருப்பெயர்தோன்ற மணிவளர்கண்டர் என்றும் மருந்துமந்திரங்களால்தணித்தற்கு அருமைபற்றி தணிவில்பிணியென்றுங் கூறப்பட்டன என்க ஓ அசை.()

திருப்பாச்சிலாச்சிராமம் - முயலகன்றீர்ந்தபதிகம்-பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

துணிவளர்திங்கள் துலங்கிவிளங்கச் சுடர்ச்சடை சுற்றிமுடித்துப், பணிவளர்கொள்கையர்பாரிடஞ்சூழவாரிடமும்பலிதேர்வ, ரணிவளர்கோலமெலாஞ்செய்து பாச்சிலாச்சிராமத்துறைகின்ற, மணிவளர்கண்டரோ மங்கையைவாடமயல் செய்வதோவிவர்மாண்பே.

Koviloor Digital Library

கலைபுனைமானுரி தோலுடையாடை கனல்சுடராலிவர்கண்கள்,
தலையணிசென்னியர் தாரணிமார்பர்தம்மடிகள்ளிவரொன்ன, அலைபு
னல்பூம்பொழில் சூழ்ந்தமர்பாச்சிலாச் சிராமத்துறைகின்ற, விலைபு
னைவேலரோ வேழையைவாடவிடர் செய்வதோவிவரீடே.

வெஞ்சுடராடுவர் துஞ்சிருண்மாலைவேண்டுவர் பூண்பதுவெண்
ணூல், நஞ்சடைகண்டர் நெஞ்சிடமாகநண்ணுவர் நம்மைநயந்து, ம
ஞ்சடைமாளிகை சூழ்தரு பாச்சி லாச்சிராமத்துறைகின்ற, செஞ்சுட
ர்வண்ணரோ பைந்தொடிவாடச்சிதை செய்வதோ விவர்சீரே.

கனமலர்க்கொன்றை யலங்கலிலங் கக்கனல்தரு நூமதிக்கண்
ணி, புனமலர்மாலை யணிந்தழகாய புனிதர்கொலாமிவரொன்ன, வனம
லிவண்பொழில் சூழ்தரு பாச்சி லாச்சிரா மத்துறை கின்ற, மனமலி
மைந்தரோ மங்கையைவாட மயல்செய்வதோவிவர்மாண்பே.

மாந்தர்தம்பால்நறு நெய்மகிழ்ந்தாடிவளர் சடைமேற்புனல்வை
த்து, மோந்தைமுழாக்குழல்தாள மோர்வீணைமுதிரவோர் வாய்மூரி
பாடி, யாந்தைவிழிச்சிறுபூதத்தர் பாச்சிலாச்சிராமத்துறைகின்ற, சா
ந்தணி மார்பரோ தையலை வாடச் சதுர்செய்வதோ விவர்சார்வே.


நீறுமெய்ப்பூசி நிறைசடைதாழ நெற்றிக்கண் ணாலுற்றுநோக்கி,
யாறதுசூடி யாடர வாட்டி யைவிரறகோவணவாடை, பாறருமேனி
யர்பூதத்தர் பாச்சி லாச்சிரா மத்துறைகின்ற, வேறதுவேறியரோழை
வாடவிடர் செய்வதோவிவரீடே.

பொங்கிளநாக மோரேகவடத்தோ டாமை வெண்ணூல்புனை
கொன்றை, கொங்கிளமாலை புனைந்தழகாயகுழகர் கொலாமிவரொன்ன,
ங்கிளமங்கைபோர்பங்கினர் பாச்சிலாச்சிராமத்துறைகின்ற, சங்கொ
ளிவண்ணரோதாழ்குழல்வாடச் சதிர்செய்வதோவிவர்சார்வே

ஏவலத்தால்விசயற் கருள்செய்தே யிராவணனை யீடழித்து, மூ
வரிலும் முதலாய்நடுவாய் மூர்த்தியை யன்றிமொழியாள், யாவர்களு
ம்பரவும் மெழிற் பாச்சி லாச்சிரா மத்துறைகின்ற, தேவர்கள்தேவ
ரோசேயிழைவாடச்சிதை செய்வதோவிவர்சார்வே.

மேலதுநான் முகனெய்திய தில்லைக்கீழது சேவடிதன்னை, நீல
துவண்ணனு மெய்தியதில்லையெனவிவர் நின்றதுமல்லா, லாலதுமா
மதிதோய்பொழிற் பாச்சிலாச்சிராமத்துறைகின்ற, பாலதுவண்ண
ரோ பைந்தொடிவாடப் பழிசெய்வதோவிவர்பண்பே.

Koviloor Digital Library



திருப்பாச்சிலாச்சிராமத்தில் கொல்லிமழவன்புத்திரியினது
முயலகனுடைய வியாதியை நீக்கினது.

Koviloor Digital Library

நாணொடுகூடிய சாயினரேனுநகுவரவரிருபோது, மூணொடுகூடியவுட்குந்தகையாருளைகளவைகொளவேண்டா, வாணொடுபெண்வடிவாயினபாச்சிலாச்சிராமத்துறைகின்ற, பூணெடுமார்பரோபூங்கொடிவாடப்புனைசெய்வதோவிவர்பொற்பே.

அகமலியன்பொடுதொண்டர்வணங்கப்பாச்சிராமத்துறைகின்ற, புகைமலிமாலைபுனைந்தழகாய புனிதர்கொலர்மிவரொன்ன, நகைமலிதண்பொழில்சூழ்தருகாழிநற்றமிழ்ஞானசம்பந்தன், றகைமலிதண்டமிழ்கொண்டிவையேத்தச்சாரகிலாவினைதானே.

திருச்சிற்றம்பலம்.

முயலகன்-என்பது ஒருவிதவலிநோய் குமரகண்டவலியென்பாருமுளர்.
இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - மாற்றறிவரதர்-தேவியார் - பாலசுந்தரநாயகியம்மை.

பன்னுதமிழ்மறை யாம்பதிகம் பாடித்திருக்கடைக் காப்புச்சாத்தி, மன்னுங்கவுணியர் போற்றிநிற்க மழவன்பயந்த மழலைமென்சொற், கன்னியுறுபிணி விட்டுநீங்கக் கதுமெனப்பார்மிசை நின்றெழுந்து, பொன்னின்கொடியென வொல்கிவந்து பொருவலித்தாதைபுடையணைந்தாள்.

(இ-ள்.) பன்னுந்தமிழ்மறையாம் பதிகம்பாடி = யாவரும் துதிக்கும் தமிழ்வேதமாகியவத் திருப்பதிகத்தை யோதியருளி ; திருக்கடைக் காப்புச் சாத்தி=அதில் திருச்கடைக்காப்பினையுஞ்சாத்தியருளி ; மன்னுங்கவுணியர் போற்றிநிற்க=நிலைபெற்றபுகழையுடைய பிள்ளையார்வணங்கிநிற்க ; மழவன் பயந்தமழலைமென்சொற்கன்னி=கொல்லிமழவன்பெற்ற மிருதுவாகிய சொல்லையுடைய புத்திரியானவள் ; உறுபிணிவிட்டுநீங்கக் கதுமெனபார்மிசை நின்றெழுந்து=தன்னையுற்ற முயலகனென்னும் வலிநோயானது விட்டகல அதனுணர்வுபெற்று விரைந்து பூமியினின்று எழுந்து ; பொன்னின்கொடியென வொல்கிவந்துபொருவலித்தாதைபுடையணைந்தாள் = பொற்கொடிபோல வசைந்துசென்று போர்செய்யும் வலிமையையுடையதன்பிதாவின் பக்கலடைந்தாள்—எ-று. (௩௯௧)

வஞ்பிணிநீங்கு மகளைக்கண்ட மழவன்பெருகு மகிழ்ச்சிபொங்கத், தன்றனிப்பாவையுந் தானுங்கூடச் சண்பையர்காவலர் தாளில்வீழ, நின்றவருமறைப் பிள்ளையாரு நீரணிவேணி நிமலர்பாத, மொன்றியசிந்தை யுடன்பணிந்தா ரும்பர்பிரான்றிருத் தொண்டரார்த்தார்.

(இ-ள்.) வன்பிணிநீங்கு மகளைக்கண்ட மழவன்பெருகு மகிழ்ச்சிபொங்க=வலியநோயினின்றும் நீங்கிய தனது புத்திரியைப்பார்த்தமழநாட்டரசன் மிக்க மகிழ்ச்சியதிகரிக்க; தன்தனிப்பாவையுந் தானுங்கூடச் சண்பையர்காவலர்தாளில்விழ=தனதொப்பற்ற புத்திரியுந் தானுமாகச் சீகாழியிலுள்ளவர்க்குத்தலைவராகிய பிள்ளையாரது திருவடியின்கண் விழ்ந்திறைஞ்ச; நின்றவருமறைப்பிள்ளையாரும்=அங்குநின்றருளிய அரியவேதங்களையுணர்ந்த ஆளுடையபிள்ளையாரும்; நீரணிவேணி நிமலர்பாதமொன்றிய சிந்தையுடன்பணிந்தார்=கங்கையையணிந்த சடாமகுடத்தையுடைய நீலகண்டேசரது திருவடிகளை யொருங்கிய திருவுள்ளத்தோடு வணங்கியருளினார்; உம்பர்பிரான்திருத்தொண்டரார்த்தார்=சிவபிரானாரது திருத்தொண்டர்களு மாரவாரித்தார்கள்—எ-று.

சோழநாட்டில் காவிரியின் வடகரையிலுள்ள திருமழபாடி, திருப்பாச்சிலாச்சிராமம், திருமங்கலம் முதலியன மழநாட்டிலுள்ள ஸ்தலங்களாம் அந்நாட்டுக்கு மலை, கொல்லிமலையாதலின் அவ்வரசன் கொல்லிமழவனெனக் கூறப்படுவன். அவ்வாறாகக் கொல்லிமலைசேரனுக் குரியதன்றோவெனின் பொதியமலைபாண்டியனுக்குஞ் சேரனுக்கும் பொதுவாதல்போல அம்மலையும் சோழனுக்குஞ் சேரனுக்கும் பொதுவாயிற்றென்க. (௩௨௰)

நீடுதிருவாச்சி ராமமன்னு நேரிழைபாகத்தர் தாள்வணங்கிக்,
கூடுமருளுட னங்கமர்ந்து கும்பிடுங்கொள்கைமேற் கொண்டுபோந்
தே, யாடல்பயின்றார் பதிபிறவு மணைந்துபணிந்தடி போற்றியேகிச்,
சேடர்கள்வாழுந் திருப்பைஞ்ஞீலிச் சிவபெருமானையிறைஞ்சச்செ
ன்றார்.

(இ-ள்.) நீடுதிருவாச்சிராமமென்னும்=செல்வமிக்க திருப்பாச்சிலாச்சிராமத்தில் எழுந்தருளிய; நேரிழைபாகத்தர்தாள்வணங்கி=விசாலாட்சிதேவியை இடப்பாகத்திலுடைய நீலகண்டேசரது திருவடிகளைவணங்கி; கூடுமருளுடனங்கமர்ந்து = தம்மிடத்தில் கலந்ததிருவருளோடு அத்திருப்பதியிலிருந்தருளி; கும்பிடுங்கொள்கைமேற்கொண்டு போந்து=நாள்தோறும் வணங்குகின்ற கொள்கையைமேற்கொண்டு அத்தலத்தினின்றும் எழுந்தருளி; ஆடல்மகிழ்ந்தார் பதிபிறவு மணைந்து பணிந்தடிபோற்றியேகி=கனகசபையின்கண் திருக்கூத்தை விரும்பிய சிவபிரானது திருப்பதிகள் பிறவற்றையுஞ் சேர்ந்து வணங்கி அங்குநின்றும் எழுந்தருளி; சேடர்கள்வாழுந் திருப்பைஞ்ஞீலிச் சிவபெருமானை யிறைஞ்சச்சென்றார்=அறிவின்மிக்க அடியார்கள் வாழும் திருப்பைஞ்ஞீலியி லெழுந்தருளிய மாற்றறிவரதேசரை வணங்கச்சென்றருளினார்—எ-று. (௩௨௧)

பண்பயில்வண்டினம் பாடுஞ்சோலைப் பைஞ்ஞீலிவாணர் கழல்
பணிந்து, மண்பரவுந்தமிழ் மாலைபாடி வைகிவணங்கி மகிழ்ந்துபோ

Koviloor Digital Library

ந்து, திண்பெருந்தெய்வக் கயிலையில்வாழ் சிவனூர்பதிபல சென்றி றைஞ்சிச், சண்பைவளந்தரு நாடர்வந்தா தடந்திருவீங்கோய் மலை யைச்சார்ந்தார்.

(இ-ள்) பண்பையில் வண்டினம் பாடுஞ்சோலைப் பைஞ்ஞீலிவாணர்க ழல்பணிந்து=இசையோடு பழகியவண்டின் கூட்டங்கள் பாடுகின்றசோலைசூ ழ்ந்ததிருப்பைஞ்ஞீலியில்வாழும் மாற்றறிவரதேசரது திருவடிகளைவணங்கி; மண்பரவுந் தமிழ்மாலைபாடிவைகி=நிலவுலகத்தார் துதிக்கும் திருப்பதிகமா லையைப்பாடி அத்திருப்பதியி லெழுந்தருளி; வணங்கிமகிழ்ந்து போந்து=ப ணிந்துமகிழ்ச்சியடைந்து அங்குநின்றுஞ் சென்றருளி; திண்பெருந்தெய்வக் கயிலையில் வாழ்சிவனூர் பதிபல சென்றிறைஞ்சி=அழியாநிலைமையையுடைய பெரியதிருக்கயிலாயத்தி லெழுந்தருளிய சிவபிரானது பலதிருப்பதிகளையுஞ் சென்றுவணங்கி; சண்பைவளர் தருநாடர்வந்துதடந்திருவீங்கோய் மலையை ச்சார்ந்தார்=சீகாழிஎன்னும் வளப்பமிக்கதிருநாட்டையுடையபிள்ளையார்எழு ந்தருளிவந்துவிசாலமானதிருவீங்கோய்மலையை அடைந்தருளினூர்—எ-று.

திருப்பைஞ்ஞீலி - பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

ஆரிடம்பாடில ரடிகள்காடலா
லோரிடங்குறைவில ருடையர்கோவண
நீரிடஞ்சடைவிடை யூர்திநிற்றலும்
பாரிடம்பணிசெயும் பணிபைஞ்ஞீலியே.

கண்புனல்விளைவயற் காழிக்கற்பகம்
நண்புணரருமறை ஞானசம்பந்தன்
பண்பினர்பரவிப்பைஞ் ஞீலிபாடுவார்
உண்பினவுலகினி லோங்கிவாழ்வரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-மாற்றறிவரதேசுரர். தேவியார்-பாலசவுந்தரியம்மையார்

செங்கட்குறவரைத் தேவர்போற்றுந் திகழ்திருவீங்கோய் மலை யின்மேவுங், கங்கைச்சடையார் கழல்பணிந்து கலந்தவிசைப்பதி க ம்புனைந்து, பொங்கற்பொழில்சூழ் மலையுமற்றும் புறத்துள்ளதானங் களெல்லாம்போற்றிக், கொங்கிற்குடபுலஞ் சென்றணைந்தார் கோதி ன்மெய்ஞ்ஞானக் கொழுந்தனையார்.

Koviloor Digital Library

(இ-ள்.) செங்கட்குறவரைத் தேவர்போற்றும் திகழ்திருவீங்கோய் மலையின்மேவும்=அம்மலையில்வாழும் சிவந்தகண்களையுடைய குறவர்களை அம்மலையின் மேன்மையால் தேவர்கள் வாழ்த்தும் விளங்குகின்ற திருவீங்கோய் மலையிலெழுந்தருளிய ; சங்கைச்சடையார் கழல்பணிந்து=கங்கையணிந்த சடாமுடியையுடைய மரகதாசலேசர் திருவடிகளை வணங்கி ; கலந்தவிசைப்பதிகம்புனைந்து=இசையோடு பொருந்திய திருப்பதிகத்தைப்பாடி ; பொங்கற்பொழில்சூழ்மலையும் மற்றும்புறத்துள்ள தானங்களெல்லாம்போற்றி=மரக்கொம்புகளால் நிறைந்தசோலைசூழ்ந்தமலையையும் அதனருகி லுள்ளனவாய தலங்களையுந் துதித்து ; கொங்கிற் குடபுலஞ்சென்றணைந்தார் கோதில்மெஞ்ஞானக் கொழுந்தனையார்=மேற்குநாடாகிய கொங்குதேசத்தில் சென்றருளினார் குற்றமில்லாத மெஞ்ஞானக்கொழுந்துபோன்ற பிள்ளையார்—எ-று. ()

திருஈங்கோய்மலை-பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

வானத்துயர்தன் மதிதோய்சடைமேல் மத்த மலர்சூடித்
தேனொத்தனமென் மொழிமான்விழியா டேவிபாகமாக்
கானத்திரவி லெரிகொண் டாடுங் கடவு ளுலகேத்த
ஏனத்திரள்வந் திழியுஞ்சார லீங்கோய் மலையாரே.

விழிவாரொலியு முழவுமோவா வேணு புரந்தன்னு
ளழகார்வண்ணத் தடிகளருள்சே ரணிகொள் சம்பந்த
னெழிலார்சுனையும் பொழிலும்புடைசூ ழீங்கோய் மலையீசன்
கழல்சேர்பாடல் பத்தும்வல்லார் கவலை கழல் வாரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-மரகதாசலேசுவரர். தேவியார்-மரகதவல்லியம்மை.

வேறு.

அண்டர்பிரா னாலயங்க ளம்மருங்குள் ளனபணிந்து
தெண்டிரைநீர்த் தடம்பொன்னித் தென்கரையாங் கொங்கினிடை
வண்டலையும் புனற்சடையார் மகிழ்விடங்க டொழுதணைந்தார்
கொண்டல்பணி நெடும்புரிசைக் கொடிமாடச் செங்குன்றூர்.

(இ-ள்.) அண்டர்பிரா னாலயங்க ளம்மருங்குள்ளன பணிந்து=தேவர்பிரானாகிய சிவபிரானெழுந்தருளிய கொங்கின் பக்கத்திலுள்ளன வாயகருவூர் வெஞ்சமாக்கூடலென்று மிவைகளைவணங்கி அங்குநின்று எழுந்தருளி ; தெண்டிரை நீர்த்தடம் பொன்னித்தென்கரையாங் கொங்கினிடை=தெளிவான அலைவீசுகின்ற நீர்நிறைந்த விசாலமான காவிரியின் தெற்குக்கரையி

Koviloor Digital Library

விருக்கின்ற கொங்குநாட்டில் ; வண்டலையும் புனற்சடையார்மகிழ்விடங்கள் தொழுதணைந்தார்=தேன்நசையால் வண்டுகள் சுற்றித்திரிகின்ற கங்காநதியையணிந்த சடைமுடியையுடைய சிவபிரான் மகிழ்ந்து வீற்றிருந்தருளும் திருக்கொடுமுடிமுதலிய ஸ்தலங்களை வணங்கிச்சென்றார் ; கொண்டல்பயில் நெடும்புரிசைக்கொடிமாடச் செங்குன்றூர்=மேகங்கள் தவழுகின்ற நீண்டமதிலையுடைய கொடிமாடச் செங்குன்றூரென்னுந் தலத்தினை—எ-று.

செங்குன்றூரைச் சென்றணைந்தா ரெனக்கூட்டுக. செங்குன்றூர் கொங்கில் காவிரியின் வடகரை யாதலின் தென்கரையாங் கொங்கினிடை வண்டலையும் புனற்சடையார் மகிழ்விடங்கள் தொழுதணைந்தாரென்றார். (௩௨௪)

அந்நகரில் வாழ்வாரு மடியவரு மனமகிழ்ந்து
பன்னெடுந்தோ ரணமுதலாப் பயிலணிகள் பலவமைத்து
முன்னுறவந் தெதிர்கொண்டு பணிந்தேத்தி மொய்கரங்கள்
சென்னியுறக் கொண்டணைந்தார் சினவிடையார்செழுங்கோயில்.

(இ-ள்.) அந்நகரில் வாழ்வாரும் அடியவருமனமகிழ்ந்து=அத்திருப்பதியில் வாழ்கின்றவரும் அடியார்களு மனமகிழ்ச்சிகொண்டு ; பன்னெடுந்தோரணமுதலாப் பயிலணிகள் பலவமைத்து=பலநீண்டதோரண முதலாகப்பொருந்திய பலவலங்காரங்களையுஞ்செய்து ; முன்னுறவந்தெதிர்கொண்டு பணிந்தேத்தி=பிள்ளையார் திருமுன்னே யெதிர்கொள்ளுமுறைப்படி யெதிர்கொண்டுவந்து வணங்கித்துதித்து ; மொய்கரங்கள் சென்னியுறக்கொண்டு=நெருங்கியதமது திருக்கரங்களைச் சிரசின்மேலேறக்கூப்பி யழைத்துக்கொண்டு ; அணைந்தார் சினவிடையார் செழுங்கோயில்=கோபம்பொருந்திய விடபத்தை வாகனமாகவுடைய அர்த்தநாரீசரெழுந்தருளிய செழுமைபொருந்திய திருக்கோயிலை யடைந்தார்கள்—எ-று. (௩௨௫)

தம்பெருமான் கோயிலினு ளெழுந்தருளித் தமிழ்விரகர்
நம்பரவர் திருமுன்பு தாழ்ந்தெழுந்து நலஞ்சிறக்க
விம்பருமும் பருமேத்த வின்னிசைவண் டமிழ்பாடிக்
கும்பிடுமா தரவுடனக் கோநகரி லினிதமர்ந்தார்.

(இ-ள்.) தமிழ்விரகர் தம்பெருமான் கோயினுளெழுந்தருளி=முத்தமிழ்விரகராகிய ஆளுடையபிள்ளையார் தமது முதல்வராகிய அர்த்தநாரீசர் எழுந்தருளிய திருக்கோயிலினுள் எழுந்தருளி ; நம்பரவர் திருமுன்பு தாழ்ந்தெழுந்து நலஞ்சிறக்க=அச்சிவபிரானது திருமுன்னே வணங்கி யெழுந்து நன்மையதிகரிக்க ; இம்பரு மும்பருமேத்த வின்னிசைவண்டமிழ்பாடி=இவ்வுலகின்கணுள்ளாரும் வானுலகின்கணுள்ளாருந் துதிக்க இனியவிசையோடு கூடிய திருப்பதிகத்தைப்பாடியருளி ; கும்பிடுமாதர வுடனக்கோ நகரிலினிதமர்ந்தார்=வணங்கும் விருப்பத்தோடு அப்பெருமையையுடைய கொடிமாடச்செங்குன்றூரென்னு நகரத்தில் இனிதாகவெழுந்தருளி இருந்தார்—எ-று. (௩௨௬)

Koviloor Digital Library

திருக்கொடிமாடச் செங்குன்றூர்-பண்-வியாழக்குறிஞ்சி.

இது திருச்செங்கோடு என்று வழங்குகின்றது.

திருச்சிற்றம்பலம்.

வெந்தவெண்ணீ றணிந்துவிரி நூறிகழ் மார்பினல்ல
பந்தணவும் விரலா ளொருபாக மமர்ந்தருளிக்
கொந்தணவும் பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர்நின்ற
வந்த ணனைத்தொழுவா ரவலமறுப்பாரே.

அலைமலிதண் புனல்சூழ்ந் தழகார்புகலி நகர்பேணுந்
தலைமக னாகிநின்ற தமிழ்ஞான சம்பந்தன்
கொலைமலிமூ விலையான் கொடிமாடச்செங் குன்றூரேத்து
நலமலிபாடல் வல்லார்வினை யான நாசமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-அர்த்தநாரீசுவரர். தேவியார்-அர்த்தநாரீசுவரி.

அப்பாலைக் குடபுலத்தி லாறணிந்தா ரமர்கோயி
லெப்பாலுஞ் சென்றேத்தித் திருநணா வினையிறைஞ்சிப்
பைப்பாந்தள் புனைந்தவரைப் பரவிப்பண் டமர்கின்ற
வைப்பான செங்குன்றூர் வந்தணைந்து வைகினார்.

(இ-ள்.) அப்பாலைக்குடபுலத்தி லாறணிந்தா ரமர்கோயில் எப்பாலுஞ் சென்றேத்தி=திருச்செங்கோட்டினப்பால் கொங்குநாட்டைச்சேர்ந்த கங்காநதியையணிந்த சடைமுடியையுடைய சிவபிரான் எழுந்தருளிய அவனாசி முதலிய திருப்பதிகளெவ்விடத்துஞ்சென்று துதித்து; திருநணாவினையிறைஞ்சி=பவானிகூடலென்னுந் திருப்பதியைவணங்கி; பைப்பாந்தள் புனைந்தவரைப் பரவி=படம்பொருந்திய சர்ப்பத்தை ஆபரணமாகப்பூண்ட சங்கமேசனைத்துதித்து; பண்டமர்கின்ற வைப்பானசெங்குன்றூர் வந்தணைந்துவைகினார்=தாமுன்னெழுந்தருளியிருந்த தலமாகிய திருக்கொடிமாடச் செங்குன்றூரைவந்து சேர்ந்து அங்கெழுந்தருளி யிருந்தார்—எ-று. (௬௨௭)

திருநணா-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பந்தார் விரன்மட வாள்பாக மாநாகம்பூண் டேறுமேறி
யந்தா ரணிந்தவம் மானிடம் போலு மந்தண்சாரல்
வந்தார் மடமந்தி கூத்தாட வார்பொழிலில் வண்டுபாடச்
செந்தேன் றெளியொளிரத் தேமாங் கனியுதிர்க்குந்திருநணாவே.

Koviloor Digital Library

கல்வித் தகத்தாற் றிரைசூழ் கடற்காழிக் கவுணிசீரார்
நல்வித் தகத்தா லினிதுணரு ஞானசம் பந்தனென்று
சொல்வித் தகத்தா லிறைவன் திருநணு வேத்துபாடல்
வல்வித் தகத்தான் மொழிவார் பழியிலரிம் மண்ணின்மேலே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - சங்கமேசர். தேவியார் - வேதமங்கையம்மை.

ஆங்குடைய பிள்ளையா ரமர்ந்துறையு நாளின்கட்
டூங்குதுளி முகிற்குலங்கள் சுரந்தபெய லொழிகாலை
வீங்கொலிநீர் வைப்பெல்லாம் வெயில்பெறு விருப்புவரப்
பாங்கர்வரை யுங்குளிரும் பனிப்பருவ மெய்தியதால்.

(இ-ள்.) ஆங்குடைய பிள்ளையாரமர்ந்துறையு நாளின்கண்=அத்தலத்தில் ஆளுடைய பிள்ளையாரெழுந்தருளி இருக்குங்காலத்தில்; தூங்குதுளிமுகிற்குலங்கள் சுரந்து பெயலொழிகாலை=துளிக்கின்ற திவலைகளையுடைய மேகக்கூட்டங்கள் மழைசுரந்து பெய்தல் நீங்கியகாலத்து; வீங்கொலிநீர்வைப்பெல்லாம் வெயில்பெறு விருப்புவர=பரம்பிய ஒலியையுடைய கடல்சூழ்ந்த உலகிலுள்ளோர் யாவரும் வெயிலைத் தாம் அடையாமையினால் அதனிடத்து விருப்பமுண்டாக; பாங்கர்வரையுங் குளிரும் பனிப்பருவ மெய்தியது=பக்கங்களிலுள்ள மலைகளும் குளிரையடையும்படி பனிக்காலம்வந்தது—எ-று.

அளிக்குலங்கள் சுளித்தகல வரவிந்த முகம்புலரப்
பளிக்குமணி மரகதவல் லியிற்கோத்த பான்மையெனத்
துளித்தலைமெல் லறுகுபனி தொடுத்தசையச் சூழ்பனியாற்
குளிர்க்குடைந்து வெண்படாம் போர்த்தனைய குன்றுகளும்.

(இ-ள்.) அளிக்குலங்கள் சுளித்தகல=வண்டின் கூட்டங்கள்வெறுத்து நீங்க; அரவிந்த முகம்புலர=தாமரைகள் முகங்கருகாநிற்க; பளிக்குமணிமரகத வல்லியிற் கோத்தபான்மையென=பளிங்காலாய மணிகளைமரகதக் கொடியில் கோத்ததன்மைபோல; மெல்லறுகுதலைதுளி தொடுத்தசைய=அறுகம்புற்கள் நுனிகளிற் பனித்துளிகளைக்கோத்து அசையாநிற்க; சூழ்பனியாற்குளிர்க்குடைந்து வெண்படாம்போர்த்தனைய குன்றுகளும்=சூழ்ந்தபனியாலாகிய குளிருக்குத் தோற்றுவெள்ளிய படத்தைப்போர்த்தாற்போலும் தோற்றமுடையனவாயிருந்தன மலைகளும்—எ-று. (கூஉகூ)

மெய்யொளிகூர் குளிர்வாடை முழுதுலவும் பொழுதேயாய்க்
கொய்தளிர்மென் சோலைகளுங்குலைந்தசையக் குளிர்க்கொதுங்கி
வெய்யவனுங் கரமிர்க்க மாட்டான்போல் விசும்பினிடை
யைதுவெயில் விரிப்பதுவு மடங்குவது மாகுமால்.

Koviloor Digital Library

(இ-ள்.) மொய்யொளிகூர் குளிர்வாடைமுழுதுலவும்பொழுதேயாய்= நெருங்கிய ஒளிமிக்க பனிக்குளிரோடு கூடியவாடைக்காற்று என்றும் வீசுகின்ற காலமேயாகி; கொய்தளிர் மென்சோலைகளுங் குலைந்தசைய=கொய்யத்தக்க தளிர்களையுடைய மிருதுவாகிய சோலைகளும் நடுக்குற்றசைய! குளிர்க்கோதுங்கி=அக்குளிர்க்குத்தோற்று; வெய்யவனுங் கரநிமிர்க்க மாட்டான்போல் விசும்பினிடை=சூரியனுந்தனது கிரணமாகிய கரங்களைநீட்டமாட்டாதவன்போல ஆகாயத்தின்கண்; ஐது வெயில்விரிப்பதுவு மடங்குவதுமாகும்=சிறிது கிரணங்களை பரப்புவதும் அடக்கிக்கொள்ளுவதுமாய் இருக்கும்—எ-று. (ஙகூ௰)

நீடியவப் பதிகளெலா நிரைமாடத் திறைகடொறும்
பேடையுடன் பவளக்காற் புறவொடுங்கப் பித்திகையிற்
றோடலர்மென் குழன்மடவார் துணைக்கலச வெம்முலையுள்
ஆடவர்தம் பணைத்தோளு மணிமார்பு மடங்குவன.

(இ-ள்.) நீடிய வப்பதிகளெலா நிரைமாடத் திறைகடொறும்=பரந்த வந்நகரங்களினிடங்களிலெல்லாம் வரிசையாயுள்ள மாளிகைகளின் புருத்தங்கும் கபோதபாலிகைகள் தோறும்; பேடையுடன் பவளக்காற்புற வொடுங்க=பேடையுடன் பவளம்போலுங் கால்களையுடைய ஆண்புறவு ஒடுங்காநிற்க; பித்திகையின் றோடலர் மென்குழன் மடவார் துணைக்கலச வெம்முலையுள்=சிறுசண்பகப் பூவின் இதழ்களலர்ந்த மிருதுவாகிய குழன்மடவார் பெண்களது இரண்டுகலசம்போன்ற வெப்பத்தைத் தரும்தனங்களுள்; ஆடவர்தம் பணைத்தோளு மணிமார்பு மடங்குவன=புருடர்களது பருத்ததோளும் மார்பும் அடங்காநிற்பனவாம்—எ-று.


இறைதங்குமிடம் ஈண்டு இயைபால் புறவிருக்கும் கபோதபாலிகைக்காயிற்று. வேனிற்காலத்திற்றண்மையும் முன்பனிக்காலத்தில் வெம்மையும் உண்மையின் வெம்முலையென்றார். (ஙகூக)


அரிசனமுங் குங்குமமு மனைத்தமைப்பா ரயலெல்லாம்
பரியவகிற் குறைபிளந்து புகைப்பார்கள் பாங்கெல்லாம்
எரியுமிழ்பேழ் வாய்த் *தோணி யிரும்பிர்ப்பா ரிடையெல்லாம்
விரிமலர்மென் புறவணிந்த மீப்புலத்து வைப்பெல்லாம்.

(இ-ள்.) அரிசனமுங் குங்குமமுமனைத் தமைப்பா ரயலெல்லாம்=மஞ்சளையுங் குங்குமத்தையும் ஒருங்குசேரவரைத்துப் பக்கங்களிலெல்லாம் (பூசுவித்தம்) வைப்பர்; பரியவகிற் குறைபிளந்துபுகைப்பார்கள் பாங்கெல்லாம்=

* தோணியிரும்பு ஆவது-இரும்பினால் தோணிவடிவமாகச்செய்து தீநிறைக்கப்பட்டுக் குளிரின்பொருட்டுச் சமீபத்தில் இழுத்துக்கொள்வது.

Koviloor Digital Library





Koviloor Digital Library

திருஞானசம்பந்தசுவாமி [illegible] தானையும் அவ்வூரில்வசிப்பவனையும்
வேசரம் நீங்கும்படிச் [illegible]

Kovlloor Digital Library

பெரிய அகிற்கட்டையைப்பிளந்து புகையிடுவார்கள் பக்கங்களிலெல்லாம்; எரியுமிழ்பெழ்வாய்த் தோணியிரும்பீர்ப் பாரிடையெல்லாம்=நெருப்பைவீசுகின்ற அகண்டவாயையுடைய இரும்பாற்செய்த தோணியைக் குளிரின்பொருட்டு இடங்கடோறும் சமீபத்திலிழுத்துக் கொள்வார்கள்; விரிமலர்மென்புறவணிந்த மீப்புலத்து வைப்பெல்லாம்=விரிந்தமிருதுவான பூக்களையுடைய குறிஞ்சி நிலத்தைச்சார்ந்த உயர்வாகிய விடங்களிலெல்லாம்—எ-று. (ருருஉ)

அந்நாளிற் கொடிமாடச் செங்குன்றூ ரமர்ந்திருந்த
மெய்ஞ்ஞானப்பிள்ளையா ருடன்மேவும் பரிசனங்கள்
பன்னாளு மந்நாட்டிற் பயின்றதனாற் பனித்த * குளிர்
முன்னான பிணிவந்து மூள்வதுபோன் முடுகுதலும்.

(இ-ள்.) அந்நாளிற் கொடிமாடச் செங்குன்றூரமர்ந்திருந்த=அப்பனிப் பருவத்தில் கொடிமாடச் செங்குன்றூரில்விரும்பி எழுந்தருளிஇருந்த; மெய்ஞ்ஞானப்பிள்ளையாருடன் மேவும்பரிசனங்கள்=உண்மைஞான முணர்ந்த ஆளுடையபிள்ளையாரோடு வசிக்கின்ற திருக்கூட்டங்கள்; பன்னாளுமந்நாட்டிற்பயின்றதனால்=பலநாளும் அத்திருப்பதியில் வசித்ததனால்; பனித்தகுளிர் முன்னான பிணிவந்து மூள்வதுபோல் முடுகுதலும்=நடுக்கத்துக்காரணமான குளிரை முன்னிட்டுவரும் சுரநோய்தொடருவதுபோல தொடர்ந்துவரவும்—எ-று.

நிலத்தியல் பாற்றோன்றிய நளிர்சுரம் அவ்வடியாரை வாதிப்பதுபோல் வரினும் வாதியாவென்பது தோன்றவந்து மூள்வதுபோல் என்றார்- (ருருரு)

அந்நிலைமை யாளுடைய பிள்ளையார்க் கவர்களெலா
முன்னறிவித் திறைஞ்சுதலு முதல்வனா ரருடொழுதே
யிந்நிலத்தி னியல்பெனினு நமக்கெய்தப் பெறாவென்று
சென்னிமதி யணிந்தாரைத் திருப்பதிகம் பாடுவார்.

(இ-ள்.) அந்நிலைமையாளுடைய பிள்ளையார்க்கவர்களெலா முன்னறிவித்திறைஞ்சுதலும்=அந்தநிலைமையை ஆளுடைய பிள்ளையாருக்கு அத்திருக்கூட்டத்தடியார்களெல்லாம் முன்னேதெரிவித்து வணங்கவும்; முதல்வனாரருடொழுது=சிவபெருமானாரது திருவருளைவணங்கி; இந்நிலத்தியல்பெனினு நமக்கெய்தப்பெறாவென்று=இந்நோய் இந்நாட்டிற் கியற்கையாயினும்நம்மை அடைதற்குரியன அல்லவென்று; சென்னிமதியணிந்தாரைத் திருப்பதிகம்பாடுவார்=சிரசில் சந்திரனையணிந்த சிவபெருமானைத் திருப்பதிகம்பாடும் ஆளுடையபிள்ளையார்—எ-று. (ருருச)

* குளிர் முன்னான பிணியாவது குளிர்முன்னேகண்டு பின்பு சுரங்காணும் நோய் அதாவது நளிர்சுரம்.

Koviloor Digital Library

அவ்வினைக்கிவ்வினை யென்றெடுத்தைய ரமுதுசெய்த
வெவ்விடமுன்றடுத் தெம்மிடர்நீக்கிய வெற்றியினா
லெவ்விடத்துமடி யாரிடர்காப்பது கண்டமென்றே
செய்வ்வினைதீண்டா திருநீலகண்ட மெனச்செப்பினார்.

(இ-ள்.) அவ்வினைக்கிவ்வினை யென்றெடுத்தை யரமுதுசெய்த வெவ்விடமுன்றடுத்தெம்மிடர் நீக்கியவெற்றியினால்=அவ்வினைக்கிவ்வினையென்று முதலிய அடியெடுத்துச் சிவபிரான் உலகுய்யும்பொருட்டு பானம்பண்ணின கொடிய ஆலாலத்தை முன்னேதடுத்து எமது துன்பத்தைநீக்கிய வெற்றிப்பாட்டால்; எவ்விடத்து மடியாரிடர் காப்பதுகண்டமென்றே=இத்திருநீலகண்டம் திருத்தொண்டின் நிலைமையுடைய அடியாரிடரடையுமிடங்களில் அவரது இடரைக்காத்தருள்செய்யுந்தன்மையதென்று தீவினைக்குத் தீர்வுகுறித்து; செய்வினைதீண்டா திருநீலகண்டமெனச் செப்பினார்=செய்வினை வந்தெமைத்தீண்டப் பெறாதிருநீலகண்டமெனச்செய்யுள்இறுதியில்பாடியருளினார்—எ-று.

பிணிமுதலியவற்றிற்கு மருந்துமுதலியன தீர்வாதல்போல செய்வினைக்குத்தீர்வு திருநீலகண்டம் என்பது போந்தவாறறிக. (௩௬௫)

திருநீலகண்டத்திருப்பதிகம் - பண்-வியாளக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

அவ்வினைக் கிவ்வினை யாமொன்று சொல்லு மஃதறிவீ
ருய்வினை நாடா திருப்பது முந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம்பி ரான்கழல் போற்றுது நாமடியேஞ்
செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறாதிரு நீலகண்டம்.

காவினையிட்டுங்குளம் பலதொட்டுங் கனிமனத்தா
லேவினையா லெயின்மூன் றெரித்தீரென் றிருபொழுதும்
பூவினைக்கொய்து மலரடிபோற்றுது நாமடியோந்
தீவினைவந்தெமைத் தீண்டப்பெறாதிரு நீலகண்டம்.

முலைத்தடமூழ்கிய போகங்களுமற் றெவையுமெல்லாம்
விலைத்தலையா வணங்கொண் டெமையாண்ட விரிசடையீ
ரிலைத்தலைச் சூலமுந் தண்டுமழுவு மிவையுடையீர்
சிலைத்தெமைத் தீவினைதீண் டப்பெறாதிரு நீலகண்டம்.

விண்ணுலகாள் கின்றவிச் சாதரர்களும் வேதியரும்
புண்ணியரென் றிருபோதுந் தொழப்படும் புண்ணியரே
கண்ணிமையாதன மூன் றுடையீருங் கழலடைந்தோந்
திண்ணிய தீவினை தீண்டப்பெறாதிரு நீலகண்டம்.

Koviloor Digital Library

மற்றிணையில்லா மலைதிரண்டன்ன திண்டோளுடையீர்
கிற்றெமையாட் கொண்டகேளா தொழிவதுந் தன்மைகொலோ
சொற்றுணைவாழ்க் கைதுறந்துன் றிருவடியே யடைந்தோஞ்
செற்றமைத்தீவினை தீண்டப்பெறுதிரு நீலகண்டம்.

மறுக்குமனத்தினை மாற்றியெம்மாவியை வற்புறுத்திப்
பிறப்பில்பெருமான் றிருந்தடிக்கீழ்ப் பிழையாதவண்ணம்
பறித்தமலர்கொடுவந் துமையேத்தும் பணியடியோஞ்
சிறப்பிலித்தீவினை தீண்டப்பெறுதிரு நீலகண்டம்.

கருவைக்கழித் திட்டவாழ்க்கை கடிந்துங்கழலடிக்கே
யுருகிமலர்கொடு வந்துமையேத்துது நாமடியோஞ்
செருவிலரக்கனைச் சீரிலடர்த்தருள் செய்தவரோ
திருவிலித்தீவினை தீண்டப்பெறுதிரு நீலகண்டம்.

நாற்றமலர்மிசை நான்முகனாரணன் வாதுசெய்து
தோற்றமுடைய வடியுமுடியுந் தொடர்வரியீர்
தோற்றினுந் தோற்றுந் தொழுதுவணங்குது நாமடியோஞ்
சீற்றமதாம் வினைதீண்டப் பெறுதிரு நீலகண்டம்.

சாக்கியப்பட்டுஞ் சமணுருவாகி யுடையொழிந்தும்
பாக்கியமின்றி யிருதலைப்போகமும் பற்றும்விட்டார்
பூக்கமழ்கொன்றைப் புரிசடையீரடி போற்றுகின்றோந்
தீக்குழித்தீவினை தீண்டபெறுதிரு நீலகண்டம்.

பிறந்தபிறவியிற் பேணியெஞ் செல்வன் கழலடைவா
னிறந்தபிறவியுண் டாகி யிமையவர் கோனடிக்கட்
டிறம்பயின் ஞானசம் பந்தன செந்தமிழ் பத்தும்வல்லார்
நிறைந்த வுலகினில் வானவர் கோனொடுங் கூடுவரே.

திருச்சிற்றம்பலம்.

இஃது, கொங்குதேயத்திருப்பதிகளுள் ஒன்றாகிய கொடிமாடச்செங்குன்றூர் என்னும் திருச்செங்கோட்டில் ஆளுடையபிள்ளையார் எழுந்தருளியிருந்தகாலத்தில் ஓதியருளியது. இப்பதிகத்தை நாடோறும் கிரமமாக ஓதிக்கொண்டுவந்தால் குளிர்சுரமுதலிய தீயநோய்கள் நிவர்த்தியாய்விடும்.

ஆயகுறிப்பினி லாணைநிகழ வருளிச்செய்து
தூயபதிகத் திருக்கடைகாப்புத் தொடுத்தணிய
மேயவப்பொற்பதி வாழ்பவர்க்கேயன்றி மேவுமந்நா
டையபனிப்பிணி யந்நாட்டகங்கவுந் தீர்ந்ததன்றே.

Koviloor Digital Library

(இ-ள்.) ஆயகுறிப்பினி லாணைநிகழவருளிச்செய்து=அவ்வாறு இடர் காக்கும் குறிப்பினுல் திருநீலகண்டம் எனத்திருவாணை நிகழத்திருப்பதிகம் அருளிச்செய்து ; தூயபதிகத் திருக்கடைகாப்புத்தொடுத்தணிய=பரிசுத்தமாகிய அப்பதிகத்தின் இறுதியில் திருக்கடைகாப்பையும் தொடுத்துச்சாத்தியருள ; மேயவப்பொற்பதி வாழ்பவர்க்கேயன்றிமேவுமந்நாள்=பொருந்தியஅந்த அழகிய திருப்பதியில் வாழுமவர்களுக்கே யல்லாமல் அந்நாளில்வரும் ; தீயபனிப்பிணி யந்நாடடங்கவுந் தீர்ந்தது=கொடியநளிர்சுரம் அநநாடுமுழுதும் நீங்கியது—எ-று.

வாழ்பவரென்றது அடியாரையும் மற்றையரையுங்குறித்து நின்றது அந்நாடடங்கவு மென்றதனுல் இனிஎதிர்காலத்தும் வாராமல் அந்நாடுமுழுதும் நீங்கியதென்றும். (ளுளுசு)

அப்பதியின்க ணமர்ந்துசிலநா ளிலங்ககன்று
துப்புறழ்வேணியர் தானம்பலவுந் தொழுதருளி
முப்புரிநூலுடன் றோலணிமார்பர் முனிவரோடுஞ்
செப்பருஞ்சீர்த்திருப் பாண்டிக்கொடுமுடி சென்றணைந்தார்.

(இ-ள்.) அப்பதியின்கணமர்ந்து சிலநாளி லங்ககன்று=அத்திருப்பதியின்கண் ணெழுந்தருளியிருந்து சிலநாள்சென்றபின் அங்குநின்று எழுந்தருளி; துப்புறழ்வேணியர் தானம்பலவுந்தொழுதருளி=பவழம்போலுஞ்சிவந்த சடாமுடியையுடைய சிவபிரானது பலதிருப்பதிகளையும் வணங்கியருளி ; முப்புரிநூலுடன் றோலணிமார்பர்=முப்புரிநூலோடு கருமான்றோலையும் சேர்த்தணிந்த மார்பையுடைய பிள்ளையார் ; முனிவரோடுஞ்செப்பருஞ் சீர்த்திருப்பாண்டிக்கொடு முடிசென்றணைந்தார்=மறையவர் குழாங்களோடுஞ்சொல்லுதற்கரிய சிறப்பினையுடையதிருப்பாண்டிக்கொடிமுடியென்னுந்தலத்தினைச் சென்றடைந்தார்—எ-று. (ளுளுஎ)

* பருவமறுப்பொன்னிப் பாண்டிக்கொடுமுடி யார்தம்பாத
மருவிவணங்கி வளத்தமிழ்மாலை மகிழ்ந்துசாத்தி
விரிசுடர்மாளிகை வெஞ்சமாக்கூடல் விடையவர்தம்
பொருவிருளம்பல போற்றிக்குணதிசைப் போதுகின்றார்.

(இ-ள்.) பருவமறுப்பொன்னிப் பாண்டிக்கொடிமுடியார் தம்பாதம்=பெருகும்பருவத்துப்பெருகுதல் தவிராதகாவிரியின்றென்கரையிலுள்ள திருப்பாண்டிக்கொடிமுடியென்னுந் திருப்பதியிலெழுந்தருளியகொடிமுடிநாதரது திருவடிகளை ; மருவிவணங்கி வளத்தமிழ்மாலை மகிழ்ந்து சாத்தி=அடைந்து வணங்கி வளம்பொருந்திய திருப்பதிகமாலையைமகிழ்கூர்ந்து சாத்தியருளி ;

* பருவமறுபபொன்னி - காலந்தப்பாமல் வெள்ளம் வந்துக்கொண்டிருக்கிற காவிரியெனப்பொருள்கொள்க.

Koviloor Digital Library

விரிசுடர்மாளிகை வெஞ்சமாக் கூடல் விடையவர்தம்=பரந்த கிரணங்களை யுடைய மாளிகைகள்பொருந்திய வெஞ்சமாக்கூடல் முதலாக இடபத்தை வாகனமாக உடையசிவபிரானது; பொருவிறுனம் பலபோற்றிக்குணதிசை போதுகின்றார்=ஒப்பில்லாத பலதிருப்பதிகளையும் துதித்துக் கீழ்த்திசைநோக்கிச் செல்கின்றாராயினார்—எ-று. (௬௬அ)

திருப்பாண்டிக்கொடுமுடி-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பெண்ணமர் மேனியினா ரும்பிறைபுல்கு செஞ்சடையாருங்
கண்ணமர்நெற் றியினாருங் காதமருங் குழையாரும்
* எண்ணமருங் குணத்தாரு மிமையவரேத்த நின்றாரும்
பண்ணமர்பா டலினாரும் பாண்டிக்கொடு முடியாரே.

கலமல்குதண் கடல்சூழ்ந்த காழியுண்ஞான சம்பந்தன்
பலமல்குவெண் டலையேந்திப் பாண்டிக்கொடு முடிதன்னைச்
சொலமல்குபா டல்கள்பத்துஞ் சொல்லவல்லார் துயர்தீர்ந்து
நலமல்குசிந் தையராகி நன்னெறியெய் துவர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-கொடுமுடிநாதர். தேவியார்-பண்மொழியம்மை.

செல்வக்கருவூர்த் திருவானிலைக்கோயில் சென்றிறைஞ்சி
நல்லிசைவண்டமிழ்ச் சொற்றொடைபாடியங் நாடகன்று
மல்கிய † மாணிக்க வெற்புமுதலா வணங்கிவந்து
பல்குதிரைப்பொன்னித் தென்கரைத்தானம் பலபணிவார்.

(இ-ள்.) செல்வக்கருவூர்த் திருவானிலைக்கோயில் சென்றிறைஞ்சி= செல்வமிக்க திருக்கருவூரென்னுந் திருப்பதியில் திருவானிலையென்னுங் கோயிலை அடைந்துவணங்கி; நல்லிசைவண்டமிழ்ச் சொற்றொடைபாடியங் நாடகன்று; நல்ல இசையோடுகூடிய வளம்பொருந்திய தமிழ்ப்பதிகமாலையைப் பாடியருளி அக்கொங்குநாட்டை நீங்கி; மல்கியமாணிக்கவெற்புமுதலாவணங்கிவந்து=ஒளிநிறைந்த இரத்திநகிரிமுதலிய திருப்பதிகளை வணங்கி எழுந்தருளிவந்து; பல்குதிரைப் பொன்னித் தென்கரைத்தானம் பலபணிவார்= ஓங்கிய அலைகளையுடைய காவிரியின்தென்கரையிலுள்ள பலதிருப்பதிகளையும் வணங்குவாராய்—எ-று. (௬௬௯)

* எண்ணமருங்குணத்தார் - எட்டுக்குணமுடையவர்.

† மாணிக்கவெற்பு என்பது - இரத்திநகிரி.

Koviloor Digital Library

திருக்கருவூர்த்திருவானிலை-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

தொண்டரெலாமலர் தூவியேத்தநஞ்
சுண்டலாலுயி ராயதன்மையர்
கண்டனார்கரு வூரு ளானிலை
யண்டனாரரு ளீயு மன்பரோ.

கந்தமார்பொழிற் காழி ஞானசம்
பந்தன் சேர்கரு வூரு ளானிலை
யெந்தை யைச்சொன்ன பத்தும் வல்லவர்
சிந்தையுற்றுய ராவ திர்வரோ.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-பசுபதீசுவரர். தேவியார்-கிருபாநாயகியம்மை.

பன்னெடுங்குன்றும் படர்நெடுங்கானும் பலபதியும்
மன்னிலைத்தானங்க ளாயினவெல்லா மமர்ந்திறைஞ்சி
மன்னுபுகலியில் வைதிகவாய்மை மறையவனார்
பொன்னியல்வேணிப் புனிதர்பராய்த்துறை யுட்புகுந்தார்.

(இ-ள்.) பன்னெடுங்குன்றும்படர் நெடுங்கானும் பலபதியும்=பலநெடியமலைகளும்படர்ந்த உயர்ந்தகாடுகளும் பலவூர்களும் ஆகிய; அந்நிலைத்தானங்களாயின வெல்லாமமர்ந்திறைஞ்சி=அவற்றை (நீங்குங்கால்) அவ்விடத்துள்ள திருப்பதிகளெல்லாவற்றையும் விரும்பிவணங்கி; மன்னும் புகலியில் வைதிகவாய்மை மறையவனார்=நிலைபெற்ற சீகாழியின்கண்ணவதரித்த வைதிகநெறியை விளக்கும் ஆளுடையபிள்ளையார்; பொன்னியல்வேணிப் புனிதர்பராய்த் துறையுட்புகுந்தார்=பொன்போலும் சடாமுடியையுடைய பராய்த்துறைநாதரெழுந்தருளிய திருப்பராய்த்துறையை அடைந்தருளினார்—எ-று.

ஆளுடைய பிள்ளையார் பணிவாராய்ப் புக்காரெனமுடிக்க. (௩௪௰)

நீடும்பராய்த்துறை நெற்றித்தனிக்கண்ணர் கோயினண்ணிக்
கூடுங்கருத்தொடு கும்பிட்டுக்கோதி றமிழ்ச்சொன்மாலை
பாடுங்கவுணியர் கண்பனிமாரி பரந்திழியச்
சூடுங்காதலத் தஞ்சலிகோலித் தொழுதுநின்றார்.

(இ-ள்.) நீடும்பராய்த்துறை நெற்றித்தனிக்கண்ணர் கோயினண்ணி=செல்வமிக்கதிருப்பராய்த்துறையிலெழுந்தருளிய ஒப்பற்ற நெற்றிக்கண்ணை

Koviloor Digital Library

யுடைய சிவபிரானதுதிருக்கோயிலையடைந்து; கூடுங்கருத்தொடுகும்பிட்டு=அன்போடுகூடிய திருவுள்ளத்தோடு வணங்கி; கோதிறமிழ்ச் சொன்மாலை பாடும் கவுணியர்=குற்றமற்ற திருப்பதிகம்பாடும் ஆளுடைய பிள்ளையார்; கண்பனிமாரி பரந்திழிய=தமது திருக்கண்களினின்றும்துளிக்கின்ற ஆனந்த பாஷ்பமாகிய மழை மார்பிற்பரவிப்பெருக; சூடுங்கரதலத் தஞ்சலிகோலித் தொழுது நின்றார்=சிரசிற்சூடிய திருக்கரங்களைக் குவித்து வணங்கி நின்றருளினார்—எ-று. (௩௪௧)

திருப்பராய்த்துறை - பண்- மேகராகக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

நீறு சேர்வதோர் மேனியர் நேரிழை
கூறு சேர்வதோர் கோலமாய்ப்
பாறு சேர்தலைக் கையர் பராய்த்துறை
யாறு சேர்சடை யண்ணலே.

செல்வ மல்கிய செல்வர் பராய்த்துறை
செல்வ மேற் சிதையாதன
செல்வன் ஞானசம் பந்தன செந்தமிழ்
செல்வ மாமிவை செப்பவே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - திருப்பராய்த்துறைநாதர்.

தேவியார் - பொன்மயிலம்பிகையம்மை.

தொழுதுபுறம்பணைந் தங்குநின்றேகிச் சுரர்பணிவுற்
றெழுதிருவாலந் துறைதிருச்செந்துறை யேமுதலா
வழுவில்பல்கோயில்கள் சென்றுவணங்கி மகிழ்ந்தணைவார்
செழுமலர்ச்சோலைத் திருக்கற்குடிமலை சேரவந்தார்.

(இ-ள்.) தொழுதுபுறம்பணைந்தங்குநின்றேகி=வணங்கிப் புறம்பேசென்று அத்திருப்பதியினின்றுஞ் சென்றருளி; சுரர்பணிவுற்றெழு திருவாலந் துறை=தேவர்கள்வணங்கி யெழாநின்ற திருவாலந்துறை; திருச்செந்துறை யேமுதலா=திருச்செந்துறைமுதலாக; வழுவில் பல்கோயில்கள் சென்று வணங்கி மகிழ்ந்தணைவார்=குற்றமற்ற பலதிருப்பதிகளையும் அடைந்துவணங்கி மகிழ்ந்துவரும் பிள்ளையார்; செழுமலர்ச்சோலைத் திருக்கற்குடிமலை சேரவந்தார்=செழுமை பொருந்திய பூக்களையுடைய சோலைசூழ்ந்த திருக்கற்குடிமலையென்றும் திருப்பதியைப்பொருந்த எழுந்தருளினார்—எ-று. (௩௪௨)

Koviloor Digital Library

வேறு.

கற்குடிமாமலை மேலெழுந்த கனகக்கொழுந்தினைக் கால்வளையப், பொற்றிரண்மேருச் சிலைவளைத்த போர்விடையாளியைப் போற்றி சைத்து, நற்றமிழ்மாலை புனைந்தருளி ஞானசம்பந்தர் புலங்களைந்து ஞ், செற்றவர்மூக்கிச் சரம்பணிந்து திருச்சிராப்பள்ளிச் சிலம்பணை ந்தார்.

(இ-ள்.) கற்குடிமாமலை மேலெழுந்த கனகக்கொழுந்தினை=திருக்கற்குடி என்னும் பெரியமலையின்மேல் எழுந்தருளிய பொற்கொழுந்து போல்வானை; பொற்றிரண்மேருச் சிலைகால்வளையவளைத்த=பொன்மயமாகிய திரண்ட மாமேருவாகிய வில்லை அதன்காற்குறைவளையும்படி வளைத்தருளிய; போர்விடையாளியைப் போற்றிசைத்து=போர்செய்யும் இடபத்தை வாகனமாக வுடைய உச்சிவரதநாயகரைத் துதித்து; ஞானசம்பந்தர் நற்றமிழ்மாலைபுனைந்தருளி=ஆளுடையபிள்ளையார் நல்லதிருப்பதிகமாலையைச் சாத்தியருளி; புலங்களைந்துஞ்செற்றவர்மூக்கிச்சரம்பணிந்து=ஐம்புலன்களையும் இயல்பாகவே நீக்கியபஞ்சவர்ணநாதர் எழுந்தருளிய திருமூக்கிச்சரமென்னுந் திருப்பதியை வணங்கி; திருச்சிராப்பள்ளிச் சிலம்பணைந்தார்=திருச்சிராப்பள்ளிமலையை யடைந்தருளினார்—எ-று. (௩௱௯)

திருக்கற்குடி - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

வடந்திகழ்மென் முலையாளைப் பாகமதா கமதித்துத்
தடந்திரைசேர் புனன்மாதைத் தாழ்சடைவைத்த சதுர
ரிடந்திகழ்முப் புரிநூலர் துன்பமொடின் பமதெல்லாங்
கடந்தவர்கா தலில்வாழுங் கற்குடிமா மலையாரே.

காமருவார் பொழில்சூழுங் கற்குடிமா மலையானை
நாமருவன் புகழ்க்காழி நலந்திகழ்ஞான சம்பந்தன்
பாமருசெந் தமிழ்மாலை பத்திவைபாட வல்லார்கள்
பூமலிவானவரோடு பொன்னுலகிற் பொலிவாரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-உச்சிவரதநாயகர். தேவியார்-அஞ்சனாக்ஷியம்மை.

Koviloor Digital Library

திருமூக்கீச்சரம் - பண் - செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

சாந்தம்வெண் ணீறெனப் பூசிவெள் ளஞ்சடை வைத்தவர்
காந்தளாரும் விரலேழை யோடாடிய காரண
மாய்ந்துகொண்டாங் கறியந் நிறைந்தா ரவரார்கொலோ
வேந்தன் * மூக்கீச் சரத்தடிகள் செய்கின்றதோர்மெய்ம்மையே.

மல்லையார்மும் முடிமன்னர் மூக்கீச் சரத்தடிகளைச்
செல்வராகி நினையும்படி சேர்த்திய செந்தமிழ்
நல்லராய் வாழ்பவர்காழியுண் ஞானசம் பந்தன்சொல்
வல்லராவா ரவர்வா னுலகாள வும்வல்லரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமி-பஞ்சவனநாதர். தேவியார்-காந்திமதியம்மை.

செம்மணிவாரி யருவிதூங்குஞ் சிராப்பள்ளிமேய செழுஞ்சுடரைக், கைம்மலையீருரி போர்வைசாத்துங் கண்ணுதலானைக் கழல்பணிந்து, மெய்ம்மகிழ்வெய்தி யுளங்குளிர விளங்கியசொற்றமிழ் மாலைவேய்ந்து, மைம்மலர்கண்டர் தமானைக்காவை வணங்கும் விருப்பொடு வந்தணைந்தார்.

(இ-ள்.) செம்மணிவாரியருவிதூங்கும்= மாணிக்கங்களைவாரிக்கொண்டு அருவி இழுமெனுமோசையோடுஇழியும்; சிராப்பள்ளிமேயசெழுஞ்சுடரை= திருச்சிராப்பள்ளியிலெழுந்தருளிய செழுமைபொருந்திய ஒளிப்பிழம்பாயுள்ளவனை; கைம்மலை யீருரிப்போர்வைசாத்துங் கண்ணுதலானைக் கழல்பணிந்து=யானையினின்றும் உரித்ததோலாகியபோர்வையைப்போர்த்த நெற்றிக் கண்ணையுடைய தாயுமானேசுரரைத் திருவடியில்வணங்கி; மெய்ம்மகிழ்வெய்தி யுளங்குளிர=திருமேனியில்மகிழ்ச்சியானுய புளகாங்கிதத்தையடைந்து=ஆனந்தத்தால் திருவுள்ளங் குளிர்ச்சியையடைய; விளங்கிய சொற்றமிழ்மாலைவேய்ந்து=பொருட்சுவை விளங்கிய சொல்லாலாகிய திருப்பதிகமாலையைச்சூடி; மைம்மலர்கண்டர்தம் ஆனைக்காவைவணங்கும்விருப்பொடு வந்தணைந்தார்=கருமைமிக்க திருக்கண்டத்தையுடைய சம்புவனநாதர் எழுந்தருளிய திருவானைக்காவென்னுந் திருப்பதியைப் பணியும் விருப்பத்தோடு வந்தடைந்தார்—எ-று. (௩௪௪)

* மூக்கீச்சரம் என்பது - உறையூர்.

Koviloor Digital Library

திருச்சிராப்பள்ளி - பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

கைம்மகவேந்திக் கடுவனொடூடிக் கழைபாய்வான்
செம்முகமந்தி கருவரையேறுஞ் சிராப்பள்ளி
வெம்முகவேழத் தீருரிபோர்த்த விகிர்தாநீ
பைம்முகநாக மதியுடன்வைத்தல் பழியன்றே.

தேனயம்பாடுஞ் சிராப்பள்ளியானைத் திரைசூழ்ந்த
கானசங்கேறுங் கழுமலவூரிற் கவுணியன்
ஞானசம்பந்த னலமிகுபாட லிவைவல்லார்
வானசம்பந்தத் தவரொடுமன்னி வாழ்வாரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-தாயுமானேசுரர். தேவியார்-மட்டுவார்குழலியம்மை.

விண்ணவர்போற்றிசெ யானைக்காவில் வெண்ணாவன்மேவியமெ ய்ப்பொருளை, நண்ணியிறைஞ்சிமுன் வீழ்ந்தெழுந்து நாற்கோட்டு நாகம் பணிந்ததுவு, மண்ணல்கோச்செங்க ணரசன்செய்த வடிமை யுமஞ்சொற் றொடையில்வைத்துப், பண்ணுறுசெந்தமிழ் மாலைபாடி ப்பரவிநின்றேத்தினர் பான்மையினால்.

(இ-ள்.) விண்ணவர்போற்றிசெய் ஆனைக்காவில்=தேவர்கள்துதிக்குந் திருவானைக்காவில்; வெண்ணாவல்மேவிய மெய்ப்பொருளை=வெண்ணாவலின் கண் எழுந்தருளியமெய்ப்பொருளாகிய இறைவனை; நண்ணியிறைஞ்சி முன் வீழ்ந்தெழுந்து=கிட்டி வணங்கித் திருமுன்னேசாஷ்டாங்கமாய்ப் பூமியிற் பணிந்தெழுந்து; நாற்கோட்டு நாகம் பணிந்ததுவும்=நான்கு கொம்புகளை யுடைய ஒரியானை வழிபட்டமையையும்; அண்ணல்கோச்செங்கணரசன்செ ய்த அடிமையும் அஞ்சொற்றொடையில்வைத்து=பெருமையிற்சிறந்த கோச் செங்கட்சோழன் வழிபாடுசெய்யும் அடிமைத்திறத்தையும் அழகியதிருப்பதி கத்திலமைத்து; பண்ணுறுசெந்தமிழ்மாலைபாடிப் பரவிநின்றேத்தினர் பான் மையினால்=இசையோடுகூடிய செந்தமிழ்ச்சொல்லாலாகிய திருப்பதிகமாலை யைப்பாடியருளி அன்பால்வணங்கி நின்றுதுதித்தருளினார்—எ-று. (௩௪௫)

திருஆனைக்கா-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

செங்கட்பெயர் கொண்டவன் செம்பியர்கோன்
அங்கட்கருணை பெரிதாயவனே
வெங்கண்விடை யாவெம்வெண் ணாவலுளா
யங்கத்தவா வாயின னாயினழுயே.

Koviloor Digital Library

வெண்ணாவ லமர்ந்துறை வேதியனைக்
கண்ணார்கமழ் காழியர் தந்தலைவன்
பண்ணோடிசை பாடிய பத்தும்வல்லார்
விண்ணோரவரேத்த விரும்புவரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-சம்புகேசுவரர். தேவியார்-அகிலாண்டேஸ்வரியம்மை.

நாரணனான்முகன் காணாவும்மை வெண்ணாவலுண்மைமயேந்திரமுஞ்
சீரணிநீடு திருக்கயிலை செல்வத்திருவாரூர் மேயபண்பு
மாரணத்துட்பொரு ளாயினரை யானைக்காவின்கட் புகழ்ந்துபாடி
யேரணியும்பொழில்சூழ்ந்தசண்பையேந்தலாரொல்லையிலின்பமுற்றார்

(இ-ள்.) நாரணனான்முகன் காணாவுண்மை வெண்ணாவலுண்மை=திருமாலும் பிரமனும் அறியொணாத வுண்மையோடு திருவெண்ணாவலின்கண் எழுந்தருளிய தன்மையையும்; மயேந்திரமுஞ்சீரணி நீடுதிருக்கைலை செல்வத்திருவாரூர் மேயபண்பும்=திருமயேந்திரத்தும் சிறப்புமிக்க திருக்கைலையின்கண்ணும் செல்வம்நிறைந்த திருவாரூரின்கண்ணும் எழுந்தருளியதன்மையும்; ஆரணத்துட்பொருளாயினரை யானைக்காவின்கட் புகழ்ந்துபாடி=வேத்தினுட பொருளாய இறைவரைத் திருவானைக்காவினிடத்து, "மண்ணதுவுண்டரிம்மலரோன்காணா, வெண்ணாவல்விரும்புமகேந்திரரும், கண்ணதுவோங்கியகயிலையாரும், அணலாரூராதியானைக்காவே" எனத் தனித்தனித்துப்பாடியருளி; ஏரணியும் பொழில்சூழ்ந்த சண்பையேந்தலா ரொல்லையி லின்பமுற்றார்=அழகுவிளங்குஞ் சோலைசூழ்ந்த சீகாழியிலவதரித்த ஆளுடையபிள்ளையார் அளவில்லாத பேரின்பமடைந்தார்—எ-று. (ஙசஙு)

திருமயேந்திரமும், ஸ்ரீகயிலாயமும், திருவானைக்காவும், திருவாரூரும்.

கூடசதுக்கம்.

திருச்சிற்றம்பலம்.

மண்ணதுவுண்டரிம் மலரோன்காணா
வெண்ணாவல்விரும்பு மயேந்திரருங்
கண்ணதுவோங்கிய கயிலையாரு
மண்ணலாரூராதி யானைக்காவே.

ஏனமாலயனவர் காண்பரியார்
கானமார்கயிலைநன் மயேந்திரரு
மானவாரூராதி யானைக்காவை
ஞானசம்பந்தன் றமிழ்சொல்லுமே.

திருச்சிற்றம்பலம்.

Koviloor Digital Library

கைதொழுதேத்திப் புறத்தணைந்து காமர்பதியதன் கட்சிலநாள், வைகிவணங்கி மகிழ்ந்தணைவார் மன்னுந்தவத்துறை வானவர்தா, ளெய்தியிறைஞ்சி யெழுந்துநின்றே யின்றமிழ்மாலைகொண் டேத்திப் போந்து, வைதிகமாமணி யம்மருங்கு மற்றுள்ளதானம் வழுத்திச் செல்வார்.

(இ-ள்.) கைதொழுதேத்திப் புறத்தணைந்து=கைகூப்பிவணங்கிப் புறத்திலெழுந்தருளி; காமர்பதியதன்கட் சிலநாள் வைகிவணங்கி மகிழ்ந்தணைவார்=அழகிய அத்திருப்பதியின்கண் சிலநாள் எழுந்தருளி இருந்துவணங்கி மகிழ்ந்தசெல்லும் பிள்ளையார்; மன்னுந் தவத்துறைவானவர் தாளெய்தியிறைஞ்சி யெழுந்து நின்றே யின்றமிழ்மாலை கொண்டேத்திப்போந்து=நிலைபெற்ற திருத்தவத்துறையிலெழுந்தருளிய தவத்துறைநாதரது திருவடிகளை அடைந்துவணங்கி எழுந்துநின்று இனியதிருப்பதிகமாலையைச்சாத்தித் துதித்து அங்குநின்று எழுந்தருளி; வைதிகமாமணியை மருங்குமற்றுள்ளதானம் வழுத்திச்செல்வார்=வைதிகசூடாமணியாகியசிவபிரானைப்பக்கங்களிலுள்ள மற்றத் திருப்பதிகளிலுந் துதித்துச்செல்வாராயினர். (ஙசஎ)

ஏறுயர்த்தார்திருப் பாற்றுறையு வெறும்பியூர்மாமலை யேமுதலா, வேறுபதிகள் பலவும்போற்றி விரவுந்திருத் தொண்டர் வந்துசூழ, வீறில்புகழ்ச்சண்பை யாளியார்தா மெண்டிசையோருந் தொழுதிறைஞ்ச, நீறணிசெம்பவ ளப்பொருப்பி னெடுங்களமாநகர் சென்றுசேர்ந்தார்.

(இ-ள்.) ஏறுயர்த்தார் திருப்பாற்றுறையு மெறும்பியூர்மாமலையே முதலா=இடபக்கொடியை உயர்த்ததிருமூலநாதரெழுந்தருளிய திருப்பாற்றுறையும் திரு எறும்பீசரெழுந்தருளிய பெரியதிரு எறும்பிமலையும் முதலாக; வேறுபதிகள்பலவும்போற்றி விரவுந்திருத்தொண்டர் வந்துசூழ=வேறுதிருப்பதிகள் பலவற்றையும் வணங்கித்துதித்துத் தம்மோடு உடன்வந்த திருத்தொண்டர்கள் தம்பால்சூழ்ந்துவர; ஈறில்புகழ்ச்சண்பை யாளியார்தாம்=அழிவில்லாதகீர்த்தியையுடைய சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார்; எண்டிசையோருந் தொழுதிறைஞ்ச=எட்டுத் திக்கிலுள்ளோரும் தொழுது வணங்க; நீறணிசெம்பவளப் பொருப்பி னெடுங்களமாநகர் சென்றுசேர்ந்தார்=விபூதியணிந்த சிவந்தபவளமலைபோன்ற நித்தியசுந்தரேசர் எழுந்தருளிய திருநெடுங்களமென்னுந் திருப்பதியைச் சென்றடைந்தருளினர்—எ-று.

திருப்பாற்றுறை-பண்-பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்

காரார்கொன்றை கலந்தமுடியினர்
சீரார்சிந்தை செலச்செய்தார்
பாரார்நாளும் பரவிபபாற்றுறை
யாராாதி முதல்வரே.

Koviloor Digital Library

பத்தர்மன்னிய பாற்றுறைமேவிய
பத்துநூறு பெயரனைப்
பந்தன்ஞானசம் பந்தனதின்றமிழ்
பத்தும்பாடிப் பரவுமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-திருமூலநாதேசர். தேவியார்-மோகாம்பிகையம்மை.

நெடுங்களத்தாதியை யன்பானின்பா னேசஞ்செலாவகை நேர்விலக்கு, மிடும்பைகடீர்த்தருள் செய்வாயென்னு மின்னிசைமாலை கொண்டேத்தியேகி, யடும்பணிச்செஞ்சடை யார்பதிக ளனைத்தும்பணிந்து நியமம்போற்றிக், கடுங்கைவரையுரித் தார்மகிழ்ந்த காட்டுப்பள்ளிப்பதி கைதொழுவார்.

(இ-ள்.) நெடுங்களத்தாதியை=அத்திருநெடுங்களத்தில் எழுந்தருளிய நித்தியசுந்தரேசனை; அன்பால் நின்பால்நேசஞ்செலாவகை நேர்விலக்கும்= அன்பினால் நின்னிடத்து எமதுநேயம் செல்லாவண்ணம் எம்மை முன்னின்று தவிர்க்கும்; இடும்பைகள் தீர்த்தருள்செய்வாயென்னும் பிறவித்துன்பத்துக்குக் காரணமான மலமாயா கன்மங்களைநீக்கியருள்செய்வாயென்னும் பொருளினையுடைய; இன்னிசை மாலைகொண்டேத்தியேகி—இனிய இசையையுடையதிருப்பதிகமாலையால் துதித்தருளி; அடும்பணிச் செஞ்சடையார் பதிகள் அனைத்தும்பணிந்து நியமம்போற்றி=கொல்லுந் தொழிலையுடைய சற்பத்தையணிந்த சிவந்த சடைமுடியையுடைய சிவபிரான் எழுந்தருளிய திருப்பதிகள் எல்லாவற்றையும் நியமத்தொடு துதித்து; கடுங்கைவரையுரித்தார் மகிழ்ந்த காட்டுப்பள்ளிப்பதிகை தொழுவார்=கடிய கோபத்தையுடைய யானையை யுரித்துப்போர்த்த சிவபிரானார் மகிழ்ந்தருளிய மேலைத்திருக்காட்டுப்பள்ளியென்னுந் திருப்பதியை வணங்குவாராயினார்—எ-று. (௩௭௧)

திருநெடுங்களம்-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

மறையுடையாய் தோலுடையாய் வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே யென்றுன்னைப் பேசினல்லாற்
குறையுடையார் குற்றமோராய் கொள்கையி னாலுயர்ந்த
நிறையுடையா ரிடர்களையாய் நெடுங்கள மேயவனே.

நீடவல்ல வார்சடையான் மேய நெடுங்களத்தைச்
சேடர்வாழு மாமறுகிற் சிரபுரக் கோனலத்தா
னாடவல்ல பனுவன்மாலை ஞானசம் பந்தன்சொன்ன
பாடல்பத்தும் பாடவல்லார் பாவம் பறையுமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-நித்தியசுந்தரேசர். தேவியார்-ஒப்பிலாநாயகியம்மை.

Koviloor Digital Library

சென்றுதிகழ்திருக் காட்டுப்பள்ளிச் செஞ்சடைநம்பர்தங் கோயிலெய்தி, முன்றில்வலங்கொண் டிறைஞ்சிவீழ்ந்து மொய்கழற்சேவடிகைதொழுவார், கன்றணையாவின் கருத்துவாய்ப்பக் கண்ணுதலானைமுன் போற்றிசெய்து, மன்றுணின்ருடன் மனத்துள்வைப்பார் வாருமன்னுமுலை பாடிவாழ்ந்தார்.

இ-ள். சென்றுதிகழ் திருக்காட்டுப்பள்ளிச் செஞ்சடைநம்பர் தங்கோயிலெய்தி= விளங்கிய திருக்காட்டுப்பள்ளியை யடைந்து சிவந்த சடையையுடைய தியாடியப்பர் எழுந்தருளிய ஆலயத்தில் சென்றருளி ; முன்றில்வலங்கொண்டு இறைஞ்சி வீழ்ந்து மொய்கழற்சேவடி கைதொழுவார்=பிரதட்சணஞ்செய்து திருமுற்றத்தின்கண்தொழுது வணங்கி கனைக்காலோடுசேர்ந்த வீரகண்டையணிந்த சிவந்ததிருவடியை வணங்கும்பிள்ளையார் ; கன்றணையாவின்கருத்துவாய்ப்பக்கண்ணுதலானை முன்போற்றிசெய்து=கன்றையடைந்த பசுவைப்போலத்திருவுள்ளங்கரையநெற்றிக்கண்ணையுடைய தியாடியப்பரைத்துதித்து ; மன்றுள்நின்ருடல் மனத்துள்வைப்பார்=கனகசபையின்கண் ஆடியருளும் திருக்கூத்தைத் தமதுதிருவுள்ளத்துள் வைத்தருளும் பிள்ளையார் ; வாருமன்னுமுலைபாடிவாழ்ந்தார்=வாருமன்னுமுலையென்னுந் திருப்பதிகத்தைப்பாடி யதனால்பேரானந்த வாழ்வடைந்தார்—எ-று. (௩௯௰)

மேலைத்திருக்காட்டுப்பள்ளி-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

வாருமன் னும்முலை மங்கையோர் பங்கின
னூருமன் னும்பலி யுண்பதும் வெண்டலை
காருமன் னும்பொழில் சூழ்ந்த காட்டுப்பள்ளி
நீருமன் னுஞ்சடை நிமலர்தந் நீர்மையே.

பொருபுனல் புடையணி புறவநன் னகர்மன்ன
னருமறை யவைவல்ல வணிகொள்சம் பந்தன்சொற்
கருமணி மிடற்றினன் கருதுகாட் டுப்பள்ளி
பரவிய தமிழ்சொலப் பறையுமெய்ப் பாவமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-தியாடியப்பர். தேவியார் - வார்கொண்டமுலையம்மை.

அங்கப்பதிநின் றெழுந்தருளி யணிதிருவாலம் பொழில்வணங்கிப், பொங்குபுனற்பொன்னிப் பூந்துருத்திப் பொய்யிலியானைப் பணிந்துபோற்றி, யெங்குநிகழ்திருத் தொண்டர்குழா மெதிர்கொள்ள வெப்பதியுந்தொழுது, செங்கயல்பாய்வய லோடைசூழ்ந்த திருக்கண்டியூர்தொழச் சென்றணைந்தார்.

Koviloor Digital Library

(இ-ள்.) அங்கப்பதிநின் றெழுந்தருளி=அவ்விடத்து அத்திருப்பதியினின்றும் எழுந்தருளி; அணிதிருவாலம்பொழில்வணங்கி=அழகிய திருவாலம்பொழிலென்னுந் திருப்பதியைப் பணிந்து; பொங்குபுகழ்ப் பொன்னிப் பூந்துருத்திப் பொய்யிலியாரைப் பணிந்துபோற்றி=பொங்குகின்ற புனலையுடைய காவிரியின்கரையிலுள்ள திருத்துருத்தியிலெழுந்தருளிய புட்பவனநாதரைவணங்கித்துதித்து = எங்குமிகழ்திருத்தொண்டர்குழாமெதிர்கொள்ள=எவ்விடத்துமுள்ள அடியார்கூட்ட மெதிர்கொண்டுவணங்க=எப்பதியுந் தொழுது=இடையிலுள்ள திருப்பதிகள் பலவற்றையும் வணங்கி; செங்கயல்பாய்வயலோடை சூழ்ந்ததிருக்கண்டியூர் தொழச்சென்றணைந்தார்=சிவந்தகயல்மீன்கள்பாயும் வயலும் ஓடைகளுஞ்சூழ்ந்த திருக்கண்டியூரென்னுந் திருப்பதியை வணங்கும்படி சென்றணைந்தருளினார்—எ-று. (௬௫௧)

கண்டியூர்வீரட்டர் கோயிலெய்திக் கலந்தடியாருடன் காதல் பொங்கக், கொண்டவிருப்புடன் றாழ்ந்திறைஞ்சிக் குலவுமகிழ்ச்சியின் கொள்கையினாற், றொண்டர்குழாத்தினை நோக்கிநின்று தொடுத்த விசைத்தமிழ் மாலைதன்னி, லண்டர்பிரான்ற னருளின்வண்ண மடியார்பெருமையிற் கேட்டருளி.

(இ-ள்.) கண்டியூர்வீரட்டர் கோயிலெய்தி=திருக்கண்டியூரில் எழுந்தருளிய வீரட்டேசரது திருக்கோயிலையடைந்து; அடியாருடன் காதல்பொங்கக்கலந்து=அடியார் திருக்கூட்டத்தோடு அன்புமேலிட அளவளாவி; கொண்டவிருப்புடன் தாழ்ந்திறைஞ்சி=திருவுள்ளத்து நிறைந்த விருப்பத்தோடு பணிந்தெழுந்து; குலவுமகிழ்ச்சியின் கொள்கையினால்=விளங்கிய மகிழ்ச்சிமேலீட்டால்; தொண்டர்குழாத்தினை நோக்கிநின்று=அடியார்கூட்டத்தைப்பார்த்துநின்று; தொடுத்த இசைத்தமிழ்மாலைதன்னில்=சொல்லாற்றொடுத்த இசையோடுகூடிய திருப்பதிகமாலையில்; அண்டர்பிரான்றன் அருளின் வண்ணம்= தேவர்பிரானாகிய வீரட்டேசரது திருவருளின் தன்மையை; அடியார் பெருமையிற் கேட்டருளி=அவரடியார் உணரும் பெருமையினால் (வினவினேனறியாமையில் உரைசெய்மின்நீர்அருள்வேண்டுவீர்) என அவரை வினவியருளி—எ-று.

இது பிரமன் சிரங்கொய்ததலம் அட்டவீரட்டத்தில் ஒன்று. (௬௫௨)

வினவியெடுத்த திருப்பதிக மேவுதிருக்கடைக் காப்புத்தன்னி, லனையநினைவரி யோன்செயலை யடியாரைக்கேட்டு மகிழ்ந்ததன்மை, புனைவுறுபாடலிற்போற்றிசெய்துபோந்துபுகலிக் கவுணியனார், துனைபுனற்பொன்னித் திரைவலங்கொள் சோற்றுத்துறைதொழச் சென்றடைவார்.

(இ-ள்.) வினவியெடுத்ததிருப்பதிகமேவுந் திருக்கடைக் காப்புத்தன்னில்=வினவியெடுத்தருளியதிருப்பதிகத்தில் பொருந்தியதிருக்கடைக்காப்பில்;

Koviloor Digital Library

அனைய நினைவரியபொன்செயலை அடியாரைக்கேட்டு மகிழ்ந்ததன்மை=அப்பெருங்கருணையையுடையநினைத்தற்கரிய சிவபிரானது திருவருளின் பெருமையை அடியார் திருக்கூட்டத்தைவினவித் தாம்மகிழ்ந்ததன்மையை ; புனைவுறு பாடலிற்போற்றிசெய்து=தாமருளிய திருப்பதிகத்தினும் திருக்கடைக்காப்பினும் தனித்தருளி ; போர்துபுகலிக்கவுணியனார் = அத்திருப்பதியினின்றும் மீண்டருளி சீகாழியிலவதரித்த ஆளுடையபிள்ளையார் ; துனைபுனற்பொன்னித்திரை வலங்கொள் சோற்றுத்துறை தொழச்சென்றடைவார்=விரைந்து செல்லும் நீர்மயமாகிய காவிரியின் அலைகள் வலமாகச்சூழ்ந்து வருகின்ற திருச்சோற்றுத்துறையை வணங்கும்படி சென்றடைவாராயினார்—எ-று. ()

திருக்கண்டியூர்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

வினவினேனறி யாமையிலுரை செய்ம்மினீரருள் வேண்டுவீர்
கனைவிலார்புனற் காவிரிக்கரை மேயகண்டியூர் வீரட்டன்
தனமுனேதனக் கின்மையோர்தம ராயினாண்ட மாளத்தா
னனவில்வாழ்க்கைகொண்டாடிப்பாடியிவ்வையமாப்பலி தேர்ந்ததே.

கருத்தனைப்பொழில் சூழுங்கண்டியூர் வீரட்டத்துறை கள்வனை
யருத்தனைத்திற மடியர்பான்மிகக் கேட்டுகந்த வினாவுரை
திருத்தமாந்திகழ் காழிஞானசம் பந்தன்செப்பிய செந்தமி
ழொருத்தராயினும் பலர்களாயினு மோதுவாருயர்ந் தார்களே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-வீரட்டேசர். தேவியார்-மங்களநாயகியம்மை.

வேறு.

அப்பர் சோற்றுத் துறைசென் றடைவோமென்
றொப்பில் வண்டமிழ் மாலை யொருமையாற்
செப்பி யேசென்று சேர்ந்தனர் சேர்விலார்
முப்புரஞ் செற்ற முன்னவர் கோயின்முன்.

(இ-ள்.) சேர்விலார் முப்புரம் செற்ற முன்னவர்கோயின்முன்=பகைவர்களாகிய அசுரர்களது முப்புரத்தை எரித்தருளிய முதல்வராகிய தொலையாச்செல்வர் எழுந்தருளிய திருக்கோயிலின்முன் ; அப்பர்சோற்றுத்துறை சென்றடைவோமென்று=அப்பர் சோற்றுத்துறைசென்றடைவோமென்னும் இறுதியையுடைய ; ஒப்பில் வண்டமிழ்மாலை = நிகரில்லாத வண்மையையுடைய திருப்பதிகமாலையை ; ஒருமையாற் செப்பியே சென்று சேர்ந்தனர்= ஒருமைப்பாடான திருவுள்ளத்தோடு பாடி அடைந்தருளினார்—எ-று. (௬௰௪)

Koviloor Digital Library

திருச்சோற்றுத்துறை-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

செப்ப நெஞ்சே நெறிகள் சிற்றின்பந்
துப்ப னென்னா தருளே துணையாக
வொப்ப ரொப்பர் பெருமா னொளிவெண்ணீற்
றப்பர் சோற்றுத் துறைசென் றடைவோமே.

அந்தண் சோற்றுத் துறையெம் மாதியைச்
சிந்தை செய்ம்மி னடியீ ராயினீர்
சந்தம் பரவு ஞான சம்பந்தன்
வந்த வாறே புனைதல் வழிபாடே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - தொலையாச்செல்வர்.

தேவியார்-ஒப்பிலாம்பிகையம்மை.

தொல்லைநீடிருச் சோற்றுத் துறையுறை
செல்வர் கோயில் வலங்கொண்டு தேவர்க
ளல்ல றீர்க்கநஞ் சுண்டா ரடியிணை
யெல்லை யில்லன்பு கூர விறைஞ்சினார்.

(இ-ள்.) தொல்லைநீடிருச் சோற்றுத்துறையுறை=பழமை பொருந்திய அழிவில்லாத திருச்சோற்றுத்துறையி லெழுந்தருளிய ; செல்வர்கோயில்வலங்கொண்டு=தொலையாச்செல்வர் எழுந்தருளிய திருக்கோயிலைப் பிரதட்சணஞ்செய்து ; தேவர்கள் அல்லல்தீர்க்க நஞ்சுண்டாரடியிணை=தேவர்களது துன்பம் தீர்க்கும்பொருட்டு நஞ்சை அமுதுசெய்த அச்சிவபிரானது இரண்டு திருவடிகளையும் ; எல்லையிலன்புகூர இறைஞ்சினார்= அளவில்லாத அன்புஅதிகரிக்க வணங்கியருளினார்—எ-று.

செல்வம் என்றது எண்குணங்களை; அவைதன்வயத்தனாதல் முதலியன.

இறைஞ்சி யேத்தி யெழுந்துநின் றின்னிசை
நிறைந்த செந்தமிழ் பாடி நிலாவியங்
குறைந்து வந்தடி யாருட னெய்தினார்
சிறந்த சீர்த்திரு வேதி குடியினில.

(இ-ள்.) இறைஞ்சியேத்தி எழுந்துநின்று=வணங்கித்துதித்து எழுந்துநின்று ; இன்னிசைநிறைந்த செந்தமிழ்பாடி=இனிய இசைநிறைந்த திருப்பதிகம்பாடி ; நிலாவியங்குறைந்து உவந்தடியாருடன் எய்தினார்=அத்திருப்பதியில் வசித்தருளி பின்பு மகிழ்ச்சியடைந்து அடியார்திருக்கூட்டத்துடன் அடைந்தருளினார் ; சிறந்தசீர்த்திருவேதி குடியினில்=மேம்பட்டகீர்த்தியையுடைய திருமால்யாகஞ்செய்த திருவேதிகுடியென்னுந்திருப்பதியில்—எ-று.

Koviloor Digital Library

வேத வேதியர் வேதிகுடியினி
ணாதர் கோயி லணைந்து நலந்திகழ்
பாத பங்கயம் போற்றிப் பணிந்தெழுந்
தோதி னார்தமிழ் வேதத்தி னோங்கிசை.

(இ-ள்.) வேதவேதியர் வேதிகுடியினில்=வேதங்களையெல்லாங் குற்ற மறவோதியுணர்ந்த பிராமணர்கள்வாழும் திருவேதிகுடியின்கண்; நாதர் கோயிலணைந்து=வேதபுரீசரது திருக்கோயிலை அடைந்து=நலந்திகழ் பாதபங்கயம்போற்றிப்பணிந்தெழுந்து; நன்மைமிக்க அவரது திருவடித்தாமரையை வணங்கி எழுந்து; ஓதினார் தமிழ்வேதத்தினோங்கிசை=திருநெறித்தமிழ்வேதத்தின் ஓங்கிய இசையையும் ஓதியருளினார்—எ-று.

பதிகத்தொடிசைக்கொற்றுமை யுண்மைதோன்ற ஓங்கிசை ஓதினாரென்றார். (௩௫௭)

திருவேதிகுடி-திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்

நீறுவரி யாடரவோ டாமைமன வென்புநிரை பூண்ப ரிடவ
மேறுவரி யாவரு மிறைஞ்சுகழ லாதிய ரிருந்த விடமாந்
தாறுவிரி பூகமலி வாழைவிரி நாறவிளை வாளை மடுவில்
வேறுபிரி யாதுவிளை யாடவள மாரும்வயல் வேதி குடியே.

கந்தமலி தண்பொழினன் மாடமிடை காழிவளர் ஞான முணர்சம்
பந்தன்மலி செந்தமிழின் மாலைகொடு வேதிகுடி யாதி கழலே
சிந்தைசெய வல்லவர்க ணல்லவர்க ளென்னநிகழ் வெய்தியிமையோ
ரந்தவுல கெய்தியர சாளுமது வேசாத மாணை நமதே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-வேதபுரீசர். தேவியார்-மங்கையர்க்கரசியம்மை.

எழுது மாமறை யாம்பதிகத்திசை
முழுதும் பாடி முதல்வனைப் போற்றிமுன்
றொழுது போந்துவந் தெய்தினர் சோலைசூழ்
பழுதில் சீர்த்திரு வெண்ணிப் பதியினில்.

(இ-ள்.) எழுதமாமறையாம் பதிகத்திசைமுழுதும்பாடி=எழுதும் பெரிய வேதமாகிய திருப்பதிகத்தின்கண் இசைமுழுவதும் ஓதி; முதல்வனைப் போற்றி முன்றொழுதுபோந்து=முதல்வராகிய வேதபுரீசரை திருமுன்னே தொழுது போந்தருளி; சோலைசூழ் பழுதில் சீர்த்திருவெண்ணிப்பதியினில் உவந்தெய்தினர்=சோலைசூழ்ந்த குற்றமில்லாத சிறப்பினையுடைய திருவெண்ணியென்னும் திருப்பதியில் மகிழ்ந்தடைந்தருளினார்—எ-று. (௩௫௮)

Koviloor Digital Library

வெண்ணி மேய விடையவர் கோயிலை
நண்ணி நாடிய காதலி னுண்மதிக்
கண்ணி யார்தங் கழலிணை போற்றியே
பண்ணி னீடும் பதிகமுன் பாடினார்.

(இ-ள்.) வெண்ணிமேய விடையவர்கோயிலைநண்ணி=திருவெண்ணியி லெழுந்தருளிய இடபவாகனத்தையுடைய வெண்ணிநாயகர் திருக்கோயிலை யடைந்து; நாடியகாதலினுண்மதிக் கண்ணியார் தங்கழலிணைபோற்றியே= தேடியடையும் விருப்பினால் அன்றுதித்த சந்திரகலையாகிய கொண்டைமாலை யைத்தரித்த அச்சிவபிரானது திருவடிகளைத்துதித்து; பண்ணினீடும் பதிக முன்பாடினார்=இசைமிக்க திருப்பதிகத்தைத் திருமுன்நின்று பாடியருளி னார்—எ-று. (௬௭௧)

திருவெண்ணி-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

சடையானைச் சந்திரனொடு செங்கணரா
வுடையானை யுடைதலையிற் பலிகொண்டூரும்
விடையானை விண்ணவர்தாந் தொழும்வெண்ணியை
யுடையானை யல்லதுள்காதெனதுள்ளமே.

மருவாரு மல்குகாழித் திகழ்சம்பந்தன்
றிருவாருந் திகழ்திருவெண் ணியமர்ந்தானை
யுருவாரு மொண்டமிழ்மாலை யிவைவல்லார்
பொருவாகப் புக்கிருப்பார் புவலோகத்தே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-வெண்ணிநாயகர். தேவியார்-அழகியநாயகியம்மை.

பாடிநின்று பரவிப் பணிந்துபோ
யாடுமங்கணர் கோயிலங் குள்ளன
மாடுசென்று வணங்கி மகிழ்ந்தனர்
நீடுசண்பை நிறைபுகழ் வேதியர்.

(இ-ள்.) பாடிநின்றுபரவிப் பணிந்துபோய்=திருப்பதிகம்பாடி நின்று துதித்துவணங்கி அத்திருப்பதியினின்றுஞ் சென்றருளி; ஆங்குள்ளன ஆடு மங்கணர் கோயில்மாடுசென்றுவணங்கி மகிழ்ந்தனர்=அத்திருப்பதியின்பக்க த்திலுள்ள பொன்னம்பலத்தில் நடனம்புரியும் இறைவரது திருக்கோயிலின் கண் அடைந்துவணங்கிமகிழ்கூர்ந்தருளினார்; நீடுசண்பைநிறைபுகழ்வேதிய ர்=ஊழியினுமழியாதசீர்காழியில் அவதரித்தநிறைந்த புகழையுடையபிள்ளை யார்—எ-று. (௬௭௨)

Koviloor Digital Library

வேறு.

மொய்தருஞ் சோலைசூழ் முளரிமுள் ளடவிபோய்
மெய்தரும் பரிவிலான் வேள்வியைப் பாழ்படச்
செய்தசங் கரர்திருக் சக்கரப் பள்ளிமுன்
பெய்தவந் தருளினா ரியலிசைத் தலைவனார்.

(இ-ள்.) மொய்தருஞ்சோலைசூழ் முளரிமுள்ளடவிபோய்=நெருங்கிய சோலைசூழ்ந்த தாமரையாகிய முட்காடென்னும் மருதநிலத்தின்மேற் சென்றருளி; மெய்தரும்பரிவிலான் வேள்வியைப்பாழ்படச்செய்த சங்கரர்=உண்மைபொருந்திய அன்பில்லாத தக்கன்செய்தயாகத்தைப் பாழ்படச்செய்தருளிய பசுபதிநாயகரது; திருச்சக்கரப்பள்ளிமுன் பெய்தவந்தருளினார்=திருச்சக்கரப் பள்ளியென்னுந் திருப்பதிமுன் பொருந்தவந்தருளினார்; இயல் இசைத்தலைவனார்=இயற்றமிழினும் இசைத்தமிழினும் வல்லவராகிய பிள்ளையார்—எ-று.

இயற்றமிழ் இசைத்தமிழ் என்றது அதனிலக்கணத்தை. தாமரைமுட்செறிந்ததாதலால் முளரிமுள்ளடவியென்றார். (ஙசுக)

சக்கரப் பள்ளியார் தந்திருக் கோயிலுட்
புக்கருத் தியினுடன் புனைமலர்த் தாள்பணிந்
தக்கரைப் பரமர்பா லன்புறும் பரிவுகூர்
மிக்கசொற் றமிழினால் வேதமும் பாடினார்.

(இ-ள்.) சக்கரப்பள்ளியார்தந் திருக்கோயிலுட்புக்கு=திருச்சக்கரப் பள்ளியிலெழுந்தருளிய ஒப்பில்லாதபசுபதிநாயகர் திருக்கோயிலினுட்சென்று; அருத்தியினுடன் புனைமலர்த்தாள்பணிந்து=அடியார் சூட்டியமலர்கள் அலங்கரிக்கும் திருவடிகளைவணங்கி; அக்கரைப்பரமர்பாலன்புறும் பரிவுகூர்=அக்கின்கோவையணிந்த திருவரையையுடையபசுபதிநாயகரிடத்து அன்பாலாய பற்றுமிக்க; மிக்கசொற்றமிழினால் வேதமும்பாடினார்=சுவைமிக்க தமிழ்ச்சொல்லால் திருநெறித் தமிழ்வேதமாகிய திருப்பதிகத்தையும் பாடியருளினார்—எ-று. (ஙசுஉ)

திருச்சக்கரப்பள்ளி-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

படையினார் வெண்மழுப் பாய்புலித் தோலரை
யுடையினா ருமையொரு கூறனா ரூர்வதோர்
விடையினார் வெண்பொடிப் பூசியார் விரிபுனற்
சடையினா ருறைவிடஞ் சக்கரப் பள்ளியே.

Koviloor Digital Library

தண்வயல் புடையணி சக்கரப் பள்ளியெங்
கண்ணுத லவனடி கழுமல வளநகர்
நண்ணிய செந்தமிழ் ஞானசம் பந்தன்சொற்
பண்ணிய விசைசொலப் பறையுமெய்ப் பாவமே

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - பசுபதிநாயகேசர்.

தேவியார் - பால்வளைநாயகியம்மை.

தலைவர்தஞ் சக்கரப் பள்ளிதன் னிடையகன்
றலைபுனற் பணைகளி னருகுபோ யருமறைப்
புலனுறுஞ் சிந்தையார் புள்ளமங் கைப்பதிக்
குலவுமா லந்துறைக் கோயிலைக் குறுகினார்.

(இ-ள். தலைவர்தஞ்சக்கரப்பள்ளி தன்னிடையகன்று=முதல்வராகிய பசுபதிநாயகரது திருச்சக்கரப்பள்ளி என்னுந்திருப்பதியினிடத்து நின்று நீங்கி ; அலைபுனற்பணைகளினருகுபோய்=அலைகின்ற நீர்நிறைந்தவயலின் பக்கத்திற்சென்று ; அருமறைப்புலனுறுஞ் சிந்தையார்=அரியவேதங்களின் உள்ளீடாகிய பொருளுணர்ச்சியையுடைய மறையவர்கள்வாழும் ; புள்ளமங்கைப்பதிகுலவு மாலந்துறைக்கோயிலைக்குறுகினார்=திருப்புள்ளமங்கை என்னுந் திருப்பதியில்விளங்கும் திருவாலந்துறை என்னுந்திருக்கோயிலை அடைந்தருளினார்—எ-று. (நகூந)

மன்னுமக் கோயில்சேர் மான்மறிக் கையர்தம்
பொன்னடித் தலமுறப் புரிவொடுந் தொழுதெழுந்
தின்னிசைத் தமிழ்புனைந் திறைவர்சேஞ் ஞூருடன்
பன்னுபா லைத்துறைப் பதிபணிந் தேகினார்.

(இ-ள்.) மன்னுமக்கோயில் சேர்மான்மறிக்கையர்தம்=நிலைபெற்ற ஆலந்துறைத் திருக்கோயிலினுள் எழுந்தருளிய மான்கன்றையேந்திய திருக்கரத்தையுடைய ஆலந்தரித்தநாதரது ; பொன்னடித்தலமுறப் புரிவொடுந் தொழுதெழுந்து=பொன்போலும் அழகிய திருவடியிற்பொருந்த அன்போடுந்தொழுதெழுந்து ; இன்னிசைத் தமிழ்புனைந்து=இனிய இசையோடுகூடிய திருப்பதிகமாலையைச் சாத்தி அருளி ; இறைவர்சேஞ்ஞூருடன் பன்னுபாலைத்துறைப்பதி பணிந்தேகினார்=சிவபெருமானார் திருச்சேஞ்ஞலூருடன் பலரும் புகழும் திருப்பாலைத்துறையென்னுந் திருப்பதியைவணங்கி அத்திருப்பதியினின்றும் சென்றருளினார்—எ-று. (நகூச)

Koviloor Digital Library

திருப்புள்ளமங்கை திருவாலந்துறை-பண்-நட்டபாஷை.

திருச்சிற்றம்பலம்.

பாலுந்துறுதிர ளாயினபரமன் பிரமன்றான்
போலுந்திறலவர் வாழ்தருபொழில்சூழ் புளமங்கைக்
காலன்றிறலறச் சாடியகடவுள் ளிடங்கருதி
லாலந்துறைதொழு வார்தமை யடையா வினைதானே.

பொந்தின் னிடைத்தே னூறியபொழில்சூழ் புளமங்கை
யந்தண் புனல்வரு காவிரியாலந் துறையானைக்
கந்தம் மலிகமழ் காழியுட் கலைஞான சம்பந்தன்
சந்தம் மலிபா டல்சொலி யாடத் தவமாமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-ஆலந்தரித்தேசர்.

தேவியார்-அல்லியங்கோதையம்மை.

காவின்மேன் முகிலெழுங் கமழ்நறும் புறவுபோய்
வாவிநீ டலவன்வாழ் பெடையுடன் மலர்நறும்
பூவின்மேல் விழைவுறும் புகலியார் தலைவனார்
சேவின்மே லண்ணலார் திருநலூர் நண்ணினார்.

(இ-ள்.) வாவிநீடலவன்வாழ்பெடையுடன்=தடாகங்களில்மிக்க ஆண் ஞெண்டுகள் தம்முடன்வாழ்கின்றபெட்டை ஞெண்டுகளோடு; மலர்நறும்பூவின்மேல் விழைவுறும்புகலியார் தலைவனார்=மலர்ந்த நல்லவாசனை யுடைய தாமரைமலரின்மேல் விருப்புடன்வசிக்கும் சீகாழித்தலைவராகிய ஆளுடைய பிள்ளையார்; காவின்மேல்முகிலெழுங் கமழ்நறும் புறவுபோய்=சோலையின் மேல் மேகங்கள் தவழும் வாசனைகமழும் நல்லமுல்லை நிலத்தின்வழியேசென்று; சேவின்மேலண்ணலார் திருநல்லூர்நண்ணினார்=இடபத்தின்மேலெழுந்தருளிய பெரியபாண்டவேசரது திருநல்லூரென்னுந் திருப்பதியை அடைந்தருளினார்—எ-று. (௩௬௫)

மன்றலங் கழனிசூழ் திருநலூர் மறைவலோர்
துன்றுமங் கலவினைத் துழனியா லெதிர்கொளப்
பொன்றயங் கொளிமணிச் சிவிகையிற் பொலிவுறச்
சென்றணைந் தருளினார் சிரபுரச் செம்மலார்.

(இ-ள்.) மன்றலங்கழனிசூழ் திருநலூர்மறைவலோர்=வாசனைபொருந்திய அழகிய வயல்சூழ்ந்த திருநல்லூரென்னுந் திருப்பதியில்வாழும் மறைய

Koviloor Digital Library

வர்கள் ; துன்றுமங்கலவினைத் துழனியா லெதிர்கொள=நெருங்கிய மங்கலச்செய்கைக்குரிய ஆரவாரத்தோடு எதிர்கொண்டணைய ; பொன்றயங் கொளிமணிச் சிவிகையில்=பொன்னாற்செய்த விளங்குமொளியையுடையமுத்துச் சிவிகையின்மேல் ; பொலிவுறச் சென்றணைந்தருளினுர் சிரபுரச் செம்மலார்=விளங்க எழுந்தருளிச்சென்ருர் சீகாழியிலவதரித்த அருளுடைய பிள்ளையார்—எ-று. (௩௬௬)

நித்திலச் சிவிகைமே னின்றிழிந் தருளியே
மொய்த்தவந் தணர்குழா முன்செலப் பின்செலும்
பத்தரும் பரிசனங் களுமுடன் பரவவே
வத்தர்தங் கோபுரந் தொழுதணைந் தருளினுர்.

(இ-ள்.) நித்திலச்சிவிகைமே னின்றிழிந்தருளி = முத்துச்சிவிகையினின்று இறங்கியருளி ; மொய்த்தவந்தணர் குழாமுன்செல = அத்திருப்பதியின்கண்வாழும் நெருங்கியமறையவர்குழாங்கள் முன்னேசெல்ல ; பின்செலும் பத்தரும் பரிசனங்களு முடன்பரவ=தம்பின்னேசெல்லும் அடியார் கூட்டமும் பரிசனங்களுஞ்சூழ்ந்துவர ; அத்தர்தங்கோபுரந் தொழுதணைந்தருளினுர்=பெரியபாண்டவேசரது. திருக்கோபுரத்தைவணங்கி உள்ளே யடைந்தருளினுர்—எ-று. (௩௬௭)

வெள்ளிமால் வரைபைநேர் விரிசுடர்க் கோயிலைப்
பிள்ளையார் வலம்வரும் பொழுதினிற் பெருகுநீர்
வெள்ளவா னந்தமெய் பொழியமே லேறிநீர்
துள்ளுவார் சடையனைத் தொழுதுமுன் பரவுவார்.

(இ-ள்.) வெள்ளிமால்வரையைநேர்விரிசுடர்க்கோயிலை=பெருமைபொருந்திய வெள்ளிமலையையொத்த விரிந்தகிரணத்தையுடைய திருக்கோயிலை ; பிள்ளையார்வலம்வரும்போழ்தினில்=அருளுடையபிள்ளையார் பிரதட்சணம்வருங்கால் ; பெருகுநீர் வெள்ளவானந்தமெய்பொழிய=பெருகுகின்ற ஆனந்தக் கண்ணீர்மழைபோல திருமேனியில்பொழிய ; மேலேறிநீர்துள்ளுவார் சடையனைத்தொழுதுமுன் பரவுவார்=கங்கைநீர்மேலே யெவர்ந்துததும்பும் நீண்ட சடாமகுடத்தையுடைய பெரியபாண்டவேசனைவணங்கி திருமுன்னின்று துதிப்பாராயினுர்—எ-று. (௩௬௮)

பரவுசொற் பதிகமுன்பாடினுர் பரிவுதான்
வரவயர்ந் துருகுநேர் மனனுடன் புறமணைந்
தரவுடைச் சடையர்பே ரருள்பெறும் பெருமைபால்
விரவுமப் பதியமர்ந் தருளியே மேவினுர்.

Koviloor Digital Library

(இ-ள்.) பரவுசொற்பதிகமுன் பாடினார் = துதிக்கத்தக்க சொன்னயம் பொருந்திய திருப்பதிகத்தை முன்னின்று பாடியருளும் பிள்ளையார்; பரிவுதான்வர வயர்த்துருகுநேர் மனமுடன்புறமணைந்து = அன்பானதுதம் உள்ளத்துவருகையால் அதனாலயர்த்து உருகுகின்றமனதோடு அத்திருக்கோயிலின் புறத்து அடைந்தருளி; அரவுடைச்சடையர்பேரருள்பெறும் பெருமையால் = சர்ப்பத்தையணிந்த சடாமகுடத்தையுடைய சிவபிரானது பெரியதிருவருளைப்பெறுகின்ற பெருமையினால்; விரவுமப்பதியமர்ந்தருளியேமேவினார் = பலவளங்களும் நிறைந்த அத்திருப்பதியின்கண் விரும்பி எழுந்தருளினார்—எ-று.

திருநல்லூர் திருவிராகம் பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

வண்டிரிய விண்டமலர் மல்குசடை தாழவிடை யேறிப்
பண்டெரிகை கொண்டபர மன்பதிய தென்பரத னயலே
நண்டிரிய நாரையிரை தேரவரா மேலருவி முத்தந்
தெண்டிரைகண் மோதவிரி போதுகம ழுந்திருந லூரே.

திரைகளிரு கரையும்வரு பொன்னிநில வுந்திருந லூர்மேற்
பரசுதரு பாணியைந லந்திகழ்செய் தோணிபுர நாத
னுரைசெய்தமிழ் ஞானசம் பந்தனிசை மாலைமொழி வார்போய்
விரைசெய்மலர் தூவவிதி பேணுகதி பேறுபெறு வாரே.

திருச்சிற்றம்பலம்.

வேறு.

அன்ன தன்மையி லப்பதி யினிலமர்ந் தருளி
மின்னெ டுஞ்சடை விமலர்தாள் விருப்பொடு வணங்கிப்
பன்னு மின்னிசைப் பதிகமும் பலமுறை பாடி
நன்னெ டுங்குல நான்மறை யவர்தொழ நயந்தார்.

(இ-ள்.) அன்னதன்மையி லப்பதியினிலமர்ந்தருளி அவ்வாறு அத்திருப்பதியில் வசித்தருளி; மின்னெடுஞ்சடை விமலர்தாள் விருப்பொடுவணங்கி = மின்போலவிளங்கும் நெடியசடையையுடைய பெரியபாண்டவேசரது திருவடிகளை விருப்பால்வணங்கி; பன்னுமின்னிசைப்பதிகமும்பலமுறைபாடி = பலரும்புகழும் இனியஇசையோடு திருப்பதிகங்களையும்பலதரம்பாடியருளி; நன்னெடுங்குல நான்மறையவர்தொழ நயந்தார் = நல்ல உயர்ந்த நான்குவேதத்தையுணர்ந்த பிராமணர்கள் வணங்கவிரும்பி எழுந்தருளினார்—எ-று. ()

Koviloor Digital Library

திருநல்லூர்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

கொட்டும் பறைசீராற் குழுமவன லேந்தி
நட்டம் பயின்றாடு நல்லூர்ப் பெருமானை
முட்டின் றிருபோது முனியா தெழுந்தன்பு
பட்ட மனத்தார்க ளறியார் பாவமே.

தண்ணம் புனற்காழி ஞான சம்பந்த
னண்ணும் புனல்வேலி நல்லூர் பெருமானை
வண்ணம் புனைமாலை வைக லேத்துவார்
விண்ணு நிலனுமாய் விளங்கும் புகழோரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் பெரியபாண்டவேசர்.

தேவியார் திரிபுரசுந்தரியம்மை.

நீடுமப்பதி நீங்குவார் நிகழ்திரு நல்லூ
ராடுவார்திரு வருள்பெற வகன்றுபோந் தங்கண்
மாடுமுள்ளன வணங்கியே பரவிவந் தணைந்தார்
தேடுமாலயற் கரியவர் திருக்கரு காவூர்.

(இ-ள்.) நீடுமப்பதிநீங்குவார்=செல்வமுதலியவற்றானுயர்ந்த அத்திருப்பதியினின்றும் நீங்கும் ஆளுடையபிள்ளையார்; நிகழ்திருநல்லூ ராடுவார்திருவருள்பெற வகன்றுபோந்து=பெருமைபொருந்திய அத்திருநல்லூரின்கணெழுந்தருளிய நிருத்தஞ்செய்தருளும் பெரியபாண்டவேசரது திருவருளைப் பெற்றதனு லங்குநின்றும்நீங்கி; அங்கண்மாடுமுள்ளன வணங்கியே பரவிவந்தணைந்தார்=அத்திருப்பதியின் பக்கத்திலுள்ளனவாய தலங்களையும் வணங்கித்துதித்து வந்தடைந்தருளினார்; தேடுமாலயற்கரியவர் திருக்கருகாவூர்= தேடுகின்ற திருமாலுக்கும் பிரமனுக்கும் அரியமுல்லைவனேச ரெழுந்தருளிய திருக்கருகாவூரென்னுந் திருப்பதியை—எ-று.

நீங்குவார் திருக்கருகாவூரை வந்தணைந்தாரெனக்கூட்டுக. (௩௭௧)

வந்து பந்தர்மா தவிமணங் கமழ்கரு காவூர்ச்
சந்த மாமறை தந்தவர் கழலிணை தாழ்ந்தே
யந்த மில்லவர் வண்ணமா ரழல்வண்ண மென்று
சிந்தை யின்புறப் பாடினார் செழுந்தமிழ்ப் பதிகம்.

Koviloor Digital Library

(இ-ள்.) மாதவிப்பந்தர் மணங்கமழ்கருகாவூர்வந்து=குருக்கத்திப்பந்தல்கள் வாசனைகமழும் திருக்கருகாவூரில் எழுந்தருளிவந்து ; சந்தமாமறைதந்தவர் கழலிணைதாழ்ந்து=இசைபொருந்திய நான்குவேதங்களையும் அருளிச்செய்த முல்லைவனேசரது இரண்டுதிருவடிகளையும்வணங்கி ; அந்தமில்லவர்வண்ணமாரழல் வண்ணமென்று=இறுதியில்லாத அச்சிவபிரானரது திருவண்ணம் நிறைந்த அழல்வண்ணமென்றெடுத்து ; சிந்தையின்புறப்பாடினுர் செழுந்தமிழ்ப்பதிகம்=செழுமைபொருந்திய தமிழ்ப்பதிகத்தைத் திருவுள்ளத்திலானந்தமேலிடும்படி பாடியருளினர்—எ-று. (கூஎஉ)

திருக்கருக்காவூர்-பண்-கவுசிகம்.

திருச்சிற்றம்பலம்.

முத்தி லங்குமுறு வல்லுமை யஞ்சவே
மத்த யானைமறு கவ்வுரி வாங்கியக்
கத்தை போர்த்தகட வுள்கரு காவூரெம்
பத்தர் வண்ணமழ லும்மழல் வண்ணமே.

கலவ மஞ்ஞை யுலவுங் கருகாவூர்
நிலவு பாடலுடை யான்றன நிள்கழல்
குலவு ஞானசம் பந்தன செந்தமிழ்
சொலவ லாஅர் தொல்வினை தீருமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-முல்லைவனேசர். தேவியார்-கருப்பனையாளம்மை.

பதிக வின்னிசை பாடிப்போய்ப் பிறபதி பலவு
நதிய ணிந்தவர் கோயில்க ளண்ணியே வணங்கி
மதுர முத்தமிழ் வாசக ரணைந்தனர் மன்று
ளதிர்சி லம்படி யார்மகி ழவளிவ ணல்லூர்.

(இ-ள்.) பதிக இன்னிசைபாடிப்போய்ப் பிறபதிபலவும்=திருப்பதிகத்தை இனிய இசையோடுபாடியருளி அத்திருப்பதியினின்றுஞ்சென்று ; நதியணிந்தவர் கோயில்களண்ணியே வணங்கி=மற்றைய திருப்பதிகள் பலவற்றுள்ளும் கங்காநதியையணிந்த சிவபெருமான் எழுந்தருளிய திருக்கோயில்களை அடைந்து வணங்கி ; மதுரமுத்தமிழ்வாசகர்=இனியமுத்தமிழின் பாகுபாடமைந்த திருப்பதிகவாசகராகிய ஆளுடையபிள்ளையார் ; மன்றுளதிர்சிலம்படியார் மகிழ அவளிவணல்லூர் அணைந்தனர்=கனகசபையின்கண் (ஆடிய குருங்காரணத்தால்) ஒலிக்கும்வேதச்சிலம்பணிந்த சாட்சிநாயகர்விரும்பி எழுந்தருளும் அவளிவணல்லூரென்னுந் திருப்பதியையடைந்தருளினர்—எ-று.

Koviloor Digital Library

மன்னு மப்பதி வானவர் போற்றவு மகிழ்ந்த
தன்மை யார்பயில் கோயிலுட் டம்பரி சுடையா
ரென்னு நாமமு நிகழ்ந்திட வேத்திமுன் னிறைஞ்சிப்
பன்னு சீர்ப்பதி பலவுமப் பாற்சென்று பணிவார்.

(இ-ள்.) மன்னுமப்பதிவானவர் போற்றவுமகிழுந் தன்மையார்பயில் கோயிலுள்=நிலைபெற்ற அத்திருப்பதியின்கண் தேவர்கள்வணங்குதலாலும் மகிழுந்தன்மையையுடைய சாட்சிநாயகர் எழுந்தருளிய திருக்கோயிலுள்; தம்பரிசுடையாரென்னு நாமமுநிகழ்ந்திடவேத்தி முன் இறைஞ்சி=அவரைத் தம்பரிசுடையாரென்னுந் திருநாமமுந்தோன்றத்; "தம்பரிசினொடு சுடுநீறுதட வந்திடபமேறி"எனத்துதித்துத்திருமுன்னின்றுவணங்கி; பன்னுசீர்ப்பதிபல வுமப்பாற் சென்றுபணிவார்=யாவரும்புகழும் சிறப்பமைந்த திருப்பதிகள்ப லவற்றையும் அப்புறஞ்சென்றுவணங்கும் ஆளுடையபிள்ளையார்—எ-று.

போற்றவும் என்ற வெச்ச உம்மை மண்ணுலகத்தாரையும் தழுவுதலின் எதிரது தழீஇற்று; தம்பரிசுடைமையாவது முற்றறிவும்வரம்பிலாற்றலுமுண் மையிற் சிவபிரான் தாம்கருணையாற்செய்யுந் தொழில்களிற் றொடக்குண்ணு மை எனவேசலிப்புற்றடையும் விகாரமில்லி என்பதுபெறப்படும். நாமமுமெ ன்னு மெச்சமும்மையால் அதனோடு நீறுடி முதலிய அருட்குண நாமமுமுடை யனெனப்போந்தவாறு காண்க; இதனுலிறைவன் சிறப்பியல்பும் பொதுவுமா கிய அசாதாரண விலக்கணமுடையனென்றும். சிறப்பியல்சொருபவிலக்கண மென்றும் பொதுதடத்த விலக்கணமென்றும் கூறுவர். அற்றாக, ஈண்டுப்பொ துவையும்சிறப்பென்றதென்னை? அப்பொதுவும் ஏனையோர்க்குச்செல்லாச் சந் திரசூடன்நீலகண்டன் முதலியசிறப்பியல்பாய் சிவபிரானே உலககாரணனெ ன்பதைநிருபித்துவியாவிர்த்திப் பிரயோசனம்பெற நிற்றலில் சிறப்பாயும்இ றைவன்சிறப்பியல்பைநோக்கப் பொதுவாயும் நிற்கும்; அதனால் மாறுபடுதலி ன்று. இஃதுஈண்டுவிரிப்பிற்பெருகும். (௩எச)

திருஅவளிவணல்லூர்-திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

கொம்பிரிய வண்டுலவு கொன்றைபுரி நூலொடு குலாவித்
தம்பரிசி னொடுசுடு நீறுதட வந்திடவ மேறிக்
கம்பரிய செம்பொனெடு மாடமதிள் கல்வரைவி லாக
வம்பெரிய வெய்தபெரு மானுறைவ தவளிவண லூரே.

ஆனமொழி யாயதிற லோர்பரவு மவளிவண லூர்மேற்
போனமொழி நன்மொழிக ளாயபுகழ் தோணிபுர வூரன்
ஞானமொழி மாலைபல நாடுபுகழ் ஞானசம்பந்தன்
றேனமொழி மாலைபுகழ் வார்துயர்க ளையதிலர் தாமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - சாட்சிநாயகர். தேவியார் - சௌந்தரநாயகியம்மை.

Koviloor Digital Library

பழுதில் சீர்த்திருப் பருதிநன் னியமும் பணிந்தங்
கெழுது மாமறை யாம்பதி கத்திசை போற்றி
முழுது மானவர் கோயில்கள் வணங்கியே முறைமை
வழுவில் சீர்த்திருப் பூவனூர் வணங்கிவந் தணைந்து.

(இ-ள். பழுதில்சீர்த்திருப்பருதி நன்னியமும்பணிந்து=குற்றமற்றசிறப்புவாய்ந்த திருப்பருதிநியமமென்னுந் திருப்பதியைவணங்கி ; அங்கு எழுதுமாமறையாம் பதிகத்திசைபோற்றி=அத்திருப்பதியில் எழுதும் பெரியவேதமாகிய திருப்பதிகத்தை இசையோடுபாடியருளி ; முழுதுமானவர் கோயில்கள்வணங்கி = எப்பொருளுந்தானாய் அதுவதுவாய் வியாபித்து நிற்குஞ்சிவபிரானெழுந்தருளிய திருக்கோயில்கள் பலவற்றையும்வணங்கி ; முறைமை வழுவில் சீர்த்திருப்பூவனூர் வணங்கிவந்தணைந்து=தமக்குரிய அறநெறியில் வழுவில்லாத சிறப்பினையுடையார்வாழும் திருப்பூவனூரைத்தொழுது அங்கு வந்தடைந்தருளி—எ-று. (௩௭௫)

திருப்பருதிநியமம்-பண்-பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

விண்கொண்டதூ மதிசூடி நீடுவிரிபுன் சடைதாழப்
பெண்கொண்ட மார்பில்வெண்ணீறு பூசிப்பேணார் பலிதேர்ந்து
கண்கொண்ட சாயலொடேர் கவர்ந்தகள்வர்க் கிடம்போலும்
பண்கொண்டு வண்டினம்பாடி யாடும்பருதிந் நியமமே.

பையரவம் விரிகாந்தள் விம்முபருதிந் நியமத்துத்
தையலோர் பாகமமர்ந் தவனைத்தமிழ்ஞான சம்பந்தன்
பொய்யிலி மாலைபுனைந்த பத்தும்பரவிப் புகழ்ந்தேத்த
வையுற வில்லைப்பிறப் பறுத்தலவலம் மடையாவே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-பருதியப்பர். தேவியார்-மங்களநாயகியம்மை.

பொங்கு காதலிற் போற்றியங் கருளுடன்போந்து
பங்க யத்தடம் பணைப்பதி பலவுமுன் பணிந்தே
யெங்கு மன்பர்க ளேத்தொலி யெடுக்கவந் தணைந்தார்
அங்கணர்க்கிட மாகிய பழம்பதி யாலூர்.

(இ-ள்.) பொங்குகாதலிற்போற்றியங்கருளுடன்போந்து = மிக்கவிருப்புடன்துதித்து அத்திருப்பதியினின்றும் திருவருளோடுசென்றருளி ; பங்கயத்தடம்பணைப் பதிபலவுமுன்பணிந்து=தாமரைமலர்கள்பொருந்திய பொய்கைகளையும் வயல்களையுமுடைய பலதிருப்பதிகளையும் முன்னே வணங்கி ;

Koviloor Digital Library

எங்குமன்பர்க ளேத்தொலியெடுக்க=எவ்விடத்து மடியார்கள் வாழ்த்தொலி எடுக்க; அங்கணர்க்கிடமாகியபழம்பதியாலூர்வந்தணைந்தார்=பசுபதீசரெழுந்தருளிய பழையதிருப்பதியாகிய திருவாலூரை வந்தடைந்தருளினார்—எ-று.

பணிவார் வந்தணைந்தா ரெனக்கூட்டுக. (௬௱௭௬)

பணியு மப்பதிப் பசுபதீச் சரத்தினி திருந்த
மணியை யுள்புக்கு வழிபடும் விருப்பினால் வணங்கித்
தணிவில் காதலிற் றண்டமிழ் மாலைகள் சாத்தி
யணிவி ளங்கிய திருநலூர் மீண்டும்வந் தணைந்தார்.

(இ-ள்.) பணியுமப்பதிப் பசுபதீச்சரத் தினிதிருந்த=யாவரும் வணங்கும் அவ்வாலூர்ப்பசுபதீச்சரத்து இனிதாகவீற்றிருந்த; மணியையுள்புக்குவழிபடும் விருப்பினால் வணங்கி=தேவசிகாமணியாகிய பசுபதிநாதனைத் திருக்கோயிலினுட்சென்று வழிபடுதற்குரிய விருப்போடுவணங்கி; தணிவில்காதலிற்றண் டமிழ்மாலைகள்சாத்தி=அடங்காதவிருப்போடு குளிர்ந்த திருப்பதிகமாலைகளைச்சாத்தி; அணிவிளங்கிய திருநல்லூர்மீண்டும் வந்தணைந்தார்=அழகால்விளங்கிய திருநல்லூரென்னுந் திருப்பதியை மீளவும் வந்தடைந்தருளினார்—எ-று. (௬௱௭௭)

திரு ஆலூர் - பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

புண்ணியர்பூதியர் பூதநாதர் புடைபடுவார்தம் மனத்தார்திங்கட்
கண்ணியரென்றென்று காதலாளர் கைதொழுதேத்த விருந்தவூராம்
விண்ணுயர்மாளிகை மாடவீதி விரைகமழ்சோலை சுலாவியெங்கும்
பண்ணியல்பாட லறாதவாலூர்ப் பசுபதியீச்சரம் பாடுநாவே.

எண்டிசையாரும் வணங்கியேத்து மெம்பெருமானை யெழில்கொளாலூர்ப், பண்டுரியார்சிலர் தொண்டர்போற்றும் பசுபதியீச்சரத் தாதிதன்மேற், கண்டல் கண்மிண்டிய கானற்காழிக் கவுணியன் ஞானசம் பந்தன்சொன்ன, கொண்டினிதாவிசை பாடியாடிக் கூடுமவருடையார்கள்வானே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-பசுபதீசர். தேவியார்-மங்களநாயகியம்மை.

மறைவி ளங்குமப் பதியினின் மணிகண்டர் பொற்று
ணிறையு மன்பொடு வணங்கியே நிகழ்பவர் நிலவும்
பிறைய ணிந்தவ ரருள்பெறப் பிரசமென் மலர்வண்
டறைந றும்பொழிற் றிருவலஞ் சுழியில்வந் தடைந்தார்.

Koviloor Digital Library

(இ-ள்.) மறைவிளங்கு மப்பதியினின் மணிகண்டர்பொற்றாள்=வேதங்கள் நிலைபெற்றுவிளங்கும் அத்திருப்பதியின்கணெழுந்தருளிய நீலகண்டராகிய பெரிய பாண்டவேசரது அழகியதிருவடிகளை; நிறையுமன்பொடு வணங்கியேநிகழ்பவர்=நிறைந்த அன்போடுவணங்கி அங்குநின்று எழுந்தருளும் பிள்ளையார்; நிலவும் பிறையணிந்தவரருள்பெற = விளங்கும் இளம்பிறையையணிந்த சிவபெருமானது திருவருளைப்பெறும்பொருட்டு; பிரசமென்மலர்வண்டறை நறும்பொழிற் திருவலஞ்சுழியில் வந்தடைந்தார்=தேன்பொருந்திய மெல்லியமலர்களிடத்து வண்டுகள் இசைபாடுகின்ற நல்லவாசனைபொருந்திய சோலைசூழ்ந்த திருவலஞ்சுழியென்னுந் திருப்பதியில் வந்தடைந்தருளினார்—எ-று. (௩௭௮)

மதிபு னைந்தவர் வலஞ்சுழி மருவுமா தவத்து
முதிரு மன்பர்கண் முத்தமிழ் விரகர்த முன்வந்
தெதிர்கொள் போழ்தினி லிழிந்தவ ரெதிர்செல மதியைக்
கதிர்செய் வெண்முகிற் குழாம்புடை சூழ்ந்தெனக் கலந்தார்.

(இ-ள்.) மதிபுனைந்தவர் வலஞ்சுழிமருவுமாதவத்துமுதிருமன்பர்கள்=மூன்றாம்பிறையைத்தரித்த கற்பகத்திசரெழுந்தருளிய திருவலஞ்சுழியென்னுந் திருப்பதியில்வசிக்கும் பெரியதவத்தால் மேம்பட்ட அடியார்கள்; முத்தமிழ்விரகர்தம்முன்வந்தெதிர்கொள்போழ்தினில்=முத்தமிழ் விரகராகியபிள்ளையார் திருமுன்வந்து எதிர்கொள்ளும்போழ்தில்; இழிந்தவரெதிர்செல=அத்திருமுத்துச் சிவிகையினின்றும் இறங்கிப்பிள்ளையார் எதிர்சென்றருள; மதியைக்கதிர்செய் வெண்முகிற்குழாம்புடை சூழ்ந்தெனக்கலந்தார்=சந்திரனைப்பிரகாசிக்கின்ற வெள்ளியமேகக்கூட்டங்கள் பக்கத்திற்சூழ்ந்தாற்போல எதிர்கொண்ட அடியார்கள் பிள்ளையார்பக்கலில்சூழ்ந்து கலந்தார்கள்—எ-று.

கலந்த வன்பர்க டொழுதெழக் கவுணியர் தலைவ
ரலர்ந்த செங்கம லக்கரங் குவித்துட னணைவார்
வலஞ் சுழிப்பெரு மான்மகிழ் கோயில்வந் தெய்திப்
பொலங்கொ ளொளிர்சுடர்க் கோபுர மிறைஞ்சியுள் புக்கார்.

(இ-ள்.) கலந்தவன்பர்க டொழுதொழக்கவுணியர் தலைவர் = தம்மை எதிர்கொண்டுவந்த அடியார்கள் வணங்கி எழுங்கால் ஆளுடையபிள்ளையார்; அலர்ந்தசெங்கமலக் கரங்குவித்துடனணைவார்=மலர்ந்தசெந்தாமரை மலர்போலும் திருக்கரங்களைக்கூப்பி அவரோடு செல்வாராய்; வலஞ்சுழிப்பெருமான்மகிழ் கோயில்வந்தெய்தி=திருவலஞ்சுழியில் கற்பகத்திசர்மகிழ்ந்து எழுந்தருளியிருக்குந் திருக்கோயிலையடைந்து; பொலங்கொளொளிர்சுடர்க்கோபுரமிறைஞ்சி உள்புக்கார்=பொன்னாலாகிய உயர்ந்த ஒளியையுடைய திருக்கோபுரத்தைவணங்கி உள்ளே புகுந்தருளினார்—எ-று. (௩௮௰)

Koviloor Digital Library

மருவ லார்புர முனிந்தவர் திருமுன்றில் வலங்கொண்
டுருகு மன்புட னுச்சிமே லஞ்சலி யினராய்த்
திருவ லஞ்சுழி யுடையவர் சேவடித் தலத்திற்
பெருகு மாதர வுடன்பணிந் தெழுந்தனர் பெரியோர்.

(இ-ள்.) மருவலார் புரமுனிந்தவர் திருமுன்றில்வலங்கொண்டு=பகைவர்களாகிய அசுரர்களது முப்புரங்களையும் கோபித்தெரித்தருளிய கற்பகத்தீசரது திருமுற்றத்தைப் பிரதட்சணஞ்செய்து; உருகுமன்புடனுச்சிமே லஞ்சலியினராய்=நெக்குவிட்டுருகு மன்போடு உச்சிமேற்குவித்த அஞ்சலி அத்தராய்; திருவலஞ்சுழியுடையவர் சேவடித்தலத்தில்=திருவலஞ்சுழியிலெழுந்தருளிய அக்கற்பகத்தீசரது சிவந்த திருவடியின்கீழ்; பெருகுமாதரவுடன் பணிந்தெழுந்தனர்பெரியோர்=மிக்கெழுந்த பத்தியோடு வணங்கி எழுந்தார் ஆளுடையபிள்ளையார்—எ-று. (௫௮௧)

ஞான போனகர் நம்பர்முன் றொழுதெழு விருப்பா
லான காதலி லங்கண ரவர்தமை வினவு
மூன மில்லிசை யுடன்விளங் கியதிருப் பதிகம்
பான லார்மணி கண்டரைப் பாடினார் பரவி.

(இ-ள்.) ஞானபோனகர் நம்பர்முன் றொழுதெழுவிருப்பால்=சிவஞானத்தைத் திருவமுதுசெய்தவராகிய ஆளுடையபிள்ளையார் கற்பகத்தீசர் திருமுன்னேவணங்கியெழும் விருப்பத்தால்; ஆனகாதலிலங்கணரவர்தமைவினவும்=உண்டாகிய அன்பினால் அச்சிவபிரானை அவரது அருட்குணங்களை வினவும்பொருளையுடைய; ஊனமில்லிசையுடன் விளங்கியதிருப்பதிகம்="விண்டெலாமலரவிரைநாறும்" என்னும்முதலோடுகூடிய குற்றமில்லாத இசைபொருந்திய திருப்பதிகத்தின்கண்; பானலார்மணிகண்டரைப் பாடினார்பரவி=கருங்குவளைமலர்போலும் கரியகண்டத்தையுடைய அக்கற்பகத்தீசரைத் துதித்துப்பாடியருளினார்—எ-று. (௫௮௨)

திருவலஞ்சுழி - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

விண்டெ லாமல ரவ்விரை நாறுதண் டேன்விம்மி
வண்டெ லாநசை யாலிசை பாடும் வலஞ்சுழித்
தொண்டெ லாம்பர வுஞ்சுடர் போலொளி யீர்சொலீர்
பண்டெ லாம்பலி தேர்ந்தொலி பாடல் பயின்றதே.

வீடு ஞானமும் வேண்டுதி ரேல்விர தங்களால்
வாடி ஞானமென் னாவது மெந்தை வலஞ்சுழி
நாடி ஞானசம் பந்தன செந்தமிழ் கொண்டிசை
பாடு ஞானம்வல் லாரடி சேர்வது ஞானமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-கற்பகத்தீசர். தேவிபெயர்-மங்களநாயகியம்மை.

புலன்கொ ளின்றமிழ் போற்றினர் புறத்தினி லணைந்தே
யிலங்கு நீர்ப்பொன்னி சூழ்திருப் பதியினி லிருந்து
நலங்கொள் காதலி னாதர்தா ணாடொறும் பரவி
வலஞ்சு ழிப்பெரு மான்றொண்டர் தம்முடன் மகிழ்ந்தார்.

(இ - ள்.) புலன்கொளின்றமிழ்போற்றினர் புறத்தினிலணைந்து=திருவருள் ஞானம்நிறைந்த இனியதிருப்பதிகத்தால் துதித்தவராய் திருக்கோயிலின் பக்கத்தடைந்து ; இலங்குநீர்ப்பொன்னிசூழ் திருப்பதியினில் இருந்து=விளங்கிய நீர்மயமாகிய காவிரிநதிசூழ்ந்த அத்திருப்பதியில் எழுந்தருளியிருந்து ; நலங்கொள்காதலின் நாதர்தாள்நாடொறும்பரவி=நன்மைபொருந்திய அன்போடு கற்பகத்தீசரது திருவடிகளைத் தினந்தோறுந் துதித்து ; வலஞ்சுழிப்பெருமான் தொண்டர்தம்முடன் மகிழ்ந்தார்=அத்திருவலஞ்சுழியில் எழுந்தருளிய சிவபிரானது அடியாரோடு மகிழ்கூர்ந்தருளினார்—எ-று. (௩௮௩)

மகிழ்ந்த தன்றலை வாழுமந் நாளிடை வானிற்
றிகழ்ந்த ஞாயிறு * துணைப்புண ரோனையுட் சேர்ந்து
நிகழ்ந்த தன்மையி னிலவுமேழ் கடனீர்மை குன்ற
வெதுண்டு வெங்கதிர் பரப்பலின் முதிர்ந்தது வேனில்.

(இ-ள்.) மகிழ்ந்து அதன்றலைவாழுமந்நாளிடை=மகிழ்ச்சியடைந்து அத்திருவலஞ்சுழியின்கண் வாழ்கின்ற அந்நாளில் ; வானிற்றிகழ்ந்தஞாயிறு=ஆகாயத்தின்கண் விளங்குகின்றசூரியன் ; துணைப்புணரோனையுட்சேர்ந்துநிகழ்ந்ததன்மையின்=மிதுனராசியோடுகூடி இருந்ததன்மையினால் ; நிலவுமேழ்கடல்நீர்மைகுன்ற=விளங்கும் ஏழ்கடலும் தம்மியல்புகெட ; வெதுண்டு வெங்கதிர்பரப்பலின் முதிர்ந்ததுவேனில்=கோபித்து அச்சூரியன் தமதுகொடியகிரணங்களைப் பரப்புதலினால் முதுவேனிற்காலம் அதிகரித்தது—எ-று.

ஏழ்கடல் நீர்மைகுன்றலாவது, நீர்வாழ் உயிர்கள் பிறவாமையும் மணிமுதலியன தோற்றாமையும் என்க. மிதுனராசி இரட்டையாகலில் துணைப்புணரோனை என்றார்; மிதுனராசியில் சூரியன் வருங்காலமாகிய ஆனி முதுவேனிலாதலில் வெதுண்டுவெங்கதிர்பரப்பலினென்றும், அதனால் முதிர்ந்ததுவேனிலென்றுங் கூறினர். உட்டிணகாலஞ் சீதகாலமென்று மிருதுக்களின் வேறுபாட்டால் சூரியகிரணம் விரிதலும் சுருங்குதலுமாய்த் தோன்றுதலையன்றித் தன்னியல்பால் ஒரியக்கிற்குமிறுங் காலவேறுபாட்டால் தோன்றும் வெப்பமிகுவை சூரியன்மேலேற்றி வெதுண்டு வெங்கதிர்பரப்பலினென்றார்; அவ்வாறு முன்றும் முன்பனிக்காலங்கூறமிடத்து வெய்யவருங்கர நியிர்க்கமாட்டான்போல விசும்பினிடையறு வெயில்விரிப்பதுவு மடங்குவதுமாகுமால் என்றார். (௩௮௪)

* துணைப்புணரோனை=மிதுனராசி.

Koviloor Digital Library

தண்பு னற்குளிர் கானறுஞ் சந்தனத் தேய்வை
பண்பு நீடிய வாசமென் மலர்பொதி பனிநீர்
நண்பு டைத்துணை நகைமணி முத்தணி நாளு
முண்ப மாதுரி யச்சுவை யுலகுளோர் விரும்ப.

(இ-ள்.) தண்புனற் குளிர்கானறுஞ் சந்தனத்தேய்வை=குளிர்ந்தநீரோ டுசேர்தம்பொருந்திய தென்றற்காற்றையும் நல்லசந்தனச்குழம்பையும்; பண்பு நீடிய வாசமென்மலர் பொதிபனிநீர்=குணமிக்க வாசனைபொருந்திய மிருது வான பூக்களோடுசேர்ந்த பனிநீரையும்; நண்புடைத்துணை நகைமணிமுத் தணி=நண்பினையுடைய மனைவியையும் விளங்குங்கிரணத்தையுடைய முத்தா ரத்தையும்; நாளுமுண்பமாதுரியச்சுவை யுலகுளோர்விரும்ப=அக்காலத்து நாடோறு முண்ணும்பொருட்டு மதுர உணவுகளையும் உலகத்தார்விரும்பும் படி—எ-று.

இவை வேனிற்காலத்துவிரும்பும் பொருள்களாதலின் முற்கூறப்பட்ட ன; உண்ப என்பது பகர எழுத்துப் பேறுபெற்ற செயவெனெச்சம், உரைப் பவந்தானென்புழிப்போலக்கொள்க. பரப்பலின் விரும்பவேனில் விரிதரு நாளிலெனக்கூட்டுக. மலர்பொதி பனிநீராவது மலர்களிறும் மலர்மாலைகளி லும் தோய்த்தபனிநீரென்க. (சுஅ௫)

வேறு.

அறன்மலியுங் கான்யாற்றி னீர்நசையா லணையுமான்
பெறலரிய புனலென்று பேய்த்தேரின் பின்றொடரு
முறையுணவு கொள்ளும்புட் டேம்பிவய விரைதேரும்
பறவைசிறை விரித்தொடுங்கப் பனிப்புறத்து வதியுமால்.

(இ-ள்.) அறன்மலியுங்கான்யாற்றினீர்நசையாலணையுமான் = கருமண ல்மிக்க காட்டாற்றின்கண்ணீர் வேட்கையாற்செல்லும் கருமான்கூட்டங்கள் (நீர்பெறுமையின்); பெறலரியபுனலென்று பேய்த்தேரின்பின்றொடரும்= நீர்வேட்கை தணித்தற்குத் தாம்பெறுத நீரிதுவென்று கானலின்பின்சென்று தொடரும்; உறையுணவுகொள்ளும் புட்டேம்பி அயலிரைதேரும்=மழைத் துளிகளை உணவாகக்கொள்ளும் சாதகப்புட்கள் மழைத்துளிபெறுமையால் வருந்தி பக்கங்களில் வேறிரையைத்தேடும்; பறவைசிறைவிரித் தொடுங்கப் பனிப்புறத்துவதியும்=பறவைகள் சிறைகளை விரித்துக்கொண்டு வெயில்பொ றுமையால் தாம் ஒடுங்குதற்குக்குளிர்ந்த இடங்கள்தேடி இருக்கும்—எ-று.

கதிர்வரவால் சக்கரவாகமுந் திங்களின்வரவால் சகோரமுங்கொண்மூ வரவால் மஞ்ஞையும் களிக்குமாறுபோல் சாதகப்புள்ளும் ஆவணிக்கண்விழு ம்மழைத்துளியுண்டுகளிக்கும் ஆகலின் அச்சாதகப்புள்ளை உறையுணவுகொள் ளும் புள்ளென்றார். சாதகப்புள்ளாவது வானம்பாடி "வானம்பாடிசாதகப்பு ள்ளே" என்பதனாலுமறிக. சக்கரவாகம் இரவில்பெடையுஞ் சேவலும்பிரி ந்து துயனிசெய்து இணைவிழைச்சு இன்றிவருந்தும் அது கதிர்வரவுகண்டுமகி

Koviloor Digital Library

ழ்ந்து பெடையைமுயங்கி இருக்கும் ; அதனால் சக்கரவாகத்திற்குச் சதிர்வ ரவு இன்பமாயிற்று. தேம்பவெனப்பாடமாயின் தேம்பவெனவும் அயவி லிகாரேரும் புள் எனவும் கூறுக. (௬அ௬)

நிணிலைமா ளிகைமேலு நிலாமுன்றின் மருங்கினிலும்
வாணிழனற் சோலையிலு மலர்வாவிக் கரைமாடும்
பூணிலவு முத்தணிந்த பூங்குழலார் முலைந்நடத்துங்
காணுமகிழ்ச் சியின்மலர்ந்து மாந்தர்கலந் துறைவரால்.

(இ-ள்.) நிணிலைமாளிகை மேலுநிலாமுன்றின்மருங்கினிலும்=உயர்ந்த அடுக்குமாளிகைமேலும் நிலாமுற்றத்தின்பக்கத்திலும் ; வாணிழனற் சோலையிலும்=ஒளிதங்கிய நிழலையுடைய நல்லசோலைகளிலும் ; மலர்வாவிக்கரைமாடும்=மலர்களுடைய தடாகக்கரையின் பக்கத்தும் ; பூணிலவுமுத்தணிந்தபூங் குழலார்முலைத்தடத்தும்=விளங்கிய முத்தாரத்தை யணிந்த பெண்களது மு லையாகிய உயர்ந்த இடத்தும் ; காணுமகிழ்ச்சியின் மலர்ந்து மாந்தர் கலந்து றைவர்=தம்மிடத்து உதிக்கும் மகிழ்ச்சியோடு மனிதர்கள் கலந்து இருப் பார்கள்—எ-று.

நிலாமுற்றம் மேல்மாளிகையின் நிலவுவிழும்படிசெய்த முற்றம். (௬அஎ)

மயிலொடுங்க வண்டாட மலர்க்கமல முகைவிரியக்
குயிலொடுங்காச் சோலையின்மென் றளிர்கோதிக் கூவியெழத்
துயிலொடுங்கா வுயிரனைத்துந் துயில்பயிலச் சுடர்வானில்
வெயிலொடுங்கா வெம்மைதரும் வேனில்விரி தருநாளில்.

(இ-ள்.) மயிலொடுங்க வண்டாட மலர்க்கமல முகைவிரிய=மயில்க ளொடுங்கவும் வண்டுகளாடவும் தாமரையினது அரும்பும் பருவத்தினையு டைய முகைமலர்கள்விரியவும் ; குயிலொடுங்காச்சோலையின் மென்றளிர்கோ திக்கூவியெழ=குயில்கள் வாயொடுங்காமற்சோலையிலுள்ள மெல்லியமாந்த ளிர்களை மூக்காற்கோதிக்கூவி யெழவும் ; துயிலொடுங்கா வுயிரனைத்துந் துயி ல்பயில=பகலில் உறங்காவுயிர்களும் உறக்கம்வருதலால் நித்திரைசெய்யவும் ; சுடர்வானில் வெயிலொடுங்கா வெம்மைதரும்வேனில் விரிதருநாளில்=சூரி யன் ஆகாயத்தில் தனது கிரணம்குறையாமல் உட்டிணத்தைத்தரும்முதுவே னிற்காலம் எங்கும் விரிந்தகாலத்து—எ-று.

பகலில் உறங்குமுயிர் கூகைவௌவால்முதலியன. பகலில் உறங்காவுயிர் காக்கை மாடப்புறாமுதலியன ; இதனால் உறங்கா உயிரையும் உறங்கச்செய் யும் கருங்கோடை என்றும் பதிப்பொருள் போந்தவாறு அறிக. (௬அஅ)

சண்பைவரும் பிள்ளையார் சடாமகுடர் வலஞ்சுழியை
யெண்பெருகத் தொழுதேத்திப் பழையாறை யெய்துதற்கு
நண்புடைய வடியார்க ளுடன்போத நடந்தருளி
விண்பொருநீள் மதிலாறை மேற்றளிசென் றெய்தினார்.

Koviloor Digital Library

(இ-ள்.) சண்பைவரும்பிள்ளையார் சடாமகுடர்வலஞ்சுழியை=சீகாழியில் அவதரித்த ஆளுடையபிள்ளையார் சடாமகுடத்தையுடைய கற்பகத்தீசரது திருவலஞ்சுழியை; எண்பெருகத்தொழுதேத்தி = திருவுள்ளக்கருத்துமேன்மேல் வளரவணங்கிவாழ்த்தி; பழையாறையெய்துதற்கு நண்புடைய அடியார்களுடன் போதநடந்தருளி=திருப்பழையாறை என்னுந் திருப்பதியை அடைதற்குதம்மினின்றும்பிரியாத அடியார்கள்தம்முடன்வரச்சென்றருளி; விண்பொருநீண்மதில் ஆறைமேற்றளிசென்றெய்தினார்=விண்ணுலகளவு உயர்ந்த திருமதிள்சூழ்ந்த திருஆறைமேற்றளிசென்றடைந்தருளினார்—எ-று.

திருவாறை மேற்றளியின் வீற்றிருந்த செந்தீயி
னுருவாள னடிவணங்கி யுருகியவன் பொடுபோற்றி
மருவாருங் குழன்மலையாள் வழிபாடு செய்யவரு
டருவார்தந் திருச்சத்தி முற்றத்தின் புறஞ்சார்ந்தார்.

(இ-ள்.) திருவாறைமேற்றளியின் வீற்றிருந்த=திருவாறைமேற்றளியென்னுந்திருப்பதியில் எழுந்தருளியிருந்த; செந்தீயின் உருவாளன் அடிவணங்கி=சிவந்த தீவண்ணரான சோமேசரது திருவடிகளைவணங்கி; உருகிய அன்பொடுபோற்றி=நெக்குவிட்டு உருகிய அன்போடுதுதித்து; மருவாருங் குழன்மலையாள் வழிபாடுசெய்ய அருள்தருவார்தம்=வாசனை பொருந்திய குழலையுடைய உமாதேவியார் வழிபடுங்காரணத்தால் அவர்க்கு அருள்செய்யும் சிவக்கொழுந்தீசரது; திருச்சத்தி முற்றத்தின் புறஞ்சார்ந்தார்=திருச்சத்திமுற்றத்தின் புறத்தையடைந்தருளினார்—எ-று. (௬௧௰)

திருச்சத்தி முற்றத்திற் சென்றெய்தித் திருமலையாள்
அருச்சித்த சேவடிக ளார்வமுறப் பணிந்தேத்திக்
கருச்சுற்றி லடையாமற் கைதருவார் கழல்பாடி
விருப்புற்றுத் திருப்பட்டீச் சரம்பணிய மேவுங்கால்.

(இ-ள்.) திருச்சத்திமுற்றத்திற் சென்றெய்தி=திருச்சத்திமுற்றம் என்னும் திருப்பதியை அடைந்தருளி; திருமலையாள் அருச்சித்த சேவடிகளார்வமுறப்பணிந்தேத்தி=உமாதேவியார் அருச்சனைசெய்த சிவந்த திருவடிகளை அன்புமிகவணங்கிவாழ்த்தி; கருச்சுற்றிலடையாமற் கைதருவார்கழல்பாடி=பிறவி என்னுங்கடற்சுழியில் அழுந்தாமல் திருக்கைதந்தருளுஞ் சிவக்கொழுந்தீசரது திருவடிகளைத்துதித்து; விருப்புற்றுத் திருப்பட்டீச்சரம்பணிய மேவுங்கால்=விருப்பங்கொண்டு திருப்பட்டீச்சரமென்னுந் திருப்பதியை வணங்கச்சென்றருளுங்காலத்தில்—எ-று. (௬௧௧)

வெம்மைதரு வேனிலிடை வெயில்வெப்பந் தணிப்பதற்கு
மும்மைநிலைத் தமிழ்விரகர் முடிமீதே சிவபூதந்
தம்மையறி யாதபடி தண்டரளப் பந்தரெடுத்
தெம்மைவிடுத் தருள்புரிந்தார் பட்டீச ரென்றியம்ப.

(இ-ள்.) வெம்மைதருவேனிலிடை வெயில்வெப்பந்தணிப்பதற்கு=உட்டிணத்தைத்தரும் வேனிற்காலத்தில் வெயில்வெம்மையைத்தணிக்கும்பொருட்டு; மும்மையிலைத்தமிழ் விரகர்முடிமிது=முத்தமிழ்விரகராகிய பிள்ளையார் திருமுடியின்மேல்; சிவபூதம் தம்மையறியாதபடி தண்டரளப்பந்தர் எடுத்து=சிவபூதங்கள் தம்மைப்பிள்ளையார் அறியாத வண்ணங்குளிர்ந்த முத்துப்பந்தரை எடுத்து; எம்மைவிடுத்தருள்புரிந்தார் பட்டீசரென்றியம்ப=திருப்பட்டீசர் எங்களைவிடுத்தருளினாரென்று கூற—எ-று. (௫௯௨)

அவ்வுரையு மணிமுத்தின் பந்தருமா காயமெழச்
செவ்வியமெய்ஞ் ஞானமுணர் சிரபுரத்துப் பிள்ளையார்
இவ்வினைதா னீசர்திரு வருளாகி லிசைவதென
மெய்விரவு புளகமுடன் மேதினியின் மிசைத்தாழ்ந்தார்.


(இ-ள்.) அவ்வுரையுமணிமுத்தின் பந்தருமாகாயமெழ=அந்தவார்த்தையும் முத்தாலாகிய திருப்பந்தரும் ஆகாயத்தில் எழாநிற்க; செவ்வியமெய்ஞ் ஞானமுணர் சிரபுரத்துப் பிள்ளையார்=செம்மையை உடைய உண்மைஞானத்தை உணர்ந்தருளிய சீகாழியிலவதரித்த ஆளுடையபிள்ளையார்; இவ்வினைதானீசர் திருவருளாகி லிசைவதென=இச்செய்கைதான் சிவபெருமான் திருவருளாயின் அதற்குடன்படத்தக்கதென்று; மெய்விரவுபுளகமுடன் மேதினியின் மிசைத்தாழ்ந்தார்=திருமேனிமுற்றும்பொடித்த புளகத்தோடு பூமியின்மேல் வணங்கியருளினார்—எ-று. (௫௯௩)

அதுபொழுதே யணிமுத்தின் பந்தரினை யருள்சிறக்கக்
கதிரொளிய மணிக்காம்பு பரிசனங்கள் கைக்கொண்டார்
மதுரமொழி மறைத்தலைவர் மருங்கிமையோர் பொழிவாசப்
புதுமலரா லப்பந்தர் பூம்பந்த ரும்போலும்.

(இ-ள்.) அதுபொழுதே யணிமுத்தின்பந்தரினை யருள்சிறக்க=அப்பொழுது அழகியமுத்தாலாகியபந்தரைச் சிவபிரான் திருவருள்யாவர்க்கும் புலப்பட; கதிரொளியமணிக்காம்புபரிசனங்கள்கைக்கொண்டார்=விளங்குங்கிரணத்தையுடைய அத்திருமுத்துப்பந்தரின் ஒளிபொருந்திய இரத்தினக்காம்பைப் பிள்ளையாரைச்சூழ்ந்த திருத்தொண்டர்கள் கையிற்றாங்கினார்கள்; மதுரமொழிமறைத்தலைவர்மருங்கு=இனிய திருவாக்கினையுடைய பிள்ளையார்பக்கலில்; இமையோர்பொழிவாசப்புதுமலராலப்பந்தர் பூம்பந்தரும்போலும்=தேவர்கள்பொழியும் வாசனைபொருந்திய புதியமலரால் அம்முத்துப்பந்தர் பூவாலாகிய பந்தரையும் ஒத்துவிளங்கும்—எ-று. (௫௯௪)


தொண்டர்குழா மார்ப்பெடுப்பச் சுருதிகளின் பெருந்துழனி
யெண்டிசையு நிறைந்தோங்க வெழுந்தருளும் பிள்ளையார்
வெண்டரளப் பந்தர்நிழன் மிதனைப்பத் திருமன்றி
வண்டர்பிரா னெடுத்ததிரு வடிநீழ லெனவமர்ந்தார்.

Koviloor Digital Library



…சம்பந்தர் திருப்பட்டீச்சுரத்தில் சிவபெருமான் முத்துப்பந்தல் பூதகணங்களால் கொடுக்கப்பெற்றது.

Kovilloor Digital Library



திருஞானசம்பந்தர் சிவபெருமானருளால் அளித்தருளிய முத்துப்பந்தலைப் பூதகணங்களாலே கொடுக்க வணங்கிப்பெற்றுக்கொண்டது

Koviloor Digital Library

(இ-ள்.) தொண்டர்குழா மார்ப்பெடுப்ப=அடியார் திருக்கூட்டங்களா ரவென ஆரவாரிக்க ; சுருதிகளின்பெருந்துழனி யெண்டிசையுநிறைந்தோ ங்க=மறையவர்கூறும் வேதங்களின் ஆரவாரம் எட்டுத்திக்குகளிலும் நிறை ந்துபரவ ; மீதுவெண்டரளப்பந்தர்நிழலணைய எழுந்தருளும் பிள்ளையார்=தி ருமுடியின்மேல் வெள்ளியதிருமுத்துப்பந்தர் நிழல்செய்துவர அதன்கீழ் எ ழுந்தருளும் ஆளுடையபிள்ளையார்; திருமன்றி லண்டர்பிரானெடுத்த திருவ டிநீழலெனவமர்ந்தார்=பொன்னம்பலத்தில் தேவர்பிரானாகிய நடேசப்பெரு மானெடுத்தருளிய திருவருள்வடிவான குஞ்சிதபாதத்தின் நிழலெனவீற்றிரு ந்தருளினார்—எ-று.

திருவருளாற்கொடுக்கப்பட்ட திருமுத்துப்பந்தர் பிள்ளையார் வீற்றிரு க்க வெயில்வெப்பொழித்துத் தட்பஞ்செய்தலின் அஃதுதுயர் ஒரீஇப் பேரா னந்தத்தில் எஞ்ஞான்றும் இன்புறு, எடுத்ததிருவடிநிழற்கீழ் அவர் வீற்றிரு த்தற்கொப்பாயிற்று. (௩கரு)

பாரின்மிசை யன்பருடன் வருகின்றார் பன்னகத்தி
னாரமணிந் தவர்தந்த வருட்கருணைத் திறம்போற்றி
யீரமனங்களிதழைப்ப வெதிர்கொள்ள முகமலர்ந்து
சேரவருந் தொண்டருடன் றிருப்பட்டீச் சரமணைந்தார்.

(இ-ள்.) பாரின்மிசை யன்பருடன்வருகின்றார்=நிலவுலகின்கண் அடி யார்திருக்கூட்டத்தோடு எழுந்தருளும்பிள்ளையார் ; பன்னகத்தின் ஆரமணி ந்தவர் தந்தவருட்கருணைத் திறம்போற்றி=சற்பத்தாலாகிய ஆரத்தைப்பூண் டசிவபெருமான் தந்தருளிய திருவருளின்திறத்தைத் துதித்து ; ஈரமனங்க ளிதழைப்ப=அன்புநிறைந்த திருவுள்ளத்தின்கண்மகிழ்ச்சி மேன்மேலோ ங்க ; எதிர்கொள்ளமுகமலர்ந்து சேரவருந்தொண்டருடன் திருப்பட்டீச்சர மணைந்தார்=தம்மை எதிர்கொள்ளும்படி முகமலர்ச்சிகொண்டு கூடிவரும் அடியார் கூட்டத்தோடு திருப்பட்டீச்சரமென்னுந் திருப்பதியை யடைந்த ருளினார்—எ-று. (௩கசு)

சென்றணைந்து திருவாயிற் புறத்திறைஞ்சி யுள்புக்கு
வென்றிவிடை யவர்கோயில் வலங்கொண்டு வெண்கோட்டுப்
பன்றிகிளைத் தறியாத பாததா மரைகண்டு
முன்றொழுது விழுந்தெழுந்து மொழிமாலை போற்றிசைத்தார்.

(இ-ள்.) சென்றணைந்து திருவாயிற்புறத்திறைஞ்சியுள்புக்கு=அத்தல த்திற்சென்று அவ்வாலயசமீபத்தையடைந்தருளி, திருக்கோபுரத்தின்புறத்து வணங்கி யுள்ளேபுகுந்து ; வென்றிவிடையவர் கோயில்வலங்கொண்டு=வெ ற்றிபொருந்திய இடபத்தைவாகனமாகவுடைய திருப்பட்டீசர் திருக்கோயி லைப்பிரதட்சணஞ்செய்து ; வெண்கோட்டுப்பன்றி கிளைத்தறியாத பாததாம ரைகண்டு=வெள்ளிய ஓர்கொம்பினை உடைய திருமாலென்னும் பன்றி பூமி

Koviloor Digital Library

யைக்கின்றுசென்றும் காணுதற்கரிய திருவடித்தாமரைகளைத் தரிசித்து ; முன்றொழுது விழுந்தெழுந்து மொழிமாலை போற்றிசைத்தார்=திருமுன்னின்று வணங்கிப் பூமியில் சாஷ்டாங்கமாய்த்தொழுதெழுந்து சொல்லானாகிய திருப்பதிகமாலையைத் துதித்தருளினார்—எ-று.

திருமால் வராகவதாரத்துக்கு ஓர்கொம்பு என்றது, சிவபிரான்பறித்த ஓர்கொம்பு நீங்கமற்றைக்கொம்புடைமையாலென்க. (௩௯௭)

திருப்பட்டீச்சரம் - திருவிராகம்- பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

பாடன்மறை சூடன்மதி பல்வளையோர் பாகமதின் மூன்றொர் கணையாற், கூடவெரியூட்டியெழில் காட்டிநிழல் கூடுபொழில் சூழ்பழையுண், மாடமழ பாடியுறை பட்டீசரமேயகடி கட்ட ரவினர், வேடநிலை கொண்டவரை விடுநெறி காட்டிவினை வீடுமவரோ. (௧)

நீரின்மலி புன்சடையர் நீளரவு கச்சையது நச்சிலை யதோர், கூரின்மலி சூலமது வேந்தியுடை கோவணமு மானினுரிதோல், காரின்மலி கொன்றைவிரி தார்க்கடவுள் காதல்செய்து மேயநகர்தான், பாரின்மலி சீர்பழசை பட்டீசர மேத்தவினை பற்றழியுமே. (௨)

காலைமட வார்கள்புன லாடுவது கவ்வைகடி யார்மறுகெலா, மாலைமண நாறுபழை யாறைமழ பாடியழ காயமலி சீர்ப், பாலையன நீறுபுனை மார்பனுறை பட்டீசர் மேபாவுவார், மேலையொரு மால்கடல்கள் போற்பெருகி விண்ணுலக மாளுமவரோ. (௩)

கண்ணின்மிசை நண்ணியிழி விப்பமுக மேத்துகமழ் செஞ்சடையினு, பண்ணின்மிசை நின்றுபல பாணிபட வாடவல பான்மதியினுன், மண்ணின்மிசை நேரின்மழ பாடிமலி பட்டீசர மேமருவுவார், விண்ணின்மிசை வாழுமிமை யோரொடு டுதலது மேவலெளிதே. (௪)

மருவமுழ வதிரமழ பாடிமலி மத்தவிழ வார்க்கவரையார், பருவமழை பண்கவர்செய் பட்டீசர மேயபடர் புன்சடையினுன், வெருவமத யானையுரி போர்த்துமையை யஞ்சவரு வெள்விடையினு, னுருவமெரி சழல்கடொழ வுள்ளமுடை யாரையடையாவினைகளே. (௫)

மறையினொலி கிதமொடு பாடுவனபூதமடி மருவிவிரவார், பறையினொலி பெருககிகழ் நட்டமமர் பட்டீசர மேயபனிகூர், பிறையினொடு மருவியதோர் சடையினிடை யேற்றபுன ரேற்றநிலைபா, மிறைவனடி முறைமுறையினேத்துமவர் தீத்தொழில்களில்லர்மிகவே. (௬)

Koviloor Digital Library

பிறவிபிணி மூப்பினொடு நீங்கியிமை யோருலகு பேணலுறு வார், துறவியெனு முள்ளமடை யார்கள்கொடி வீதியழ காயதொ ருசீ, ரிறைவனுறை பட்டீசர மேத்தியெழு வார்கள்வினை யேதுமில வாய், நறவவிரை யாலுமொழி யாலும்வழிபாடுமற வாதவவரே. (எ)

நேசமிகு தோள்வலவ னாகியிறை வன்மலையை நீக்கியிடலுந், நீசன்விறல் வாட்டிவரை யுற்றதுண ராதநிரம் பாமதியினா, னீசனுறை பட்டீசர மேத்தியெழு வார்கள்வினை யேதுமிலவாய், நாசமற வேண்டுதலி னண்ணலெளி தாமமரர் விண்ணுலகமே. (அ)

தூயமல ரானுநெடி யானுமறி யாரவன் றோற்றநிலையின், னேயவனை யானதனை யாரதறி வாரணிகொண் மார்பினகலம், பாபநல நீறதணி வானமைத னேடுமுறை பட்டீசரமே, மேயவன திரடியு மேத்தவெளி தாகுநல மேலுலகமே. (கூ)

தடுக்கினை யிடுக்கிமட வார்களிடு பிண்டமது வுண்டுழறரும், கடுப்பொடி யுடற்கயவர் கத்துமொழி காதல்செய் திடாதுகமழ்சேர், மடக்கயல் வயற்கொண்மழ பாடிநகர் நீடுபழையாறையதனுட், படைக்கொரு கரத்தன்மிகு பட்டீசர மேத்தவினை பற்றறுதலே. (க0)

மந்தமலி சோலைமழ பாடிநகர் நீடுபழை யாறை யதனிற், பந்தமுயர் வீடுநல பட்டீசர மேயபடர் புன் சடையனை, யந்தண் மறை யோரினிது வாழ்புகலி ஞானசம் பந்தனணியார், செந்தமிழ்கள் கொண்டினிது செப்பவல தொண்டர்வினை நிற்பதிலவே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - பட்டீசர். தேவியார்-பால்வளைநாயகியம்மை.

அருள்வெள்ளத் திறம்பரவி யளப்பரிய வானந்தப்
பெருவெள்ளத் திடைமூழ்கிப் போாத பெருங்காத
றிருவுள்ளப் பரிவுடனே செம்பொன்மலை வல்லியார்
தருவள்ளத் தமுதுண்ட சம்பந்தர் புறத்தணைந்தார்.

(இ-ள்) செம்பொன்மலைவல்லியார்=சிவந்த பொன்மயமான இமையமலையரையன் புத்திரியாராகிய உமாதேவியார்; திருவுள்ளப்பரிவுடனே தரு வள்ளத்தமுதுண்டசம்பந்தர்=திருவுள்ளக்கனிவோடுகொடுத்தருளியபொற் கின்னத்துத் திருமுலைப்பாலைத் திருவமுதுசெய்தருளிய ஆளுடையபிள்ளை

Koviloor Digital Library

யார்; அருள்வெள்ளத்திறம்பரவி=பட்டீசரது திருவருளின்பிரவாகத்திறத்தைவாழ்த்தி; அளப்பரியவானந்தப்பெருவெள்ளத்திடைமூழ்கி=அளத்தற்கரியபேரானந்தவெள்ளத்தில்முழுகி; பேராதபெருங்காதல் புறத்தணைந்தார்=தம்மில்நின்றும்நீங்காதஆர்வத்தோடுதிருக்கோயிலின்புறத்தணைந்தார்—எ-று.

அருள்வள்ளத் திறமெனப்பாடமாயின் திருவருளாற்செய்தவள்ளற்றன்மையைப் பாடியென்க. (௲௬௮)

அப்பதியி லமர்கின்ற வாளுடைய பிள்ளையார்
செப்பருஞ்சீர்த் திருவாறை வடதளியிற் சென்றிறைஞ்சி
யொப்பரிய தமிழ்பாடி யுடனமருந் தொண்டருட
னெப்பொருளு மாய்நின்றா ரிரும்பூளை யெய்தினார்.

(இ-ள்.) அப்பதியில் அமர்கின்ற ஆளுடையபிள்ளையார்=அத்திருப்பட்டீச்சரத்தில் எழுந்தருளியிருக்கின்ற ஆளுடையபிள்ளையார்; செப்பருஞ்சீர்த் திருவாறைவடதளியிற் சென்றிறைஞ்சி=சொல்லுதற்கரிய சிறப்பினையுடைய திருவாறைவடதளியை யடைந்துவணங்கி; ஒப்பரியதமிழ்பாடி=(அங்கு) ஒப்பில்லாத திருப்பதிகம்பாடியருளி; உடன் அமருந்தொண்டருடன் எப்பொருளுமாய்நின்றார் இரும்பூளையெய்தினார்=தம்முடன்வசிக்கும் திருக்கூட்டத்தோடு எல்லாப்பொருள்களும் தானாய்வியாபித்துநின்ற காசியாரண்ணியேசரது திருஇரும்பூளையென்னும் திருப்பதியை அடைந்தருளினார்—எ-று. (௲௬௯)

தேவர்பிரா னமர்ந்ததிரு விரும்பூளை சென்றெய்தக், காவணநீ டோரணங்க ணாட்டியுடன் களிசிறப்பப், பூவணைமா லைகணாற்றிப் பூரணபொற் குடநிரைத்தங், கியாவர்களும் போற்றிசைப்பத் திருத்தொண்ட ரெதிர்கொண்டார்.

(இ-ள்.) தேவர்பிரான் அமர்ந்ததிருவிரும்பூளைசென்றெய்த=தேவர்கட்குமுதல்வரான காசியாரண்ணியேசர் எழுந்தருளிய திருவிரும்பூளையென்னுந் திருப்பதியைப் பிள்ளையார் சென்றடையுங்கால்; காவணம்நீள்தோரணங்கள் நாட்டியுடன்களிசிறப்ப=கொட்டைப்பந்தரையும் நீண்டதோரணங்களையும் (எங்கும்)நாட்டிஉடனே (பிள்ளையார்வரவால்) தம்மனத்துமகிழ்ச்சிமேம்பட; பூவணைமாலைகள் நாற்றிப்பூரணபொற்குடம் அங்குநிரைத்து=பூவாலாகியமாலைகளைத்தொங்கவிட்டு,பொன்னாலாகியபூரணகும்பங்களையும் அவ்விடத்தில்வரிசையாய்வைத்து; யாவர்களும்போற்றிசைப்பத் திருத்தொண்டர் எதிர்கொண்டார்=(கண்டோர்) யாவரும்துதிசெய்ய அடியார்திருக்கூட்டங்கள் அவரை எதிர்கொண்டார்கள்—எ-று. (௲௭௰)

வண்டமிழின் மொழிவிரகர் மணிமுத்தின் சிவிகையினைத்
தொண்டர்குழாத் தெதிரிழிந்தங் கவர்தொழநா முந்தொழுதே
யண்டர்பிரான் கோயிலினை யணைந்திறைஞ்சி முன்னின்று
பண்டருமின் னிசைப்பதிகம் பரம்பொருளைப் பாடினார்.

Koviloor Digital Library

(இ-ள்.) வண்டமிழின்மொழிவிரகர்=வளம்பொருந்திய தமிழ்ப்பாடையின் வல்லவராகிய ஆளுடையபிள்ளையார்; மணிமுத்தின்சிவிகையினை=அழகிய முத்துச்சிவிகையை; தொண்டர்குழாத்தெதிரிழிந்து=அடியார்திருக்கூட்டத்தெதிரே இழிந்தருளி; அங்கு அவர்தொழத் தாமுந்தொழுது=அவ்விடத்து அவ்வடியார்கள்வணங்கத் தாமும்வணங்கி; அண்டர்பிரான்கோயிலினையணைந்திறைஞ்சி=தேவர்பிரானாகிய காசியாரண்ணியேசர் திருக்கோயிலை யடைந்துவணங்கி; முன்னின்றுபண்தரும் இன்னிசைப்பதிகம் பரம்பொருளைப் பாடுவார்=அவர் திருமுன்நின்றருளிப்பண்ணமைந்த இனியஇசையோடுதிருப்பதிகத்தால் பரம்பொருளாகிய அவரைப்பாடுவாராயினார்—எ-று. (சா௧)

நிகரிலா மேருவரை யணுவாக நீண்டானை
நுகர்கின்ற தொண்டர்தமக் கமுதாகி நொய்யானைத்
தகவொன்ற வடியார்க டமைவினவத் தமிழ்விரகர்
பகர்கின்ற வருமறையின் பொருள்விரியப் பாடினார்.

(இ-ள்.) நிகரிலாமேருவரை யணுவாகநீண்டானை=ஒப்பில்லாதமேருமலைதன்னளவிற்கு அணுவாகமகத்திற்கு மகத்தானவரை; நுகர்கின்றதொண்டர்தமக்கமுதாகி நொய்யானை= (தம்மோடு ஒற்றித்து) உடனாய சிவானந்தானுபூதியை உடைய அடியார்களுக்கு அமுதுபோல்தித்தித்து அணுவுக்குஅணுவாய்நின்றவரை; தமிழ்விரகர் அடியார்தமைத்தகவு ஒன்றவினவி=முத்தமிழ்விரகராகிய பிள்ளையார் அடியார்களைநோக்கி அவர்பெருமையைச்சீரார்கழலே தெளிவீரிதுசெப்பீர் நஞ்சமுதுண்டகருத்து எனப்பொருந்தவினவி; பகர்கின்றவருமறையின் பொருள்விரியப் பாடினார்=பிரமாணமென்க்கூறுகின்ற அரியவேதத்தின்பொருள் விரியும்படி அத்திருப்பதிகம் பாடியருளினார்—எ-று.

மகத்தானமேருவரை அணுவாக என்றதனால், மகத்துக்கு மகத்தாக நிற்கும்வியாபக இயல்பும்; நொய்யானை என்றதனால், அணுவுக்கணுவாய்நிற்கும் சூக்கும இயல்பும் சிவபிரானுடையனென்பது போந்தவாறு அறிக. (சா௨)

திரு இரும்பூளை - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

சீரார்கழலே தொழுவீரிதுசெப்பீர்
வாரார்முலை மங்கையொடும் முடனாகி
யேராரிரும்பூளை யிடங்கொண்டவீசன்
காரார்கட னஞ்சமுதுண்டகருத்தே.

எந்தையிரும்பூளை யிடங்கொண்டவீசன்
சந்நயபயில்சண்பை யுண்ஞானசம்பந்தன்
செந்தண்டமிழ் செப்பியபத்திவைவல்லார்
பந்தம்மறுத் தோங்குவர் பான்மையினாலே.

திருச்சிற்றம்பலம்.

Koviloor Digital Library

சுவாமிபெயர் - காசிபாரண்ணியேசர்.
தேவியார் - ஏலவார்குழலம்மை.

பாடுமர நைப்பெரும் பாழியே முதலாகச்
சேடர்பயி றிருச்சேறை திருநாலூர் குடவாயி
னாடியசீர் நறையூர்தென் றிருப்புத்தூர் நயந்திறைஞ்சி
நீடுதமிழ்த் தொடைபுனைந்தந் நெடுநகரி லினிதமர்ந்தார்.

(இ-ள்.) பாடுமரதைப் பெரும்பாழியே முதலாக=பலருந் துதிக்கும் திரு அரதைப் பெரும்பாழி என்னுந் திருப்பதிமுதலாக; சேடர்பயிறிருச் சேறை திருநாலூர் குடவாயில்=அறிவுடையோர்வசிக்கும் திருச்சேறையும் திருநாலூரும் திருக்குடவாயிலும்; நாடியசீர் நறையூர் = அறிவுடையோர் நாடுதற்குரிய சிறப்புவாய்ந்த திருநறையூராயும்; தென்திருப்புத்தூர் நயந் திறைஞ்சி=தெற்கின்கண்ணுள்ள திருப்புத்தூரென்னுந் திருப்பதியையும் விரும்பி வணங்கி; நீடுதமிழ்த்தொடைபுனைந்து அந்நெடுநகரி லினிதமர்ந்தார்= நிலைபெற்ற திருப்பதிகமாலைகளைச்சாத்தி அத்தலங்களில் இனிதாகவசித்தருளி னார்—எ-று. (சாஙரு)

திருஅரதைப்பெரும்பாழி - பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

பைத்தபாம் போடரைக் கோவணம் பாய்புலி
மொய்த்தபேய் கண்முழக்க முது காட்டிடை
நித்தமா கந்நட மாடிவெண் ணீறணி
பித்தர்கோ யில்லர தைப்பெரும் பாழியே.

நீரினார்புன்சடை நிமலனுக் கிடமெனப்
பாரினார்பரவ ரதைப்பெரும் பாழியைச்
சீரினார் காழியுண் ஞானசம் பந்தன்செய்
பேரினார் தமிழ்வலார்க் கில்லையாம் பாவமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-பாதாளேசர். தேவியார்-அலங்காரநாயகியம்மை.

திருச்சேறைதிருவிராகம் - பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

முறியுறு நிறமல்கு முகிழ்முலை மலைமகள் வெருவமுன்
வெறியுறு மதகரி யதள்பட வுரிசெய்த விறலினர்
நறியுறு மிதழியின் மலரொடு நதிமதி நகுதலை
செறியுறு சடைமுடி யடிகடம் வளநகர் சேறையே.

Koviloor Digital Library

கற்றநன் மறைபயி லடியவ ரடிதொழு கவினுறு
சிற்றிடை யவளொடு மிடமென வுறைவதோர் சேறைமேற்
குற்றமில் புகலியு ளிகலறு ஞானசம் பந்தன
சொற்றக வுறமொழி பவரழி விவர்துயர் தீருமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - சந்நிதியப்பர். தேவியார் - ஞானவல்லியம்மை.

திருநாலூர்மயானம் - பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

பாலூரு மலைப்பாம்பும் பனிமதியு மத்தமு
மேலூருஞ் செஞ்சடையான் வெண்ணூல்சேர் மார்பினு
னாலூர் மயானத்து நம்பான்ற னடிநினைந்து
மாலூருஞ் சிந்தையர்பால் வந்தூரா மறுபிறப்பே.

ஞாலம் புகழ்காழி ஞானசம் பந்தன்று
னாலு மறையோது நாலூர் மயானத்தைச்
சீலம் புகழாற் சிறந்தேத்த வல்லாருக்
கேலும் புகழ்வானத் தின்பரா யிருப்பாரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-பலாசவனேசர். தேவியார்-பெரியாம்பிகையம்மை.

திருக்குடவாயில் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

திகழுந் திருமா லொடுநான் முகனும்
புகழும் பெருமா னடியார் புகலின்
மகிழும் பெருமான் குடவா யின்மன்னி
நிகழும் பெருங்கோ யினிலா யவனே.

கடிவாய் மலிநீர்க் குடவா யிறனி
னெடுமா பெருங்கோ யினிலா யவனைத்
தடமார் புகலித் தமிழார் விரகன்
வடமார் தமிழ்வல் லவர்நல் லவரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - கோணேசர். தேவியார் - பெரியநாயகியம்மை.

Koviloor Digital Library

திருநறையூர் - பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

நேரிய னாகுமல்ல னொருபாலுமேனி யரியான்மு னாயவொளியா
னீரியல் காலுமாகி நிறைவானுமாகி யுருதியு மாயவொருவ
னாரியல் பிச்சைபேணி யுலகங்களேத்த நலகண்டு பண்டுசுடலை
நாரியோர் பாகமாக நடமாடவல்ல நறையூரி னம்பனவனே.

கானலு லாவியோத மெதிர்மல்குகாழி மிகுபந்தன் முந்தியுணர
ஞானமு லாவுசிந்தை யடிவைத்துகந்த நறையூரி னம்பனவனை
யினமி லாதவண்ண மிசையாலுரைத்த தமிழ்மாலை பத்துநினைவார்
வானமி லாவவல்லர் நிலமெங்குநின்று வழிபாடு செய்யுமிகவே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - சித்தநாதேசர். தேவியார் - அழகாம்பிகையம்மை.

திருப்புத்தூர் - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

வெங்களவிம்மு வெறியார் பொழிற்சோலை
திங்களொடு திளைக்குந் திருப்புத்தூர்க்
கங்கைதங்கு முடியா ரவர்போலு
மெங்களுச்சி யுறையும் மிறையாரே.

நல்லகேள்வி ஞானசம் பந்தன்
செல்வர்சேட ருறையுந் திருப்புத்தூர்ச்
சொல்லபாடல் வல்லார் தமக்கென்றும்
அல்லறீரும் மவலம் மடையாவே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - சொர்ணபுரிசர். தேவியார்-சிங்கேசுவரியம்மை.

அங்கணினி தமருநா ளடல்வெள்ளே னத்துருவாய்ச்
செங்கணெடு மால்பணியுஞ் சிவபுரத்துச் சென்றடைந்து
கங்கைசடைக் கரந்தவர்தங் கழல்வணங்கிக் காதலினாற்
பொங்குமிசைத் திருப்பதிக முன்னின்று போற்றிசைத்தார்.

(இ-ள்.) அங்கணினி தமருநாள்=அத்திருப்பதிகளில் இனிதாக எழுந்தருளி இருக்குநாளில்; செங்கணெடுமால் அடல்வெள்ளேனத் துருவாய்ப் பணியுஞ் சிவபுரத்துச்சென்றடைந்து=சிவந்தகண்களையுடைய நெடுமால்வலியையுடைய சுவேதவராகவடிவாய் வழிபடும் சிவபுரமென்னும் திருப்பதி

Koviloor Digital Library

யைச் சென்றடைந்தருளி; கங்கைசடைக்கரந்தவர் தங்கழல்வணங்கி=கங்காநதியைத் திருச்சடையின்கண் தோன்றாது மறைத்த பிரமபுரீசரது திருவடிகளைவணங்கி; காதலினாற்பொங்குமிசைத் திருப்பதிகமுன்னின்று போற்றிசைத்தார்=விருப்பத்தோடு இசைநிறைந்த திருப்பதிகத்தைத்திருமுன்னின்று துதித்துப் பாடியருளினார்—எ-று. (௬௱௪)

திருச்சிவபுரம் - பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

இன்குர லிசைகெழும் யாழ்முரலத்
தன்கர மருவிய சதுரனகர்
பொன்கரை பொருபழங் காவிரியின்
றென்கரை மருவிய சிவபுரமே.

சிவனுறை தருசிவ புரநகரைக்
கவுணியர் குலபதி காழியர்கோன்
றவமிகு தமிழிவை சாற்றவல்லார்
நவமொடு சிவகதி நண்ணுவரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-பிரமபுரீசர். தேவியார்-பெரியநாயகியம்மை.

போற்றிசைத்துப் புனிதரருள் பெற்றுப்போந் தெவ்வுயிருந்
தோற்றுவித்த வயன்போற்றுந் தோணிபுரத் தந்தணனா
ரேற்றுமிசை யேற்றுவந்த விறைவர்தமை யேத்துதற்கு
நாற்றிசையோர் பரவுதிருக் குடமூக்கு நண்ணினார்.

(இ-ள்.) போற்றிசைத்துப் புனிதரருள்பெற்றுப் போந்து=திருப்பதிகத்தால்துதித்து பிரமபுரீசரதுதிருவருளைப்பெற்று (அத்திருப்பதியினின்றும்) எழுந்தருளி; எவ்வுயிருந்தோற்றுவித்த வயன்போற்றுந் தோணிபுரத்தந்தணனார்=எல்லா உயிர்களையும் படைத்த பிரமன்வணங்குஞ் சீகாழியிலவதரித்த பிள்ளையார் இடபத்தின்மேல் ஏறுதலைவிரும்பிய கும்பேசரைத்துதிப்பதற்கு; நாற்றிசையோர்பரவு திருக்குடமூக்கு நண்ணினார்=நான்கு திசையின்கண் உள்ளோர்பலரும் வணங்கும் கும்பகோணமென்னுந் திருப்பதியை யடைந்தருளினார்—எ-று.

தோணிபுரத்தந்தணனார் நண்ணினாரெனக்கூட்டுக. (௬௱௫)

தேமருவு மலர்ச்சோலைத் திருக்குடமூக் கினிற்செல்வ
மாமறையோர் பூந்தராய் வள்ளலார் வந்தருளத்
தூமறையி னொலிபெருகத் தூரியமங் கலமுழங்கக்
கோமுறைமை யெதிர்கொண்டு தம்பதியுட் கொடுபுக்கார்.

(இ-ள்.) தேமருவுமலர்ச்சோலைத் திருக்குடமூக்கினில் செல்வமாமறையோர்=தேன்பொருந்திய பூக்களையுடைய சோலைசூழ்ந்த திருக்குடந்தை என்னும் திருப்பதியின்கண் உள்ள செல்வம்பொருந்திய பெரியவேதத்தை யுணர்ந்த பிராமணர்கள்; பூர்த்தராய் வள்ளலார்வந்தருள=சீகாழியிலவதரித்த ஆளுடையபிள்ளையார் எழுந்தருள; தூமறையினொலிபெருகத் தூரியமங்கலமுழங்க=குற்றமற்ற வேதத்தின் ஓசை ஓங்கவும் மங்கலவாத்தியங்கள் ஒலிக்கவும்; கோமுறைமையெதிர்கொண்டு தம்பதியுட்கொடுபுக்கார்=அரசர்க்குரிய முறைப்படி பிள்ளையாரை யெதிர்கொண்டு தமது திருப்பதியுட்கொண்டு சென்றார்கள்—எ-று. (சாகூ)

திருஞான சம்பந்தர் திருக்குடமூக் கினைச்சேர
வருவார்தம் பெருமானை வண்டமிழின் றிருப்பதிக்
முருகாநின் றுண்மகிழக் குடமூக்கை யுவந்திருந்த
பெருமானெம் மிறையென்று பெருகிசையாற் பரவினார்.

(இ-ள்.) திருஞானசம்பந்தர் திருக்குடமூக்கினைச் சேரவருவார்=ஆளுடையபிள்ளையார் திருக்குடந்தையென்னும் திருப்பதியை யடையவருபவராய்; தம்பெருமானைவண்டமிழின் றிருப்பதிகம்=தமதுபெருமானாகியகும்பேசரை வளம்பொருந்திய தமிழாகிய திருப்பதிகத்தை; உருகா நின்றுண்மகிழ=திருவுளம்கனிந்து உருகிமகிழ்கூர; குடமூக்கையுவந்திருந்த பெருமானெம் மிறையென்று பெருகிசையாற்பரவினார்=திருக்குடமூக்கென்னும் திருப்பதியைவிரும்பி எழுந்தருளி இருந்தபெருமான் அவன் எம்மிறைவனென்று இறுதியில்வைத்த "அரவிரிகோடநீடல்" என்னும் முதலையுடையதிருப்பதிகத்தை நிறைந்த இசையோடு பாடியருளினார்—எ-று. (சாஎ)

திருக்குடமூக்கு - பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

அரவிரி கோடனீட லணிகாவிரியாரத் தயலெமர
விரிபோது மவ்வன்மணை மல்லிகை கள்ளவிழுங்
குரவிரி சோலைசூழ்ந்த குழகன்குட மூக்கிடமா
யிரவிரி திங்கள்சூடி யிருந்தானவ னெம்மிறையே.

வெண்கொடி மாடமோங்கு விறல்வெங்குரு நன்னகரா
னண்பொடு நின்றபிரான் றமிழ்ஞானசம் பந்தனல்ல
தண்குட மூக்கமர்ந்தா னடிசேர்தமிழ் பத்தும்வல்லார்
விண்புடை மேலுலகம் வியப்பெய்துவர் விடெளிதே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - கும்பேசர். தேவியார் - மங்கலநாயகியம்மை.

Koviloor Digital Library

வந்தணைந்து திருக்கீழ்க்கோ ட்டத்திருந்த வான்பொருளைச்
சிந்தைமகிழ் வுறவணங்கித் திருத்தொண்ட ருடன்செல்வா
ரந்தணர்கள் புடைசூழ்ந்து போற்றிசைப்ப வவரோடுங்
கந்தமலர்ப் பொழில்சூழ்ந்த காரோணஞ் சென்றடைந்தார்.

(இ-ள்.) திருக்கீழ்க்கோட்டத்திருந்த வான்பொருளைவந்தணைந்து=அங்குநின்று அத்திருப்பதியில் திருக்கீழ்க்கோட்டத்தின்கண் எழுந்தருளியமேன்மைபொருந்திய மெய்ப்பொருளான மடந்தைபாகேசரை வந்தடைந்தருளி; சிந்தைமகிழ்வுறவணங்கித் திருத்தொண்டருடன் செல்வார்=திருவுள்ளக்களிப்படையவணங்கி அடியார்கூட்டத்துடன் அங்குநின்றெழுந்தருளும் ஆளுடையபிள்ளையார்; அந்தணர்கள் புடைசூழ்ந்துபோற்றிசைப்ப அவரோடும்=அங்குள்ள குடந்தைமறையவர்கள் தம்பக்கலிற்சூழ்ந்துதுதிக்க அம்மறையவரோடும்; கந்தமலர்ப்பொழில்சூழ்ந்த காரோணஞ்சென்றடைந்தார்=வாசனை பொருந்திய பூக்களையுடைய சோலைசூழ்ந்த திருக்குடந்தைக்காரோணத்தைச் சென்றடைந்தருளினார்—எ-று. (௬௱அ)

பூமருவுங் கங்கைமுதற் புனிதமாம் பெருந்தீர்த்த
மாமகந்தா னாடுதற்கு வந்துவழி படுங்கோயி
றூமருவு மலர்க்கையாற் றொழுதுவலங் கொண்டணைந்து
காமர்கெட நுதல்விழித்தார் கழல்பணிந்து கண்களித்தார்.

(இ-ள்.) பூமருவுங் கங்கைமுதற் புனிதமாம் பெருந்தீர்த்தம்=பூமியின்கண் உள்ள கங்கை யமுனை சரசுவதிமுதலான பரிசுத்தமானபெருமைபொருந்திய புண்ணிய தீர்த்தங்களெல்லாம்; மாமகந்தானாடுதற்குவந்து வழிபடுங்கோயில்=மாசிக்கண்மாமகநாளில் அங்குள்ளவாவிக்கண் மூழ்குதற்குவந்து வழிபாடுசெய்யுங்கோயிலை; தூமருவுமலர்க்கையாற் றொழுதுவலங் கொண்டணைந்து=பரிசுத்தமான மலர்போலும் திருக்கரங்களால் குவித்துவணங்கி பிரதட்சணஞ் செய்துசென்று; காமர்கெடநுதல்விழித்தார் கழல்பணிந்து கண்களித்தார்=மன்மத ...டி நெற்றிக்கண்ணைத்திறந்து நோக்கிய சிவபிரானது திருவடிகளைவணங்கி கண்களிகூர்ந்தார்—எ-று.

காமனைப் பன்மையாற்கூறியது அவனது இழிவுகுறித்து நின்றது. கங்கைமுதலிய புண்ணியதீர்த்தங்கள் காலவிசேடங்களில் வேறுதீர்த்தங்களை அடையும் என்றல் காசிகாண்டமுதலியவற்றிற்காண்க; அவை எவ்வாறுசெல்லுமெனில் அவைகட்கு ஆதிபௌதிகருபமேயன்றி சூட்சுமமான ஆத்தியான்மிகருபம் உண்மையின் அவற்றோடுசெல்லுமெனல் இழுக்கா. (௬௱கூ)

கண்ணாரு மருமணியைக் காரோணத் தாரமுதை
நண்ணாதார் புரமெரித்த நான்மறையின் பொருளானைப்

Koviloor Digital Library

பண்ணார்ந்த திருப்பதிகம் பணிந்தேத்திப் பிறபதியு
மெண்ணார்ந்த சீரடியா ருடன்பணியுற் றெழுந்தருளி.

(இ-ள்.) கண்ணுருமருமணியைக் காரோணத்தாரமுதை= கண்களுக்கு நிறைந்த அரியமாணிக்கத்தைத்திருக்குடந்தைக்காரோணத்தில் எழுந்தருளிய நிறைந்த அமுதத்தை; கண்ணுதார்புரமெரித்த நான்மறையின்பொருளானை= பகைவராகிய அசுரர்களது திரிபுரங்களையெரித்தருளிய நான்குவேதங் களின் பொருளாய் உள்ளவனை; பண்ணார்ந்ததிருப்பதிகம் பணிந்தேத்திப் பிறபதியுமெண்ணார்ந்த சீரடியாருடன் பணிவுற்று எழுந்தருளி=பண்ணமைந் த திருப்பதிகத்தால்வணங்கித்துதித்து அதன்சமீபத்திலுள்ள பிறதிருப்பதி களையும் பெருமைவாய்ந்த திருக்கூட்டத்தோடுவணங்கி அங்குநின்று எழுந் தருளி—எ-று. (சாய)

குடந்தைக்காரோணம்- பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

வாரார்கொங்கை மாதோர்பாக மாக வார்சடை
நீரார்கங்கை திங்கள்சூடி நெற்றி யொற்றைக்கண்
கூரார்மழுவொன் றேந்தியந்தண் குழகன் குடமூக்கிற்
காரார்கண்டத் தெண்டோளெந்தை காரோ ணத்தாரே.

கருவார்பொழில்சூழ்ந் தழகார்செல்வக் குடந்தைக்காரோ ணத்தானை
திருவார்செல்வ மல்குசண்பை திகழுஞ் சம்பந்த [த்
னுருவார்செஞ்சொன் மாலையிவைபத் துரைப்பா ருலகத்துக்
கருவாரிடும்பைப் பிறப்பறுத்துக் கவலை கழிவாரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-சோமநாதேசர். தேவியார்-தேனார்மொழியம்மை.

திருநாகேச் சரத்தமர்ந்த செங்கனகத் தனிக்குன்றைக்
கருநாகத் துரிபுனைந்த கண்ணுதலைச் சென்றிறைஞ்சி
யருஞானச் செந்தமிழின் திருப்பதிக மருள்செய்து
பெருஞான சம்பந்தர் பெருகார்வத் தின்புற்றார்.

(இ-ள்) திருநாகேச்சரத்தமர்ந்த செங்கனகத் தனிக்குன்றை=திருநா கேச்சரத்திலெழுந்தருளிய ஒப்பில்லாதசிவந்தபொன்மலைபோல்வானை; கரு நாகத்துரிபுனைந்த கண்ணுதலை=கரியயானையினது உரிவைபோர்த்த நெற்றிக் கண்ணையுடைய சங்காரகாரணனையே; சென்றிறைஞ்சி=திருமுன்னே சென்றுவணங்கி; அருஞானச்செந்தமிழின் திருப்பதிகமருள்செய்து=பெரு

Koviloor Digital Library

தற்கரிய திருவருள்ஞானம் அமைந்தசெந்தமிழாகிய திருப்பதிகத்தை அருளிச்செய்து; பெருஞானசம்பந்தர் பெருகார்வத்தின்புற்ருர்=மிக்கஞானத்தையுடைய ஆளுடையபிள்ளையார் மிக்ககாதலினுல் இன்பமடைந்தார்—எ-று.

திருநாகேச்சரம் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

பொன்னேர் தருமே னியனே புரியும்
மின்னேர் சடையாய் விளாக்கா விரியி
னன்னீர் வயனு கேச்சர நகரின்
மன்னே யெனவல் வினைமாய்ந் தறுமே.

கலமார் கடல்சூழ் தருகா ழியர்கோன்
றலமார் தருசெந் தமிழின் விரக
னலமார் தருநா கேச்சரத் தரனைச்
சொலமா லைகள்சொல் லநில்லா வினையே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - சண்பகாரணியேசர்.

தேவியார்- குன்றமுலைநாயகியம்மை.

மாநாக மருச்சித்த மலர்க்கமலத் தாள்வணங்கி
நாணாளும் பரவுவார் பிணிதீர்க்கு நலம்போற்றிப்
பானாறு மணிவாயர் பரமர்திரு விடைமருதிற்
பூநாறும் புனற்பொன்னித் தடங்கரைபோய்ப் புகுகின்ருர்.

(இ-ள்.) மாநாகமருச்சித்த மலர்க்கமலத்தாள்வணங்கி=அட்டமாநாகங்களரிச்சித்த தாமரைமலர்போன்ற திருவடிகளைவணங்கி; நாணாளும்பரவுவார் பிணிதீர்க்கு நலம்போற்றி=நாடோறும்வணங்கும் அடியாரது தீவினைநோயை நீக்கியருளும் அவரது திருவருளின்நலத்தைத்துதித்து; பானாறுமணிவாயர் பரமர்திருவிடைமருதில்=சிவஞானப்பால்கமழும் அழகியதிருவாயையுடைய பிள்ளையார் மருதவாணர் எழுந்தருளியதிருவிடைமருதூரின்கண்; பூநாறும் புனற்பொன்னித்தடங்கரைபோய்ப் புகுகின்ருர்=பூக்கமழும் நீர்நிறைந்த காவிரியின் உயர்ந்தகரைவழியேசென்றுபுகுகின்ருர் ஆயினர்—எ-று. ()

ஓங்குதிருப் பதிகமோ டேகலனென் றெடுத்தருளித்
தாங்கரிய பெருமகிழ்ச்சி தலைசிறக்குந் தன்மையினல்
ஈங்கெனையா ளுடையபிரா னிடைமருதீ தோவென்று
பாங்குடைய வின்னிசையாற் பாடியெழுந் தருளினர்.

Koviloor Digital Library

(இ-ள்.) ஒங்குதிருப்பதிகமோடேகலனென்றெடுத்தருளி=ஓடேகலனென்றும் முதலையுடைய உயர்ந்த திருப்பதிகத்தை யெடுத்தருளி; தாங்கரிய பெருமகிழ்ச்சி தலைசிறக்குந் தன்மையினால்=அடங்காத பேரானந்தப் பெருமகிழ்ச்சி தம்மில்மிக்கு ஓங்குந்தன்மையினால்; ஈங்கெனையாளுடைய பிரானிடைமருதீதோவென்று=இவ்விடத்து என்னை ஆளாகவுடையமருதப்பர் எழுந்தருளிய திருவிடைமருதாகிதுவோவென்று இறுதியில்முடித்து; பாங்குடைய வின்னிசையாற் பாடிபெழுந்தருளினார்=இனிய இசையோடு பதிகத்தைப் பாடியருளி அத்திருப்பதியில் சென்றருளினார்—எ-று. (௪௪௩)

திரு இடைமருது- பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

ஓடேகல னுண்பது மூரிடு பிச்சை
காடேயிட மாவது கல்லால் நிழற்கீழ்
வாடாமுலை மங்கையுந் தானு மகிழ்ந்
தீடாவுறை கின்ற விடைமரு தீதோ.

கண்ணார்கமழ் காழியுண் ஞானசம் பந்த
னண்ணார்புக ழெந்தை யிடைமரு தின்மேற்
பண்ணோடிசை பாடிய பத்தும்வல் லார்கள்
விண்ணோருல கத்தினில் வீற்றிருப் பாரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-மருதப்பர். தேவியார்-நல்முலைநாயகியம்மை.

அடியவர்க ளெதிர்கொள்ள வெழுந்தருளி யங்கணைந்து
முடிவில்பரம் பொருளானார் முதற்கோயின் முன்னிறைஞ்சிப்
படியில்வலங் கொண்டுதிரு முன்பெய்திப் பார்மீது
நெடிதுபணிந் தெழுந்தன்பு நிறைகண்ணீர் நிரந்திழிய.

(இ-ள்.) அடியவர்களெதிர்கொள்ள வெழுந்தருளியங்கணைந்து=அத்திருப்பதியின்கண்ணுள்ள அடியார்கள் எதிர்கொண்டுவரத் தாம் அவரோடு எழுந்தருளி அவ்வாலயத்தையடைந்து; முடிவில் பரம்பொருளானார் முதற்கோயின்முன் னிறைஞ்சி=தமக்கொரு இறுதியில்லாத பரம்பொருளாயுள்ள முதல்வரது கோயில்வாயிலின்முன்வணங்கி; படியில்வலங்கொண்டு திருமுன்பெய்தி=அவ்வாலயபூமியில்பிரதட்சணஞ்செய்து திருமுன்னேசென்று; பார்மீது நெடிதுபணிந்தெழுந்தன்பு நிறைகண்ணீர் நிரந்திழிய=பூமியின்மேல் திருமேனிதோயச் சாஷ்டாங்கமாக நெடுநேரம்வணங்கி எழுந்து அன்பால்நிறைந்த ஆனந்தக்கண்ணீர் திருமேனியில் பரவிப்பெருக—எ-று. (௪௪௪)

Koviloor Digital Library

பரவுறுசெந் தமிழ்ப்பதிகம் பாடியமர்ந் தப்பதியில்
விரவுவார் திருப்பதிகம் பலபாடி வெண்மதியோ
டரவுசடைக் கணிந்தவர்தந் தாள்போற்றி யார்வத்தா
லுரவுதிருத் தொண்டருடன் பணிந்தேத்தி யுறையுநாள்.

(இ-ள்.) பரவுறுசெந்தமிழ்ப் பதிகம்பாடியமர்ந்தப்பதியில்விரவுவார்= யாவரும் துதிக்கும் செந்தமிழாகிய திருப்பதிகத்தைப் பாடியருளி அத்திருப் பதியில் எழுந்தருளி இருக்கும் ஆளுடையபிள்ளையார்; திருப்பதிகம் பலபா டி=பின்னுந்திருப்பதிகம் பலவற்றை அங்குபாடியருளி; வெண்மதியோடர வுசடைக்கணிந்தவர் தந்தாள் போற்றி=வெள்ளிய சந்திரனோடு பாம்பினை சடாமகுடத்திலணிந்த சிவபெருமானது திருவடிகளைவணங்கி; ஆர்வத்தாலு ரவுதிருத்தொண்டருடன் பணிந்தேத்தியுறையுநாள்=அன்போடுகலந்த அடி யார் கூட்டத்தோடு வணங்கித் துதித்து அங்கு எழுந்தருளி இருக்கும்நா ளில்—எ-று. (௪௯௫)

திருவிடைமருது - பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

விரிதரு புலியுரி விரவிய வரையினர்
திரிதரு மெயிலவை புனைகணை யினிலெய்த
வெரிதரு சடையின ரிடைமரு தடைபுனல்
புரிதரு மனனவர் புகழ்மிக வுளதே.

பொருகட லடைதரு புகலியர் தமிழொடு
விரகினன் விரிதரு பொழிலிடை மருதினைப்
பரவிய வொருபது பயில வலரிடர்
விரவிலர் வினையொடு வியனுல குறவே.

திருச்சிற்றம்பலம்.

நடைமரு திரிபுர மெரியவுண் ணகைசெய்த
படைமரு தழலெழ மழுவல பகவன்
புடைமரு திளமுகில் வளமமர் பொதுளிய
விடைமரு தடையந மிடர்கெட லெளிதே.

நடமலி புகலியர் தமிழ்கெழும் விரக
னிடைமலி பொழிலிடை மருதினை யிசைசெய்த
படமலி தமிழிவை பரவவல் லார்வினை
கெடமலி புகழொடு கிளரொளி யினரே.

திருச்சிற்றம்பலம்.

Koviloor Digital Library

மருந்தவன் வானவர் தானவர்க்கும்
பெருந்தகை பிறவினோ டிறவுமானோ
னருந்தவ முனிவரோ டாலிழற்கீ
ழிருந்தவன் வளநக ரிடைமருதே.

இலைமலி பொழிலிடை மருதிறையை
நலமிகு ஞானசம் பந்தன்சொன்ன
பலமிகு தமிழிவை பத்தும்வல்லா
ருலகுறு புகழினோ டோங்குவரே.

திருச்சிற்றம்பலம்.

மருங்குளநற் பதிகள்பல பணிந்துமா நதிக்கரைபோய்க்
குரங்காடு துறையணைந்து குழகனார் குரைகழல்கள்
பெருங்காத லிற்பணிந்து பேணியவின் னிசைபெருக
வருங்கலைநூற் றிருப்பதிக மருள்செய்து பாடினார்.

(இ-ள்.) மருங்குளநற்பதிகள்பலபணிந்துமாநதிக்கரைபோய்=அத்திருப்பதியின்பக்கத்திலுள்ள நல்லபலதிருப்பதிகளையும்வணங்கி பெரியகாவிரியின்கரையேசென்று; குரங்காடுதுறையணைந்து=திருக்குரங்காடுதுறையையடைந்தருளி; குழகனார் குரைகழல்கள் பெருங்காதலிற்பணிந்து=என்று மிளையராகிய ஆபத்சகாயரது ஒலிக்கின்ற வீரக்கழலையணிந்த திருவடிகளை மிக்க அன்பால்வணங்கி; பேணிய இன்னிசைபெருக அருங்கலைநூற்றிருப்பதிகமருள்செய்து பாடினார்=யாவரும் விரும்பும் இனிய இசை நிரம்பும்படி அரிய தமிழ்வேதமாகிய திருப்பதிகத்தைப் பாடித்துதித்தார்—எ-று. (௪௯௬)

குரங்காடுதுறை - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

பாவக் கெடும்வல் வினைபா ரிடஞ்சூழ
விரவிற் புறங்காட் டிடைநின் றெரிபாடி
யரவச் சடையந் தணன்மேய வழகார்
குரவப் பொழில்சூழ் குரங்காடு துறையே.

நல்லார் பயில்காழி யுண்ஞான சம்பந்தன்
கொல்லை லுடையான் குரங்காடுதுறைமேற்
சொல்லார் தமிழ்மாலை பத்துந் தொழுதேத்த
வல்லா ரவர்வா னவரோ டுறைவாரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமி பெயர்-ஆபத்சகாயர். தேவியார்-பவளக்கொடியம்மை.

Koviloor Digital Library

வேறு.

அம்மலர்த்தடம் பதிபணிந் தகன்றுபோந் தருகு
மைம்மலர்க்களத் திறைவர்தங் கோயில்கள் வணங்கி
நம்மலத்துயர் நீங்கவந் தருளிய ஞானச்
செம்மலார்திரு வாவடு துறையினைச் சேர்ந்தார்.

(இ-ள்.) அம்மலர்தடம்பதி பணிந்தகன்றுபோந்து=அந்தப் பூக்களையுடைய தடாகஞ்சூழ்ந்த திருப்பதியைவணங்கி அங்கு நின்றுஞ் சென்றருளி; அருகுமைம்மலர்க்களத்திறைவர்தங் கோயில்கள்வணங்கி=அதன் பக்கலிலுள்ள கருமைபொருந்திய நீலமலர்போலும் கண்டத்தையுடைய சிவபிரானெழுந்தருளிய திருக்கோயில்கள் பலவற்றையும்வணங்கி; நம்மலத்துயர் நீங்கவந்தருளிய ஞானசெம்மலார்=நமது அஞ்ஞானத்தாலாகிய கிலேசம் கெடும்படி அவதரித்த ஆளுடையபிள்ளையார்; திருவாவடுதுறையினைச் சேர்ந்தார்=திருவாவடுதுறையென்னுந் திருப்பதியை அடைந்தருளினார்—எ-று.

மலத்துயர் அஞ்ஞானத்தாலாகியதுன்பம்; அது சரீரம்நானென்றும் சுகவிடயம் துக்கவிடயங்களை அறிந்து இது சுகம் இது துக்கமெனவும் உணர்ந்து அவ்வுணர்ச்சிவாயிலாய்ப் புத்தியிற்றோன்றும் சுகதுக்கங்களை நான்சுகி நான் துக்கியென விபரீதமாய் உணர்தல்; இவ்விபரீத உணர்ச்சி இதமஹிதங்களின்வினைத்துப்புண்ணியபாவங்கட்கு இடமாதலிற் றுக்கமெனப்படும். (௪௪௭)

மூவருக்கறி வரும்பொரு ளாகிய மூலத்
தேவர்தந்திரு வாவடு துறைத்திருத் தொண்டர்
பூவலம்புதண் பொருபுனற் றடம்பணைப் புகலிக்
காவலர்க்கெதிர் கொள்ளுமா தரவுடன் கலந்தார்.

(இ-ள்) மூவருக்கறிவரும்பொருளாகிய=பிரமன் விண்டு காலாக்கினிருத்திரர் என்னும் மும்மூர்த்திகட்கும் அறிதற்கரிய மெய்ப்பொருளாகிய; மூலத்தேவர்தம் திருவாவடுதுறைத்திருத்தொண்டர்=பிரமன் விண்டு உருத்திரரென்னும் மும்மூர்த்திகட்கும் முதல்மூர்த்தியாக எழுந்தருளிய மாசிலாமணியீசரது திருவாவடுதுறையின்கண் வாழும் திருவடியார்கள்; பூவலம்புதண் பொருபுனற்றடம்பணைப்புகலிக்காவலர்க்கு=பூவுடன் ததும்பும் குளிர்ந்த கரையில் அலைவீசுகின்ற நீர்நிறைந்த பெரிய வயல்களையுடைய சீகாழித்தலைவராகிய ஆளுடைய பிள்ளையாருக்கு; எதிர்கொள்ளுமாதரவுடன் கலந்தார்=எதிர்கொள்ளும் விருப்புடன் சேர்ந்துவந்தார்—எ-று.

குணாதீதராய் மும்மூர்த்திகட்கும் முதற்பொருளாகியசிவபிரான் உலகுக்கனுக்கிரகிக்கும்பொருட்டு மும்மூர்த்திகளுள் ஒருவராகியஉருத்திரமூர்த்தியிலபேதமாய்க்கலந்து காமதகனமுதலியநிக்கிரகமும், சுவேதோபமன்னியர் அறுபத்துமூவர் முதலிய பத்தர்க்கனுக்கிரகமுஞ்செய்து ஸ்ரீகயிலாசத்தில் எழுந்தருளியிருப்பர்; அதனால் அவ்வுருத்திரமூர்த்தி அச்சிவபிரானோடு வேறுபாடின்

Koviloor Digital Library

மையின் ஈண்டு மூவரென்றது பிரம விட்டுணு காலாக்கினி உருத்திரரென்னும் மூவருமென்கும். இவராலறியப்படாத மூலத்தேவரென்றதனால் உருத்திரமூர்த்தியோடுவேறறச்சிவபிரானிற்கிற்பரென்பதும்பெறப்படும். பிரமவிட்டுணு காலாக்கினி உருத்திரரென்னும் மூவராலறியப்படா ரென்றதென்னை? இம்மூவரும் சிவலோக கைலாயமேரு சிகரமென்னும் மூவிடத்திருந்து நிக்கிரக மநுக்கிரகம் புரிந்தருளும் அவ்வுருத்திரமூர்த்தியின் திருவருளால் சத்திய உலகிற்குக் கீழ்ப்பட்ட புவனங்களையும் தூல உடம்புகளையும் போக்கியப் பொருள்களையும் படைத்துக்காத்து அழிக்கும் முத்தொழில்களையும் முறையே செய்வர், அதனால், இவர்சாஞ்சனராய் இரும்புசுடுகின்றது என்முற்போலச்செயற்கையாய் ஒரோர் தொழில்செய்வர் அதனாலிவர், சிவபிரானையறியாரென அறிஞர் கூறுவர்.

இவர்கட்குப் பிரேரியராய் நிற்கும் உருத்திரமூர்த்தி சிவபிரானோடு அபேதரென்றல் சிவபிரான் மும்மூர்த்திகளைப்படைத்துத் தமோகுணத்தைக் கீழ்ப்படுத்தவல்லார்தம்புத்திரரென அவர்க்காஞ்ஞாபிக்கப் பிரமவிட்டுணுக்கள் அதைக்கீழ்ப்படுத்தும் ஆற்றலிலராக உருத்திரமூர்த்தி அதைக்கீழ்ப்படுத்தி ஆனந்த நிருத்தம் செய்யுங்கால் அவரோடு சிவபிரான் வேறறக்கலந்தார், என்னும் குருசம்மிதையின் சரிதத்தானும் "இருவரோடொருவனாகிநின்றனை" என்னும் அநுடையபிள்ளையார் திருவெழுகூற்றிருக்கையானும் "சாவமுன்னுட்டக்கன் வேள்விதகர்த்தின்று நஞ்சமஞ்சி ஆவவெந்தாயென் றவிதாவிடு நம்மவரவரே மூவ ரென்றேயெம்பிரானொடுமெண்ணி" என்னுந்திருவாசகத்தானும் அறிக. திருவாசகத்து மூத்து நம்வு முடிவுமாகிய என்றுமிடத்தும் மூவரும் அறிகிலரென்றுமிடத்தும் மேற்கூறிய மூவருமென்றே பொருள் கொள்ளவேண்டும்.

மூவரினுமுதலாய் நடுவாய மூர்த்தியையன்றி என்னுந்திருக்கடைகாப்பினும் மூவர்க்கு முதல்வனுப் நின்முய்யே என்றுந்திருத்தாண்டகத்தும் சிவபிரான் மும்மூர்த்திகட்கும் அதிதரென்பது போந்ததேயன்றி உருத்திரமூர்த்தியாலறியப்படாரென்பது போதராமையும்முகித்துணர்க. இனிச்சிவபெருமான் எல்லாப்பொருள்களையுஞ் சம்மரிப்பர் அதனால் தாமதகுணமுடையவரெனின் நன்குசொன்னுப் பிரம விட்டுணுக்கள் சிருட்டி கிருத்தியம் திதி கிருத்தியம் ஆகிய ஒரோர் கருமமுடையர் சம்மாரத்தொழில் செய்யும் வன்மையுடையரல்லர் அதனால் அவர்களோடு பிரபஞ்சத்தைத் தானே சம்மரித்துப் பின்பு ஆதிசிருட்டியில் அவர்களையும் பிரபஞ்சத்தையும் சிருட்டிப்பர்; அச்சம்மாரத்தொழிலாற் செயற்கையாய்த் தமோகுணங் கூறப்பட்டதேயன்றி இயற்கையாய்ச் சத்துவகுணம் உடையரென்பதுணர்க. அவ்வாறு காந்தத்தில் சிவபிரான் உள்ளே சத்துவகுணமும் புறம்பேதமோகுணமும்உடையரென்றும் விட்டுணு உள்ளே தமோகுணமும் புறம்பே சத்துவகுணமும் பிரமன் உள்ளும் புறம்பும் இராசோகுணமுமுடையரென்றகூறப்படும். சிவபிரான் சர்வசம்மாரத்தைச்செய்து சாந்தராய் அழியாதிருக்கின்முரென ஸ்ரீமிருகேந்திர ஆகமத்து

Koviloor Digital Library

ங்கூறப்பட்டது. அதனால் அவாந்தரப் பிரளயங்களில் இம்மூவரும் சங்கரிக்கப்படுகையால் உருத்திரமூர்த்தியின் ஏகதேசகாலத்தில் அனேக பிரமர்களும் அனேக விட்டுணுக்களும் அனேககாலாக்கினி உருத்திரர்களும் மாறிமாறி வருவர் என்றறிக.

இன்னும் ஸ்ரீ உருத்திரமூர்த்தியும் ஸ்ரீகாலாக்கினி உருத்திரரும் சம்மாரத்தொழிலுடையரோனும் ஞானும்சமானசத்துவகுணமுடையரென்பதுமுணர்க.

வந்தணைந்தவர் தொழாமுன மலர்புகழ்ச் சண்பை
யந்தணர்க்கெலா மருமறைப் பொருளென வந்தார்
சந்தநித்திலச் சிவிகைநின் றிழிந்தெதிர் தாழ்ந்தே
சிந்தையின்புற விறைவர்தங் கோயின்முன் சென்றார்.

(இ-ள்.) வந்தணைந்தவர்தொழாமுனம்=வந்தணைந்த அடியார்கள்வணங்குதற்குமுன்; மலர்புகழ்ச்சண்பை அந்தணர்க்கெலா மருமறைப் பொருளெனவந்தார் = பரந்த புகழையுடைய சீகாழியில் மறையவர்களுக்கெல்லாம் அரிய வேதத்தின் பொருளைப்போல அவதரித்த பிள்ளையார்; சந்தநித்திலச்சிவிகை நின்று இழிந்து எதிர்தாழ்ந்து=அழகிய முத்தாலாகிய திருச்சிவிகையினின்று இறங்கி எதிரேவணங்கி; சிந்தையின்புற விறைவர்தங்கோயின் முன்சென்றார்=தமது திருவுள்ளம்மகிழ மாசிலாமணியீசரது திருக்கோயின்முன் அடைந்தருளினார்—எ-று.

பிள்ளையார் எதிர்கொண்டுவந்த அடியார்கள் வணங்குமுன் தாமும் சிவிகையினின்று இழிந்து எதிர்வணங்கிச் சென்றாரெனக்கூட்டுக. (சகக)

நீடுகோபுர மிறைஞ்சியுள் புகுந்துநீ ணிலைபான்
மாடுசூழ்திரு மாளிகை வலங்கொண்டு வணங்கி
யாடுமாதியை யாவடு துறையுளா ரமுதை
நாடுகாதலிற் பணிந்தெழுந் தருந்தமிழ் நவின்றார்.

(இ-ள்.) நீடுகோபுர மிறைஞ்சியுள்புகுந்து=நீண்ட திருக்கோபுரத்தை வணங்கி யுள்ளேசென்று; நீணிலையால் மாடுசூழ் திருமாளிகை வலங்கொண்டுவணங்கி=உயர்ந்த அடுக்குகளோடு பக்கத்திற் சூழ்ந்த திருமாளிகைப்பத்தியைப் பிரதட்சணஞ்செய்து வணங்கி; ஆடும் ஆதியை ஆவடுதுறையுளாரமுதை=பொன்னம்பலத்தில் ஆனந்தநடனஞ்செய்யும் முதல்வனைத் திருவாவடுதுறையிலெழுந்தருளிய அரிய அமுதினை; நாடுகாதலிற் பணிந்தெழுந்தருந்தமிழ்நவின்றார்=நாடிய மிக்க விருப்பத்தால் வணங்கியெழுந்து அரிய திருப்பதிகத்தைப்பாடியருளினார்—எ-று. (சஉ0)

அன்புநீடிய வருவிகண் பொழியுமா ரவத்தான்
முன்புபோற்றியே புறம்பணை முத்தமிழ் விரகர்
துன்புபோமனத் திருத்தொண்டர் தம்முடன் றொழுதே
யின்பமேவியப் பதியினி லினிதமர்ந் திருந்தார்.

(இ-ள்.) அன்புநீடிய வருவிகண் பொழியுமார்வத்தால்=அன்பு காரணமாக உதிக்கும் ஆனந்தக்கண்ணீர்கண்ணினின்றும் சொரியத்தக்க விருப்புடன்; முன்புபோற்றியே புறம்பணைமுத்தமிழ்விரகர் = மாசிலாமணியீசரது திருமுன்புவணங்கி ஆலயத்தின் புறம்பே எழுந்தருளும் ஆளுடையபிள்ளையார்; துன்புபோமனத் திருத்தொண்டர் தம்முடன் தொழுது = துன்பலேசமும் தம்மிடத்தில்லாத மனத்தையுடைய அடியார் திருக்கூட்டத்தாருடன் கலந்து வணங்கி; இன்பமேவியப் பதியினிலினிதமர்ந்திருந்தார் = பேரின்படைந்து அத்திருப்பதியில் இனிதாக எழுந்தருளியிருந்தார்—எ-று.

அகமும் புறம்புமாய உடம்பு, பொருள், முதலியவற்றுலாய எப்பற்றும் அற்று இறைவன்பற்றொன்றையே தலைப்பட்டாராதலில் துன்புபோ மனத்திருத்தொண்டர் என்றார்; எனவே துன்ப நீக்கத்தின்கண் சிவானந்தப்பேறுடையரெனப் போந்தவாறு காண்க. (௪௨௧)

மேவியந்துறை நாளினில் வேள்விசெய் வதனுக்
காவதாகிய காலம்வந் தணைவுற வணைந்து
தாவில்சண்பையர் தலைவர்க்குத் தாதையார் தாமும்
போவதற்கரும் பொருள்பெற வெதிர்நின்று புகன்றார்.

(இ-ள்.) மேவியந்துறைநாளினில்=அத்திருவாவடுதுறையென்னுந்திருப்பதியில் பொருந்தி எழுந்தருளியிருக்குங்காலத்தில்; வேள்விசெய்வதனுக்காவதாகிய காலம்வந்தணைவுற=யாகம்செய்தற்கு தக்ககாலம்வர; தாவில்சண்பையர் தலைவர்க்குத்தாதையார் தாமும் அணைந்து=குற்றமற்ற சீகாழியிலுள்ளார் தலைவராகிய ஆளுடைய பிள்ளையார் தந்தையராகிய சிவபாத இருதயரும் அப்பிள்ளையாரை அணைந்து; போவதற் கரும் பொருள்பெற வெதிர் நின்று புகன்றார்=யாகநிமித்தம் செலவை யடையும்படி அரியபொன்னைப் பெறுதற்கு பிள்ளையார் திருமுன்னே நின்றுமொழிந்தார்—எ-று.

சிரௌதகன்மம் நித்தியமென்றும் நைமித்திகமென்றும் காமியமென்று மூவகைப்படும். சாயங்காலம் உதயகாலம் இவைகளில் நியமமாகச் செய்யத்தக்கதாகவிதிக்கப்படும் அக்கினிகோத்திரம் முதலியன நித்தியங்கள், அக்கினிகோத்திரம் தெரிச பூர்ணமாசம் முதலியன வழுவுங்கால் அவை செய்யாமையால் வருந் தாழ்விற் குற்றம் போம்படி செய்யும் பதிக்ருதிட்டி முதலியன. நைமித்திகங்கள். இம்மையிற் பலிப்பனவும் மறுமையிற் பலிப்பனவுமாகிய பயன்களை விரும்பிச்செய்யும் இட்டிகள்காமியம் என்னப்படும். இம்மையிற்பலிப்பன மழைமுதலியன விரும்பிச்செய்யுங் காரியமுதலிய யாகங்கள் மறுமையிற்பலிப்பன சொர்க்கபலனை விரும்பிச்செய்யும் சோதிட்டோம முதலியன; இவைகளுள் நித்தியமாய தெரிச பூர்ணமாசம் மாசங்கள்தோறும் அமாவாசை பூர்ணிமைகளில் செய்யத்தக்கன; இவைசெய்பவர் நிருட பசுபந்தம் முதலியன கருடமுதலில் கார்காலத்திற்செய்தற்குரியன வாதலின் ஆனி யாடியாகிய முதுவேனினீங்கி ஆவணிபுரட்டாசியாகிய கார்ப்பருவம் வருதலின்

Koviloor Digital Library

வேள்விசெய்வதனுக்காவதாகிய காலம் வந்தணைவுற என்றார். கார்காலத்திற் பூரணையிலாவது அமாவாசியிலாவதுபசுவேட்கவென ஆபத்தம்பத்தும் கூறப்படும். (௪௨௨)

தந்தையார்மொழி கேட்டலும் புகலியார் தலைவர்
முந்தைநாளிலே மொழிந்தமை நினைந்தருண் முன்னி
யந்தமில்பொரு ளாவன வாவடு துறையு
ளெந்தையாரடித் தலங்களன் றேயென வெழுந்தார்.

(இ-ள்.) தந்தையார் மொழிகேட்டலும் புகலியார்தலைவர்=தமது தாதையாராகிய சிவபாத இருதயர்கூறிய சொல்லைக்கேட்டபொழுது சீகாழியின் உள்ளார்க்குத் தலைவராகிய ஆளுடைய பிள்ளையார்; முந்தைநாளிலே மொழிந்தமை நினைந்தருண் முன்னி=தமிழ்நாடுமுழுதும் யாத்திரைசெய்யக்கருதிப் புறப்படுங்காலத்தில் அவர் தம்முடன் யாகஞ் செய்யவேண்டுமென்று கூறியதையும் திருவுள்ளத்திற்கருதிச் சிவபெருமானது திருவருளைச்சிந்தித்து; அந்தமில்பொருளாவன=அழிவில்லாதபொருளாய் எமக்குள்ளன; ஆவடுதுறையுளெந்தை யாரடித்தலங்களன்றேயென வெழுந்தார்=திருவாவடுதுறையின்கண் எழுந்தருளிய எமதுபிரானாகிய மாசிலாமணி யீசரது திருவடிகளன்றே என்று அங்கு எழுந்தருளினார்—எ-று. (௪௨௩)

சென்றுதேவர்தம் பிரான்மகிழ் கோயின்முன் பெய்தி
நின்றுபோற்றுவார் நிணிதி வேண்டினூர்க் கிவ
தொன்றுமற்றிலே னுன்னடி யல்லதொன் றறியே
னென்றுபேரருள் வினவிய செந்தமி ழெடுத்தார்.

(இ-ள்.) சென்றுதேவர்தம்பிரான்மகிழ்கோயின்முன்பெய்தி=அடியார் திருக்கூட்டத்தோடுசென்று மாசிலாமணியீசரெழுந்தருளிய திருக்கோயிலின் முன்அடைந்தருளி; நின்றுபோற்றுவார்=திருமுன்னின்றுதுதிக்கும் ஆளுடையபிள்ளையார்; நிணிதிவேண்டினூர்க்கிவதொன்றுமற்றிலேன்=மிக்கபொருளை விரும்பி எம்மைவந்தடைந்தார்க்குக் கொடுக்குஞ் செல்வப்பொருள் பிறிதொன்றுமில்லேன்; உன்னடி யல்லதொன்றறியேனென்று=உனது திருவடிகளை அல்லது பிறிதொன்றையு மறியேன் என்று; பேரருள் வினவிய செந்தமிழெடுத்தார்=அச்சிவபிரான் திருவருளினைப்(பொருள்கருதி) வினவிய "இடரினுந் தளரினு" மென்னும்முதலையுடைய திருப்பதிகத்தை எடுத்தருளினார்—எ-று. ()

திருச்சிற்றம்பலம்.

திருவாவடுதுறை-நாலடிமேல்வைப்பு - பண்-காந்தாரபஞ்சமம்.

இடரினுந்தளரினுமெனதுறுநோய் தொடரினுமுனகழற் றொழுதெழுவேன், கடறனிலமுதொடு கலந்தநஞ்சை மிடறினிலடக்கியவேதியனே, யிதுவோவெமையாளுமாறீவ தொன்றெமக்கில்லையேல், லதுவோவுனதின்னரு ளாவடுதுறையரனே. (க)

Koviloor Digital Library

வாழினுஞ்சாவினும்வருந்தினும்போய் வீழினுமுனகழல்விடுவே னல்லேன், றாழிளந்தடம்புனறயங்குசென்னி போழிளமதிவைத்த புண்ணியனே, யிதுவோவெமையாளுமாறீவ தொன்றெமக்கில்லையே, லதுவோவுனதின்னரு ளாவடுதுறையானே. (௨)

நனவிலுங்கனவிலுநம்பாவுன்னை மனதிலும்வழிபடன் மறவேனம்மான், புனல்விரிநறுங்கொன்றைப் போதணிந்த கனலெரியனல்புல்குகையவனே, யிதுவோவெமையாளுமாறீவ தொன்றெமக்கில்லையே, லதுவோவுனதின்னரு ளாவடுதுறையானே. (௩)

தும்மலோடருந்துயர்தோன்றிடினு மம்மலரடியலா லரற்றாதென்னாக், கைமல்குவரிசிலைக்கணையொன்றினான் மும்மதிலெரியெழமுனிந்தவனே, யிதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையே, லதுவோவுனதின்னரு ளாவடுதுறையானே. (௪)

கையதுவீழினுங்கழிவுறினுஞ் செய்கழலடியலாற் சிந்தைசெய்யேன், கொய்யணிநறுமலர் குலாயசென்னிமையணி மிடறுடைமறையவனே, யிதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையே, லதுவோவுனதின்னரு ளாவடுதுறையானே. (௫)


வெந்துயர்தோன்றியோர்வெருவுறினுமெந்தாயுன்னடியலாலேத்தாதென்னா, வைந்தலையரவுகொண்டரைக்கசைத்த சந்தவெண்பொடியணிசங்கரனே, யிதுவோவெமையாளுமாறீவ தொன்றெமக்கில்லையே, லதுவோவுனதின்னரு ளாவடுதுறையானே. (௬)

வெப்பொடுவிரவியோர்வினைவரினு மப்பாவுன்னடியலாலரற்றாதென்னா, வொப்புடையொருவனையுருவழிய வப்படியழலெழவிழித்தவனே, யிதுவோவெமையாளு மாறீவதொன்றெமக்கில்லையே, லதுவோவுனதின்னரு ளாவடுதுறையானே. (௭)

பேரிடர்பெருகியோர் பிணிவரினுஞ்சீருடைக்கழலலாற் சிந்தைசெய்யே, னேருடைமணிமுடியிராவணனைபாரிடர்படவரையார்த்தவனே, யிதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையே, லதுவோவுனதின்னரு ளாவடுதுறையானே. (௮)

உண்ணினும்பசிப்பினுமுறங்கினுநின் னொண்மலரடியலாலுரையாதென்னாக், கண்ணனுங்கடிகமழ்தாமரைமேலண்ணலுமளப்பரிதாயவனே, யிதுவோவெமையாளுமாறீவ தொன்றெமக்கில்லையே, லதுவோவுனதின்னரு ளாவடுதுறையானே. (௯)

Koviloor Digital Library



திருவாவடுதுறை

[illegible]
[illegible]

Koviloor Digital Library

பித்தொடுமயங்கியோர்பிணிவரினுமத்தவுன்னடியலாலசற்றுதெ ன்னுப், புத்தருஞ்சமணரும்புறனுரைக்கப் பத்தர்கட்கருள்செய்துப யின்றவனே; யிதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையே, ல துவோவுனதின்னருளாவடுதுறையானே. (௰)

அலைபுனலாவடுதுறையமர்ந்த விலைநுனை வேற்படைபெம்மிறை யை, நலமிகுஞானசம்பந்தன்சொன்னவிலையுடையருந்தமிழ்மாலைவல் லார், வினையாயினநீங்கிப்போய்விண்ணவர்வியனுலகம், நிலையாகமுன் னேறுவார்நிலமிசைநிலையிலரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - மாசிலாமணியீசர்.

தேவியார் - ஒப்பிலாமுலையம்மை.

எடுத்தவண்டமிழ்ப் பதிகநா லடியின்மே லிருசீர்
தொடுத்தவைப்பொடு தொடர்ந்தவின் னிசையினுந் துதிப்பார்
மடுத்தகாதலில் வள்ளலாரடியிணை வழுத்தி
யடுத்தசிந்தையா லாதரித்தஞ்சலி யளித்தார்.

(இ-ள்.) எடுத்தவண்டமிழ்ப்பதிகம்=அங்கு எடுத்தருளிய வண்மையை யுடைய தமிழ்ப்பதிகத்தை; நாலடியின்மேலிருசீர் தொடுத்தவைப்பொடு= நாலடியின்மேல் இருசீர் தொடுத்த ஈரடிவைப்போடு; தொடர்ந்தவின்னிசை யினுந் துதிப்பார்=ஒற்றுமைப்பட்ட இனிய இசையுடன்பாடியருளும் பிள்ளை யார்; மடுத்தகாதலில் வள்ளலாரடியிணை வழுத்தி=தமதுளத்துநிறைந்த வி ருப்பத்தால் மாசிலாமணியீசரது இரண்டுதிருவடிகளையுந் துதித்து; அடுத்த சிந்தையா லாதரித்தஞ்சலியளித்தார்=அவரிடத்துநீங்காது தொடர்ந்தமனக் கருத்தால்விரும்பிக் கைகுவித்து வணங்கினர்—எ-று. (௪௨௫)

நச்சியின்றமிழ் பாடிய ஞானசம் பந்த
ரிச்சையேபுரிந் தருளிய விறைவரின் னருளா
லச்சிறப்பருள் பூதமுன் விரைந்தகன் பீடத்
துச்சிவைத்தது பசும்பொனு யிரக்கிழி யொன்று.

(இ-ள்.) நச்சியின்றமிழ்பாடியஞானசம்பந்தர்=தந்தையாருக்குப் பொ ருளீதலைவிரும்பி இனியதிருப்பதிகம்பாடிய ஆளுடையபிள்ளையாரது; இச் சையேபுரிந்தருளிய விறைவரின்னருளால்=மனக்கருத்தின்படியே கொடுத் தருளிய மாசிலாமணியீசரது இனியதிருவருளினால்; அச்சிறப்பருள்பூதம்= அவர்விரும்பிய அப்பொருட்சிறப்பை அருளும்படி ஓர்சிவபூதமானது; முன்

Koviloor Digital Library

விளைந்த பசும்பொனுயிரக்கிழியொன்று அகன்பீடத்துச்சிவைத்தது=பிள்ளையார் முன்னேவிளைந்துவந்து பசிய ஆயிரம் பொன்முடிந்த முடிப்பொன்றை இடமகன்ற பலிபீடத்துச்சியின்மேல் வைத்தது—எ-று. (சஉகு)

வைத்தபூதமங் கணைந்துமுன் னின்றுநல் வாக்கா
லுய்த்தவிக்கிழி பொன்னுல வாக்கிழி யுமக்கு
நித்தனாருள் செய்ததென் றுரைக்கநேர் தொழுதே
யத்தனார்திரு வருணினைந் தவனிமேற் பணிந்தார்.

(இ-ள்.) வைத்தபூதமங்கணைந்து முன்னின்று நல்வாக்கால்=பலிபீடத்தின்மேல் பொன்முடிப்பை வைத்தபூதமானது பிள்ளையார் திருமுன்னேகிட்டிநின்று இனிய சொல்லினால்; உய்த்தவிக்கிழி பொன்னுலவாக்கிழி=நான் வைத்த இம்முடிப்பு பொன்னையெடுக்குந்தோறும் குறையாத உலவாக்கிழியாம்; உமக்கு நித்தனாருள்செய்ததென்றுரைக்க=உமக்கு மாசிலாமணியீசர் அருளிச்செய்ததென்றுகூற; நேர்தொழுது அத்தனார் திருவருணினைந்தவனிமேற்பணிந்தார்=பூதத்தின்நேரில்கைகூப்பிவணங்கிஅச்சிவபெருமானது திருவருளைநினைந்து நிலத்தின்மேல்திருமேனிதோயவணங்கினார்—எ-று. ()


பணிந்தெழுந்துகை தொழுதுமுன் பனிமலர்ப்பீடத்
தணைந்தவாடகக் கிழிதலைக் கொண்டரு மறைக
ணிணிந்தவான் பொருடரும்பொரு டேயவாப் மையினற்
றணிந்தசிந்தையத் தந்தையார்க் களித்துணை செய்வார்.

(இ-ள்.) பணிந்தெழுந்து கைதொழுது=பூமியில் அட்டாங்கவிதிப்படி வணங்கி எழுந்துகைகூப்பி அஞ்சலிசெய்து; முன்பனிமலர்ப்பீடத் தணைந்த வாடகக் கிழிதலைக்கொண்டு=தம் திருமுன்புகுளிர்ந்த தாமரைமலர்போலும் பத்திரபீடத்தின்கண் இருக்கின்றபொற்கிழியைச் சிரமேற்சூடிக்கொண்டு; அருமறைகணிணிந்த வான்பொருள்தரும்பொருள்=அரியவேதங்களால் நிச்சயிக்கப்பட்ட பெரிய மெய்ப்பொருளாகிய மாசிலாமணியீசர் அருளிய ஆயிரம் பொன்னையும்; தூயவாய்மையினற் றணிந்தசிந்தை யத்தந்தையார்க்களித்துணைசெய்வார்=பரிசுத்தமான மெய்யுணர்ச்சியால் சாந்தமடைந்த உள்ளத்தையுடைய தமது தந்தையாராகிய சிவபாத இருதயருக்குக்கொடுத்து அவர்க்குத்திருவாய்மலர்ந்தருளுவாராயினர்—எ-று. (சஉஅ)

ஆதிமாமறை விதியினா லாறுசூழ் வேணி
நாதனாமுன் னாகவே புரியுநல் வேள்வி
தீதுநீங்கநீர் செய்யவுந் திருக்கழுமலத்து
வேதவேதிய ரனைவருஞ் செய்யவு மிருமால்.

(இ-ள்.) ஆதிமாமறை விதியினால்=முதன்மையான பெரியவேதங்கள் விதித்தமுறைமையினால்; ஆறுசூழ் வேணிநாதனாமுன்னாகவே புரியுநல் வேள்வி=கங்காநதிபாய்கின்ற சடையையுடைய சிவபெருமானை முதல்வ

Koviloor Digital Library



திருவாவடுதுறை

திருஞானசம்பந்தர் பலிபீடத்தில் வைத்த உலவாக்கிழியைச் சிரமேற்றாங்கி
ஆநந்தித்துத் தந்தைகையில் அளித்தது.

Koviloor Digital Library

ராகக்கொண்டு செய்கின்றநல்லயாகத்தை; தீதுநீங்க நீர்செய்யவும்=குற்ற மற நீர்செய்யவும்; திருக்கழுமலத்துவேதவேதியரனைவருஞ் செய்யவும்மிகு ம்=சீகாழியின்கண் உள்ள வேதங்களையுணர்ந்த மறையவரெல்லோரும் செ ய்யவும் (இப்பொருள் நாடோறும் குறைவின்றி) மிக்கிருக்கும்—எ-று.

யாகவுருவர் திருமாலும் யாகமுதல்வர் சிவபெருமானும் ஆகலின் நாத னை முன்னாகவேபுரியும் வேள்வி என்றும், யாகத்திற்குரிய நெய்முதலிய ஓமப்பொருள்களின் குறைவும்தக்ஷிணை மறையவருண்டிமுதலிய பொருளா லாய குறைவும் நீங்க என்பார் தீதுநீங்க என்றுங்கூறினர். (சஉக)

என்றுகூறியங் கவர்தம்மை விடுத்தபினவரு
நன்றுமின்புறு மனத்தொடும் புகலிமே னண்ண
வென்றிஞானசம் பந்தரும் விருப்பொடு வணங்கி
மன்றலாவடு துறையினின் மகிழ்ந்தினி திருந்தார்.

(இ-ள்.) என்றுகூறியங்கவர்தம்மைவிடுத்தபின்=இவ்வாறு கூறியருளி அச்சிவபாதஇருதயரை ஊர்க்குச்செல்ல அநுமதிகொடுத்து விடுத்தபின்பு; அ வருநன்றுமின்புறுமனத்தொடும் புகலிமேனண்ண=அச்சிவபாதஇருதயரும் நன்மையும் இன்பமும் கூடிய மனத்துடன் சீகாழிக்கண்செல்ல; வென்றி ஞானசம்பந்தரும் விருப்பொடுவணங்கி=வெற்றியையுடைய ஆளுடையபிள் ளையாரும் விருப்பத்தோடு மாசிலாமணியீசரைவணங்கி; மன்றலாவடுதுறை யினின் மகிழ்ந்தினிதிருந்தார்=மலர்மணங்கமழும் திருவாவடுதுறை என்னும் திருப்பதியில் மகிழ்ச்சியடைந்து இனிதாக எழுந்தருளியிருந்தார்—எ-று.

அண்ணலார்திரு வாவடு துறையமர்ந் தாரை
யுண்ணிலாவிய காதலி னற்பணிந் துறைந்து
மண்ணெலாமுய வந்தவர் போந்துவார் சடைமேற்
றெண்ணிலாவணி வார்திருக் கோழம்பஞ் சேர்ந்தார்.

(இ-ள்) அண்ணலார் திருவாவடுதுறையமர்ந்தாரை=பெருமையிற் சிற ந்தோராகிய திருவாவடுதுறையின்கண் எழுந்தருளிய மாசிலாமணியீசரை; உண்ணிலாவிய காதலினாற் பணிந்துறைந்து=தமதுள்ளத்தின்கண் னிறைந்த விருப்பத்தினால் வணங்கி வாசஞ்செய்து; மண்ணெலாமுய்யவந்தவர்போந் து=நிலவுலகத்தாருய்ய அவதரித்த ஆளுடையபிள்ளையார் அங்குநின்றுஎழுந் தருளி; வார்சடைமேல் தெண்ணிலாவணிவார்திருக்கோழம்பஞ்சேர்ந்தார்= நீண்டசடையின்மேல் தெள்ளியகிரணத்தையுடைய சந்திரனைஅணிந்த இறை வரது திருக்கோழம்பமென்னும்திருப்பதியையடைந்தருளினார்—எ-று. ()

கொன்றைவார்சடை முடியரைக் கோழம்பத் திறைஞ்சி
யென்றுநீடிய வின்னிசைப் பதிகமுன் னியம்பி
மன்றுளார்மகிழ் வைகன்மா டக்கோயின் மருங்கு
சென்றுசார்ந்தனர் திருவளர் சிரபுரச் செல்வர்.

Koviloor Digital Library

(இ-ள்.) கொன்றைவார் சடைமுடியரைக் கோழம்பத்திறைஞ்சி=கொன்றைப்பூமாலையையணிந்த நீண்ட சடாமகுடத்தையுடைய கோகிலேசரைத் திருக்கோழம்பத்தின்கண் வணங்கி; என்று நீடிய வின்னிசைப்பதிகமுன்னியம்பி=எக்காலமும் நிலைபெற்ற இனிய இசையையுடைய திருப்பதிகத்தைத்திருமுன்னின்றுபாடி; மன்றுளார்மகிழ்வைகன்மாடக்கோயின்மருங்குசென்று சார்ந்தனர்=பொன்னம்பலத்தின்கண் நடித்தருளியவைகளுதேசர்மகிழ்ந்து வீற்றிருக்கின்ற திருவைகல் மாடக்கோயிலின் பக்கலில் சென்றடைந்தருளினர்; திருவளர் சிரபுரச்செல்வர்=செல்வமிக்க சீகாழியிலவதரித்த ஆளுடையபிள்ளையார்—எ-று. (சஙஉ)

திருக்கோழம்பம் - பண்- இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

நீற்றானை நீள்சடை மேலிறை வுள்ளதோ
ராற்றானை யழகமர் மென்முலை யாளையோர்
கூற்றானைக் குளிர்பொழிற் கோழம்ப மேவிய
வேற்றானை யேத்துமி னும்மிட ரேகவே.

தண்புன லோங்குதண் ணந்தராய் மாநகர்
நண்புடை ஞானசம் பந்தனம் பானுறை
விண்பொழிற் கோழம்ப மேவிய பத்திவை
பண்கொளப் பாடவல் லார்க்கில்லை பாவமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-கோகிலேசர். தேவியார்-சௌந்தரநாயகியம்மை.

வைகனீடுமா டக்கோயின் மன்னிய மருந்தைக்
கைகளஞ்சலி கொண்டுதாழ்ந் தெழுந்துகண் ணருவி
செய்யவின்னிசைச் செந்தமிழ் மாலைகண் மொழிந்து
வையுமுள்ளத்த ராய்த்திரு நல்லத்தி னண்ணி.

(இ-ள்.) வைகல் நீடுமாடக்கோயின் மன்னியமருந்தை=வைகலின்கணுள்ளமாடக்கோயிலில் எழுந்தருளிய மருந்துபோல்வாரை; கைகளஞ்சலிகொண்டு தாழ்ந்தெழுந்து=திருக்கரங்களை அஞ்சலியாகக் குவித்துவணங்கி எழுந்து; கண்ணருவிசெய்ய வின்னிசைச் செந்தமிழ் மாலைகண்மொழிந்து=கண்களினின்றும் ஆனந்த அருவி சொரியாநிற்க இனிய இசையோடு கூடிய செந்தமிழ்ப் பதிகமாலையைப்பாடியருளி; வையுமுள்ளத்தராய்த் திருநல்லத்தினண்ணி=கசிந்துருகும் திருவுள்ளமுடையராய்த் திருநல்லமென்னுந் திருப்பதியை யடைந்தருளி—எ-று. (சஙங)

Koviloor Digital Library

திருவைகல்மாடக்கோயில்-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

துளமதி யுடைமறி தோன்று கையின
ரிளமதி யணிசடை யெந்தை யாரிட
முளமதி யுடையவர் வைக லோங்கிய
வளமதி தடவிய மாடக் கோயிலே.

மைந்தன திடம்வைகன் மாடக் கோயிலைச்
சந்தமர் பொழிலணி சண்பை ஞானசம்
பந்தன தமிழ்கெழு பாடல் பத்திவை
சிந்தைசெய் பவர்சிவ லோகஞ் சேர்வரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - கொம்பிஙிளங்கோதைநாதர்.
தேவியார் - கொம்பிஙிளங்கோதைநாயகியம்மை.

நிலவுமாளிகைத் திருநல்ல நீடுமா மணியை
யிலகுசேவடி யிறைஞ்சியின் றமிழ்கொடு துதித்துப்
பலவுமீசர்தந் திருப்பதி பணிந்துசெல் பவர்தா
மலைபுனற்றிரு வழுந்தூர்மா டக்கோயி லடைந்தார்.

(இ-ள்.) நிலவுமாளிகைத்திருநல்ல நீடுமாமணியை=விளங்குகின்ற மாளிகைகளையுடைய திருநல்லமென்னுந் திருப்பதியி லெழுந்தருளியிருக்கின்ற மாணிக்கத்தையொத்த உமாமகேசரை; இலகுசேவடி யிறைஞ்சியின் றமிழ்கொடுதுதித்து=விளங்குகின்ற சிவந்ததிருவடிகளை வணங்கி இனிய தமிழ்ப்பதிகத்தாற்றுதித்து; ஈசர்தந்திருப்பதிபலவும் பணிந்துசெல்பவர்=சிவபிரான் எழுந்தருளிய திருப்பதிகள் பலவற்றையும் வணங்கிச்செல்லும் பிள்ளையார்; அலைபுனற் திருவழுந்தூர் மாடக்கோயிலடைந்தார்=அலைகின்ற நீர்சூழ்ந்த திரு அழுந்தூரின்கண் உள்ளதிருமாடக்கோயிலை அடைந்தருளினார்—எ-று.()
தாம்=அசை.

திருநல்லம் - பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

கல்லா னிழன்மேய கறைசேர் கண்டாவென்
றெல்லா மொழியாலு மிமையோர் தொழுதேத்த
வில்லான் மூன்றும் வெந்து விழவெய்த
நல்லா னமையாள்வா னல்லந் நகரானே.

நலமார் தருமறையோர் வாழ்நல்லூர் நகர்மேய
கொலைசேர் மழுவானைக் கொச்சையமர்ந் தோங்கு
நலமார் தமிழ்ஞான சம்பந்தன் சொன்ன
கலைக ளிவைவல்லார் கவலை கழிவாரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-உமாமகேசர். தேவியார்-மங்களநாயகியம்மை.

மன்றுமாமட மகிழ்ந்தவான் பொருளினை வணங்கிப்
பன்றுபாடலிற் பதிகவின் னிசைகொடுபரவிப்
பொன்னிமாநதிக் கரையினின் மீண்டுபோந் தணைந்து
சொன்னவாறறி வார்தமைத் துருத்தியிற் றொழுதார்.

(இ-ள்.) மன்றுமாமடமகிழ்ந்தவான் பொருளினைவணங்கி=நிலைபெற்ற மாடக்கோயிலின்கண் எழுந்தருளிய மெய்ப்பொருளாகிய வேதபுரீசரைப் பணிந்து; பன்றுபாடலிற் பதிகவின்னிசை கொடுபரவி=துதிக்கத்தக்க பாடலினாலாகிய திருப்பதிகத்தை இனிய இசையோடு துதித்து; பொன்னிமாநதிக்கரையினின் மீண்டுபோந்தணைந்து=பெரியகாவிரிநதியின் கரையில் மீளவும் வந்தடைந்தருளி; சொன்னவாறறிவார் தம்மைத் துருத்தியிற்றொழுதார்=சொன்னவாறு அறியும் முத்தாவதேசரைத் திருத்துருத்தியில் வணங்கியருளினார்—எ-று.

முற்செய்யுளில் மாடக்கோயிலடைந்தார் என்றதனால் ஈண்டு மாமாடம் என்றது மாமடம் எனமருவிற்றெனக. சொன்னவாறறிவா ரென்றது அடியார் கூறியவற்றை அறிவாரென்று பொருள். (௬௫)

திருஅழுந்தூர் - பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

தொழுமாறு வல்லார் துயர்தீர நினைந்
தெழுமாறு வல்லா ரிசைபாட விம்மி
யழுமாறு வல்லா ரழுந்தை மறையோர்
வழிபாடு செய்மா மடமன் னினையே.

அருஞானம் வல்லா ரழுந்தைம் மறையோர்
பெருஞான முடைப் பெருமா னவனைத்
திருஞான சம்பந்தன செந்தமிழ்கள்
ஒருஞான முண்டா முணர்ந்தார் தமக்கே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-வேதபுரீசர். தேவியார்-சௌந்தரநாயகியம்மை.

Koviloor Digital Library

திரைத்தடம்புனற் பொன்னிசூழ் திருத்துருத் தியினில்
வரைத்தலைப்பசும் பொன்னெனும் வண்டமிழ்ப் பதிக
முரைத்து மெய்யுறப் பணிந்துபோந் துலவுமந் நதியின்
கரைக்கண்மூவலூர்க் கண்ணுத லார்கழல் பணிந்தார்

(இ-ள்.) திரைத்தடம்புனற்பொன்னிசூழ் திருத்துருத்தியினில்=அலையையுடைய மிக்க நீர்மயமாகிய காவிரிசூழ்ந்த திருத்துருத்தியென்னுந் திருப்பதியில்; வரைத்தலைப்பசும்பொன்னெனும் வண்டமிழ்ப் பதிகமுரைத்து=வரைத்தலைப்பசும்பொன்னென்னும் முதலையுடைய வளம்பொருந்திய தமிழாகிய திருப்பதிகத்தைப்பாடியருளி; மெய்யுறப்பணிந்துபோந்து=திருமேனி பூமியிற்பொருந்த வணங்கி அங்குநின்றெழுந்தருளி; உலவுமந்நதியின்கரைக்கண் மூவலூர்க் கண்ணுதலார் கழல் பணிந்தார்=பெருகுகின்ற அக்காவிரியின்கரையிலுள்ள மூவலூரில் எழுந்தருளிய நெற்றிக்கண்ணையுடைய வழித்துணைநாதரது திருவடிகளை வணங்கியருளினார்—எ-று. (௩௯௬)

திருத்துருத்தி-திருவிராகம்-பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

வரைத்தலைப் பசும்பொனோ டருங்கலங் களுந்திவந்
திரைத்தலைச் சுமந்துகொண் டெறிந்திலங்கு காவிரிக்
கரைத்தலைத் துருத்திபுக் கிருப்பதே கருத்தினு
யுரைத்தலைப் பொலிந்துனக் குணர்த்துமாறு வல்லமே.

கற்றுமுற்றி னார்தொழுங் கழுமலத் தருந்தமிழ்
சுற்றுமுற்று மாயினனை வன்பகர்ந்த சொற்களாற்
பெற்றமொன் றுயர்த்தவன் பெருந்துருத்தி பேணவே
குற்றமுற்று மிம்மையிற் குணங்கள்வந்து கூடுமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-முத்தாவநேசர். தேவியார்-அமிர்தமுகிழாம்பிகை.

மூவனூருறை முதல்வனைப் பரவிய மொழியான்
மேவுகாதலி லேத்தியே விருப்பொடும் போந்து
பூவலம்புதண் புனற்பணைப் புகலியர் தலைவர்
வாவிசூழ்திரு மயிலாடு துறையினில் வந்தார்.

(இ-ள்.) மூவலூருறை முதல்வனைப்பரவிய மொழியால்=திருமூவலூரிலெழுந்தருளிய வழித்துணைநாதனைத் துதிக்கின்றதிருப்பதிகத்தினால்; மேவுகாதலினேத்தி=திருவுள்ளத்தினிறைந்த விருப்பத்தோடுதுதித்தருளி; விருப்பொடும்போந்து=அங்கு நின்று விருப்பத்தோடும் எழுந்தருளி; பூவலம்பு

Koviloor Digital Library

தண்புனற்பணைப் புகலியர்தலைவர்=பூக்களோடு ததும்புகின்ற குளிர்ந்த நீர்களையுடைய வயல்சூழ்ந்த சீகாழியின்கண்ணுள்ளார் தலைவராகிய ஆளுடைய பிள்ளையார்; வாவிசூழ்திருமயிலாடுதுறையினில்வந்தார்=புனற்றடஞ்சூழ்ந்த திருமயிலாடுதுறையென்னுந்திருப்பதியில் எழுந்தருளிவந்தார்—எ-று. (சகூஎ)

மல்குதண்டலை மயிலாடு துறையிலின் மருவுஞ்
செல்வவேதியர் தொண்டரோ டெதிர்கொளச் சென்று
கொல்லைமான்மறிக் கையனைக் கோயில்புக் கிறைஞ்சி
யெல்லையில்லதோ ரின்பமுன் பெருகிடவெழுந்தார்.

(இ-ள்.) மல்குதண்டலை மயிலாடுதுறையினின் மருவும் = நெருங்கிய சோலைசூழ்ந்ததிருமயிலாடுதுறையில்வாழும்; செல்வவேதியர் தொண்டரோ டெதிர்கொளச்சென்று=செல்வத்தையுடைய மறையவர் அடியார் திருக்கூட்டத்தோடு எதிர்கொண்டுவர அங்கடைந்தருளி; கொல்லைமான்மறிக்கையனைக் கோயில் புக்கிறைஞ்சி=முல்லைக்கொல்லையில் வாழும் மான்கன்றையேந்திய திருக்கரத்தையுடைய மாயூரநாதனைக் கோயிலின்கண்சென்றுவணங்கி; எல்லையில்லதோ ரின்பமுன்பெருகிடவெழுந்தார்=அளவில்லாதபேரின்பம் முற்பட்டதிகரிக்க எழுந்தார்—எ-று.

வணங்கி யெழுந்தாரெனக்கூட்டுக. (சகூஅ)

உள்ளமின்புற வுணர்வுறும் பரிவுகொண் டுருகி
வெள்ளந்தாங்கிய சடையனை விளங்குசொற் பதிகத்
தெள்ளுமின்னிசைத் திளைப்பொடும் புறத்தணைந் தருளி
வள்ளலாருமற் றுளபதி மருவுதன் மகிழ்ந்தார்.

(இ-ள்.) உள்ளமின்புறவுணர் வுறும்பரிவு கொண்டுருகி=தமது திருவுள்ளத்தில் இன்பம் மேம்படமாயூரநாதனைச்சிந்திக்கும் பேரன்பால்கனிந்து; வெள்ளந் தாங்கியசடையனை=கங்கா நதியையணிந்த சடையையுடைய அம்மாயூரநாதனை; விளங்குசொற்பதிகத்தெள்ளு மின்னிசைத்திளைப்பொடும் புறத்தணைந்தருளி=விளங்குகின்ற சொல்லானாய திருப்பதிகத்துத் தெள்ளிய இனிய இசையைப்பாடுதலோடும் ஆலயத்தின் புறத்து வந்தருளி; வள்ளலாருமற்றுள பதிமருவுதன் மகிழ்ந்தார்=ஆளுடைய பிள்ளையாரும் (அதன் பக்கத்துள்ள) பிறதிருப்பதிகளையும் அடைதலைவிரும்பியருளினார்—எ-று. (சகூக)

திருமயிலாடுதுறை-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

கரவின்றிநன் மாமலர்கொண்
டிரவும்பக லுந்தொழுவார்கள்
சிரமொன்றிய செஞ்சடையான்வாழ்
வரமாமயி லாடுதுறையே.

Koviloor Digital Library

நயர்காழியுண் ஞானசம்பந்தன்
மயறீர்மயி லாடுதுறைமேற்
செயலாலுரை செய்தனபத்து
முயர்வாமிவை யுற்றுணர்வார்க்கே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-மாயூரேசர். தேவியார்-அஞ்சலநாயகியம்மை.

அத்திருப்பதி யகன்றுபோ யணிகிளர் சூலக்
கைத்தலைப்படை வீரர்செம் பொன்பள்ளி கருதி
மெய்த்தகாதலில் விளநகர் விடையவர் பாதம்
பத்தர்தம்முடன் பணிந்திசைப் பதிகமுன் பகர்ந்தார்.

(இ-ள்.) அத்திருப்பதி யகன்றுபோய்=அத்திருப்பதிகளை நீங்கிச்சென்றருளி; அணிகிளர் சூலக்கைத்தலைப் படைவீரர்செம்பொன் பள்ளிகருதி=அழகுவிளங்கும் சூலமாகியகையிலேந்திய ஆயுதத்தையுடைய சொர்னபுரீசரது திருச்செம்பொன் பள்ளியை க்கருதிச் சென்றருளி; மெய்த்தகாதலில் விளநகர் விடையவர்பாதம்=மெய்ம்மைத்தன்மையுடைய பெருவிருப்பால் திருவிள நகரிலெழுந்தருளிய இடபவாகனத்தையுடைய பதஞ்சலிமனோகரரது திருவடிகளை; பத்தர்தம் முடன்பணிந்திசைப் பதிகமுன்பகர்ந்தார்=அடியார் திருக்கூட்டத்தோடு வணங்கி யிசையையுடைய திருப்பதிகத்தைத் திருமுன்னின்று பாடியருளினார்—எ-று. (௪௪௰)

திருச்செம்பொன்பள்ளி-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

மருவார் குழலி மாதோர் பாகமாய்த்
திருவார் செம்பொன் பள்ளி மேவிய
கருவார் கண்டத் தீசன் கழல்களை
மருவா தவர்மேன் மன்னும் பாவமே.

நறவார் புகலி ஞான சம்பந்தன்
செறுவார் செம்பொன் பள்ளிமே யானைப்
பெறுமா றிசையாற் பாடலிவை பத்து
முறுமாறு சொல்ல வோங்கி வாழ்வரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-சொர்ணபுரியீசர். தேவியார்-சுகந்தவனநாயகியம்மை.

Koviloor Digital Library

திருவிளமர்- திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

மத்தக மணிபெற மலர்வதோர் மதிபுரை நுதல்கர
மொத்தக நகமணி மிளிர்வதோ ரரவின ரொளிகிளர்
அத்தக வடிதொழ வருள்பெறு கண்ணொடு முமையவள்
வித்தக ருறைவது விரிபொழில் வளநகர் விளமரே.

வெந்தவெண் பொடியணி யடிகளை விளமருள் விகிர்தனைச்
சிந்தையு ளிடைபெற வுரைசெய்த தமிழிவை கெழுவிய
வந்தணர் புகலியு ளழகம ருருமறை ஞானசம்
பந்தன மொழியிவை யுரைசெயு மவர்வினை பறையுமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - பதஞ்சலிமனோகரர்.
தேவியார் - யாழினுமென்மொழியம்மை.

பாடும்அப்பதி பணிந்துபோய்ப் பரியலூர் மேவுந்
தோடுலாமல ரிதழியுந் தும்பையு மடம்புங்
காடுகொண்டசெஞ் சடைமுடிக் கடவுளர் கருது
நீடுவீரட்டம் பணிந்தனர் நிறைமறை வேந்தர்.

(இ-ள்.) பாடுமப்பதி பணிந்துபோய்=தாம்பாடுகின்ற அத்திருவிள நகரென்னும் திருப்பதியை வணங்கிச் சென்று; பரியலூர்மேவும்=திருப்பரியலூரின் கணுள்ள; தோடுலா மலரிதழியுந் தும்பையும் அடம்பும்=இதழ்பொருந்திய மலர்ந்த கொன்றைப்பூவும் தும்பைப்பூவும் அடம்பம்பூவும்; காடுகொண்ட செஞ்சடை முடிக்கடவுளர் கருதும்=நிறைந்திருக்கின்ற சிவந்த சடைமுடியையுடைய வீரட்டேசர் விரும்பி எழுந்தருளிய; நீடுவீரட்டம் நிறைமறைவேந்தர் பணிந்தனர்=நிறைந்த மறைஞானத்தையுடைய ஆளுடைய பிள்ளையார் பெருமைபொருந்தியதிருவீரட்டத்தைவணங்கியருளினார்—எ-று.

திருப்பரியலூர்-பண்-மேகராகக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

கருத்தன் கடவுள் கனலேந்தி யாடு
நிருத்தன் சடைமே னிரம்பா மதியன்
றிருத்தம் முடையார் திருப்பரிய லூரில்
விருத்த னெனத்தகும் வீரட் டத்தானே.

Koviloor Digital Library

நறுநீரு குங்காழி ஞானசம் பந்தன்
வெறிநீர்த் திருப்பறியல் வீரட்டந் தானைப்
பொறிநீ டரவன் புனைபாடல் வல்லார்க்
கறுநீ டவலம் பிறப்புத் தானே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-வீரட்டேசர். தேவியார்- இளங்கொம்பம்மை.

பரமர்தந்திருப் பறியலூர வீரட்டம் பரவி
விரவுகாதலின் வேலையின் கரையினை மேவி
யரவணிந்தவர் பதிபல வணைந்துமுன் வணங்கிச்
சிரபுரத்தவர் திருத்தொண்ட ரெதிர்கொளச் செல்வார்.

(இ-ள்.) பரமர்தந்திருப்பறியலூர் வீரட்டம் பரவி=வீரட்டேசரெழுந்தருளிய திருப்பறியலூர் வீரட்டான மென்னுந் திருப்பதியை வணங்கி ; விரவு காதலின் வேலையின்கரையினைமேவி=நிறைந்த விருப்பத்தோடு கீழ்ச்சமுத்திரக்கரையை யடைந்து ; அரவணிந்தவர் பதிபல அணைந்து முன்வணங்கி= அங்குள்ள சர்ப்பாபரணத்தை யணிந்தசிவபெருமான் எழுந்தருளிய பலதிருப்பதிகளையுஞ் சென்றுவணங்கி ; சிரபுரத்தவர் திருத்தொண்ட ரெதிர்கொளச் செல்வார்=ஆளுடைய பிள்ளையார் அடியார்கள் தம்மை எதிர்கொள்ளும்படி செல்வாராயினர்—எ-று. (சசஉ)

வேறு.

அடியவர்கள்களிசிறப்பத் திருவேட்டக் குடிபணிந்தங்கலைவாய்ப்போகிக், கடிகமழு மலர்ப்பழனக் கழனிநாட்டகன்பதிகள் கலந்துநீங்கிக், கொடிமதில்சூழ் தருமபுரங் குறுகினார் குண்டர்சாக் கியர்தங்கொள்கை, படியறியப் பழுதென்றே மொழிந்துய்யு நெறிகாட்டும் பவளவாயர்.

(இ-ள்.) குண்டர்சாக்கியர்தங் கொள்கைபடியறியப்பழுதென்றே மொழிந் துய்யுநெறி காட்டும் பவளவாயர்=அருகரும் பௌத்தருமாகிய இவர்களது கொள்கையுலகிலுள்ள யாவரும் அறியக்குற்றமென்றுகூறி உய்யும் நெறியாகியவைதிகசைவ நெறிகளையே மெய்ந்நெறியென்றுணர்த்தி யருளிய பவளம் போலும் திருவாயையுடைய ஆளுடைய பிள்ளையார்; அடியவர்கள் களிசிறப்பத் திருவேட்டக் குடிபணிந்தங்கலைவாய்போகி=திருவேட்டக்குடியின்கண் எதிர்கொண்டுவந்த அவ்வடியவர்கள்மனமகிழ்ச்சியடையத் திருவேட்டக்குடியென்னுந் திருப்பதியை வணங்கி அங்குநின்று கடற்கரைவழியேசென்று ; கடிகமழுமலர்ப்பழனக்கழனி நாட்டகன்பதிகள் கலந்துநீங்கி=வாசனைகமழும் மலர்களையுடைய வயல்சூழ்ந்த சோழநாட்டில் இடமகன்றதிருப்

பதிகளையடைந்து அரனினின்றும் நீங்கி ; கொடிமதில்சூழ்தருமபுரங்குறுகினா ர்=கொடிகள் கட்டியமதில் சூழ்ந்ததிருத்தரும புரமென்னுந் திருப்பதியை அடைந்தருளினார்—எ-று. (௪௪௫)

திருவேட்டக்குடி - பண்- பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

வண்டிணைக்கு மலர்க்கொன்றை விரிசடைமேல் வரிபரவுங், கண்டிணைக்கும் பிறைச்சென்னிக் காபாலி கழல்கழல்க, டொண்டிணைத் துத் தொழுதிறைஞ்சத் துளங்கொளிநீர்ச் சுடர்ப்பவளந், தெண்டிணைகள் கொணர்ந்தெறியுந் திருவேட்டக் குடியாரே.

தெண்டிணைசேர் வயலுடுத்த திருவேட்டக் குடியானைத், தண்டலைசூழ் கலிக்காழித் தமிழ்ஞான சம்பந்த, னெண்டமிழ்நா லிவைபத்து முணர்ந்தேத்த வல்லார்போ, யுண்டுடுப்பில் வானவரோ டுயர்வானத் திருப்பாரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-திருமேனியழகர். தேவியார்-சுகந்தநாயகியம்மை.

தருமபுரம் பெரும்பாணர் திருத்தாயர் பிறப்பிடமா மதனாற்சார, வருமவர்தஞ் சுற்றத்தார் வந்தெதிர்கொண் டடிவணங்கி வாழ்த்தக்கண்டு, பெருமையுடைப் பெரும்பாணரவர்க்குணாப்பார் பிள்ளையாரருளிச்செய்த, வருமையுடைப் பதிகந்தாம் யாழினாற் பயிற்றும்பேறருளிச்செய்தார்.

(இ-ள்.) தருமபுரம் பெரும்பாணர் திருத்தாயர் பிறப்பிடமாம்=தருமபுரமென்னுந்திருப்பதி திருநீலகண்ட யாழ்ப்பாணர் திருத்தாயார்க்கு ஜனனபூமியாம் ; அதனாற் சாரவருமவர்தஞ் சுற்றத்தார் வந்தெதிர்கொண் டடிவணங்கி வாழ்த்தக்கண்டு=அக்காரணத்தால் பிள்ளையாரைச் சார்ந்துவருகின்ற அத் திருநீலகண்ட யாழ்ப்பாணரது தாய்வழிச்சுற்றத்தார் அங்குவந்து பிள்ளையாரை எதிர்கொண்டு திருவடிகளில்வணங்கிப் பெரும்பாணரையுந்துதிக்க ; பிள்ளையார் தாம் அருளிச்செய்த அருமையுடைப்பதிகம் யாழினாற்பயிற்றும் பேறருளிச்செய்தார்=ஞானசம்பந்தப்பிள்ளையார் தாம் அருளிச்செய்த அருமைபொருந்திய திருப்பதிகத்தை யாழிலேற்றிப் பாடும் பேற்றினை அடியேனுக்கு அருளிச்செய்தாரென்று ; பெருமையுடைப் பெரும்பாணரவர்க்குரைப்பார்= பெருமையையுடைய திருநீலகண்ட யாழ்ப்பாணர் அச்சுற்றத்தார்க்குக் கூறுவாராயினார்—எ-று.

பிள்ளையார் பெரும்பேற்றை அருளிச்செய்தாரென்று பெரும்பாணர் உரைப்பாராயினாரெனக்கூட்டுக. (௪௪௬)

Koviloor Digital Library

கிளைஞருமற் றதுகேட்டுக் கெழுவுதிருப் பதிகத்திற் கிளர்ந்த வோசை, யளவுபெறக் கருவியினிரமைத்தியற்று மதனாலே யகிலமெல்லாம், வளரவிசை நிகழ்வதென விளம்புதலும் வளம்புகலி மன்னர் பாத, முளநடுங்கிப் பணிந்துதிரு நீலகண்டப் பெரும்பாண ருணர்த்துகின்றார்.

(இ-ள்.) கிளைஞருமற்றது கேட்டு=சுற்றத்தாரும் அதனைக்கேட்டு; கெழுவுதிருப்பதிகத்திற் கிளர்ந்த வோசை=பெருமைபொருந்திய திருப்பதிகத்தில் விளங்கிய இனிய ஓசையை; அளவுபெறக்கருவியி னிரமைத்தியற்றுமதனாலே=எடுத்தல் முதலிய காலஅளவுகள் பொருந்தயாழில் நிரமைத்துப்பாடுங் காரணத்தால்; அகிலமெல்லாம் இசைவளர நிகழ்வதென விளம்புதலும்=எல்லாவுலகங்களிலும் புகழ்மிக ஓங்கியதென்று புகழ்ந்து கூறவும்; வளம்புகலிமன்னர் பாதம்=வளம்பொருந்திய சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையாரது திருவடிகளை; உளநடுங்கிப் பணிந்து திருநீலகண்டப் பெரும்பாணருணர்த்துகின்றார்=மனநடுக்குற்று வணங்கித் திருநீலகண்டப் பெரும்பாணனர் அவருக்கு விண்ணப்பஞ் செய்கின்றார்—எ-று.

மற்று - அசைநிலை. (சசரு)

அலகிறிருப் பதிகவிசை யளவுபடா வகையிவர்க ளன்றியேயு, முலகிலுளோ ருந்தெரிந்தங் குண்மையினை யறிந்துய்ய வுணர்த்தும் பண்பாற், பலர்புகழுந் திருப்பதிகம் பாடியரு ளப்பெற்றாற் பண்புநீடி, யிலகுமிசை யாழின்க ணடங்காமை யான்காட்டப் பெறுவனென்றார்.

(இ-ள்.) அலகில் திருப்பதிக இசைஅளவுபடாவகை=அளவிடப்படாத திருப்பதிகத்தின் இசையானதுயாழில் அடங்காத வண்ணத்தை; இவர்களன்றியேயு முலகிலுள்ளோருந் தெரிந்து அங்குண்மையினை யறிந்துய்ய=இச்சுற்றத்தாரை யன்றி உலகத்தாரும் அறிந்து அதன்கணுள்ள உண்மையைக்கண்டு உய்யும் பொருட்டு; உணர்த்தும் பண்பால்=தெரிவிக்கு நிமித்தம்; பலர்புகழுந் திருப்பதிகம் பாடியருளப் பெற்றால்=பலராலும் புகழத்தக்க ஓர்திருப்பதிகத்தைப்பாடியருள அடியேன் பெற்றுக்கொண்டால்; பண்பு நீடியிலகுமிசையாழின்கண் அடங்காமையான் காட்டப்பெறுவனென்றார்=குணமிக்குவிளங்கும் இனிய இசையானது யாழின்கண் அடங்காமையை யான் அவர்க்குக் காட்டப்பெறுவேன் என்றுகூறினார்—எ-று. (சசசு)

வேதநெறி வளர்ப்பவரும் விடையவர்முன் றொழுதுதிருப் பதிகத்தன்மை, பூதலத்தோர் கண்டத்துங் கலத்தினிலு நிலத்துநூல் புகன்றவேத, நாதவிசை முயற்சிகளா லடங்காத வகைகாட்ட நாட்டுகின்றார், மாதர்மடப் பிடிபாடி வணங்கினார் வானவரும் வணங்கியேத்த.

Koviloor Digital Library

(இ-ள்.) வேதநெறி வளர்ப்பவரும் விடையவர்முன்றொழுது=வைதிக
மார்க்கத்தை வளர்க்கும் திருஞானசம்பந்தப்பிள்ளையாரும் இடபத்தை வாகனமாக வு
டைய சிவபிரானது திருமுன்னே நின்றுவணங்கி; திருப்பதி கத்தன்
மை=திருப்பதி கத்தினுள்ள இசையின்றன்மை; பூதலத் தோர்கண்டத்
துங் கலத்தினிலும்=நிலவுலகத்தாரது மிடற்றிலும் யாழிலும்; நிலத்து வே
தநூல் புகன்ற நாதவிசைமுயற்சிகளால் அடங்காத வகைகாட்ட நாட்டுகின்
றார்=நிலவுலகத்தின்கண் சாத்திரமாகிய வேதநூலிற்கூறிய நாதத்துக்குரிய இ
சையை வேறுபடுத்தும் யத்தனங்களினால் அடங்காத வண்ணத்தைக் காட்டு
ம்படிச் செய்கின்றாராய்; வானவரும் வணங்கியேத்த மாதர்மடப் பிடிபாடி
வணங்கினார்=தேவர்களும் வணங்கித் துதிக்கும்படி மாதர்மடப்பிடி என்றுமு
தலையுடைய திருப்பதிகத்தைப்பாடிப் பணிந்தருளினார்—எ-று.

வேதநெறிவளர்ப்பவர், நாட்டுகின்றாராய்ப் பாடிவணங்கினார் எனக்கூ
ட்டுக. (சசஎ)

இருநாரும் பாடாவியல்பு கண்டுமகிழ்ந்தென்பார் வானவரும் வணங்கி
யேத்தவென்றார். வானவருமென்றவும்மை மண்ணுலகத்தாராயுந் தழுவலின்
எதிரதுதழீஇ நின்றது.

திருத்தருமபுரம் - பண்-யாழ்மூரி.

திருச்சிற்றம்பலம்.

மாதர்மடப்பிடியு மட வன்னமுமன்னதோர் நடையுடைம்மலை
மகடுணையெனமகிழ்வர், பூதவினப்படைநின் றிசை பாடவுமாடுவ
ரவர்படர்சடைநெடி முடியதோர்புனலர், வேதமோடேழிசைபாடுவ
ராழ்கடல்வெண்டிரை யிரைந்நுரைகரைபொருது விம்மிநின்றயலே,
தாதவிழ்புன்னைதயங் குமலர்ச்சிறைவண்டறை பெழில்பொழில்கு
யில்பயில் தருமபுரம்பதியே. (௧)

பொங்குநடைப்புகலில் விடை யாமவரூர்திவெண் பொடியணி
தடங்கொண்மார்பு பூணநூல்புரள, மங்குலிடைத்தவழு மதி சூடுவ
ராடுவர் வளங்கிளர்புனலரவம் வைகியசடையர், சங்குகடற்றிரையா
லுதையுண்டுசரிந்திரிந் தோசிந்தசைந்திசைந்துசேரும் வெண்மண
ற்குவைமேற், றங்குகதிர்மணிநித் தில மெல்கிருளொல்கநின் றில
ங்கொளிநலங்கெழிற் றருமபுரம்பதியே. (௨)

விண்ணுறுமால்வரைபோல் விடை யேறுவராறுசூடுவர்விரிசுரி
யொளிகொள் தோடுநின்றிலங்கக், கண்ணுறுநின்றெரிருங் கதிர் வெ
ய்யமதிக்கண்ணியர் கழிந்தவரிடு முடைதலைகலனாப், பெண்ணுறு

Koviloor Digital Library

றநின்றவர்தம் முரு வம்மபன்மால்தொழ வரிவையைப்பிணைந்திணைந் தணைந்ததும்பிரியார், தண்ணிதழ்முல்லையொடெண் ணிதழ் மவ்வன் மருங்கலர் கருங்கழிந் நெருங்குநற் றருமபுரம்பதியே. (ரு)

வாருறுமென்முலைநன் னுதலேழைபோடாடுவர் வளங்கிளர் விளங்குதிங்கள் வைகியசடையர், காருறநின்றலரும் மலர்க் கொன்றையங்கண்ணியர் கடுவிடைகொடிவெடிகொள் காடுறைபதியர், பாருறவிண்ணுலகம் பர வப்படுவோரவர் படுதலைப்பலிகொளல் பரிபவந்நினையார், தாருறுநல்லரவம் மலர் துன்னியதாதுதிர் தழைபொழின் மழைந்நுழை தருமபுரம்பதியே. (சு)

நேருமவர்குணைப் புகி லில்லைநெடுஞ்சடைக் கடும்புனல் படர்ந்திடப் படுவதோர்சிலையர், பேருமவர்க்கெனையா யிர முன்னைப்பிறப் பிறப் பிலாதவருடற்றடாத பெற்றியராறிவா, ராரயவர்க் கழல்வாயதோர் நாகமழஃகுற வெழுஃகொளு மலர்கொள்பொன் னிதழிநல்லலங்கல், தாரமவர்க்கிமவான் மக ளூர்வதுபோர்விடை கடிபடுசெடிபொழிற் றருமபுரம்பதியே. (ரு)

கூழையங்கோதைகுலா யவ டம்பிணைபுல்கமல் குமென்முலைப் பொறிகொள்பொற் கொடியிடைதுவர்வாய், மாழையொண்கண்மடவா ளையோர் பாகமகிழ்ந்தவர் வலம்மலிபடைவிடை கொடிகொடும் மழுவாள், யாழையுமெள்கிடவே ழிசை வண்டுமூரன்றினந் துவன்றி மென்சிறஃகறை யுறந்நறவ்விரியுநற், றுழையுஞாழலுநீ டிய கானலி லள்ளலி சைபுள்ளினந்துயில்பயி றருமபுரம்பதியே. (சு)

தேமருவார்குழ லன்ன நடைப்பெடைமான்விழித் திருந்திழை பொருந்துமேனி செங்கதிர்விரியத், தூமரு செஞ்சடையிற் றுதை வெண்மதிதுன்றுகொன்றை தொல்புனல்சிரங்கரந் துரிந்ததோலுடையர், காமருதண்கழிநீ டிய கானல்கண்டகங் கடல்லடைகழியிழிய முண்டகந்தயலே, தாமரைசேர்குவளைப் படு கிற்கழுநீர்மலர் வெறிகமழ்செறிவயற் றருமபுரம்பதியே. (எ)

தூவணநீறகலம் பொலி யவ்விரைபுல்கமல் குமென்மலர்வளைபுனை திரள்புயம்மணிவர், கோவணமும்முழையின் னத ளும்முடையாடையர் கொலைமலிபடையோர்சூல மேந்தியகுழகர், பாவணமாவலறத் தலை பத்துடையவ்வரக்க னவ்வலியோர்கவ்வைசெய் தருள்புரிதலைவர், தாவணவேறுடையெம் மடிகட்கிடம்வன்றடங் கடல்லிடுந்தடங்கரைத் தருமபுரம்பதியே. (அ)

Koviloor Digital Library

வார்மலிமென்முலைமா தொரு பாகமதாகுவர் வளங்கிளர்மதியர வம் வைகியசடையர், கூர்மலிசூலமும்வெண் மழு வும்மலர்வெல்ப டை குனிசிலைதனிமலைய தேந்தியகுழகர், ஆர்மலி யாழிகொள்செல் வனு மல்லிகொடாமரைமே லயனடிம்முடி யளவுதாமறியார், தா ர்மலி கொன்றையலங் கலு கந்தவர்தங்கிடந் தடங்கடல்விடுந்திரைத் தருமபுரம்பதியே. (௯)

புத்தர்கடத்துவர்மெய்த் துறி புல்கியகையர்பொய் மொழிந்த ழிவிற்பெற்றியுற்ற நற்றவர்புலவோர், பத்தர்களத்தவமெய்ப் பய னு கவுகந்தவர் நிகழ்ந்தவர்சிவந்தவர் சுடலைப்பொடியணிவர், முத்தன வெண்ணகையோர் மலை மாதுமைபொன்னணி புணர்முலையிணைது ணை யணைவதும்பிரியார், தத்தருவித்திரளுந் திய மால்கடலோதம்வந் தடர்ந்திடுந்தடம்பொழிற் றருமபுரம்பதியே. (௧௦)

பொன்னெடுநன்மணிமா ளிகை சூழ்விழவம்மலி பொருபுனல் திருவமர் புகலியென்றுலகிற், றன்னொடுநேர்பிறவில் பதி ஞானசம் பந்தனஃ துசெந்தமிழ்த்தடங்கடற் றருமபுரம்பதியைப், பின்னெடு வார்சடையிற் பிறையும்மரவும்முடை யவன்பிணைதுணைகழல்கள் பே ணுதலுரியா, ரின்னெடுநன்னுலகெய் துவ ரெய்தியபோகமு முறு வர்களிடர்பிணி துயரணைவிலரே. (௧௧)


திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-யாழ்மூரிநாதேசர். தேவியார்-சதாமதுராம்பிகை.

வண்புகலி வேதியனார் மாதர்மடப் பிடியெடுத்து வனப்பிற்பா டிப், பண்பயிலுந் திருக்கடைக்காப்புச்சாத்த வணைந்துபெரும் பாண னார்தா, நண்புடையாழ்க் கருவியினின் முன்புபோற் கைக்கொண்டு நடத்தப்புக்கார்க், கெண்பெருகுமப்பதிகத் திசைநரம்பி லிடவடங்கி ற்றில்லையன்றே.

(இ-ள்.) வண்புகலி வேதியனார்மாதர் மடப்பிடி எடுத்துவனப்பிற்பா டி=வளம்பொருந்திய சீகாழிக்கண் அவதரித்த மறையவராகியபிள்ளையார் மாதர்மடப்பிடியென முதலெடுத்துச் சிறப்போடுபாடி ; பண்பயிலுந் திருக் கடைக் காப்புச்சாத்த=இசைபொருந்திய திருக்கடைக் காப்பைச்சாத்தியரு ள ; அணைந்துபெரும் பாணனார்தாம்=திருநீலகண்ட யாழ்ப்பாணரும் பிள்ளை யாரை அடைந்து ; நண்புடையாழ்க் கருவியினின் முன்புபோற்கைக் கொண் டுநடத்தப்புக்கார்க்கு=நரம்பு இயைந்தயாழ்க்கருவியின் முன்போலக் கையா

Koviloor Digital Library



திருஞானசம்பந்தர் திருத்தருமபுரத்தில் ஒதியபதிகத்தை யாழிலமைக்கவே-
யாமலநிறைநீலகண்டப்பெரும்பாணர் யாழைமோதவிளையாரதடுத்தது

Koviloor Digital Library

லமைத்துப் பாடப்புகுந்த அவர்க்கு; என்பெருகு மப்பதிகத்திசை நரம்பி லிட வடங்கிற்றில்லை=பெருமைமிக்க அத்திருப்பதிகத்தின் பண்யாழ்நரம்பி லமைத்துப்பாட அடங்காதாயிற்று—எ-று.

தாம், அன்று, ஏ, அசைநிலைகள். பிள்ளையார்க்கு அவ்விராகமும் தாளமும் அப்பதிகத்திற்கமைதலின், வனப்பிற்பாடி என்றார். (சசஅ)

அப்பொழுது திருநீல கண்டவிசைப் பெரும்பாண ரதனைவிட்டு, மெய்ப்பயமும் பரிவுமுறப் பிள்ளையார் கழலிணைவீழ்ந் தெழுந்து நோக்கி, யிப்பெரியோ ரருள்செய்த திருப்பதிகத் திசையாழி லேற்பேனென்னச், செப்பியதிக்கருவியை நான்றொடுதலினன்றோ வென்றுதெளிந்துசெய்வார்.

(இ-ள்.) அப்பொழுது திருநீலகண்டவிசைப்பெரும்பாணர் அதனைவிட்டு=அச்சமயத்தில் இசைநூல்வல்ல திருநீலகண்ட யாழ்ப்பாணர் அவ்வியாழினைப் பூமியில்வைத்து; மெய்ப்பயமும் பரிவுமுறப் பிள்ளையார் கழலிணைவிழ்ந்தெழுந்து நோக்கி=தம்து உடம்பின்கண் அச்சமும் பிள்ளையாரிடத்து நேயமும் பொருந்த அவரது உபயபாதங்களில் வணங்கி எழுந்து அவரைப்பார்த்து; இப்பெரியோ ரருள்செய்த திருப்பதிகத்திசை யாழிலேற்பேனென்னச் செப்பியது=இந்தப்பெரியவ ரருளிச்செய்த திருப்பதிகத்தின் கண்ணுள்ள இசையை யாழிலமைத்துப்பாடுவேனென்று முன்யான்கூறியது; இக்கருவியை நான்றொடுதலினன்றோவென்று தெளிந்துசெய்வார்=இவ்வியாழ்க் கோலைநான் தொடுங்காரணத்தால் அன்றோ என்றுதம்முள் ஆராய்ந்து இவ்வாறுசெய்வாராயினர்—எ-று.

சுற்றத்தாருடன் பதிகத்தையாழிலமைத்துப் பாடுகின்றேனெனக்கூறிய குற்றத்தாற்பயமும், ஆளுடையபிள்ளையாரது தெய்வத்தன்மை விளங்குதலின் மகிழ்வும் தோன்றவென்பார், மெய்ப்பயமும்பரிவுமுறவென்றார்.(சசகூ)

வீக்குநரம் புடையாழி னால்விளைந்த திதுவென்றங்கதனைப்போக்க, வோக்குதலுந் தடுத்தருளி யையரே யுற்றவிசை யளவினாலாக்கியவிக் கருவியினைத் தாருமென வாங்கிக்கொண் டவனிசெய்த, பாக்கியத்தின் மெய்வடிவாம் பாலறு வாயர்பணித் தருளுகின்றார்.

(இ-ள்.) இது வீக்குநரம்புடையாழினால் விளைந்தது என்று=இக்குற்றம் பிணித்த நரம்பினையுடையயாழைக்கைக்கொண்டகாரணத்தால் நேர்ந்ததென்று; அங்கதனைப்போக்க வோக்குதலும்=அவ்வியாழைக் கெடுக்கக்கருதி ஓங்குதலும்; அவனிசெய்த பாக்கியத்தின் மெய்வடிவாம் பாலறுவாயர்தடுத்தருளி=மண்ணுலகத்தார் செய்ததவமாகிய செல்வத்தின் பயன்றிரண்டன்ன ஆளுடையபிள்ளையார் அதனைத்தவிர்த்தருளி; ஐயரே உற்றவிசை அளவினால்

நீராக்கிய இக்கருவியினைத்தாரு மெனவாங்கிக்கொண்டு=ஐயரே! பொருந்திய இசையினளவாக நீர்செய்த இந்தயாழ்க்கருவியைத்தாருமென்று தமது திருக்கரத்தில் வாங்கிக்கொண்டு; பணித்தருளுகின்றார்=அவரோடு கூறியருளுவாராயினார்—எ-று. (சஉய)

ஐயர்நீர் யாழிதனை முரிக்குமதென் றருளுடையா ருடனேகூடச்,
செய்யசடை யாரளித்த திருவருளின் பெருமையெலாந் தெரியநம்பா,
லெய்தியவிக் கருவியினி லளவுபடு மோநந்த மியல்புக்கேற்ப, வைய
கத்தோ ரறிவுறவிக் கருவியள வையினியற்றல் வழக்கே யென்றார்.


(இ-ள்.) ஐயர் நீர்யாழிதனை முரிக்குமதென்=ஐயரே! நீர்இந்தயாழை முரிப்பது யாதுகருதி; அருளுடையாருடனே கூடச்செய்ய சடையாரளித்த திருவருளின் பெருமையெலாந்தெரிய=பெரியநாயகி யாருடன்கூட எழுந்தருளிச் சிவந்தசடையையுடைய தோணியப்பர் அருளியதிருவருளின் பெருமைமுழுதும் உணர; நம்பாலெய்திய விக்கருவியினில் அளவுபடுமோ=நம்மிடத்தி லிருந்த இந்தயாழில் அளவுபடுத்த அமையுமோ (அமையாமையில்); நந்தமியல்புக்கேற்ப வையகத்தோரறிவுறவிக் கருவியளவையினியற்றல் வழக்கே யென்றார்=நம்தகுதிக்குப் பொருந்த உலகிலுள்ளோர் அறிய இவ்வியாழ்க்கருவியின் அளவிற்குப்பாடுதல் முறைமைதான் என்று அருளிச்செய்தார்—எ-று.

ஈண்டு உலகியலுக் கடங்காது தாமருளிய திருப்பதிகமேயன்றி முன்றுலகியலுக் கமையப்பாடிய திருப்பதிகங்கள் அமைந்தகருவியாதலின், நம்பாலெய்திய இக்கருவியென்றும், உலகிய லமையச் சிறக்கப்பாடுதலிற் பெரும்பாணர் சிறந்தாரென்பது தோன்ற, அவரையும் உளப்படுத்தி நந்தம் இயல்புக்கேற்ப என்றும் கூறினர் என்றார். (சஉக)

சிந்தையா லளவுபடா விசைப்பெருமை செயலளவி லெய்து
மோநீ, யிந்தயா ழினைக்கொண்டே யிறைவர்திருப் பதிகவிசை யிதனிலெய்த, வந்தவா றேபாடி வாசிப்பீ ரெனக்கொடுப்பப் புகலிமன்னர், தந்தயாழினைத்தொழுது கைக்கொண்டு பெரும்பாணர் தலைமேற்கொண்டார்.

(இ-ள்.) சிந்தையா லளவுபடாவிசைப் பெருமைசெய லளவிலெய்துமோ=மனத்தால் அளவுபடுத்தற்கரிய இசையின்பெருமை காயமும் கருவியுமாகிய இவற்றின்செயலால் அளவுபடுத்தற்கு அமையுமோ (அமையாமையின்); நீர் இந்த யாழினைக்கொண்டு=நீர் இந்தயாழைக் கைக்கொண்டு; இறைவர்திருப்பதிகவிசை இதனிலெய்தவந்தவாறே பாடிவாசிப்பீரெனக்கொடுப்ப=சிவபெருமான் திருவருளாலாகிய திருப்பதிகத்தின் இசையை இந்தயாழிற் பொருந்தவந்தவண்ணமே பதிகத்திலமைத்துப்பாடிவாசிப்பீரென்று கொடுத்

Koviloor Digital Library



திருஞானசம்பந்தர் ஓதிபபதிகம் யாழிலடங்காமையால் பாணர் யாழை
மோத பிள்ளையார் அதை யாழிலமைத்துவாசிக்க வலமதி காங்கரித்தல்.

Koviloor Digital Library

தருள; புகலிமன்னர் தந்தயாழினைப் பெரும்பாணர் தொழுதுகைக்கொண்டு தலைமேற்கொண்டார்=ஆளுடையபிள்ளையார் கொடுத்தருளிய யாழ்க்கோலைத் திருநீலகண்டயாழ்ப்பாணர் தொழுதுவாங்கிச் சிரசின்மேற் சூடினார்—எ-று

காட்சிக்குரியனவும் அல்லனவுமாய பொருள்கள்யாவையும், சிந்தையாலளத்தற்குரியன; இப்பதிகத்திசை அதனாலும் அளத்தல்கூடாமையின், காயமுயற்சியும் கருவிமுயற்சியுமாகிய செயலாலடங்காதென்பார், செயலளவிலெய்துமோ வென்றார்.

காயமுயற்சி=எடுத்தல், படுத்தல், நலிதல், உழப்பல் முதலியன. கருவிமுயற்சி=வார்தல், வடித்தல், உறழ்தல், முதலியன. (௪௱௨)

அணைவுறுமக் கிளைஞருடன் பெரும்பாண ராளுடைய பிள்ளை யார்தந், துணைமலர்ச் சேவடிபணிந்து துதித்தருளத் தோணிபுரத் தோன்றலாரும், இணையில்பெருஞ் சிறப்பருளித் தொண்டருட னப் பதியி லினிதுமேவிப், பணைநெடுங்கை மதயானை யுரித்தவர்தம் பதி பிறவும் பணியச்செல்வார்.

அணைவுறு மக்கிளைஞருடன் பெரும்பாணர்=தம்மையடைந்த அந்தத்தாய்வழிச் சுற்றத்தாரோடு பெரியதிருநீலகண்ட யாழ்ப்பாணர்; ஆளுடைய பிள்ளையார் தந்துணைமலர்ச் சேவடிபணிந்து துதித்தருள=ஆளுடைய பிள்ளையாரது தாமரைமலர்போன்ற இரண்டு சிவந்ததிருவடிகளை வணங்கித்துதிக்க; தோணிபுரத் தோன்றலாரும் இணையில் பெருஞ்சிறப்பருளி=சீகாழி யிலவதரித்த ஆளுடைய பிள்ளையாரும் ஒப்பில்லாத மிக்கதிருவருட்சிறப்பினை அவர்க்குச்செய்து; தொண்டருட னப்பதியிலினிதுமேவி=அடியார் திருக்கூட்டத்தோடு அத்திருப்பதியில் இனிதாக எழுந்தருளி; பணைநெடுங்கை மதயானையுரித்தவர் தம்பதிபிறவும் பணியச்செல்வார்=பருத்த நீண்டது திக்கையினையுடைய மதத்தயானையையுரித்த சிவபெருமான் எழுந்தருளிய மற்றத்திருப்பதிகளையும் வணங்கச்செல்வாராயினார்—எ-று. (௪௱௩)

பங்கயப்பா சடைத்தடஞ்சூழ் பழனநாட் டகன்பதிகள் பல்வு நண்ணி, மங்கையொரு பாகத்தார் மகிழ்கோயி லெனைப்பலவும் வ ணங்கிப்போற்றித் தங்கிசையாழ்ப் பெரும்பாண ருடன்மறையோர் தலைவனார் சென்றுசார்ந்தார், செங்கைமான்மழுவேந்துஞ் சினவிடை யா ரமர்ந்தருளுந் திருநள்ளாறு.

(இ-ள்.) பாசடைப்பங்கயத் தடஞ்சூழ்பழன நாட்டகன்பதிகள் பலவு நண்ணி=பச்சியஇலைகளையுடைய தாமரைவாவிகள் சூழ்ந்தவயல்களையுடைய சோழநாட்டில் உள்ள இடமகன்றபலதிருப்பதிகளையும் அடைந்து; மங்கையொருபாகத்தார் மகிழ்கோயிலெனைப்பலவும் வணங்கிப்போற்றி=உமாதேவி பாகராகிய சிவபிரான் எழுந்தருளும் திருக்கோயில்கள் வேறுபலவற்றையும்

Koviloor Digital Library

பணிந்துதுதித்த ; தந்திசையாழ்ப்பெரும்பாணருடன் மறையோர்தலைவனார் சென்று சார்ந்தார்=இசைபொருந்திய திருநீலகண்டப்பெரும்பாணருடன் மறையவர்தலைவராகிய ஆளுடையபிள்ளையார் சென்றடைந்தருளினார் ; செங்கைமான்மழுவேந்துந் சிலைவிடையாரமர்ந்தருளுந் திருநள்ளாறு=சிவந்த திருக்கரத்தில் மான்கன்றையும் மழுவையும் ஏந்தியருளிய கோபத்தையுடைய இடபத்தைவாகனமாகக்கொண்ட தேற்பாரண்ணியேசர் எழுந்தருளிய திருநள்ளாறென்னுந் திருப்பதியை—எ-று.

மறையோர்தலைவனார் திருநள்ளாற்றைச்சென்றடைந்தாரெனக்கூட்டுக.

நள்ளாற்றி லெழுந்தருள நம்பர்திருத் தொண்டர்குழா நயந்து சென்று, கொள்ளாற்றி லெதிர்கொண்டு குலவியுடன் சூழ்ந்தணையக் குறுகிக்கங்கைத், தெள்ளாற்று வேணியர்தந் திருவளர்கோ புரமிறைஞ்சிச் செல்வக்கோயி, லுள்ளாற்ற வலங்கொண்டு திருமுன்பு தாழ்ந்தெழுந்தாருணர்வின் மிக்கார்.

(இ-ள்) நள்ளாற்றிலெழுந்தருள நம்பர் திருத்தொண்டர்குழா நயந்து சென்று=திருநள்ளாறென்னுந் திருப்பதியு ளெழுந்தருளுங்கால் சிவபிரானடியார் திருக்கூட்டங்கள் விரும்பிச்சென்று ; கொள்ளாற்றிலெதிர்கொண்டு குலவியுடன் சூழ்ந்தணையக் குறுகி=எதிர்கொள்ளும் முறைமையால் அவரை எதிர்கொண்டு மகிழ்ச்சியடைந்து தம்முடன் சூழ்ந்துவர அங்கெழுந்தருளி ; கங்கைத்தெள்ளாற்றுவேணியர்தந் திருவளர்கோபுரமிறைஞ்சி=கங்கையென்னுந் தெள்ளிய நதியையணிந்த சடாமுடியையுடைய தேற்பாரண்ணியேசரது செல்வமிக்க திருக்கோபுரத்தை வணங்கி ; செல்வக்கோயில் உள்ளாற்ற வலங்கொண்டு திருமுன்பு தாழ்ந்தெழுந்தாருணர்வின் மிக்கார்=செல்வம்நிறைந்த திருக்கோயிலினுள் மிகவும் பிரதட்சணஞ்செய்து திருமுன்னின்று வணங்கி எழுந்தார் அறிவின்மிக்க ஆளுடையபிள்ளையார்—எ-று.

உணர்வின்மிக்கார் அணையக்குறுகி இறைஞ்சி தாழ்ந்தெழுந்தாரெனக்கூட்டுக. முக்கால் வலஞ்செய்தமைதோன்ற ஆற்றவலங்கொண்டென்றார். ()

உருகியவன் புறுகாத லுள்ளுருகி நனையிரம் பெற்றாற்போல, மருவு திருமேனியெலா முகிழ்த்தெழுந்த மயிர்ப்புளகம் வளர்க்குநீரா, யருவிசொரி திருநயனத் தானந்த வெள்ளமிழிந் தலைபநின்று, பொருவிற்பதி கம்போக மார்த்தபூண் முலையாளென் றெடுத்துப்போற்றி.

(இ-ள்.) உருகியவன்புறு காதலுள்ளுருகி நனையிரம்பெற்றாற்போல=நெக்குருகுதற்குக் காரணமான அன்பாலாய பெருவிருப்பம் உள்ளத்தை உருகச்செய்தலால் உடம்பை நனைக்கும் ஈரத்தை தாம்பெற்றாற்போல ; திருமேனியெலாம்மருவ முகிழ்த்தெழுந்த மயிர்ப்புளகம் வளர்க்குநீராய்=திருமேனிமுழுதும்பொருந்தி முகுளித்தெழுந்தரோமாஞ்சிதமென்னும்பைங்கூழை வளர்க்குங் குணமுடைத்தாய் ; அருவிசொரி திருநயனத் தானந்தவெள்ளமிழிந்

Koviloor Digital Library

தலைபயின்று=அருவிபோலத் துளிக்கின்ற திரு நயனங்களினின்றும் ஆனந்தக்கண்ணீர் வெள்ளமானது பெருகி அலையாகிற்க; பொருவில் பதிகம் போகமார்த்த பூண்முலையா ளொன்றெடுத்துப்போற்றி=ஒப்பில்லாத திருப்பதிகத்தைப் போகமார்த்த பூண்முலையாளொன்றாடியெடுத்துத் துதித்து—எ-று.

உள்ளமுருகுதற்கு அன்புகாரணமாதலா லுருகிய அன்பென்றும், அதனால் பெருவிருப்புறுதலி னுறுகாதலென்றும், அதனால் உள்ளுருகி நினைந்த ஈரம் வெளிப்பட்டாற்போறலின் பெற்றுற்போல என்றும், அவ்வன்புகாரணமாய் மயிர்ப்புளகம் அங்குரித்தெழுதலில் அதனைவளர்க்கும் நீர்மை உடைத்தாயென்றும், அருவிபோலத் துளிக்கின்ற துளிகளின் மிகுதிதோன்ற அருவிபொழி திருநயனத் தானந்தவெள்ளமென்றுங் கூறினர். (௪௫௬)

திருநள்ளாறு - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

போகமார்த்த பூண்முலையா டன்னோடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண்வெள ளேற்றண்ணல் பரமேட்டி
யாகமார்த்த தோலுடையன் கோவண வாடையின்மே
னாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே.

தண்புனலும் வெண்பிறையுந் தாங்கியதாழ் சடைய
னண்புநல்லார் மல்குகாழி ஞானசம் பந்தனல்ல
பண்புநள்ளா றேத்தும் பாடல்பத்து மிவைவல்லா
ருண்புநீங்கி வானவரோ டுலகிலுறைவாரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - தேர்ப்பாரண்ணியேசர்.

தேவியார் - போகமார்த்தபூண்முலைநாயகியம்மை.

யாணரம்பி லாரவிய விசைகூடப் பாடியே யெண்ணில்கற்பச்,
சேணளவு படவோங்குந் திருக்கடைக்காப் புச்சாத்திச் செங்கணாகப்,
பூணகலத் தவர்பாதம் போற்றிசைத்துப் புறத்தணைந்து புவனமேத்
தும், பாணனார் யாழிலிடப் பாலறா வாயரருள் பணித்தபோது.

(இ-ள்.) யாணரம்பிலாரவியவிசைகூடப்பாடி=(திருநீலகண்ட யாழ்ப்பாணரது) யாழின்னரம்பிற்கிசைய இயற்றமிழும் இசைத்தமிழும் பொருந்தப்பாடியருளி; யெண்ணில்கற்பச் சேணளவுபட வோங்குந் திருக்கடைக்காப்புச்சாத்தி=அளவிறந்த கற்பவரையும் விண்ணுலகளவு அழியாது நிலைபெறவிளங்கும் திருக்கடைக்காப்பினைச் சாத்தியருளி; செங்கண்நாகப்பூண் அகலத்தவர் பாதம்போற்றிசைத்துப்=சிவந்தகண்ணையுடைய சர்ப்பத்தை ஆபரணமாகவணிந்த திருமார்பையுடைய தேர்ப்பாரண்ணியேசர் திருவடிக

Koviloor Digital Library

னைத்துதித்து; புறத்தணைந்து=ஆலயத்தின்புறம்பே எழுந்தருளி; புவனமே த்தும்பாணனார் யாழிலிடப் பாலறாவாய ரருள்பணித்தபோது=உலகத்தார் துதிக்கும் திருநீலகண்டயாழ்ப்பாணர் அத்திருப்பதிகத்தை யாழிலமைத்துப் பாட ஆளுடையபிள்ளையார் திருவருள்செய்த காலத்து—எ-று. (௪௫௭)

பிள்ளையார் திருத்தாளங் கொடுபாடப் பின்புபெரும் பாணனார் தாந், தெள்ளமுத வின்னிசையின் றேம்பொழிதந் திரியாழைச் சிறக் கவிக்கிக், கொள்ளவிடும் பொழிதின்கட் குவலயத்தோர் களிகூரக் குலவுசண்பை, வள்ளலார் திருவுள்ள மகிழ்ந்துதிருத் தொண்டரு டன் மருவுங்காலை.

(இ-ள்.) பிள்ளையார் திருத்தாளங்கொடுபாடப் பின்புபெரும்பாணனார் தாந்=ஆளுடையபிள்ளையார் திருப்பொற்றாளத்தை திருக்கரத்திற்றாங்கி அத் திருப்பதிகத்தைப்பாடுங்கால் பின்பு திருநீலகண்டயாழ்ப்பாணர்; தெள்ள முதவின்னிசையின் றேம்பொழிதந்திரியாழைச்சிறக்கவிக்கிக் கொள்ளவிடும் பொழுதின்கண்=தெள்ளிய அமுதம்போன்ற இனிய இசைத்தேன்பொழிகின் ற நரம்பினையுடையயாழைப்பண்ணிற்கமையக்கட்டி அவ்வியாழில் அமைய அப்பதிகத்தை அமைத்துப்பாடுங்கால்; குவலயத்தோர்களிகூர= உலகிலுள் ளார் களிப்படைய; குலவுசண்பைவள்ளலார் திருவுளமகிழ்ந்து திருத்தொண் டருடன் மருவுங்காலை=விளங்குகின்ற சீகாழியிலவதரித்த ஆளுடையபிள்ளை யார் திருவுள்ள மகிழ்ந்து அடியார் திருக்கூட்டத்தோடு எழுந்தருளி இரு க்குங்காலத்து—எ-று. (௪௫௮)

மன்னுதிருநள்ளாற்று மருந்தைவணங் கிப்போந்து வாசநன்னீ ர்ப், பொன்னிவளந் தருநாட்டுப் புறம்பணைசூழ் திருப்பதிகள் பலவு ம் போற்றிச், செந்நெல்வயற் செங்கமல முகமலருந் திருச்சாத்த ம ங்கைமூதூர், தன்னிலெழுந் தருளினார் சைவசிகா மணியார்மெய்த் தவத்தோர்சூழ.

(இ-ள்-) மன்னுதிருநள்ளாற்று மருந்தை வணங்கிப்போந்து=நிலைபெ ற்ற திருநள்ளாற்றில் எழுந்தருளிய பிறவிநோய் தீர்க்கும் மருந்தாகிய அச் சிவபிரானைவணங்கி அத்திருப்பதியினின்றுஞ் சென்றருளி; வாசநன்னீர்ப் பொன்னிவளந் தருநாட்டுப்புறம்பணைசூழ்திருப்பதிகள் பலவும்போற்றிச்= வாசனைபொருந்திய நல்லநீரையுடைய காவிரிநதியானது பலவளங்களையுந் கொடுக்கும் சோழநாட்டில் வயல்சூழ்ந்த பலதிருப்பதிகளையுந்துதித்து; செ ந்நெல்வயற்செங்கமலமுகமலருந்திருச்சாத்தமங்கை மூதூர்தன்னில்=சிவந்த நெற்பயிர்கள்பொருந்தியவயல்களிற்செந்தாமரைமலர்கள்மகளிர்முகம்போல மலர்கின்றபழமைபொருந்தியதிருச்சாத்தமங்கையென்னுந்திருப்பதியில்; சைவ சிகாமணியார் மெய்த்தவத்தோர்சூழ எழுந்தருளினார்=சைவசிகாமணியாகிய ஆளுடையபிள்ளையார் மெய்யடியார்கள் சூழும்படி எழுந்தருளினார்—எ-று.

Koviloor Digital Library

நிறைசெல்வத் திருச்சாத்த மங்கையினி னீலநக்கர் தாமுஞ்சை
வ, மறையவனா ரெழுந்தருளும் படிகேட்டு வாழ்ந்துவழி விளக்கியெ
ங்குந், துறைமலிதோ ரணங்கதலி கமுகுநிறை குடந்தூப தீபமாக்கி,
முறைமையில்வந் தெதிர்கொள்ள வுடனணைந்து முதல்வனார் கோயி
ல்சார்ந்தார்.

(இ-ள்.) நிறைசெல்வத் திருச்சாத்தமங்கையினினிலநக்கரும்=நிறைந்த செல்வத்தையுடைய திருச்சாத்தமங்கை என்னுந் திருப்பதியில் எழுந்தருளியிருக்கின்ற திருநீலநக்க நாயனாரும்; சைவமறையவனாரெழுந்தருளும்படி கேட்டுவாழ்ந்து=சைவவேதியராகிய ஆளுடையபிள்ளையார் எழுந்தருளும் முறைமையைத் தாம்கேட்டு (அதனால் இன்புற்று;) வழிவிளக்கி யெங்குந் துறைமலிதோரணங் கதலிகமுகுநிறைகுடந் தூபதீபமாக்கி=பிள்ளையார் எழுந்தருளும் வழியை செப்பஞ்செய்து எவ்விடங்களினும் இடை இடையே நெருங்கிய தோரணங்களையும் வாழைகளையும் கமுகுகளையும் அவ்விடங்களிற் பூரணகும்பங்களையும் தூபதீபங்களையும்வைத்து; முறைமையில் வந்தெதிர்கொள்ள வுடனணைந்து முதல்வனார்கோயில்சார்ந்தார்=எதிர்கொள்ளும் முறைப்படிசென்று எதிர்கொள்ள அவரோடு எழுந்தருளி அயவந்திசரது திருக்கோயிலை அடைந்தருளினார்—எ-று. (சகூ௰)

அயவந்தி யமர்ந்தருளு மங்கணர்தங் கோயின்மருங்கணைந்துவா
னோ, ருயவந்தித் தெழுமுன்றில் புடைவலங்கொண் டுட்புக்காரொழு
குஞ்செக்கர், மயவந்தி மதிச்சடையார் முன்றாழ்ந்து மாதவமிவ் வை
யமெல்லாஞ், செயவந்த வந்தணனார் செங்கைமேற் குவித்தெழுந்து
திருமுன்னின்றார்.

(இ-ள்.) அயவந்தியமர்ந்தருளும் அங்கணர்தங்கோயின்மருங்கு அணைந்து=அயவந்தி என்னுந்திருப்பதியி லெழுந்தருளிய அயவந்திநாதரது ஆலயத்தின்கண் அடைந்து; வானோருயவந்தித் தெழும்முன்றில் புடைவலங்கொண்டு உள்புக்கார்=தேவர்கள்வாழும்பொருட்டு எழாநின்ற திருமுற்றத்தின்கண் வலமாகவந்து உள்ளேபுகுந்தவராய்; ஒழுகும்செக்கர் மயவந்தி மதிச்சடையார் முன்தாழ்ந்து=ஒழுகுகின்ற செவ்வானம்போலும் அந்திப்பிறையணிந்த சடைமுடியையுடைய அச்சிவபிரானது திருமுன்புவணங்கி; இவ்வையமெல்லாம் மாதவஞ்செயவந்த அந்தணனார்=இந்த நிலவுலகத்தார் அனைவரும் பெரியதவஞ்செய்த காரணத்தால் அவதரித்த ஆளுடையபிள்ளையார்=செங்கைமேற்குவித்து எழுந்து திருமுன்நின்றார்=சிவந்த திருக்கரங்களைச் சிரசின்மேற்குவித்து வணங்கி எழுந்துதிருமுன்புநின்றருளினார்—எ-று.

அந்தணனார் உட்புக்காராய்க் குவித்தெழுந்து நின்றாரெனக்கூட்டுக.

ஒழுகுஞ்செக்கர் மயச்சடை எனவியையும், ஓர் அவசரத்துச்சடைகள் பின்றூங்கும் ஆதலின் ஒழுகுஞ்செக்கர் மயச்சடையெனக்கூறினார். (சகூக)

Koviloor Digital Library

போற்றிசைக்கும் பாடலினுற் பொங்கியெழு மாதரவு பொழிந் துவிம்மி, யேற்றின்மிசை யிருப்பவர்த மெதிர்நின்று நினைந்துபோ ந் தெல்லையில்லா, நீற்றுநெறி மறையவர்தா நீலநக்கர் மனையிலெழுந் தருளியன்பா, லாற்றும்விருந் தவரமைப்ப வன்பருட னின்புற்றங் க முதுசெய்தார்.

(இ-ள்.) போற்றிசைக்கும் பாடலினுற்பொங்கி எழும் ஆதரவுபொழிந் துவிம்மி=துதிக்கும் திருப்பதிகத்தால் அதிகரித்து எழுகின்ற ஆனந்தக் கண் ணீர்சொரிந்து விம்முதல்செய்து; ஏற்றின்மிசையிருப்பவர்தம் எதிர்நின்று= இடபத்தின்மேல் எழுந்தருளுபவராகிய அச்சிவபிரானது சந்நிதிக்கண் நின் று; நினைந்துபோந்து=பேரானந்தத்தில்மூழ்கி அங்குநின்றுஞ்சென்றருளி; எல்லையில்லாநீற்றுநெறி மறையவர்தாநீலநக்கர் மனையிலெழுந்தருளி=அளவு படாத சைவமார்க்கத்தைவளர்க்கும் ஆளுடையபிள்ளையார் திருநீலநக்கநாய னார் திருமனையிலெழுந்தருளி; அவர் அன்பால் ஆற்றும்விருந்து அமைப்ப அன்பருடன் இன்புற்று அங்கு அமுதுசெய்வார் = அத்திருநீலநக்காயனார் அன்பாற்செய்தவிருந்தினை அமைப்பிக்க அடியார்திருக்கூட்டத்தோடுவிரும்பி அவ்விடத்துத் திருவமுதுசெய்தார்—எ-று.

ஈங்கு விருந்தென்றது உண்டிமுதலியனவற்றின் மேற்று ஆதரவாலாய கண்ணீரை ஆதரவென்றதுபசாரம். (சகஉ)

நீடுதிருநீலநக்கர் நெடுமனையில் விருந்தமுது செய்துநீர்மைப், பாடும்யாழ்ப் பெரும்பாண ருந்தங் வங்கிரவு பள்ளிமேவி, யாடும வ ரயவந்தி பணிவதற்குக் கன்பருட னணைந்து சென்று, நாடியநன் புடைநீல நக்கடிக ளுடனாதர் கழல்சிற்றுழ்ந்து.

(இ-ள்.) நீடுதிரு நீலநக்கர் நெடுமனையில் விருந்தமுதுசெய்து=அன்பு மிக்க திருநீலநக்கரது பெருமைபொருந்திய திருமனையில் விருந்தின்பொருட் டு அமைத்த திருவமுதை அமுதுசெய்தருளி; நீர்மைபாடும் யாழ்ப்பெரும் பாணருந்தங்க அங்கு இரவுபள்ளிமேவி=பண்ணீர்மையோடும் பாடும் திருநீ லகண்ட யாழ்ப்பாணரும் அத்திருமனையில்வசிக்கத் தாமும் அவ்விடத்து இர வில் துயில்கூர்ந்தருளி; ஆடுமவரயவந்தி பணிவதற்கு அன்பருடன் அணை ந்து சென்று=திருத்தஞ்செய்தருளும் அச்சிவபிரானது அயவந்தியென்னுந்த லத்தை வணங்க அடியார் திருக்கூட்டத்தோடு எழுந்தருளிச்சென்று; நாடி யநன்புடைநீலநக்கடிகளுடன் நாதர்கழல்சிற்றுழ்ந்து=யாவராலும் விரும்பத் தக்க நட்பினையுடைய திருநீலநக்க நாயனாரோடு அயவந்திநாதர் திருவடிக ளைவணங்கி—எ-று.

பாடும் யாழ்ப்பாணருந் தங்கவென்றது, முன் திருநீலநக்க நாயனார்க்கு நீலகண்டப் பெரும்பாணர் தங்கவுறையுள் கொடுத்தருளவெனப் பிள்ளையார் கட்டளையிட அவர் நடுமனையில் ஔபாசனவேதியில் இடங்கொடுத்தமை குறித்துநின்றது. (சகங)

Koviloor Digital Library

கோதிலா வாரமுதைக் கோமளக்கொம் புடன்கூடக் கும்பிட் டேத்தி, யாதியா மறைப்பொருளா லருந்தமிழின் றிருப்பதிக மருளி ச்செய்வார், நீதியாய் நிகழ்கின்ற நீலநக்கர் தம்பெருஞ்சீர் நிகழவைத் துப், பூதிசா தனர்பரவும் புனிதவிய லிசைப்பதிகம் போற்றிசெய்தார்.

(இ-ள்.) கோதிலா வாரமுதைக் கோமளக்கொம்புடன்கூடக் கும்பிட் டேத்தி=குற்றமில்லாத அரிய அமுதுபோலும் அயவந்தீசரை அழகிய பூங் கொம்புபோன்ற இருமலர்க் கண்ணம்மையோடுகூட வணங்கித்துதித்து; ஆதியாமறைப்பொருளா லருந்தமிழின் திருப்பதிகம் அருளிச்செய்தார்=எல் லா நூற்கு முதனூலாகிய வேதப்பொருளோடு அரியதமிழ்த்திருப்பதிகத்தை அருளிச்செய்வாராய்; நீதியாய் நிகழ்கின்ற நீலநக்கர் தம்பெருஞ்சீர் நிகழ வைத்து=சைவ நெறிவழி ஒழுகுகின்ற திருநீலநக்கநாயனாரது பெரிய கீர்த் தியை "நிறையினார்நீலநக்கன்னெடுமாநகரென்று தொண்டறையுமூர் சாத்த மங்கை" யெனத் திருக்கடைக்காப்பிற்சிறப்பித்து; பூதிசாதனர் பரவும் புனி தவியலிசைப்பதிகம் போற்றிசெய்தார்=பூதிருத்திராக்கமென்னுஞ் சைவசா தனத்தை விளக்குகின்ற ஆளுடையபிள்ளையார் பரிசுத்தமான இயலிசைகளா மைந்த திருப்பதிகத்தைத் துதிசெய்தார்—எ-று.

பூதிசாதனர் மறைப்பொருளோடு திருப்பதிகம் அருளிச்செய்வாராய் நீலநக்கர் சீர்நிகழவைத்துப் போற்றிசெய்தாரெனக் கூட்டுக. (சுகூச)

திருச்சாத்தமங்கை - பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

திருமலர்க் கொன்றைமாலை திளைக்குமதி சென்னிவைத்தீ
ரிருமலர்க் கண்ணிதன்னோ டுடனாவது மேற்பதொன்றே
பெருமலர்ச் சோலைமேக முரிஞ்சும்பெருஞ் சாத்தமங்கை
யருமல ராதிமூர்த்தி யயவந்தி யமர்ந்தவனே.

மறையினார் மல்குகாழித் தமிழ்ஞானசம் பந்தன்மன்று
நிறையினார் நீலநக்கன் னெடுமாநக ரென்றுதொண்ட
ரறையுமூர் சாத்தமங்கை யயவந்திமே லாய்ந்தபத்து
முறைமையா லேத்தவல்லா ரிமையோரிலு முந்துவரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-அயவந்தீசர். தேவியார்-இருமலர்க்கண்ணம்மை.

Koviloor Digital Library

பரவியகா தலிற்பணிந்து பாலரு வாயர்புறத் தணைந்துபண்பு,
விரவியநன் புடையடிகள் விருப்புறுகா தலிற்றங்கி மேவுநாளி, லர
வணிந்தார் பதிபிறவும் பணியவெழு மாதரவா லணைந்துசெல்வா, ரு
ரவுமனக் கருத்தொன்று முள்ளமுடை யவர்க்குவிடை யுவந்தாநல்கி.

(இ-ள்.) பரவியகாதலிற்பணிந்து பாலருவாயர் புறத்தணைந்து=ஆளு டைய பிள்ளையார் மிக்கவிருப்பால்வணங்கித்திருக்கோயிலின் புறத்துச்சென் றருளி; பண்புவிரவிய நண்புடையடிகள் விருப்புறு காதலிற்றங்கி மேவுநா ளில்=குணத்தொடு கலந்தநட்பினையுடைய திருநீலநக்கநாயனாரது விரும்பத் தக்க பேரன்பின்நிமித்தம் அவரது திருமடத்தில் எழுந்தருளி இருக்கும் நா ளில்; அரவணிந்தார் பதிபிறவும் பணியவெழுமாதரவாலணைந்துசெல்வார்= சர்ப்பாபரணத்தையணிந்த சிவபிரான் எழுந்தருளிய பிறதிருப்பதிகளையும் வ ணங்கும்பொருட்டு எழுந்த அன்பினால் அங்குநின்று எழுந்தருளும் பிள்ளை யார்; உரவுமனக்கருத்தொன்று முள்ளமுடையவர்க்கு விடையுவந்தாநல்கி= உணர்வு அமைந்த மனக்கருத்து ஒருங்கிய உள்ளத்தையுடைய திருநீலநக்க நாயனாருக்கு மகிழ்ந்து விடைகொடுத்தருளி—எ-று. (சகூரு)

வேறு.

மற்றவர்தம் பெருங்கேண்மை மகிழ்ந்துகொண்டு மாலயனுக் க
ரியபிரான் மருவுதானம், பற்பலவுஞ் சென்றுபணிந் தேத்திப்பாடிப்
பரமர்திருத் தொண்டர்குழாம் பாங்கினெய்தக், கற்றவர்வாழ் கடனு
கைக் காரோணத்துக் கண்ணுதலைக் கைதொழுது கலந்தவோசைச்,
சொற்றமிழ்மா லைகள்பாடிச் சிலநாள்வைகித் தொழுதகன்றார் தோ
ணிபுரத் தோன்றலார் தாம்.

(இ-ள்.) மற்றவர்தம் பெருங்கேண்மை மகிழ்ந்துகொண்டு=அத்திருநீல நக்கநாயனாரது பெரியான்பை மகிழ்கூர்ந்தருளி; மாலயனுக்கரியபிரான் ம ருவு தானம்பற்பலவுஞ்சென்று பணிந்தேத்திப்பாடி=திருமால் பிரமன் கா ணுதற்கரிய சிவபிரான் எழுந்தருளிய திருப்பதிகள்பலவற்றையும் அடைந்து வணங்கி துதித்து திருப்பதிகம்பாடி; பரமர்திருத்தொண்டர்குழாம் பாங்கி னெய்த=சிவபிரானது திருவடியார்கூட்டம் தமதுமருங்கில் சூழ்ந்துவர; கற்றவர்வாழ்கடனாகைக் காரோணத்துக்கண்ணுதலைக்கைதொழுது=கல்வி யுடையார்வாழும் கடற்கரைக்கண் உள்ள திருநாகைகாரோணமென்னூர் திரு ப்பதியிலெழுந்தருளிய திருக்காரோணரைக்கைகுவித்துவணங்கி; கலந்தவோ சைச் சொற்றமிழ்மாலைகள்பாடிச் சிலநாள்வைகி=இசைபொருந்திய சொல் லாலாகிய திருப்பதிகமாலையைப் பாடியருளி அங்குச்சிலநாள் எழுந்தருளி இருந்து; தோணிபுரத்தோன்றலார் தொழுதகன்றார்=ஆளுடையபிள்ளையார் வணங்கி அத்திருப்பதியினின்றும் நீங்கியருளினார்—எ-று.

தாம்=அசை. (சகசு)

Koviloor Digital Library

திருநாகைக்காரோணம்-பண்-செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

கூனற்றிங்கட் குறுங்கண்ணிகான்ற நெடுவெண்ணிலா
வேனற்பூத்தம ராங்கோதையோடும் விரவுஞ்சடை
வானநாட னமரர்பெருமாற் கிடமாவது
கானல்வேலிக் கடல்சூழ்கடனாகைக் காரோணமே.

மல்குநண்பூம் புனல்வாய்க்கொழுகும் வயற்காழியா
னல்லகேள்வித் தமிழ்ஞானசம்பந்த னல்லார்கண்முன்
வல்லவாறேபுனைந் தேத்துகாரோணத் துவண்டமிழ்
சொல்லுவார்க்கு மிதைகேட்பவர்க்குந் துயரில்லையே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-காயாரோகணேசர். தேவியார்-நீலாயதாட்சியம்மை.

கழிக்கானன் மருங்கணையுங் கடனாகைபதுநீங்கிக் கங்கையாற்றுச், சுழிக்கானல் வேணியர்தம் பதிபலவும் பரவிப்போய்த் தோகைமார்தம், விழிக்காவி மலர்பழனக் கீழ்வேளூர் விமலர்கழல் வணங்கியேத்தி, மொழிக்காதற் றமிழ்மாலை புனைந்தருளி யங்ககன்றார் மூதூர்நின்றும்.

(இ-ள்.) கழிக்கானல் மருங்கணையுங்கடனாகையதுநீங்கி = உவர்க்கழியாற்றின் அருகிலிருக்கின்ற திருக்கடல்நாகைக்காரோணத்தினின்று நீங்கி; கங்கையாற்றுச்சுழிக்கு ஆனல்வேணியர்தம் பதிபலவும் பரவிப்போய்=கங்காநதியின்சுழிக்கு இடமாய் அகன்ற நல்லசடாமகுடத்தையுடைய சிவபெருமானது பலதிருப்பதிகளையுந் துதித்துச்சென்று; தோகைமார்தம் விழிக்காவிமலர் பழனக்கீழ்வேளூர் விமலர்கழல்வணங்கியேத்தி=பெண்களதுகண்போலும் நீலோற்பலங்கள் மலர்கின்ற வயல்சூழ்ந்த திருக்கீழ்வேளூரில் எழுந்தருளிய அட்சயலிங்கரது திருவடிகளை வணங்கித் துதித்து; மொழிக்காதற்றமிழ்மாலை புனைந்தருளியங்ககன்றார் மூதூர்நின்றும்=சொல்லாறுய விருப்பத்தைத்தரும் திருப்பதிகமாலையைச் சாத்தியருளி அத்திருப்பதியினின்றும் நீங்கியருளினார்—எ-று.

கழிக்கானல் உவர்க்கழியாற்றின்பக்கவிடம்; அதுகழிகானல்பானல்கமழ்காழியென்று கருதப்படுபொருள் என்பதனாலும் கண்டல்கண்மிண்டியகானற்காழி என்பதனாலும் கழிசூழ்குளிர்கானல் என்பதனாலுங்காண்க. (சகூஎ)

Koviloor Digital Library

திருக்கீழ்வேளூர் - பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

மின்னுலாவிய சடையினர் விடையினர் மிளிர்தரு மரவோடும்
பன்னுலாவிய மறையொலி நாவினர் கறைபணி கண்டத்தர்
பொன்னுலாவிய கொன்றையந் தாரினர் புகழ்மிகு கீழ்வேளூ
ருன்னுலாவிய சிந்தையர் மேல்வினை யோடிட வீடாமே.

குருண்டவார்குழற் சடையுடைக் குழகனை யழகமர் கீழ்வேளூர்
திரண்டமாமறை யவர்தொழும் பெருந்திருக் கோயிலெம் பெருமானை
யிருண்டமேதியி னினமிகுவயன்மல்கு புகலிமன் சம்பந்தன்
றெருண்டபாடல்வல் லாரவர்சிவகதி பெறுவது திடமாமே.

திருச்சிற்றம்பலம்.

சுமாமிபெயர் - அக்ஷயலிங்கேசர்.

தேவியார்- வனமுலைநாயகியம்மை.

அருகணையுந் திருப்பதிக ளானவெலா மங்கணனைப் பணிந்து போற்றிப், பெருகியஞா னம்பெற்ற பிள்ளையா ரெழுந்தருளும் பெருமைகேட்டுத், திருமருவு செங்காட்டங் குடிநின்று சிறுத்தொண்ட ரோடிச்சென்றங், குருகுமனங் களிசிறப்ப வெதிர்கொண்டு தம்பதியுட் கொண்டுபுக்கார்

(இ-ள்.) அருகணையுந் திருப்பதிகளான வெலாமங்கணனைப் பணிந்து போற்றி=பக்கத்திலுள்ள திருப்பதிகளெல்லாவற்றிலும் எழுந்தருளிய சிவபெருமானைவணங்கித்துதித்து; பெருகிய ஞானம்பெற்ற பிள்ளையார் எழுந்தருளும் பெருமைகேட்டு=மேம்பட்ட உண்மைஞானத்தைப்பெற்றுக்கொண்ட ஆளுடையபிள்ளையார் தமது திருப்பதிக்கு எழுந்தருளும் பெருமையைக்கேள்வியுற்று; திருமருவு செங்காட்டங்குடிநின்று சிறுத்தொண்டரோடிச் சென்று=செல்வமிக்க திருச்செங்காட்டங்குடியினின்றுஞ் சிறுத்தொண்டநாயனார் விரைந்துசென்று; உருகுமனங்களிசிறப்ப அங்கு எதிர்கொண்டுதம்பதியுட்கொண்டுபுக்கார்=நெக்குருகும் மனதில்களிப்புமேலிடப் பிள்ளையாரெழுந்தருளுமிடத்து அவரை எதிர்கொண்டு தமதுதிருப்பதியின்கண் அழைத்துக்கொண்டுசென்றார்—எ-று.

அடியார்சென்றுழிதரியாதசென்று எதிர்கொண்டுவணங்கி உபசரித்துத் தக்கவாறு திருவமுதுசெய்விக்கும் அவரதுபத்திநிலைமைதோன்ற ஓடிச்சென்றென்றார்.

(சகஅ)

Koviloor Digital Library

சிறுத்தொண்ட ருடன்கூடச் செங்காட்டங் குடியிலெழுந் தரு
ளிச்சீர்த்தி, நிறுத்தெண்டிக் கிலுநிலவுந் தொண்டரவர் நண்பமர்ந்து
நீலகண்டம், பொறுத்தண்ட ருயக்கொண்டார் கணபதீச்சரத்தின்க
ட் போகமெல்லாம், வெறுத்துண்டிப் பிச்சைநுகர் மெய்த்தொண்ட
ருடனணைந்தார் வேதவாயர்.

(இ-ள்.) சிறுத்தொண்டருடன்கூடச் செங்காட்டங்குடியி லெழுந்தரு
ளி=சிறுத்தொண்டநாயனாரோடுகூடத் திருச்செங்காட்டங்குடிஎன்னுந் திருப்
பதியிலெழுந்தருளி ; சீர்த்தி எண்டிக்கிலும் நிறுத்து நிலவுந்தொண்டரவர்
நண்பமர்ந்து=கீர்த்தியை எட்டுத்திக்கிலும் நிறுத்துவிளங்கும் அச்சிறுத்தொ
ண்ட நாயனாரது நட்பினைவிரும்பி ; நீலகண்டம்பொறுத்து அண்டர் உய்யக்
கொண்டார் கணபதீச்சரத்தின்கண்=திருநீலகண்டத்தைக்கொண்டருளி தே
வர்களை உய்யும்படி ஆட்கொண்ட கணபதிசரது ஆலயத்தின்கண் ; போக
மெல்லாம்வெறுத்துண்டிப் பிச்சைநுகர்மெய்த்தொண்டருடன் வேதவாயர்
அணைந்தார்=இம்மை இன்பமும் மறுமைஇன்பமும் ஆகிய எல்லாப்போகங்
களையும் உவர்த்துப் பிச்சை உண்டியை உண்கின்றமெய்யடியாருடன் ஆளு
டையபிள்ளையார் அடைந்தருளினார்—எ-று.

மறுமையின்பமுமடங்கப் போகமெல்லாமென்றும், இம்மைமறுமையின்
பங்களைத் துவரத்துறத்தலின் வெறுத்தென்றும், அவ்வாறுமுற்றத்துறந்தார்
க்குப் பிச்சையுணவுசிறத்தலின் உண்டிப்பிச்சைநுகர்என்றும், துறவுகாரண
மாக அவாவறுத்து மெய்யுணர்ந்தாராதலின் மெய்த்தொண்டரென்றுங் கூ
றினர். இம்மையின்பம்=மகளிர் மாலைசந்தனம் முதலியவற்றாலாய சுகம்.
மறுமை யின்பம்=கற்பகநிழற்கண் புத்தமுதுண்டு அரம்பையர்குழாத்தோடு
தழுவியடையுஞ்சுகம். (சுசுகூ)

அங்கணைந்து கோயில்வலங் கொண்டருளி யரவணிந்தா ரடிக்
கீழ்வீழ்ந்து, செங்கணரு விகள்பொழியத் திருமுன்பு பணிந்தெழுந்
து செங்கை கூப்பித், தங்கள்பெருந் தகையாரைச் சிறுத்தொண்டர்
தொழவிருந்த தன்மைபோற்றிப், பொங்கியெழு மிசைபாடிப் பேர
ற்றிசைத்தங் கொருபரிசு புறம்புபோந்தார்.

(இ-ள்.) அங்கணைந்து கோயில்வலங்கொண்டருளி=அத்திருவாலயத்
தை அடைந்து திருக்கோயிலைப் பிரதட்சணஞ்செய்தருளி ; அரவணிந்தா ர
டிக்கீழ் செங்கணருவிகள்பொழியத் திருமுன்புவீழ்ந்து=சர்ப்பாபரணத்தை
யணிந்த கணபதீசரது திருவடிக்கீழ் சிவந்ததிருக்கண்களினின்று மானந்தக்
கண்ணீர் அருவிசோர அவரதுதிருமுன்புவீழ்ந்து அட்டாங்கமாகவணங்கி எ
ழுந்து ; செங்கைகூப்பி=சிவந்ததிருக்கரங்களைச் சிரசின்மேற்குவித்து ; தங்
கள் பெருந்தகையாரைச் சிறுத்தொண்டர் தொழ விருந்ததன்மைபோற்றி=
தமது பெருந்தகையாராகிய கணபதீசரைச் சிறுத்தொண்டநாயனார் வணங்க

Koviloor Digital Library

எழுந்தருளிய தன்மையை "செங்காட்டங்குடிமேய சிறுத்தொண்டன் பணி செய்ய" எனத்திருப்பதிகத்தில் சிறப்பித்தருளிச்செய்து; பொங்கியெழுமிசை பாடிப் போற்றிசைத்தங்கொரு பரிசபுறம்புபோந்தார்=ஓங்கியெழும் இனிய இசையையுடைய திருப்பதிகத்தைப்பாடித் துதிசெய்து ஒருவாறு ஆலயத்தின் புறம்பே யடைந்தருளினார்—எ-று.

சிந்தைக்கினிய ஆராமைதோன்ற ஒருபரிசென்றார். (சஎ௰)

திருச்செங்காட்டங்குடி-பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

பைங்கோட்டு மலர்ப்புன்னைப் பறவைகாள் பயப்பூரச்
சங்காட்டந்தவிர்த்தென்னைத் தவிராநோய் தந்தானே
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டன் பணிசெய்ய
வெங்காட்டு ளனலேந்தி விளையாடும் பெருமானே.

நறைநளல்பூம் புனல்பரந்த செங்காட்டங் குடிமேய
வெந்நீற் றணிமார்பன் சிறுத்தொண்ட னவன்வேண்ட
வந்தண்பூங் கலிக்காழி யடிகளையே யடிபரவுஞ்
சந்தங்கொள் சம்பந்தன் றமிழுரைப்போர் தக்கோரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-கணபதீச்சரர். தேவியார்-திருக்குழல்நாயகியம்மை.

போந்துமா மாத்திரர்தம் போரேற்றின் றிருமனையிற் புகுந்து
சிந்தை, வாய்ந்தமா தவரவர்தா மகிழ்ந்தருள வமர்ந்தருளி மதில்கண்
மூன்றுங், காய்ந்தமால் விடையார்தங் கணபதீச்சரம்பரவு காதல்கூர
வேந்துநூலணிமார்ப ரின்புற்றங் கன்பருட னிருந்தநாளில்.

(இ-ள்.) போந்துமாமாத்திரர்தம் போரேற்றின் றிருமனையிற்புகுந்து=ஆலயத்தினின்றும்புறம்பே எழுந்தருளி மாமாத்திரருள்தலைவராகிய சிறுத்தொண்ட நாயனாரது திருமனையிற்சென்றருளி; சிந்தைவாய்ந்த மாதவரவர்தாமகிழ்ந்தருள வமர்ந்தருளி=திருவுள்ளக்கனிவு அமைந்தபெருந்தவத்தினராய சிறுத்தொண்டநாயனார் மகிழ்கூர்ந்தருள அங்குவசித்தருளி; மதில்கண் மூன்றுங்காய்ந்த மால்விடையார்தங் கணபதீச்சரம் பரவுகாதல்கூர=அசுரர்களது திரிபுரங்களையும் எரித்தெரித்தருளிய திருமாலாகியவிடபத்தை வாகனமாகக்கொண்டருளும்பெருமானது கணபதீச்சரமென்றுமாலயத்தை வணங்கும் விருப்பம்மேம்பட; ஏந்துநூலணிமார்பரின்புற் றங்கன்பருடனிருந்த நாளில்=பவித்திரமணிந்த அழகியதிருமார்பினையுடைய ஆளுடையபிள்ளையார் மகிழ்ச்சியடைந்து அத்திருப்பதியில் அடியார் திருக்கூட்டத்தோடு எழுந்தருளி இருந்தகாலத்தில்—எ-று. (சஎக)

Koviloor Digital Library

திருமருக னகரின்க ணெழுந்தருளித் திங்களுடன் செங்கட்பாம்
பு, மருவுநெடுஞ் சடைமவுலி மாணிக்க வண்ணர்கழல் வணங்கிப்
போற்றி, யுருகியவன் புறுகாதலுள்ளலைப்பத் தெள்ளுமிசை யுடனே
கூடப், பெருகுதமிழ்த் தொடைசாத்தி யங்கிருந்தார் பெரும்புகலிப்
பிள்ளையார் தாம்.

(இ-ள்.) திருமருகனகரின்கணெழுந்தருளி=திருமருகலென்னுந் திருப்பதியின்கண் அடைந்தருளி; திங்களுடன் செங்கட்பாம்புமருவுநெடுஞ்சடைமவுலி மாணிக்கவண்ணர்கழல்வணங்கிப்போற்றி=இளம்பிறையோடு சிவந்த கண்ணையுடைய பாம்புகளும் பகையின்றிவாழும் நீண்ட சடாமகுடத்தையுடைய மாணிக்கவண்ணரது திருவடிகளை வணங்கித்துதித்து; உருகியவன் புறு காதலுள்ளலைப்ப=உருகுதற்குக் காரணமாகிய அன்பாலாய பெருவிருப்பானது தமது திருவுள்ளத்தை அலையச்செய்ய; தெள்ளுமிசை யுடனேகூடப் பெருகுதமிழ்த்தொடைசாத்தி=தெளிந்த இசையோடுகூடச் சுவைமிக்க திருப்பதிக மாலையைச்சாத்தி; பெரும்புகலிப்பிள்ளையார் அங்கிருந்தார்=பெருமைபொருந்திய ஆளுடையபிள்ளையார் அங்குஎழுந்தருளி இருந்தார்—எ-று.

தாம்=அசை. (சஎஉ)

வேறு.

அந்நாளி லொருவணிகன் பதிகனாகி யணைவானோர் கன்னியை
யு முடனேகொண்டு, பொன்னார்மே ருச்சிலையார் கோயின்மாடு புறத்
திலொரு மடத்திரவு துயிலும்போது, மின்னார்வெள் ளெயிற்றரவு
கவ்வுதலுங் கிளர்ந்த விடவேகங் கடிதுதலை மீக்கொண்டேறத், தன்
னுயிர்நீங்குமவன் றன்மைகண்டு சாயலிளங் கன்னிநிலை தளர்ந்து சோ
ர்வாள்.

(இ-ள்.) அந்நாளில்பதிகனாகி யணைவான் ஒருவணிகன்=அந்நாளில் வழிச்செல்வோனாய் வரும் ஓர் வசியன்; ஓர் கன்னியையுமுடனேகொண்டு=தன்னைவரனாகக்குறித்த ஓர் கன்னிகையையும் தன்னுடன்கொண்டு; பொன்னார்மேருச்சிலையார் கோயின்மாடு=பொன்மயமான மாமேருவை வில்லாக உடைய மாணிக்கவண்ணரது திருக்கோயிலின்பக்கலில்; ஒருமடத்துப்புறத்தில் இரவுதுயிலும்போது=ஒருதிருமடத்தின் புறம்பே அன்றிரவு துயிலுங் காலத்து; மின்னார் வெள்ளெயிற்றரவு கவ்வுதலும்=ஒளிபொருந்திய வெள்ளிய பற்களையுடைய பாம்பொன்று கடிக்குங்கால்; கிளர்ந்தவிடவேகங் கடிது தலைமீக்கொண்டேற=மேற்கொண்டவிடத்தின் வேகமானது விரைவாய்த் தலைக்கொண்டுசெல்ல; தன்னுயிர்நீங்குமவன் றன்மைகண்டு சாயலிளங்கன்னி நிலைதளர்ந்து சோர்வாள்=தனது உயிர்நீங்கும் அத்தலைவனது நிலைமையைப்பார்த்து மயிலின்சாயலையுடைய இளமைபொருந்திய அக்கன்னிகை நிலைதளர்ந்து வருந்தவாளாயினாள்—எ-று.

Koviloor Digital Library

எயிறென்றது, காளி, களாத்திரி, எமன், எமதூதன் என்னும் நான்குபற்களையும் உணர்த்தலிற்சாதி ஒருமையிடவேசம் என்புழித்தொக்க ஐந்தாம் - உருபும் பொருளும்விரிக்க அதனினின்றும் தோன்றியதென ஏதுப்பொருள்படவியையும்; வேகம்ஏழினுள் ஏழாம்வேகத்தில் பல்லும் நாவும் உடம்பும் கருகிவிடந் தலைக்கொள்ளுங்கால் உயிர் அடங்குதலும் உண்டு. ஆதலின், அவ்வாறு அடங்காதுபோயிற்றென்பார் ஆவிநீங்குமவனென்றார். (சஎரு)

வாளரவு தீண்டவுந்தான் றீண்டகில்லாண் மறுமாற்ற மற்றொருவர் கொடுப்பாரின்றி, யாளரியே றனையானை யணுகவீழ்ந்தே யசைந்தமலர்க் கொடிபோல்வா ளரற்றும்போது, கோளுருமும் புள்ளரச மனையாரெல்லாக் கொள்கையினு லுந்தீர்க்கக் குறையாதாக, நீளிரவு புலர்காலை மாலைவாச நெறிகுழலா ளெடிதயர்ந்து புலம்புகின்றாள்.

(இ-ள்.) வாளரவுதீண்டவுந்தான்றீண்டகில்லாள்=ஒளிபொருந்தியசர்ப்பந்தீண்டவும்தான் அவனைத்தீண்டாளாகி; மறுமாற்றமற்றொருவர் கொடுப்பாரின்றி = வேறுவார்த்தையைக் கூறுவார் மற்றொருவருமில்லாமல்; ஆளரியேறனையானை யணுகவீழ்ந்தே=தன்னையாளத்தக்க ஆண்சிங்கம்போன்ற அத்தலைவனைச் சமீபிக்கப் பூமியில்விழ்ந்து; அசைந்த மலர்க்கொடிபோல்வாளரற்றும்போது=அசைகின்ற பூங்கொடிபோலும் அக்கன்னிகை யழுங்காலத்து; கோளுருமும் புள்ளரசமனையார்=கொல்லைவிளைக்கும் இடியையும் கருடனையும் ஒத்தமாந்திரிகர்; எல்லாக்கொள்கையினாலுந் தீர்க்கக் குறையாதாக=தாம்செய்யும் பாவனையேயன்றி மருந்து மந்திரம் மணி முதலிய விடந்தீர்க்கும் உபாயங்களெல்லாவற்றாலுந் தீர்க்க விடம் நீங்காதிருக்க; நீளிரவு புலர் காலைமாலை வாசநெறிகுழலா ளெடிதயர்ந்து புலம்புகின்றாள்=நீண்ட இராக்காலம்போய் வைகறையாங்காலத்து மாலையையணிந்த வாசனைபொருந்திய நெறித்தகூந்தலையுடைய அக்கன்னிகை மிகச்சோர்ந்து புலம்புவாளாயினாள்—எ-று.

கோளுருமு=கோளைவிளைக்கும் உருமுவென இரண்டாம் உருபும் பொருளும் விரிக்க விவாகச்சடங்கு முடியாது அரவுதீண்டியிறந்த அவ்வணிகமகனைத்தீண்டுதல் கூடாமையிற்றான் தீண்டகில்லாளென்றும், இறந்துபோன அவ்வணிகமகனையேயன்றி அவட்கு மற்றொருறுதிகூறும் துணையின்மையின் மறுமாற்றம் மற்றொருவர் கொடுப்பாரின்றி யென்றும் ஆதிபௌதிகமாகிய உருமும் புள்ளரசுமன்றி ஆதிதெய்விகமாகிய உருமும் புள்ளரசுமாகத் தம்மைப்பாவிக்கும் ஆரோபிதபாவனையையுடைய மாந்திரிகரது பாவனையிலேமைதோன்றக் கோளுருமும் புள்ளரசுமனையாரென்றும் அவர்செய்யும் பாவனையே அன்றி மருந்துமணிமந்திரங்களும்அடங்க எல்லாக்கொள்கையினாலுமென்றுங்கூறினர். (சஎச)

Koviloor Digital Library

அன்னையையு மத்தனையும் பிரிந்துநின்னை யடைவாகவுடன்போந்தே னரவால்வாடி, யென்னையுயிர்விட்டகன்று யானென்செய்கேனிவ்விடுக்கண் டீர்க்கின்றார் யாருமில்லை, மன்னியசீர் வணிகர்குல மணியேயானும் வாழேனென் றென்றயர்வாண் மதியினாலே, சென்னியிளம் பிறைபணிவார் கோயில்வாயிற் றிசைநோக்கித் தொழுதழுதாள் செயலொன்றில்லாள்.

(இ-ள்.) அன்னையையுமத்தனையும் பிரிந்து நின்னை உடன்போந்தேன்= தாயையும் தந்தையையும் பிரிந்து உன்னைச்சார்தலையே பொருளாகக்கருதி உன்னுடன்வந்தேன் ; அரவால்வாடிஎன்னையுயிர்விட்டகன்றுய்யானென்செய்கேன்=அரவுகடித்தலால் வருந்திஇறந்து என்னை நீங்கினாய் இதற்குயான் என் செய்வேன் ; இவ்விடுக்கண் தீர்க்கின்றார் யாருமில்லை=இத்துன்பத்தை நீக்குகின்றவர் ஒருவருமில்லை (அதனால்) ; மன்னியசீர் வணிகர்குல மணியேயானும் வாழேனென்றென்றயர்வாள்=நிலைபெற்ற சிறப்பினையுடைய வணிகர்குலத்துக்குத் தலைமையான ஓர்மாணிக்கம் போன்றவனே நானும் உயிர்வாழேனென்று பலசொற்கூறிவருந்தும் அக்கன்னிகை ; மதியினாலே சென்னியிளம் பிறையணிவார் கோயில்வாயிற் றிசைநோக்கிச் செயலொன்றில்லாள் தொழுது அழுதாள்=தனது புந்தியினாலே சடாமகுடத்தில் இளம்பிறையையணிந்தமாணிக்கவண்ணரது திருவாலயத்தின் திசைநோக்கித் தனக்கோர் செயலற்றவளாய் வணங்கி அழுதாள்—எ-று.

என்றென்ற அடுக்கு, ஈண்டு பலகால்என்பதை உணர்த்தநின்றது. அயர்வாள் செயலொன்றில்லாளாய் கைதொழுதாளெனக்கூட்டுக. ஆண்டு உற்றுழி உதவிசெய்வோர் சிவபிரானென முன்செய்த புண்ணியவசத்தால் துணிந்தனளாதலின் மதியினாலென்றார் ; மதி=ஐயமின்றித் தெளிந்தபுந்தி. (சஎ௫)

அடியாரா மிமையவர்தங் கூட்டமுய்ய வலைகடல்வாய் நஞ்சுண்டவமுதேசெங்க, ணெடியானு நான்முகனுங் காணக்கோல நீலவிடவரவணிந்த நிமலாவெந்து, பொடியான காமனுயி ரிரதிவேண்டப் புரிந்தளித்த புண்ணியனே பொங்கர்வாசக், கடியாரு மலர்ச்சோலை மருங்குசூழுங் கவின்மருகற் பெருமானே காவாயென்றும்.

(இ-ள்.) அடியாராமிமையவர்தங் கூட்டமுய்யவலைகடல் வாய்நஞ்சுண்டவமுதே=உமதடியார்களாகிய பிரமாதிதேவர்கள் பிழைக்க அலைவீசுகின்றபாற்கடலினிடத்து உதித்தநஞ்சினை உண்டருளிய அமுதவடிவரே ; செங்கணெடியானுநான் முகனுங்காணக்கோல=சிவந்தகண்களையுடைய திருமாலும் பிரமனும்காணக்கூடாத திருமேனியை உடையவரே ; நீலவிடவரவணிந்தநிமலா=கரியநிறம்பொருந்திய விடத்தையுடையசற்பத்தை ஆபரணமாகத்தரித்த அழுக்கற்றவரே ; வெந்து பொடியான காமனுயிரி ரதிவேண்டப் புரிந்தளித்த

Koviloor Digital Library

புண்ணியனே=நெற்றிக்கண் நெருப்பால் வெந்து சாம்பரான மன்மதன் உயிரை இரதிதேவிஇரப்ப அவள்பிரார்த்தனையை விரும்பிக் கொடுத்தருளிய புண்ணியமூர்த்தியே; பொங்கர்வாசக்கடியாரு மலர்ச்சோலை மருங்குசூழுங் கயின்மருகற்பெருமானே காவாயென்றும்=மாக்கோடு நிறைந்தவாசனைகமழும் பூஞ்சோலைகள் பக்கலிற்சூழ்ந்த அழகுமிக்க திருமருகலில் எழுந்தருளிய மாணிக்கவண்ணரே என்னைக்காத்தருள்வீர் என்றும்—எ-று. (சஎசு)

வந்தடைந்த சிறுமறையோ னுயிர்மேற்சீறி வருங்காலன் பெருங்கால வலயம்போலுஞ், செந்தறுகண் வெள்ளெயிற்றுக் கரியகோலஞ் சிதைந்துருள வுதைத்தருளுஞ் செய்யதாளா, விந்தவிடக்கொடுவேகந் தீங்குமாறும் யானிடக்கட்குழிநின்று மேறுமாறு, மந்திமதிக்குழவிவளர் செய்யவேணி யணிமருகற்பெருமானே யருளாயென்றும்.

(இ-ள்.) வந்தடைந்த சிறுமறையோனுயிர் மேற்சீறிவருங்காலன்=தம்மைவந்தடைந்த மறையவர்சிறுவராகிய மார்க்கண்டேயரது உயிரின்மேல் கவர்தற்பொருட்டுக் கோபித்துவந்த எமனது; பெருங்காலவலயம்போலுஞ் செந்தறுகண் வெள்ளெயிற்றுக் கரியகோலம்=பெரிய காலசக்கரம்போலுஞ் சிவந்தகோபக்கண்ணையும் வெள்ளிய வக்கிரதந்தங்களையு முடைய அவனது கரியவுருவம்; சிதைந்துருள வுதைத்தருளுஞ் செய்யதாளா=அழிந்துநிலத்திற்புரள உதைத்தருளிய சிவந்த திருவடியை யுடையவனே; இந்தவிடக்கொடுவேகந் தீங்குமாறும் யானிடக்கட்குழிநின்றுமேறுமாறும் = இந்தவிடத்தினதுஉயிர் நீக்கச்செய்த கொடியவேகம் இவனை நீங்கும் வகையையும் அதனால் இத்துன்பசாகரத்தினின்றும் யான் கரையேறும்வகையையும்; அந்திமதிக்குழவிவளர்செய்ய வேணியணிமருகற் பெருமானேயருளாயென்றும்=மாலைப்பொழுதிற்றோன்றும் இளம்பிறை வளர்கின்ற சிவந்த சடாமுடியையுடைய அழகியதிருமருகலிலெழுந்தருளிய மாணிக்கவண்ணரே அருள்செய்வீராக என்றும்—எ-று.

காலன்கண்ணிற் கருவிழி=வட்டமாய்க் கோபத்தாற்சுழலலில் காலவலயம்போலுமென்றார். காலவலயம்=காலசக்கரம் சிவபிரானதுற்றுழி உதவிசெய்யும் அருட்குணங்களை புணர்த்து துதிக்கின்றவள் அவர்செய்த அவ்விதசரிதங்களாகிய நஞ்சமுது செய்தல், கருடன்பகைக்கு அஞ்சிவந்தடைந்த பாம்புகளைத் தரித்தல், இரதிதேவிவேண்ட மதனுக்குயிர் கொடுத்தல், மார்க்கண்டேயர்க்காக மறலியையுதைத்தல், ஆயசரிதங்களைக் கூறிக்காவாயென்றும் அருளாயென்றும் இவ்விரண்டு செய்யுளிற் துதித்தனளென்று போந்தவாறுணர்க. (சஎஎ)

இந்தன்மை சிவனாருளை சிந்தித்தேங்கு மிளங்கொடிபோ னுடங்குமிடை பேதையேத்த, மந்தன்மை யோசையெழுந் தெங்கள்சண்பை யாண்டகையார் கும்பிடவந் தணைகின்றார்தம், மெய்த்தன்மை

Koviloor Digital Library

விளங்குதிருச் செவியிற்சார மேவுதலுந்திருவுள்ளக் கருணைமேன்மேல், வைத்தன்ன மெனவயர்வாண் மாடுநீடு மாதவத்தோர் சூழவெழுந்தருளிவந்தார்.

(இ-ள்.) இத்தன்மைசிவனருளே சிந்தித்தேங்கும்=இவ்வாறு சிவபிரானது திருவருளையேசிந்தித்து இரங்கும்; இளங்கொடிபோனுடங்கு மிடையேழை=இளமையானகொடிபோலும் துவள்கின்ற இடையையுடைய அக்கன்னிகை; ஏத்துமத்தன்மையோசையெழுந்து=துதிக்கும் அவ்வகையான துதியோசையெழுந்து; எங்கள் சண்பையாண்டகையார் கும்பிடவந் தணைகின்றார்தம்=மாணிக்கவண்ணரைவணங்கத்திருக்கோயிலையடைகின்றவராகிய சீகாழியிலவதரித்த எமது ஆளுடையபிள்ளையாரது; மெய்த்தன்மைவிளங்கு திருச்செவியிற் சாரமேவுதலும்=உண்மைத்தன்மைவிளங்கிய திருச்செவியிற் பொருந்தக் கேட்கவரவும்; திருவுள்ளக் கருணைமேன்மேல் வைத்து அன்னமென வயர்வாள்மாடு=திருவுள்ளக்கருணையை மிகவும் அவளிடத்து வைத்துப் பெடை அன்னம்போல வருந்திச்சோரும் அவள்பக்கத்து; நீடு மாதவத்தோர்சூழ வெழுந்தருளிவந்தார்=மிக்கதவத்தினையுடைய அடியார்கள் புடைசூழ எழுந்தருளிவந்தருளினார்—எ-று. (௪௭௮)

சிரபுரத்துமறையவனார் சென்றுநின்று சிவபெருமானருள்போற்றிச் சிந்தைநைந்து, பரிவுறுவாடனைநோக்கிப் பயப்படேனீ பருவரலு நும்பரிசும் பகர்வாயென்னக், கரமலர்க ளுச்சியின்மேற் குவித்துக்கொண்டு கண்ணருவி சொரிந்திழியக் காழிவேதப், புரவலனார் சேவடிக்கீழ் வீழ்ந்து தாங்கள் போந்ததுவும் புகுந்ததுவும் புகலலுற்றாள்.

(இ-ள்.) சிரபுரத்து மறையவனார்சென்றுநின்று=சீகாழியி லவதரித்த ஆளுடையபிள்ளையார் அவ்விடத்தடைந்து நின்றருளி; சிவபெருமானருள் போற்றிச் சிந்தைநைந்து=சிவபிரானது திருவருளைத்துதித்து மனமுருகி; பரவுவாள் தனைநோக்கி=துதிக்கும் அக்கன்னிகையைப்பார்த்து; பயப்படேல் நீபருவரலும் நும்பரிசும் பகர்வாயென்ன=நீபயப்படாதே உனதுதுன்பத்தையும் உனதுவரலாற்றையும் சொல்வாயாகவென்று அருளிச்செய்ய; கரமலர்களுச்சியின்மேற்குவித்துக்கொண்டு=கரகமலங்களைச்சிரசின்மேல் அஞ்சலியாகக் கூப்பிக்கொண்டு; கண்ணருவிசொரிந்திழிய=கண்களினின்றுந் துளிக்கின்ற கண்ணீரானது அருவிபோற் சொரிந்துடம்பிற்பெருக; காழிவேதப் புரவலனார் சேவடிக்கீழ்வீழ்ந்து தாங்கள்போந்ததுவும் புகுந்ததுவும் புகலலுற்றாள்=சீகாழியிலவதரித்த வேதத்தையுணர்ந்த மறையவர் தலைவராகிய ஆளுடையபிள்ளையாரது சிவந்ததிருவடியின்கீழ் வணங்கித் தாங்கள் வந்தசெய்தியையும் நிகழ்ந்தசெய்தியையுஞ் சொல்லத்தொடங்கினாள்—எ-று.


Koviloor Digital Library

வளம்பொழில்சூழ் வைப்பூர்க்கோன் றாமனெந்தை மருமகன்மற்றிவனவற்கு மகளிர்நல்ல, விளம்பிடியா ரோரெழுவ ரவரின்மூத்தாளிவனுக்கென் றுரைசெய்தே யேதிலானுக், குளம்பெருகத் தனம்பெற்றுக் கொடுத்தபின்று மோரொருவராகவெனை யொழிய வீந்தான், றளர்ந்தழியு மிவனுக்காத்தகவுசெய்தங் கவனைமறைத் திவனையே சார்ந்துபோந்தேன்.

(இ-ள்.) எந்தை வளம்பொழில்சூழ் வைப்பூர்க்கோன்தாமன்=எனது பிதா வளம்பொருந்திய சோலைசூழ்ந்த வைப்பூருக்கு அதிபனாகிய தாமனென்பவன் ; அவற்குமற்றிவன் மருமகன்=விடந்தலைக்கொண்டு இறந்த இவன் அவனுக்கு மருகன்; இளம் பிடியார் நல்லமகளிர் ஓரெழுவர்=இளமைபொருந்திய பெண்யானைபோலும் நல்லபுத்திரிகள் அவனுக்கு எழுபேர்; அவரின் மூத்தாள் இவனுக்கென்றுரைசெய்து=அவருள் மூத்தபுத்திரியை இவனுக்கென்று மணஞ்செய்ய நிச்சயித்து ; ஏதிலானுக்கு உளம்பெருகத் தனம்பெற்றுக் கொடுத்தபின்றும்=அயலானுக்குத் தன்மனம்மகிழ அவன்பாற்பொருள்வாங்கிக்கொண்டு அப்புத்திரியை மணஞ்செய்து கொடுத்த பின்னும்; எனையொழியவோரொருவ ராக ஈந்தான்=என்னை நீக்கி ஒவ்வொருபுத்திரிகளாகப் பின்னும் பிறர்க்குப்பொருள்வாங்கிக்கொண்டு கொடுத்தான் ; தளர்ந்தழியுமிவனுக்காத் தகவுசெய்து=அதனால் மனந்தளர்ந்து வருந்தும் இவன்பொருட்டு நடுவுநிலைமை கருதி ; அங்கவனை மறைத்து இவனையே சார்ந்து போந்தேன்=அவ்விடத்து அவனை விடுத்து இவனையே துணையாக அடைந்து வந்தேன்—எ-று. (சஅ௦)

மற்றிவனும் வாளரவந் தீண்டமாண்டான் மறிகடலிற் கலங்கவிழ்ந்தார் போலநின்றேன், சுற்றத்தா ரெனவந்து தோன்றியென்பாற் றுயரொழிய நீங்கவருள் செய்தீரென்னக் கற்றவர்கள் தொழுதேத்துங் காழிவேந்தர் கருணையினுங் காரிகையா டனக்குநல்கப், பற்றிவா ளரவுவிடந் திருமாறு பணைமருதற் பெருமானைப் பாடலுற்றார்.

(இ-ள்.) மற்றிவனும் வாளரவந் தீண்டமாண்டான்=எனக்கு மணமகனாவந்த இவனும் ஒளிபொருந்திய பாம்பு கடிக்க இறந்தான் ; மறிகடலிற் கலங்கவிழ்ந்தார்போல நின்றேன்=மறித்துவரும் அலைகளையுடைய கடலில் மரக்கலங் கவிழப்பெற்ற வணிகர்போல இடருற்றுநின்றேன் ; சுற்றத்தாரெனவந்து தோன்றியென்பாற் றுயரொழிய நீங்கவருள் செய்தீரென்ன = எனது சுற்றத்தினர்போல என்கண்முன்வந்து காட்சிகொடுத்து என்னிடத்துள்ள துன்பங்களெல்லாம் நீங்க அருள்செய்தீரென்று கூற ; கற்றவர்கள் தொழுதேத்தும் காழிவேந்தர்=அறிவுநூலுணர்ந்த பெரியோர்கள் வணங்கித்துதிக்கும் சீகாழித்தலைவராகிய ஆளுடைய பிள்ளையார் ; கருணையினுங் காரிகையா டனக்குநல்க=மது காருண்யத்தால் அக்கன்னிகைக்கு விடந்தீண்டி இறந்தவனி



வைப்பூரென்றும் பதியில்வசித்த தாமன்செட்டியார் உடன்பிறந்தாள்பிள்ளையும் ஷை யார் எ - வது கன்னிகையாரும் மதுரைக்
குச்செல்வுழி திருமருகலில் ஷை யார் உடன்பிறந்தாள்பிள்ளை விஷந்தீண்டியிறக்கக் கன்னிகையார் துக்கித்தபோது திருஞானசம்பந்தர்

Koviloor Digital Library

கன்மகனை விவாகஞ்செய்துகொடுக்க; பற்றியவாளரவு விடந்திருமாறு பணி மருகற்பெருமானைப் பாடலுற்றார்=அவன் றலைக்கொண்ட ஒளியையுடைய சற்பத்தின்விடம் அவனிடத்தினின்றும் நீங்கும்வண்ணம் வயல்சூழ்ந்த திருமருகலி ன்கண் எழுந்தருளிய மாணிக்கவண்ணரைப் பாடத்தொடங்கினார்—எ-று.

சடையானை யெவ்வுயிர்க்குந் தாயானானைச் சங்கரனைச்சசிகண்ட மவுலியானை, விடையானை வேதியனை வெண்ணீற்றானை விரவாதார் புரமூன்று மெரியச்செற்ற, படையானைப் பங்கயத்து மேவினானும் பாம்பணையிற் றுயின்றானும் பரவுங்கோல, முடையானை யுடையானே தகுமோவிந்த வொள்ளிழையா ளுண்மெலிவென் றெடுத்துப் பாட.

(இ-ள்.) சடையானை யெவ்வுயிர்க்குந் தாயானானை=சடாமகுடத்தையு ள்ளவனை எவ்வுயிர்க்குந்தாயாயுள்ளவனை; சங்கரனைச் சசிகண்ட மவுலியா னை=ஆன்மாக்களுக்கு சுகத்தைச்செய்கின்றவனைச்சந்திரகண்டத்தைத்தரித்த திருமுடியையுடையவனை; விடையானை வேதியனைவெண்ணீற்றானை=இடப த்தை வாகனமாக உடையவனை வேதத்துக்கு முதலாயுள்ளவனை வெள்ளிய விபூதியை யணிந்தவனை; விரவாதார் புரமூன்று மெரியச்செற்ற படையா னை=பகைவர்களாகிய அசுரர்களது முப்புரங்களையும் எரியச்செய்த திருமா லாகிய அத்திரத்தையுள்ளவரை; பங்கயத்து மேவினானும் பாம்பணையிற்றுயி ன்றவனும் பரவுங்கோலமுடையானை=தாமரைமலரின்கண்வாழும் பிரமனும் அனந்த சயனத்தில் துயில்கின்ற திருமாலும் வணங்குந் திருக்கோலமுடைய வனை; உடையானே யிந்தவொள்ளிழையா ளுண்மெலிவுதகுமோ வென்றெ டுத்துப்பாட=என்னையாளாக உடையவனே இந்த ஒளிபொருந்திய ஆபரண ணத்தையுடைய கன்னிகையானவள் உள்ளம் வருந்துதல் தகுமோவென்று இறுதியில் வைத்துப் பாடியருள—எ-று. (சஅஉ)

திருமருகல்-விடந்தீர்த்த திருப்பதிகம் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

சடையா யெனுமால் சரணீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருக
லுடையாய் தகுமோ விவளுண் மெலிவே. (க)

சிந்தா யெனுமால் சிவனே யெனுமால்
முந்தா யெனுமான் முதல்வா வெனுமால்
கொந்தார் குவளை குலவும் மருக
லெந்தாய் தகுமோ விவளே சறவே. (உ)

அறையார் கழலு மழல்வா யரவும்
பிறையார் சடையு முடையாய் பெரிய
மறையார் மருகன் மகிழ்வா யிவளை
யிறையார் வளைகொண் டெழில்வவ் வினையே. (௩)

ஒலிநீர் சடையிற் கரந்தா யுலகம்
பலிநீ திரிவாய் பழியில் புகழாய்
மலிநீர் மருகன் மகிழ்வா யிவளை
மெலிநீர் மையளாக் கவும்வேண் டினையே. (௪)

துணிநீ லவண்ணம் முகிறோன்றி யன்ன
மணிநீ லகண்ட முடையாய் மருகற்
கணிநீ லவண்டார் குழலா ளிவடன்
னணிநீ லவொண்கண் ணயர்வாக் கினையே. (௫)

மலரும் பரவப் படுவாய் சடைமேன்
மலரும் பிறையொன் றுடையாய் மருகற்
புலருந் தனையுந் துயிலாள் புடைபோந்
தலரும் படுமோ வடியா ளிவளே. (௬)


வழுவாள் பெருமான் கழல்வாழ்க வெனா
வெழுவா ணினைவா ளிரவும் பகலு
மழுவா ளுடையாய் மருகற் பெருமான்
றொழுவா ளிவளைத் துயராக் கினையே. (௭)

இலங்கைக் கிறைவன் விலங்க லெடுப்பத்
துலங்கல் விரலூன் றலுந்தோன் றலனாய்
வலங்கொண் மதில்சூழ் மருகற் பெருமா
னலங்கல் லிவளை யலராக் கினையே. (௮)

எரிபார் சடையும் மடியும் மிருவர்
தெரியா ததோர்த் திரளா யவனே
மரிபார் பிரியா மருகற் பெருமா
னரியா ளிவளை யயர்வாக் கினையே. (௯)

அறிவில் சமணும் மலர்சாக் கியருந்
நெறியல் லனசெய் தனர்நின் றுழல்வார்
மறியேந் துகையாய் மருகற் பெருமா
னெறிபார் குழலி நிறைநீக் கினையே. (௰)

Koviloor Digital Library



திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருமருகலிலே செட்டியார் விடந்
தீர்ந்து கன்னிகையோடும் கலியாணஞ் செய்வித்தல்.

Koviloor Digital Library



செட்டியாருக்கும் கன்னிகையாருக்கும் திருஞானசம்பந்தர் விவாகஞ் செய்தருளல்.

Koviloor Digital Library

வயஞா னம்வல்லார் மருகற் பெருமா
ஞுயர்ஞா னமுணர்ந் தடியுள் குதலா
லியன்ஞா னசம்பந் தனபா டல்வல்லார்
வியன்ஞா லமெல்லாம் விளங்கும் புகழே. (ωக)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - மாணிக்கவண்ணேசர்.

தேவியார்- வண்டுவார்குழலியம்மை.

பொங்குவிடந் தீர்ந்தெழுந்து நின்றான்சூழ்ந்த பொருவிறிருத் தொண்டர்குழாம் பொலியவார்ப்ப, வங்கையினை யுச்சியின்மேற்குவி த்துக்கொண்டங் கருட்காழிப் பிள்ளையா ரடியில்வீழ்ந்த, நங்கையவ டனைநயந்த நம்பியோடு நானிலத்தி லின்புற்று வாழும்வண்ண, மங்கு றவழ் சோலைமலி புகலிவேந்தர் மணம்புணரும் பெருவாழ்வு வகுத்து விட்டார்.

(இ-ள்.) பொங்குவிடந் தீர்ந்தெழுந்து நின்றான் = தலைமேற்கொண்ட விடம் நீங்கி அவ்வணிகமகன் உயிர்பெற்று எழுந்துநின்றான்; சூழ்ந்த பொருவில் திருத்தொண்டர்குழாம் பொலியவார்ப்ப=பிள்ளையாரது பக்கலிற் சூழ்ந்த ஒப்பில்லாத அடியார் திருக்கூட்டங்கள் ஒளிபெருக ஆரவென ஆரவாரிக்குங்கால்; அங்கு அங்கையினை உச்சியின்மேற் குவித்துக்கொண்டு=அவ்விடத்து அழகிய கையைச்சிரசின்மேல் கூப்பிக்கொண்டு; அருட் காழிப்பிள்ளையார் அடியில் வீழ்ந்த நங்கையவள்தனை=காருண்ணிய ரூபியான ஆளுடைய பிள்ளையாரது திருவடியில் வீழ்ந்துவணங்கிய அவ்வணிகர் குலப்பெண்ணை; நயந்த நம்பியோடு நானிலத்திலின்புற்று வாழும்வண்ணம்= (அவளால்) விரும்பப்பட்ட அவ்வணிகமகனோடு இடமகன்ற நிலவுலகத்தின்கண் இன்பமடைந்து வாழும்படி; மங்குல்தவழ் சோலைமலி புகலிவேந்தர்=மேகங்கள் தவழும்சோலைகள்சூழ்ந்த சீகாழித்தலைவராகிய ஆளுடைய பிள்ளையார்; மணம் புணரும் பெருவாழ்வு வகுத்துவிட்டார்=கல்யாணஞ்செய்து கூடி வாழும் பெரிய இல்லறநெறியை அவர்க்கு அருளிச்செய்து ஊர்க்குச்செலவிடுத்தார் —எ-று. (௬௮௪)

மற்றவர்க்கு விடைகொடுத்தங் கமருநாளின் மருகனக ரினில்வந்து வலியபாசஞ், செற்றபுகழ்ச் சிறுத்தொண்டர் வேண்டமீண்டுஞ் செங்காட்டங் குடியிலெழுந் தருளவேண்டிப், பற்றியெழுங் காதன்மிக மேன்மேற்சென்று பரமனர் திறத்துன்னிப் பாங்கரெங்குஞ், சுற்றுமருந் தவரோடுங் கோயிலெய்திச் சுடர்மழுவாண் டவர்பாதந் தொழுவான்புக்கார்.

Koviloor Digital Library

(இ-ள்.) மற்றவர்க்கு விடைகொடுத்தங்கமருநாளில் = (மணம்முடித்துக்கொள்ளும்படி தங்களூர்க்குச்செல்ல) அவ்விருவர்க்கும் அனுமதிகொடுத்துத்திருப்பதியின்கண் எழுந்தருளி யிருக்குங்காலத்தில் ; மருகல் நகரினில்வந்து வலியபாசஞ்செற்ற புகழ்ச்சிறுத் தொண்டர்வேண்ட = திருமருகல் நகரின்கட்சென்று கொடிய அஞ்ஞானத்தைக்கெடுத்த புகழினையுடைய சிறுத்தொண்ட நாயனார் குறை இரப்ப ; மீண்டுஞ்செங்காட்டங்குடியி லெழுந்தருளவேண்டி = பிள்ளையார் மீளவுந்திருச்செங்காட்டங்குடிக்கு எழுந்தருளும்படி விருப்புற்று ; மேன்மேற் பற்றியெழுங் காதல்மிகச்சென்று = மேலும்மேலுந்தொடர்ந்தெழுகின்ற பெரு விருப்பானது அதிகரிக்கச் சென்றருளி; பரமனார் திறத்தன்னிற் பாங்கமைந்துற்ற மருந்தவரோடுங் கோயிலெய்தி = மாணிக்கவண்ணரது திருவருளின் பகுதியை எண்ணி எப்பக்கத்துஞ்சூழ்ந்த அடியார் திருக்கூட்டத்தோடுந் திருக்கோயிலை அடைந்து ; சுடர்மழுவாண்டவர் பாதந்தொழுவான் புக்கார் = ஒளிபொருந்திய மழுப்படையை ஏந்திய மாணிக்கவண்ணரது திருவடிகளை வணங்கும்படி ஆலயத்துட் புகுந்தருளினார்—எ-று.

புக்கிறைஞ்சி யெதிர்நின்று போற்றுகின்றார் பொங்குதிரை நதிப்புனலும் பிறையுஞ்சேர்ந்த, செக்கர்முடிச் சடைமவுலி வெண்ணீற்றார்தந் திருமேனி யொருபாகம் பசுமையாக, மைக்குலவு கண்டத்தார் மருகற்கோயில் மன்னுநிலை மனங்கொண்டு வணங்குவார்முன், கைக்கனலார் கணபதிச் சரத்தின்மேவுங் காட்சிகொடுத் தருளுவான்காட்டக் கண்டார்.

(இ-ள்.) புக்கிறைஞ்சி யெதிர்நின்று போற்றுகின்றார் = புகுந்து வணங்கித் திருமுன்னின்று துதிக்கும் அருளுடையபிள்ளையார் ; பொங்குதிரை நதிப்புனலும்பிறையுஞ்சேர்ந்த = பொங்குகின்ற அலைகளையுடைய கங்கையும் இளம்பிறையுந்தங்கிய ; செக்கர்முடிச் சடைமவுலிவெண்ணீற்றார்தம் = செவ்வானம்போலும் சடாமுடியையும் வெள்ளிய விபூதியையும் உடைய மாணிக்கவண்ணரது திருமேனி யொருபாகம் பசுமையாக = திருமேனியினொரு பாதி பசியவண்ணமாக ; மைக்குலவு கண்டத்தார் மருகற்கோயில் மன்னுநிலை மனங்கொண்டு வணங்குவார்முன் = நீலகண்டத்தையுடைய அச்சிவபிரானார் திருமருகலின்கண் உள்ள ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் நிலைமையைத திருவுள்ளத்தில் கருதிவணங்கும் பிள்ளையார்முன் ; கைக்கனலார் கணபதிச்சரத்தின்மேவுங் காட்சிகொடுத்தருளுவான் காட்டக்கண்டார் = திருக்கரத்தில் அக்கினியை ஏந்திய அம்மாணிக்கவண்ணர் தாம்கணபதிச்சரத்தின்கண் எழுந்தருளிய திருக்கோலத்தைக் கொடுத்தருளும்படி தரிசிப்பிக்க இங்கு தரிசித்தார்—எ-று.

(சஅரு)

Koviloor Digital Library

வேறு.

மருகலமர்ந்து நிறைந்தகோல மல்குசெங்காட்டங் குடியின்மன்னிப்
பெருகுகணபதி யீச்சரத்தார் பீடுடைக்கோலமே யாகித்தோன்ற
வுருகியகாதலு மீதுபொங்க வுலகர்முன்கொள்ளு முணர்வுநீட
வருவிகண்வார்வுறப் பாடலுற்று ரங்கமும்வேதமு மென்றெடுத்து.

(இ-ள்.) மருகலமர்ந்து நிறைந்தகோலம்=திருமருகலின்கண் விரும்பி எழுந்தருளிய திருக்கோலம்; மல்குசெங்காட்டங்குடியின்மன்னி=செல்வமிக்க திருச்செங்காட்டங்குடியில் நிலைபெற்று; பெருகுகணபதி யீச்சரத்தார்= பீடுடைக்கோலமே யாகித்தோன்ற=விளங்கும் கணபதீச்சரமென்னுந் திருவாலயத்தில் எழுந்தருளிய கணபதீசரது பெருமைபொருந்திய திருக்கோலமேயாய்ப் புலப்பட; உருகிய காதலுமீதுபொங்க=நெக்குருகுகின்ற அன்பும் உள்ளே நிறைந்து மேலேவழிய; உலகர்முன்கொள்ளுமுணர்வுநீட=உலகின் கண்ணுள்ளாரிடத்துக்கொண்ட காருணியவுணர்வும்மேம்பட; அருவிகண்வார்வுறப்பாடலுற்றுர் அங்கமும் வேதமுமென்றெடுத்து = திருக்கண்களினின்றும் ஆனந்த அருவிசொரியும்படி பாடியருளினார் அங்கமும் வேதமுமென முதலி லடியெடுத்து—எ-று.

பதிகம் பாடுதற்கு உலகர்மேல் வைத்த கருணை காரணமாதலின், உலகர்முன் கொள்ளுமுணர்வு நீட என்றார்.

உணர்வும் என்கிற எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. (சஅகூ)

திருச்செங்காட்டங்குடியும் - திருமருகலும்- வினாவுரை.

பண் - நட்டபாஷை.

திருச்சிற்றம்பலம்.

அங்கமும்வேதமு மோதுநாவ ரந்தணர்நாளு மடிபரவ
மங்குன்மதிதவழ் மாடவீதி மருகனிலாவிய மைந்தசொல்லாய்
செங்கயலார்புனற் செல்வமல்கு சீர்கொள்செங்காட்டங் குடியதனுட்
கங்குல்விளங்கெரி யேந்தியாடுங் கணபதியீச்சரங் காமுறவே.

நாலுகுலைக்கமு கோங்குகாழி ஞானசம்பந்த னலந்திகழு
மாலின்மதிதவழ் மாடமோங்கு மருகலின்பற்றதன் மேன்மொழிந்த
சேலுங்கயலுந் திளைத்தகண்ணார் சீர்கொள்செங்காட்டங் குடியதனுட்
சூலம்வல்லான்கழ லோதுபாடல் சொல்லவல்லார்வினை யில்லையாமே.

திருச்சிற்றம்பலம்.

Koviloor Digital Library

கண்டடிபோற்றி வினவிப்பாடிக் கணபதியீச்சரங் காதலித்த, வண்டர்பிரானை வணங்கிவைகு மப்பதியிற்சில நாள்கள் போற்றித், தொண்டருடனருள் பெற்றுமற்றத் தொல்லைத்திருப்பதி யெல்லைநீங்கிப், புண்டரிகத்தடஞ் சூழ்பழனப் பூம்புகலூர்தொழப் போதுகின்றார்.

(இ-ள்.) கண்டடிபோற்றி வினவிப்பாடி=அக்கணபதீசரது திருவடிகளைப்போற்றி அத்திருக்கோலத்தைத் தரிசித்து, (மங்குன்மதி தவழ்மாடவீதி மருகனிலாவியமைந்த கணபதிச்சரங்காமுறவுசொல்லாயென) வினவித்திருப்பதிகமோதி; கணபதிச்சரங் காதலித்த அண்டர்பிரானைவணங்கி=அக்கணபதீச்சரமென்னுந் திருவாலயத்தை விரும்பிய தேவர்பிரானைவணங்கி; வைகுமப்பதியிற்சிலநாள்கள்போற்றி=தாம் எழுந்தருளியிருக்கும் அத்திருமருகற்பதியிற் சிலகாலம் அம்மாணிக்கவண்ணரைத்துதித்து; தொண்டருடனருள்பெற்றுமற்றத்தொல்லைத்திருப்பதியெல்லைநீங்கி=அடியார்திருக்கூட்டத்துடன் அச்சிவபிரானது திருவருளைப்பெற்று அப்பழைய திருப்பதியி னெல்லையைவிட்டு நீங்கி; புண்டரிகத்தடஞ்சூழ் பழனப் பூம்புகலூர் தொழப்போதுகின்றார்=தாமரைப்பொய்கைகள் சூழ்ந்த வயல்களையுடைய பொலிவுபொருந்திய திருப்புகலூர் என்னும் திருப்பதியை வணங்கச்செல்வாராயினார்—எ-று. (௪௮௭)

சீரின்மலிந்த சிறப்பின்மேவுஞ் சிறுத்தொண்டர் நண்புடன் செல்லநல்ல, வேரிநறுந்தொங்கன் மற்றவரும் விடையருளப்பெற்று மீண்டபின்பு, நீரின்மலிந்த சடையர்மேவி நிகழும் பதிகள் பலபணிந்து, பாரின்மலிந்து நிறைந்தசெல்வம் பயில்புகலூர்நகர்ப் பாங்கணைந்தார்.

(இ-ள்.) சீரின்மலிந்த சிறப்பின்மேவுஞ் சிறுத்தொண்டர் நண்புடன்செல்ல=புகழ்மிக்க சிறப்பமைந்த சிறுத்தொண்டநாயனார் நீங்காத நண்போடு தம்முடன்வர; நல்லவேரி நறுந்தொங்கன் மற்றவரும்=நல்ல தேன் பொருந்திய மணங்கமழும் மாலையையுடைய அத்திருத்தொண்டநாயனாரும்; விடையருளப்பெற்று மீண்டபின்பு=ஊர்க்குச்செல்லும்படி பிள்ளையார் விடைகொடுக்கப்பெற்றுத் தம்மூர்க்குச் சென்றபின்பு; நீரின் மலிந்த சடையர் மேவி நிகழும்பதிகள் பலபணிந்து=கங்கைநீரால் விளங்குகின்ற சடைமுடியையுடைய சிவபிரான் எழுந்தருளிய பலதிருப்பதிகளையும் வணங்கி; பாரின்மலிந்து நிறைந்த செல்வம்பயில் புகலூர் நகர்பாங்கணைந்தார்=நிலவுலகத்தில் மிகுந்துநிறைந்த செல்வம்பொருந்திய திருப்புகலூரென்னுந் திருப்பதியின் மருங்கு அடைந்தருளினார்—எ-று. (௪௮௮)

திருப்புகலூர்த்திருத் தொண்டரோடுஞ் செம்மைமுருகனார் மெய்ம்மகிழ்ந்த, விருப்பொடு சென்றெதிர் கொள்ளவந்து வேதமுதல்வர்

Koviloor Digital Library

தங்கோயிலெய்திப், பொருப்புறழ்கோபுரத் துட்புகுந்து பூமலிமுன்றில் புடைவலங்கொண், டொருப்படு சிந்தையொ டுள்ளணைந்தா ரோதாதுஞானமெலாமுணர்ந்தார்.

(இ-ள்.) திருப்புகலூர்த் திருத்தொண்டரோடுஞ் செம்மைமுருகனார்= திருப்புகலூரில்வசிக்கும் திரு அடியார்கூட்டங்களோடு ஞான ஒழுக்கத்தினையுடைய திருமுருகநாயனார்; மெய்ம்மகிழ்ந்த விருப்பொடுசென்றெதிர்கொள்ள வந்து=மெய்ம்மை மிகுந்த விருப்பத்தொடுந் தம்மையடைந்து எதிர்கொள்ள அங்கெழுந்தருளி; வேதமுதல்வர்தங் கோயிலெய்தி = வேதமுதல்வராகிய அக்கினிசர் எழுந்தருளியிருக்குந் திருக்கோயிலை அடைந்தருளி; பொருப்புறழ் கோபுரத்துட்புகுந்து பூமலிமுன்றில் புடைவலங்கொண்டு=மலையையொத்த திருக்கோபுரத்தினுள்ளே புகுந்து பொலிவுமிக்க திருமுற்றத்தைப் பிரதட்சணஞ்செய்து; ஓதாதுஞானமெலாமுணர்ந்தார் ஒருப்படுசிந்தையோடு உள்ளணைந்தார்=ஓதாது எல்லா ஞானங்களையும் உணர்ந்த ஆளுடையபிள்ளையார் ஒன்றுபட்டமனதோடு திருக்கோயிலுள் அடைந்தருளினார்—எ-று.

ஞானமெலாமென்றது மேற்கூறிய பரஞானமுதல் நான்கு மென்பது போர்தவாறறிக. (௪௯௧)

புக்கெதிர்தாழ்ந்து விழுந்தெழுந்து பூம்புகலூர்மன்னு புண்ணியனை, நெக்குருகுஞ்சிந்தை யன்புபொங்க நிறைமலர்க்கண்ணீ ரருவிசெய்ய, மிக்கதமிழ்த்தொடை மாலைசாத்தி மேவியவேழிசை பாடிப்போந்து, திக்குநிறைசீர் முருகர்முன்பு செல்லவவர்மடஞ் சென்றுபுக்கார்.

(இ-ள்.) பூம்புகலூர்மன்னு புண்ணியனைப்புக்கெதிர்தாழ்ந்து விழுந்தெழுந்து=பொலிவுபொருந்திய திருப்புகலூரின்கண் ணெழுந்தருளிய புண்ணியவடிவரான அக்கினியீசனை ஆலயத்திற்புகுந்து திருமுன்வணங்கிப்பணிந்தெழுந்து; நெக்குருகுஞ்சிந்தை யன்புபொங்கநிறைமலர்க்கண்ணீரருவிசெய்ய= கசிந்துருகும் இதயத்து அன்புமேலெழநிறைந்ததாமரைமலர்போலும் திருக்கண்கள் ஆனந்தபாஷ்பமாகிய அருவியைப்பெருக்க; மிக்கதமிழ்த்தொடைமாலைசாத்தி மேவியவேழிசைபாடிப்போந்து=இனிமை மிகுந்த திருப்பதிகமாலையைச்சாத்தி அதனிடத்துப்பொருந்திய ஏழிசையையும்பாடி அவ்வாலயத்தினின்றும் எழுந்தருளி; திக்குநிறை சீர்முருகர் முன்புசெல்ல அவர் மடஞ்சென்றுபுக்கார்=திக்குகளெட்டிலும் நிறைந்த சீர்த்தியையுடைய திருமுருகநாயனார் தம்முன்னே அழைத்துக்கொண்டுசெல்ல அவரது திருமடத்தைச்சென்று புக்கருளினார்—எ-று. (௪௯௨)

திருப்புகலூர்-பண்-செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

வாழ்ந்தநாளும் மினிவாழுநாளும் மிவையறிதிரேல்
வீழ்ந்தநாளெம் பெருமானையேத்தா விரகிலிகாள்
போழ்ந்ததிங்கட் புரிசடையினான்றன் புகலூரையே
சூழ்ந்தவுள்ளம் முடையீர்களுங்க டுயர்தீருமே.

Koviloor Digital Library

புந்தியார்ந்த பெரியோர்களேத்தும் புகலூர்தனுள்
வெந்தசாம்பற் பொடிபூசவல்லவ் விடையூர்தியை
யந்தமில்லா வனலாடலானை யணிஞானசம்
பந்தன்சொன்ன தமிழ்பாடியாடக் கெடும்பாவமே.

திருச்சிற்றம்பலம்.

அங்கவர் போற்றுஞ் சிறப்பின்மேவி யப்பதிதன்னி லமருநாளில், வாங்குமலேச்சிலே யார்மகிழ்ந்த வர்த்தமானிச்சரர் தாள்வணங்கி, யோங்கியவன்பின் முருகனார்தம் முயர்திருத் தொண்டு சிறப்பித்தோங்கும், பாங்குடை வண்டமிழ் பாடிநாளும் பரமர்தம்பாதம் பணிந்திருந்தார்.

(இ-ள்.) அங்கவர்போற்றுஞ் சிறப்பின்மேவி=அத்திருமடத்தில் திருமுருகநாயனார் வழிபடுஞ்சிறப்பால்வாசஞ்செய்து; அப்பதிதன்னிலமருநாளில்= அத்திருப்புகலூரென்னுந் திருப்பதியிலெழுந்தருளி யிருக்குநாளில்; வாங்குமலேச்சிலேயார் மகிழ்ந்த வர்த்தமானிச்சரர் தாள்வணங்கி=வளைந்தமேருவில்லுடையராய்விரும்பிய வர்த்தமானிச்சரத்தையுடைய சிவபிரானது திருவடிகளைவணங்கி; ஓங்கியவன்பின் முருகனார்தம்முயர்திருத்தொண்டுசிறப்பித்து= மிக்க அன்பினையுடைய திருமுருகநாயனாரது உயர்ந்த திருத்தொண்டினை (முருகன் முப்போதுஞ்செய முடிமேல் வாசமாமலருடையார்) எனச், சிறப்பித்து; ஓங்கும்பாங்குடை வண்டமிழ்பாடி நாளும்பரமர்தம்பாதம் பணிந்திருந்தார்=உயர்ந்த குணம் அமைந்த வினியதமிழ்ப்பதிகத்தைப்பாடி நாடோறும் அந்தவர்த்தமானிச்சரரது திருவடிகளைவணங்கி அங்கு எழுந்தருளியிருந்தார்—எ-று. (சகக)

திருப்புகலூர் - பண்-பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

ஈசனேறமர்கடவு ளின்னமுதெந்தை யெம்பெருமான்
பூசுமாசில் வெண்ணீறர் பொலிவுடைப்பூம் புகலூரின்
மூசுவண் டறைகொன்றை முருகன்முப்போது செயமுடிமேல்
வாசமலருடையார் வர்த்தமானீச் சரத்தாரே.

பொங்குதண் புனல்சூழ்ந்து போதணிபொழிற் புகலூரின்
மங்குன்மா மதிதவழும் வர்த்தமானீச் சரத்தானைத்
தங்குசீர்த் தமிழ்ஞான சம்பந்தன்றன் டமிழ்பத்து
மெங்குமேத்த வல்லார்க ளெய்துவரிமையவருலகே.

திருச்சிற்றம்பலம்.

Koviloor Digital Library

மற்றத்திருப்பதி வைகுநாளில் வாக்கின்பெருவிறன் மன்னர்தாம், புற்றிடங்கொண்டாரை வந்திறைஞ்சிப் பொன்மதிலாரூர் புகழ்ந்துபோற்றிச், சிற்றிடைப் பொற்றொடி பங்கர்தங்குந் திருப்புகலூர் தொழச் சிந்தைசெய்து, கொற்றவனாருள் பெற்றதொண்டர் குழாத்துடனவ்வூர் குறுகவந்தார்.

(இ-ள்.) அத்திருப்பதிவைகுநாளில்=அத்திருப்புகலூரில் ஆளுடையபிள்ளையார் எழுந்தருளியிருக்கும் நாளில் ; பெருவிறல் வாக்கின்மன்னர்தாம்= மேம்பட்ட திருவாக்கின் வன்மையையுடைய வாகீசமுனிவரும் ; புற்றிடங் கொண்டாரைவந்திறைஞ்சி= திருவாரூரிலெழுந்தருளிய வன்மீகநாதரை அடைந்துவணங்கி ; பொன்மதிலாரூர் புகழ்ந்துபோற்றி=பொன்னாலாகிய திருமதில்சூழ்ந்த திருவாரூரைப்புகழ்ந்து துதித்து ; சிற்றிடைப்பொற்றொடி பங்கர் தங்குந்திருப்புகலூர் தொழச்சிந்தைசெய்து=சிற்றிடையையும் பொன்னாலாகிய வளையலையும் உடைய உமாதேவிபாகரான அக்கினீசரெழுந்தருளிய திருப்புகலூரைவணங்கத் தம்திருவுள்ளத்து நினைத்து ; கொற்றவனாருள்பெற்ற தொண்டர்குழாத்துட னவ்வூர்குறுகவந்தார்=தியாகேசரது திருவருளைப் பெற்ற அடியார் திருக்கூட்டத்தோடு அத்திருப்பதியை அணித்தாகவந்தருளினார்—எ-று. (ருகூஉ)

நாவுக்கரச ரெழுந்தருளு நல்லதிருவார்த்தை கேட்டபோதே, சேவிற்றிகழ்ந்தவர் மைந்தரான திருஞானசம்பந்தர் தந்தையன்பு, மேவுற்றகாதன் மிகப்பெருக விரைந்தெதிர்கொள்ளமெய் யன்பரோடும், பூவிற்பொலிபொய்கை சூழ்புகலூர்ப் புறம்பணையெல்லை கடந்து போந்தார்.

(இ-ள்.) நாவுக்கரசரெழுந்தருளு நல்லதிருவார்த்தை கேட்டபோதே= திருநாவுக்கரசர் எழுந்தருளியநல்லமங்கலமொழியைக் கேட்டமாத்திரத்தில் ; சேவிற்றிகழ்ந்தவர் மைந்தரான திருஞானசம்பந்தர்=இடபத்தி லெழுந்தருளுகின்ற சிவபெருமானது திருமகனாராகிய ஆளுடையபிள்ளையார் ; சிந்தை அன்புமேவுற்ற காதல்மிகப்பெருக=தமது திருவுள்ளத்தில் அன்பாலாய பெருவிருப்பு மிகவும்பெருக ; மெய்யன்பரோடும் விரைந்தெதிர்கொள்ள=மெய்யடியார்திருக்கூட்டத்தோடு விரைவாயெதிர்கொள்ளும்பொருட்டு; பூவிற்பொலிபொய்கைசூழ் புகலூர்ப் புறம்பணையெல்லைகடந்து போந்தார்=மலர்களானிறைந்த பொய்கை சூழ்ந்த திருப்புகலூரின் புறம்பிலிராநின்ற திருவெல்லையைக்கடந்து சென்றருளினார்—எ-று. (சகூரு)

அங்கணாரூர் வணங்கிப்போந்தவரசுமெதிர்வந் தணையுவாசப், பொங்குபுனற்றண் புகலிவந்த பூசுரர்சிங்கமும் பொருவிலெய்தித், தங்களிலன்பின் முறைமையாலே தாழ்ந்துவணங்கித் தனித்தனியே, மங்கலமாகிய நல்வரவின் வாய்மைவிளம்பி மகிழும்போது.

(இ-ள்.) தக்கணாரூர்வணங்கப் போந்தவரச மெதிர்வந்தணைய=சிறந்த காருண்யத்தையுடைய புத்திடங்கொண்டாரெழுந்தருளிய திருவாரூரைத்தொழுது எழுந்தருளிய ஆண்ட அரசும் எதிரேவந்து அடைந்தருள; வாசப்போங்குபுனற் றண்புகலி வந்தபூசுரர்சிங்கமும் போற்றியெய்தி=வாசனை பொருந்திய நீர்வளம்மிக்க குளிர்ந்த சீகாழியிலவதரித்த மறையவர் தலைவராகிய ஆளுடையபிள்ளையாரும் போலிவாலெதிர்கொண்டு; தங்களிலன்பின் முறைமையாலே தனித்தனியே தாழ்ந்தவணங்கி=ஒருவர்க்கொருவர் தம்முள்ளூறிய அன்பின்வழித்தனித்தனியே நிலமுறவணங்கி; மங்கலமாகிய நல்வரவின் வாய்மைவினம்பி மகிழும்போது=சுபகரமாகிய நல்வரவினுண்மையை ஒருவரை ஒருவர்வினவி மகிழ்ந்தருளுங்காலத்து—எ-று. , (சகச)

மெய்த்திருஞானசம் பந்தர்வாக்கின் வேந்தனைநோக்கி விருப்பினாலே, யப்பரையிங்கணை யப்பெறும்பே றருளுடையோம்யாமு மந்தணாரூர், எப்பரிசாற்றொழு தய்ந்ததென்று வினவிட விறல் பெருந்தவத்தோர், செப்பியவண்டமிழ் மாலையாலே திருவாதிரைநிகழ் செல்வஞ்சொன்னார்.

(இ-ள்.) மெய்த்திருஞானசம்பந்தர்=உண்மைநிறைந்த திருஞானசம்பந்தப்பிள்ளையார்; வாக்கின்வேந்தனை விருப்பினால் நோக்கி=திருநாவுக்கரசனைவிருப்பால் பார்த்து; அப்பரையிங்கு அணையப்பெறும்பேருளுடையோம்=அப்பராகிய உம்மை இவ்விடத்தில் அடையப்பெறும் பெரியதிருவருளையாம் உடையோம்; அந்தணாரூர் எப்பரிசால்தொழுதய்ந்ததென்றுவினவிட=அழகிய தட்பத்தையுடைய திருவாரூரை எத்தன்மையால் வணங்கி உய்ந்தருளினீரென்றுவினவ; விறல்பெருந்தவத்தோர் செப்பியவண்டமிழ்மாலையாலே திருவாதிரைநிகழ் செல்வஞ்சொன்னார்=அழிவில்லாதபெரியதவத்தினையுடைய ஆண்டஅரசும் தாமப்பொழுதருளிய "முத்துவிதானமணிப்பொற்கவரி" திருப்பதிகத்தால் திருவாதிரையில் நிகழ்ந்த சிறப்பினைத்திருவாய்மலர்ந்தருளினார்—எ-று.

அப்பரை என்பது எம்பியை ஈங்குப்பெற்றேன் என்றாற்போல முன்னிலைப்படர்க்கையாக் கூறப்படுதலின் இடவழுவமைதி. (சகரு)

அரசருளிச்செய்த வாய்மைகேட்ட வப்பொழுதேயருண் ஞானமுண்ட, சிரபுரவேந்தருஞ் சிந்தையின்கட் டென்றிருவாரூர் வணங்குதற்கு, விரவியகாதலிற் சென்றுபோற்றி மீண்டும்வந் தும்முடன் மேவுவனென், றரவுகடற்கண் மிதப்பின்வந்தார்க் குரைத்துடம்பாடு கொண்டெழுந்துபோந்தார்.

(இ-ள்.) அரசு அருளிச்செய்த வாய்மைகேட்ட அப்பொழுதே=ஆண்ட அரசு அருளிச்செய்த திருப்பதிக உண்மையைக்கேட்ட அக்காலத்தே; அருள் ஞானமுண்ட சிரபுரவேந்தரும்=உமாதேவியார் ஊட்டிய திருஞானப்பாலை உண்டருளிய சீகாழித்தலைவராகிய பிள்ளையாரும்; சிந்தையின்கண்தென்திரு

Koviloor Digital Library

ஆருர்வணங்குதற்கு=தமது திருவுள்ளத்தில் தெற்கின்கண் உள்ள திருவாரூரைப்பணிதற்கு; விரவியகாதலிற்சென்றுபோற்றி=கலந்த அன்புகாரணமாக யாமும் அங்குச்சென்று துதித்து; மீண்டும்வந்தும்முடன்மேவுவனென்று= திருப்புகலூருக்குமீண்டும்வந்து உம்முடன்வசிப்போமென்று; உரவுகடற்கண் மிதப்பில்வந்தார்க்கு=வலிபொருந்திய கடலின்கண்கற்புணைமேல் மிதந்துவந்த ஆண்டஅரசுடன்; உரைத்து உடன்பாடு கொண்டொல்லைவந்தார்=திருவாய்மலர்ந்தருளி அவரது அநுமதிபெற்றுத் திருவாரூர்க்கு விரைந்துசென்றருளினார்—எ-று. (சகசுசு)

சொற்பெருவேந்தருந் தோணிமூதூர்த் தோன்றல்பின்காதலுடராத்தாமும், பொற்புகலூர்தொழச் சென்றணைந்தார் புகலிப்பிரானும் புரிந்தசிந்தை, விற்குடி வீரட்டஞ்சென்றுமேவி விடையவர்பாதம் பணிந்துபோற்றிப் பற்பலவாயிரந் தொண்டரோடும் பாடலனுன்மறை பாடிப்போந்தார்.

(இ-ள்.) சொற்பெருவேந்தரும் தோணிமூதூர்த்தோன்றல்பின்காதலுடரா=திருநாவுக்கரசரும் சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார்பின் தமது விருப்பம் பின்தொடர்ந்துசெல்ல; தாமும்பொற்புகலூர்தொழச் சென்றணைந்தார்=தாமும் அழகியதிருப்புகலூரைவணங்கச் சென்றடைந்தருளினார்; புகலிப்பிரானும் புரிந்த சிந்தை விற்குடிவீரட்டஞ்சென்றுமேவி=சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையாரும் விரும்பிய திருவுள்ளத்தோடு திருவிற்குடி என்னூர் திருவீரட்டானத்தைச் சென்றடைந்து; விடையவர் பாதம்பணிந்து போற்றி=இடப ஊர்தியையுடைய வீரட்டேசரது திருவடிகளைவணங்கித் துதித்து; பற்பல ஆயிரந்தொண்டரோடும் பாடல்நான்மறைபாடிப்போந்தார்= பலபல ஆயிரமடியார் திருக்கூட்டத்தோடு பாடல்நான்மறைஎன்னும் முதலையுடைய திருப்பதிகத்தை ஓதித்திருவாரூர்க்குச் சென்றருளினார்—எ-று.

திருவிற்குடிசலந்தரனை வதைத்தது அட்டவீரட்டத்தில் ஒன்று. (சகசுஎ)

திருவாரூர்-பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பாடலனான் மறையன்படி பட்டகோலந் தன்றிங்கள்
சூடலன் மூவிலைய சூலம் வலனேந்தி
கூடலர்மூ வெயிலுமெரி யுண்ணக்கூரெரி கொண்டெல்லி
யாடல னாதிரைய னாரூரமர்ந்தானே.

நல்லபுனற் புகலித்தமிழ் ஞானசம் பந்தனல்ல
வல்லிமலர்க்கழனி யாரூ ரமர்ந்தானை
வல்லரோ ரிச்சையினால் வழிபாடிவைபத்தும் வாயாரச்
சொல்லுதல் கேட்டல்வல்லார் துன்பந் துடைப்பாரே.

திருச்சிற்றம்பலம்.

Koviloor Digital Library

திருவிற்குடி வீரட்டம் - பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

வடிகொண்மேனியர் வானமாமதியினர் மதுவார்ந்த [பர்
கடிகொள்கொன்றையஞ் சடையினர்கொடியின ருடைபுலியதளார்ப்
விடையதேறுமெம் மானமர்ந்தினிதுறை விற்குடிவீரட்டம்
மடியராகிநின் றேத்தவல்லார்தமை யருவினையடையாவே.

விலங்கலேசிலை யிடமெனவுடையனை விற்குடிவீரட்டத்
திலங்குசோதியை யெம்பெருமான்றனை யெழிறிகழ்கழல்பேணி
நலங்கொள்வாழ்பொழிற் காழியுண்ஞானசம் பந்தனற்றமிழ்மாலை
வலங்கொடேயிசை மொழியுமின்மொழிந்தக்கான் மற்றதுவரமாமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-வீரட்டானேசர். தேவியார்-மைவார்குழலியம்மை.

துணரிணர்ச்சோலையுஞ் சாலிவேலித் துறைநீர்ப்பழனமுஞ் சூழ்கரும்பின், மணமலிகானமு ஞானமுண்டார் மருங்குறநோக்கி மகிழ்ந்தருளி, யணைபவரள்ளலங் கழனியாரு ரடைவோமெனமொழிந் தன்புபொங்கப், புணரிசைச் செந்தமிழ் கொண்டுபோற்றிப் பொன் மதி லாரூர்ப் புறத்தணைந்தார்

(இ-ள்.) துணரிணர்ச்சோலையும்=பூங்கொத்துகள்நிறைந்தசோலைகளும்; சாலிவேலித்துறைநீர்ப் பழனமும்=நெல்வேலிசூழ்ந்த நீர்க்கரைகளையுடைய வயல்களும்; சூழ்கரும்பின்மணமலிகானமும்=புடைசூழ்ந்தகரும்பினது மணமிக்க காடுகளும்; ஞானமுண்டார் மருங்குறநோக்கிமகிழ்ந்தருளி=திருஞானப்பாலை உண்டருளிய ஆளுடையபிள்ளையார் இரண்டுபக்கங்களிலும்பொருந்தநோக்கி மகிழ்ந்தருளி; அள்ளலங்கழனி ஆரூர்அடைவோமென மொழிந்து அன்புபொங்கஅணைபவர்=சேறுபொருந்திய அழகியவயல்சூழ்ந்த திருவாரூரை அடைவோமெனப்புகன்றருளி அதனை அடையும்பிள்ளையார்; புணரிசைச்செந்தமிழ்கொண்டுபோற்றிப் பொன்மதிலாரூர்ப்புறத்தணைந்தார்=இசையோடுபுணர்ந்த செந்தமிழாகிய திருப்பதிகத்தைக்கொண்டுதுதித்துப் பொன்னாலாகியமதில்சூழ்ந்ததிருவாரூர் எல்லையின்புறத்தணைந்தருளினார்—எ-று. ()

திருவாரூர்-பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

உள்ளமோ ரிச்சையினா லுகந்தேத்தித் தொழுமின்றொண்டீர்மெய்யே
கள்ளமொழிந் திடுமின் கரவாதிருபொழுதும்
வெள்ளமோர் வார்சடைமேற் கரந்திட்ட வெள்ளேற்றான்மேய
அள்ளல் கொள் கழனி யாரூ ரடைவோமே.

Koviloor Digital Library

நல்ல புனற் புகலித் தமிழ் ஞானசம் பந்தனல்ல
வல்லி மலர்க்கழனி யாரூ ரமர்ந்தானை
வல்லதோ ரிச்சையினால் வழிபாடிவை பத்தும்வாய்க்கச்
சொல்லுதல் கேட்டல்வல்லார் துன்பந்துடைப்பாரே.

திருச்சிற்றம்பலம்.

வானுயர்செங்கதிர் மண்டிலத்து மருங்கணையுங்கொடி மன்னுமாரூர், தானொருபொன்னுல கென்னத்தோன்றுந் தயங்கொளிமுன்கண்டு சண்பைவந்த, பானிறநீற்றர் பருக்கையானைப் பதிகத்தமிழிசைபாடிப்பாடித், தேனெடும்வண்டு முரலுஞ்சோலைத் திருப்பதிமற்றதனெல்லைசேர்ந்தார்.

(இ-ள்.) வானுயர்செங்கதிர்மண்டிலத்து மருங்கணையுங் கொடிமன்னும் ஆரூர்=ஆகாயமளவுக்கு உயர்ந்த சூரியமண்டலத்தினருகை அளாவும் கொடியாடைகள் நிலைபெற்றதிருவாரூர்; தானொருபொன்னுலகென்னத்தோன்றும் தயங்கொளிமுன்கண்டு=தானும் ஒருதேவர் உலகம்போலப் புலப்பட்டுவிளங்கும் ஒளியை முன்னேதரிசித்து; பானிறநீற்றர்பருக்கை யானைப்பதிகத்தமிழிசைபாடிப்பாடி=பால்போலும் வெள்ளியவிபூதியையணிந்த புற்றிடங்கொண்டாரைப் பருக்கையானையென்னுந் திருப்பதிகத்தமிழால் இசையோடுபாடியருளி; தேனெடுவண்டுமுரலுஞ்சோலைத்திருப்பதிமற்றதனெல்லைசேர்ந்தார்=பெண்வண்டுகளோடு ஆண்வண்டுகளும் பாடுஞ்சோலைசூழ்ந்த அத்திருப்பதியின் எல்லையைச்சேர்ந்தருளினார்—எ-று. (சகக)

திருவாரூர்-திருவிராகம்-பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

பருக்கையானை மத்தகத் தரிக்குலத் துகிர்ப்புகந்
நெருக்கிவாய நித்திலந் நிரக்குநீள் பொருப்பனூர்
கருக்கொள்சோலை சூழநீடு மாடமாளி கைக்கொடி
யருக்கன்மண் டலத்தளாவு மந்தணாரு ரென்பதே.

வல்லிசோலை சூதநீடு மன்னுவீதி பொன்னுலா
வல்லிமா தமர்ந்திருந்த வந்தணாரு ராதிபை
நல்லசொல்லு ஞானசம் பந்தனாவி னின்னுரை
வல்லதொண்டர் வானமாள வல்லர்வாய்மை யாகவே.

திருச்சிற்றம்பலம்.

பொங்கியசிந்தை விருப்பின்வெள்ளம் பொழிந்துபுவிமேற்பொலிவதென்ன, எங்குங்குளிரொளி வீசுமுத்தி னிலங்குசிவிகை யிழிந்தருளிச், செங்கைநிறைமலர் கொண்டுதூவித்திருவிருக்குக்குறள் பாடியேத்தித், தங்கள்பிரானரசாளுமாரூர்தனைப்பணிவுற்றார்தமிழ்விரகர்.

Koviloor Digital Library

(இ-ள்.) சிந்தைபொங்கிய விருப்பின் வெள்ளம்பொழிந்து புவிமேற் போவதென்ன = இதயத்தினின்றும் நிறைந்துவழிந்த பெருங்காதலென்னும் வெள்ளம்சொரிந்து நில உலகின்மேல் விளங்குவதுபோல ; எங்குங்குளிரொளி வீசுமுத்தின் இலங்குசிவிகை இழிந்தருளி=எவ்விடத்தும் தண்ணிய வெள்ளொளியை வீசும்முத்தினால் விளங்கியதிருச்சிவிகையினின்றிழிந்தருளி ; தமிழ்விரகர்=முத்தமிழின்விரகராகிய பிள்ளையார் ; செங்கைநிறைமலர் கொண்டுதூவி=சிவந்த திருக்கரங்களில் நிறைந்தமலர்களால் அர்ச்சித்து ; திருவிருக்குக்குறள் பாடியேத்தி= திருவிருக்குக்குறளாகிய திருப்பதிகத்தைப் பாடித்துதித்து ; தங்கள்பிரான் அரசாளும் ஆரூர்தனைப்பணிவுற்றார்=தமது பெருமானார் அரசாண்டருளிய திருவாரூரைப் பணிந்தார்—எ-று.

சோமஸ்கந்தராய்க் கனகசிம்மாசனத்தில் சிவபிரான் எழுந்தருளி இருத்தலின், தங்கள்பிரான் அரசாளும் ஆரூர் என்றார். (௫௰)

திருவாரூர்-திருவிருக்குக்குறள்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

சித்தந் தெளிவீர்கா
ளத்த னாரூரைப்
பத்தி மலர்தூவ
முத்தி யாகுமே.

சீரூர் சம்பந்த
னாரூரைச் சொன்ன
பாரூர் பாடலார்
பேரா ரின்பமே.

திருச்சிற்றம்பலம்.

வேறு.

படியின் ஞானமுன் டருளிய பிள்ளையாரைப் பணிதற்
கடியர் சென்றெதிர் கொளவெழுந் தருளுமஞ்ஞான்று
வடிகொள் சூலத்தர் மன்னிய பொன்மதி லாரூர்க்
கடிகொள் பேரணிப் பொலிவையார் முடிவுறக் காண்பார்.

(இ-ள்.) படியில் ஞானமுண்டருளிய பிள்ளையாரைப் பணிதற்கு=நில உலகின்கண் திருஞானப்பால் உண்டருளிய ஆளுடையபிள்ளையாரை வணங்குதற்கு ; அடியார்சென்று எதிர்கொள வெழுந்தருளும் அஞ்ஞான்று=அடியார் திருக்கூட்டங்கள்சென்று எழுந்தருளிய அக்காலத்து ; வடிகொள்சூலத்தர்மன்னிய பொன்மதில் ஆரூர்=வடித்தசூலத்தையேந்தியருளிய தியாகப் பெருமானெழுந்தருளும் பொன்னாலாகிய மதில்சூழ்ந்த திருவாரூரின் ; கடிகொள்பேரணிப்பொலிவையார்முடிவுறக்காண்பார்=விளக்கங்கொண்ட பெரிய அலங்காரத்தின் பொலிவையார்தாம்முடிவுபெறக்காணவல்லார்—எ-று. (௫௰௧)

Koviloor Digital Library

நான மான்மத நளிர்பெருஞ் சேற்றிடை நறும்பொற்
றூந றுந்துகள் சொரிதலிற் சுடரொளிப் படலை
யான வீதிக ளடிவலித் தவைகளைந் தலைய
வான மாரியிற் பொழிந்தது மதுமலர் மாரி.

(இ-ள்.) நானமான்மதநளிர் பெருஞ்சேற்றிடை=நாவிமதமும் மிருகமதமும் ஆகிய இவற்றொடுசேர்ந்து குளிர்ந்த பெரியகலவைச்சேற்றினிடத்து; நறும்பொன்றூநறுந்துகள் சொரிதலில்=நல்லபொன்னிறமான தூய்மைமிக்க மகரந்தங்களை இறைத்தலினால்; சுடரொளிப்படலையான வீதிகளடிவலித்து=ஒளிமிக்கநெருங்கிய வீதிகளானவை நடக்குங்கால்களை உறுத்துதலால்; அவைகளைந்தலைய=அக்கலவைச்சேற்றின் வன்மைகளைந்துகெடும்படி; மலர் மாரிமதுவான மாரியிற்பொழிந்தது = புட்பவருடத்தின் தேன்மழைபோல இடையறாது சொரிந்தது—எ-று. (௫௱௨)

ஆட னீடுவ துகிற்கொடி யணிகுழற் கொடிக
டோடு சூழ்வன சுரும்பொடு தமனியத் தசும்பு
காடு கொண்டன கதலிதோ ரணநிரைக் கமுகு
மாட மாளிகை மண்டபங் களின்மருங் கெல்லாம்.

(இ-ள்.) மாடமாளிகை மண்டபங்களின் மருங்கெல்லாம்=மாடங்களும் மாளிகைகளும் மண்டபங்களும் ஆகிய இவற்றின்பக்கங்களெல்லாம்; ஆடல் நீடுவதுகிற்கொடி அணிகுழற்கொடிகள்=சீலைக்கொடிகளும் அழகியகூந்தலை யுடைய பெண்களாகிய பூங்கொடிகளும் ஆடல்செய்வனவாம்; தோடுசூழ் வன சுரும்பொடுதமனியத்தசும்பு=வண்டுகளோடு பொற்குடங்கள் மலரிதழ் களைச் சூழாநின்றன; கதலிதோரண நிரைகமுகுகாடுகொண்டன=வாழைக ளும் மகரதோரணங்களும் கமுகுகளும் காடாகச்சூழ்ந்தன—எ-று. (௫௱௩)

மாலை சூழ்புறங் கடைகளின் மணிநிரை விளக்கின்
கோல நீள்சுட ரொளியுடன் கோத்திடை தூக்கு
நீல மாமணி நிழல்பொர நிறம்புகர் படுக்கும்
பால வாயின பவளவே திகைமலர்ப் பந்தர்.

(இ-ள்.) பவளவேதிகைமலர்ப்பந்தர்=பவளத்தாலாயவேதிகைகளின் கணுள்ள பூம்பந்தர்கள்; மாலைசூழ்புறங்கடைகளில்=மாலைகள்சூழ்ந்த முதல்வாயில்களினும்; மணிநிரைவிளக்கின்=மாணிக்கங்களால்நிரைபடச்செய்த தீபங்களினும்; கோலநீள்சுடரொளியுடன் கோத்திடைதூக்கும்=அழகுமிக்க பேரொளியோடு இடையிடையே கோத்துத்தூக்கும்; நீலமாமணிநிழல்பொர=பெரியநீலமணியின் ஒளிபத்திபாய அதனால்; நிறம்புகர்படுக்கும்பாலவாயின=தன்னிறத்தைப் புகர்நிறமாகச்செய்யும்பகுதியை யுடையவாயின—எ-று.

மலர்ப்பந்தர்புறங்கடைகளினும் மணிவிளக்கினும் ஒளியுடன்கோத்துததூக்கும் நீலமணிநிழல்பொருதலால் நிறம்புகர்படுக்தும் பாலவாயினஎனக்கூட்டுக.

Koviloor Digital Library

தழைமலர்ந்தடஞ் சாலைக ணெற்றிகள் சதுக்கங்
குழைமுகத்தவ ராடரங் கிமையவர் குழாமும்
விழைசி றப்பின வியலிட மியாவையு மிடைந்து
மழைமுழக்கென வியம்பின மங்கல வியங்கள்.

(இ-ள்.) தழைமலர்த்தடம்=தழைத்தமலர்களையுடையவாவிகளும்; சாலைகள் தெற்றிகள்சதுக்கம்; அறச்சாலைகளும் திண்ணைகளும்நாற்சந்திகளும்; குழைமுகத்தவர் ஆடரங்கு = குண்டலத்தையணிந்தமகளிர் நடனஞ்செய்யும் நாடகசாலைகளும் ஆகிய இவைகள்; இமையவர்குழாமும் விழைசிறப்பின= தேவர்கூட்டமும் விரும்பும்சிறப்பினைஉடையன; வியலிடம்யாவையும் மிடைந்துமங்கல இயங்கள்மழைமுழக்கென முழங்கின=பரந்த இடங்களெல்லாம் மங்கலவாத்தியங்கள்நெருங்கிமேகம்முழங்கினாற்போல ஒலிசெய்தன—எ-று.

விரவு போணி வேறுவே றின்னன விளங்கும்
பிரச மென்மலர்ச் சோலைசூழ் பெருந்திரு வாரூ
ரரச ளிப்பவ ருளினா லடியவர் குழுவும்
புரிச னங்களும் புறத்தணைந் தெதிர்கொளும் பொழுது.

(இ-ள்.) இன்னனவிரவுபோணிவேறு வேறுவிளங்கும்=இவ்வாறுனமிக்க பெரிய அலங்காரங்கள் வெவ்வேறாய்விளங்காநிற்கும்; பிரசமென்மலர்ச் சோலைசூழ் பெருந்திருவாரூர்=தேன்பொருந்திய மெல்லிய பூக்களையுடைய சோலைசூழ்ந்த பெரியதிருவாரூரில்; அரசளிப்பவருளினால்=அரசாட்சிசெய்யும் தியாகப்பெருமானதுதிருவருளினால்; அடியவர்குழுவும் புரிசனங்களும் புறத்தணைந்து எதிர்கொளும்பொழுது=அடியவர்திருக்கூட்டங்களும் அந்நகரிலுள்ள மகாசனங்களும் நகர்க்குப்புறத்தில்வந்து பிள்ளையாரை எதிர்கொள்ளுங்காலத்து—எ-று. (௫௱௬௲)

வந்தி றைஞ்சுமெய்த் தொண்டர்தங் குழாத்தெதிர் வணங்கிச்
சந்த முத்தமிழ் விரகராஞ் சண்பையர் தலைவ
ரந்த மாயுல காதியாம் பதிகமங் கெடுத்தே
யெந்தை தானெனை யென்றுகொள் ளுங்கொலென் றிசைத்தார்.

(இ-ள்.) சந்தமுத்தமிழ்விரகராஞ் சண்பையர்தலைவர் = பண்ணமைந்த முத்தமிழ்விரகராகிய சீகாழியுடையபிள்ளையார்; வந்திறைஞ்சும்மெய்த்தொண்டர் தம்குழாத்து எதிர்வணங்கி=தம்மைவந்துவணங்கிய அடியாரதுதிருக்கூட்டத்திற்கெதிரேதாமும்வணங்கி; அங்கு அந்தமாய் உலகாதியாம்பதிகம்எடுத்து= அவ்விடத்து அந்தமாய் உலகாதியர் என்னும் திருப்பதிகத்தை அடிஎடுத்து; எந்தைதான் எனையென்று கொள்ளுங்கொலென்று இசைத்தார்=எந்தைதானெனையென்று கொள்ளுங்கொலென்று பதிகவிறுதியில்வைத்துப்பாடியருளினார்—எ-று. (௫௱௬௭)

Koviloor Digital Library

திருவாரூர் - பண் - கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

அந்த மாயுல காதியு மாயினன்
வெந்த வெண்பொடிப் பூசிய வேதியன்
சிந்தை யேபுகுந் தான்றிரு வாரூரெம்
எந்தை தானெனை யேன்றுகொ ளுங்கொலோ.

வன்னி கொன்றை மதியொடு கூவிளஞ்
சென்னி வைத்த பிரான்றிரு வாரூரை
மன்னு காழியுள் ஞானசம் பந்தன்வாய்ப்
பன்னு பாடல்வல் லார்க்கில்லை பாவமே.

திருச்சிற்றம்பலம்.

ஆன வத்திருப் பதிகமும் பாடிவந் தணையு
ஞான வித்தகர் மெய்த்தவர் சூழவந் நகரார்
தூநறுஞ் சுண்ண மலர்பொரி தூய்த்தொழு தேத்த
வான நாயகர் கோயில்வா யிலின்மருங் கணைந்தார்.

(இ-ள்.) ஆன அத்திருப்பதிகமும் பாடிவந்தணையுஞானவித்தகர்=அவ்வகைத்தான அந்தத்திருப்பதிகத்தையும்பாடி அங்குவந்துசேரும் உண்மைஞானத்தையுமுடைய ஆளுடையபிள்ளையார்; மெய்த்தவர்சூழ் அந்நகரார்தூநறுஞ் சுண்ணமலர் பொரிதூய்த்தொழுதேத்த=மெய்மையாகியதவத்தையுடைய திருத்தொண்டர்கள் பக்கலிற்சூழ்ந்துவர அந்நகரிலுள்ளமகாசனங்கள் பரிசுத்தமாகிய நல்லசுண்ணப்பொடிகளையும் மலர்களையும்நெற்பொரிகளையும் தூவிப் பணிந்துதுதிக்க; வானநாயகர் கோயில்வாயிலின் மருங்கணைந்தார்=விண்ணுலகத்தார்தலைவராகிய தியாகப்பெருமானார் திருக்கோயிலின் திருவாயிலின்பக்கத்தணைந்தார்—எ-று. (ருஅ)

மன்னு தோரண வாயின்முன் வணங்கியுள் புகுவார்
தன்னு ளெவ்வகைப் பெருமையுந் தாங்கிய தகைத்தாம்
பன்னெ டுஞ்சுடர்ப் படலையின் பரப்பினைப் பார்த்துச்
சென்னி தாழ்ந்துதே வாசிரி யன்றொழு தெழுந்தார்.

(இ-ள்.) மன்னுதோரணவாயின்முன்வணங்கியுள்புகுவார்=நிலைபெற்ற மகரதோரணங்களையுடைய திருவாயிலின்முன்வணங்கி உள்ளேபுகும் ஆளுடைய பிள்ளையார்; தன்னுள் எவ்வகைப்பெருமையும் தாங்கிய தகைத்தாம்=தன்னுள்ளே எவ்வகைப்பட்ட பெருமையையும் தாங்குந்தகைமையையுடையதாய்; பன்னெடுஞ் சுடர்ப்படலையின் பரப்பினைப்பார்த்து=பலவாய்மி

Koviloor Digital Library

க்க ஒளிப்பிழம்பின் பரப்பைப்பார்த்தருளி; சென்னிதாழ்ந்து தேவாசிரியன் தொழுது எழுந்தார்=சிரமுறத்தாழ்ந்து தேவாசிரியன் திருமண்டபத்தைப் பணிந்து எழுந்தார்—எ-று.

உள்புகுவார் தாமதத்தாம்தேவாசிரியனைப் பன்னெடும் சுடர்ப்படலையின் பரப்பினைப்பார்த்துத் தொழுதணைந்தார் எனக்கூட்டுக.

தேவர், முனிவர், திருவடியார், இவர்நெருங்கிவாழ்தலிற் எவ்வகைப்பெருமையுந் தாங்கியதனைத்தென்றார். (௫௱௯)

மாடு சூழ்திரு மாளிகை வலங்கொண்டு வணங்கிக்
கூடு காதலிற் கோபுரம் பணிந்துகை குவித்துத்
தேடு மாலயற் கரியராய்ச் செழுமணிப் புற்றி
னீடு வார்முன்பு நிலமுறப் பலமுறை பணிந்தார்.

(இ-ள்.) மாடுசூழ் திருமாளிகை வலங்கொண்டுவணங்கி; பக்கத்திற் சூழ்ந்த திருமாளிகையைப் பிரதட்சணஞ்செய்துவணங்கி; கூடுகாதலிற்கோபுரம் பணிந்துகைகுவித்து=தலைப்பட்ட பெருவிருப்பால் திருக்கோபுரத்தைக்கைகுவித்துவணங்கி; தேடுமாலயற்கு அரியராய்=கைகளைச்சிரசின்மேற் குவித்து தேடுகின்றதிருமாலுக்கும்பிரமனுக்கும் காண்பதற்கு அரியராகி; செழுமணிப்புற்றின் நீடுவார் முன்பு நில முறப்பலமுறைபணிந்தார்=செழுமை பொருந்திய அழகியபுற்றை இடமாகக்கொண்டபெருமானுர் முன்புநிலத்தின் மேல் திருமேனிபொருந்த பலமுறைவணங்கி யருளினார்—எ-று. (௫௱௰)

பணிந்து வீழ்ந்தனர் பதைத்தனர் பரப்பிய புளக
மணிந்த மேனியோ டாடினர் பாடின ரறிவிற்
றுணிந்த மெய்ப்பொரு ளானவர் தமைக்கண்டு துதிப்பார்
தணிந்த சிந்தையின் விரைந்தெழு வேட்கையிற் றாழ்ந்தார்.

(இ-ள்.) துணிந்த மெய்ப்பொருளானவர்தமை அறிவிற்கண்டு துதிப்பார்=தம்மால் நிச்சயித்த மெய்ப்பொருளாகிய வன்மீகநாதரை தம் உணர்விற்கண்டு துதிக்கும் அருமையினையுடையார்; பணிந்து வீழ்ந்தனர் பதைத்தனர்=நிலமுறப்பணிந்து வணங்குவாராய்ப்பதைபதைத்தார்; பரப்பிய புளகமணிந்தமேனியோடாடினர் பாடினர்=மெய்முழுதும் பரந்தரோமாஞ்சிதத்தால் அலங்காரமடைந்த திருமேனியோடு கூத்தாடினராய்ப் பாடினார்; தணிந்த சிந்தையின் விரைந்தெழுவேட்கையிற் றாழ்ந்தார்=தட்பமடைந்தமது இதயத்தில் விரைந்தெழுங்காதலால் மிகவும்பணிந்தார்—எ-று.

துதிப்பார் என்றும் எழுவாய், பதைத்தனர் பாடினர்தாழ்ந்தார் என்றும் பயனிலைகளைத் தனித்தனிகொண்டது. (௫௧௧)

Koviloor Digital Library

செஞ்சொல் வண்டமிழ்த் திருப்பதி கத்திசை யெடுத்து
நஞ்சு போனக மாக்கிய நம்பர்முன் பாடி
மஞ்சு சூழ்திரு மாளிகை வாயிலின் புறம்போந்
தஞ்செ ழுத்தின்மெய் யுணர்ந்தவர் திருமடத் தணைந்தார்.

(இ-ள்.) அஞ்செழுத்து மெய் உணர்ந்தவர்=ஸ்ரீபஞ்சாட்சரத்தின் உண்மையை அறிந்தபிள்ளையார்; செஞ்சொல் வண்டமிழ்த்திருப்பதிகத்து இசை எடுத்து=செஞ்சொல்லாற்புனைந்த வண்மையையுடைய திருப்பதிகத்தை இனிய இசையோடு எடுத்தருளி; நஞ்சுபோனகம் ஆக்கியநம்பர் முன்பாடி=நஞ்சை உணவாக அமைத்தருளிய வன்மீகநாதர் திருமுன்னின்றுபாடி; மஞ்சு சூழ்திருமாளிகை வாயிலின்புறம்போந்து திருமடத்தணைந்தார்=மேகஞ்சூழ்ந்த திருமாளிகைத் திருவாயிலின்புறம்பேசென்று திருமடத்தை அடைந்தருளினார்—எ-று. (ருகஉ)

அங்க ணைந்தமர்ந் தருளுவா ரரனெறி யமர்ந்த
செங்க ணேற்றவர் சேவடி வணங்கிமுன் றிளைத்துப்
பொங்கு பேரொளிப் புற்றிடங் கொண்டவர் புனிதப்
பங்க யப்பதந் தொழுதுகா லந்தொறும் பணிந்தார்.

(இ-ள்.) அங்கணைந்தமர்ந்தருளுவார்=அத்திருமடத்திலடைந்து எழுந்தருளி இருக்குமாளுடைய பிள்ளையார்; அரனெறி அமர்ந்த செங்கணேற்றவர் சேவடிவணங்கி முன்றிளைத்து=அரனெறி என்னுந் திருவாலயத்துள் எழுந்தருளிய சிவந்தகண்களையுடைய இடபத்தைவாகனமாகக்கொண்டருளிய அகிலேசரது சிவந்த திருவடிகளைவணங்கி திருமுன்னின்று ஆனந்தத்திலமிழ்ந்தி; பொங்குபேரொளிப் புற்றிடங்கொண்டவர்=விளங்கும் மிக்க ஒளியையுடைய புற்றிடங்கொண்ட பெருமானாரது; புனிதப் பங்கயப்பதந்தொழுது காலந்தொறும் பணிந்தார்=பரிசுத்தமாகிய தாமரைமலர்போன்ற திருவடிகளைத் துதித்து மூன்றுகாலங்களினும் வழுவாமற் பணிந்தருளினார்—எ-று. (ருகரு)

புற்றி டங்கொளும் புனிதரைப் போற்றிசை பெருகப்
பற்று மன்பொடு பணிந்திசைப் பதிகங்கள் பாடி
நற்ற வத்திருத் தொண்டர்க ளுடனலஞ் சிறக்க
மற்ற வண்பதி தன்னிடை வைகுமந் நாளில்.

(இ-ள்.) புற்றிடங்கொண்ட புனிதரைப்போற்றிசைபெருக=புற்றிடங்கொண்ட சிவபிரானைத்துதிக்கும் இசை எவ்விடத்தும்பரம்ப; பற்றுமன்பொடு பணிந்திசைப் பதிகங்கள்பாடி=நீங்காதுதுடர்ந்த அன்போடுவணங்கி இனிய இசையையுடைய திருப்பதிகங்களையும்பாடியருளி; நற்றவத்திருத்தொண்டர்களுடனலஞ்சிறக்க=நல்லதவத்தினையுடைய அடியார் திருக்கூட்டங்களோடு நன்மைவிளங்க=மற்றவண்பதி தன்னிடைவைகுமந்நாளில்=அத்திருப்பதியில் எழுந்தருளி இருக்கும் அந்நாளில்—எ-று. (ருகச)

Koviloor Digital Library

மல்ல னீடிய வலிவலங் கோளிலி முதலாத்
தொல்லை நான்மறை முதல்வர்தம் பதிபல தொழுதே
யெல்லை யிற்றிருப் பதிகங்க ளாற்பணிந் தேத்தி
யல்ல றீர்ப்பவர் மீண்டுமா ரூர்தொழ வணைந்தார்.

(இ-ள்.) மல்லனீடிய வலிவலங்கோளிலிமுதலா=வளம்மிக்க திருவலிவலம் திருக்கோளிலிமுதலாகிய; தொல்லைநான்மறை முதல்வர்தம்பதிபல தொழுது=பழைய நான்குவேதங்களுக்கும் காரணராகிய சிவபெருமானது பலதிருப்பதிகளையும்வணங்கி; எல்லையில்திருப்பதிகங்களாற் பணிந்தேத்தி=அளவிறந்த பெருமையையுடைய திருப்பதிகங்களால் வணங்கித் துதித்து; அல்லல்தீர்ப்பவர்மீண்டும் ஆரூர்தொழவணைந்தார்=(தம்மையடைந்தார்) துன்பத்தை நீக்கியருளும் ஆளுடையபிள்ளையார் மீளவும் திருவாரூரைவணங்க எழுந்தருளிவந்தார்—எ-று. (௫௩௫)

திருவலிவலம் - திருவிராகம்- பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பூவியல் புரிகுழல் வரிசிலை நிகர்நுத
லேவியல் கணைபிணை யெதிர்விழி யுமையவ
ளேவிய திருவுரு வுடையவன் விரைமலர்
மாவியல் பொழில்வலி வலமுறை யிறையே.

மன்னிய வலிவல நகருறை யிறைவனை
யின்னிய கழுமல நகரிறை யெழின்மறை
தன்னியல் கலைவல தமிழ்விர கனதுரை
யுன்னிய வொருபது முயர்பொரு டருமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - மனத்துணைநாதேசர்.
தேவியார்-வாளையங்கண்ணியம்மை.

திருக்கோளிலி - பண்-பழந்தக்கராகம்.
திருச்சிற்றம்பலம்.

நாளாய போகாமே நஞ்சணியுங் கண்டனுக்கே
யாளாய வன்புசெய்வோ மடநெஞ்சே யரனாமங்
கேளாய்நங் கிளைகிளைக்குங் கேடுபடாத் திறமருளிக்
கோளாய நீக்குமவன் கோளிலியெம் பெருமானே.

Koviloor Digital Library

நம்பனைநல் லடியார்க ளுமுடைமா டென்றிருக்குங்
கொம்பனையாள் பாகனெழிற் கோளிலியெம் பெருமானை
வம்பமருந் தண்காழிச் சம்பந்தன் வண்டமிழ்கொண்
டின்பமர வல்லார்க ளெய்துவர்க ளீசனையே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - கோளிலியப்பர். தேவியார்-வண்டமர்பூங்குழலம்மை.

ஊறு காதலி லொளிவளர் புற்றிடங் கொண்ட
வாறு லாவிய சடைமுடி யையனைப் பணிந்து
நீறு வாழ்வென நிகழ்திருத் தொண்டர்க ளோடு
மீறி லாத்திரு ஞானசம் பந்தரங் கிருந்தார்.

(இ-ள்.) ஊறுகாதலில் ஒளிவளர் புற்றிடங்கொண்ட = இடையறாது எழும்பெருவிருப்பால் ஒளிமிகுந்தபுற்றையிடங்கொண்டருளிய; ஆறு உலாவிய சடைமுடி ஐயனைப்பணிந்து=கங்கைநதிபெருக்கெடுக்கும் சடாமகுடத்தையுடைய பெருமானைவணங்கி; நீறுவாழ்வென நிகழ்திருத்தொண்டர்களோடும்=விபூதியே பெருஞ்செல்வமெனக் கொண்டுவிளங்கும் அடியார்திருக்கூட்டங்களோடும்; ஈறு இலாத்திருஞானசம்பந்தர் அங்கு இருந்தார்=அழியாத ஞானச்செல்வத்தையுடைய திருஞானசம்பந்தப்பிள்ளையார் அத்திருப்பதியில் எழுந்தருளி இருந்தார்—எ-று. (ருகசு)

அங்கு நன்மையில் வைகுமந் நாள்சில வகல
நங்க டந்திரு நாவினுக் கரைசரை நயந்து
பொங்கு சீர்ப்புக லூர்தொழ வருளினாற் போவார்
தங்கு மப்பதிப் புறம்பணை சார்ந்தருள் செய்வார்.

(இ-ள்.) அங்குநன்மையில் வைகும் அந்நாள் சிலவகல=அத்திருப்பதியில் சிவப்பேற்றோடு எழுந்தருளி இருக்கும் அந்நாள்கள் சிலகழிய; நங்கள் தந்திரு நாவினுக்கரைசரைநயந்து=நமது திருநாவுக்கரசு நாயனாரைவிரும்பி; பொங்குசீர்ப்புகலூர்தொழ அருளினால்போவார்=விளங்குஞ் சிறப்பினையுடைய திருப்புகலூரைவணங்கத் திருவருளினால் செல்லும் பிள்ளையார்; தங்கும் அப்பதிப் புறம்பணைசார்ந்து அருள்செய்வார்=பலசெல்வங்களும்பொருந்திய அத்திருவாரூர்த் திருப்பதியின்பக்கலில் உள்ள மருதநிலத்தை அடைந்தருள் செய்வாராயினார்—எ-று.

புறம்பணை=ஊர்ப்புறத்திருக்கும் மருதநிலம். வேற்றுமைக்கண் மகரங் கெடாதியல்பாதல், புலம்புக்கனன் என்றாற்போலக்கொள்க. (ருகஎ)

வேறு.

புவனவா ரூரினிற் புறம்புபோந் ததனையே நோக்கிநின்றே
யவமிலா நெஞ்சமே யஞ்சனீ யுய்யுமா றறிதியன்றே

Koviloor Digital Library

சிவனதா ரூர்தொழ னிமற வாதென்று செங்கைகூப்பிப்
பவனமாய்ச் சோடையா யெனுந்திருப் பதிகமுன் பாடினரோ.

(இ-ள்.) புவனம் ஆரூரினிற் புறம்புபோந்து=நகரங்களிற்சிறந்த திருவாரூரின்புறத்தணைந்தருளி; அதனையே நோக்கிநின்று=அத்திருப்பதியைப் பார்த்துநின்றருளி; அவமிலாநெஞ்சமே=குற்றமில்லாதமனமே; நீ அஞ்சல் உய்யுமாறு அறிதி=நீ அஞ்சாதே நான்கூறும் உய்யும்நெறியை அறிவாயாக; சிவனது ஆரூர்தொழல் நீமறவாதென்று செங்கைகூப்பி=சிவபெருமானாரது திருவாரூரை நீமறவாதுவணங்கக்கடவையென்று சிவந்த திருக்கரங்களைக்கூப்பி; பவனமாய்ச்சோடையாயெனுந் திருப்பதிகமுன் பாடினார்=பவனமாய்ச் சோடையாய் என்னும் முதலையுடைய திருப்பதிகத்தை அவ்வெல்லையின் முன்னின்று பாடியருளினார்—எ-று.

புவனம், சிறப்புநோக்கி நகரமென்னுந் துணையாய்நின்றது. புவனம் நீர் - நீர்வளம்பொருந்திய ஆரூர் என்று உரைத்தலு மொன்று. அவ்விருதிகவிரண்டும் முறையே மறைப்பொருளினும் விதிப்பொருளினும் வந்தன. சிவனதாரூர்தொழல் நீமறவாதென்புழி, சிவபிரானது ஆரூரைத்தொழுதலை நீமறவாமல் உய்யுமாறு அறிதி என்று கூறினும் அமையும். (௫௧அ)

திருவாரூர் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பவனமாய்ச் சோடையாய் நாவெழாப் பஞ்சுதோய்ச் சட்டவுண்டு
சிவனதாள் சிந்தியாப் பேதைமார் போலநீ வெள்கினையே
கவனமாய்ப் பாய்வதோ ரேறுகந் தேறிய காளகண்ட
னவனதா ரூர்தொழு துய்யலா மையல்கொண் டஞ்சனெஞ்சே.

பல்லிதழ் மாதவி பல்லிவண் டியாழ்செயுங் காழியூர
னல்லவே சொல்லிய ஞான சம்பந்த னாரூ
ரெல்லியம் போதெரி யாடுமெம் மீசனை யேத்துபாடல்
சொல்லவே வல்லவர் தீதில ரோதநீர் வையகத்தே.

திருச்சிற்றம்பலம்.

காழியார் வாழவந் தருள்செயுங் கவுணியப் பிள்ளையார்தா
மாழியா னறியொணா வண்ணலா ரூர்பணிந் தரிதுசெல்வார்
பாழிமா மியானையின் னுரிபுனைந் தார்பனை யூர்பணிந்து
வாழிமா மறையிசைப் பதிகமும் பாடியப் பதியில்வைகி.

(இ-ள்.) காழியர் வாழவந்தருள்செயும் கவுணியப்பிள்ளையார்தாம்=சீகாழியிலுள்ளார் வாழும்படி வந்தருளிய கவுணியகோத்திரத்தில் அவதரித்த ஆளுடையபிள்ளையார்; ஆழியானறியொணா அண்ணலார் ஊர்பணிந் தரிது

Koviloor Digital Library

செல்வார்=சக்கரத்தைத்தாங்கியதிருமால் அறிதற்கரிய புற்றிடங்கொண்டாரது திருவாரூரைவணங்கி அதில்நின்று நீங்கற்கரிய ஆராமையோடு செல்வாராய்; பாழிமால்யானையின் உரிபுனைந்தார்பனையூர்பணிந்து=பெரிய மயக்கங் கொண்ட யானையினதுதோலைப் போர்வையாகப்போர்த்த சௌந்தரேசரது திருப்பனையூரைவணங்கி; மாமறை இசைப்பதிகமும்பாடியப்பதியில்வைகி= பெரியதமிழ்வேதமாகிய இனிய இசையையுடைய திருப்பதிகத்தையும்பாடி அத்திருப்பதியில் இருந்தருளி—எ-று.

பாழி - சிறியமலை எனினும் ஒக்கும். (ருகக)

திருப்பனையூர் - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

அரவச்சடை மேன்மதிமத்தம்
விரவிப்பொலி கின்றவனூரா
நிரவிப்பல தொண்டர்கணாளும்
பரவிப்பொலி யும்பனையூரே.

பாரார்விடை யான்பனையூர்மேற்
சீரார்தமிழ் ஞானசம்பந்த
னாராற்சொன்ன மாலைகள்பத்து
மூரார்நினை வாருயர்வாரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-சௌந்தரேசர். தேவியார் - பெரியநாயகியம்மை.

அங்குநின் றரிதெழுந் தருளுவா ரகிலகா ரணமுமானார், தங்குநற் பதிகளும் பிறபணிந் தருளிவண் டமிழ்புனைந்தே, யெங்குமெய்த் தவர்குழா மெதிர்கொளத் தொழுதெழுந் தருளிவந்தார், பொங்குதண் பாசடைப் பங்கயப் புனல்வயற் புகலூர்சார.

(இ-ள்.) அங்குநின்று அரிதெழுந் தருளுவார்=அத்திருப்பதியில் நின்றும் அருமைப்பாடாக எழுந்தருளும் பிள்ளையார்; அகிலகாரணமு மானார் தங்குநல் பிறபதிகளும் பணிந்தருளி வண்டமிழ்புனைந்து=எல்லாவற்றிற்குங் காரணராகிய சிவபெருமானார் எழுந்தருளிய பிறதிருப்பதிகளையும் வணங்கி வண்மையையுடைய திருப்பதிகங்களைச்சாத்தி; எங்கும் மெய்த்தவர்குழாம் எதிர்கொளத்தொழுது=எவ்விடத்தும் மெய்த்தவத்தையுடைய அடியார்திருக் கூட்டங்கள் எதிர்கொண்டுவணங்கத்தாமும்வணங்கி; பொங்குதண்பாசடைப்பங்கயப் புனல்வயற்புகலூர்சார எழுந்தருளிவந்தார்=விளங்கும் குளிர்ந்த பசிய இலையையுடைய தாமரைகள்மலர்ந்தநீர்வளம்பொருந்திய வயல்சூழ்ந்த திருப்புகலூரைச்சார எழுந்தருளிவந்தார்—எ-று. (ருஉய)

Koviloor Digital Library

நாவினுக்கரசரு நம்பிசீர் முருகரு மற்றுநாமச், சேவுகைத் தவர் திருத் தொண்டரா னவர்கண்முன் சென்றுசிறப், பூவினிற் பொலிபு னற் புகலியார் போதகத் தெதிர்பணிந்தே, மேவமற் றவருடன் கூடவே விமலர்கோ யிலையடைந்தார்.

(இ-ள்.) நாவிறுக்கரசரும் நம்பிசீர்முருகரும்=ஆண்ட அரசும் சிறந்த நெப்பியையுடைய முருகநாயனாரும்; மற்றுநாமச்சேவுகைத்தவர் திருத்தொண்டரானவர்கண் முன்சென்று=அவரல்லாத இடபத்தைவாகனமாகநடத்தும் சிவபெருமானுடைய அடியார்திருக்கூட்டங்களும் எதிர்சென்று; சிறப்பூவினில் பொலிபுனற்புகலியார்போதகத்து எதிர்பணிந்து=குளிர்ந்ததாமரைமலர்களால் விளங்கும் நீர்சூழ்ந்தசீகாழியிலவதரித்த யானைக்கன்றையொத்த பிள்ளையாரை எதிரேவணங்கி; மேவமற்றவருடன் கூடவேவிமலர்கோயிலை அடைந்தார்=தம்மை எதிர்கொள்ள அவ்வடியார் திருக்கூட்டங்களோடுகூட அக்கினிசர் திருக்கோயிலைப் (பிள்ளையார்) அடைந்தருளினார்—எ-று.

முன்சென்று எதிர்பணிந்துமேவ அவருடன் பிள்ளையார்கோயிலை அடைந்தாரெனக்கூட்டுக. முன்சென்று பணிந்தென்றது முன்சென்றெதிர் பணிந்தென்றதனும், அவரெதிர்கொள்ளுங்கால் பிள்ளையாரும்பணியத் தாமுமெதிர் பணிந்து என்பது போந்தவாறுகாண்க. (ருஉக)

வேறு.

தேவர்தந் தலைவனார் கோயில்புக் கனைவருஞ் சீர்நிலத் துறவணங்கிப், பாவருந் தமிழிசைப் பதிகமுன் பாடிமுன் பரவுவார் புறம்பணைந்தே, தாவில்சீர் முருகனார் திருமனைக் கெய்தியத் தனிமுதற் றொண்டர்தாமே, யானவபுங் குறைவறுத் திடவமர்ந் தருளுவா ரினிதினங் குன்றபுகாலில்.

(இ-ள்.) தேவர்தம்தலைவனார் கோயில்புக்கு அனைவரும் சீர்நிலத்து உறவணங்கி=தேவர்களுக்குத் தலைவராகிய அக்கினிசர்கோயிலுட்புகுந்து எல்லாரோடும் அழகியபூமியில் திருமேனிபடியவணங்கி; பாவரும் தமிழிசைப்பதிகமுன்பாடி முன்பரவுவார்=பாவிற்கமைந்த இனிய இசையையுடைய திருப்பதிகத்தைப்பாடித் திருமுன்னின்று வணங்கும்பிள்ளையார்; புறம்பு அணைந்து தாவில்சீர்முருகனார் திருமனைக்கெய்தி=புறம்பிலடைந்தருளி கெடுதலில்லாத புகழையுடைய திருமுருகநாயனார் மனையையடைந்து; அத்தனிமுதற்றொண்டர்தாமே யாவையும் குறைவறுத்திட அமர்ந்தருளுவார் இனிதினங்குறைபுகாலில்=அந்த ஒப்பில்லாத முதன்மையையுடைய அம்முருகநாயனார் திருவமுதுசெய்தற்கமைந்த எவையும்முட்டுப்பாடின்றி நடத்தவிரும்பியருள்பவராய் இனிதாக அத்திருப்பதியில் எழுந்தருளி இருக்குங்காலத்தில்—எ-று.

சீலநல் வடிவரு கிளர்சிறுத் தொண்டரு முடனிலைந் தெய்துநீர் மையர், சிவநேயத் தவர்களுங் கூடவே குலபிறெஞ்செய்கைநேர் நின்று

Koviloor Digital Library

வாய்மை, சாலமிக் குயர்திருத் தொண்டினுண் மைத்திறந் தன்னையே தெளியநாடிக், காலமுய்த் தவர்களோ டளவளா விக்கலந் தருளினார் காழிநாடர்.

(இ-ள்.) நீலநக்கடிகளு நிகழ்சிறுத்தொண்டரும்=தாம்திருப்புகலூரில் எழுந்தருளியிருத்தலைக்கேள்வியுற்றுவந்த திருநீலநக்கநாயனாரும் புகழ்விளங் கும் சிறுத்தொண்ட நாயனாரும்; உடனணைந்தெய்து நீர்மைச்சில மெய்த் தவர்களும்=அவருடன்வந் தடையும் நல்லொழுக்கத்தினையுடைய அடியார் கூட்டங்களும்; கூடவேகும்பிடுஞ் செய்கைநேர்நின்று=ஒருங்கு தம்மோடு சேர்ந்து அக்கினிசனைவணங்கும் செயலில் ஒருப்பட்டுநின்று; சாலவாய்மை மிக்குயர் திருத்தொண்டினுண்மைத் திறந்தன்னை தெளியநாடி=மிகவும் மெ ய்மை மிக்குயர்ந்த திருத்தொண்டினதுமெய்மைப்பகுதியை தெளிய ஆராய்ந் து; காழிநாடர் காலமுய்த்தவர்களோ டளவளாவிக்கலந்தருளினார்=சீகாழி த்தலைவராகிய ஆளுடையபிள்ளையார் அந்நாயன்மார்களோடதனாற் காலம் போக்கிக் கலந்தருளி இருந்தார்—எ-று. (ருஉஉ)

கும்பிடுங் கொள்கையிற் குறிகலந் திசையெனும் பதிகமுன் ன னபாட, தம்பெருந் தலைமையா னிலைமைசால் பதியதன் பெருமை சால் புறவிளம்பி, யும்பரும் பரவுதற் குரியசொற் பிள்ளையா ருள்ள மெய்க் காதல்கூர, நம்பர்தம் பதிகளா யினவெனைப் பலவுமு னண் ணியே தொழநயந்தார்.

(இ-ள்.) கும்பிடுங்கொள்கையிற் குறிகலந்திசையெனும் பதிகமுன்னன பாடல்= (நாடொறும் அவர் தம்முடன் வரச்சென்று) வணங்கும் மேம்பாட் டால் குறிகலந்திசையென்னும் பதிகமுதலையுடையபாடல்களின்; தம்பெருந் தலைமையால் நிலைமைசால்பதியதன் பெருமை சால்புறவிளம்பி=தம் முதன் மைக்குணத்தால் அழியாதநிலைபெற்ற அத்திருப்பதியின் பெருமையைச் தகு திபொருந்தச் செய்யுளிறுதிகளில் சிறப்பித்தருளி; உம்பரும் பரவுதற்குரிய சொற்பிள்ளையாருள்ள மெய்க்காதல்கூர = தேவர்களும் வணங்குதற்குரிய புகழையுடைய பிள்ளையார் தமது திருவுள்ளத்தில் மெய்மையான பெருவிரு ப்பு மேம்பட; நம்பர்தம்பதிகளாயின வெனைப்பலவுமுன் னண்ணியேதொழந யந்தார்=சிவபெருமான் எழுந்தருளிய மற்றத் திருப்பதிகள் பலவற்றையும் முன்னடைந்து வணங்க விரும்பியருளினார்—எ-று. (ருஉச)

திருப்புகலூர் - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

குறிகலந்தவிசை பாடலினாசை யாலிவ் வுலகெல்லா, நெறிகலந்ததொரு சீர்மைபலவும் பெருநீதம் பலிபேணி, முறிகலந்ததொரு தோலரைமேலுடை யானிடமொய்ம்மலரின், பொறிகலந்தபொழில் சூழ்ந்தயலேபுய லாரும் புகலூரே.

Koviloor Digital Library

புற்றில்வா ழும்மர வம்மணைபார்த்தவன் மேவும் புகலூரைக், க
ற்ற நல்லவர் காழியுண்ஞானசம் பந்தன்றமிழ்மாலை, பற்றியென் றும்
மிசை பாடியமாந்தர் பரமன் னடிசேர்ந்து, குற்றமின் றிக்குறை பா
டொழியாப்புக ழோங்கிப் பொலிவாரே.

திருச்சிற்றம்பலம்.

வேறு.

புள்ளலம்புதன் புனற்புகலூருறை புனிதனாருள்பெற்றுப், பி
ள்ளையாருட னுவினுக்கரசரும் பிறபதிதொழச்செல்வார், வள்ளலார்
சிறுத் தொண்டரு நிலநக்கரும் வளம்பதிக்கேக, வுள்ளமன்புறு முரு
கரங் கொழியவுமுடன் படவிசைந்தார்கள்.

(இ-ள்.) புள்ளலம்புதண்புனற் புகலூருறை புனிதனாருள்பெற்று=புட்குலங்கள் ஒலிக்கும் குளிர்ந்த நீர்சூழ்ந்த திருப்புகலூரில் எழுந்தருளிய அக்கினிசாரத திருவருளைப்பெற்று; பிள்ளையாருட னுவினுக்கரசரும் பிறபதிதொழச்செல்வார்=ஆளுடையபிள்ளையாருடன் ஆண்ட அரசும் மற்றத்திருப்பதிகளை வணங்கச்செல்லும் கருத்துடையராய்; வள்ளலார் சிறுத்தொண்டரும் நீலநக்கரும் வளம்பதிக்கேக= வள்ளற்றன்மையையுடைய சிறுத்தொண்டநாயனாரும் திருநீலநக்கநாயனாரும் வளம்பொருந்திய தத்தம்திருப்பதிக்குச் செல்லவும்; உள்ளம் அன்புறு முருகர் அங்கொழியவும் உடன்பட இசைந்தார்கள்=திருவுள்ளத்தின்கண் அன்புமிக்க திருமுருகநாயனார் அவ்விடத்து நீங்கவும் அவர்களுடன்படும்படி தாமுமிசைந்தார்கள்—எ-று. (௩௨௫)

கண்ணகன் புகலூரினைத் தொழுதுபோம் பொழுதினிற் கடற்
காழி, யண்ணலார் திருநாவினுக்கரசர் தம்மருங்கு விட்டகலாதே, வ
ண்ணநித்திலச் சிவிகையும் பின்வர வழிக்கொளவுறுங்காலை, யெண்
ணில்சீர்த் திருநாவினுக்கரசரு மற்றவர்க் கிசைக்கின்றார்.

(இ-ள்.) கண்ணகன்புகலூரினைத் தொழுதுபோம்பொழுதினில்=இடமகன்ற திருப்புகலூரைவணங்கிச் செல்லுங்காலத்தில்; கடற்காழி அண்ணலார் திருநாவினுக்கரசர் தம்மருங்குவிட்டகலாது=கடற்கரையிலிருக்கின்ற சீகாழித்தலைவராகிய ஆளுடைய பிள்ளையார் தம்பக்கலில் ஆண்ட அரசுவிட்டு நீங்காமல்செல்ல; வண்ணநித்திலச்சிவிகையும் பின்வரவழிக்கொள வுறுங்காலை=அழகிய முத்துச்சிவிகையும் தம்பின்னேவரவழிக்கொண்டு செல்லுங்காலத்து; எண்ணில் சீர்த்திருநாவினுக்கரசரும் மற்றவர்க்கிசைக்கின்றார்=அளவில்லாத புகழையுடைய ஆண்ட அரசும் அப்பிள்ளையாரைநோக்கி அருளிச்செய்கின்றார்—எ-று.

ஆளுடையபிள்ளையார் நாவுக்கரசர் தம்மருங்குவிட்டகலாமல் சிவிகையும்பின்வர வழிக்கொள்ளுங்கால் எனக்கூட்டுக. (௩௨௬)

Koviloor Digital Library

நாயனாருமக் களித்தருள்செய்தவிந் நலங்கிளரொளி முத்தின்,
றூயயானத்தின் மிசையெழுந்தருளுவீ றொன்றலுஞ் சுடர்த்திங்கண்,
மேயவேணியா ரருளுமிவ்வாறெனில் விரும்புதொண் டர்களோடு,
போயதெங்குநீ ரங்கியான்பின்வரப் போவதென்றருள் செய்தார்.

(இ-ள்.) நாயனாருமக்களித்தருள்செய்த இந்நலங்கிளர் ஒளிமுத்தின்தூயயானத்தின்மிசை எழுந்தருளுவீரொன்றலும்=சிவபிரான் உமக்குக் கொடுத்தருளிய இந்த அழகால்விளங்கும் ஒளியையுடைய முத்தாலாகிய பரிசுத்தமான திருச்சிவிகையின்மேல் எழுந்தருளுவீரொன்று ஆண்ட அரசுகூறியருளுங்கால்; சுடர்த்திங்கள்மேய வேணியாரருளு மிவ்வாறெனில்=ஒளிபொருந்திய சந்திரனையணிந்த சிவபிரானது திருவருளும் இவ்வாறெனில்; நீர்விரும்புதொண்டர்களோடுபோயது எங்கு=நீர் விரும்பிய திரு அடியார்களுடன் எழுந்தருளுவது எத்திருப்பதியோ; அங்கு யான்பின்வரப்போவதென் றருள்செய்தார்=அத்திருப்பதிக்கு அடியேனும் பின்வரக்கடவனென அருளிச்செய்தார்—எ-று. (௩௨௭)

என்றுபிள்ளையார் மொழிந்தருள்செய்திட விருந்தவத்திறையோரு, நன்றுநீரருள் செய்ததேசெய்வனென் றருள்செய்து நயப்புற்ற,
அன்றைநாண்முத லுடன்செலுநாளெலா மவ்வியல்பினிற் செல்வார்,
சென்றுமுன்னுறத் திருவம்பரணைந்தனர் செய்தவக்குழாத் தோடும்.

(இ-ள்.) என்றுபிள்ளையார் மொழிந்தருள்செய்திட=என்று ஆளுடைய பிள்ளையார் ஆண்டஅரசுடன்கூறியருள; இருந்தவத்திறையோரும்=பெரிய தவத்தினையுடைய ஆண்ட அரசும்; நன்று நீரருள்செய்ததேசெய்வனென்றருள்செய்து=இறந்த நீரருளிச்செய்தவாறே செய்வேனென்று அப்பிள்ளையாருடன்கூறியருளி; நயப்புற்ற அன்றைநாண்முதலுடன் செலுநாளெலாம் அவ்வியல்பினிற் செல்வார்=விரும்பிய அற்றைநாள்முதல் அடுத்துவரும் நாள்தோறும் அவ்வாறுசெல்வாராய்; சென்றுமுன்னுறத் திருவம்பரணைந்தனர் செய்தவக்குழாத்தோடும்=முற்படச்சென்று திருவம்பர்மாகாளத்தை அடைந்தருளினர் செய்யுந்தவத்தையுடைய அடியார் திருக்கூட்டத்தோடும்—எ-று.

இருந்தவத்திறையோர் செய்வனென்றருள்செய்து நயப்புற்றநாள்முதல் நாளெல்லாம் அவ்வியல்பினிற் செல்வாராய்த் திருவம்பர் அணைந்தாரெனக் கூட்டுக. (௩௨௮)

சண்பைமன்னருந் தம்பிரானருள்வழி நிற்பதுதலைச் செல்வார்,
பண்புமேம்படு பனிக்கதிர்நித்திலச் சிவிகையிற்பணிந்தேறி, வண்பெரும்புக லூரினைக்கடந்துபோய் வரும்பரிசனத்தோடுந்,
திண்பெருந் தவ ரணைந்ததெங்கென்றுபோய்த் திருவம்பர் நகர்புக்கார்.

(இ-ள்.) சண்பைமன்னருந்தம்பிரானருள்வழிநிற்பதுதலைச்செல்வார்=சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையாரும் சிவபிரான்திருவருளின் வழி

Koviloor Digital Library

சிற்றலையே மேற்கொள்வாராய்; பண்புமேம்படு பனிக்கதிர்நித்திலச்சிவிகை மிசைப்பணிந்தேறி=தண்மைக்குணத்திற்மிக்க குளிர்ந்தகிரணங்களையுடைய முத்துச்சிவிகையின்மேல் வணங்கியேறி அருளி; வண்பெரும்புகலூரினைக்கடந்துபோய்=வளப்பம்மிக்க பெரியதிருப்புகலூரைக்கடந்துசென்றருளி; வரும்பரிசனத்தோடுந் திண்பெருந்தவர் அணைந்ததெதிர்சென்றுபோய்=தம்முடன் வரும் அடியார்திருக்கூட்டத்தோடு நிலைகலங்காத பெரியதவத்தினை யுடைய ஆண்ட அரசு 'எத்துற்றதென்று வினவிச்சென்றருளி; திருவம்பர்நகர்புக்கார்=திரு அம்பர் என்னுந் திருப்பதியை அடைந்தருளினார்—எ-று. (௩௨௧)

அம்பர்மாநக ரணைந்துமாகாளத்தி லண்ணலாரமர்கின்ற, செம் பொன்மாமதிற் கோயிலைவலங்கொண்டு திருமுன்புபணிந்தேத்தி, வம்புலாமலர் தூவிமுன்பாவிய வண்டமிழிசைமாலை, யும்பர்வாழநஞ் சுண்டவர்தமைப்பணிந் துருகுமன் பொடுதாழ்ந்தார்.

(இ-ள்.) அம்பர்மாநகரணைந்து மாகாளத்தில் அண்ணலார்அமர்கின்ற= திரு அம்பர் என்னும் பெரிய திருப்பதியை அடைந்து திருமாகாளம் என்னும் ஆலயத்தில் காளகண்டேசர் எழுந்தருளிய; செம்பொன்மாமதிற் கோயிலைவலங்கொண்டு திருமுன்பு பணிந்தேத்தி=சிவந்த பொன்னாலாகிய பெரிய மதில்சூழ்ந்த திருக்கோயிலைப் பிரதட்சணஞ்செய்து அவரது திருமுன்னின்றுவணங்கித்துதித்து; வம்புலாமலர்தூவிமுன்பாவியவண்டமிழ் இசைமாலை=வாசனைநிறைந்த மலர்களைத்தூவி முன்பு பாடியருளிய)அடையார்புரமென்னும் முதலையுடைய) வளம்பொருந்திய திருப்பதிகமாலையால்; உம்பர்வாழ நஞ்சுண்டவர்தமைப்பணிந்து உருகும் அன்பொடு தாழ்ந்தார்=தேவர்கள் உய்யும் பொருட்டு நஞ்சமுதுசெய்தருளிய காளகண்டேசரை வணங்கி மனம் உருகுதற்குக் காரணமான அன்புடன் வணங்கியருளினார்—எ-று. (௩௨௨)

திருஅம்பர்மாகாளம்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

அடையார் புரமூன்று மனல்வாய் விழவெய்து
மடையார் புனலம்பர் மாகா ளம்மேய
விடையார் கொடியெந்தை வெள்ளைப் பிறைசூடுஞ்
சடையான் கழலேத்தச் சாராவினைதானே.

வெருநீர் கொளவோங்கு வேணுபுரந் தன்னுட்
டிருமா மறைஞான சம்பந்தன் சேனார்
பெருமான் மலியம்பர் மாகாளம் பேணி
யுருகா வுனாசெய்வா ருயர்வா ரடைவாரே.

திருச்சிற்றம்பலம்.

Koviloor Digital Library

தாழ்ந்துநாவினுக் கரசுடன்றம்பிரான் கோயின்முன்புற மெய்
திச், சூழ்ந்ததொண்டரோ டப்பதியமர்பவர் சுரநதிமுடிமீது, வீழ்ந்த
வேணியார் தமைப்பெறுங் காலங்கள் விருப்பினுற்கும்பிட்டு, வாழ்ந்
திருந்தனர் காழியார்வாழவந் தருளியமறைவேந்தர்.

(இ-ள்.) தாழ்ந்து நாவினுக் கரசுடன் றம்பிரான் கோயின் முன்புறமெ
ய்தி=பணிந்தருளி ஆண்ட அரசுடன் தேவர்பிரானுகிய காளகண்டேசரது
திருக்கோயிலினின்று புறம்பேவந்து; சூழ்ந்ததொண்டரோ டப்பதியமர்ப
வர்=தம் அருகிற்சூழ்ந்த அடியார் திருக்கூட்டத்தோடு அத்திருப்பதியை விரு
ம்பி அருள்பவராய்; காழியார் வாழவந்தருளிய மறைவேந்தர்=சீகாழியி
லுள்ளார் வாழவந்தருளிய மறைமுதல்வராகிய ஆளுடையபிள்ளையார்; சுரந
திமுடிமீது வீழ்ந்த வேணியார்தமைப்பெறுங் காலங்கள் விருப்பினுற் கும்பிட்
டுவாழ்ந்திருந்தனர்=கங்காநதியானது விழுதற்கு இடமான சடைமுடியையு
டைய காளகண்டேசனை வணங்குதற்குரிய காலங்கள்தோறும் பெருவிருப்
பால் வணங்கி வாழ்வடைந்து எழுந்தருளியிருந்தார்—எ-று.

கங்கை, தன்வேகத்தைத் தாங்குவார் இலரென்னும் செருக்கால் சிவபி
ரான் சிரசில் வீழ்ந்து வேகமடங்கிக்கிடந்தமைதோன்ற, சுரநதிமுடிமீது வீழ்
ந்த வேணியார் என்றார். (௫௬௧)

பொருவிலாதசொற் புல்குபொன்னிறமுதற் பதிகங்களாற்போ
ற்றித், திருவினார்ந்தகோச் செங்கணனங்கர் செய்தகோயிலைச்சேர்ந்
து, மருவுவாய்மைவண் டமிழ்மலர்மாலையவ் வளவனைச்சிறப்பித்துப்,
பெருகுகாதலிற் பணிந்துமுன்பரவினர் பேணியவுணர்வோடும்.

(இ-ள்.) பொருவிலாதசொற் புல்குபொன்னிறமுதற் பதிகங்களாற்போ
ற்றி=ஒப்பில்லாத சொல்வளம்நிறைந்த புல்குபொன்னிறம் முதலான திருப்
பதிகங்களால் துதித்து; திருவினார்ந்த கோச்செங்கணன் அந்நகர்செய்தகோ
யிலைச்சேர்ந்து=செல்வங்கள்நிறைந்தசெங்கோலையுடைய கோச்செங்கட்சோ
ழநாயனர் அத்திருப்பதியிற்செய்த அம்பர்ப்பெருந்திருக்கோயிலை அடைந்து;
வாய்மை மருவுவண்டமிழ் மலர்மாலை அவ்வளவனைச்சிறப்பித்து=மெய்ம்மை
பொருந்தியவளத்தையுடைய திருப்பதிகமாலையில் அக்கோச்செங்கட் சோழ
நாயனுரைச்சிறப்பித்தருளி; பெருகுகாதலிற்பணிந்து முன்பரவினர் பேணிய
வுணர்வோடும்=மேம்பட்ட விருப்போடும்வணங்கித் திருமுன்னின்று துதித்
தார் பொருந்தி மெய்யுணர்ச்சியோடும்—எ-று. (௫௬௨)

திரு அம்பர்மாகாளம் - பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

புல்குபொன்னிறம் புரிசடைநெடுமுடிப் போழிளமதிசூழப்
பில்குதேனுடை நறுமலர்க்கொன்றையும் பிணையல்செய்தவர்மேய

Koviloor Digital Library

மல்குதண்டுறை யரிசிலின்வருபுனல் வடகரைமாகாள
மல்குநண்பக லுந்தொழுமடியவர்க் கருவினையடையாவே.

மாறுதன்னெடு மண்மிசையில்லது வருபுனன்மாகாளத்
திறுமாதியு மாகியசோதியை யேறமர்பெருமானை
நாறுபூம்பொழிற் காழியுண்ஞானசம் பந்தனதமிழ்மாலை
கூறுவாரையுங் கேட்கவல்லாரையுங் குற்றங்கள்குறுகாவே.

திருச்சிற்றம்பலம்.

திரு அம்பர்மாகாளம் - பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

படையுளார் விடையினர் பாய்புலித் தோலினர் பாவநாசர்
பொடிகொண்மா மேனியர் பூதமார் படையினர் பூணநூல
ரடிகொண்மா மலரிடு மடியினர் பிடிநடை மங்கையோடு
மடிகளா ரருள்புரிந் திருப்பிட மம்பர்மா காளந்தானே.

செம்பொன்மா மணிகொழித் தெழுதிரை வருபுன லரிசில்சூழ்ந்த
வம்பர்மா காளமே கோயிலா வணங்கினே டிருந்தகோனைக்
கம்பினுர் நெடுமதிட் காழியுண் ஞானசம் பந்தன்சொன்ன
நம்பிநாண் மொழிபவர்க் கில்லையாம் வினைநலம் பெறுவர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-காளகண்டேசர். தேவியார்-மகாதேவியம்மை.

திருஅம்பர்ப்பெருந்திருக்கோயில்-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

எரிதரவனல் கையேந்தி யெல்லியி
னரிதிரி கானிடை நட்டமாடுவ
ரரிசிலம் பொருபுன லம்பர் மாநகர்க்
குரிசில் செங்கண்ணவன் கோயில் சேர்வாரே.

அழகரை யடிகளை யம்பர் மேவிய
நிழறிகழ் சடைமுடி நீலகண்டரை
யுமிழ்திரை யுலகினி லோது வீர்கொண்மின்
றமிழ்கெழு விரகினன் றமிழ்செய் மாலையே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-பிரமபுரநாதர்.தேவியார்-பவளவன்னப்பூங்குழலம்மை.

Koviloor Digital Library

இன்னவாறுசொன் மாலைகளாற்றுதித் திறைஞ்சியங்கமர்நாளிற்
கன்னிமாமதிற் றிருக்கடவூர்தொழக் காதல்செய்தருளிப்போய்
மன்னுகோயில்கள் பிறபதிவணங்கியே வாக்கின்மன்னவரோடு
மந்நெடும்பதி யணைவுறக்கலயரோ டடியவரெதிர்கொண்டார்.

(இ-ள்) இன்னவாறு சொன்மாலைகளாற் றுதித்து இறைஞ்சி அங்கமர் நாளில்=இவ்விதமாகச்சொல்லாநய திருப்பதிகமாலைகளால்துதித்து வாழ்த்தி அவ் அம்பர்த்திருப்பதியில் இருந்தருளும்நாளில்; கன்னிமாமதிற் றிருக்கடவூர்தொழக்காதல்செய்தருளிப்போய்=அழியாத பெரிய மதில்சூழ்ந்த திருக்கடவூரைவணங்கவிரும்பிச்சென்றருளி; பிறபதிமன்னுகோயில்கள்வணங்கி=மற்றத்திருப்பதிகளில் நிலைபெற்றதிருக்கோயில்களை வணங்கி; வாக்கின்மன்னவரோடும் அந்நெடும்பதியணைவுற=ஆண்டவரசுடன் அந்தப்பெரிய திருப்பதியை அடையுங்கால்; கலயரோடடியவரெதிர்கொண்டார்=குங்கிலியக்கலயநாயனரோடு அடியார்திருக்கூட்டங்களும் எதிர்கொண்டருளினர்—எ-று.()

மற்றவண்பதி யணைந்துவீரட்டத்து மழவிடையார்கோயிற்
சுற்றமாளிகை வலங்கொண்டுகாலனை யுதைத்துருட்டியசெய்ய
பொற்சிலம்பணி தாமரைவணங்கிமுன் போற்றியுய்ந்தெதிர் நின்று
பற்றறுப்பவர் சடையுடையானெனும் பதிகவின்னிசைபாடி.

(இ-ள்.) மற்றவண்பதியணைந்து=அந்த வண்மையையுடைய திருப்பதியையடைந்து; வீரட்டத்து மழவிடையார்கோயில் சுற்றுமாளிகை வலங்கொண்டு=திருக்கடவூர்த்திருவீரட்டம்என்னும் ஆலயத்தில் எழுந்தருளிய இளமைதங்கிய இடபவாகனத்தையுடைய அமிர்தகடேசரது திருக்கோயிலைச்சூழ்ந்த திருமாளிகையைப்பிரதட்சணஞ்செய்து; காலனை உதைத்து உருட்டிய செய்யபொற் சிலம்பணிதாமரைவணங்கி=எமனைஉதைத்து நிலத்தில் உருளச்செய்த சிவந்தபொன்னாலாகிய சிலம்பையணிந்த தாமரைபோன்ற திருவடிகளைவணங்கி; முன்போற்றி உய்ந்து எதிர்நின்று=திருமுன்னின்று துதித்து அதனால்வாழ்ந்து எதிரேநின்று; பற்றறுப்பவர் சடையுடையானெனும் பதிகவின்னிசைபாடி=பாசபந்தத்தையறுத்தருளும் பிள்ளையார் சடையுடையானெனும் முதலையுடைய திருப்பதிகத்தை இனிய இசையோடுபாடியருளி—எ-று.()

திருக்கடவூர்-திருவீரட்டானம் - பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

சடையுடை யானுநெய் யாடலானுஞ்சரி கோவண
வுடையுடை யானுமை யார்ந்தவொண் கண்ணுமை கேள்வனுங்
கடையுடை நன்னெடு மாடமோங் குங்கட வூர்தனில்
விடையுடை யண்ணலும் வீரட்டானத் தானல்லனே.

௬௬

Koviloor Digital Library

வெந்தவெண்ணீறணி வீரட்டானத் துறை
வேந்தனையந்தணர்தங் கடவூருளானை யணிகாழியான்
சந்தமெல்லாமடிச் சார்த்தவல்லமறை ஞானசம்
பந்தனசெந்தமிழ் பாடிபாடக் கெடும்பாவமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - அமிர்தகடேசர். தேவியார்-அபிராமித்தாய்.

பரவியேத்தியங் கரிதினிற்போந்துபார் பரவுசீரரசோடு
விரவுநண்புடைக் குங்கிலியப்பெருங் கலயர்தம்மனைமேவிக்
களவில்காதன்மற் றவரமைத்தருளிய விருந்தினிதமர்ந்தங்குச்
சிரபுரத்தவர் திருமயானமும்பணிந் திருந்தனர்சிறப்பெய்தி.

(இ-ள்.) பரவியேத்தி அங்கு அரிதினிற்போந்து=துதித்துவாழ்த்தி அங்குநின்று அரிதாகப்பிரிந்துபோய் ; பார்பரவு சீரரசோடும்=உலகத்தில் பரவியபுகழையுடைய ஆண்ட அரசுடன் ; விரவுநண்புடைக் குங்கிலியப்பெருங்கலயர்தம் மனைமேவி=கலந்த நட்பினையுடைய பெருமைபொருந்திய குங்கிலியக்கலயநாயனார் திருமனையை அடைந்தருளி ; களவில் காதல் மற்றவர் அமைத்தருளிய விருந்தினிதமர்ந்து=அளவில்லாத விருப்பத்தையுடைய அந்நாயனார் அமைத்தருளிய விருந்தை இனிதாகவிரும்பி ; அங்குசிரபுரத்தவர் திருமயானமும் பணிந்திருந்தனர் சிறப்பெய்தி=சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார் திருக்கடவூர் திருமயானத்தையும்வணங்கி மகிழ்கூர்ந்திருந்தனர் —எ-று. (௫௬௫)

திருக்கடவூர்மயானம்- பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

வரியமறையார் பிறையார்மலையோர் சிலையாவணக்கி
பெரியமதில்க ளெய்தாரெறியு முசலமுடையார்
கரியமிடறு முடையார்கடவூர் மயானமமர்ந்தார்
பெரியவிடைமேல் வருவா ரவரெம் பெருமானடிகளே.

மரவம்பொழில்சூழ் கடவூர்மன்னு மயானமமர்ந்த
வரவமசைத்த பெருமானகல மறியலாகா
பரவுமுறையே பயிலும்பந்தன் செஞ்சொன்மாலை
யிரவும்பகலும் பரவிநினைவார் வினைகளிலரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-பிரமபுரீசர். தேவியார்-தயாளமலர்க்குழல்நாயகி.

Koviloor Digital Library

சிறப்புடைத்திருப் பதியதனிடைச்சில நாளமர்ந் தருளோடும்,
விறற்பெருங்கரி யுரித்தவர்கோயில்கள் விருப்பொடுந்தொழச்செல்வா
ர், மறைப்பெருந்திருக் கலயருமுடன்பட வணங்கியமகிழ்வோடு, மற
ப்பெரும்பய னனையவத்தொண்டரோ டணைந்தனர்திருவாக்கூர்.

(இ-ள்.) சிறப்புடைத்திருப்பதியதனிடைச் சிலநாளமர்ந்து=சிறப்பினை யுடைய அத்திருப்பதியின்கண் சிலநாள் இருந்தருளி; அருளோடும் விறற் பெருங் கரியுரித்தவர்கோயில்கள் விருப்பொடுந் தொழச்செல்வார்=திருவருளால் வலிமைபொருந்திய பெரியயானையையுரித்தப்போர்த்தசிவபிரான் எழுந்தருளிய திருக்கோயில்களைக் காதலோடும் வணங்கச்செல்லும்பிள்ளையார்; மறைப்பெருந் திருக்கலயருமுடன்பட=மறையவர் குலத்திற்றோன்றிய பெருமையை உடைய குங்கிலியக்கலயநாயனாரும் தமது அத்திருப்பதிக்கண் நிற்றற் குடன்பட; மகிழ்வோடும் அறப்பெரும்பயனனைய அத்தொண்டரோடு திருவாக்கூர்வணங்கிய அணைந்தனர்=மகிழ்ச்சியோடும் சிவபுண்ணியத்தின் பெரும்பயனையொத்த அவ்வடியவரோடு திருவாக்கூர் என்னுந் திருப்பதியை வணங்கும்படி அடைந்தருளினார்—எ-று. (௩௱௬)

தக்கவந்தணர் மேவுமப்பதிதனிற் றான்றோன்றிமாடத்துச், செ
க்கர்வார்சடை யண்ணலைப்பணிந்திசைச் செந்தமிழ்த்தொடைபாடி,
மிக்ககோயில்கள் பிறவுடன்றொழுதுபோய் மீயச்சூர்பணிந்தேத்திப்,
பக்கம்பாரிடம் பரவநின்றாடுவார் பாம்புரநகர்சேர்ந்தார்.

(இ-ள்.) தக்க அந்தணர்மேவும் அப்பதிதனில்=ஒழுக்கநெறியில் வழுவுதலில்லாத மறையவர்கள் வசிக்கும் அத்திருப்பதியின்கண்; தான்றோன்றி மாடத்துச் செக்கர்வார்சடை அண்ணலைப் பணிந்திசைச்செந்தமிழ்த்தொடை பாடி=தான்றோன்றிமாடத்தில் எழுந்தருளிய சிவந்த நீண்ட சடைமுடியை யுடைய சிவபிரானைவணங்கி இசையோடுகூடிய செந்தமிழ்த்திருப்பதிகத்தைப்பாடி; மிக்ககோயில்கள்பிறவுடன்தொழுதுபோய்=மேம்பட்ட மற்றத் திருக்கோயில்களையும் அங்கங்கு வணங்கிச்சென்று; மீயச்சூர்பணிந்தேத்தி= மீயச்சூர் என்னுந்திருப்பதியையும் வணங்கித்துதித்து; பக்கம் பாரிடம்பரவ நின்றாடுவார் பாம்புரநகர்சேர்ந்தார்=தமது இருமருங்கிலும் பூதகணங்கள் போற்ற நின்றாடியருளும் பாம்புரநாதரது திருப்பாம்புரமென்னுந் திருப்பதியை யடைந்தருளினார்—எ-று. (௩௱௭)

திருஆக்கூர்-தான்தோன்றிமாடம் - பண்-சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

அக்கிருந்த வாரமு மாடரவு மாமையுந்
தொக்கிருந்த மார்பினான் றோலுடையான் வெண்ணீற்றான்
புக்கிருந்த தொல்கோயில் பொய்யிலா மெய்ந்நெறிக்கே
தக்கிருந்தா ராக்கூரிற் றான்றோன்றி மாடமே.

Koviloor Digital Library

ஆட லமர்ந்தானை யாக்கூரிற் றான்றோன்றி
மாட மமர்ந்தானை மாடஞ்சேர் தண்காழி
நாடற் கரியசீர் ஞானசம் பந்தன் சொற்
பாட லிவைவல்லார்க் கில்லையாம் பாவமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-சுயம்புநாதர். தேவியார்-கட்கநேத்திரதேவி.

திருமியச்சூர் - பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

காயச்செவ்விக் காமர்க்காய்ந்து கங்கையைப்
பாயப்படர்புன் சடையிற்பரித்த பரமேட்டி
மாயச்சூரன் றறுத்தமைந்தன் றாதைதன்
மீயச்சூரே தொழுதுவினையை வீட்டும்மே.

வேடமுடைய பெருமானுறையு மியச்சூர்
நாடும்புகழார் புகலிஞான சம்பந்தன்
பாடலாய தமிழீரைந்து மொழிந்துள்கி
யாடுமடியா ரகல்வானுலக மடைவாரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-முயற்சிநாயகர். தேவியார்-சுந்தரநாயகியம்மை.

பாம்புரத்துறை பரமனைப்பணிந்துநற் பதிகவின்னிசைபாடி
வாம்புனற்சடை முடியினார்மகிழ்விட மற்றுமுள்ளனபோற்றிக்
காம்பினிற்றிகழ் கரும்பொடுசெந்நெலின் கழனியம்பணைநீங்கித்
தேம்பொழிற்றிரு விழிமாமிழலையின் மருங்குறச்செல்கின்றார்.

(இ-ள்.) பாம்புரத்துறை பரமனைப்பணிந்து நற்பதிக இன்னிசைபாடி= திருப்பாம்புரத்தில் எழுந்தருளிய பெருமானாரை வணங்கி நல்ல திருப்பதிகத்தை இனிய இசையோடுபாடியருளி; வாம்புனற்சடைமுடியினார் மகிழ் விடம் மற்றும் உள்ளனபோற்றி=கங்காநதி பெருக்கெடுக்கும் சடைமுடியையுடைய சிவபெருமானார் மகிழ்கூர்ந்தருளும் மற்றுமுள்ள திருப்பதிகளையுந் துதித்து; காம்பினிற்றிகழ்கரும்பொடு செந்நெலின்கழனியம்பணை நீங்கி=மூங்கில்போல விளங்கும் கரும்புகளோடும் செந்நெற்பயிர்கள்நிறைந்த வயல்களையுடைய மருதநிலத்தைக் கடந்தருளி; தேம்பொழிற்றிருவிழி மாமிழலையின் மருங்குறச்செல்கின்றார்=தேன்நிறைந்தசோலைகள்சூழ்ந்தபெருமையையுடைய திருவீழிமிழலையின்பக்கத்தில் பொருந்தச்செல்கின்றவராயினார்—எ-று. ()

Koviloor Digital Library

திருப்பாம்புரம் - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

சீரணி திகழ்திரு மார்பில்வெண் ணூலர் திரிபுரமெரிசெய்தசெல்வர், வாரணி வனமுலை மங்கையோர் பங்கர் மான்மறி யேந்திய மைந்தர், காரணிமணிதிகழ் மிடறுடை யண்ணல் கண்ணுதல் விண்ணவரேத்தும், பாரணி திகழ்தரு நான்மறை யாளர் பாம்புர நன்னகராரே.

பார்மலிந் தோங்கிப் பருமதிள் சூழ்ந்த பாம்புர நன்னக ராரைக், கார்மலிந் தழகார் கழனிசூழ் மாடக் கழுமல மூதுபதிக் கவுணி, நார்மலிந் தோங்கு நான்மறை ஞான சம்பந்தன் செந்தமிழ் வல்லார், சீர்மலிந் தழகார் செல்வம தோங்கிச் சிவனடி நண்ணுவர் தாமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - பாம்புரேசர்.

தேவியார் - வண்டமர்பூங்குழல்நாயகியம்மை.

வேறு.

அப்பொழுதி லாண்ட வரசை யெதிர்கொண்ட
மெய்ப்பெருமை யந்தணர்கள் வெங்குருவாழ் வேந்தனார்
பிற்படவந் தெய்தும் பெரும்பேறு கேட்டுவப்பா
ரெப்பரிசி னால்வந் தணைந்தங் கெதிர்கொண்டார்.

(இ-ள்.) அப்பொழுதிலாண்ட அரசை எதிர்கொண்ட மெய்ப்பெருமை யந்தணர்கள்=அக்காலத்தில் ஆண்ட அரசை எதிர்கொண்ட உண்மையையும் பெருமையையும் உடையதிருவிழிமிழலை மறையவர்கள்; வெங்குருவாழ் வேந்தனார் பிற்படவந்து எய்தும் பெரும்பேறுகேட்டு உவப்பார்=சீகாழியில் வாழும் மறையவர்தலைவராகிய ஆளுடையபிள்ளையார் பின்னால்வந்து அடையும் பெரும்பயனைக் கேட்டு மகிழ்பவராய்; எப்பரிசினால் வந்தணைந்தங்கு எதிர்கொண்டார் = எச்சிறப்போடுவந்து அடைந்து அவ்விடத்தில் எதிர்கொண்டாரெனில்—எ-று. (௫௬௧)

நிறைகுடந் தூபதீப நீட நிரைத்தேந்தி
நறைமலர்ப் பொற்சுண்ண நறும்பொரி யுந்தூவி
மறையொலி போய்வா னளப்பமா முரசமார்ப்ப
விறைவர்திரு மைந்தர்தமை யெதிர்கொள்வர வேற்றார்.

(இ-ள்.) நிறைகுடம் தீபதூபம் நீடநிரைத்தேந்தி=பூரணகும்பங்களும் தூபதீபங்களும் எங்கும் நெருங்க வரிசைப்பட ஏந்தி; நறைமலர்ப்பொற்

Koviloor Digital Library

கன்னம் கரும்பொரிப் தூவி=தேன் நிறைந்தமலர்களோடு பொன்னிற முடைய கன்னத்தையும் நல்ல நெற்பொரியையும் எங்கும் தூவி; மறையொலிபோய்வான் அளப்ப மாமுரசமார்ப்ப=வேதவொலிபோய் விண்ணுலகத்தை அளக்கவும் பெரிய முரசங்கள் ஒலிக்கவும்; இறைவர் திருமைந்தர் தமை எதிர்கொள் வர வேற்றார்=சிவ பிரானாது திருமகனாராகிய ஆளுடைய பிள்ளையாரை எதிர்கொண்டு அவரதவரவை அவ்வாறு ஏற்றுக்கொண்டார்—எறு.

வந்து திருவீழி மிழலை மறைவல்ல
வந்தணர்கள் போற்றிசைப்பத் தாமு மணி முத்தின்
சந்த மணிச் சிவிகைநின் றிழிந்து தாழ்ந் தருளி
யுய்ந்த மறை யோர்தம் முடனணைந்தங் குள் புகுவார்.

(இ-ள்.) வந்த திருவீழிமிழலை மறைவல்ல அந்தணர்கள் போற்றிசைப்ப=எதிர்கொண்டுவந்த திருவீழிமிழலையில் வசிக்கும் வேதங்களில்வல்ல மறையவர்கள் துதிக்க; தாமும் அணிமுத்தின் சந்தமணிச்சிவிகை நின்றிழிந்து தாழ்ந்தருளி=ஆளுடையபிள்ளையாரும் முத்தாலாகிய அழகிய திருச்சிவிகையினின்றும் இறங்கிப்பணிந்தருளி; உய்ந்த மறையோர் தம்முடன் அணைந்து அங்கு உள்புகுவார்="பிள்ளையார் வரவால்" பெரும்பேறடைந்த அவ்வந்தணரோடு அடைந்து அத்திருப்பதியுட் செல்வாராயினர்—எ-று. (௩௪௪)

அப்போ தணையார் விரிகோ வணவாடை
பொப்போ தரும்பதிகத் தோங்கு மிசைபாடி
மெய்ப்போதப் போதமர்ந்தார் தங்கோயில் மேவினார்
கைப்போது சென்னியின்மேற் கொண்டு கவுணியனார்.

(இ-ள்.) கவுணியனார் அப்போது அணையார் விரிகோவண ஆடை=ஆளுடையபிள்ளையார் அக்காலையில் "அணையார்விரிகோவணவாடை" என்னும் முதலையுடைய; ஒப்போதரும் பதிகத்து ஓங்கும் இசைபாடி=ஒப்பிலாத திருப்பதிகத்தில் மிக்க இசையைப்பாடி; கைப்போதுசென்னியின் மேற்கொண்டு=கரகமலங்களை உச்சியின்மேற் குவித்துக்கொண்டு; மெய்ப்போதப்போதமர்ந்தார்தங்கோயில் மேவினார்=உண்மை ஞானத்தையுடைய அடியாரது இதயதாமரையில் எழுந்தருளியிருக்கிறவரது திருக்கோயிலை யடைந்தருளினார்—எ-று. (௩௪௫)

திருவீழிமிழலை - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

அணையார் விரி கோவண வாடை
நணையார் விடை யூர்தி நயந்தான்
வினையார் பொழில் வீழி மிழலை
யுனையா துணராவா ருயர்வாரே.

Koviloor Digital Library

நளிர்காழியுண் ஞானசம் பந்தன்
குளிரார்சடை யானடி கூற
மிளிரார்பொழில் வீழிம் மிழலை
கிளர்பாடல்வல் லார்க்கில்லை கேடே.

திருச்சிற்றம்பலம்.

நாவின் றனிமன்னர் தாமுமுட னண்ண
மேவிய விண்ணிழிந்த கோயில் வலங்கொள்வார்
பூவியலு முந்தியான் போற்றப் புவிக்கிழிந்த
தேவியலு மெய்கண்டு சிந்தை வியப் பெய்தினர்.

(இ-ள்.) நாவின்தனிமன்னர் தாமும் உடன் நண்ண=ஒப்பற்ற ஆண்டவரசும் தம்மோடு எழுந்தருள; மேவிய விண்ணிழிந்தகோயில் வலங்கொள்வார்=அங்குள்ள விண்ணுலகினின்றும் இழிந்த திருக்கோயிலைப் பிரதட்சணம் செய்தருளிய பிள்ளையார்; பூவியலும் உந்தியான்போற்றப் புவிக்கிழிந்த=தாமரைபோலவிளங்கும் உந்தியையுடைய திருமால் வணங்க நில உலகில் இறங்கிய; தேவியலு மெய்கண்டு சிந்தைவியப்பெய்தினர்=தெய்வத்தன்மை பொருந்திய (அத்திருவிமானத்தின்) திரு உருவத்தைக்கண்டு தமது இதையத்தில் அதிசயமடைந்தருளினர்—எ-று. (௫௪௫)

வலங்கொண்டு புக்கெதிரே வான நதியின்
சலங்கொண்ட வேணித் தனிமுதலைத் தாழ்ந்து
நிலங்கொண்ட மேனியராய் நீடுபெருங் காதல்
புலங்கொண்ட சிந்தையினற் பொங்கியிசை மீப்பொழிந்தார்.

(இ-ள்.) வலங்கொண்டு புக்கு எதிரேவானநதியின் சலங்கொண்ட வேணித்தனிமுதலைத் தாழ்ந்து=பிரதட்சணஞ்செய்து திருக்கோயிலுட்புகுந்து திருமுன்னின்று கங்கைநீர் நிறைந்த சடாமகுடத்தையுடைய ஒப்பற்ற பெருமானைப்பணிந்து; நிலங்கொண்டமேனியராய் நீடுபெருங்காதல் புலங்கொண்ட சிந்தையினற்பொங்கி இசைமீப்பொழிந்தார்=பூமியிற்றோய்ந்த திருமேனியராய்த் தலைக்கொண்ட பெருவிருப்பு இடமாகக்கொண்ட திருவுள்ளத்தோடு இசைமேம்படப் பாடியருளினர்—எ-று.

பொங்கவென்னும் செயவெனெச்சம் பொங்கி எனத்திரிந்துநின்றது. ()

போற்றிச் சடையார் புனலுடையா னென்றெடுத்துச்
சாற்றிப் பதிகத் தமிழ்மாலை சந்தவிசை
யாற்ற மிகப்பாடி யானந்த வெள்ளத்தி
னீற்றழகர் சேவடிக்கீழ் நின்றலைந்து நீடினர்.

Koviloor Digital Library

(இ-ள்.) போற்றிச்சடையார் புனலுடையான் என்றெடுத்து=துதித்துச்சடையார் புனலுடையானென முதலெடுத்து; பதிகத்தமிழ்மாலை சாற்றி=தமிழாலாய திருப்பதிகமாலையைப் பாடியருளி; சந்த இசை ஆற்றிமிகப்பாடி=அப்பதிகத்திற்கமைந்தபண்ணை இசைபெருகமிகவும்பாடி; நீற்றழகர் சேவடிக்கீழ் நின்று ஆனந்தவெள்ளத்தில் அலைந்து நீடினார்=திருநீற்றின்கோலத்தையுடைய வீழி அழகரது திருவடியின் கீழ்நிலைபெற்று ஆனந்தவெள்ளத்தில் அலைந்துமேம்பட்டார்—எ-று. (௫௪௫)

திருவீழிமிழலை - பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

சடையார்புன லுடையானொரு சரிகோவண முடையான்
படையார்மழு வுடையான்பல பூதப்படை யுடையான்
மடமான்விழி யுமைமாதிட முடையானெனை யுடையான்
விடையார்கொடி யுடையானிடம் வீழிம்மிழ லையே.

வீழிம்மிழ லைமேவிய விகிர்தன்றனை விரைசேர்
காழிந்நகர்க் கலைஞானசம் பந்தன்றமிழ் பத்தும்
யாழின்னிசை வல்லார்சொலக் கேட்டா ரவரெல்லா
மூழின்வலி வினைபோயிட வுயர்வானடை வாரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-வீழியழகர். தேவியார் - சுந்தரகுசாம்பிகை.

நீடியபே ரன்புருகி யுள்ளலைப்ப நேர்நின்று
பாடி யெதிராடிப் பரவிப் பணிந்தெழுந்தே
யாடிய சேவடிக ளார்வமுற வுட்கொண்டு
மாடுயர் கோயிற் புறத்தரிது வந்தணைந்தார்.

(இ-ள்.) நீடியபேரன்புருகியுள்ளலைப்ப=மேம்பட்டபேரன்பானது தமது உள்ளத்தை உருகச்செய்து அலையச்செய்ய; நேர்நின்றுபாடி யெதிராடிப் பரவிப்பணிந்தெழுந்து=திருமுன் நின்றுபாடி எதிரே ஆனந்தக்கூத்தாடித் துதித்து வணங்கி எழுந்து; ஆடிய சேவடிகளார்வ முறவுட்கொண்டு=கனகசபையின்கண் ஆடியருளும்சிவந்ததிருவடிகளை அன்புகூரத்திருவுள்ளத்தில்பதித்து; உயர்கோயில்மாடுபுறத்து அரிதுவந்தணைந்தார்=உயர்ந்ததிருக்கோயிலின் பக்கத்துள்ள திருவாயிலின்புறம்பே அரிதாகவந்தணைந்தருளினார்—எ-று.

வந்தணைந்து வாழ்ந்து மதிற்புறத்தோர் மாமடத்துச்
செந்தமிழ்ச்சொல் வேந்தருஞ் செய்தவருஞ் சேர்ந்தருளச்
சந்தமணிக் கோபுரத்துச் சார்ந்துவட பாற்சண்பை
யந்தணர்கு லாமணியா ராங்கோர் மடத்தமர்ந்தார்.

Koviloor Digital Library

(இ-ள்.) வந்தணைந்து வாழ்ந்து=திருக்கோயிலின் புறம்புவந்தடைந் தருளி மகிழ்கூர்ந்து; மதிற்புறத்தோர்மாமடத்துச்செந்தமிழ்ச்சொல் வேந்தருஞ்செய்தவருஞ் சேர்ந்தருள=திருமதிலின்பக்கத்திலுள்ள ஒரு பெரியதிருமடத்தில் திருநாவுக்கரசு நாயனாரும் அவருடன்சேர்ந்த திருக்கூட்டங்களும் அடைந்தருள; சண்பை அந்தணர் சூளாமணியார் வடபாற் சந்தமணிக்கோபுரத்துட் சார்ந்து ஆங்கோர் மடத்தமர்ந்தார்=சீகாழியின்கணுள்ள மறையவர் தலைவராகிய ஆளுடையபிள்ளையார் வடக்கின்கணுள்ள அழகியமணிமயமான கோபுரத்துட் புகுந்து அங்குள்ள ஓர்திருமடத்தில் எழுந்தருளி இருந்தார்—எ-று. (௫௪௭)

அங்க ணமர்வா ரரனா ரடியிணைக்கீழ்த்
தங்கிய காதலினாற் காலங்க டப்பாமே
பொங்கு புகழ்வாகீ சருங்கூடப் போற்றிசைத்தே
யெங்கு மிடர்தீர்ப்பா ரின்புற் றமர்கின்றார்.

(இ-ள்.) அங்கணமர்வாரரனா ரடியிணைக்கீழ்=அவ்விடத்து எழுந்தருளி இருக்கும் ஆளுடைய பிள்ளையார்வீழி யழகரது திருவடி இணைக்கீழ்; தங்கிய காதலினாற் காலங்கள் தப்பாமே=பொருந்திய பெருவிருப்போடு மூன்று காலங்களும் வழுவாமல்; பொங்குபுகழ் வாகீசரும் கூடப்போற்றிசைத்து= மிக்க புகழையுடைய வாகீசமுனிவரும் உடன்வரப்பதிகம்பாடி; எங்குமிடர் தீர்ப்பார் இன்புற்றமர்கின்றார்=எவ்விடத்தும் உள்ளதுன்பத்தை நீக்கியருள்பவராய், மகிழ்கூர்ந்து இருந்தருளுவாராயினர்—எ-று. (௫௪௮)

ஓங்கு புனற்பேணு பெருந்துறையு முள்ளிட்ட
பாங்கார் திலதைப் பதிமுற்ற மும்பணிந்து
வீங்கொலி நீர்வீழி மிழலையினின் மீண்டுமணைந்
தாங்கினிது கும்பிட் டமர்ந்தொழுகு மந்நாளில்.

(இ-ள்.) ஓங்கு புனற்பேணுபெருந்துறையும்=மிக்கபுனல்சூழ்ந்த திருப்பேணு பெருந்துறையும்; உள்ளிட்ட பாங்கார்திலதைப் பதிமுற்றமும்பணிந்து=அதனுள் அடங்கிய திலதைப்பதியின் திருமுற்றத்தையும் வணங்கி; வீங்கொலிநீர்வீழிமிழலையினில்மீண்டும் அணைந்து=மிக்க ஒலியையுடைய நீர் சூழ்ந்த திருவீழிமிழலையில் மீளவும் அடைந்து; ஆங்கு இனிது கும்பிட்டமர்ந்தொழுகும் அந்நாளில்—அத்திருப்பதியில் சிவபிரானை மகிழ்கூர்ந்து வணங்கி விரும்பி வழிப்பட்டு ஒழுகும் அக்காலையில்—எ-று. (௫௪௯)

வேறு.

சேணுயர்மாடப் புகலியுள்ளார் திருஞானசம்பந்தப் பிள்ளையாரைக், காணும்விருப்பிற் பெருகுமாசை கைமிகுகாதல் கரையிகப்பப், பூணுமனத்தொடு தோணிமேவும் பொருவிடையார்மலர்ப்பாதம்போற்றி, வேணுபுரத்தை யகன்றுபோந்து வீழிமிழலையுள் வந்தணைந்தார்.

Koviloor Digital Library

(இ-ள்.) சேணுயர்மாடப்புகலியுள்ளார்=விண்ணுலகளவு முயர்ந்த மாடங்களையுடைய சிறந்த சீகாழியிலுள்ள அந்தணர்கள்; திருஞானசம்பந்தப்பிள்ளையாரைக் காணும் விருப்பில் பெருகுமாசை மைமிகுகாதல்களை இகப்ப=திருஞான சம்பந்தப்பிள்ளையாரைக்காணும் அன்பால்பெருகும் ஆசையாகிய பெருவிருப்பு களைகடந்துவளர; பூணுமனத்தொடு தோணிமேவும் பொருவிடையார் மலர்ப்பாதம் போற்றி=அவ்விருப்புமேற்கொண்ட மனதோடு. திருத்தோணியிலெழுந்தருளிய போர்செய்யும் இடபவாகனத்தை யுடையாரது தாமரைமலர்போன்ற திருவடிகளைவணங்கி; வேணுபுரத்தை யகன்று போந்தமிழிமிழலையுள் வந்து அணைந்தார்=சீகாழியின் நின்று நீங்கிவந்து திருவீழிமிழலையுள்வந்து அடைந்தார்கள்—எ-று.

மைமிகல் ஒரு சொன்னீர்மைத்து. (௫௫௰)

ஊழிமுடிவி லுயர்ந்தவெள்ளத் தோங்கியகாழி யுயர்பதியில், வாழிமறையவர் தாங்களெல்லாம் வந்துமருங்கணைந் தார்களென்ன, வீழிமிழலையுள் வேதியர்கள் கேட்டுமெய்ஞ்ஞானமுண்டாரைமுன்னு, வேழிசை சூழ்மறையோரையெய்தி யெதிர்கொண் முறைமையிற் கொண்டுபுக்கார்.

(இ-ள்.) ஊழிமுடிவிலுயர்ந்த வெள்ளத்தோங்கிய காழியுயர்பதியில்=உகமுடிவில் பொங்கி யெழுந்த சலப்பிரளயத்தில் அழியாது நிலைபெற்ற சீகாழி என்னும் உயர்ந்த திருப்பதியில்; வாழிமறையவர்கள் தாங்கள் எல்லாம்மெய்ஞ்ஞானமுண்டாரை முன்னுவந்து மருங்கு அணைந்தார்கள் என்ன=வாழ்வையுடைய வேதியர்களெல்லாம் மெய்ஞ்ஞானப்பாலை யுண்டருளிய பிள்ளையாரைக் கருதிவந்து திருவீழிமிழலையின் பக்கத்தடைந்தார்கள் என்று; வீழிமிழலையுள் வேதியர்கள்கேட்டு=திருவீழிமிழலையில்வாழும் அந்தணர்கள் கேள்விப்பட்டு; ஏழிசைசூழ் மறையோரை எய்தி எதிர்கொள் முறைமையிற் கொண்டுபுக்கார்=குரல்முதலிய ஏழிசைகளும் நிறைந்த அவ்வந்தணரை யடைந்து எதிர்கொள்ளுமுறைமையால் எதிர்கொண்டு திருப்பதியுட்கொண்டு சென்றார்கள்—எ-று.

ஊழி-ஆயிரம்சதுர்யுகம் கொண்ட பிரமனது ஓர்நாள். (௫௫௧)

சண்பைத்திருமறை யோர்களெல்லாந் தம்பிரானாரைப் பணிந்துபோந்து, நண்பிற்பெருகிய காதல்கூர்ந்து ஞானசம்பந்தர் மடத்தினெய்திப், பண்பிற்பெருகுங் கழுமலத்தார் பிள்ளையார்பாதம் பணிந்துபூண்டே, பெண்பெற்றதோணி புரத்திலெம்மோ டெழுந்தருளப் பெற வேண்டுமென்றார்.

(இ-ள்.) சண்பைத்திரு மறையோர்களெல்லாம்=சீகாழியில் வாழும் அந்தணர்கள் எல்லோரும்; தம்பிரானாரைப் பணிந்துபோந்து=திருவீழிமிழலையில் எழுந்தருளிய வீழியழகரைவணங்கிச்சென்று; நண்பிற்பெருகிய காதல்

Koviloor Digital Library

கூர்ந்து ஞானசம்பந்தர் மடத்தினெய்தி=நண்பின்மிக்க விருப்பமிகுந்து திருஞானசம்பந்தப்பிள்ளையார் திருமடத்தை யடைந்து ; பண்பிற்பெருகும் கழுமலத்தார்=குணத்தில்மேம்பட்ட சீகாழியிலுள்ள அந்தணர்கள் ; பிள்ளையார் பாதம்பணிந்துபூண்டு=ஆளுடையபிள்ளையார் திருவடிகளை வணங்கி அவ்வழிப்பாட்டில் ஒருப்பட்டுநின்று; எண்பெற்றதோணிபுரத்தில் எம்மோடு எழுந்தருளப்பெறவேண்டுமென்றார் = மேன்மைபொருந்திய சீகாழியில் எம்மோடு பிள்ளையார் எழுந்தருளும் பேற்றை யாம் பெறவேண்டுமென்று பிரார்த்தித்தனர்—எ-று. (௫௫௨)

என்றவர்விண்ணப்பஞ் செய்தபோதி லீறில்சிவஞானப் பிள்ளையாரு, நன்றிதுசாலவுந் தோணிமேவு நாதர்கழலிணை நாமிறைஞ்ச, வின்றுகழித்து மிழலைமேவு மிறைவாருள்பெற்றுப் போவதென்றே, யன்றுபுகலி யருமறையோர்க் கருள்செய்தவர்க்கு முகமளித்தார்.

(இ-ள்.) என்று அவர் விண்ணப்பஞ்செய்தபோதில்=என்று அம்மறையவர்கள் விண்ணப்பஞ்செய்தகாலத்தில் ; ஈறில் சிவஞானப்பிள்ளையாரும்= முடிவில்லாத சிவஞானத்தையுடைய ஆளுடைய பிள்ளையாரும் ; இது சாலவுநன்று=இது மிகவும் நன்காம் ; தோணிமேவும் நாதர்கழலிணை நாம் இறைஞ்ச=திருத்தோணியி லெழுந்தருளிய பெருமானார் திருவடிகளை நாம் வணங்க; மிழலைமேவும் இறைவர் அருள்பெற்று இன்றுகழித்துப்போவதென்று= திருவீழிமிழலையில் எழுந்தருளிய பெருமானார் திருவருள்பெற்று நாளைச்செல்வதென்று ; அன்றுபுகலி யருமறையோர்க்கு அருள்செய்து அவர்க்கு முகமளித்தார் = அற்றைநாளில் சீகாழியிலிருந்துவந்த அரிய அந்தணர்களுக்கு அருளிச்செய்து அவர்களுக்கு முகமன்கூறியருளினார்—எ-று. (௫௫௩)

மேற்பட்டவந்தணர் சண்பைமேவும் வேதியர்க்காய விருந்தளிப்பப், பாற்பட்டசிந்தைய ராய்மகிழ்ந்து பரம்பொருளானார் தமைப்பரவுஞ், சீர்ப்பட்டவெல்லை யினிதுசெல்லத் திருத்தோணிமேவிய செல்வர்தாமே, கார்ப்பட்டவண்கைக் கவுணியர்க்குக் கனவிடை முன்னின் றருள்செய்கின்றார்.

(இ-ள்.) மேற்பட்ட அந்தணர்=மேன்மைபொருந்திய திருவீழி மிழலையிலிருக்கின்ற மறையவர்கள் ; சண்பைமேவு வேதியர்க்கு ஆயவிருந்து அளிப்ப=அந்தச்சீகாழி மறையவர்கட்கு தக்கவிருந்துசெய்ய; பாற்பட்டசிந்தையராய்மகிழ்ந்து=பிள்ளையார் அருள்வழிப்பட்ட சிந்தையை யுடையரா யவ்வந்தணர் மகிழ்கூர்ந்து ; பரம்பொருளானார் தமைப்பரவுஞ் சீர்ப்பட்டவெல்லை யினிதுசெல்ல=பரம்பொருளாகிய வீழிநாதனைப்பிள்ளையார் துதிக்கும் சிறந்தகால அளவைக் கருதி அங்கு தாம் இருக்குமிடத்திற்கு இனிதாகச்செல்ல ; திருத்தோணிமேவிய செல்வர்தாமே=திருத்தோணியிலெழுந்தருளிய பெருமானே ; கார்ப்பட்ட வண்கைக்கவுணியர்க்குக்கனவிடைமுன்னின்று அருள்

Koviloor Digital Library

செய்கின்றார்=மேகத்தையொத்த வண்மைபொருந்திய திருக்கரத்தையுடைய அருளுடையபிள்ளையார்க்குக் கனவின்கண் முன்னின்று அருள்செய்கின்றாரா யினார்—எ-று. (௫௨௪)

தோணியினமங் கிருந்தவண்ணந் தூமறைவீழி மிழலைதன்னுட், சேணுயர்விண்ணினி னிழிந்தவிந்தச் சீர்கொள்விமானந்துக் காட்டுகி ன்றோம், பேணும்படியா லறிதியென்று பெயர்ந்தருள்செய்யப் பெரு ந்தவங்கள், வேணுபுரத்தவர் செய்யவந்தார் விரவும்புளகத் தொடுமு ணர்ந்தார்.

(இ-ள்.) தோணியில்நாம் அங்கிருந்தவண்ணம்=திருத்தோணியில் நாம் அங்கெழுந்தருளியிருந்தவண்ணத்தை; தூமறைவீழிமிழலைதன்னுள்=பரிசுத்த மாகிய வேதங்கள்வாழும் திருவீழி மிழலையின்கண்; சேணுயர் விண்ணின்றி ழிந்த இந்தச்சீர்கொள் விமானத்துக்காட்டுகின்றோம்=மிகவும் உயர்ந்த விண் ணினின்றும் இழிந்த இந்த சிறப்பமைந்த விமானத்தான் தரிசனங்கொடுத்த ருள்கின்றோம்; பெயர்ந்து பேணும்படியால் அறிதியென்று அருள்செய்ய= அங்குசென்று வழிபடும் முறைமையால் அறிவாயாகவென்று அருளிச்செய் ய; பெருந்தவங்கள் வேணுபுரத்தவர்செய்யவந்தார் விரவும் புளகத்தொடு மு ணர்ந்தார்=பெரிய தவங்களை சீகாழியிலுள்ள மறையவர்கள் செய்ய அவ தரித்த பிள்ளையார் திருமேனியில் எங்கும் பொடித்த ரோமாஞ்சிதத்தோடு அ க்கனவுணர்வை நனவுணர்வில் அறிந்தருளினார்—எ-று. (௫௨௫)

அறிவுற்றசிந்தைய ராயெழுந்தே யதிசயித்துச்சிமே லங்கைகூ ப்பி, வெறியுற்றகொன்றையி னார்மகிழ்ந்த விண்ணிழிகோயிலிற் செ ன்றுபுக்கு, மறியுற்றகையரைத் தோணிமேன்முன் வணங்கும்படியங் குக் கண்டுவாழ்ந்து, குறியிற்பெருகுந் திருப்பதிகங் குலவியகொள் கையிற் பாடுகின்றார்.

(இ-ள்.) அறிவுற்றசிந்தையராய் எழுந்து=சாக்கிராவத்தையி லுணர்ந் தருளிய திருவுள்ளத்தை யுடையவராய்த் துயிலுணர்ந்து; அதிசயித் துச்சி மேலங் கைகூப்பி=அதிசயமடைந்து உச்சியின்மேல் அழகிய திருக்கரங்களை க்குவித்து; வெறியுற்றகொன்றையினார் மகிழ்ந்த விண்ணிழிகோயிலிற் சென் று புக்கு=வாசனைபொருந்திய கொன்றைமாலையை யணிந்த வீழியழகர் மகி ழ்ந்தருளிய விண்ணிழிந்த கோயிலின்கண் சென்று புகுந்து; மறியுற்றகைய ரைத் தோணிமேல் முன்வணங்கும்படி யங்குக்கண்டு வாழ்ந்து = மான்கன் றை ஏந்திய திருக்கரத்தையுடைய பெருமானாரைத் திருத்தோணிமேல் முன் வணங்குமாறுபோல அத்திருக்கோயிலிற்கண்டு வணங்கிவாழ்ந்து; குறியிற் பெருகும் திருப்பதிகம் குலவிய கொள்கையிற் பாடுகின்றார் = இங்குதரிசித்த குறிப்பால் சுவைமிக்க திருப்பதிகத்தை இசையோடுபொருந்திய கொள்கை யில் பாடுகின்றாராயினார்—எ-று. (௫௨௬)

Koviloor Digital Library

மைம்மருபூங்குழ லென்றெடுத்து மாறில்பெருந்திருத் தோணி தன்மேற், கொம்மைமுலையினாள் கூடநீடு கோலங்குலவு மிழலைதன்னிற், செம்மைதருவிண் ணிழிந்தகோயிற் றிகழ்ந்தபடியிது வென்கொலென்று, மெய்ம்மை விளங்குந் திருப்பதிகம் பாடிமகிழ்ந்தனர் வேதவாயர்.

(இ-ள்.) மைம்மருபூங்குழல் என்று எடுத்து = "மைம்மருபூங்குழல்" என்று முதல் எடுத்து; மாறில்பெருந்திருத்தோணிதன்மேற் கொம்மை முலையினாள்கூட நீடுகோலம்=அழிவு இல்லாத திருத்தோணியின்கண் திரண்டதனங்களையுடைய பெரிய நாயகியாரோடுகூட வெழுந்தருளிய திருக்கோலம்; குலவுமிழலை தன்னில் செம்மை தருவிண்ணிழிந்த கோயிற்றிகழ்தபடி யிது என்கொல் என்று=விளங்குந் திருவீழிமிழலையில் சிறப்புமிக்க விண்ணிழிந்த திருக்கோயிலின்கண் காட்டியபடியாது காரணம் என்று; மெய்ம்மை விளங்குந் திருப்பதிகம் வேதவாயர்பாடி மகிழ்ந்தனர்=மெய்ப்பொருள் விளங்கும் திருப்பதிகத்தை வேதமலர்ந்த திருவாயையுடைய ஆளுடையபிள்ளையரர் பாடியருளி மகிழ் கூர்ந்தார்—எ-று. (௫௫௭)

ஸ்ரீபுகலியுந்-திருவீழிமிழலையும்-வினாவுரை-பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

மைம்மருபூங்குழற் கற்றைதுற்றவாணுதன்மான்விழிமங்கைபோடும், பொய்ம்மொழியாமறை யோர்களேத்தப் புகலிநிலாவிய புண்ணியனே, யெம்மிறையேயிமை யாதமுக்க ணீசவனேக்வி தென்கொல் சொல்லாய், மெய்ம்மொழிநான்மறை யோர்மிழலை விண்ணிழிகோயில் விரும்பியதே.

விண்ணிழிகோயில் விரும்பிமேவும் வித்தகமென்கொலி தென்று சொல்லிப், புண்ணியனைப்புக லிந்நிலாவு பூங்கொடியோடிருந் தானைப்போற்றி, நண்ணியகீர்த்தி நலங்கொள்கேள்வி நான்மறைஞானசம்பந்தன்சொன்ன, பண்ணியல்பாடல்வல் லார்களிந்தப் பாரொடுவிண் பரி பாலகரே.

திருச்சிற்றம்பலம்.

செஞ்சொன்மலர்ந்த திருப்பதிகம் பாடித்திருக்கடைக் காப்புச் சாத்தி, யஞ்சலிகூப்பி விழுந்தெழுவா ரானந்தவெள்ள மலையப்போந்து, மஞ்சிவர்சோலைப் புகலிமேவு மாமறையோர்தமை நோக்கி வாய்மை, நெஞ்சுநிறைந்த குறிப்பில்வந்த நீர்மைத்திறத்தைய ருள்செய்கின்றார்.

Koviloor Digital Library

(இ-ள்) செஞ்சொன் மலர்ந்த திருப்பதிகம்பாடி=செப்பமான சொற்கள்விளங்கித் தோன்றுகின்ற திருப்பதிகத்தைப்பாடி ; திருக்கடைக்காப்புச் சாத்தி=திருக்கடைக்காப்பையும்சாத்தியருளி; அஞ்சலிகூப்பிவிழுந்தெழுவார்=அஞ்சலியாகக்கையைக்குவித்துப் பணிந்து எழும் ஆளுடையபிள்ளையார் ; ஆனந்தவெள்ளம் அலையப்போந்து=பேரின்பவெள்ளம் எழுந்து அலைவிசச்சன்னிதியினின்றுஞ் சென்றருளி ; மஞ்சிவர் சோலைப்புகலிமேவும் மாமறையோர் தமைநோக்கி=மேகங்கள் தவழும் சோலைகள் சூழ்ந்த சீகாழியில் வசிக்கும் பெருமையையுடைய வேதியர்களைப் பார்த்தருளி; வாய்மை நெஞ்சினிறைந்தகுறிப்பில்வந்தசீர்மைத்திறத்தையருள்செய்கின்றார்= உண்மைநிறைந்த திருவுள்ளக்குறிப்பில் புலப்பட்ட அருளின்வரலாற்றை அருள் செய்வாராயினார்—எ-று. (௫௫௮)

பிரமபுரத்தி லமர்ந்தமுக்கட் பெரியபிரான்பெருமாட்டி.யோடும், விரவியதானங்க ளெங்குஞ்சென்று விரும்பியகோலம் பணிந்துபோற்றி, வருவதுமேற்கொண்ட காதல்கண்டங் கமர்ந்தவகையிங் களித்ததென்று, தெரிபவுரைத்தருள் செய்துநீங்கள் சிரபுரமாநகர் செல்லுமென்றார்.

(இ-ள்.) பிரமபுரத்திலமர்ந்த முக்கட்பெரியபிரான் பெருமாட்டியோடும்=சீகாழியிலெழுந்தருளிய மூன்றுகண்களையுடைய பெரிய பெருமானாரா கிய, தோணியப்பர் பெரிய நாயகியாரோடும்; விரவிய தானங்கள் எங்குஞ் சென்று விரும்பியகோலம் பணிந்துபோற்றி=எழுந்தருளிய பல திருப்பதிகள் எவ்விடத்துஞ்சென்று அங்கங்கு அவர்விரும்பிய திருக்கோலங்களையும் வணங்கித்துதித்து ; வருவதுமேற்கொண்ட காதல்கண்டு = வருதலைமேற்கொண்ட எனது விருப்பத்தைப் பார்த்தருளி; அங்கு அமர்ந்தவகை இங்கு அளித்ததென்று=அத்திருத்தோணியிலெழுந்தருளிய திருக்கோலத்தை இங்குகாட்டி யருளியதென்று ; தெரியவுரைத்தருள்செய்து நீங்கள் சிரபுரமா நகர் செல்லுமென்றார்=அவ்வந்தணர்க்கு அறியும்படிக்கூறி நீங்கள் சீகாழி என்னும் பெரியநகரை அடையுமென்று கூறி யருளினார்.—எ-று. (௫௫௯)

என்றுகவுணியப் பிள்ளையார்தா மியம்பப்பணிந் தருளேற்றுக் கொண்டே, யொன்றியகாதலி னுள்ளமங்க ணொழியவொருவா றகன்றுபோந்து, மன்றுணடம்புரிந் தார்மகிழ்ந்த தானம்பலவும் வணங்கிச் சென்று,நின்றபுகழத்தோணிவீடுவாணாப்பணியுநியதியராயுறைந்தார்.

(இ-ள்.) என்று கவுணியப் பிள்ளையார் தாம் இயம்ப=என்று ஆளுடையபிள்ளையார் திருவாய் மலர்ந்தருள ; பணிந்து அருள் ஏற்றுக்கொண்டு = சீகாழிமறையவர் வணங்கி அத்திருவருளை மேற்கொண்டு ; ஒன்றியகாதலின் உள்ளம் அங்கண் ஒழிய ஒருவாறகன்றுபோந்து=பிள்ளையாரினின்று நீங்காத

Koviloor Digital Library

காதலையுடைய தமது உள்ளம் அப்பிள்ளையாரிடத்துத் தங்கத்தாம் ஒருவாறு பிரிந்து சென்று; மன்றுள்நடம்புரிவார் மகிழ்ந்ததானம் பலவும் வணங்கிச்சென்று=கனகசபையில் ஆனந்த நடம்புரிந்தருளும் பெருமானார் மகிழ்ந்தருளிய திருப்பதிகள் பலவற்றையும் வணங்கிச்சீகாழியை யடைந்து; நின்றபுகழ்த் தோணிநிமேவாரைப்பணியும் நியதியராய் உறைந்தார்=கீர்த்தி நிலைபெற்ற தோணியப்பரை வணங்கும் நியமம் உடையவர்களாய் அம்மறையவர்கள் வசித்தார்கள்—எ-று. (௫௬௰)

சிரபுரத்தந்தணர் சென்றபின்னைத் திருவீழிமேவிய செல்வர்பாதம், பரவுதல்செய்து பணிந்துநாளும் பண்பின்வழாத்திருத் தொண்டர்சூழ, வுரவுத்தமிழ்த்தொடைமாலைசாத்தி யோங்கியநாவுக்கரசரோடும், விரவிப்பெருகிய நண்புகூர மேவியினிதங் குறையுநாளில்.

(இ-ள்.) சிரபுரத்து அந்தணர் சென்றபின்னை=சீகாழிமறையவர்போனபின்பு; திருவீழிமேவிய செல்வர் பாதம்பரவுதல் செய்து நாளும்பணிந்து=திருவீழியில் எழுந்தருளிய பெருமானார் திருவடிகளை வாழ்த்தி நாடோறும் வழுவாது வணங்கி; பண்பின்வழாத்திருத்தொண்டர்சூழ உரவுத் தமிழ்த் தொடைமாலை சாத்தி=பத்திநெறியில்நின்று வழுவாத அடியார் திருக்கூட்டம் சூழ்ந்துவர உணர்வுமிக்க திருப்பதிகமாலையைச்சாத்தி; ஓங்கிய நாவுக்கரசரோடும்=மேன்மை மிக்க திருநாவுக்கரசரோடும்; விரவிப்பெருகிய நண்புகூரமேவி யினிதங்குறையுநாளில் = கலந்துபெருகிய நண்புமிகும்படி பொருந்தி இனிதாக அத்திருப்பதியில் எழுந்தருளி இருக்கும் நாளில்—எ-று.

வேறு.

மண்ணின்மிசை வான்பொய்த்து நதிகடப்பி மன்னுயிர்கள் கண்சாம்பி யுணவுமாறி, விண்ணவர்க்குஞ் சிறப்பில்வரும் பூசையாற்று மிக்கபெரும் பசியுலகில் விரவக்கண்டு, பண்ணமரு மொழியுமையாண் முலையின்ஞானப் பாலறு வாயருட னரசும்பார்மேற், கண்ணுதலான் றிருநீற்றுச் சார்வினோர்க்குங் கவலைவரு மோவென்று கருத்திற்கொண்டார்.

(இ-ள்.) மண்ணின்மிசைவான் பொய்த்து நதிகள் தப்பி=நிலவுலகின்கண் மழைபெய்யாது வறந்து காவிரி முதலிய நதிகள் பெருகுங்காலத்தில் பெருகாது தவறி; மன்னுயிர்கள் கண்சாம்பி=நிலைபெற்ற உயிர்கள்பசியால் கண்சோர்ந்து; உணவுமாறி=உண்ணும் உணவு ஒழிந்து; விண்ணவர்க்குஞ் சிறப்பில் வரும்பூசையாற்று மிக்கபெரும்பசியுலகில் விரவக்கண்டு=தேவர்களுக்குஞ் சிறப்பாலாய திருவிழா முதலிய பூசைகள் செய்யாமல் அதிகரித்த பெரும்பசியானது உலகில் எங்கும் பரவப்பார்த்தருளி; பண்ணமருமொழியுமையாள் முலையில் ஞானப்பாலறுவாயருட னரசும் = இசைபொருந்திய

Koviloor Digital Library

சொல்லையுடைய பெரியநாயகியாரது திருமுலையிற்சுரந்த திருஞானப்பால் நீங்காத ஆளுடைய பிள்ளையாருடன் ஆண்ட அரசும்; பார்மேல் கண்ணுதலான் திருநீற்றுச்சார்வினோர்க்குங் கவலைவருமோ வென்று கருத்திற்கொண்டார்=நிலவுலகின்மேல் நெற்றிக்கண்ணையுடைய சிவபிரானது திருநீற்றின் நெறிநிற்கும் அடியார்க்கும் இப்பஞ்சத்தால் துன்பம் வருமோ வென்று திருவுள்ளத்திற்கருதினார்கள்—எ-று.

விண்ணவர்க்குஞ் சிறப்பில் வரும் பூசை நடவாமை "சிறப்பொடு பூசனை செல்லாதுவானம் வறக்குமேல்வானோர்க்கு மீண்டு" என்றுந்தேவர்குறளானு முணர்க. (௫௬௨)


வானாகி நிலனாகி யனலுமாகி மாருதமா யிருசுடராய் நீருமாகி, யூனாகி யுயிராகி யுணர்வுமாகி யுலகங்களனைத்துமா யுலகுக்கப்பா, லானாத வடிவாகி நின்றார்செய்ய வடிபரவி யன்றிரவு துயிலும்போது, கானாடுகங்காளர் மிழலைமூதூர் காதலித்தார் கனவிலணைந்தருளிச் செய்வார்.

(இ-ள்.) வானாகி நிலனாகி அனலுமாகி = ஆகாயமாகியும் மண்ணாகியும் நெருப்பாகியும்; மாருதமாயிருசுடராய் நீருமாகி=வாயுவாயும் சந்திர சூரியராயும் நீராயும்; ஊனாகி உயிராகி உணர்வுமாகி=உடலாகியும் உயிராகியும் உணர்வாகியும்; உலகங்களனைத்துமாய் = (இவ்வாறுநிற்கு முறைமையில் தத்துவமும் தாத்துவிகமும் ஆகிய) உலகனைத்தும்வியாபித்துக்கலந்துமேல்; உலகுக்கப்பால் ஆனாதவடிவாகிநின்றார்=தத்துவ தாத்துவிதங்களான உலகுக்கு அப்பால்பட்ட வியாபகசிற்ருபமாய்நின்ற சிவபெருமானாரது; செய்ய அடிபரவி அன்றிரவுதுயிலும்போது=சிவந்த திருவடிகளை வணங்கி அன்றிராதுயிலுங்காலத்தில்; கானாடுகங்காளர் மிழலைமூதூர்காதலித்தார் கனவிலணைந்தருளிச்செய்வார்=மாமசானத்தில் நிருத்தஞ்செய்தருளும் கங்காளத்தைத் தரித்த பழையதிருவீழிமிழலையை விரும்பியபெருமானார் அவர்களது சொற்பனத்தில் எழுந்தருளி அருளிச்செய்வாராயினார்—எ-று.

நிலன் நீர் நெருப்பு வாயு ஆகாயம் சந்திரன் சூரியன் உயிர் எட்டினுங் கலந்து அவ்வப்பெயரான் எட்டுமூர்த்தியாய் நிற்குமியல்புகூறுவார், உயிர்க்கிடனாய் உடம்பும் அதனோடுடனாய் உணர்வும் இயைபுபற்றி உடன்கூறினர். அட்டமூர்த்தமாய் நிற்கும் வடிவுகள் ஒன்றினொன்று வியாப்பியமாயும் வியாபகமாயும்நிற்கும் அதனால் அவைகளின்மிக்க வியாபக உண்மைதோன்ற அவற்றிற்கப்பா லானாதவடிவாகி என்றார். (௫௬௩)

உலகியல்பு நிகழ்ச்சியா லணைந்ததீயவுறுபசிநோயுமை யடையா தெனினும்பா, லிலகுசிவநெறிசார்ந்தோர் தம்மைவாட்ட நீக்குதற்கு நித்தமொரோர்காசுநீடு, மிலகுமணிப் பீடத்துக்குணக்குமேற்கும் யாமளித்தோ முமக்கிந்தக் காலந்தீர்ந்தால், அலகில்புக ழீர்தவிர்வ தாகுமென்றே யருள்புரிந்தார் திருவீழிமிழலையையர்.


Koviloor Digital Library



திருவீழிமிழலை.

திருஞானசம்பந்தசுவாமிகளும் திருநாவுக்கரசுசுவாமிகளும் திரு
வீழிமிழலை ஆலயத்தைத் தரிசிக்க வீழியழகர் பஞ்சம் நீங்குமளவும்
அடியார் திருவமுதுக்கு படிக்காசு தந்தருளுவோமென அசரீரியாகக்
கூறினர்.

Koviloor Digital Library



திருஞானசம்பந்தசுவாமிகளுக்கும் திருநாவுக்கரசுசுவாமிகளுக்கும் முறையே கிழக்கு மேற்கு கோபுரவாயிலின்கண் படிக்காசுகொடுத்தருள நமஸ்கரித்துப் பெற்றுக்கொண்டனர்.

௨௨

Koviloor Digital Library

(இ-ள்.) உலகு இயல்பு நிகழ்ச்சியால் அணைந்த தீய உறுபசிநோய் உமையடையாது எனினும்=உலகினியல்பின் நிகழ்ச்சியாகிய காலபேதத்தால் வந்த கொடியமிக்க பசிநோயானது உங்களையடையாதாயினும்; உம்பால் நிலவு சிவநெறிசார்ந்தோர் தம்மைவாட்டம் நீக்குதற்கு=உம்மிடத்தில் விளங்கிய சைவநெறியையடைந்த அடியாரை அந்தப் பசிநோயின் துயரத்தின் நீக்கும்பொருட்டு; நித்தம் ஓர் ஓர் காசு=நித்தம் ஒவ்வொரு பொற்காசு; குணக்கும்மேற்கும் நீடும் இலகுமணிபீடத்து யாமளித்தோம்=கிழக்கிலும் மேற்கிலும் நிலைபெற்றுவிளங்கும் மணிகளையுடைய பலிபீடத்தில் உங்களுக்கு யாம் கொடுத்தருளினோம்; இந்தக்காலம் தீர்ந்தால் அலகில்புகழீர் தவிர்வ தாகுமென்று=இப்பஞ்சகாலம் நீங்கினால் மிக்கபுகழையுடையவர்களே அக்காசு வையாது ஒழியுமென்று; திருவீழிமிழலை ஐயர் அருள்புரிந்தார்=திருவீழிமிழலையில் எழுந்தருளிய பெருமானார் அருளிச்செய்தார். எ—று. (௫௯௪)

தம்பிரா னருள்புரிந்து கனவினீங்கச் சண்பையா ரிளவேறு தாமுணர்ந்து, நம்பிரா னருளிருந்த வண்ணமென்றே நாவினிசை யரசரொடுங் கூடநண்ணி, வம்புலா மலரிதழி வீழிநாதர் மணிக்கோயில் வலஞ்செய்யப் புகுந்தவேலை, யம்பிகா பதியருளாற் பிள்ளையார்தா மபிமுகத்துப் பீடிகைமேற் காசுகண்டார்.

(இ-ள்.) தம்பிரான் கனவில் அருள்புரிந்து நீங்க=விழியழகர் கனவினிடத்து அவ்விருவர்க்கும் இவ்வாறு திருவருள்செய்து எழுந்தருளுங்கால்; சண்பையார் இளவேறு தாமுணர்ந்து=சீகாழியின்கண் உதித்த இளஞ்சிங்கம்போலும் பிள்ளையார் அக்கனவை உணர்ந்து; நம்பிரானருளிருந்த வண்ணமென்று நாவினிசை யரசரொடுங்கூட நண்ணி=நமது பெருமானார் திருவருள் இருந்தவாறு இவ்வாறென்று திருநாவுக்கரசரொடும்கூட ஆலயத்திற்கெழுந்தருளி; வம்புலாமலரிதழி வீழிநாதர் மணிக்கோயில் வலஞ்செய்யப் புகுந்த வேலை=வாசனைபொருந்திய கொன்றைமாலையையணிந்த வீழி அழகரது அழகிய திருக்கோயிலைப் பிரதட்சிணஞ்செய்யப் புகுங்காலத்தில்; அம்பிகாபதி யருளாற்பிள்ளையார் தாமபிமுகத்துப் பீடிகைமேற் காசுகண்டார்=உமாதேவிநாயகரான அவ்வீழியழகரது திருவருளினாலே ஆளுடையபிள்ளையார் கிழக்குப்பலிபீடத்தின்மேற் பொற்காசுகண்டருளினார். எ—று.

· ஆண்டவரசு மேற்குப்பீடத்திற் படிக்காசு கண்டெடுத்தாரென்பது அவர் புராணத்தாற் பெறுதலின் ஈண்டுக்காட்டாதொழிந்தார். (௫௯௫)

காதலொடுந் தொழுதெடுத்துக் கொண்டுநின்று கைகுவித்துப் பெருமகிழ்ச்சி கலந்துபொங்க, நாதர்விரும் படியார்க ளுணாளு நல்விருந்தா யுண்பதற்கு வருகவென்று, தீதில்பறை நிகழ்வித்துச் செ

Koviloor Digital Library

ன்றதொண்டர் திருவமுது கறிநெய்பா றயிரென்றின்ன, வேதமுறு
தினிதுண்ணவூட்டியங்க ணிருதிறத்துப் பெருந்தவரு மிருந்தநாளில்.

(இ-ள்.) காதலொடுந்தொழுது எடுத்துக்கொண்டு=விருப்புடன் அப்பொற்காசைவணங்கி எடுத்தக்கொண்டு; நின்று கைகுவித்துப் பெருமகிழ்ச்சி கலந்து பொங்க=திருமுன்னின்று உச்சியின்மேல் திருக்கரங்களைக்குவித்து மிக்க மகிழ்ச்சி திருவுள்ளத்திற்கலந்து மேம்பட; நாதர்விரும்படியார்கள் நாளும் நாளும் நல்விருந்தாய் உண்பதற்குவருகவென்று நீதில் பறை நிகழ்வித்து=சிவபெருமானுர் விரும்பிய திருவடியார்கள் நாடோறும் நல்ல விருந்தினராய் உண்ணும்பொருட்டு வரக்கடவீரென்று குற்றமற்ற பறையை எங்கும் சாற்றி; சென்றதொண்டர் திருவமுது கறி நெய் பால் தயிர் என்று இன்ன=அதுகேட்டுவந்த அடியார் திருக்கூட்டங்கள் திருவமுது கறிநெய் பால் தயிர் என்று சொல்லப்பட்ட இவைபோலும் உணவுகளை; ஏதம் உறுதினிதுண்ண ஊட்டி=குறைவுபடாமல் இனிதா உண்ணும்படி உண்பித்தருளி; அங்கணிருதிறத்துப் பெருந்தவரும் இருந்தநாளில்=அத்திருப்பதியில் ஆளுடைய பிள்ளையாரும் ஆண்டவரசும் ஆகிய இருவகைப்பெரிய தவத்தினர்களும் எழுந்தருளி இருந்தகாலத்தில். எ—று.

இன்ன என்றதனுல் உண்ணப்படுவனவும் தின்னப்படுவனவுமே யன்றி ஒழிந்த நக்கப்படுவனவும் பருகப்படுவனவும் கொள்க. (௫௬௬)

நாவினுக்கு வேந்தர்திருமடத்திற்றொண்டர் நாட்கூறு திருவமுதுசெய்யக்கண்டு, சேவகைத்தா ரருள்பெற்ற பிள்ளையார்தந் திருமடத்திலமுதாக்குவானைநோக்கித்;திவினைக்கு நீரென்று மடைவிலாதீர் திருவமுது காலத்தாலாக்கியிங்கு, மேவுமிக்க வடியவருக் களியாவண்ணம் விளைந்தவா றென்கொலோ விளம்புமென்றார்.

(இ-ள்.) நாவினுக்குவேந்தர் திருமடத்தில் தொண்டர்=திருநாவுக்கரசர் திருமடத்தில் திருவடியார்கள்; நாட்கூறு திருவமுது செய்யக்கண்டு=உச்சிப்போதில் திருவமுதுசெய்தலைப்பார்த்தருளி; சேவகைத்தார் அருள்பெற்றபிள்ளையார் தம் திருமடத்தில் அமுதாக்குவானைநோக்கி = இடபத்தைவாகனமாகக்கொண்டருளும் சிவபெருமானுர் திருவருளைப்பெற்ற பிள்ளையார் தமது திருமடத்தில் பாகத்தொழில் செய்வோனைப்பார்த்தருளி; தீவினைக்குநீர் என்றும் அடைவிலாதீர்=தீயதொழில்கட்கு நீவிர் எக்காலத்தும் இடமாதலில்லாதவர்களாதலுல்; திருவமுதுகாலத்தால் ஆக்கி=திருவமுதைக்காலத்தில் அமைத்து; இங்கு மேவும் மிக்க அடியவருக்கு அளியாவண்ணம்=இவ்விடத்து வரும் அன்பின்மிக்க அடியவர்க்குக் கொடுக்காதபடி; விளைந்தவாறென்கொலோவிளம்புமென்றார்=நிகழ்ந்தவண்ணம் யாதுகாரணமோ சொல்லுமென்று அருளிச்செய்தார். எ—று. (௫௬௭)

Koviloor Digital Library

திருமறையோர் தலைவர்தா மருளிச்செய்யத் திருமடத்தி லமுத மைப்போர் செப்புவார்க, ளொருபரிசு மறிந்திலோ மிதனையும்மை யுடையவர்பாற் பெறும்படிக்கா சொன்றுங்கொண்டு, கருதியவெல் லாங்கொள்ளவேண்டிச்சென்றாற் காசுதனை வாசிபட வேண்டுமென்ப ர், பெருமுனிவர் வாகீசர் பெற்றகாசு பேணியே கொள்வரிது பிற்பா டென்றார்.

(இ-ள்.) திரு மறையோர் தலைவர் தாம் அருளிச்செய்ய = அந்தணர் தலைவராகிய ஆளுடையபிள்ளையார் இவ்வாறு திருவாய் மலர்ந்தருள; திரு மடத்தில் அமுது அமைப்போர் செப்புவார்=அவரது திருமடத்தில் அமுது அமைக்கும் சமையற்காரர்கள் அவர்க்கு விண்ணப்பஞ் செய்வார்கள்; இதனை ஒரு பரிசும் அறிந்திலோம்=இது நிகழ்தற்கு உரியகாரணத்தை (எம் உணர் விற்கேற்ற) வகைமை ஒன்றானும் யாம் அறியோம் "பின்யாம் அறிந்தது யா தெனில்" உம்மை உடையவர்பால் பெறும்படிக்காசு ஒன்றும் கொண்டு = உம்மை ஆளாக உடைய சிவபிரானிடத்து நீர் பெற்றபடிக்காசு ஒன்றையுங் கைக்கொண்டு; கருதிய வெல்லாம் கொள்ளவேண்டிச்சென்றால்=விரும்பிய உபகரணங்களை எல்லாம் வாங்க விரும்பிவணிகரிடத்துச்சென்றால்; காசுதனை வாசிபட வேண்டுமென்பர்=அப்பொற்காசுக்கு வட்டந்தரவேண்டுமென்று சொல்கின்றார்கள்; பெருமுனிவர் வாகீசர் பெற்றகாசுபேணியே கொள்வ ரிது பிற்பாடென்றார்=பெரிய முனிவராகிய திருநாவுக்கரசர் பெற்றபொற் காசை நற்காசாக விரும்பி உடனே பெறுகின்றார்கள் இது காலந்தாழ்த்தற் குக்காரணமென்றுசொன்னார்கள். எ—று.

ஒரு பரிசும் அறிந்திலோமென்றதனால் வாசிபடற்கும் வாசிபடா தொ ழிதற்கும் காரணம் அறியோம் வாசிப்படுதல் தாழ்த்தற்குக் காரணமென்றார் என்றாயிற்று. (௫௬அ)

திருஞான சம்பந்த ரதனைக்கேட்டுச் சிந்திப்பார் சிவபெருமான மக்குத்தந்த,வொருகாசுவாசிபடமற்றைக்காசு நன்றாகி வாசிபடாதொ ழிவானந்தப், பெருவாய்மைத் திருநாவுக் கரசர்தொண்டாற் பெறுங் காசாமாதலினாற்பெரியோன்றன்னை, வருநாள்க டருங்காசு வாசிதீரப் பாடுவனென் றெண்ணியது மனத்துட்கொண்டார்.

(இ-ள்.) திருஞானசம்பந்தர் அதனைக்கேட்டுச் சிந்திப்பார்=ஆளுடைய பிள்ளையார் அவர் கூறிய அவ்வார்த்தையைக்கேட்டு சிந்திப்பாராயினார்; அந் தப்பெருவாய்மைத் திருநாவுக்கரசர் தொண்டிற்பெறுங்காசாம் ஆதலினால்= அந்தமிக்க மெய்ம்மையை உடையவாகீசர் தொண்டாற்பெற்ற காசாம் அக்கார ணத்தால்; சிவபெருமான் நமக்குத்தந்த ஒரு காசு வாசிபட=திருவீழிமிழலை

நமக்குக்கொடுத்த ஒருபொற்காசு வட்டம் படவும்; மற்றைக்காசு நன்றாகி வாசிபடாதொழிவான்=அவ்வாசிசேர் பெற்ற மற்றைப்பொற்காசுவட்டம்பெறு தொழிதல் ஆயிற்று; பெரியோன்றன்னை வருநாள்கள் தருங்காசு வாசி தீரப்பாடுவனென்றெண்ணி அதுமனத்துட்கொண்டார்=சிவபெருமானை மேல்வரும் நாட்களில் கொடுக்கும்படிக்காசுவட்டமில்லாதொழியப்பாடுவேனென்றுகருதிஅதனைத் தமது திருவுள்ளத்தில் கொண்டருளினார். எ—று.

வான்றொழிற் பெயர் விகுதி. ஆயிற்றென்றது அவாய்நிலையான்வந்த பயனிலை. (௫௬௯)

மற்றைநாட் டம்பிரான் கோயில்புக்கு வாசிதீர்த் தருளுமெனப்
பதிகம்பாடிப், பெற்றபடி நற்காசு கொண்டுமாந்தர் பெயர்ந்துபோயா
வணவீ தியினிற்காட்ட, நற்றவத்தி ரிக்காசு சாலநன்று வேண்டுவன
நாந்தருவோ மென்றுநல்க, அற்றைநாட் டொடங்கிநாட் கூறுதன்னி
லடியவரை யமுதுசெய்வித் தார்வமிக்கார்.

(இ-ள்.) மற்றைநாள்தம்பிரான்கோயில்புக்கு=மறுநாளில் சிவபிரான் கோயிலிற்சென்றருளி; வாசிதீர்த்தருளுமெனப்பதிகம் பாடிப்பெற்ற நல்ல படிக்காசுகொண்டு=வாசிதீரவேகாசுநல்கிடீர் எனத்திருப்பதிகம்பாடியருளிப் பெற்ற வாசிதீர்ந்த படிக்காசை எடுத்துக்கொண்டு; மாந்தர் பெயர்ந்து போய் ஆவணவீதியினிற்காட்ட=திருவமுது அமைக்கும் சமையற்காரர்கைக்கொண்டுசென்று கடைவீதியினிற்காட்ட; நல்லதவத்தீர் இக்காசு சால நன்றுவேண்டுவனநாம் தருவோம் என்று நல்க=நல்ல தவத்தினையுடையீர் இப்பொற்காசு மிகவும் நல்லது திருவமுதுக்கு வேண்டும் உபகரணங்களை நாம்சேர்த்துக்கொடுப்போமென்று வணிகர்கொடுக்க; அற்றைநாள்தொடங்கி நாள்கூறு தன்னில் அடியவரை அமுதுசெய்வித்து ஆர்வமிக்கார்=அந்நாள்தொடங்கி காலந்தாழ்க்காமல் அடியவரை திருவமுதுசெய்வித்து அன்பின்மிக்கவராயினார். எ—று. (௫௭௦)

வாசி-வட்டம்

திருவீழிமிழலை-திருவிருக்குக்குறள்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

வாசிதீரவே, காசுநல்குவீர்
மாசின்மிழலையீர், ரேசமில்லையே.

இறைவராயினீர், மறைகொண்மிழலையீர்
கறைகொள்காசினை, முறைமைநல்குமே.

செய்யமேனியீர், மெய்கொண்மிழலையீர்
பைகொளரவினீ, ருய்யநல்குமே.

திருஞானசம்பந்த சுவாமிகள் திருமடம்.



திருஞானசம்பந்தசுவாமிகள் படிக்காசு மாறாமல் மிரு ப்ரயாசையுடன் வட்டங்கொடுத்து வேண்டும் பண்டங்கள் கொண்டு திருவமுதுசெய்து அடியார்களுக்களிக்க தேசகா யமானதை ஆளுடையபிள்ளையாருணர்ந்து வாசிதீரும்படி ப திகமோதினர்.

திருநாவுக்கரசுசுவாமிகள் திருமடம்.



அப்பர்சுவாமிகள்படிக்காசை வணிகர் அதிவிநயவுடன் எதிர்சென்று வணங்கிப்பெற்றுக்கொண்டு வேண்டும்பண்டங் கள் த்வரையில் வட்டமின்றிக்கொடுக்க திருவமுதுசெய்து கா லத்திற்குமுன் அடியார்களுக்களிக்கப் புசித்துக் களித்தனர்.

Koviloor Digital Library

நீறுபூசினீ, ரேறதேறினீர்
கூறுமிழலையீர், பேறுமருளுமே.

காமன்வேவவோர், தூமக்கண்ணினீர்
நாமமிழலையீர், சேமநல்குமே.

பிணிகொள்சடையினீர், மணிகொண்மிடற்றினீ
ரணிகொண்மிழலையீர், பணிகொடருளுமே.

மங்கைபங்கினீர், துங்கமிழலையீர்
கங்கைமுடியினீர், சங்கைதவிர்மினே.

அரக்கனெரிதர, விரக்கமெய்தினீர்
பரக்குமிழலையீர், கரக்கைதவிர்மினே.

அயனுமாலுமாய், முயலுமுடியினீ
ரியலுமிழலையீர், பயனுமருளுமே.

பறிகொடலையினு, ரறிவதறிகிலார்
வெறிகொண்மிழலையீர், பிறிவதரியதே.

காழிமாநகர், வாழிசம்பந்தன்
வீழிமிழலைமேற், றாழுமொழிகளே.

திருச்சிற்றம்பலம்.

அருவிலையிற் பெறுங்காசு மவையேயாகி யமுதுசெய்பத் தொண்டரள விறந்துபொங்கி, வருமவர்களெல்லோர்க்கும் வந்தாருக்கு மகிழ்ந்துண்ண வின்னடிசின் மாளாதாகத், திருமுடிமேற் றிங்களொடு கங்கைசூடுஞ் சிவபெருமா னருள்செய்யச் சிறப்பின்மிக்க, பெருமை தரு சண்பைநகர் வேந்தர்நாவுக் கரசரிவர் பெருஞ்சோற்றுப் பிறங்கலீந்தார்.

(இ-ள்) அருவிலையிற் பெறுங்காசு அவையே யாகி=அரியவிலைகொடுத்துப் பெறும்படிக்காசும் அக்காசுகளே ஆய்; அமுதுசெய்யத் தொண்டர் அளவிறந்து பொங்கி = திருவமுதுசெய்யும்படி அடியார் திருக்கூட்டங்கள் எண்ணிறந்துமிக்கு; வருமவர்கள் எல்லோர்க்கும் வந்தாருக்கும்=மேல்வருபவர் யாவர்க்கும் வந்தவர்களுக்கும்; மகிழ்ந்துண்ண இன்னடிசில் மாளாதாக=மகிழ்கூர்ந்துண்ண இனிய திருவமுது குறையாதிருக்க; திருமுடிமேற் திங்களொடுகங்கை சூடுஞ்சிவபெருமான் அருள்செய்ய=அழகிய சடைமுடியின்மேல் சந்திரனோடு கங்காநதியினைச்சூடிய சிவபெருமான் திருவருள் செய்ய; சிறப்பின்மிக்கபெருமை தருசண்பைநகர்வேந்தர் நாவுக்கரசர் இவர்

Koviloor Digital Library

பெருஞ்சொற்றுப் பிறங்கலினார்=சிறப்பில்மேம்பட்ட ஆளுடையபிள்ளையார் திருநாவுக்கரசர் என்றும் இவ்விருவரும்பெரிய உன்னமலையைக் கொடுத்தருளினர். எ—று. (ருஎக)

அவனிமிசை மழைபொழிய வுணவுமல்கி யனைத்துயிருந் துயர் நீங்கியருளினாலே, புவனமெலாம் பொலிவெய்துங் காலமெய்தப் புரிசடையார் கழல்பலநாட் போற்றிவைகித், தவமுனிவர் சொல்வேந்தரோடுங்கூடத்தம்பிரா னருள்பெற்றுத் தலத்தின்மீது, சிவன்மகிழுந் தானங்கள் வணங்கிப்போவார் தென்றிருவாஞ் சியமூதூர் சென்று சேர்ந்தார்.

(இ-ள்.) அவனிமிசை மழைபொழிய உணவுமல்கி=பூமியின்மேல் மழைபெய்தலால் உணவுகள் நிறைந்து ; அனைத்துயிருந்துயர் நீங்கி அருளினாலே = எல்லா வுயிர்களும் பசித்துன்பத்தினின்றும் நீங்கி சிவபெருமான் திருவருளினால் ; புவனமெல்லாம் பொலிவெய்துங்காலமெய்த=நாடுகளெல்லாம் பொலிவு அடையுங்காலம்வர ; புரிசடையார்கழல் பன்னாள்போற்றி வைகி=அந்நாள் அளவும் வீழி யழகரது திருவடிகளை பலநாளும் துதித்து அத்திருப்பதியில் எழுந்தருளி ; தவமுனிவர் சொல்வேந்தரோடுங்கூடத் தம்பிரான் அருள்பெற்று = தவத்தையுடைய திருநாவுக்கரசுடன் அத்திருவீழி யழகரது திருவருளை அடைந்து ; தலத்தின் மீது சிவன் மகிழும் தானங்கள் வணங்கிப்போவார்தென்திருவாஞ்சிய மூதூர்சென்று சேர்ந்தார்=நிலவுலகின்மேல் சிவபிரான் மகிழ்கூர்ந்தருளும் பிற திருப்பதிகளைவணங்கிச் செல்லும் பிள்ளையார் தெற்கின்கண் உள்ள திருவாஞ்சியம் என்னும் பழைய திருப்பதியைச்சென்றடைந்தருளினார். எ—று. (ருஎஉ)

நீடுதிரு வாஞ்சியத்தி லமர்ந்தமுக்க ணிலமிடற் றருமணியை வணங்கிப்போற்றிப், பாடொலிநீர்த் தலையாலங்காடுமாடுபாமர்பெரு வேளூரும் பணிந்துபாடி,நாடுபுகழ்த்தனிச்சாத்தங்குடியினண்ணிநம்பர்திருக் கரவீர நயந்துபாடித், தேடுமறைக் கரியார்தம் விளமர்போற்றித்திருவாரூர் தொழநினைந்து சென்றுபுக்கார்.

(இ-ள்.) நீடுதிருவாஞ்சியத்தில் அமர்ந்த முக்கண் நிலமிடற் றருமணியை வணங்கிப்போற்றி=அழிவில்லாத திருவாஞ்சியத்தில் எழுந்தருளிய மூன்றுகண்களையுடைய நீலகண்டரான அரியமாணிக்கம்போலும் சுகவாஞ்சிநாயகரைவணங்கித் துதித்து ; பாடொலிநீர்த் தலையாலங்காடுமாடு பாமர் பெருவேளூரும் பணிந்துபாடி=மிக்க ஒலியையுடைய நீர் சூழ்ந்த திருத்தலையாலங்காட்டையும் அதன்பக்கத்தில் உள்ள பிறியா நாயகர் எழுந்தருளிய திருப்பெருவேளூரையும் வணங்கித்துதித்து ; நாடுபுகழ்த் தனிச்சாத்தங்குடியில் நண்ணிநம்பர் திருக்கரவீரம் நயந்துபாடி=ஆராயும் புகழையுடைய ஒப்

Koviloor Digital Library

பில்லாத திருச்சாத்தங்குடியை அடைந்து கரவீரேசர் எழுந்தருளிய திருக்கரவீரத்தையும் விரும்பிப்பாடி ; தேடுமறைக்கரியார் தம்விளமர் போற்றித்திருவாரூர் தொழநினைந்து சென்று புக்கார்=தேடி மெலியும் வேதங்களுக்கு அரியராகிய பதஞ்சலிமனோகரர் எழுந்தருளிய திருவிளமர் என்னுந் திருப்பதியைவணங்கித் திருவாரூரைவணங்கத் திருவுள்ளத்திற்கருதிச் சென்றடைந்தருளினார். எ—று. (௩௭௩)

திருவாஞ்சியம்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

வன்னிகொன்றை மதமத்த மெருக்கொடு கூவிளம்
பொன்னியன் றசடையிற் பொலிவித்த புராணனார்
தென்னவென்று வரிவண் டிசைசெய் திருவாஞ்சிய
மென்னையாள வுடையா னிடமாக வுகந்ததே.

தென்றறுன்று பொழில்சென் றணையுந் திருவாஞ்சியத்
தென்றனின்ற விறையானை யுணர்ந்தடி யேத்தலா
னன்றுகாழி மறைஞான சம்பந்தன செந்தமி
ழொன்று முள்ளமுடையா ரடைவாருயர் வானமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-சுகவாஞ்சிநாயகர்-தேவியார்-வாழவந்தநாயகியம்மை.

திருப்பெருவேளூர்-பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

அண்ணாவுங் கழுக்குன்று மாயமலை யவைவாழ்வார்
விண்ணோரு மண்ணோரும் வியந்தேத்த வருள்செய்வார்
கண்ணவாருலகுக்குக் கருத்தானார் புரமெரித்த
பெண்ணாளும் பெருமானார் பெருவேளூர் பிரியாரே.

பைம்பொன்சீர் மணிவாரிப் பலவுஞ்சேர் கனியுந்தி
யம்பொன்சேய் மடவரலா ரணிமல்கு பெருவேளூர்
நம்பன்றன் கழல்பரவி நவில்கின்ற மறைஞான
சம்பந்தன் றமிழ் வல்லார்க் கருவினைநோய் சாராவே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-பிரியாதநாயகர்-தேவியார்-மின்னனையாளம்மை.

Koviloor Digital Library

திருக்கரவீரம்-பண்-பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

அரியும்நம்வினை யுள்ளனவாசற
வரிகொள்மாமணி போற்கண்டங்
கரியவன்றிகழுங் கரவீரத்தெம்
பெரியவன்கழல் பேணவே.

வீடிலான்விளங் குங்கரவீரத்தெஞ்
சேடன்மேற்பரி வாற்றமிழ்
நாடிஞானசம் பந்தனசொல்லிவை
பாடுவார்க் கில்லைபாவமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-கரவீரேசர்-தேவியார்-பிரத்தியக்ஷநாயகியம்மை.

திருவிளமர்-திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

மத்தக மணிபல மலர்வதோர் மதிபுனை நுதல்கர
மொத்தக நகமணி மிளிர்வதோ ரரவின சொளிகிள
ரத்தக வடிதொழ வருள்பெரு கண்ணொடு மூமையவள்
வித்தக ருறைவது விரிபொழில் வளநகர் விளமரே.

வெந்தவெண் பொடியணி யடிகளை விளமருள் விகிர்தனைச்
சிந்தையு ளிடைபெற வுரைசெய்த தமிழிவை செழுவிய
வந்தணர் புகலியு ளழகம ரருமறை ஞானசம்
பந்தன மொழியிவை யுரைசெயு மவர்வினை பறையுமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-பதஞ்சலிமனோகரர்.
தேவியார்-யாழினுமென்மொழியம்மை.

நம்பர்மகிழ் திருவாரூர் வணங்கிப்போந்து நலங்கொடிருக் காறு யினண்ணியேத்திப், பைம்புனன்மென் பணைத்தேவூ ரணைந்துபோற் றிப் பரமர்திரு நெல்லிக்காப் பணிந்துபாடி, யும்பர்பிரான் கைச்சின மும் பரவித்தெங்கூ ரோங்குபுகழ்த் திருக்கொள்ளிக் காடும்போற்றி ச், செம்பொன்மதிட் கோட்டூரும் வணங்கியேத்தித் திருமலிவெண் டுறைதொழுவான் சென்றுசேர்ந்தார்.

Koviloor Digital Library

(இ-ள்.) நம்பர் திருவாரூரைவணங்கிப்போந்து = தியாகப்பெருமானூர் மகிழ்கூர்ந்தருளும் திருவாரூரைவணங்கிச்சென்று ; நலங்கொள் திருக்காறுயில் நண்ணி ஏத்தி=நன்மை மிக்க திருக்காறுயிலை யடைந்து துதித்து ; பைம்புனல் மென்பணைத் தேவூர் அணைந்து போற்றி = பசிய நீர் நிறைந்த (வளத்தால்) மிருதுவான வயல் சூழ்ந்த திருத்தேவூரை அடைந்து துதித்து ; பரமர்திருநெல்லிக்காப் பணிந்துபாடி=சிவபெருமானார் எழுந்தருளிய திருநெல்லிக்காவையும் வணங்கித் திருப்பதிகம் பாடி ; உம்பர்பிரான் கைச்சினமும் பரவி=தேவர்பிரானாரது திருக்கைச்சினத்தையுந் துதித்து = தெங்கூர் ஒங்கு புகழ்த் திருக்கொள்ளிக்காடும் போற்றி=திருத்தெங்கூரையும் எங்கும் பரவிய புகழையுடைய திருக்கொள்ளிக் காட்டையும் வணங்கி ; செம்பொன்மதிற் கோட்டூரும் வணங்கிஏத்தி=சிவந்த பொன்னாலாகிய மதில்சூழ்ந்த திருக்கோட்டூரையும் பணிந்து துதித்து ; திருமலிவெண் துறைதொழுவான் சென்று சேர்ந்தார்=திருவெண்டுறையையும் வணங்கும்படி சென்றடைந் தருளினார் —எ-று. (௩௭௪)

திருக்காறுயில்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

நீரானே நீள்சடை மேலோர் நிரைகொன்றைத்
தாரானே தாமரை மேலயன் றான்றொழுஞ்
சீரானே சீர்திகழுந் திருக் காறுயி
லூரானே யென்பவ ரூனமி லாதாரே.

ஏய்ந்த சீரெழிறிக ழுந்திருக் காறுயி
லாய்ந்தசீரா னடியேத்தி யருள்பெற்ற
பாய்ந்தநீர்க் காழியுண் ஞானசம் பந்தன்சொல
வாய்ந்தவா றேத்துவார் வானுல காள்வாரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-கண்ணாயிரநாதர். தேவியார்-கைலாசநாயகியம்மை.

திருத்தேவூர்-பண்-காந்தாரம்

திருச்சிற்றம்பலம்.

பண்ணி லாவிய மொழியுமை பங்கனெம் பெருமான்
விண்ணில் வானவர் கோன்விம லன்விடை யூர்தி
நெண்ணி லாமதி தவழ்தரு மாளிகைத் தேவூ
ரண்ணல் சேவடி யடைந்தன மல்லலொன் றிலமே.

அல்ல லின்றிவிண் ணாள்வர்கள் காழியர்க் கதிப
னல்ல செந்தமிழ் வல்லவன் ஞானசம் பந்த

Koviloor Digital Library

னெல்லை யில்புகழ் மல்கிய வெழில்வளர் தேவூர்த்
தொல்லை நம்பனைச் சொல்லிய பத்தும்வல் லோரே.

திருச்சிற்றம்பலம்.

திருத்தேவூர்-பண்-திருவிராகம்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

காடுபயில் வீடுமுடை யோடுகலன் மூடுமுடை யாடைபுலிதோ
றேடுபலி யூணதுடை வேடமிகு வேதியர் திருந்துபதிதா
னாடகம தாடமஞ்ஞை பாடவரி கோடல்கை மறிப்பநலமார்
சேடுமிகு வேடைபென மூடிமகிழ் மாடமிடை தேவூரதுவே.

துங்கமிகு பொங்கரவு தங்குசடை நங்களிறை துன்றுகுழலார்
செங்கயல்கண் மங்கையுமை நங்கையொரு பங்கனமர் தேவூரதன்மே
ற், பைங்கமல மங்கணிகொ டண்புகலி ஞானசம் பந்தனுரைசெய்
சங்கமலி செந்தமிழ்கள் பத்துமிசை வல்லவர்கள் சங்கையிலரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-தேவகுருநாதர். தேவியார்-மதுரபாஷணியம்மை.

திருநெல்லிக்கா-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

அறத்தா லுயிர்கா வலமர்ந் தருளி
மறத்தான் மதின்மூன் றுடன்மாண் பழித்த
திறத்தாற் றெரிவெய் தியதீ வெண்டிங்க
ணிறத்தா னெல்லிக்கா வுணிலா யவனே.

புகரேது மிலாத புத்தே ளுலகி
னிகரா நெல்லிக் காவுணி லாயவனை
நகரா னலஞான சம்பந்தன் சொன்ன
பகர்வா ரவர் பாவ மிலாதவரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-நெல்லிவனநாதர். தேவியார்-மங்களநாயகியம்மை.

திருக்கைச்சின்னம்-பண்-சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

தையலோர் கூறுடையான் றண்மதிசேர் செஞ்சடையான்
மையுலா மணிமிடற்றான் மறைவிளங்கு பாடலா

Koviloor Digital Library

னெய்யுலா மூவிலைவே லேந்திநிவந் தோளிசேர்
கையுடையான் மேவி யுறைகோயில் கைச்சினமே.

தண்வயல்சூழ் காழித் தமிழ்ஞான சம்பந்தன்
கண்ணுதலான் மேவி யுறைகோயில் கைச்சினத்தைப்
பண்ணிசையா லேத்திப் பயின்ற விசைவல்லார்
விண்ணவரா யோங்கி வியனுலக மாள்வாரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - கைச்சினநாயகர். தேவியார் - வேள்வளையம்மை.

திருத்தெங்கூர் - பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

புரைசெய்வல் வினைதீர்க்கும் புண்ணியர்பண் ணவர்போற்றக்
கரைசெய்மால் கடனஞ்சை யுண்டவர்கரு தலர்புரங்க
ளிரைசெய்தா ரழலூட்டி யுழல்பவரிடு பலிக்கெழில்சேர்
விரைசெய்பூம் பொழிற்றெங்கூர் வெள்ளியங்குன் றமர்ந்தாரே.

வெந்தநீற் றினர்தெங்கூர் வெள்ளியங்குன் றமர்ந்தாரைக்
கந்தமார் பொழில்சூழ்ந்த காழியுண்ஞான சம்பந்தன்
சந்தமா யினபாடல் வண்டமிழ்பத்தும் வல்லார்மேற்
பந்தமா யினபாவம் பாறுதலே றுதல்பயனே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - வெள்ளிமலைநாதர். தேவியார் - பெரியநாயகியம்மை.

திருக்கொள்ளிக்காடு - பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

நிணம்படு சுடலையி னீறுபூசிநின்
றிணங்குவர் பேய்களோ டிடுவர்மாநட
முணங்கல்வெண் டலைதனி லுண்பராகிலும்
குணம்பெரி துடையர்நங் கொள்ளிக்காடரே.

நற்றவர் காழியுண் ஞானசம்பந்தன்
குற்றமில் பெரும்புகழ்க் கொள்ளிக்காடரைச்
சொற்றமி ழின்னிசை மாலைசோர்வின்றிக்
கற்றவர் சிவனடி காணவல்லரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - அக்கினீசர். தேவியார் - பஞ்சின்மெல்லடியம்மை.

Koviloor Digital Library

திருக்கோட்டூர் - பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

நீலமார்தருகண்டனேநெற்றியோர் கண்ணனே யொற்றைவிடைச்
சூலமார்தரு கையனே துன்றுபைம்பொழில் சூழ்ந்தழகாய
கோலமாமலர்மணங்கமழ்கோட்டூர்நற்கொழுந்தேயென்றெழுவார்கள்
சாலநீடலத் திடைப்புகழ்மிகத் தாங்குவர் பாங்காலே.

பந்துலாவிரற் பவளவாய்த்தேன்மொழிப் பாவையோ ருருவாருங்
கொந்துலாமலர் விரிபொழிற்கோட்டூர் நற்கொழுந்தினைச்செழும்பவ
வந்துலாவிய காழியுள்ஞானசம் பந்தன்வாய்ந் துரைசெய்த [ளம்
சந்துலாந்தமிழ் மாலைகள்வல்லவர் தாங்குவர் புகழாலே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - கொழுந்தீசர் - தேவியார் - மதுரவசனியம்மை.

திருவெண்டுறை - பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

ஆதியன்றிரைய னனலாடிய வாரழகன்
பாதியோர்மாதினொடும் பயிலும் பரமர் பரமன்
போதியலும்முடிமேற் புனலோடர வும்புனைந்த
வேதியன்மாதிமையால் விரும்புமிடம் வெண்டுறையே.

திண்ணமரும்புரிசைத் திருவெண்டுறை மேயவனைத்
தண்ணமரும்பொழில்சூழ் தருசண்பையர் தந்தலைவ
னெண்ணமர்பல்கலையா னிசைஞானசம் பந்தன்சொன்ன
பண்ணமர்பாடல்வல்லார் வினையாயின பற்றறுமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-வெண்டுறைநாதர்.தேவியார்-வேனெடுங்கண்ணியம்மை

மற்றவ்வூர் தொழுதேத்தி மகிழ்ந்துபாடி மாலயனுக் கரியபி ரான்மருவுந்தானம், பற்பலவுஞ் சென்றுபணிந் தேத்திப்பாடிப் பர வுதிருத்தொண்டர்குழாம் பாங்கிலெய்தக், கற்றவர்வாழ் தண்டலைநீ ணெறிபுள்ளிட்ட கனகமதிற் திருக்களரும் கருதார்வேள்வி, செற்ற வர்சேர் பதிபிறவுஞ் சென்றுபோற்றித் திருமறைக்கா டதன்மருங்கு சேர்ந்தாரன்றே.

(இ-ள்) மற்றவ்வூர் தொழுது ஏத்தி மகிழ்ந்துபாடி = அத்திருப்பதி யைவணங்கித் துதித்து மகிழ் கூர்ந்து திருப்பதிகம்பாடி ; மால் அயனுக்கு

Koviloor Digital Library

அரியபிரான் மருவும் தானம்பற்பலவும் சென்று பணிந்து ஏத்திப்பாடி=திருமாலுக்கும் பிரமனுக்கும் அடைதற்கரிய சிவபிரானுர் எழுந்தருளிய திருப்பதிகள் பலவற்றையும் அடைந்து வணங்கித்துதித்துத் திருப்பதிகம்பாடி ; பரவு திருத்தொண்டர் குழாம்பாங்கின் எய்தக் கற்றவர்வாழ்தண்டலை நீள் நெறியுள்ளிட்ட கனகமதிற் திருக்களரும் கருதார்வேள்வி செற்றவர்சேர்பதி பிறவும் சென்றுபோற்றி=துதிக்கும் அடியார் திருக்கூட்டங்கள் பக்கலிற்சூழக் கற்றோர்வாழும் திருத்தண்டலை நீள்நெறியின் உள்ளிட்ட பொன்னுலாகிய மதிலையுடைய திருக்களரையும் தன்னை மதியாத தக்கன் யாகத்தைக்கெடுத்த சிவபிரான் எழுந்தருளிய பிற திருப்பதிகளையும் அடைந்து துதித்து ; திருமறைக்காடதன்மருங்கு சேர்ந்தார்=வேதாரண்ணியமென்னுந் திருப்பதியின்பக்கத்தை அடைந்தருளினர்—எ-று.

உள்ளிட்ட என்பது=உட்பட்ட என்று பொருள் ; அதின் உள்ளிட்ட திருக்களரொன இயையும். (௩௭௫)

திருத்தண்டலைநீணெறி-பண்-கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

விரும்புந் திங்களுங் கங்கையும் விம்மவே
சுரும்புந் தும்பியுஞ் சூழ்சடை யார்க்கிடங்
கரும்புஞ் செந்நெலுங் காய்கமு கின்வளந்
நெருங்குந் தண்டலை நீணெறி காண்மினே.

நீற்றர் தண்டலை நீணெறி நாதரைத்
தோற்று மேன்மையர் தோணி புரத்திறை
சாற்று ஞானசம் பந்தன் றமிழ்வல்லார்
மாற்றில் செல்வர் மறப்பர் பிறப்பையே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-நீணெறிநாதேசர். தேவியார்-ஞானநாயகியம்மை.

திருக்களர்-பண்-சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

நீருளார்கயல் வாவிசூழ்பொழி னீண்டயாவய லீண்டுமாமதிள்
தேரினார் மறுகில் விழாமல்கு திருக்கள
ரூருளாரிடு பிச்சைபேணு மொருவனேயொளி செஞ்சடைம்மதி
யாரடின் றவனே யடைந்தார்க் கருளாயே.

இந்துவந்தெழு மாடவீதி யெழில்கொள்காழிந் நகர்க்கவுணியன்
செந்திநேர் மொழியா ரவர்சேருந் திருக்களரு

Koviloor Digital Library

ளந்திபன்னதோர் மேனியானே யமரர்தம்பெரு மானேஞானசம்
பந்தன் சொல்லிவை பத்தும் பாடத்தவ மாமே.

திருச்சிற்றம்பலம்

சுவாமிபெயர் - களிரிளமுளையீசர். தேவியார் - அழகம்மை.

காரமண்வெஞ்சுரமருளாற் கடந்தார்தாமுங் கடற்காழிக் கவுணி யர்தங் தலைவர்தாமுஞ், சேரவெழுந் தருளியவப் பேறுகேட்டுத் திரு மறைக்காட்டகன்பதியோர் சிறப்பிற்பொங்கி, யூரடைய வலங்கரித்து விழவுகொள்ள வுயர்கமுகு கதலிநிறை குடந்தீபங்கள், வார்முரச மங் கலநா தங்கண்மல்க வெதிர்கொள்ள வடியருடன் மகிழ்ந்துவந்தார்.

(இ-ள்.) காரமண் வெஞ்சுரமருளாற் கடந்தார் தாமும்=கரிய அம ணராகிய கொடியபாலை நிலத்தைச் சிவபிரான் திருவருளாற்கடந்த ஆண்ட அரசும்; கடற்காழிக்கவுணியர் தந்தலைவர்தாமும்=கடல்சூழ்ந்த சீகாழியில் அவதரித்த கவுணியகோத்திரத்தலைவராகிய ஆளுடைய பிள்ளையாரும்; சேர வெழுந்தருளிய வப்பேறுகேட்டு=ஒருங்கு எழுந்தருளின பெரும்பேற்றைத் தாங்கேள்வியுற்று; திருமறைக்காட்டகன் பதியோர் சிறப்பிற்பொங்கி=திரு மறைக்காடென்னும் இடமகன்ற திருப்பதியின் உள்ளோர் மகிழ்ச்சியால் மே ம்பட்டு; ஊரடைய அலங்கரித்து விழவுகொள்ள=அவ்வூர் முழுதும் அலங் காரஞ்செய்து திருவிழாக்கொள்ளவும்; உயர்கமுகுகதலிநிறை குடந்தீபங்கள் =உயர்ந்த கமுகுகளும் வாழைகளும் பூரண கும்பங்களும் தீபங்களும்; வார் முரசமங்கல நாதங்கள்மல்க=வாரால் பிணித்த முரசப் பறையோடு மங்கல வாத்தியங்கள் நிறையவும்; எதிர்கொள்ள அடியருடன் மகிழ்ந்து வந்தார்= எதிர்கொள்ளும்பொருட்டு அடியார்கூட்டத்தோடு மகிழ்கூர்ந்துவந்தார்கள்.

முன்னணைந்த திருநாவுக்கரசர்தம்மை முறைமையாலெதிர்கொ ண்டு களிப்பின்மூழ்கிப், பின்னணைய வெழுந்தருளும் பிள்ளையார்தம் பெருகியபொற் காளத்தினோசைகேட்டுச், சென்னிமிசைக் கரங்குவி த்து முன்புசென்று சேணிலத்து வணங்குதலுந் திருந்துசண்பை மன்னவரு மணிமுத்தின் சிவிகைநின்று வந்திழிந்து வணங்கியுடன் மகி ழ்ந்துபோந்தார்.

(இ-ள்.) முன்னணைந்த திருநாவுக்கரசர்தம்மை முறைமையாலெதிர் கொண்டு களிப்பின்மூழ்கி=முன் எழுந்தருளிய ஆண்ட அரசை அங்கு எதிர் கொள்ளும் முறைமையால் எதிர்கொண்டு மகிழ்ச்சியுள் ஆழ்ந்து; பின்னணை யவெழுந்தருளும் பிள்ளையார்தம் பெருகியபொற்காளத்தி னோசைகேட்டு=அ வர்பின்பு தாம் அடைந்தருளும்படி எழுந்தருளிய (ஞானசம்பந்தன் வந்தா னெனவூதும்) ஆளுடையபிள்ளையாரது ஒலிநிறைந்த பொற்காளத்தின் ஓசை கேட்டு; சென்னிமிசைக் கரங்குவித்து முன்புசென்று = சிரசின்மேல் கைக ளைக் குவித்து பிள்ளையார் திருமுன்னேபோய்; சேணிலத்து வணங்குதலும்=

Koviloor Digital Library

தூரத்தில் நின்று வணங்கவும்; திருந்துசண்பை மன்னவரும் அணிமுகத்தின் சிவிகைநின்று=திருத்தமான சீகாழித்தலைவராகிய ஆளுடைய பிள்ளையாரும் அழகிய முத்தாலாய திருச்சிவிகையி னின்றும்; வந்திழிந்து வணங்கியுடன் மகிழ்ந்துபோந்தார்=எழுந்தருளிவந்து அவரைவணங்கி அவருடன் மகிழ்ச்சி யடைந்து சென்றருளினர்—எ-று.

ஞானசம்பந்தன் பாலறுவாயன் முத்தமிழ் விரகன் என்னும் திருநாம மூன்றினுள் காளம் ஞானசம்பந்தன் என்னும் திருநாமத்தை முன்னொலிக்கு மென்பது.ஞானசம்பந்தன்வந்தானென்று,எவ்வுலகுந்துயர்நீங்கப்பணிமாறும் தனிக்காளத்தெழுந்த ஓசை,வெவ்வுயிர்க்கும் அவன்கேளா மெல்லியலைவிட்டு எதிரே விரைந்துசெல்வான் என முன்னும், இப்பரிசனையும் சண்பையர்பெரு மான் எழுந்தருளும் பொழுதிசைக்கும் ஒப்பில் நித்திலப் பொற்றனிப்பெருங் காளம் உலகுய்ய ஒலித்தெழுமோசை எனப்பின்னும் கூறினாற்போலப் பின்ன லைய எழுந்தருளும் பிள்ளையார் தம் பெருகிய பொற்காளத்தி னோசைகேட்டு என ஈண்டுக்கூறியவாற்றானும் உணர்க. காளம் பேரொலியாய் முன்னிசைத்த மாத்திரத்து அதுகேட்டார் தாழாது எதிர்கொள்ள வந்தனராதலின் தாரை சின்னங்கள் ஒலிக்கும் இயல்புகூற தொழிந்தனரென்க. அத் திருநாமங்கள் மூன்றையும் காளஞ் சின்னம் தாரை மூன்றும் முறையே ஒலிக்கு மென்பது, முன் சின்னம் பெற்றுழி மூன்று விருத்தத்தால் வகுத்துக் கூறியதுநோக்கி உய்த்துணர்ந்துகொள்க.

ஆண்ட அரசர் பிள்ளையார்முன் சென்றமை ஆண்ட அரசர் பிள்ளை யார்க்கு அநுக்கிரக முறைமையால் பெரியராதலில், பிள்ளையார் சிவிகை யிவ ர்ந்துவர ஆண்ட அரசர் அவர்பின்செலத் தாம் உடன்படினும் அதற்குப் பிள் ளையார் உடன்படாமைபற்றி யென்க. அது திருப்புகலூரைத் தரிசித்துநீங்கி இருவரும் எழுந்தருளுங்கால் முத்துச் சிவிகை பின் வரத் தாம் அவரோடு உடன் சென்றருளி ஆண்ட வரசர் சிவிகையின்மேல் எழுந்தருள என அநுமதி கொடுக்குக்கால் சுடர்த்திங்கள்மேவேணியார் அருளுமிவ்வாறெனில் விரும்புதொண்டர்களோடும் போய தெங்கு நீர் அங்கு யான் பின்வரப் போ வதென் றருள் செய்தார் என்னும் பிள்ளையார் கூற்றானுமுணர்க. (ருளஎ)

சொல்லரச ருடன்கூடப் பிள்ளையார்தாந்தூமணிநீர் மறைக்கா ட்டுத் தொல்லைமூதூர், மல்குதிரு மறுகின்கட்புகுந்தபோது மாதவர் கண்மறையவர்கண் மற்றுமுள்ளோ, செல்லையில்லர் வகையாவென் றெடுத்தவோசை யிருவிசும்புந் திசையெட்டு நிறைந்துபொங்கி, யொ ல்லொலிநீர்வேலையொலி யடக்கிவிண்மே லும்பர்நாட் டப்புறத்துமு ற்றவன்றே.

(இ-ள்.) சொல்லரச ருடன்கூடப் பிள்ளையார்தாந் தூமணிநீர்மறைக் காட்டுத் தொல்லைமூதூர்=திருநாவுக்கரசரோடுங்கூட ஆளுடைய பிள்ளையார் புனிதமாகிய அழகிய நீர் சூழ்ந்த திருமறைக்காடென்னும் பழைய திருப்பதி

Koviloor Digital Library

யில் ; மக்குதிரு மறுகின்கட் புகுந்தபோது = செல்வமிக்க திருவீதியின்கட் சென்றகாலத்து ; மாதவர்கள் மறையவர்கள் மற்றுமுள்ளோர் எல்லையில்லா வகை அரவென்று எடுத்தவோசை=பெரிய தவத்தினரும் அந்தணரும் மற்றுமுள்ள அடியார்களும் அளவுபடாதவண்ணம் அரகரவென்று எடுத்த ஆரவாரம்; இருவிசும்புந் திசைஎட்டு நிறைந்துபொங்கி=பெரிய விண்ணுலகிலும் எட்டுத் திசைகளிலும் நிறைந்து பரவி ; ஒல் ஒலிநீர்வேலை யொலியடக்கி விண்மேல் உம்பர்நாட்டப்புறத்து உற்றது=ஒல்லென்றும்ஒலியையுடைய நீர்பொருந்திய கடலினது ஓசையை அடக்கி விண்ணின்மேல் உள்ள தேவருலகின் அப்புறத்தும் சென்றது.—எ-று. (௩எஅ)


அடியவரும் பதியவரு மருங்குபோற்ற வணிமறுகி னூடெய்தி யருகுதாழ்ந்து. கொடிநுடங்கு செழுந்திருமா ளிகையின்முன்னர்க் கோபுரத்தைத் தாழ்ந்திறைஞ்சிக் குறுகிப்புக்கு, முடிவிலிமை யவர்முனிவர் நெருங்குந்தெய்வ முன்றில்வலங் கொண்டுநேர்சென்றுமுன்றாட், படியின்மறை யருச்சித்துக் காப்புச்செய்தபைம்பொன்மணித் திருவாயிற் பாங்குவந்தார்.

(இ-ள்.) அடியவரும்பதியவரும்மருங்குபோற்ற=அடியார்களும்அத்திருப்பதியிலுள்ளவரும் பக்கங்களினின்றுந் துதிக்க ; அணிமறுகி னூடெய்தி அருகுதாழ்ந்து=அழகிய விதியின்கட்சென்று பக்கத்தில்வணங்கி ; கொடிநுடங்கு செழுந் திருமாளிகையின்முன்னர்க்கோபுரத்தைத்தாழ்ந்து இறைஞ்சிக் குறுகிப்புக்கு=கொடிகள்அசையும்செழுமைபொருந்தியதிருக்கோயிலின்முன்னுள்ள திருக்கோபுரத்தைப் பணிந்து துதித்துச் சமீபித்து உள்ளேபுகுந்து ; முடிவிலிமையவர் முனிவர் நெருங்குந் தெய்வமுன்றில் வலங்கொண்டுநேர் சென்று=அளவில்லாத தேவர்களும் முனிவர்களும் தெய்வத்தன்மையயுடைய திருமுன்றிலைப்பிரதட்சணஞ்செய்து நேரேசென்று; முன்றாள்படியின் மறையருச்சித்துக் காப்புச்செய்த பைம்பொன்மணித்திருவாயிற் பாங்குவந்தார்=முன்னாளில் ஒப்பிலாத வேதங்கள் அருச்சனைசெய்து திருக்காப்புச் செய்த பசிய பொன்னுலாகிய மணிகளழுத்திய திருவாயிலின் அருகில்வந்தருளினார்.—எ-று. (௩எகூ)

அருமறைக டிருக்காப்புச் செய்து வைத்த வங்கதவந் திறந்திடவும் மறைகளோதும், பெருகியவன் புடையடியா ரணைந்துநீக்கப் பெறுமையினாலன்றுமுத லாகப்பின்னை, பொருபுடையோர் வாயிலமைத் தொழுகுந்தன்மை யுள்ளபடி. கேட்டருளி யுயர்ந்தசண்பைத், திருமறையோர் தலைவர்வியப் பெய்திநின்று திருநாவுக்கரசருக்குச் செப்புகின்றார்.

(இ-ள்.) அருமறைகள் திருக்காப்புச் செய்துவைத்த அக்கதவம் திறந்திட=அரியவேதங்கள் திருக்காப்புச் செய்துவைத்த அத்திருக்கதவைத்திறக்க ; அம்மறைகளோதும் பெருகிய வன்புடையடியா ரணைந்து நீக்கப் பெறு

Koviloor Digital Library



Koviloor Digital Library

மையினால்=அந்தமறைகளை எடுத்து ஓதும் மிக்க அன்பையுடைய அந்தணரா கிய அடியார்கள் அடைந்து அத் திருக்காப்பை நீக்கத் தாம்பெறுதலின்மை யால்; அன்றுமுதலாகப்பின்னை ஒருபுடையோர் வாயிலமைத்தொழுகுந்தன் மை=அக்காலந்தொட்டுப் பின்னைநாட்களில் தென்பாலில் ஓர்பக்கம் ஓர்திரு வாயிலைவகுத்து போக்குவரவுசெய்யுந் தன்மையை; உயர்ந்தசண்பைத்திரும றையோர்தலைவர் உள்ளபடி கேட்டருளி வியப்பெய்திநின்று=மேன்மைமிக்க சீகாழியின்கணுள்ள அந்தணர் தலைவராகிய பிள்ளையார் உள்ளவாறு அங்குள் ளோரால் அதனைக்கேட்டருளி அதிசயம் அடைந்து நின்று; திருநாவுக்கரச ருக்குச் செப்புகின்றார்=திருநாவுக்கரசருடன் சொல்லுகின்றார்—எ-று.௫௮௦.

அப்பரே வேதவனத் தையர்தம்மை யபிமுகத்துத் திருவாயி றிற ந்துபுக்கே, யெப்பரிசும் நாமிறைஞ்ச வேண்டுநீரே யிவ்வாயி றிருக் காப்பு நீங்குமாறு, மெய்ப்பொருள்வண் டமிழ்பாடி யருளுமென்ன விளங்குமொழி வேந்தரது மேற்கொண்டென்னை, யிப்பரிசு நீரருளிச் செய்தீராகி லிதுசெய்வே னெனப்பதிக மெடுத்துப்பாட.

(இ-ள்.) அப்பரே வேதவனத்தையர் தம்மை அபிமுகத்துத் திருவா யில் திறந்துபுக்கு=அப்பரே வேதாரணியத்தி லெழுந்தருளிய மணவாளேச ரை (சன்னிதிக்கு) எதிர்முகமாயுள்ள திருவாயிலைத்திறந்து உள்ளேசென்று; எப்பரிசும் நாம் இறைஞ்சவேண்டும்=எவ்வகையாலும் நாம் வணங்கவேண் டும்; நீரே இவ்வாயில் திருக்காப்பு நீங்குமாறு மெய்ப்பொருள்வண் தமிழ் பாடி அருளுமென்ன=நீரே இந்தத்திருவாயிலின் திருக்காப்புநீங்கும்வண்ணம் உண்மைப் பொருள் வாய்ந்த வண்மையையுடைய திருப்பதிகம்பாடி யருளு மென்று அருளிச்செய்ய; விளங்குமொழிவேந்தர் அதுமேற்கொண்டு என்னை இப்பரிசுநீர் அருளிச் செய்தீராகில் இது செய்வேன் எனப் பதிகம் எடுத்துப் பாட=விளங்கிய திருநாவுக்கரசர் அதனை மேற்கொண்டு இத்தன்மையாக என்னைநோக்கி நீர் அருளிச்செய்திரெனில் பதிகம்பாடித்திறக்கும்இப்பணியை நான்செய்வேன் என்று திருப்பதிகம் எடுத்துப்பாடியருள—எ-று. (௫௮௧)

பாடியவப் பதிகப்பாட் டானபத்தும் பாடவிரம் பியபின்னும் பைம்பொன்வாயிற், சேடுயர்பொற் கதவுதிருக் காப்புநீங்காச் செய் கையினால் வாகீசர் சிந்தைநொந்து, நீடுதிருக் கடைகாப்பி லரிதுவே ண்டி நின்றெடுக்கத் திருக்கதவு நீக்கங்காட்ட, வாடியசே வடியார்த மடியார்விண்ணோ ரார்ப்பெழுந்த தகிலாண்ட மனைத்துமூழ்க.

(இ-ள்.) பாடியவப்பதிகப்பாட்டான பத்தும் பாடவிரம்பியபின்னும் =பாடியருளிய திருப்பதிகத்தின் செய்யுளான பத்தும் பாடும்படி திருப்பதி கம் முடிந்தபின்னும்; பைம்பொன்வாயிற்சேடுயர்பொற் கதவுதிருக்காப்புநீங் காச் செய்கையினால்=பசியபொன்னாலாகிய திருவாயிலில் மிகவும் உயர்ந்த

Koviloor Digital Library

பொற்கதவுகள் திருக்காப்பு நீங்காத செயலினால்; வாகீசர் சிந்தைநொந்து நீடுதிருக் கடைக்காப்பி லரிதவேண்டி நின்றெடுக்க=திருநாவுக்கரசர் மனம் நொந்து மேன்மைமிக்க அப்பத்தாம்பாடலாகிய திருக்கடைக்காப்பின் இரண்டாமடியில் "இரக்கமொன்றிலீர் எம்பெருமானிரே" என அரிதாகக்குறையிரந்து எடுத்தருள; திருக்கதவுநீக்கங்காட்ட=திருக்கதவின் திருக்காப்புநீங்க; அடியசேவடியார்தம் அடியார்விண்ணோர் ஆர்ப்பு அகிலாண்டம் அனைத்துமூழ்க எழுந்தது=பொன்னம்பலத்திலாடிய சிவந்ததிருவடியையுடைய சிவபெருமானாது அடியார்களும் தேவர்களும் செய்த ஆரவாரம் எல்லா வண்டங்களும் முழுகும்படி ஒலி மிக்கெழுந்தது—எ-று.

பாடி நிரம்பியவென்றது பாடநிரம்பிய பின்னும் என்றதனால் திருக்கடைக்காப்பின்முதலடிபாடிப் பத்தும் நிரம்பவும் திருக்காப்புநீங்காமையால் இரண்டாமடியில் அரிதவேண்டி நிற்கத் திருக்காப்பு நீங்கிற்றெனப் பொருள போந்தவாறு அறிக. (௫அ௨)

வேறு.


மற்றது கண்டபோதே வாக்கின்மன் னவரைநோக்கிப்
பொற்புக லியர்தம்மன்னர் போற்றிட வவரும்போற்றி
யற்புத நிலையினார்க ளணிதிரு மறைக்காடாளுங்
கொற்றவர் கோயில்வாயி னேர்வழி குறுகிப்புக்கார்.

(இ-ள்.) மற்றதகண்டபோதே=அத்திருக்கதவின் திருக்காப்பு நீங்கியதைக்கண்டபொழுது திருநாவுக்கரசரைப்பார்த்து; பொற்புகலியர்தம்மன்னர் போற்றிட அவரும்போற்றி = அழகிய சீகாழித்தலைவராகிய பிள்ளையார் துதிக்கஅவரும் உடன்வணங்கி; அற்புதநிலையினார்க ளணிதிருமறைக்காடாளும்=ஆச்சரியமான தெய்வத்தன்மையுடைய அவ்விருவரும் அழகிய திருமறைக்காட்டை ஆளுகின்ற; கொற்றவர் கோயில்வாயி னேர்வழி குறுகிப் புக்கார்=திருமணவாளேசரது திருக்கோயிலைத் திருவாயிலின் நேர்வழியில்சென்றடைந்தார்—எ-று. (௫அ௩)


கோயிலுட் புகுவாருச்சி குவித்தசெங் கைகளோடுந்
தாயிலு மினியதங்க டம்பிரா னாரைக்கண்டார்
பாயுநீ ரருவிகண்க டேங்கிடப் படியின்மீது
மேயின மெய்யராகி விதிர்ப்புற்று விரைவின்வீழ்ந்தார்.

(இ-ள்.) கோயிலுட்புகுவாருச்சி குவித்தசெங்கைகளோடும்=கோயிலுட்புக்க அவ்விருவரும் தமது உச்சியின்மேல் குவித்த சிவந்த திருக்கரங்களோடும்; தாயிலுமினியதங்கள் தம்பிரானாரைக்கண்டார் = தாயைப்பார்க்கிலும் தம்மிடத்தினியபற்றையுடைய தமதுபெருமானைத் தரிசித்தாராய்; பாயுநீரருவிகண்கள் தேங்கிட=பெருகுகின்ற ஆனந்த அருவியானது கண்களினின் றும்சிந்த; படியின்மீது மேயினமெய்யராகி விதிர்ப்புற்று விரைவின் விழ்ந்

Koviloor Digital Library



வேதங்கள் திருமறைக்காட்டில்- மறைக்காடடீசரைஅர்ச்சித்து
திருவாயலை திருக்காப்பிட்டுச்சென்றதைதிறக்கும்படிதிருஞானான
சம்பந்தசுவாமிகள்-அப்பரைவேண்டஅவர்தமிழ்வேதமோதி கதவை
திறந்தனர்.



அப்பர்சுவாமிகளால்திறக்கப்பட்டகதவுஎப்போதும்சாத்தவும்
திறக்கவுமிருக்கும்படி வாகீசர்ஸ்ரீஞானசம்பந்தரைவேண்ட-அவர்
திருநேறித்தமிழ்வேதமோதிச் சாத்தினர்.

Koviloor Digital Library

தார்=நிலத்தின்மேல் படிந்த திருமேனியை யுடையவராய் நடுக்குற்று விரைவுடன் பணிந்தார்கள்.—எ-று. (௫அ௪)

அன்பினுக் களவுகாணு ரானந்த வெள்ளமூழ்கி
யென்புநெக் குருகநோக்கி யிறைஞ்சிநேர் விழுந்துநம்பர்
முன்புநிற் பதுவுமாற்றூர் மொழிதடு மாறவேத்தி
மின்புரை சடையார்தம்மைப் பதிகங்கள் விளம்பிப்போந்தார்.

(இ-ள்.) அன்பினுக்களவுகாணு ரானந்தவெள்ளமூழ்கி=அன்பினுக்கு ஓரளவுகாணுத அவ்விருவரும் பேரின்பவெள்ளத்தில் ஆழ்ந்து; என்புநெக்குருக நோக்கி நேர்விழுந்து இறைஞ்சி=எலும்புகள் நெக்குருகும்படி தரிசித்துத் திருமுன்னேவிழுந்து வணங்கி; நம்பர்முன்புநிற்பதுவுமாற்றூர்=பெருமானுரது திருமுன் நிற்கவும் சகியாராய்; மொழிதடுமாறவேத்தி=மொழிகுழறத்துதித்து; மின்புரைசடையார்தம்மைப் பதிகங்கள் விளம்பிப் போந்தார்=மின்போலும் சடைமுடியையுடைய திருமணவாளேசரைத் திருப்பதிகங்கள்பாடியருளி ஆலயத்தினின்றும் புறம்பே போந்தருளினூர்—எ-று. (௫அ௫)

புறம்புவந் தணைந்தபோது புகலிகா வலரைநோக்கி
நிறங்கிளர் மணிக்கபாட நீங்கவு மடைப்புநிற்கத்
திறந்தவா றடைக்கப்பாடி யருளுநீ ரென்றூர்தீய
மறப்புரி யமணர்செய்த வஞ்சனை கடக்கவல்லார்.

(இ-ள்.) புறம்புவந்தணைந்தபோது புகலிகாவலரைநோக்கி=திருக்கோயிலின்புறம்பேவந்தடைந்தகாலத்தில் சீகாழித்தலைவராகியஆளுடையபிள்ளையாரைப்பார்த்து; தீயமறம்புரியமணர்செய்த வஞ்சனைகடக்கவல்லார்=கொடியகொடுந்தொழிலைச்செய்யும் சமணர்கள்செய்த வஞ்சனையைக் கடக்கவல்ல திருநாவுக்கரசர்; நிறங்கிளர்மணிக்கபாட நீங்கவும் அடைப்புநிற்கத் திறந்தவா றடைக்கப்பாடி யருளுநீரென்றூர்=ஒளிவிளங்கும் மணிகளழுத்திய திருக்கதவங்கள் நாடோறுந் திறக்கவும் அடைக்கவும் திறந்தவகைபோல் அடைபட நீர் பாடியருளுமென்று அருளிச்செய்தார்—எ-று. (௫அ௬)

அன்றர சருளிச்செய்ய வருமறைப் பிள்ளையாரும்
வென்றிவெள் விடையார்தம்மை விருப்பினுற் சதுரமென்னு
மின்றமிழ்ப் பதிகம்பாட லிசைத்திட விரண்டுபாலு
நின்றவக் கதவுகாப்பு நிரம்பிட வடைத்ததன்றே.

(இ-ள்.) அன்றரசருளிச்செய்ய அருமறைப்பிள்ளையாரும்=அப்போது ஆண்ட அரசர் அருளிச்செய்யுங்கால் அரியமறை ஞானத்தையுடைய ஆளுடைய பிள்ளையாரும்; வென்றிவெள் விடையார்தம்மை விருப்பினுற் சதுரமென்னும் இன்றமிழ்ப்பதிகம்பாட லிசைத்திட=வெற்றிபொருந்திய வெள்ளிய இடபத்தை வாகனமாகஉடைய திருமணவாளரை விருப்பத்தோடு சது

Koviloor Digital Library

ரம்மறை என்றும் இனியதிருப்பதிகத்தின் முதற்பாடலைப்பாடியருள ; இடண் போதுநின்ற அக்கதவுகாப்பு நிரம்பிட அடைத்தது=இருபக்கத்தும்நின்ற கதவுகள் நாடோறும் அடைக்கவும் திறக்கவும் காரணமாய்த் திருக்காப்பு நிரம்பவும் இடப்பட்டன—எ-று. (௫௮௭)

திருமறைக்காடு-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

சதுரம் மறைதான் றுதிசெய்து வணங்கு
மதுரம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
விதுநன் கிறைவைத் தருள்செய்த வெனக்குன்
கதவந் திருக்காப் புக்கொளுங் கருத்தாலே. (௧)

சங்கந் தரளம் மவைதான் கரைக்கெற்றும்
வங்கக் கடல்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
மங்கை யுமைபாகமு மாகவி தென்கொல்
கங்கை சடைமே லடைவித்த கருத்தே. (௨)

குரவங் குருக்கத்திகள் புன்னைகண் ஞாழன்
மருவும் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
சிரமும் மலருந் திகழ்செஞ் சடைதன்மே
லரவம் மதியோ டடைவித்த வழகே. (௩)

படர்செம் பவளத்தொடு பன்மலர் முத்தம்
மடலம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
வுடலம் முமைபங்கம தாகியு மென்கொல்
கடலஞ் சமுதா வதுவுண்ட கருத்தே. (௪)

வானோர் மறைமா தவத்தோர் வழிபட்ட
தேனார் பொழில்சூழ் மறைக்காட் டுறைசெல்வா
வேனோர் தொழுதேத்த விருந்தநீ யென்கொல்
கானார் கடுவே டுவனாக கருத்தே. (௫)

பலகாலங்கள் வேதங்கள் பாதங்கள் போற்றி
மலரால் வழிபாடுசெய் மாமறைக் காடா
வுலகே முடையாய் கடைதோறு முன்னென்கொ
லலசேர் பலிகொண் டதிலுண் டது தானே. (௬)

வேலா வலயத் தயலே மிளிர்வெய்துஞ்
சேலார் திருமா மறைக்காட் டுறைசெல்வா

Koviloor Digital Library

மாலோ டயனிந் திரனஞ்சமு னென்கொல்
காலார்சிலைக் காமனைக் காய்ந்த கருத்தே. (௭)

கலங்கொள் கடலோத முலாவு கரைமேல்
வலங்கொள் பவர்வாழ்த் திசைக்கும் மறைக்காடா
விலங்கை யுடையா னடர்ப்பட் டிடசெய்த
வலங்கல் விரலூன்றி யருள்செய்த வாறே. (௮)

கோனென்று பல்கோடி யுருத்திரர் போற்றுந்
தேனம் பொழில்சூழ் மறைக்காட் டுறைசெல்வா
வேனங் கழுகானவ ருன்னைமு னென்கொல்
வானந் தலைமண்டியுங் கண்டிலா வாறே. (௯)

வேதம் பலவோமம் வியந்தடி போற்ற
வோதம் முலவும் மறைக்காட் டிலுறைவா
வேதில் சமண்சாக்கியர் வாக்கிவை யென்கொ
லாதரொடு தாமலர் தூற்றிய வாறே. (௧௦)

காழிந் நகரான் கலைஞான சம்பந்தன்
வாழிம் மறைக்கா டனைவாய்ந் தறிவித்த
வேழின் னிசைமாலை யீரைந்திவை வல்லார்
வாழி யுலகோர் தொழவா னடைவாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - மறைக்காடீசர். தேவியார் - யாழைப்பழித்தமொழி [யம்மை.

அடைத்திடக் கண்டுசண்பை யாண்டகை யாருமஞ்சொற்
றொடைத்தமி ழாளியாருந் தொழுதெழத் தொண்டரார்த்தார்
புடைப்பொழிந் திழிந்தவெங்கும் பூமழை புகலிவேந்தர்
நடைத்தமிழ்ப் பதிகமாலை நிரம்பிட நவின்றுபோற்றி.

(இ-ள்.) அடைத்திடக்கண்டு சண்பையாண்டகையாரும் அஞ்சொற்றொடைத்தமிழாளியாரும்=திருக்கதவங்கள் அடைபட்டது கண்டு சீகாழியிலவதரித்த ஆளுடைய பிள்ளையாரும் அழகியசொற்றொடைகளையுடையதமிழ்க்கடலாகிய ஆண்டஅரசும்; தொழுதெழத்தொண்டர் ஆர்த்தார்=சிவபிரானை வணங்கி எழ அடியார்கள் அரவென ஆரவாரித்தார்கள்; புடைஎங்கும் பூமழைபொழிந்திழிந்த=பக்க விடங்கள் எங்கும் பூமழைசொரிந்து பொழிந்தன; புகலிவேந்தர் நடைத்தமிழ்ப்பதிகமாலைநவின்றுபோற்றி நிரம்பிட=சீகாழித் தலைவராகிய ஆளுடையபிள்ளையாரது நயம் மிகுந்த தமிழ்த் திருப்பதிகமாலையானது பாடித்துதித்து நிரம்ப—எ-று. (௫௮)

Koviloor Digital Library

அத்திரு வாயிறன்னி லற்றைநா டொடங்கிநேரே
மெய்த்திரு மறைகள்போல மேதினி புக்குப்போற்ற
வைத்தெதிர் வழக்கஞ்செய்த வரம்பிலாப் பெருமையோரைக்
கைத்தலங் குவித்துத்தாழ்ந்து வாழ்ந்தது கடல்சூழ்வையம்.

(இ-ள்.) அத்திருவாயில்தன்னில் அற்றைநாள்தொடங்கிநேரே=அந்தத்திருவாயிலில் அந்நாள்முதல் அபிமுகமாக; மெய்த்திரு மறைகள்போல மேதினிபுக்குப்போற்ற=மெய்ம்மையையுடைய அழகிய வேதங்கள்போல உலகிலுள்ளோர்புகுந்து துதிக்க; எதிர்வைத்து வழக்கஞ்செய்த வரம்பிலாப்பெருமையோரை=எதிர்காலத்துச் செய்துவைத்து அடைக்கத்திறக்க வழக்கத்தைச்செய்த அளவில்லாத பெருமையையுடைய ஆளுடைய பிள்ளையாரை; கைத்தலங் குவித்துத் தாழ்ந்து கடல்சூழ்வையம் வாழ்ந்தது=கைகளைச் சிரசின்மேல் குவித்துப் பூமியின்மேற்பணிந்துகடல் சூழ்ந்த அத்திருப்பதியிலுள்ளமக்கட்டொகுதி வாழ்வடைந்தது—எ-று.

எதிர்வழக்கஞ்செய்த வரம்பிலாப் பெருமையோரை என்புழி, மறைகள்போல எதிரேபுகுந்து துதிக்கவைத்து அடைக்கவுந்திறக்கவுஞ்செய்த பெருமையுடையோரை என்றுஉரைப்பிறும் அமையும். புகலிவேந்தரது தமிழ்ப்பதிகமாலை நவின்றுபோற்றி நிரம்பிட புக்குப்போற்றவைத்து எதிர் வழக்கஞ்செய்தஅப்பெருமையையுடைய பிள்ளையாரைக் கடல்சூழ்வையம்தாழ்ந்து வாழ்ந்ததெனக்கூட்டுக. (௫அ௯)

அருமறை யானவெல்லா மகலிரு விசும்பிலார்த்துப்
பெருமையின் முழங்கப்பஞ்ச நாதமும் பிறங்கியோங்க
விருபெருந் தகையோர்தாமு மெதிரெதி ரிறைஞ்சிப்போந்து
திருமடங் களின்முன்புக்கார் செழும்பதி விழவுகொள்ள.

(இ-ள்.) அருமறையானவெல்லா மகலிருவிசும்பிலார்த்துப் பெருமையின்முழங்க=அரியவேதங்களெல்லாம் அகன்ற பெரியஆகாயத்தில் முழங்கிப் பெருமையோடு ஆரவாரிக்க; பஞ்சநாதமும்பிறங்கி ஓங்க=தேவதுந்துபி ஐந்தும் மிக்கு ஒலிக்கவும்; இருபெருந் தகையோர்தாமு மெதிரெதி ரிறைஞ்சிப் போந்து=ஆண்ட அரசும் ஆளுடைய பிள்ளையாரும் ஆகிய பெருந்தகைமையையுடையா ரிருவரும் தம்முள் ஒருவரை யொருவர் எதிர்எதிரே வணங்கிச் சென்று; செழும்பதி விழவுகொள்ள திருமடங்களின் முன்புக்கார்=செழுமைபொருந்திய அத்திருப்பதியிலுள்ளோர் மங்கலவிழாக்கொள்ள தாம் எழுந்தருளி யிருக்கும் திருமடங்களின் முன் சென்றருளினார்—எ-று. (௫௯௦)

வேதங்க ளெண்ணில்கோடி மிடைந்துசெய் பணியைமிக்க
வேதங்க ணம்பானிப்பா ரிருவருஞ் செய்துவைத்தார்
நாதங்கொள் வடிவாய்நின்ற நதிபொதி சடையார்செய்ய
பாதங்கள் போற்றுமேலோர் பெருமையார் பகருநீரார்.

Koviloor Digital Library

(இ-ள்.) வேதங்களெண்ணில்கோடி மிடைந்துசெய்பணியை=அளவில்லாத வேதங்கள் நெருங்கித் திருக்காப்பு திறக்கவும் செய்யவும் செய்யும்பணியை; மிக்க ஏதங்கள் நம்பானீப்பார் இருவருஞ் செய்துவைத்தார்=நம்மிடத்தில் மிக்க குற்றங்களை நீக்கியருளும் இவ்விருவரும் செய்துவைத்தார்கள்; நாதங்கொள் வடிவாய்நின்ற நதிபொதி சடையார்=சூக்குமநாதமே தமக்கு திருமேனியாகக்கொண்ட கங்காநதிபொருந்திய சடைமுடியையுடைய சிவபெருமானுரது; செய்ய பாதங்கள்போற்று மேலோர் பெருமையார் பகருநீரார்=சிவந்த திருவடிகளை வணங்கும் இவ்வடியாரது பெருமையை எவர்அளவறுத்துச் சொல்லவல்லவர்கள்—எ-று.

நாதமென்றது, சூக்குமை பைசந்தி மத்திமை வைகரிஎன்னும் நான்கு வாக்குகட்குக் காரணமான அதிசூக்குமை வாக்கென்னும் பிரதானநாதத்தை என்க. அந்நாதகாரியமான வேதங்கள் செய்யத்தக்க தொழில்செய்வதற்கு நாதரூபியான சிவபிரானை வணங்கும் அடியார்க்கு ஏற்குமாகலின், அவர்திருவடிகளைப்போற்றும் மேலோரது பெருமை எடுத்தோதாச் சிறப்பிற்றெனப் போந்தவாறுகாண்க. (௫௧௧).

திருமறை நம்பர்தாமுன் பருள்செய்த வதனைச்செப்பும்
ஒருமையி னின்றதொண்டர் தம்பிரா னுர்பாலொக்க
வருமருட் செய்கைதாமே வகுத்திட வல்லோரென்றூற்
பெருமறை யுடன்மெய்த்தொண்டர்க் கிடையீடு பெரிதாமன்றே.

(இ-ள்.) திருமறைநம்பர்தா முன்பருள்செய்த=வேதங்கள் சிவபிரான் அருளிச்செய்தனவாம்; அதனைச்செப்பும் ஒருமையி னின்றதொண்டர்= அவ்வேதங்களின்தாற்பரியங்களைஅமைத்துத் தமிழ்வேதமாக்கூறும் ஒருமைப்பாட்டில் நிலைபெற்ற ஆளுடையபிள்ளையார்; தம்பிரானுர்பாலொக்க வரும் அருட்செய்கைதாமே வகுத்திடவல்லோரென்றூல்=சிவபிரானிடத்துப் பொருந்திய அருளின்செய்கையைத் தாமே வகுக்கவல்லவ ராளுல்; பெருமறையுடன் மெய்த்தொண்டர்க் கிடையீடு பெரிதாம்=பெரியவேதங்களுடன் ஆளுடையபிள்ளையார்க்கும் எனக்கும் வேறுபாடு பெரிதாம்—எ-று.

வேதங்கள் அவருளத்துக் கலந்திருத்தலிற் பெருமறையுட னென்றூர். சிவபிரான் ஆதியிலருளிய வேதப்பொருளைத் தமிழிலருளிச்செய்யும் பிள்ளையார் சிவபிரான்போல் அருட்செய்கை செய்யவல்லவர்; அதனுல், அவர்க்கு எளிதிலடைக்கப்பட்டது; அம்மறையோடுகூடப் பிள்ளையார்க்கும் எனக்கும் வேறுபாடு பெரிதுண்மையின் அரிதிற் றிறக்கப்பட்டதென்று ஆண்ட அரசர் கருதினு ரென்பது கருத்து. (௫௧௨)

இவ்வகை திருமறைக்காட் டிறையவ ரருளையுன்னி
மெய்வ்வகை தெரிந்தவாக்கின் வேந்தர்தாந் துயிலும்போதின்
மைவ்வளர் கண்டர்சைவ வேடத்தால் வந்துவாய்மூ
ரவ்விடை யிருத்துமங்கே வாவென்றங் கருளிப்போக.

Koviloor Digital Library

(இ-ள்.) இவ்வகை திருமறைக்காட் டிறையவ ரருளையுன்னி=இவ்வாறு வேதாரண்ணியத்தி லெழுந்தருளிய மணவாளேசரது திருவருளைக் கருதி; மெய்வகை தெரிந்தவாக்கின் வேந்தர் தாந் துயிலும் போதில்=உண்மைஞானத்தின் வகைமையை உணர்ந்த வாகீசர் துயில்கூர்ந்தருளுங்காலத்தில்; மைவளர்கண்டசைவ வேடத்தால்வந்து=கருமைபொருந்திய கண்டத்தையுடைய மணவாளேசர் சைவவேடத்தோடுவந்தருளி; வாய்மூரவ்விடை இருத்தும் அங்கே வாவென்றங் கருளிப்போக=திருவாய் மூரென்னும் திருப்பதியில் நாமிருப்போம் அங்கே வருவாயாக என்று திருவருள்செய்து முன்புசென்றருள—எ-று. (௫௬௩)

கண்டவப் போதேகைகள் குவித்துடன் கடிதுசெல்வார்
மன்டிய காதலோடு மருவுவார் போன்றுங்காணு
ரெண்டிசை நோக்குவாருக் கெய்துவார் போலவெய்தா
வண்டர்தம் பிரானுர்தம்பின் போயினு ரார்வத்தோடும்.

(இ-ள்.) கண்டவப்போதே கைகள் குவித்துடன் கடிதுசெல்வார்=தரிசித்த அப்பொழுதே திருக்கரங்களைக்குவித்துச்சிவபெருமானோடு விரைந்து பின்சென் றருளும் ஆண்டஅரசர்; மன்டியகாதலோடு மருவுவார்போன்றுங் காணுர்=நிறைந்த பெருவிருப்போடும் சமீபிப்பார்போன்று அவரைக் காணுராய்; எண்டிசை நோக்குவாருக் கெய்துவார் போலவெய்தா=எட்டுத்திக்கையும் நோக்கும்அவ்வாண்டஅரசுக்குக்கிட்டுவார்போலத்தோன்றிக்கிட்டாத அண்டர்தம்பிரானுர்தம்பின் போயினுர் ஆர்வத்தோடும்=தேவர்பிரான் பின்னே ஆசையோடுஞ் சென்றருளினுர்—எ-று. (௫௬௪)

அங்கவ ரேகச்சண்பை யாண்டகை யாருமப்ப
ரெங்குற்ற தென்றுகேட்ப வெய்தினுர் திருவாய்மூரிற்
பொங்கிய காதலாலென் றுரைத்திடப் போனதன்மை
சங்கையுற் றென்கொலென்று தாமுமங் கணையப்போந்தார்.

(இ-ள்.) அங்கவரேகச்சண்பை யாண்டகையாரும்=அத்திருவாமூர்க்கு வாகீசர் சென்றருளச் சீகாழியி லவதரித்த ஆளுடையபிள்ளையாரும்; அப்பரெங்குற்றதென்றுகேட்ப=அப்பமூர்த்தி எவ்விடத்துச்சென்றதென்று வினவியருள; திருவாய்மூரிற் பொங்கியகாதலால் எய்தினுரென்று உரைத்திட=திருவாய்மூரிற் பொருந்திய விருப்பால் சென்றருளினுர் என்றுகூற; என்கொலென்று சங்கையுற்று தாமுமங்கணையப்போந்தார்=வாகீசர்சென்ற தன்மை யாதுகாரணமோவென்று ஐயுற்று ஆளுடையபிள்ளையாரும் அத்திருப்பதியை அடையச் சென்றருளினுர்—எ-று. (௫௬௫)

அங்கிலே யணைந்தபோதி லம்பிகை யுடனேகூட
மன்னிய வாடல்காட்டத் தளரிள வளரும்பாடிச்

Koviloor Digital Library

சென்னியால் வணங்கிவாய்மூ ரரசொடுஞ் சென்றுபுக்கங்
கின்னியல் புறமுன்கூடி யிருவரும் போற்றிசெய்தார்.

(இ-ள்.) அந்நிலையிணைந்தபோதி லம்பிகையுடனேகூட மன்னிய வா டல்காட்ட=அத்திருப்பதியில் சென்றருளியகாலத்து உமாதேவியாரோடுகூட நிலைபெற்ற திருநடனத்தைக் கொடுத்தருள; தளிரிளவளரும்பாடிச் சென்னி யால்வணங்கி=தளிரிளவளரென அடிஎடுத்துத் திருப்பதிகம்ஓதித் தமது சிரத் தால்வணங்கி; வாய்மூரரசொடுஞ் சென்றுபுக்கு=திருவாய்மூருக்கு ஆண்ட அரசுடன் சென்றடைந்து; அங்கு இன்னியல்புறமுன்கூடி யிருவரும் போற் றிசெய்தார்=அத்திருப்பதியில் இனிய இயல்புபொருந்தத் திருமுன் கூடிநின்று வாய்மூரீசரை அவ்விருவரும் துதித்தார்கள்—எ-று. (௫௬௬)

திருவாய்மூர் - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

தளிரிளவளரென வுமைபாடத் தாளம்மிடவோர் கழல்வீசிக்
கிளரிளமணி யரவரையார்த் தாடும்வேடக் கிறிமையார்
விளரிளமுலையவர்க் கருணல்கி வெண்ணீறணிந்தோர் சென்னிமேல்
வளரிளமதிய மோடிவராணீர் வாய்மூரடிகள் வருவாரே.

திங்களொடருவரைப் பொழிற்சோலைத் தேனலங்கானலந் திருவாய்
அங்கமொடருமறை யொலிபாட லழனிறவண்ணர்தம் மடிபரவி[மூர்
நங்கடம்வினைகெட மொழியவல்ல ஞானசம்பந்தன் றமிழ்மாலை
தங்கியமனத்தினாற் றொழுதெழுவார் தவநெறியுலகுக்கோர் தவநெறி
திருச்சிற்றம்பலம். [யே.

சுவாமிபெயர் - வாய்மூரீசர். தேவியார் - பாலினுநன்மொழியம்மை.

நீடுசீர்த் திருவாய்மூரி னிலவிய சிவனார்தம்மைப்
பாடுசொற் பதிகந்தன்னாற் பரவியப் பதியில்வைகிக்
கூடுமெய் யன்புபொங்க விருவருங் கூடமீண்டு
தேடுமா மறைகள்கண்டார் திருமறைக் காடுசேர்ந்தார்.

(இ-ள்.) நீடுசீர்த்திருவாய்மூரி னிலவிய சிவனார்தம்மை=அளவில்லா த புகழையுடைய திருவாய்மூரில் விளங்கிய வாய்மூரீசரை; பாடுசொற்பதி கந்தன்னாற் பரவியப்பதியில்வைகி=பாடப்பட்ட சொல்லாலாய திருப்பதிகத் தால் துதித்து அத்திருப்பதியில் எழுந்தருளி; கூடுமெய் யன்புபொங்க விருவ ருங்கூடமீண்டு=தம்மோடுபொருந்திய மெய்யன்பு மேம்பட ஆண்ட அரசும் பிள்ளையாருங்கூட அத்திருப்பதியினின்று மீண்டருளி; தேடுமாமறைகள் க ண்டார் திருமறைக்காடு சேர்ந்தார்=ஆராயும்பெரிய வேதங்களால் பூசிக்கப் பட்ட மணவாளேசரது திருமறைக்காடென்னுந் திருப்பதியை அடைந்தருளி னார்—எ-று. (௫௬௭)

Koviloor Digital Library

சண்பைநா டுடையபிள்ளை தமிழ்மொழித் தலைவரோடு
மண்பயில் கீர்த்திச்செல்வ மாமறைக் காடுமேவிக்
கண்பயி னெற்றியார்தங் கழலிணை பணிந்துபோற்றிப்
பண்பயில் பதிகம்பாடிப் பரவியங் கிருந்தாரன்றே.

(இ-ள்.) சண்பைநாடுடையபிள்ளை தமிழ்மொழித்தலைவரோடு=சீகாழித்திருப்பதியையுடைய ஆளுடையபிள்ளையார் திருநாவுக்கரசருடன்; மண்பயில் கீர்த்திச்செல்வ மாமறைக்காடுமேவி=மண்ணுலகில் நிறைந்த கீர்த்தியையும் செல்வத்தையுமுடைய பெரியவேதாரணியத்தி லெழுந்தருளி யிருந்து; கண்பயினெற்றியார்தங் கழலிணை பணிந்துபோற்றி=கண்பொருந்திய நெற்றியையுடைய மணவாளேசரது திருவடிகளைவணங்கித் துதித்து; பண்பயில் பதிகம்பாடிப் பரவியங் கிருந்தார் = பண்பொருந்திய திருப் பதிகங்களைப் பாடித்துதித்து அத்திருப்பதியில் எழுந்தருளி யிருந்தார்கள்—எ-று. (௫௧௮)

திருமறைக்காடு-பண்-பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பொங்குவெண்மணற் கானற் பொருகடற் றிரைதவழ் முத்தங்
கங்குலாரிருள் போழுங் கலிமறைக் காடமர்ந் தார்தாந்
திங்கள்சூடின ரேனுந் திரிபுர மெரித்தா ரேனு
மெங்குமெங்கள் பிரானார் புகழல திகழ்பழி யிலரே.

மையுலாம்பொழில் சூழ்ந்த மாமறைக்காடமர்ந் தாரைக்
கையினாற்றொழு தெழுவான் காழியுண் ஞானசம் பந்தன்
செய்தசெந்தமிழ் பத்துஞ் சிந்தையுட் சேர்க்க வல்லார்போய்ப்
பொய்யில்வானவ ரோடும் புகவலர் கொளவலர் புகழே.

திருச்சிற்றம்பலம்.

இவ்வகை யிவர்களங்க ணிருந்தன ராகவிப்பாற்
செய்வகை யிடையேதப்புந் தென்னவன் பாண்டிநாட்டு
மெய்வகை நெறியினில்லா வினையமண் சமயமிக்குக்
கைவ்வகை முறைமைத் தன்மை கழியமுன் கலங்குங்காலை.

(இ-ள்.) இவ்வகையிவர்க ளங்கணிருந்தனராக=இவ்வாறாக ஆண்டவரசும் ஆளுடையபிள்ளையாரும் ஆகிய இவ்விருவரும் அவ்விடத்திலிருக்க; இப்பாற்செய்வகை யிடையேதப்புந் தென்னவன்பாண்டிநாட்டு=இதன்மேல் செய்யும் விதிவழியை இடையே தப்பிய தென்னவனது பாண்டிநாட்டில்; மெய்வகை நெறியினில்லா வினையமண்சமயமிக்கு = குடிகள் தாம்செய்யும் மெய்யொழுக்க வகையையான மார்க்கத்தினில்லாமல் தீத்தொழிலைச்செய்யும் ஆருகத சமயம் எங்கும்பரவி; கைவ்வகைமுறைமைத் தன்மைகழிய முன்கலங்

Koviloor Digital Library

குங்காலே=ஒழுக்கவகைமையான நீதித்தன்மையானது நீங்க முன்னேகலந்தி இருக்குங்காலத்து—எ-று.

பாண்டியன் சமணர்போதனையால் சைவவைதிக நெறியில் வழுவினு னன்றிப் பரம்பரையால் வழுவினவனன்றென்பார், செய்வகை இடையே தப் பும் தென்னவன்என்றும், சமணர் வைதிகசைவநெறிக்குப்புறப்புறமாய்த் தீய ஒழுக்க முடையரென்பார், மெய்வகை நெறியினில்லா வினையமண் சமயமெ ன்றும், அரசன் அச்சமயத்தி னிற்றலால் அரசன் வழித்தாய அந்நாட்டுள் ளாரும் தம் ஒழுக்க முறைமை நீங்கினரென்பார், கைவகை முறைமைத் தன் மைகழிய என்றுங் கூறினர். (௬௯௯)

தென்னவன் றானுமுன்செய் தீவினைப் பயத்தினாலே
யந்நெறிச் சார்வுதன்னை யறமென நினைந்துநிற்ப
மன்னிய சைவவாய்மை வைதிக வழக்கமாகு
நன்னெறி திரிந்துமாறி நவைநெறி நடந்ததன்றே.

(இ-ள்.) தென்னவன்றானு முன்செய் தீவினைப் பயத்தினால்=பாண் டியனும் முற்பிறப்பிற்செய்த தீவினைப்பயனால்; அந்நெறிச்சார்வுதன்னை அற மென நினைந்துநிற்ப=அவ்வருகசமய வழிச்சார்பையே நல்லறமெனக் கரு தி அந்நெறியில்நிற்க; வாய்மைமன்னிய சைவவைதிகவழக்கமாகும் நன்னெ றிதிரிந்துமாறி=உண்மை நிலைபெற்ற சைவ ஒழுக்கம் வைதிகஒழுக்கம் ஆகிய நன்மார்க்கங்கள் மாறுபட்டுத்திரிந்து; நவைநெறி நடந்தது = குற்றமாகிய அருகசமயமார்க்கம் எங்கும் பரவியது—எ-று.

சைவநெறி சமயவிசேட நிருவாணமென்னும் மூவகை சமற்காரமு டையதாய், சரியை கிரியை யோகம் ஞானமென நான்கு பகுப்புடைத்தாய் நித்தியநைமித்திக காமியமென்னும் கன்மபேதங்களையும் வைதிகம் சிரௌவு தம் சுமார்த்தம் என்னும் இருபகுப்புடையதாய், நித்திய நைமித்திக காமிய மென்னும் கன்மபேதங்களையும் உடைமையிற்சைவவைதிக வழக்கமாகும் நன் னெறி என்றார். (௭௦௦)

பூழியர் தமிழ்நாட்டுள்ள பொருவில்சீர்ப் பதிகளெல்லாம்
பாழியு மருகர்மேவும் பள்ளிகள் பலவுமாகிச்
சூழிருட் குழுக்கள்போலத் தொடைமயிற் பீலியோடு
மூழிநீர் கையிற்பற்றி யமணரே யாகிமொய்ப்ப.

(இ-ள்.) பூழியர் தமிழ்நாட்டுள்ள பொருவில்சீர்ப் பதிகளெல்லாம்= பாண்டியர்களது தமிழ்நாட்டின்கணுள்ள ஒப்பிலாத சிறப்பினையுடைய ஊர்க ளெல்லாம்; பாழியுமருகர்மேவும் பள்ளிகள் பலவுமாகி=சமண கோயிலும் சமண முனிவர்கள்வசிக்கும் பள்ளிகளும் பலவாகி; சூழிருட் குழுக்கள்போ லத் தொடைமயிற்பீலியோடு=நெருங்கிய இருட்கூட்டங்கள்போலக் கட்டிய

Koviloor Digital Library

மயிற்பீலிக்கற்றையோடு; மூழிநீர் கையிற்பற்றி அமணரே யாகிமொய்ப்ப= கமண்டலநீரைக் கையிற்முங்கிச் சமணரேயாகி எங்கும்நெருங்க—எ-று.

பிரகிருதத்தில் மூழிஎன்றது கமண்டலம். பாழிஎன்றது அருகன்கோயில்.

பறிமயிர்த் தலையும்பாயும் பீலியுந் தடுக்குமேனி
செறியுமுக் குடையுமாகித் திரிபவ ரெங்குமாகி
யறியுமச் சமயநூலி னளவினி லடங்கிச்சைவ
நெறியினிற் சித்தஞ்செல்லா நிலைமையி னிகழுங்காலை.

(இ-ள்) பறிமயிர்த்தலையும்பாயும்பீலியுந்தடுக்கும்=மயிர்பறித்ததலையும் உடுத்தபாயும் பிடித்தமயிற்கற்றையும் இடுக்கியதடுக்கும்; மேனிசெறியுமுக்குடையுமாகித் திரிபவர் எங்குமாகி = தம் உடம்பு மார்பு நெற்றி தோள் முதலிய இடங்களில் அடையாளமாக எழுதியஅருகனது முக்குடையுமாய் எவ்விடத்தும் சஞ்சரிக்கின்றசமணர்கள்; அறியுமச்சமயநூலின் அளவினிலடங்கி= அவர் மெய்யாய் அறிந்த புறச்சமயமாகிய அவ்வாருகதநூல் பிரமாணத்தில் அடங்கி; சைவநெறியினிற் சித்தஞ் செல்லா நிலைமையி னிகழுங்காலை=வேதசாரமாகிய சைவமார்க்கத்தில் மனஞ்செலுத்தாத நிலைமையால் பாண்டிநாட்டுள்ளார் இருக்குமிடத்து—எ-று.

தடுக்கு=மூங்கிலாற் செய்தபாய்; அது தட்டை யிடுக்கி யென்பதனு ணர்க. முக்குடை=பொன்னாலும் மணியாலும் முத்தாலும் ஓர்காம்பிற் செய்த அருகக்கடவுளது குடை. (௬௦௨.)

வரிசிலைத் தென்னவன்று னுய்தற்கு வளவர்கோமான்
றிருவுயிர்த் தருளுஞ்செல்வப் பாண்டிமாதேவியாருங்
குரைகழ லமைச்சனாராங் குலச்சிறை யாருமென்னு
மிருவர்தம் பாங்குமன்றிச் சைவமங் கெய்தாதாக.

(இ-ள்.) வரிசிலைத்தென்னவன்று னுய்தற்கு=வரிந்து கட்டிய வில்லையுடைய பாண்டியராசன் ஈடேற; வளவர்கோமான்றிருவுயிர்த்தருளுஞ்செல்வப்பாண்டிமாதேவியாரும்=சோழராசன் மங்கலமாகப்பெற்றருளிய செல்வப்புத்திரியாகிய பாண்டிமா தேவியாரும்; குரைகழலமைச்சனாராங் குலச்சிறையாருமென்னும்=ஒலிக்கும் வீரக்கழலையணிந்த மந்திரியாராகிய குலச்சிறைநாயனாரும் என்றுகூறும்; இருவர்தம்பாங்குமன்றிச் சைவமங்கெய்தாதாக= இவ்விருவரிடத்து மல்லாமல் சைவமார்க்கம் அந்நாட்டில் வழங்கா திருக்க—எ-று. (௬௦௩)

ஆங்கவர் தாங்களங்க ணரும்பெறற் றமிழ்நாடுற்ற
தீங்கினுக் களவுதேற்றாச் சிந்தையிற் பரிவுகொண்டே
யோங்கிய சைவவாய்மை யொழுக்கத்தி னின்றதன்மை
பூங்கழற் செழியன்முன்பு புலப்படா வகைகொண்டுய்த்தார்.

Koviloor Digital Library

(இ-ள்.) ஆங்கவர்தாங்களங்க ணரும்பெறத் தமிழ்நாடுற்ற=அவ்விருவரும் அவ்விடத்துப் பெறுதற்கரிய பாண்டிநாட்டில் அடுத்த; தீங்கினுக்களவு தேற்ருச் சிந்தையிற் பரிவுகொண்டு=சமண்புகுதலாலாகிய கேட்டுக்கு எல்லையை அறியாமல் தமது மனதிற் றுன்பங்கொண்டு; ஓங்கிய சைவவாய்மையொழுக்கத்தினின்றதன்மை=தாமிருவரும் உயர்ந்தசைவமாகிய மெய் ஒழுக்கத்தில் நின்றமையை; பூங்கழற் செழியன்முன்பு புலப்படா வகைகொண்டுய்த்தார்=பொலிவுபொருந்திய பாண்டியன் முன்பு தம் உண்மை அறியாவகை அனுட்டித்து வந்தார்கள்—எ-று-

தீங்கினுக்கு அளவுஎன்றது, தீங்கை நீக்குதற்கு உரியகாலவளவென்க.

பாண்டியன் தம்போல் அவர்சமணநெறி நில்லாது சைவநெறிநிற்றலை உணர்வானேல் வெகுளுமாதலின் புலப்படாவகைகொண்டுய்த்தார் என்ருர்()

இந்நெறி யொழுகுகின்ரு ரேழுல குய்யவந்த
மன்னிய புகலிவேந்தர் வைதிக வாய்மைச்சைவச்
செந்நெறி விளக்குகின்ருர் திருமறைக் காடுசேர்ந்த
நன்னிலை கன்னிநாட்டு நல்வினைப் பயத்தாற்கேட்டார்.

(இ-ள்.) இந்நெறியொழுகுகின்ருர் =(இவ்வாறு தாம் சைவநெறியில் நிற்கும் தன்மை) பாண்டியன் புலப்படாவகை நடக்கும் அவ்விருவரும்; ஏழுலகுய்யவந்த மன்னியபுகலிவேந்தர் = ஏழுலகங்களும் ஈடேற நிலைபெற்ற சீகாழியிலவதரித்த ஆளுடையபிள்ளையார்; வைதிகவாய்மைச் சைவச்செந்நெறிவிளக்குகின்ருர்=வேதத்தின் உண்மையான சைவமென்னும் நன்னெறியை விளக்குகின்றவராய்; திருமறைக்காடு சேர்ந்த நன்னிலை கன்னிநாட்டு நல்வினைப்பயத்தாற்கேட்டார்=வேதாரண்ணியத்தை அடைந்தருளிய நல்ல நிலைமையைப் பாண்டிநாட்டார்செய்த புண்ணியத்தால் கேள்விப்பட்டார்—எ-று.

சைவம், வேதாசாரமாதலில் வைதிகவாய்மை என்றும், செந்நெறி என்றும் அடைகொடுத்தார். பாண்டி நாட்டுள்ளார்க்குச் சமண்நீத்துய்யும் புண்ணியபரிபாகம் வருதலின் நல்வினைப்பயத்தாலென்ருர். (௬௦௫)

கேட்டவப் பொழுதேசிந்தை கிளர்ந்தெழு மகிழ்ச்சிபொங்க
நாட்பொழு தலர்ந்தசெந்தா மரைநகை முகத்தராகி
வாட்படை யமைச்சனரு மங்கையர்க் கரசியாரும்
சேட்படு புலத்தாரோனுஞ் சென்றடி பணிந்தாரொத்தார்.

(இ-ள்.) கேட்டவப்பொழுதேசிந்தை கிளர்ந்தெழு மகிழ்ச்சிபொங்க=கேட்ட அக்கணமே மனதில் மேம்பட்டெழும் மகிழ்ச்சியானது அதிகரிக்க; நாட்பொழுதலர்ந்த செந்தாமரை நகைமுகத்தராகி=அன்றலர்ந்த செந்தாமரை மலர்போலும் ஒளிபொருந்திய முகத்தையுடையராய்; வாட்படையமைச்சனரும் மங்கையர்க்கரசியாரும்=வாட்படையேந்திய குலச்சிறை நாயனரும் மங்கையர்க்கரசியாரும்; சேட்படுபுலத்தாரோனுஞ் சென்றடி பணிந்

Koviloor Digital Library

தாரோத்தார்=தூரதேசத் துள்ளவராயிறும் சமீபத்திற்சென்று பிள்ளையார் திருவடிகளை வணங்கினவரை ஒத்தார்—எ-று.

நன்னெறியாகிய வைதிக சைவமார்க்கத்தை விளக்கும் பிள்ளையார் திருமறைக்காட்டிலெழுந்தருளினரென அவரது உண்மைத்தன்மை கேட்ட பொழுதே தாம் தூரத்தாராயிறும் தங்கருத்து முற்றியதென அவர் கன்று நிற்கும் உவகை மிகுதி அங்குச்சென்று அடிபணிந்தாரோடொத்தலிற் சேட்படு புலத்தாரேறுஞ் சென்றடிபணிந்தாரொத்தாரென்றார். (௩௭௬)

காதலான் மிக்கோர்தாங்கள் கைதொழுங் கருத்தினாலே
போதவிழ் சோலைவேலிப் புகலிகா வலனார்செய்ய
பாதங்கள் பணிமினென்று பரிசன மாக்கடம்மை
மாதவஞ் சுருதிசெய்த மாமறைக் காட்டில்விட்டார்.

(இ - ள்.) காதலான்மிக்கோர்தாங்கள் கைதொழுங் கருத்தினால்=விருப்பத்தில் மேம்பட்ட அவ்விருவரும் தாம் அப்பிள்ளையாரை வணங்குங் கருத்தால்; போதவிழ் சோலைவேலிப் புகலிகாவலனார்செய்ய பாதங்கள் பணிமினென்று=பூக்கள் அலர்ந்தசோலை சூழ்ந்த சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையாரது திருவடிகளை வணங்குங்களென்று; பரிசனமாக்கள் தம்மை மாதவஞ்சுருதிசெய்த மாமறைக்காட்டில்விட்டார்=பரிசனங்களை பெரிய தவத்தை வேதங்கள்செய்த பெருமையையுடைய திருமறைக்காட்டிற்கு அனுப்பினார்கள்—எ-று. (௩௭௭)


ஆங்கவர் விடமுன்போந்த வறிவுடை மாந்தரங்க
ணீங்கிவண் டமிழ்நாட்டெல்லை பிற்பட நெறியினேகி
ஞாங்கர்நீர் நாடுங்காடு நதிகளுங் கடந்துவந்து
தேங்கமழ் கைதைநெய்தற் றிருமறைக் காடுசேர்ந்தார்.

(இ-ள்.) ஆங்கவர்விட முன்போந்த வறிவுடைமாந்தர்=அவ்விடத்து அவ்விருவரும் அனுப்ப முன்னேசென்ற அறிவு மிக்க பரிசனங்கள்; அங்கணீங்கி வண்டமிழ் நாட்டெல்லை பிற்படநெறியினேகி=அவ்விடத்து நின்று நீங்கி வளப்பத்தையுடைய பாண்டிநாட்டெல்லை பிற்படும்படி சோழநாட்டின்வழியேசென்று; ஞாங்கர் நீர்நாடுங்காடு நதிகளுங் கடந்துவந்து = அந்நாட்டின் அருகின் உள்ள நீர்வளம்பொருந்திய நாடுகளையும் காடுகளையும் நதிகளையும் நீங்கிப்போய்; தேங்கமழ் கைதைநெய்தற் றிருமறைக்காடுசேர்ந்தார்=தேன்கமழுகின்ற தாழைகள் சூழ்ந்த நெய்தநிலத்திலுள்ள வேதாரணியமென்னுந் திருப்பதியை அடைந்தார்கள்—எ-று.

அவர்க்குக் காரியம் முடித்தற்குரிய உணர்வு மிகுதிதோன்ற அறிவுடைமாந்தரென்றும், அவர்செலவின் விரைவுதோன்ற தமிழ்நாட்டெல்லை பிற்பட என்றுங்கூறினர். (௩௭௮)

திருமறைக் காடெண்ணிச் சிரபுர நகரில்வந்த
வருமறைத் தலைவனாங் கமர்ந்திருந் தருளுஞ்செல்வப்

Koviloor Digital Library



மங்கையர்க்கரசியாரும்-குலச்சிறையாரும்பாண்டிநாட்டில்சைவம்குன்றி-சமணபெருகியதைசகியாதவாய்
ஸ்ரீசம்பந்தசுவாமிகள்.திருமறைக்காட்டிலிருக்குஞ்செய்தியரிந்துபாங்கியர்களைசுவாமிகளிடம்அனுப்பினல்

Koviloor Digital Library

பெருமடத் தணைபவந்து பெருகிய விருப்பிற்றாங்கள்
வருமுறைத் தன்மையெல்லாம் வாயில்கா வலர்க்குச்சொன்னார்.

(இ-ள்.) திருமறைக்காடெண்ணி = வேதாரண்ணியமென்னுந் திருப்பதியை அடைந்து; சிரபுரநகரில்வந்த அருமறைத்தலைவனா ரங்கமர்ந்திருந் தருளுஞ் செல்வப்பெருமடத்தணையவந்து = சீகாழிநகரில் அவதரித்த அரிய வேதமுதல்வராகிய ஆளுடையபிள்ளையார் எழுந்தருளி இருக்கும் செல்வமிக்க பெரிய திருமடத்தைப் பொருந்தவந்து; பெருகியவிருப்பிற்றாங்கள் வருமுறைத்தன்மையெல்லாம் வாயில்காவலர்க்குச்சொன்னார் = மிக்கவிருப்பத்தால் தாங்கள் அங்குவந்த தன்மைகளையெல்லாம் வாயில் காவல்செய்யும் அடியார்க்கு அவர்கள் சொன்னார்கள்—எ-று. (௬௦௯)

மற்றவர் சென்றுபுக்கு வளவர்கோன் மகளார்தென்னர்
கொற்றவன் றேவியாருங் குலச்சிறை யாருமேவப்
பொற்கழல் பணியவந்தோ மெனச்சிலர் புறத்துவந்து
சொற்றன ரென்றுபோற்றித் தொழுதுவிண் ணப்பஞ்செய்தார்.

(இ-ள்.) மற்றவர்சென்றுபுக்கு=அவ்வாயிலாளர் திருமடத்தின் உள்ளேபுகுந்து; வளவர்கோன்மகளார்தென்னர் கொற்றவன் றேவியாரும்=சோழராசன் புத்திரியாகிய பாண்டிமாதேவியாரும்; குலச்சிறையாருமேவ = மந்திரியாகிய குலச்சிறை நாயனாரும் எங்களை ஏவுதலால்; பொற்கழல் பணியவந்தோ மெனச்சிலர்புறத்துவந்து சொற்றனரென்று = அழகிய திருவடிகளை வணங்கவந்தோமென்று சிலர் திருவாயிலின் புறத்துவந்து சொன்னார்களென்று; போற்றித்தொழுது விண்ணப்பஞ்செய்தார்=பிள்ளையாரைத்துதித்துப்பணிந்து விண்ணப்பஞ்செய்தார்கள். (௬௧௦)

புகலிகா வலர்தாங்கேட்டுப் பொருவிலா வருண்முன்கூர
வகமலர்ந் தவர்கடம்மை யழையுமென் றருளிச்செய்ய
நகைமுகச் செவ்விநோக்கி நற்றவ மாந்தர்கூவத்
தகவுடை மாந்தர்புக்குத் தலையினால் வணங்கிநின்றார்.

(இ-ள்.) புகலிகாவலர் தாங்கேட்டுப் பொருவிலா அருண்முன்கூர= சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார் அதனைக்கேட்டருளி ஒப்பில்லாத திருவருள் அப்பரிசனரிடத்துமிக; அகமலர்ந்து அவர்கள் தம்மை அழையுமென்றருளிச்செய்ய=மனமகிழ்ந்து அவர்களை இங்கு அழையுங்களென்று கட்டளையிட; நகைமுகச்செவ்விநோக்கி நற்றவமாந்தர்கூவ=பிள்ளையாரது புன்னகையோடுகூடிய திருமுகத்தின் சமயத்தைப்பார்த்து நல்ல தவத்தையுடைய வாயிலாளர் அழைக்க; தகவுடைமாந்தர்புக்குத் தலையினால் வணங்கி நின்றார்=குலச்சிறை நாயனாரும் மங்கையர்க்கரசியாரும் அனுப்பிய பரிசனர்கள் உள்ளேபோய்ப் பிள்ளையாரைச் சிரசால் வணங்கி அவரது திருமுன் நின்றார்கள். (௬௧௧)

Koviloor Digital Library

நின்றவர் தம்மைநோக்கி நிகரில்சீர்ச் சண்பைமன்னர்
மன்றலங் குழலியாரா மானியார் தமக்குமானக்
குன்றென நின்றமெய்ம்மைக் குலச்சிறை யார்தமக்கு
நன்றுதான் வினவக்கூறி நற்பதம் போற்றுவார்கள்.

(இ-ள்.) நின்றவர் தம்மைநோக்கி நிகரில்சீர்ச் சண்பைமன்னர்=தம் முன்னின்ற பரிசனர்களைப்பார்த்தருளி ஒப்பில்லாத சிறப்பினையுடைய சீகாழித்தலைவராகியபிள்ளையார்; மன்றலங்குழலியாராம் மானியார்தமக்கும்=வாசனைபொருந்திய அழகிய கேசத்தையுடைய பாண்டிமாதேவியாருக்கும்; மானக்குன்றென நின்றமெய்ம்மைக் குலச்சிறையார்தமக்கும்=சைவ அபிமானத்துக்கு ஓர் மலைபோல நிற்கின்ற உண்மையையுடைய குலச்சிறை நாயனாருக்கும்; நன்றுதான் வினவக்கூறி நற்பதம்போற்றுவார்கள்=நன்மையைப் பிள்ளையார் வினவியருள அதற்குவிடைகூறி நல்ல திருவடிகளைத்துதிப்பார்கள்.

துதிப்பார்கள் என்றது விண்ணப்பஞ்செய்வார்களென்று பொருள். மானி என்றது மான்போலும் நோக்குடையாளை யென்க. (௬௧௨)

கன்னிநா டமணர்தம்மாற் கட்டழிந் திழிந்துதங்கண்
மன்னனு மவர்கண்மாயத் தழுந்தமா தேவியாருங்
கொன்னவி லயில்வேல்வென்றிக் குலச்சிறை யாருங்கூடி
யிந்நிலை புகலிவேந்தர்க் கியம்புமென் றிறைஞ்சிவிட்டார்.

(இ-ள்.) கன்னிநாடமணர் தம்மாற் கட்டழிந்திழிந்து = பாண்டிநாடானது சமணர்களால் நன்னிலைகெட்டு இழிவையடைந்து; தங்கண்மன்னனுமவர்கண்மாயத் தழுந்த=தங்கள் அரசனாகிய பாண்டியனும் அவ்வமணர்களதுமயக்கத்தில் அழுந்த; மாதேவியாருங்கொன்னவிலயில்வேல்வென்றிக் குலச்சிறையாருங்கூடி = பாண்டிமாதேவியாரும் பெருமைபொருந்திய கூரியவேலை ஏந்திய வெற்றியையுடைய குலச்சிறைநாயனாரும் சேர்ந்துயோசித்து; இந்நிலைபுகலிவேந்தர்க் கியம்புமென்றிறைஞ்சிவிட்டார்=இந்த நிலைமையை ஆளுடையபிள்ளையாருக்குச் சொல்லுமென்று திசைநோக்கித் தொழுது எங்களை அனுப்பினார்கள்—எ-று. (௬௧௩)

இழிந்தென்றும் வினையெச்சம் அழுந்தவென்னும் வினையெச்சவினை கொண்டு நின்றது. இவ்வினையெச்சவினை நாட்டிற்கும் மன்னனுக்கும்பொதுவாதலின் செய்தெனெச்சத்திற்கு வினைமுதல் வினையாயிற்று. இதனை "ஆடூஉ வறிசொல்" என்னுஞ் சூத்திரத்திற் சேனாவரைய ருரையாலுமுணர்க.

வேறு.

என்றவர்கள் விண்ணப்பஞ் செய்தபின்னரோறுபார்த்த சிவபெருமான் றிருண்டலெல்லாம், நன்றுநமை யாளுடைய நாதன்பாத நண்ணாத வெண்ணிலமண் குண்டர்தம்மை, வென்றருளிவேதநெறி பெயாக்கி வெண்ணீறுவேந்தனையு மிடுவித்தங்கு, நின்றசெயல் சிவனடியார் செயலேயாக நினைந்தருளவேண்டுமென நின்றுபோற்ற.

Koviloor Digital Library

(இ-ள்.) என்றவர்கள் விண்ணப்பஞ் செய்தபின்னர் = இவ்வாறு அவர்கள் விண்ணப்பஞ்செய்தபின்பு ; ஏறுயர்த்தசிவபெருமான் ஞெண்டரெல்லாம்=இடபக்கொடியையுடைய சிவபெருமானுர் அடியார் திருக்கூட்டங்களெல்லாம் ; நன்றுநமையாளுடைய நாதன்பாதம் நண்ணுத வெண்ணிலமண்குண்டர்தம்மை=இது நன்று நம்மையாளாக உடைய சிவபெருமான் திருவடிகளை அடையாத அளவில்லாத சமணராகிய கீழ்மக்களை ; வென்றருளி வேதநூல் நெறியேயாக்கி வெண்ணீறு வேந்தனையுமிடுவித்து = வெற்றிகொண்டு வேதமார்க்கமே நன்னெறியாகச்செய்துவெள்ளியவிபூதியைப்பாண்டியனையும் இடச்செய்வித்து ; அங்கு நின்றசெயல் சிவனடியார் செயலேயாக நினைந்தருளவேண்டுமென நின்றுபோற்ற=அப்பாண்டி நாட்டில் நிகழும் ஒழுக்கம் சிவனடியார் ஒழுக்கமாகும் வண்ணம் திருவுள்ளத்திற்கருதி அருள்செய்ய வேண்டுமென நின்றுதுதிக்க—எ-று.

நின்றசெயல் சிவனடியார் செயலேயாக நினைந்தருள வேண்டுமென்றது, சமண் ஒழுக்கம் நீக்கிச் சைவ ஒழுக்கம் பரம்பச்செய்தால் அவ்வாரும் என்பது கருத்து. (௬௧௪)

மற்றவர்கட் கருளபுரிந்து பிள்ளையாரும் வாகீசமுனிவருடன் கூடச்சென்று, பெற்றமுயர்த் தவர்பாதம் பணிந்துபோந்துபெரிய திருக்கோபுரத்து ளிருந்துதென்னு, டுற்றசெயல் பாண்டிமா தேவியாரு முரிமையமைச்சருமுரைத்து விட்டவார்த்தை, சொற்றனிமன்னவருக்குப் புகலிமன்னர் சொல்லியெழுந் தருளுதற்குத் துணிந்த போது.

(இ-ள்.) மற்றவர்கட்கருள் புரிந்து பிள்ளையாரும்=அவ்வடியார்களுக்கு அவ்வாறு செய்வதாக திருவருள் செய்த ஆளுடையபிள்ளையாரும்; வாகீசமுனிவருடன் கூடச்சென்று=ஆண்ட அரசுடன் ஆலயத்துள் எழுந்தருளி ; பெற்ற முயர்த்தவர்பாதம் பணிந்துபோந்து=இடபக்கொடியை யுடைய மணவாளேசரது திருவடிகளைவணங்கிப் புறம்பே எழுந்தருளி; பெரியதிருக்கோபுரத்துள்ளிருந்து=ஆண்ட அரசுடன் பெரிய திருக்கோபுரத் துள்ளிருந்தருளி; தென்னுடுற்ற செயல் பாண்டிமாதேவியாரு முரிமையமைச்சரும் உரைத்துவிட்டவார்த்தை = பாண்டிநாடடைந்த தாழ்வைப் பாண்டிமாதேவியாரும் அரசுரிமைக்குரிய குலச்சிறைநாயனுரும் தம்மிடத்துக்கூறிவிடுத்த வார்த்தையை ; சொற்றனிமன்னவருக்குப் புகலிமன்னர்சொல்லி யெழுந்தருளுதற்குத் துணிந்தபோது=வாகீசருக்கு ஆளுடையபிள்ளையார்சொல்லி அருளிப்பாண்டி நாட்டுக்கு எழுந்தருளும்படி திருவுள்ளத்தில் நிச்சயித்தபோது —எ-று. (௬௧௫)

அரசருளிச் செய்கின்றார் பிள்ளாயந்த வமண்கையர்வஞ்சனைக் கோரவதியில்லை, யுரைசெய்வ துளதுறுகோ டானுர்தீய வெழுந்தருளவுடன்படுவ தொன்றுதென்னப், பரசுவது நம்பெருமான் கழல்களென்றுற் பழுதணையாதெனப்பகர்ந்து பரமர்செய்ய, விரைசெய்மல

Koviloor Digital Library

ர்த்தாள்போற்றிப் புகலிவேந்தர் வேயுறுதோளியையெடுத்து விளம் பினரோ.

(இ-ள்.) அரசருளிச்செய்கின்றார்=வாகீசமுனிவர் பிள்ளையாரை நோக்கி அருளிச்செய்கின்றார்; பிள்ளாய்அந்தவமன்கையர் வஞ்சனைக்கோரவதி யில்லை=பிள்ளையே அந்தச் சமணராகிய கீழ்மக்கள் செய்கின்ற வஞ்சனைக்கு ஒரெல்லையில்லை; உரைசெய்வதொன்று உறுகோள் தாமுந்திய எழுந்தருளவுட ன்படுவ தொன்றென்ன=யாம்சொல்லுவ தொன்றுண்டு பொருந்திய கிர கங்களும் தீயன பாண்டிநாட்டுக்கு எழுந்தருளுதல் தக்கதன்றென மறுக்க; பரசுவது நம்பெருமான் கழல்களென்றாற் பழுதணையாதெனப் பகர்ந்து= துதிப்பது நமது சிவபெருமானது திருவடிகளேயாகில் கோள் முதலிய குற்றம் வரமாட்டாதென்று அவர்க்குச் சொல்லியருளி; பரமர்செய்ய விரை செய் மலர்த்தாள்போற்றிப் புகலிவேந்தர் வேயுறுதோளியை யெடுத்துவிள ம்பினார்=சிவபெருமானது சிவந்தவாசனை பொருந்திய தாமரைமலர்போன்ற திருவடிகளைத்துதித்து ஆளுடையபிள்ளையார் வேயுறுதோளி என்னும் முதலை யுடைய திருப்பதிகத்தைப் பாடியருளினார்—எ-று. (௬௧௬)

கோள்கடையன வாதலினெழுந்தருள வேண்டாவென ஆண்ட அரசு மறுத்தமை, பிள்ளையார் சிறுவராதலின் தம்மாட்டமணர் செய்த பெருவஞ்ச னைகள் அளவுபடாமையின், அவர்மாட்டவ்வஞ்சனைகளை அவர் செய்யில் ஆற் றாரென்றுங் கருத்தாலென்க.

வேயுறுதோளி-பண்-பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

வேயுறுதோளிபங்கன்விடமுண்டகண்டன்மிகநல்லவீணைதடவி
மாசறுதிங்கள்கங்கைமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனா [னே
ஞாயிறுதிங்கள்செவ்வாய்புதன்வியாழம் வெள்ளிசனிபாம்பிரண்டுமுட
யாசறுநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (௧)

என்பொடுகொம்பொடாமையிவைமார்பிலங்கவெருதேறியேழையுட
பொன்பொதிமத்தமாலைபுனல்சூடிவந்தெனுளமேபுகுந்தவதனா [னே
லொன்பதொடொன்றொடேழுபதினெட்டொடாறுமுடனாயநாள்கள
வன்பொடுநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. [வைதா

உருவளர்பவளமேனியொளிநீறணிந்து வுமையோடும்வெள்ளைவிடை
மேல், முருகலர்கொன்றைதிங்கண்முடிமேலணிந்தெனுளமேபுகுந்த
வதனாற்,திருமகள்கலையதூர்திசெயமாதுபூமிதிசைதெய்வமானபலவு,
மருநெதிநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (௩)

மதிநுதன்மங்கையோடுவடபாலிருந்துமறையோதுமெங்கள்பரம
னதியொடுகொன்றைமாலைமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனாற்

Koviloor Digital Library

கொதியுறுகாலனங்கிநமனோடிதூதர்கொடுநோய்களானபலவு
மதிகுணநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (௪)

நஞ்சணிகண்ட னெந்தைமடவாடனோடும் விடையேறுமெங்கள்பரம
ன், றுஞ்சிருள்வன்னிகொன்றைமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தவத
னால், வெஞ்சினவவுணரோடுமுருமிடியுமின்னுமிகையானபூதமவையு
மஞ்சிடுநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (௫)

வாள்வரியதளதாடைவரிகோவணத்தர்மடவாடனோடுமுடனாய்
நாண்மலர்வன்னிகொன்றைநதிசூடிவந்தெனுளமேபுகுந்தவதனாற்
கோளரியுழுவையோடுகொலையானைகேழல்கொடுநாகமோடுகரடி
யாளரிநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (௬)

செப்பிளமுலைநன்மங்கையொருபாகமாகவிடையேறுசெல்வனடைவா
ரொப்பிளமதியுமப்புமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனால்
வெப்பொடுகுளிரும்வாதமிகையானபித்தம்வினையானவந்துநலியா
வப்படிநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (௭)

வேள்படவிழிசெய்தன்றுவிடைமேலிருந்துமடவாடனோடுமுடனாய்
வாண்மதிவன்னிகொன்றைமலர்சூடிவந்தெனுளமேபுகுந்தவதனா
லேழ்கடல்சூழிலங்கையரையன்றனோடுமிடரானவந்துநலியா
வாழ்கடனல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (௮)

பலபலவேடமாகும்பரனாரிபாகன்பசுவேறுமெங்கள்பரமன்
சலமகளோடெருக்குமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனான்
மலர்மிசையோனுமாலுமறையோடுதேவர்வருகாலமானபலவு
மலைகடன்மேருநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (௯)

கொத்தலர்குழலியோடும்விசயற்குநல்குகுணமாயவேடவிகிர்தன்
மத்தமுமதியுநாகமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனாற்
புத்தரொடமணைவாதிலழிவிக்குமண்ணறிருநீறுசெம்மைதிடமே
யத்தகுநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (க0)

தேனமர்பொழில்கொளாலைவிளைசெந்நெறுன்னிவளர்செம்பொ
னெங்குநிகழ,நான்முகனாதியாயபிரமாபுரத்துமறைஞானஞானமுனி
வன், றானுறுகோளுநாளுமடியாரைவந்து நலியாதவண்ணமுரைசெ,
யானசொன்மாலையோதுமடியார்கள்வானிலரசாள்வராணைநமதே. ()

திருச்சிற்றம்பலம்.

Koviloor Digital Library

சிரபுரத்துப் பிள்ளையா ரருளிச்செய்த திருப்பதிகங் கேட்டதற்
பின்றிருந்துநாவுக், கரசுமதற்குடன்பாடு செய்துதாமு மவர்முன்னே
யெழுந்தருள வமைந்தபோது, புரமெரித்தார் திருமகனாரப்பரிந்தப்
புனனாட்டிலெழுந்தருளி யிருப்பீரென்று, கரகமலங் குவித்திறைஞ்
சித் தவிர்ப்பவாக்கின் காவலருந்தொழுதரிதாங் கருத்தினேர்ந்தார்.

(இ-ள்.) சிரபுரத்துப்பிள்ளையாரருளிச்செய்த திருப்பதிகங் கேட்டதற்பின்=சீகாழியிலவதரித்த ஆளுடையபிள்ளையார் திருவாய்மலர்ந்தருளிய திருப்பதிகத்தைக் கேட்டருளியபின்பு; திருநாவுக்கரசும் அதற்குடன்பாடு செய்து=திருத்தமான நாவுக்கரசரும் பிள்ளையார் எழுந்தருளுவதற்குத் தாமும் உடன்பட்டு; தாமும் அவர்முன்னேயெழுந்தருள அமைந்தபோது=ஆண்ட அரசரும் பிள்ளையார் முன்பு பாண்டிநாட்டுக்கு எழுந்தருள உடன்பட்டகாலத்தில்; புரமெரித்தார் திருமகனார் அப்பரிந்தப் புனனாட்டில் எழுந்தருளி இருப்பீரென்று=திரிபுரங்களை எரித்தருளிய சிவபிரானாரது திருமகனார் அப்பரே! இந்தச்சோழநாட்டில் எழுந்தருளி இருப்பீரென்று; கரகமலங்குவித்திறைஞ்சித் தவிர்ப்ப=திருக்கரங்களைக்கூப்பி வணங்கித் தம்மோடு வருதலைத் தவிர்த்தருள; வாக்கின் காவலருந் தொழுதரிதாங் கருத்தினேர்ந்தார்=திருநாவுக்கரசரும் வணங்கி அரிதாந் திருவுள்ளத்தோடு இசைந்தருளினார்—எ-று. பிள்ளை பிரிவுடன் படாமை தோன்ற அரிதாங் கருத்தென்றார்.

ஆண்ட அரசு உடன்படல், தெய்வத்தைப்பற்றியும் பிறவுயிரைப்பற்றியும் தன்னைப்பற்றியும் வரும் துன்பங்கட்கிடனான தெய்வமுதலியனவும் பிறவுயிர்களும் நோய்முதலியனவும் ஆயபொருள்கள் திருவருளோடு என்றும் எம்புகுந்தாண்ட சிவபிரான் வழித்தாயின. அதனால், அத்திருவருள் வழித்தாய எம்மை இடர்செய்யவல்ல அல்ல அச்சிவபிரானது ஆதிதெய்விகபூதபுத்தரையும் சமணையும் வாதில்வலி அழிவிக்கும் என்றருளிய திருப்பதிகப் பொருள் கேட்டென்க.

ஆயின், ஆண்டவரசர் பிள்ளையாருடன்செல்ல உடன்படுங்கால் அவர் தமை மறுத்ததென்னெனின்? குலச்சிறை நாயனாரும் மங்கையர்க்கரசியாரும் விடுத்த பரிசனங்கள் தம்மை அவர் விடுத்தகாரணங்கூறுங்கால்திருக்கூட்டத்தார் சமணரைவென்று விபூதியைப் பரவச்செய்யவேண்டுமென வேண்ட அவ்வாறு செய்துமென அவர்க்கருளியமையால் அதற்குத்தாமே அமையும். அப்போதும் பெருந்தன்மையையுடைய ஆண்ட அரசர்கூட எழுந்தருளின் இப்புன்சமயத்தை இருவர்கூடி மறுத்தனரென உலகில் ஓர் சொல் நிகழவருதலில் பெரும்பயனின்மையானென்க. (௬௧௭)

வேதம்வளர்க்கவுஞ் சைவம்விளக்குதற்கும் வேதவனத்தருமணியை மீண்டும்புக்குப், பாதமுறப் பணிந்தெழுந்து பாடிப்போற்றிப் பரிவுடன் பெற்றுவிடை கொண்டுபோந்து, மாதவத்துவாகீசர் மருநவன்னம் வணங்கிப்பருள்செய்தவிடை கொடுத்தமன்னுங், கா

Koviloor Digital Library



ஆளுடைவள்ளலும்-ஆண்டரசும்-திருமறைக்காட்டிலிருக்கையில்-ஆசியாரும்-மந்தியாரும்-அனுப்பினபாங்கியாகள்சுவாமி சந்நிதானத்தில்: விண்ணப்பஞ்செய்ய-உடனே-பிள்ளையார்மதுரைக்கிச்செல்லக்கருத அதிதியில் அப்பர்சுவாமிகள்-சமணர்தீங்கையுங்காலத்தையுஞ்சொல்லிதகுக்க-சுவாமிகள்-கோள்ளுபதிகமோதி மதுரைக்கிச்சென்றனர்.

Koviloor Digital Library

தமிழினலருமையுறக் கலந்துநீங்கிக் கதிர்ச்சிவிகை மருங்கணைந்தார் காழிநாடர்.

(இ-ள்.) வேதம்வளர்கவுஞ் சைவம் விளங்குதற்கும்=வேதநூல் விருத்தியடையவும் அதன்சாரமான சைவநெறி விளங்குதற்கும்; மீண்டும்புக்கு வேதவனத்தருமணியைப் பாதமுறப் பணிந்தெழுந்து=மீளவும் திருக்கோயிலுட்புகுந்து வேதாரண்ணியத்திலெழுந்தருளிய அரியமாணிக்கம்போலும் மணவாளேசனைத் திருவடிகளிற்பொருந்த வணங்கி எழுந்து; பாடிப்போற்றிப் பரசியருள்பெற்று விடைகொண்டு போந்து=பதிகம் ஓதிவாழ்த்தி அவரது திருவருளைப்பெற்று விடைகொண்டு புறம்புவந்து; மாதவத்து வாகீசர் மருதவண்ணம் வணங்கியருள் செய்து விடைகொடுத்து=பெரியதவத்தினையுடைய திருநாவுக்கரசு தம்மை மறக்காதவண்ணம் அவரைவணங்கித் திருவருள்செய்து அவர்க்கு விடைகொடுத்து; மன்னுங்காதலினால் அருமை யுறக் கலந்து நீங்கி=நிலைபெற்ற விருப்போடு அருமையாகக்கலந்து நீங்கி; காழிநாடர் கதிர்ச்சிவிகை மருங்கணைந்தார்=ஆளுடையபிள்ளையார் ஒளிபொருந்திய திருமுத்துச்சிவிகையில் எழுந்தருளினார்—எ-று. (சுகஅ)

திருநாவுக் கரசருமங் கிருந்தாரிப்பாற் றிருஞானசம்பந்தர் செழுநீர்முத்தின்; பெருநாமச்சிவிகையின்மீ தேறிப்பெற்ற முயர்த்தவர் தாள்சென்னியின்மேற் பேணுமுள்ளத், தொருநாமத் தஞ்செழுத்து மோதிவெண்ணீற் றொளிவிளங்குந்திருமேனி தொழுதார்நெஞ்சில், வருநாமத்தன்புருகுங் கடலாமென்ன மாதவரார்ப் பொலிவைய நிறைந்ததன்றே

(இ-ள்.) திருநாவுக்கரசரும் அங்கிருந்தார்=வாகீசரும் அச்சோழநாட்டின்கண் பிள்ளையாருடன் செல்லாது இருந்தருளினார்; இப்பாற்றிருஞானசம்பந்தர் செழுநீர்முத்தின் பெருநாமச்சிவிகையின்மீதேறி = இதன்மேல் ஆளுடயபிள்ளையார் செழுமைபொருந்திய குளிர்ந்த நீரோட்டத்தையுடைய முத்தாலாகிய பெரியபுகழையுடைய திருச்சிவிகையின்மேலெழுந்தருளி; பெற்றமுயர்த்தவர்தாள்சென்னியின்மேற்பேணும் உள்ளத்து=இடபத்தைக்கொடியாகவெடுத்த சிவபெருமானது திருவடிகளைச் சிரத்தின்மேற்கொள்ளும் திருவுள்ளத்தோடு; ஒருநாமத்தஞ்செழுத்துமோதி=ஒப்பில்லாத திருநாமமாகிய திரு அஞ்செழுத்தையுமோதி; வெண்ணீற்றொளிவிளங்கும் திருமேனி தொழுதார்=வெள்ளியதிருநீற்றின் ஒளிவிளங்குகின்ற திருமேனியை வணங்கினார்; நெஞ்சில் வருநாமத்தன்புருகுங் கடலாமென்ன மாதவரார்ப்பொலிவைய நிறைந்தது=மனதிற் பொருந்தவருந் திருநாமங்களால் அன்பானது உருகியோடும் ஓர்கடலென்று சொல்ல பெரிய தவத்தையுடைய அடியார் திருக்கூட்டங்கள் ஆரவாரஞ்செய்யும் ஓசையானது பூமிமுழுதும் நிறைந்தது—எ-று.

அடியார் திருக்கூட்டங்கள், திருநாமங்களால் ஆரவாரஞ்செய்யும் ஓசையென இயையும். (சுகக)

Koviloor Digital Library

வேறு.

பொங்கியெழுந் திருத்தொண்டர் போற்றெடுப்ப நாற்றிசையு
மங்கலதூ ரியந்தழங்க மறைமுழங்க மழைமுழங்குஞ்
சங்கபட கம்பேரி தாளகா ளந்தாள
மெங்குமெழுந் தெதிரியம்ப விருவிசும்பு கொடிதூர்ப்ப.

(இ-ள்.) பொங்கியெழுந்திருத்தொண்டர் போற்றெடுப்ப=ஆனந்தத்தால் திரண்டெழாநின்ற அடியார்கூட்டங்கள் துதிக்கவும்; நாற்றிசையும் மங்கலதூரியந்தழங்க=நான்குதிக்கிலும் மங்கலவாத்தியம் ஒலிக்கவும்; மறைமுழங்க=வேதங்கள் ஒலிக்கவும்; மழைமுழங்குஞ் சங்கபடகம் பேரி தாரை காளம் தாளமெங்குமெழுந்தெதிரியம்ப =மழைபோல முழங்குகின்ற சங்கமும் படகமும் பேரிகையும் தாரையும் காளமுந் தாளமும் எவ்விடத்தும் திரண்டெழுந்து மாறுபட்டு ஒலிக்கவும்; இருவிசும்புகொடிதூர்ப்ப = பெரிய ஆகாயத்தைக் கொடியாடைகள் தூர்க்கவும்—எ-று. (௯௨௰)

மலர்மாரி பொழிந்திழிய மங்கலவாழ்த் தினிதிசைப்ப
வலர்வாசப் புனற்குடங்க ளணிவிளக்குத் தூபமுட
னிலைநீடு தோரணங்க ணிரைத்தடியா ரெதிர்கொள்ளக்
கலைமாலை மதிச்சடையா ரிடம்பலவுங் கைதொழுவார்.

(இ-ள்.) மலர்மாரிபொழிந்திழிய மங்கலவாழ்த்து இனிதிசைப்ப= பூமழைபொழிந்து இழியவும் மங்கலவாழ்த்துகள் இனிதாக இசைக்கவும்; அலர்வாசப்புனற்குடங்கள் அணிவிளக்குத்தூபமுடன்=மலர்களின் வாசனை நிறைந்த நீர் நிறைத்த கும்பங்களும் அழகிய விளக்குகளும் தூபத்தோடு; நிலைநீடுதோரணங்கணிரைத்தடியாரெதிர்கொள்ள=நிறுத்திய உயர்ந்ததோரணங்களையும் வரிசையாகவைத்து அங்கங்குள்ள அடியவர்களெதிர்கொள்ளவும்; கலைமாலைமதிச்சடையார் இடம்பலவுங் கைதொழுவார் = கலையோடுகூடிய மாலைக்காலத்துதித்த இளம்பிறையைச் சூடிய சடைமுடியையுடைய சிவபிரானது பலதிருப்பதிகளையும் கைதொழுவாராயினார்—எ-று. (௯௨௧)

தெண்டிரைசூழ் கடற்கானற் றிருவகத்தி யான்பள்ளி
யண்டர்பிரான் கழல்வணங்கி யருந்தமிழ்மா மறைபாடிக்
கொண்டல்பயின் மணற்கோடு சூழ்கோடிக் குழகர்தமைத்
தொண்டருடன் றொழுதணைந்தார் தோணிபுரத் தோன்றலார்.

(இ-ள்.) தெண்டிரைசூழ்கடற்கானற்றிருவகத்தியான்பள்ளி = தெளிந்த அலைகள் சூழ்ந்த கடற்கரை இடத்துள்ள திருஅகத்தியான்பள்ளியிலே முற்றருளிய; அண்டர்பிரான்கழல்வணங்கி அருந்தமிழ்மாமறைபாடி=அகத்தீசர திருவடிகளை வணங்கி அரிய பெருமைபொருந்திய தமிழ்வேதத்தைப் பாடி; கொண்டல்பயின் மணற்கோடு சூழ்கோடிக் குழகர்தமை=மேகங்கள் தவழும் மணற்குன்று சூழ்ந்த திருக்கோடிக்குழகரை; தொண்டர் உடன்

Koviloor Digital Library

தொழுதணைந்தார் தோணிபுரத்தோன்றலார் = அடியார் திருக்கூட்டத்தோடு சொழித்தலைவராகிய பிள்ளையார் வணங்கிச்சென்றருளினார்—எ-று. (௬௨௨)

திரு அகத்தியான்பள்ளி-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

வாடிய வெண் டலை மாலை சூடி மயங்கிரு
ணீடெரி கொள்ளி விளக்கு மாக நிவந்தெரி
யாடிய வெம் பெரு மா னகத்தியான் பள்ளியைப்
பாடிய சிந்தையி னார்கட் கில்லையாம் பாவமே.

ஞாலமல் குந் தமிழ் ஞானசம் பந்தன் மாமயி
லாலுஞ்சோலை புடைசூ ழகத்தியான் பள்ளியுட்
சூலநல்ல படையா னடி தொழுதேத்திய
மாலைவல்லா ரவர்தங்கள் மேல் வினைமாயுமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - அகத்திசர். தேவியார் - மங்கைநாயகியம்மை.

கண்ணார்ந்த திருநுதலார் மகிழ்ந்தகடிக் குளமிறைஞ்சி
யெண்ணார்ந்த திருவிடும்பா வனமேத்தி யெழுந்தருளி
மண்ணார்ந்த பதிபிறவு மகிழ்தருமன் பால்வணங்கிப்
பண்ணார்ந்த தமிழ்பாடிப் பரவியேசெல்கின்றார்.

(இ-ள்.) கண்ணார்ந்த திருநுதலார் மகிழ்ந்த கடிக்குளமிறைஞ்சி= கண்பொருந்திய அழகிய நெற்றியையுடைய கற்பகேசர் எழுந்தருளிய திருக்கடிக்குளமென்னுந் திருப்பதியைவணங்கி; எண்ணார்ந்த திருவிடும்பாவனமேத்தியெழுந்தருளி=பெருமைபொருந்திய திரு இடும்பாவனத்தைத் துதித்து அங்குநின்றும்எழுந்தருளி; மண்ணார்ந்தபதிபிறவுமகிழ் தருமன்பால்வணங்கி=நிலவுலகில் நிறைந்த அங்குள்ள பிறதிருப்பதிகளையும் மகிழ்ச்சியைச்செய்யும் அன்பினாலேவணங்கி; பண்ணார்ந்த தமிழ்பாடிப் பரவியேசெல்கின்றார் =இசைநிறைந்த தமிழ்த் திருப்பதிகம்பாடித் துதித்துச்செல்கின்றாராயினார். —எ-று. (௬௨௩)

திருக்கடிக்குளம்-பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

பொடிகொண்மேனி வெண்ணூலினர் தோலினர்புலியுரி யதளாடை
கொடிகொளேற்றினர்மணிகிணினெனவரு குரைகழல் சிலம்பார்க்கக்
கடிகொள்பூம்பொழில் சூழ்தருகடிக்குளத் துறையுங் கற்பகத்தைத்
முடிகள்சாய்த்தடி வீழ்தருமடியவர் முன்வினை மூடாவே. [தம்

Koviloor Digital Library

தனமலிபுகழ் தயங்குபூந்தரா யவர்மன்னனற்சம் பந்தன்
மனமலிபுகழ் வண்டமிழ்மாலை கண்மாலதாய் மகிழ்வோடுங்
கனமலிகட லோதம்வந்துலவிய கடிக்குளத் தமர்வானை
யினமலிந்திசை பாடவல்லார்கள்போ யிறைவனோ டுறைவாரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - கற்பகேசர். தேவியார் - சௌந்தரநாயகியம்மை.

திரு இடும்பாவனம்-பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

மனமார்தரு மடவாரொடு மகிழ்மைந்தர்கண் மலர்தூய்த்
தனமார்தரு சங்கக்கடல் வங்கத்திர ளுந்திச்
சினமார்தரு திறல்வாளெயிற் றரக்கன்மிகு குன்றி
லினமாதவ ரிறைவர்க்கிட மிடும்பாவன மிதுவே.

கொடியார் நெடுமாடக்குன்ற ளூரிற்கரைக் கோல
வடியார்கட லடிவீழ்தரு மிடும்பாவனத் திறையை
யடிபாயுமந் தண்காழிபு ளணிஞானசம் பந்தன்
படியாற்சொன்ன பாடல்சொலப் பறையும்வினைதானே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - சற்குணநாயகர். தேவியார் - மங்கைநாயகியம்மை.

திருவுசாத் தானத்துத் தேவர்பிரான் கழல்பணிந்து
மருவியசெந் தமிழ்ப்பதிக மால்போற்றும் படிபாடி
யிருவினையும் பற்றறுப்பா ரெண்ணிறந்த தொண்டருடன்
பெருகுவிருப் பினராகிப் பிறபதியும் பணிந்தணைந்தார்.

(இ-ள்.) திருவுசாத்தானத்துத் தேவர்பிரான் கழல்பணிந்து=திருவுசாத்தானத்தின்கண் எழுந்தருளிய தேவர்க்குத் தலைவராகிய மந்திரபுரீசர் திருவடிகளைவணங்கி; மருவியசெந்தமிழ்ப் பதிகமால்போற்றும்படி பாடி=பொருந்திய செந்தமிழ்த் திருப்பதிகத்தைத் திருமாலும் துதிக்கும்படி பாடி யருளி; இருவினையும்பற்றறுப்பா ரெண்ணிறந்த தொண்டருடன்=தம்மை யடைந்தாரது நல்வினை தீவினைகளாகிய இரண்டையும் பற்றறுக்கும் ஆளுடையபிள்ளையார் அளவிறந்த அடியாருடன்; பெருகுவிருப்பினராகிப் பிறபதியும் பணிந்தணைந்தார்=மிக்கவிருப்புடையராய்ப் பிறதிருப்பதிகளையும் வணங்கி அடைந்தருளினார்—எ-று.

பிள்ளையார் தம்மை அடைந்தார்க்கு, விருப்பு வெறுப்புற்று ஆக்கங்கேடுகளில் அழுந்தாது நிற்கச்செய்தலில், பற்றறுப்பாரென்றார். (௬௨௪)

Koviloor Digital Library

திரு உசாத்தானம்-பண்-கொல்லி

திருச்சிற்றம்பலம்

நீரிடைத் துயின்றவன் றம்பிநீள் சாம்புவன்
பேருடைச் சுக்கிரீவன் னனுமன் றொழுக்
காருடை நஞ் சுண்டு காத்தருள் செய்தவெஞ்
சீருடைச் சேடர்வாழ் திருவுசாத் தானமே.

வரைதிரிந் திழியுநீர் வளவயற் புகலிமன்
றிரைதிரிந் தெறிகடற் றிருவுசாத் தானரை
யுரைதெரிந் துணருஞ்சம் பந்தனெண் டமிழ்வல்லார்
நரைதிரை யின்றியே நன்னெறி சேர்வரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - மந்திரபுரீசர் - தேவியார் - பெரியநாயகியம்மை.

வேறு.

கருங்கழிவேலைப்பாலைக்கழிநெய்தல்கடந்தருளித்
திருந்தியசீர்ப்புனனாட்டுத்தென்மேல்பாற்றிசைநோக்கி
மருங்குமிடைதடஞ்சாலிமாடுசெறிகுலைத்தெங்கு
நெருங்கிவளர்கமுகுடுத்தநிறைமருதவழிச்சென்றார்.

(இ-ள்.) கருங்கழிவேலைப்பாலைக் கழிநெய்தல் கடந்தருளி=கரிய உவர்க்கழிகளையுடைய கடற்கரையின் உள்ள மிக்க நெய்தநிலத்தைக்கடந்து சென்றருளி; திருந்திய சீர்ப்புனனாட்டுத் தென்மேல் பாற்றிசைநோக்கி= திருந்திய சிறப்பினையுடைய சோழநாட்டின் தென்மேற்றிசையைக்கருதி; மருங்குமிடைதடஞ்சாலி மாடுசெறி குலைத்தெங்கு=பக்கங்களில் நெருங்கிய மிக்க செந்நெற்பயிரும் அதன்கரையில் நிறைந்த குலைகளையுடைய தென்ன மரமும்; நெருங்கிவளர்கமுகுடுத்த நிறைமருதவழிச்சென்றார் = அதன்பக்கத்தமிடைந்துவளர்ந்த கமுகுகள் சூழ்ந்தவளம் நிறைந்த மருத நிலத்தின் வழியேசென்றருளினார்—எ-று. (சுஉ௫)

சங்கங்கள்வயலெங்குஞ்சாலிகழைக்கரும்பெங்குங்
கொங்கெங்குநிறைகமலக்குளிர்வாசத்தடமெங்கு
மங்கங்கேயுழவர்குழாமார்க்கின்றவொலியெங்கு
மெங்கெங்குமலர்ப்படுகரிவைகழியவெழுந்தருளி.

(இ-ள்.) சங்கங்கள் வயலெங்கும்=வயல்களெங்கும் சங்கங்களிருந்தன; சாலிகழைக்கரும்பெங்கும்=அவ்விடங்கள் எங்கும் நெற்பயிரும் மூங்கில் போலும் கரும்புகளும் இருந்தன; கொங்கெங்கும் நிறைகமலக்குளிர்வாசத்

Koviloor Digital Library

தடமெங்கும் = மகரந்தங்கள் எங்கும் நிறைந்த தாமரைமலர்களையுடைய குளிர்ந்த வாசனைபொருந்தியவாவிகளெவ்விடத்தும் நிறைந்திருந்தன; அங்கங்கேயுழவர் குழாமார்க்கின்றவொலியெங்கும்=அவ்வவ் இடங்களில் உழவுதொழிலாளர் ஆரவாரஞ்செய்யும் ஓசையெங்கும் இருந்தன; எங்கெங்குமலர்ப்படுகர்= எவ்விடத்தும்பூக்களையுடைய நீர்நிலைகளிருந்தன; இவைகழியவெழுந்தருளி= இவைகளெல்லாம்பிற்படும்படியாக பிள்ளையார் எழுந்தருளி—எ-று. (௯௨௬)

தடமெங்கும்புனல்குடையுந்தையலார்தொய்யினிற
மிடமெங்குமந்தணர்களோதுகிடையாகநிலை
மடமெங்குந்தொண்டர்குழாமனையெங்கும்புனைவதுவை
நடமெங்குமொலியோவாநற்பதிகளவைகடந்து.

(இ-ள்.) தடம் எங்கும்புனல்குடையும் தையலார்தொய்யில் நிறம்= தடாகங்கள் எங்கணும் நீராடும் பெண்களது தொய்யிற்கொடி எழுதிய கலவைச்சாந்தின் நிறமும்; இடம் எங்கும் அந்தணர்கள் ஓதுகிடையாகநிலை= இடங்கள் எங்கணும் மறையவர்களது வேதம் ஓதும் சிறுவர் குழாங்களும் யாகசாலைகளும்; மடம் எங்கும் தொண்டர்குழாம்=திருமடம் எங்கும் அடியார் திருக்கூட்டங்களும்; மனை எங்கும் புனைவதுவை=வீடுகள் எங்கணும் அலங்கரிக்கும் கல்யாணங்களும் (உடைத்தாய்); எங்கும் நடஒலி ஓவா நல் பதிகள் அவைகடந்து=எங்கணும் பெண்களதுநடனத்தின் ஓசைகள் நீங்காத நல்ல நாடுகள் பலவற்றையும் கடந்து—எ-று. (௯௨௭)

நீர்நாடுகடந்தருளிநெடும்புறவிற்குறும்புதல்கள்
கார்நாடுமுகைமுல்லைக்கடிநாறுநிலங்கடந்து
போர்நாடுஞ்சிலைமறவர்புன்புலவைப்பிடைபோகிச்
சீர்நாடுந்தென்பாண்டிநன்னாடுசென்றணைவார்.

(இ-ள்.) நீர் நாடுகடந்து அருளி=சோழநாட்டைக்கடந்தருளி; நெடும்புறவில் குறும்புதல்கள் கார்நாடும் முகைமுல்லைக்கடிநாறும் நிலம்கடந்து=பாண்டிநாட்டின் இடையில் உள்ள நெடியமுல்லை நிலத்தில் சிறியபுதல்களில் கார்ப்பருவத்தை நாடும் அரும்புகளையுடைய முல்லையின் மலர்கள் மணங்கமழும் அந்நிலத்தைக்கடந்து; போர்நாடும் சிலைமறவர் புன்புலவைப்பிடைபோகி=போர்த்தொழிலை நாடித்திரியும் வில்லை ஏந்தியமறவர்கள் வாழும் சிறுமைபொருந்திய பாலைநிலத்தையடைந்து; சீர்நாடுதென்பாண்டி நன்னாடுசென்று அணைவார்=பலசெல்வங்களும் நிறைந்ததென் திசைக்கண்ணதாகியநல்லபாண்டிநாட்டைச் சென்று அடைவாராயினர்—எ-று.

மிகுவெப்பும் பயனில் கருப்பொருள்களும் உடைமையால் பாலைநிலத்தை புன்புலவைப்பு என்றார். (௯௨௮)

மன்றன்மலர்ப்பிறங்கன்மருங்கெறிந்துவருநதிகள்பல
சென்றணைந்துகடந்தேறித்திரிமருப்பின்கலைபுணர்மான்

Koviloor Digital Library

கன்றுதெறித்தனவுகைக்குங்கானவதர்கடந்தணைந்தார்
கொன்றைநறுஞ்சடைமுடியார்மகிழ்ந்ததிருக்கொடுங்குன்றம்.

(இ-ள்.) மன்றல் மலர்ப் பிறங்கல் மருங்கு எறிந்து=வாசனைபொருந்திய மலர்மலைகளை இருபக்கங்களிலும் எறிந்து; வருநதிகள் பலசென்று அணைந்து கடந்து ஏறி=வருகின்ற பலநதிகளையும் அடைந்து அதனை நீங்கிச் சென்று கரையேறி; திரிமருப்பின் கலைபுணர்மான் கன்றுதெறித்தன உகைக்கும்=முறுக்கினற்போலும் கொம்பினையுடைய கலைமானோடுசேர்ந்த பெடைமான் கன்றுகள் காலால் பரல்களைத்தெறித்து ஓடும்; கான அதர்கடந்து அணைந்தார்=குறிஞ்சி நிலத்தின் காட்டோடு சேர்ந்தவழியை நீங்கி அடைந்தார்; கொன்றைநறும் சடைமுடியார் மகிழ்ந்ததிருக்கொடுங்குன்றம்=கொன்றைமாலையை அணிந்த நல்ல சடாமுடியை உடைய மங்கைபாகர் எழுந்தருளிய திருக்கொடுங்குன்றத்தை—எ-று.

கடந்து கொடுங்குன்றத்தை அடைந்தாரெனக்கூட்டுக. (௬௨௧)

கொடுங்குன்றத்தினிதமர்ந்தகொழும்பவளச்செழுங்குன்றை
யடுங்குன்றமுரித்தானைவணங்கியருந்தமிழ்பாடி
நெடுங்குன்றும்படர்கானுநிறைநாடுங்கடந்துமதி
தொடுங்குன்றமதின்மதுரைத்தொன்னகர்வந்தணைகின்றார்.

(இ-ள். கொடுங்குன்றத்து இனிது அமர்ந்த கொழும்பவளசெழுங் குன்றை=திருக்கொடுங்குன்றத்தில் மகிழ்கூர்ந்து எழுந்தருளிய ஒளிநிறைந்தபவளமலைபோன்றவரை; அடுங் குன்றம் உரித்தானை வணங்கி அருந்தமிழ் பாடி=கொல்லும் மலைபோன்ற யானையை உரித்த மங்கைபாகரைப்பணிந்து அரியதிருப்பதிகம்பாடி; நெடுங்குன்றும் படர்கானும் நிறைநாடுங்கடந்து= நீண்டமலைகளையும் காடுகளையும் வளம் நிறைந்த நாடுகளையும் கடந்து; மதி தொடும் குன்றம் மதில்மதுரைத் தொன்னகர்வந்து அணைகின்றார்=சந்திரனைத் தீண்டும் மலைபோன்ற மதில் சூழ்ந்த மதுரையாகிய பழையதிருப்பதியை வந்து அடைகின்றவராயினர்—எ-று. (௬௨௦)

திருக்கொடுங்குன்றம் - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

வானிற்பொலிவெய்தும்மழைமேகங்கிழித்தோடிக்
கூனற்பிறைசேருங்குளிர்சாரற்கொடுங்குன்றம்
ஆனிற்பொலிவைந்துமமர்ந்தாடியுலகேத்தத்
தேனிற்பொலிமொழியாளொடுமேயான்றிருநகரே.

கூனற்பிறைசடைமேன்மிகவுடையான்கொடுங்குன்றைக்
கானற்கழுமலமாநகர்த்தலைவன்னலகவுணி

Koviloor Digital Library

ஞானத்துயர்சம்பந்தனலங்கொள்தமிழ்வல்லா
ருனந்தொடுதுயர்நீந்துலகேத்தும்மெழிலோரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-கொடுங்குன்றேசர்-தேவியார்-அமுதவல்லி.

வேறு.

இந்நிலையிவர்வந்தெய்தவெண்பெருங்குன்றமேவும்
அந்நிலையமணர்தங்கட்கழிவுமுன்சாற்றலுற்றுப்
பன்முறைவெருக்கொண்டுள்ளம்பதைப்பத்திக்களுக்களோடும்
துன்னிமித்தங்களங்குநிகழ்ந்தனசொல்லலுற்றும்.

(இ-ள்.) இந்நிலை இவர்வந்தெய்த என் பெரும் குன்றமேவும்= இவ்வாறுபிள்ளையார் வந்தடைந்தருளப் பெரிய எட்டுமலைகளிலும் வசிக்கும்; அந்நிலை அமணர் தங்கட்கு அழிவு முன் சாற்றல் உற்று = அந்தநிலைமையை யுடைய சமணர்களுக்குப் பின்வருங்கெடுதியை முன்புதெரிவிக்க; பன்முறை வெருக்கொண்டு உள்ளம் பதைப்ப=பலதரமுங் காரணமின்றி அச்சங்கொண்டு மனம்பதைப்ப; திக்களுக்களோடும் துன்னிமித்தங்கள் அங்கு நிகழ்ந்தனசொல்லல் உற்றும்=திக்கனவுகளோடும் அவ்விடத்து நடந்தனவாயதுன்னிமித்தங்களை யாம் எண்ணிச்சொல்லலுற்றும்—எ-று.

என்பெருங்குன்றங்களாவன அஞ்சனம், கவுஞ்சம், கோவர்த்தனம், திரிகூடம், காஞ்சி, குஞ்சரசையம், ஏமகூடம், விந்தியம் என இவை.

இம்மலைகள் சமணர்கள் வசித்தற்கு இடமாய் அக்காலத்துள்ளன.

“குஞ்சரசையம்” என்பது யானைமலை.

ஆளுடையபிள்ளையார் திருப்பதிகத்தில் “யானைமாமலை ஆதியாய இடங்களில்” என்புழி இவ்வெட்டுமலையென்றும் பொருள் போந்தவாறு அறிக.

பள்ளிகண்மேலுமாடுபயிலமண்பாழிமேலும்
ஒள்ளிதழசோகின்மேலுமுணவுசெய்கவளங்கையிற்
கொள்ளுமண்டபங்கண்மேலுங்கூகையோடாந்தைதிய
புள்ளினமானதம்மிற்பூசலிட்டழிவுசாற்றும்.

(இ-ள்.) பள்ளிகள்மேலும் மாடுபயில் அமண்பாழி மேலும்=சமணமுனிவர்கள் இருக்கும் பள்ளிகள்மேலும் பக்கங்களிற் பொருந்திய அருகன் கோயில்களின் மேலும் ; ஒள்ளிதழ் அசோகின்மேலும் = ஒள்ளியபூங்கொத்துக்களையுடைய அசோகமரங்களின் மேலும் ; உணவுசெய்கவளம் கையில் கொள்ளும் மண்டபங்கள்மேலும்=உண்ணுதற்குரிய கவளத்தைக்கையிற்கொள்ளும் மண்டபங்களிலும்; கூகையோடு ஆந்தைதிய புள்ளினம் ஆனதம்மிற் பூசலிட்டு அழிவுசாற்றும்=கூகைகளோடு ஆந்தைகளுமாகிய தீயபறவைக்

Koviloor Digital Library

கூட்டங்களானவை தங்களுட்போர்செய்து பின்வருங்கெடுதியைத் தெரிவிக்கும்—எ-று.

கவளம் கையிற்கொள்ளும் மண்டபம் என்றது, பட்டினியுற்றுச்சுடு பாறையிற்கிடத்தல் முதலிய நியமங்கள் பலநாட்செய்து உணவுகொள்ளும் நாளில் கையிரண்டையுஞ்சேர்த்துப் பிடித்து நின்று கொண்டு எண்ணிக்கையோடு அதனை உண்ணச்செய்த மண்டபங்களை யென்க. தீயபுள்ளென்றமையால் காக்கை கழுகுமுதலியனவுங்கொள்க. (௬௩௨)

பீலியுந்தடுக்கும்பாயும்பிடித்தகைவழுவிவிழக்
கால்களுந்தடுமாறுடிக்கண்களுமிடமேயாடி
மேல்வருமழிவுக்காகவேறுகாரணமுங்காணார்
மாலுழந்தறிவுகெட்டுமயங்கினரமணரெல்லாம்.

(இ-ள்.) பிடித்தகை பீலியும் தடுக்கும் பாயும் வழுவிவிழ = பிடித்த கையில் நின்றும் மயிற்பீலிக்கற்றையும், இடுக்கிய இடத்தில் நின்று தடுக்கும், அரையில் நின்று பாயும் வழுவி விழ; கால்களும் தடுமாறுடி கண்களும் இடமே ஆடி=(செயல் இழத்தலில்) கால்களுந்தடுமாற்றம் அடைந்து கண்களும் இடந் துடித்து ; மேல்வரும் அழிவுக்காக வேறுகாரணமுங்காணார்=பின்தமக்கு நேரிடும் கெடுதியை நீக்கும்பொருட்டு பிறகாரணங்கள் ஒன்றையும் அறியாமல்; மால் உழந்து அறிவுகெட்டு அமணர் எல்லாம் மயங்கினர் = மயக்கமுற்றுத் தமது அறிவுசிதைந்து சமணர்கள் எல்லாம் மயங்கினார்கள்—எ-று.

வழுவிவிழுதற்குரிய ஏனைய இடங்கள் ஏற்புழிக்கோடலாற்கொள்ளப்பட்டது. இடந்துடித்தல் இறப்பிற்கு ஏதுவாதலின் இடமேயாடி யென்றார்.

கந்தியர்தம்மிற்றாமேசனன்றெழுகலாங்கள்கொள்ள
வந்தவாறமணர்தம்மின்மாறுகொண்டூறுசெய்ப
முந்தையவுரையிற்கொண்டபொறைமுதலவையும்விட்டுச்
சிந்தையிற்செற்றமுன்னுந்திக்குணந்தலைநின்றார்கள்.

(இ-ள்.) கந்தியர்தம்மில் தாமே சனன்று எழுகலாங்கள் கொள்ள= தவப்பெண்கள் தம்முள்ளே தாம் ஒருவரோடொருவர் வெகுண்டு எழுந்து கோபஞ்செய்ய; வந்தவாறு அமணர்தம்மின் மாறுகொண்டு ஊறு செய்ய சமண முனிவர்கள்நேரிட்டவாறே தம்முள்ளே தாம் பகைகொண்டு ஒருவர்க்கொருவர் துன்பஞ்செய்யவும் ; முந்தைய உரையில்கொண்ட பொறைமுதல் அவையும் விட்டு=முற்பட்ட அறங்களாக அருகநூலில் தாம்கொண்ட பொறை முதலிய நற்குணங்களையும் விட்டு ; சிந்தையில் செற்றமுன்னுட் டிக்குணம் தலைநின்றார்கள்=மனதில் கோபமுதலியவான கொடிய குணங்களை உடையவர்களானார்கள்—எ-று.

தலைநின்றார்களென்றதில் தலையென்றது பக்கிசைத்துவேறுபொருள்தராமையின் ஒருசொனீர்மைத்து. கந்தியர்=தவப்பெண்கள். கலாம் = கோபம்.

Koviloor Digital Library

மகன்றுய்க்கலாம் என்றும் வழக்குநோக்கியுணர்க. தாய்க்கலாமென் புழித் தாயொடு கலாய்த்தகலாமெனவிரியும்.

"அமணர்கள் கலாங்கள் கொள்ளவும் மாறு செய்யவும் பொறைமுத லைவையும் விட்டுத்தலை நின்றார்கள்" எனக்கூட்டுக. (௬௩௪)

இப்படியமணர்வைகுமெப்பெயர்ப்பதியுமெய்தும்
ஒப்பிலுற்பாதமெல்லாமொருவரினொருவர்கூறி
மெய்ப்படுதீக்கனாவும்வேறுவேறாகக்கண்டு
செப்புவான்புறத்துளோருந்தென்னவன்மதுரைசேர்ந்தார்.

(இ-ள்.) இப்படி அமணர்வைகும் எப்பெயர்ப்பதியும்=இவ்வாறு சம ணர்கள் தங்கிய எவ்வகைப்பட்ட பெயர்களையுடைய நகரங்களிலும்; எய்து ம் ஒப்பில் உற்பாதமெல்லாம் ஒருவரின் ஒருவர்கூறி=நிகழ்ந்த எல்லையில்லாத கேடுவிளைக்குந் நிக்குறிகளை யெல்லாம் ஒருவரோடொருவர்சொல்லி; மெய்ப் படு தீக்கனாவும் வேறுவேறாகக்கண்டு=மெய்ம்மைபொருந்திய கொடியகனவுக ளையும் வெவ்வேறாகக்கண்டு; செப்புவான் புறத்துளோரும் தென்னவன் மதுரைசேர்ந்தார்=பாண்டியனுக்குச்சொல்லும்படி மதுரையின் புறத்திருக் கும் சமணமுனிவர்களும் பாண்டியனது மதுராபுரியை அடைந்தார்கள்.


புறத்துளோருமென்றும் எச்சவும்மை, அவ்வூரிலுள்ளாரையுந் தழுவி நின்றது. அகத்துளோர் அங்ஙனமுள்ளாராக அங்ஙனஞ் சேர்தலெவ்வாறு மெனின் 'தாமிருக்குமிடத்தில் நின்று செப்புதல்கருதிக்குறித்த பிறிதிடஞ் சேருங்காற் சேர்தலுமுளவாமென்க.

எப்பெயர்ப்பதியும் என்புழிமேற் குறித்த எட்டுமலைகளும் பிறபதியுங் கொள்க.

புறத்துளோர் என்றது மதுரையின் புறத்திலுள்ளாரை என்றுகொ ள்க. புறத்துளோருமென்புழி, அஞ்சனமுதலிய மலைவாழும் அமண்முனிவ ரும் அடங்க மதுரையின் புறத்துள்ளாரைமாத்திரங் கூறியதென்ன அவர் கட் கனுக்காறுதல், கனவினிலையுரைத்தல், முதலியன பொதுமையினிகழ் ந்தனவாயினும் சின்னாளில் நெடுந்தூரத்திருந்து மதுரை சேரும்வினை நிகழ் தல் கூடாமையின் அவர் விலக்கப்பட்டனர். அது "ஆறு போயினாரெல் லாம் கூறைகோட்பட்டாரென்புழி கூறைகோட்படுதல் கள்வரையொழித் தாற்போல்" என்க. (௬௩௫)

அந்நகர்தன்னில்வாழ்வார்புறம்புநின்றணைவார்கூடி
மன்னவன்றனக்குங்கூறிமருண்டவுள்ளத்தராகித்
துன்னியவழக்குமெய்யிற்றாகிலார்பலருமீண்டி
யின்னகனவுகண்டேமெனவெடுத்தியம்பலுற்றார்.

(இ-ள்.) அந்நகர் தன்னில் வாழ்வார் புறம்பு நின்று அணைவார் கூ டி=அந்தமதுரை நகரத்தில்வாழும் சமணமுனிவரும், புறத்திநின்றுவந்தசமவ



திருஞானசம்பந்தசுவாமிகள் திருக்கூட்டத்துடன் மதுரைக்குச்செல்லுழிசமணாள்சொர்ப்பனங்கண்டதைபாண்டியனுக்கு அறிக்கைசெய்தல்.

Koviloor Digital Library

ணமுனிவரும் ஒருங்குகூடி ; மன்னவன் தனக்குங்கூறி மருண்டவுள்ளத்த ராகி=பாண்டியனுக்கும் நிகழ்ந்தனவற்றைச்சொல்லித்தீர்வு(குறியாமல்)யாது செய்வோமென மயங்கியமனமுடையவராய் ; துன்னிய அழுக்குமெய்யில் தூசு இலார் பலரும் ஈண்டி=அழுக்கடைந்த தம்முடம்பில் ஆடையில்லாத அச்சமண நீத்தோர் பலருங்கூடி; இன்னனகனவுகண்டேம் என எடுத்து இய ம்பலுற்றார்=இத்தன்மையவானதீக்கனவை யாம் கண்டோமென்று பலரும் அறியக்கூறுவாராயினர்—எ-று. (௬௯௬)

சீர்மலியசோகுதன்கீழிருந்தநந்தேவர்மேலே
வேரொடுசாய்ந்துவீழக்கண்டனமதன்பின்னாக
ஏர்கொண்முக்குடையுந்தாமுமெழுந்துகைநாற்றிப்போக
ஊருளோரோடிக்காணக்கண்டனமென்றுரைப்பார்.

(இ-ள்.) சீர்மலி அசோகுதன்கீழ் இருந்த நந்தேவர்மேல் = சிறப்பு அமைந்த அசோகமரம் அதன்கீழ் எழுந்தருளியிருந்த நமது அருகக்கடவுளி ன்மேல் ; வேரொடுசாய்ந்துவீழக் கண்டனம்=(அவ்வசோகமரமானது) வே ருடன் சாய்ந்துவிழக்கண்டோம் ; அதன்பின்னாக ஏர்கொள் முக்குடையுந் தாமும் எழுந்துகை நாற்றிப்போக; அதன்பின்பு (அக்கடவுள்) அழகிய மூன் றுகுடையும் தாமும் அதில் நின்று எழுந்து கைகளை நாலவிட்டுச்செல்ல ; ஊருளோர் ஓடிககாணக்கண்டனம் என்று உரைப்பார் = ஊரிலுள்ளார் ஓடி யதனைக்காணும்படியாம் கண்டோம் என்று அவர் உரைப்பாராயினர்-எ-று.

குண்டிகைதகர்த்துப்பாயும்பீறியோர்குரத்தியோடப்
பண்டிதர்பாழிநின்றுங்கழுதைமேற்படர்வார்தம்மின்
ஒண்டொடியியக்கியாருமுலையிட்டுப்புலம்பியோடக்
கண்டனமென்றுசொன்னார்கையறுகவலையுற்றார்.

(இ-ள்.) குண்டிகை தகர்ந்துபாயும் பீறி ஓர் குரத்தி ஓட=கமண்ட லத்தையுடைத்துப் பாயையுங்கிழித்து ஒரு குருபன்னியோடவும் ; பண்டி தர் பாழிநின்றும் கழுதைமேல் படர்வார்=பண்டிதர்களாகிய சமண நீத் தோர் தமது பாழியில் நின்றும் கழுதையின்மேலேறிச் செல்வாராகவும் ; தம்மின் ஒண்டொடி இயக்கியாரும் உலையிட்டு புலம்பி ஓட=தம்முள் ஒள்ளி யவளையலையணிந்த தருமதேவதையும் அழுதுபுலம்பிச் செல்லவும் ; கண்ட னம் என்றுசொன்னார் கையறுகவலையுற்றார்=கனவுகண்டோம் என்றுசொன் னார்கள் அளவில்லாத துன்பத்தையடைந்த சமணர்கள்—எ-று. (௬௯௮)

கானிடைநட்டமாடுங்கண்ணுதரெண்டரெல்லா
மீனவன்மதுரைதன்னில்விரவிடக்கண்டோமென்பார்
கோனவன்றானும்வெய்யகொழுந்தழன்முழுகக்கண்டோம்
ஆனபிணெழவுங்கண்டோமதிசயமிதுவாமென்பார்.

Koviloor Digital Library

(இ-ள்.) காவிடை நட்டமாடும் கண்ணுதல் தொண்டர் எல்லாம்=மசானத்தில் நடனஞ்செய்கின்ற நெற்றிக்கண்ணுடைய சிவனது அடியார்கள் எல்லாம்; மீனவன் மதுரைதன்னில் விரவிடக்கண்டோம் என்பார்=பாண்டியனது மதுரையில்வந்து கூட யாம் பார்த்தோமென்று சொல்லுவார்கள்; கோனவன் தானும்வெய்ய கொடுந்தழல் முழுகக்கண்டோம்=அப்பாண்டியனும் கொடிய பெருநெருப்பில் விழுந்தழுந்தப்பார்த்தோம்; ஆனபின் எழவும் கண்டோம் அதிசயம் இதுவாம் என்பார்=முழுகியதன்மேல் அதனில் நின்று எழவும் பார்த்தோம் இது ஓர் ஆச்சரியமாமென்றுங்கூறுவார்—எ-று. (௬௩௯)

மழவிடை யிளங்கன்றொன்றுவந்துநங்கழகந்தன்னை
யுழறிடச்சிதறியோடியொருவருந்தடுக்கவஞ்சி
விழவொருபுகலுமின்றிமேதினிதன்னைவிட்டு
நிழலிலாமரங்களேறிநின்றிடக்கண்டோமென்ன.

(இ-ள்.) மழவிடை இளங்கன்று ஒன்றுவந்து நம்கழகம் தன்னையுழறிட=(மேலும் அச் சமணமுனிவர்) இளமைபொருந்திய விடைச்சிறுகன்று ஒன்று வந்து நமது பண்டிதராது சபையைக்கலக்க; சிதறி ஓடி ஒருவருந் தடுக்க அஞ்சி=(அதனால் யாவரும்) சிதறுண்டோடி ஒருவரேனும் அதனைத் தடுக்கப்பயந்து; விழ ஒருபுகலும் இன்றி=தாம் அடைய ஒருபுகலிடமும் இல்லாமல்; மேதினி தன்னைவிட்டு நிழல் இலாமரங்கள் ஏறிநின்றிடக் கண்டோம் என்ன=பூமியைவிட்டு நிழலில்லாத மரங்களிலேறி நிற்கப்பார்த்தோம் என்றுகூற—எ-று. (௬௪0)

ஆவதென்பாவிகாளிக்கறுநதிறமடிகண்மார்க்கு
மேவியதிங்குதன்னைவிளைப்பதுதிடமேயென்று
நோவுறுமனத்தராகிநுகர்பெரும்பதமுங்கொள்ளார்
யாவதுசெயலென்றெண்ணியிடருழன்றழுங்கினார்கள்.

(இ-ள்.) பாவிகாள்! ஆவது என்=பாவிகளே! இதற்குத் நிர்வாகச் செய்யத்தக்கது யாது; இக்குறுத்திறம் இக்குறைவின்வரலாறு அடிகள் மார்க்குமேவிய தீங்கு தன்னைவிளைப்பது திடமே என்று=நமது சமணமுனிவர்க்கு வருகின்ற கெடுதியைச்செய்வது திண்ணமேயென்று; நோவுறுமனத்தராகி நுகர்பெரும்பதமும் கொள்ளார்=துன்புறும் மனமுடையராய் தாம் நுகர்தற்குரிய உணவுகளையும் உண்ணாதவர்களாய்; யாவதுசெயல் என்று எண்ணி இடர் உழன்று அழுங்கினார்கள்=யாம் செய்யும் செயல் யாது என்று கருதித்துன்புற்று அதைக்கேட்ட (சமணர்கள்) வருந்தினார்கள்—எ-று. (௬௪௨)

அவ்வகையவர்களெல்லாமந்நிலைமையர்களாகச்
சைவநன்மரபில்வந்ததடமையின்மடயென்சாயற்
பைவளரரவோல்குற்பாண்டிமாதேவியார்க்கு
மெய்வகையமைச்சனார்க்கும்விளக்குநன்னிமித்தமேன்மேல்.

Koviloor Digital Library

(இ-ள்.) அவ்வகை அவர்கள் எல்லாம் அர்த்திலைமையர்களாக=அவ்வாறு அச்சமணர்கள் எல்லாரும் துன்பமுடையவர்களாக; சைவநன் மரபில்வந்த தடமயில் மடமென்சாயல்=நல்லசைவ மரபில் அவதரித்த பெருமைபொருந்திய மயில்போலும் மடமைபொருந்திய மிருதுவான நடைத்தோற்றத்தையும்; பைவளர் அரவு ஏர் அல்குல் பாண்டிமாதேவியார்க்கும்=பாம்பின்படம்போலும் வளர்ந்தகன்ற அழகிய அல்குலையும் உடையபாண்டிமாதேவியாருக்கும்; மெய்வகை அமைச்சனூர்க்கும் விளங்கும் நன் நிமித்தம் மேல் மேல்=உண்மைத்தன்மையையுடைய குலச்சிறை நாயனுருக்கும் நல்ல நிமித்தங்கள் மேலும் மேலும் விளங்காநிற்கும்—எ-று.

துறவிகளும் துறவிகளல்லாத சமணர்களும் அடங்க, அவர்கள் எல்லாம் என்ருர். (௬௪௨)

அளவிலாமகிட்சிகாட்டுமரும்பெருநிமித்தமெய்த
வுளமகிழ்வுணருங்காலையுலகெலாமுய்யவந்த
வளரொளிஞானமுண்டாார்வந்தணைந்தருளும்வார்த்தை
கிளர்வுறுமோகைகூறிவந்தவர்மொழியக்கேட்டார்.

(இ-ள்.) அளவு இலாமகிழ்ச்சிகாட்டும் அரும்பெரும் நிமித்தம் எய்த=அளவில்லாத மனமகிழ்ச்சியைத் தெரிவிக்கும் அருமைபொருந்திய பெரிய சுபசூசனமான நிமித்தங்கள்வர; உளமகிழ்வுணரும்காலை=அவர்கள் மனமகிழ்ந்திருக்குங்காலத்து; உலகு எலாம் உய்யவந்த வளர் ஒளி ஞானம் உண்டார்=எல்லா உலகங்களும் ஈடேற அவதரித்த மிக்க ஒளியையுடைய சிவஞானத்தைத் திரு அமுதுசெய்த ஆளுடையபிள்ளையார்; வந்து அணைந்து அருளும் வார்த்தை = மதுரைமாநகரம்வந்து அடைந்தருளுஞ்செய்தியை; கிளர்வுறும் ஓகை கூறிவந்தவர் மொழியக்கேட்டார்=மிக்க உவகையை எடுத்துக்கூறிவந்த பரிசனமாக்கள் சொல்லப்பாண்டிமாதேவியார்கேட்டருளினர்.

சந்திரமண்டலத்தைக் கையாற் பிடித்தல், பாயசம் புசித்தல் முதலிய நற்கனவும், வலந்துடித்தன் முதலியன நற்குறிகளுமடங்க அரும்பெரு நிமித்தமென்ருர். (௬௪௩)

அம்மொழிவிளம்பினேர்க்குவேண்டுவவடையநல்கி
மெய்ம்மையில்விளங்குகாதல்விருப்புறுவெள்ளமோங்கத்
தம்மையுமறியாவண்ணங்கைம்மிக்குத்தழைத்துப்பொங்கி
விம்மியமகிழ்ச்சிகூரமேவியசிறப்பின்மிக்கார்.

(இ-ள்.) அம்மொழிவிளம்பினேர்க்கு வேண்டுவ அடைய நல்கி=பிள்ளையார்வரவுகூறிய பரிசனர்களுக்குவேண்டும் பொருள்களைநிரம்பக்கொடுத்து; மெய்ம்மையில் விளங்குகாதல் விருப்புறு வெள்ளம் ஓங்க=உண்மையோடு விளங்குகின்ற பெருவிருப்பாகிய மிக்கவெள்ளமானது பெருக; தம்மையும் அறியாவண்ணம் கைம்மிக்குத் தழைத்துப்பொங்கி விம்மிய மகிழ்ச்சி

Koviloor Digital Library

கூர=தம்மையும் அறியாமல் வரம்புகடந்து தளிர்த்து உயர்ந்து மேற்பட்ட மகிழ்ச்சியானது அதிகரிக்க; மேவியசிறப்பின் மிக்கார்=பொருந்திய சிறப்பினால் மங்கையர்க்கரசி யார்மேம்பட்டவரானூர்—எ-று.

"விருப்பு" பொதுச்சிறப்பென இருவகைப்படும். பொதுவாவது ஓர் பொருள்பெற்றழிப் பேருவகையும், அதனிழப்பிற் பெருந்துன்பமும் உடையாயிருப்பு. சிறப்பு விருப்பாவது ஒருபொருள் பெற்றுழியும் இழப்புழியும் முறையே களிபேருவகையும் பெருந்துயரும் உழத்தற்கிடனாயது. அவ்விருப்பை மெய்ம்மையில் விளங்குகாதலென்றும் அதனாலாய களிபேருவகையை விம்மியமகிழ்ச்சியென்றும் கூறினர்.

இப்பெருவிருப்பு, அவித்தியப்பொருளில் ஒன்றற்கொன்று வேறுபாடின்மையால்ஒருபொருட்கன்றும், நிலையுதல் செய்யாவேனும் கணவனிழந்துழித்தலையளியால் ஆவிநீக்கும் கற்புடையாளிடத்தும், எப்பற்று மற்றுவிடுவார்ந்தாரிடத்தும் நிலையுதல் செய்யுமென்க. (௬௪௪)

மங்கையர்க்கரசியார்பால்வந்தடிவணங்கிநின்ற
கொங்கலர்தெரியலாராங்குலச்சிறையாரைநோக்கி
நங்கடம்பிரானாராயஞானபோனகர்முன்பெய்தி
யிங்கெழுந்தருளவுய்ந்தோமெனவெதிர்கொள்ளுமென்றார்.

(இ-ள்.) மங்கையர்க்கரசியார்பால் வந்து அடிவணங்கி நின்ற=(இவ்வாறு மகிழ்கூர்ந்தருளிய)பாண்டிமாதேவியாரிடத்து (அவர்பிள்ளையார் வரவு உணர்ந்தமை கேள்விபுற்று)வந்து திருவடிகளில் வணங்கிநிற்கின்ற; கொங்கு அலர்தெரியலாராம் குலச்சிறையாரைநோக்கி=தேனோடு மலர்ந்தமாலையை அணிந்தவராகிய குலச்சிறை நாயனாரைப்பார்த்து; நங்கள் தம்பிரானார் ஞானபோனகர் முன்பு எய்தி = நமது பெருமானாராகிய ஆளுடையபிள்ளையார் இடத்துச்சென்று; இங்கு எழுந்தருள உய்ந்தோம் என எதிர்கொள்ளும் என்றார்=இவ்விடத்துப்பிள்ளையார் எழுந்தருளும் காரணத்தால் அடியேங்கள் பிழைத்தோம் என்று அவர் திருமுன் (விண்ணப்பஞ்செய்து) அவரை யெதிர்கொள்ளும் என்று கூறியருளினார்—எ-று. (௬௪௫)

மன்றலங்குழலினாரைவணங்கிப்போந்தமைச்சனாரும்
வென்றிவேலரசனுக்குமுறுதியேயெனவிரைந்து
பொன்றிகழ்மாடவீதிமதுரையின்புறத்துப்போகி
யின்றமிழ்மறைதந்தாரைபெதிர்கொளவெய்துங்காலை.

(இ-ள்.) அமைச்சனாரும் மன்றல் அம்குழலினாரை வணங்கிப்போந்து=குலச்சிறைநாயனாரும் வாசனைபொருந்திய அழகிய கூந்தலையுடைய பாண்டிமாதேவியாரைப்பணிந்து புறம்பேவந்து; வென்றிவேல் அரசனுக்கும் உறுதியே என=வெற்றியையுடைய வேலேந்திய பாண்டியனுக்கும் பிள்ளை

Koviloor Digital Library



மங்கையர்க்கரசியார்ஸ்வாமிகள்
வரவையறிந்து-மந்திரியாரைஅனு
ப்பியது.



குலச்சிறையார்- ஆளுடையபிள்ளையார்வரவையெதிர்கொண்டு
திருவாலவாய்க்குளெழுந்தருளியது.

Koviloor Digital Library

யார் வரவு உறுதிப்பயனைத்தருவதே என்று; விரைந்து பொன்திகழ் மாடவீதி மதுரையின் புறத்துப்போகி=விரைவாய்ப் பொன்னால் விளங்கும் மாடங்கள் நெருங்கிய வீதியையுடைய மதுரை மாநகரத்தின் புறத்தில் சென்று; இன்தமிழ்மறைதந்தாரை எதிர்கொள எய்துங்காலை = இனிய தமிழ்வேதத்தைத்தந்தருளியபிள்ளையாரை யெதிர்கொள்ளும்படி சென்றகாலத்தில்-எ-று.

அம்புயமலராள்போல்வாராலவாயமர்ந்தார்தம்மைக்
கும்பிடவேண்டுமென்றுகொற்றவன்றனக்குங்கூறித்
தம்பரிசனங்கள்சூழத்தனித்தடையோடுஞ்சென்று
நம்பரைவணங்கித்தாமுநல்வரவேற்றுநின்றார்.

(இ-ள்.) அம்புயமலராள்போல்வார் ஆலவாய் அமர்ந்தார் தம்மை= தாமரைமலரில்வாழும் சீதேவிபோன்ற பாண்டிமாதேவியார் திரு ஆலவாயிலெழுந்தருளிய சுந்தரேசரை; கும்பிடவேண்டும் என்று கொற்றவன் தனக்குங் கூறி=வணங்கவேண்டும் என்று பாண்டியனுக்குஞ்சொல்லி; தம்பரிசனங்கள் சூழத் தனித்தடையோடும் சென்று=தமது பரிசனங்கள் சூழும்படி ஒப்பில்லாத காவலாளருடன் போய்; நம்பரைவணங்கித் தாமும் நல்வரவேற்று நின்றார்=சுந்தரேசரைவணங்கித் தாமும் பிள்ளையாரது நல்லவரவை எதிர்கொண்டுநின்றார்—எ-று. (௬௯௭)

வேறு.

திருநிலவுமணிமுத்தின்சிவிகையின்மேற்சேவித்து
வருநிலவுதருமதிபோல்வளரொளிவெண்குடைநிழற்றப்
பெருகொளியதிருநீற்றுத்தொண்டர்குழாம்பெருகிவர
வருள்பெருகவருஞானத்தமுதுண்டாரணைகின்றார்.

(இ-ள்.) திருநிலவும் அணிமுத்தின் சிவிகையின்மேல்=அழகுவிளங்கிய நல்லமுத்துச்சிவிகையினிடத்து; சேவித்துவரும் நிலவுதரு மதிபோல் வளர் ஒளி வெண்குடை நிழற்ற=பிள்ளையாரைச் சேவைசெய்து அவருடன் செல்லுகின்ற நிலவை வீசும் பூரண சந்திரனைப்போல விளங்கிய கிரணத்தையுடைய வெள்ளியதிருமுத்துக்குடை நிழலைச்செய்ய; பெருகு ஒளிய திருநீற்றுத் தொண்டர் குழாம் பெருகிவர=மிக்க ஒளியையுடைய விபூதியையணிந்த திரு அடியார்கூட்டங்கள் மிக்குப் புடைசூழ்ந்துவர; அருள்பெருக வருஞானத்தமுது உண்டார் வருகின்றார்=திரு அருள் பெருக அரியஞானப்பாலை அமுதுசெய்த ஆளுடையபிள்ளையார் எழுந்தருளுவாராயினார்—எ-று.

துந்துபிகள்முதலாயதூரியங்கள்கிளராமே
யந்தணராமாதவர்களாயிரமாமறையெடுப்ப
வந்தெழுமங்கலநாதமாதிரமுட்படமுழங்கச்
செந்தமிழ்மாருதமெதிர்கொண்டெம்மருங்குஞ்சேவிப்ப

Koviloor Digital Library

(இ-ள்.) துந்துபிகள் முதலாய தூரியங்கள் கிளராமே=தேவதுந்துபிமுதலிய வாத்தியங்களின் ஒலி மேம்படாமல்; அந்தணராம் மாதவர்கள் ஆயிரமாமறை எடுப்ப = மறையவர்களாகிய பெரியதவத்தையுடையவர்கள் அளவில்லாத வேதங்களையெடுத்து ஓத; வந்து எழுமங்கல நாதம் மாதிரம் உட்படமுழங்க=வந்து எழுகின்ற மங்கலவாழ்த்தொலி திக்கெட்டும் பரம்பி அவை தன்னுள் அடங்கும்படி யொலிக்கவும்; செந்தமிழ் மாருதம் எதிர்கொண்டு எம்மருங்கும் சேவிப்ப=செந்தமிழின் சுவையோடுகூடிய சிறுதென்றற் காற்றானது எதிர்கொண்டு எப்பக்கங்களிலும் பிள்ளையாரைச் சேவை செய்யவும்—எ-று. (௯௬௯)

பண்ணியவஞ்சனைத்தவத்தாற்பஞ்சவனாட்டிடைப்பரந்த
வெண்ணிலமணெனும்பாவவிருஞ்சேனையிரிந்தோட
மண்ணுலகமேயன்றிவானுலகுஞ்செய்தபெரும்
புண்ணியத்தின்படையெழுச்சிபோலெய்தும்பொலிவெய்த.

(இ-ள்.) பண்ணியவஞ்சனைத் தவத்தால் பஞ்சவன்னாட்டிடைப் பரந்த=சமணர்செய்த இழிந்த தவப்பேற்றினால் பாண்டியனது நாட்டினிடத்துப்பரவிய; எண்ணில் அமண் எனும் பாவ இரும் சேனை இரிந்து ஓட=அளவில்லாத சமணர் என்னும் பாவம் ஆகிய பெரியசேனைகள் முதுகுகாட்டியோட; மண் உலகமே அன்றிவான் உலகும் செய்த=நில உலகத்தாரேயன்றி விண்ணுலகத்தாருஞ்செய்த; பெரும்புண்ணியத்தின்படை எழுச்சிபோல் எய்தும் பொலிவெய்த=பெரிய சிவபுண்ணியந்திரண்டு எழுந்த அதனது படையெழுச்சிபோல் திருக்கூட்டத்தினடுவில் பிள்ளையார் தோற்றுநிற்க—எ-று.

சமணர் சுருதிநெறிபிழைத்த அறநெறி நின்றாராதலின், அவர் பண்ணியதவத்தை வஞ்சனைத்தவமென்றும், அத்தவத்தாற்பரந்த அமணர் பாவமுடையாராதலின், அவரைப்பாவ இருஞ்சேனையென்றுருவகித்து அவரை இரிந்தோடச்செய்யும் புண்ணியவடிவராகிய பிள்ளையார் வரவை யதன்படையெழுச்சியென்று உவமைகூறினர்.

விண்ணுலகுள்ளார் அந்தணரியும் அவிகளைச் சந்திரமண்டலத்தில் சுக்கிலபட்சத்தில்வைத்து அதனைக் கிருட்டிணபட்சப்பிரதமைமுதல் ஒரோர்கலையாகக்கொள்ளவும், மண்ணுலகத்தார் வேதமார்க்கத்தையடைந்து புருடார்த்தங்களையடையவும், பிள்ளையார் வேதமார்க்கத்தை வளர்த்தாலன்றிப் பெறப்படாமையின் அவ்விருவர்புண்ணியங்களும் ஆண்டு நிமித்தமாதலின் அதனையுமுடன்கூறுவார், மண்ணுலகமேயன்றி வானுலகஞ்செய்த பெரும்புண்ணியத்தின் படையெழுச்சியென்றார். (௯௭௦)

துன்றுமுழுவுடற்றுகளாற்குழுமுணர்விறுற்றுகளா
வன்னெறியிற்செறிந்தடைந்தவமண்மாசுகழுவுதற்கு

Koviloor Digital Library

மன்னியொளிர்வெண்மையினாற்றூய்மையினால்வழுதியர்தங்
கன்னிநாட்டிடைக்கங்கையணைந்ததெனுங்கவின்காட்ட.

(இ-ள்.) முழுவுடல் துன்னும் தகளால் உணர்வினில் சூழும் தகளால்=சரீரமுழுதும் நீராடல் முதலிய நியமங்கள் செய்யாமையால் அடைந்த அழுக்கினாலும் அவர் அறிவினிடத்து நேர்ந்த அஞ்ஞான அழுக்காலும்; அல்நெறியில் செறிந்து அடைந்த அமண் மாசுகழுவுதற்கு=நெறியல்லாத நெறியில் சேர்ந்து அடைந்த அமணராகிய அழுக்கைக்கழுவுதற்கு; மன்னி ஒளிர் வெண்மையினால் தூய்மையினால்=அடியார் திருமேனியில் நிலைபெற்று விளங்கும் விபூதியின் வெண்ணிறத்தாலும் தூய்மையினாலும்; வழுதியர்தம் கன்னி நாட்டிடைக்கங்கை அணைந்தது எனும் கவின்காட்ட=பாண்டியர்களது கன்னிநாட்டின் கண்கங்காநதியானது வந்து பிரவாகித்தாற்போலும் பொலிவைக்காட்ட—எ-று.

உடற்குற்றங்களும் மனக்குற்றங்களும் நிறைந்து நெறியல்லா நெறி நின்ற அமணரை மாசெனவுருவகித்து அம்மாசுகழுவப் பாண்டிநாட்டின் கண்வரும் பிள்ளையாரது வரவை விபூதியின் வெண்மையாலும் மனத்தூய்மையாலும் அதனிடத்துவருங் கங்கையென உவமை கூறினார்.

மாசுகழுவுதலும் வெண்மையும் தூய்மையும் உபமான உபமேயங்கட்குப் பொதுத்தன்மையாமென்க. (௬௯௧)

பானல்வயற்றமிழ்நாடுபழிநாடும்படிபரந்த
மானமிலாவமணென்னும்வல்லிருள்போய்மாய்வதனுக்
கானபெருகொளிப்பரப்பாலண்டமெலாங்கொண்டதொரு
ஞானமணிவிளக்கெழுந்துவருவதெனநலம்படைப்ப

(இ-ள்.) பானல்வயல் தமிழ்நாடு பழிநாடும்படி பரந்த = நீலமலர்களையுடைய வயல்சூழ்ந்த பாண்டிநாடானது பழியையடையும்படி பரம்பிய; மானம் இலா அமண் என்னும் வல் இருள்போய் மாய்வதனுக்கு = இலச்சையில்லாத சமணரென்றும் பெரிய இருள்கெட்டு அழிய; ஆனபெருகு ஒளிப் பரப்பால் அண்டம் எலாம் கொண்டது ஒரு=உதித்த பெரிய ஒளியின் வியாபகத்தால் அண்டங்கள் எல்லாவற்றையுந் தன்னுள் அடக்கியதான ஒப்பற்ற; ஞானமணிவிளக்கு எழுந்துவருவது என நலம்படைப்ப=அழகியஞானதீபம் எழுந்துவந்தாற்போலும் தோற்றத்தைச்செய்யவும்—எ-று. (௬௯௨)

புரசைவயக்கடகளிற்றுப்பூழியர்வண்டமிழ்நாட்டுத்
தரைசெய்தவப்பயன்விளங்கச்சைவநெறிதழைத்தோங்க
வுரைசெய்திருப்பேர்பலவுமுதுமணிச்சின்னமெல்லாம்
பரசமயகோளரிவந்தானென்றுபணிமாற.

Koviloor Digital Library

(இ-ள்.) புரசைவயக்கடகளிற்றுப்பூழியர்வண் தமிழ்நாட்டுத்தரை=முகபடாத்தோடு வெற்றியையும் மதத்தையுங்கொண்ட யானைப்படையையுடைய பாண்டியர்களது வளம்பொருந்திய தமிழ்நாடென்னும் பூமியானது; செய்தவப்பயன்விளங்க = செய்ததவப்பயனானது பிரகாசிக்கவும்; சைவநெறிதழைத்து ஓங்க=சைவமார்க்கம் தழைத்து வளரவும்; உரைசெய்திருப்பேர்பலவும் ஊதுமணிச்சின்னம் எலாம்=எடுத்து ஓதத்தக்க ஆளுடையபிள்ளையாரது திருஞானசம்பந்தன் பாலறுவாயன் முத்தமிழ் விரகன் என்னும் நாமங்கள் பலவற்றையும் ஊதுகின்ற முத்துச்சின்னங்கள் எல்லாம்; பரசமயகோளரிவந்தான் என்று பணிமாற=பரசமயகோளரியாகிய ஆளுடையபிள்ளையார் வந்தாரென்று பணிமாறவும்—எ-று.

எல்லாம் என்றதனால் காளம், சின்னம், தாரையாகிய மூன்றினையும் பொதுவாயுணர்த்தி நின்றது. பணிமாறல் ஊதுதல்மேற்று. (சுடுரு)

வேறு.

இப்பரிசணையுஞ்சண்பையர்பெருமானெழுந்தருளும்பொழுதிசைக்கு, மொப்பினித்திலப் பொற்றனிப் பெருங்காளமுலகுய்யவொலித்தெழுமோசை, செப்பரும்பெருமைக்குலச்சிறையார்தஞ்செவிநிறையமுதெனத்தேக்க, வப்பொழுதறிந்துதலத்தின்மேற்பணிந்தேயளப்பருங்களிப்பினரானார்.

(இ-ள்.) இப்பரிசு அணையும் சண்பையர் பெருமான் எழுந்தருளும் பொழுது=இவ்வாறாக அடைந்தருளும் சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார் எழுந்தருளுங்காலத்தில்; இசைக்கும் ஒப்பில் நித்திலப்பொற் றனிப் பெருங்காளம் உலகுய்ய ஒலித்து எழும் ஓசை=ஞானசம்பந்தன் வந்தானென்று ஒலிக்கின்ற ஒப்பில்லாத முத்தாலாகிய அழகிய ஒருபெருங்காளத்தினின்றும் உலகம் ஈடேற ஒலித்து எழாநின்ற ஓசையானது; செப்பரும் பெருமைக்குலச்சிறையார் தம் செவிநிறை அமுது எனத்தேக்க=சொல்லுதற்கரிய குலச்சிறை நாயனாரது திருச்செவியில் நிறைந்த அமுதம்போலத்தேக்க; அப்பொழுது அறிந்து தலத்தின்மேற்பணிந்து அளப்பரும் களிப்பினர் ஆனார்=அக்காலத்து அதைக்கேட்டு நிலத்தின்மேல் வணங்கி அளவில்லாத களிப்பு உடையவரானார்—எ-று. (சுடுசு)

அஞ்சலிகுவித்தகரங்களுந்தலைமேலணைந்திடக்கடிதுசென்றணைவார்
நஞ்சணிகண்டர்தந்திருமகனாருடன்வருநற்றவக்கடலை [து
நெஞ்சினினிறைந்தவார்வமுன்செல்லக்கண்டு நீணிலத்திடைத்தாழ்ந்
பஞ்சவர்பெருமான்மந்திரித்தலைவர்பாங்குறவணைந்துமுன்பணிந்தார்.

(இ-ள்.) அஞ்சலிகுவித்தகரங்களும் தலைமேல் அணைந்திடக்கடிது சென்று அணைவார்=அஞ்சலியாகக் குவித்தகரங்களும் தலைமேல் ஏறவிரை

Koviloor Digital Library

ந்துசென்று கிட்டுபவராய்; நஞ்சணிகண்டர்தம் திருமகனார் உடன்வரும் நற்றவக்கடலை = நஞ்சணிந்த திருமிடற்றையுடைய சிவபெருமானாரது திருமகனாராகிய பிள்ளையாருடன்வரும் நல்ல தவக்கடல்போன்ற அடியார்கூட்டத்தை; நெஞ்சினில் நிறைந்த ஆர்வம்முன் செல்லக்கண்டு நீள் நிலத்திடைத் தாழ்ந்து=மனதில் நிறைந்த பெருவிருப்பானது தம்முன் செல்லத் தரிசித்துப் பெரிய நிலத்தில் திருமேனிதோயப்பணிந்து; பஞ்சவர்பெருமான் மந்திரித்தலைவர் பாங்குற அணைந்து முன்பணிந்தார்=பாண்டியர் பெருமானது முதல்மந்திரியாராகிய குலச்சிறை நாயனார் பிள்ளையார் பக்கத்தில் பொருந்த அடைந்து அவர் திருமுன்னேவிழுந்து பணிந்தார்—எ-று.

மந்திரித்தலைவர் அணைவராய்த் தாழ்ந்துபணிந்தாரெனக்கூட்டுக. ()

நிலமிசைப்பணிந்தகுலச்சிறையாரைநீடியபெருந்தவத்தொண்டர் [டு
பலருமுன்னணைந்துவணங்கிமற்றவர்தாம்படியினின்றெழாவகைகண்
மலர்மிசைப்புத்தேள்வழிபடும்புகலிவைதிகச்சேகரர்பாதங்
குலவியங்கணைந்தார்தென்னவனமைச்சர்குலச்சிறையாரெனக்கூற.

(இ-ள்.) நிலமிசைப்பணிந்த குலச்சிறையாரை நீடிய பெரும்தவத்தொண்டர்=பூமியின்மேல் வணங்கிக்கிடந்த குலச்சிறை நாயனாரை மேம்பட்ட பெரியதவத்தினையுடைய அடியார்கள்; பலரும் முன் அணைந்து வணங்கி=பலரும் முன்னே அடைந்து வணங்கி; மற்றவர் தாம் படியில் நின்று எழாவகைகண்டு=அக்குலச்சிறைநாயனார் பூமியில் நின்றும் எழாதிருத்தலைப் பார்த்து; மலர்மிசைப்புத்தேள் வழிபடும் புகலி வைதிகச்சேகரர் பாதம் குலவி=தாமரைமலரின்மேல் வசிக்கும் பிரமன் வழிபடும் சீகாழியில் அவதரித்த வைதிக முதல்வராகிய பிள்ளையாரது திருவடிகளையடைந்து; தென்னவன் அமைச்சர் குலச்சிறையார் அங்கு அணைந்தார் எனக்கூற=பாண்டியனது அமைச்சராகிய குலச்சிறைநாயனார் அவ்விடத்து அடைந்தாரென்று அவர் வணங்கிக்கிடக்கும் நிலைமையைச்சொல்ல—எ-று. (௬௫௬)

சிவபுரச்செல்வரவருரைகேட்டுத்திருமுகத்தாமரைமலர்ந்து [ணைந்து
விரவொளிமுத்தின்சிவிகைநின் றிழிந்துவிரைந்து சென்றவர்தமைய
கரகமலங்கள்பற்றியேயெடுப்பக்கைதொழுதவருமுன்னிற்ப
வரமிகுதவத்தாலவரையேநோக்கிவள்ளலார்மதுரவாக்களிப்பார்.

(இ-ள்.) சிரபுரச்செல்வர் அவர் உரைகேட்டுத் திருமுகத்தாமரை மலர்ந்து=சீகாழிச்செல்வராகிய ஆளுடையபிள்ளையார் அடியார்கள் கூறிய வார்த்தையைக் கேட்டருளித் திருமுகமாகிய தாமரைமலர்ந்து; விரவு ஒளி முத்தின் சிவிகை நின்று இழிந்து=நிறைந்த ஒளியையுடைய முத்துச்சிவிகையில் நின்று இரங்கியருளி; விரைந்து சென்று அவர் தமை அணைந்து=விரை

Koviloor Digital Library

வாகப்போய் அக்குலச்சிறை நாயனாரை அடைந்து; கரகமலங்கள் பற்றியே எடுப்பக் கைதொழுது அவரும் முன்நிற்ப=தமது திருக்கரங்களாகிய தாமரைமலர்களால் அவரைப்பற்றி யெடுக்குங்கால் அந்நாயனாரும் லககூப்பி வணங்கித் திருமுன்நிற்க; வரமிகுதவத்தால் அவரையே நோக்கி வள்ளலார் மதுரவாக்கு அளிப்பார்=மேன்மை மிக்க பெரியதவங் காரணமாக அவரைப்பார்த்தருளி ஆளுடையபிள்ளையார் மதுரமான வாக்கைத் தந்தருளுவாராயினார்—எ-று, (௬௫௭)

செம்பியர்பெருமான்குலமகளார்க்குந்திருந்தியசிந்தையீருமக்கு
நம்பெருமான்றன்திருவருள்பெருகுநன்மைதான்வாலிதேயென்ன
வம்பலரலங்கன்மந்திரியாருமண்மிசைத்தாழ்ந்தடிவணங்கித்
தம்பெருந்தவத்தின்பயனனையார்க்குத் தன்மையாநிலையுரைக்கின்றார்.

(இ-ள்.) செம்பியர் பெருமான் குலமகளார்க்கும் திருந்திய சிந்தையீர் உமக்கும்=சோழர்பிரான் குலமகளாராகிய பாண்டிமாதேவியாருக்கும் திருத்தமாகிய சித்தத்தையுடையராகிய உமக்கும்; நம்பெருமான் தன் திருவருள்பெருகும் நன்மைதான் வாலிதே என்ன = நமது சிவபெருமானது திருவருள்பெருகிய நன்மையானது நன் கிருந்ததாவென்றுவினவ; வம்பு அலர் அலங்கல் மந்திரியாரும் மண்மிசைத் தாழ்ந்து அடிவணங்கி=வாசனையோடு அலர்ந்த பூமாலையையணிந்த குலச்சிறைநாயனாரும் (அவ்வாக்குக்கேட்டபொழுது) நிலத்தின்மேல்விழுந்து அவரது திருவடிகளை வணங்கி; தம் பெருந்தவத்தின்பயன் அனையார்க்குத் தன்மையாம் நிலை உரைக்கின்றார்= தமது பெரிய தவப்பயனையொத்த பிள்ளையாருக்கு அத்திருவருள் நிகழுந் தன்மையான நிலைமையை யிவ்வாறென்று உத்தரங்கூறுவாராயினார்—எ-று.


சென்றகாலத்தின்பழுதிலாத்திறமுமினியெதிர்காலத்தின்சிறப்பு
மின்றெழுந்தருளப்பெற்றபேறிதனலெற்றைக்குந்திருவருளுடையேம்
நன்றியினெறியிலழுந்தியநாடுநற்றமிழ்வேந்தனுமுய்ந்து [மென்பார்
வென்றிகொடிருநீற்றொளியினில்விளங்கு மேன்மையும் படைத்தன

(இ-ள்.) சென்றகாலத்தின் பழுது இலாத்திறமும் இனி எதிர்காலத்தின் சிறப்பும்=கழிந்தகாலத்தில் பழுதில்லாத வகைமையும் இனிவருங்காலத்தில் நிகழுஞ்சிறப்பையும்; இன்று எழுந்தருளப்பெற்ற பேறு இதனால் எற்றைக்கும் திரு அருள் உடையேம் = இப்போது (இந்நாட்டில்) பிள்ளையார் எழுந்தருளப்பெற்ற பேறாகிய இதனால் எக்காலத்தும் திருவருளையாம் உடையோம் (அதுவன்றி); நன்றியில் நெறியில் அழுந்திய நாடும் நற்றமிழ்வேந்தனும் உய்ந்து=நன்மையில்லாத சமணமார்க்கத்தில் முழுகிய இந்தப்பாண்டிநாடும் நல்ல தமிழ்த்தலைவனுகிய பாண்டியனும் பிழைத்து; வென்றிகொள் திருநீற்று ஒளியினில் விளங்கும் மேன்மையும் படைத்தனம் என்பார்=அச்

Koviloor Digital Library



மங்கையர்க்கரசியார் அரசன்
அனுமதிபெற்று ஆலயத்துக்குச்செல்லல்.



பாண்டிமாதேவியார் - சுந்தரேசரைத்தெரிசித்து ஸ்வாமிகள்வர
வையெதிர்கொண்டு எழுந்தருளிய பின் வணங்கல்.

Koviloor Digital Library

சமண் நெறியினின்றும் நீங்கி வெற்றிபொருந்திய விபூதியொளியால் விளக்க மடையும் மேன்மையையும் யாம் பெற்றோமென்று கூறினர்—எ.று.

திருவருளுடையாரைத் தரிசிக்கவேண்டுமெனக் கழிகாலத்திருந்த அவா, பயன்படாதொழியாது பயன்பட, பிள்ளையார் இச்காலத்தெழுந் தருளப்பெற்ற பேறுடைமையில் சென்றகாலத்தின் பழுதிலாத்திறமுமென் றும், ஈண்டுத் தரிசிக்கப்பெற்றுத் திருவருட் பாத்திரராய்க் குறையறுத் து மேலும் ஒழுகப்பெறுதலின் இனி யெதிர்காலத்தின் சிறப்பென்றும், இவ் வாறு நிகழ்காலங் காரணமாய்க் கழிகாலமும் எதிர்காலமும் பயனடைந்தோ மாதலால் எற்றைக்குந் திருவருளுடையேம் என்றும், இவ்வாறு எம்பயனே யன்றி எம்மரசனும் நாமும் சமண் நீங்கிச் சைவம் புகப்பெறுதலில் "வெ ன்றிகொள் திருநீற்றொளியினின் விளங்குமேன்மையும் படைத்தனம்" என் றும் கூறினர் என்றும். பிள்ளையார் திருவருள் வலிதேயென்றுவினவிய வினவிற் கு இவ்வாறு தரிசிக்கப் பெற்றுக் குறையறுத்தலில் திருவருளுடையே மென உத்தரம்போந்தவாறுணர்க. (சுருஅ)

இங்கெழுந்தருளும்பெருமைகேட்டருளியெய்துதற்கரியபேறெய்தி
மங்கையர்க்கரசியாருநம்முடையவாழ்வெழுந்தருளியதென்றே [வம்
யங்குநீரெதிர்சென்றடிபணிவீரென்றருள்செய்தாரெனத்தொழுதார்
பொங்கியகளிப்பான்மீளவும்பணிந்துபோற்றினர்புரவலரமைச்சர்.

(இ-ள்.) இங்கு எழுந்தருளும் பெருமை கேட்டருளி எய்துதற் கரிய பேறெய்தி = பிள்ளையார் இந்நாட்டிற்கு எழுந்தருளும் பெருமையைப் (பிறரால்) கேட்டருளி யடைதற்கரிய பெரும்பயனை யடைந்து ; மங்கையர் க்கரசியாரும் நம்முடைய வாழ்வெழுந்தருளியது என்று = பாண்டிமாதே வியாரும் நமது பெருவாழ்வாகிய பிள்ளையார் எழுந்தருளிய தென்று ; அங் கு நீர் எதிர் சென்று அடிபணிவீரென்று அருள்செய்தாரெனத் தொழுது = அவ்விடத்து நீர் எதிர்கொண்டு சென்று பிள்ளையார்திருவடிகளை வணங்கு வீரென்று அருளிச்செய்தா ரென்றுவணங்கி ; ஆர்வம் பொங்கிய களிப்பால் மீளவும் பணிந்துபுரவலர் அமைச்சர்போற்றினர் = பெருவிருப்பி னின்றும் உதித்த மகிழ்ச்சியினால் பாண்டியன் முதன்மந்திரியாராகிய குலச்சிறை நாய னர் மீண்டும் வணங்கித்துதித்தார்—எ-று. (சுருக)

ஆங்கணம்போற்றியடிபணிந்தவர்மேலளவிலாவருள்புரிகருணை,
தாங்கியமொழியாற்றகுவன விளம்பித்நலையளித்தருளுமப் பொழுதி,
லோங்கெயில்புடைசூழ்மதுரைதோன்றுநலுமுயர்தவத் தொண்டரை
நோக்கி, யீங்குநம்பெருமான் திருவாலவாய்மற்றெம்மருங்கினதென
வினவ.

Koviloor Digital Library

(இ-ள்.) ஆங்கனம்போற்றி அடிபணிந் தவர்மேல்=அவ்வாறு துதி த்துத் தமது திருவடிகளை வணங்கிய குலச்சிறை நாயனரிடத்து ; அளவிலா அருள்புரிகருணை தாங்கிய மொழியால் தகுவனவிளம்பி=அவருக்கு அளத் தற்கரிய திருவருளைச்செய்யுங் கருணையோடு கூடிய திருவாக்கால் தக்கவை களைக்கூறியருளி ; தலை அளித்தருளும் அப்பொழுதில்=தலையளிசெய்து அரு ளியகாலத்தில் ; ஓங்கு எயில் புடைசூழ்மதுரை தோன்றுதலும் உயர்தவத் தொண்டரை நோக்கி=உயர்ந்தமதில் சூழ்ந்த மதுராபுரிதோன்றவும் பெரிய தவத்தை யுடைய அடியார் திருக்கூட்டத்தைப் பார்த்தருளி ; இங்கு நம்பெ ருமான் திருவாலவாய் மற்றெம்மருங்கினது என வினவ=இவ்விடத்து நமது சுந்தரேசர் எழுந்தருளிய திரு ஆலவாய் எவ்விடத்துளதென்று வினவி யருள.—எ-று. (௬௬௦)

அன்பராயவர்முன்பணிந்தசிரடியாரண்ணலாரடியினைவணங்கி
முன்புநின்றெடுத்தகைகளாற்காட்டிமுருகலர்சோலைகள்சூழ்ந்து [று
மின்பொலிவிசும்பையளக்குநீள்கொடிசூழ்வியனெடுகோபுரந்தோன்
மென்பணிபணிவாரினிதமர்ந்தருளுந்திருவாலவாயிதுவென்றூர்.

(இ-ள்.) அன்பராய் அவர் முன்பணிந்த சிரடியார் அண்ணலார் அடி யினைவணங்கி=பிள்ளையார் வினவுங்கால் அப்பிள்ளையார் திரு முன்வணங்கி ய சிறப்பினையுடைய குலச்சிறைநாயனர் அவரது திருவடிகளை வணங்கி ; முன்புநின்றுஎடுத்தகைகளாற்காட்டி=அவர் திருமுன்பு நின்று தூக்கியெடு த்த கரங்களாற்காட்டியருளி; முருகு அலர்சோலைகள் சூழ்ந்து மின்பொலி விசும்பை யளக்கும் நீள்கொடிசூழ்=வாசனைபொருந்திய மலர்ந்தசோலைக ளாற் சூழப்பட்டு மின்னல் விளங்கும் மேகமண்டலத்தை யளாவியிருக்கும் நீண்டகொடிகள் நெருங்கிய ; வியனெடுங்கோபுரம் தோன்றும் இது=திருக் கோபுரந்தோன்றுகின்ற ஈது ; என்பு அணி அணிவார் இனிது அமர்ந்தருளும் திரு ஆலவாய் என்றூர் = என்பை ஆபரணமாக அணிந்த சுந்தரேசரெழுந் தருளிய திரு ஆலவாயென்று கூறினர்—எ-று.

மனமொழி மெய்கள் ஒருங்கியவிசயமுள்ளமையில் குலச்சிறை நாயன ரைப்பணிந்த சிரடியாரென்றூர். (௬௬௧)

தொண்டர்தாம்போற்றிக்காட்டிடக்கண்டுதுணைமலர்க்கரங்குவித் தருளி, மண்டுபேரன்பான்மண்மிசைப்பணிந்துமங்கையர்க்கரசியெ ன்றெடுத்தே, யெண்டிசைபாவுமாலவாயாவதிதுவேயென்றிருவர்தம் பணியுங், கொண்டமைசிறப்பித்தருளி நற்பதிகம்பாடினூர்குவலயம் போற்ற.

(இ-ள்.) தொண்டர்தாம் போற்றிக் காட்டிடக்கண்டு = குலச்சிறை நாயனர் வணங்கிக்காட்டப் பார்த்து ; துணைமலர்க்கரங்குவித்தருளி = தாம மாமலர்போலும் இரண்டு திருக்கரங்களையுஞ் சிரசின்மேற் குவித்தருளி ;

Koviloor Digital Library

மண்டுபேரன்பால் மண்மிசைப்பணிந்து=நெருங்கிய பேரன்பினால் நிலத்திற்பொருந்த வணங்கி; மங்கையர்க் கரசி யென்றெடுத்து = "மங்கையர்க்கரசியென்று" முதலிலெடுத்து; எண்டிசைபரவும் ஆலவாயாவது இதுவேயென்று=எட்டுத்திக்கிலுள்ளாரும் துதிக்கின்ற திரு ஆலவாயாவது இதுவென்று; இருவர்தம்பணியும் கொண்டமை சிறப்பித்தருளி=அவ்விருவரது திருப்பணியையும் ஏற்றுக்கொண்ட வண்ணத்தை அத்திருப்பதிகத்தில் சிறப்பித்துப்பாடி; நற்பதிகம்பாடினார் குவலயம்போற்ற=உலகத்தார்துதிக்கும்படி நல்லதிருப்பதிகத்தைப் பாடினார்—எ-று.

"இருவர்தம்பணியு சிறப்பித்தென்றதனால், பாடல் பத்தினும்மங்கையர்க்கரசியாரை முன்னும் குலச்சிறைநாயனாரைப் பின்னுமாக மாறிமுறையேவைத்தும், திருக்கடைக்காப்பில் இருவரையும் ஒருங்குசேர்த்தும் எனக் கொள்க. (௬௬௨)

திருவாலவாய் - பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

மங்கையர்க்கரசிவளவர்கோன்பாவைவரிவளைக்கைமடமானி
பங்கயச்செல்விபாண்டிமாதேவிபணிசெய்துநாடொறும்பரவப்
பொங்கழலுருவன்பூதநாயகனால்வேதமும்பொருள்களுமருளி
யங்கையற்கண்ணிதன்னொடுமமர்ந்தவாலவாயாவதுமிதுவே. (க)

வெற்றவேயடியாரடிமிசைவீழும்விருப்பினன்வெள்ளைநீறணியுங்
கொற்றவன்றனக்குமந்திரியாயகுலச்சிறைகுலாவிநின்றேத்து
மொற்றைவெள்விடையனும்பரார்தலைவனுலகினியெற்கையையொழிந்திட், டற்றவர்க்கற்றசிவனுறைகின்றவாலவாயாவதுமிதுவே. (உ)

செந்துவர்வாயாள்சேலனகண்ணாள்சிவன்றிருநீற்றினைவளர்க்கும்
பந்தணைவிரலாள்பாண்டிமாதேவிபணிசெயப்பாரிடைநிலவுஞ்
சந்தமார்தாளம்பாம்புநீர்மத்தந்தண்ணெருக்கம்மலர்வன்னி
யந்திவான்மதிசேர்சடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. (௩)

கணங்களாய்வரினுந்தமியராய்வரினுமடியவர்தங்களைக்கண்டாற் [ன்
குணங்கொடுபணியும் குலச்சிறைபரவும் கோபுரஞ்சூழ்மணிக்கோயி
மணங்கமழ்கொன்றைவாளரமதியம்வன்னி வண்கூவிளமாலை
யணங்குவீற்றிருந்தசடை முடியண்ணலாலவாயாவதுமிதுவே. (௪)

செய்யதாமரைமேலன்னமேயனையசேயிழைதிருநுதற்செல்வி
பையரவல்குற்பாண்டிமாதேவிநாடொறும்பணிந்தினிதேத்த

Koviloor Digital Library

வெய்யவேற்குலம்பாசமங்குசமான்விரிகதிர்மழுவுடன்றரித்த
வையனாருமையோடின்புறுகின்றவாலவாயாவதுமிதுவே. (ரு)

நலமிலராகநலமதுண்டாகநாடவர்நாடறிகின்ற
குலமிலராகக்குலமதுண்டாகத்தவம்பணிகுலச்சிறைபரவுங்
கலைமலிகரத்தன்மூவிலைவேலன்கரியுரிமூடியகண்ட
னலைமலிபுனல்சேர்சடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. (சு)

முத்தின்றாழ்வடமுஞ்சந்தனக்குழம்புநீருந்தன்மார்பினின்முயங்கப்
பத்தியார்கின்றபாண்டிமாதேவிபாங்கொடுபணிசெயநின்ற
சுத்தமார்பளிங்கின்பெருமலையுடனேசுடர்மரகதமடுத்தாற்போ
லத்தனாருமையோடின்புறுகின்றவாலவாயாவதுமிதுவே. (எ)

நாவணங்கியல்பாமஞ்செழுத்தோதிநல்லராய்நல்லியல்பாகுங்
கோவணம்பூதிசாதனங்கண்டாற்றொழுதெழுகுலச்சிறைபோற்ற
வேவணங்கியல்பாமிராவணன்றிண்டோளிருபதுநெரிதரவூன்றி
யாவணங்கொண்டசடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. (அ)

மண்ணெலா நிகழமன்னனாய்மன்னுமணி முடிச்சோழன்றன்மகளாம், பண்ணினேர் மொழியாள் பாண்டிமாதேவி பாங்கினாற்பணிசெய்துபரவ, விண்ணுளாரிருவர் கீழொடுமேலுமளப்பரிதாம் வகைநின்ற, வண்ணலாருமை யோடின்புறுகின்றவாலவாயாவதுமிதுவே.

தொண்டராயுள்ளார் திசைதிசை தோறுந்தொழுது தன்குணத்தினைக்குலாவக், கண்டுநாடோறு மின்புறுகின்ற குலச்சிறைகருதிநின்றேத்தக், குண்டராயுள்ளார் சாக்கியர் தங்கள் குறியின்கணெறியிடைவாரா, வண்டநாயகன்றானமர்ந்து விற்றிருந்தவாலவாயாவதுமிதுவே. (கo)

பன்னலம்புணரும் பாண்டிமாதேவி குலச்சிறையெனு மிவர்பணிபு, மன்னலம் பெறுசீராலவாயீசன் றிருவடியாங்கவைபோற்றிக், கன்னலம்பெரியகாழியுண் ஞானசம்பந்தன் செந்தமிழிவைகொண், டின்னலம்பாடவல்லவரிமையோரேத்தவீற்றிருப்பவரினிதே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பாடியபதிகம் பரவியேவந்து பண்புடை யடியவரோடுந்
தேடுமாலயனுக் கரியவர்மகிழ்ந்த திருவாலவாய் மருங்கணைந்து
நீடியசெல்வக் கோபுரமிறைஞ்சி நிறைபெருவிருப்புடன்புக்கு
மாடுசூழ்வலங்கொண்டுடையவாகோயின்மந்திரியாருடன் புகுந்தார்.

Koviloor Digital Library

(இ-ள்.) பாடிய பதிகம் பரவியே வந்து=பாடத்தொடங்கிய திருப்பதிகத்தை யவ்வாறு துதித்துச் சென்று; பண்புடை அடியவரோடும் தேடும்மால் அயனுக்கு அரியவர்மகிழ்ந்த திரு ஆலவாய் மருங்கு அணைந்து=மெய்ப்பத்தியை யுடைய அடியார் திருக்கூட்டத்துடன் தேடப்புகுந்த திருமாலுக்கும் பிரமனுக்குங் காணுதற்கரிய சுந்தரேசரெழுந்தருளிய திருஆலவாயின்பக்கலை யடைந்து; நீடுஉயர் செல்வக்கோபுரம் இறைஞ்சி=மிகவுயர்ந்த செல்வத்தையுடைய திருக்கோபுரத்தைவணங்கி; நிறைபெருவிருப்புடன்புக்கு=நிறைந்த பெருவிருப்போடு உள்ளேபுகுந்து; மாடுசூழ்வலங்கொண்டு உடையவர் கோயில் மந்திரியாருடன் புகுந்தார்=பக்கலில் வலமாகவந்து தம்மையாளாக வுடைய சுந்தரேசரது திருக்கோயிலுள் குலச்சிறை நாயனாரோடு சென்றருளினார்—எ-று. (௬௬௩)

வேறு.

ஆறு மங்கண ராலவா யமர்ந்தினி திருந்த
காள கண்டரைக் கண்களின் பயன்பெறக் கண்டு
நீளவந்தெழு மன்பினாற் பணிந்தெழ நிறையார்
மீள வும்பல முறைநில முறவிழுந்தெழுவார்.

(இ-ள்.) ஆறும் அங்கணர் ஆலவாய் அமர்ந்து இனிது இருந்த காளகண்டரை=தம்மையடிமைகொள்ளுங் காருண்ணியமுடையராய்த் திருவாலவாயிலெழுந்தருளிய கரியகண்டத்தையுடைய சுந்தரேசரை; கண்களின்பயன்பெறக்கண்டு=கண்களாலடையும் பயனைப் பெறுதலாற் பார்த்து; நீளவந்து எழும் அன்பினால் பணிந்து எழ=மேற்கொண்டுவந்து எழாநின்ற பேரன்பால் வணங்கி யெழாநிற்கவும்; நிறையார் மீளவும் பலமுறை நிலம் உறவிழுந்து எழுவார்=ஆற்றுராய் மீண்டும் பலதரம் நிலத்திற்றோயவிழுந்து பணிந்து எழாநிற்பர்—எ-று. (௬௬௪)

அங்க மெட்டினு மைந்தினு மளவின்றி வணங்கிப்
பொங்கு காதலின் மெய்ம்மயிர்ப் புளகமும் பொழியுஞ்
செங்க ணீர்தரு மருவியுந் திகழ்திரு மேனி
யெங்கு மாகிநின் றேத்தினார் புகலிய ரிறைவர்.

(இ-ள்.) அங்கம் எட்டினும் ஐந்தினும் அளவின்றி வணங்கி=அட்டாங்கமுறைமையாலும் பஞ்சாங்கமுறைமையாலும் பலமுறை பணிந்து எழுந்து பொங்கு காதலில் மெய்மயிர்ப்புளகமும் = மிக்கபெருவிருப்பால் மெய்யுணர்ச்சி வழியாகத் தோன்றும் மயிர்ப்புளகமும்; பொழியும் செங்கண் நீர் தரும் அருவியும்=பொழியாநின்ற சிவந்த திருக்கண்களில் நின்றும் வருகின்ற ஆனந்த அருவியும்; திகழ்திருமேனியெங்குமாகி நின்று ஏத்தினார்புகலியர் இறைவர்=விளங்குகின்ற திருமேனிமுழுதுமாய் நின்று துதித்தார் சீருடைய பிள்ளையார்—எ-று.

Koviloor Digital Library

முறையே தலை இருகரம் இருசன்னம் முகம் வாய் புய மென்னுமங்கங்கள் தோயவணங்குதல் அட்டாங்கமென்றும், சிரம் இருகரம்இருமுழந்தாள் என்றுமைந்துந்தோயவணங்குதல் பஞ்சாங்கமென்றும் கூறுவர். ()

திரு ஆலவாய் - திருவிருக்குக்குறள் - பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

நீலமாமிடற், றாலவாயிலான்.
பாலதாயினார், ஞாலமாள்வரே. (க)

ஞாலமேழுமா, மாலவாயிலார்
சீலமேசொலீர், காலன்வீடவே. (உ)

ஆலநீழலா, ராலவாயிலார்
காலகாலனார், பாலதாமினே. (௩)

அந்தமில்புக, ழெந்தையாலவாய்
பந்தியார்கழல், சிந்தைசெய்மினே. (௪)

ஆடலேற்றினான், கூடலாலவாய்
பாடியேமனம், நாடிவாழ்மினே. (௫)

அண்ணலாலவாய், நண்ணினான்றனை
யெண்ணியேதொழத், திண்ணமின்பமே. (௬)

அம்பொனாலவாய், நம்பனார்கழல்
நம்பிவாழ்பவர், துன்பம்வீடுமே. (௭)

அரக்கனார்வலி, நெருக்கனாலவா
யுரைக்குமுள்ளத்தார்க், கிரக்கமுண்மையே. (௮)

அருவனாலவாய், மருவினான்றனை
யிருவரோத்தநின், றுருவமோங்குமே. (௯)

ஆரநாகமாஞ், சீரனாலவாய்த்
தேரமண்செற்ற, வீரனென்பரே. (௰)

அடிகளாலவாய், படிகொள்சம்பந்தன்
முடிவிலின்றமிழ், செடிகணிக்குமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - சொக்கநாதர். தேவியார் - அங்கயற்கண்ணம்மை.

Koviloor Digital Library

நீலமா மிடற் றாலவா யானென நிலவு
மூல மாகிய திருவிருக் குக்குறண் மொழிந்து
சீல மாதவத் திருத்தொண்டர் தம்மொடுந் திளைத்தார்
சாலு மேன்மையிற் றலைச்சங்கப் புலவனார் தம்முன்.

(இ-ள்.) நீலமாமிடற்றாலவாயான் என நிலவும் மூலமாகிய திருவிருக்குக்குறள்மொழிந்து "நீலமாமிடற்றாலவாயான்" என்று விளங்கும் முதலையுடைய திருவிருக்குக்குறளைப் பாடியருளி; சீலமாதவத்திருத்தொண்டர் தம்மொடும் திளைத்தார்=ஒழுக்கமமைந்தமிக்கதவத்தையுடைய திருவடியார் கூட்டத்தோடு பேரின்பத்தில் முழுகினார்; சாலும் மேன்மையில் தலைச்சங்கப்புலவனார் தம்முன்=மிக்கமேன்மையை யுடைய தலைச்சங்கப் புலவனாராகிய சுந்தரேசர் முன்பு.—எ-று.

சுந்தரேசர் திருமுன்பு மொழிந்து திளைத்தாரெனக்கூட்டுக. தலைச்சங்கமிருந்த அகத்தியனார் முதலிய ஐந்நூற்றுநாற்பத்தொன்பதின்மருள் சுந்தரேசரும் ஒருவராதலின், தலைச்சங்கப்புலவனாரென்றார். (௬௬௬)

சேர்த்து மின்னிசைப் பதிகமுந் திருக்கடைக் காப்புஞ்
சாத்தி நல்லிசைத் தண்டமிழ்ச் சொன்மலர் மாலை
பேர்த்து மின்புறப் பாடிவெண்பிறையணி சென்னி
மூர்த்தி யார்கழல் பரவியே திருமுன்றி லணைய.

(இ-ள்.) சேர்த்தும் இன்னிசைப்பதிகமும் திருக்கடைக்காப்பும் சாத்தி = பாடுகின்ற இனிய இசைபொருந்திய அத்திருப்பதிகத்தையுந் திருக்கடைக்காப்புச் சாத்தியருளி; நல் இசைத்தண்தமிழ்ச்சொல்மலர்மாலை=நல்ல இசைபொருந்திய குளிர்ந்த தமிழ்ச்சொல் மலராலாகிய திருப்பதிகமாலையை; பேர்த்தும் இன்புறப்பாடி=மீளவும் இன்பமிகப்பாடியருளி; வெண்பிறை அணி சென்னி மூர்த்தியார் கழல் பரவியே திருமுன்றில் அணைய=வெள்ளிய பிறையையணிந்த திருமுடியையுடைய சுந்தரேசரது திருவடிகளைவணங்கி ஆலயத்தின் திருமுன்றிலைப்பிள்ளையார் அடைந்தருள—எ-று.(௬௬௭)

பிள்ளையா ரெழுந்தருளி முன்புகுது மப்பொழுது
வெள்ளநீர்பொதி வேணியார் தமைத்தொழும் விருப்பா
லுள்ளணைந்திட வெதிர்செலாதொரு மருங் கொதுங்குந்
தெள்ளுநீர்விழித் தெரிவையார் சென்றுமுன் பெய்த.

(இ-ள்.) பிள்ளையார் எழுந்தருளி முன்புகுதும் அப்பொழுது=ஆளுடையபிள்ளையார் திருவாலவாய்க்கு எழுந்தருளி முன்பு சென்றருளியகாலத்தில்; வெள்ளம் நீர்பொதிவேணியார்தமைத்தொழும் விருப்பால்=மிக்கநீரை

Koviloor Digital Library

யுடைய கங்காநதியையணிந்த சடாமுடியையுடைய சுந்தரேசரைவணங்கும் விருப்பத்தால்; உள்ளணைந்திட எதிர்செலாது ஒருமருங்கு ஒதுங்கும்=தாம் சென்றுள்ளிருக்கவும் அவர் எதிர்செல்லாமல் ஒருபக்கத்து ஒதுங்குகின்ற; தென்னரும் நீர்விழித்தெரிவையார் சென்று முன்பு எய்த=அளிக்கும் ஆனந்தக்கண்ணீரையுடைய மங்கையர்க்கரசியார் பிள்ளையார் முன்பு சென்றடைந்தருள—எ-று.

பிள்ளையார், ஆலயத்திற்குமுன் எழுந்தருளும்பொழுது தொழும் விருப்பால்உள்ளணைந்திடவும் எதிர்செலாது ஒதுங்குந் தெரிவையாரெனக்கூட்டுக.

மங்கையர்க்கரசியார் பிள்ளையார் வரவைச் சுந்தரேசரை வணங்கி எதிரேற்று நின்றாராயினும், அவர் தரிசிக்க ஆலயத்திற்புகுங்கால் எதிர்செல்லுதல் மரபன்மையின் "உள்ளணைந்திட வெதிர்செலாது ஒருமருங்கொதுங்கும்" என்றார். (௬௬௮)

மருங்கின்மந் திரியார் பிள்ளையார்கழல் வணங்கிக்
கருங்குழற் கற்றைமேற் குவிகைத்தளி ருடையார்
பருங்கை யானைவாழ் வளவர்கோன் பாவையாரென்னப்
பெருங்களிப்புடன்விரைந் தெதிர்பிள்ளையாரணைந்தார்.

(இ-ள்.) மருங்கின்மந்திரியார் பிள்ளையார் கழல்வணங்கி=பக்கத்தில் உள்ள குலச்சிறைநாயனார் ஆளுடையபிள்ளையாரது திருவடிகளைவணங்கி; கருங்குழல் கற்றைமேல் குவிகைத்தளிர் உடையார்=கேசமுடிப்பின்மேல் குவித்தகைத்தளிரையுடைய இவர்; பரும் கையானைவாழ் வளவர்கோன் பாவையாரென்ன=பருத்ததுதிக்கையினையுடைய யானைச்சேனைகள் வாழ்கின்ற சோழராசன் புத்திரியாராகிய பாண்டிமாதேவியாரென்றுகூற; பெரும் களிப்புடன் விரைந்து எதிர்பிள்ளையார் அணைந்தார்=அதுகேட்ட பிள்ளையார் பெரியகளிப்போடு விரைந்து அவரெதிரில் அடைந்தருளினார்—எ-று. (௬௬௯)

தென்னவன் பெருந் தேவியார்சிவக் கன்றின்செய்ய
பொன்னடிக் கமலங்களிற் பொருந்தமுன் விழுந்தார்
மன்றுசண்பையர் வள்ளலார் மகிழ்சிறந் தளிக்கு
மின்னருட் பெருஞ்சிறப் பொடுந்திருக்கையா லெடுத்தார்.

(இ-ள்.) தென்னவன்பெருந்தேவியார்=பாண்டிமாதேவியார்; சிவக்கன்றின்செய்ய பொன்னடிக்கமலங்களில் பொருந்த முன்விழுந்தார்=சிவஞானக்கன்றாகிய ஆளுடையபிள்ளையாரது அழகிய திருவடித்தாமரைகளில் பொருந்தத்திருமுன்பு வணங்கினார்; மன்றுசண்பையர் வள்ளலார் மகிழ்சிறந்து=நிலைபெற்ற சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார் மகிழ்ச்சி மிக்கு; அளிக்கும் இன்னருட் பெருஞ்சிறப்பொடும் திருக்கையாலெடுத்தார்=பாதுகாக்கும் இனிய திருவருளின் பெருஞ்சிறப்பினால் தமது திருக்கரத்தால் அவரையெடுத்தருளினார்—எ-று. (௬௭௦)

Koviloor Digital Library

ஞானபோனக ரெதிர்தொழு தெழுந்தநற் றவத்து
மானியார்மனக் கருத்து முற்றியதென மதித்தே
பானலங்கண்கணீர் மல்கப் பவளவாய் குழறி
யானுமென்பதி யுஞ் செய்ததவமென்கொ லென்றார்.

(இ-ள்.) ஞானபோனகர் எதிர்தொழுது எழுந்த நற்றவத்துமானியார்=சிவஞானத்தைத் திருவமுதுசெய்த ஆளுடையபிள்ளையார் தம்மெதிரே வணங்கியெழுந்த நல்லதவத்தையுடைய பாண்டிமாதேவியார்; மனக்கருத்து முற்றியது எனமதித்து=தமது திருவுள்ளக்கருத்து முற்றியதென்று கருதி; பானலங்கண்கள் நீர்மல்கப்பவளவாய்குழறி = குவளைமலர்போலுந் திருக்கண்களில் நின்றும் ஆனந்த பாஷ்பஞ்சொரியவும் பவளம்போலுந் திருவாய்மொழி குளறி; யானும் என்பதியும் செய்ததவம் என்கொலென்றார்= அடியேனும் எனது நாயகனும் (இங்கெழுந்தருள) முன்பு செய்ததவம் யாதோவென்று கூறியருளினார்—எ-று. (௬௭௨)

யாழின்மென் மொழியார் மொழிந்தெதிர் கழல்வணங்கக்
காழிவாழவந் தருளிய கவுணியர் பிரானுஞ்
சூழுமாகிய பரசமயத் திடைத் தொண்டு
வாழுநீர் மையீருமைக்காண வந்தன மென்றார்.

(இ-ள்.) யாழின் மென்மொழியார் மொழிந்தெதிர்கழல்வணங்க= யாழினது ஓசைபோலும் மெல்லிய சொற்களையுடைய பாண்டிமாதேவியார் இவ்வாறு கூறி மீட்டுந்திருவடிகளைவணங்க; காழிவாழவந்தருளிய கவுணியர்பிரானும்=சீகாழியென்னுந் திருப்பதிவாழும்படி வந்தவதரித்த கவுணியகோத்திரத்தலைவராகிய ஆளுடையபிள்ளையாரும்; சூழு மாகிய பரசமயத் திடைத் தொண்டுவாழும் நீர்மையீர்=சூழ்ந்திருக்கின்ற புறச்சமயத்துளிருந்தும் சைவநெறித் திருத்தொண்டில் வழுவாது வாழுந்தன்மையையுடையீர்; உமைக்காணவந்தனம் என்றார்=உம்மையாம் காணவந்தோமென்று அருளிச்செய்தார்—எ-று. (௬௭௩)

இன்னவா றருள்செய்திடத் தொழுதடி வீழ்ந்தார்
மன்னுமந் திரியார் வருதிறமெலா மொழிய
வன்னமென் னடையார் தமக்கருள் செய்துபோக்கித்
துன்னுமெய்த் தொண்டர் சூழவந்தருளுமப் பொழுது.

(இ-ள்.) இன்னவாறு அருள்செய்திடத் தொழுதடிவீழ்ந்தார்=இவ்வாறு ஆளுடையபிள்ளையார் அருளிச்செய்யப் பாண்டிமாதேவியார் மீளவும் அவரது திருவடியிற்பணிந்து விழுந்தார்; மன்னும் மந்திரியார் வருதிறமெலாம் மொழிய=நிலைபெற்ற பத்தியையுடைய குலச்சிறைநாயனார் சமணரால் நேரிட்ட கேட்டின் கூறுபாடெல்லா மெடுத்துச்சொல்ல; அன்னம் மெல்

Koviloor Digital Library

நடையார் தமக்கு அருள்செய்துபோக்கி=அன்னம்போலும் மெல்லிய நடையை யுடைய பாண்டிமாதேவியாருக்குத் திருவருள் செய்து விடைகொடுத்தனுப்பி; தன்னும் மெய்த்தொண்டர்சூழ வந்தருளும் அப்பொழுது=நெருங்கிய அடியார்கள் சூழ ஆளுடைய பிள்ளையார் எழுந்தருளுங்காலத்து-எ-று.

செல்வமல்கிய திருவால வாயினிற் பணிசெய்
தல்குதொண்டர்கள் பிள்ளையார் மருங்கணைந் திறைஞ்சி
மல்குகா ரமணிருள் கெடவீங்கு வந்தருள
வெல்லையிற் றவஞ் செய்தன மெனவெடுத் திசைத்தார்.

(இ-ள்.) செல்வம் மல்கிய திரு ஆலவாயினிற் பணிசெய்து அல்கு தொண்டர்கள்=செல்வமிக்க திருவாலவாயினில் திருப்பணிசெய்து வாழுஞ் சிவனடியார்கள்; பிள்ளையார் மருங்கு அணைந்து இறைஞ்சி=பிள்ளையாரது பக்கலில் அடைந்து வணங்கி; மல்கு காரமண் இருள்கெட ஈங்குவந்தருள=நிறைந்த கரிய சமணிருள் கெடும்படி இங்கு ஆதித்தன்போ லெழுந்தருள; எல்லையில் தவம் செய்தனமென எடுத்திசைத்தார்=அளவில்லாத தவத்தைச் செய்தோமென்று எடுத்துக்கூறினர்—எ-று. (௬௭௫)

அத்திருத் தொண்டர்தங்க ளுக்கருண்முக மளித்து
மெய்த்த காதலி னவரொடும் புறத்தினின் மேவிச்
சித்தமின்புறு மமைச்சனார் திருமடங் காட்டப்
பத்தர் போற்றிடப் பரிசனத்தொடுமினி தமர்ந்தார்.

(இ-ள்.) அத்திருத்தொண்டர் தங்களுக்கு அருள் முகமளித்து=அந்த அடியார்களுக்குத் திருவருளோடும் முகமலர்ச்சியைக் கொடுத்தருளி; மெய்த் தகாதலின் அவரொடும் புறத்தினின் மேவி=மெய்மைத் தன்மையையுடைய பெருவிருப்புடன் அவ்வடியார்களோடு புறத்தில் வந்தருளி; சித்தம் இன்புறும் அமைச்சனார் திருமடங்காட்ட=மனமகிழ்ச்சி யடைகின்ற குலச்சிறை நாயனார் வசித்தற்குரிய திருமடத்தைக் காட்ட; பத்தர்போற்றிடப் பரிசனத்தொடும் இனிதமர்ந்தார்=அடியார்கள் துதிக்கப்பரிசனர்களோடும் இனிதாக வெழுந்தருளினார்—எ-று. (௬௭௬)

பரவுகாதலிற் பாண்டிமா தேவியா ரருளால்
விரவுநண்பொடு குலச்சிறை யார்விருந் தளிப்பச்
சிரபுரத்துவந் தருளிய செல்வரங் கிருந்தா
ரிரவிமேற்கட லணைந்தன னெல்லிவந் தணைய.

(இ-ள்.) பரவுகாதலில் பாண்டிமாதேவியா ரருளால்=நிறைந்த பெருவிருப்போடு பாண்டிமாதேவியாரது அருமதியால்; விரவும் நண்பொடு குலச்சிறையார் விருந்தளிப்ப=கலந்தாண்புடன் குலச்சிறை நாயனார் விருந்

Koviloor Digital Library

யைக்கொடுக்க; சிரபுரத்து வந்தருளிய செல்வர் அங்கிருந்தார்=சீகாழியில் அவதரித்தருளிய ஆளுடைய பிள்ளையார் அத்திருமடத்தி லெழுந்தருளி யிருந்தார்; இரவிமேல் கடல் அணைந்தனன் எல்லிவந்தணைய=சூரியன்மேற்கடலில் அடைந்தான் இராக்காலம் வந்து சேர—எ-று. (௬எஎ)

வழுதிமாநக ரதனிடை மாமறைத் தலைவர்
பழுதில்சீ ரடியா ருடன்பகல்வரக் கண்ட
கழுதுபோல்வருங் காரமண் குண்டர்கள் கலங்கி
யிழுகுமெய் யிருட்கிருளென வீண்டினரொரு பால்

(இ-ள்.) வழுதிமாநகரதனிடை மாமறைத்தலைவர் = பாண்டியனது மதுரைமாநகரத்தில் பெரிய அந்தணர் குலத்தலைவராகிய ஆளுடைய பிள்ளையார்; பழுதில் சீரடியாருடன் பகல்வரக்கண்ட=குற்றமற்ற சிறந்த அடியார் திருக்கூட்டத்தோடு பகற்போதிலெழுந்தருளிவரப் பார்த்த; கழுதுபோல் வரும் கார் அமண்குண்டர்கள் கலங்கி=பசாசம்போல் வராநின்ற கரியசமணர்களாகிய கீழ்மக்கள் கலங்கி; மெய்யிருட்கு இருள் இழுகும் என ஈண்டினர் ஒருபால் = அவரது உடம்பிருளுக்குப்பூதவிருளானது இழுக்கடையும் என்று சொல்லும்படி யொருபக்கத்தில் நெருங்கினர்—எ-று. (௬எஅ)

அங்கண்மேவிய சமணர்கள் பிள்ளையா ரமர்ந்த
துங்கமாமடந் தன்னிடைத் தொண்டர்தங் குழாங்க
ளெங்குமோதிய திருப் பதிகத்திசை யெடுத்த
பொங்கு பேரொலி செவிப்புலம்புக்கிடப் பொறாராய்.

(இ-ள்.) அங்கண்மேவிய சமணர்கள் பிள்ளையாரமர்ந்த=அவ்விடத்திருக்கின்ற சமணர்கள் ஆளுடைய பிள்ளையாரெழுந்தருளி யிருந்த; துங்கமாமடந்தன்னிடைத் தொண்டர்தம் குழாங்கள்=பெரிய திருமடத்தின் கண் அடியார் திருக்கூட்டங்கள்; எங்கும் ஓதிய திருப்பதிகத்திசை எடுத்த பொங்குபேரொலி=எவ்விடத்து மோதிய திருப்பதிகத்தினிசையால் எழுப்பிய நிறைந்த பெரிய ஒலியானது; செவிப்புலம்புக்கிடப்பொறாராய்=காதிற்செல்ல ஆற்றாராகி—எ-று. (௬எக)

மற்றிவ் வான்மதி மன்னவன்மாறனை யெய்திச்
சொற்று மென்றுதஞ் சூழ்ச்சியுமொருபடி துணிவார்
கொற்றவன் கடைக் காவலர்முன்சென்று குறுகி
வெற்றி வேலவர்க் கெங்களைவிளம்புவீ ரென்றார்.

(இ-ள்.) மற்று இவ்வான் பதிமன்னவன் மாறனை எய்தி=இப்பெரிய மதுரை நகரத்திற்கு அரசனாகிய பாண்டியனை யடைந்து; சொற்றுமென்று தன் சூழ்ச்சியும் ஒரு படி துணிவார் = சொல்லுதுமென்று தமது

Koviloor Digital Library

சபடமான வுபாயத்தையுமொருவாறு துணிவாராய்; கொற்றவன் கடைக் காவலர் முன்சென்று குறுகி=பாண்டியராசனது முதல்வாயிலைக் காப்போர் முன்னே சென்று நீவிர்போய்; வெற்றிவேலவர்க்கு எங்களை விளம்புவீரொன்றார்=வெற்றிபொருந்திய வேலையுடைய பாண்டியரசனுக்கு எங்கள் வரவைக்கூறுமினென்று சொன்னார்கள்—எ-று. (சுஅ௦)

வாயில் காவலர் மன்னவன்றனை யெதிர்வணங்கி
யாயமாகிவந் தடிகண்மா ரணைந்தன ரென்ன
வேயினானணைவா ரெனவவருஞ் சென் றிசைத்தார்
பாயினாலுடன் மூடுவார் பதைப்புடன் புக்கார்.

(இ-ள்.) வாயில் காவலர் மன்னவன்றனை எதிர்வணங்கி=வாயில்காப்போர் உள்ளே சென்று பாண்டியனை யெதிரே நின்று பணிந்து; ஆயமாகி வந்து அடிகண்மார் அணைந்தனரென்ன=நமது நாயன்மார் கூட்டமாய்த் திரண்டு வந்தாரென்றுசொல்ல; ஏயினான் அணைவாரென அவரும் சென்று இசைத்தார்=அணையக்கடவாராய் உங்களைப் பாண்டியனேவினானென்று அவ்வாயில் காப்போருஞ் சமணமுனிவரிடைச்சென்று சொன்னார்கள்; பாயினால் உடல் மூடுவார்பதைப்புடன் புக்கார்=பாயுடையால் தம்முடம்பை மூடியசமணர்கள் பதைபதைப்போடு உள்ளே புகுந்தார்கள்—எ-று. (சுஅக)

புக்கபோதவ ரழிவுறு மனத்திடைப் புலர்ச்சி
மிக்கதன்மையவ வேந்தனுங் கண்டெதிர் வினவி
யொக்கநீர்திரண் டணைவதற் குற்றதென் னென்னத்
தக்கதல்லதீங் கடுத்தது சாற்றுதற் கென்றார்.

(இ-ள்.) புக்கபோது அழிவுறுமனத்திடைப் புலர்ச்சி=அவர் உள்ளே புகுந்தபொழுது அவர்களது கலங்கிய மனதினிடத்து வாட்டம்; மிக்க தன்மையைவேந்தனும் கண்டு எதிர்வினவி=மிகுந்திருக்குந்தன்மையைப் பாண்டியனும் கவனித்துணர்ந்து அச்சமணமுனிவரெதிரேவினவி; ஒக்க நீர் திரண்டு அணைவதற்கு உற்றதென் என்ன=ஒருங்கு நீவிர் கூடிவருதற்கு நேரிட்ட தீங்கு யாதென்று கேட்க; தக்கதல்ல தீங்கு அடுத்தது சாற்றுதற்கென்றார்=தகுதியல்லாத ஓர் தீங்கானது வந்தது அதனைச்சொல்லுதற்கு நாங்கள் வந்தோமென்றார்கள்—எ-று. (சுஅஉ)

ஆவதேனுமக் கடுத்தது கூறுவி ரென்று
காவலன்பரிந் துரைத்தலுங் காரமண் கையர்
மாவலாயுன்றன் மதுரையிற் சைவவே தியர்தா
மேவலாரின்று கண்டுமுட்டியா மென்று விளம்ப.

Koviloor Digital Library

(இ-ள்.) ஆவதேன் உமக்கு அடுத்ததுகூறுவீரென்று=அவ்வாறுனால் உங்கட்கு நேரிட்டதுன்பத்தைச் சொல்வீர்களாகவென்று; காவலன்பரிந் துரைத்தலும்=பாண்டியன் அவர் துன்பத்திற்கிரங்கிக்கேட்கவும்; கார் அம ண்கையர்=அமணர்களாகிய கீழ்மக்கள்; மாவலாய் உன்றன் மதுரையிற் சைவவேதியர் தாம் மேவலால்=யானையேறிநடத்துதலில் வல்லமையுள்ள பாண்டியனே! உனது மதுராபுரியில் சைவமறையவர்கள் இன்றுவருதலால்; கண்டுமுட்டு யாமென்று விளம்ப=நாங்கள் அவர்களைக்கண்டு முட்டென்று சொல்ல—எ-று.

அமணர்கள் தம்மருகனூலிற்கூறும் அறங்களைத் துயிலெழுந்து சிந் திக்குங்கால் வேதநெறியொழுகும் விப்பிரர்களும் நாசமடையக்கடவரென்று சிந்திப்பர்; அவ்வாறன்றி மேலவர்களைப்பார்த்தால் தம்மவர்களிடத்துக்கண்டு முட்டென்றலும், அதைக்கேட்டால் கேட்டுமுட்டென்றலும், அவர்வழக்கு ஆதலில், ஈண்டுச்கண்டுமுட்டென்றார். கேட்டுமுட்டென்னல், பின்வருஞ்செ ய்யுளாற்காண்க. முட்டு அசுசையால் விளையுந்தீக்கணம். (௬அ௯)

என்றுகூறலுங் கேட்டு முட்டியானுமென் றியம்பி
நன்றுநல்லறம் புரிந்தவா நானென்று நகுவான்
கன்றுமுள் ளத்தனுகியக் கண்ணுத லடியா
ரின்றுமா நகரணைந்த தென்னவர்கள்யா ரென்றான்.

(இ-ள்.) என்று கூறலும் கேட்டு முட்டியானுமென்று இயம்பி=இவ் வாறு சமணர்கள் சொல்லுதலும் அதைக்கேட்ட பாண்டியன் யானும் கேட்டு முட்டுடையேனென்றுகூறி; நான் நல்லறம்புரிந்தவா நன்றென்று நகுவா ன்=நல்ல அறத்தையான் செய்தது நன்றிருந்ததென்று நக்கு; கன்றும் உள் ளத்தனுகி அக்கண்ணுதல் அடியார்=கோபித்த கறுவிய மனமுடையவனாய் அச்சிவனடியார்கள்; இன்று மாநகர் அணைந்ததென் அவர்கள் யாரென்றா ன்=இப்பொழுது நமது பெரியநகரத்தில் வந்தது யாதுகாரணம் அவர்கள் யாரென்று வினவினான்—எ-று. (௬௯௦)

மாலைவெண்குடை வளவர்சோ ணாட்டுவண் புகலிச்
சூலபாணிபான் ஞானம்பெற்றா னென்று சுருதிப்
பாலனன்பர்தங் குழாத்தொடும் பனிமுத்தின் சிவிகை
மேலணைந்தன னெங்களை வாதினில் வெல்ல.

(இ-ள்.) மாலைவெண்குடை வளவர்சோணாட்டு=ஆத்திமாலையையும் வெண்கொற்றக்குடையையுமுடைய சோழர்களது நாட்டில்; வண்புகலிச் சூலபாணிபால் ஞானம் பெற்றானென்று=வளம்பொருந்திய சீகாழியில் சூல த்தையேந்திய சிவன்பால் மெய்ஞ்ஞானம்பெற்றவனென்று; சுருதிப்பாலன்

Koviloor Digital Library

அன்பர்தம்முழாத்தொடும் பனிமுத்தின் சிவிகைமேல் அணைந்தனன்=மறைய வர்குலத்திற்றோன்றிய சிறுவனொருவன் அடியார்கூட்டத்தோடுங் குளிர்ந்த முத்தச்சிவிகைமேலேறிவந்தான்; எங்கணு வாதினில்வெல்ல=எங்கணுமெல் லாம் வாதினில் வெல்லும்பொருட்டு—எ-று.

சுருதிப்பாலன் எங்கணு வாதினில் வெல்லச் சிவிகைமேலணைந்தன னெனக்கூட்டுக. (௬௮௫)

என்றுகூறுவா ரித்திற மூன்புதா மறிந்த
தொன்றுமங் கொழியாவகை யுரைத்தலுந் தென்னன்
மன்றலம்பொழிற் சண்பையார் வள்ளலார் நாமஞ்
சென்றுதன்செவி நிறைத்தலுஞ் செயிர்த்துமுன் சொல்வான்.

(இ-ள்.) என்று கூறுவார் இத்திறம் முன்புதாம் அறிந்தது ஒன்றும் அங்கு ஒழியாவகையுரைத்தலும்=இவ்வாறு கூறுஞ் சமணமுனிவர்கள் இவ் வாறு தாம் முன்புகேட்டறிந்த பிள்ளையார் வரலாறு ஒன்றையும் மறையாமல் பாண்டியனுக்குக்கூறவும்; தென்னன்மன்றல் அம்பொழிற் சண்பையார் வள் ளலார் நாமம் சென்று தன்செவிநிறைத்தலும்=பாண்டியன் வாசனைபொருந் திய சோலைசூழ்ந்த சீகாழியிலவதரித்த ஆளுடையபிள்ளையாரது திருநாமமா னது சென்று தனது செவியை நிறைத்தவுடனே; செயிர்த்துமுன்சொல் வான்=கோபித்து அச்சமணர்முன் கூறுவானாயினான்—எ-று. (௬௮௬)

மற்றமாமறை மைந்தனிம் மருங்கணைந் தானே
லுற்றசெய்தொழி லியாதுசெய் கோமென வுரைப்பச்
செற்றமிக்கொண்ட சிந்தையுஞ் செய்கையு முடையோர்
கொற்றமன்னவன் மொழிக்கெதிர் குறித்துரைசெய்வார்.

(இ-ள்.) மற்றமாமறைமைந்தன் இம்மருங்கு அணைந்தானேல்=அந்த மறையவர் குலச்சிறுவன் இந்நகரத்தினிடத்துவந்தானாயின்; உற்றசெய் தொழில் யாதுசெய்கோமென உரைப்ப=அதற்கேற்ற செய்தொழிலாக எதைச்செய்வோமென்றுகூற; செற்றமீக்கொண்ட சிந்தையும் செய்கையும் உடையோர்=கோபம் மேற்கொண்ட மனதையும் செய்கையையுமுடைய சமணர்கள்; கொற்றமன்னவன் மொழிக்கு எதிர் குறித்து உரைசெய்வார்= வெற்றிபொருந்திய பாண்டியனது சொல்லுக்கு உத்தரங் கருதிக்கூறுவாரா யினர்—எ-று. (௬௮௭)

வந்தவந்தணன் றன்னைநாம் வலிசெய்துபோக்குஞ்
சிந்தையன்றியச் சிறுமறைபோ லுறைமடத்தில்
வெந்தழற்பட விஞ்சையந் திரத்தொழில் விளைத்தா
லிந்தநன்னக ரிடத்திரா னேகுமென் றிசைத்தார்.

Koviloor Digital Library

(இ-ள்.) வந்த அந்தணன் தன்னை=இந்நகரத்தில் வந்தமறையவர் சிறுவனை ; நாம்வலிசெய்துபோக்கும் சிந்தையன்றி=நாமெல்லாம் வலிந்து துறத்துமெண்ணமில்லாமல் ; அச்சிறுமறையோன் உறைமடத்தில் வெம் தழற்பட விஞ்சை மந்திரத்தொழில் விளைத்தால்=அந்த மறையவர் சிறுவன்வசிக்கும் மடத்தில் கொடிய தீக்கொளுவயாம் அறிந்த மந்திரவிஞ்சையாகிய தீத்தொழிலைச்செய்தால் ; இந்த நன்னகரிடத்து இரான் ஏகும் என்று இசைத்தார்=இந்த நல்ல நகரினிடத்தில் இரானாய் உடனே செல்வானென்று சொன்னார்கள்—எ-று. (௬அஅ)

வேறு.

ஆவதொன் றிதுவேயாகி லவனையே விரைந்துசெய்யப்
போவதென் றவரைப்போக்கிப்பொய் பொருளாகக்கொண்டான்
யாவது முரையாடாதே பெண்ணத்திற் கவலையோடும்
பூவணை யமளிபுக்கான் பொங்கெழிற் றேவிசேர்ந்தாள்.

(இ-ள்.) ஆவதொன்று இதுவேயாகில் அதனையேவிரைந்து செய்யப் போவதென்று அவரைப்போக்கி = செய்யத்தக்கது இச்செய்கையேயானால் அச்செய்கையையே விரைந்து செய்து முடிக்கப்போகக் கடவீரென்று அவர்களையனுப்பி ; பொய்பொருளாகக் கொண்டான் = பொய்ப்பொருளை மெய்ப்பொருளாகக் கொண்டபாண்டியன் ; யாவதும் உரையாடாதே எண்ணத்திற் கவலையோடும்=யாதொன்றும் பேசாமல் மனதிற்கொண்டதுன்பத்தோடும் ; பூவணை அமளி புக்கான் பொங்கு எழிற்றேவி சேர்ந்தாள்=பூக்கள் பரப்பிய மலரமளியிற்சேர்ந்தான் மிக்க அழகினையுடைய பாண்டிமாதேவியார் அங்கு அடைந்தார்—எ-று. (௬அ௯)

மன்னவ னுரைப்பதின்றி யிருக்கமா தேவியார்தா
மென்னுயிர்க் குயிராயுள்ள விறைவநீ யுற்றதென்னோ
முன்னுள மகிழ்ச்சியின்றி முகம்புலர்ந் திருந்தாயின்று
பன்னிய வுள்ளத்தெய்தும் பருவர லருள்செயென்றார்.

(இ-ள்.) மன்னவன் உரைப்பதின்றி இருக்கமாதேவியார்தாம் = பாண்டியன் யாதொன்றும் உரையாடாமலிருக்கப் பாண்டிமாதேவியார் ; என் உயிர்க்கு உயிராயுள்ள இறைவ நீயுற்றதென்னோ ; எனதுயிர்க்குயிராகிய இறைவனே நீயடைந்ததியாது ; முன்னுள மகிழ்ச்சியின்றி முகம்புலர்ந்திருந்தாய் இன்று=முன்னே நீயடைந்தனவாயுள்ள மனமகிழ்ச்சியில்லாமல் இப்போது முகம்வாடியிருந்தாய் ; உள்ளத்தெய்தும் பருவரல் பன்னிய அருள்செய்யென்றார்=மனதிற்பொருந்திய துன்பத்தைச் சொல்லும்படி யருள் செய்வீராகவென்று கேட்டார்—எ-று. (௬௯௦)

Koviloor Digital Library

தேவியார் தம்மைநோக்கித் தென்னவன் கூறுகின்றான்
காவிநீள் கண்ணிறாய் கேள்காவிரிநாட் டின்மன்றாந்
தாவில்சீர்க் கழுமலத்தான் சங்கர னருள் பெற்றிங்கு
மேவினானடி கண்மாரை வாதினில் வெல்லவென்று.

(இ-ள்.) தேவியார் தம்மைநோக்கித் தென்னவன் கூறுகின்றான்= தமது தேவியாரைப்பார்த்துப் பாண்டியன்சொல்லாநின்றான்; காவி நீள் கண்ணிறாய் கேள்=நீலோற்பலம்போன்ற நீண்டகண்ணையுடையவளே! கேட்பாயாக; காவிரிநாட்டின் மன்றாந் தாவில் சீர்க்கழுமலத்தான்=சோழநாட்டிலுள்ள நிலைபெற்ற புகழையுடைய சீகாழியிலவதரித்தவன்; சங்கரன் அருள்பெற்று இங்குமேவினான் = சிவனுடைய அருளைப்பெற்று இந்நகரத்து வந்தான்; அடிகண்மாரை வாதினில் வெல்லவென்று=எமது அடிகள் மாராகிய சமணமுனிவரை வாதில்வெல்ல வேண்டுமென்று கருதி—எ-று.

கழுமலத்தான் சங்கரனருள் பெற்று அடிகண் மாரைவாதினில் வெல்லவென்று இங்குமேவினானெனக்கூட்டுக. (௬௬௧)

வெண்பொடி பூசுந்தொண்டர் விரவினா ரவரையெல்லாங்
கண்டுமுட்டடி கண்மார்கள்கேட்டு முட்டியா னுங்காதல்
வண்டுணைத் துதைந்த கோதைமானியே யிங்குவந்த
பண்புமற்றிதுவே யாகும் பரிசுவே றில்லையென்றான்.

(இ-ள்.) வெண்பொடிபூசும் தொண்டர் விரவினார்=அச்சீகாழியினின்று வந்த மறையவர் சிறுவருடன் விபூதியணிந்த அனேகம் அடியார்கள் நெருங்கிவந்தார்கள்; அவரையெல்லாம் கண்டுமுட்டு அடிகள்மார்கள்=அவர்களையெல்லாம் பார்த்து எம்மடிகள் மார்கள் கண்டுமுட்டாயினார்; யானும் கேட்டுமுட்டு=நானுங் கேட்டுமுட்டாயினேன்; வண்டுணைத்துதைந்த கோதை மானியே=வண்டுகளொன்றும்படி யிருகக்கட்டிய மாலையையணிந்த பாண்டிமாதேவியே; இங்குவந்த பண்புமற்று இதுவேயாகும்=இவ்விடத்து நிகழ்ந்த தன்மையிதுவேயாம்; பரிசுவேறில்லையென்றான்=வேறொரு பிரகாரமுமில்லையென்று கூறினான்—எ-று. (௬௬௨)

மன்னவ னுரைப்பக்கேட்டு மங்கையர்க்கரசியார்தா
நின்னிலை யிதுவேயாகி னிடியதெய்வத் தன்மை
யன்னவர் வாதுசெய்தால் வென்றவர் பக்கஞ்சேர்ந்து
துன்னுவ துறுதிபாகுஞ் கழிவுறேன் மன்னவென்றார்.

(இ-ள்.) மன்னவன் உரைப்ப மங்கையர்க்கரசியார் தாம் கேட்டு= பாண்டியன் இவ்வாறுகூற மங்கையர்க்கரசியார் தாங்கேட்டு; நின்னிலை இதுவேயாகில்=உனது நிலைமையிதுவாகில்; நீடிய தெய்வத்தன்மையன்ன

Koviloor Digital Library

வர் வாதுசெய்தால் வென்றவர் பக்கம்சேர்ந்து=மிக்க தெய்வத்தன்மையை யுடைய அப்பிள்ளையார் வாதுசெய்தால் வென்றவர்பால் நாம் சேர்ந்து அவர் மதத்தைக்கொள்வது உறுதிப்பயனும்; சுழிவுறேல் மன்ன என்றார்=வருந்த வேண்டாம் அரசனே யென்று கூறியருளினார்—எ-று.

நீடியதெய்வத்தன்மை அன்னவர் வாதுசெய்தால் என்புழி, மிக்கதெய்வத்தன்மையைக்குறித்து அவ்விருவரும் வாதுசெய்தாலென்றுரைப்பினு மமையும். (௬௬௩)

சிந்தையிற் களிப்புமிக்குத் திருக்கழு மலத்தார்வேந்தன்
வந்தவா றெம்மையாள வெனவரு மகிழ்ச்சியோடுங்
கொந்தலர் குழலாள்போதக் குலச்சிறையா ரங்கெய்த
விந்தநன் மாற்றமெல்லா மவர்க்குரைத் திருந்த பின்னர்.

(இ-ள்.) சிந்தையிற்களிப்பு மிக்குத் திருக்கழுமலத்தார் வேந்தன் = தன்மனதிற் சந்தோடமிகுந்த சீகாழித்தலைவராகிய பிள்ளையார்; வந்தவாறு எம்மையாள எனவருமகிழ்ச்சியோடும்=இங்கு எழுந்தருளிவந்தது எம்மை யடிமைகொள்ளுதற்கென்று (கருதலால்) வரும் மகிழ்வுடன்; கொந்து அலர் குழலாள் போத=பூங்கொத்துகள் அலர்ந்த கேசத்தையுடைய பாண்டிமாதேவியார் தமது திருமாளிகைக்குச்செல்ல; குலச்சிறையார் அங்கெய்த=குலச்சிறை நாயனார் அவ்விடத்துவர; இந்த நன்மாற்றம் எல்லாம் அவர்க்குரைத் திருந்தபின்னர்=இந்த நல்ல சரிதங்களையெல்லாம் அவர்க்குக்கூறி அவ்விடத்திலெழுந்தருளியிருந்தபின்பு—எ-று. (௬௬௪)

கொற்றவ னமைச்சனாருங் கைதலை குவித்துநின்று
பெற்றனம் பிள்ளையாரிங் கணைந்திடப் பெரும்பேறென்பா
ரிற்றைநா ளீசனன்பர் தம்மைநா மிறைஞ்சப்பெற்றோ
மற்றினிச் சமணர்செய்யும் வஞ்சனை யறியேமென்றார்.

(இ-ள்.) கொற்றவன் அமைச்சனாரும் கைதலைகுவித்து நின்று=பாண்டியன் முதல் மந்திரியாராகிய குலச்சிறைநாயனாரும் கைகளைச் சிரமேற் குவித்து நின்று; பெற்றனம்பிள்ளையார் இங்கு அணைந்திடப் பெரும்பேறு என்பார்=பிள்ளையார் இங்கெழுந்தருளப்பெறும் பெரும் பயனை யடைந்தோமென்பாராய்; இற்றை நாள் ஈசன் அன்பர் தம்மையாம் இறைஞ்சப்பெற்றோம்=இந்நாளில் சிவனடியார்களை நாம் வணங்கப்பெற்றோம்; மற்று இனிச் சமணர்செய்யும் வஞ்சனையறியோமென்றார்=மேலினிச் சமணர்கள் செய்யும் வஞ்சனையையறிய மாட்டோமென்று கூறினார்—எ-று. (௬௬௫)

மானியார் தாமுமஞ்சி வஞ்சரிப் புலையர் தாங்க
ளீனமே புரியவல்லார் செய்வதென் னுமென்றெண்ணி
ஞானசம பந்தர்தம்பா னன்மையல் லாதுசெய்யு
மூனம் வந்தடையில்யாமு முயிர் துறந்தொழிவமென்றார்.

Koviloor Digital Library

(இ-ள்.) மாலியார் தாமும் அஞ்சி வஞ்சரிப்புலையர் தாங்கள்=மங்கையர்க்கரசியாரும் அதுகேட்டச்சமுற்று வஞ்சகர்களாகிய இச்சமணர்கள்; ஈனமேபுரியவல்லார் செய்வதென் நாம் என்றெண்ணி=இழிதொழில்களையே செய்யவல்லவர் இதற்கு இனி நாம் செய்வது யாதென்றுகருதி; ஞானசம்பந்தர் தம்பால் நன்மையல்லாது செய்யும் ஊனம்வந்து அடையில்=ஆளுடையபிள்ளையாரிடத்து நன்மையல்லாதனவற்றைச் செய்யுங் காரணத்தால் இடையூறுவந்தால்; யாமும் உயிர்துறந்து ஒழிவதுஎன்றூர்=நாமும் உயிர்விடுவதே துணிவென்று கூறியருளினூர்—எ-று. (௬௬௬)

இவர்நிலை யிதுவேயாக விலங்குவேற் றென்னனானை
யவனிலை யதுவாமந்நா ளருகர்தந் நிலையாதென்னிற்
றவமறைந் தல்லசெய்வார் தங்கண்மந் திரத்தாற்செந்தீச்
சிவநெறி வளர்க்கவந்தார் திருமடஞ் சேரச்செய்தார்..

(இ-ள்.) இவர் நிலை இதுவேயாக=இவ்விருவர் நிலைமையும் இதுவாக; இலங்கும் வேற்றென்னனான அவன் நிலையதுவாம்=விளங்கும் வேலையேந்திய பாண்டியனாகிய அவ்வரசனது நிலைமையவ்வாறாகும்; அந்நாள் அருகர் தம் நிலையாது என்னில்=அந்நாளில் சமணரது நிலைமையாதென்றால்; தவம் மறைந்து அல்லசெய்வார்=தவவொழுக்கத்தால் மறைந்து பாவச்செயலைச்செய்யும் அருகர்கள்; தங்கள் மந்திரத்தால்=தங்கள் நூலிற்கூறும் ஆபிசாரமந்திரத்தால்; செந்தீ சிவநெறி வளர்க்கவந்தார் திருமடம் சேரச்செய்தார்=சிவந்த நெருப்பைச் சைவநெறியைவளர்க்கவந்த ஆளுடையபிள்ளையார் திருமடத்தையடையும்படி செய்தார்கள்—எ-று.


ஆபிசாரம்=பகை கருதிச்செய்யும்வேள்வி. (௬௬௭)

வேறு.

ஆதிமந்திர மஞ்செழுந் தோதுவார் நோக்கு
மாதிரத் திறமற்றை மந்திர விதிவருமே
பூதிசாதனர் மடத்திற்றும் புனைந்த சாதனைகள்
சாதியா வகைகண்ட மண்குண்டர்க டளர்ந்தார்.

(இ-ள்.) ஆதிமந்திரம் அஞ்செழுத்து ஓதுவார் நோக்கும்=உலககாரணரான சிவபெருமானது திருமந்திரமாகிய ஸ்ரீபஞ்சாக்கரத்தையோதும் அடியார்கள் பார்க்கும்; மாதிரத்திறம் மற்றை மந்திரவிதிவருமே=திக்குகளிலும் ஏனையமந்திரங்களின் விதியானது வந்து சேருமா; பூதிசாதனர் மடத்தினும் புனைந்தசாதனைகள்=விபூதியாகிய சாதனத்தையுடைய ஆளுடையபிள்ளையாரது திருமடத்தில் தாம் கற்பித்த மந்திரசாதனைகள்; சாதியாவகை கண்டு அமண்குண்டர்கள் தளர்ந்தார்=தம் கருத்தை முற்றுவியாமையைப் பார்த்துச் சமணர்களாகிய மிண்டர்கள் மனந்தளர்ந்தார்கள்—எ-று.

Koviloor Digital Library



திருஞானசம்பந்தர் — சுந்தரேசரைவணங்கித் திருமடத்தில் எழுந்தருளியிருக்க சமணர்கள் அரசன் அநுமதிபெற்று இரவில் தீத்தொழில்விளைத்தல்.

Koviloor Digital Library

மந்திரம், தம்மைக்கருதுவாரை இரக்ஷிக்கும் என்னும் பொருளையுடையது. "ஆதிமந்திரமஞ்செழுத்து" என்றதனால், பரமசிவவாசகமாகிய ஸ்ரீபஞ்சாக்கரமேமந்திரமென்றுபொருள்போதரும்; சிருட்டியாதிக்குக் காரணமான ஈசத்தன்மையே ஸ்ரீபஞ்சாக்கர வாச்சியத்துவமாதலின்.

இம்மந்திரம் ஓதுதல் நியமவிதியாதலில், இதனையோதுவாரிடத்து முக்கியமல்லாத விதிமந்திரங்கள் பலியாமையின், "மற்றை மந்திரவிதிவருமே" என்றார். வருமே என்றுமேகாரம் வாராதென எதிர்மறைப் பொருள் தருதலில் எதிர்மறை. (௬௯௮)

தளர்ந்து மற்றவர் தாஞ் செய்ததீத்தொழில் சரியக்
கிளர்ந்தவச்சமுங் கெழுமிய கீழ்மையோர் கூடி
விளங்கு நீண்முடி வேந்தனீ தறியினம் மேன்மை
யுளங்கொளானமர் விருத்தியு மொழிக்குமென் றுணர்வார்.

(இ-ள்.) தளர்ந்து மற்று அவர் தாம்செய்த தீத்தொழில் சரிய=மனந்தளர்ந்து அச்சமணர்கள் தாங்கள் செய்த கொடுந்தொழிலானது பயன்படாதொழிய; கிளர்ந்த அச்சம் முன்கெழுமிய கீழ்மையோர்கூடி = மேற்கொண்ட அச்சமானது தம்முன்னே சூழும்படி கீழ்மைச்செயலையுடைய அச்சமணர் எல்லாரு மொருங்குகூடி ; விளங்கு நீள்முடி வேந்தன் ஈது அறியில் நம்மேன்மையுளம் கொளான்=பிரகாசிக்கும் நீண்ட முடியினையுடைய பாண்டியன் இதையறிவனேல் நமது மேன்மையைத் தம்மனதில் ஓர் பொருளாகக் கருதான் ; நமர்விருத்தியும் ஒழிக்கும் என்று உணர்வார்=நம்மவர்களது விருத்தியையும் நீக்குவானென்று உணர்வாராய்—எ-று.

தீத்தொழில் தீயையேவியதொழில் என்றுமாம். விருத்தி=சீவனம்.()

மந்திரச் செயல்வாய்த் திலமற் றினிச்செய்யும்
புந்தியாவ திங்கிதுவெனப் பொதிதழல் கொடுபுக்
கந்தண் மாதவர் திருமடப்புறத்தய லிருள்போல்
வந்துதந்தொழில்புரிந் தனர்வஞ்சனை மனத்தோர்.

(இ-ள்.) மந்திரச்செயல் வாய்த்தில மற்று இனிச் செய்யும்=(நாம் செய்யும்) மந்திரத்தாலாயதொழில் கைகூடாதொழிந்தன வேறு இனிச்செய்யும்; புந்தியாவது இங்கு இதுவெனப் பொதிதழல் கொடுபுக்கு=புத்தியாவது இவ்விடத்து இதுவேயென்று பொதிந்த நெருப்பைக் கையிற்கொண்டுசென்று; அந் தண்மாதவர் திருமடப்புறத்து அயல்=அழகிய தண்மையையுடைய பெரியதவத்தினர் வாழும் திருமடத்தின் பக்கத்தில் ; வஞ்சனை மனத்தோர் இருள்போல்வந்து தந்தொழில் புரிந்தனர்=வஞ்சமனத்தையுடைய சமணர்கள் இருள்போல்வந்து தமது கொடுந்தொழிலைச் செய்தார்கள்—எ-று.

Koviloor Digital Library

பிறரறியாது மறைத்துச் சென்றிடுந்தழலாதலில், "பொதிதழலென் என்றார்." சமணர் செய்தொழிலின் கொடுமைபற்றி இதுசெய்தனர் எனக்கூறாது "தீத்தொழில் புரிந்தனர்" என்றார். (௭௦௦)

திருமடப் புறஞ்சுற்றினிற் றீயபா தகத்தோர்
மருவு வித்தவத் தொழில்வெளிப் படுதலுமறுகிப்
பரிசனத்தவர் பதைப்பொடுஞ் சிதைத்தது நீக்கி
யருக ரித் திறம் புரிந் தமைதெளிந்து சென்றணைவார்.

(இ-ள்.) திருமடப்புறஞ் சுற்றினிற் றீயபாதகத்தோர்=திருமடத்தினது புறமாகிய சுற்றில் கொடியபாவச் செயலையுடைய அருகர்கள்; மருவுவித்த அத்தொழில் வெளிப்படுதலும் மறுகி=தீக்கொளுவிய அக்கொடுந்தொழில் வெளிப்படவும் வருந்தி; பரிசனத்தவர் பதைப்பொடும் சிதைத்து அது நீக்கி=திரு அடியார்களாகிய பரிசனர்கள் பதைபதைப்போடும் அத்தீயை அவித்து அதனை நீக்கி; அருகர் இத்திறம் புரிந்தமை தெளிந்து சென்றணைவார்=சமணர்கள் இவ்வாறு செய்தமையை ஆராய்ந்து பிள்ளையாரிடத்துச் சென்றடைவாராயினார்—எ-று. (௭௦௧)

கழுமலப்பதிக் கவுணியர் கற்பகக் கன்றைத்
தொழுதுநின்ற மண்குண்டர் செய்திங் கினைச்சொன்ன
பொழுது மாதவர் துயிலுமித் திருமடப்புறம்பு
பழுது செய்வதோ பாவிகாளெனப் பரிந்தருளி

(இ-ள்.) கழுமலப்பதிக்கவுணியர் கற்பகக்கன்றை=சீகாழியென்னுந் திருப்பதியிலவதரித்த கவுணியகுலத்தலைவராகிய கற்பகவிருக்ஷத்தினது கன்றுபோல்வாரை; தொழுது நின்று அமண்குண்டர் செய்திங்கினைச்சொன்னபொழுது = வணங்கிநின்று சமணர்களாகிய இழிதொழிலோர் செய்த தீமையைச்சொன்னகாலத்து; மாதவர்துயிலும் இத்திருமடப்புறம் பழுது செய்வதோ பாவிகாளெனப் பரிந்தருளி = பெரியதவத்தையுடைய அடியார்கள் துயில்கூரும் இத்திருமடத்தினயலே பாவிகளாகிய சமணர்களே நீவிர் குற்றமாகிய தீக்கொளுவுஞ் செயலைச் செய்யத்தக்கதோவென்று இரங்கியருளி—எ-று.

பாவிகளென்றது விளிக்கண் ஈற்றில் நீண்டு நின்றது. (௭௦௨)

என்பொருட் டவர்செய்த தீங்கா யினுமிறையோ
னன்பருக் கெய்துமோ வென்று பின்னையுமச்ச
முன்புறப் பின்புமுளி வுறமுத் தமிழ் விரகர்
மன்புரக்கு மெய்ம்முறை வழுவென மனங்கொண்டார்

(இ-ள்.) என்பொருட்டு அவர் செய்த தீங்காயினும் இறையோன் அன்பருக்கெய்துமோவென்று = என்னிமித்தமாக இது அவர் செய்த தீங்கா

Koviloor Digital Library

யிருப்பினும் இது சிவபெருமானடியாருக்கு வருமோவென்று; பின்னையும் அச்சம்முன்புற=பின்னும் அச்சமானது முன்னுண்டாக; பின்பு முனிவுற= பின்பு கோபமுண்டாக; முத்தமிழ் விரகர் மன்புரக்குமெய்முறைவழுவென மனங்கொண்டார் =ஆளுடையபிள்ளையார் பாண்டியன் அரசாட்சிசெய்யும் நீதிமுறைமை வழுவாயிருந்ததெனத் தமது திருவுளத்திற்கொண்டருளி னார்—எ-று.

அடியார்க்கு இத்தீத்தொழில்போல வேறுதொழில் பின்னும் யாது செய்வரோவென வச்சம் முன்னும், இச்சிறியர் எம்மிடைத்தீங்குசெய்யவல்ல ரோவென பின்பு கோபமும் உறவென்பார் அச்சமுன்னுறப் பின்புமுனிவுற வென்றார்.

அன்பருக் கெய்துமோவென்றதில், ஓகாரம்சமணர் செய்ததீங்கு குறித்து இரக்கற்பொருட்டருதலிற் கழிவிரக்கம். (எ0௩)

வெய்யதீங் கிதுவேந்தன்மேற் றெனும்விதி முறையாற்
செய்யனே திருவாலவா யெனுந் திருப்பதிகஞ்
சைவர்வாழ் மடத்தமணர்க ளிட்டதீத் தழல்போய்ப்
பையவேசென்று பாண்டியற் காகெனப் பணித்தார்.

(இ-ள்.) வெய்ய தீங்கு இது வேந்தன்மேற்று எனும் விதிமுறை யால்=இக்கொடிய தீங்கு அரசன் மேலதென்னும் அறநூல் கூறும் முறையி னால்; செய்யனேதிரு ஆலவாயெனும் திருப்பதிகம் = "செய்யனே திரு ஆல வாயென்னும்" முதலையுடைய திருப்பதிகத்தினிறுதியில்; சைவர்வாழ்மடத்த மணர்கள் இட்டதீத்தழல்போய்=சைவர்கள் வாழும் திருமடத்துச் சமணர்க ளிட்ட தீத்தழல்சென்று; பையவேசென்று பாண்டியற்காகெனப் பணித் தார்=பையவேசென்று பாண்டியற்காகெனப் பணித்தருளினார்—எ-று.

அரசன்குடிகளையறநெறிதிறுத்தானேல் அவர்செய்தீங்கு அரசன்மே ற்றென அறநூல்கூறுமாதலின்; "வெய்யதீங்கிது வேந்தன்மேற்றெனும் விதி முறையா" லென்றார். (எ0௪)

திருவாலவாய் - பண் - கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

செய்யனே திருவாலவாய் மேவிய
வையனே யஞ்சலென்றருள் செய்யெனைப்
பொய்யரா மமணர் கொளுவுஞ்சுடர்
பையவே சென்றுபாண்டியற்காகவே. (௧)

சித்தனேதிருவாலவாய்மேவிய
வத்தனேயஞ்சலென்றருள்செய்யெனை
யெத்தராமமணர்கொளுவுஞ்சுடர்
பத்திமன்றென்னன்பாண்டியற்காகவே. (௨)

Koviloor Digital Library

தக்கன்வேள்விதகர்த்தருளாலவாய்ச்
சொக்கனேயஞ்சலென்றருள்செய்யெனை
யெக்கராமமணர்கொளுவுஞ்சுடர்
பக்கமேசென்றுபாண்டியற்காகவே. (௩)

சிட்டனேதிருவாலவாய்மேவிய
வட்டமூர்த்திபனேயஞ்சலென்றருள்
துட்டராமமணர்கொளுவுஞ்சுடர்
பட்டிமன்றென்னன்பாண்டியற்காகவே. (௪)

நண்ணலார்புரமூன்றெரிபாலவா
யண்ணலேயஞ்சலென்றருள்செய்யெனை
யெண்ணிலாவமணர்கொளுவுஞ்சுடர்
பண்ணியற்றமிழ்ப்பாண்டியற்காகவே. (௫)

தஞ்சமென்றுன்சரண்புகுந்தேனையு
மஞ்சலென்றருளாலவாயண்ணலே
வஞ்சஞ்செய்தமணர்கொளுவுஞ்சுடர்
பஞ்சவன்றென்னன்பாண்டியற்காகவே. (௬)

செங்கண்வெள்விடையாய்திருவாலவா
யங்கணாவஞ்சலென்றருள்செய்யெனைச்
கங்குலாரமண்கைபரிடுங்கனல்
பங்கமிறென்னன்பாண்டியற்காகவே. (௭)

தூர்த்தன்வீரந்தொலைத்தருளாலவா
யார்த்தனேயஞ்சலென்றருள்செய்யெனை
யேர்த்திலாவமணர்கொளுவுஞ்சுடர்
பார்த்திபன்றென்னன்பாண்டியற்காகவே. (௮)

தாவினாயன்றானறியாவகை
மேவினாய்திருவாலவாயாயரு
டீவிலாவமணர்கொளுவுஞ்சுடர்
பாவினான்றென்னன்பாண்டியற்காகவே. (௯)

எண்டிசைக்கெழிலாலவாய்மேவிய
வண்டனேயஞ்சலென்றருள்செய்யெனைக்
குண்டராமமணர்கொளுவுஞ்சுடர்
பண்டிமன்றென்னன்பாண்டியற்காகவே. (௰)

Koviloor Digital Library

அப்பனுலவாயாதியருளினல்
வெப்பந்தென்னவன்மேலுறமேதினிக்
கொப்பஞானசம்பந்தனுணாபத்துஞ்
செப்பவல்லவர்தீதிலாச்செல்வரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-சொக்கநாதர் - தேவியார் - அங்கயற்கண்ணம்மை

வேறு.

பாண்டிமாதேவியார் தமதுபொற்பிற் பயிலுநெடு மங்கலநாண் பாதுகாத்து, மாண்டகையார் குலச்சிறையா ரன்பினுலு மரசன் பா லபராதமுறுதலாலு, மீண்டுசிவநெறியடையும் விதியினுலும் வெண்ணீறு வெப்பகலப் புகலிவேந்தர், திண்டியிடப் பேறுடைய ஞுதலாலுந் தீப்பிணியைப்பையவே செல்கவென்ருர். (எ0௪)

(இ-ள்.) பாண்டிமா தேவியார் தமது பொற்பிற்பயிலு நெடுமங்கல நாண்பாது காத்தும்=பாண்டிமா தேவியாரது அழகால் விளங்கும் நெடிய மங்கல நாணைப்பாதுகாத்தும்; ஆண்டகையார் குலச்சிறையார் அன்பினுலும்=ஆண் தன்மையையுடைய குலச்சிறை நாயனுர் பாண்டியனிடத்து வைத்த நேயத்தாலும்; அரசன்பால் அபராதம் உறுதலாலும்=பாண்டியனிடத்துந் தீத்தொழில் செய்க என அவனையேவிய அபராதமும் அவனை அற நெறி நிறுத்தாபராதமும் ஆகிய விரண்டும் இருத்தலினுலும்; மீண்டு சிவநெறி அடையும் விதியினுலும்=மீளவும் அப்பாண்டியன்சைவமார்க்கத்தை யடையும் ஊழ்முறைமையினுலும்; வெண்ணீறு வெப்பு அகலப்புகலி வேந்தர்திண்டியிடப்பேறு உடையன் ஆதலாலும் = வெள்ளியவிபூதியை ஆளுடையபிள்ளையார் திருக்கரத்தால் பரிசித்து இடும்படிப் பேற்றையுடையவனுதலாலும்; தீப்பிணியைப்பையவே செல்க என்ருர்=கொடிய சுரநோயைப் பையவே செல்கவென்றருளிச்செய்தார்—எ-று.

தீத்தழல் போய்ப் "பையவேசென்று பாண்டியற்காகெனப்" பணித்தாரென முற்செய்யுளிற்கூறிய வாக்கியத்தின், பதப்பிரயோசனத்தை யிச் செய்யுளில் அநுவதித்துக்கூறினர்.

அதாவது=தீத்தழலென்றது, தீச்சுரநோயை=பைய என்றது. ஊறு செய்யாது. மெல்ல என்றது செல்க என்றது=பாண்டியனிடத்திலென்றது. அதனுல், தீப்பிணியைப் "பையவேசெல்க" வென்றநுவதித்தார்.

இதில் பைய என்னுது, சென்று பாண்டியற்காக எனப்பணிப்பில் பாண்டியனன்றேபாயிறக்கும்; அதனுல் பாண்டிமா தேவியார் மங்கல நாணிழப்பீ.

Koviloor Digital Library

பர் என்பது கருதியதலைப்பாதுகாத்தற் பொருட்டும், குலச்சிறை நாயனார் பாண்டியனிடத்துவைத்த நேயத்திற்கு இடையூறு அடையாமைப் பொருட்டும். "மைபய" எனக்கூறிய தென்பார். "மங்கல நாண் பாதுகாத்தும் அன்பிறுவ" மென்றும் கூறினர்.

ஆயின், தீப்பிணியைப் "பாண்டியற்காக" வெனப்பணிக்கவேண்டாவெனில் பாண்டியன்பால் அபராத முடைமைபற்றியும், இந்நோய் காரணமாகச் சிவநெறி யடையும் வாழ்பற்றியும், தீப்பிணி யடைந்தாலன்றித் திருக்காத்தாற்றீண்டிப் பூதியணிதல் கூடாமை பற்றியும், "பாண்டியற்காக" வெனப்பணித்ததென்பார். "அபராத முறுதலாலும்" சிவநெறி யடையும் விதியினாலும் "தீண்டியிடப் பெறவுடையாதலாலும்" என்றும் கூறினர்.

வேறு.

திருந்திசைப் பதிகத்தொடை திருவாலவாயின்
மருந்தினைச் சண்பைமன்னவர் புனைந்திடவருளால்
விரிந்தவெந்தழல் வெம்மைபோய்த் தென்னனைமேவிப்
பெருந்தழற்பொதி வெதுப்பெனப்பெயர் பெற்றதன்றே.

(இ-ள்.) திருந்து இசைப்பதிகத்தொடை திருவாலவாயின் மருந்தினைச் சண்பை மன்னவர் புனைந்திட=திருந்திய இசையையுடைய திருப்பதிகமாலையைத் திருவாலவாயிலெழுந்தருளிய பிறவிப்பிணிக்கு மருந்தாகிய சுந்தரேசர்மேல் சீகாழித்தலைவராகிய பிள்ளையார் சாத்தியருளுங்கால்; அருளால் விரிந்த வெம் தழல் வெம்மைபோய்=அவரது திருவருளினால் திருமடத்திற் பரந்த கொடிய அக்கினியின் வெப்பமானது சென்று; தென்னனைமேவி=பாண்டியனையடைந்து; பெருந்தழற்பொதிவெதுப் பெனப்பெயர் பெற்றது=பெரிய தீயை உள்ளே பொதிந்த வெப்பு நோயென்று கண்டோர் சொல்லப் பெயர்பெற்றிருந்தது—எ-று. (௪௦௬)

செய்யமேனியர் திருமகனுறை மடத்தி
னையுமுள்ளத்தராய மண்கையர் தானணுகிக்
கையினலெரியிட வுடன்படுமெல்லி கரப்ப
வெய்யவன்குண கடலிடை யெழுந்தனன்மீது.

(இ-ள்.) செய்ய மேனியர் திருமகனார் உறைமடத்தில்=சிவந்த திருமேனியையுடைய சிவபெருமானார் திருமகனாராகிய பிள்ளையாரெழுந்தருளிய திருமடத்தில்; ஐயும் உள்ளத்தராய் அமண் கையர் தான் அணுகி=வருந்து மனமுடையராய்ச் சமணரென்னும் கீழ்மக்கள் சென்று; கையினால் எரியிட உடன்படும் எல்லி கரப்ப=கையினால் தீக்கொளுவுவிக்க உடன்பட்டிருந்த இராப்பொழுது ஒழிய; வெய்யவன் குணகடலிடை எழுந்தனன் மீது=சூரியன் கீழ்க்கடலினிடத்து மேலே உதயமானான்—எ-று. (௪௦௭)

Koviloor Digital Library

இரவுபாதகர் செய்ததீங்கிரவன்றன் மரபிற்
குரவவோதியர் குலச்சிறையாருடன் கேட்டுச்
சிரபுரப்பிள்ளை யாரையித் தீயவர்நாட்டு
வரவழைத்தநா மாய்வதேயென மனமயங்கி.

(இ-ள்) இரவு பாதகர் செய்த தீங்கு=இராப்போதில் சமணராகிய பாவிகள்விளைத்த தீங்கினை; குலச்சிறையாருடன் இரவிதன் மரபிற்குரவவோதியார்கேட்டு=குலச்சிறை நாயனாருடன் சூரியனது மரபிற்றோன்றிய குராமலரா யணிந்த கூந்தலையுடைய மங்கையர்க்கரசியார் கேள்விப்பட்டு; சிரபுரப்பிள்ளையாரை இத்தீயவர் நாட்டு = சீகாழியிலவதரித்த ஆளுடைய பிள்ளையாரை இப்பாவிகளிருக்குந் தேயத்தில்; வர அழைத்த நாம் மாய்வதே யென மனமயங்கி=வரும்படி யழைத்தாமிருவரும் உயிர் விடுவதே இதற்குத் தீர் வென்று தங்கள் மனங்கலங்கி—எ-று. (௭0அ)

பெருகுமச்சமோ டாருயிர்பதைப்பவர் பின்பு
திருமடப்புற மருங்குதீதின்மையிற் றெளிந்து
கருமுருட்டமண்கையர் செய்தீங்கிது கடைக்கால்
வருவதெப்படியா மெனமனங் கொளும்பொழுது.

(இ-ள்.) பெருகும் அச்சமோடு ஆருயிர் பதைப்பவர்=மிக்க பயத்தோடு அரிய தம்முயிர் பதைபதைக்கும் அவ்விருவரும்; திருமடப்புற மருங்கு தீது இன்மையிற் றெளிந்து=பின்பு திருமடத்தின் புறத்துத்தீங்கில்லாமையையுணர்ந்து; கருமுருட்டு அமண்கையர் செய் தீங்கு இது=கரிய முருட்டுடலையுள்ள சமணராகிய கீழ்மக்கள் செய்த தீங்காகிய இது; கடைக்கால் வருவது எப்படியாம் என மனங்கொளும் பொழுது=முடிவுழி எவ்வாறு விளையுமோ வென மனதிற்சிந்திக்குங் காலையில்—எ-று. (௭0௯)

அரசனுக்கு வெப்படுத்த தென்றருகு கஞ்சுகிகள்
உரைசெயப் பதைத்தொரு தனித்தேவியார்புகுத
விரைவு மச்சமுமேற் கொளக் குலச்சிறையாரும்
வரைசெய்பொற் புயமன்னவன் மருங்குவந்தணைந்தார்.

(இ-ள்.) அரசனுக்குவெப்பு அடுத்ததென்று அருகுகஞ்சுகிகள் உரைசெய=பாண்டியனுக்குச் சுரநோய்வந்ததென்று அவன் பக்கலிலுள்ள கஞ்சுகிமாக்கள்கூற; பதைத்து ஒருதனித்தேவியார் புகுத=பதைபதைத்துத் தலைமையான ஒப்பில்லாத பாண்டிமாதேவியார் (அரசன் உறையுளிற்) செல்ல; விரைவும் அச்சமும் மேற்கொள=(அதைக்கேட்டபொழுது) வேகமானசெலவும் மனதிற்பயமுமேம்பட; குலச்சிறையாரும் வரைசெய்பொற்புய மன்னவன் மருங்குவந்து அணைந்தார்=குலச்சிறை நாயனாரும் மலைபோலும் அழகிய புயங்களையுடைய பாண்டியனது பக்கலில் வந்து சேர்ந்தார்—எ-று. ()

வேந்தனுக்குமெய் விதிர்ப்புறவெதுப்புறு வெம்மை
காந்துவெந்தழற் கனமென மெய்யெலாங் கவர்ந்து
போந்துமாளிகைப் புறத்துநின்றார்களும் புலர்ந்து
தீந்துபோம்படி யெழுந்ததுவிழுந்துட றிரங்க

Koviloor Digital Library

(இ-ள்.) வேந்தனுக்குமெய்விதிர்ப்புற = அரசனுக்கு உடம்பு நடுங்கும்படி; வெதுப்புறவெம்மை=வாட்டத்தைச்செய்யும் வெப்புநோயானது; காந்தவெம் தழற்கனமென மெய்யெலாம் கவர்ந்து=எரிகின்ற கொடிய நித்தொகுதிபோல உடம்புமுழுமையும் (தனதாகக்) கொள்ளைகொண்டு ; மாளிகைப்புறத்துப்போந்து நின்றார்களும்=மாளிகையின்பக்கத்துவந்து நின்றவர்களும்; புலர்ந்து தீந்துபோம்படி விழுந்து உடல் திரங்க எழுந்தது=வாடித் தீந்துபோம்படி உடம்பு நிலைதவறிவருந்த உண்டானது—எ-று. (எகக)

உணர்வுமாவியு மொழிவதற்கொருபுடை யொதுங்க
வணையவுற்றவ ரருகுதூரத்திடை யகலப்
புணரிளங்கத லிக்குருத்தொடுதளிர் புடையே
கொணரினுஞ்சுருக் கொண்டவைநுண்டுக ளாக.

(இ-ள்.) உணர்வும் ஆவியும் ஒழிவதற்கு ஒருபுடை ஒதுங்க=பாண்டியனது அறிவும் ஆன்மாவும் (அவ்வுடம்பினின்று) ஒழிதற்பொருட்டு ஒரு பக்கத்தில் ஒதுங்கவும் ; அணையவுற்றவர் அருகுதூரத்திடை அகல=சமீபத்தில்வந்தவர்கள் (வெப்பாற்றாது) தூரத்தில் நீங்கவும் ; புணர் இளம்கதலிக் குருத்தொடுதளிர்=இளமைபொருந்திய வாழைக்குருத்தோடு நீர்க்குளிரி முதலிய தளிர்களையும் ; புடையேகொணரினும் சுருக்கொண்டு அவை நுண்துகளாக=(அரசன்) பக்கலில்கொண்டுவரினும் அவை சுருங்கி நுண்ணியபொடியாகவும்—எ-று. (எகஉ)


மருத்துநூலவர் தங்கள்பல்கலைகளில் வகுத்த
திருத்ததந்தொழில் யாவையுஞ்செய்யவு மேன்மே
லுருத்தெழுந்தவெப் புயிரையுமுருக்குவ தாகக்
கருத்தொழிந்துரை மறந்தனன்கௌரியர் தலைவன்.

(இ-ள்.) மருத்து நூலவர் தங்கள் பல்கலைகளின் வகுத்த திருத்தநும் தொழில் யாவையும் செய்யவும்=ஆயுள்வேதிகள் தங்கட்குரிய பலவாகடங்களிற் கூறிய மேன்மை மிக்கமருந்து மந்திரமுதலிய பரிகாரத்தொழில் பலவற்றையுஞ் செய்யுங்காலும் ; மேல்மேல் உருத்து எழுந்த வெப்பு உயிரையும் முருக்குவதாக=மேலுமேலுங் கோபித்தெழுந்த வெப்புநோயானது அவன் உயிரையுஞ் சிதைப்பதாக மேம்பட ; கருத்து ஒழிந்து உரைமறந்தனன் கௌரியர் தலைவன்=(அதனால்) கூன்பாண்டியன் மனவுணர்வுகெட்டு உரையாடலையுமொழிந்தான்—எ-று. (எகங)

ஆனவன்பிணி நிகழ்வுழியமணர்க ளெல்லா
மீனவன்செயல் கேட்டலும்வெய்துயிர்த் தழிந்து
போனகங்குலிற் புகுந்ததின்விளைவுகொ லென்பார்
மானமுந்தெரி யாவகைமன்னன்மாட் டணைந்தார்.

(இ-ள்.) ஆனவன்பிணிநிகழ்வுழி அமணர்கள் எல்லாம்=அவ்வாறான கொடியசுரநோயானது பாண்டியனுக்கு நிகழுங்காலத்தில் சமணர்களெல்லாரும் ; மீனவன்செயல்கேட்டலும் வெய்துயிர்த்து அழிந்து = பாண்டிய

Koviloor Digital Library



திருமடத்திலிட்டதீ-பாண்டியனை வருத்த அதனைச் சமணர் மயில்ப்பீலி கமண்டலஜலங்கொண்டு தீர்த்தும் தீராமையால்-அடிகள்மாரை வெறுத்தல்.

Koviloor Digital Library

னது செயலைக்கேட்டு பெருமூச்செறிந்து தங்கள் வலிகெட்டு; போனகங்கு ழைட்புகுந்ததின் விளைவுகொல் என்பார்=சென்ற இரவில் நாம்விளைத்த தீச்செயலால் ஆயபயன் இதுவோவென்று சொல்வாராய்; மானமுந் தெரியா வகை மன்னன் மாட்டு அணைந்தார்=(தங்களது) மானமின்மையையுங் கருதாமல் அப்பாண்டியனிடத்து வந்தார்கள்—எ-று.

தாம்செய்த தீத்தொழில் தாம்கருதியபடி பயன்படாதொழியவும், ஒழியாது மன்னன் மாட்டுத்தாம் மானமின்றிவருதலில், மானமுந்தெரியா வகை மன்னன் மாட்டணைந்தாரென்றார்.

பிள்ளையாரிடத்துச்செய்த தீங்கு, மன்னன் மாட்டு உற்றதென்றல் ஒருங்குணராரென்பார், ஐயப்பாற்படப்புகுந்ததின் விளைவுகொலென்பார் என்றார். (௭௧௪)

வேறு.

மால்பெருக்குஞ் சமண்கையர் மருங்குசூழ்ந்து வழுதிநிலை கண்டழிந்து வந்தநோயின், மூலநெறி யறியாதே தங்கடேவர் மொழிநவின்மந் திரங்கொண்டு முன்னும்பின்னும், பீலிகொடு தைவருதற் கெடுத்தபோது, பிடித்தபீ லிகள்பிரம்பி னேடுந்தீய்ந்து, மேலெரியும் பொரிசிதறி வீழக்கண்டு வெப்பினதி சயநோக்கி வெருவின்மிக்கார்.

(இ-ள்.) மால்பெருக்கும் சமண்கையர் மருங்குசூழ்ந்து = மயக்கத்தைப்பெருக்குஞ் சமணராகிய கீழ்மக்கள் (பாண்டியன்) பக்கத்தில் சூழ்ந்து; வழுதி நிலைகண்டு அழிந்து=அவனது கொடிய சுரநோயினது நிலைமையைப்பார்த்து; வந்தநோயின் மூலநெறி அறியாதே=வந்த சுரநோயின் காரணத்தை அறியாதே; தங்கள் தேவர்மொழி நவில் மந்திரம்கொண்டு= தங்கள் தேவனாகிய அருகக்கடவுளது நாமங்களைக்கூறும் மந்திரங்களைக்கொண்டு; முன்னும் பின்னும் பீலிகொடுதைவருதற்கு எடுத்தபோது = முன்னும் பின்னுமாக மயிற்பீலியைக்கொண்டு தடவுதற்கெடுத்தகாலத்தில்; பிடித்த பீலிகள் பிரம்பினோடும் தீய்ந்து=பிடித்தமயிற் பீலிகள் பிரம்பினோடுங் கருகி; மேலெரியும் பொரிசிதறி விழக்கண்டு வெப்பின் அதிசயம் நோக்கி வெருவின் மிக்கார்=மேலே எரிகின்றதீப்பொரிசிதறிவிழுவதைப்பார்த்துச் சுரநோயின் அதிசயத்தைக்கண்டுற்று அச்சமுற்றார்—எ-று.

நோய் தீர்ப்பார்க்கு நோயின் இயல்பும், அதன்காரணமும் உணர்ந்து தீர்த்தல் வேண்டும்; அது உணராது அங்ஙனஞ் செய்யத்தொடங்கினராதலில், மூலநெறியறியாதேயென்றார். சிரசுமுதல்தாள் ஈறும், தாள் முதல் சிரமீறுவாயுமாகத் தடவுதலில், பீலிகொடு முன்னும் பின்னுமென்றார். (௭௧௫)

கருகியமா சுடையாக்கைத் தீயோர்தங்கள் கைத்தூங்கு குண்டிகைநீர் தெளித்துக்காவா, யருகனே யருகனே யென் றென்றோதி யடல்வழுதி மேற்றெளிக்க வந்நீர்பொங்கிப், பெருகுமெரி தழல்சொ

Koviloor Digital Library

ரிந்த நெய்போலாகிப் பேர்த்துமொரு தழலதன்மேற் பெய்தாற்போல, வொருவருமிங்கிருமருங்கு மிராதுபோமென் றமணரைப் பார்த் துரைத்தரச னுணர்வுசோர்ந்தான்.

(இ-ள்.) கருகியமாசுடையாக்கைத் தீயோர்=கறுத்து அழுக்கடைந்த சரீரத்தையுடைய கொடியசமணர்கள்; தங்கள் கைத்தூங்கு குண்டிகை நீர்=தமதுகையில் தூங்குகின்ற கமண்டல நீரை; காவாய் அருகனே அருகனே என்றென்று தெளித்து ஒதி=அருகனே காவாய் அருகனே காவாயென்று உரப்பி பலகாற்கூறி; அடல்வழுதி மேற்றெளிக்க = வலிமைபொருந்திய பாண்டியன்மேல் தெளிக்குங்கால்; அந்நீர் பொங்கிப்பெருகும் எரிதழல் சொரிந்தநெய்போலாகி=அந்த நீரானது பொங்கிச் சுவாலிக்கும் அக்கினியிற் சொரிந்த நெய்போலாய்; பேர்த்தும் ஒருதழல் அதன்மேற் பெய்தாற்போல = மீளவும் ஓர் நெருப்பை யச்சுரநோயின்மேல் சொரிந்தாற்போல இருக்க; ஒருவரும் இங்கு இருமருங்கும் இராதபோமென்று அமணரைப்பார்த்து உரைத்து அரசன் உணர்வுசோர்ந்தான்=ஒருவரும் இவ்விடத்து இரண்டு பக்கங்களிலும் இராமற்போமின்களென்று சமணரைப்பார்த்துக் கூறிப் பாண்டியன் அறிவு அழிந்தான்—எ-று.

கமண்டல நீரை உரப்பி ஓதித்தெளிக்கவெனக்கூட்டுக. (எகசு)

வேறு.

பாண்டிமா தேவியாரும் பயமெய்தி யமைச்சர்பாரம்
பூண்டவர் தம்மைநோக்கிப் புகலியில் வந்துநம்மை
யாண்டுகொண் டவர்பாற்கங்கு லமணர்தாஞ் செய்ததீங்கு
மூண்டவா றினையதாகி முடிந்ததோ வென்றுகூற.

(இ-ள்.) பாண்டிமாதேவியாரும் பயமெய்தி = பாண்டிமாதேவியாரும் அச்சமுற்று; அமைச்சர் பாரம்பூண்டவர் தம்மைநோக்கி=அமைச்சியலாகிய பாரத்தை வகித்த குலச்சிறைநாயனாரைப்பார்த்தருளி; புகலியில் வந்து நம்மை ஆண்டுகொண்டவர்பால்=சீகாழியிலவதரித்து நம்மை யடிமைகொண்ட ஆளுடையபிள்ளையாரிடத்து; கங்குல் அமணர்தாம்செய்த தீங்கு= ராத்திரியில் சமணர்கள்செய்த தீங்கானது; மூண்டவாறு=மூண்டபடி; இனையதாகி முடிந்ததோ என்றுகூற=இவ்வாறு சுரநோயாய் வந்ததோவென்று கூறியருள—எ-று. (எகஎ)

கொற்றவ னமைச்சனாருங் குலச்சிறை யாருந்தாழ்ந்து
மற்றிதன் கொடுமையிந்த வஞ்சகர் மதில்கண்மூன்றுஞ்
செற்றவ ரன்பர்தம்பாற் செய்ததீங் கரசன்பாங்கு
முற்றிய திவர்கடீர்க்கின் முதிர்வதே யாவதென்பார்.

Koviloor Digital Library

(இ-ள்.) கொற்றவன் அமைச்சனாராம் குலச்சிறையாரும் தாழ்ந்து=பாண்டியன் மந்திரியாகிய குலச்சிறை நாயனாரும் வணங்கி; மற்று இதன் கொடுமை இந்த வஞ்சகர்=இச்சுரநோயினது கொடுமையானது இந்தக் கொடியசமணர்கள்; மதில்கள் மூன்றும் செற்றவர் அன்பர் தம்பால் செய்த தீங்கு அரசன் பாங்குழுற்றிபது=பகைவர்களான அசுரர்களது புரமூன்றையும் எரித்த சிவபெருமானது அன்பராகிய ஆளுடையபிள்ளையாரிடத்துச். செய்த குற்றமானது அரசனிடத்துச்சேர்ந்தது; இவர்கள் தீர்க்கின் முதிர்வதே ஆவதென்பார்=இச்சமணர் தீர்க்கப்புகின் மேலுமேலும் விளைவதேயாமென்று பாண்டிமாதேவியாருக்குச் கூறியருளினார்—எ-று. (௭௧அ)

இருதிறத் தவருமன்ன னெதிர்பணிந் திந்தவெப்பு
வருதிறம் புகலிவந்த வள்ளலார் மதுரைநண்ண
வருகர்கள் செய்ததீய வனுசித மதனால்வந்து
பெருகிய திதற்குத்தீர்வு பிள்ளையா ரருளேயென்று.

(இ-ள்.) இருதிறத்தவரும் மன்னன் எதிர்பணிந்து=மங்கையர்க்கரசியார் குலச்சிறைநாயனாரென்னு மிருவரும் பாண்டியனெதிரேவணங்கி; இந்த வெப்பு வருதிறம் புகலிவந்த வள்ளலார் மதுரை நண்ண அருகர்கள் செய்த தீய அனுசிதம்=இச்சுரநோய் வருதற்குக்காரணம் சீகாழியிலவதரித்த ஆளுடையபிள்ளையார் இந்நாட்டிலடைந்தருள (அது பொறுது) சமணர்கள் செய்த கொடிய அநுசிதமாம்; அதனால் வந்து பெருகியது இதற்குத் தீர்வு பிள்ளையார் அருளேயென்று = அப்பொருந்தாச்செயலால் இந்நோய்வந்து விருத்தியடைந்தது இந்நோய்க்குத் தீர்வுபிள்ளையாரது திருவருளேயாமென்று கூறி—எ-று.

அனுசிதம்=உசிதமல்லாதது. அது பொருந்தாச்செயலென்று பொருட்டும். தீர்வு=ஒன்றால் விளைந்த குற்றத்திற்கு அதைப்போக்கும் உபாயம் ஈதெனத்தக்கவாறு செய்யுஞ்செயல். இதனால், அனுசிதத்தாலாய இந்நோய்க்குத் தீர்வு பிள்ளையார் திருவருளேயென்றார் என்றும். (௭௧௧)

காயமு மனமுமாசு கழுவுதல் செய்யார்செய்யு
மாயமு மிந்தநோயை வளர்ப்பதே வளர்வெண்டிங்கண்
மேயவே ணியர்பான்ஞானம் பெற்றவர் விரும்பிநோக்கத்
தீயவிப் பிணியேயன்றிப் பிறவியுந் தீருமென்றார்.

(இ-ள்.) காயமும் மனமும் மாசுகழுவுதல் செய்யார்செய்யும் மாயமும்=உடலிடத்தும் மனத்தின் கண்ணுமுள்ள அழுக்கை (நீராடலாலும் மனந்தூய்மையாலும்) கழுவாத இச்சமணர்கள் செய்கின்ற மாயமாகிய உபசாரங்களும்; இந்த நோயை வளர்ப்பதே=இந்தச் சுரநோயை வளர்க்கின்றதே; வளர்வெண் திங்கள்மேய வேணியர்பால் ஞானம் பெற்றவர் விரும்பி நோக்க=வளர்கின்ற வெள்ளிய இளம் பிறையையணிந்த சடையையுடைய

Koviloor Digital Library

சிவபெருமானிடத்து சிவஞானம்பெற்றபிள்ளையார் அன்புகூர்ந்துதிருவருட் பார்வைசெய்ய ; தீய இப்பிணியே அன்றிப் பிறவியும் தீருமென்றார்=கொடிய இச்சுரநோயேயன்றி (அறுதியாயவாறு பற்றிவரும்) பிறவிநோயுந்தீருமென்று சொல்லியருளினார்கள்—எ-று.

தீர்வல்லாத செயலைத் தீர்வாகக் கருதிமயங்கிச்செய்தலில் அச்செயலை இழிவுதோன்றச்செய்யுமாயமென்றும், அச்செயலால் நோய் சிறிதும் நீங்காமைதோன்ற வளர்ப்பதேயென்றும், இவ்வாறு பொய்ஞ்ஞானமுடையரால் தீர்ப்பதன்று இது மெய்ஞ்ஞானமுடையராலே தீர்க்கத்தக்கதென்பார், மேயவேணியர்பால் ஞானம் பெற்றவரென்றும், அவர் விரும்பி நோக்கத்தீர்வது திண்ணமென்பார் தீய இப்பிணியேயன்றிப் பிறவியுந் தீருமென்றார், என்றும். எவ்வளவும் இந்நோய் தீர்தலின்று என்றுந்துணிவுப்பொருட்டுருதலில், ஏகாரம் தேற்றம். (௭௨௦)

மீனவன் செவியினூடு மெய்யுணர் வளிப்போர்கூற
ஞானசம் பந்தரென்று நாமமந் திரமுஞ்செல்ல
வானபோ தயர்வுதன்னை யகன்றிட வமணராகு
மானமில் லவரைப்பார்த்து மாற்றமொன் றுரைக்கலுற்றான்.

(இ-ள்.) மீனவன் செவியுறூடு மெய்யுணர்வு அளிப்போர் கூற= பாண்டியனது செவியினிடத்து மெய்யுணர்வைக்கொடுக்கும் அவ்விருவரும் (இவ்வாறு) கூறுங்கால் ; ஞானசம்பந்தரென்றும் நாமமந்திரமும் செல்ல= திருஞான சம்பந்தரென்றுந் திருநாமமாகிய மந்திரம் (அச்சொற்றொடர் வழியாய்ச்செவிக்கேற ; ஆனபோது அயர்வுதன்னை அகன்றிட=அப்பொழுது சுரநோயின் சோர்வு தன்னினின்றுஞ் சிறிது நீங்க ; அமணராகும் மானமில்லவரைப் பார்த்து மாற்றம் ஒன்று உரைக்கலுற்றான் = சமணராகிய மானமில்லாதவரைப்பார்த்து ஒருவார்த்தைசொல்லத்தொடங்கினான்.—எ-று.

மன்னவ னவரைநோக்கி மற்றிவர் செய்கையெல்லா
மின்னவா றெய்துநோய்க்கே யேதுவா யினவென்றெண்ணி
மன்னிய சைவநீதி மாமறைச் சிறுவர்வந்தா
லன்னவ ரருளாலிந்நோ யகலுமே லறிவேனென்பான்.

(இ-ள்.) மன்னவன் அவரை நோக்கி = பாண்டியன் அச்சமணரைப்பார்த்து ; மற்று இவர் செய்கை யெல்லாம் இன்ன ஆறு எய்து நோய்க்கே ஏது ஆயின வென்று எண்ணி=இச்சமணர்களது (தீர்வுகுறித்த) செய்கை யெல்லாம் இவர்செய்த தீத்தொழிலால் வந்தநோயை வளர்த்தற்கு காரணமாயினவென்று (தம்மனதிற்) கருதி ; மன்னிய சைவநீதி மாமறைச் சிறுவர் வந்தால்=நிலைபெற்ற சைவநீதியையுடைய பெரிய மறையவர் குலத்திற் றோன்றிய பிள்ளையார் இங்கு வந்தருளினால் ; அன்னவர் அருளால்

Koviloor Digital Library

இந்நோய் அகலுமேல் அறிவேனென்பான்=அவரது திருவருளால் இச்சுர நோய் (எம்மில் நின்று) நீங்குமாயின் அவர்பெருமையை யான் காண்பே னென்றுகூறுவானாய்—எ-று. (எஉஉ)

என்றுமுன் கூறிப்பின்னும் யானுற்ற பிணியைத்தீர்த்து
வென்றவர் பக்கஞ்சார்வன் விரகுண்டே லழையுமென்ன
வன்றவ ருவகைபொங்கி யார்வத்தா லணையைநூக்கிச்
சென்றநீர் வெள்ளம்போலுங் காதல்வெள் ளத்திற்செல்வார்.

(இ-ள்.) என்று முன்கூறி=இவ்வாறு (அவ்விருவர்) முன்னுஞ் சொல்லி; பின்னும்=பின்னுங் கூறுவான்; யான் உற்றபிணியைத் தீர்த்து வென்றவர் பக்கம் சார்வன்=நான் என்னை யடைந்த சுரநோயை நீக்கி வென்றவரெவரோ அவர் பக்கலை யடைவேன்; விரகுண்டேல் அழையுமெ ன்ன=(நீவிர் கூறியவாறு செய்தற்குத் தீர்க்கும்) உபாயம் உண்டாயின் அப் பிள்ளையாரை யழையுமென்று கூற; அன்று அவர் உவகை பொங்கி ஆர்வத் தால்=அப்பொழுது அவ்விருவரும் களிப்பால்மேம்பட்டு பெருவிருப்பால் அணையை நூக்கிச்சென்ற நீர்வெள்ளம்போலுங்காதல் வெள்ளத்திற் செல் வார் = கரையையுடைத்துச்சென்ற பெரு நீர் வெள்ளம்போலும் அப்பெரு விருப்பாகிய வெள்ளத்திற் செல்வாராயினர்.—எ-று. (எஉங)

பாயுடைப் பாதகத்தோர் திருமடப் பாங்குசெய்த
தீவினைத் தொழிலைநோக்கி யுள்ளழி திருவுள்ளத்தான்
மேயவத் துயரநீங்க விருப்புறு விரைவினோடு
நாயகப் பிள்ளையார்த நற்பதம் பணிவாராகி.

(இ-ள்.) பாயுடைப்பாதகத்தோர்=பாயாகிய உடையையுடுத்த பாத கராகிய சமணர்கள்; திருமடப்பாங்கு செய்ததீவினைத் தொழிலை நோக்கி= திருமடத்தின் புறத்திற்செய்த தீவினைச் செயலை யாராய்ந்து; உள்ளழி திரு உள்ளத்தால்=வருந்தும் தமது திருவுள்ளத்தில்; மேய அத்துயரம் நீங்க= பொருந்திய அத்துன்பம் நீங்க; விருப்புறு விரைவினோடு நாயகப்பிள்ளையார் தம் நற்பதம்பணிவாராகி = விருப்பத்தால் ஆயவிரைவோடு சைவமுதல்வ ராகிய ஆளுடையபிள்ளையார் திருவடிகளை வணங்குவாராய்—எ-று. (எஉச)

மன்னவ னிடும்பைதீர மற்றவன் பணிமேற்கொண்டே
யன்னமென் னடையினரு மணிமணிச் சிவிகையேறி
மின்னிடை மடவார்சூழ வேற்படை யமைச்சனரு
முன்னணைந் தேகச்சைவ முதல்வனார் மடத்தைச்சார்ந்தார்.

(இ-ள்.) மன்னவன் இடும்பை தீரமற்று அவன்பணிமேற்கொண் டே=பாண்டியனது துன்பம் நீங்க அவன் பணித்த பணியைத் தாம்மேற்

கொண்டு; அன்னமென்னடையினரும் அணிமணிச்சிவிகை ஏறி=அன்னம் போலும் மிருதுவான நடையை யுடைய பாண்டிமாதேவியாரும் அழகிய இரத்தின மழுத்திய சிவிகையின் மேலேறி; மின் இடைமடவார் சூழ வேற்படை அமைச்சனாரும் முன் அணைந்தேக=மின்போலும் இடையையுடைய பணிப்பெண்கள் (இருபக்கமுஞ்)சூழ்ந்துவர வேலேந்திய குலச்சிறை நாயனாரும் (குதிரையேறி) முன்பு சென்றருள; சைவமுதல்வனார் மடத்தைச்சார்ந்தார்=ஆளுடைய பிள்ளையாரது திருமடத்தை யடைந்தருளினார். —எ-று.

சமணர், திருமடப்புறம்புசெய்த தீயதொழிலை நோக்கித்தாம் உள்ளழிந்த தயரம் நீங்கப் பிள்ளையார் பதம் வணங்கப் பாண்டியன் சுரநோயெய்திய காரணத்தால் காலந்தாழ்ந்தமையால் அதனை முன்விட்டுப் பிள்ளையார் பரம் பணிவாராய், மேல் அரசன் எய்திய இடும்பை தீர அவன் பணியைப் புந்தலைக்கொண்டு பாண்டிமா தேவியாரும் மடவார் சூழச் சிவிகையேறி அமைச்சனார் முன்செல்லச் சைவ முதல்வனார் மடத்தைச் சார்ந்தாரெனக் கூட்டுக. (எஉரு)

திருமடஞ் சாரச்சென்று சேயரிக் கண்ணினார்முன்
வருபரி யிழிந்துநின்ற வமைச்சனார் வந்தபான்மை
சிரபுரப் பிள்ளையார்க்கு விண்ணப்பஞ் செய்மினென்னப்
பரிசனத் தவரும்புக்குப் பதமறிந் துணர்த்துகின்றார்.

(இ-ள்.) திருமடம் சாரச்சென்று சேயரிக்கண்ணினார் முன்=பிள்ளையார் திருமடத்தைச் சமீபிக்கச்சென்று செவ்வரி படர்ந்த கண்களையுடைய மங்கையர்க்கரசியாருக்குமுன்; வருபரி இழிந்து நின்ற அமைச்சனார்=தாம் இவர்ந்துவருங் குதிரையினின்றும் இறங்கிநின்ற குலச்சிறைநாயனார்; வந்த பான்மைசிரபுரப்பிள்ளையார்க்கு விண்ணப்பம் செய்மினென்ன=(மங்கையர்க்கரசியாரோடுதாம்) வந்தடைந்த தன்மையைச் சீகாழியிலவதரித்த ஆளுடையபிள்ளையாருக்கு விண்ணப்பஞ் செய்மினென்று சொல்லியருள; பரிசனத்தவரும் புக்குப்பதம் அறிந்து உணர்த்துகின்றார்=அடியார்திருக்கூட்டங்களும் உள்ளேசென்று சமயமறிந்து தெரிவிக்கின்றாராயினார். (எஉசு)

பாண்டிமா தேவியாரும் பரிவுடை யமைச்சனாரு
மீண்டுவந் தணைந்தாரென்று விண்ணப்பஞ் செய்யச்சண்பை
யாண்டகை யாருமீண்ட வழையுமென் றருளிச்செய்ய
மீண்டுபோந் தழைக்கப்புக்கார் விரைவுறும் விருப்பின்மிக்கார்.

(இ-ள்.) பாண்டிமா தேவியாரும் பரிவுடை அமைச்சனாரும்=மங்கையர்க்கரசியாரும் அன்பினையுடைய குலச்சிறைநாயனாரும்; ஈண்டுவந்து அணைந்தாரென்று விண்ணப்பம் செய்ய=இங்குவந்தடைந்தார்களென்று விண்ணப்பம் செய்ய; சண்பை ஆண்டகையாரும் ஈண்ட அழையுமென்று

Koviloor Digital Library

அருளிச்செய்ய = சீகாழியிலவதரித்த ஆளுடையபிள்ளையாரும் (அவர்களை) இவ்விடத்து அழைப்பீர்களாக வென்றருளிச்செய்ய; மீண்டுபோந்து அழைக்கப் புக்கார் விரைவுறும் விருப்பின் மிக்கார்=(அப்பரிசனர்கள்) மீளவந்தழைக்க உள்ளே புகுந்தார்கள் விரைந்துசெல்லும் விருப்பத்தின் மேம்பட்ட அவ்விருவரும்—எ-று.

இருவரும் புக்காரெனக்கூட்டுக. (௭௨௭)

ஞானத்தின் றிருவுருவை நான்மறையின் றனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்குங்
கானத்தி னெழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்.

(இ-ள்.) ஞானத்தின் திரு உருவை = ஞானத்தாலாய திருவுருவம் போல்வாரை; நான்மறையின் தனித்துணையை=நான்கு வேதங்களுக்கும் ஒப்பில்லாத துணையாயுள்ளாரை; வானத்தின் மிசையன்றி மண்ணில் வளர் மதிக்கொழுந்தை = விண்ணிலன்றி மண்ணுலகில் வளர்கின்ற இளஞ்சந்திரனை; தேன் நக்கமலர்க்கொன்றைச் செம்சடையார் சீர்தொடுக்கும் கானத்தின் எழுபிறப்பை=தேன்விளங்குங் கொன்றைப்பூமாலையை யணிந்த சிவந்த சடையையுடைய சிவபிரானது திருபுகழைப்பாடும் ஏழிசையாலாய ஓர்பிறப்புவிசேடத்தை; கண்களிப்பக்கண்டார்கள்=கண்களிக்கும்படித் தரிசித்தார்கள்.—எ-று.

இத்திரு உருவம் ஞானத்தாலாய காரியமே; இதனிடைவேற்றுமையின்றென்பார், ஞானத்தின் திருவுருவை யென்றும், நான்மறைகளிற் கூறிய அறங்களைவளர்த்தலின், அதன்தனித்துணையை யென்றும், ஒளியானும், தண்ணளியானும், இளமையானும் மதிக்கொழுந்தோடு பிள்ளையாரிடை வேற்றுமையின்மை தோன்றமதிக்கொழுந்தென்றும், அதனோடு வேற்றுமை வானத்தின் வளர்தலும் மண்ணில் வளர்தலு மெனக்கூறுவார், வானத்தின் மிசையன்றி மண்ணில் வளரென்றும், ஏழிசையுந் திரண்ட ஓர் விசேடவுருவம் இவரது திருமேனியே; அதனிடைவேற்றுமையின் றென்பார், கானத்தினெழுபிறப்பை யென்றுங் கூறினார். (௭௨௮)

கண்டபொழு தமண்கொடியோர் செய்தகடுந் தொழினினைந்தே
மண்டியகண் ணருவிநீர் பாயமலர்க் கைகுவித்துப்
புண்டரிகச் சேவடிக்கீழ்ப் பொருந்தநில முறவீழ்ந்தார்
கொண்டகுறிப் போடுநெடி துயிர்த்தழிந்த கொள்கையராய்.

(இ-ள்.) கண்டபொழுது அமண்கொடியோர் செய்த கடுந்தொழில் நினைந்து = (பிள்ளையாரைத்) தரிசித்தபொழுது சமணர்களாகிய கொடியவர்கள் செய்த தீத்தொழிலைக்கருதி; மண்டியகண் அருவிநீர்பாய மலர்க்கை

குவித்து=நெருங்கிய கண்களினின்றுங் கண்ணீராகிய அருவிபாயக்கரகமலங்களைக் குவித்து; புண்டரீகச்சேவடிக்கீழ்ப் பொருந்த நிலமுறவீழ்ந்தார் = தாமரை மலர்போலுஞ் சிவந்ததிருவடிக் கீழ்பொருந்தும்படி பூமியில் சரீரத்தோய விழுந்து பணிந்தார்கள்; கொண்ட குறிப்போடு நெடிது உயிர்த்து அழிந்த கொள்கையராய்=தாம்மனதிற்கொண்ட குறிப்பால் பெருமூச்செறிந்து மனந்தளர்ந்த கொள்கையை யுடையவராய்—எ-று.

கொண்ட குறிப்பாவது=சமணரை வென்று அவர் தீத்தொழிலால் உற்ற அரசன் சுரநோயை நீக்கி அவனை விபூதி தரிக்கச்செய்ய வேண்டும் என்பது. அதனோடு நெடிதுயிர்த்தல், அரசன் சுரநோயின் நலிவு பற்றி யென்க. (எஉரு)

உரைகுழறி மெய்ந்நடுங்கி யொன்றுமறிந் திலர்தம்மைத்
தரையின்மிசைப் புரண்டயர்ந்து சரணகம லம்பற்றிக்
கரையில்கவ லைக்கடற்கோர் கரைபற்றி னார்போன்று
விரைவுறுமெய் யன்பினால் விடாதொழிவார் தமைக்கண்டு.

(இ-ள்.) உரைகுழறி மெய்ந்நடுங்கி ஒன்றும் அறிந்திலர் தம்மை = வார்த்தை குழறி உடம்பு நடுங்கித்தம்மை மறந்தவராய்; தரையின்மிசைப் புரண்டு அயர்ந்து=பூமியின்மேல் புரண்டு சோர்ந்து; சரணகமலம்பற்றி = (பிள்ளையாரது) திருவடித்தாமரைகளைப்பற்றி; கரையில் கவலைக்கடற்கு ஓர் கரைபற்றினார் போன்று=கரைகாணுதற்கரிய கவலையென்னுங் கடலுக்கு ஓர் கரையைக் கண்டு பற்றினவரையொத்து; விரைவுறும் மெய்யன்பினால் விடாது ஒழிவார் தமைக்கண்டு=தம்மினின்றும் நீங்காத மெய்யன்பினால் திருவடிகளைப் பற்றிவிடாது கிடப்பாரைப் பார்த்தருளி—எ-று. (எஙo)


அருமறைவாழ் பூம்புகலி யண்ணலா ரடிபூண்ட
விருவரையுந் திருக்கையா லெடுத்தருளித் தேற்றிடவுந்
தெருமந்து தெளியாதார் தமைநோக்கிச் சிறப்பருளித்
திருவுடையீ ருங்கள்பாற் றீங்குளதோ வெனவினவ.

(இ-ள்.) அருமறைவாழ்பூம் புகலி அண்ணலார்=அரிய வேதங்கள் நிலைபெற்று விளங்கும் பொலிவினையுடைய சீகாழியிலவதரித்த ஆளுடைய பிள்ளையார்; அடிபூண்ட இருவரையும் திருக்கையால் எடுத்தருளித்தேற்றிடவும்=தமது திருவடிகளைப் பூண்டுகிடக்கும் அவ்விருவரையும் திருக்கரத்தாலெடுத்துத் தெளிவிக்கவும்; தெருமந்து தெளியாதார் தமைநோக்கிச் சிறப்பருளி=மனம் மயங்கித்தெளியாத அவ்விருவரையும் பார்த்துச் சிறந்த திருவருளைச் செய்து; திரு உடையீர் உங்கள் பால் தீங்கு உளதோ எனவினவ=திருவருட்செல்வமுடையீர் உங்களிடத்தில் யாதானுந் தீங்கு உற்றதோ என வினவியருள—எ-று. (எஙக)

Koviloor Digital Library



சமணர்கள்பாண்டியனதுசுரத்தைத்தீர்
ககாமையால் அரசன்மந்திரியாரையனுப்
பித்திருஞானசம்பந்தஸ்வாமிகளை எழுந்தருளச்



ஆளுடையபிள்ளையார் சமணரைவாதில்வெல்லவும் அரசன் சுரநோ
ய்தீரவும் சுந்தரேசரது விடைபெற ஆலயத்துட் சென்றது.

Koviloor Digital Library

வெஞ்சமணர் முன்செய்த வஞ்சனைக்கு மிகவழிந்தே
யஞ்சினேந் திருமேனிக் கடாதென்றே யதுதீர்ந்தோம்
வஞ்சகர்மற் றவர்செய்த தீத்தொழில்போய் மன்னவன்பா
லெஞ்சலிலாக் கொடுவெதுப்பா யெழாநின்ற தெனத்தொழுது.

(இ-ள்.) வெம்சமணர்முன்செய்தவஞ்சனைக்குமிக அழிந்தே அஞ்சினோம்=கொடியசமணர்கள் (திருமடத்தில் தீயிடச்செய்த) வஞ்சனைக்கு மிகவும் மனந்தளர்ந்து அஞ்சிவருந்தினோம்; திருமேனிக்கு அடாதென்றே அது தீர்ந்தோம் = (பிள்ளையார்) திருமேனிக்கு (அத்தீங்கு) பொருந்ாதென்று அத்துன்பத்தில்நீங்கினோம்; வஞ்சகர் மற்றவர்செய்த தீத்தொழில்போய்= பாவிகளாகிய அக்கொடியோர்கள் செய்த கொடுந்தொழில் மீண்டு; மன்னவன்பால் எஞ்சலிலாக்கொடு வெதுப்பாய் எழாநின்றது எனத்தொழுது = அரசனிடத்துக் குறைவில்லாத கொடிய சுரநோயாய் எழுந்ததென்று வணங்க—எ-று. (௭௬௨)

வெய்யதொழி லமண்குண்டர் விளைக்கவரும் வெதுப்பவர்தாஞ்
செய்யுமதி மாயைகளாற் றீராமைத் தீப்பிணியான்
மையலுறு மன்னவன்முன் மற்றவரைவென்றருளி
லுய்யுமெம துயிருமவ னுயிருமெனவுரைத்தார்கள்.

(இ-ள்.) வெய்யதொழில் அமண் குண்டர் விளைக்கவரும் வெதுப்பு=கொடுந்தொழிலையுடைய சமணர்களாகிய கீழ்மக்கள் செய்த தீங்கால் (அரசனுக்கு) வந்த சுரநோய்; அவர் செய்யும் அதிமாயைகளால் தீராமை= அவர்கள் செய்யும் அதிக மாயாசாலங்களால் தீராதிருத்தலால்; தீப்பிணியால் மையலுறு மன்னவன்முன்=அச்சுரநோயால் உயிர்சோர்ந்துகிடக்கும் அரசன்முன்னே; மற்று அவரைவென்றருளில்=அச்சமணரை (வாதில்) வென்றருளினால்; உய்யும் எமது உயிரும் அவன் உயிரும் என உரைத்தார்கள்= எம்முடைய உயிரும் அவனுடைய உயிரும் உய்யுமென்று விண்ணப்பஞ்செய்தார்கள்—எ-று. (௭௬௩)

வேறு

என்றவ ருரைத்தபோதி லெழில்கொள்பூம் புகலிவேந்த
ரொன்றுநீ ரஞ்சவேண்டா வுணர்விலா வமணர்தம்மை
யின்றுநீ ருவகையெய்த யாவருங் காணவாதில்
வென்றுமீ னவனைவெண்ணீ றணிவிப்பன் விதியாலென்றார்.

(இ-ள்.) என்று அவர் உரைத்த போதில் எழில்கொள் பூம்புகலிவேந்தர்=இவ்வாறு மங்கையர்க்கரசியார் குலச்சிறை நாயனுமொன்றும் இருவருங் கூறியபோது அழகிய பொலிவுபொருந்திய சீகாழியின் கண் அவதரித்த ஆளுடையபிள்ளையார்; ஒன்றும் நீர் அஞ்சவேண்டா உணர்வு இலா அமணர்தம்மை=ஒரு சிறிதும் நீவிர் அஞ்சவேண்டுவதில்லை மெய்யுணர்ச்சியில்லாத சம

Koviloor Digital Library

ணர்கள்; இன்று நீர் உவகையெய்தயாவருங் காணவாதில்வென்று=இப்பொழுது நீவிர் மகிழ்ச்சியடையவும் (இந்நாட்டுள்ள) யாவருங் காணவும் நாம் வாதில்வென்று; மீனவனை வெண்ணீறு அணிவிப்பன் விதியாலென்றார்= பாண்டியனை வெள்ளிய திருநீற்றை வேதவிதிப்படி யணிவிப்போமென்று கூறியருளினார்—எ-று.

விதியாவது, புத்தி - முத்திகட்குக் கங்கையினும் பரிசுத்தமான நால்வகைப்பூதியை அதர்வசிரசு, சுவேதாசுவேதரம், தைத்திரியம், கைவல்யம் முதலிய உபநிடதங்களிலும், ஸ்ரீ காமிக முதலிய சைவாகமங்களிலும், அவைகளின் அநுவாதகங்களான மநுபராசர முதலிய ஸ்மிருதிகளினுஞ், சைவ புராணங்களினும், இதிகாசங்களிலும், வருணத்துக்கேற்க உத்தூளனமாயும் திரிபுண்டரமாயும் தரித்தல் வைதிக சைவர், சித்தாந்த சைவர் என்னும் இருவர்க்கும் உரித்தாமெனவிதித்தலும் ஏனையபுண்டரங்கள் ஆகாவென விலக்குதலுமாம். அதனால்விதியாலென்றார்.

நால்வகைப்பூதியாவன கற்பமும், அநுகற்பமும்,உபகல்பமும், அகற்பமும் என இவை. கற்பமாவது கபிலைப்பசுவின்கோமயத்தைத் தாமரையிலைமுதலிய வற்றில் சத்தியோசாதத்தாலேற்றுமேல் வழும்பு நீக்கி வாமதேவத்தால் பிசைந்துண்டைசெய்து சுத்தமான இடத்திலுலர்த்திச் சிவாக்கினியால் தகிப்பதாம். அநுகற்பமாவது, வனத்தில் சித்திரை மாதத்திற் சென்று உலர்ந்த கோமயத்தை யெடுத்துச் சூரணஞ்செய்து கோசலம் வார்த்துப் பிசைந்துருட்டி முன்போலச்சிவாக்கினியால் தகிப்பதாம். உபகற்பமாவது, வனத்தில் தாவாக்கினியால் வெந்தசாம்பலைப் பஞ்சகௌவியம்சேர்த்துப்பிசைந்து முன்போலச் சிவாக்கினியால் தகிப்பதாம். இவையல்லாதன அகல்ப்பமெனப்படும்.

இப்பூதி-பரம், அபரம் என்னும் அயிஸ்வரியத்தைக் கொடுத்தலால், விபூதியென்றும், விக்கினங்களைப் போக்குதலால், இரட்சை என்றும், தானேவிளங்குதலாலும் பாவங்களைத் தகிக்கையினாலும் பஸ்மமென்றும் பெயர்பெறும்.

உத்தூளனமாவது - விபூதிதரித்தற்குரிய இடமல்லாத இடமொழித்து மூன்று வருணத்துக்கிரகத்தரும், நான்குவருணத்து விரத்தரும், வேதாகமவிதிப்படி சிரசு, நெற்றி, முகம், மார்பு, நாபிமுதலிய இடங்களில் நீரால் குழைத்துப் பூசுவது.

விரத்தமறையவர்க்கு சர்வாங்க உத்தூளனங்கூறப்படும்.

திரிபுண்டரமாவது - தர்ச்சனி, மத்திமை, அநாமிகை என்னும் மூன்று விரல்களால் முப்பத்திரண்டு, பதினாறு, எட்டு, ஐந்து என்னும் இடங்களில் அங்குலக் கிரமமாகத் தரிப்பது.

நான்கு வருணத்தார்க்கும் உரிய திரிபுண்டர அங்குல அளவு ஸ்ரீ,சிவக்கொழுந்து தேசிகர்கிரியாதீபிகையிற் கூறினராண்டுணர்க.

Koviloor Digital Library

சிரசு முதல் பாதமீருகமுப்பத்திண்ரடு அங்கங்கட்கும் அட்டமூர்த்திகள் எண்மரும், வித்தியேச ரெண்மரும், திக்குப்பாலக ரெண்மரும் பிரீதியடைவார்கள். நெற்றிமுதல் முதுகீறுகப்பதினு றங்கங்கட்கும் அட்டமூர்த்திகளெண்மரும், வித்தியேசரெண்மரும் பிரீதியடைவார்கள்.

சிரசுமுதல் முதுகீறுக எட்டங்கங்கட்கும் பிரமனுஞ், சப்தரிஷிகளும் பிரீதி யடைவார்கள்.

நெற்றிமுதல் உந்தி ஈருன ஐந்தங்கங்கடகும் சதாசிவர், மயேஸ்வரர், உருத்திரர், விண்டு, பிரமன் முதலவரு பிரீதியடைவார்கள்.

ஏனைய புண்டரங்களாவன=ஊர்த்தபுண்டரம், திரிசூலபுண்டரம், கூர்ச்சபுண்டரம் முதலியன. இவை அவைதிகங்களாதலின், சூதசம்மிதை முதலியவற்ருல் விலக்கப்பட்டன.

பத்ம புராணத்தில் தானத்தினுல் என்பயன், விரதத்தாலென்பயன், அத்தியயனத்தாலென்பயன், யாகத்தாலென்பயன், விபூதி தரித்தலால், ஒருவன் சிவகணமாவது நிச்சயம் என்றும், சடையுடையனுயிருந்தாலும், முண்டிதனுயிருந்தாலும், பஸ்மத்தையணிந்த சரீரமுடையவன் சிவசாருபத்தையடைந்து சிவனேடுசந்துஷ்டி யடைகிருனென்றும், அதனுல் விபூதி தரித்தற்கொப்பான புண்ணியமு மில்லை; அதற்கொப்பான தவமுமில்லை என்றும், சடையும், பஸ்மமும் யாருடையனே அவன் எல்லாவருணத்தினுஞ் சிவயோகியாயிருக்கின்ருனென்றுங் கூறப்பட்டது. (எ௱௪)

வேறு.

மொழிந்தருள வதுகேட்டு முன்னிறைஞ்சி முகமலர்வா
ரழுந்துமிடர்க் கடலிடைநின் றடியோமை யெடுத்தருளச்
செழுந்தரளச் சிவிகையின்மேற் றென்னுடுசெய்தவத்தா
லெழுந்தருளப் பேறுடையோமென்பெருே மெனத்தொழுவும்.

(இ-ள்.) மொழிந்தருள அதுகேட்டுமுன் இறைஞ்சிமுகம்மலர்வார்=(இவ்வாறு பிள்ளையார்) அருளிச்செய்ய அதனைக்கேட்டு அவர் திருமுன்வணங்கி முகமலர்ச்சியடையும் அவ்விருவரும்; அழுந்தும் இடர்க்கடலிடைநின்று அடியோமை எடுத்தருள=விழ்ந்தழுந்திய துன்பக்கடலினின்றும் அடியேங்களை யெடுத்தாட்கொண்டருள; செழும்தரளச்சிவிகையின்மேல் தென்னுடுசெய்தவத்தால்=செழுமைபொருந்திய ஒளியையுடைய முத்துச்சிவிகையின்மேல் பாண்டிநாட்டுள்ளார் செய்தவத்தால்; எழுந்தருளப்பேறு உடையோம் என்பெருேம் எனத்தொழுவும்=எழுந்தருளும்படி பெரும் பேற்றையுடைய நாம் (அக்காரணத்தால்) யாதரியபேற்றைப் பெருேமென்று வணங்கவும்—எ-று.

என்பெருேமென்பதனுல் இம்மை, அம்மை, விடென்னும் பயனெல்லாம் அடங்கப்பெறுவோமென்ருர் என்றும். (எ௱௫)

Koviloor Digital Library

வேறு.

ஆவது மழிவதெல்லா மவர்செய லமணராகும்
பாவகாரிகளைநோக்கும் பழுதுட னீங்கவெல்லச்
சேவுயர் கொடியினார்தந் திருவுள்ள மறிவேனென்று
பூவலர் பொழில்சூழ்சண்பைப் புரவலர் போதுகின்றார்.

(இ-ள்.) ஆவதும் அழிவது எல்லாம் அவர்செயல்=(ஒருபொருள் உதித்து)உளதாதலும் அழிவதும் ஆகிய எல்லாம் அச்சிவபெருமான் செயலேயாம் அதனால்; அமணராகும் பாவகாரிகளை நோக்கும் பழுது உடன் நீங்க வெல்ல=சமணராகிய பாவிகளைப்பார்த்து (வாதுசெய்தலாலாகிய) குற்றம் விரைந்து செல்லவும் அவரை வெல்லவும்; சேவுயர் கொடியினார்தம் திரு உள்ளம் அறிவேன் என்று=இடபம் உயர்த்த கொடியையுடைய சுந்தரேசரது திருவுள்ளக்குறிப்பையான் அறிவேனென்று; பூ அலர் பொழில்சூழ் சண்பைப்புரவலர் போதுகின்றார்=பூக்கள் மலர்ந்த சோலைசூழ்ந்த சீகாழித் தலைவராகிய ஆளுடையபிள்ளையார் ஆலயத்திற்கெழுந்தருளுவாராயினார்-எ-று

ஆவதும் அழிவதும் அவர்செயலாதலில், உதித்துளராகிய சமணரழியவும் அவரைநோக்குதலாலாய பாவம் நீங்கவும்- சிவபெருமான் திருவுள்ளம் அறிவேனென்றார் என்றும். (எஙசு)

வையக முய்யவந்த வள்ளலார் மடத்தினின்று
மெய்யணி நீற்றுத்தொண்டர் வெள்ளமுந் தாமும்போந்து
கையிணை தலையின்மீது குவியக்கண் மலர்ச்சிகாட்டச்
செய்யவார் சடையார்மன்னுந் திருவால வாயுட்புக்கார்.

(இ-ள்.) வையகம் உய்யவந்த வள்ளலார் மடத்தில் நின்றும்=உலகினுள்ளார் ஈடேற அவதரித்த ஆளுடையபிள்ளையார் திருமடத்தினின்றும்; மெய்யணி நீற்றுத்தொண்டர் வெள்ளமும் தாமும்போந்து=திருமேனியில் விபூதியையணிந்த அடியார் திருக்கூட்டங்களுந் தாமுமாகச்சென்று; கையிணைதலையின்மீது குவியக் கண்மலர்ச்சிகாட்ட=இரண்டுகைகளுஞ் சிரசின்மேற் குவியத் திருக்கண்கள் (தரிசிக்கும் விருப்பால்) விகசிக்க செய்யவார் சடையார் மன்னும் திருவாலவாயுட்புக்கார்=சிவந்தசடையையுடைய சுந்தரேசரெழுந்தருளியிருக்குந் திருவாலவாயுட் புகுந்தருளினார்—எ-று. (எஙஎ)

நோக்கிட விதியிலாரை நோக்கியான் வாதுசெய்யத்
தீக்கவின் மேனியானே திருவுள மேயென்றெண்ணில்
பாக்கியப் பயனாயுள்ள பாலறா வாயர்மெய்ம்மை
நோக்கிவண் டமிழ்செய்மாலைப் பதிகந்தா னுவலலுற்றார்.

(இ-ள்.) நோக்கிடவிதியிலாரை நோக்கியான் வாதுசெய்ய=(அறநூலின்) பார்க்க விதியில்லாத சமணரைப்பார்த்து நான் வாதுசெய்தற்கு; தீக்கவின் மேனியானே திரு உள்ளமேயென்று=நெருப்புப்போல ஒளிவிடுகின்ற திருமேனியையுடைய பெருமானே திருவுள்ளமாமென்று வினவி; எண்ணில்

Koviloor Digital Library

பாக்கியப்பயனும் உள்ள பாலருவாயர்=அளவில்லாத (நிலவுலகத்தாருக்குச்) செல்வப்பயனுயுள்ள ஆளுடையபிள்ளையார்; மெய்ம்மைநோக்கிவண் தமிழ் செய்மாலைப் பதிகம் தாம் நவலலுற்றார்=(சுந்தரேசரது திருவருளின்) உண்மையைச் சிந்தித்து வளம்பொருந்திய தமிழாலாகிய திருப்பதிகமாலையைப் பாடுவாராயினர்—எ-று.

வேதமார்க்கமல்லாத அவைதிகமார்க்கத்தில் நிற்போனைப்பார்த்தால் அனேககாலம் நரகிற்கிடப்பானென ஸ்மிருதி, புராணங்கள் கூறுதலில், நோக்கிடவிதியிலாரையென்றும், அவரைநோக்கித் தாம் வாதுசெய்தலால் வருங் குற்றம் நீக்குதற்கு நோக்கியான் வாதுசெய்ய எனவுங்கூறினர் என்றும்· அப்புறச் சமயிகளைப்பார்த்தால் சூரியனைத்தரிசித்து புருஷசூக்தம் ஜபிக்க வென, ஸ்மிருதி புராணங்களில் அதற்குத் தீர்வுகூறப்படும். (எ௬அ)

கானிடை யாடுவாரைக் காட்டுமா வுரிமுன்பாடித்
தேனலர் கொன்றையார்தந் திருவுள நோக்கிப்பின்னு
மூனமில் வேதவேள்வி யென்றெடுத் துரையின்மாலை
மானமி லமணர்தம்மை வாதில்வென் றழிக்கப்பாடி.

(இ-ள்.) கானிடையாடுவாரைக்காட்டுமாவுரிமுன்பாடி=மாமயானத்தில் நடிக்கும் சுந்தரேசரை "காட்டு மாவுரி" என்னும் முதலையுடைய திருப்பதிகத்தைத் திருமுன்னே பாடியருளி; தேன் அலர்கொன்றையார் தம்திருவுளம்நோக்கி=தேனோடு மலர்ந்த கொன்றைப்பூமாலையையணிந்த சுந்தரேசரது திருவுளக்குறிப்பையுணர்ந்து; பின்னும் ஊனமில் வேதவேள்வி என்றெடுத்து = பின்பும் குற்றமில்லாத "வேத வேள்வி" என்று முதலெடுத்து; உரையின்மாலை=திருப்பதிகமாலையை; மானம் இல் அமணர்தம்மை வாதில் வென்று அழிக்கப்பாடி=மானமில்லாத சமணர்களை வாதில் வென்றழிக்கவெனப் பாடியருளி—எ-று. (எ௬௯)

ஆலமே யமுதமாக வுண்டுவா னவர்க்களித்துக்
காலனை மார்க்கண்டிக்காக் காய்ந்தனை யடியேற்கின்று
ஞாலநின் புகழேயாக வேண்டுநான் மறைகளேத்துஞ்
சீலமே யாலவாயிற் சிவபெரு மானேயென்றார்.

(இ-ள்.) ஆலமே அமுதமாகவுண்டு வானவர்க்களித்து=ஆலாகலத்தையே திருவமுதாகக்கொண்டு தேவர்களுக்கு அமுதத்தைக்கொடுத்தருளி; காலனைமார்க்கண்டிக்காகக் காய்ந்தனை=யமனை மார்க்கண்டேயர்பொருட்டு உதைத்துக் கோபித்தருளினை; அடியேற்கு இன்று ஞாலம் நின்புகழேயாக வேண்டும்=அடியேனுக்கு இப்பொழுது நிலவுலகம் நின்புகழேயாகப் புறச்சமயம் நீங்கி நிலவுதல்வேண்டும்; நான்மறைகள் ஏத்தும் சீலமே ஆலவாயிற் சிவபெருமானே என்றார்=நான்குவேதங்களுந்துதிக்கும் விசேஷகுணங்

Koviloor Digital Library

கவியுடையவரே ! திருவாலவாயின் கண்ணெழுந்தருளிய சிவபெருமானே ! யென்றுங் கூறியருளினர்.

சார்ந்தாரைக்காத்தல், ஆலத்தையமுதமாகவுண்டு அமரரைக்காத்தமையாலும் மார்க்கண்டிக்காக மறலியையுதைத்ததையாலுமுணர்ந்தேனாதலின், ஈண்டு சார்ந்த அடியேன் பொருட்டு ஞால நின்புகழ்பெறவேண்டும் என்று பிரார்த்தித்தாரென்றாராயிற்று—எ-று.

மிருகண்டுவுடைய புத்திரன் - மார்க்கண்டியென்றும், மார்க்கண்டேயரென்றும் வரும். (௭௬0)

திருவாலவாய் - பண் - கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

காட்டுமாவதுரித்துரிபோர்த்துட
னாட்டமூன்றுடையாயுரைசெய்வனான்
வேட்டுவேள்விசெய்யாவமண்கையரை
யோட்டிவாதுசெயத்திருவுள்ளமே. (௧)

மத்தயானையினீருரிமூடிய
வத்தனேயணியாலவாயாய்பணி
பொய்த்தவன்றவவேடத்தராஞ்சமண்
சித்தரையழிக்கத்திருவுள்ளமே. (௨)

மண்ணகத்திலும்வானிலுமெங்குமாந்
திண்ணகத்திருவாலவாயாயருள்
பெண்ணகத்தெழிற்சாக்கியப்பேயமண்
டெண்ணர்கற்பழிக்கத்திருவுள்ளமே. (௩)

ஓதியோத்தறியாவமணாதரை
வாதில்வென்றழிக்கத்திருவுள்ளமே
யாதியேதிருவாலவாயண்ணலே
நீதியாகநினைந்தருள்செய்திடே. (௪)

வையமார்புகழாயடியார்தொழுஞ்
செய்கையார்திருவாலவாயாய்செப்பாய்
கையிலுண்டுழலுமமண்கையரைப்
பையவாதுசெயத்திருவுள்ளமே. (௫)

நாறுசேர்வயற்றண்டலைமிண்டிய
தேறலார்திருவாலவாயாய்செப்பாய்
வீறிலாத்தவமோட்டமண்வேடரைச்
சீறிவாதுசெயத்திருவுள்ளமே. (௬)

Koviloor Digital Library

பண்டடித்தவத்தார்பயில்வாற்றெழுந்
தொண்டருக்கெளியாய்திருவாலவா
யண்டனேயமண்கையரைவாதினிற்
செண்டடித்துழறத்திருவுள்ளமே. (எ)

அரக்கன்றன்கிரியேற்றவன்றன்முடிச்
செருக்கினைத்தவிர்த்தாய்திருவாலவாய்
பரக்குமாண்புடையாயமண்பாவரைக்
கரக்கவாதுசெயத்திருவுள்ளமே. (அ)

மாலுநான்முகனும்மறியாநெறி
யாலவாயுறையும்மண்ணலேபணி
மேலைவீடுணராவெற்றரையரைச்
சாலவாதுசெயத்திருவுள்ளமே. (கூ)

கழிக்கரைப்படுமீன்கவர்வாரம
ணழிப்பரையழிக்கத்திருவுள்ளமே
தெழிக்கும்பூம்புனல்சூழ்திருவாலவாய்
மழுப்படையுடைமைந்தனேநல்கிடே. (கo)

செந்தெனமுரலுந்திருவாலவாய்
மைந்தனேயென்றுவல்லமணாசறச்
சந்தமார்தமிழ்கேட்டமெய்ஞ்ஞானசம்
பந்தன்சொற்பகரும்பழிநீங்கவே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவாலவாய் - நாலடிமேல்வைப்பு.

திருச்சிற்றம்பலம்.

வேதவேள்வியைநிந்தனைசெய்துழ
லாதமில்லியமணொடுதேரரை
வாதில்வென்றழிக்கத்திருவுள்ளமே
பாதிமாதுடனாயபரமனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
னாலவாயிலுறையுமெம்மாதியே. (க)

வைதிகத்தின்வழியொழுகாதவக்
கைதவமுடைக்காரமண்டேரரை

Koviloor Digital Library

வெய்திவாதுசெயத்திருவுள்ளமே
மைதிகழ்தருமாமணிகண்டனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
னாலவாயிலுறையுமெம்மாதியே. (உ)

மறைவழக்கமிலாதமாபாவிகள்
பறிதலைக்கையர்பாயுடுப்பார்களை
முறிபவாதுசெயத்திருவுள்ளமே
மறியுலாங்கையின்மாமழுவாளனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
னாலவாயிலுறையுமெம்மாதியே. (௩)

அறுத்தவங்கமாறாயினநீர்மையைக்
கறுத்தவாழமண்கையர்கடம்மொடுஞ்
செறுத்துவாதுசெயத்திருவுள்ளமே
முறித்தவாண்மதிக்கண்ணிமுதல்வனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
னாலவாயிலுறையுமெம்மாதியே. (௪)

அந்தணாளர்புரியுமருமறை
சிந்தைசெய்யாவருகர்திறங்களைச்
சிந்தவாதுசெபத்திருவுள்ளமே
வெந்தநீறதணியும்விகிர்தனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
னாலவாயிலுறையுமெம்மாதியே. (௫)

வேட்டுவேள்விசெயும்பொருளைவிளி
மூட்டுச்சிந்தைமுருட்டமண்குண்டரை
யோட்டிவாதுசெயத்திருவுள்ளமே
காட்டிலானையுரித்தவெங்கள்வனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
னாலவாயிலுறையுமெம்மாதியே. (௬)

அழலதோம்புமருமறையோர்திறம்
விழலதென்னுமருகர்திறத்திறங்
கழலவாதுசெயத்திருவுள்ளமே
தழலிலங்குதிருவுருச்சைவனே

Koviloor Digital Library

ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
னாலவாயிலுறையுமெம்மாதியே. (எ)

நீற்றுமேனியராயினர்மேலுற்ற
காற்றுக்கொள்ளவுநில்லாவமணரைத்
தேற்றிவாதுசெயத்திருவுள்ளமே
யாற்றவாளரக்கர்க்குமருளினாய்
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
னாலவாயிலுறையுமெம்மாதியே. (அ)

நீலமேனியமணர்திறத்துநின்
சீலம்வாதுசெயத்திருவுள்ளமே
மாலுநான்முகனுங்காண்பரியதோர்
கோலமேனியதாகியகுன்றமே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
னாலவாயிலுறையுமெம்மாதியே, (கூ)

அன்றுமுப்புராஞ்செற்றவழகநின்
றுன்றுபொற்கழல்பேணவருகணாத்
தென்றவாதுசெயத்திருவுள்ளமே
கன்றுசாக்கியர்காணாத்தலைவனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
னாலவாயிலுறையுமெம்மாதியே. (க0)

கூடலாலவாய்க்கோனைவிடைகொண்டு
வாடன்மேனியமணரைவாட்டிட
மாடக்காழிச்சம்பந்தன்மதித்தவிப்
பாடல்வல்லவர்பாக்கியவாளரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

நாதர்தம் மருண்முன்பெற்று நாடிய மகிழ்ச்சி பொங்கப்
போதுவார் பணிந்துபோற்றி விடைகொண்டு புனிதநீற்றின்
மேதகு கோலத்தோடும் விருப்புறு தொண்டர்சூழ
மூதெயிற் கவாடநீடு முதற்றிரு வாயில்சார்ந்தார்.

(இ-ள்.) நாதர்தம் அருள்முன்பெற்று நாடிய மகிழ்ச்சிபொங்க= சுந்தரேசரது திருவருளை முன்னேபெற்று அத்திருவருளை நாடுதலாலாய இன்பம் மேற்கொள்ள; போதுவார்பணிந்துபோற்றி விடைகொண்டு=புறம்

Koviloor Digital Library

பணைத்தருளும் பிள்ளையார் வணங்கித் துதித்து விடைபெற்றுக்கொண்டு; புனித நீற்றின்மேதகுகோலத்தோடும் விருப்புறுதொண்டர்சூழ = பரிசுத்த மாகிய திருநீற்றின் மேன்மை மிக்க திருக்கோலத்தோடு விருப்புமிக்கு அடியார்கள்சூழ; மூதெயில் கவாடம் நீடுமுதல் திருவாயில் சார்ந்தார்=பழைய மதிலின் புறம்பு கதவோடுகூடிய முதற்றிருவாயிலையடைந்தருளினார்—எ-று.

அம்மலர்க் குழலினார்க்கு மமைச்சர்க்கு மருளவேண்டிச்
செம்மணிப் பலகைமுத்தின் சிவிகைமேற் கொண்டபோதில்
எம்மருங் கிளிலுந்தொண்ட ரெடுத்தவார்ப் பெல்லையின்றி
மும்மைநீ டுலகமெல்லா முழுதுட னிறைந்ததன்றே.

(இ-ள்.) அம்மலர்க்குழலினார்க்கும் அமைச்சர்க்கும் அருளவேண்டி = அழகிய பூக்களைமுடித்த கேசத்தையுடைய மங்கையர்க்கரசியாருக்கும் குலச்சிறைநாயனாருக்கும் அருள்செய்யக்கருதி; செம்மணிப்பலகை முத்தின் சிவிகைமேல் கொண்டபோதில்=சிவந்தமாணிக்கங்களழுத்திய பலகையோடு கூடிய திருமுத்தின் சிவிகையின்மீது எழுந்தருளியகாலத்தில்; எம்மருங்கிளிலும் தொண்டர் எடுத்த ஆர்ப்பு=எவ்விடத்தும் அடியார்கள் அரகரவென்றெடுத்த ஓசையானது; எல்லையின்றி மும்மை நீடு உலகமெல்லாம் முழுதுடன் நிறைந்தது = அளவுபடாமல் மூன்று பகுப்பான பெரிய உலகங்களெல்லாவற்றிலும் ஒருங்கு உடனே சென்றுபரந்தது—எ-று. (எசஉ)

பல்லிய நாதம்பொங்கப் படர்திரு நீற்றின்சோதி
நல்லொளி வட்டமாகி நண்ணிமேல் வருவதென்ன
வில்வளர் தரளக்கோவை வெண்குடை நிழற்றவெவ்வே
றெல்லையின் முத்தின்காளந் தாரைசங் கெங்குமொத்த.

(இ-ள்.) பல்லியநாதம்பொங்க=பலவாத்தியங்களின் ஓசைகள் பக்கங்களில் ஒலிக்கவும்; படர்திருநீற்றின்சோதி நல்லொளிவட்டமாகி நண்ணிமேல்வருவதென்ன=பரம்பிய விபூதியினொளியானது நல்ல ஒளிவட்டமாய் மேலேவந்தவந்நாற்போல; வில்வளர் தரளக்கோவை வெண்குடை நிழற்ற=ஒளிவிசுகின்ற முத்தக்கோவைகளாலாய வெள்ளியகுடையானது மேலே நிழலைச்செய்ய; வெவ்வேறு எல்லையில் முத்தின்காளம் தாரை சங்கு எங்கும் ஒத்த—தனித்தனியளவில்லாத திருமுத்தின் காளம் தாரையும்சங்கமும் எவ்விடத்தும் ஊதவும்—எ-று. (எசஈ)

கன்னிநாட் கணியாயுள்ளா ரெழுச்சியிற் காட்சிபெற்றார்
தன்னிய சமயம்வேறு நம்பின ரெனினுமுன்பு
பன்னிய தவங்களென்கொல் பஞ்சவன் றஞ்சமேவிப்
புண்ணிய மூர்த்திவந்து மதுரையிற் புகுந்தவென்றார்.

Koviloor Digital Library

(இ-ள்.) கண்ணிறுக்கு அணியாயுள்ளார் எழுச்சியில் காட்சிபெற்ருர் = கட்புலனுக்குப் பேரழகினராய் விளங்கும் ஆளுடைய பிள்ளையாரது (சமணரைவெல்லக் கருதியெழும்) திருவெழுச்சியினது திருக்காட்சியைப் பெற்ற அந்நகரிலுள்ளார்; நண்ணிய சமயம்வேறு நம்பினரொளினும்=தாம் அடைதற்கு வேற்றுச்சமயமான சமணநன்னெறி யென்று நம்பினவராயினும்; பஞ்சவன் பண்ணிய தவங்களென்கொல் = பாண்டியன் முற்பிறப்பிற் செய்ததவங்கள் எவையோ; தஞ்சம் மேவிப்புண்ணிய மூர்த்திவந்து மதுரையில் புகுதவென்ருர் = அவன் உயிர்க்கோர் பற்றுக்கோடாகிபுண்ணியவடிவராகிய ஆளுடைய பிள்ளையார் எழுந்தருளி வந்து மதுரையிற் பிரவேசிக்க வென்று சொன்னார்கள்.—(எ-று.) (௭௪௪)

தென்னவன் றேவியாருந் திருமணிச் சிவிகைமீது
பின்வர வமைச்சர்முன்பு பெருந்தொண்டர் குழாத்துச்செல்லப்
பொன்னணி மாடவீதி யூடெழுந் தருளிப்புக்கார்
கன்னிநா டுடையான்கோயில் காழிநா டுடையபிள்ளை.

(இ-ள்.) தென்னவன் தேவியாரும் திருமணிச்சிவிகைமீதுபின்வர= பாண்டிமாதேவியாரும் அழகிய இரத்தினச்சிவிகையின்மேல் (பிள்ளையார்) பின்வர; அமைச்சர்முன்புபெரும் தொண்டர் குழாத்துச்செல்ல=குலச்சிறைநாயனர் பிள்ளையார் திருமுன்பு அடியார் திருக்கூட்டத்திடையே செல்லவும்; பொன் அணிமாட விதியூடு எழுந்தருளி=பொன்னாற்செய்த மாடவீதியினிடையே சென்றருளி; காழிநாடு உடையபிள்ளை கன்னிநாடு உடையான் கோயில் புக்கார்=சீகாழியென்னுந் திருநாட்டையுடைய ஆளுடைய பிள்ளையார் கன்னிநாட்டுக்கரசனாகிய பாண்டியன் கோயிலுட்சென்றருளினார்—எ-று. (௭௪௫)

கொற்றவன் றன்பான்முன்பு குலச்சிறை யார்வந்தெய்திப்
பொற்றட மதில்சூழ்சண்பைப் புரவலர் வரவுகூற
முற்றுயர் சிறிதுநீங்கி முழுமணி யணிப்பொற்பீட
மற்றவன் முடியின்பக்கத் திடுகென வல்லனானான்.

(இ-ள்.) கொற்றவன் தன்பால் முன்பு குலச்சிறையார்வந்தெய்தி= பாண்டியனிடத்து முன்னே குலச்சிறைநாயனர் வந்தடைந்து; பொன் தடம் மதில்சூழ் சண்பைப் புரவலர் வரவுகூற = பொன்னாலாகிய உயர்ந்த மதில்சூழ்ந்த சீகாழித்தலைவராகிய பிள்ளையாரது வரவையெடுத்துச்சொல்ல; முன்துயர் சிறிது நீங்கி முழுமணி அணிப்பொன்பீடம்=முன்னுள்ள (சுரநோயாலாகிய) துன்பஞ் சிறிது நீங்கி முழுதும் மணிநிறைந்த அழகிய பொன்னாலாய பீடமொன்றை; மற்று அவன்முடியின் பக்கத்து இடுகெனவல்லன் ஆனான்=அப்பாண்டியன் தனது முடியின்பக்கத்தில் இடுகவென்று கூற வல்லவனாயினான்—எ-று.

பிள்ளையார் வரவு உணர்ந்து அவ்வரசன்சிறிது துயர் நீங்கலில், பீட மிக்கெனவல்லைவருகவென்றார். (௭௪௬)

மந்திரி யாரைப்பின்னு மெதிர்செல மன்னனேவச்
சிந்தையுண் மகிழ்ந்துபோந்தார் செயலையான் சமயத்துள்ளோர்
பைந்துண ரலங்கன்மன்னன் பரிசுகண் டிதுவோபண்பா
னந்தனிச் சமயந்தன்னை நாட்டுமா றென்றுபின்னும்.

(இ-ள்.) மந்திரியாரைப்பின்னும் எதிர்செலமன்னன் ஏவ=பின்னும் குலச்சிறைநாயனார் பிள்ளையாரை யெதிர்கொள்ளும்படி அப்பாண்டியராசன் ஏவுதலால்; சிந்தையுள் மகிழ்ந்து போந்தார் செயலை ஆன்சமயத்துள்ளோர்= மனம் மகிழ்கூர்ந்து (குலச்சிறைநாயனார்) சென்றருளினார் அசோகின்கீழ் வாழும் அருகசமயத்திலுள்ள சமணர்கள்; பைந்துணர் அலங்கல் மன்னன் பரிசுகண்டு=பசியவேப்பம் பூங்கொத்தாலாகிய மாலையையணிந்த பாண்டியனது செய்கையையறிந்து; இதுவோபண்பால் நம் தனிச்சமயம் தன்னை நாட்டுமாறு என்று பின்னும்=இவ்வாறோ நமது ஒப்பில்லாத சமயத்தை நாட்டும்வண்ணமென்று கூறிப்பின்னும்—எ-று. (௭௪௭)

நின்னற நெறியைநீயே காத்தருள் செய்தியாகி
லன்னவர் தம்மையிங்கே யழைத்தனை யவரும்யாமு
முன்னுற வொக்கத்தீர்க்க மொழிந்துமற்றவராற்றீர்ந்த
தென்னினு மியாமுந்தீர்த்தோ மாகவு மிசைவாயென்றார்.

(இ-ள்.) நின் அறநெறியை நீயே காத்து அருள்செய்தியாகில்= உனது சமயநெறியை நீயே பாதுகாத்து நிலைபெறச்செய்வாயானால்; அன்னவர்தம்மை இங்கே அழைத்தனை=அம்மறையவர் சிறுவரை இவ்விடத்து வரவழைத்தாய்; அவரும் யாமும் முன்னுற ஒக்கத் தீர்க்கமொழிந்து=அப்பிள்ளையாரும் நாங்களும் நின்முன்னே கூடவே சுரநோயைத் தீர்க்கவெனக்கூறி; மற்று அவரால் தீர்ந்ததென்னினும்=அப்பிள்ளையாரால் இந்நோய் நீங்கியதாயினும்; யாமும் தீர்த்தோம் ஆகவும் இசைவாயென்றார்=நாங்களும் தீர்த்தோமென்று உடன்படுவாயென்று கூறினார்—எ-று.

அவரை, நீ சென்றுவரவழைத்தாய் உன் அறநெறியைக் காப்பையாகில் இருவரையுமொக்கத் தீர்க்கக்கூறி, யவராற்றீர்ந்ததேனும் யாமுந் தீர்த்தோமாக இசைவாயென்றாரென்றும். (௭௪௮)

பொய்தவ மாகக்கொண்ட புன்றலைச் சமணர்கூறச்
செய்தவப் பயன்வந்தெய்துஞ் செவ்விமுன் னுறுதலாலே
யெய்திய தெய்வச்சார்பா லிருதிறத்திருந்திறங்
கைதவம் பேசமாட்டே னென்றுகை தவனுஞ்சொன்னான்.

Koviloor Digital Library

(இ-ள்.) பொய்தவமாகக்கொண்ட புன் தலைச்சமணர்கூற=பொய்ச் செயலைத் தவமாகக்கொண்ட புன்மைபொருந்திய தலையையுடைய சமணர் கள்சொல்ல; செய்தவப்பயன்வந்து எய்தும் செவ்விமுன் உறுதலாலே= முற்பிறப்பிற்செய்த தவப்பயன்வந்து இப்பொழுது பக்குவமாய்வரும் பரி பாககாலம் தம்முன் வருதலால்; எய்திய தெய்வச்சார்பால் இருதிறத்தீரும் தீரும்=நீங்கள் அடைந்த தெய்வத்தின் சார்பினால் இருபக்கத் தீருந் தீருங் கள்; கைதவம்பேசமாட்டேன் என்று கைதவனும் சொன்னான்=நடுவு நிலை மை கோடிவஞ்சகம் பேசமாட்டேனென்று பாண்டியனுங்கூறினான்—எ-று.

என்றவ னுரைப்பக்குண்ட ரெண்ணங்கெட் டிருந்தவெல்லைத்
தென்றமிழ் நாடுசெய்த செய்தவக் கொழுந்து போல்வார்
வன்றனிப் பவனமுன்னர் வாயிலு ளணைந்துமாடு
பொன்றிகழ் தாளப்பத்திச் சிவிகைநின் றிழிந்துபுக்கார்.

(இ-ள்.) என்று அவன் உரைப்பக்குண்டர் எண்ணம் கெட்டு இருந்த எல்லை=இவ்வாறு பாண்டியன் கூறக் கீழ்மக்களாகிய சமணர்கள் தமது மனக்கருத்து சிதைந்த சமயத்தில்; தென்தமிழ்நாடு செய்த செய்தவக்கொ ழுந்து போல்வார்=பாண்டியநாடு செய்த பெரியதவக்கொழுந்துபோன்ற பிள்ளையார்; வன்தனிப்பவனம் முன்னர்வாயிலுள் அணைந்து=வலிய ஒப் பில்லாத கோயில் முன்வாயிலில் அடைந்தருளி; மாடுபொன் திகழ்தாளப் பத்திச் சிவிகை நின்று இழிந்துபுக்கார்=அக்கோயில் மாட்டுப்பொன்னோடு விளங்குகின்ற முத்துப்பந்தியையுடைய திருச்சிவிகையினின்றும் இறங்கி உள்ளேபுகுந்தருளினார்—எ-று. (எ௫௦)

குலச்சிறை யார்முன்பெய்தக் கொற்றவன் றேவியாருந்
தலத்திடை யிழிந்துசென்றார் தண்டமிழ் நாட்டுமன்ன
னிலத்திடை வானினின்று நீளிரு ணீங்கவந்த
கலைச்செழுந் திங்கள் போலுங் கவுணியர் தம்மைக்கண்டான்.

(இ-ள்.) குலச்சிறையார் முன்பு எய்த=குலச்சிறைநாயனாரும் முன் புசெல்ல; கொற்றவன் தேவியாரும் தலத்திடை இழிந்துசென்றார்=பாண் டிமாதேவியாருஞ் சிவிகையினின்றுமிறங்கி நிலத்திற்சென்றருளினார்; தண் தமிழ் நாட்டுமன்னன் வானில் நின்றும் நிலத்திடை நீள் இருள் நீங்கவந்த= குளிர்ந்த தமிழ்நாட்டரசனாகிய பாண்டியன் விண்ணுலகில் நின்றும் நிலவுல கின்கண் மிக்க இருளைநீக்கவந்த; கலைச்செழும் திங்கள்போலும் கவுணியர் தம்மைக்கண்டான் = செழுமைபொருந்திய கலைநிறைந்த சந்திரன்போலும் பிள்ளையாரைப்பார்த்தான்—எ-று. (எ௫௧)

கண்டவப் பொழுதே வேந்தன் கையெடுத் தெய்தநோக்கித்
தண்டுணர் முடியின் பாங்கர்தமனியப்பீடங்காட்ட

Koviloor Digital Library

வண்டமிழ் விரகர்மேவி யதன்மிசை யிருந்தார் மாயை
கொண்டவல் லமணரெல்லாங் குறிப்பினுளச்சங்கொண்டார்.

(இ-ள்.) கண்ட அப்பொழுதே வேந்தன் கையெடுத்து எய்தநோக்கி=பிள்ளையாரைத் தரிசித்த அக்கணமே பாண்டியன் சிரசின்மேற் கைகூப்பியெடுத்துப் பொருந்தப்பார்த்து; தண்தரளர்முடியின் பாங்கர் தமனியப்பீடம்காட்ட=குளிர்ந்தமலர்மாலையையணிந்த முடியினது பக்கத்து (இட்ட) பொற்பீடத்தைச் சுட்டிக்காட்ட; வண்தமிழ் விரகர்மேவி அதன்மிசை இருந்தார்=வளம்பொருந்திய தமிழ்விரகராகிய ஆளுடையபிள்ளையார் அடைந்து அப்பீடத்தின்மேல் எழுந்தருளினர்; மாயைகொண்டவல் அமணர் எல்லாம் குறிப்பினுள் அச்சம் கொண்டார்=மாயாசாலத்தில் வன்மைகொண்ட சமணர்களெல்லாரும் தம்மனக்குறிப்பில் பயமடைந்தார்கள்—எ-று. (௭௫௨)

செழியனும் பிள்ளையார்தந் திருமேனி காணப்பெற்று
விழியுற நோக்கலாலே வெம்மைநோய் சிறிதுநீங்கி
யழியுறு மனமேனேர்நிற்க வந்தணர் வாழ்வை நோக்கிக்
கெழுவுறு பதியாதென்று விருப்புடன் கேட்டபோது.


(இ-ள்.) செழியனும் பிள்ளையார் தம் திருமேனிகாணப்பெற்று=பாண்டியனும் பிள்ளையாரது திருமேனியைத் தரிசிக்கப்பெற்று; விழியுற நோக்கலாலே வெம்மைநோய் சிறிது நீங்கி=கண்களாற் பொருந்தப்பார்த்தலாலே சுரநோய் சிறிது தணிந்து; அழிவுறும் மனம்நேர்நிற்க அந்தணர் வாழ்வை நோக்கி=நோயால்வருந்திய தனது மனஞ்சிறிது வாட்டம் நீங்குதலால் நிலைபெற மறையவர் பெருவாழ்வாகிய பிள்ளையாரைப்பார்த்து; கெழுவுறு பதியாதென்று விருப்புடன் கேட்டபோது=பொருந்திய திருப்பதியாதென்று விருப்பத்துடன் கேட்டகாலையில்—எ-று. (௭௫௩)

வேறு.

பொன்னிவளந் தருநாட்டுப் புனற்பழனப் புறம்பணைசூழ்
கன்னிமதிற் கழுமலநாங் கருதுமூ ரெனச்சிறந்த
பன்னிரண்டு பெயர்பற்றும் பரவியசொற் றிருப்பதிகந்
தென்னவன்முன் பருள்செய்தார் திருஞானசம்பந்தர்.

(இ-ள்.) பொன்னிவளம் தருநாட்டுப்புனற்பழனப்புறம்பணைசூழும்=(பலவளங்களைத்தரும்) காவிரி நீர்வளம் பொருந்திய வயலையுடைய மருதநிலஞ்சூழ்ந்த; கன்னிமதிற் கழுமலம் நாம் கருதும் ஊரென=அழியாத மதில் சூழ்ந்த திருக்கழுமலம் நாம் விரும்பிய ஊரென்று; சிறந்த பன்னிரண்டுபெயர் பற்றும் பரவிய சொற்றிருப்பதிகம்=பிரமபுரம் முதல் கொச்சைவயமீறகப் பன்னிரண்டுபெயர் பொருந்தும்படித் துதித்த "பிரமனூர் வேணுபுரம்" என்னும் திருப்பதிகத்தை; தென்னவன்முன்பு அருள்செய்தார் திரு

Koviloor Digital Library



ஆளுடையபிள்ளையார்பாண்டியனரண்மனைக்கெழுந்தருளியபோது அரசன் ஆசனமளித்து
ஸவாமிகளது ஜனனபூமியை வினவியது. —

Koviloor Digital Library

ஞானசம்பந்தர்=பாண்டியன்முன்பு ஆளுடையபிள்ளையார் உத்தரம் அருளிச் செய்தார்—எ-று. (எருச)

திருப்பிரமபுரம்-திருச்சக்கரமாற்று-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பிரமனூர்வேணுபுரம்புகலிவெங்குருப்பெருநீர்த்தோணி
புரமன்னுபூந்தராய்பொன்னஞ்சிரபுரம்புறவம்வண்சண்பை
யரன்மன்னுதண்காழிகொச்சைவயமுள்ளிட்டங்காதியா ய
பரமனூர்பன்னிரண்டாய்நின்றதிருக்கழுமலநாம்பரவுமூரே. (க)

வேணுபுரம்பிரமனூர்புகலிபெருவெங்குருவெள்ளத்தோங்குந்
தோணிபுரம்பூந்தராய்தூநீர்ச்சிரபுரம்புறவங்காழி
கோணியகோட்டாற்றுக்கொச்சைவயஞ்சண்பைகூறுஞ்செல்வங்
காணியவையகத்தோரேத்துங்கழுமலநாங்கருதுமூரே. (உ)

புகலிசிரபுரம்வேணுபுரஞ்சண்பைபுறவங்காழி
நிகரில்பிரமபுரங்கொச்சைவயநீர்மேனின்றமூதூ
ரகலியவெங்குருவோடந்தண்டராயமரர்பெருமாற்கின்பம்
பகருநகர்நல்லகழுமலநாங்கைதொழுதுபாடுமூரே. (ங)

வெங்குருத்தண்புகலிவேணுபுரஞ்சண்பைவெள்ளங்கொள்ளத்
தொங்கியதோணிபுரம்பூந்தராய்தொகுபிரமபுரந்தொல்காழி
தங்குபொழிற்புறவங்கொச்சைவயந்தலைபண்டாண்டமூதூர்
கங்கைசடைமுடிமேலேற்றான்கழுமலநாங்கருதுமூரே. (ச)

தொன்னீரிற்றோணிபுரம்புகலிவெங்குருத்துயர்தீர்காழி
யின்னீரவேணுபுரந்தராய்பிரமனூரெழிலார்சண்பை
நன்னீர்ப்பூம்புறவங்கொச்சைவயஞ்சிலம்பனகராநல்ல
பொன்னீரபுன்சடையான்பூந்தண்கழுமலநாம்புகழுமூரே. (ரு)

தண்ணந்தராய்புகலிதாமரையானூர்சண்பைதலைமுனண்ட
வண்ணனகர்கொச்சைவயந்தண்புறவஞ்சீரணியார்காழி
விண்ணியல்சீர்வெங்குருநல்வேணுபுரந்தோணிபுரமேலாலேந்து
கண்ணுதலோன்மேவியநற்கழுமலநாங்கைதொழுதுகருதுமூரே. (சு)

சீரார்சிரபுரமுங்கொச்சைவயஞ்சண்பையொடுபுறவநல்ல
வாராத்தராய்பிரமனூர்புகலிவெங்குருவோடந்தண்காழி

Koviloor Digital Library

யோர்கழுமலமும்வேணுபுரந்தோணிபுரமென்றென்றுள்கிப்
பேராநெடியனுநான்முகனுங்காண்பரியபெருமானூரே. (௭)

புறவஞ்சிரபுரமுந்தோணிபுரஞ்சண்பைமிகுபுகலிகாழி
நறவமிகுசோலைக்கொச்சைவயந்தராய்நான்முகன்றனூர்
விறலாயவெங்குருவும்வேணுபுரம்விசயன்மேலம்பெய்து
திறலாலரக்கனைச்செற்றான்றன்கழுமலநாஞ்சேருமூரே. (௮)

சண்பைபிரமபுரந்தண்புகலிவெங்குருநற்காழிசாயாப்
பண்பார்சிரபுரமுங்கொச்சைவயந்தராய்புறவம்பார்மே
லெண்பார்கழுமலஞ்சீர்வேணுபுரந்தோணிபுரநாணிலாத
வெண்பற்சமணரொடுசாக்கியரைவியப்பழித்தவிமலனூரே. (௯)

செழுமணியழுங்காழிபுறவஞ்சிரபுரஞ்சீர்ப்புகலிசெய்ய
கொழுமலரானன்னகரந்தோணிபுரங்கொச்சைவயஞ்சண்பையாய
விழுமியசீர்வெங்குருவோடோங்குதராய்வேணுபுரமிகுநன்மாடக்
கழுமலமென்றின்னபெயர்பன்னிரண்டுங்கண்ணுதலான்கருதுமூரே.

கொச்சைவயம்பிரமனூர்புகலிவெங்குருப்புறவங்காழி
நிச்சல்விழவோவாதசிரபுரநீள்சண்பையெழுதூர்
நச்சினியபூந்தராய்வேணுபுரந்தோணிபுரமாகிநம்மே
லச்சங்கடிந்தருளுமம்மான்கழுமலநாமமருமூரே. (௧௧)

காவிமலர்புரைபுங்கண்ணார்கழுமலத்தின்பெயரைநாளும்
பாவியசீர்ப்பன்னிரண்டுநன்னூலாப்பத்திமையாற்பனுவன்மாலை
நாவினலம்புகழ்சீர்நான்மறையான்ஞானசம்பந்தன்சொன்ன
மேவியிசைமொழிவார்விண்ணவரிலெண்ணுதலைவிருப்புளாரே. (௧௨)

திருச்சிற்றம்பலம்.

பிள்ளையார் செம்பொன்மணிப் பீடத்தி லிருந்தபொழு
துள்ளநிறை பொறுமையினு லுழையிருந்த காரமணர்
கொள்ளுமனத் திடையச்ச மறைத்துமுசங் கோபத்தித்
துள்ளியெழு மெனக்கண்கள் சிவந்துபல சொல்லுவார்.

(இ-ள்.) பிள்ளையார் செம்பொன்மணிப்பீடத்தில் இருந்தபொழுது= திருவுடையபிள்ளையார் சிவந்தபொன்னுலாகிய இரத்தினமழுத்திய பீடத்தின் கண் எழுந்தருளியிருந்தகாலத்தில் ; உள்ளம் நிறைபொறுமையினால் உழையி

Koviloor Digital Library

ருந்தகார் அமணர்=தம்மனதிலே நிறைந்த பொறாமைகாரணமாக அருகிலிருந்த கரியசமணர்கள்; கொள்ளும் மனத்திடை அச்சம்மறைத்து=தம்மனத்திலிடத்துக்கொண்ட (அச்சத்தைப்) பிறரறியாவகைமறைத்து; முகம் கோபத்தீத்துள்ளி எழுமெனக்கண்கள் சிவந்து பலசொல்லுவார் = தம்முகத்தில் கோபாக்கினியானது ஜொலித்து எழுந்தாற்போலக் கண்சிவந்து பலபிதற்றுவாராயினர்—எ-று. (எஎரு)

காலையெழுங் கதிரவனைப் புடைசூழுங் கருமுகில்போற்
பீலியொடு சமண்கையர் பிள்ளையார் தமைச்சூழ்வா
ரேலவே வாதினால் வெல்வதனுக் கெண்ணித்தாங்
கோலுநா லெடுத்தோதித் தலைதிமிர்ப்பக் குரைத்தார்கள்.

(இ-ள்.) காலை எழும் கதிரவனைப் புடைசூழும் கருமுகில்போல்=உதையகாலத்திலெழுந்த இளஞ்சூரியனை யருகிற் சூழ்ந்த கரியமேகக்கூட்டம்போல்; பீலியொடு சமண்கையர் பிள்ளையார் தமைச்சூழ்வார்=மயிற்பீலியோடு சமணராகிய கீழ்மக்கள் பிள்ளையாரைச் சூழ்வாராய்; ஏலவே வாதினால் வெல்வதனுக்கு எண்ணி=பொருந்தும்வகையால் அவரை வாதினால் தாம் வெல்லும்படிக் கருதி; தாம்கோலு நூல் எடுத்து ஓதித் தலைதிமிர்ப்பக் குரைத்தார்கள்=தம்மாற்பேணும் ஆருகத நூலையெடுத்துக் கூறித் தலைகள் திமிர்க்கும்படிக் குரைத்தார்கள்—எ-று.

திமிர்த்தல்=சொல்லின் வேகத்தால் நடுக்குற்றுவருந்துதல். குரைத்தார்களென்றது அவரது சொல்லிழிவுதோன்றக் கூறியது. (எஎசு)

பிள்ளையா ரதுகேளாப் பேசுதிர்நும் பொருளெல்லை
யுள்ளவா றென்றருள வூத்தைவாய்ப் பறிதலையர்
துள்ளியெழுந் தனேகராய்ச் சூழ்ந்துபத றிக்கதற
வொள்ளிழை யாரதுகண்டு பொறாராகி யுண்ணடுங்கி.

(இ-ள்.) பிள்ளையார் அது கேளாப்பேசுதிர் நும்பொருள் எல்லையுள்ளவாறு என்றருள=ஆளுடைய பிள்ளையாரதனைக்கேட்டு உமது (ஆருகதநூலுட்கூறும்) பொருளின் முடிவையந்நூல் கூறியவாறே யெடுத்துச்சொல்லுங்களென்று அருளிச்செய்ய; ஊத்தைவாய்ப்பறிதலையர் = அழுக்கடைந்த வாயையும் மயிர்பறித்த தலையையுமுடைய அச்சமணர்கள்; துள்ளியெழுந்து அனேகராய்ச்சூழ்ந்துபதறிக்கதற=(கேட்டவுடன்) குதித்தெழுந்து அனேகராய்ப் பிள்ளையாரைச் சூழ்ந்து (சொன்னிலை) பதறும்படித் தடுமாறிக் கதற; ஒள் இழையார் அதுகண்டுபொறாராகி உள்நடுங்கி=பாண்டிமாதேவியார் அதனைக்கண்டு மனம் பொறாமல் நடுக்குற்று—எ-று.

Koviloor Digital Library

தம்பொருளெல்லே கூறுகின்று பிள்ளையார் விளுவிக்கு, பதினெண் குற்றங்கள் நீங்கி எண்குணமுடையனுய் உலகமுடியில் விளங்கும் பொன்னெயில் வட்டத்திலிருந்த அருகபரமேட்டி, முரசதிர்ந்த சத்தம்போல உலகத்தில் இகல் ஆப்தர்கள் கேட்கும் படிகாலமும், சீவனும், தன்மாத்திகாயமும், அதன்மாத்திகாயமும், புண்ணியமும், பாவமும், ஆகாயமும், புட்கலமும், பந்தமும், மோக்ஷமும், என்று வழங்கும் பத்தும் ஒருவராற்படைக்கப்பட்டதல்ல; அநாதியென்று கூறும் அவர் மதப்பொருளை இது இத்தன்மைத்து எனக்குழ்ந்துபகுதி யுத்தரக்கூறினுரென்றும்.

பதினெண்குற்றங்களாவன=பசி, தாகம், பயம், கோபம், வெறுப்பு, பிரியம், மோகம், வெகுசிந்தனை, நரை, நோய், அழிவு, வேர்வு, இளைப்பு, மதம், இறந்துகொள்கை, அதிசயம், பிறப்பு, உறக்கம், ஆகிய இவை.

எண்குணங்களாவன - கடையிலாஞானம், கடையிலாக்காட்சி, கடையிலாவீரியம், எண்ணிறந்தசுகம், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுளின்மை, சகலசம்பிபத்பாவம்.

இவை மேற்கூறிய பத்தப்பொருள்களும் உள்ளதென்றும் இல்லதென்றும் விவகரிக்கப்படும். அஸ்தி, நாஸ்தி என்று எழுதிவிட்ட ஏடென்னுஞ் செய்யுளிற்கூறுதும். (எடுஎ)

வேறு.

தென்னவன் றன்னைநோக்கித் திருமேனி யெளியர்போலு
மின்னருட் பிள்ளைபார்மற் றிவருவ ரெண்ணிலார்கண்
மன்னநின் மயக்க மெங்கள் வள்ளலார் தீரநல்கும்
பின்னையிவ் வமணர் முன்வார் வல்லரேற் பேசவென்றுர்.

(இ-ள்.) தென்னவன் தன்னைநோக்கி இன்னருட்பிள்ளையார் மற்று இவர் திருமேனி எளியர்போலும்=(பாண்டிமாதேவியார்) பாண்டியனைப்பார்த்த இனிய அருளையுடைய பிள்ளையார் இவர் சிறுவர்; உவர் எண்ணிலார்கள்=இவ்வமணர்கள் அளவில்லாதவர்கள்; மன்னநின் மயக்கம் எங்கள் வள்ளலார் தீரநல்கும் = அரசனே! உனது சுரநோயின் மயக்கம் ஆளுடையபிள்ளையார் நீக்கும்வண்ணம் அருள்செய்வார்; பின்னை இவ்வமணர் முன்வார் வல்லரேற்பேச என்றுர்=பின்பு இவ்வமணர்கள் வாதுசெய்ய வல்லராகில் பேசுகவென்றருளிச்செய்தார்—எ-று. (எடுஅ)

மாறனு மவரைநோக்கி வருந்தலீ யென்றுமற்று
வேறுவா தென்கொலென்மேல் வெப்பொழித் தருகர்நிரு
மாறணி சடையினுருக் கன்பரா மிவருநீங்க
டேறிய தெய்வத் தன்மை யென்னிடைத் தெரிப்பீ ரென்றுன்.

Koviloor Digital Library

(இ-ள்.) மாறனும் அவரைநோக்கி வருந்தல் நீயென்று=பாண்டியனும் மங்கையர்க்கரசியாரைப்பார்த்து நீவருந்துதல் ஒழியென்று கூறி; மற்று வேறுவாது என்கொல்=பிறவேறுவாதம் யாதிருக்கின்றது; அருகர் நீரும் ஆறு அணிசடையினருக்கு அன்பராம் இவரும் என்மேல் வெப்பு ஒழித்து=சமணராகிய நீவிரும் கங்கையணிந்த சடையையுடைய பரமசிவனுக்கு அன்பராகிய இவரும் என்னிடத்துத் தோன்றிய இச்சுரநோயை நீக்கி; நீங்கள் தேறிய தெய்வத்தன்மை என்னிடைத்தெரிப்பீரென்றான்=நீங்கள் நிச்சயித்த தெய்வத்தினது உண்மைத்தன்மையை என்னிடத்தில் விளக்குவீரென்று கூறினான்—எ-று. (எ௰௯)

ஞானவா ரமுதமுண்டார் நற்றவத் திருவை யொத்த
மானினேர் விழியினாய்கேண் மற்றெனைப்பாலனென்று
நீநனி யஞ்சவேண்டா நிலையிலா வமணர்க்கென்றும்
யானெளி யேனலேனென் றெழுந்திருப் பதிகம்பாடி.

(இ-ள்.) ஞான ஆரமுதம் உண்டார் நற்றவத்திருவை ஒத்த=மெய்ஞ்ஞானமாகிய நிறைந்த அமுதத்தையுண்ட ஆளுடையபிள்ளையார் நல்லதவத்தையுடைய இலக்குமிதேவியையொத்த; மானின் நேர்விழியினாய்கேள்=மானினது நோக்கம்போலும் அழகிய கண்ணையுடையவளே! கேட்பாயாக; மற்று எனைப்பாலனென்று நீ நனி அஞ்சவேண்டாம்= என்னைச் சிறுவனென்று நீமிகவும் பயப்படவேண்டாம்; நிலை இலா அமணர்க்கு=வைதிகமார்க்கமில்லாத இழிந்த சமணர்களுக்கு; என்றும் யான் எளியேன் அலேன் என்று எழும் திருப்பதிகம்பாடி=எந்நாளும் யான் எளியனல்லேன் என்னும் பொருளுள்ளிட்ட "மானினேர்விழி" என்னும் முதலையுடைய திருப்பதிகத்தைப்பாடியருளினார்—எ-று. (எ௮௦)

திருவாலவாய் - பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

மானினேர்விழிமாதராய்வழுதிக்குமாபெருந்தேவிகேள்
பானல்வாயொருபாலனீங்கிவனென்றுநீபரிவெய்திடே
லானைமாமலையாதியாயவிடங்களிற்பலவல்லல்சே
ரீனர்கட்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (௧)

ஆகமத்தொடுமந்திரங்களமைந்தசங்கதபங்கமாப்
பாகதத்தொடிரைத்துரைத்தசனங்கள்வெட்குறுபக்கமா
மாகதக்கரிபோற்றிரிந்துபுரிந்துநின்றுணுமாசுசே
ராகதர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (௨)

Koviloor Digital Library

அந்தகுபொருளுண்டுமில்லையுமென்றுநின்றவர்க்கச்சமா
வொத்தொவ்வாமைமொழிந்துவாதிலழிந்தெழுந்தகலிப்பெயர்ச்
சத்திரத்தின்மடிந்தொடிந்துசலங்கள்வெட்குறநக்கமே
சித்திரர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (௩)

சந்துசேனனுமிந்துசேனனுந்தருமசேனனுங்கருமைசேர்
கந்துசேனனுங்கனகசேனனுமுதலதாகியபெயர்கொளா
மந்திபோற்றிரிந்தாரியத்தொடுசெந்தமிழ்ப்பயனறிகிலா
வந்தகர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (௪)

கூட்டினார்கிளியின்விருத்தமுரைத்ததோரொலியின்றொழிற்
பாட்டுமெய்சொலிப்பக்கமேசெலுமெக்கர்தங்களைப்பல்லறங்
காட்டியேவருமாடலாங்கவர்கையரைக்கசிவொன்றிலாச்
சேட்டைகட்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (௫)

கனகநந்தியும்புட்பநந்தியும்பவணநந்தியுங்குமணமா
சுனகநந்தியுங்குனகநந்தியுந்திவணநந்தியுமொழிகொளா
வனகநந்தியர்மதுமொழிந்தவமேதவம்புரிவோமெனுஞ்
சினகருக்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (௬)

பந்தணம்மவையென்றிலம்பரிவொன்றிலம்மெனவாசக
மந்தணம்பலபேசிமாசறுசீர்மையின்றியநாயமே
யந்தணம்மருகந்தணம்மதுபுத்தணம்மதுசித்தணச்
சிந்தணர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (௭)

மேலெனக்கெதிரில்லையென்றவரக்கனார்மிகைசெற்றதிப்
போலியைப்பணியக்கிலாதொருபொய்த்தவங்கொடுகுண்டிகை
பீலிகைக்கொடுபாயிடுக்கிநடுக்கியேபிறர்பின்செலுஞ்
சீலிகட்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (௮)

பூமகற்குமரிக்குமோர்வருபுண்ணியனடிபோற்றிலார்
சாமவந்தையினார்கள்போறலையைப்பறித்தொருபொய்த்தவம்
வேமவத்தைசெலுத்திமெய்ப்பொடியட்டிவாபசகதிக்குநே
ராமவர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (௯)

தக்கனுக்குமச்சாக்கியர்க்குந்தரிப்பொணாநற்சேவடி
வெக்கணுபகளைத்தொழிந்திடுக்கேமடுத்தொருபொய்த்தவம்

Koviloor Digital Library

பொங்குநூல்வழியன்றியேபுலவோர்களைப்பழிக்கும்போலா
வங்கதர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (க0)

எக்கராமமண்கையருக்கெளியேனலேன்றிருவாலவாய்ச்
சொக்கனென்னுளிருக்கவேதுளங்கும்முடித்தென்னன்முன்னிவை
தக்கசீர்ப்புகலிக்குமன்றமிழ்நாதன்ஞானசம்பந்தன்வா
யொக்கவேயுரைசெய்தபத்துமுரைப்பவர்க்கிடரில்லையே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பெற்றியா லருளிச்செய்த பிள்ளையார் தமக்குமுன்னஞ்
சுற்றுநின் றழைத்தலோவா வருகர்க்குந் தென்னர்கோமா
னிற்றைநா ளென்னையுற்ற பிணியையநீ ரிகலித்திருந்
தெற்றெனத் தீர்த்தார்வாதில் வென்றவ ரென்றுசெப்ப.

(இ-ள்.) பெற்றியால் அருளிச்செய்த பிள்ளையார் தமக்கும் = திருவருட்டன்மையால் இவ்வாறு அருளிச்செய்த ஆளுடையபிள்ளையாருக்கும்; முன்னம் சுற்றும் நின்று அழைத்தல் ஓவா அருகர்க்கும்=தம்முன்பு சூழ்ந்து நின்று குரைத்தலில் நின்றும் நீங்காத சமணர்களுக்கும்; தென்னர்கோமான்= பாண்டியன் (கூறுவான்) ; இற்றை நாள் என்னையுற்றபிணியை நீர் இகலித் திரும்=இந்நாளில் என்னையடைந்த சுரநோயை நீவிர் நாம்முன் வேறுபட்டுத் தீருங்கள் ; தெற்றெனத் தீர்த்தார் வாதில் வென்றவரென்று செப்ப=விரைவாய் முன் தீர்த்தவர்கள் யாரோ அவரே வாதில்வென்றவரென்றுசொல்ல—எ-று. (எசுக)

மன்னவன் மாற்றங்கேட்டு வடிவுபோன் மனத்துமாசு
துன்னிய வமணர்தென்னர் தோன்றலை நோக்கிநாங்க
ளுன்னுடம் பதனில்வெப்பை யொருபுடை வாமபாக
முன்னமந் திரித்துத்தெய்வ முயற்சியாற் றீர்த்துமென்றார்.

(இ-ள்.) மன்னவன்மாற்றம் கேட்டு=அரசன் சொல்லியவார்த்தையைக்கேட்டு; வடிவுபோல் மனத்து மாசுதுன்னிய அமணர்=தம் உடம்புபோல் மனத்தின்கண்ணும் அழுக்கு நிறைந்த அமணர்கள் ; தென்னர்தோன்றலை நோக்கி=பாண்டியராசனைப்பார்த்து ; நாங்கள் உன்னுடம் பதனில் வெப்பை=நாங்கள் உன்சரீரத்திற்பொருந்திய சுரநோயை ; ஒருபுடைவாமபாகம் முன்னம் மந்திரித்துத் தெய்வமுயற்சியால் தீர்த்தும் என்றார்=ஒரு பாகமாகிய இடப்பாகத்தை முற்பட்டு மந்திரித்துத் தெய்வமுயற்சியினால் தீர்ப்போமென்று கூறினார்—எ-று. (எசுஉ)

Koviloor Digital Library

யாதுமொன் றறிவிலாதா ரிருளென வணையச்சென்று
வாதினின் மன்னவன்றன் வாமபா கத்தைத்தீர்ப்பார்
மீறுதம் பீலிகொண்டு தடவிட மேன்மேல் வெப்புத்
தீதுறப் பொருதுதென்னன் சிரபுரத் தவரைப்பார்த்தான்.

(இ-ள்.) யாதும் ஒன்று அறிவிலாதார் இருளென அணையச்சென்று=யாதானும் ஓர் உணர்வு சிறிதும் இல்லாத சமணர்கள் இருள்போலப் (பாண்டியன் சமீபத்தைப்) பொருந்தக்கிட்டி; வாதினில் மன்னவன் தன் வாமபாகத்தைத் தீர்ப்பார் = வாதா காரணமாய்ப் பாண்டியனது இடப் பாகத்துள்ள நோயை நீக்கமுயல்வாராய்; மீது தம்பீலிகொண்டு தடவிட= (அவ்வரசன்) மீது தம்கையிற்பிடித்த மயிற்பீலிக்கற்றை கொண்டுதடவ; மேல் மேல் வெப்புத்தீதுறப்பொருது தென்னன் சிரபுரத்தவரைப்பார்த்தான்=மேலும் மேலும் அச்சுரநோய் தணியாதுவளர அந்நோய் ஆற்றாது பாண்டியன் ஆளுடையபிள்ளையாரைப்பார்த்தான்—எ-று. (எசுங)

தென்னவ னோக்கங்கண்டு திருக்கழு மலத்தார்செல்வ
ரன்னவன் வலப்பால்வெப்பை யாலவா யண்ணனீரே
மன்னுமந் திரமுமாகி மருந்துமாய்த் தீர்ப்பீரென்று
பன்னிய மறைகளேத்திப்பகர்திருப் பதிகம்பாடி.

(இ-ள்.) தென்னவன் நோக்கம்கண்டு திருக்கழுமலத்தார் செல்வன்=பாண்டியனது குறிப்பைக்கண்டு திருக்கழுமலத்தாருக்குச் செல்வராகிய ஆளுடையபிள்ளையார்; அன்னவன் வலப்பால்வெப்பை=அப்பாண்டியனது வலப்பாகத்திலுள்ள சுரநோயை; ஆலவாய் அண்ணல்நீரே=திருவாலவாயிலெழுந்தருளிய முதல்வர் நீரே; மன்னும் மந்திரமுமாகி மருந்துமாய்த் தீர்ப்பீரென்று=நிலைபெற்ற மந்திரங்களும் மருந்துகளுமாகித் தீர்த்தருளுவீரென்று; பன்னியமறைகள் ஏத்திப்பகர்திருப்பதிகம்பாடி = கூறிய (பொருளையுடைய) மறைகளைவாழ்த்திக் கூறுந் திருப்பதிகத்தைப் பாடியருளி—எ-று. (எசுச)

திருவாலவாய் - திருநீற்றுப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

மந்திரமாவது நீறு வானவர்மேலதுநீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவதுநீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளதுநீறு
செந்துவர்வாயுமை பங்கன் திருவாலவாயான்திருநீறே. (க)

Koviloor Digital Library

வேதத்திலுள்ளதுநீறுவெந்துயர்தீர்ப்பதுநீறு
போதந்தருவதுநீறுபுன்மைதவிர்ப்பதுநீறு
வோதத்தகுவதுநீறுவுண்மையிலுள்ளதுநீறு
சீதப்புனல்வயல்சூழ்ந்ததிருவாலவாயான்றிருநீறே. (௨)

முத்திதருவதுநீறுமுனிவரணிவதுநீறு
சத்தியமாவதுநீறுதக்கோர்புகழ்வதுநீறு
பத்திதருவதுநீறுபரவவினியதுநீறு
சித்திதருவதுநீறுதிருவாலவாயான்றிருநீறே. (௩)

காணவினியதுநீறுகவினைத்தருவதுநீறு
பேணியணிபவர்க்கெல்லாம்பெருமைகொடுப்பதுநீறு
மாணந்தகைவதுநீறுமதியைத்தருவதுநீறு
சேணந்தருவதுநீறுதிருவாலவாயான்றிருநீறே. (௪)

பூசவினியதுநீறுபுண்ணியமாவதுநீறு
பேசவினியதுநீறுபெருந்தவத்தோர்களுக்கெல்லா
மாசைகெடுப்பதுநீறுவந்தமதாவதுநீறு
தேசம்புகழ்வதுநீறுதிருவாலவாயான்றிருநீறே. (௫)

அருத்தமதாவதுநீறுவவலமறுப்பதுநீறு
வருத்தந்தணிப்பதுநீறுவானமளிப்பதுநீறு
பொருத்தமதாவதுநீறுபுண்ணியர்பூசும்வெண்ணீறு
திருத்தகுமாளிகைசூழ்ந்ததிருவாலவாயான்றிருநீறே. (௬)

எயிலதுவட்டதுநீறுவிருமைக்குமுள்ளதுநீறு
பயிலப்படுவதுநீறுபாக்கியமாவதுநீறு
துயிலைத்தடுப்பதுநீறுசுத்தமதாவதுநீறு
வயிலைப்பொலிதருசூலத்தாலவாயான்றிருநீறே. (௭)

இராவணன்மேலதுநீறுவெண்ணத்தகுவதுநீறு
பராவணமாவதுநீறுபாவமறுப்பதுநீறு
தராவணமாவதுநீறுதத்துவமாவதுநீறு
வராவணங்குந்திருமேனியாலவாயான்றிருநீறே. (௮)

மாலொடயனறியாதவண்ணமுமுள்ளதுநீறு
மேலுறைதேவர்கடங்கண்மெய்யதுவெண்பொடிநீறு
வேலவுடம்பிடர்தீர்க்குமின்பந்தருவதுநீறு
வாலமுதுண்டமிடற்றெம்மாலவாயான்றிருநீறே. (௯)

Koviloor Digital Library

குண்டிகைக்கையர்களோடுசாக்கியர்கூட்டமுங்கூடக்
கண்டிகைப்பிப்பதுநீறுகருதவினியதுநீறு
வெண்டிசைப்பட்டபொருளாரேத்துந்தகையதுநீறு
வண்டத்தவர்பணிந்தேத்துமாலவாயான்றிருநீறே. (௧௦)

ஆற்றலடல்விடையேறுமாலவாயான்றிருநீற்றைப்
போற்றிப்புகலிநிலாவுபூசுரன்ஞானசம்பந்தன்
றேற்றித்தென்னனுடலுற்றதீப்பிணியாயினதீரச்
சாற்றியபாடல்கள்பத்தும்வல்லவர்நல்லவர்தாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவளர் நீறுகொண்டு திருக்கைபாற் றடவத்தென்னன்
பொருவரு வெப்புநீங்கிப் பொய்கையிற் குளிர்ந்ததப்பான்
மருவிய விடப்பான்மிக்க வழலெழ மண்டுதீப்போ
லிருபுடை வெப்புங்கூடி யிடங்கொளா தென்னப்பொங்க.

(இ-ள்.) திருவளர் நீறுகொண்டு திருக்கையால் தடவ=செல்வ மிக்க விபூதியையெடுத்து (வலப்பாலில்) திருக்கரத்தாற்றடவி யருள ; தென்னன் பொருவரு வெப்புநீங்கிப்பொய்கையிற் குளிர்ந்தது = பாண்டியனது யாவராலும் தடுத்தற்கரிய சுரரோயானது தணிந்து பொய்கைபோல (அப்பக்கம்) குளிர்ந்திருந்தது ; அப்பால் மருவிய இடப்பால் மிக்க அழல் எழ மண்டு தீப் போல்=அதன்மேல் (சமணர்கள் தீர்க்கப் புகுந்த) இடப்பாகத்தில் மிக்க சுவாலையெழும்படி நெருங்கியதீயைப்போல ; இருபுடைவெப்பும் கூடி இடம் கொளாது என்னப்பொங்க = இருபக்கத்திலுள்ள சுரமும் ஒருபக்கமாகக் கூடி இடம்போதாதென்று சொல்லும்படிச் சொலிக்காநிற்க.—எ-று.


பரவிபூதியும், அபரவிபூதியும் ஆகிய செல்வத்தைக் கொடுத்தலில், திருவளர் நீறென்றார்.

பரவிபூதி=மோக்ஷஇன்பம். அபர விபூதி=சுத்தபோகம். (எகரு)

உறியுடைக் கையர்பாயி னுடுக்கையர் நடுக்கமெய்திச்
செறிமயிற் பீலிதியத் தென்னன்வெப் புறுதிந்நம்மை
யெறியமா சுடலுங்கன்றி யருகுயிட் டேறநிற்பா
ரறிவுடை யாரையொத்தா ரறிவிலா நெறியினின்றார்.

(இ-ள்.) உறியுடைக்கையர் பாயின் உடுக்கையர் நடுக்கமெய்தி=அதுகண்டகமண்டலந் தாங்கும்) உறிபொருந்திய கையையும் பாயுடையையுமுடைய சமணர்கள் நடுக்கமுற்று ; செறிமயிற்பீலிதிய=நெருங்கிய மயிற்பீலிக்கற்றை கருகும்படி ; தென்னன் வெப்புறு தீத்தம்மை எறிய = பாண்டி

Koviloor Digital Library



திருஞானசம்பந்தஸ்வாமிகள்பாண்டியனுககுவீபூதியணிவித்துசசுரத்தைப்போக்கியது.

Koviloor Digital Library

யனது சுரநோயாலாயதியானது தம்மைச்சுட; மாசு உடலும் கன்றி=குற்றம்பொருந்திய அழுக்கடைந்த உடம்பும் அத்தியால் வெதும்பி; அருகு விட்டு ஏற நிற்பார்=அவனருகில் நில்லாது தூரத்தில் நிற்பவராய்; அறிவிலா நெறியில் நின்றூர் அறிவுடையாரை ஒத்தார்=அறிவில்லாத புன்னெறியில் நின்ற அச்சமணர்கள் (தீத்தெறற்கஞ்சி ஒதுங்கிநிற்றலில் இந்நோய் எம்மால் தீர்த்தற்கு அரிதெனவிவேகம் வந்து அகன்ற) அறிவுடையோரை யொத்தார்கள்—எ-று. (எசுசு)

பலர் தொழும் புகலிமன்ன ரொருபுடை வெப்பைமாற்ற
மலர்தலை யுலகின்மிக்கார் வந்ததி சயித்துச்சூழ
விலகுவேற் றென்னன்மேனி வலமிட மெய்திநீடு
முலகினிற் றண்மைவெம்மை யொதுங்கிறு லொத்ததன்றே.

(இ-ள்.) பலர்தொழும் புகலி மன்னர் ஒருபுடை வெப்பை மாற்ற=பலரும் வணங்கும் சீகாழித்தலைவராகிய பிள்ளையார் (தாம்தீர்த்தற்குரிய) வலப்பால் வெப்பை மாற்றி யருள; மலர்தலை உலகின்மிக்கார் வந்து அதிசயித்துச்சூழ=பரந்த இடத்தை யுடைய அந்நகரத்திலுள்ள பெரியோர் யாவரும் வந்து அதிசயமடைந்து சூழ்ந்து நிற்க; இலகும் வேற்றென்னன் மேனி வலம் இடம் எய்தி=விளங்கும் வேற்படையேந்திய பாண்டியனது உடம்பானது வலப்பாலையும் இடப்பாலையு மடைந்து; நீடும் உலகினில் தண்மை வெம்மை ஒதுங்கினுல் ஒத்தது=உலகினில்மிக்க குளிர்ச்சியும் வெப்பும் (முறையே வலப்பாகத்தையும் இடப்பாகத்தையு மடைந்து) ஒதுங்கினுற்போன்றது—எ-று.

மேனி ஒத்ததெனக்கூட்டுக. (எசுஎ)

மன்னவன் மொழிவனென்னே மதித்தவிக் காலமொன்றில்
வெந்நர கொருபாலாகும் வீட்டின்ப மொருபாலாகுந்
துன்னுநஞ் சொருபாலாகுஞ் சுவையமு தொருபாலாகு
மென்வடி வொன்றிலுற்றே னிருதிறத் தியல்புமென்பான்.

(இ-ள்.) மன்னவன் மொழிவன் என்னே=பாண்டியன் பிள்ளையாரைநோக்கிக் கூறுவான் இது என்னே; மதித்த இக்காலம் ஒன்றில் = கருதிய இவ்வோர்காலத்தில்; வெம் நரகு ஒருபாலாகும்=கொடிய நரகயாதனை ஒருபக்கமாம்; வீட்டு இன்பம் ஒருபாலாகும்=மோட்ச இன்பம் ஒருபக்கமாம்; துன்றும் நஞ்சு ஒருபாலாகும் = தீமைபொருந்திய விஷம் ஒருபக்கமாம்; சுவை அமுது ஒருபாலாகும் = மதுரமிக்க அமுதமொருபக்கமாகும்; என் வடிவு ஒன்றில் உற்றேன் இருதிறத்து இயல்பும் என்றான்=எனது சரீரத்தில் இருபாலும் அடைந்தேன் மேற்கூறிய இருவகைத்தான பொருள்களின் இயல்பையும் என்பானுயினன்—எ-று. (எசுஅ)

Koviloor Digital Library

வெந்தொழி லருகர்தோற்றீ ரென்னைவிட் டகலநீங்கும்
வந்தெனை யுய்யக்கொண்ட மறைக்குல வள்ளலாரே
யிந்தவெப் படையநீங்க வெனக்கருள் புரிவீரென்று
சிந்தையாற் றொழுதுசொன்னான் செல்கதிக் கணியனானான்.

(இ-ள்.) வெம் தொழில் அருகர் தோற்றீர் என்னை விட்டு அகல நீங்கும்=கொடுந்தொழிலையுடைய சமணர்களே! நீங்கள் தோற்றீர்கள் என்னை விட்டுத்தூரச் செல்லுங்கள்; வந்து எனை உய்யக்கொண்ட மறைக்குல வள்ளலாரே=இங்கு எழுந்தருளி எனையும் வல்லைத் தடுத்தாட்கொண்ட அந்தணர் குலத்தலைவராகிய ஆளுடைய பிள்ளையாரே! (நீர்); இந்த வெப்பு அடைய நீங்க எனக்கு அருள் புரிவீர் என்று=இந்தச் சுரநோய் முழுதும் நீங்கும்படி அடியேனுக்கு அருள்செய்வீராகவென்று; சிந்தையால் தொழுது சொன்னான் (செல்கதிக்கு அணியன் ஆனான்)=மோட்சத்திற்குச் சமீபித்தவனான அவ்வரசன் மனத்தால்வணங்கிக் கூறினான்—எ-று.

சிவபுண்ணியபரிபாகம்வந்தமையின், செல்கதிக்கணிய னானானென்றார். சிந்தையாற்றொழுதல் முன்தொழுதாற்போல பொதுவாகத்தொழாது இவர் தொழுதற்குரியாரென உணர்ந்து சிறப்பாற்றொழுதல்; எனையுய்யக்கொண்ட மறைக்குல வள்ளலார் என்பதனாலுமுணர்க. நோயுடையனாதலின் விழுந்து தொழுதல் கூடாமையின், முன்தொழுதாற்போல் கிடந்தவாறே சிந்தையொடு தொழுதானென்றார். (எசுக)

திருமுகங் கருணைகாட்டத் திருக்கையி னீறுகாட்டிப்
பெருமறை துதிக்குமாற்றாற் பிள்ளையார் போற்றிப்பின்னு
மொருமுறை தடவவங்க ணொழிந்துவெப் பகன்றுநீங்க
மருவுதிப் பிணியுநீங்கி வழுதியு முழுதுமுய்ந்தான்.

(இ-ள்.) திருமுகம் கருணைகாட்டத் திருக்கையில் நீறுகாட்டி=தமது திருமுகமானது பெருங்கருணையைக் காட்டத்திருக்கரத்தில் விபூதியைவைத்தருளி; பெருமறை துதிக்கும் ஆற்றால் பிள்ளையார்போற்றி=பெரியவேதங்கள் துதிக்கும் வழியால் ஆளுடைய பிள்ளையார் (அவ்விபூதியைத்) துதித்து; பின்னும் ஒருமுறை தடவ=பின்னும் ஓர்கால் தடவியருள; அங்கண் ஒழிந்து வெப்பு அகன்று நீங்க=சுரவெப்பு அவ்விடப்பாகத்தில் நின்றும் நீங்க; மருவுதிப்பிணியும் நீங்கி வழுதியும் முழுதும் உய்ந்தான்=பொருந்திய கொடியசுரநோயும் நீங்கிப்பாண்டியனும் முழுவதும் உய்ந்தான்—எ-று.

பாண்டியன் முன் அமணரைவென்று சுருதி சாரமான சைவத்தை விளக்குங் கருத்தாலென்பார், திருமுகங்கருணைகாட்ட என்றும், புத்தி முத்திகட்கு விபூதியே முக்கிய சாதனமென்னுங் கருத்தாலென்பார், திருக்கையால் நீறுகாட்டி என்றும், இப்பூதி சுருதிபோற்றுந் திக்கு மான்மியமுடையதென்

Koviloor Digital Library

பார், பெருமறை துதிக்குமாற்றுலென்றும், இப்பூதியால் சுபம், குட்டம் பைசாசம், சுரநோய் முதலியன நீங்குதல் கண்கூடெனக் காட்டவென்பார், ஒரு முறை தடவ என்றும், அப்பூதிப்பரிசத்தால் பிணிதீர்தலே யன்றித்தன க்கு மேல்வரும் பிறவிப்பிணியும் நீங்கினன் எனபார், முழுதும் உய்ந்தா னென்றுங் கூறினர். (எஎ0)

கொற்றவன் றேவியாருங் குலச்சிறை யாருந்தீங்கு
செற்றவர் செய்யபாத தாமரை சென்னிசேர்த்திப்
பெற்றனம் பெருமையின்று பிறந்தனம் பிறவாமேன்மை
யுற்றனன் மன்னனென்றே யுளங்களித் துவகைமிக்கார்.

(இ-ள்.) கொற்றவன் தேவியாரும் குலச்சிறை யாரும்=பாண்டிமா தேவியாருங் குலச்சிறை நாயனாரும்; தீங்குசெற்றவர் செய்ய பாததாமரை சென்னிசேர்த்தி = பாண்டியனுற்ற தீங்கை நீக்கியருளிய ஆளுடைய பிள் ளையாரது சிவந்த திருவடித்தாமரைகளைத் தமது சிரசின்மேல் சூடி; பெற்றனம் பெருமையின்று பிறந்தனம்=(நாம் அடைதற்கரிய) பெருமையை ப்பெற்றோம் (அதனால் இன்று மீண்டு) சனித்தவர்களானோம்; பிறவாமேன் மை உற்றனன் மன்னனென்று உளங்களித்து உவகைமிக்கார் = மேற்பிற வாதமேன்மையை எம்மரசனடைந்தான் என்று மனக்களிப்படைந்து பெரு வகைமிக்காரானார்—எ-று.

அவனது சுரநோயையன்றிப் பிறவித்துன்பமு மடங்கத்தீங்கு செற்ற வரென்றார்.

நாம் கருதிய எண்ணம் கருதியவாறு முடிந்தமையின் பெருமை பெ ற்றோமென்றும், அப்பேற்றால் பன்னாளும்பருவரல் உழத்தல் இனறோடொழி ந்தமையின் மறுபிறப்பெய்தினோமென்னும் கருத்தால் பிறந்தனம் என்றும் கூறினர் என்றும். (எஎக)

மீனவன் றன்மேலுள்ள வெப்பெலா முடனேமாற
வானபே ரின்பமெய்தி யுச்சிமே லங்கைகூப்பி
மானமொன் றில்லார்முன்பு வன்பிணி நீக்கவந்த
ஞானசம் பந்தர்பாத நன்னிநா னுய்ந்தேனென்றான்.

(இ-ள்.) மீனவன் தன்மேலுள்ள வெப்பெலாம் உடனே மாற=பா ண்டியன் தன் உடம்பின் கண்ணுள்ள சுரநோயெல்லாம் உடனே நீங்க; ஆனபேரின்பமெய்தி உச்சிமேல் அங்கை கூப்பி=(அதனால்) பேரின்பமடைந் து சிரசின்மேல் அழகிய கைகளைக்குவித்து; மானம் ஒன்று இல்லார் முன் புவன் பிணிநீக்கவந்த=மானம் ஒரு சிறிது மில்லாத சமணர்கள் முன்பு வலி யசுரநோயை நீக்கும்படி வந்தருளிய; ஞான சம்பந்தர் பாதம் நண்ணி நான் உய்ந்தேனென்றான்=திருஞான சம்பந்தப்பிள்ளையாரது திருவடிகளையடைந் தநான் (பிறவித்துன்பத்தில் நின்றும்) பிழைத்தேனென்றுகூறினான்—எ-று.

Koviloor Digital Library

வேறு

கந்துசிறு மாலியானை மீனவன் கருத்துநேர்
வந்துவாய்மை கூறமற்று மாசுமேனி நீசர்தா
முந்தைமந் திரத்துவிஞ்சை முற்றுமெஞ்ச வஞ்சியே
சிந்தைசெய்து கைவருந் திறந்தெரிந்து தேடுவார்.

(இ-ள்.) கந்துசிறும்மால் யானைமீனவன்=கட்டுத்தறியைக் கோபிக்கும் மதமயக்கம் பொருந்திய யானையையுடைய பாண்டியன்; கருத்துநேர் வந்து வாய்மைகூற = தனது மனம் கோடாது நின்று உண்மையை (பிள்ளையார் திருமுன்பு) எடுத்துச்சொல்ல; மாசுமேனி நீசர்தாம் = அழுக்குப் படிந்த உடம்பையுடைய நீசராகிய சமணர்கள்; முந்தைமந்திரத்து விஞ்சை முற்றும் எஞ்ச அஞ்சி=முன்பு (தாம் கற்ற) விஞ்சை மந்திரங்கள் முழுதும் குறைவுபட (அதனால்) அச்சமுற்று; சிந்தைசெய்துகைவரும் திறம்தெரிந்துதேடுவார்=தாம் வெல்லும் வகையைக் கருதிக் கைகூடும் திறத்தை ஆலோசித்துக் கூறுவாராயினர்—எ-று. (எள௩)

சைவமைந்தர் சொல்லின்வென்றி சந்தவின்சொன் மாலையாற்
கைதவன்றன் வெப்பொழிந்த தன்மைகண் டறிந்தன
மெய்தெரிந்த தர்க்கவாதம் வெல்லலாவ தன்றுவே
றெய்துதீயி னீரில்வெல்வ தென்றுதம்மி லெண்ணினார்.

(இ-ள்.) சைவமைந்தர் சொல்லின் வென்றி சந்த இன்சொல்மாலையால்=திருஞானசம்பந்தப்பிள்ளையாரது சொல்லினது மேம்பாட்டை- இசை பொருந்திய இனிய திருப்பதிகமாலையால்; கைதவன் தன்வெப்பு ஒழிந்த தன்மை கண்டு அறிந்தனம்=பாண்டியனது சுரநோயின் வெப்பு நீங்கியதன்மையைக் கண்டறிந்தோம் (அதனால்); மெய்தெரிந்த தர்க்கவாதம் வெல்லலாவதன்று=நாம் உண்மையாகத்தெரிந்த தர்க்கவாதத்தால் அவரைவெல்லுதல் கூடாது; வேறு எய்து தீயில் நீரில் வெல்வதென்று தம்மில் எண்ணினார்=(அத்தர்க்கவாதத்தில்) வேறாகப் பொருந்திய தீயினாலும் நீரினாலும் வெல்லவேண்டுமென்று தம்முட் சிந்தித்தார்கள்—எ-று. (எளச)

பிள்ளையாரு முங்கள்வாய்மை பேசுமின்க ளென்றலுந்
தள்ளுநீர்மை யார்கள்வேறு தர்க்கவாதி னுத்தரங்
கொள்ளும்வென்றி யன்றியே குறித்தகொள்கை யுண்மைதா
முள்ளவாறு கட்புலத்தி லுய்ப்பதென்ன வோட்டினார்.

(இ-ள்;) பிள்ளையாரும் உங்கள் வாய்மைபேசுமின்கள் என்றலும்=ஆளுடைய பிள்ளையாரும் (அச்சமணர் தோற்றும் மேல் வேறுவகையால் வெல்லக்கருதிய குறிப்புணர்ந்து) உங்கள் உண்மையைக் கூறுங்கள் என்று கேட்டருளவும்; தள்ளும் நீர்மையார்கள் வேறு தர்க்கவாதின் உத்தரங்கொ

Koviloor Digital Library

ள்ளும் வென்றி அன்றி = பெருமை நீங்கிய சமணர்கள் வேறுதர்க்கவாதங் களினால் பேசிவெல்லும் வெற்றியல்லாமல்; குறித்தகொள்கை உண்மை தான் உள்ளவாறு கட்புலத்தில் உய்ப்பதென்ன ஒட்டினார்=(நாம் இருவரும்) நிச்சயித்தசமயவுண்மையை உள்ளபடி (யாவருங் காணப்)பிரத்தியட்சமாகக் காட்டி வெல்வதேயென்று நிச்சயித்தார்—எ-று.

ஒட்டுதல் = உடன்படல். (எஎரு)

என்றுவாது கூறலு மிருந்ததென்னர் மன்னனுங்
கன்றியென் னுடம்பொடுங்க வெப்புநோய் கவர்ந்தபோ
தொன்றுமங் கொழித்திலீர்க ளென்னவா துமக்கெனச்
சென்றுபின்னு முன்னு நின்று சில்லிவாயர் சொல்லுவார்.

(இ-ள்.) என்று வாதுகூறலும் இருந்ததென்னர் மன்னனும் = இவ்வாறு பிரத்தியட்சமாகக் காட்டுவதேவாதென்று அச்சமணர்கள்சொல்லவும் அங்கிருந்த பாண்டியராசனும்; கன்றி என் உடம்பு ஒடுங்க வெப்பு நோய் கவர்ந்தபோது=வருந்தி எனதுடம்பு ஒடுங்கும்படிச்சுரநோயானது அவ்வுடம்பைக் கொள்ளைகொண்டபோது; ஒன்றும் அங்கு ஒழித்திலீர்கள் என்ன வாது உமக்கென=அவ்விடத்து ஒரு சிறிதும் அந்நோயை நீக்காதொழிந்தீர்கள் (அவ்வாறான) உங்கட்கு என்னவாதிருக்கின்றதென்றுசொல்ல; சென்று பின்னும் முன்னும் நின்று சில்லிவாயர் சொல்லுவார்=அப்பாண்டியனைக்கிட்டிப் பின்னும், அவன்முன்நின்று ஓட்டவாயையுடைய சமணர்கள் கூறுவாராயினர்—எ-று.

அவன் மறுக்கவும் கூறுதலிற் பின்னுமென்றார். (எஎசு)

என்னவாறு செய்வதென் றுரைத்ததேவி னாவினைச்
சொன்னவாச கந்தொடங்கி யேடுகொண்டு சூழ்ச்சியான்
மன்னுதம் பொருட்கருத்து வாய்மைதீட்டி மாட்டினால்
வெந்நெருப்பின் வேவுறாமை வெற்றியாவ தென்றனர்.

(இ-ள்.) என்னவாறுசெய்வதென்று உரைத்ததே வினா எனா = என்னவாறுசெய்வதென்று பாண்டியன் கூறியதையே வினாவாகவைத்து; சொன்ன வாசகம்தொடங்கி=சொல்லிய அவ்வார்த்தையினின்றும் (வாதைத்) தொடங்கி; ஏடுகொண்டு சூழ்ச்சியால் மன்னு தம்பொருட் கருத்து வாய்மைதீட்டி=ஏட்டையெடுத்து அவ்வேட்டில் இரகசியமாய் நிலைபெற்ற சமயப் பொருளினுண்மையையெழுதி; வெம்நெருப்பில் மாட்டினால் வெற்றியாவது வேவுறாமை என்றனர்=சொலிக்கும் நெருப்பிலிட்டால் வெற்றியாவது வேவுறாதிருத்தலென்று அவ்வமணர் கூறினார்—எ-று. (எஎஎ)

என்றபோது மன்னனென் றியம்புமுன்பு பிள்ளையார்
நன்றுநீ ருரைத்தவாறு நாடுதியி லேடுதான்

வென்றிடிற் பொருட்கருத்து மெய்ம்மையாவ தென்றிரேல்
வன்றனிக்கை யானைமன்னன் முன்புவம்மி னென்றனர்.

(இ-ள்.) என்றபோது மன்னன் ஒன்று இயம்பு முன்பு பிள்ளையார்= என்று சமணர்கள் சொல்லியபொழுது அரசன் (அதற்குத்தரமாக) ஒர்வார்த் தை கூறுமுன் ஆளுடையபிள்ளையார்; நன்று நீர் உரைத்தவாறு=நீர்கூறிய வாறு நன்று; நாடுதீயில் ஏடுதான் வென்றிடில்=(யாவரும்) காணத்தக்க தீயி லிட்டு இட்ட ஏடுவேவாதிருக்கில்; பொருட்கருத்து மெய்ம்மையாவது என்றிரேல் = அச்சமயக்கொள்கை உண்மையாம் என்பீராகில்; வன்தனிக் கையானை மன்னன் முன்பு வம்மின் என்றனர்=வலிய ஒப்பில்லாத துதிக் கை பொருந்திய யானைப்படையையுடைய பாண்டியன் முன்பு வருவீர்க ளாக என்று கூறியருளினார்—எ-று. (௭௭௮)

வேறு.


அப்படிக்கெதி ரமணருமணைந்துறு மளவி
லொப்பில்வண்புகழ்ச் சண்பையர்காவல ருரையாற்
செப்பருந்திறன் மன்னனுந்திருந்தவை முன்னர்
வெப்புறுந்தழ லமைக்கென வினைஞரை விடுத்தான்.

(இ-ள்.) அப்படிக்கு எதிர் அமணரும் அணைந்துறும் அளவில்=அவ் வாறு செய்தற்கு வாதிகளாகிய சமணர்களும் உடன்பட்டுவந்த சமயத்தில்; ஒப்பில் வண்புகழ்ச்சண்பையர் காவலர் உரையால்=ஒப்பில்லாத (திருவரு ள்) வன்மையால் புகழ்நிறைந்த சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையா ரது ஆக்கினையால்; செப்பரும் திறல் மன்னனும் திருந்து அவை முன்னர்= சொல்லுதற் கரியவலிமையையுடைய பாண்டியனும் தனது திருத்தமாகிய சபையின்முன்னே; வெப்புறும் தழல் அமைக்கென வினைஞரை விடுத் தான்=வெப்பம் நிறைந்த தீயை உண்டாக்குக என்று ஏவலாளரை ஏவி னான்—எ-று. (௭௭௯)

ஏயமாக்கரு மிந்தனங்குறைத் துடனடுக்கித்
தீயமைத்தலுஞ் சிகைவிடுபுகையொழிந் தெழுந்து
காயும்வெவ்வழற் கடவுளும்படரொளி காட்ட
வாயுமுத்தமிழ் விரகருமணையவந் தருளி.

(இ-ள்.) ஏயமாக்கரும் இந்தனம் குறைத்து உடன் அடுக்கித்தீ அமைத்தலும்=ஏவிய ஏவலாளரும் கட்டைகளைவெட்டி உடனேயடுக்கி நெ ருப்பைவளர்க்கவும்; சிகைவிடுபுகை ஒழிந்து எழுந்து = கொழுந்துவிடுத லோடு புகைநீங்கி சுவாலித்து; காயும்வெவ் அழற்கடவுளும் படர் ஒளிகா ட்ட=சுடும் கொடிய அக்கினிதேவனும் பரப்பிய ஒளியை (யாவருக்கும்) வெ ளிப்படுத்த; ஆயும் முத்தமிழ் விரகரும் அணையவந்தருளி=ஆராய்கின்ற முத்தமிழ் விரகராகிய பிள்ளையாரும் அதன் சமீபத்தையடைந்தருளி—எ-று.

Koviloor Digital Library



திருஞானசம்பந்தஸ்வாமிகள் திருமுறையிற் கயிறுசாத்தி அக்கினியில் இட்டது.

Koviloor Digital Library

செங்கணேற்றவ ரேபொருளென்றுதாந் தெரிந்த
பொங்கிசைத்திருப் பதிகநன்முறையினைப் போற்றி
யெங்கணாதனே பரம்பொருளெனத்தொழு தெடுத்தே
யங்கையான்முடி மிசைக்கொண்டு காப்புநா ணவிழ்த்தார்.

(இ-ள்.) செங்கண் ஏற்றவரேபொருளென்று = சிவந்த கண்களையுடைய இடபத்தை வாகனமாகக்கொண்ட சிவபெருமானே உலககாரணரான பரம்பொருளென்று ; தாம் தெரிந்த பொங்கு இசைத்திருப்பதிக நன்முறையினைப்போற்றி=தாமுணர்ந்த பொலிவு பொருந்திய இசையினையுடைய திருப்பதிகங்களை எழுதிய திருமுறையைத்துதித்து ; எங்கள் நாதனே பரம்பொருளெனத்தொழுது எடுத்தே=எமது தலைவரான சிவபெருமானே முதற்பொருளெனவணங்கி எடுத்தருளி ; அங்கையால் முடிமிசைக்கொண்டு காப்பு நாண் அவிழ்த்தார்=அழகிய திருக்கரத்தால் அத்திருமுறையைத் தமது திருமுடியின் மேற்கொண்டருளித் திருக்காப்பிட்ட கயிற்றை அவிழ்த்தருளினார்—எ-று.

செங்கணேற்றவரே என்புழி ஏகாரம் - பிரமன், விண்டு, இந்திரன் முதலியோர் இயற்றுதற் கர்த்தாக்களாதலில் சிவபெருமானே ஏவுதற் கர்த்தாவாகிய முதற்கடவுளெனப் பிரித்தலிற் பிரிநிலை. தெரிந்த என்னும் பெயரெச்சம், அடையடுத்த திருப்பதிகமென்னும் செயப்படுபொருட்பெயர்கொண்டது. திருப்பதிகம் தெரிதலால்வந்த காரியமாதலின். (எஅக)

சாற்றுமெய்ப்பொரு டருந்திருமுறையினைத் தாமே
நீற்றுவண்கையான் மறித்தலும்வந்துநேர்ந் துளதா
னாற்றடம்புயத் தண்ணலார்மருவுநள் ளாறு
போற்றுமப்பதி கம்போகமார்த்தபூண் முலையாள்.

(இ-ள்.) சாற்றும்மெய்ப்பொருள்தரும் திருமுறையினைத்தாமே=மேற்கூறும்மெய்ப்பொருளைத் தெரிவிக்குந்திருமுறையைத்தாமே; நீற்றுவண்கையால்மறித்தலும்=விபூதியணிந்த வள்ளற்றன்மையையுடைய திருக்கரத்தினாலேமறிக்கவும் ; நாற்றடம்புயத்து அண்ணலார் மருவும் நள்ளாறு போற்றும் போகமார்த்த பூண்முலையாள் அப்பதிகம்=நான்கு பெரிய திருப்புயங்களையுடைய சிவபெருமானெழுந்தருளிய திருநள்ளாற்றைத் துதிக்கும் "போகமார்த்தபூண்முலையாள்" என்னுமுதலையுடைய அத்திருப்பதிகம்; வந்து நேர்ந்துளது=வந்துதித்தது.—எ-று. (எஅ உ)

திருநள்ளாறு-பண்-பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

போகமார்த்தபூண்முலையாள்தன்னோடும்பொன்னகலம்
பாகமார்த்தபைங்கண்வெள்ளேற்றண்ணல்பரமேட்டி
யாகமார்த்ததோலுடையன்கோவணவாடையின்மேல்
நாகமார்த்தநம்பெருமான்மேயதுநள்ளாறே. (க)

தோடுடையகாதுடையன்றோலுடையன்தொலையாப்
பீடுடையபோர்விடையன்பெண்ணுமோர்பாலுடைய
னேடுடையமேலுலகோடேழ்கடலுஞ்சூழ்ந்த
நாடுடையநம்பெருமான்மேயதுநள்ளாறே. (உ)

ஆன்முறையாலாற்றவெண்ணீறாடியணியிழையோர்
பான்முறையால்வைத்தபாதம்பத்தர்பணிந்தேத்த
மான்மறியும்வெண்மழுவுஞ்சூலமும்பற்றியகை
நான்மறையானம்பெருமான்மேயதுநள்ளாறே. (ங)

புல்கவல்லவார்சடைமேற்பூம்புனல்பெய்தயலே
மல்கவல்லகொன்றைமாலைமதியோடுடன்சூடிப்
பல்கவல்லதொண்டர்தம்பொற்பாதநிழற்சேர
நல்கவல்லநம்பெருமான்மேயதுநள்ளாறே. (ச)

ஏறுதாங்கியூர்திபேணியேர்கொளிளமதிய
மாறுதாங்குஞ்சென்னிமேலோராடரவஞ்சூடி
நீறுதாங்கிநூல்கிடந்தமார்பினிரைகொன்றை
நாறுதாங்குநம்பெருமான்மேயதுநள்ளாறே. (ரு)

திங்களுச்சிமேல்விளங்குந்தேவனிமையோர்க
ளெங்களுச்சியெம்மிறைவனென்றடியேயிறைஞ்சத்
தங்களுச்சியால்வணங்குந்தன்னடியார்கட்கெல்லா
நங்களுச்சிநம்பெருமான்மேயதுநள்ளாறே. (சு)

வெஞ்சுடர்த்தீயங்கையேந்திவிண்கொண்முழவதிர
வஞ்சிடத்தோராடல்பாடல்பேணுவதன்றியும்போய்ச்
செஞ்சடைக்கோர்திங்கள்சூடித்திகழ்தருகண்டத்துள்ளே
நஞ்சடைந்தநம்பெருமான்மேயதுநள்ளாறே. (எ)

சிட்டமார்ந்தமும்மதிலுஞ்சிலைவரைதீயம்பினாற்
சுட்டுமாட்டிச்சுண்ணவெண்ணீறணிவதன்றியும்போய்ப்
பட்டமார்ந்தசென்னிமேலோர்பான்மதியஞ்சூடி
நட்டமாடுநம்பெருமான்மேயதுநள்ளாறே. (அ)

உண்ணலாகாநஞ்சுகண்டத்துண்டுடனேயொடுக்கி
யண்ணலாகாவண்ணனீழலாரழல்போலுருவ
மெண்ணலாகாவுள்வினையென்றெண்ணவல்லதிருவார்
நண்ணலாகாநம்பெருமான்மேயதுநள்ளாறே. (கூ)

Koviloor Digital Library

மாசுமெய்யர்மண்டைத்தேரர்குண்டர்குணமிலிகள்
பேசும்பேச்சைமெய்யென்றெண்ணியந்நெறிசெல்லன்மின்
மூசுவண்டார்கொன்றைசூடிமும்மதிளும்முடனே
நாசஞ்செய்தநம்பெருமான்மேயதுநள்ளாறே. (௧௦)

தண்புனலும்வெண்பிறையுந்தாங்கியதாழ்சடையன்
நண்புநல்லார்மல்குகாழிஞானசம்பந்தனல்ல
பண்புநள்ளாறேத்துபாடல்பத்துமிவைவல்லா
ருண்புநீங்கிவானவரோடுலகிலுறைவாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

அத்திருப்பதி கத்தினையமர்ந்துகொண் டருளி
மைத்தவெங்கடு மிடற்றுநள்ளாறரை வணங்கி
மெய்த்தநற்றிரு வேட்டினைக்கழற்றிமெய்ம் மகிழ்ந்து
கைத்தலத்திடைக் கொண்டனர்கவுணியர் தலைவர்.

(இ-ள்.) அத்திருப்பதிகத்தினை அமர்ந்துகொண்டருளி = அத்திருப்பதிகத்தை விரும்பித் (திருக்கரத்திற்) கொண்டருளி; மைத்த வெம் கடுமிடற்று நள்ளாறரைவணங்கி=கரிய வெம்மைபொருந்திய காளகண்டத்தையுடைய தேர்ப்பாரணீசுரரைவணங்கி; மெய்த்த நற்றிரு ஏட்டினைக்கழற்றி= மெய்ம்மைபொருந்திய அந்திருப்பதிகமெழுதிய திருவேட்டைக்கழற்றி; மெய்ம்மகிழ்ந்துகைத்தலத்திடைக்கொண்டனர் கவுணியர்தலைவர்=திருமேனி (மகிழ்ச்சிக்குறிகாட்ட) மகிழ்கூர்ந்து திருக்கரத்திற் கொண்டருளினர் கவுணியகோத்திரத்தலைவராகிய ஆளுடையபிள்ளையார்.—எ-று. (௭௮௩)

நன்மையுய்க்குமெய்ப் பதிகத்திலுநாதனென் றெடுத்து
மென்னையாளுடையீசன்றனாமமே யென்று
மன்னுமெய்ப்பொரு ளாமெனக்காட்டிட வன்னி
தன்னிலாகெனத் தளிரிளவளரொளி பாடி.

(இ-ள்.) நன்மை உய்க்கும் மெய்ப்பதிகத்தில் நாதனென்று எடுத்தும்=யாவருங்காண நெருப்பினின்று உலகர்க்கெல்லாம் நன்மையைச்செய்யும் "போகமார்த்த பூண்முலையாள்" என்னும் திருப்பதிகமுதற்பொருளாயுள்ளமுதல்வரென்றெடுத்தும்; என்னை ஆளுடை ஈசன்றன் நாமமே என்றும்= இது என்னையாளுந் தன்மையையுடைய நள்ளாற்றடிகளது திருநாமமே என்றுகூறியும்; மன்னும்மெய்ப்பொருளாம் எனக்காட்டிட = அந்நாதனே அழிவில்லாத மெய்ப்பொருளாயுள்ளானென்றுகாட்டும்படி; வன்னிதன்னில் ஆகெனத்தளிரிள வளரொளிபாடி=நெருப்பில் அழியாது இது நிலைபெறுக என்று "தளிரிளவளரொளி" என்னும் முதலையுடைய திருப்பதிகம்பாடி

Koviloor Digital Library

நெருப்பினின்றுவெற்றியைக்கொடுத்தலால்,நன்மையுய்க்குமென்றும்; சிவபெருமானே பரம்பொருளென விளக்குதலில், மெய்ப்பதிகமென்று ம்; அப்பதிகத்தினாதனென்றதனால், போகமார்த்த பூண்முலையாளொடு கூடி இன்பத்தை ஆன்மாக்களுக்கு விளைவிக்கும்முதல்வனொன்றுங் கூறினானொன்றாயிற்று.

நன்மையுய்க்கு மெய்ப்பதிகமென்புழி, பிள்ளையார் திருமுறையில் கயிறுசாத்துங்கால், அவர்க்குச்சகுனமாய்ப் "போகமார்த்த பூண்முலையாள் தன்னோ" டெனவந்ததிருப்பதிக மெனினுமொக்கும்.

அவ்வாறு கூறுங்காலும், போகியாயிருந்து உயிர்க்குப்போகத்தைக் கொடுக்கும் நாதனென்பதைக் குறிப்பிக்குமெனக்கொள்க. தமக்கு மங்களகரமாகப்போகியாயிருந்து போகத்தைக்கொடுக்கும் நாதனெனவந்தமையைத் "தளிரிளவளரொளி" என்னும் பதிகத்துத் திருக்கடைக்காப்பிறுவாய் விதந்து கூறியருளினமைகாண்க. அவ்வாறாதலில், வன்னிதன்னிலாகெனவென்றது பிள்ளையார் ஆணைகுறித்தமை குறிப்பித்தது. (௭௮௪)

திருநள்ளாறு-திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

தளிரிளவளரொளிதனதெழிறருதிகழ்மலைமகள்
குளிரிளவளரொளிவனமுலையிணையவைகுலவலி
னளிரிளவளரொளிமருவுநள்ளாறர்தந்நாமமே
மிளிரிளவளரெரியிடிலிவைபழுதிலைமெய்ம்மையே. (௧)

போதமர்தருபுரிகுழலெழின்மலைமகள்பூணணி
சீதமதணிதருமுகிழிளவனமுலைசெறிதலி
னாதமதெழிலுருவனையநள்ளாறர்தந்நாமமே
மீதமதெரியினிலிடிலிவைபழுதிலைமெய்ம்மையே. (௨)

இட்டுறுமணியணியிணர்புணர்வளரொளியெழில்வடங்
கட்டுறுகதிரிளவனமுலையிணையொடுகலவலி
னட்டுறுசெறிவயன்மருவுநள்ளாறர்தந்நாமமே
யிட்டுறுமெரியினிலிடிலிவைபழுதிலைமெய்ம்மையே. (௩)

மைச்சணிவரியரிநயனிதொன்மலைமகள்பயனுறு
கச்சணிகதிரிளவனமுலையவையொடுகலவலி
னச்சணிமிடறுடையடிகணள்ளாறர்தந்நாமமே
மெச்சணியெரியினிலிடிலிவைபழுதிலைமெய்ம்மையே. (௪)

Koviloor Digital Library

பண்ணியன்மலைமகள்கதிர்விடுபருமணியணிநிறக்
கண்ணியல்கலசமதனமுலையிணையொடுகலவலி
னண்ணியகுளிர்புனல்புகுதுநள்ளாறர்தந்நாமமே
விண்ணியலெரியினிலிடிலிவைபழுதிலைமெய்ம்மையே.(ரு)

போதுறுபுரிகுழன்மலைமகளிளவளர்பொன்னணி
சூதுறுதளிர்நிறவனமுலையவையொடுதுதைதலிற்
றூதுறுநிறமுடையடிகணள்ளாறர்தந்நாமமே
மீதுறுமெரியினிலிடிலிவைபழுதிலைமெய்ம்மையே. (சு)

கார்மலிநெறிபுரிசுரிகுழன்மலைமகள்கவினுறு
சீர்மலிதருமணியணிமுலைதிகழ்வொடுசெறிதலிற்
றூர்மலிநகுதலையுடையநள்ளாறர்தந்நாமமே
யேர்மலியெரியினிலிடிலிவைபழுதிலைமெய்ம்மையே. (எ)

மன்னியவளரொளிமலைமகடளிர்நிறமதமிகு
பொன்னியன்மணியணிகலசமதனமுலைபுணர்தலிற்
றன்னியறசமுகனெரியநள்ளாறர்தந்நாமமே
மின்னியலெரியினிலிடிலிவைபழுதிலைமெய்ம்மையே. (அ)

கான்முகமயிலியன்மலைமகள்கதிர்விடுகனமிகு
பான்முகமியல்பணையிணைமுலைதுணையொடுபயிறலி
னான்முகனரியறிவரியநள்ளாறர்தந்நாமமே
மேன்முகவெரியினிலிடிலிவைபழுதிலைமெய்ம்மையே. (கூ)

அத்திரநயனிதொன்மலைமகள்பயனுறுமதிசயச்
சித்திரமணியணிதிகழ்முலையிணையொடுசெறிதலிற்
புத்தரொடமணர்பொய்பெயருநள்ளாறர்தந்நாமமே
மெய்த்திரளெரியினிலிடிலிவைபழுதிலைமெய்ம்மையே(கo)

சிற்றிடையரிவைதன்வனமுலையிணையொடுசெறிதரு
நற்றிறமுறுகழுமலநகர்ஞானசம்பந்தன
கொற்றவனெதிரிடையெரியினிலிடவிவைகூறிய
சொற்றெரியொருபதுமறிபவர்துயரிலர்தூயரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

செய்யதாமரை யகவிதழினுமிகச் சிவந்த
கையிலேட்டினைக் கைதவன்பேரவை காண

Koviloor Digital Library

வெய்யதீயினில் வெற்றரை யவர்சிந்தை வேவ
வையமுய்ந்திட வந்தவர்மகிழ்ந்துமுன் னிட்டார்.

(இ-ள்.) செய்யதாமரை அக இதழினும் மிகச்சிவந்த கையில் ஏட்டினை=சிவந்ததாமரை மலரினது அகவிதழினும் மிகவுஞ்சிவந்த திருக்கரத்தில் (தாங்கிய) திருவேட்டை; கைதவன்பேர் அவைசூழ்=பாண்டியனது பெரியசபையிலுள்ளார்களும்; வெற்றரையவர்சிந்தைவேவ = உடையில்லாத அரையையுடைய சமணர்மனம் புழுங்கவும்; வெய்யதீயினில் வையம் உய்ந்திட வந்தவர் மகிழ்ந்து முன் இட்டார்=கொடிய நெருப்பினிடத்து நில உலகத்தார் ஈடேற அவதரித்த அருளுடைய பிள்ளையார் மகிழ்ச்சியடைந்து (அச்சவை) முன்பு இட்டருளினார்.—எ-று. (எஅரு)

இட்டவேட்டினி லெழுதியசெந்தமிழ்ப் பதிக
மட்டுலாங்குழல் வளமுலைமலைமகள் பாகத்
தட்டமூர்த்தியைப் பொருளெனவுடைமையா லமர்ந்து
பட்டதீயிடைப் பச்சையாய்விளங்கிய தன்றே.

(இ-ள்.) இட்ட ஏட்டினில் எழுதிய செந்தமிழ்ப்பதிகம்=பிள்ளையாரிட்டருளிய திருவேட்டிலெழுதப்பட்ட "போகமார்த்தபூண்முலையாள்" என்னும் செந்தமிழ்ப்பதிகமானது; மட்டு உலாம்குழல்வளமுலைமலைமகள் பாகத்து அட்டமூர்த்தியைப்பொருளென உடைமையால்=வாசனைநிறைந்த கூந்தலையும் அழகிய திருமுலைகளையுமுடைய உமாதேவியை இடப்பாகத்துள்ள அட்டமூர்த்தியாகிய சிவபெருமானையே மெய்ப்பொருளாக உடைமையால்; அமர்ந்து பட்டதீயிடைப் பச்சையாய் விளங்கியது அன்றே=நிலைபெற்றுச் சொலிக்கின்ற நெருப்பினிடத்து அப்பொழுதே பச்சையாய் விளங்கியது.—எ-று

மையலெஞ்சடை யமணருந்தம்பொருள் வரைந்த
கையிலேட்டினைக் கதுவுசெந்தீயினி லிடுவா
ருய்யுமோவிது வெனவுறுங்கவலையா முணர்வா
னையுநெஞ்சின ராகியேநடுங்கிநின் றிட்டார்.

(இ-ள்.) மையல் நெஞ்சுடை அமணரும்=மயக்கம்பொருந்திய மனத்தையுடைய சமணர்களும்; தம்பொருள்வரைந்த கையில் ஏட்டினை=(ஒருபொருட்கு உரியவப் கூறாது பலபட அனேகாந்தமாகக் கூறுந்) தமது பொருளை யெழுதியகையிலிருக்கும் ஏட்டை; கதுவு செந்தீயினில் இடுவார்=(சேர்ந்தபொருளை) எரிக்கும் சிவந்ததீயினிடத்து இடுவாராய்; இது உய்யுமோ என உறும் கவலையாம் உணர்வால்=இவ்வேடு இந்நெருப்பில் எரியாது நிலைபெறுமோவென்றுண்டாகும் நிறைந்த உணர்ச்சியால்; நையும் நெஞ்சினராகியே நடுங்கிநின்று இட்டார்=வருந்திய மனதுடையராய் நடுக்குற்று நின்று அத்தீயிலிட்டார்கள்.—எ-று. (எஅஎ)

Koviloor Digital Library

அஞ்சுமுள்ளத்த ராகியுமறிவிலா வமணர்
வெஞ்சுடர்ப்பெருந் தீயினில்விழுத்திய வேடு
பஞ்சுதீயினிற் பட்டதுபடக்கண்டு பயத்தால்
நெஞ்சுசோரவும் பீலிகைசோர்ந்திலர் நின்றார்.

(இ-ள்.) அஞ்சும் உள்ளத்தாராகியும் அறிவு இலா அமணர் = அச்ச முற்றமனமுடையவராயுந் தமக்கறிவில்லாத சமணர்கள்; வெம் சுடர்ப்பெரும் தீயினில் விழுத்திய ஏடு=கொடிய சுவாலையோடு கூடிய பெருந்தீயிலிட்ட ஏடானது; தீயினில் பஞ்சுபட்டது=அத்தீயிற் பஞ்சுபோலாயது; படக்கண்டு பயத்தால் நெஞ்சு சோரவும் பீலிகை சோர்ந்திலர்நின்றார்=அவ்வாறாகக்கண்டும் பயத்தினால் தம்மனஞ்சோரவும் பிடித்தபீலிகைசோர்ந்து விழாமல் (உறுதியாய்) நின்றார்கள்.—எ-று. (எஅஅ)

மானமன்னவ னவையின்முன்வளர்த்தசெந் தீயின்
ஞானமுண்டவ ரிட்டவேடிசைத்தநா ழிகையி
லீனமின்மைகண் டியாவரும்வியப்புற வெடுத்தார்
பான்மைமுன்னையிற் பசுமையும்புதுமையும் பயப்ப.

(இ-ள்.) மான மன்னவன் அவையின் முன்வளர்த்த செந்தீயில் = பெருமைபொருந்திய பாண்டியனது சவையின் முன்னே ஆக்கிய சிவந்த நெருப்பில்; ஞானம் உண்டவர் இட்ட ஏடு=சிவஞானத்தைத் திருவமுது செய்த ஆளுடையபிள்ளையார் இட்டதிருவேடானது; இசைத்தநாழிகையில்= நியமித்த நாழிகையளவில்; ஈனம் இன்மை கண்டுயாவரும் வியப்புற=தனக்கொருகேடுமின்றி யிருத்தலைக்கண்டு யாவரும் அதிசயிக்க; பான்மை முன்னையிற்பசுமையும் புதுமையும் பயப்ப எடுத்தார்=முன்னுள்ள தன்மையினும் பசுமையும் புதுமையும் உண்டாயிருக்கும்படி எடுத்தருளினார்.—எ-று. (எஅக)

எடுத்தவேட்டினை யவையின்முன்காட்டியம் முறையி
லடுத்தவண்ணமே கோத்தலுமதிசயித் தரசன்
றொடுத்தபீலிமுன் றூக்கியகையரை நோக்கிக்
கடுத்துநீரிட்ட வேட்டினைக் காட்டுமி னென்றான்.

(இ-ள்.) எடுத்த ஏட்டினை அவையின்முன் காட்டி=பிள்ளையார் திருக்கரத்தால் தீயினின்றும்) எடுத்தருளிய திருவேட்டைப் (பாண்டியன்) சவையின்முன்னே (யாவருங்காணக்) காட்டியருளி; அம்முறையில் அடுத்த வண்ணமே கோத்தலும்=அத்திருமுறையில் முன்புள்ளபடியே கோத்தருளவும்; அரசன் அதிசயித்து=பாண்டியராசன் அதிசயித்து; தொடுத்த பீலி முன் தூக்கிய கையரைநோக்கி=சேர்த்துக் கற்றையாகக்கட்டிய மயிற்பீலியை முன்னே பிடித்துநின்ற சமணர்களைப்பார்த்து; கடுத்து நீர் இட்ட ஏட்டினைக்காட்டுமின் என்றான்=கோபித்து நீங்களிட்ட ஏட்டைக்காட்டுவீர்களாக வெனக்கூறினான்.—எ-று. (அகூ)

Koviloor Digital Library

வேறு.

அருகர்தாமிட்டவேடுவாங்கச்சென்றணையும்போதிற்
பெருகுதீக்கதுவவெந்துபோந்தமைகண்டமன்னன்
றருபுனல்கொண்டுசெந்தீத்தணிப்பித்தான்சமணரங்குக்
கருகியசாம்பலோடுங்கரியலான்மற்றென்காண்பார்.

(இ-ள்.) அருகர்தாம் இட்ட ஏடுவாங்கச்சென்று அணையும்போதில்= சமணர்கள் தாங்களிட்ட ஏட்டை எடுக்கப்போயடைந்தகாலத்தில் ; பெருகு தீக்கதுவவெந்து போந்தமைகண்ட மன்னன்=மிக்க தீச்சுட (அதனால்) உடல்வெதும்பி அவர் நீங்கியமையைப்பார்த்த பாண்டியன் ; தருபுனல்கொண்டு செந்தீத்தணிப்பித்தான்=(தண்மையைத்தரும்) நீரால் சுவாலித்தெழுந்த நெருப்பையவிப்பித்தான் ; சமணர் அங்கு கருகிய சாம்பலோடும் கரியலால்மற்று என்காண்பார்=சமணர்கள் அவ்விடத்துக் கருகிய சாம்பலுங் கரியுமன்றிப் பிறபொருள் யாதைக்காண்பார்கள்.—எ-று.

பிறபொருளின்மையில்கரி,சாம்பலேகாண்பாராயினரென்றும்.(எகக)

செய்வதொன்றறிகிலாதார்திகைப்பினாற்றிரண்டசாம்பல்
கையினாற்பிசைந்துதூற்றிப்பார்ப்பதுகண்டமன்ன
னெய்தியநகையினோடுமேடினமரித்துக்காணும்
பொய்யினான்மெய்ம்மையாக்கப்புகுந்தநீர்போமினென்றான்.

(இ-ள்.) செய்வது ஒன்று அறிகிலாதார் திகைப்பினால் திரண்ட சாம்பல்=செய்யுஞ்செயல் ஒரு சிறிது மறிந்திலாத சமணர்கள் தடுமாற்றத்தால்திரட்டியசாம்பலை ; கையினால் பிசைந்து தூற்றிப்பார்ப்பது கண்டமன்னன்=கையினாலே பிசைந்து தூற்றிப்பார்ப்பதைக்கண்ட அரசன்; எய்திய நகையினோடும் ஏடு இன்னம் அரித்துக்காணும்=பொருந்திய புன்னகையோடு (நீங்களிட்ட) ஏட்டை இன்னுமரித்துப்பாருங்கள் ; பொய்யினால் மெய்ம்மை யாக்கப் புகுந்த நீர்போமின் என்றான்=பொய்ந்நெறிகாரணமாக மெய்ம்மையைவிளக்கமுயன்ற நீவிர் போங்களென்றுசொன்னான்.—எ-று. (எகஉ)

வெப்பெறுந்தீயில்யான்முன்விடுபெற்றுய்யநீங்க
ளப்பொழுதழிந்துதோற்றீராதலாலதுவாருக
விப்பொழுதெரியிலிட்டவேடுய்ந்ததிலையென்றாற்
றப்புரவுடையீர்நீங்கள்தோற்றிலீர்போலுமென்றான்.

(இ-ள்.) வெப்பெறும் தீயில் யான்முன் விடுபெற்று உய்ய=சுரநோயென்னும் தீயினின்றும் நான்முன்பு (பிள்ளையாரால்) விடுதலைபெற்றுய்யுங்கால் ; நீங்கள் அப்பொழுது அழிந்துதோற்றீர்=நீவிர் அக்காலத்துச் (செயல்) அழிந்து தோற்றீர்கள் ; ஆதலால் அது ஆருக இப்பொழுது எரியில் இட்ட ஏடு உய்ந்ததில்லை என்றால்=ஆதலினால் அது வழியாக இப்போது

Koviloor Digital Library

(நீங்கள்) நெருப்பிலிட்ட ஏடு பிழைத்ததில்லையென்றால்; தப்புரவு உடையீர் நீங்கள் தோற்றிலீர்போலும் என்றான்=வன்மையுடைய நீவிர் தோற்காதொழிந்தீர்போலு மென்றுங்கூறினான்.—எ-று. (எகூ௩)

தென்னவ னகையுட்கொண்டு செப்பிய மாற்றந்தேரார்
சொன்னது பயனுக்கொண்டு சொல்லுவார் தொடர்ந்தவாது
முன்னுற விருகாற்செய்தோ மூக்காலி லொருக்கால்வெற்றி
யென்னினு முடையோமெய்ம்மை யினியொன்று காண்பதென்றார்.

(இ-ள்.) தென்னவன் நகை உட்கொண்டு செப்பியமாற்றம் தேரார்=பாண்டியன் புன்னகையையுட்கொண்டு சொல்லிய வார்த்தையையறியாராய்; சொன்னது பயனுங்கொண்டுசொல்லுவார் = சொன்னசொல்லைப் பயனுள்ளசொல்லாகக் கருதிச்சொல்லுகின்றார்; தொடர்ந்தவாது முன்னுற இருகால் செய்தோம் = முன்னே தொடுத்த வாதினை இரண்டுதரஞ் செய்தோம்; முக்காலில் ஒருக்கால் வெற்றியென்னினும் = மூன்றுதரத்திலொருதரமாயினும் வெற்றியடைவோமாயினும்; உடையோம் மெய்ம்மை= மெய்ம்மையையாமுமுடையோம்; இனி ஒன்றுகாண்பதென்றார்=இனியொருவாதுசெய்து காணத்தக்கதென்றார்கள்.—எ-று. (எகூச)

தோற்கவு மாசைநீங்காத் துணிவிலார் சொல்லக்கேட்டிம்
மாற்றமென் னுவதென்று மன்னவன் மறுத்தபின்னு
நீற்றணி விளங்குமேனி நிறைபுகழ்ச் சண்பைமன்னர்
வேற்றுவா தினியென்செய்வ தென்றலு மேற்கோளேற்பார்.

(இ-ள்.) தோற்கவும் ஆசைநீங்காத் துணிவு இலார்சொல்லக்கேட்டு=தாம் தோல்வியடையவும் மீட்டும் வெல்லுமாசை நீங்காத மெய்யுணர்வில்லாத அமணர்களிவ்வாறு சொல்லக்கேட்டு; இம்மாற்றம் என் ஆவதென்று மன்னவன் மறுத்தபின்னும்=(நீவிர்கூறும்) இவ்வார்த்தையென்பெறுமென்று பாண்டியன் மறுத்தபின்னும்; நீற்றணிவிளங்கும் மேனி நிறைபுகழ்ச் சண்பைமன்னர்=விபூதியாகிய ஆபரணம் விளங்குந் திருமேனியையும் நிறைந்த புகழையுமுடைய சீகாழித்தலைவராகிய பிள்ளையார்; வேற்றுவாது இனி என்செய்வது என்றலும்=வேறுவாதம் இனி இவர் யாதுசெய்வதென்றலும்; மேற்கோள் ஏற்பார்=(அவர் கூறியவார்த்தையை) மேற்கொள்வாராயினார்.—எ-று. விபூதி, பாவத்தைப்போக்கி ஐசுவரியத்தைத்கொடுப்பதன்றி ஆரமாபரணமாயுமிருந் தழகுசெய்யுமெனப்பலச் சுருதிகூறுதலில், நீற்றணியென்றார். (எகூடு)

நீடுமெய்ப் பொருளினுண்மை நிலைபெறுந் தன்மையெல்லா
மேடுற வெழுதிமற்ற வேட்டினை யாமுநீரு
மோடுநீ ராற்றிலிட்டா லொழுகுதல் செய்யாதங்கே
நாடிமுன் றங்குமேடு நற்பொருள் பரிப்பதென்றார்.

Koviloor Digital Library

(இ-ள்.) நீடும் மெய்ப்பொருளின் உண்மை நிலைபெறும்தன்மை எல்லாம்=மேம்பட்ட மெய்ப்பொருள்களினது உண்மை நிலைபெற்ற இயல்புகளையெல்லாம்; ஏடுற எழுதி மற்று அவ்வேட்டினை யாமும் நீரும்=ஏட்டின்கண் பொருந்த வெழுதி அவ்வேட்டை யாங்களும் நீரும்; ஓடும் நீர் ஆற்றில் இட்டால்=ஓடுகின்ற நீரையுடைய (வைகை) ஆற்றிலிட்டால்; ஒழுகுதல் செய்யாது அங்கே நாடிமுன் தங்கும் ஏடு நற்பொருள் பரிப்பது என்றார்=(ஆற்று நீரோடு) உடன் செல்லாது (அந்நீரில் எதிர்ந்து) முன்செல்லப்பெறும் ஏடு நல்லபொருளுடையதென்று சொன்னார்கள்.—எ-று. (எகசு)

என்றமண் கையர்கூற வேறுசீர்ப் புகலிவேந்தர்
நன்றது செய்வோமென்றங் கருள்செய நணுகவந்து
வென்றிவே லமைச்சனார்தாம் வேறினிச் செய்யுமிவ்வா
தொன்றிலுந்தோற்றார்செய்வ தொட்டியே செய்வதென்றார்.

(இ-ள்.) என்று அமண்கையர் கூற ஏறு சீர்ப்புகலிவேந்தர் = இவ்வாறு சமணர்களாகிய கீழ்மக்கள் சொல்ல மிக்க புகழையுடைய சீகாழித் தலைவராகிய ஆளுடையபிள்ளையார்; நன்று அதுசெய்வோமென்று அங்கு அருள்செய=(நீவிர்கூறியது) நன்று அதனைச்செய்வோமென்று அங்கருளிச் செய்ய; வென்றிவேல் அமைச்சனார் தாம் நணுகவந்து=வெற்றியையுடைய வேலேந்திய குலச்சிறைநாயனார் (அரசன்) சமீபிக்கவந்து; வேறு இனிச் செய்யும் இவ்வாது ஒன்றிலும் தோற்றார் செய்வது=வேறாக இனிச் செய்யப்படும் இவ்வாதொன்றிலுந் தோற்றவர்செய்வது (யாது); ஒட்டியேசெய்வதென்றார்=(அதனையிதுவென்று) உடன்பட்டு இனி வாதுசெய்யவேண்டுமென்று கூறினார்.—எ-று. ஒட்டல்=உடன்படல்.

சமணர் முன்செய்த வாதில் தோற்றும் பின்னும் வாதுசெய்ய உடன்பட்டாராதலின், மேல் வாது பெருகாது இதனோடொழிக்கவேண்டுமென்னுங் கருத்தால், தோற்றார் இவ்வாறு செய்கவென ஒட்டிச்செய்வதென்றாரென்றும். (எகஎ)

அந்தது கேட்டுநின்ற வமணரு மவர்மேற்சென்ற
பொங்கிய வெகுளிகூரப்பொறுமைகாரணமேயாகத்
தங்கள்வாய் சோர்ந்துதாமேதனிவாதிலழிந்தோமாகில்
வெங்கழு வேற்றுவானிவ் வேந்தனே யென்றுசொன்னார்.

(இ-ள்.) அந்து அதுகேட்டு நின்ற அமணரும் = அவ்விடத்திலதனைக்கேட்டு நின்ற சமணரும்; அவர் மேற்சென்ற பொங்கிய வெகுளி கூர=அக்குலச்சிறைநாயனார்மேல் உண்டாய மிக்ககோபமானது அதிகரிக்க; பொறுமைகாரணமே ஆக=பொறுமையே காரணமாக; தங்கள் வாய்சோர்

Koviloor Digital Library

ந்து தாமே தனிவாதில் அழிந்தோமாகில்=தமது வாய்சோர்ந்து தாங்களே ஒப்பற்ற இவ்வாதில் தோற்றோமாகில் ; வெம் கழுவேற்றுவான் இவ்வேந்தனே என்றுசொன்னார்=கொடிய கழுமுனையில் ஏற்றுகிறவன் இப்பாண்டியனேயென்று கூறினார்கள்.—எ-று.

இச்சூலச்சிறையாரே இவ்வாறு தம்மதத்தைக் கீழ்ப்படச்செய்தவரென்றுங் காரணத்தாலென்பார், அவர் மேற்பொங்கிய வெருளிகூரவென்றும்; சைவமதத்திற்கு மேன்மைவிளங்கியதேயென்றும் அருளை அவரிடத்தன்மையில், பொருமைகாரணமேயென்றும் ; வாதிலழிந்தார்க்கு அரசன் விதிக்குமுன் அவன் விதிக்கும் விதியைத் தாமேயுடன்பட்டு மானத்தால் இவ்வாறு செய்யென மேற்கொண்டு கூறினரென்பார், வெங்கழுவேற்றுவானிவ்வேந்தனேயென்றுங் கூறினர். (௭௯௮)

மற்றவர் சொன்னவார்த்தை கேட்டலு மலையமன்னன்
செற்றத்தா லுரைத்திருங்கள் செய்கையு மறந்தீரென்று
பற்றிய பொருளினேடு படர்புனல் வைகையாற்றிற்
பொற்புற விடுவதற்குப் போதுவ தென்றுகூற.

(இ-ள்.) மற்றவர் சொன்னவார்த்தைகேட்டலும் மலையமன்னன்=அச்சமணர்கள் சொன்ன பிரதிக்கினையைக்கேட்டவுடன் பொதியமலைக்கதிபனாகிய பாண்டியன் ; செற்றத்தால் உரைத்தீர் உங்கள் செய்கையும் மறந்தீரென்று=கோபத்தால் (இவ்வாறு) கூறினீர்கள் உங்களுடைய செய்கையையும் (நீவிர்) மறந்தீர்களென்று ; பற்றியபொருளின் ஏடு=சமய உண்மையையெழுதிய ஏட்டினை ; படர்புனல் வைகை ஆற்றில் பொற்புற இடுவதற்குப் போதுவதென்று கூற=பரந்துசெல்லும் நீரையுடைய வைகையாற்றின்கண் வெற்றியடையும்படி விடுதற்கு (நாமெல்லாம்) போகலாமென்றுகூற.—எ-று.

பிள்ளையார் முன்னம்பைம்பொற் பீடத்தை யிழிந்துபோந்து
தெள்ளுநீர்த் தரளப்பத்திச் சிவிகைமே லேறிச்சென்றார்
வள்ளலாரவர்தம்பின்பு மன்னன்மா வேறிச்சென்று
னுள்ளவா றறிகிலாதா ருணர்வுமா லேறிச்சென்றார்.

(இ-ள்.) பிள்ளையார் முன்னம் பைம்பொன் பீடத்தை இழிந்து போந்து=ஆளுடைய பிள்ளையார் முன்பு பசியபொன்னாலாகிய பீடத்தினின்றும் இறங்கிச் சென்றருளி ; தெள்ளும் நீர்த்தரளப் பத்திச்சிவிகைமேல் ஏறிச்சென்றார் = தெளிந்த நீரோட்டத்தையுடைய முத்தின்வரிசைகளாலாய திருச்சிவிகைமேல் எழுந்தருளிச்சென்றார் ; வள்ளலார் அவர் தம் பின்பு மன்னன்மா ஏறிச்சென்றான்=வள்ளன்மையையுடைய ஆளுடைய பிள்ளையார் பின்னே பாண்டியன் குதிரையிலேறிப்போயினான் ; உள்ளவாறு அறிகிலாதார் உணர்வுமால் ஏறிச்சென்றார்=மெய்ந்நெறியை யறியாத சமணர்கள் உணர்வு மயங்கிச் சென்றார்கள்.—எ-று. (௮௦௦)

Koviloor Digital Library

தென்னவன் வெப்புத்தீர்ந்து செழுமணிக் கோயினீங்கிப்
பின்றுற வணைந்தபோது பிள்ளையார் பெருகுஞ்செல்வ
மன்னிய மதுரைமூதூர் மறுகில்வந் தருளக்கண்டு
துன்னிய மாதர்மைந்தர் தொழுதுவே றினையசொன்னர்.

(இ-ள்.) தென்னவன் வெப்புத்தீர்ந்து செழுமணிக்கோயில் நீங்கி= பாண்டியன் சுரநோய் நீங்கிச் செழுமைபொருந்திய மணிமயமான கோயிலி னின்றும் நீங்கி; பின்றுற அணைந்தபோது=பின்னே பொருந்தச்சென்ற காலத்தில்; பிள்ளையார் பெருகும் செல்வம்மன்னிய மதுரை மூதூர் மறுகில் வந்தருளக்கண்டு=ஆளுடைய பிள்ளையார் மிக்கசெல்வம் நிலைபெற்ற பழமைபொருந்திய மதுராபுரியின் வீதியிலெழுந்தருளப்பார்த்து; துன்னிய மாதர் மைந்தர் தொழுது வேறு இனையசொன்னர்=அந்நகரத்தில் நெருங்கிய பெண்களும் ஆடவர்களும் வணங்கித் தனித்தனி யிவ்வாறுசொல்வாரராயினர்.—எ-று.

மீனவன் கொண்டவெப்பை நீக்கிநம் விழுமந்தீர்த்த
ஞானசம் பந்தரிந்த நாயனர் காணுமென்பார்
பானறுங் குதலைச்செய்ய பவளவாய்ப் பிள்ளையார்தா
மானசீர்த் தென்னனடு வாழவந் தணைந்தாரென்பார்.

(இ-ள்.) மீனவன் கொண்டவெப்பை நீக்கி நம் விழுமம் தீர்த்த = பாண்டியன் கொண்ட சுரநோயை நீக்கி நமது துன்பத்தைப் போக்கியருளிய; ஞான சம்பந்தர் இந்த நாயனர் காணும் என்பார்=ஞானசம்பந்தரென்னுந் திருநாமமுடையார் இந்தநாயனரோ காணுமென்று கூறுவார்; பால்நறுங் குதலைச்செய்ய பவளவாய்ப் பிள்ளையார் தாம்=திருமுலைப்பாலினது நறுமணம் கமழுங்குதலைச்சொல்லையுஞ்சிவந்தபவளம்போலுந் திருவாயையுமுடைய ஆளுடைய பிள்ளையார்; மானசீர்த்தென்னன் நாடுவாழ வந்தணைந்தார் என்பார்=வெற்றிமிக்க சிறப்பினையுடைய பாண்டிநாடுவாழும்படி எழுந்தருளினரென்று கூறுவார்.—எ-று. (௬0௨)

எரியிடை வாதிற்றோற்ற திவர்க்குநம் மருகரென்பார்
புரிசடை யண்ணனீறே பொருளெனக் கண்டோமென்பார்
பெருகொளி முத்தின்பைம்பொற் சிவிகைமேற் பிள்ளையார்தாம்
வருமழ கென்னேயென்பார் வாழ்ந்தன கண்களென்பார்.

(இ-ள்.) எரியிடைவாதில் தோற்றது இவர்க்கு நம் அருகர் என்பார்= நெருப்பினிடத்து (ஏடிட்டுச்செய்த) வாதில் தோற்றது இப்பிள்ளையாருக்கு நம்மவர்கள் மாராகிய அருகர்கள் என்று கூறுவார்; புரிசடை அண்ணல் நீறே பொருளெனக் கண்டோம் என்பார் = முறுக்குப்பொருந்திய சடையை யுடைய சிவபெருமானது திருநீறே மெய்ப்பொருளென்று கண்டோமென்று சொல்லுவார்கள்; பெருகு ஒளிமுத்தின்பைம் பொன்சிவிகைமேல்=பெரு

Koviloor Digital Library

கியமிக்க வொளிநிறைந்தமுத்தின் வரிசைகளையுடைய பசியபொன்னாலாகிய சிவிகையின்மேல்; பிள்ளையார் தாம் வரும் அழகு என்னே என்பார் = இவ் வாறுடையபிள்ளையார் வரும்பொலிவு என்ன வியப்பென்று சொல்லுவார் கள்; வாழ்ந்தன கண்கள் என்பார்=(இப்பொலிவைக்காணுதலால் நமது) கண்கள் வாழ்வடைந்தன வென்று சொல்லுவார்கள்.—எ-று. (அ௦ங)

ஏதமே வந்ததிந்த வடிகண்மா ரியல்பாலென்பார்
நாதனு மாலவாயி னம்பனே காணுமென்பார்
போதமா வதுவுமுக்கட் புராணனை யறிவதென்பார்
வேதமு நீறுமாகி விடும்விடு மெங்குமென்பார்.

(இ-ள்.) இந்த அடிகள் மார் இயல்பால் ஏதமே வந்தது என்பார்= இந்த அடிகள்மாரது செய்கையினாலே (எமக்கெல்லாம்) குற்றம் வந்ததென் று சொல்லுவார்கள்; நாதனும் ஆலவாயில் நம்பனே காணும் என்பார்= இறைவனுந்திருவாலவாயி லெழுந்தருளிய சுந்தரேசனேயென்று சொல்லுவா ர்கள்; போதம் ஆவதுவும் முக்கண்புராணனை அறிவது என்பார்=மெஞ்ஞா னமாவதும் மூன்றுகண்களையுடைய சிவபெருமானை உணரும் உணர்ச்சி யென் றுஞ்சொல்லுவார்கள்; வேதமும் நீறுமாகி விடும் விடும் எங்கும் என்பார்= மேல்வேதமும் விபூதியுமாய் எங்கும்பரவி விடுமென்றுஞ் சொல்லுவார்கள்.

விடும், விடுமென்றது துணிவுப்பொருளில்வந்த அடுக்கு. (அ௦ச)

அடிகண்மார் முகங்களெல்லா மழிந்தன பாரீரென்பார்
கொடியவஞ் சனைகளெல்லாங் குலைந்தன போலுமென்பார்
வடிகொள்வேன் மாறன்காதன் மாறின வண்ணமென்பார்
விடிவதாய் முடிந்ததிந்த வெஞ்சம ணிருளுமென்பார்.

(இ-ள்.) அடிகள்மார்முகங்கள் எல்லாம் அழிந்தன பாரீர் என்பார்= (நம்முடைய) சமணமுனிவர்களது முகங்களெல்லாம் வாடியிருந்தனபாருங்க ளென்று சொல்லுவார்கள்; கொடியவஞ்சனைகள் எல்லாம் குலைந்தன போ லும் என்பார்=(நமது அடிகள் மார் செய்யும்) கொடியமாயா சாலங்களெல் லாம் நிலைகெட்டழிந்தனபோலு மென்று சொல்லுவார்கள்; வடிகொள் வேல்மாறன் காதல்மாறின வண்ணம் என்பார் = வடித்தவேலை யேந்திய பாண்டியனது (அடிகள் மார்மேல் வைத்த) பற்றுமாறினமை (இவ்வாறே) என்று சொல்லுவார்கள்; இந்த வெம் சமண் இருளும் விடிவதாய் முடிந்தது என்பார்=இக்கொடிய சமணராகிய அந்தகாரமுமின்று புலர்ந்ததாய் முடிந்த தென்று சொல்லுவார்கள்.—எ-று. (அ௦ரு)

நெருப்பினிற் றோற்றார்தாங்க ணீரில்வெல் வர்களோவென்பா
ரிருப்புநெஞ் சுடையரேனும் பிள்ளையார்க் கெதிரோவென்பார்
பருப்பொரு ளுணர்ந்தார்தாங்கள் படுவன பாரீரென்பார்
மருப்புடைக் கழுங்கோல் செய்தார் மந்திரி யார்தாமென்பார்.

Koyiloor Digital Library

(இ-ள்.) நெருப்பினில் தோற்றார் தாங்கள் நீரில் வெல்வர்களோ என்பார்=(நெருப்பில் ஏடு இட்டு வாதுசெய்து) தோற்ற சமணர்கள் நீரில் (ஏடு இட்டு) வெல்லுவார்களோ என்று சொல்லுவார்கள்; இருப்பு நெஞ்சுடையோரும் பிள்ளையார்க்கு எதிரோ என்பார் = (நம் அடிகள்மார்) இரும்பு போல் கடின மனமுடையாராயினும் பிள்ளையாரோடு வாதுசெய்தற்கு எதிர் நிற்பாரோ என்று சொல்லுவார்கள்; பருப்பொருள் உணர்ந்தார் தாங்கள் படுவனபாரீர் என்பார்=நுண்பொருளல்லாதபொருளை யுணர்ந்த இச்சமணர்கள் தாம்படும் பாடுகளைப் பின்பு பாரீரென்று சிலர் சொல்லுவார்கள்; மந்திரியார்தாம் மருப்புடைக்கழுக்கோல் செய்தார் என்பார் = குலச்சிறையார் (மான்முதலியவற்றின்) கொம்புகளை நுனியின்கண்வைத்த கழுமரங்களைச் செய்தாரென்று சொல்லுவார்கள்.—எ-று. (௮௦௬)

ஏடுகள் வைகைதன்னி லிடுவதற் கணைந்தாரென்பா
ரோடுநீ ருடன்செலாது நிற்குமோ வோலையென்பார்
நீடிய ஞானம்பெற்றார் நிறுத்தவும் வல்லரென்பார்
நாடெலாங் காணவிங்கு நண்ணுவர் காணீரென்பார்.

(இ-ள்.) ஏடுகள்வைகைதன்னில் இடுவதற்கு அணைந்தார் என்பார்=(இவ்விருவருந் தத்தஞ் சமயக்கொள்கையை வரைந்த) ஏடுகளைவைகையாற்றி லிடவந்தார்களென்று சொல்லுவார்கள்; ஓடும் நீருடன் செலாது நிற்குமோ ஓலையென்பார்=(ஓட்டெடுக்கும்) நீர்ப்பெருக்கோடு செல்லாது ஏடுகள் நிற்குமோ என்றுசொல்லுவார்கள்; நீடிய ஞானம் பெற்றார் நிறுத்தவும் வல்லர் என்பார்=மிக்கசிவஞானத்தைப் பெற்ற பிள்ளையார் தாமிட்ட ஏட்டை நீர்வழிச்செல்லாது நிறுத்தவும் வல்லவர் என்று சொல்லுவார்கள்; நாடு எலாம் காண இங்கு நண்ணுவர்காணீர் என்பார்=நாட்டிலுள்ளாரெல்லாரும் (இவ்வதிசயத்தைக்) காணும்படி இந்நகரத்தில் வருகின்றார்கள் (இதனைக்) காண்பீராகவென்று சொல்லுவார்கள்.—எ-று. (௮௦௭)

தோற்றவர் கழுவிலேறத் துணிவதே யருகரென்பா
ராற்றிய வருளின்மேன்மை பிள்ளையார்க் கழகிதென்பார்
நீற்றினாற் றென்னன்றீங்கு நீங்கிய வண்ணங்கண்டார்
போற்றுவா ரெல்லாஞ்சைவ நெறியினைப் போற்றுமென்பார்.

(இ-ள்.) தோற்றவர்கழுவில் ஏறத் துணிவதே அருகர் என்பார்=தோற்றவர்கள் கழுமுனையிலேறும்படி அருகர்கள் துணிந்தது நிச்சயம் என்று சொல்லுவார்கள்; ஆற்றிய அருளின்மேன்மை இது பிள்ளையார்க்கு அழகு என்பார்=(பலமான்மியங்களைச்செய்யத்தக்க) திருவருளின் மேன்மையான இது இப்பிள்ளையாருக்கழகாக இருந்ததென்று சொல்லுவார்கள்; நீற்றினால் தென்னன் தீங்கு நீங்கியவண்ணம்கண்டார்=விபூதியினால் பாண்டியன் தனது சுரநோயினின்றும் நீங்கியவகையை யாவருங்கண்டார்கள் (அதனால்);

Koviloor Digital Library

போற்றுவார் எல்லாம் சைவநெறியினைப்போற்றும் என்பார்=(உண்மைநெறியைப்) போற்றுதற்குரிய எல்லீருஞ் சைவமார்க்கத்தைப்போற்றுங்களென்று சிலர் சொல்லுவார்கள்.—எ-று. (அ௦அ)

இன்னன விரண்டுபாலு மீண்டின ரெடுத்துச்சொல்ல
மின்னொளி மணிப்பொற்கொம்பின் வெண்குடை மீதுபோதப்
பன்மணிச் சிவிகைதன்மேற் பஞ்சவ னாட்டுளோர்க்கு
நன்னெறி காட்டவந்தார் நான்மறைவாழவந்தார்.

(இ-ள்.) இன்னன இரண்டுபாலும் ஈண்டினர் எடுத்துச்சொல்ல= இவ்விதவார்த்தைகளைப் பிள்ளையாரெழுந்தருளும் வீதியின் இருபக்கத்தும் நெருங்கியமைந்தருமாதரும் எடுத்துச்சொல்ல; மின் ஒளி மணிப்பொன் கொம்பின் வெண்குடைமீதுபோத=மின்போலு மொளிவிளங்கும் மணிகளழுத்திய பொன்காம்பினையுடைய திருமுத்துக்குடைமேலே பிரகாசிக்க; பன்மணிச்சிவிகைதன்மேல் பஞ்சவன் நாட்டுளோர்க்கு நன்னெறிகாட்டவந்தார்=அளவில்லாத முத்தாலமைந்த திருச்சிவிகையின்மேல் பாண்டிநாட்டுள்ள பலரும் உய்யும் நெறியையுணர்த்தவந்த ஆளுடையபிள்ளையார்; நான்மறை வாழவந்தார்=நான்குவேதங்களும் நிலைபெற வீதியிலெழுந்தருளினார்.—எ-று.

சுருதிக்குப் புறம்பாய அருகம்-பவுத்தமுதலிய மதங்களை நிராகரித்து நான்குவேதங்களின் சாரமான சிரவுதத்தை நிலைப்படுத்தலில், நான்மறை வாழவந்தாரென்றார். (அ௦௯)

தென்றமிழ் விளங்கவந்த திருக்கழு மலக்கோன் வந்தான்
மன்றுளா ரளித்தஞான வட்டில்வண் கையன்வந்தான்
வென்றுல குய்யமீள வைகையில் வெல்வான்வந்தா
னென்றுபன் மணிச்சின்னங்க ளெண்டிசை நெருங்கியேங்க.

(இ-ள்.) தென்தமிழ்விளங்கவந்த திருக்கழுமலக்கோன் வந்தான்= தெற்கின்கணுள்ளதமிழ்நாடுவிளங்கும்படி அவதரித்த சீகாழித்தலைவரெழுந்தருளினார்; மன்றுளார் அளித்த ஞானவட்டில் வண்கையன்வந்தான்=கனகசபையில் நிருத்தஞ்செய்தருளும் பெருமானருளிய ஞானப்பால் நிறைந்த பொற்கிண்ணத்தையேந்திய அழகிய திருக்கரத்தையுடையவரெழுந்தருளினார்; வென்று உலகு உய்ய மீளவைகையில் வெல்வான்வந்தான்=(சமணர்களை நெருப்பில்) வென்று உலகுய்யும்படிக்குமீண்டு வைகையில் வெல்லுகின்றவர் வந்தார்; என்று பன்மணிச்சின்னங்கள் எண்திசைநெருங்கி ஏங்க= என்று பலமுத்துக்களாலமைந்த திருச்சின்னங்கள் எட்டுத்திக்குகளிலும் நெருங்கியொலிக்கவும்.—எ-று.

சின்னங்களென்றதனால் காளம், சின்னம், தாரைமூன்றும் கொள்ளப்படும்.

Koviloor Digital Library

இம்மூன்றும் ஞானசம்பந்தன், பாலறுவாயன், முத்தமிழ்விரகன் என்னும் திருநாமங்கள் மூன்றையுமுறையேயொலிக்குமென முன்னர்க்கூறி, ஈன்ற கமுமலத்தோன், ஞானவட்டில்வண்கையன், வைகையில் வெல்வான் என்னும் நாமங்களைப் பொதுவாய் ஒலிக்குமென்றுணர்த்தியதென்னை? அம்மூன்று நாமமும் பிள்ளையார்க்கு இயற்பெயராய் வழங்கப்படுதலில், அந்நாமங்களை ஓர் திருப்பதி புகுங்கால் காளம், சின்னம், தாரைமூன்றும் முறையேயொலிக்குமெனவும்; ஏனையகவுணியர் தலைவன், சண்பையர்தலைவன், புகலிகாவலன்முதலிய பலகாரணப்பெயர்களை யிடையிடையே முறைபிறழ்ந்து பொதுமையாய் ஒலிக்குமெனவுங்கொள்க.

அவ்வாறு கொள்ளவேண்டுமென்பது, "சேணி தெருவினூடு திருமணஞ்செல்ல முத்தி, வேணிகாளஞ் சின்னமிலங்கொளித் தாரையெல்லாம், பேரொலிபெருக முன்னே பிடித்தன மறைகளோடு, தாரணியுய்ய ஞானசம்பந்தன் வந்தானென்று" எனக்கூறி "மண்ணிறுக்கிடுக்கண்டீரவந்தவர் திருநாமங்க, ளெண்ணில பலவுமேத்திச் சின்னங்களெழுந்தபோது" எனக்கூறுதலால், அம்மூன்று நாமங்களையேயன்றி யேனைய பல அவாந்தர நாமங்களையுமிடையே ஒலிக்குமென்பது பெறப்படுதலினென்க. (அ௲௰)

பன்மணி முரசஞ்சூழ்ந்த பல்லிய மியம்பப்பின்னே
தென்னனுந் தேவியாரு முடன்செலத் திரண்டுசெல்லும்
புன்னெறி யமணர்வேறோர் புடைவரப் புகலிவேந்தர்
மன்னிய வைகையாற்றின் கரைமிசை மருவவந்தார்.

(இ-ள்.) பன்மணி முரசம் சூழ்ந்த பல்லியம் இயம்ப=பல அழகிய முரசமுதலியவாகச்சூழ்ந்த பலவாத்தியங்களொலிக்கவும்; பின்னே தென்னனும் தேவியாரும் உடன்செல=தம்பின்னே பாண்டியனும் பாண்டிமாதேவியாருங் கூடவரவும்; திரண்டுசெல்லும் புன்னெறி அமணர் வேறோர் புடைவர=திரண்டு தொகுதியாகவரும் புன் சமயவழியிற் செல்லு மமணர்கள் வேறோர் பக்கலிற் செல்லவும்; புகலிவேந்தர் மன்னிய வைகை ஆற்றின் கரை மிசை மருவவந்தார்=சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார் நிலைபெற்ற வைகையாற்றின்கரையிலே பொருந்தவந்தருளினார்.—எ-று. (அ௲௧)

கார்கெழு பருவம்வாய்ப்பக் காமுறு மகளிருள்ளஞ்
சீர்கெழு கணவன்றன்பால் விரவுறச் செல்லுமாபோ
னீர்கெழு பௌவநோக்கி நிரைதிரை யீரத்துச்செல்லும்
பார்கெழு புகழின்மிக்க பண்புடைவைகையாறு.

(இ-ள்.) கார்கெழுபருவம்வாய்ப்பப் பார்கெழுபுகழின்மிக்க பண்புடை வைகை ஆறு=நிறைந்த கார்ப்பருவம் வர உலகில் நிறைந்த புகழால் மேம்பட்ட வைகையாறானது; காமுறும் மகளிர் உள்ளம் சீர்கெழு கணவன்

Koviloor Digital Library



வைகைநதியில் ஏடிடும்பொருட்டு திருஞானசம்பந்தசுவாமிகளும் பாண்டியராஜனும் - மந்திரியாரும் சமணர்களும் சென்றது.

Koviloor Digital Library

தன்பால்விரவுறச்செல்லுமாபோல்=கணவனைவிரும்பிய பெண்களாது மனமானது சிறப்பு மிக்க தமது நாயகனிடத்துப் பொருந்தச்செல்லும்வகைபோல; நீர்கெழுபௌவம் நோக்கி நிரை திரை இரைத்துச்செல்லும்=நீர் நிறைந்த கடலைநோக்கி வரிசையாக அலைகளை வீசியொலித்துப்பாயும்.—எ-று.

மகளிருள்ளம் கணவரிடத்துச் செல்லுதற்குக் கார்கெழுபருவம் நிமித்தமாதல்போல, வைகையாறு பௌவம் நோக்கி விரைந்துசெல்லுதற்குங் கார்ப்பருவம் நிமித்தமாதலின், அதுபொருளினும் பிரித்துக்கூட்டப்பட்டது.

ஆற்றினீர் கடுகவோடு மருங்குற வரசனோக்கி
நீற்றணி திகழ்ந்தமேனி நிறைமதிப் பிள்ளையாரும்
வேற்றுரு வருகர்நீரும் விதித்தவே டிடுகவென்றுன்
தோற்றவர் தோலாரென்று முன்னுறத் துணிந்திட்டார்கள்.

(இ-ள்.) ஆற்றில் நீர் கடுகவோடும் மருங்குற அரசன்நோக்கி=வைகையாற்று நீர்விரைந்து செல்லுங் கரையினருகுவருங்கால் பாண்டியராசன் பார்த்து; நீற்றணிதிகழ்ந்தமேனி நிறைமதிப்பிள்ளையாரும் = விபூதியாகிய ஆபரணம் விளங்குகின்ற திருமேனியையுடைய பூரண சந்திரன்போலும் பிள்ளையாரும்; வேற்றுரு அருகர் நீரும் விதித்த ஏடு இடுக என்றான்= (வேதநெறியல்லாத) வேற்றுச்சின்னங்களைப்பூண்ட அருகரே நீவிரும் நியமிக்கப்பட்ட ஏட்டினையிடக்கடவீரென்றான்; தோற்றவர்தோலாரென்று முன்னுறத்துணிந்து இட்டார்கள்=(அதைக்கேட்ட அமணர்கள்) முன்தோற்றவர்கள் பின்னுந் தோல்வியடையாரென்று துணிந்து முற்பட்டுத் (தம்கையிலிருக்குஞ்சமயநூல்களை) யிட்டார்கள்.—எ-று. (அகரு)

படுபொரு ளின்றிநெல்லிற் பதடிபோ லுள்ளிலார்மெய்
யடுபவர் பொருளை யத்தி நாத்தியென் றெழுதியாற்றிற்
கடுகிய புனலைக்கண்டு மவாவினாற் கையிலேடு
விடுதலும் விரைந்துகொண்டு வேலைமேற் படர்ந்ததன்றே.

(இ-ள்.) படுபொருள் இன்றி நெல்லில் பதடிபோல் உள் இலார்= தம்முட்டோன்றும் பொருளின்மையால் நெல்லிற்பதர்போல அறிவென்னு முள்ளீடில்லாதவர்களாய்; மெய் அடுபவர் = மெய்ப்பொருளைப்பொய்ப்பொருளென்று கருதுஞ் சமணர்கள்; பொருளை அத்திநாத்தி என்று எழுதி=தமது (அருகநூலிற்கூறும்) பொருள்களைப் பலபட(அனேகாந்தமாய்) உண்டென்றும் இல்லையென்றும் வரைந்து; ஆற்றில் கடுகிய புனலைக்கண்டும் அவாவினால் கையில் ஏடுவிடுதலும்=ஆற்றில் வேகமாய்ச்செல்கின்ற நீரைப்பார்த்தும் (தாம் வெல்லுவோமென்னும்) ஆசையால் கையிலிருக்கும் ஏடுகளைவிடவும்; விரைந்து சென்று வேலை மேல் படர்ந்தது அன்றே=அவ்வேட்டை வைகையாறு விரைவாக அடித்துக்கொண்டு கடல்மேற்சென்றது.—எ-று.

Koviloor Digital Library

சமணர் சத்தபங்கியென்னும் நியாயத்தால் ஒவ்வொருபொருளினி-த்தும் வெவ்வேறு இயல்பை உபவாதனைசெய்கின்றார்கள். அதனால் அவர் மதத்தில் அனேகாந்தவாதமாய் உள்ளதுமாம் இல்லதுமாம் எனப்பொருள் களினியல்புகூறப்படுதலில், அஸ்தி நாஸ்தி என்றார். முன்சொன்னபொருள் பங்கப்படுதலிற் பங்கியென்பர். பங்கம்=மறுத்தல்.

அவர்கள் சீவபதார்த்தமொன்றும, அசீவபதார்த்தமொன்றும், ஆச்சிரவசு ஒன்றும், சம்வரமொன்றும், நிர்சரமொன்றும், பந்தமொன்றும், மோக்கமொன்றுமெனப் பதார்த்தம் ஏழென்பர்.

அவற்றுள் சீவன் - அருநிசித்தசீவனென்றும், முத்தசீவனென்றும், பத்தசீவனென்றும் மூவகைப்படும். அச்சீவன் அறிவுடையவனும், சித்தனும், உடம்பினளவு எவ்வளவோ அவ்வளவு பரிமாணமுள்ளவனும், அவயவ விசிட்டனும், சீவாத்திகாயமெனப் பெயர்பெற்றுநிற்கும். அதனால் அருநிசித்தசீவனென்றது, அருகபரமேட்டியின் சீவாத்திகாயமென்றும்; முத்தசீவனென்றது, மோகாதியினால் விடப்பட்ட முத்தசீவாத்திகாயமென்றும்; பந்தசீவனென்றது, மோகாதிபந்தத்தோடுகூடிய சீவாத்திகாயமென்றுங் கூறுவர்.

அசீவபதார்த்தம்-புட்கலாத்திகாயம், ஆகாசாத்திகாயம், தன்மாத்திகாயம், அதன்மாத்திகாயமென நான்குவகைப்படுமென்றும்; அவற்றுள் புட்கலாத்திகாயம்-பிருதிவியாதி நான்குமகா பூதங்களும், புல், செடி, கொடி, மரம், முதலிய தாவரங்களும்; சராயுசம், அண்டசம், சுவேதசம் என்னுஞ் சங்கமங்களுமென அறுவகையாயிருக்கும்.

ஆகாசாத்திகாயம் - உலோகாகாசாத்திகாயம், அலோகாகாசாத்திகாயம் என இருவகையாம். அவற்றுள் உலோகாகாசாத்திகாயம், சரீரத்துளிருக்கும் ஆகாயம். அலோகாகாசாத்திகாயம், வெளியிலிருக்கும் ஆகாயம். தன்மாத்திகாயம், புட்கலாத்திகாயத்தினின்றும் மேற்செல்லுங்கதிக்கு ஏதுவாயிருக்கும். அதன்மாத்திகாயம், கீழ்ச்செல்வதற் கேதுவாவும் சரீரபந்தத்திற்கேதுவாயும் இருக்கும்.

ஆச்சிரவசு, கண்முதலிய இந்திரியங்களெல்லாம் தங்கள் தங்கள் விருத்திகளிற்செல்வது. அவ்விந்திரியங்கள், கணத்துக்குக்கணம் தங்கள் தங்கட்குரிய விஷயங்களிற் பெருகியோடுதலால் ஆச்சிரவசு எனப்பெயர்பெறும்.

சம்வரம், இந்திரியங்களைச் சம்யமமாக நிறுத்தும் தியானம். அவை கடும்பாறையிற் கிடத்தல், தலைமயிர் பறித்தல் முதலிய தவங்கள்.

நிர்சரம், இந்திரியங்களைச் சகிக்கும்படியான கன்மம்.

பந்தமாவது, சுதந்தரங்களைக்கெடுக்கும் மோகமுதலிய குற்றம். மோகாதி அருகுணங்களினாலும் சீவன் பந்திக்கப்படுதலால் பந்தமெனப்பெயர்

Koviloor Digital Library

பெறும். எவ்வாறெனில், சலத்திலமுழ்ந்தாதுமிதக்குமியல்புடைய சுரைக்குடுக் கையை இரும்புக்கூட்டிற்சேர்த்துச் சலத்திலவிட்டால் அது அமுழ்ந்திவிடு வதுபோல்வது.

மோக்கமாவது, இரும்புக்கூட்டையுடைத்துவிட்டால் சுரைக்குடுக் கையெவ்வாறு மேற்செல்லுமோ அதுபோல மோகாதிகள் கெட்டகாலத்துச் சீவன்மேலே முத்தியிற் செல்வது. இப்பதார்த்தம், உண்டென்றும் இல்லை யென்றும் எழுபகுப்பாய் விவகரிக்கப்படுதலில், அது சத்தபங்கி நியாயமென வழங்கப்படும்.

சத்தபங்கி நியாயமாவது, இப்பொருள் உள்ளதா என்னுங்கால் உள்ள துமாம், இல்லதுமாம், உள்ளது மில்லதுமாம் எனச்சத்திற்கு மூன்று பகுப் பாயும்; இப்பொருள் அவாச்சியமாவென்று வினவுங்கால் அவாச்சியமென் றுஞ் சொல்லலாம். அவாச்சியமாயுண்டென்றுஞ் சொல்லலாம், அவாச்சிய மாயில்லையென்றுஞ் சொல்லலாம், அவாச்சியமாயில்லையென்றும் உண்டென் றுஞ் சொல்லலாம். என அவாச்சியத்துவத்திற்கு நான்குபகுப்பாயும் எழுப குப்பாய்க்கூறப்படுவதாம்.

ஒருவஸ்துவில் நித்தியத்துவமும், அநித்தியத்துவமும், நித்தியா நித் தியத்துவமும், அவாச்சியத்துவமும், வாச்சியத்துவமும் ஓர்காலத்தொருங்கு நிற்றல் பொருந்தாமையில் அசம்பவதோடமாம். எவ்வாறெனில் மண், உண் டையாயிருக்குங்காலத்தில் கபாலமும், கபாலமாயிருக்குங்காலத்தில்கடமும் இல்லாமையால் என்க. இம்மூன்றிற்கும் விவகார அவத்தைவேறு வேறே யன்றி யொன்றன்று.

முன், பத்துபதார்த்தமென்றது சமணருளொருசாரார் மதம். ஈண்டு ஏழென்றதொரு சாரார்மதம். (அகச)

ஆறுகொண் டோடுமேட்டைத் தொடர்ந்தெதி ரணைப்பார்போலத்
தேறுமெய் யுணர்விலாதார் கரைமிசை யோடிச்சென்றார்
பாறுமப் பொருண்மேற்கொண்ட பட்டிகை யெட்டாதங்கு
நூறுவிற் கிடக்கைமுன்னே போனது நோக்கிச்சென்றார்.

(இ-ள்.) ஆறுகொண்டு ஓடும் ஏட்டைத்தொடர்ந்து எதிர் அணைப்பார் போல=வைகையாறு தன்மேற்கொண்டு கடலின்மேற்செல்லு மேட்டினைப் பின்றொடர்ந்து அதன்முன்னணைப்பவர்போல ; தேறும் மெய்யுணர்வு இலா தார் கரைமிசை ஓடிச்சென்றார்=தெளிந்த மெய்யுணர்ச்சியில்லாத சமணர் கள் கரைமேலோடிச்சென்றார்கள் ; பாறும் அப்பொருள்மேற்கொண்டபட் டிகை எட்டாது=(வாதிக்குங் காலநிலைபெரு தழியும்) பொய்ப்பொருளை மேற்கொண்ட அவ்வேடுகள் அவர் கைக்கு எட்டாமல்; அங்கு நூறுவிற்கிடக் கை முன்னே போனது நோக்கிச்சென்றார்=அவ்வெள்ளத்தில் நூறுவிற்

Koviloor Digital Library

கிடைக்குமேல் முற்பட்டுச் சென்றமையைப்பார்த்துக் கரைமேல் மீண்டுவந்தார்கள்.—எ-று.

பாறும் அப்பொருளென்றது - மேற்கூறிய சிவன், அசிவன் என்னும் பகுப்பாய், எழுவகைத்தாய், அஸ்தி, நாஸ்தியென்று விவகரிக்கப்படும் பொருளையுடைய ஏடென்க. அப்பொருள்கள் அவர் கூறும் அவ்வியல்பினில்லாது மறுக்கப்படுதலின், பாறும் அப்பொருள்களென்றார்.

அவையாவன, அருகபரமேட்டியைச் சிவனாய்க்கூறி நித்தியமான இயற்கை ஞானமுடையனென்றலும்; சிவனைச் சங்கோச விகாசதன்மியாயிருப்பனென்றலும், ஓர்பொருளை அஸ்தியென்றுகூறி, அஸ்திநாஸ்தியென்று பல படக்கூறுதலும், உலகு ஒருவரால் படைக்கப்பட்டதல்லவென்று கூறுதலும் முதலியன.

இவை மறுக்கப்படுமாறு ஒருவாறுகாட்டுதும்.

அருகனுக்கு அனந்தஞான முடைமையை மறுத்தல்.

சந்திரனிடத்துச் சீதகுணம்போல அருகபரமேட்டியிடத்து அனந்த ஞான முதலியன இயற்கையாயுள்ளனவெனில் குற்றமாம். பாவம்வராது அறத்தினின்றனென்று அவர்கூறுதலில், பந்தமுதலிய குற்றங்களினின்றும் விடப்பட்டு வேறு முத்தர்போல் சேர்க்கை ஞானமுடையனென்பது சித்தித்தலில், கன்மாசம் வந்து முத்தனானவனென்றும். அதனாலது பொருந்தாது.

சிவன், சங்கோசவிகாச தன்மியென்றதை மறுத்தல்.

சிவன், எறும்பின் சரீர அளவில் சுருங்கியும், யானையின் சரீர அளவில் விரிந்து மிருத்தலால், சங்கோசவிகாச தன்மியாமெனில் ஒருடலில் ஓரவயவங்குறைக்க அவ்வளவில் அச்சிவன்குறையவேண்டும். இன்றும் பரகாய யோகியினது சிவன், பிராகாமிய சித்தியினாலே வேறு வேறு சரீரங்களிற் புகுங்கால் யானையின் சரீர அளவிற்கும், எறும்பின் சரீர அளவிற்கும் விரிந்து சுருங்கியும் விகாரப்படவேண்டும். யானையின் சரீரம்பெரிதும், எறும்பின் சரீரஞ்சிறிது மாதலின் அற்றன்று.

தீபம் ஓரிடத்திருந்தும் அதன்பிரபை வீடுமுழுதும் பரவினாற்போலச் சிறிய உருவமே பேருடலிற்பெருகி யிருக்குமெனில் அவ்வாறு விரிதல் சுருங்குதல் விகாரமாதலின், அச்சிவன் சடமாயநித்தியமாம். அதனாலது பொருந்தாது.

ஒருபொருள் அஸ்தியுமாம், நாஸ்தியுமாமென்பதை மறுத்தல்.

குடம், சலமெடுக்கு மிச்சையுடையானுக்கு அக்கிரியைக்குரிய பொருளாய், உள்ளதாய், மேல்சலம் வைத்து ஆண்டுவர அதனை இல்லையென்றல் எங்ஙனம்?

Koviloor Digital Library

ஒன்றற்கொன்று விருத்தமாயுள்ள உண்மையும் இன்மையும், இருளும் ஒளியும்போல ஒருபொருளிடத்திருக்குமா? இருக்குமெனின் குடத்தை நோக்குங்கால் குடமுண்டென்றும், அதனுண்மையும் இல்லென்று அதனின்மையும் யார்க்காவது பிரத்தியக்ஷமாவதுண்டா? இன்னும் சூரியனுள்ள காலத்து இல்லையென்றுபொருள் தோன்றுமையும், பாம்புள்ளகாலத்துப் பாம்பில்லையென்று பயமின்மையும் வேண்டும். அதனால் இல்லையென்றலும், உண்டில்லையென்றலும் பொருந்தாது. குடம் இல்லையென்னுங்காலுங் குடத்தைக் கிரகிக்கவேண்டுதலில், இல்லையுண்டென்றலும் பொருந்தாது. மேல் பிரத்தியக்ஷமாயிருக்குங்குடத்தைப் பெயரிட்டு வாச்சியமாகக் கூறுதல் பொருந்தும். அவாச்சியமென்றலும், அதுவன்றி வாச்சியமென்றலும் வாச்சியாவாச்சிய மென்றலும் விருத்ததன்மமாதலில், ஓர் பொருளிடத்தோர் காலத்தின்றும். அதனால்வாச்சிய மென்றுசொல்ல வேண்டுமேயன்றி அநிர்வசனியமெனவும் அவாச்சியமெனக் கூறுதல் முதலியனவும் பொருந்தாது. அனேகாந்தவாதங் கூறும் அவ்வருகரும் ஏழுபொருள் உளதெனவாச்சியப்படக் கூறுதலில், அநேகாந்தவாத இயல்பு அசம்பவமாமென்க.

உலகு ஒருகர்த்தாவையுடைய தென்றலைமறுத்தல்.

உலகு ஒரு முதல் வனால் படைக்கப் பட்டகாரியமன்று. சுபாவத்தாலெனில் அசேதன மனேகமாய், மூர்த்தவஸ்துக்களாய் அவயவத்தோடு கூடினதாய்க் காணப்படுதலில் காரியமாதல் சித்தம். யாதுகாரியம், அது கர்த்தாவை யுடைத்து. குடம்போல என்னும் நியாயத்தால் கர்த்தாவுடைமை பெறப்படுதலிலதுவும் பொருந்தாது. (அகரு)

காணவு மெய்தாவண்ணங் கடலின்மேற் செல்லுமேடு
நாணிலா வமணர்தம்மை நட்டாற்றில் விட்டுப்போகச்
சேணிடைச் சென்றுநின்றூர் சிதறினூர் திகைத்தார்மன்ன
னாணையில் வழுவமாட்டா தஞ்சுவா ரணையமிண்டார்.

(இ-ள்.) காணவும் எய்தாவண்ணம் கடலின்மேல் செல்லும் ஏடு= கண்ணாற்காணவும் விடயமாகாவண்ணங் கடலின்மேல் விரைந்து செல்லுமேடானது; நாண் இலா அமணர்தம்மை நட்டாற்றில்விட்டுப்போக = தம்மிலையினிழிபுணர்ந்தும் அதனால் நாணமில்லாத சமணர்களை நடாற்றில்விட்டுச் செல்ல; சேணிடைச்சென்று நின்றூர் சிதறினூர் திகைத்தார்=அதி தூரஞ் சென்று நின்றவராய் (ஒருவரோடொருவர்சேராது) சிதறி (மனம்) திகைத்தார்கள்; மன்னன் ஆணையில் வழுவமாட்டாது அஞ்சுவார் அணையமிண்டார்=பாண்டியனது ஆணையினின்று வழுவுதற்கு அஞ்சுமச்சமணர்கள் ஒருங்குசேரத் திரும்பினூர்கள்.—எ-று.

தம்நிலையினிழிபுணர்ந்தும் நாணமின்மையினால் நாணிலா அமணரென்றும்; நம்பின அமணர்க்கு உறுதிபயவாது அவரை அந்நூல்கள்நட்டாற்றி

Koviloor Digital Library

ல் விட்டுச்சேறலேல். ஈட்டாற்றிலென்றுங்கூறினர். அது "நம்பினுனைநட்டாற்றில் விட்டான்" என்று முலகவழக்கைக்குறிப்பித்தது. (அகசு)

வேறொரு செயலிலாதார் வெருவுற்று நடுங்கித்தம்பா
லீறுவந் தெய்திற்றென்றே மன்னவ னெதிர்வந்தெய்தி
யூறுடை நெஞ்சிலச்சம் வெளிப்பட வொளிப்பார்போன்று
மாறுகொண் டேடுமிட்டால் வந்ததுகாணுமென்றார்.

(இ-ள்.) வேறு ஒரு செயல் இலாதார் வெருவுற்று நடுங்கி=தாம்செய்யுஞ்செயல்வேறொன்றுமில்லாத அமணர்கள் அஞ்சி நடுக்கமுற்று ; தம்பால் ஈறுவந்து எய்திற்றென்றேமன்னவன் எதிர் வந்தெய்தி=தம்மிடத்து நாசம் வந்தடைந்ததென்று பாண்டியனது எதிரேவந்து நின்று ; ஊறுடை நெஞ்சில் அச்சம் வெளிப்பட ஒளிப்பார்போன்று=துன்பமடைந்த தமது மனத்திலச்சமானது வெளிப்படுங்காலதனை மறைப்பவரையொத்து ; மாறுகொண்டேடும் இட்டால் வந்தது காணும் என்றார்=எமக்குப்பிரதி வாதிகளாக இருக்கும் நீவிரும் உம்முடைய ஏட்டையிட்டால் நேரிடுவதைப் பார்ப்போமென்றார்கள்.—எ-று. (அகஎ)

மாசுசே ரமணரெல்லா மதியினின் மயங்கிக்கூற
வாசிலா நெறியிற்சேர்ந்த வரசனு மவரைவிட்டுத்
தேசுடைப் பிள்ளையார் தந் திருக்குறிப் பதனைநோக்கப்
பாசுரம் பாடலுற்றார் பரசமயங்கள்பாற.

(இ-ள்) மாசுசேர் அமணரெல்லாம் மதியினில் மயங்கிக்கூற = குற்றம் பொருந்திய சமணர்களெல்லாரும் தம்மதியின்கண் மயக்கமுற்று இவ்வாறு சொல்ல; ஆசிலாநெறியில் சேர்ந்த அரசனும் அவரைவிட்டு=குற்றமில்லாத சைவநெறியிற் சேர்ந்த அப்பாண்டியனும் அச்சமணரைவிட்டு; தேசுடைப் பிள்ளையார்தம் திருக்குறிப்பதனை நோக்க=(சிவஞானமாகிய)ஒளியையுடைய ஆளுடைய பிள்ளையாரது திருக்குறிப்பைப்பார்க்க ; பரசமயங்கள் பாற = புறச்சமயங்கள் நிலைகெட்டோட; பாசுரம்பாடலுற்றார் = திருப்பாசுரத்தைத் திருவாய் மலர்ந்தருளினார்—எ-று.

பரசமயங்களென்றதனால்-வேதமூலமல்லாத சைன, பவுத்தங்களும், வேதமூலமான பாஞ்சராத்திர சாங்கிய முதலியனவுங்கொள்க.

வேதமூல மல்லாதன பாறவென்ற தொக்கும். வேதமூலமாயுள்ளனவும் பாறவென்றதென்னை? அவைகள் வேதமூலமாயினும் சைவம்போல் வேதசாரமாய் நிருபாசுபதமென்னும் பேறடைதலின்மையாலென்க.

பரசமயங்கள் பாற என்றதனால், வேதத்தின்புறப்புறமாயுள்ள சைன, பவுத்தங்களும் ; அதின் புறமாயுள்ள மீமாம்சை, சாங்கியம், பாஞ்சராத்திர முதலியனவும், அகப்புறமாயுள்ளசைவம், பாசுபதமுதலியனவுங்கொள்க.

Koviloor Digital Library

புறப்புறமாயுள்ளன - வேதமூலமன்மையின் அவைமறுத்தற்குரியன வாம். புறமாயுள்ள மீமாம்சைமுதலியன வேதமூலமாதலின் மறுக்கப்படா வெனின் நன்குசொன்னுய். அவை வேதமூலமாய் வேதத்தின் ஒருபுடை யொத்த பொருளுடையனவேனும் அவைமுறையே கன்மம், கர்த்தா, பிரகிரு திகர்த்தா, பிரகிருதிபுருஷனுன வாசுதேவன் கர்த்தா எனக்கூறி யவ்வாறு மறுதலைப்பொருள்களைப் போதித்தலின் மறுக்கப்படுமென்க.

சைவம், பாசுபதம், காளாமுகம், வாமம், வைரவமுதலிய அகப்புறங் களாதலில், அவை மறுக்கப்பட்டவாறென்னெனின்? அவை சிவபெருமானை யே முதற்கடவுளெனக்கூறும் நிலைமையால் மறுக்கப்படாவாயினும், சுருதி விருத்தமான கொள்கைவகையானும் அனுட்டானவகையானும் மறுக்கப் படுமென்க. பின்தாபிக்கப்படுவது வைதிக சைவமோவெனில், வைதிக சைவத்தோடு மாறுபடாது அதனினுஞ் சிறந்த சுருதிசாரமென்னுஞ் சித்தா ந்தசைவமேயாம்.

புறப்புறம், புறம், அகப்புறம் என்னும் மூவகை மதங்களும் ஆப்த வாக்கியமாக, வேதமும் சிவாகமமுமே முக்கியப்பிரமாணமென்பதென்னை? அவை உத்தமர் மத்திமர் அதமரென்னும் மூவகை அதிகாரிகளுள், மத்திமர் அதமரென்னும் அதிகாரிகளின்பொருட்டுத் தேவர்கள் முனிவர்களால் கூறப் பட்டதென்றும்; அவ்வாறுன அதிகாரிகளின்பொருட்டு வாமாதிசாஸ்திரங்க ளும் மச்சகேந்திரரென்னு மானுடசித்தர் முதலியோராற் கூறப்பட்டதெ ன்று புராண இதிகாசங்களிற் கூறப்படுமாகையாலும், அவ்வாறன்றி அப்பு ராண இதிகாசங்களில் உத்தமாதிகாரிகளின்பொருட்டுச் சுருதியும், சுருதி சாரமாகிய ஸ்ரீ,காமிகாதி ஆகமங்களும் சிவபிரானுலருளிச்செய்யப்பட்டதெ னக் கூறப்படுதலால் அவ்விரண்டும் முக்கியபிரமாணமேயாம்.

அவ்வாறு வேதம் பிரமாணமென ஸ்ரீ, நீலகண்ட சிவாசாரியரால்கூறி, மேல் வேதசிவாகமங்களுக்குப் பேதமின்மை, சிவாகமம் சுருதி சாரமென் னுங் கருத்தாலங்கரிக்கப்பட்டது.

அவ்வாறு ஸ்ரீ,காமிகத்தும், சைவாகமம் சிரௌதமென்றும் சிரௌத மல்லாததென்று மிருவகையெனக்கூறி, வாமாதி ஆகமங்களைச் சுருதிசார மல்லவென்றும், ஸ்ரீ,காமிகாதி ஆகமங்கள் சுருதிசாரமான சிரௌதமென் றுங் கொள்ளப்படும். (அகஅ)

தென்னவன் மாறன்றானுஞ் சிரபுரத் தலைவர்தீண்டிப்
பொன்னவில் கொன்றையார்தந் திருநீறு பூசப்பெற்று
முன்னைவல் வினையும்நீங்க முதல்வனை யறியுந்தன்மை
துன்னினன் வினைகளொத்துத் துலையென நிற்றலாலே.

(இ-ள்.) தென்னவன் மாறன்தானும் சிரபுரத்தலைவர்தீண்டி=பாண் டியராசனும் சீகாழித்தலைவராகியஆளுடைய பிள்ளையார் தமது திருக்கரத்தா

Koviloor Digital Library

வ் நின்றி ; பொன் நவிக்கொன்றையார் தம் திரு நீறு பூசப்பெற்று=பொன் னென்று கூறுங்கொன்றைப்பூமாலையை யணிந்த சிவபெருமானது விபூதி யைப் பூசப்பெறுதலால் ; முன்னை வல்வினையும் நீங்கி=முன்தான் சமணசம யத்தில் வருத்தக்க கொடியதீவினையினின்றும் நீங்கி ; வினைகள் ஒத்துத்துலை யென நிற்றலால்=இருவினைகளும் மலபரிபாகத்தோடு வருங்கன்மசாமியத்தி ஞல் துலையிலிட்ட பொருள்போல ஒத்து நிற்றலால் ; முதல்வனை அறியும் தன்மை தன்னினுன்=சிவபெருமானை யறியுஞ் சத்திநி பாதத்தன்மையை யடைந்தான்.—எ-று.

முதல்வனையறியுந் தன்மையாவது- இருவினை யொப்பு, மலபரிபாகங் காரணமாக வருந்திவிரம், திவிரதரம், மந்தம், மந்ததரம் என்னுஞ் சத்திநி பாதம். சத்திநிபாதமாவது - திரோதான சத்தியினது நீக்கமும், அனுக்கிரக சத்தியினது பதிதலுமாம். சத்திபதியுங்கால் சமுசாரபயமும், மோட்சத்தி லிச்சையும் பிறத்தலால், அச்சத்திநி பாதத்தை முதல்வனை யறியுந்தன்மை யென்றும், அதற்கிருவினை யொப்புங்காரணமாதலில் வினைகளொத்துத் துலை யென நிற்றலாலென்றுங்கூறினர்.

சத்தியாவது-சடமாய், நித்தியமாய், வியாபகமாய், விபுவாயிருக்கும் பரிக்கிரகசத்தியென்னும் மாயைக்குவேறாய், சித்தாய், நித்தியமாய், வியாபக மாய், விபுவாய், பரிணாம ரூபமின்றி யெப்பொழுது முயிர்க்குயிராய்க் கலந் து நிற்குஞ் சிவசமவேதையாகிய சிவசத்தியேயாம்.

அச்சத்தி - என்றும் உயிருட்கலந்திருக்கப் பந்தம் நீங்காதிருப்பா னேனெனில் ? முன்னுஞ்சொன்னும். மலபரிபாககாலம்வாராமையால் பந்தம் நீங்காதிருந்ததென்க. அற்றேல், பந்தநீக்கத்திற்குப்பரிபாககாலங்காரண மாயின் சிவனுல் பயனின்றெனில் ; அற்றன்று.

சூரியன் நாடோறும் பக்குவம் வருவித்துப் பக்குவமாயதாமரை அரும்பினை அப்பக்குவகாலங் காரணமாய் மலர்விப்பன். அதுபோலச் சிவ பிரானுங் காலந்தோறும் பரிபாக நிமித்தமான தொழிலைச்செய்து பரிபாகம் வந்துழித்தன் வழித்தாய அப்பரிபாக காலநிமித்தமாய்ச் சத்திபதிவித்து அ நுக்கிரகஞ்செய்வன். காலம் சடமாதலால் சககாரியல்லது வினைமுதலாகா மையின்.

அச்சத்தி நீங்குமளவும் பந்தலு மெவ்வாறெனில் ? அச்சத்தி திரோ தான சத்தியாய், மலகன்மமாயைகளை யதிட்டித்து நியதி தத்துவத்தின் வழியாய்ப் பிறர் சம்பந்தமான போகத்தையொருவன் புசியாமலும், தன் சம்பந்தமான போகத்தைப் பிறன்புசியாமலும் போகங்களை வரையறுத்து அப்போகம் மிகவும் நித்தியமாயிருமதனை நன்றென்று புசிக்கச்செய்து நிற்கும். மேலவ்வாறு பக்குவப்பட்ட புண்ணியபாவங்களை ஆதிக்கம்பற்றி அநுபவிக்குங்கால் காலவிசேடத்தில் இருவினையொப்பும் மலபரிபாகமும்

Koviloor Digital Library

வருவித்து, உபகார, அபகார சமபுத்திபிறப்பிக்குங்கால் கன்மம் புசிப்பித்தல் கூடாமையில், தான் சிறிது நீங்கிச் சமுசாரபயமும், மோட்ச இச்சையும் பிறப்பித்துக் குருவைத்தேடியடையும்படி செய்யும்.

மேல் அக்குருவதிகரணராயிருக்கும் சிவபிரான், ஆறத்துவாக்களையுஞ் சோதித்து மலசத்தியினுவாரகத்தை நீக்கியனுக்கிரக சத்தியைப் பதிப்பிப்பர். இதுவேசத்தி நீங்குதலும் பதிதலுமாம் ஆயின், அச்சத்திகுடத்தில் நெல்லிக்காய்போல் தாம் வீழ்ந்தவிடத்தாநழுவியும் அடங்கியுமிருக்கும் மூர்த்தப்பொருள்போலாதலில், வியாபகவிபுவாதலிழுக்குடைத்தாமெனில் ? நன்குசொன்னுய். அது நித்தியனுய் விபுவாயிருக்கின்ற ஆன்மா, சரீரோபாதிவசத்தால்போகின்றது, வருகின்றது, நசிக்கின்றது, பிறக்கின்றதென்னும் உபசாரவழக்குப்போல், ஆணவமல உபாதிவசத்தால் நீங்கியதென்றும், பதிந்ததென்றுங்கூறப்படும்.

அத்திரோதான சத்தியே அனுக்கிரகசத்தியாய் மீண்டு பதிதலின் இரண்டென்றது அவசரபேதம். இதுசத்திநிபாத இயல்பு.

கன்மசாமியமாவது-ஒன்றற்கொன்று விருத்தமான பாவபுண்ணியங்களது எண்ணிக்கையின் சமமன்று. அவற்றுள் அதிகப்பட்ட பக்குவகன்மம் முன்னும் ; குறைந்த பக்குவகன்மம் பின்னும் அனுபவிக்கப்படும். ஆதலில், சாமியம் வாராது. அதுவன்றி எல்லார்க்கும் கன்மசாமியம் ஒருங்கு கூறவேண்டும்.

யாண்டு அதிகமும் நூனமும் இல்லாமல் அஸ்வமேதபலமும், பிரம்மகத்திபலமுஞ் சமமாய் இரண்டுகாமுகனுல் போகத்தின்பொருட்டு ஓர்காலத்து இச்சிக்கப்படும் ஓர் காமினிபோல ஓர்காலத்தொரு புருடனுல் அனுபவிக்கவருங்கால் இரண்டுஞ் சமபலமாதலால் ஒன்றனையொன்று தகையுங்காலிரண்டும் நசிக்கும். இவ்வாறு விருத்தமான இரண்டுகன்மங்கள், சாமியமாவதே கன்மசாமியமெனப்படும்.

இக்கன்மசாமியமாத்திரமொருவனுக்குப் பிறந்தால் மலபரிபாகம் வாராமையால் ஒருமலத்தனுக்கும் விஞ்ஞான கைவல்யமுண்டாம். மலபரிபாகம் வந்தால், சத்திநிபாதம்வரும். இருவினையொப்பும் மலபரிபாகமும், சத்திநிபாத நிமித்தமாதலில், எல்லா ஆசிரியராலு மிவ்விரண்டுங் கொள்ளப்படும். அற்றேல், ஒருவன்செய்த புண்ணியபாவங்கள் கோடிகற்பஞ்செல்லினு மனுபவியாமலொழியாதென்றதனோடு மாறுபடுமென்னில் ? அது ஒருவனுக்குத்தேகமுள்ளளவுமனுபவிக்கும் பிரார்த்தகன்மமும் புண்ணியபாவங்களுள் ஆதிக்கமாய்ப் பக்குவப்பட்டுள்ளனவுமாய நியதகாலபோக்கிய கன்மங்களையன்றி, இவ்வாறு விருத்தகன்மமாய்ச் சாமியமடைந்து நின்றவற்றையன்று. அதனுல், மாறுபடுதலின்று. இது கன்மசாமியவியல்பு. (அகக)

Koviloor Digital Library

வே று.

உலகியல் வேதநூ லொழுக்க மென்பது
நிலவுமெய்ந் நெறிசிவ நெறியே யென்பதுங்
கலதிவா யமணர்காண் கிலார்க ளாயினும்
பலர்புகழ் தென்னவ னறியும் பான்மையால்.

(இ-ள்.) உலகு இயல்வேதநூல் ஒழுக்கம் என்பதும்=உலகாசாரம் வேதநூலின் ஒழுக்கமென்பதையும்; நிலவும் மெய்ந்நெறி சிவநெறியே என்பதும்=விளங்கும் வீடுகூடும் நெறி சைவநெறியே என்பதும்; கலதிவாய் அமணர் காண்கிலார்களாயினும் = கலகஞ்செய்யும் வாயையுடைய சமணர்கள் காணுதவராயினும்; பலர் புகழ்தென்னவன் அறியும் பான்மையால்= பலராலும் புகழப்படும் பாண்டியராசன் அவற்றையறியுந்தன்மையால்-எ-று.

அந்தணர் முதலிய வருணத்தார், தத்தமக்கு விதித்த அறங்களின் வழுவாதொழுகுதலும், அதனுல் பொருளீட்டலும், இன்பமடைதலுமாகிய அறம் பொருளின்பங்களை உலகியலென்றூர். அம்மூன்றும் வேதத்திற்கன்மபாகையிற்கூறும். அது மிருதி, புராணங்களால் விளங்கும். இம்மூன்றுமல்லாத வீடுகூடும் நன்னெறி, சுருதிசாரமான சைவநெறியேயன்றிப் பிறிதென்றனவுணர்த்தவென்பார், நிலவு மெய்ந்நெறி சிவநெறியேயென்றும்; இவ்வாறுணர்தல் - இருவினையொப்பு, மலபரிபாக நிமித்தமாய்வருஞ் சத்திநிபாதத்தன்றியேலாமையின் ஆயிரம் விளக்குறினும் அந்தகனுணராமைபோல அமணருணரார் என்பார், கலதியாயமணர்காண்கிலார்களென்றும்; பாண்டியன் மேற்கூறிய விடுணர்தற்குக்காரணமான சத்திநிபாதமுடைமையில், அவனறியும் பான்மையாலென்றுங்கூறினூர்.

உலகியலென்றதனுல், அறம்பொருளின்பங்களெனவும்; மெய்ந்நெறியென்றதனுல், பரமப்பிரயோசனமான விட்டுநெறியென்பதும் போந்தவாறு அறிக. (௮௨௦)

அலரும் விரைசூழ்பொழிற் காழியு ளாதிஞான
மலருந் திருவாக்குடை வள்ளலா ருள்ளவண்ணம்
பலரு முணர்ந்துய்யப் பகர்ந்து வரைந்தியாற்றி
லிலவுந் திருவேடு திருக்கையா லிட்டியிட்டார்.

(இ-ள்.) அலரும் விரை சூழ்பொழிற்காழியுள்=பூக்கள் மலரும் வாசனை சூழ்ந்த சோலையையுடைய சீகாழியிலவதரித்த; ஆதிஞானம் மலரும் திருவாக்குடைவள்ளலார்=சிவஞானம் மலருந் திருவாக்கினையுடைய ஆளுடையபிள்ளையார்; உள்ளவண்ணம்=வேதத்தின் கருத்தான அறநெறியையும் வீட்டு நெறியையும்; பகர்ந்துவரைந்து=திருப்பாசுரமாக அருளிச்செய்த அதனையெழுதி; ஆற்றில் நிலவும் திரு ஏடு பலரும் உணர்ந்து உய்யத்



திருஞானசம்பந்தசுவாமிகள்- இட்டஏடு-எதிர்நோக்கி சமணரிட்டஏடுகள்- சமுத்திரத்திலும்சென்றது.

௫௮.

Koviloor Digital Library

திருச்கையால் நீட்டி இட்டார்=வைகையாற்றில் விளங்கும் பாசுரத்திருவேட்டை (இது மெய்ப்பொருளென்பதை) யாவருமுணர்ந்தேறத் (தமது) திருக்கரத்தால் நீட்டியிட்டருளினர்.—எ-று.

தென்னவனறியும் பான்மையால் வள்ளலார் உள்ளவண்ணம் பகர்ந்து வரைந்து ஆற்றில் திருவேடு பலருமுணர்ந்துய்ய நீட்டியிட்டாரெனக் கூட்டுக. (அஉக)

திருப்பாசுரம் - பண் - கவுசிகம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்கவந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல் லாமரனுமமே
சூழ்கவையக முந்துயர்தீர்கவே. (க)

அரியகாட்சிய ராய்த்தமதங்கைசே
ரெரியரேறுகந் தேறுவர்கண்டமுங்
கரியர்காடுறை வாழ்க்கையராயினும்
பெரியராரறி வாரவர்பெற்றியே. (உ)

வெந்தசாம்பல் விரையெனப்பூசியே
தந்தையாரொடு தாயிலர்தம்மையே
சிந்தியாவெழு வார்வினைதீர்ப்பரா
லெந்தையாரவ ரெவ்வகையார்கொலோ. (ஙூ)

ஆட்பாலவர்க்கருளும் வண்ணமு மாதிமாண்புங்
கேட்பான்புகி லளவில்லை கிளக்கவேண்டா
கோட்பாலனவும் வினையுங்குறு காமையெந்தை
தாட்பால் வணங்கித் தலைநின்றிவை கேட்கதக்கார். (சு)

ஏதுக்களாலு மெடுத்தமொழி யாலுமிக்குச்
சோதிக்கவேண்டா சுடர்விட்டுள னெங்கள்சோதி
மாதுக்கநீங்க லுறுவீர்மனம் பற்றிவாழ்மின்
சாதுக்கண்மிக்கீ ரிறையேவந்து சார்மின்களே. (ரு)

ஆடும்மெனவும் மருங்கூற்றமு தைத்துவேதம்
பாடும்மெனவும் புகழல்லது பாவநீங்கக்
கேடும்பிறப்பும் மறுக்கும்மெனக் கேட்டீராகி
லோடுந்திறத்தார்க் கருளல்லது நாட்டலாமே. (சா)

Koviloor Digital Library

கடிசேர்ந்தபோது மலரானகைக் கொண்டுநல்ல
படிசேர்ந்தபால்கொண் டங்காட்டிடத் தாதைபண்டு
முடிசேர்ந்தகாலை யறவெட்டிட முக்கண்மூர்த்தி
யடிசேர்ந்தவண்ண மறிந்தார்சொலக்கேட்டுமன்றே. (௭)

வேதம்முதல்வன் முதலாக விளங்கிவைய
மேதப்படாமே யுலகத்தவ ரேத்தல்செய்யப்
பூதம்முதல்வன் முதலேமுத லாப்பொலிந்த
சூதன்றெளிமாலையென்றேகலிக் கோவைசொல்லே. (௮)

பாராழிவட்டம் பகையானலிந் தாட்டவாடிப்
பேராழியான திடர்கண்டருள் செய்தல்பேணி
நீராழிவிட்டேறி நெஞ்சிடங் கொண்டவர்க்குப்
போராழியீந்த புகழும்புக ழுற்றதன்றே. (௯)

மாலாயவனும் மறைவல்ல நான்முகனும்
பாலாயதேவர் பகரில்லமு தூட்டல்பேணிக்
காலாயமுந்நீர் கடைந்தார்க்கரி தாவெழுந்த
வாலாலமுண்டங் கமரர்க்கருள் செய்ததாமே. (௧0)

அற்றன்றியந்தண் மதுரைத்தொகை யாக்கினானுந்
தெற்றென்றுதெய்வந் தெளியார்கரைக் கோலைதெண்ணீர்ப்
பற்றின்றிப்பாங் கெதிர்விரவும் பண்புநோக்கிற்
பெற்றென்றுபர்த்த பெருமான்பெரு மானுமன்றே. (௧௧)

நல்லார்கள்சேர்புகலி ஞானசம் பந்தனல்ல
வெல்லார்களும்பரவ மீசனை யேத்துபாடல்
பல்லார்களுமதிக்கப் பாசுரஞ் சொன்னபத்தும்
வல்லார்கள்வானோ ருலகாளவும் வல்லரன்றே. (௧௨)

திருச்சிற்றம்பலம்.

வேறு.

அந்தணர்தேவரா னினங்கள்வாழ்கவென்
றிந்தமெய்ம்மொழிப்பய னுலகமின்புறச்
சந்தவேள்விகண்முதற் சங்கரர்க்குமுன்
வந்தவச்சனைவழி பாடுமன்னவாம்.

Koviloor Digital Library

(இ-ள்.) அந்தணர் தேவர் ஆன் இனங்கள் வாழ்கவென்று இந்த மெய்மொழிப்பயன் = மறையவருந் தேவரும் பசுக்களும் வாழ்கவென வெடுத்த "வாழ்கவந்தணர் வானவரானினம்" என்னுமிந்த வுண்மைமொழியின் பொருள்; உலகம் இன்புற = உலகிலுள்ளாரின்படையும்படி; சங்கரர்க்கு முன்வந்த=சிவபெருமானுக்கு முற்பட்ட (வேதவிதியாய்) வந்த; சந்தவேள்விகள் முதல் அர்ச்சனைவழிபாடு மன்னவாம்=அழகிய யாகமுதலாய அருச்சனையும் வழிபாடும் நிலைபெறும்பொருட்டாம்.—எ-று. (௮௨௨)

வேள்விநற்பயன் வீழ்புனலாவது
நாளுமர்ச்சனை நல்லுறுப்பாதலா
லாளுமன்னனை வாழ்த்தியதர்ச்சனை
மூளுமற்றிவை காக்குமுறைமையால்.

(இ-ள்.) வேள்வி நற்பயன் வீழ்புனலாவது=யாகமுஞ் சிவபூசையுமாகிய இருவகை வேள்வியின் நல்லபயனாகிய மழையைவாழ்த்தியது; நாளும் அர்ச்சனை நல்லுறுப்பாதலால்=நாள்தோறுஞ் சிவார்ச்சனைக்குரிய நல்ல உறுப்பாயிருத்தலால்; ஆளும் மன்னனை வாழ்த்தியது=உலகத்தை ஆளும் அரசனைவாழ்த்தியது; அர்ச்சனை மூளும் மற்றிவைகாக்கும் முறைமையால்=வேள்வி சிவார்ச்சனை முதலியனவாய்க்கொண்ட அறங்களை வழுவாது செய்விக்கு முறைமையால்.—எ-று.

சிவபிரானை முதல்வராகக்கொண்டு எக்கியஞ்செய்தற்குரியோர், வைதிகசைவமறையவரும்; பரார்த்தபூசைசெய்தற்குரியோர் ஆதிசைவமறையவருமாதலில், பொதுப்பட இருவரையு மந்தணரெனக்கூறியது. அவர், யாகமும் பூசையுஞ் செய்தலில், அவரை முன்னும்; தேவர்கள் சிவபிரானுக்கு அங்கதேவதைகளாயிருந்து வேள்விப்பயனைக் கோடலிலவர் பின்னும்; ஆவினங்கள் அவ்வேள்விக்கின்றியமையாச் சிறப்பிற்றாய கவ்வியங்களான சுத்தப்பொருளைக் கொடுப்பன ஆதலில், அவ்வியைவுபற்றி அவைகளைப் பின்னும்; வேள்வியும் பரார்த்த பூசையுமாகிய இக்காரணம்பற்றி மழை தவறாது பொழியுமாதலில், அதன் பயனாகிய மழையைப் பின்னும்; வேள்விகளைக் காத்தாலன்றி அவைசெவ்வணியலாமையில் அச்சிறப்புநோக்கி யரசனையதன்பின்னும் வைக்கப்பட்டதென்பார் அம்முறை கூறினார்.

இந்நான்குசெய்யுளும் பிள்ளையார் தாம் திருவுள்ளத்திற் குறித்த வேதசாரசைவம் ஓங்குதற்கு நல்லறமும் அதன் சார்பானபொருளும் ஓங்குகவென்றும்; கருத்திற் கியையாது மாறுபட்ட தீயன ஆழ்கவென்றும் வாழ்த்திய முதற்பாசுரத்தின் பொருள். இது வாழ்த்தருளியபடி. (௮௨௩)

ஆழ்கதீயதென் றோதிற்றயனெறி
வீழ்கவென்றது வேறெல்லாமரன்பெயர்
சூழ்கவென்றது தொல்லுயிர்யாவையையும்
வாழியஞ்செழுத் தோதிவளர்கவே.

Koviloor Digital Library

(இ-ள்.) ஆழ்கதியதென்று ஓதிற்று="ஆழ்கதீயது" என்று திருவாய் மலர்ந்தது ; அயல்நெறி வீழ்க என்றது=வேதத்திற்குப் புறம்பாயுள்ள புறச்சமயங்களழிகவென்றும் பொருளையுடைத்து ; வேறு எல்லாம் அரன்பெயர் சூழ்க என்றது=வேறுயுள்ள எவ்விடங்களிலுஞ் சிவபெருமானது திருநாமமானது பரம்புக என்றருளிச்செய்தது ; தொல் உயிர்யாவையும் வாழி அஞ்செழுத்தோதிவளர்கவே = தொன்றுதொட்டுள்ள ஆன்மகோடிகளெல்லாம் ஸ்ரீ,பஞ்சாக்கரத்தை யுச்சரித்து வாழ்கவென்றும் பொருளையுடைத்து—.எ-று. வாழி - அசை. (அஉச)

சொன்னவையக முந்துயர்தீர்கவே
யென்றுநீர்மை யிகபரத்திற்றுயர்
மன்னிவாழுல கத்தவர்மாற்றிட
முன்னஞானசம் பந்தர்மொழிந்தனர்.

(இ-ள்.) சொன்னவையகமும் துயர் தீர்கவே என்னும் நீர்மை இகபரத்தில் துயர்=எடுத்தோதத்தக்க நில உலகந்துன்பம் நீங்கவெனக்கூறியது இம்மைக்கணுள்ள நோய்வறுமை முதலியனவும் மறுமைக்கணுள்ள நிரயம் அந்தர சரீரியாயிருத்தல் முதலியனவுமாய துக்கத்தை; மன்னிவாழ் உலகத்தவர் மாற்றிட=உலகத்தில் நிலைபெற்று வாழுமனிதர் நீக்கும்பொருட்டு; முன்னம் ஞானசம்பந்தர் மொழிந்தனர்=பாசுரத்தின் முதலில் ஆளுடைய பிள்ளையாரருளிச்செய்தார்.—எ-று. (அஉரு)

அரியகாட்சிய ரென்பதவ்வாதியைத்
தெரியலாகிலை யாற்றெரியாரென
வுரியவன்பினிற் காண்பவர்க்குண்மையாம்
பெரியநல்லடை யாளங்கள்பேசினர்.

(இ-ள்.) அரியகாட்சியர் என்பது=யாவராலு மறிதற்கரிய காட்சியையுடையவரென்றருளிச்செய்தது ; தெரியலாகிலையால் தெரியார் என= உணரக்கூடாத நிலைமையினால் அறியப்படாரென்றும் பொருள்பட ; உரிய அன்பினில் காண்பவர்க்கு உண்மையாம்=சத்திநிபாதத்தால் தம்மிடத்துரியதாய்த்தோன்று மெய்யன்பினுற் றரிசிக்கு மெய்யடியார்க்கு அவரறிவிற்கறிவாயிருக்கும் ; பெரியநல் அடையாளங்கள் பேசினர்=மேம்பட்ட அச்சிவபெருமானது சிறப்பியல்பாகிய இலக்கணங்களையருளிச்செய்தார்.—எ-று.

புத்தர் கூறும் விஞ்ஞான கந்தக்ஷேமம், அருகர்கூறும், எண்குணப்பிராப்தியும், சாங்கியர்கூறும், பிரகிருதி புருட விவேகஞானமும் பாசவுணர்வும் பசுவுணர்வுமாய் மயங்கி நிற்றலில், அவ்வுணர்வுகளா லறியப்படாமையின், தெரியலாகிலையாற் றெரியாரென்றும் ; மலபரிபாகங் காரணமாய்த் தோன்றும் பேரன்பு முதல்வனுக்குரிமையாம் சிறப்புடைமையின், உரிய அன்பென்றும், அவ்வன்பு காரணமாகத்தோன்றும் திருவருள் ஞானத்தால்

Koviloor Digital Library

காண்பவர்க்கு உயிர்க்குயிராய் நிற்கு மஹுநி முறைமை தோன்றுதலில், காண்பவர்க்குண்மையாமென்றும்; அவ்வியல்பு மனவாக்கிகந்த தடத்த இயல்பு நீங்கிய சொரூப இயல்பாதலில், பெரிய நல்லடையாளங்கள் பேசினுரென்முர்.

ஆயினும்பெரி யாரவரென்பது
மேயவிவ்வியல் பேயன்றிவிண்முதல்
பாயபூதங்கள் பல்லுயிரண்டங்க
ளேயும்யாவு மிவர்வடிவென்றதாம்.

(இ-ள்.) ஆயினும் பெரியார் அவரென்பது="ஆயினும் பெரியாரவர்" என்று திருவாய்மலர்ந்தருளியது; மேய இவ்வியல்பே யன்றி=பொருந்திய அரியகாட்சியரென்னுமியல்பும் காடுறைவாழ்க்கையர்முதலிய இவ்விரண்டியல்புமேயன்றி; விண்முதல் பாயபூதங்கள் பல்லுயிர் அண்டங்கள் ஏயும் யாவும் இவர்வடிவு என்றதாம்=ஆகாயம் முதலிய பரந்தபூதங்களும் பலவுயிர் வருக்கங்களும் அண்டங்களும் இவையல்லாத எல்லாப்பொருள்களும் இவரது திருமேனியென்றருளியதாம்.—எ-று.

அரியகாட்சியரென்றும் நிட்களவியல்பும், அனல் கையேந்தி ஏறுகந்தேறிக் கண்டங்கரியராய்க் காடுவாழியல்பும் ஆகிய சகள இயல்புமேயன்றியென்பார், மேய இவ்வியல்பேயன்றியென்றும்; பூதங்களும், பல்லுயிர்களும், அண்டங்களும் ஆயபொருள்களிற்கூடி நிற்குமியல்பு அட்டமூர்த்தமாய் நிற்குந் திருமேனியியல்பென்பார், இவர்வடிவென்றதாமென்முர். (௮௨௭)

பின்புமாரறி வாரிவர்பெற்றியே
யென்பதியாருணர் வாலுஞ்சென்றெட்டொணு
மன்பெருந்தன்மை யாரெனவாழ்த்தினு
ரன்புசூழ்சண்பை யாண்டகையாரவர்.

(இ-ள்.) பின்பும் ஆர் அறிவார் இவர்பெற்றியே என்பது="பின்புமாரறிவாரிவர் பெற்றியே" என்றருளியது; யார் உணர்வாலும் சென்று எட்டொணுமன்பெரும் தன்மையாரென வாழ்த்தினுர்=பசுகரணத்தால் விளங்கிய போதமுடைய எவ்வகையாரது உணர்விஞலுஞ் சென்றடைதல் கூடாத நிலைபெற்ற பெருந்தன்மையையுடையாரென்றருளிச்செய்தார்; அன்புசூழ் சண்பை ஆண்டகையார் அவர்=அன்பு நிறைந்த சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார்.—எ-று.

திருவருட்குறிச் சிவகரணவிளக்கு விளக்கும் தீவிரசத்தி பதிந்த அன்பாற்காணுமவர்க்கன்றி தேவர், முனிவர், மனிதர், முதலியோரில் எவ்வகை மேம்பாட்டாருங் காணுரென்பார், யாருணர்வாலுஞ் சென்றெட்டொணு என்முர். அவ்வன்பு பிள்ளையார்க்குண்மைவிளங்கிய அன்பு சூழ்சண்பையாண்டகையார் என்முர். இது பசுகரணத்தாலுணரப்படாரென்றருளியதாம். (௮௨௮)

Koviloor Digital Library

வெந்தசாம்பல் விரையென்பதுதம
தந்தமில்லொளி யல்லாவொளியெல்லாம்
வந்துவெந்தற மற்றப்பொடியணி
சந்தமாக்கொண்ட வண்ணமுஞ்சாற்றினுர்.

(இ-ள்.) வெந்த சாம்பல் விரையென்பது="வெந்த சாம்பல் விரையெனப்பூசி" என்றருளியது; தமது அந்தமில் ஒளி அல்லா ஒளி எல்லாம் = சுயஞ்சோதியென்று சுருதிகூறுந் தனதழிவில்லாத ஒளியல்லாத ஏனைய ஒளிகளெல்லாம்; வந்து வெந்தற = தன்னிடத் தொடுங்கித் தனதுஇரௌத்திரியென்னுஞ் சத்தியால் நீறுப்பட; அப்பொடி அணிசந்தமாக்கொண்ட வண்ணமும் சாற்றினுர்=அச்சுடலைப்பொடியைப்பூசித் தந்திருமேனிக்கு ஓரழகாகக்கொண்ட முறைமையையுஞ்சாற்றியருளினுர்.—எ-று.

அந்தமில்லொளியல்லா வொளியெல்லாம் வந்து வெந்தற என்புழி அந்தமில்லொளி, சமவேதசத்தியாகிய பராசத்தியொளி. அச்சத்திசிவத்தோடு அபேதமாய் நிற்றலில், அந்தமில்லொளியென்ருர். அல்லாவொளி அச்சத்திபரிக்கிருத்தியை யதிட்டிக்குங்கால் தோன்றுங் காரியரூபம். அது அனித்தியமுடைமையில் அல்லாவொளியென்ருர். புருடன், மான் அகங்காரம், மனம், தன்மாத்திரை, ஞானேந்திரியம், கன்மேந்திரியம் ஆகிய இவைகளும், இவற்ருலாய புவன சரீரங்களும், போக்கியப்பொருள்களும், இவைகளைப் படைத்துக்காக்கும் பிரமன், விண்டு, இந்திரன், சந்திரன், சூரியன் முதலியதேவர்களும் இரௌத்திரியென்னுஞ் சத்திபால் மகாசம்மாரத்தில்தகிக்கப்பட்டுத் தன்னிடத்தொடுங்குதலில், எல்லாம் வந்து வெந்தறவென்றும்; அப்பிரளயதாண்டவத்திலப்பொடியைத் திருமேனிக்கணியாகக்கொண்டு நடித்தலில், மற்றப்பொடியணி சந்தமாக்கொண்ட வண்ணமுமென்றுங்கூறினர். இறுதியைச் செய்புமுதல்வரெனக்கூறி, அச்சுடலைப்பொடியணியும் இயல்புடையரென்றருளியதாம். (அஉக)

தமக்குத்தந்தையர் தாயிலரென்பது
மமைத்திங்கியாவையு மாங்கவைவீந்தபோ
திமைத்தசோதி யடக்கிப்பின்னீதலா
லெமக்குநாதர் பிறப்பிலரென்றதாம்.

(இ-ள்.) தமக்குத் தந்தையர் தாயிலர் என்பதும் = தமக்கோர் தந்தையாரையுந் தாயையும் இல்லாரென்றருளியது; இங்கு யாவையும் அமைத்து=இவ்வுலகத்துள்ளசித்துஞ் சடமுமாகிய எல்லாப்பொருள்களையுமுண்டாக்கி; ஆங்கு அவை வீந்தபோது=அப்பொருள்கள் தன்னியல்பு நீங்கியொடுங்குங்காலத்து; இமைத்தசோதி அடக்கிப்பின் ஈதலால்=தொழிலற்றிருக்கும் பராசத்தியினிடத்து ஒடுக்கிப்பின் ருதிக்குங்கால் உதிப்பித்தலால்; எமக்கு நாதர் பிறப்பு இலர் என்றதாம்=எமது தலைவராகிய சிவபிரான் பிறப்பிறப்பில்லாதவரென்றருளியதாம்.—எ-று.

Koviloor Digital Library

சித்தசித்தாய எப்பொருளுந் தன்னிடத்திற்றோன்றி யொடுங்கத்தா னொன்றிற் றோன்றியொடுங்காது நிற்றலிற் பிறப்பிறப்பிலரென்றார். இறப்பு உபலக்கணம். இவரே முத்திமுதல்வரொன்றருளியது. (அ௯0)

தம்மையேசிந்தி யாவெனுந்தன்மைதான்
மெய்ம்மையாகி விளங்கொளிதாமென
விம்மையேநினை வார்தம்மிருவினைப்
பொய்ம்மைவல்லிருள் போக்குவரொன்றதாம்.

(இ-ள்.) தம்மையே சிந்தியாவெனும் தன்மைதான்=தம்மையே சிந்தியா எழுவார்வினை தீர்ப்பாரென்றருளியது; மெய்ம்மையாகி விளங்கு ஒளி தாமென=மெய்ம்மைப்பொருளாய் விளங்குகின்ற வொளி வடிவர் சிவபெருமானேயென்று; இம்மையே நினைவார்தம் இருவினைப்பொய்ம்மைவல் இருள் போக்குவர் என்றதாம்=இம்மைக்கண்ணே கருதும் அடியார்களது இருவினைக்குக்காரணமான மயக்கத்தைச்செய்யு மாணவ இருளைப்போக்குவரென்றருளியதாம்.-எ-று. அவர் சிந்திப்பாரை வீடுகூட்டுமியல்புடையரென்றருளியது.

எந்தையாரவ ரெவ்வகையார்கொலென்
றிந்தவாய்மைமற் றெப்பொருட்கூற்றினு
முந்தையோரையே கூற்றின்மொழிவதென்
றந்தண்பூந்தராய் வேந்தருளினார்.

(இ-ள்.) எந்தையார் அவர் எவ்வகையார்கொல் என்று இந்தவாய்மை = "எந்தையராவ ரெவ்வகையார்கொல்" என்றருளிய இந்த மெய்ம்மொழி; எப்பொருட்கூற்றினும் முந்தையோரையே கூற்றின்மொழிவது என்று=திருமால் பிரமன் அங்கி சூரியன் இந்திரன் முதலியமுதற்பொருளாய்க் கூறுமெய்ப்பொருளின் பகுதிகளினுமுதற்காரணரான இச்சிவபெருமானையே அப்பகுதிகளிற்கூறுவதென்று; அம் தண் பூந்தராய் வேந்தர் அருளினார்= அழகிய சீகாழித்தலைவராகிய ஆளுடைய பிள்ளையாரருளிச்செய்தார்.—எ-று.

அவர், அவ்வப்பொருட்கூற்றில் அதுவது வாயும் அதுவன்றியும் நிற்றலில் ஓரியல்புகூற அமையாமையின், எவ்வகையார்கொலோ வென்றதென்றும். எப்பொருட்கூற்றினு முந்தையோரையே கூற்றின்மொழிவதென்றுங்கால் அவ்வாறன்றிக் கண்ணுக்குப்புலப்படும் பொருளாயுள்ள வெப்பொருளிடத்து மச்சிவபெருமானையே அக்கூற்றினிடத்து உள்ளதாய்க்கண்டு இது குடம், இது படம், என விவகரிக்கப்படும். ஆதலில், எப்பொருளிடத்தும் இதுவென்றும் விவகாரசத்தாய் விளங்குதலில், எவ்வகையார்கொலோ வென்று கூறியதென்றுமாம். உலகம், சிவசத்திற்றோன்றியதாதலால், காணப்படும் பொருள்களிலெல்லாம் இது வென்று சுட்டப்பட்டதாய் அச்சத்தை நிற்குமென்றது, வேதநூலார்துணிபு. சிவபெருமான் எப்பொருட்குந்தாம் காரணராய்க்கலந்து நிற்குமியல்புகூறியது. (அ௯௨)

ஆதிபாட்பா லவர்க்கருளுந்திற
நாதன்மாட்சிமை கேட்கவிலுங்கா
லோதுமெல்லை யுலப்பிலவாதலின்
யாதுமாராய்ச்சி யில்லையாமென்றதாம்.

(இ-ள்.) ஆதி ஆட் பாலவர்க்கு அருளும்திறம்=சிவபெருமான் ஆட்கொள்ளும் பகுதியை யுடைய அடியார்க்கருளுந் தன்மையையும்; நாதன் மாட்சிமைகேட்க நவிலுங்கால்=அச்சிவபெருமானது முதன்மைக்குணத்தையும் (நீவிர்கேட்கயாம்) கூறுங்கால்; ஓதும் எல்லை உலப்பில ஆதலில்=யாம்கூறுஞ் சொல்லளவில் அடங்கா வாதலில்; யாதும் ஆராய்ச்சி இல்லையாம் என்றதாம்=எவ்வளவும் வினவியறியுமாராய்ச்சியுடைய தன்றென்றருளியதாம்.—எ-று.

இது அவர் அருளியல்பும் மாட்சிமையுஞ் சொல்லிறந்து நின்றதென்றருளியது.

அரியகாட்சியரென்பது முதல், ஆதியாட்பாலவர்க்கருளுமென்னுஞ் செய்யுளீறவாய் எட்டும், அரியகாட்சியரென்பது முதல், ஆட்பாலவர்க்கருளும் வண்ணமு மாதிமாண்புங் கேட்பான் புகிலளவில்லை கிளக்கவேண்டா என்னும்நான்காவதுபாசுரத்திலிரண்டடியளவு மடங்கியபொருளாம். இவை சிவபெருமானது இலக்கணங் கூறியதாம். (அ௬௬)

அன்னவாதலி லாதியார்தாளடைந்
தின்னகேட்கவே பேற்றகோட்பாலவு
முன்னைவல்வினை யும்முடிவெய்துமத்
தன்மையார்க்கென் றனர்சண்பைகாவலர்.

(இ-ள்.) அன்ன ஆதலில் ஆதியார் தாள் அடைந்து=அவ்வியல்பு அத்தன்மை யுடையன ஆதலால் சிவபெருமானது திருவடிகளை யடைந்து; இன்னகேட்கவே ஏற்றகோட்பாலவும் முன்னைவல்வினையும் முடிவு எய்தும்=இவைகளைக்கேட்குங்கால் (தோன்றுந் தொட்டனவாய்த் தம்மை வந்தடையும்) விரும்பத்தக்க நல்வினையும் பழமையான தீவினையும் கேடடையும்; அத் தன்மையார்க்கென்றனர் சண்பைகாவலர்=அத்தன்மையையுடைய அடியார்களுக்கென்றருளிச்செய்தார் சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார்.எ-று

இது அவ்விரண்டிபல்பையும் அவரது திருவருளால் அறிந்து அவரை அடைகவென்று சாதனங்கூறியது. (அ௬௪)

மன்றுமேதுக்க ளாலெனும்வாய்மைதான்
றன்னதொப்புவே றின்மையிற்சங்கர
னின்னதன்மைய னேதுவெடுத்துக்காட்
டன்னவாற்று லளப்பிலவென்றதாம்.

Koviloor Digital Library

(இ-ள்.) மன்றும் ஏதுக்களால் எனும் வாய்மைதான் = நிலைபெற்ற ஏதுக்களாலு மென்றெடுத்துக் கூறிய உண்மையாவது; தன்னது ஒப்புவேறின்மையில்=தனக்குச்சாமியமான பொருள் உலகத்து வேறில்லாமையினால்; சங்கரன் இன்னதன்மையை=சிவபிரான் தமது ஏது திட்டாந்தங்களாலளத்தற்கரிய உபாதிநீங்கிய ஒப்பிகந்ததன்மையை; ஏது எடுத்துக்காட்டு அன்னவாற்றால் அளப்பிலன் என்றதாம்=காரிய ஏது முதலிய ஏதுக்களினாலும் ஏதுவைவலியுறுத்துந் திட்டாந்தங்களினாலும் ஒருவராலளத்தற் கரியனென்றருளியதாம்.—எ-று. இது ஏது திட்டாந்தங்களா லளத்தல் கூடாமையில், மேற்கூறிய திருவருளாலறிவதே யறிவென்று வற்புறுத்தியதாம். (அகூடு)

தோன்றுகாட்சி சுடர்விட்டுளனென்ப
தான்றவங்கி புறத்தொளியாயன்பி
லூன்றவுள்ளெழுஞ் சோதியாய்நின்றன
னேன்றுகாண்பார்க் கிதுபொருளென்றதாம்.

(இ-ள்.) தோன்றுகாட்சி சுடர்விட்டுளன் என்பது=திருவருள் உதிக்கும் அறிவினுள் ஒளிவிட்டுத் தோன்றுகின்றானென்றருளியது; ஆன்ற அங்கி புறத்தொளியாய்=பெரிய அக்கினியானது புறத்துள்ள ஒளியாக; அன்பில் ஊன்ற உள் எழும் சோதியாய் நின்றனன்=அன்பாற் கருதுங்காற் (புறத்தொளிகளையெல்லாம் விளக்கும்)அகத்தொளியாய் நிற்கின்றான்; ஏன்று காண்பார்க்கு இது பொருள் என்றதாம் = திருவருளோடுகூடிக்காணும் மெய்யுணர்ச்சியுடையார்க்கு இதுவேபொருளென்றருளியதாம்.—எ-று.

அங்கிபுறத்தொளியாயென்றதனால், அங்கியின்வடிவான சந்திர, சூரியரும் உபலக்கணம். சூரியன் உட்டினமுடைமையில், அங்கியின்வடிவமென்றதொக்கும். சந்திரனையும் அங்கியின்வடிவென்றதென்னை? சந்திரனும் ஒளியுண்மையால், அங்கியின்வடிவமேயாம். அதனிடத்துள்ள அமுதத்தால் உட்டினஸ்பரிசம் மறைந்திருந்ததென்க. அதனால் பொன், மணிமுதலியனவும் அக்கினியின் அம்சமென்பர். புறத்து ஒளியுள்ளனவும் இல்லனவுமாய பொருள்களைச் சோம, சூரியர்; அக்கினியென்னும் மூன்றும் விளக்கலில் புறத்தொளியென்றும்; அவ்வொளிகட்கெல்லா மொளிகொடுக்கும்பொருளாய்ச் சிவபிரான் நிற்றலில், உள்ளெழுஞ்சோதியாயென்றும்; அவனையுணர்தற்கு மெய்யன்புகாரணமாதலில், அன்பிலூன்றவென்றும்; அவ்வாறுணர்வார்க்குப் புருடார்த்தங்களுள் முக்கியபுருடார்த்தமான வீடு இதுவேயாதலில், இது பொருளென்றுங்கூறினார்.

அன்னவாதலினென்பதுமுதல், தோன்றுகாட்சிசுடர்விட்டுளனென்ப திறுவாய் மூன்றுசெய்யுளும் நாலாம்பாசுரத்தின் "கோட்பாலனவும் வினையுங்குறுகாமையெந்தை, தாட்பால்வணங்கித் தலைநின்றிவைகேட்க தக்கார்" என்று மூன்றுமடிமுதலிரண்டடியும், ஐந்தாம் பாசுரத்தில் ஏதுக்களாலுமெடு

Koviloor Digital Library

த்த மொழியாறு மிக்குச் சோதிக்கவேண்டா சுடர்விட்டுளனெங்கள் சோதி என்று முதலடி யிரண்டாமடியுள்ளுமமைந்தபொருளையுடையன. மேற்செய்யுளிரண்டிற் சாதனநெறிகூறியதாதலின் இது சாதிக்குமியல்பருளியது. ()

வேறு.

மாதுக்கநீங்க லுறுவீர்மனம் பற்றுமென்ப
னாதிச்சுடர்ச் சோதியையன்பி னகத்துள்ளாக்கிப்
போதித்தநோக்குற் றொழியாமற் பொருந்திவாழ்ந்து
பேதித்தபந்தப் பிறப்பின்னெறி பேர்மினென்றும்.

(இ-ள்.) மாதுக்கம் நீங்கலுறுவீர்மனம் பற்றுமென்பது="மாதுக்க நீங்கலுறுவீர்மனம் பற்றும்" என்றருளியது; ஆதிச்சுடர்ச்சோதியை அன்பின் அகத்துளாக்கி=எப்பொருட்குங்காரணமான ஒளிக்கொளியாயிருக்குஞ் சிவபிரானை யன்பினால் தம்முணர்வுட்சேர்த்து; போதித்த நோக்குற்று ஒழியாமல் பொருந்திவாழ்ந்து="அன்பிலான்ற வுள்ளெழுஞ் சோதியாய் நின்றனன்" என்றருளிய பொருளையுடைய திருப்பாசுரக்கூற்றின் ஞானநோக்கையடைந்து அந்த ஞானத்தை நீங்காமலதனோடுகூடிவாழ்ந்து; பேதித்த பந்தப்பிறப்பின் நெறிபேர்மின் என்றும் = அறுதியேதொடர்ந்து உணர்வை மறைத்த அஞ்ஞானத்தாலாய பிறப்பின் வழியை நீக்குவீரென்றருளியதாம்.—எ-று. இது பயனருளியது. (அகஎ)

ஈண்டுசாதுக்க ளென்றெடுத் தோதிற்று
வேண்டும்வேட்கைய வெல்லாம் விமலர்தாள்
பூண்டவன்பினிற் போற்றுவீர் சார்மினென்
றாண்டசண்பை யரச ரருளினார்.

(இ-ள்.) ஈண்டு சாதுக்கள் என்று எடுத்து ஓதிற்று=இவ்விடத்து "சாதுக்கள் மிக்கிறையேவந்து சார்மின்கள்" என்றருளியது; வேண்டும் வேட்கைய எல்லாம்=விரும்பும் வேட்கையுடையனவெல்லாம்; விமலர் தாள் பூண்ட அன்பினிற் போற்றுவீர் சார்மின் என்று=சிவபிரான் திருவடிகளிற் புணைப்பட்ட அன்புகாரணமாகக்கொண்டு துதிக்கின்ற அடியார்களே நீவிர் அத்திருவடிகளையடையுமென்று; ஆண்டசண்பை அரசர் அருளினார்=நம்மையாளாகக்கொண்ட காழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையா ரருளிச்செய்தார்.—எ-று.

"மாதுக்க நீங்கலுறுவீர்" என்பது முதலிவ்விரண்டுசெய்யுளும், ஐந்தாம்பாசுரத்தில் "மாதுக்க நீங்கலுறுவீர்மனம்பற்றி வாழ்மின், சாதுக்கண் மிக்கிறையேவந்து சார்மின்களே" என்று மூன்றாமடிமுதல் நான்காமடியிறுவாயமைந்த பொருளையுடையன. மேற்செய்யுள் பயனருளியதாதலில், இச்செய்யுள் அதிகாரிகளைவழிப்படுத்தது. (அகஅ)

Koviloor Digital Library

வேறு.

ஆடும்மெனவாந் திருப்பாட்டினமைத்தமூன்று
நீடும்புகழோ பிறர்துன்பநீந்தற்கோவென்று
தேடுமுணர்வீ ருலகுக்கிவைசெய்ததீசர்
கூடுங்கருணைத் திறமென்றனர்கொள்கைமேலோர்.

(இ-ள்.) ஆடும்மெனவாம் திருப்பாட்டின் அமைத்தமூன்றும் = "ஆடும்" என்னுமுதலையுடைய திருப்பாசுரத்திலருளிய சிவபிரான்கருணையாற் செய்தருளும் பஞ்சகிருத்திய நிருத்தத்தைப்பதஞ்சலிமுனிவர் வியாக்கிர பாதமுனிவரென்னு மிருவர்பொருட்டுத் திருவம்பலத்திலாடியருள்வதொன்றதும் தம்மை யடைந்த மார்க்கண்டிக்காக மறலியையுதைத்ததும் வேதங்களை யருளிச்செய்து அது பிரமாணமென்பதனை யுணர்த்தத்தாம் அதனைப்பாடியருளுதலுமாகிய இம்மூன்றும்; நீடும்புகழோ பிறர் துன்பம் நீத்தற்கோ என்று தேடும் உணர்வீர் = மிக்கபுகழைக்கருதியோ அல்லது தன்னையடைந்தாரது துன்பத்தை நீக்குதற்பொருட்டோ வென்று ஆராயுமறிவினையுடையீர் ; உலகுக்கு இவைசெய்தது=உலகத்தார்பொருட்டு இச்செயல் மூன்றையுஞ் செய்தருளியது ; ஈசர்கூடும் கருணைத்திறமென்றனர் கொள்கைமேலோர் = சிவபிரானிடத்துள்ள காருண்ணியத்தன்மையே யென்றருளிச்செய்தார் மேம்பட்டகொள்கையையுடைய பிள்ளையார்.—எ-று.

பதஞ்சலி வியாக்கிரபாதரென்னும் - இருமுனிவரும் பஞ்சகிருத்திய நிருத்தத்தை வெளிப்பட யாவருந் தரிசித்து முத்தியடைய நிமித்தராயும், மார்க்கண்டி சிவனடியாரை வருங்காலத்து இயமனடையாமற்றடுத்தற்கு நிமித்தராயும் இருத்தலில் அவர் பொருட்டுச் செய்தன உலகத்தார்க்குப் பயன்படுதலினாலும், வேதங்களை யருளிச்செய்து உலகம் விதிநிஷேதங்களை யுணர்ந்து புருடார்த்தங்களை அடைகவென ஆட்டுவானடிக்காட்டுந்தன்மை போலச் சிவபெருமான் அவற்றை ஓதுதலும், உலகத்தார்க்குப்பயன்படுதலில் உலகுக்கிவைசெய்ததென்றார். சிவபிரான் சடசித்துப்பொருள்களில் செய்யுந் தொழிலைந்தும் பஞ்சகிருத்திய மெனப்படும். மாயை மகாமாயைகளிலே சத்திருபமா யொடுங்கிய தத்துவதாத்விகங்களைச் சத்துவகுண ஆதிக்கத்தால் வியத்திருபமாக்குதலே சிருட்டி; அந்தத்தத்துவதாத்விகங்களை முதற்காரணம் பற்றாக இராசதகுணாதிக்கத்தினாலே நிலைநிற்கப்பண்ணுவதே திதி; அத்திதி காலமுடிவில் தத்துவதாத்விகங்களை வியத்திருபந்திரித்துச் சத்திருபமாகக் கிரமத்தில் தாமசகுணாதிக்கத்தினால் மாயை மகாமாயைகளில் மறையப்பண்ணுதலே சங்காரம்; இம்மூன்றும் சடத்திற்குரியன. தத்துவங்களைச் சிருட்டித்துப் பரசரீரமாயுஞ் சூக்குமசரீரமாயும் பந்திக்கப்பண்ணி யெடுத்த தேகங்களில் ஆன்மாவினுடைய இச்சா ஞானக்கிரியைகளை விளக்குவது ஆன்ம சிருட்டி ; அந்த இச்சாஞானக்கிரியைகளை இராகதத்துவம், வித்தியாதத்துவம், கலாதத்துவமுதலியவற்றால் விளக்கியவாறு நிலைநிற்கப்பண்ணுவதே ஆன்மதிதி ; அந்தத்தத்துவங்களையும், தத்துவவியாபாரங்களையுமொடுக்கி யறி

Koviloor Digital Library

வுதொழில்களை மறையப்பண்ணுவதே ஆன்மசங்காரம்; மிகவும் இழிவான போக்கியப் பொருள்களையும் மிகநல்லதென்று புசிப்பிக்கிறதே திரோதானம்; சத்திநிபாதம் பிறந்துழி, பாசமுத்தி சிவத்துவ வியத்திபண்ணுவதே யநுக்கிரகம். இவ்வைந்தும் சித்திற்குரியன. இப்பஞ்ச கிருத்திய நடனத்தைச்சகளத்திருமேனிகொண்டு பதஞ்சலி வியாக்கிரனென்னு மிருமுனிவர்பொருட்டு நடித்தானென்பது கோயிற்புராணத்தாலும், மார்க்கண்டிக்காக மறலியையுதைத்தமை கந்தபுராணத்தாலும், இனிதுவிளங்கும். இனிச்ஸ்ரீ, காமிகாதி ஆகமங்கள் பிரணவர் முதலியோர் நிமித்தமா யுலகிற் சத்திநிபாதற்குப் பயன்பட்டாற்போல வேதங்களும், சுவேதர் முதலிய முனிவர் நிமித்தமாய் உலகிற்குப்பயன்பட்டனவென்று கோடலுமொன்று.

இது காருண்ணிய வியல்பருளியது. (௮௫௯)

கருதுங்கடிசேர்ந்த வெனுந்திருப்பாட்டிலீசர்
மருவும்பெரும்பூசை மறுத்தவர்க்கோறன்முத்தி
தருநன்மையாதல் சண்டேசர்தஞ்செய்கைதக்கோர்
பெரிதுஞ்சொலக்கேட்டன மென்றனர்பிள்ளையார்தாம்.

(இ-ள்.) கருதும் கடிசேர்ந்த எனும் திருப்பாட்டில்=யாவருஞ் சிந்திக்கத்தக்க "கடிசேர்ந்த" என்று முதலையுடைய திருப்பாசுரத்தில்; ஈசர் மருவும் பெரும்பூசை மறுத்தவர்க்கோறல்=சிவபிரானது பூசையைச் சிதைத்த எச்சதத்தனென்னும் பிதாவைக்கொன்ற மாபாதகமானது; முத்திதரு நன்மையாதல்=முத்திபயக்கும் பெருந்தவமாதல்; சண்டேசர் தம் செய்கை தக்கோர் பெரிதும் சொலக்கேட்டனமென்றனர் பிள்ளையார் தாம்=சண்டேசநாயனாரது ஒருப்பட்டபத்திமையை மேலோர்கள் மிகவுஞ் சொல்லக்கேள்வியுற்றேமென்று ஆளுடையபிள்ளையாரருளிச்செய்தார்.—எ-று.

இது அன்புடை அடியார்செய்யும் பாவமும் அறமாதலின் அவரிடத்துச்செய்யும் வழிபாடே சிறந்ததென்றருளியது. (௮௬௦)

வேதம்முதல்வனென்னும் மெய்த்திருப்பாட்டினினே
ராதியுலகோரிடர் நீங்கிடவேத்தவாடும்
பாதம்முதலாம் பதினெண்புராணங்களென்றே
போதென்றுரைசெய்தனர் யாவுமோதாதுணர்ந்தார்.

(இ-ள்.) வேதம் முதல்வன் எனும் மெய்த்திருப்பாட்டினினேர்=வேதத்திற்கு முதல்வனென்றருளிய மெய்ம்மையான திருப்பாசுரத்தின் பொருள்; ஆதி உலகோர் இடர் நீங்கிட ஏத்த ஆடும் பாதம்முதலாம்=பரமார்த்தப் பிரமாணமான அவ்வேதத்தால் பிரதிபாதிக்கும் முதற்கடவுள் உலகத்தாரது பிறவித்துன்பம் நீங்கவும் அவர் துதிக்கவும் நிருத்தஞ்செய்தருளுந் திருவடியையுடைய முதல்வரேயாம். (அவ்வாறு அவர் முதல்வராதலை ஐய

Koviloor Digital Library

மறவிளக்கும் பிரமாணங்கள்யாவையெனில்) பதினெண் புராணங்களொன்றே சனற்குமாரரால் வியாசற்குபதேசிக்கப்பட்டு வியாசரால் சூதற்குபதேசிக்கப்பட்ட சைவம் முதலிய பதினெண் புராணங்களேயாம்; என்று ஓதென்று உரைசெய்தனர்:பாவும் ஓதாது உணர்ந்தார்=ஐயவிபரீதங்களை யறுத்தற்பொருட்டு அப்புராணங்களையோதி யுணர்வாயென்றருளிச்செய்தார் எல்லா ஞானங்களையுமோதாதுணர்ந்த ஆளுடைய பிள்ளையார்.—எ-று.

வேதமுதல்வனென்றதனால், வேதம் ஒருவராற்செய்யப்பட்டதன்று நித்தியமாயிருக்குமென்பாரை மறுத்துப் பரமாப்தராகிய சிவனால் அருளியதென்பது பெறப்படுதலில், முக்கியப்பிரமாண மான வேதத்தால் வகுக்கப்படு முதற்பொருள் சிவபெருமானென்பது திண்ணமென்பார், "ஆதியுலகோரிடர் நீங்கிட வேத்தவாடும் பாதமுதலாம்" என்றும், அவ்வாறு அம்முதற்பொருளை நிச்சயித்தற்குரிய அநுவாதகங்கள் பதினெண் புராணங்களாதலால், அவைபிரமாணமேயாமென்பார் பதினெண்புராணங்களொன்றே யென்றும்; அதனையோதியுணர்ந்தா லன்றி அவ் வேதங்களிற் பொதுமையாய்க் கூறிய பதங்கட்குவிசேடப் பொருள் கோடல் இயலாமையில் ஓதென்றுரைசெய்தனரென்றுங் கூறினர். அற்றாக, வேதமருளிச்செய்யப்பட்டதென்றதென்னை? ஓதுவார்க்கு ஓதுவிக்கு முறைமையால் நேற்றுச்சொன்ன ககரத்தையின்று சொன்னானென்றாற்போல நித்தியமன்றோ வெனின்? நன்கு சொன்னாய். நேற்றுச்சொன்ன ககாரத்தையின்றுசொன்னான் என்ற பிரதீதி அச்சாதிபற்றியன்றிப் பிறிதன்றென்பது ககாரமுதித்தது, ககாரம் நட்டமாயிற்று என்பதனாற் பெறப்படும், அதுபோல வேதம் பதவாக்கியமான ஒலியாதலில் வியாசர் முதலியோர் வாக்கியம்போல ஒரு கருத்தனால் கூறப்படுமென்பதனால் ஓதுவிக்கும் பரம்பரையில் நித்தியமாதல் பெறப்படாமையில், சொரூபநித்தியமன்று பிரவாக நித்தியமேயாம். நாததத்துவத்தில் சத்திருபமாயடங்கிய வேதத்தைப்பரமாப்தராகிய சிவபெருமான் வியத்தி ரூபமாய் அருளிச்செய்தலில் அதனாலருளிச் செய்ததென்றது.

வேதார்த்தத்தைவிளக்குதற்குப் புராணம் முக்கியப்பிரமாணமென்பதென்னை? அது, நான்குவேதங்களையுணர்ந்தானேனும் புராணத்தை நன்குணரானேல், உவ்வேதங்கள் எனது அர்த்தங்களைப் பேதிப்பானென்று அவனுக்கு அஞ்சுமெனவும்; ஆதியில் சிவபிரான் வேதம் நான்கும், அங்கமாறும், மீமாம்சையொன்றும், நியாயமொன்றும், புராணங்களொன்றும், தன்மசாஸ்திரங்களொன்றும், ஆக இப்பதினான்குடன் ஆயுள்வேதம், தனுர்வேதம், காந்தர்வவேதம், சிற்பசாஸ்திரம், ஆகிய உபவேதம் நான்குமாகப் பதினெட்டு வித்தையையும் அருளிச்செய்து பிரமாவைச்சிருட்டித்து பதினெட்டையுமவர்க்குபதேசித்துச் சிருட்டித்தொழிலையனுக்கிரகஞ்செய்தார். மேல் அப்பிரமன் உயிர்களைச் சிருட்டித்தற்குத் தன்முகத்தினின்று புராணங்களை முதலிற்சொன்னார். எனவும், அதன் பின்பு வேதங்களும் ஏனைய வித்தைகளுமவர்முகத்து வெளிப்பட்டன எனக்கூறி வாயவியசம்மிதையில் புராண இதி

Koviloor Digital Library

காசங்களால் வேதார்த்தங்களையுபபிரம்மணஞ் செய்கவெனக்கூறுதலால் அதற்குப் புராணம் முக்கியப்பிரமாணமேயாம். அப்புராணங்கள் எவ்வாறு உபபிரம்மணஞ்செய்யுமெனில், வேதத்தில் உருத்திரமூர்த்தியைக்கூறும் சிலவாக்கியங்கள், திருமாலைக்கூறும் சிலவாக்கியங்கள், பிரமனைக்கூறும் சிலவாக்கியங்கள், அக்கினியைக்கூறும் சிலவாக்கியங்கள், சூரியனைக்கூறும் சிலவாக்கியங்கள், இவ்வாறு பலவாய்க் கூறிய கர்த்திருவாக்கியங்களிற் சிவபிரான் அம்மூர்த்திகளில் கலந்திருக்கின்றாரென்னுங் கருத்தால் அவர்களைக் கூறுமுகத்தால் சிவபரத்துவமே னன்குணர்த்தும். அவ்வாறு சைவமுதலிய பதினெண்புராணங்களும் அப்பொருளை வெளிப்படுத்தச் சிவனதிட்டித்திருக்குங் கருத்தால் அந்தந்த மூர்த்திகளைப்பரமாய்க்கூறி மேலவைகளை நிராகரித்துச் சைவபுராண, வாயவியசம்மிதை, காந்தபுராணத்துச் சூதசம்மிதை முதலிய சிவபுராணங்களில் சுருதி அருத்தமான சர்வகாரணன் சிவபிரானென்பதை யேவிளக்கும். ஆதலால், விரோதமின்றிப் பதினெண்புராணமும் பிரமாணமேயாம். (அசக)

பாவுற்றபாராழி வட்டத்திருப்பாட்டினுண்மை
காவற்றொழிலானெனுங் கண்ணனுங்காவல்பெற்ற
தியாவர்க்குமேலாய வீசனருளாழிபெற்று
மேவுற்றசிறந்றது வென்றனர்வேதவாயர்.

(இ-ள்.) பாவுற்ற பாராழி வட்டத்திருப்பாட்டின் உண்மை=பரம்பியபாராழிவட்டம் என்னும் திருப்பாசுரத்தினுண்மைப்பொருள்; காவற்றொழிலானெனுங் கண்ணனுங் காவல் பெற்றது=யாவராலும் காத்தற்றொழிலையுடையானென்று கூறும் திருமாலும் அக்காத்தற்றொழிலை யடைந்தது; யாவர்க்கும் மேலாய ஈசனருளாழிபெற்று = எல்லார்க்கும்மேலாய சிவபெருமான் கொடுத்த சுதரிசனம் என்னும் சக்கரத்தைப்பெற்றதனால்; மேவுற்ற சிறந்றதுவென்றனர் வேதவாயர்=அதனாலுண்டாய புகழ் உலகில் நிலைபெற்றது என்றருளினர் வேதத்தையருளுந் திருவாயையுடைய பிள்ளையார்-எ-று.

திருக்கயிலாயத்தில் சிவபிரானைத் தரிசிக்கும்படி இந்திரன் அகந்தையோடுசெருங்கால் சிவபிரான் அங்கு ஓர் பூதத்தலைவன் கோலங்கொண்டு முதற்கடைவாயிலினின்றார். இந்திரன் அவரைநோக்கி நீ, யார்? யான் சிவபெருமானைத் தொழச்செல்கின்றேன் சமயம் யாது கூறென்று வினவ, சிவபிரானதற்கு உத்தரஞ்சொல்லாதிருந்தார் இந்திரன் அவரைக்கோபித்துத்தன் குலிசப்படையை அவர்மேல் எறிந்தான். அது அக்கடவுள்மேற்பட்டுத் துகளாயழிந்தது. சிவபிரான் அப்பொழுது தான்கொண்ட பூதவுருவை நீங்கி உருத்திரவடிவத்தைத்தரித்துநின்றார். அவரதுதிருமேனியில் கோபத்தீயோடு வெப்பவுந்தோன்றிற்று. அதைக்கண்ட இந்திரன் அச்சமுற்று அடியேன் அறியாதுசெய்த பிழையைப் பொறுத்தருளவேண்டுமென்று வணங்கினான். அவன்மேற் கிருபைகூர்ந்து தன்கோபத்தீயை மேற்குச்சமுத்திரத்தில் விடுத்து இந்திரனையும் செல்கவென்றனுப்பினார்.

Koviloor Digital Library

அத்தீ அச்சமுத்திரத்திலோர் சிறுவனாக வருணராசன் அப்புத்திரனை வளர்த்தான். அவனுக்குச்சலந்தரனென்றுபெயர். மேலச்சலந்தரன் சிவபிரான் வெகுளியிலுதித்தோனாதலின் பிரமாமுதலியோரிடத்து வரம்வேண்டாதவனும் எத்தேவர்கட்கும் அஞ்சாதவனும் தேவர்களெல்லாருமஞ்சும் வண்ணம் அசுரத்தச்சனாலியற்றப்பட்ட சாலாந்தரமென்னும் நகரத்தில் அசுரர்கள் சூழப்பூமியி லரசாண்டுகொண்டிருந்தான். அவனுட னிருபதினாயிரமாண்டு திருமாலுருத்தெழுந்து போர்செய்தும் அவனைவெல்ல முடியாமற் புகழ்ந்துபோனார். அதன்மேலவன் இந்திரன் முதலிய தேவர்களெல்லாருந் தனக்கஞ்சிக் கயிலையை யடைந்தமையையுணர்ந்து அவன்மனையாள் விருந்தை என்பவள் நீ சிவபிரானுடன் போர்செய்தாலிறப்பாய் அதனால் போர்செய்யச்செல்லவேண்டாமென மறுக்கவும் அவள்சொல்லைமறுத்துச் சதுரங்கசேனைகள் சூழத் திருக்கயிலைக்கு யுத்தஞ்செய்யச்சென்றான். அவன்வரவுணர்ந்த இந்திரன் திருநந்திதேவரருள்பெற்றுக் கயிலையில் சிவபிரானையடைந்து வணங்கி அவன் வரவை விண்ணப்பஞ்செய்து இவ்வசுரன் மேருவின் பக்கத்துயான் ஒளித்திருக்குங்காலுமென்னுடன் யுத்தஞ்செய்யவந்தான். அப்பொழுது நான் அச்சமுற்றுத் திருமாலை நினைந்தேன் அவரும்வந்து யுத்தஞ்செய்து தோற்றார். எங்குப்பயந்து புகலடைந்தவிடத்தும் யாது கருதியோவந்தான். இவன் வலியையும் வாழ்நாளையும் தேவரீர் நீக்கியருளவேண்டுமென்று பிரார்த்தித்தான். அப்பொழுது சிவபிரான் இந்திரன்வார்த்தையைக்கேட்டு பெருங்கருணையால் ஓர் ஆடல்குறித்து விருத்தமுனிவராயவ்வசுரனெதிர்சென்று நீயார்? எங்கிருக்கின்றவனென்று வினாவினார்? அதற்கவன் என்பெயர் சலந்தரன் பூமியிலிருக்கின்றவன் நெற்றிக்கண்ணையுடைய சிவபிரானுடன் போர்செய்யவந்தேனென்றான். அதற்குச் சிவபிரான் நான் அவருடைய அருகிலிருப்பவன் நீ அவருடன் போர்செய்ய முயற்சிசெய்வையேலிறப்பாய் உய்ய நினைவையேல் போர்செய்யாதொழிதியெனக்கூறினார். என்வலியை அறியாதுகூறினீர் இறைப்பொழுது நீர் ஈண்டுநின்று என்வலிமையை அறிவீராகவென்றுகூறினான். அப்பொழுதுசிவபிரான் யாமும் உன் வலிமையைக் காணவந்தோமென்று தனது திருவடியினால் பூமியிலொரு சக்கரத்தை வரைந்து இறி இதனைச் சிரசிலெடுத்துத் தரிக்கவல்லையோவென்றார். அதற்குச் சலந்தரன் தேவர்கள் யாவரையும் வென்றேன், தேவகங்கையின் வழியையுமடைத்தேன், வடவாலத்தை யவித்தேன், திருமாலை வென்றேன் எனக்கு இது தாங்குதற் கரியதாவெனக்கூறி அச்சக்கரத்தை வருந்தி எடுத்து மார்பிலும் புயத்திலும் தாங்கிச் சிரத்திற்சேர்த்தான் அப்பொழுது அச்சக்கரம் சலந்தரனுடைய உச்சிமுதலிருபாதியாகக் கிழித்தது. அவனுடலினின்று மிரத்தம்பெருகிற்று. அவ்வுடலையிருபிளவாக்கிய அச்சக்கரமானது சிவபிரானிடத்திருந்தது. அச்சக்கரத்தைப் பெறும்பொருட்டுத் திருமால் பலநாள் திருவீழிமிழலையில் ஆயிரந்தாமரைமலர்களாற்பூசித்துவழிபட்டார். வழிபடும் நாளில் ஓர்நாள் ஓர்பூக்குறையத் தம்மலர்போலும் வலக்கண்ணை இடந்து சிவ

Koviloor Digital Library

பிரான் திருவடிக்குச்சாத்தினார். அதனாற்றிருவுளமகிழ்ந்து இடபவாகனத்திற்சிவபிரான் பிரசன்னராய் அச்சுதரிசனமென்னுஞ் சக்கரத்தைக் கொடுத்தருளினார். அதனால் அவருக்கு நேமியானென்று பெயருண்டாயிற்று. இது திருமாலாழிபெற்ற சரித்திரம். (௮௪௨)

மாலாயவனென்ன வருந்திருப்பாட்டின்மாலுந்
தோலாமறைநான் முகனுந்தொடர்வாமமர
ரேலாவகைசுட்ட நஞ்சுண்டிறவாமைகாத்த
மேலாங்கருணைத் திறம்வெங்குருவேந்தர்வைத்தார்.

(இ-ள்.) மாலாயவனென்ன வருந்திருப்பாட்டின்=மாலாயவனென்னும் முதலையுடைய திருப்பாசுரத்தில்; மாலுந்தோலாமறை நான்முகனும்= திருமாலும் வெற்றிபொருந்திய நான்குவேதங்களையுமுணர்ந்த பிரமனும்; தொடர்வாம் அமரர்=முதலானதேவர்கள்; ஏலாவகைசுட்ட நஞ்சுண்டு= (பாற்கடல்கடைந்த ஞான்றுதித்தியாவரும்) முன்னிற்காதிரிந்தோடும் வண்ணஞ்சுட்ட ஆலாகலத்தை அமுதாகக்கொண்டு; இறவாமைகாத்த = அவர்களிறவாமற்காத்தருளிய; மேலாங்கருணைத் திறம்வெங்குரு வேந்தர்வைத்தார்=மேலாயதிருவருளின் திறத்தைச் சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார் வைத்தருளினார்.—எ-று.

முன்னாளில் அசுரருந் தேவரும் மிகுந்தகோபத்தால் போர்செய்யுங்கால் இருதிறத்தாரிலும் பற்பலரிறந்தார்கள். அதனால் அஞ்சிப் போர்செய்தலை யொழிந்து மேலவர்கள், தம்முதல்வராகிய அசுரேந்திரன், தேவேந்திரனென்னு மிருவருடன் பிரமனையடைந்து நாம் அற்பாயுளையுடையோம் பாற்கடலைக்கடைந்து அமிர்தத்தையெடுத்துத்தேவரீர் எமக்குக் கொடுப்பீராகவென்று பிரார்த்திக்க அவர் அவர்களுடன் பாற்கடலிற் பள்ளிகொண்டருளுந் திருமாலையடைந்து துதித்தார். திருமாலதறிந்து உணர்வு துயிலொழிந்து நீங்கள் இவ்விடத்து வந்தது என்னகாரணமென்று வினவினார். பிரமன் அவர்கள்வேண்டியகுறையைச் செப்புங்கால் அவ்வாறுசெய்துமென அவர்க்குக்கிருபைசெய்து திருமாலானவர் மந்தரமலையை மத்தாகவும் சந்திரனை மதலையாகவும் வைத்து வாசுகியை நாணாகக்கட்டி யொருபுறத்துத் தேவர்களு மொருபுறத் தசுரர்களு மிழுத்துக்கடையும்படிசெய்து, மந்தரமலையாகிய மத்தினது அடியையும் முடியையுங்கூர்மருபமாய் முதுகினும் கரத்தினுந் தாங்கினார். தேவரு மசுரருந் தம்வலியால் மந்தரஞ்சுழலக் கடையுங்கால் கயிறாகிய வாசுகி யதனைப்பொறுக்கலாற்றாது வருந்தித்தன் ஆயிரம் வாயினும் ஆலாகலத்தைக்கான்றது. அப்பொழுது திருப்பாற்கடலும் விடத்தைக்கொடுத்தது. அவ்வாலாகலம் நூறுகோடி வடவாகலங்கள் ஒருங்குசேர்ந்து பரந்தாற்போலப் பரவியது. அப்பொழுது அதுகண்ட தேவர்களும், அசுரர்களும், முனிவர்களுமாகிய எல்லாரும் பயந்தோடுதலைத் திருமால்பார்த்து மந்தரத்தைத் தாங்குதலைவிட்டு இத்துன்பத்தைப்பாதுகாப்போமென்று கருதி அவ்விடத்தின்முன்னே யடுத்துநின்றார். அவ்விடம்

Koviloor Digital Library

அவரது திருமேனியிலே பட்டுவைரமணி நிறமானதிருவுருவை நீலவண்ண மாக்கியது. அதனால், அவ்விடத்தின்முன் அவரும்நிற்காமல் பிரமன்முதலிய தேவர்களுடன் சிவபிரான் எழுந்தருளியிருக்குந் திருக்கயிலையையடைந் தார். மேல், அவர்களெல்லாருந்திருநந்திதேவரிடத்து நிகழ்ந்த சரிதங்களை யெல்லாஞ்சொன்னார்கள். அப்பொழுது திருநந்திதேவர், தேவர்களையு மசு ரர்களையுந் தனித்தனி யோரிடத்துவைத்து இந்திரன்முதலிய திக்குபாலகர் களையும், திருமால், பிரமனையுமழைத்துக்கொண்டுபோய், ஐந்தாம்பிரகாரத் தில் திக்குபாலகர்களை நிறுத்திப் பிரமா விட்டுணுக்களைச்சிவபிரானது திரு வுள்ளக்குறிப்பின்படித் திருமுன்னேசேர்த்தார். அப்பொழுதுதம்மை வண ங்கித்தோத்திரஞ்செய்து நிற்கும் அவ்விருவருள் சிவபிரான் திருமாலைப் பார்த்தருளி, விட்டுணுவே! உம்முடைய உடம்பு கருகியவாறென்னென்று வினவியருள அவர் சுவாமி! தேவர்களுமசுரர்களு முனிவர்களும் பிரமனுமெ ன்னைச்சூழ, யான் இன்று திருப்பாற்கடலை யமுதம்வேண்டிக்கடையுங்கால் அக்கினிபோல ஆலாகலமுதித்தது. உயிர்களெல்லாம் இறக்கும்படி அக்கொ டியவிடம் செல்லுங்கால் பிரமன், இந்திரன், சந்திரன், அக்கினி முதலிய வெல்லாத்தேவர்களும் பயந்து ஓடினார்கள். அவர்களைக் காக்கும்பொருட்டு ஒரு கணம் அவ்விடத்தின்முன்னின்ற என்னுடம்பையுங் கருநிறமாக்கிற்று. அதனால், அத்தேவர்களுடன் யானும் இந்தவிடத்தையடக்கவல்லவர் தேவரீ ரேயன்றி யாரிருக்கிறார்களென்று புகலடைந்தேனென்று கூறித்துதித்தார். அவ்வாறு, தாங்கள் நின்றவெல்லைகளிற் றிக்குபாலகர்களும் தேவர்களும், அசுரர்களும் விடத்தால் வருந்திய யாவரு மங்கங்கு நின்று துதித்தார்கள். அதைக்கேட்டுச் சிவபிரான் கருணைகூர்ந்து ஆலாலசுந்தரரைப்பார்த்தருளி அவ்விடத்தை யெடுத்து வருவாயாகவென்றுக்கிஞாபிக்க, அவரருளால் ஆலாக லத்தை ஆலாலசுந்தரர் கொண்டுவந்தார். அப்பொழுது, பிரமாமுதலிய தே வர்களைச் சிவபிரான் பார்த்தருளி இதையாதுசெய்யவேண்டுமென்றுகேட்கப் பிரமாதிதேவர்கள் தேவரீர் சிவந்த திருக்கரத்தில் தாங்கியதனால், இவ் விடம் சிறியதாயிருந்தது இதைவெளியேவிட்டால் யாவரும் உய்யாரெ ன்று சொன்னார்கள். அப்பொழுது, தம்திருக்கரத்திலிருக்கும் விடத்தைப் பிரமாதிதேவர்களையும், உலகத்தையும் இரட்சிக்கும்பொருட்டுப் பானம்பண் ணியருளினார். அப்பொழுது தேவர்கள், இவ்விடஞ் சிவபிரானது மிடற் றின்கண் செல்லுங்கால் எம்முயிரை நீர் காத்தற்கடையாளமாக இத்திருமிட ற்றில் இதனைத்தரித்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க அவ்வாறு அவ்வி டத்தைத் தரித்தருளினார். இதுவிடமுண்டு அமரரைக்காத்த சரிதம்.

எட்டாம் பாசுரத்தின் பொருளான "வேதமுதல்வனென்னும்" செய் யுள்வேறப்பொருளையுணர்தற்குப் புராணம் முக்கியப் பிரமாணமென்றருளிய வமையின் ஒன்பதாம் பாசுரத்துப் பொருளாகிய திருமால் சக்கரம் பெற்ற சரிதமுணர்த்திய, "பாராழிவட்டத் திருப்பாட்டென்னும்" செய்யுளும்பத் தாம் பாசுரப்பொருளாகிய திருமால் பிரமன்முதலிய தேவர்களுய்ய ஆலால

Koviloor Digital Library

முண்டருளிய சரிதமுணர்த்தும் "மாலாயவனென்ன" வருந்திருப்பாட்டெனுந் செய்யுளும் ஆயவிவ்விரண்டும் சிவபிரானொழிந்த தேவர்களெல்லார்க்கும் முதல்வரான திருமால் சக்கரம்பெற்றுக் காவற்றொழில் பெற்றமையையும் ஆலாலத்தையுண்டு திருமால்பிரமன்முதலிய எல்லாத்தேவரையும் காத்தமையையும் அப்புராணங்கள் கூறுதலால் சிவபிரான் எல்லாத்தேவர்க்கும் முதல்வனென்பதை அப்புராணங்கள் விளக்குமென்பதையுங்காட்டி புராணங்கள்பதினெட்டும் சிவபிரானே பரம்பொருளெனக் கூறுமென்பதை வற்புறுத்துகின்றன. (௮௪௫)

ஆனவற்றன்றியென் றெடுத்தவத்திருப்பாட்டிற்கூடன்
மாநகர்ச்சங்கம் வைத்தவன்றேறத்தேறு
வினர்களெல்லைக்கிட்ட வேடுகெதிர்ந்துசெல்லில்
ஞானமீசன்பாலன்பே யென்றனர்ஞானமுண்டார்.

(இ-ள்.) ஆனவற்றன்றி எடுத்த அத்திருப்பாட்டில் = "அற்றன்றி" என்றெடுத்த பதிகத்திருப்பாசுரத்தில் ஆயபொருள்; கூடல்மாநகர்ச்சங்கம் வைத்தவன்தேற=பெரியமதுரைத் திருப்பதியில் முத்தமிழ்ச்சங்கத்தை வளர்த்தபாண்டியராசன் தெளியும்படி; தேறு ஈனர்கள் எல்லைக்கிட்ட ஏடுகள் எதிர்ந்துசெல்லில்= உணராத சமணர்கள் இடும் வைகையாற்றி னெல்லையில் இட்ட ஏடானது அந்நீரில் எதிர்ந்துசென்றால்; ஞானம் ஈசன்பால் அன்பே என்றனர் ஞானம் உண்டார் = மெய்ஞ்ஞானமாவது சிவபெருமானிடத்து வைத்த அன்பேயென்றருளிச்செய்தார் திருஞானப்பாலுண்ட ஆளுடைய பிள்ளையார்.—எ-று. (௮௪௬)

வெறியார்பொழிற்சண்பையர் வேந்தர்மெய்ப்பாசுரத்தைக்
குறிபேறியவெல்லை யறிந்துதும்பிட்டேனல்லேன்
சிறியேனறிவுக் கவர்தந்திருப்பாதந்தந்த
நெறியேசிறிதுயா னறிந்தமைதும்பிட்டேனன்பால்.

(இ-ள்.) வெறியார் பொழிற்சண்பையர் வேந்தர் மெய்ப்பாசுரத்தை=வாசனை பொருந்திய சோலைசூழ்ந்த சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையாருளிய திருப்பாசுரத்தை; குறி ஏறிய எல்லை அறிந்து கும்பிட்டேன் அல்லேன் = அப்பாசுரங்குறித்த பொருளமைந்தமுடிவை அறிந்து துதித்தவனல்லேன்; சிறியேன் அறிவிற்கு அவர் தம் திருப்பாதம் தந்த=சிறியேனது சிற்றறிவிற்கு அப்பிள்ளையாரது திருவடிகள் தந்தருளிய; நெறியே சிறிது யான் அறிந்தமை கும்பிட்டேன் அன்பால் = திருவருளின்வழியே சிறிது நானறிந்தவண்ணம் அன்பால் துதித்தேன்.—எ-று. (௮௪௭)

வேறு.

திருவுடைப் பிள்ளையார்தந் திருக்கையா லிட்டவேடு
மருவுறும் பிறவியாற்றின் மாதவர் மனஞ்சென்றாற்போற்

Koviloor Digital Library

பொருபுனல் வைகையாற்றி லெதிர்ந்துநீர் கிழித்துப்போகு
மிருநிலத் தோர்கட்கெல்லா மிதுபொருளென்றுகாட்டி.

(இ-ள்.) திருவுடைப்பிள்ளையார் தம் திருக்கையால் இட்ட ஏடு= சிவஞானச்செல்வம் நிறைந்த ஆளுடையபிள்ளையார் தமது திருக்கரத்தால் இட்டருளிய திருப்பாசுரமெழுதிய திருவேடானது; மருவுறும் பிறவியாற்றில் மாதவர்மனம்சென்றாற்போல் = தம்மைத்தொடர்ந்த பிறவியாகிய ஆற்றின்கண் பெரியதவத்தையுடைய அடியார்களது மனமானது (அதன்வழித்தாகாது) தன்வழித்தாய்ச்சென்றாற்போல; பொருபுனல்வைகையாற்றில் எதிர்ந்து நீர்கிழித்துப்போகும்=கரைபொருது செல்லும் நீர்நிறைந்த வைகையாற்றின்கண் எதிர்த்து அந்நீரைக்கிழித்துச் செல்லும்; இருநிலத்தோர்கட்கெல்லாம் இதுபொருளென்று காட்டி=பெரிய நில உலகத்திலுள்ள மனிதர்களுக்கெல்லாம் இச்சைவசமயப்பொருளே உண்மைப்பொருளென்று காட்டி-எ-று.

ஆற்றுநீர் ஒன்றன்பின்னொன்று தொடர்ந்து வருதல்போலப் பிறவியும் ஒன்றன்பினொன்று தொடர்ந்துவருதலில், பிறவியாறென்றும் அதின்வழிச்செல்லும் ஆன்மாக்களின் மனம் அதன்வழித்தாய்ச் செல்லுதல்போற் செல்லாது தன்வழித்தாய்ச் சேறலில், மாதவர் மனஞ்சென்றாற்போலென்றுங் கூறினர். (அசசு)

எம்பிரான் சிவனேயெல்லாப் பொருளுமென் றெழுதுமேட்டிற்
றம்பிரா னருளால்வேந்தன் றன்னைமுன் னோங்கப்பாட
வம்புய மலராள்மார்ப னனபாய னென்னுஞ் சீர்த்திச்
செம்பியன் செங்கோலென்னத் தென்னன்கூ னிமிர்ந்ததன்றே.

(இ-ள்.) எம்பிரான் சிவனே எல்லாப்பொருளும் என்று எழுதும் ஏட்டில்=எமது பிரானாகிய சிவபெருமானே சித்தசித்தாய் எல்லாப்பொருளுள்ளும் வியாபியாயிருக்கின்றானென்றும் பொருளைவரைந்த அத்திருப்பாசுரத்தில்; தம்பிரானருளால் வேந்தன் தன்னை முன் ஓங்கப்பாட=சிவபெருமான் திருவருளால் "வேந்தனும் ஓங்குக" என்று முன்பு பாடியருளுதலால்; அம்புயமலராள் மார்பன் அனபாயனென்னும் சீர்த்திச் செம்பியன் செங்கோலென்ன=இலக்குமிவசிக்கும் மார்பையுடைய அனபாயனென்றுகூறுஞ் சீர்த்தியையுடைய சோழராசனது செங்கோலைப்போல; தென்னன்கூன் நிமிர்ந்தது=பாண்டியராசனுடைய கூனானது நிமிர்ந்தது.—எ-று.

இப்பாண்டியனுக்கு முன் கூன்பாண்டியனென்றும் பின் நின்ற சீர்நெடுமாறனென்றும் பெயர். (அசஎ)

ஏடுநீ ரெதிர்ந்துசெல்லும் பொழுதிமை யோர்களெல்லாம்
நீடிய வாழ்த்திற்போற்றி நிமிர்ந்தபூ மாரிதூர்ந்தா

Koviloor Digital Library

ராடியல் யானைமன்ன னற்புத மெய்திநின்றான்
பாடுசே ரமணரஞ்சிப் பதைப்புடன் பணிந்துநின்றார்.

(இ-ள்.) ஏடு நீர் எதிர்ந்துசெல்லும்பொழுது=திருப்பாசுரத்திருவேடு வைகை நீர்ப்பெருக்கில் எதிர்த்துச்செல்லுங்கால்; இமையோர்களெல்லாம் நீடிய வாழ்த்திற்போற்றி நிமிர்ந்தபூமாரிதூர்த்தார்=தேவர்களெல்லாம் மிக்க வாழ்த்தொலியாற்றுதித்து நிறைந்த பூமழை பொழிந்தார்கள்; ஆடியல் யானை மன்னன் அற்புதமெய்திநின்றான்=ஆடுதலோ டிலக்கணமமைந்த யானைப்படையையுடைய பாண்டியன் ஆச்சரியமடைந்து நின்றான்; பாடுசேர் அமணர் அஞ்சிப் பதைப்புடன் பணிந்து நின்றார்=இறுமாப்புடைய சமணர்கள் பயந்து பதைபதைப்புடன் தலைகுனிந்து நின்றார்கள்.—எ-று. (௮௪௮)

ஆற்றின்மேற் செல்லுமேடு தொடர்ந்தெடுப் பதற்குவேண்டிக்
காற்றினுங் கடுகச்செல்லுங் கடும்பரி யேறிக்கொண்டு
கோற்றொழி றிருத்தவல்ல குலச்சிறை யார்பின்சென்றா
ரேற்றுயர் கொடியினானைப் பாடினா ரேடுதங்க.

(இ-ள்.) ஆற்றின்மேற்செல்லும் ஏடுதொடர்ந்து எடுப்பதற்குவேண்டி=வைகையாற்றிலெதிர்ந்துசெல்லும் பாசுரத்திருவேட்டைத்தொடர்ந்தெடுக்கவிரும்பி; காற்றினும் கடுகச்செல்லும் கடும்பரி ஏறிக்கொண்டு = காற்றினும் விரைந்து செல்லுங் கடுவேகத்தையுடைய குதிரையின்மேலேறி; கோற்றொழில் திருத்தவல்ல குலச்சிறையார்பின்சென்றார்=செங்கோலினது கோட்டத்தைத் திருத்துதற்குவல்ல மந்திரியாராகிய குலச்சிறைநாயனாரும் பின்பு சென்றருளினார்; ஏற்றுயர் கொடியினானைப்பாடினார் ஏடுதங்க=(எதிர்ந்துசெல்லும்) பாசுரத்திருவேடு தங்கும்படி இடபக்கொடியையுடைய சிவபெருமானைப் பிள்ளையார் பாடியருளினார்.—எ-று. (௮௪௯)

ஏடகம் பிள்ளையார் தாம் வன்னி றெடுத்துப்பாடக்
கூடிய நீரிலேடு குலச்சிறை யாருங்கூடிக்
காடிட மாகவாடுங் கண்ணுதல் கோயின்மாடு
நீடுநீர் நடுவுட்புக்கு நின்றவே டெடுத்துக்கொண்டார்.

(இ-ள்.) ஏடகம் பிள்ளையார்தாம் வன்னியென்றெடுத்துப்பாட=திருவேடகத்திருப்பதிகத்தை ஆளுடையபிள்ளையார் "வன்னியுமத்தமும்" என முதலெடுத்துப்பாட; கூடிய நீரில் ஏடு குலச்சிறையாருங்கூடி=நீரிற் பொருந்திய திருவேட்டினைக் குலச்சிறை நாயனாருமடைந்து; காடு இடமாக ஆடும் கண்ணுதல் கோயில்மாடு=மாமயானமே அரங்காக நின்று திருத்தஞ்செய்தருளும் திருவேடக நாதரது திருக்கோயிலின்பக்கத்து; நீடும் நீர் நடுவுட்புக்கு நின்ற ஏடு எடுத்துக்கொண்டார்=மிக்க நீர் நடுவுட்சென்று அங்கு நின்ற திருவேட்டையெடுத்தருளினார்.—எ-று. (௮௫0)

Koviloor Digital Library



வைகையில் எதிர்நோக்கிவந்தஏடுதன்பால்தங்கிமாறு-திருஞானசம்பந்தசுவாமிகள்திருப்பதிகமோததிருஏடகமென்னும்-
திருப்பதியில்-மந்திரியார்சென்று ஏடுத்து சுவாமிகளிடம்சேர்த்தது.

Koviloor Digital Library

திருவேடகம்-பண்-கொல்லி.
திருச்சிற்றம்பலம்.

வன்னியு மத்தமு மதிபொதி சடையினன்
பொன்னிய திருவடி புதுமல ரவைகொடு
மன்னிய மறையவர் வழிபட வடியவ
ரின்னிசை பாடல ரேடகத் தொருவனே. (க)

கொடிநெடு மாளிகைக் கோபுரங்குளிர்மதி
வடிவுற வமைதர மருவிய வேடகத்
தடிகளை யடிபணிந்த ரற்றுமினன்பிறை
விடிபடும் வினைகள் போயில்லைய தாகுமே. (உ)

குண்டலந் திகழ் தருகாதுடைக் குழகனை
வண்டலம் பும்மலர்க் கொன்றைவாண் மதியணி
செண்டலம்பும் விடைச் சேடனா ரேடகங்
கண்டுகை தொழுதலுங் கவலைநோ யகலுமே. (ங)

ஏலமார்தருகுழ லேழையோ டெழில்பெறுங்
கோலமார் தருவிடைக் குழகனு றுறைவிடஞ்
சாலமாதவிகளுஞ் சந்தனஞ் சண்பகஞ்
சீலமாரேடகஞ் சேர்தலாஞ் செல்வமே. (ச)

வரியணி நயனிநன் மலைமகண் மறுகிடக்
கரியினை யுரிசெய்த கறையணி மிடறினன்
பெரியவன் பெண்ணினோ டாணலியாகிய
வெரியவ னுறைவிட மேடகக் கோயிலே. (ரு)

பொய்கையின் பொழிலுறு புதுமலர்த் தென்றலார்
வைகையின் வடகரை மருவிய வேடகத்
தையனை யடிபணிந்த ரற்றுமின்னடர்தரு
வெய்யவன் பிணிகெட வீடெளி தாகுமே. (சா-எ)

தடவரை யெடுத்தவன் றருக்கிறத்தோளடர்ப்
படவிரலூன்றியே பரிந்தவற் கருள்செய்தான்
மடவரலெருக்கொடு வன்னியு மத்தமு
மிடமுடைச் சடையின னேடகத்திறைவனே. (அ)

பொன்னுமா மணிகளும் பொருதிரைச்சந்தகி
றன்னுளார் வைகையின் கரைதனிற் சமைவுற

வன்னமா மயனுமா லடிமுடி தேடியு
மின்னவா றெனவொணா னேடகத்தொருவனே. (௯)

குண்டிகைக் கையினர் குணமிலாத் தேரர்கள்
பண்டியைப் பெருக்கிடும் பளகர்கள் பணிகிலர்
வண்டிணைக்கும் மலர்க்கொன்றையும் வன்னியு
மிண்டைசேர்க் குஞ்சடை யேடகத்தெந்தையே. (௧௦)

கோடுசந் தனமகில் கொண்டிழி வைகைநீ
ரேடுசென் றணைதரு மேடகத் தொருவனை
நாடுதென் புகலியுண் ஞானசம் பந்தன
பாடல்பத் திவைவல்லார்க் கில்லையாம்பாவமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

தலைமிசை வைத்துக்கொண்டு தாங்கரு மகிழ்ச்சிபொங்க
வலைபுனற் கரையிலேறி யங்கினி தமர்ந்துமேருச்
சிலையுடை யவர்தாள்போற்றி மீண்டுசென் றணைவார்தெய்வ
மலைமகள் குழைத்தஞான முண்டவர் தம்பால்வந்தார்.

(இ-ள்.) தலைமிசைவைத்துக்கொண்டு தாங்கரும் மகிழ்ச்சிபொங்க= அத்திருவேட்டைச் சிரசின்மேல் தாங்கிக்கொண்டு பொறுத்தற்கரிய மகிழ்ச்சிமேம்பட; அலைபுனற்கரையில் ஏறி அங்கு இனிது அமர்ந்து=அலைவீசும்புனலையுடைய வைகைநதியின்கரையிலேறி அங்கு இனிதாக இருந்து; மேருச்சிலையுடையவர் தாள்போற்றி மீண்டு சென்று அணைவார்=மாமேருவை வில்லாகவுடைய ஏடகநாதரது திருவடிகளைவணங்கித் திரும்பிவந்தவையுங் குலச்சிறைநாயனார்; தெய்வமலைமகள் குழைத்த ஞானமுண்டவர் தம்பால் வந்தார் = தெய்வத்தன்மையையுடைய மலையரசன் புத்திரியாகிய உமாதேவியார் குழைத்தூட்டிய திருஞான அமுதத்தையுண்ட ஆளுடையபிள்ளையாரிடத்து வந்தருளினார்.—எ-று. (௮௫௧)

மற்றவர் பிள்ளையார்தம் மலரடி வணங்கிப்போற்றிக்
கொற்றவன் முதலாயுள்ளோர் காணமுன் கொணர்ந்தவேடு
பற்றிய கையிலேந்திப் பண்பினு லியார்க்குங்காட்ட
வற்புதம் பெற்றதொண்ட ரவையொலி யெழுந்ததன்றே.

(இ-ள்.) மற்றவர் பிள்ளையார்தம் மலரடிவணங்கிப்போற்றி=அந்நாயனார் ஆளுடையபிள்ளையாரது தாமரைமலர்போலுந் திருவடிகளைவணங்கித் துதித்து; கொற்றவன்முதலாயுள்ளோர் காணமுன் கொணர்ந்த ஏடு=பாண்டியன்முதலிய சபையிலுள்ளார் பலருங்காண அவர் முன்பு கொண்டு

Koviloor Digital Library



சமணர்கள்தோல்வியடைய மந்திரியார்சமணரைக்கழுவேற்றுவித்தது.

௪௦

Koviloor Digital Library

வந்த அத்திருவேட்டை ; பத்தியகையில் ஏந்திப் பண்பினால் யார்க்குங்காட்ட=எடுத்த திருக்கரத்தில் தாங்கி முறைமையோடு அங்குள்ள யாவர்க்குங் காட்ட ; அற்றருள் பெற்ற தொண்டர் அர ஒலி எழுந்ததன்றே=இகபரத்தாசைகளை யொழித்துத் திருவருளையடைந்த அடியார்களது அரவென்று மொலியெங்கும் பரவியது.—எ-று. (அறுஉ)

மன்னவன் மாறன்கண்டு மந்திரி யாரைநோக்கித்
துன்னிய வாதிலொட்டித் தோற்றவிச் சமணர்தாங்கள்
முன்னமே பிள்ளையார்பா லனுசித முற்றச்செய்தார்
கொன்னுனைக் கழுவிலேற்றி முறைசெய்க வென்றுகூற.

(இ-ள்.) மன்னவன் மாறன் கண்டு மந்திரியாரைநோக்கி=பாண்டியராசனவ்வற்புதத்தைக்கண்டு குலச்சிறைநாயனாரைப்பார்த்து ; துன்னியவாதில் ஒட்டித் தோற்ற இச்சமணர் தாங்கள்=பொருந்திய இவ்வாதில் இது செய்வோமென வுடன்பட்டு அப்பிரதிக்கினை வழுவித்தோற்ற இச்சமணர்கள் ; முன்னமே பிள்ளையார் பால் அனுசிதம் முற்றச்செய்தார்=வாதுசெய்யு முன்னமே இப்பிள்ளையார் பால் அனுசிதம்வரும்படி செய்தார்கள் அதனால்; கொன்னுனைக்கழுவிலேற்றி முறைசெய்க என்றுகூற = இவர்களை மிக்க நுதி பொருந்திய கழுமரத்திலேற்றித் தண்டஞ்செய்கவென்று கூறியருள.—எ-று.

புகலியில் வந்தஞானப் புங்கவ ரதனைக்கேட்டு
மிகலில ரெனினுஞ்சைவ ரிருந்துவாழ் மடத்திற்றீங்கு
தகவிலாச் சமணர்செய்த தன்மையாற் சாலுமென்றே
மிகையிலா வேந்தன்செய்கை விலக்கிடா திருந்தவேலை.

(இ-ள்.) புகலியில்வந்தஞானப் புங்கவர் அதனைக்கேட்டும் = சீகாழியிலவதரித்த ஆளுடையபிள்ளையார் அவ்வரசன் சொல்லியவார்த்தையைக் கேட்டருளியும் ; இகல் இலர் எனினும்=அச்சமணர்கள்மேல் தாம் பகையில்லாதவராயினும்; சைவரிருந்து வாழ்மடத்தில் தீங்கு தகவு இலாச் சமணர் செய்த தன்மையால்=சிவனடியார்களிருந்து வாழுந் திருமடத்தில் நெருப்பிடுங்குற்றத்தைத் தகுதியில்லாத அப்பாதகர்கள் செய்ததன்மையால்; சாலும் என்றேமிகையிலாவேந்தன் செய்கைவிலக்கிடாது இருந்தவேலை = இத்தண்டந் தகுமென்று குற்றமில்லாத அப்பாண்டியனது செய்கையை விலக்காமலிருந்தகாலத்து.—எ-று. (அறுச)

பண்புடை யமைச்சனாரும் பாருளோ ரறியுமாற்றாற்
கண்புடை பட்டுநீண்ட கழுத்தறி நிரையிலேற்ற
நண்புடை ஞானமுண்டார் மடத்துத்தீ நாடியிட்ட
வெண்பெருங் குன்றத்தெண்ணா யிரவரு மேறினார்கள்.

Koviloor Digital Library

(இ-ள்.) பண்புடை அமைச்சனாரும் பாருளோர் அறியும் ஆற்றால்= நற்குணமமைந்த குலச்சிறைநாயனாரும் உலகிலுள்ளார் அறியும் வகையால்; கண்புடைபட்டு நீண்ட கழுத்தறி மிசையில் ஏற்ற=கணுவோடு பருத்து(நுதி) நீண்ட கழுத்தறிகளின் நிரைகளிலே சமணர்களையேற்ற; நண்புடை ஞானம் உண்டார் மடத்துத் தீ ஈடு இட்ட=யாவரிடத்தும் நண்பினையுடைய சிவஞானத்தையுண்ட பிள்ளையார் திருமடத்தில் தீக்கொளுவிய; எண்பெருங்குன்றத்து எண்ணாயிரவரும் ஏறினார்கள்=அட்டகுல பர்வதத்திலுள்ள எண்ணாயிரஞ்சமணர்களும் அக்கழுமிரைகளிலேறினார்கள்.—எ-று.

எண்ணாயிரவருமென்புழி, தில்லைமூவாயிரவ ரென்றாற்போல ஓர்மலைக்கு ஆயிரவராக எண்பெருங்குன்றத்திற்குமெண்ணாயிரவராய் மதுரையினுமதன் சமீபத்துமிருந்துவந்த எண்ணாயிரவருமெனக்கொள்க. (அருரு)

தோற்றவர் கழுவிலேறித் தோற்றிடத் தோற்றுந்தம்ப
மாற்றிடை யமணரோலை யழிவிறு லார்ந்ததம்பம்
வேற்றொரு தெய்வமின்மை விளக்கிய பதாகைத்தம்பம்
போற்றுசீர்ப் பிள்ளையார்தம் புகழ்செய்த தம்பமாகும்.

(இ-ள்.) தோற்றவர் கழுவில் ஏறித்தோற்றிடத் தோற்றும்தம்பம்= வாதிற்றோற்றசமணர்கள் கழுமுனையிலேறியிருக்கக்காணு மத்தம்பமானது; ஆற்றிடை அமணர் ஓலை அழிவிறல் ஆர்ந்ததம்பம்=வைகையாற்றில்சமணர்கள் (சமயநூல்களையிட்டுத் தோற்ற காரணத்தால்)நிறுத்திய தம்பமாகவும்; வேற்றொரு தெய்வமின்மை விளக்கிய பதாகைத்தம்பம்=சிவபிரானையன்றி வேறொருகடவுளர் இல்லாமையை விளக்கிய வெற்றித்தம்பமாகவும்; போற்றுசீர்ப்பிள்ளையார்தம் புகழ்செய்த தம்பமாகும்=யாவரும்புகழுஞ் சிறப்பினையுடைய பிள்ளையாரது புகழை நிறுத்திய தம்பமாகவும் விளங்காநிற்கும்—எ-று.

தென்னவன் றனக்குநீறு சிரபுரச் செல்வரீந்தார்
முன்னவன் பணிந்துகொண்டு முழுவது மணிந்துநின்றான்
மன்னனீ றணிந்தானென்று மற்றவன் மதுரைவாழ்வார்
துன்னினின் றார்களெல்லாந் தூயநீ றணிந்துகொண்டார்.

(இ-ள்.) தென்னவன் தனக்கு நீறு சிரபுரச் செல்வர் ஈந்தார்=பாண்டியனுக்கு விபூதியைச் சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார் கொடுத்தருளினார்; முன்னவன்பணிந்துகொண்டு முழுவதும் அணிந்து நின்றான்= பாண்டியன் வணங்கி அவ்விபூதியைபெற்றுக்கொண்டு சரீரமுழுவதும் விதிப்படியணிந்து நின்றான்; மன்னன் நீறு அணிந்தானென்று=பாண்டியன் விபூதியணிந்தானென்று; மற்றவன் மதுரைவாழ்வார்=அப்பாண்டியனது மதுரையிலே வாழ்கின்றவர்களும்; துன்னிநின்றார்களெல்லாம் தூயநீறு அணிந்துகொண்டார்=அவ்வரசனைச்சார்ந்துநின்ற மந்திரி பிரதானிமுதலியயாவர்களும் பரிசுத்தமான விபூதியையணிந்துகொண்டார்கள்.—எ-று. (அருஎ)

Koviloor Digital Library

பூதிமெய்க் கணிந்துவேந்தன் புனிதனு யுயர்ந்தபோது
நீதியும் வேதநீதி யாகியே நிகழ்ந்ததெங்கு
மேதினி புனிதமாக வெண்ணீற்றின் விரிந்தசோதி
மாதிரந் தூய்மைசெய்ய வமணிருண் மாய்ந்ததன்றே.

(இ-ள்.) பூதி மெய்க்கு அணிந்து வேந்தன் புனிதனுப் உயர்ந்தபோது=விபூதியைத் தனது மேனியிலணிந்து பாண்டியன் பரிசுத்தமுடையனு யுயர்ந்து விளங்கியகாலத்தில்; நீதியும் வேதநீதியாகியே நிகழ்ந்தது எங்கும்=அவனால் நடத்து மரசநீதியும் வேதமார்க்கமாகவே எவ்விடத்தும் விளங்கியது; மேதினி புனிதமாக வெண்ணீற்றின் விரிந்தசோதிமாதிரம் தூய்மைசெய்ய=அதனால் உலகிலுள்ளோர் பரிசுத்தராகவெள்ளியவிபூதியால் விரிந்தவொளியானது திக்கெட்டையும் பரிசுத்தமாக்க; அமண் இருள் மாய்ந்தது அன்றே=சமணாகிய இருள் ஒழிந்தது.—எ-று. (அருசு)

மீனவற் குயிரைநல்கி மெய்ந்நெறி காட்டிமிக்க
வூனமாஞ் சமணைநீக்கி யுலகெலா முய்யக்கொண்ட
ஞானசம் பந்தர்வாய்மை ஞாலத்திற் பெருகியோங்கத்
தேனவில் கொன்றையார்தந் திருநெறி நடந்ததன்றே.

(இ-ள்.) மீனவற்கு உயிரை நல்கிமெய்ந்நெறிகாட்டி=பாண்டியனுக்குச் சுரநோயால் வியாதுயிரைக்கொடுத்து சைவமாகிய உண்மைநெறியைக் காண்பித்து; மிக்க ஊனமாம்சமணை நீக்கி=மிகவிழிந்த நெறியாகிய சமணநெறியைக்கெடுத்து; உலகெலாம் உய்யக்கொண்ட=உலகங்கள் யாவையும் பிழைக்கும்படி யாட்கொண்ட; ஞானசம்பந்தர் வாய்மை ஞாலத்திற் பெருகி ஓங்க=ஆளுடையபிள்ளையாரது புகழ் உலகத்திற் பெருகிவளரும்படி; தேனவில்கொன்றையார் தம் திருநெறி நடந்தது அன்றே = தேன்பொருந்திய கொன்றைப்பூமாலையையணிந்த சிவபெருமானது சைவமார்க்கமானது ஓங்கியது.—எ-று. (அருக)

மறையவர் வேள்விசெய்ய வானவர் மாரிநல்க
விறைவனன் னெறியிலோங்க விகந்தனி லவனியின்பங்
குறைவில தெனினுங்கூற்றை யுதைத்தவர் நாமங்கூறி
நிறைகடற் பிறவித்துன்ப நீங்கிடப் பெற்றதன்றே.

(இ-ள்.) மறையவர்வேள்விசெய்ய=அந்தணர்கள் யாகஞ்செய்யவும்; வானவர்மாரிநல்க=அக்காரணத்தால் தேவர்கள் மழைவருஷிக்கவும்; இறைவன் நன்னெறியில் ஓங்க=(அம்மழையினால் சம்பத்து உண்டாதலில்) அரசன் தருமவழியிலே நடக்கவும்; இகந்தனில் அவனி இன்பம் குறைவிலது எனினும்=அப்பொருள் வழியால் உலகமானது இன்பத்தால் குறைவடையாததா

Koviloor Digital Library

யிறும்; கூற்றை உதைத்தவர் நாமம் கூறி=நமனையுதைத்த சிவபெருமானது திருநாமமாகிய திருஐந்தெழுத்தைத் துதித்து; நிறைகடற் பிறவித்துன்பம் நீங்கிடப்பெற்றது அன்றே=நிறைந்த கடல்போலும் பிறவியாலாகிய துன்பத்தினின்றும் நீங்கும்படி பெற்றுக்கொண்டது.—எ-று. (௮௬௦)

அங்கயற் கண்ணி தன்னோ டாலவா யமர்ந்தவண்ணல்
பங்கயச் செய்யபாதம் பணிவனென் றெழுந்துசென்று
பொங்கொளிச் சிவிகையேறிப் புகலியர் வேந்தர்போந்தார்
மங்கையர்க் கரசியாரு மன்னனும் போற்றிவந்தார்.

(இ-ள்.) அங்கயற்கண்ணி தன்னொடு ஆலவாய் அமர்ந்த அண்ணல்=மீனாட்சிதேவியோடு திருவாலவாயிலெழுந்தருளிய சுந்தரேசரோடு; பங்கயச் செய்யபாதம் பணிவனென்று எழுந்துசென்று=தாமரைமலர்போன்ற சிவந்த திருவடிகளை வணங்குவனென்றெழுந்துபோய்; பொங்கு ஒளிச்சிவிகையேறிப் புகலியர் வேந்தர் போந்தார்=விளங்குங் கிரணத்தையுடைய முத்துச்சிவிகையிலேறிச் சீகாழித்தலைவராகிய பிள்ளையார் சென்றருளினார்; மங்கையர்க்கரசியாரும் மன்னனும் போற்றிவந்தார்=பாண்டிமாதேவியாரும் பாண்டியனுந்துதித்தருகில் வந்தார்கள்.—எ-று. (௮௬௧)

எண்ணரும் பெருமைத்தொண்டர் யாவரு மகிழ்ச்சியெய்திப்
புண்ணியப் பிள்ளையாரைப் புகழ்ந்துடன் போற்றிப்போத
மண்ணெலா முய்யவந்த வள்ளலார் தம்மைக்கண்டு
கண்ணினற் பயன்கொண்டார்கள் கன்னிநாட்டவர் களெல்லாம்.

(இ-ள்.) எண்ணரும் பெருமைத்தொண்டர் யாவரும் மகிழ்ச்சி எய்தி=அளவில்லாத பெருமையையுடைய அடியவர்கள் யாவரு மகிழ்ச்சியடைந்து; புண்ணியப்பிள்ளையாரைப்புகழ்ந்துடன் போற்றிப்போத=சிவபுண்ணியமேயுருவாயுள்ள பிள்ளையாரைப்புகழ்ந்த பின்னே துதித்துவர; மண்ணெலாம் உய்யவந்த வள்ளலார் தம்மைக்கண்டு=உலகமெல்லாம் பிழைக்க வவதரித்த பிள்ளையாரைத் தரிசித்து; கன்னிநாட்டவர்களெல்லாம் கண்ணினற் பயன் கொண்டார்கள்=பாண்டிநாட்டிலுள்ள சனங்களெல்லாம் கண்ணாற் பெறும்பயனையடைந்தார்கள்.—எ-று. (௮௬௨)

ஆலவா யண்ணல்கோயி லங்கண்முன் றோன்றக்கண்டு
பாலறு வாயர்மிக்க பண்பினுற் றொழுதுசென்று
மாலுநான் முகனும்போற்ற மன்னினார் கோயில்வாயிற்
சீலமா தவத்தோர்முன்பு சிவிகைநின் றிழிந்துபுக்கார்.

(இ-ள்.) ஆலவாயண்ணல் கோயில் அங்கண்முன் தோன்றக்கண்டு=சுந்தரேசரது திருக்கோயிலவ்விடத்தில் தம்முன்னே தோன்றப்பார்த்து; பாலறுவாயர் மிக்கபண்பினுற்றொழுது சென்று=சிவஞானப்பால்கமழுந்திரு

Koviloor Digital Library

வாயையுடைய ஆளுடையபிள்ளையார் அன்போடு வணங்கிப்போய்; மாலும் நான்முகனும் போற்ற மன்னினார் கோயில்வாயில்=திருமாலும் பிரமனுந் துதிக்க நின்ற சுந்தரேசரது கோயில்வாயிலில்; சீலமாதவத்தோர் முன்பு சிவிகை நின்று இழிந்து புக்கார்=ஒழுக்க மிக்கபெரியதவத்தையுடைய அடியார்கள் முன்பு சூழும்படிக்கு முத்துச்சிவிகையினின்று மிறங்கியுள்ளே புகுந்தருளினார்.—எ-று. (அ௯௫)

தென்னவன் றானுமெங்கள் செம்பியன் மகளார்தாமு
நன்னெறி யமைச்சனாரும் ஞானசம் பந்தர்செய்ய
பொன்னடிக் கமலம்போற்றி யுடன்புகப் புனிதர்கோயில்
தன்னைமுன் வலங்கொண்டுள்ளாற் சண்பையர் தலைவர்புக்கார்.

(இ-ள்.) தென்னவன்தானும் எங்கள் செம்பியன்மகளார்தாமும்=பாண்டியனும் எங்கள் வளவர்கோன் மகளாராகிய மங்கையர்க்கரசியாரும்; நன்னெறி அமைச்சனாரும்=நல்லொழுக்கினையுடைய குலச்சிறைநாயனாரும்; ஞானசம்பந்தர்செய்ய பொன்னடிக்கமலம் போற்றி உடன்புக=ஆளுடையபிள்ளையாரது சிவந்தபொன்போலுந் திருவடித்தாமரைகளைத் துதித்து அவர்பின்வர; புனிதர்கோயில் தன்னைமுன் வலங்கொண்டு உள்ளாற்சண்பையர்தலைவர் புக்கார்=சிவபெருமான் திருக்கோயிலை முன்னே வலமாகவந்து உள்ளே சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார் புகுந்தருளினார்.—எ-று. (அ௯௬)

கைகளுந் தலைமீதேறக் கண்ணிலா னந்தவெள்ள
மெய்யெலாம் பொழியவேத முதல்வனைப் பணிந்துபோற்றி
யையனே யடியனேனை யஞ்சலென் றருளவல்ல
மெய்யனே யென்றுவீட லாலவாய் விளம்பலுற்றார்.

(இ-ள்.) கைகளும் தலைமீது ஏற = தமதுதிருக்கரங்களுஞ் சிரசின்மேற்குவிய; கண்ணில் ஆனந்தவெள்ளம் மெய்யெலாம்பொழிய=கண்களினின்று சொரியுமானந்த வெள்ளமானது தமதுதிருமேனிமுழுதும் பொழிய; வேதமுதல்வனைப் பணிந்துபோற்றி = நான்குவேதங்களுக்கு முதல்வராகிய சிவபெருமானை வணங்கித்துதித்து; ஐயனே அடியனேனை அஞ்சலென்றருளவல்ல மெய்யனே என்று=ஐயனே! அடியேனை யஞ்சாதிருவென்று அருளிச்செய்யவல்ல மெய்ம்மையையுடையவரோ என்று; வீடலாலவாய் விளம்பலுற்றார்="வீடலாலவாய்" என்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளினார்.—எ-று. ()

திருவாலவாய் - திருவிராகம் - பண் - கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

வீடலால வாயிலாய் விழுமியார்க ணின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே

Koviloor Digital Library

காடலால வாயிலாய் கபாலிநீள்க டிம்மதிட்
கூடலால வாயிலாய்க் குலாயதென்ன கொள்கையே.

போயநீர் வளங்கொளும் பொருபுனற் புகலியான்
பாயகேள்வி ஞானசம் பந்தனல்ல பண்பினு
லாயசொல்லின் மாலைகொண் டாலவாயி லண்ணலைத்
தீயதீர வெண்ணுவார்கள் சிந்தையார்வர் தேவரே.

திருச்சிற்றம்பலம்.

ஒன்றுவே றுணர்வுமில்லே னொழிவற நிறைந்தகோல
மன்றினுன் மறைகளேத்த மானிட ருய்யவேண்டி
நின்றுநீ யாடல்செய்கை நினைப்பதே நியமமாகு
மென்றுபூம் புகலிமன்ன ரின்றமிழ்ப் பதிகம்பாட.

(இ-ள்.) ஒன்று வேறு உணர்வுமில்லேன் = வேறொன்றைப் பற்றும் பொருளாகப் பற்றுமுணர்வு சிறிதுமில்லேன்; ஒழிவறநிறைந்தகோலம் = எவ்விடத்தும் நீக்கமின்றி வியாபித்து நின்ற திருக்கோலமானது; மன்றில் நான்மறைகள் ஏத்த=வெள்ளியம்பலத்தில் நான்குவேதங்களுந் துதிக்க; மானிடர் உய்யவேண்டி=மனிதர்களீடேறலைக்காரணமாகக்கொண்டருளி; நின்று நீ ஆடல்செய்கை நினைப்பதே நியமம் ஆகும் என்று=நின்றருளி நீ நிருத்தஞ் செய்தருளுதலைச் சிந்திப்பதேயெனக்கு நியமமாக இருக்குமென்று; பூம்புகலி மன்னர் இன் தமிழ்ப்பதிகம்பாடி=பொலிவினையுடைய சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார் இனிய திருப்பதிகம்பாடி யருள.—எ-று. (அகூகூ)

தென்னவன் பணிந்துநின்று திருவாலவாயின்மேவு
மன்னனே யமணர்தங்கண் மாய்கையான் மயங்கியாறு
முன்னையா னறிந்திலேனை யுறுபிணி தீர்த்தாட்கொள்ள
வின்னருட் பிள்ளையாரைத் தந்தனை யிறைவவென்றான்.

(இ-ள்.) தென்னவன்பணிந்து நின்று திருவாலவாயில் மேவும்மன்னனே=பாண்டியன்வணங்கி நின்று திருவாலவாயிலெழுந்தருளிய எங்கள் குலத்தலைவரே; அமணர்தங்கள் மாய்கையால் மயங்கியாறும்=சமணர்களாறு வஞ்சனையால் நானுமயங்கி; உன்னையான் அறிந்திலேனை=உன்னைச் சிறிது மறியாதிருந்த வென்னை; உறுபிணி தீர்த்து ஆட்கொள்ள=உற்றசுரநோயைத் தீர்த்தடிமைகொள்ள; இன் அருட்பிள்ளையாரைத் தந்தனை இறைவஎன்றான்= இனிய அருளையுடைய ஆளுடையபிள்ளையாரைத் தந்தருளினுய் இறைவனே (இதற்குக்கைம்மாறு யாதுசெய்வேனென்று) துதித்தான்.—எ-று. (அகூஎ)

சிறைடைப் பிள்ளையாருஞ் சிறப்புடை யடியாரோடுங்
காரினிற் பொலிந்தக்கண்டத் திறைவர்தாள் வணங்கிக்காத

Koviloor Digital Library

லாரருள் பெற்றுப்போற்றி யங்குநின் றரிதுநீங்கி
யேரியன் மடத்திலுள்ளா லினிதெழுந் தருளிப்புக்கார்.

(இ-ள்.) சீருடைப்பிள்ளையாரும் சிறப்புடை அடியாரோடும் = சிவ ஞானச் செல்வத்தையுடைய ஆளுடைய பிள்ளையாரும் திருவருட்சிறப்பினை யுடைய அடியார்களோடும்; காரினிற்பொலிந்தகண்டத்து இறைவர்தாள்வண ங்கி=மேகம்போலும் விளங்கிய திருமிடற்றையுடைய சிவபெருமானது திரு வடிகளைவணங்கி ; காதலார் அருள்பெற்றுப் போற்றி = பெருவிருப்போடு நிறைந்ததிருவருளைப் பெற்றுத்துதித்து; அங்குநின்று அரிதுநீங்கி=அவர்திரு முன்னின்று அரிதாகநீங்கி; ஏர் இயல்மடத்திலுள்ளால் இனிது எழுந்தருளிப் புக்கார் = அழகுநிறைந்த திருமடத்தினுள் இனிதாக எழுந்தருளிப் புகுந்தரு ளினார்.—எ-று. (அகூஅ)

நீடுசீர்த் தென்னர்கோனு நேரியன் பாவையாரு
மாடுசென் றிறைஞ்சிநோக்கி மாளிகை தன்னிற்போகக்
கூடிய மகிழ்ச்சிபொங்கக் கும்பிடும் விருப்பினாலே
நாடியங் கிருந்துதங்க ணாதனைப் பாடலுற்றார்.

(இ-ள்.) நீடுசீர்த்தென்னர்கோனும் நேரியன்பாவையாரும் = மிக்க சிறப்பினையுடைய பாண்டியராஜனுஞ் சோழராஜன்புத்திரியாகிய பாண்டிமா தேவியாரும்; மாடுசென்று இறைஞ்சி நோக்கி மாளிகைதன்னிற்போக=பிள் ளையார் பக்கத்துச்சென்று வணங்கித்தரிசித்து விடைபெற்றுக்கொண்டு தமது திருமாளிகைக்குச்செல்ல; கூடியமகிழ்ச்சிபொங்கக் கும்பிடும்விருப்பினாலே= திருவுளத்துப் பொருந்திய இன்பமானது மேலிடச் சுந்தரேசனைவணங்கும் விருப்பால்; நாடி அங்கு இருந்து தங்கள் நாதனைப்பாடலுற்றார்=விரும்பியத் தலத்திலிருந்தருளித் தங்கள்பெருமானாகிய சுந்தரேசனைப்பாடினார்.—எ-று.

திருவிய மகத்திலுள்ளுந் திருநீல கண்டப்பாணர்க்
கருளிய திறமும்போற்றி யவரொடு மளவளாவித்
தெருளுடைத் தொண்டர்சூழத் திருத்தொண்டி னுண்மைநோக்கி
யிருள்கெட மண்ணில்வந்தா ரினிதமர்ந் திருந்தாரன்றே.

(இ-ள்.) திரு இயமகத்திலுள்ளும் = திருவாலவாய்த் திருவியமகத் திருப்பதிகத்துள்ளும் ; திருநீலகண்டப்பாணர்க் கருளிய திறமும்போற்றி= திருநீலகண்டப் பெரும்பாணர்க்குப் பொற்பலகையீந்த திறத்தையும் "தாரமு ய்த்ததுபாணர்க்கருளொடே" எனச்சிறப்பித்தருளி; அவரொடும் அளவளாவி= அப்பெரும்பாணரோடு கலந்துவார்த்தையாடி; தெருளுடைத் தொண்டர்சூ ழத்திருத்தொண்டின் உண்மைநோக்கி=மெய்யறிவினையுடைய அடியார் திருக் கூட்டங்கள்சூழ அவ்வடியார்களது திருத்தொண்டின் மெய்ம்மையை விசாரி த்து; இருள்கெடமண்ணில்வந்தார் இனிது அமர்ந்து இருந்தாரன்றே=அஞ்ஞா

Koviloor Digital Library

வைிருள்கெடும்படி யுலகத்திலவதரித்த ஆளுடையபிள்ளையார் அம்மதுரையி லெழுந்தருளியிருந்தார்.—எ-று. (௭௭௦)

திருவாலவாய் - பண் - திருவியமகம்.
திருச்சிற்றம்பலம்.

ஆலநீழ லுகந்ததிருக்கையே யானபாட லுகந்ததிருக்கையே, பாலினேர்மொழி யாளொருபங்கனே பாதமோதலர் சேர்புரபங்கனே, கோலநீறணி மேதகுபூதனே கோதிலார்மன மேவியபூதனே, யாலநஞ்சமு துண்டகளத்தனே யாலவாயுறை யண்டர்களத்தனே.

ஈனஞானிக டம்மொடுவிரகனே யேறுபல்பொருண் முத்தமிழ்விரகனே, யானகாழியுள் ஞானசம்பந்தனே யாலவாயினின் மேயசம்பந்தனே, யானவானவர் வாயினுளத்தனே யன்பரானவர்வாயினுளத்தனே, நானுரைத்தன செந்தமிழ்பத்துமே வல்லவர்க்கிவை நற்றமிழ்பத்துமே.

திருச்சிற்றம்பலம்.

பூழியன் மதுரையுள்ளார் புறத்துளா ரமணர்சேரும்
பாழியு மருகர்மேவும் பள்ளியு மானவெல்லாங்
கீழுறப் பறித்துப்போக்கிக் கிளரொளித் தூய்மைசெய்தே
வாழியப் பதிகளெல்லா மங்கலம் பொலியச்செய்தார்.

(இ-ள்.) பூழியன் மதுரையுள்ளார் புறத்துளார் = பாண்டியனது மதுரையிலுள்ளவரு மதன்புறத்துள்ளவரும்; அமணர்சேரும்பாழியும் அருகர் மேவும்பள்ளியும் ஆனவெல்லாம் கீழுறப்பறித்துப்போக்கி = சமணமுனிவர்கள் வாசஞ்செய்யுமிடங்களையும் அருகபரமேட்டியின் ஆலயங்களுமான எல்லாவற்றையு மத்திவாரத்தோடு பறித்து எறிந்து; கிளர் ஒளித்தூய்மைசெய்தே = விளங்குமொளிபெருகப் பவித்திரஞ்செய்து; வாழி அப்பதிகளெல்லாம் மங்கலம்பொலியச் செய்தார் = அந்நாடுகளெல்லாஞ் சைவமங்கலமுடைய இடமாகச் செய்தார்கள்.—எ-று. (௭௭௧)

மீனவன் றேவியாருங் குலச்சிறை யாருமிக்க
ஞானசம் பந்தர்பாத நாடொறும் பணிந்துபோற்ற
வானசங் கைபார்கோனு மாலவா யமர்ந்தார்பாத
மூனமர்ந் துருகவேத்தி யுளங்களித் துறையுநாளில்.

(இ-ள்.) மீனவன்றேவியாரும் குலச்சிறையாரும் மிக்க ஞானசம்பந்தர் பாதம் நாடொறும் பணிந்துபோற்ற=பாண்டிமாதேவியாருங் குலச்சிறை நாயனாரு மேன்மைபொருந்திய ஆளுடையபிள்ளையாரதிருவடிகளை நாடோ

Koviloor Digital Library

றும் வணங்கித் துதிக்க ; ஆனசண்பையர்கோனும் ஆலவாயமர்ந்தார்பா தம்=புகழ்மிக்க ஆளுடையபிள்ளையாருந் திருவாலவாயிலெழுந்தருளிய சுந்த ரேசரது திருவடிகளை; ஊனமர்ந்துருக ஏத்தி உளங்களித்து உறையும்நாளில்= திருமேனி (விருப்பால்) நெக்குவிட்டுருகத் துதித்துத் திருவுளங்களிகூர்ந்து எழுந்தருளியிருக்குங்காலத்து.—எ-று. (அஎஉ)

செய்தவத்தாற் சிவபாத விருதயர்தாம் பெற்றெடுத்த
வைதிகசூ ளாமணியை மாதவத்தோர் பெருவாழ்வை
மைதிகழுந்திருமிடற்றா ரருள்பெற்ற வான்பொருளை
யெய்தியபூம் புகலியிலே யிருந்தநாண் மிகநினைந்தார்.

(இ-ள்.) செய்தவத்தால் சிவபாத இருதயர்தாம்பெற்று எடுத்த=செய்ததவங்காரணமாகச் சிவபாதவிருதயர்தாம்பெற்ற ; வைதிக சூளாமணியை=வேதமார்க்கத்திற்குச் சிரோமணியா யிருக்கின்றவரை ; மாதவத்தோர் பெருவாழ்வை = பெரியதவத்தையுடைய அடியார்களுக்குப் பெரியவாழ்வு போன்றவரை ; மைதிகழும் திருமிடற்றார் அருள்பெற்றவான்பொருளை=கருமைபொருந்திய திருமிடற்றையுடைய சிவபெருமானது திருவருளைப்பெற்ற பெரியபொருளை ; எய்திய பூம்புகலியிலே இருந்த நாள்மிக நினைந்தார்=பிள்ளையாரவதாரஞ்செய்த சீகாழியென்னுந்திருப்பதியிலே எழுந்தருளியிருந்த நாள் அதிகநாளாக அக்காரணத்தாற் பிள்ளையாரை நினைத்தார்.—எ-று. (அஎங)

ஆனபுகழ்த் திருநாவுக் கரசர்பா லவஞ்செய்த
மானமிலா வமணருடன் வாதுசெய்து வெல்வதற்கு
மீனவன்ற னுடுய்ய வெண்ணீறு பெருகுதற்கும்
போனவர்பாற் புகுந்தபடி யறிவனெனப் புறப்படுவார்.

(இ-ள்.) ஆனபுகழ்த்திருநாவுக்கரசர்பால் அவம்செய்த = பரம்பிய புகழையுடைய வாகீசமுனிவரிடத்துத் தீங்கைச்செய்த ; மானம் இலா அமணருடன் வாதுசெய்துவெல்வதற்கு=வெட்கமில்லாத சமணர்களுடன் அவ ளாவாதுசெய்து வெல்லுங்காரணமாயும்; மீனவன்சன்னாடு உய்யவெண்ணீறு பெருகுதற்கும்=பாண்டிநாடானது பிழைக்க விபூதிவிளங்குதற்கும்; போனவர்பாற்புகுந்தபடி அறிவனெனப் புறப்படுவார் = சென்றருளிய பிள்ளையாரிடத்து நிகழ்ந்தவண்ணமறிவேனென்று (சீகாழியினின்றும்) புறப்படுவாராயினார்.—எ-று. (அஎச)

துடியிடையா டன்னோடுந் தோணியில்வீற் றிருந்தபிரா
னடிவணங்கி யலர்சண்பை யதனின்றும் வழிக்கொண்டு
படியின்மிசை மிக்குளவாம் பான்கோயில் பணிந்தேத்த
வடிநெடுவேன் மீனவன்றன் வளநாடு வந்தணைந்தார்.

(இ-ள்.) துடியிடையாள்தன்னோடும் தோணியில் வீற்றிருந்தபிரான் அடிவணங்கி = பெரியநாயகி யாரோடுந் தோணியப்பரது திருவடிகளைவண

கி; அலர்சண்பை நகரினின்றும் வழிக்கொண்டு=பரந்த சீகாழியினின்றும் புறப்பட்டு; படியின்மிசைமிக்கு உளவாம்பரன்கோயில் பணிந்து ஏத்தி=சோழநாட்டின் கண்ணிக்கிருக்கும் சிவபெருமானது திருக்கோயில்களை வணங்கித் துதித்து; வடிநெடுவேல்மீனவன்றன்வளநாடுவந்து அணைந்தார்=வடித்த நீண்டவேலையேந்திய பாண்டியராஜனது வளப்பமிக்க அந்நாட்டையடைந்தார்.—எ-று. (௮௭௫)

மாமறையோர் வளம்பதிக ளிடைத்தங்கி வழிச்செல்வார்
தேமருவு நறும்பைந்தார்த் தென்னவன்றன் றிருமதுரை
தாமணைந்து திருவால வாயமர்ந்த தனிநாதன்
பூமருவு சேவடிக்கீழ்ப் புக்கார்வத் தொடும்பணிந்தார்.

(இ-ள்.) வளம்பதிகளிடைத்தங்கி வழிச்செல்வார் மாமறையோர் = வளம்பொருந்திய ஊர்கள்தோறுந் தங்கிவழிச்செல்வாராகிய சிவபாதஇருதயர்; தேமருவு நறும்பைந்தார்த் தென்னவன்றன் திருமதுரை தாம்அணைந்து=தேன் நிறைந்தபசியமாலையை யணிந்த பாண்டியனது திருமதுராபுரியையடைந்து; திருஆலவாய் அமர்ந்த தனிநாதன் பூமருவுசேவடிக்கீழ்ப்புக்கு ஆர்வத் தொடும்பணிந்தார்=திருவாலவாயிலெழுந்தருளிய ஒப்பில்லாத சுந்தரேசரது தாமரைமலர்போலுஞ் சிவந்ததிருவடியின்கீழ் விருப்பத்தோடும் வணங்கினார்.—எ-று. (௮௭௬)

அங்கணரைப் பணிந்துபோந் தருகணைந்தார் தமைவினவி
யிங்கெம்மைக் கண்விடுத்த காழியா ரிளவேறு
தங்குமிடந் திருத்தொண்டர்குழாஞ் சாருமிடஞ்
செங்கமலத் திருமடமற் றிதுவென்றே தெரிந்துரைத்தார்.

(இ-ள்.) அங்கணரைப்பணிந்துபோந்து அருகு அணைந்தார்தமைவினவ=சுந்தரேசனைவணங்கிப் புறம்போந்து தமது அருகிலுள்ள அடியார்களைப் பிள்ளையாரெழுந்தருளி யிருக்குந் திருமடத்தைவினவ; இங்கு எம்மைக்கண் விடுத்த காழியார் இளஏறு=இவ்வுலகத்தில் ஞானக்கண்ணிழந்த எம்மை அக்கண்ணைத்திறந்த சீகாழி மறையவர்குலத்து உதித்த இளஞ்சிங்கமேறு; தங்கும் இடம் திருத்தொண்டர் குழாம்சாரும் இடம்=எழுந்தருளி இருக்குமிடமும் விபூதியையணிந்த திருவடியார்களெழுந்தருளியிருக்குமிடமும்; செங்கமலத்திருமடம் மற்று இதுவென்றேதெரிந்துரைத்தார்=செந்தாமரையில்வாழும் இலக்குமிக் கிடமான திருமடம் இதுவென்று சுட்டிக் கூறினார்.—எ-று.()

செப்புநலு மதுகேட்டுத் திருமடத்தைச் சென்றெய்த
வப்பரெழுந் தருளினா ரெனக்கேட்டோ ரடிவணங்கி
யொப்பில்புகழ்ப் பிள்ளையார் தமக்கோகை யுரைசெய்ய
வெப்பொழுது வந்தருளிற் றென்றெதிரே யெழுந்தருள.

Koviloor Digital Library

(இ-ள்.) செப்புதலும் அதுகேட்டுத் திருமடத்தைச்சென்று எய்த= அருகில்வந்தவர் இது திருமடமெனக்கூறவும் அதனைக்கேட்டுச் சிவபாத இருதயர் திருமடத்தைச்சென்றடையுங்கால்; அப்பர் எழுந்தருளினர் எனக்கேட்டோர் அடிவணங்கி=தந்தையாரெழுந்தருளினாரெனக் கேள்வியுற்ற அடியார்கள் பிள்ளையார் திருவடிகளைவணங்கி; ஒப்பில் புகழ்ப்பிள்ளையார் தமக்கு ஓகை உரைசெய்ய=ஒப்பில்லாத கீர்த்தியையுடைய ஆளுடையபிள்ளையாருக்குவகைமொழிகூற; எப்பொழுது வந்தருளிற்று என்று எதிரே எழுந்தருளா=எப்பொழுது வந்தருளியதென்று வினவிப் பிள்ளையாரெதிரே எழுந்தருளாநிற்க.—எ-று. (௮௭௮)

சிவபாத விருதயர்தாமுன்றொழுது சென்றணையத்
தவமான நெறியணையுந் தாதையா ரெதிர்தொழுவா
ரவர்சார்வு கண்டருளித் திருத்தோணி யமர்ந்தருளிப்
பவபாச மறுத்தவர்தம் பாதங்க ணினைவுற்றார்.

(இ-ள்.) சிவபாத இருதயர் தாம் முன்தொழுது சென்று அணைய= சிவபாத இருதயர் முன்னேவணங்கிச்சென்று சேர; தவமான நெறி அணையும் தாதையார் எதிர்தொழுவார்=தவநெறியை மேற்கொண்டொழுகுந்தமது தந்தையாரை யெதிரேதொழுது அடையும் பிள்ளையார்; அவர் சார்வுகண்டருளி=அவரது தோணிபுரத்திலிருந்து வருஞ்சார்பைப்பார்த்தருளி; திருத்தோணி அமர்ந்தருளிப் பவபாசம் அறுத்தவர்தம் பாதங்கள் நினைவுற்றார்= திருத்தோணியின்கணெழுந்தருளிப் பிறவிக்குக் காரணமாய் ஐவகைப்பாசத்தையுமறுத்தாட்கொள்ளும் பெருமானது திருவடிகளைச் சிந்தித்தார்.—எ-று.

ஐவகைப்பாசங்களாவன. ஆணவம், மாயை, கன்மம், திரோதாயி, வயிந்தவம் என்பனவாம். இவை பிறவியை ஆக்குதலில் பவபாசமென்றார். (௮௭௯)

இருந்தவத்தோ ரவர்முன்னே யிணைமலர்க்கை குவித்தருளி
யருந்தவத்தீ ரெனையறியாப் பருவத்தே யெடுத்தாண்ட
பெருந்தகையெம் பெருமாட்டி யுடனிருந்த தேயென்று
பொருந்துபுகழ்ப் புகலியின்மேற் றிருப்பதிகம் போற்றிசைத்தார்.

(இ-ள்.) இருந்தவத்தோர் அவர்முன்னே இணைமலர்க்கைகுவித்தருளி=பெரியதவத்தினையுடைய அச்சிவபாத இருதயர்முன்னே இரண்டுகரகமலங்களையுங்கூப்பி; அருந்தவத்தீர் எனை அறியாப்பருவத்தே எடுத்தாண்ட= அரியதவத்தினையுடையீர் என்னையறியாப் பருவத்தில் தடுத்தடிமைகொண்ட; பெருந்தகை எம்பெருமாட்டி உடன் இருந்ததே என்று=மேம்பாடுடைய தோணியப்பர் பெரியநாயகியாருடனெழுந்தருளியிருந்ததேயென்று வினவி; பொருந்துபுகழ்ப்புகலியின்மேல் திருப்பதிகம் போற்றிசைத்தார் = நிறைந்த புகழையுடைய சீகாழியின்மேல் திருப்பதிகம்பாடியருளினார்.—எ-று. (௮௮௦)

Koviloor Digital Library

மண்ணினல்ல வென்றெடுத்து மனத்தெழுந்த பெருமகிழ்ச்சி
யுண்ணிறைந்த காதலினாற் கண்ணருவி பாய்ந்தொழுக
வண்ணலார் தமைவினவித் திருப்பதிக மருள்செய்தார்
தண்ணறும்பூஞ் செங்கமலத் தாரணிந்த தமிழ்விரகர்.

(இ-ள்.) மண்ணில் நல்ல என்று எடுத்து "மண்ணினல்லவண்ணம்" என முதலெடுத்து; மனத்து எழுந்த பெருமகிழ்ச்சி=தமதுள்ளத்தின்கணுதித்த மகிழ்ச்சியோடு; உள் நிறைந்த காதலினால் கண்ணருவிபாய்ந்து ஒழுக= தமதுள்ளே நிறைந்த பெருவிருப்பால் கண்ணில்நின்றும் ஆனந்த அருவி சொரிந்தொழுக; அண்ணலார் தமைவினவித் திருப்பதிகம் அருள்செய்தார்= (தோணியப்பர் பெரியநாயகியாருடன் திருத்தோணியில் வீற்றிருந்தமையைத்) தந்தையாரைவினவித் திருப்பதிகமருளிச்செய்தார்; தண்ணறும் பூஞ் செங்கமலத்தார் அணிந்த தமிழ்விரகர்=குளிர்ந்த நறுமணங்கமழுஞ் செந்தாமரைமலராற் றொடுத்தமாலையையணிந்த பிள்ளையார்.—எ-று. (௮௮௧)

திருக்கழுமலம்-பண்-கொல்லி.
திருச்சிற்றம்பலம்.

மண்ணினல்லவண்ணம் வாழலாம்வைகலு
மெண்ணினல்லகதிக்கி யாதுமோர்குறைவிலை
கண்ணினல்லதுறுங் கழுமலவளநகர்ப்
பெண்ணினல்லாளொடும் பெருந்தகையிருந்ததே.

கருந்தடந்தேன்மல்கு கழுமலவளநகர்ப்
பெருந்தடங்கொங்கையோ டிருந்தவெம்பிரான்றனை
யருந்தமிழ்ஞானசம் பந்தனசெந்தமிழ்
விரும்புவாரவர்கள்போய் விண்ணுலகாள்வரே.

திருச்சிற்றம்பலம்.

திருப்பதிகந் திருக்கடைக்காப் புச்சாத்திச் சிறப்பின்மிகு
விருப்பினு லவர்தமக்கு விருந்தளித்து மேவுநா
ளருப்புறுமெய்க் காதல்புரி யடியவர்க ளடம்மோடும்
பொருப்புறுகைச் சிலையார்சேர் பிறபதியுந் தொழப்போவார்.

(இ-ள்.) திருப்பதிகம் திருக்கடைக்காப்புச்சாத்தி=அத்திருப்பதிகத்தில் திருக்கடைக்காப்பைச் சாத்தியருளி; சிறப்பின் மிகு விருப்பினுல் அவர் தமக்கு விருந்தளித்து மேவுநாள்=சிறப்புமிக்க பிரியத்தோடு அச்சிவபாத இருதயருக்கு விருந்தினைச் செய்தெழுந்தருளும் நாளில்; அருப்புறு மெய்க் காதல்புரி அடியவர்கள் தம்மோடும் = மேன்மேலுதிக்கும் மெய்யன்புமிக்க அடியார்கூட்டத்துடன்; பொருப்புறுகைச் சிலையார் சேர் பிறபதியும் தொ

Koviloor Digital Library

முப் போவார் = மாமேருவில்லாகப் பொருந்திய திருக்கரத்தையுடைய சிவ பிரானெழுந்தருளிய பிறதிருப்பதிகளையும் வணங்கச்செல்வாராயினர்.-எ-று

ஆலின்கீழ் நால்வர்க்கங் கறமுறைத்த வங்கணனை
நூலின்கட் பொருள்பாடி நூலறிவார்க் கீந்தானைக்
காலம்பெற் றினிதிறைஞ்சிக் கைதொழுது புறம்போந்தார்
சீலங்கொ டென்னவனுந் தேவியரு முடன்போத.

(இ-ள்.) ஆலின்கீழ் நால்வர்க்கு அங்கு அறம் உரைத்த அங்கணனை= கல்லாலின் கீழ் சனகர் முதலிய நான்குமுனிவருக்கும் புருடார்த்தங்களையருளிய பெருமானை ; நூலின்கட் பொருள் பாடி நூல் அறிவார்க்கு ஈந்தானை= வேதநூலின்கணறம்பொருளின்பம் வீடென்னும் நான்குபொருளையு மருளிச்செய்து அந்நூலையுணரு மதிகாரிகளின்பொருட்டுக் கொடுத்தருளியவனை ; காலம்பெற்று இனிது இறைஞ்சிக் கைதொழுது புறம்போந்தார்=வணங்குதற்குரியகாலத்தில் சென்றினிதாக வணங்கிக் கைகூப்பிக்கொண்டு புறம்பேசென்றருளினர்; சீலம் கொள் தென்னவனும் தேவியரும் உடன்போத=நல்லொழுக்கமிக்க பாண்டியராசனும் பாண்டிமாதேவியாருந் தன்பின்னேவர. எ-று.

உடன்போதப் புறம்பணைந்தாரெனக்கூட்டுக. நூலின் கட்பொருள் பாடி யென்புழி, தமிழ்நூலின் அகப்பொருளைப்பாடிச் சங்கத்தாருக்குக்கொடுத்தவனையென்றுரைத்தலுமொன்று. (அஅரு)

வேறு.

தேனிலவு பொழின்மதுரைப் புறத்தும்போந்த தென்னவனர் தேவியா ரமைச்சர்சிந்தை, யூனெகிழும் படியழிந்தங் கொழுகுகண்ணீர் பாய்ந்திழிய வுணர்வின்றி வீழக்கண்டே, யானும்மைப் பிரியாத வண்ணமிந்நாட் டிறைவர்பதி யெனைப்பலவும் பணிவீரென்று, ஞானமுணர் வாரருள வவரும்போத நம்பர்திருப் பரங்குன்றை நண்ணினரோ.

(இ-ள்.) தேன் நிலவு பொழில் மதுரைப்புறத்தும்போந்த = தேன் பொருந்திய சோலைசூழ்ந்த மதுராபுரியின் புறம்பேவந்த ; தென்னவனர் தேவியார் அமைச்சர்=பாண்டியனும் பாண்டிமாதேவியாருங் குலச்சிறை நாயனருமாகிய இம்மூவரும் ; ஊன் நெகிழும்படி யழிந்து = உடம்பானது நெக்குருகும்படி மனஞ்சோர்ந்து ; அங்கு ஒழுகுகண்ணீர் பாய்ந்து இழிய= அவ்விடத்துச் சொரிகின்ற கண்ணீரானது பெருகித் தமதுடம்பின்கண்பெருக; உணர்வின்றி வீழக்கண்டு=அறிவு மயங்கிப் பரவசமாய் வீழ்தலைப்பார்த்தருளி ; யான் உம்மைப்பிரியாதவண்ணம் இந்நாட்டிறைவர் பதி எனைப் பலவும் பணிவீரென்று=நான் உங்களை நீங்காமல் இந்நாட்டிலுள்ள சிவபெருமானெழுந்தருளிய திருப்பதிகள் பலவற்றையும் நீவிர்வணங்குவீரென்று; ஞானம் உணர்வார் அருள அவரும்போத=சிவஞானத்தையுணர்ந்த ஆளுடைய

Koviloor Digital Library.

பிள்ளையாருளிச்செய்ய அவர்களு மதற்கிசைந்துடன்செல்ல ; நம்பர் திருப் பரங்குன்றை நண்ணினரோ=பரங்கிரிநாதரெழுந்தருளிய திருப்பரங்குன்றை யடைந்தருளினார்.—எ-று. (௮௮௪)

ஆறணிந்தார் தமைவணங்கி யங்குப்போற்றி யணியாப்ப னூரணைந்து பணிந்துபாடி, நீறணிந்தசெல்வர்பதி பிறவுஞ்சேர்ந்து நிலவுதிருப்பதிகங்க ணிகழப்பாடிச், சேறணிந்த வயற்பழனக் கழனிசூழ்ந்த சிரபுரத்து வந்தருளுஞ் செல்வர்செங்க, ணேறணிந்த வெல்கொடியார் திருப்புத்தூரை யினிதிறைஞ்சிச் சிலநாளங் கிருந்தாரன்றே.

(இ-ள்.) ஆறு அணிந்தார் தமைவணங்கி அங்குப்போற்றி=கங்காநதி யணிந்தசடைமுடியையுடைய பரங்கிரிநாதரைவணங்கி அவ்விடத்துத் துதி செய்து ; அணி ஆப்பனூர் அணைந்து பணிந்துபாடி=அழகிய திருவாப்பனூ ரையடைந்து வணங்கிப் பதிகம்பாடி ; நீறு அணிந்தசெல்வர் பதிபிறவும் சேர்ந்து=விபூதியையணிந்த சிவபெருமானெழுந்தருளிய திருப்பதிகள் பிற வற்றையுமடைந்தருளி ; நிலவு திருப்பதிகங்கள் நிகழப்பாடி=விளங்குகின்ற திருப்பதிகங்களை யிசையுடன் பாடியருளி ; சேறு அணிந்த வயற்பழனக்கழ னி சூழ்ந்த சிரபுரத்துவந்தருளும் செல்வர்=சேறுபொருந்திய வயலினது பக்கவிடங்களும் விளை நிலங்களுஞ் சூழ்ந்த சீகாழியிலவதரித்த ஆளுடைய பிள்ளையார் ; செங்கண் ஏறு அணிந்த வெல்கொடியார் திருப்புத்தூரை இனி து இறைஞ்சிச் சிலநாள் அங்கு இருந்தார் அன்றே=சிவந்த கண்ணையுடைய இடபமுயர்த்த வெற்றிக்கொடியையுடைய சிவபெருமானெழுந்தருளிய திரு ப்புத்தூரை யினிதாக வணங்கிச் சிலநாளங்கிருந்தார்.—எ-று. (௮௮௫)

திருப்பரங்குன்றம்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

நீடலர்சோதி வெண்பிறையோடு நிறைகொன்றை
சூடலனந்திச் சுடரெரியேந்திச் சுடுகானி
லாடலனஞ்சொ லணியிழையாளை யொருபாகம்
பாடலன்மேய நன்னகர்போலும் பரங்குன்றே.

தடமலிபொய்கைச் சண்பைமன்ஞான சம்பந்தன்
படமலிநாக மரைக்கசைத்தான்றன் பரங்குன்றைத்
தொடைமலிபாடல் பத்தும்வல்லார்தந் துயர்போகி
விடமலிகண்ட னருள்பெறுநன்மை மிக்கோரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-பரங்கிரிநாயகர். தேவியார்-ஆளுடையநாயகியம்மை.

Koviloor Digital Library

திருஆப்பனூர்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

முற்றுஞ் சடைமுடிமேன் முதிரா விளம்பிறைய
னொற்றைப் படவரவ மதுகொண் டரைக்கணிந்தான்
செற்றமில்சீ ரானைத்திரு வாப்பனூ ரானைப்
பற்றுமன முடையார் வினைப்பற் றறுப்பாரே

அந்தண் புனல்வைகை யணியாப்ப னூர்மேய
சந்த மலர்க்கொன்றை சடைமே லுடையானை
நந்தி யடிபரவு நலஞான சம்பந்தன்
சந்த மிவைவல்லார் தடுமாற்ற றுப்பாரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-ஆப்பனூர்க்காரணர். தேவியார்-அம்பிகையம்மை.

திருப்புத்தூர்-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

வெங்கள்விம்மு வெறியார் பொழிற்சோலை
திங்களோடு திளைக்குந் திருப்புத்தூர்க்
கங்கைதங்கு முடியா ரவர்போலு
மெங்களுச்சி யுறையும் மிறையாரே.

நல்லகேள்வி ஞானசம் பந்தன்
செல்வர்சேட ருறையுந் திருப்புத்தூர்ச்
சொல்லல்பாடல் வல்லார் தமக்கென்று
மல்லல்திரும் மவலம் மடையாவே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-திருப்புத்திசர். தேவியார்-சிவகாமித்தாய்.

பற்றார்தம் புரங்கண்மலைச் சிலையாற்செற்ற பரமனார் திருப்புத்தூர் பணிந்துபோந்து, புற்றரும் பணிபூண்ட புனிதனார்தம் பூவணத்தைப் புக்கிறைஞ்சிப் புகழ்ந்துபாடிக், கற்றார்க டொழுதேத்துங் கானப்பேருங் கைதொழுது தமிழ்பாடிச் சுழியல்போற்றிக், குற்றாலங் குறும்பலாக் கும்பிட்டேத்திக் கூற்றுதைத்தார் நெல்வேலி குறுகினாரே.

(இ-ள்.) பற்றார்தம் புரங்கள் மலைசிலையாற்செற்ற பரமனார் திருப்புத்தூர் பணிந்துபோந்து=மாறுபட்ட அசுரரது திரிபுரங்களையும் மேருமலைவில்

Koviloor Digital Library

லாகக்கொண்டெரித்தருளிய திருப்புத்திச ரொழுந்தருளிய திருப்புத்தூரை வணங்கித்துதித்து; புற்று ஆரும் பணிபூண்ட புனிதனார் தம்பூவணத்தைப் புக்கு இறைஞ்சி=புற்றினிடத்து வாழுஞ் சர்ப்பத்தை யாபரணமாகப்பூண்ட சிவபெருமானது திருப்பூவணத்தையடைந்து வணங்கி; புகழ்ந்துபாடி=துதித்துத் திருப்பதிகம்பாடி; கற்றோர்கள் தொழுது ஏத்தும் கானப்பேரும் கைதொழுது தமிழ்பாடி=கற்றவர்கள் வணங்கித்துதிக்குந் திருக்கானப்பேரையுங் கைகூப்பி வணங்கித் திருப்பதிகம்பாடியருளி; சுழியல்போற்றி=திருச்சுழியலென்னும்திருப்பதியை வணங்கி; குற்றாலம் குறும்பலாக்கும்பிட்டு ஏத்தி= திருக்குற்றாலத்தையுந் திருக்குறும்பலாவையும் வணங்கிப் பதிகம்பாடி; கூற்று உதைத்தார் நெல்வேலிகுறுகினார் = இயமனையுதைத்த திருவடியையுடைய சாலிவாடீசரெழுந்தருளிய திருநெல்வேலியையடைந்தருளினார்-எ-று

திருப்பூவணம்-பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

அறையார்புனலு மாமலரு மாடர வார்சடைமேற்
குறையார்மதியுஞ் சூடிமாதோர் கூறுடையா னிடமா
முறையார்முடிசேர் தென்னர்சேரர் சோழர் கடாம்வணங்குந்
திறையாரொளிசேர் செம்மையோங்கு தென்றிருப் பூவணமே.

திண்ணார்புரிசை மாடமோங்கு தென்றிருப்பூவணத்துப்
பெண்ணார்மேனி யெம்மிறையைப் பெரிய வின்றமிழா
னண்ணாருட்கக் காழிமல்கு ஞானசம் பந்தன்சொன்ன
பண்ணார்பாடல் பத்தும்வல்லார் பயில்வது வானிடையே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-பூவணநாதர். தேவியார்-மின்னம்மை.

திருக்கானப்பேர்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

பிடியெலாம்பின்செல்லப் பெருங்கைமா மலர்தழீஇ
விடியலே தடமூழ்கி விதியினால் வழிபடுங்
கடியுலாம் பூம்பொழிற் கானப்பே ரண்ணலின்
னடியலா லடைசர ணுடையரோ வடியரே.

காட்டகத் தாடலான் கருதிய கானப்பேர்
கோட்டகத் திளவரால் குதிகொளுங் காழியா

Koviloor Digital Library

ஞட்டகத் தோங்குசீர் ஞானசம் பந்தன
பாட்டகத் திவைவல்லார்க் கில்லையாம் பாவமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-கானக்காளையார். தேவியார்-மகமாயி அம்மை.
இது காளையார்கோயிலென வழங்குகின்றது.

திருக்குற்றாலம்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

வம்பார்குன்ற நீடுயர்சாரல் வளர்வேங்கைக்
கொம்பார்சோலைக் கோலவண்டியாழ் செய்குற்றால
மம்பானெய்யோ டாட லமர்ந்தா னலர்கொன்றை
நம்பான்மேய நன்னகர்போலும் நமரங்காள்.

யாடவீதி வருபுனற்காழி யார்மன்னன்
கோடலீன்று கொழுமுளைகூம்புங் குற்றால
நாடவல்ல நற்றமிழ்ஞான சம்பந்தன்
பாடல்பத்தும் பாடநம்பாவம் பறையுமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-குறும்பலாநாதர். குற்றாலநாதர் என்பதுமாம்.
தேவியார்-குழல்வாய்மொழியம்மை.

திருக்குறும்பலா-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

திருந்தமதிசூடித் தெண்ணீர்சடைக்கணிந்து தேவிபாகம்
பொருந்திப்பொருந்தாத வேடத்தாற்காடுறைதல் புரிந்தசெல்வ
ரிருந்தவிடம்வினவி லேலங்கமழ்சோலையின் வண்டியாழ்செய்
குருந்தமணநாறுங் குன்றிடஞ்சூழ்தண்சாரற் குறும்பலாவே.

கொம்பார்பூஞ்சோலைக் குறும்பலாமேவிய கொல்லேற்றண்ண
னம்பானடிபரவு நான்மறையான்ஞானசம் பந்தன்சொன்ன
வின்பாயபாட லிவைபத்தும்வல்லார் விரும்பிக்கேட்பார்
தம்பாசத்திவினைகள் போயகலுநல்வினைகள் தளராவன்றே.

திருச்சிற்றம்பலம்.

புண்ணியனூர் நெல்வேலி பணிந்துபோற்றிப் புரிசடையார் திரு
ப்பதிகள் பிறவுஞ்சென்று, நண்ணியினி தமர்ந்தங்கு நயந்துபாடி நற்

• Koviloor Digital Library

றொண்ட ருடனாளும் போற்றிச்செல்வார், விண்ணவரைச் செற்றுகந்தா னிலங்கைசெற்ற மிக்கபெரும் பாதகத்தை நீக்கவேண்டித், திண்ணியபொற் சிலைத்தடக்கை யிராமன்செய்த திருவிரா மேச்சரத்தைச்சென்றுசேர்ந்தார்.

(இ-ள்.) புண்ணியனார் நெல்வேலிபணிந்துபோற்றி = சிவபெருமானாரது திருநெல்வேலியைவணங்கித் துதித்து ; புரிசடையார் திருப்பதிகள் பிறவும் சென்று நண்ணி=முறுக்குப்பொருந்தியசடையையுடைய சிவபெருமானெழுந்தருளிய பிறதிருப்பதிகளையுமடைந்து சென்று ; இனிது அமர்ந்து அங்கு நயந்துபாடி=இனிதாக அங்கெழுந்தருளி விரும்பித் திருப்பதிகமருளி; நற்றொண்டருடன் நாளும்போற்றிச் செல்வார்=நல்ல திருவடியார்களுடன் நாள்தோறும் வணங்கிச்செல்லும் ஆளுடையபிள்ளையார் ; விண்ணவரைச் செற்று உகந்தான் இலங்கை செற்ற மிக்கபெரும்பாதகத்தை நீக்கவேண்டி= தேவர்களைக்கெடுத்து அரசாட்சியிலுகந்த இராவணனோடு இலங்கையையழித்த மாபாதகத்தை நீக்கக்கருதி ; திண்ணிய பொற்சிலைத்தடக்கை இராமன்செய்த திரு இராமேச்சரத்தைச் சென்று சேர்ந்தார் = வலிய அழகிய வில்லேந்திய நீண்ட கையையுடைய சிராமர் தாபித்த திருவிராமேச்சரமென்னுந் திருப்பதியைச்சென்றடைந்தருளினார்.—எ-று. (அஅஎ)

திருநெல்வேலி-திருவிராகம்-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

மருந்தவைமந்திரம் மறுமைநன்னெறியவை மற்றுமெல்லா
மருந்துயர்கெடுமவர் நாமமேசிந்தைசெய் நன்னெஞ்சமே [பூந்
பொருந்துதண்புறவினிற் கொன்றைபொன்சொரிதரத் துன்றுதண்
செருந்திசெம்பொன்மலர் திருநெல்வேலியுறை செல்வர்தாமே.

பெருந்தண்மாமலர்மிசை யயனவனனையவர் பேணுகல்வித்
திருந்துமாமறையவர் திருநெல்வேலியுறை செல்வர்தம்மைப்
பொருந்துகீர்த்தடமல்கு புகலியுள்ஞானசம்பந்தன்சொன்ன
வருந்தமிழ்மாலைகள் பாடியாடக்கெடு மருவினையே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-வேணுநாதர். நெல்லையப்பரென்பதுமாம்.

தேவியார்-காந்திமதியம்மை.

செங்கண்மால் வழிபட்ட கோயிலைநண்ணித் திருமுன்பு தாழ்ந்தெழுந்து தென்னனொடு, மங்கையர்க்கு நாயகியார் தாமுமெய்ம்மை

Koviloor Digital Library

மந்திரியாருஞ்சூழ மணிநீள்வாயிற், பொங்கியெழும் விருப்பினு லுடனேபுக்குப் புடைவலங்கொண் டுள்ளணைவார் போற்றிசெய்து, பங்கயச்செங் கைகுவித்துப் பணிந்துநின்று பாடினார் மன்னவனும்பரவியேத்த.

(இ-ள்.) செங்கண்மால் வழிபட்டகோயில் எய்தி = தாமரைமலர்போலுஞ் சிவந்த திருக்கண்ணையுடைய திருமால்வழிபாடுசெய்த திருக்கோயிலையடைந்து ; திருமுன்புதாழ்ந்து எழுந்து=திருமுன்புநின்று வணங்கியெழுந்து ; தென்னனொடுமங்கையர்க்கு நாயகியார்தாமும் மந்திரியாரும் சூழ=நின்ற சீர் நெடுமாறனாரோடு மங்கையர்க்கரசியாருங் குலச்சிறை நாயனாருந் தம்மைச்சூழ ; மணிநீள்வாயில்பொங்கி எழும் விருப்பினால் உடனே புக்கு=மணிகளழுத்திய நீண்டதிருவாயிலில் மேற்கொண்டெழுந்த பெருவிருப்பாலுடனே புகுந்தருளி ; புடைவலங்கொண்டு உள் அணைவார் = திருக்கோயிலின் பக்கத்துப் பிரதட்சணஞ்செய்து உள்ளேஎழுந்தருளும் ஆளுடையபிள்ளையார் ; போற்றிசெய்து பங்கயச்செங்கை குவித்துப் பணிந்து நின்று=துதிசெய்து தாமரைமலர்போலுஞ் சிவந்த திருக்கரங்களைக்குவித்து வணங்கிநின்று ; பாடினார்மன்னவனும் பரவியேத்த=பாண்டியராஜனும்வணங்கித் துதிக்கத் திருப்பதிகம்பாடினார்.—எ-று. (அஅஅ)

திரு இராமேச்சரம்-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

அலைவளர்தண்மதி யோடயலே யடக்கியுமை
முலைவளர்பாக முயங்கவல்லமு தல்வன்முனி
யிலைவளர்தாழைகள் விம்முகான லிராமேச்சரந்
தலைவளர்கோல நன்மாலையன்று ளிருந்தாட்சியே.

பகலவன்மீதி யங்காமைக்காத்த பதியோன்றனை
யிகலழிவித்தவ னேத்துகோயி லிராமேச்சரம்
புகலியுண்ஞான சம்பந்தன்சொன்ன தமிழ்புந்தியா
லகலிடமெங்கு நின்றேத்தவல்லார்க் கில்லையல்லலே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-இராமநாதர். தேவியார்-பர்வதவர்த்தனி.
தமிழிற்பெயர்-மலைவளர்காதலியம்மை.

சேதுவின்கட் செங்கண்மால் பூசைசெய்த சிவபெருமான் றனைப்பாடிப் பணிந்துபோந்து, காதலுடனங்கரி லினிதுமேவிக் கண்ணுதலான் திருத்தொண்ட ரானார்க்கெல்லாங், கோதில்புகழ்ப் பா

Koviloor Digital Library

ண்டிமாதேவியார்மெய்க் குலச்சிறையார் குறைவறுத்துப் போற்றிச்செல்ல, நாதர்தமை நாடோறும் வணங்கியேத்தி நளிர்வேலைக் கரையினயந் திருந்தாரன்றே.

(இ-ள்.) சேதுவின்கண் செங்கண்மால் பூசைசெய்த=சேதுவினிடத்துச் சிவந்ததிருக்கண்களையுடைய திருமால் பூசைசெய்த; சிவபெருமான் றனைப்பாடிப் பணிந்துபோந்து=இராமநாதனைத் திருப்பதிகம்பாடி வணங்கி அங்கு நின்றும் போந்தருளி; காதலுடன் அந்நகரில் இனிதுமேவி=விருப்பத்தோடு அத்திருப்பதியி லினிதாக இருந்தருளி; கண்ணுதலான் திருத்தொண்டரானோர்க்கெல்லாம்=நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானது திருவடியார்கட்கெல்லாம்; கோதில் புகழ்ப்பாண்டிமா தேவியார் மெய்க் குலச்சிறையார் குறைவு அறுத்துப்போற்றிச் செல்ல=குற்றமற்ற புகழையுடைய பாண்டிமா தேவியாரும் மெய்யன்பினையுடைய குலச்சிறை நாயனாரு முண்டிமுதலிய குறைந்தவி யுபசரித்துச்செல்ல; நாதர்தமை நாள்தோறும்வணங்கி ஏத்தி = இராமநாதனை நாடோறும் வணங்கித்துதித்து; நளிர்வேலைக்கரையில் நயந்து இருந்தாரன்றே = குளிர்ந்த சமுத்திரக்கரையிலுள்ள இராமேச்சரமென்னுந் திருப்பதியில் விரும்பி எழுந்தருளியிருந்தார்.—எ-று. (அஅகூ)

அந்நகரி லமர்ந்தங்க ணினிதுமேவி யாழிபுடை சூழ்ந்தொலிக்கு மீழந்தன்னின், மன்னுதிருக்கோணமலை மகிழ்ந்த செங்கண்மழவிடையார் தமைப்போற்றி வணங்கிப்பாடிச், சென்னிமதி புனைமாட மாதோட்டத்திற் றிருக்கேதீச் சரத்தண்ணல் செய்யபாதம், முன்னிமிகப் பணிந்தேத்தி யன்பரோடு முலவாத கிழிபெற்றா ருவகையுற்றார்.

(இ-ள்.) அந்நகரில் அமர்ந்து அங்கண் இனிதுமேவி = அத்திருப்பதியில் விரும்பி யினிதாக அவ்விடத்தெழுந்தருளி; ஆழிபுடை சூழ்ந்து ஒலிக்கும் ஈழந்தன்னில்=கடல்புடைசூழ்ந்தொலிக்கு மீழநாட்டில்; மன்னுதிருக்கோணமலை மகிழ்ந்த செங்கண்மழவிடையார் தமைப்போற்றி வணங்கிப்பாடி=நிலைபெற்ற திருக்கோணமலையில் மகிழ்ந்தெழுந்தருளியிருக்குஞ் சிவந்தகண்களையுடைய இளமைபொருந்திய இடபத்தை வாகனமாகக்கொண்ட சிவபெருமானைத்துதித்து வணங்கிப் பதிகம்பாடி; சென்னிமதி புனைமாட மாதோட்டத்தில் சிகரத்தின்கண் சந்திரனைச்சூடிய மண்டபங்களையுடைய மாதோட்டமென்னுந் திருப்பதியில்; திருக்கேதீச்சரத்தண்ணல் செய்யபாதம் உன்னி=திருக்கேதீச்சரமென்னு மாலயத்திலெழுந்தருளிய சிவபெருமானது சிவந்த திருவடிகளை மனதிற் சிந்தித்து; மிகப்பணிந்து ஏத்தி=மிகவும் வணங்கித் திருப்பதிகம்பாடி; அன்பரோடும் உலவாதகிழிபெற்றார் உவகையுற்றார்=திருவடியார் திருக்கூட்டத்தோடு உலவாக்கிழிபெற்ற அருளுடைய பிள்ளையார் மகிழ்கூர்ந்தருளினார்.—எ-று. (அகூ௦)

Koviloor Digital Library

திருக்கோணமாமலை-பண்-புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

நிரைகழலரவஞ் சிலம்பொலியலம்பு நிமலர்நீறணிதிருமேனி [யர்
வரைகெழுமகளோர் பாகமாப்புணர்ந்த வடிவினர்கொடியணிவிடை
கரைகெழுசந்துங் காரகிற்பிளவு மளப்பருங்கனமணிவரன்றிக்
குரைகடலோட நித்திலங்கொழிக்குங் கோணமாமலையமர்ந்தாரே.

குற்றமிலாதார் குரைகடல்சூழ்ந்த கோணமாமலையமர்ந்தாரைக்
கற்றுணர்கேள்விக் காழியர்பெருமான் கருத்துடைஞானசம்பந்த
னுற்றசெந்தமிழார் மாலையீரைந்து முரைப்பவர்கேட்பவருயர்ந்தோர்
சுற்றமுமாகித்தொல்வினையடையார்தோன்றுவார்வானிடைப்பொலிந்தே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-கோணீசுவரர். தேவியார்-மாதுமையம்மை.

இத்தலத்துக்கு இக்காலத்தில் திருக்கணமலையெனப்பெயர்
வழங்குகின்றது. மலையிருக்கின்றது, ஆலயமில்லை.

திருக்கேதிச்சரம்-பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

விருதுகுன்றமா மேருவினாணர வாவனலெரிம்பாற்
பொருதுமூவெயில் செற்றவன்பற்றிநின் றுறைபதியெந்நாளுங்
கருதுகின்றவூர் கனைகடற்கடிகமழ் பொழிலணிமாதோட்டங்
கருதிநின்றகே தீச்சரங்கைதொழக் கடுவினையடையாவே.

மாடெலாமண முரசெனக்கடலினி தொலிகடன்மாதோட்டத்
தாடலேறுடை யண்ணல்கேதிச்சரத் தடிகளையணிகாழி
நாடுளார்க்கிறை ஞானசம்பந்தன்சொன் னவின்றெழுபாமாலை
பாடலாயின பாடுமின்பத்தர்கள் பரகதிபெறலாமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-கேதீச்சரர். தேவியார்-கௌரிநாயகியம்மை.

இந்தத்தலங் காடுகொடிருக்கின்றது.

அப்பதியைத் தொழுதுவட திசைமேற்செல்வா ரங்கையனல
தரித்தபிரா னமருங்கோயில், புக்கிறைஞ்சிப் பலபதியுந் தொழுது
போற்றிப் புணரிபொரு தலைகரைவா யொழியப்போந்தே, செப்ப

ரிய புகழ்த்திருவாடானைசேர்ந்து செந்தமிழ்மாலைகள் சாத்திச் சிவ ஞர்மன்னு, மொப்பரியபுனவாயில் போற்றிசெய்து வணங்கின ருல குய்ய ஞானமுண்டார்.

(இ-ள்.) அப்பதியைத்தொழுது வடதிசைமேற் செல்வார்=அத்திரு க்கேதீச்சரத்தை இராமேச்சரத்திலிருந்து வணங்கி வடதிசைக்கெழுந்தரு ளும் பிள்ளையார்; அங்கை அனல்தரித்தபிரான் அமரும் கோயில்புக்கு இறை ஞ்சி=அழகிய திருக்கரத்தி லக்கினியையேந்திய சிவபெருமானெழுந்தருளிய இராமேச்சரமென்று மாலயத்துட்சென்று வணங்கி; பலபதியும்தொழுது போற்றி=அங்குநின்று பலதிருப்பதிகளையும் பணிந்து திருப்பதிகம்பாடி; புண ரிபொருது அலைகரைவாய் ஒழியப்போந்து=கடல்மோதியலைக்குங்கடற்கரை நீங்கப்புறம்புசென்று; செப்பரிய புகழ்த்திரு ஆடானைசேர்ந்து=சொல்லுதற் கரியபுகழையுடைய திருவாடானையென்னுந் திருப்பதியையடைந்து; செழும் தமிழ்மாலைகள்சாத்தி=செழுமைபொருந்திய திருப்பதிகமாலைகளை யருளிச்செ ய்து; சிவஞர்மன்னும் ஒப்பரிய புனவாயில் போற்றிசெய்து=பழம்பதிநாத ரெழுந்தருளிய திருப்புனவாயிலைத் துதித்து; வணங்கினர் உலகு உய்ய ஞான முண்டார்=வணங்கியருளினர் உலகமுய்யச் சிவஞான வமுதுண்ட ஆளுடை யபிள்ளையார்.—எ-று. (அகக)

திரு ஆடானை-பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

மாதோர்கூறுகந் தேறதேறிய
வாதியானுறை யாடானைப்
போதினாற்புனைந் தேத்துவார்தமை
வாதியாவினை மாயுமே.

விடினூர்மலி வெங்கடத்துநின்
றுடினுறுறை யாடானை
நாடிஞானசம் பந்தன்செந்தமிழ்
பாடநோய்பிணி பாறுமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-இரத்தினநாயகர். தேவியார்-நல்லாயியம்மை.
ஆதிரத்தினேசுவரர்-அம்பாயிரவல்லியம்மை.

திருப்புனவாயில்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

மின்னியல் செஞ்சடை வெண்பிறையன் விரிநூலினன்
பன்னியநான்மறை பாடியாடிப் பலவூர்கள்போ

Koviloor Digital Library

யன்னமன்ன நடையாளொடு மமரும்மிடம்
புன்னைநன்மாமலர்ப் பொன்னுதிர்க்கும் புனவாயிலே.

பொற்றொடியாளுமை பங்கன்மேவும் புனவாயிலைக்
கற்றவர்தாந்தொழு தேத்திநின்ற கடற்காழியா
னற்றமிழ்ஞானசம் பந்தன்சொன்ன தமிழ்நன்மையா
லற்றமில்பாடல்பத் தேத்தவல்லா ரருள்சேர்வரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-பழம்பதிநாயகர். தேவியார்-பரங்கருணையம்மை.

பதிநிலவு பாண்டிநா டதனின்முக்கட் பரமனார் மகிழ்விடங்கள் பலவும்போற்றி, விதிநிலவு வேதநூ னெறியேயாக்கி வெண்ணீற்றின் சார்வினான் மிக்குயர்ந்த, கதியருளிக் காழிநகர் வாழவந்தார் கண்ணு தலான் றிருத்தொண்டர் பலருஞ்சூழ, மதிநிலவு குலவேந்தன் போ ற்றிச்செல்ல மந்திரியார் பதிமணமேற் குடியில்வந்தார்.

(இ-ள்.) பதிநிலவுபாண்டி நாடதனில் முக்கட்பரமனார் மகிழ்விடங் கள் பலவும்போற்றி=நாடுகளுள் விளங்குகின்ற திருப்பாண்டி நாட்டின்கண் மூன்றுகண்ணையுடைய சிவபெருமானெழுந்தருளிய தலங்களெல்லாவற்றையு மிவ்வாறு துதித்து; விதிநிலவு வேதநூல்நெறியே ஆக்கி = விதிகளோடு கூடிய வேதநூலினது மார்க்கமே அந்நாடெங்கும் பரவச்செய்து; வெண்ணீ ற்றின் சார்வினால் மிக்கு உயர்ந்த கதியருளி=திருவெண்ணீற்றின் அனுசரணை யினால் மிகவுமுயர்ந்த மோட்சத்தை யருளிச்செய்து; காழி நகர்வாழவந் தார் கண்ணுதலார் திருத்தொண்டர் பலரும் சூழ = சீகாழி நகரிலுள்ளார் வாழும்படி யவதரித்த ஆளுடையபிள்ளையார் நெற்றிக்கண்ணையுடைய சிவ பெருமான் திருவடியார் பலருஞ்சூழ; மதிநிலவு குலவேந்தன் போற்றிச் செல்ல=சந்திரகுலத்தி லவதரித்த பாண்டியராசன்றுதித்துச்செல்ல; மந்திரி யார் பதிமணமேற்குடியில் வந்தார் =குலச்சிறை நாயனாரவதரித்த திருப் பதியாகிய மணமேற்குடிக்கெழுந்தருளினார்.—எ-று. (அகஉ)

அந்நகரி லினிதமர்வா ரருகுசூழ்ந்த பதிகளினீ டங்கணார்தங் கோயிறுழ்ந்து, மன்னுதிருத் தொண்டருடன் மீண்டுசேர்ந்து மன்ன வனுமங்கையருக்கரசியாருங், கொன்னவில்வேற் குலச்சிறையார்தா முங்கூடிக் குரைகழல்கள் பணிந்துகுறை கொண்டுபோற்றச், செ ன்னிவளர் மதியணிந்தார் பாதம்போற்றிச் சிரபுரத்துச் செல்வரினி திருந்த நாளில்.

(இ-ள்.) அந்நகரில் இனிது அமர்வார்=அத்திருப்பதியி லினிதாகவி ருந்தருளும் பிள்ளையார்; அருகுசூழ்ந்தபதிகளில் நீடு அங்கணார்தம்கோயில்

Koviloor Digital Library

தாழ்ந்து=பக்கங்களிற் சூழ்ந்த திருப்பதியிலெழுந்தருளிய சிவபெருமானார் திருக்கோயில்களைவணங்கி; மன்று திருத்தொண்டருடன் மீண்டுசேர்ந்து=கலைபெற்ற அடியார்களுடன் மீளவு மத்திருப்பதியை யடைந்து; மன்னவனும் மங்கையருக் கரசியாரும் கொன்னவில்வேற் குலச்சிறையார் தாமும் கூடி=பாண்டியராசனும் பாண்டிமாதேவியாரும் பெருமைபொருந்திய வேற்படையைத் தரித்த குலச்சிறை நாயனாருஞ்சேர்ந்து; குணகழல்கள் பணிந்து குறைகொண்டு போற்ற=ஒலிக்கின்ற வீரக்கழலையணிந்த பிள்ளையாரது திருவடிகளை வணங்கிக்குறைகூறித் துதிக்க; சென்னிவளர் மதி அணிந்தார் பாதம்போற்றிச் சிரபுரத்துச்செல்வர் இனிது இருந்தநாளில் = சிரசிலிளம்பிறையை யணிந்த பெருமானார் திருவடிகளைத்துதித்துச் சீகாழிச்செல்வராகிய பிள்ளையார் இனிதெழுந்தருளியிருந்த காலத்து.—எ-று. (அகரு)

பொங்குபுனற் காவிரிநா டதனின்மீண்டு போதுதற்குத் திருவுள்ளமாகப்பெற்று, மங்கையருக் கரசியார் தாமுந்தென்னர் மன்னவனுமந்திரியார் தாமுங்கூட, வங்கவர்தந் திருப்பாதம் பிரியலாற்றாதுடன்போக வொருப்படுமவ் வளவுநோக்கி, யிங்குநான் மொழிந்ததனுக் கிசைந்திராகி லிசைசிவ நெறிபோற்றி யிருப்பீரென்று.

(இ-ள்.) பொங்கு புனற்காவிரி நாடதனில் மீண்டு = மிகுந்த நீரையுடைய காவிரி சூழ்ந்த சோழநாட்டிற்குத் திரும்பி; போதுதற்குத் திருவுள்ளமாகப் பெற்று=எழுந்தருளுதற்குத் திருவுள்ளமடைந்து; மங்கையருக்கரசியார் தாமும் தென்னர்மன்னவனும் மந்திரியார்தாமுங்கூட=பாண்டிமாதேவியாரும் பாண்டியராசனுங் குலச்சிறை நாயனாரு மொருங்குசேர; அங்கு அவர்தம் திருப்பாதம் பிரியலாற்றாது=அப்பிள்ளையாரது திருவடிகளைப் பிரிந்திருக்கத் தரியாமல்; உடன்போக ஒருப்படும் அவ்வளவுநோக்கி = உடன்செல்லுதற்கு ஒன்றுபடுமச்சமயத்தைப் பார்த்தருளி; இங்கு நான்மொழிந்ததனுக் கிசைந்திராகில்=இவ்விடத்து நான் கூறுவதற்கு உடன்படுவீரானால்; சைவநெறிபோற்றி இருப்பீரென்று=சிவபெருமானுடைய சைவநெறியைப்பாதுகாத்த இருக்கக்கடவீரென்று கூறியருளி.—எ-று. (அகசு)

சாலமிகத் தளர்வாரைத் தளராவண்ணந் தகுவனமற்றவர்க் கருளிச்செய்தபின்பு, மேலவர்தம் பணிமறுக்க வவருமஞ்சி மீள்வதனுக் கிசைந்துதிரு வடியில்வீழ்ந்து, ஞாலமுய்ய வந்தருளும் பிள்ளையாரைப் பிரியாதவன்பினொடுந் தொழுதுநின்று, ராலவிட முண்டவனை யடிகள்போற்ற வந்நாட்டை யகன்றுமீண்டணையச்செல்வார்.

(இ-ள்.) சாலமிகத்தளர்வாரைத் தளராவண்ணம் = மிகவுந்தளருமம்மூவரையும் மனந்தளராதபடி; தகுவனமற்றவர்க் கருளிச்செய்த பின்பு=தக்கமொழிகளை யவர்களுக் கருளிச்செய்தபின்பு; மேலவர்தம்பணிமறுக்க

Koviloor Digital Library

அவரும் அஞ்சி=மேலே அப்பிள்ளையாரது கட்டளையை மறுத்தற்கவர்களும் பயந்து ; மீள்வதனுக்கு இசைந்து திருவடியில் வீழ்ந்து=தங்கள் பாண்டி நாட்டிற்குச் செல்வதற்கு மனமிசைந்து பிள்ளையாரது திருவடியில்விழுந்து; ஞாலம் உய்யவந்தருளும் பிள்ளையாரை=உலகத்தார் உய்ய அவதரித்த ஆளுடைய பிள்ளையாரை ; பிரியாத அன்பினொடும் தொழுதுநின்றார்=பிரிதலில்லாத அன்போடுவணங்கி நின்றார்கள் ; ஆலவிடம் உண்டவரை அடிகள்போற்ற அந்நாட்டை அகன்றுமீண்டு அணையச்செல்வார்=ஆலாகலத்தை யுண்ட சிவபெருமான் திருவடிகளைத் துதிக்க அப்பாண்டிநாட்டினின்றும் நீங்கிச் சோழநாட்டை யணையும்படி செல்வாராயினர்.—எ-று. (அகூரு)

பொன்னிவளந் தருநாடு புகுந்துமிக்க பொருவில்சீர்த் திருத் தொண்டர் குழாத்தினோடும், பன்னகப்பூ ணணிந்தவர்தங் கோயி றோறும் பத்தருடன் பதியுள்ளோர் போற்றச்சென்று, கன்னிமதிற் றிருக்களரும் போற்றிக்கண்டங் கறையணிந்தார் பாதாளீச் சரமும் பாடி, முன்னணைந்த பதிபிறவும் பணிந்துபோற்றி முள்ளிவாய்க் கரையணைந்தார் முந்நூன்மார்பர்.

(இ-ள்.) பொன்னிவளம் தருநாடு புகுந்து=பலவளங்களையுந் தருஞ் சோழநாட்டிற் சென்றருளி ; மிக்கபொருவில் சீர்த்திருத்தொண்டர்குழாத்தினோடும்=மேன்மைபொருந்திய ஒப்பற்ற சிறப்பினையுடைய திருவடியார்கூட்டத்தோடும் ; பன்னகப்பூண் அணிந்தவர்தம்கோயில்தோறும் = சர்ப்பாபரணத்தையணிந்த சிவபெருமானெழுந்தருளிய திருக்கோயில்கள்தோறும்; பத்தருடன் பதியுள்ளோர் போற்றச்சென்று = அங்குள்ள அடியாருடன் திருப்பதியிலுள்ளாருமெதிர்கொண்டு துதிக்கவெழுந்தருளி ; கன்னிமதில் திருக்களரும்போற்றி=அழிவில்லாத மதில் சூழ்ந்ததிருக்களரென்னுந் திருப்பதியையுந்துதித்து; கண்டம் கறை அணிந்தார் பாதாளீச்சரமும்பாடி=திருமிடற்றின்கண் ஆலாகலத்தைத் தரித்தபெருமானெழுந்தருளிய திருப்பாதாளீச்சரத்தையும் வணங்கி; முன் அணைந்த பதிபிறவும் பணிந்துபோற்றி=தமக்குமுற்பட்ட மற்றைத்திருப்பதிகளையும் வணங்கித் திருப்பதிகம்பாடி ; முள்ளிவாய்க்கரை அணைந்தார் முந்நூல் மார்பர்=முந்நூலணிந்த மார்பினையுடைய ஆளுடையபிள்ளையார் முள்ளிவாய்க்கரையையடைந்தருளினார்.—எ-று. (அகூசு)

திருப்பாதாளீச்சரம்-பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

மின்னியல்செஞ் சடைமேல் விளங்கும்மதி மத்தமொடுநல்ல
பொன்னியல் கொன்றையினன் புனல்சூடிப் பொற்பமரு
மன்னமன்ன நடையா ளொருபாகத் தமர்ந்தருளிநாளும்
பன்னிய பாடலினா னுறைகோயில் பாதாளே.

Koviloor Digital Library

பன்மலர் வைகுபொழில் புடைசூழ்ந்த பாதாளேச்சரப்
பொன்னியன் மாடமல்கு புகலி நகர்மன்னன்
தன்னெறியிக் குயர்ந்ததமிழ் ஞானசம் பந்தன்சொன்ன
வின்னிசை பத்தும்வல்லா ரொழில்வானத் திருப்பாரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-சர்ப்பபுரேசர். தேவியார்-அமிர்தநாயகியம்மை.

மலைவளர்சந் தனமகிலுந் தேக்குமுந்தி மலர்ப்பிறங்கல் வண்டிரைப்பச் சுமந்துபொங்கி, யலைபெருகி யாளியங்கா வண்ணமாறு பெருகுதலா லத்துறையி லணையுமோட, நிலைபுரியு மோடக்கோ னிலையிலாமை நீர்வாழ்நர் கரையின்க ணிறுத்திப்போகக்,கலைபயிலுங் கவுணியர்கோ னதனைக்கண்டக் கரையின்க ணெழுந்தருளி நின்றகாலை.


(இ-ள்.) மலைவளர்சந்தனம் அகிலும் தேக்கும் உந்தி=மலையின்கண் வளருஞ் சந்தனமரங்களையு மகில்மரங்களையுந் தேக்கமரங்களையுந் (திரைக்கரத்தால் முன்செல்லத்) தள்ளிக்கொண்டு ; மலர்ப்பிறங்கல் வண்டு இரைப்பச் சுமந்துபொங்கி=மலர்களாகிய மலைகளை வண்டுகள் ஒலிக்கும்படித் தன்மேல் தாங்கிக்கொண்டு பொங்கி ; அலைபெருகி ஆள் இயங்காவண்ணம் ஆறுபெருகுதலால்=அலைகளை வீசி ஆள்கள் போக்குவரவுசெய்யாமல் காவிரியின் கிளையாகிய குடமுருட்டி நதிபெருகிவருதலால் ; அத்துறையில் அணையும் ஓடம்=அக்கரையிலிருக்கும் ஓடங்களை ; நிலைபுரியும் ஓடக்கோல் நிலையிலாமை நீர்வாழ்நர்கரையின்கண் நிறுத்திப்போக=(ஓடம் விடுங்கால்) நிலைத்திருக்குமோடக்கோல்கள் பெருக்குமிகுதியால் நிலையாமையால் ஓடக்காரர்கள் ஓடங்களைக்கரையில் நிறுத்திப்போக : கலைபயிலும் கவுணியர்கோன் அதனைக்கண்டு அக்கரையின்கண் எழுந்தருளி நின்ற காலை=வேதாகமமுதலிய நூல்களை யோதாதுணர்ந்த ஆளுடையபிள்ளையாரதனைப்பார்த் தக்கரையின்கண் நின்றகாலத்து.—எ-று. (அகள)

வேறு.

தேவர்பிரா னமர்ந்ததிருக் கொள்ளம்பூதூ ரெதிர்தோன்றத் திருவுள்ளம் பணியச்சென்று, மேவுதலா லோடங்கள் விடுவாரின்றி யொழிந்திடவு மிக்கதோர் விரைவாற்சண்பைக், காவலனா ரோடந் தின் கட்டவிழ்த்துக் கண்ணுதலான் றிருந்தொண்டர் தம்மையேற்றி, நாவலமே கோலாக வதன்மேனின்று நம்பர்தமைக் கொட்டமென நவின்றுபாட.

(இ-ள்.) தேவர்பிரான் அமர்ந்ததிருக்கொள்ளம் பூதூர் எதிர்தோன்ற=தேவர்கட்கு முதல்வராகிய வில்வவன நாதரெழுந்தருளிய திருக்கொ

Koviloor Digital Library



திருஞானசம்பந்தசுவாமிகள் மதுரையில் சமணரை வென்று விபூதிபரவச்செய்து சோழநாட்டிற் கெழுந்தருளுகையில் திருக்கொள்ளம் பூதூரில் நதிபெருகக்கண்டு (கசு000) சிவனடியாருடன் தாமும் ஓடத்திலெழுந்தருளி அக்கரைசென்றது.

Koviloor Digital Library

ள்ளம் பூதூரென்னுந் திருப்பதியெதிரில் தோன்ற; திருவுள்ளம் பணியச் சென்று மேவுதலால்=திருவுள்ளத்தில் வணங்கவேண்டுமென்னும் விருப்பு சென்றடைதலினால்; ஓடங்கள் விடுவாரின்றி ஒழிந்திடவும் = ஓடங்களைச் செலுத்துவோர் அங்கொருவருமில்லாம லொழியவும்; மிக்க தோர்வினைவால் சண்பைக்காவலனுர் ஓடத்தின் கட்டவிழ்த்து=மிக்கவினைவினால் சீகாழித்தலை வராகிய ஆளுடையபிள்ளையார் ஓடத்தின்கட்டினையவிழ்த்து; சுண்ணுதலான் திருத்தொண்டர் தம்மையேற்றி = சிவபெருமானது அடியார் திருக்கூட்டங் களை யவ்வோடத்திலேற்றி; நாவலமே கோலாக அதன்மேல் நின்று நம்பர் தமைக் கொட்டமென நவின்றுபாடி=வில்வவனேசனைக் "கொட்டம்" என முதலெடுத்துப்பாடி யருளா.எ-று. (அகூஅ)

உம்பருய்ய நஞ்சுண்டா ரருளாலோடஞ் செலச்செல்ல வுந்துத லா லூடுசென்று, செம்பொனேர் சடையார்தங் கொள்ளம் பூதூர் தனைச்சேர வக்கரையிற் சேர்ந்தபின்பு, நம்பரவர் தமைவணங்க ஞா னமுண்ட பிள்ளையார் நற்றொண்ட ருடனிழிந்து, வம்பலரு நறுங் கொன்றை நயந்தார்கோயில் வாயிலின்முன் மகிழ்ச்சியொடு வந்து சார்ந்தார்.

(இ-ள்.) உம்பர்உய்ய நஞ்சு உண்டார் அருளால் ஓடம் செலச்செல்ல உந்துதலால்=ஓடம் அக்கரைசெல்லும்படி ஆற்றுநீர் இடங்கொடுத்துத் தள் ளுதலினால்; ஊடுசென்று செம்பொன் நேர்சடையார்தம் கொள்ளம் பூதூர் தனைச்சேர=அதன்நடுவேசென்று சிவந்தபொன்போலுஞ் சடையையுடைய வில்வவன நாதரெழுந்தருளிய கொள்ளம் பூதூரையடைய (ஓடமக்கரையிற் சேர்ந்தபின்பு); நம்பரவர்தமைவணங்க ஞானம் உண்ட பிள்ளையார் நற்றொ ண்டருடன் இழிந்து=சிவபெருமானை வணங்கும்படி சிவஞானத்தையுண்ட ஆளுடையபிள்ளையார் நல்ல அடியார் கூட்டத்துடன் ஓடத்தினின் றிழிந்த ருளி; வம்பு அலரும் நறும்கொன்றை நயந்தார் கோயில்வாயிலின் முன்மகி ழ்ச்சியொடு வந்துசார்ந்தார்=வாசனையோடு மலர்ந்த நறுமணம்பொருந்திய கொன்றைமாலையை யணிந்த பெருமானுர் திருக்கோயில் வாயிலில் முன்பு மகிழ்ச்சியோடு வந்து சேர்ந்தருளினுர்.—எ-று. (அகூகூ)

திருக்கொள்ளம்பூதூர்-ஈரடிமேல்வைப்பு-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

கொட்டமேகமழுங் கொள்ளம்பூதூர்
நட்டமாடிய நம்பனையுள்கச்
செல்லவுந்துக சிந்தையார்தொழ
நல்குமாறரு ளம்பனே. (க)

Koviloor Digital Library

கோட்டகக்கழனிக் கொள்ளம்பூதூர்
நாட்டகத்துறை நம்பனையுள்கச்
செல்லவுந்துக சிந்தையார்தொழ
நல்குமாறரு ணம்பனே. (உ)

குலையினார்தெங்குசூழ் கொள்ளம்பூதூர்
விலையிலாட்கொண்ட விகிர்தனையுள்கச்
செல்லவுந்துக சிந்தையார்தொழ
நல்குமாறரு ணம்பனே. (ந)

குவளைகண்மலருங் கொள்ளம்பூதூர்த்
தவளநீறணி தலைவனையுள்கச்
செல்லவுந்துக சிந்தையார்தொழ
நல்குமாறரு ணம்பனே. (ச)

கொன்றைபொன்சொரியுங் கொள்ளம்பூதூர்
நின்றபுன்சடை நிமலனையுள்கச்
செல்லவுந்துக சிந்தையார்தொழ
நல்குமாறரு ணம்பனே. (ரு)

ஓடம்வந்தணையுங் கொள்ளம்பூதூ
ராடல்பேணிய வடிகளையுள்கச்
செல்லவுந்துக சிந்தையார்தொழ
நல்குமாறரு ணம்பனே. (சு)

ஆறுவந்தணையுங் கொள்ளம்பூதூ
ரேறுதாங்கிய விறைவனையுள்கச்
செல்லவுந்துக சிந்தையார்தொழ
நல்குமாறரு ணம்பனே. (எ)

குரக்கினம்பயிலுங் கொள்ளம்பூதூ
ரரக்கனைச்செற்ற வாதியையுள்கச்
செல்லவுந்துக சிந்தையார்தொழ
நல்குமாறரு ணம்பனே. (அ)

பருவராலுகளுங் கொள்ளம்பூதூ
ரிருவர்காண்பரியான் கழலுள்கச்
செல்லவுந்துக சிந்தையார்தொழ
நல்குமாறரு ணம்பனே. (கூ)

Koviloor Digital Library

நீரகக்கழனிக் கொள்ளம்பூதூர்த்
தோமண்செற்ற செல்வனையுள்கச்
செல்லவுந்துக சிந்தையார்தொழ
நல்குமாறரு ணம்பனே. (ம)

கொன்றைசேர்சடையான் கொள்ளம்பூதூர்
நன்றுகாழியுண் ஞானசம்பந்த
னின்றுசொன்மாலைகொண் டேத்தவல்லார்போ
யென்றும்வானவரோ டிருப்பாரே. (மக)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-வில்வவனநாதர். தேவியார்-சவுந்தரநாயகியம்மை.

நீணிலைக்கோ புரமதனை யிறைஞ்சிப்புக்கு நிகரிலாத் தொண்டருடனெருங்கச்சென்று, வாணிலவு கோயிலினை வலங்கொண்டெய்தி மதிச்சடையார் திருமுன்பு வணங்கிநின்று, தாணுவே யாற்றின்கண்ணோடமுய்க்குந் தன்மையா லருடந்த தலைவாநாகப், பூணிணய் களிற்றுரிவை போர்த்தமுக்கட் புனிதனே யெனப்பணிந்து போற்றிசெய்தார்.

(இ-ள்.) நீள் நிலைக்கோபுரமதனை இறைஞ்சிப்புக்கு=நீண்டநிலைகளையுடைய திருக்கோபுரத்தை வணங்கி யுள்ளேபுகுந்து; நிகரிலாத்தொண்டருடன் நெருங்கச்சென்று=ஒப்பில்லாத திருவடியார் கூட்டத்தோடு விரவிச்சென்று; வாள்நிலவு கோயிலினை வலங்கொண்டெய்தி = ஒளிபொருந்திய திருக்கோயிலை வலமாகவந்து; மதிச்சடையார் திருமுன்பு வணங்கிநின்று= இளம்பிறையை யணிந்த வில்வவன நாதர் சந்நிதியில் வணங்கிநின்று; தாணுவே ஆற்றின்கண் ஓடம் உயக்குந்தன்மையால் அருள்தந்ததலைவா=சலியாநிலைமையை யுடையவரே ஆற்றுப்பெருக்கி லோடத்தை நடத்துவிக்குந்தன்மையாற் றிருவருளைத் தந்ததலைவனே; நாகப்பூணிணய் களிற்றுரிவை போர்த்தமுக்கட் புனிதனே எனப்பணிந்து போற்றிசெய்தார்=சர்ப்பத்தை யாபரணமாகவுடையவரே யானையினது தோலைப்போர்த்தருளிய மூன்றுகண்ணையுடைய பரிசுத்தரேயென்று வணங்கித் துதித்தருளினார்.—எ-று. (கூ00)

போற்றிசைத்துப் புறம்போந்தங் குறையுநாளிற் பூழியன்முன் புன்சமயத் தமணர்தம்மோ, டேற்றபெற்ற வாதின்கணெரியின்வேவாப் பதிகமுடை யிறையவரை யிறைஞ்சவேண்டி, யாற்றவுமங் கருள்பெற்றுப் போந்துமுன்ன மணைந்தபதி களுமிறைஞ்சி யன்பர்சூழ, நாற்றிசையும் பரவுதிரு நள்ளாறெய்தி நாடுடைநா யகர்கோயி லணைந்தணிறோ.

Koviloor Digital Library

(இ-ள்.) போற்றிசைத்துப் புறம்போந்து அங்கு உறையும்நாளில்= பதிகம்பாடிப் புறம்பேயெழுந்தருளி அத்திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் நாளில்; பூழியன்முன் புன்சமயத்து அமணர் தம்மோடு=பாண்டியன்முன்பு புல்லியகொள்கையையுடைய சமணர்களோடு; ஏற்ற பெருவாதின்கண் எரியில்லேவாப்பதிகமுடை இறையவரை இறைஞ்சவேண்டி=எதிர்த்த பெரிய வாதில் வேகாத திருப்பதிகத்தையுடைய நள்ளாற்றீசரை வணங்கவிரும்பி; ஆற்றவும் அந்த அருள்பெற்றுப் போந்து=மிகவும் வில்லவனேசரது திருவருளை அன்றுப்பெற்று அங்குநின்று மெழுந்தருளி; முன்னம் அணைந்த பதிகளும் இறைஞ்சி அன்பர் சூழ = முற்பட்ட திருப்பதிகளையும் வணங்கி அடியார்கள் சூழும்படி; நாற்றிசையும் பரவு திருநள்ளாறெய்தி நாடுடை நாயகர் கோயில் நண்ணினார்=நான்கு திசைக்க ளுள்ளாருந் துதிக்குந் திருநள்ளாற்றை யடைந்து நாடுடை நாயகரென்னுந் திருநாமத்தையுடைய பெருமானார் திருக்கோயிலையடைந்தருளினார்.—எ-று.

நாடுடை நாயகரென்னுந் திருநாமம் "நாடுடைய நம்பெருமானமே யது நள்ளாறே" என்னுந் தேவாரத்தா லுணர்க. (௧௦௧)

நீடுதிருத் தொண்டர்புடை சூழவங்க ணித்திலயா னத்திடை நின்றிழிந்துசென்று, பீடுடைய திருவாயில் பணிந்துபுக்குப் பிறையணிந்த சென்னியார் மன்னுங்கோயில், மாடுவலங் கொண்டுள்ளான் மகிழ்ந்துபுக்கு மலர்க்கரங்கள் குவித்திறைஞ்சி வள்ளலாரைப், பாடகமெல் லடியெடுத்துப் பாடிநின்று பரவினார் கண்ணருவி பரந்து பாய.

(இ-ள்.) நீடு திருத்தொண்டர் புடைசூழ அங்கண் நித்திலயானத்திடை நின்று இழிந்துசென்று=மிக்கதிருத்தொண்டர்கள் அருகிற் சூழ்ந்துவர அவ்விடத்து முத்துச்சிவிகையினின்று மிறங்கி யெழுந்தருளி; பீடு உடையதிருவாயில் பணிந்து புக்கு=பெருமைபொருந்திய திருவாயிலை வணங்கி யுள்ளேபுகுந்து; பிறைஅணிந்த சென்னியார்மன்னும் கோயில்மாடு=மூன்றும்பிறையை யணிந்த சடாமுடியையுடைய நள்ளாற்றீசரெழுந்தருளிய ஆலயத்தின்பக்கத்தில்; வலங்கொண்டு உள்ளால் மகிழ்ந்துபுக்கு = பிரதட்சணஞ்செய்து உள்ளே மகிழ்ச்சியோடெழுந்தருளி; மலர்க்கரங்கள்குவித்து இறைஞ்சி = தாமரைமலர்போலுந் திருக்கரங்களைச் சிரசின்மேற் கூப்பி வணங்கி; வள்ளலாரைப் பாடகமெல்லடியெடுத்துப் பாடிநின்று பரவினார் கண்ணருவி பரந்துபாய=தேற்பாரணிசரைப் "பாடகமெல்லடி" எனமுதலெடுத்துத் திருப்பதிகம்பாடி நின்று துதித்தார் கண்களினின்று மானந்த அருவிபரவிப் பாய.—எ-று. (௧௦௨)

தென்னவர்கோன் முன்னமணர் செய்தவாதிற் றீயின்க ணிடுமேடு பச்சையாக்கி, மென்னுள்ளத் துணைபாகி யாலவாயி லமர்ந்திருந்த வாறென்கொ லெந்தாயென்று, பன்னுதமிழ்த் தொடைசாத்

Koviloor Digital Library

திப் பரவிப்போந்து பண்பினிய தொண்டருட னங்குலவகி, மன்னு புகழ்ப் பதிபிறவும் வணங்கச்சண்பை வள்ளலார் நள்ளாறு வணங்கிச்செல்வார்.

(இ-ள்.) தென்னவர்கோன் முன் அமணர் செய்தவாதில்=பாண்டிய ராசன் முன் சமணர்கள்செய்த வாதிலே; தீயின்கண் இடும் ஏடுபச்சையாக்கி=நெருப்பிலிட்ட திருவேட்டை நெருப்பில் வேவாது பச்சென்றிருக்கச் செய்து; என் உள்ளத் துணையாகி ஆலவாயில்=என்றுயிர்த்துணையாகித் திருவாலவாயின்கண்; அமர்ந்து இருந்தவாறு என்கொல் எந்தாயென்று=எழுந்தருளி யிருந்தவண்ணம் யாது எனது தந்தாயென்று; பன்னுதமிழ்த்தொடைசாத்தி=அருளிய தமிழ்ப்பதிக மாலையைச்சாத்தி; பரவிப்போந்து பண்பினிய தொண்டருடன் அங்குலவகி=துதித்துப் புறம்பே யெழுந்தருளி நற்குணங்களையுடைய அடியார் திருக்கூட்டங்களோடு அத்திருப்பதியி லெழுந்தருளி; மன்னுபுகழ்ப் பிறபதியும் வணங்க=நிலைபெற்ற புகழமைந்த மற்ற திருப்பதிகளையும் வணங்கும்பொருட்டு; சண்பை வள்ளலார் நள்ளாறுவணங்கிச்செல்வார் =சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார் திருநள்ளாற்றைவணங்கிச்செல்வாராயினர்.—எ-று. (கூ0ரு)

சீர்நிலவு திருத்தெளிச்சே ரியினைச்சேர்ந்து சிவபெருமான் றனைப்பரவிச் செல்லும்போது, சார்வறியாச் சாக்கியர்தம் போதிமங்கை சார்தலுமற் றதுவறிந்த சைவரெல்லா, மார்கலியின் கிளர்ச்சியெனச் சங்குதாரை யளவிறந்த பல்லியங்கண் முழங்கியார்த்துப், பார்குலவு தனிக்காளஞ் சின்னமெல்லாம் பரசமய கோளரிவந் தானென்றூத.

(இ-ள்.) சீர்நிலவு திருத்தெளிச் சேரியினைச்சேர்ந்து = செல்வங்கள் நிறைந்த திருத்தெளிச்சேரி யென்னுந் திருப்பதியையடைந்து; சிவபெருமான் தனைப் பரவிச்செல்லும்போது=பார்வதிசமே வணங்கிச்செல்லுங்காலத்தில்; சார்வு அறியாச்சாக்கியர் தம்போதிமங்கை சார்தலும்=தமக்கோர் நற்சார்வறியாத புத்தர்கள் வாழும்போதி மங்கையென்னு மூரானது சமீபிக்கவும்; அது அறிந்த சைவரெல்லாம்=அதனையுணர்ந்த சைவர்களெல்லாரும்; ஆர்கலியின் கிளர்ச்சியெனச் சங்குதாரை அளவிறந்த பல்லியங்கள் முழங்கியார்த்து=சமுத்திரத்தின் எழுச்சிபோலச் சங்குகளையுந் தாரைகளையு மளவில்லாத பலவாத்தியங்களையு முழக்கி யாரவாரித்து; பார்குலவு தனிக்காளம் சின்னமெல்லாம் பரமசமய கோளரிவந்தானென்று ஊத = உலகில்விளங்கு மொப்பற்ற காளஞ் சின்னந் தாரை யெல்லாவற்றையும் பரசமயகோளரி வந்தானென் றூதாநிற்க.—எ-று. (கூ0ச)

புல்லறிவிற் சாக்கியர்க ளறிந்தார்கூடிப் புகலியர்தம் புரவலனார் புகுந்துதங்க, ளெல்லையினி லெழுந்தருளும் பொழுதுநொண்ட ரெடுத்தவார்ப் பொலியாலு மெதிர்முன்சென்று, மல்கியெழுந் திருச்சி

Koviloor Digital Library

ன்ன வொலிகளாலு மனங்கொண்ட பொறாமையினான் மருண்டுதங்கள், கல்வியினின் மேம்பட்ட புத்தநந்தி முதலானதேரர்க்குங் கனன்றுசொன்னார்.

(இ-ள்.) புல்லறிவிற் சாக்கியர்கள் அறிந்தார்கூடி = அற்ப அறிவையுடைய பௌத்தர்கள் அதனையுணர்ந்தவர்களா யொருங்குசேர்ந்து ; புகலியர் தம்புரவலனார் புகுந்து தங்கள் எல்லையினில் எழுந்தருளும்பொழுது = சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார் வந்து தங்களெல்லையி லெழுந்தருளுங்காலத்து ; தொண்டர் எடுத்த ஆர்ப்பொலியாலும் = தொண்டர்களார வென்றெடுத்த ஆரவாரத்தாலும் ; எதிர்முன்சென்று மல்கியெழுந் திருச்சின்னவொலிகளாலும் = தம்மெதிரேமுன்னடைந்து நிறைந்தெழுந்ததிருச்சின்னங்களி னாரவாரத்தாலும் ; மனங்கொண்ட பொறாமையினால் மருண்டு = மனத்திற்கொண்ட பொறாமை காரணமாக மயங்கி ; தங்கள்கல்வியினின் மேம்பட்ட புத்தநந்தி முதலானதேரர்க்குக் கனன்று சொன்னார் = தங்கள் பிடக நூலி னுணர்ச்சியில் மிக்கபுத்த நந்திமுதலிய புத்தர்களுக்குங் கோபித்துச் சொன்னார்கள்.—எ-று. (௧௦௫)

மற்றவர்கள் வெவ்வுரையும் பிள்ளையார்முன் வருசின்னப் பெருகொலியு மன்னுந்தொண்டர், பொற்புடைய வார்ப்பொலியுஞ் செவியிறும் புடைத்தநா ராசமெனப் புக்கபோது, செற்றமிகு முள்ளத்துப் புத்தநந்தி செயிர்த்தெழுந்து தேரர்குழாஞ் சூழச்சென்று, வெற்றிபுனை சின்னங்கள் வாதிலெம்மை வென்றன்றோ பிடிப்பதென வெகுண்டுசொன்னான்.

(இ-ள்.) மற்றவர்கள் வெவ்வுரையும் = புத்தர்கள்கோபித்துக் கூறுங் கடுஞ்சொல்லும் ; பிள்ளையார் முன்வரு சின்னப்பெருகு ஒலியும் = ஆளுடைய பிள்ளையார் முன்பு ஊதிவருகின்ற சின்னங்களின் மிக்கவொலியும்; மன்னும் தொண்டர் பொற்புடைய ஆர்ப்பு ஒலியும் = நிலைபெற்ற அடியார்கள் அர வென வெடுத்தாரவாரிக்கு மோசையும் ; செவியிறும்புடைத்த நாராசமெனப்புக்கபோது = காதினிடத்துக் (காய்ச்சியடித்த) நாராசம்போலச் சென்றகாலத்து; செற்றமிகு உள்ளத்துப் புத்தநந்தி செயிர்த்து எழுந்துதேரர் குழாம் சூழச்சென்று = கோபமிக்க மனநினைவுடைய புத்தநந்தியென்பவன் கோபித்தெழுந்து புத்தர்கூட்ட முஞ்சூழப்போய்; வெற்றிபுனை சின்னங்கள் வாதில் எம்மைவென்று அன்றோ பிடிப்பதென வெகுண்டுசொன்னான் = வெற்றிபொருந்திய சின்னங்களை நீவிர்வாதி லெம்மைவென்ற பின்னன்றோபிடித்துச்செல்வதென்று கோபித்துச்சொன்னான்.—எ-று. (௧௦௬)

புத்தரினம் புடைசூழப் புத்தநந்தி பொருவில்ஞா னப்புனிதர் திருமுன்பூது, மெய்த்தவிறற் சின்னங்கள் விலக்குங்காலை வெகுண் டெழுந்த திருத்தொண்டர் வேறுநோக்கி, யித்தகைய செயற்றிவனைத்

Koviloor Digital Library

தடிதல்செய்யா திதுபொறுக்கிற் றங்கணிலை யேற்பவொன்று, முத்து நிரைச் சிவிகையின்மேன் மணியைவந்து முறைபணிந்து புகுந்தபடி மொழிந்துநின்றார்.

(இ-ள்.) புத்தரினம் புடைசூழப் புத்தநந்தி=புத்தர்குழாங்கள் தன் பக்கத்திற் சூழும்படிப் புத்தநந்தியென்பவன்; பொருவில் ஞானப்புனிதர் திருமுன்பு ஊதும் மெய்த்தவிறற் சின்னங்கள் விலக்குங்காலை=ஒப்பில்லாத திருஞான சம்பந்தப்பெருமான் திருமுன் பூதுகின்ற மெய்ம்மையான வெற்றியையுடைய திருச்சின்னங்களைத் தடுக்குங்காலையில்; வெகுண்டு எழுந்த திருத்தொண்டர் வேறு நோக்கி = அவனைக்கோபித்தெழுந்த சிவனடியார்கள் வேறோருபாயத்தைத் தம்மனதிற்கருதி; இத்தகைய செயற்கு இவரைத் தடிதல் செய்யாது இதுபொறுக்கில் தங்கள் நிலை ஏற்பவொன்று = இத்தன்மையான கொடுஞ் செயலுக் கிவர்களைக் கொல்லாதிதனைப் பொறுத்தால் தங்கள் நிலைமையை மேற்கொள்வாரொன்று; முத்துநிரைச் சிவிகையின்மேல் மணியைவந்து முறைபணிந்து புகுந்தபடி மொழிந்து நின்றார்=முத்தின் வரிசைகளாலாய திருச்சிவிகையின் மேலெழுந்தருளியிருந்த மாமணிபோலும் ஆளுடையபிள்ளையாரை யடைந்து முறையேவணங்கி நிகழ்ந்த செய்கையை விண்ணப்பஞ்செய்து நின்றார்கள்.—எ-று. (௯௦௭)

வருமிடத்தி லழகிதா நமக்குவாதின் மற்றிவர்தம் பொருணிலைமை மறாதவண்ணம், பொருமிடத்திலறிகின்றோம் புத்தநந்தி பொய் மேற்கோளெனப்புகலி வேந்தர்கூற, வருமுறைசொற் றிருப்பதிக மெழுதுமன்ப ராளுடைய பிள்ளையார் திருவாக்காலே, யுருமிடித்து விழப்புத்தனுத்தமாங்க முருண்டுவீழ் கெனப்பொறா வுரைமுன்விட்டார்.

(இ-ள்.) வரும் இடத்தில் அழகு இதாம் நமக்கு = நாம் வருமிடத்திலிது அழகாகவிருந்தது; புத்தநந்திபொய்மேற்கோள் இவர் தம்பொருள் நிலைமைமறாதவண்ணம்=புத்தநந்திகூறும் பொய்மேற்கோளாகிய இப்பௌத்தர்களது பொருணிலைமையானது மறுக்கப்படாதிருத்தலை; பொருமிடத்தில் அறிகின்றோம் எனப்புகலி வேந்தர்கூற=வாதுசெய்யுமிடத்து அறிவோமென்று அவ்வடியார்களுக்குச் சீகாழித்தலைவராகிய பிள்ளையார் கூறியருள; அருமுறைசொல் திருப்பதிகம் எழுதும் அன்பர்=அரியமுறையாகப் பிள்ளையாரருளிய திருப்பதிகங்களை யெழுதுமடியாரானவர்; ஆளுடையபிள்ளையார் திருவாக்காலே=ஆளுடையபிள்ளையாரருளிச்செய்த தேவாரத்திருவாக்கால்; உருமு இடித்து விழப்புத்தன் உத்தமாங்கம் உருண்டுவீழ்கெனப் பொறாவுரை முன்விட்டார்=இடியிடித்து விழுதலால் இப்புத்தனுடைய தலையுருண்டு விழக்கடவதென்று தம்மனஞ்சகியாமல் கோபவாக்கை முன்விட்டருளினார்.—எ-று.

Koviloor Digital Library

புத்தநந்திபொய்மேற் கோளாகிய பொருளின்மையெனக்கூட்டுக.
தவனை நாடி வாதுசெய்து வெல்வது நம்மியல்பாகவு மவ்வாறன்றி
யவர்களோ வருமிடத்து வாதுசெய்ய வருதலில் மெச்சமுகாயிற்றென்றாராயி
ற்று. ஞானமும் நேசமுமாய்க் கணத்திற் பங்கப்படுமெல்லாப் பொருளு
மெனக்கூறுமவர் பொருளின்மையைப் பொய்மேற்கோளென்றார். (௯௦௮)

ஏறுயர்த்தார் சைவநெறி யாணையுய்க்க வெதிர்விலக்கு மிடை
யூற்றை யெறிந்துநீக்கு, மாறில்வலி மந்திரமா மசனிபோல வாய்
மையுடைத் திருத்தொண்டர் வாக்கினாலே, வேறுமொழிப் போரேற்
பான் வந்தபுத்தன் மேனியையுந் தலையினையும் வெவ்வேறாகக், கூறு
பட நூறியிடப் புத்தர்கூட்டங் குலைந்தோடி விழுந்துவெருக் கொ
ண்டதன்றே.

(இ-ள்.) ஏறு உயர்த்தார் சைவநெறி ஆணையுய்க்க = இடபக்கொடி
யையுயர்த்த சிவபெருமானுடைய சைவமார்க்கத்திருவாணையை யுலகெங்கும்
நடத்த; எதிர்விலக்கும் இடையூற்றை எறிந்து நீக்கும் = எதிர்வந்தடையு
மிடையூறுகளை வேரறக்களைந்து நீக்கும்; மாறில் வலிமந்திரமாம் அசனி
போல வாய்மையுடைத்திருத்தொண்டர் வாக்கினாலே=ஒப்பில்லாத வலிமை
பொருந்திய மந்திரமாகிய இடியைப்போல உண்மைத் திருவாக்காகிய தே
வாரத்தோடுகூடிய சம்பந்த சரணாலயர் திருவாக்கால்; வேறுமொழிப்போர்
ஏற்பான் வந்த புத்தன்மேனியையும் தலையினையும் வெவ்வேறாகக்கூறுபட
நூறிட=மாறுபட்ட மொழியால்போர்செய்யவந்த புத்தனுடைய உடம்
பையுந் தலையையுந் தனித்தனி கூறாகும்படி சிதைக்க; புத்தர் கூட்டம் குலை
ந்து ஓடிவிழுந்து வெருக்கொண்டதன்றே=அவனுடன்வந்தபுத்தர் கூட்டம்
நிலைகுலைந்தோடி விழுந்தச்சங்கொண்டது.—எ-று. (௯௦௯)

மற்றவர்க ணிலைமையையும் புத்தநந்தி வாக்கின்போ ரேற்ற
வன்றன் றலையுமெய்யு, மற்றுவிழ வத்திரவாக் கதனாலன்ப ரறுத்த
துவுங் கண்டவர வடியாரெல்லாம், வெற்றிதரும் பிள்ளையார் தமக்கு
ச்சென்று விண்ணப்பஞ் செயவெதிர்ந்த விலக்குநீங்க, வுற்றவிதி
யதுவேயாமர வென்றெல்லா மோதுமென வல்லொலிவா னுற்ற
தன்றே.

(இ-ள்.) மற்றவர்கள் நிலைமையையும்=(அச்சமுற்றோடிய) பௌத்த
ரது நிலைமையையும்; புத்தநந்திவாக்கின்போர் ஏற்றவன் தன்தலையும் மெய்
யும் அற்றுவிழ=புத்தநந்தியென்றும் வாதுசெய்யவந்தவனுடைய சிரமும் உட
லுஞ் சிதறிவிழும்படி; அத்திரவாக்கதனால் அன்பர் அறுத்ததுவும்=பஞ்சாக்
கரத்திருப்பதிகத்துப் பத்தாவது பாடலில் "அத்திரமாவன வஞ்செழுத்து
மே" என்றத் திருவாக்கால் திருமுறையெழுதும் அவ்வடியார் சிதைத்ததையும்
பார்த்த அவ்வடியார்களெல்லாம்; வெற்றிதரும் பிள்ளையார் தமக்குச்சென்று

Koviloor Digital Library

விண்ணப்பஞ்செய = வெற்றியையுடைய பிள்ளையாரிடத்து நிகழ்ந்தவாறு விண்ணப்பஞ்செய்துகொள்ள; எதிர்ந்த விலக்கு நீங்க உற்றவிதி அதுவேயாம்=அவன் நம்மிடத்தெதிர்தலாலாய குற்றம் நீங்கும்படி பொருந்திய விதியவ்வாறுதலேயாம்; அரவென்று எல்லாம் ஓதுமென அவ்வொலிவான் உற்றதன்றே=அதனால் அரகரவென்றெல்லாருஞ் சொல்லுங்களென்று கூறியருள வவ்வோசை விண்ணுலகளவுஞ் சென்றது.—எ-று. (௯௱௰)

திருச்சிற்றம்பலம்.

புத்தர்சமண்கழுக் கையர்பொய்கொளாச்
சித்தத்தவர்க டெளிந்துதேறின
வித்தகநீறணி வார்வினைப்பகைக்
கத்திரமாவன வஞ்செழுத்துமே.

திருச்சிற்றம்பலம்.

அஞ்சியகன் றோடியவப் புத்தரெல்லா மதிசயித்து மீண்டுமுட னணைந்துகூடி, வஞ்சனையோ விதுதான்மற் றவர்தஞ்சைவ வாய்மையோ வெனமருண்டு மனத்திற்கொள்வா, ரெஞ்சலின் மந்திரவாத மன்றியெம்மோ டெதிர்ந்து பொருட் பேசுவதற் கிசைவதென்று, தஞ்செயலின் மிக்குள்ள சாரிபுத்தன் றன்னையே முன்கொண்டு பின்னுஞ்சார்ந்தார்.

(இ-ள்.) அஞ்சி அகன்று ஓடிய அப்புத்தரெல்லாம் அதிசயித்து மீண்டும் உடன் அணைந்து கூடி=பயந்து அங்குநின்று மோடிய வப்புத்தர்களெல்லாமாச்சரியமடைந்து மீளவு மொருங்குவந்துகூடி; வஞ்சனையோ இதுதான் மற்றவர் தம்சைவவாய்மையோ என மருண்டு மனத்திற்கொள்வார் = புத்தநந்தி இறந்தவிது மாயமோ அல்லது அவர்களது சைவத்தின் மெய்ம்மையோவென மயங்கித் தம்மனத்திற்கொள்வாராய்; எஞ்சலில் மந்திரவாதம் அன்றி எம்மோடு எதிர்ந்து பொருட்பேசுவதற்கு இசைவதென்று = குறைவில்லாத மந்திரவாதமில்லாம லெம்முடனெதிர்த்துப் பொருளினுண்மையை வாதுபேசுவதற்கு வருகவென்று; தம்செயலின் மிக்கு உள்ள சாரிபுத்தன் தன்னையே முன்கொண்டு பின்னும் சார்ந்தார்=தமது சமயக்கொள்கையில் மிக்கவுணர்ச்சியுள்ள சாரிபுத்தனைத் தமக்கு முன்னே கொண்டு பின் (வாதுசெய்ய) வந்தார்கள்.—எ-று. (௯௱௰௧)

அந்தன்மை கேட்டருளிச் சண்பைவந்த வடலேறு திருவுள்ளத்தழகிதென்று, மெத்தமகிழ்ச்சியினோடும் விரைந்துசென்றுவெண்டரளச் சிவிகையினின்றிழிந்து வேறோர், சந்திரமண்டபத்தின்மிசை

Koviloor Digital Library

பேறிகடிசை வருட னெழுந்தருளி யிருந்துசாரும், புத்தர்களை யழைக்கவெனத் திருமுன்னின்றார் புகலிகாவலரேவல் போற்றிச்சென்றார்.

(இ-ள்.) அத்தன்மைகேட்டருளிச் சண்பைவந்த அடல் ஏறு திருவுள்ளத்து அழகு இதென்று=அவர்கள் வாதுசெய்யவந்தமையைக்கேட்டருளிச் சீகாழியிலவதரித்த சிங்கவேறுபோன்ற ஆளுடையபிள்ளையார் இது அழகாயிருந்ததென்று திருவுள்ளத்திற்கொண்டு; மெத்த மகிழ்ச்சியினோடும் விரைந்து சென்று=மிக்கமகிழ்ச்சியோடு விரைந்துபோய்; வெண்தரளச்சிவிகையினின்று இழிந்து=வெள்ளியமுத்துச்சிவிகையினின்று மிறங்கியருளி; வேறு ஓர் சத்திரமண்டபத்தின் மிசை ஏறி=அங்குள்ள வேறொரு சத்திரமண்டபத்தின்மேலேறியருளி; நீடிசைவருடன் எழுந்தருளி இருந்து=மிக்க அடியார்கூட்டத்தோடு எழுந்தருளியிருந்து; சாரும்புத்தர்களை அழைக்க என=வாதுசெய்யவந்த புத்தர்களையழைக்கக்கடவிரென்று கூறியருள; திருமுன் நின்றார் புகலிகாவலர் ஏவல்போற்றிச் சென்றார்=அவர் திரு முன்னின்றசிவனடியார்கள் ஆளுடையபிள்ளையார் பணிவிடையைச் சிரமேற்கொண்டு சென்றார்கள்.—எ-று. (௬௪௨)

சென்றவர்க டேரர்குழா மணைந்துநீங்கள் செப்பிவரும் பொருணிலைமை தெரிக்கவெங்கள், வென்றிமழ விளங்களிறு சண்பையாளி வேதபாரகன் மும்மைத் தமிழின்வேந்த, னன்றுமகிழ்ந் தழைக்கின்றா னீண்டநீரு நன்றுமெனக் கூறுதலு நன்மைசாராத், தன்றகைமைப் புத்தருடன் சாரிபுத்தன் சத்திரமண்டபமுன்பு சாரவந்தான்.

(இ-ள்.) சென்றவர்கள் தேரர்குழாம் அணைந்து=(அவரேவலைத்தலைமேற்கொண்டு) சென்ற அடியார்கள் புத்தர்கூட்டத்தையடைந்து; நீங்கள் செப்பிவரும்பொருள் நிலைமைதெரிக்க=நீவிர்கூறிவருகின்ற பொருளுண்மையை வாதுசெய்ய; எங்கள் வென்றி மழவு இளங்களிறு=பரசமயத்தைவெற்றிகொள்ளுமெங்கள் இளமைபொருந்திய யானைக்கன்று; சண்பையாளி=சீகாழித்தலைவர்; வேதபாரகன்=நான்குவேதங்கள் முடிந்தபொருளின் கரையையடைந்தவன்; மும்மைத் தமிழின்வேந்தன்=முத்தமிழ்வீரகன்; நன்று மகிழ்ந்து அழைக்கின்றான் ஈண்டு நீரும் நன்றுமெனக்கூறுதலும் = (நீவிர் வாதுசெய்யும் வரவை) நன்றென்று மகிழ்ந்து அழைத்தருளுகின்றார் நீவிரெல்லாரு மொருங்கு நெருங்கவாருங்களென்று கூறவும்; நன்மைசாராத்தன் தகைமைப்புத்தருடன் சத்திரமண்டபமுன்பு சாரவந்தான் = நன்மையடையாத தனது கொள்கையையுடைய புத்தர்களோடு சாரிபுத்தனெனவன் சத்திரமண்டபத்து முன்புபொருந்தவந்தான்.—எ-று. (௬௪௩)

அங்கணைந்து மண்டபத்துப் புத்தரோடும் பிள்ளையா ருருகணைய நின்றபோதி, லெங்குநிகழ் திருச்சின்னந் தடுத்தபுத்த னிருஞ்சிரத்தைப்பொடியாக்கு மெதிரிலன்பர், பொங்குபுகழ்ப் புகலிகா வலர்

Koviloor Digital Library

தம்பாதம் போற்றியரு ளாற்சாரி புத்தன்றன்னை, யுங்கடலை வனும் பொருளு முரைக்கவென்ன வுற்றவா தினைமேற்கொண் டுரைசெய்கி ன்றான்.

(இ-ள்.) அங்கணைந்த மண்டபத்துப் புத்தரோடும் பிள்ளையார் அருகு அணைய நின்றபோதில்=சாரிபுத்தன் மண்டபத்துப் புத்தரோடு பிள்ளையார் மருங்கு பொருந்த நின்றபோது; எங்கும் திகழ் திருச்சின்னம் தடுத்த புத்தன்=எவ்விடத்தும் வெற்றிபெற்றுவரும் திருச்சின்னங்களைத்தடுத்த புத்தநந்தியினது; இரும் சிரத்தைப்பொடியாக்கும் எதிரில் அன்பர்=பெரியதலையைச் சிதறச்செய்த ஒப்பற்ற திருமுறையெழுதுந்தொண்டர்; பொங்குபுகழ்ப்புகலிகாவலர் தம்பாதம்போற்றி=நிறைந்தபுகழையுடைய சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார் திருவடிகளைவணங்கி; அருளால் சாரிபுத்தன் தன்னை உங்கள் தலைவனும் பொருளும் உரைக்க என்ன = அவரது திருவருளால் சாரிபுத்தனை நோக்கி யுங்கள் கடவுளையும் (நீவிர் கூறும் பஞ்சகந்தமுதலிய) பொருணிலைமையையும் கூறுகவென்றருள; உற்றவாதினைமேற்கொண்டு உரைசெய்கின்றான்=தாஞ்செய்யவந்த வாதத்தையதிகரித்துச் சொல்லாநின்றான்.—எ-று. (கூகச)

கற்பங்க ளனைத்தினிலும் பிறந்திறந்து கதிமாறுங் கணபங்க வியல்புதன்னிற், பொற்புடைய தானமே தவமேதன்மை புரிந்தநிலை யோகமே பொருந்தச்செய்ய, வுற்பவிக்கு மொழிவின்றி யுரைத்த ஞானத் தொழியாத பேரின்ப முத்திபெற்றான், பற்பலரும் பிழைத் துய்ய வறமுன்சொன்ன பான்மையான் யாங்கடொழும் பரமனென் றான்.

(இ-ள்.) கற்பங்கள் அனைத்தினிலும் பிறந்து விந்துகதிமாறும் கணபங்க இயல்பு தன்னில்=எண்ணிறந்த கற்பங்களிலும் பிறர்க்குறுதி செய்யும் பொருட்டு அளவிறந்த யோனிகளிற் பிறந்திறந்து அக்கதியினின்றுமாறி வீடடையுங் கணபங்க இயல்புகூறும் புத்தமதத்தில்; பொற்புடையதானமே தவமேதன்மை புரிந்தநிலையோகமே பொருந்திச்செய்ய=ஆதிபுத்தன் சிறப்புமிக்கதானம் விரதம் பண்பு மிக்கயோக மிவைகளைத்தான் விரும்பிச் செய்ய; உற்பவிக்கும் ஒழிவின்றி உரைத்தஞானத்து=அதனுலுதிக்கும் நீங்காநிலைமையாற் கூறிய ஞானத்தால்; ஒழியாதபேரின்ப முத்திபெற்றான் = கெடாத பேரின்பத்தைக் கொடுக்குங் கந்தவீட்டை யடைந்தான் (அவனே); பற்பலரும் பிழைத்து உய்ய அறம் முன்சொன்ன பான்மையான் யாங்கள் தொழும் பரமன் என்றான்=தேவர்முதலிய பலரும் பிறவித்துன்பத்தினின்று நீங்கி வீடடையவறத்தைமுன்னே சொன்ன வருளுடையோன் எம்மாற்றொழப்படுங்கடவுளெனக் கூறினான்.—எ-று.

புத்தன் உலும்பினி வனத்திற்பிறக்குங்கால் மாதாவின் வலமருங்குலா னபிறந்து அத்தாயர்க்காறு நாளுயிர் கொடுத்து மரிக்கச்செய்து பிறப்பன். பிறந்தபின் பிறர்க்குறுதிசெய்யும்பொருட்டு எண்ணிறந்த நூறாயிரங் கற்ப மளவிறந்த யோனிகளினும் புகுந்து பிறவுயிர்கட் குறுதிசெய்து மேலக்கதி மாறி வீடடைவன். ஆதலின், கற்பகாலந்தோறும் பிறந்து வீற்று கதிமாறு மென்றும்; ஆறுதாமரை யிதழையுடைத்தி ருசியிட்டுக் குத்திறுலெட்டி தழுவு மெல்லியவாகிய ஓர்கணத்தில் ஞானமும், ஞேயமுமாகிய பொருள்கள் தீபசந் ததிபோலக்கெட்டு மிக்குவருதலேயன்றிக் கெட்டுக் குறைந்துவருதலும், கெட்டொழிந்த நிர்பதும், கெட்டுக்கெட்டுவிடுவதுமென நால்வகையாய்க் கேடடையுமெனவுங் கூறுதலில், கணபங்கவியல்பு தன்னிலென்றும்; அவ்வாறு பிறந்தபுத்தன் எண்ணிறந்தஞானமும் எண்ணிறந்த சீலமுமுடையனு யோகி யாயிருப்பனென்றலில், பொற்புடையதானமே தவமே தன்மைபுரிந்த நிலை யோகமே பொருந்திச் செய்யவென்றும்; அதனால் திரிலட்சண பாவனை யென்றும் ஞானமுதித்தலின்; உற்பவிக்கு மொழிவின்றி யுரைத்தஞானம் என் றும்; அதனால் குற்ற மிடைந்து பஞ்சகந்த நீக்கமாகியகந்தவிடெய்தினுைத லில், பேரின்ப முத்திபெற்றான் என்றும்; முத்திபெறுமுன் தவங்காரணமாக வுதித்த ஞானத்தால் முழுதொருங்குணர்ந்து பிறர்க்கறங்கூறினுைதலில், பற் பலரும் பிழைத்துய்ய வறமுன்சொன்ன பான்மையானென்றுமென்றுங் கூறினுர். புத்தர், ஆதிபுத்தரேறு இருபத்து நால்வர். புத்தர்கள் சர்வம் துக்கந் துக்கம், சர்வமநித்தியமநித்தியம், சர்வம் சூனியஞ் சூனியமென்னுந் திரிலட்சணபாவனையால் முத்தி சித்திக்குமென்றுங் கூறுவர். (கூசரு)

என்றுரைத்த சாரிபுத்த னெதிர்வந்தேற்ற விருந்தவத்துப் பெ ருந்தன்மை யன்பர்தாமு, நன்றுமது தலைவன்றான் பெற்றானென்று நாட்டுகின்ற முத்திதான் யாவதென்றார், நின்றவுரு வேதனையே குறி ப்புச்செய்கை நேர்நின்ற ஞானமென நிகழ்ந்தவைந்து, மொன்றியகந் தத்தவிவேமுத்தியென்ன வுரைசெய்தான்பிடகத்திறுணர்வுமிக்கான்.

(இ-ள்.) என்று உரைத்த சாரிபுத்தன் எதிர்வந்து ஏற்ற=இவ்வாறெ டுத்துக் கூறியசாரிபுத்தன் தெதிர்வந்தவேறு வாதுசெய்யக் குறித்த; இரு ந்தவத்துப் பெருந்தன்மை அன்பர்தாமும் = பெரியதவத்தையுடைய மேன் மைபொருந்திய சம்பந்த சரணாலயரொன்று மடியவரும்; நன்று உமது தலை வன்றான் பெற்றானென்று நாட்டுகின்ற முத்திதான் யாவதென்றார் = நீ கூறி யது நன்றாயிருந்தது உமது கடவுளடைந்தானென்று நீ நாட்டுகின்ற முத்தி யினது இயல்பு யாதென்று வினவினுர் (வினவுங்கால்); பிடகத்தின் உணர்வு மிக்கான்=பிடகநூலுணர்ச்சியில் மிக்கசாரிபுத்தனானவன்; நின்ற உரு=நிலை பெற்ற மூர்த்தரூபங்களாகிய ரூபகந்தமும்; வேதனை = மெய்ப்பொருளை யறிந்து அதனாலுண்டாம் வேதனாஸ்கந்தமும்; குறிப்பு = அறிதற்கருவியா

Koviloor Digital Library

கிய குறிப்புக் கந்தமும்; செய்கை = புண்ணியபாவங்களது வாசனசமூக மாகிய சமஸ்காரகந்தமும்; நேர்நின்ற ஞானம் = அறியு மியல்புடையஞான மென்னும் விஞ்ஞானகந்தமும்; எனநிகழ்ந்த ஐந்தும் = எனக் கூறியஐந்துஞ் சேர்ந்த கந்தங்களினழிவே முத்தியெனக் கூறினன்.—எ-று.

உருவகந்தம் - நிலம், நீர், தீ, காற்று, ஆகாயமென்னும் நான்குபூதமும் அப்பூதங்களினிடத்திற் பொருந்திய உபாதேயமென்னும் கடினம், கந்தம், இரசம், ரூபம், என்னும் நான்குமென எட்டுவகைப்படும். இவை கடமுதலிய வாகியப்பொருள்களுக்குக்காரணம்.

நிலம் - வன்மையுங் கந்தமுமுடையது. நீர் - தண்மையும் மதுரரச முமுடையது. தீ - ரூபமும் வெம்மையுமுடையது. காற்று - பரிசமும் வேக முமுடையதென்க.

வேதனை - சுகமும், துக்கமும், உபேட்சா புத்தியுமென மூவகைப்ப டும். குறிப்பு - சுரோத்திராதி ஞானேந்திரியமைந்தும், சித்தமொன்றுமென அறுவகைப்படும். செய்கையென்னுஞ் சமஸ்காரம் - புண்ணியம் பத்தும் பாவம் பத்துமென இருபதுவகைப்படும். விஞ்ஞானம் - இந்திரியமைந்தும் மனமொன்றுஞ் சேர்ந்துதிக்குமுணர்வு வகையாலறுவகைப்படும். இந்நா ற்பத்துமூன்றும் பஞ்சகந்தத்தின் வகையெனப்படும். இவை - உரு, அரு வென இருவகுப்பாய்ப் பந்தம்விடென்றும், உள்வழக்கென்றும், இல்வழக் கென்றும் வழங்கப்படும்.

"உருவியல் பூதமோட்ங்கு பாதாயருபமாகு, மருவியல் சித்தங்கன்ம மென விரண்டாகும் விட்டின், மருவியல் குற்றங் கந்தமென வழங்கிடும்வழ க்கி, னிருவியனுள்ளதோ டங்கில்லதா மியம்புங்காலே." என்னுஞ் சிவஞான சித்தி பரபக்கத்திருவிருத்தத்தானும், "தங்குருவம் வேதனையுளக் குறிப்புப் பாவனைமெய் தாங்குணர்வென்றைந் தாங்கந்தம்." "உருவமுடல் பூதமு பாதாயமென்று மிருவிதத்தினது மெழுமென்." "வேதனையின்பதுன் பிவற் றின் விரவனுமென் றோதவொரு மூன்றுமென்றோர்." "வாக்குமனமாக்கை யிவை பாவனையென்றேமதியா யாக்குமிவை தாமறம் பாவம்." "இந்நால்வ கை விதத்திறு மேய்ந்தையமற வெவ்வறுமெணம் விஞ்ஞானமென்றே விள ம்பு." "இந்தவிதமைந்துஞ் சந்தானத்தெழுந்தழிகை பந்தமெனவே நீதான் பார்." என்னும் பரமததிமிரபானுவாலும், "எட்டிவையுருவமூன்று வேதனை யாறு ஞான, மொட்டிய குறிப்போராறு செய்கையு மிருபதாகக், கட்டியபஞ் சகந்தங் கணத்தினிற் பங்கமாகித், தொட்டநாற்பத்துமூன்றுஞ் சுகத நூற்று ணிவுதானே." என்னும் பௌத்தநூற்செய்யுளாலுமுணர்க.

பிடகம் - சாரிபுத்தரோடு தன்னங்காரமுதலிய இருபத்துநான்கு புத் தர்கள் மறபி லுபதேசக் கிரமத்தாற் செய்யப்பட்டநூல். அது விநயபிடகமெ ன்றும், சூத்திரபிடகமென்றும், அபிதன்ம பிடகமென்று மூவகைப்படும்.

Koviloor Digital Library

வினயபிடகம்-துறவிகளுக்கு நிலைக்கேற்ற சிலங்களையும் வழுவிற்குப் பிராயச்சித்தங்களையுங் கூறுவது. சாவகபதம், சாரணபதம், சாமணபதம், உபசம்பன்னபதமெனத் துறவிகள் நிலைநால்வகைப்படும். இந்நிலைவகைக ளின் சிலங்கள் நிலைதோறும் முறையே ஐந்து, பத்து, நூறு, கோடி, என்னும் பகுப்பாற் கூறப்படும். (கககு)

ஆங்கவன்று னுரைத்தமொழி கேட்டவன்ப ரதனையனுவாதஞ் செய்தவனைநோக்கித், தாங்கியஞா னத்துடனுங் கந்தமைந்துந் தாம் வீந்துகெட்டனவேற் றலைவன்றானு, மீங்குளனென் றவனுக்கு விடய யாக யாவையுமு னியற்றுதற்கு விகாரமேசெய், தோங்குவடி வமைத் துவிழ வெடுக்கும்பூசை கொள்வாரா ருரைக்கவென வுரைக்கலுற் றான்.

(இ-ள்.) ஆங்கவன்றான் உரைத்தமொழிகேட்ட அன்பர் = அச்சாரி புத்தன் சொன்ன வார்த்தையைக்கேட்ட சம்பந்தசரணாலயர்; அதனை அனு வாதம்செய்து = அவன் கூறுங் கூற்றைத் தாமனுவதித்தவனைப் பார்த்து; தாங்கிய ஞானத்துடனும் கந்தம் ஐந்தும் தாம்வீந்து கெட்டனவேல்=பொரு ந்திய ஞானத்தோடு கூடிய ஐந்து கந்தமு முங்கள் தலைவனுக் கொருங்க றக் கெட்டனவாயில்; தலைவன்றானும் ஈங்கு உளனென்று அவனுக்குவிட யமாக=அக்கடவு ளிவ்வுலகத்திருக்கின்றானென்று அவனறியும்படி; யாவை யும் முன் இயற்றுதற்கு விகாரமேசெய்து = பூசை நிவேதனங்கள் முதலிய உபசாரங்களை யவன் முன்செய்தற்கு மனோவிகாரமான பாவனைசெய்து; ஓங்குவடிவு அமைத்துவிழவு எடுக்கும்பூசை கொள்வார் ஆர் உரைக்க என உரைக்கலுற்றான் = பெரிய உருவத்தையாக்கி விழாக்கொண்டாடும் பூசனை யை யேற்றுக்கொள்பவர் யார்சொல்லென்று அவர் வினவியருளச் சொல்லத் தொடங்கினான்.—எ-று.

அனுவாதமாவது- அவன் கூறிய பொருளை நீ இவ்வாறிவ்வாறு கூறி னையென எதிர்வாதியும் மறுக்கும்பொருட்டுக் கூறுதல். கந்தமைந்து மறக் கெட்டு வீடடைந்தானுக்கு உடம்புங் கருவியுமின்மையில், பூசையேற்றல் கூடாமையிலவனுக்கு விடயமாக விகாரஞ்செய்து விழவெடுக்கும் பூசைகொ ள்வாரார் என்றார். விகாரம்=மானசிகபாவனை. (ககஎ)

கந்தமாம் வினையுடம்பு நீங்கவெங்கோன் கலந்துளன்முத் தியி லென்றா னென்னக்காணு, மிந்திரியங் கண்முதலாங் காணந்தானுமில் லையே பவனுணர்ச்சி யில்லையென்றார், முந்தையறி விலனாகி யுறங்கி னானை நிந்தித்து மொழிந்துடன்மீ தாடினார்க்கு, வந்தவினைப் பயன் போல வழிபட்டார்க்கும் வருமன்றோ நன் மையென மறுத்துச்சொ ன்னான்.

Koviloor Digital Library

(இ-ள்.) கந்தமாம்வினை உடம்பு நீங்க எங்கோன் கலந்துளான் முத்தியில் என்றான் = அதற்குத்தரமாக அவன் இருவினைகாரணமான கந்தவுடம்பு கெடவெமது முதல்வன் முத்தியிற்சேர்ந்திருக்கின்றான் (அதனால் விழவெடுக்கும் பூசைசெய்தல் பொருந்துமென்றுகூற); காணும் இந்திரியம் கண்முதலாம் கரணந்தானும் இல்லையேல் அவன் உணர்ச்சி இல்லை என்றார்=முத்தியிற்சேர்ந்த நம்மிறைவனுக்கு விடயங்களையுணருங் கருவியாகிய கண்முதலிய கரணங்களுமில்லாதொழியில் அவனுக்கு உணர்வுநிகழ்தலில்லையென மறுத்தருளினார்; முந்தை அறிவிலனாகி உறங்கினானை நிந்தித்து மொழிந்து உடல்மீது ஆடினார்க்கு வந்தவினைப்பயன்போல வழிபட்டார்க்கும் வருமன்றோ நன்மையென மறுத்துச்சொன்னான்=முற்பட்ட விஞ்ஞானமானதுகெட்டு ஆலயவிஞ்ஞானமடைந்து உறங்குகின்றவனை யொருவனிந்தித்துக் கூறியவனுடம்பின்மீதுமிதித்தாடினவொருவனுக்கு அதனால்வந்த தீவினைப்பயன்போலக் கந்தமைந்துங் கெட்டுமுத்தியடைந்த நம்முதல்வனை வழிபாடுசெய்தவர்க்கும் நல்வினைப்பயன் வருமென ஆதனைமறுத் துத்தாஞ்சொன்னான்.—எ-று.

விஞ்ஞானம் - ஆலயவிஞ்ஞானமென்றும் பிரவிருத்தி விஞ்ஞானமென்று மிருவகை. அவற்றுள், ஆலயவிஞ்ஞானம் நானென்னுமுணர்வென்றும்; பிரவிருத்திவிஞ்ஞானம், நீலாதிரூபங்களையுணரு மறிவென்றும்; ஆலயவிஞ்ஞானம், பிரவிருத்தி விஞ்ஞானத்திற்குக் காரணமென்றுங் கூறுவர். அதனால், முந்தையுணர்வென்றது பிரவிருத்தி விஞ்ஞானத்தை. இவ்விரண்டுங் கணபங்கமுடையன. (கூஅ)

சொன்னவுரை கேட்டருளி யன்பர்தாமுந் தொடர்ந்தவழி பா
டுபல கொள்கின்றானுக், கன்னவற்றி னுடன்பாடு மெதிர்வுமில்லை யா
னபோ தவன்பெறுத லில்லையென்றார், முன்னவற்றி லுடன்பாடு மெ
திர்வுமின்றி முறுகு துயி லுற்றானை முனிந்துகொன்றா, லின்னுயிர்போ
ய்க் கொலையாகி முடிந்ததன்றோ விப்படியா லெம்மிறைவற் கெய்
துமென்றார்.

(இ-ள்.) சொன்ன உரை கேட்டருளி அன்பர்தாமும் தொடர்ந்தவழிபாடு பல கொள்கின்றானுக்கு=சாரிபுத்தன் கூறியவார்த்தையைக் கேட்டருளிச் சம்பந்தசரணாலயரும் நீவிர்செய்யும் பலவிதவழிபாடுகளை யேற்றுக்கொள்ளும் நும்மிறைவனுக்கு; அன்னவற்றின் உடன்பாடும் எதிர்வும் இல்லை=(அவ்வழிபாடுகளையுணர்ந்து கோடற்குரிய கருவிகளின்மையால்) அவ்வழிபாட்டின் விருப்பும் வெறுப்புமில்லை; ஆனபோது அவன்பெறுதல் இல்லை என்றார்=அவ்வாறானபோது அவனப்பூசையை யேற்றுக்கொள்ளுதலில்லையென்றுமறுத்தருளினார்; முன் அவற்றில் உடன்பாடும் எதிர்வும் இன்றி முறுகு துயில் உற்றானை முனிந்துகொன்றால்=தம்முன்புள்ள விடயங்களில் விருப்பு வெறுப்பின்றிச் சித்தசந்ததிகெட்டு ஆலயவிஞ்ஞானமடைந்தவனைக் கோபித்தொருவன் கொன்றால்; இன் உயிர்போய்க் கொலையாகிமுடிந்ததன்றோ இப்

Koviloor Digital Library

படியால் எம் இறைவற்கு எய்துமென்றார் = கொல்லப்பட்டாருக் குயிர்போதலுங் கொன்றார்க்குக் கொலைப்பாவமும் வந்ததுபோல இவ்வாறாக எமது கடவுளுக்கு இவ்வழிபாடுகளையுமென்று கூறினார்.—எ-று. (௯௧௯)

இப்படியா லெய்துமென விசைத்தநீயிங் கெடுத்துக்காட் டிய துயிலு மியல்பிறன்போன், மெய்ப்படிய கரணங்க ளுயிர்தாமிங்கு வேண்டுதியா லும்மிறைவற் கானபோது, செப்பியவக் கந்தத்தின் வினைவின்றுநித் திரியில்லா முத்தியிற்சென் றிலனுமானு, னப்படியக் கந்தத்து னறிவுங்கெட்டா லம்முத்தி யுடனின்ப மணைபாதென்றார்.

(இ-ள்.) இப்படியால் எய்துமென இசைத்த=மேற்கூறியவாறு வருமென்றுகூறி; நீ இங்கு எடுத்தக்காட்டிய துயிலும் இயல்பிறன்போல்=நீ இவ்விடத்து எடுத்துக்காட்டிய (உடன்பாடு மெதிர்வுமின்றித்) துயிலுமவனைப்போல், மெய்ப்படிய கரணங்கள் உயிர்தாம் இங்குவேண்டுதியால்=மெய்ம்மைபொருந்திய விந்திரியங்களையு முயிரையு மிவ்விடத் தும்மிறைவனுக்கு விரும்புகின்றாய்; நும் இறைவற்கு ஆனபோது=அவ்விந்திரிய கரணங்களும் முதல்வனுக்குவருங்கால்; செப்பிய அக்கந்தத்தின் விளைவு இன்றுநித்திரிவு இல்லா முத்தியிற்சென்றிலனு மானுன் = நீ முற்கூறிய பஞ்சகந்தங்களறக் கெட்டு அழிவில்லாத பேரின்பமுத்தியிற் செல்லாதவனுமானான்; அப்படி அக்கந்தத்தன் அறிவும்கெட்டால் அம்முத்தியுடன் இன்பம் அணையாது என்றார்=நீ கூறியவாறு பஞ்சகந்தத்தோ டுணர்வுங் கெட்டா லம்முத்தியினிடத்துப் பேரின்பமான தம்முதல்வனை யடையாதென மறுத்தருளினார்.—எ-று.

துயிலுமியல்பிறன்போலெனக்காட்டிய திருட்டாந்தப்படி, துயிலுறவோன் இலயித்த உயிருங் கரணமுமுடையனாதலில், கொல்லப்படுங்கால் பரிசவுணர்விலயித்த விஞ்ஞானந்தோன்றிக் கொலையாதலையுற்றே யிறப்பன். அதனுல் கரணமுமுயிரும் நம்முதல்வர்க்கு வேண்டப்படும். அவ்வாறு வேண்டப்படுங்கால் பஞ்சகந்தமறக்கெட்டு வீடடைந்தானென்றலின்றுமென்றும்; அறக்கெட்ட வீட்டின் இன்பமடைதற்கிடனுன உயிருமறக்கெடுதலின், வீட்டின்பமின்றுமென்றும் மறுத்தருளினளென்றும். (௯௨0)

அவ்வுரைகேட் டெதிர்மாற்ற மறைவதின்றி யணைந்துளனம் முத்திபெறு மதுவும்பாழாங், கவ்வையினின் றவனைபெதிர நோக்கிஞானக் கடலமுத முண்டவர்தங் காதலன்பர், பொய்வகையே முத்தியினிற்போனுன் முன்பே பொருளெல்லா முணர்ந்துரைத்துப் போனனென்று, பெவ்வகையா லவனெல்லா முணர்ந்ததிது மிலைதுணைப் பாயெனிநு மேற்போமென்றார்.

(இ-ள்.) அவ்வுரைகேட்டு எதிர்மாற்றம் அறைவதின்றி அணைந்துளன் = அவ்வார்த்தையைக்கேட் டெத்ருத்தரஞ் சொல்லாமல் சாரிபுத்த

Koviloor Digital Library

விருந்தான் ; அம்முத்தியெனும் அதுவும் பாழாம் கவ்வையில் நின்றவனை எதிர்நோக்கி = தான்கூறிய முத்தியும் பொய்யாயினவென்று சிறுமையடைந்து நின்ற அச்சாரிபுத்தனை யெதிரோபார்த்து ; ஞானக்கடல் அமுதம் உண்டவர் தம்காதல் அன்பர்=ஞானசாகரத்திலுதித்த மெய்ஞ்ஞானவமுதையுண்டருளிய ஆளுடையபிள்ளையாரது விருப்பமிக்க சம்பந்த சரணாலயரென்னு மன்பர் ; பொய்வகையே முத்தியினிற்போனான் முன்பே பொருள் எல்லாம் உணர்ந்து உரைத்துப் போனான் என்றாய் = பொய்வழி முத்தியிற்புக்க நும் முதல்வன் முத்தி புகுமுன் எல்லாப்பொருள்களையு முழுதுணர்ந்து அறமுரைத்துப்போனானென்று கூறினாய் ; எவ்வகையால் அவன் எல்லாம் உணர்ந்தது = எவ்வாற்றால் அக்கடவுளெல்லாவற்றையு முழுதொருங்குணர்ந்தது; ஈதும் இல்லது=(கணவிஞ்ஞானமுடைய அம்முதல்வன் கணத்திற்றோன்றியழியும்பொருள்களை யெவ்வாறுணர்வன்) இதுவும் பொருந்ாது ; உரைப்பாயெனினும் ஏற்போம் என்றார்=அதற்குத்தரங்கூறுவையேல் அதனையாம் அங்கீகரிப்போமென்றருளிச்செய்தார்.—எ-று.

உத்தரங்கூறல் பொருந்தாமையின், உரைப்பாயெனினுமென்றார். மரம், கற்றைமுதலியவற்றைப் பிரித்தால் வீடும், பற்று, ஊர்முதலியவற்றைப் பிரித்தால் நாடும் இன்றானாற்போலக் கந்தமைந்தையும் பிரிப்பிலான்மாவில்லையென்பனாதலில், பொய்வகையே முத்தியினிற்போனானென்றார். (௩௨௧)

உணர்வுபொதுச் சிறப்பென்ன விரண்டின்முன்ன துளவான மரப்பொதுமை யுணர்தலேனைப், புணர்சிறப்பு மரங்களில்வைத் தின்னதென்ற லிப்படியால் வரம்பில்லாப் பொருள்களெல்லாங், கொணரும்விறகினைக்குவைசெய் திடினும்வேறு குறைத்தவற்றைத் தனித்தனியே யிடினும்வெந்தீத், துணர்கதுவிச் சுடவல்ல வாறுபோலத் தொகுத்தும்விரிந்துந்தெரிக்குந் தொல்லோனென்றான்.

(இ-ள்.) உணர்வு பொதுச்சிறப்பென்ன இரண்டில் = பொதுவுணர்வுஞ் சிறப்புணர்வுமெனக் கூறுமிவ்விரண்டில் ; முன்னது உளவான மரப்பொதுமை உணர்தல்=முற்பட்டபொது உணர்வானது தூரத் தேவனத்தைப் பார்த்து அவ்வனத்தின்கணுள்ள மரப்பொதுமையை யுணர்தலாம் ; ஏனைப் புணர்சிறப்பு = மற்றப்பொருந்திய சிறப்புணர்வானது ; மரங்களில்வைத்து இன்னது என்றல்=அவ்வனத்திலுள்ள மரப்பொதுமையின் சமீபத்தையடைந்து நின்று ஈது கருங்காலி, இது ஆயில், இது தேவதாரு, இது கொடி, இது செடியெனத் தனித்தனி யின்னதின்னதென்று கூறுதல் ; இப்படியால் வரம்பு இல்லாப்பொருள்கள் எல்லாம் = இவ்விருவகையுணர்வால் எண்ணிறந்தவெல்லாப்பொருள்களையும்; கொணரும் விறகினைக்குவைசெய்திடினும் வேறு குறைத்து அவற்றைத் தனித்தனியே இடினும்=கொண்டுவந்த விறகைக்குவியல்செய்து ஒருவன் தன்னையிடினுந் தனித்தனி வெட்டி வேறு வேறுமிடினும் ; வெந்தீத்துணர்கதுவிச்சுடவல்ல வாறுபோல=கொடிய தீயினது கொ

Koviloor Digital Library

மூர்த்த அவற்றைப்பற்றிச் சுடவல்ல வகைமைபோல; தொகுத்தும் விரித்தும் தெரிக்கும் தொல்லோன் என்முன்=பொதுவான சவிகற்பஞானத்தாற் றொகுத்துணர்த்தும் சிறப்பான சவிகற்பஞானத்தாற் றனித்துணர்த்தும் பொருளியல்பைபு மறங்களையுமெங்கோன் சொல்லியருளினுன் என்முன்.—எ-று.

இனம்பற்றிக்கொடிமுதலிய வருவிக்கப்பட்டன. வகை - தனித்தனி பலவாகுங்கால் விரியாதலில், விரித்தென்றார். (கூஉஉ)

எடுத்துரைத்த புத்தனெதி ரியம்புமன்ப ரெரியுணர்வுக் கெடுத்துக்காட்டாகச்சொன்னு, லடுத்தவுணர் வுருவுடைய தன்றுசொன்ன வனல்வடிவிற் றுமதுவு மறிதிநுங்கோன், றொடுத்தநிகழ் காலமேய ன்றியேனைத் தொடர்ந்தவிரு காலமுந்தொக் கறியுமாகிற், கடுத்தவெரி நிகழ்காலத்திட்டதல்லாற் காறுத காலத்துக் கதுவாதென்றார்.

(இ-ள்.) எடுத்து உரைத்தபுத்தன் எதிர் இயம்பும் அன்பர் =இவ்வாறெடுத்துக்கூறிய சாரிபுத்த னெதிரே சம்பந்தசரணுலயரொன்று மடியார்கூறுவார்; எரி உணர்வுக்கு எடுத்துக் காட்டாகச் சொன்னுல்=நீ நெருப்பை இருவகையுணர்விற்குந் திருட்டாந்தமாகக்கூறின்; அடுத்த உணர்வு உரு உடையது அன்று=அத்திருட்டாந்தத்தைபேற்ற தாட்டாந்தரமென்று மறிவானது நீ கூறும் ரூபகந்தத்தின் பகுப்பான உருவுடையதன்று; சொன்ன அனல் வடிவிற்றும் அதுவும் அறிதி=உவமைகூறிய நெருப்பானது ரூபமுடையதாம் அது மாறுபடுமென்பதையும் நீ அறிவாய் (அதுவன்றி); நுங்கோன் தொடுத்த நிகழ்காலமே அன்றி ஏனைத்தொடர்ந்த இருகாலமும் தொக்கு அறியுமாகில்= உமது முதல்வன் தொடர்ந்த நிகழ்காலமேயல்லாமல் ஏனைய இறந்தகாலமெதிர்காலங்களையும் பொருந்தியறியுமெனில்; கடுத்த எரி நிகழ்காலத்து இட்டதல்லால் காறுதகாலத்துக் கதுவாது என்றார்=வெம்மையையுடைய நெருப்பு நிகழ்காலத்திட்ட விறகினைச் சுடுதலன்றி இறந்தகாலத்து மெதிர்காலத்துக்கழிந்தனவும் வருவனவுமாய விறகினைச்சுட மாட்டாதென்றருளினூர்.-எ-று.

எரியுவமை,ஏகதேசமாய்க்கொள்ளினும் செயலாலும் மாறுபட்டதென மறுத்தனர். (கூஉங)

ஆதலினு லுன்னிறைவன் பொருள்களெல்லா மறிந்தது நும்முத்திபோலாயிற்றன்றே, யேதமா மிவ்வறிவா லுரைத்தநூலு மென்றவனுக் கேற்குமா றருளிச்செய்ய, வாதமா றென்றின்றித் தோற்றுன் புத்தன் மற்றவனை வென்றருளிப் புகலிமன்னர், பாததா மரைபணிந்தா ரன்பர்துங்கள் பான்மையழி புத்தர்களும் பணிந்துவீழ்ந்தார்.

(இ-ள்.) ஆதலினுல் உன் இறைவன் பொருள்கள் எல்லாம் அறிந்தது நும் முத்திபோல் ஆயிற்றன்றே=அவ்வாருகையால் உமது முதல்வன் எல்லாப்பொருள்களையு மறிந்ததும் உம்முடைய முத்திபோற்பாழாயிற்று; ஏதமாம் இவ்வறிவால் உரைத்தநூலும் என்று அவனுக்கு ஏற்குமாறு அருளிச்

Koviloor Digital Library

செய்ய=குற்றமாமிவ்வகையறிவா லுணர்ந்துரைத்த வுன்பிடகநூலுமென்று அச்சாரிபுத்தனுக்குப் பொருந்தும்வண்ணஞ் சம்பந்தசரணாலய ரருளிச்செய்ய ; வாதம் மாறு ஒன்று இன்றித்தோற்றான்புத்தன் = எதிர்வாதம் யாதொன்றுமின்றிப் புத்தன்றோல்வியடைந்தான்; மற்றவனைவென்றருளிப் புகலிமன்னர் பாததாமரை பணிந்தார் அன்பர் = அச்சாரிபுத்தனைவென்று ஆளுடையபிள்ளையாரது திருவடித்தாமரைகளை வணங்கினர் சம்பந்தசரணாலயர்; தங்கள்பான்மை யழிபுத்தர்களும் பணிந்து விழ்ந்தார் = தம் நிலைமைகெட்ட சாரிபுத்தன்முதலிய புத்தர்களும் நிலமுறவணங்கிப் பிள்ளையார் திருவடியில் விழுந்தார்கள்.—எ-று.

உயிருண்மைகொள்ளாது கணபங்கஞானங் கொண்டவனுக்கு முன்னின்ற உணர்வுபங்கப்படுதலில் பொருளொருங்குணர்தல் பொருந்ாதென்பார், பொருள்களெல்லாமறிந்தது மும்மூர்த்திபோலாயிற்றென்றும்; இவ்வாறு சிற்றறிவாற் கூறியநூல் மாறுபட்ட பொருளுண்மையால், ஏதமாமிவ்வறிவாலுரைத்த நூலுமென்றும் ; அந்நூலிலுள்ள மாறுபட்டபொருள்களை மறுத்து அவனுக்குப் பொருந்தக்கூறுதலில் ஏற்குமாறருளிச்செய்யவென்றுங்கூறினர்.

பொருள்களெல்லாமென்றதனுல்-மாத்மிகன், யோகாசாரன், சௌத்திராந்திகன், வைபாடிகனென்னும் புத்தர் நால்வருள் மறுக்கப்பட்ட சாரிபுத்தன் வைபாடிகனென்றும். என்னை ? மாத்மிகன், கபாலத்திற்கடம்போல அவயவத்திற்றோன்றும் பொருள்கள் அவ்வவயவ நீக்கத்துச் சத்தென்றும், அசத்தென்றும், சதசத்தென்றும் சொல்லக்கூடாமையின் உள்ளும் புறம்புமான பொருள்களெல்லாஞ்சூனியமென்று சொல்லுவன். யோகாசாரன், மேயப்பொருள்களும் புத்திமாத்திரமேயன்றி யில்லையென்பன். சௌத்திராந்திகன், புத்தியால்மேயப்பொருள்களெல்லா மநுமிக்கப்படுமென்பன். வைபாடிகன், அவர்போற்கூறாது பிரத்தியட்ச சித்தமானமேயப்பொருள்களும் புத்தியுமுண்டென்று கூறுவன். முன்பே பொருளெல்லா முணர்ந்துரைத்துப் போனானென்று யென்றது மிக்கருத்தானென்க. புத்தி=விஞ்ஞானம். புத்தியே யெல்லாவற்றையுமறியு மென்றலில், புத்தனென்றும். புத்தியெல்லாவற்றையுமறியுமென்றலும் கணபங்கமும் மாத்மிகனொழிந்த மூவர்க்குமொக்கும்.


அந்நூலுள் மாறுபட்ட பொருள்களாவன - ஓர்கடவுள் உலகத்தைப் படைக்கவில்லையென்றலும், பொருள்களெல்லாம் சார்பிற்றோன்று மென்றலும், படைத்தலிற் பயன் யாதென்றலும் விளையாட்டெனில், அக்கடவுள் சிறுவன்போல நியமமின்றிச் செய்வனென்றலும், அதனாற் றுக்கமடைவனென்றலும், பொருள்களெல்லாம் கணபங்கமடையுமென்றலும், குடத்தில் குடத்தன்மையென்னுஞ் சாதியுள்ளதாயிற் குடமுடைந்தழி அதற்கு ஆதாரமின்று. அழிந்ததாயில், அது நித்தியமன்று. வேறிடத்துச்சென்றதாயில், பொருளாதல் வேண்டும். அதனால், சாமானியமென்னுஞ் சாதி நித்தியமாய்க்கொள்ளுதல் பொருந்தாதென்றலு முதலியன.

Koviloor Digital Library

பொருந்தக்கூறுதலாவது - உலகு மூர்த்தமாய்ச் சடமாய் அவயவமுடைத்தாய் பல விசித்திரப்பொருளாதலின் அது காரியமெனப்படும். யாது காரியம்? அது ஓர்கருத்தாவையுடைத்து. குடம்போல் என்றதனால் உலகு இன்றியமையாச்சிறப்பிற்றாய கருத்தாவையுடைத்தென்றும்; சார்பிற்றோன்றுமேல், தோன்றும்பொருள் உபாதான காரணத்துள்ளதாயின் வினைமுதலால் உதிக்கும். இல்லதாயின், முயற்கோடுபோல் உதியாதாம். காரணத்தில்லாதது உதிக்குமேல் நெற்சமுகாய் நீளவேண்டும். ஆதலின் சார்பில் எவ்வாறு உதிக்கும்? பின்யாறுதிக்குமெனில், உள்ளதுமில்லதுமாய பொருளுதிக்கவேண்டும். உள்ளதுமில்லதுமாய பொருள் விருத்ததன்மமுடைமையினெவ்வாறுதிக்குமெனின், நன்குசொன்னாய்.


ஓர்காலத்துள்ளது மில்லதுமாயின் விருத்ததன்மயாம். அவ்வாறன்றிக் காரியகாலத்திற் சத்திருபந்திரிந்து வியத்திருபமாயுள்ளதுமின்றிக் காரணகாலத்தில் வியத்திருபந்திரிந்து சத்திருபமாயில்லதுமின்றி யுள்ளதாயபொருளுதிக்கும். இதுவே உள்ளது மில்லதுமாய காரியப்பொருளுதிக்குமென்றுஞ் சற்காரியவாதம். நீ கூறுவது காரணத்தென்றுமில்லாத காரியமுதிக்குமென்று மசத்காரிய வாதமும் உபாதான சூனியவாதமுமாமென்றும்; அவ்வாறுதிக்குமாயின் சத்திருபமாய பிரபஞ்சத்தைத்திரித்து வியத்திருபமாக்கலும், ஒடுங்கும் காலில் வியத்திருபந்திரித்துச் சத்திருபமாக்கலுமாய தொழில்களை முதற்காரணம்பற்றாக நின்று செய்யுமோர் முதல்வன்வேண்டும். அம்முதல்வன், வேதாகமங்கள் கூறும் முற்றறிவும் வரம்பிலாற்றலுமுடைய சிவபெருமானேயாமென்றும்; அம்முதல்வன், தன்பயன் கருதாது ஆன்மாக்களின்பொருட்டுக் காலகன்ம நிமித்தமாய்ப் பஞ்சகிருத்தியஞ்செய்வரென்றும்; அத்தொழில், அருள்விளையாட்டென்றும்; அதனாற் பாலர்போல் நியமமின்றிச் செய்யானென்றும்; சங்கற்பத்தாலெல்லாத்தொழிலுஞ் செய்யவல்லனாதலின், அதனால்லைப்படையானென்றும்; அப்பொருள்களெல்லாங் கணபங்கமெனில், ஞானமிருக்குங்கால் ஞேயமும், ஞேயமிருக்குங்கால் ஞானமுமின்றாகவேண்டும். அதனால், அர்த்தக்கிரியாகாரியத்துவமுஞ் சித்திக்கமாட்டாது. முற்கணத்திற்செய்த புண்ணியபாவங்கள் அக்கணத்துக் கெடுதலில், சொர்க்க நிரயங்கள் காலாந்தரத்திற் பலித்தலின்றாம். அதுவன்றி ஆன்மா கணத்தில் கட்டப்பட்டதேல், ஒருவன்செய்ததை யொருவன் புசிக்கவருவதுபோல பங்கப்பட்ட ஆன்மாவின் புண்ணியபாவத்தை வருங்கணத்திலான்மாபுசிக்கவேண்டும். நெடுங்காலமாயும் பாவியாவத்தையில் நானிது செய்தேனென்ற மிருதியுணர்வுதோன்றுதலுமின்று. அவ்வாறுசொற்பனத்தினிகழ்ந்ததைச் சாக்கிரத்துக்கூறுதலுங் கூடாமையின், ஆன்மா நித்தியமேயன்றிக் கணமென்பதும் மாறுபங்மென்றும்; பிரத்தியட்ச சித்தமாயுள்ள மெய்ப்பொருள்களைக் கணமென்றல் பிராந்தியென்றும்; சாமானியங்கொள்ளாவிடில் குடம், குடைமுதலிய பொருள்கட்கு வேறுபாடின்றாம். அச்சாதி நித்தியமாய்ப் பொருட்கு வேறாய் நையாயிகர்கொள்வர். சைவர், பொருளோடு

Koviloor Digital Library



திருஞானசம்பந்தசுவாமிகள் சம்பந்த சரணாலயரைக்கொண்டு புத்தனை வாதித்து த்தோல்வியடைவித்தது.

Koviloor Digital Library



திருஞானசம்பந்த சுவாமிகளுக்கு முன் தோல்வியடைந்த பவுத்தர்கள் விபூதிப்பிரசாதம் தரித்து சைவர்களாகியது.

Koviloor Digital Library

வேற்றுமையின்றிக்கொள்வர். அதனால், மாறுபடுதலின்றென்றும் மறுத்து உண்மைகூறுதலாம். (கூஉச)

புந்தியினு லவருரைத்த பொருளின்றன்மை பொருளன்றும் படியன்பர் பொருந்தக்கூற, மந்தவுணர் வுடையவரை நோக்கிச்சைவ மல்லாது மற்றொன்று மில்லையென்றே, யந்தமில்சீர் மறைகளாக மங்களேனை யகிலகலைப் பொருளுணர்ந்தா ரருளிச்செய்யச், சிந்தையினிலதுதெளிந்த புத்தர்சண்டைத் திருமறையோர் சேவடிக்கீழ்ச் சென்றுதாழ்ந்தார்.

(இ-ள்.) புந்தியினல் அவர் உரைத்தபொருளின்தன்மை பொருள் அன்றும்படி அன்பர் பொருந்தக்கூற = புத்தியினு லப்புத்தர்கள்கூறிய பொருட்டன்மையைப் பொருளல்லவென்று அவர்தெரியும்படி சம்பந்தசரணலயர் பொருந்தக்கூற ; மந்தஉணர்வு உடையவரைநோக்கிச் சைவம் அல்லாது மற்றொன்றும் இல்லையென்றே=மந்தபுத்தியுடைய வப்புத்தர்களைப்பார்த்துச் சைவசமயமல்லாத வேற்றுச்சமயங்கள் யாதொன்றும் மெய்ப்பொருளுடையனவல்லவென்று ; அந்தமில் சீர்மறைகள் ஆகமங்கள் = அளவில்லாத சிறப்பினையுடைய நான்குவேதங்களும் காமிகமுதலிய இருபத்தெட்டாகமங்களும்; ஏனைஅகில கலைப்பொருள் உணர்ந்தார் அருளிச்செய்ய=அவைஅல்லாத ஏனையவேதாங்கமும் மீமாம்சையும் நியாயமும் புராணமுந் தருமசாத்திரமு முதலிய வெல்லாநூல்களையு மோதாதுணர்ந்த ஆளுடையபிள்ளையா ரருளிச்செய்ய ; சிந்தையினில் அதுதெளிந்த புத்தர்சண்டைத் திருமறையோர் சேவடிக்கீழ்ச்சென்று தாழ்ந்தார் = தம்மனத்தி லதனையுணர்ந்து புத்தர்களெல்லாரும் சீகாழியி லவதரித்த பிள்ளையாரது சிவந்த திருவடிக்கீழடைந்து வணங்கினர்கள்.—எ-று.

அகிலமென்றதனாற் சித்திகூறும் அதிமார்க்கநூலுங் கொள்க. எனவேமுற்கூறிய நால்வகை ஞானமும் உணர்ந்தமை போந்தவாறுகாண்க-எ-று

அன்றவர்க்குக் கவுணியர்கோன் கருணைநோக்க மணைதலினலறிவின்மை யகன்றுநீங்கி, முன்றொழுது விழுந்தெழுந்து சைவரானர் முகைமலர்மா ரியின்வெள்ளம் பொழிந்ததெங்கு, மின்றனவுஞ் சரிப்பனவுஞ் சைவமேயா நிலைமையவர்க் கருள்செய்து சண்பைவேந்தர், சென்றுசிவ ணூர்பதிகள் பணியவேண்டித் திருக்கடவூ ரதன்மருங்கு சேரவந்தார்.

(இ-ள்.) அன்று அவர்க்குக் கவுணியர்கோன் கருணைநோக்கம் அணைதலினல் அறிவின்மை அகன்று நீங்கி=அப்பொழுது அப்புத்தர்களுக்குப் பிள்ளையார் திருவருட்பார்வை பொருந்துதலினல் தமதறியாமையி னின்றும் நீங்கி ; முன்தொழுது விழுந்தெழுந்து சைவரானர் = திருமுன்பு தொழுது

Koviloor Digital Library

பணிந்தெழுந்த சைவராளுர்கள்; எங்கும் மூகைமலர்மாரியின் வெள்ளம் பொழிந்தது=எவ்விடத்தும் அரும்பவிழ்ந்த பூமழைபொழிந்தது; நின்றனவும் சரிப்பனவும் சைவமேயாம் நிலைமை அவர்க்கருள்செய்து=உலகின்கண் நிற்பனவான தாவரங்களுஞ் சரிப்பனவான சங்கமங்களுஞ் சிவசம்பந்தமேயாமென்னும் நிலைமையை அப் புத்தர்களுக் கருள்செய்து; சண்பைவேந்தர் சென்று சிவனூர்பதிகள் பணியவேண்டித் திருக்கடவூர தன்மருங்கு சேரவந்தார்=ஆளுடையபிள்ளையாரக்கு நின்றெழுந்தருளிச் சிவபெருமானெழுந்தருளியதிருப்பதிகளைவணங்க விரும்பித்திருக்கடவூரின் பக்கத்துப்பொருந்த வந்தருளினர்.—எ-று. (கூஉகூ)

வேறு.

அந்நகரி லடியார் களெதிர்கொள்ளப் புக்கருளிக்
கொன்னவிலுங் கூற்றுதைத்தார் குரைகழல்கள் பணிந்தேத்தி
மன்னியமர்ந் துறையுநாள் வாகீச மாமுனிவ
ரெந்நகரி லெழுந்தருளிற் றென்றடியார் தமைவினவ.

(இ-ள்.) அந்நகரில் அடியார்கள் எதிர்கொள்ளப்புக்கருளி=அத்திருக்கடவூரி லடியவர்கள் தம்மை யெதிர்கொள்ளும்படியாக அத்திருப்பதியிற் புகுந்தருளி; கொன்னவிலும் கூற்று உதைத்தார் குரைகழல்கள் பணிந்து ஏத்தி=மேன்மைமிக்க இயமனையுதைத்த அமிர்தகடேசரது ஒலிக்கின்ற வீரக்கழல்களணிந்த திருவடிகளைவணங்கித் துதித்து; மன்னியமர்ந்து உறையும்நாள் = அத்திருப்பதியில் நிலைபெற்றுப் பிள்ளையா ரெழுந்தருளியிருக்கும் நாளில்; வாகீசமாமுனிவர் எந்நகரில் எழுந்தருளிற்று என்று அடியார்தமை வினவ=ஆண்ட அரசு எத்திருப்பதியி லெழுந்தருளியிருந்ததென்று அடியார் கூட்டத்தை வினவியருளுங்கால்.—எ-று. (கூஉஎ)

அங்கவரு மடிபோற்றி யாண்டவர செழுந்தருளிப்
பொங்குபுனற் பூந்துருத்தி நகரின்கட் போற்றிசைத்துத்
தங்குதிருத் தொண்டுசெயு மகிழ்ச்சியினாற் சார்ந்தருளி
யெங்குநிகழ்ந் திடவிருந்த படியெல்லா மியம்பினர்.

(இ-ள்.) அங்கவரும் அடிபோற்றி = அவ்வடியார்களும் பிள்ளையார் திருவடியைவணங்கி; ஆண்ட அரசு எழுந்தருளி = வாகீசமுனிவ ரெழுந்தருளி; பொங்குபுனற் பூந்துருத்தி நகரின்கட்போற்றிசைத்து = பொலிவுபொருந்திய நீர்சூழ்ந்த திருப்பூந்துருத்தி நகரின்கண் சிவபெருமானைத்துதித்து; தங்கு திருத்தொண்டுசெய்யும் மகிழ்ச்சியினாற் சார்ந்தருளி = நிலைபெற்ற திருத்தொண்டுசெய்யுங் களிப்பால் அங்கிருந்தருளி; எங்கும் நிகழ்ந்திட இருந்தபடியெல்லாம் இயம்பினர்=எவ்விடத்தும் புகழ்பெருகவிருந்த வண்ணமெல்லா மெடுத்துக்கூறினார்கள்.—எ-று. (கூஉஅ)

Koviloor Digital Library

அப்பரிசங் கவர்மொழிய வாண்ட வரசினைக்காணு
மொப்பரிய பெருவிருப்பு மிக்கோங்க வொளிபெருகு
மைப்பொருவு கறைக்கண்டர் கழல்வணங்கியருள்பெற்றுச்
செப்பரிய புகழ்ப்புகலிப் பிள்ளையார் செல்கின்றார்.

(இ-ள்.) அப்பரிசு அங்கவர்மொழிய = அவ்வாறு அவ்வடியார்கள் கூற; ஆண்ட அரசினைக்காணும் ஒப்பரிய பெருவிருப்பு மிக்கோங்க=வாகீச முனிவரைத் தாிசிக்கு மொப்பில்லாத பெருங்காதல் மேம்பட; ஒளிபெருகும் மைப்பொருவு கறைக்கண்டர் கழல்வணங்கி அருள்பெற்று=ஒளிமிக்க மேகம்போலுங் கரியகண்டத்தையுடைய அமுர்தகடேசரது திருவடிகளை வணங்கி அவர் அருள்பெற்று; செப்பரிய புகழ்ப்புகலிப் பிள்ளையார்செல்கின்றார் = சொல்லுதற்கரிய புகழையுடைய சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார் திருக்கடவூரினின்று மெழுந்தருளுவாராயினார்.—எ-று. (கூஉகூ)

பூவிரியுந் தடஞ்சோலைப் புடைபரப்பப் புனல்பரக்குங்
காவிரியின் றென்கரைபோய்க் கண்ணுதலார் மகிழ்ந்தவிட
மேவியினி தமர்ந்திறைஞ்சி விருப்புறுமெய்த் தொண்டரொடு
நாவரச ருழைச்சண்பை நகரரசர் நண்ணுவார்.

(இ-ள்.) பூவிரியும் தடஞ்சோலை புடைபரப்பப்புனல்பரக்கும்=மலர்கள் விரியும் பெரியசோலைகளின் பக்கங்களில் பரவும்படி நீரைச் சூழச்செய்யும்; காவிரியின் தென்கரைபோய் = காவிரியினது தென்கரையின்மேற் சென்று; கண்ணுதலார் மகிழ்ந்த இடம் மேவி இனிது அமர்ந்து இறைஞ்சி= சிவபெருமானெழுந்தருளிய திருப்பதிகளையடைந்து இனிதாக அன்புகூர்ந்து வணங்கி; விருப்புறுமெய்த் தொண்டரொடு நாவரசருழைச் சண்பைநகர் அரசர் நண்ணுவார்=பேரன்பினையுடைய அடியார் திருக்கூட்டத்தோடு திருநாவுக்கரசரிடத்துச் சீகாழிநகரரசராகிய பிள்ளையார் சென்றருளுவாராயினார்.எ-று

அந்தணர் சூளாமணியார் பூந்துருத்திக் கணித்தாக
வந்தருளும் பெருவார்த்தை வாகீசர் கேட்டருளி
நந்தமையா ளுடையவரை நாமெதிர்சென் றிறைஞ்சுவது
முந்தைவினைப் பயனென்று முகமலர வகமலர்வார்.

(இ-ள்.) அந்தணர் சூளாமணியார் பூந்துருத்திக் கணித்தாக=மறையவர் சிரோமணியாகிய பிள்ளையார் திருப்பூந்துருத்திக்குச் சமீபமாக; வந்தருளும் பெருவார்த்தை வாகீசர்கேட்டருளி=எழுந்தருளிவரும் பெருவார்த்தையை ஆண்ட அரசர்கேட்டருளி; நந்தமை ஆளுடையவரை நாம் எதிர்சென்று இறைஞ்சுவது = நம்மையாளாகவுடைய பிள்ளையாரைநாம் எதிர்கொண்டு வணங்குவது; முந்தைவினைப்பயனென்று முகம்மலர அகம்மலர்வார் = முன்செய்த நல்வினைப்பேறென்று முகமலர்ச்சியடைய மனமகிழ்வாராய்.—எ-று. (கூகஉ)

Koviloor Digital Library

எதிர்சென்று பணிவனென வெழுகின்ற பெருவிருப்பா
னதிதங்கு சடைமுடியார் நற்பதங்க டொழுதந்தப்
பதிநின்றும் புறப்பட்டுப் பரசமயஞ் சிதைத்தவர்பான்
முதிர்கின்ற பெருந்தவத்தோர் முன்னெய்த வந்தணைந்தார்.

(இ-ள்.) எதிர்சென்று பணிவன் என எழுகின்ற பெருவிருப்பால் = பிள்ளையாரை எதிர்கொண்டு வணக்குவேனென்று எழாநின்ற பெருங்காதலால்; நதி தங்குசடைமுடியார் நற்பதங்கள்தொழுது = கங்காநதிதங்கிய சடைமுடியையுடைய பொய்யிலியாரது திருவடிகளைவணங்கி; அந்தப்பதிநின்றும் புறப்பட்டு = அத்திருப் பூந்தருத்தியினின்று மெழுந்தருளி; பரசமயம் சிதைத்தவர்பால் முதிர்கின்ற பெரும்தவத்தோர் முன்எய்தவந்து அணைந்தார் = பரசமயங்களைக்கெடுத்த ஆளுடைய பிள்ளையாரிடத்து மிக்கபெரியதவத்தினையுடைய ஆண்ட அரசர் அப்பிள்ளையார் திருமுன்புவந்தடைந்தருளினார்.—எ-று. (ருகூஉ)


திருச்சின்னம் பணிமாறக் சேட்டநாற் றிசையுள்ளோர்
பெருக்கின்ற வார்வத்தாற் பிள்ளையார் தமைச்சூழ்ந்த
நெருக்கினிடை யவர்காறு வகைநிலத்துப் பணிந்துள்ள
முருக்கியெழு மனம்பொங்கத் தொண்டர்குழாத் துடனணைந்தார்.

(இ-ள்.) திருச்சின்னம் பணிமாறக்கேட்ட நாற்றிசை உள்ளோர் = காளஞ்சின்னந் தாரையென்றுந் திருச்சின்னமூன்றும் ஆளுடையபிள்ளையார் திருநாமங்களைப் பணிமாறக்கேட்ட நான்குதிக்கிலுள்ளோரும்; பெருக்கின்ற ஆர்வத்தால் பிள்ளையார் தமைச்சூழ்ந்த நெருக்கினிடை = அதிகரிக்கின்ற விருப்பால் பிள்ளையாரைத் தரிசிக்கும்படிச் சுற்றிய நெருக்கில்; அவர்காறுவகை நிலத்துப்பணிந்து = பிள்ளையார் காணுதவண்ணம் பூமியிலேவணங்கி; உள்ளம் உருக்கியெழும் அன்பு ஓங்க = மனசையுருக்கி யெழாநின்ற அன்புமேம்பட; தொண்டர்குழாத்துடன் அணைந்தார் = அடியார் கூட்டத்துடன் சென்றருளினார்.—எ-று. (ருகூகூ)

வந்தணைந்த வாகிசர் வண்புகலி வாழ்வேந்தர்
சந்தமணித் திருமுத்தின் சிவிகையினைத் தாங்கியே
சிந்தைகளிப் புறவந்தார் திருஞான சம்பந்தர்
புந்தியினில் வேறொன்று நிகழ்ந்திடமுன் புகல்கின்றார்.


(இ-ள்.) வந்து அணைந்த வாகிசர் வண்புகலிவாழ்வேந்தர் = பிள்ளையார் திருமுன் திருக்கூட்டத்தை வந்துசேர்ந்த வாகீசமுனிவர் வளம்பொருந்திய புகலியின் கண்வாழும் தலைவராகிய ஆளுடையபிள்ளையாரது; சந்த மணித்திரு முத்தின்சிவிகையினைத்தாங்கியே = அழகிய வரிசையான முத்தாலாய சிவிகையைத்தாமுந் தாங்கிக்கொண்டு; சிந்தைகளிப்புறவந்தார் திருவு

Koviloor Digital Library



திருஞானசம்பந்தசுவாமிகள் திருப்பூந்துருத்திக்கெழுந்தருளும் போது அங்குள்ள அப்பர்சுவாமிகள் எதிர்சென்று அவரது சிவிகையைத்தாங்கியது.

Koviloor Digital Library



முத்துச் சிவிகையைத் தாங்கிய அப்பர் சுவாமிகளது அருமை யைக்கண்ட திருஞானசம்பந்தர் அப்பரைத்தழுவியது.

Koviloor Digital Library

ள்ளைக்களிப்போடு வந்தருளினர்; திருஞானசம்பந்தர் புந்தியினில் வேறொன்று நிகழ்ந்திடமுன் புகல்கின்றார் = ஆளுடையபிள்ளையார் திருவுள்ளத்து ஆண்ட வரசெங்கிருக்கின்றாரொன்று ஓரையம் நிகழ்வுழி முன்னின்றாரை நோக்கி வினவுவாராயினர்.—எ-று. (சுசுச)

அப்பர்தா மெங்குற்றா ரிப்பொழுதென் றருள்செய்யச்
செப்பரிய புகழ்த்திருநா வுக்கரசர் செப்புவா
ரொப்பரிய தவஞ்செய்தே னதலினா லும்மடிக
ளிப்பொழுது தாங்கிவரப் பெற்றுய்ந்தேன் யானென்றார்.

(இ-ள்.) அப்பர்தாம் எங்குற்றார் இப்பொழுதென்று அருள்செய்ய= வாகிசர் இப்பொழுது எவ்விடத்திருக்கின்றாரொன்று அடியார்களை வினவியருள; செப்பரியபுகழ்த்திருநாவுக்கரசர்செப்புவார் = அப்பொழுது சொல்லுதற்கரிய புகழையுடைய வாகிசமுனிவர் அருளிச்செய்கின்றார்; ஒப்பரியதவம் செய்தேன் ஆதலினால்=ஒப்பில்லாததவத்தைச்செய்தேனதனால்; உம்மடிகள் இப்பொழுது தாங்கிவரப்பெற்று உய்ந்தேன் யான் என்றார்=உமது திருவடிகளை இப்பொழுது சுமந்துவரும்படி பெற்று அதனால் அடியேனுய்ந்தேனென்றருளிச்செய்தார்.—எ-று. (சுசுரு)

அவ்வார்த்தை கேட்டஞ்சி யவனியின்மே லிழிந்தருளி
யிவ்வாறு செய்தருளிற் றென்னுமென் றிறைஞ்சுதலுஞ்
செவ்வாறு மொழிநாவர் திருஞான சம்பந்தர்க்
கெவ்வாறு செயத்தகுவ தென்றெதிரே யிறைஞ்சுதலும்.

(இ-ள்.) அவ்வார்த்தைகேட்டு அஞ்சி = அத்திருவார்த்தையைக்கேட்டுப் பிள்ளையாரச்சமுற்று; அவனியின்மேல் இழிந்தருளி=(திருச்சிவிகையினின்றும்) பூமியிலிழிந்தருளி; இவ்வாறு செய்தருளிற்று என்னும் என்று இறைஞ்சுதலும்=தேவரிவ்வகைசெய்தருளியது அடியேனுக்கு எவ்வாறான குற்றத்தை விளைக்கத்தக்கதென்று ஆண்ட அரசைவணங்கவும்; செவ்வாறுமொழி நாவர் திருஞானசம்பந்தர்க்கு = செப்பமான மதுரமொழியையருளிச் செய்யும் நாவையுடைய அப்பர்சுவாமிகள் திருஞானசம்பந்தருக்கு; எவ்வாறு செயத்தகுவது என்று எதிரே இறைஞ்சுதலும்=அடியேன் இச்சிவிகை தாங்குதலன்றி வேறு பணியாது செய்யத்தகுவதென்று கூறிப் பிள்ளையாரெதிரே வணங்கவும்.—எ-று. (சுசுசு)

சூழ்ந்துமிடைந் தருகணையுந் தொண்டரெல்லா மதுகண்டு
தாழ்ந்துநில முறவணங்கி யெழுந்துதலைக் கைகுவித்து
வாழ்ந்துமனக் களிப்பினராய் மற்றிவரை வணங்கப்பெற்
றாழ்ந்தபிறப் புய்ந்தோமென் றண்டமெல்லா முறவார்த்தார்.

(இ-ள்.) சூழ்ந்துமிடைந்து கருகணையும் தொண்டரெல்லாம் அருகண்மி=அருகிற்சூழ்ந்து நெருங்கிவருமடியார்களெல்லா மதனைக்கண்டு; தாழ்ந்து நிலமுறவணங்கி எழுந்து அஞ்சலிக்கைகுவித்து=நிலத்திற் பொருந்தவிழுந்து வணங்கிச் சிரசிலே திருக்கரங்களைக்குவித்து (அதனுல்); வாழ்ந்து மனக்களிப்பினராய்=வாழ்வடைந்து மனக்களிப்புடையவராய்; மற்றிவரைவணங்கப்பெற்று ஆழ்ந்தபிறப்பு உய்ந்தோமென்று ஆண்டமெல்லாம் உற ஆர்த்தார்=இவ்வாகீசமுனிவரை நாம் வணங்கப்பெறுதலா லாழமான பிறவிக்கடலினின்றுங் கரையேறப்பெற்றோமென்று கூறி யண்டங்களெல்லாம் (அரவென்றுமோசை) யுறும்படி யாரவாரித்தார்கள். (கூகஎ)

திருஞான சம்பந்தர் திருநாவுக் கரசர்தமைப்
பெருகார்வத் தொடுமணைந்து தழீஇக்கொள்ளப் பிள்ளையார்
மருவாரு மலரடிகள் வணங்கியுடன் வந்தணைந்தார்
பொருவாரும் புனற்சடையார் மகிழ்ந்ததிருப் பூந்துருத்தி.


(இ-ள்.) திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர்தமை=ஆளுடையபிள்ளையார் வாகீசமுனிவரை; பெருகு ஆர்வத்தொடும் அணைந்து தழீஇக்கொள்ள=மிக்கவாசையோடுஞ் சமீபித்துக்கட்டித் தழுவிக்கொள்ள; பிள்ளையார் மருவாரும் மலரடிகள் வணங்கி உடன்=பிள்ளையாரது வாசனைபொருந்திய தாமரைமலர்போன்ற திருவடிகளைவணங்கும் வாகீசமுனிவருடன்; பொருவாரும் புனற்சடையார் மகிழ்ந்த திருப்பூந்துருத்தி வந்தணைந்தார்=கரைமோதுதலைச்செய்யுங் கங்கையையணிந்த சடாமுடியையுடைய பொய்யிலியாரெழுந்தருளிய திருப்பூந்துருத்தியையடைந்தருளினர்.—எ-று. (கூகஅ)

அன்பர்குழாத் தொடுஞ்செல்வா ராளேற்றூர் மகிழ்கோயின்
முன்பணித் தாகச்சென்று கோபுரத்தை முன்னிறைஞ்சித்
துன்பமிலாத் திருத்தொண்ட ருடன்றொழுது புக்கருளி
யென்புருக வலங்கொண்டு பணிந்தேத்தி யிறைஞ்சினார்.

(இ-ள்.) அன்பர் குழாத்தொடும் செல்வார் = அடியார்கூட்டத்துடனேயுஞ் செல்லும் ஆளுடையபிள்ளையார்; ஆன் ஏற்றூர்மகிழ்கோயில் முன்பு அணித்தாகச்சென்று=பொய்யிலியாரெழுந்தருளிய திருக்கோயிலின் முன்புசமீபமாகவெழுந்தருளி; கோபுரத்தை முன் இறைஞ்சி = திருக்கோபுரத்தை முன்னேவணங்கி; துன்பம் இலாத் திருத்தொண்டருடன் தொழுது புக்கருளி = நமக்கொருநீதிநாள் துயரிலாத திருத்தொண்டர்களுடன்வணங்கி யுள்ளே புகுந்தருளி; என்பு உருகவலங்கொண்டு பணிந்து ஏத்தி இறைஞ்சினார் = என்புமெல்லுருகும்படி வலமாகவந்து வணங்கிப் பதிகம்பாடித் துதித்தருளினார்.—எ-று. (கூகக)

பொய்யிலியா ரைப்பணிந்து போற்றியே புறத்தணைவார்
செய்யசடை யார்கோயிற் றிருவாயின் முன்னாக

Koviloor Digital Library



பரசமயகோளரியார் திருவோத்தூரிற் செழுந்தருளுகையில் அங் குள்ள சிவனடியாரிலொருவர் சிவபணிவிடைக்கிட்ட பனைவி
த்துகளெல்லாம் ஆண்பனையாயிருப்பதுகண்ட சமணர்களிகழ்ந்து பேசுவதை சுவாமிகளிடம் விண்ணப்பஞ்செய்துகொண்டது.

Koviloor Digital Library

மையறுசீர்த் தொண்டர்குழாம் வந்துபுடை சூழவுல
குய்யவரு வார்தங்க ளுடன்மகிழ்ந்தங் கினிதிருந்தார்.

(இ-ள்.) பொய்யிலியாரைப்பணிந்துபோற்றியே புறத்து அணைவார் =திருப்பூந் துருத்தியிலெழுந்தருளிய பொய்யிலியென்னுந் திருநாமத்தையுடைய பெருமானைவணங்கித் துதித்துப் புறத்தெழுந்தருளுவாராகிய ஆளுடையபிள்ளையாரும்; செய்யசடையார் கோயிற்றிருவாயில் முன்னாக=சிவந்தசடையையுடைய பொய்யிலியாரது திருக்கோயிற்றிருவாயிலின்முன்பு; மையறுசீர்த்தொண்டர் குழாம்வந்து புடைசூழ=குற்றமற்ற புகழையுடைய திருவடியார் கூட்டந் தம்மைவந்து மருங்கிற்சூழ; உலகு உய்யவருவார்= வாகீசமுனிவரும்; தங்களுடன்மகிழ்ந்து அங்கு இனிது இருந்தார் = தம்முடன் கலந்து மகிழ்கூர்ந்து அவ்விடத்தினிதாக எழுந்தருளியிருந்தார்கள்.—எ-று.

புறத்தணைவாரு முய்யவருவாருந் தொண்டர்குழாம்வந்து புடைசூழத் தங்களுடன் மகிழ்ந்திருந்தாரெனக் கூட்டுக. (௬௪0)

வேறு.

வாக்கின் றனிமன்னர் வண்புகலி வேந்தர்தமைப்
போக்கும் வரவும் வினவப் புகுந்ததெல்லாந்
தூக்கின் றமிழ்விரகர் சொல்லிறந்த ஞானமறை
தேக்குந் திருவாயாற்செப்பி யருள்செய்தார்.

(இ-ள்.) வாக்கின் தனிமன்னர் வண்புகலிவேந்தர்தமைப் போக்கும் வரவும் வினவ = திருநாவுக்கரசர் வளம்பொருந்திய சீகாழித்தலைவராகிய ஆளுடைய பிள்ளையாரை மதுரைக் கெழுந்தருளிய செலவையுமங்கு நின்று மீண்டெழுந்தருளும் வரவையும் வினவியருள; புகுந்த எல்லாம் தூக்கின் தமிழ்விரகர் சொல்லிறந்த ஞானமறை தேக்கும் திருவாயாற்செப்பி அருள் செய்தார் = அங்குநிகழ்ந்த செய்திகளையெல்லாம் ஆராய்தலின் மிக்க முத்தமிழ் விரகராகிய ஆளுடையபிள்ளையார் சொல்வளம் நிறைந்த ஞானமயமான வேதங்கள் நிறைந்து தெவிட்டுந் திருவாயினாற் சொல்லியருளினார்.—எ-று.

காழி யினில்வந்த கவுணியர்தம் போரேற்றை
யாழிமிசைக் கன்மிதப்பின் வந்தா ரடிவணங்கி
வாழிதிருத் தொண்டென்னும் வான்பயிர்தா னோங்குதற்குச்
சூழும் பெருவேலி யானீ ரெனத்தொழுதார்.

(இ-ள்.) காழியினில்வந்த கவுணியர்தம்போர் ஏற்றை = சீகாழியிலவதரித்த கவுணியகுலத் தலைவரான ஆளுடையபிள்ளையாரை; ஆழிமிசைக்கல் மிதப்பின் வந்தார் அடிவணங்கி=கடலில் கற்றூணாகிய புணையில்வந்து கரையேறின ஆண்ட அரசர் திருவடிகளை வணங்கி; வாழிதிருத்தொண்டென்னும்

Koviloor Digital Library

டான்பயிர்தான் ஓங்குதற்கு=சிவபெருமானது திருத்தொண்டென்னும் பெரியபயிர்தழைத்தற்கு ; சூழும் பெருவேலியானீர் எனத்தொழுதார் = சூழ்ந்த பெரியவேலியானீரென்று வணங்கினார்.—எ-று. (௬௯௨)

பிள்ளையார் தாமுமவர் முன்றொழுது பேரன்பின்
வெள்ள மனையபுகழ் மானியார் மேன்மையையுங்
கொள்ளும் பெருமைக் குலச்சிறையார் தொண்டினையு
முள்ள பரிசெல்லா மொழிந் தங்குவந்திருந்தார்.

(இ-ள்.) பிள்ளையார்தாமும் அவர் முன்தொழுது = ஆளுடையபிள்ளையாரும் அவர்வணங்குமுன் தாம்வணங்கி ; பேரன்பின் வெள்ளம் அனைய புகழ்மானியார் மேன்மையையும் = பெரிய அன்பின் வெள்ளம்போலும் புகழ்நிறைந்த பாண்டிமாதேவியாரது மேன்மையையும் ; கொள்ளும்பெருமைக் குலச்சிறையார் தொண்டினையும்=மேன்மையமைந்த குலச்சிறைநாயனாரது திருத்தொண்டையும் ; உள்ளபரிசெல்லாம் மொழிந்து அங்கு உவந்து இருந்தார்=உள்ளபடியே யெல்லாவற்றையுங் கூறியருளி யவ்விடத்தெழுந்தருளியிருந்தார்.—எ-று. (௬௯௩)


தென்னற் குயிரோடு நீறளித்துச் செங்கமலத்
தன்ன மனையார்க்கு மமைச்சர்க்கு மன்பருளித்
துன்றுநெறி வைதிகத்தின் றூநெறியே யாக்குதலான்
மன்றுபுகழ் வாகீசர் கேட்டு மனமகிழ்ந்தார்.

(இ-ள்.) தென்னற்கு உயிரோடு நீறு அளித்துச் செங்கமலத்து அன்னம் அனையார்க்கும் அமைச்சர்க்கும் அன்பு அருளி = பாண்டியற்கு (சுரரோயால் வியாது)உயிருடன் விபூதியைக் கொடுத்துச் செந்தாமரையில் வாழு மன்னம்போலும் பாண்டிமாதேவியாருக்குங் குலச்சிறை நாயனாருக்கு முன்றுள்ளவன்பைப் பெருக்கியருளி ; துன்றும்நெறி வைதிகத்தின் தூநெறியே ஆக்குதலால்=நிலைபெற்ற முத்திநெறியானது வேதசார சைவநெறியேயாகச்செய்தலால் ; மன்றுபுகழ்வாகீசர்கேட்டு மனமகிழ்ந்தார் = நிலைபெற்ற புகழையுடைய ஆண்ட அரசர்கேட்டு மனமகிழ்ச்சி யடைந்தார்.—எ-று. ()

சொல்லின் பெருவேந்தர் தொண்டைவள நாடெய்தி
மல்கும் புகழ்க்காஞ்சி யேகாம் பரமன்னுஞ்
செல்வர் கழல்பணிந்து சென்றதெல்லாஞ் செப்புதலும்
புல்குநூன் மார்பரும் போய்ப் போற்ற மனம்புரிந்தார்.

(இ-ள்.) சொல்லின்பெருவேந்தர் தொண்டைவளநாடெய்தி=வாகீசமுனிவர் வளம்பொருந்திய தொண்டைநாட்டையடைந்து ; மல்கும் புகழ்க் காஞ்சி ஏகாம்பரம்மன்னும் செல்வர்கழல்பணிந்து=நிலைபெற்றபுகழையுடைய காஞ்சிபுரத்தி லேகாம்பரத்தி லெழுந்தருளிய திருவேகம்பரது திருவடிகளை

Koviloor Digital Library



திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகமோதி அவ்வாண்ப னையைப் பெண்பனையாக்கியது.

Koviloor Digital Library

வணங்கி ; சென்றதெலாம் செப்புதலும் = அங்கு நிகழ்ந்த சரிதங்களையெல்லாங் கூறியருளவும்; புல்குநூல் மார்பரும் போய்ப்போற்ற மனம்புரிந்தார் = எக்கியோப வீதம்பொருந்திய திருமார்பையுடைய பிள்ளையாரும் அத்திருப்பதியிற் சென்று வணங்கத்திருவுள்ளத்திற் கொண்டருளினார்.—எ-று. (௬சரு)

அங்கணனைப் போற்றி யெழுந்தாண்ட வரசமர்ந்த
பொங்கு திருமடத்திற் புக்கங் கினிதமர்ந்து
திங்கட் பகவணியுஞ் சென்னியார் சேவடிக்கீழ்த்
தங்கு மனத்தோடு தாள்பரவிச் செல்லுநாள்.

(இ-ள்.) அங்கணனைப்போற்றி எழுந்து ஆண்ட அரசு அமர்ந்த = பொய்யிலியானைத் துதித்து எழுந்து திருநாவுக்கரச ரெழுந்தருளிய ; பொங்குதிருமடத்தில் புக்கு அங்கு இனிது அமர்ந்து=விளங்குந்திருமடத்திற் சென்று மகிழ்கூர்ந் திருந்தருளி ; திங்கட்பகவு அணியும் சென்னியார் சேவடிக்கீழ் = இளம்பிறையணிந்த திருமுடியையுடைய பொய்யிலியாரது திருவடிக்கீழ் ; தங்கும் மகிழ்வோடுதாள் பரவிச்செல்லும் நாள் = நிலைபெற்ற மனத்துடன் அவரது திருவடிகளைவணங்கிச் செல்லும் நாளில்.—எ-று. (௬சசு)

வாகீச மாமுனிவர் மன்னுதிரு வாலவாய்
நாக மனைக்கசைத்த நம்பர் கழல்வணங்கப்
போகும் பெருவிருப்புப் பொங்கப் புகலியின்மே
லேகும் பெருங்காதல் பிள்ளையா ரேற்றெழுவார்.

(இ-ள்.) வாகீசமாமுனிவர் மன்னு திரு ஆலவாய்=திருநாவுக்கரசர் நிலைபெற்ற திருவாலவாயிலெழுந்தருளிய ; நாகம் அரைக்கு அசைத்த நம்பர்கழல் வணங்க = பாம்பைக்கச்சாகக்கட்டிய சுந்தரேசரது திருவடிகளை வணங்கும்படி ; போகும் பெருவிருப்புப்பொங்க=செல்லும் பெருவிருப்பானது மேற்கொள்ள ; புகலியின்மேல் ஏகும் பெருங்காதல் பிள்ளையார் ஏற்று எழுவார்=தாம் சீகாழியிற்செல்லும் பெருவிருப்பை மேற்கொண்டு பிள்ளையார் செல்வாராயினார்.—எ-று. (௬சஎ)

பூந்துருத்தி மேவும் புனிதனைமைப் புக்கிறைஞ்சிப்
போந்து திருவாயிற் புறத்தணைந்து நாவினுக்கு
வேந்தர் திருவுள்ள மேவவிடை கொண்டருளி
யேந்தலா ரெண்ணிறந்த தொண்டருட னேகினார்.

(இ-ள்.) பூந்துருத்திமேவும் புனிதனைமைப்புக்கு இறைஞ்சி=திருப்பூந்துருத்தியிலெழுந்தருளிய பொய்யிலியானைச்சென்று வணங்கி ; போந்து திருவாயிற்புறத்து அணைந்து = திருவாயிலின்புறத்துச் சென்றடைந்து ; நாவினுக்கு வேந்தர் திருவுள்ளம் மேவவிடைகொண்டருளி = திருநாவுக்கரசு

Koviloor Digital Library

திருவுள்ளத்திற் பொருந்த விடைபெற்றருளி; வந்தலார் எல்லாவிறந்த தொண்டருடன் ஏகினார்=ஆளுடையபிள்ளையார் அளவில்லாத திருத்தொண்டருடன் எழுந்தருளினார்.—எ-று. (௯௪௮)

மாடு புனற்பொன்னி யிழிந்து வடகரையி
னீடுதிரு நெய்த்தா னமையாறு நேர்ந்திறைஞ்சிப்
பாடுதமிழ் மாலைகளுஞ் சாத்திப் பரவிப்போ
யாடல் புரிந்தார் திருப்பழனஞ் சென்றணைந்தார்.

(இ-ள்.) மாடுபுனற்பொன்னி இழிந்து = பக்கத்திலுள்ள நீர்மயமாகிய காவிரியிலிறங்கி; வடகரையில் நீடு திருநெய்த்தானம் ஐயாறு நேர்ந்து இறைஞ்சி = அக்காவிரியின் வடகரையிலுள்ள திருநெய்த்தானத்தையுந்திருவையாற்றையுஞ் சென்றுவணங்கி; பாடுதமிழ்மாலைகளும் சாத்திப் பரவிப்போய் = பாடுகின்ற செந்தமிழ்த் திருமாலைகளைச் சாத்தித் துதித்துச்சென்று; ஆடல் புரிந்தார் திருப்பழனம்சென்று அணைந்தார் = ஆனந்த நிருத்தஞ்செய்தருளும் ஆப்தசகாயரெழுந்தருளிய திருப்பழனத்தைச் சென்றருளினார் - எ-று.

செங்கண் விடையார் திருப்பழனஞ் சேர்ந்திறைஞ்சிப்
பொங்கிய காதலின்முன் போற்றும் பதிபிறவுந்
தங்கிப்போய்ச் சண்பைநகர் சார்ந்தார் தனிப்பொருப்பின்
மங்கை திருமுலைப்பா லுண்டருளும் வள்ளலார்.

(இ-ள்.) செங்கண்விடையார் திருப்பழனம்சேர்ந்து இறைஞ்சி= சிவந்தகண்ணையுடைய இடபத்தை வாகனமாகக்கொண்ட ஆப்தசகாயரது திருப்பழனமென்னுந் திருப்பதியையடைந்து வணங்கி; பொங்கியகாதலின் முன் போற்றும் பதிபிறவும் தங்கிப்போய் = மிக்க காதலோடு முன்னேதுதித்த பிறதிருப்பதிகளிலும் வசித்தெழுந்தருளி; தனிப்பொருப்பின் மங்கை திருமுலைப்பால் உண்டருளும் வள்ளலார் சண்பைநகர் சார்ந்தார் = ஒப்பற்ற மலையரையன் புத்திரியாகிய உமாதேவியார் திருமுலைப்பாலையுண்டருளிய ஆளுடையபிள்ளையார் சீகாழியையடைந்தருளினார்.—எ-று. (௧௫௦)

தென்னாட் டமணா சறுத்துத் திருநீறே
யந்நாடு போற்றுவித்தார் வந்தணையும் வார்த்தைகேட்
டெந்நாட் பணிவதென வெற்றெழுந்த மாமறையோர்
முன்னாகவேத முழங்க வெதிர்கொண்டார்.

(இ-ள்.) தென்னாட்டு அமண் ஆசு அறுத்து = பாண்டிநாட்டின்கண் நிறைந்த சமணராகிய குற்றத்தைப்போக்கியருளி; திருநீறே அந்நாடு போற்றுவித்தார் வந்து அணையும் வார்த்தைகேட்டு = விபூதிசாதனத்தை யப்பாண்டி நாட்டிலுள்ளவரும் போற்றச்செய்த பிள்ளையார் எழுந்தருளும் வார்த்தையைக்

Koyiloor Digital Library

கேள்வியுற்று ; எந்நாள் பணிவதென ஏற்றெழுந்த மாமறையோர்=எப்பொழுது பிள்ளையாரைவணங்குவதென்று மேற்கொண்டெழுந்த பெருமைபொருந்திய மறையவர்கள் ; முன்னாகவேதம் முழங்க எதிர்கொண்டார்=பிள்ளையார் முன்பாகவேதங்களொலிக்கும்படி யெதிர்கொண்டார்கள். (௬௫௧)

வேறு.

போதநீடுமா மறையவரெதிர்கொளப் புகலிகாவலருந்தஞ்
சீதமுத்தணி சிவிகைநின்றிழிந்தெதிர் செல்பவர் திருத்தோணி
நாதர்கோயின்முன் றோன்றிடநகைமலர்க் கரங்குவித்திறைஞ்சிப்போ
யோதநீரின்மே லோங்குகோயிலின்மணிக் கோபுரஞ்சென்றுற்றார்.

(இ-ள்.) போதம் நீடுமாமறையவர் எதிர்கொள=ஞானமிக்க பெருமைபொருந்திய சீகாழிமறையவரெதிர்கொண்டுவர ; புகலிகாவலருந் தம் சீதமுத்து அணிசிவிகை நின்று இழிந்து எதிர்செல்பவர்=சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையாருந் தமது குளிர்ந்த முத்தாலாகிய திருச்சிவிகையினின்று மிறங்கி யெதிர்செல்பவராய் ; திருத்தோணிநாதர் கோயில்முன் தோன்றிட=தோணியப்பரது திருக்கோயில் தம்முன்னேதோன்ற ; நகை மலர்க் கரம் குவித்து இறைஞ்சிப்போய் = ஒளிபொருந்திய தாமரைமலர்போலுந் திருக்கரங்களைச் சிரசின்மேலே வணங்கிச்சென்று ; ஓத நீரின்மேல் ஓங்கு கோயிலின் மணிக்கோபுரம் சென்று உற்றார்=பிரளயசலத்தின்மே லழியாது மிதந்து தோன்றுந் திருக்கோயிலினது அழகிய கோபுரத்தைச் சென்றடைந்தருளினர்.—எ-று. (௬௫௨)

அங்கமாநிலத் தெட்டுறவணங்கிப்புக் கஞ்சலிமுடியேறப்
பொங்குகாதலிற்புடைவலங்கொண்டுமுன்பணிந்துபோற்றெடுத்தோ
துங்கநீள்பெருந் தோணியாங்கோயிலை யருளினாற்றொழுதேறி [தித்
மங்கையோடுடன் வீற்றிருந்தருளினர் மலர்க்கழல்பணிவுற்றார்.

(இ-ள்.) அங்கம் மாநிலத்து எட்டுறவணங்கிப் புக்கு = பூமியின்கணங்கமெட்டுமுறையே பொருந்த வணங்கியுள்ளே புகுந்து; அஞ்சலிமுடி ஏற=குவித்த கரங்கள் சிரத்தின்மேற்செல்ல ; பொங்குகாதலிற் புடைவலங்கொண்டு=மிக்க பெருவிருப்பால் ஆலயத்தின் மருங்கு வலமாகவந்து ; முன் பணிந்து போற்றெடுத்தோதி = திருமுன்புவணங்கித் துதித்துப் பதிகம் பாடி ; துங்க நீள் பெருந்தோணியாம் கோயிலை அருளினாற்றொழுது ஏறி= உயர்ந்த நீண்ட பெரிய திருத்தோணியென்னும் ஆலயத்தைவணங்கித் திருவருளினால் மேலேயேறி ; மங்கையோடு உடன்வீற்றிருந்தருளினர் மலர்க் கழல் பணிவுற்றார்=பெரியநாயகியாரோடு அங்கு வீற்றிருந்தருளிய தோணியப்பரது தாமரைமலர்போன்ற திருவடியைவணங்கியருளினார்.—எ-று.

அவ்வாலயத்தின்மேல்விமானத்தில் தோணியப்பரெழுந்தருளியிருத்தலால், தொழுதேறியென்றார். (௬௫௩)

Koviloor Digital Library

முற்றுமெய்யெலாம் புளகங்கண்முகிழ்த்தெழ முகந்துகண்களிகூரப்
பற்றுமுள்ள மூள்ளலேத்தெழுமானந்தம் பொழிதரப்பணிந்தேத்தி
யுற்றுமைசேர்வ தெனுந்திருவியமக முவகையாலெடுத்தோதி
வெற்றியாகமீனவனவைவெதிர்நதி மிசைவருகரனென்பார்.

(இ-ள்.) முற்றும் மெய்யெலாம் புளகங்கள் முகிழ்த்தெழ=திருமேனி முழுதும் உரோமாஞ்சித முகிழ்த்துத் தோன்ற ; முகந்து கண்களிகூர = திருக்கோலத்தைத் திருக்கண்கள் முகந்து (அதனால்) மகிழ்ச்சியடைய ; பற்றும் உள்ளம் உள் அலைத்தெழும் ஆனந்தம் பொழிதரப்பணிந்து ஏத்தி = அக்கோலத்திற்பற்றிய திருவுள்ளத்தை யலையச்செய்து அதனுள்ளெழுமானந்த வெள்ளமானது பெருக வணங்கித் துதித்து ; உற்றுமைசேர்வது எனுந் திருஇயமகம் உவகையால் எடுத்தோதி = "உற்றுமைசேர்வது" என்று முதலையுடைய திருவியமகத்தை மகிழ்ச்சியாக வெடுத்துத் துதித்து ; வெற்றியாக மீனவன் அவை எதிர் நதிமிசை வருகரன் என்பார் = தோல்வியில்லாமல் பாண்டியனது சபைக்கெதிரே "நதிமிசைவருகரன்" எனத்திருக்கடைக் காப்பிற்பாடி யருளுவாராயினார்.—எ-று. (கஙச)

திருக்கழுமலம்-திரு-இயமகம்.

திருச்சிற்றம்பலம்.

உற்றுமை சேர்வதுமெய்யினையேயுணர்வது நின்னருண்மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே கனல்விழி காய்வது காமனையே
யற்றமறைப்பது முன்பணியே யமரர்கள் செய்வது முன்பணியே
பெற்று முகந்தது கந்தனையே பிரம புரத்தையுகந்தனையே.

பருமதின் மதுரைம னவையெதிரே பதிகமதெழுதிலை யவையெதிரே
வருநதி யிடைமிசை வருகரனே வசையொடு மலர்கெட வருகரனே
கருதலி னிசைமுரறருமருளே கழுமல மமரிறை தருமருளே
மருவிய தமிழ்விர கன்மொழியே வல்லவர் தம்மிடர் திடமொழியே.

திருச்சிற்றம்பலம்.

சீரின்மல்கிய திருப்பதிகத்தினிற் றிருக்கடைகாப்பேற்றி
வாரின்மல்கிய வனமுலையாருடன் மன்னினார்தமைப்போற்றி
யாருமின்னருள் பெற்றுமீண்டணைபவ ரங்கைபாற்றொழுதேத்தி
யேரின்மல்கியகோயின்முன்பணிந்துபோந்திறைஞ்சினார்மணிவாயில்.

(இ-ள்.) சீரின்மல்கிய திருப்பதிகத்தினில் திருக்கடைக்காப்பு ஏற்றி = சிறப்புமிக்க திருப்பதிகத்திற் றொடங்கிய திருக்கடைக்காப்பை வைத்து ; வாரின்மல்கிய வனமுலையாருடன் மன்னினார்தமைப்போற்றி = வாரோடு

Koviloor Digital Library

பொருந்திய அழகிய திருமுலைகளையுடைய பெரியநாயகியாரோடெழுந்தருளிய தோணியப்பரைத்துதித்து ; ஆரும் இன்னருள்பெற்று மீண்டு அணைபவர் அங்கையாற்றொழுது ஏத்தி = நிறைந்தவினிய திருவருளைப்பெற்று மீண்டுவரும் பிள்ளையார் தமது திருக்கரத்தால் வணங்கித் துதித்து ; ஏரின் மல்கிய கோயில்முன் பணிந்து போந்து இறைஞ்சினர்மணிவாயில்=அழகு நிறைந்த திருக்கோயிலின்முன் வணங்கிச்சென்று அழகிய திருவாயிலைப் பணிந்தருளினார்.—எ-று. (௯௫)

தாதையாருமங் குடன்பணிந்தணைந்திடச் சண்பையார்தனியேறு
மூதெயிற்றிரு வாயிலைத்தொழுதுபோய் முகைமலர்க்குழலார்க
ளாதரித்துவாழ்த் துரையிருமருங்கெழ வணிமறுகிடைச் சென்று
காதலித்தவர்க் கருள்செய்துதந்திரு மாளிகைக்கடைசார்ந்தார்.

(இ-ள்.) தாதையாரும் அங்கு உடன்பணிந்து அணைந்திட = தந்தையாராகிய சிவபாத இருதயரு மவ்விடத்துத் தோணியப்பரைவணங்கித் தம்மோடுவர; சண்பையார்தனி ஏறு மூது எயிற்றிருவாயிலை தொழுதுபோய் = சீகாழியிலுள்ளாரது இளஞ்சிங்கேறுபோன்ற பிள்ளையார் பழையமதில்சூழ்ந்த திருவாயிலை வணங்கிச்சென்று; முகைமலர்க்குழலார்கள் ஆதரித்துவாழ்த்துரை இருமருங்கு எழ = முகையால் மலர்ந்தபூக்களை யணிந்த கூந்தலையுடைய பார்ப்பனமகளிர்கள் விரும்பிவாழ்த்தும் பல்லாண்டொலி யிருபக்கங்களினு முண்டாக ; அணிமறுகிடைச்சென்று = அழகியவீதியினிடத்துச் சென்று ; காதலித்தவர்க்கருள்செய்து தந்திருமாளிகைக் கடைசார்ந்தார் =தம்மைவிரும்பி யடைந்தவர்க்குத் திருவருள்செய்து தமது திருமாளிகையின் முதல்வாயிலை யடைந்தருளினார்.—எ-று. (௯௬)

நறவமார்பொழிற் புகலியினண்ணிய திருஞானசம்பந்தர்
விறலியாருட னீலகண்டப்பெரும் பாணர்க்கு மிகநல்கி
யுறையுளாமவர் மாளிகைச்செலவிடுத் துள்ளணைதரும்போதி
லறலினேர்குழ லார்மணிவிளக்கெடுத் தெதிர்கொளவணையுற்றார்.

(இ-ள்.) நறவம் ஆர் பொழிற்புகலியில் நண்ணிய திருஞானசம்பந்தர் = தேன்பொருந்திய சோலைசூழ்ந்த சீகாழியிலவதரித்த ஆளுடையபிள்ளையார் ; விறலியாருடன் நீலகண்டப் பெரும்பாணர்க்கும் மிகநல்கி=மதங்கசூளாமணியாரோடு திருநீலகண்ட யாழ்ப்பாணருக்கும் மிகவுமருள்செய்து; உறையுளாம் அவர்மாளிகைசெலவிடுத்து உள் அணைதரும்போதில்=அவரிருக்கையாகிய திருமாளிகைக்குச் செல்லும்படி விடைகொடுத்துத் தமது திருமடத்திற் கெழுந்தருளுங்கால் ; அறலின் நேர்குழலார் மணிவிளக்கு எடுத்து எதிர்கொள அணைவுற்றார் = கருமணலையொத்த கூந்தலையுடைய பார்ப்பனமகளிர் மாணிக்கதீபமேந்தி யெதிர்கொள்ளும்படி வந்தடைவாராயினார்-எ-று.

Koviloor Digital Library

அங்கணைந்தரு மறைக்குலத்தாயர்வந் தடிவணங்கிடத்தாமுந்
துங்கநீள்பெருந் தோணியிற்றுயர்தாண் மனங்கொளத்தொழுவாரா
தங்குகாதலி னங்கமர்ந்தருளுநாட்டம்பிரான்கழல்போற்றிப் [ய்த்
பொங்குமின்னிசைத் திருப்பதிகம்பல பாடினார்புகழ்ந்தேத்த.

(இ-ள்.) அங்கு அணைந்து அருமறைக்குலத்தாயர்வந்து அடிவணங்கிட = அங்கு கிட்டித்தம்முடைய மறையவர்குலத் தாயராகிய பகவதியார் வந்து திருவடிகளை வணங்க; தாமுந்துங்க நீள்பெருந் தோணியிற்றுயர் தாள்மனங்கொளத் தொழுவாராய் = தாமு மிகவுமுயர்ந்த திருத்தோணியி லெழுந்தருளிய திருத்தாயார் திருவடிகளைத் தமதுளத்திற் பொருந்தும்படி தொழுவாராய்; தங்கு காதலின் அங்கு அமர்ந்தருளும் நாள்=நிறைந்தவிருப்பத்தோடு அத்திருமாளிகையி லெழுந்தருளியிருக்கும் நாளில்; தம்பிரான்கழல்போற்றிப் பொங்கும் இன்னிசைத் திருப்பதிகம் பலபாடினார் புகழ்ந்து ஏத்த = தோணியப்பரது திருவடிகளைத் துதித்து நிறைந்த வினிய இசையையுடைய பலதிருப்பதிகங்களையும் பாடியருளினார் பலரும்புகழ்ந்து துதிக்க.

நிலமாவிடந் திருமிடற்றடக்கிய நிமலனைநேரெய்துங்
காலமானவை யணைத்திறும்பணிந்துடன் கலந்தவன்பர்களோடுஞ்
சாலநாள்களங் குறைபவர்தையலா டழுவிடக்குழைகம்பர்
கோலமார்தரக் கும்பிடுமாசைகொண் டெழுங்குறிப்பினரானார்.

(இ-ள்.) நிலமாவிடம் திருமிடற்று அடக்கிய நிமலனை=நீல்நிறத்தையுடைய பெரிய ஆலாகலத்தைத் திருமிடற்றி றுங்கிய தோணியப்பனை; நேர் எய்தும் காலமானவை அணைத்திறும் பணிந்து உடன்கலந்த அன்பர்களோடும் = நேரே தரிசித்தற்குரிய காலங்களெல்லாவற்றிலுஞ் சென்றுவணங்கித் தம்முடன்சேர்ந்த அடியார்திருக்கூட்டத்தோடும்; சாலநாள்கள் அங்கு உறைபவர்=நெடுநாளங்கு வசிக்கும் ஆளுடையபிள்ளையார்; தையலாள் தழுவிடக் குழைகம்பர் = பிராட்டியார் தழுவக்குழைந்த திருமேனியையுடைய திருவேகம்பரது; கோலம் ஆர்தரக் கும்பிடும் ஆசைகொண்டு எழும் குறிப்பினர் ஆனார் = திருக்கோலத்தைத் தந்திருக் கண்கள்பருகும்படித் தரிசிக்கும் விருப்புமேற்கொண்டு செல்லுங் குறிப்பையுடையவரானார்.—எ-று. (௧௫௧)

தண்டகத்திருநாட்டினைச்சார்ந்துவர்தெம்பிரான்மகிழ்கோயில்,
கண்டுபோற்றிநாம் பணிவதென்றன்பருக் கருள்செய்வார்காலம்பெற
றண்டருக்கரி யரும்பெருந்தோணியி லிருந்தவரருள்பெற்றுத், தொ
ண்டர்குழ்ந்துடன் புறப்படத் தொடர்ந்தெழுந் தாதையார்க்குணா
செய்வார்.

(இ-ள்.) தண்டகத் திருநாட்டினைச்சார்ந்து உவந்த எம்பிரான் மகிழ்கோயில்=தொண்டைநாட்டையடைந்து விரும்பி யெமது பிரானுறைய திரு

Koyiloor Digital Library

வேகம்பர் மகிழ்ந்து வீற்றிருக்குந் திருவேகம்பத்தை ; கண்டுபோற்றி நாம் பணிவதென்று அன்பருக்கு அருள்செய்வார் = கண்டுதரிசித்து நாம்பணியக் கடவோமென்று அடியார்களுக் கருள்செய்யும் பிள்ளையார் ; காலம்பெற்று அண்டருக்கு அறிவரும் பெருந்தோணியில் இருந்தவர் அருள்பெற்று=பணி தற்குரிய காலத்தைப் பெற்றதனால் தேவர்கட்கறிதற்கரிய தோணியப்பரது திருவருளைப்பெற்று; தொண்டர்சூழ்ந்து உடன்புறப்படத் தொடர்ந்து எழும் தாதையார்க்கு உரைசெய்வார் = அடியார்கள்சூழ்ந்து தம்முடன் வரத்தம் மைத் தொடர்ந்து வருந்தமது தாதையாருக் கருளிச்செய்வாராயினர்.-எ-று.

அப்பர்நீரினி யிங்கொழிந்தருமறை யங்கிவேட்டன்போடுந், து ப்புநேர்சடை யார்தமைப்பரவியே தொழுதிருமெனச்சொல்லி, மெய் ப்பெருந்தொண்டர்மீள் பவர்தமக்கெலாம் விடைகொடுத்தருளிப் போ, யொப்பிலாதவர் தமைவழியிடைப்பணிந் துருகுமன்பொடு செல்வார்.

(இ-ள்.) அப்பர் நீர் இனி இங்கு ஒழிந்து அருமறை அங்கிவேட்டு அன்போடும் = அப்பரே நீர் (இனி) எம்மோடு வருதலையொழிந்து அரியவே தவிதிப்படியான யாகங்களைச்செய்து அன்புடன் ; துப்புநேர் சடையார்த மைப் பரவியே தொழுது இருமெனச்சொல்லி = பவளம்போலுஞ் சடையை யுடைய தோணியப்பரைத்துதித்து வணங்கி யீண்டிருமென்று சொல்லியரு ளி; மெய்ப்பெரும் தொண்டர் மீள்பவர் தமக்கெலாம் விடைகொடுத்தருளிப் போய்=உண்மையையுடைய அடியார்கள் தம்முடன்வராதுதிரும்புமவர்க்கெ ல்லா மனுமதிகொடுத்துச் சென்றருளி; ஒப்பிலாதவர்தமை வழியிடைப்பணி ந்து உருகும் அன்பொடுசெல்வார் = ஒப்பில்லாத சிவபெருமானைத்தாமும் செல்லும்நெறிகளில் வணங்கி மனமுருக்குமன்போடு ஆளுடையபிள்ளையார் செல்வாராயினர்.—எ-று. (௯௬௧)

செல்வமல்கிய தில்லைமூதூரினிற் றிருநடம்பணிந்தேத்தி
ப்ல்பெருந்தொண்ட ரெதிர்கொளப்பரமர்தந் திருத்தினைநகர்பாடி
யல்குதொண்டர்க டம்முடன்றிருமாணி குழியினையணைந்தேத்தி
மல்குவார்சடை யார்திருப்பாதிரிப் புலியூரைவந்துற்றார்.

(இ-ள்.) செல்வம் மல்கிய தில்லைமூதூரினில் திருநடம்பணிந்து ஏத்தி = செல்வம் நிறைந்த பழமைபொருந்திய திருத்தில்லையின்கண் நடே சப்பெருமானது ஆனந்த நிருத்தத்தை வணங்கித்துதித்து ; பல்பெருந்தொ ண்டர் எதிர்கொளப்பரமர் தந்திருத்தினை நகர்பாடி=பல அளவிறந்த அடி யார் திருக்கூட்டமெதிர்கொண்டு வணங்கத் திருந்நீச்சரமொழுந்தருளிய திரு த்தினை நகரைப்பாடி ; அல்குதொண்டர்கள் தம்முடன் திருமாணிகுழியினை அணைந்து ஏத்தி =நிறைந்த அடியார் திருக்கூட்டத்தோடு திருமாணி குழியி னையடைந்து துதித்து; மல்குவார்சடையார் திருப்பாதிரிப்புலியூரை வந்துற்

Koviloor Digital Library

றார் = நிறைந்த நீண்டசடைமுடியையுடைய மாணிக்கவரத ரெழுந்தருளிய திருப்பாதிரிப் புலியூரென்னுந் திருப்பதியை வந்தடைந்தருளினார்.—எ-று.

திருமாணிகுழி - திருவிராகம் - பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

பொன்னியல்பொருப்பனாயன்மங்கைபொருபங்கர்புனறங்குசடைமே
வன்னியொடு மத்தமலர்வைத்தவிறல் வித்தகர்மகிழ்ந்துறைவிடங் [ல்
கன்னியிள வாளைகுதி கொள்ளவிளைவள்ளைபட ரள்ளல்வயல்வாய்
மன்னியிள மேதிகள் படிந்துமனை சேருதவி மாணிகுழியே.

உந்திவரு தண்கெடில மோடுபுனல் சூழுதவி மாணிகுழிமே
லந்திமதி சூடியவெ மானையடி சேருமணி காழிநகரான்
சந்தநிறை தண்டமிழ் தெரிந்துணரு ஞானசம் பந்தனதுசொன்
முந்தியிசை செய்துமொழி வார்களுடை யார்கணெடு வானநிலனே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - மாணிக்கவரதேசுவரர்

தேவியார் மாணிக்கவல்லி யம்மை.

கன்னிமாவனங் காப்பெனவிருந்தவர் கழலிணை பணிந்தங்கு
முன்னமாமுடக் கான்முயற்கருள்செய்த வண்ணமுமொழிந்தேத்தி
மன்னுவார்பொழிற் றிருவடுகூரினை வந்தெய்தி வணங்கிப்போய்ப்
பின்னுவார்சடை யார்திருவக்கரை பிள்ளையாரணைவுற்றார்.

(இ-ள்.) கன்னிமாவனம் காப்பென இருந்தவர் கழல் இணைபணிந்து=கன்னிவனமேதமக்குக் காப்பாகஇருந்தருளிய தோன்றாத்துணைநாதரது இரண்டு திருவடிகளைவணங்கி; அங்கு முன்னம் மாமுடக்கால் முயற்கு அருள்செய்தவண்ணமும் மொழிந்து ஏத்தி=அவ்விடத்து முன்பு பெருமைபொருந்தியமுடக்காலையுடைய முயலுக்கருள்செய்தவண்ணத்தையும் பதிகமுதலியருளிச்செய்து துதித்து ; மன்னுவார் பொழிற்றிருவடு கூரினைவந்து எய்தி வணங்கிப்போய்=நிலைபெற்ற நீண்டசோலைசூழ்ந்த திருவடுகூரென்னுந் திருப்பதியைவந்தடைந்து அங்கு வணங்கிச்சென்றருளி; பின்னுவார்சடையார் திருவக்கரைபிள்ளையார் அணைவுற்றார்=பின்னிய நீண்டசடையையுடைய திருவக்கரையென்னுந் திருப்பதியைப்பிள்ளையாரடைந்தருளினார்.—எ-று. ()

திருப்பாதிரிப்புலியூர்-பண்-செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

முன்னநின்றமுடக் கான்முயற்கருள் செய்துநீள்
புன்னைநின்றுகமழ் பாதிரிப்புலி யூருளான்

Koviloor Digital Library

றன்னைநின் றுவணங் குந்தனைத்தவ மில்லிகள்
பின்னைநின் றபிணி யாக்கையைப் பெறுவார்களே.

அந்தணல்லாரகன் காழியுண் ஞானசம்
பந்தனல்லார்பயில் பாதிரிப்புலி யூர்தனுட்
சந்தமாலைத்தமிழ் பத்திவைதரித் தார்கண்மேல்
வந்துதியவ்வடை யாமையால்வினை மாயுமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-தோன்றாத்துணையீசர். தேவியார்-தோகையம்பிகை.

திருவடுகூர் - பண்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

சுடுகூரெரிமாலை யணிவர்சுடர்வேலர்
கொடுகூர்மழுவாளொன் றுடையார்விடையூர்வர்
கடுகூர்பசிகாமங் கவலைபிணியில்லார்
வடுகூர்புனல்சூழ்ந்த வடுகூரடிகளே.

படிநோன்பவையாவர் பழியில்புகழான
கடிநாணிகழ்சோலை கமழும்வடுகூரைப்
படியானசிந்தை மொழியார்சம்பந்த
னடிஞானம்வல்லா ரடிசேர்வார்களே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமி-பெயர்-வடுகேசுவரர். தேவியார்-வடுவகிர்க்கண்ணம்மை.

வக்கரைப்பெரு மான்றனைவணங்கியங் கமருநாளருளாலே
செக்கர்வேணியா ரிரும்பைமாகாளமுஞ் சென்றுதாழ்ந்துடன்மீண்டு
மிக்கசீர்வள ரதிகைவீரட்டான மேவுவார் தம்முன்பு　　[வுற்றார்.
தொக்கமெய்த்திருத்தொண்டர்வந்தெதிர்கொளத்தொழுதெழுந்தணை

(இ-ள்.) வக்கரைப்பெருமான்றனைவணங்கி=திருவக்கரையி லெழுந்தருளிய சந்திரசேகரரைவணங்கி ; அங்கு அமரும்நாள் = அங்கெழுந்தருளியிருக்கும்நாளில் ; அருளாலே செக்கர் வேணியார் இரும்பை மாகாளமும் சென்று தாழ்ந்து உடன்மீண்டு=திருவருளினாற் சிவந்த சடையையுடைய மாகாளேசரது திருவிரும்பை மாகாளத்தையுமடைந்து வணங்கி யுடனே திரும்பி ; மிக்கசீர்வளர் அதிகைவீரட்டானம் மேவுவார் தம்முன்பு = நிறைந்த செல்வத்தையுடைய திருவதிகை வீரட்டானத்தையடையும் பிள்ளையார்

Koviloor Digital Library

முன்பு; தொக்கமெய்த் திருத்தொண்டர்வந்து எதிர்கொளத்தொழுது எழுந்து அணைவுற்றார்=தொகுதியான மெய்ம்மைபொருந்திய திருத்தொண்டர்கள் வந்தெதிர்கொள்ளும்படி தாமுமெதிரேவணங்கி யெழுந்தங்கடைந்தருளினார்.—எ-று. (௬௬௪)

திருவக்கரை-பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

கறையணிமாமிடற்றான் கரிகாடரங்காவுடையான்
பிறையணிகொன்றையினா னொருபாகமும் பெண்ணமர்ந்தான்
மறையவன் றன்றலையிற்பலிகொள்பவன் வக்கரையி
லுறைபவனெங்கள் பிரானொலியார் கழலுள்குதுமே.

தண்புனலும் மரவுஞ்சடைமேலுடையான் பிறைதோய்
வண்பொழில்சூழ்ந் தழகாரிறைவன் னுறைவக்கரையைச்
சண்பையர் தந்தலைவன் றமிழ்ஞானசம்பந்தன்சொன்ன
பண்புனைபாடல் வல்லாரவர் தம்வினைபற்றறுமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-சந்திரசேகரேசுவரர். தேவியார்-வடிவாம்பிகையம்மை.

திரு-இரும்பைமாகாளம்-பண்-செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

மண்டுகங்கை சடையிற் கரந்தும்மதி சூடிமான்
கொண்டகையாற் புரமூன் றெரித்தகுழ கன்னிட
மெண்டிசையும் புகழ்போய் விளங்கு மிரும்பைதனுள்
வண்டுகீதம் முரல்பொழில் சுலாநின்றமாகாளமே.

எந்தையெம்மா னிடமெழில்கொள் சோலையிரும் பையதனுள்
மந்தமாரும் பொழில்சூழ்ந் தழகாரு மாகாளத்தி
லந்தமில்லா வனலாடு வானையணி ஞானசம்
பந்தன்சொன்ன தமிழ்பாட வல்லார் பழிபோகுமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-மாகாளேசுவரர். தேவியார்
குயின்மொழியம்மை.

ஆதிதேவரங் கமர்ந்தவீரட்டானஞ் சென்றணைபவர்முன்னே
பூதம்பாடநின் றாடுவார்திருநடம் புலப்படும்படிகாட்ட

Koviloor Digital Library



திருஞானசம்பந்தசுவாமிகள் போதிமங்கைக்கெழுந்தருளுகையில் பவுத்தர்கள் சாரிபுத்தனைக்கொண்டு தடுக்க அவனது உத்தமாங்கமாகிய தலையை இடறச்செய்தது.

Koviloor Digital Library

வேதபாரகர் பணிந்துமெய்யுணர்வுட னுருகியவிருப்போடுங்
கோதிலாவிசை குலவுகுண்டைக்குறட் பூதமென்றெடுத்தேத்தி.

(இ-ள்.) அறிதேவர் அங்கு அமர்ந்த வீரட்டானம் சென்று அணைப வர் முன்னே=தேவர்க்கெல்லாம் முதற்றேவராகிய வீரட்டேசரெழுந்தரு ளிய திருவீரட்டானத்தைச் சென்றடையும் பிள்ளையார்முன்னே; பூதம்பாட நின்று ஆடுவார் திருநடம் புலப்படும்படிகாட்ட=பூதகணங்கள் பாடும்படி நின்றாடு மவ்வீரட்டேசர் தமது திருநடனத்தைப் பிள்ளையாரது திருக்கண்க ளுக்குப் புலமாகும்படி காட்டியருள; வேதபாரகர் பணிந்து மெய்யுணர் வுடன் உருகிய விருப்போடும்=வேதமாகிய கடலின்கரையையடைந்த ஆளு டையபிள்ளையார் வணங்கி மெய்யன்போடு திருவுள்ளமுருகச்செய்யும் விரு ப்பினும்; கோதிலா இசைகுலவு குண்டைக்குறட்பூதமென்று எடுத்து ஏத் தி=குற்றமில்லாத இசைபொருந்திய "குண்டைக்குறட்பூதம்" எனமுதலெ டுத்துத்துதித்து.—எ-று. (சுசுடு)

திரு அதிகைவீரட்டானம்-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

குண்டைக் குறட் பூதங் குழுமவன லேந்திக்
கெண்டை பிறழ்தெண்ணீர் கெடிலவடபக்கம்
வண்டு மருள்பாட வளர்பொன் விரிகொன்றை
விண்ட தொடையலு னுடிம்வீரட் டானத்தே.

நாழல் கமழ்காழி ஞானசம் பந்தன்
வேழம் பொருதெண்ணீ ரதிகைவீ ரட்டானத்துச்
சூழுங் கழலானைச் சொன்ன தமிழ்மாலை
வாழுந் துணையாக நினைவார் வினையிலரே.

திருச்சிற்றம்பலம்.

பரவியேத்திய திருப்பதிகத்திசை பாடினார் பணிந்தங்கு
விரவுமன்பொடு மகிழ்ந்தினிதுறைபவர் விமலனாவணங்கிப்போ
யரவவேர்ச்சடை யங்கணர்தாமகிழ்ந் துறைதிருவாமாத்தூர்
சிரபுரத்துவந் தருளியசிருமறைச் சிறுவர்சென்றணைவுற்றார்.

(இ-ள்.) பரவி எத்திய திருப்பதிகத்து இசைபாடினார் = வணங்கித் துதித்த அத்திருப்பதிகத்தை இசையோடுபாடினவரும்; பணிந்து அங்கு= வணங்கி அத்திருப்பதியில்; விரவும் அன்பொடுமகிழ்ந்து இனிது உறைப வர்=கலந்த அன்பினோடு மகிழ்கூர்ந்தங்கினிதாகவெழுந்தருளுபவரும் ஆகிய; சிரபுரத்துவந்தருளிய சிறுமறைச்சிறுவர் = சீகாழியில் அவதாரஞ் செய்தரு

Koviloor Digital Library

ளிப மறையவர் சிறுவராகிய ஆளுடையபிள்ளையார்; விமலனாவணங்கிப் போய்=திருவதிகை வீரட்டானனாவணங்கியங்கு நின்றெழுந்தருளி; அரவ நீர்ச்சடை அங்கணர் தாம்மகிழ்ந்து உறைதிரு ஆமாத்தூர் சென்று அணையுற்றார்=ஒலிபொருந்திய கங்கையையணிந்த சடாமுடியையுடைய சோமநாதரெழுந்தருளிய திருவாமாத்தூரைச் சென்றடைந்தருளினார்.—எ-று. ()

சென்றணைந்தசிந்தையின் மகிழ்விருப்பொடுசிறந் திருவாமாத்தூர்ப்
பொன்றயங்குபூங் கொன்றையும்வன்னியும் புனைந்தவரடிபோற்றிக்
குன்றவார்சிலை யெனுந்திருப்பதிகமெய்க் குலவியவிசைபாடி
நன்றுமின்புறப் பணிந்துசெல்வார்திருக் கோவலூர்நகர்சேர்ந்தார்.

(இ-ள்.) சென்று அணைந்த சிந்தையின் மகிழ்விருப்பொடு சிறந்திரு ஆமாத்தூர்=சென்றடைந்தருளி மனதில் நிறைந்த விருப்பத்தோடு விளங்குந்திருவாமாத்தூரில்; பொன்தயங்குபூங் கொன்றையும் வன்னியும் புனைந்தவர் அடிபோற்றி = பொன்னைப்போல்விளங்குங் கொன்றைப் பூமாலையையும் வன்னியையுஞ்சூடிய பெருமானார் திருவடிகளைவணங்கி; குன்றவார்சிலை எனும் திருப்பதிகம் மெய்க்குலவிய இசைபாடி = "குன்றவார்சிலை" என்று முதலையுடைய திருப்பதிகத்தை விளங்க இசையோடுபாடி; நன்றும் இன்புறப்பணிந்து செல்வார் திருக்கோவலூர் நகர்சேர்ந்தார்=நன்மையுமின்பமுமிகவணங்கிச்செல்லும் பிள்ளையார் திருக்கோவலூரென்னுந் திருப்பதியையடைந்தார்.—எ-று. (கசஎ)

திருஆமாத்தூர்-பண்-சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

குன்றவார்சிலை நாணராவரி வாளிகூரெரி காற்றின்மும்மதில்
வென்றவாறெங்ஙனே விடையேறும்வேதியனே [மே
தென்றலார்மணி மாடமாளிகை சூளிகைக்கெதிர் நீண்டபெண்ணை
வன்றில்வந்தணைபு மாமாத்தூரம்மானே.

வாடல்வெண்டலை மாலையார்த்து மயங்கிருள்ளெரி யேந்திமாநட
மாடன்மேயதென்னென்று மாத்தூரம்மானைக்
கோடனீடு கரும்புபைம்பொழிற் கொச்சையாரிறை ஞானசம்பந்
பாடல்பத்தும்வல்லார் பரலோகஞ்சேர்வாரே. [தன்

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-சோமநாதநாயகர். தேவியார்-அழகியநாயகியம்மை.

Koviloor Digital Library

கோவனீடிய வீரட்டமமர்ந்தவர் குரைகழல்பணிந்தேத்தி
யாவிலைந்துகந் தாடுவாரறையணி நல்லூரையணைந்தேத்திப்
பாவலர்ந்தசெந் தமிழ்கொடுபரவுவார் பரவுசீரடியார்கண்
மேவுமன்புறு மேன்மையாந்தன்மையை விளங்கிடவருள்செய்தார்.

(இ-ள்.) கோவல் நீடிய வீரட்டம் அமர்ந்தவர் குரைகழல்பணிந்து ஏத்தி=திருக்கோவல் வீரட்டத்திலெழுந்தருளிய வீரட்டேசுரரது ஒலிக்கும் வீரக்கழலைபணிந்த திருவடிகளை வணங்கி; ஆவில் ஐந்து உகந்து ஆடுவார் அறைபணி நல்லூரை அணைந்து ஏத்தி= பசுவின்கணுள்ள கௌவியங்களைந்தையும் விரும்பியாடும் பெருமானெழுந்தருளிய அறையணிநல்லூரையடைந்து துதித்து; பா அலர்ந்தசெந்தமிழ் கொடுபரவுவார் பரவுசீர் அடியார்கள் மேவும் அன்புறுமேன்மையாம் தன்மையை விளங்கிட அருள்செய்தார்= பாக்கள் நிறைந்தசெந்தமிழால் வணங்குஞ் சிறப்பினையுடைய அடியார்கள் தாம்பொருந்திய அன்பால் வருமேம்பாட்டின் தன்மையை அத்திருப்பதிகத்தில் விளங்கவைத்துப் பாடியருளினார்.—எ-று. (௧௧௮)

திருக்கோவல்வீரட்டம்-திருவிராகம்-பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

படைகொள்கூற்றம் வந்துமெய்ப் பாசம்விட்ட போதின்க
ணிடைசொல்வா ரெமக்கில்லை யெழுகபோது நெஞ்சமே
கொடைகொள்வேந்தன் மூதாதைகுழகன்கோவ லூர்தனுள்
விடையதேறுங் கொடியினான் வீரட்டானஞ் சேர்துமே.

கழியொடுலவு கானல்சூழ் காழிஞான சம்பந்தன்
பழிகடீரச் சொன்னசொற் பாவநாச மாதலா
லழிவிலீர்கொண் டேத்துமி னந்தண்கோவ லூர்தனில்
விழிகொள்பூதப் படையினான் வீரட்டானஞ்சேர்துமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - வீரட்டேசுவரர். தேவியார் - சிவானந்தவல்லியம்மை.

திரு அறையணிநல்லூர்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பீடினாற் பெரியார்களும் பேதைமைகெடத் தீதிலா
வீடினாலுயர்ந்தார்களும் வீடினாரிள வெண்மதி
சூடினார்மறை பாடினார் சுடலைநீறணிந் தாரழ
லாடினாரறை யணிநல்லூ ரங்கையாற்றொழுவார்களே.

Koviloor Digital Library

கழிபுலாங்கடற் கானல்சூழ் கழுமலமமர் தொல்பதிப்
பழியிலாயறை ஞானசம் பந்தனல்லதோர் பண்பினர்
மொழியினாரறை யணிநல்லூர் முக்கண்மூர்த்திதன் முடிதொழக்
கெழுவினாரவர் தம்மொடுங் கேடில்வாழ்பதி பெறுவரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-அறைபணிநாதர். தேவியார்-அருள்நாயகியம்மை.

சீரின்மன்னிய பதிகமுன்பாடியத் திருவறைபணிநல்லூர்
வாரின்மல்கிய கொங்கைபாள்பங்கர்தம் மலைமிசைவலங்கொள்வார்
பாரின்மல்கிய தொண்டர்களிமையவர் நாடொறும்பணிந்தேத்துங்
காரின்மல்கிய சோலையண்ணாமலை யன்பர்காட்டிடக்கண்டார்.

(இ-ள்.) சீரின் மன்னியபதிக முன்பாடி = சிறப்பால் நிறைந்த திருப்பதிகத்தைத் திருமுன்னேபாடி; அத்திரு அறையணி நல்லூர்வாரின் மல்கியகொங்கைபாள் பங்கர்தம்மலை மிசைவலங்கொள்வார் = அத்திருவறையணி நல்லூரென்னுந் திருப்பதியிற் கச்சால் நிறைந்த தனங்களையுடைய உமாதேவி பாகரான அறையணிநாதரது திருமலையின்மேல் வலங்கொள்ளும் பிள்ளையார்; பாரின்மல்கிய தொண்டர்கள் இமையவர் நாள்தொறும்பணிந்து ஏத்தும் = உலகின் கணிறைந்த அடியார்களுந் தேவர்களும் நாள்தோறும் வணங்கித்துதிக்கும்; காரின்மல்கியசோலை அண்ணாமலை அன்பர்காட்டிடக்கண்டார் = மேகங்கள் நிறைந்தசோலை சூழ்ந்த திருவண்ணாமலையை யடியார்கள்காட்டும்படி தரிசித்தருளினார்.—எ-று. (௬௱௯)

வேறு.

அண்ணாமலையெங் கமரர்பிரான் வடிவுபோன்று தோன்றுதலுங்
கண்ணாற்பருகிக் கைதொழுது கலந்துபோற்றுங் காதலினா
லுண்ணாமுலையா ளெனும்பதிகம் பாடித்தொண்ட ருடன்போந்து
தெண்ணீர்முடியார் திருவண்ணா மலையைச்சென்று சேர்வுற்றார்.

(இ-ள்.) அண்ணாமலை எங்கள் அமரர்பிரான் வடிவுபோன்று தோன்றுதலும் = திருவண்ணாமலை சிவபிரானது திருவுருவைப்போலப் புலப்படவும்; கண்ணாற்பருகிக் கைதொழுது கலந்துபோற்றும் காதலினால் = நயனங்களாற் பருகிக் கைகூப்பி மனமொருங்கித் துதிக்கும் பெருவிருப்பினால்; உண்ணாமுலையாள் எனும் பதிகம்பாடித் தொண்டருடன் போந்து = "உண்ணாமுலை யுமையாளொடு" என்று முதலையுடையதிருப்பதிகத்தைப்பாடி அடியார் திருக்கூட்டத்தோடு சென்றருளி; தெண்ணீர்முடியார் திருவண்ணாமலையைச்சென்று சேர்வுற்றார் = தெள்ளியகங்கையையணிந்த சடாமுடியையுடைய சிவபெருமானெழுந்தருளிய திருவண்ணாமலையைச் சென்றடைந்தருளினார்.

Koviloor Digital Library

அண்ணாமலை அரிபிரமர் அடிமுடிதேடி யறியாமல் நின்ற திவ்வியலிங்க வுருவமாதலின் அமரர்பிரான் வடிவுபோன்றென்றார். (கஎ0)

திருவண்ணாமலை-பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

உண்ணாமுலையுமையா ளொடுமுடனா கியவொருவன்
பெண்ணா கியபெருமான் மலைதிருமா மணிதிகழ
மண்ணார்ந் தனவருவித் திரண்மழலைம் முழவதிரு
மண்ணா மலைதொழுவார் வினைவழுவாவணமறுமே.

வெம்புந் தியகதிரோ னொளிவிலகும் விரிசார
லம்புந்தி மூவெயிலெய்தவ னண்ணா மலையதனைக்
கொம்புந் துவகுயிலாலுவகுளிர்காழியுண்ஞான
சம்பந்தன தமிழ்வல் லவரடிபே ணுதறவமே.

திருச்சிற்றம்பலம்.

அங்கணணைவார் பணிந்தெழுந்து பொற்றிசெய்தம் மலைமீது
தங்குவிருப்பில் வீற்றிருந்தார் தாட்டாமரைக டம்முடிமேற்
பொங்குமார்வத் தொடும்புனைந்து புளகமலர்ந்த திருமேனி
யெங்குமாகிக் கண்பொழியு மின்பவருவி பெருக்கினர்.

(இ-ள்.) அங்கண் அணைவார்பணிந்து எழுந்து போற்றிசெய்து=அத்திருப்பதியை யடைந்தருளும் பிள்ளையார்வணங்கி யெழுந்து துதிசெய்து; அம்மலைமீது தங்கு விருப்பில் வீற்றிருந்தார்=அத்திருமலைமேல் வசிக்கும்விருப்பால் எழுந்தருளிய அண்ணாமலையாரது; தாள்தாமரைகள் தம்முடிமேல்=திருவடித்தாமரைகளைத் தமது திருமுடியின்மேல்; பொங்கும் ஆர்வத்தொடும் புனைந்து = மிக்க பெருவிருப்போடுஞ் சூடி; புளகமலர்ந்த திருமேனி எங்குமாகிக் கண்பொழியும் இன்பஅருவிபெருக்கினார்=உரோமாஞ்சிதங்கொண்ட தந்திருமேனிமுழுதுந் திருக்கண்களினின்றும் பொழியுமானந்த வருவியைப் பெருக்கியருளினார்.—எ-று. (கஎக)

ஆதிமூர்த்தி கழல்வணங்கி யங்கணினிதி னமருநாட்
பூதநாத ரவர்தம்மைப் பூவார்மலராற் போற்றிசைத்துக்
காதலாலத் திருமலையிற் சிலநாள்வைகிக் கமழ்கொன்றை
வேதகீதர் திருப்பதிகள் பிறவும்பணியும் விருப்புறுவார்.

(இ-ள்.) ஆதிமூர்த்திகழல்வணங்கி அங்கண் இனிதின் அமரும்நாள்=அண்ணாமலையாரது திருவடிகளை வணங்கி யவ்விடத்து இனிதாக வெழுந்தருளும் நாளில்; பூதநாதர் அவர்தம்மைப் பூவார்மலராற் போற்றிசைத்து=

Koviloor Digital Library

பூசணைக்கட்குத் தலைவராகிய அச்சிவபெருமானைப் "பூவார்மலர்" என்று அடியெடுத்துத் திருப்பதிகம்பாடி; காதலால் அத்திருமலையிற் சிலநாள் வைகி = விருப்பத்தோடு அத்திருவண்ணாமலையிற் சிலநாள்வசித்து; கமழ் கொன்றை வேதர்தேர் திருப்பதிகள் பிறவும்பணியும் விருப்புறுவார் = வாசனைபொருந்திய கொன்றைப் பூமாலையையணிந்த சாமகானத்தைப் பாடுஞ் சிவபெருமானெழுந்தருளிய மற்றத்திருப்பதிகளையும் வணங்கும் விருப்புடையவரானார்.—எ-று. (௯௭௨)

திருவண்ணாமலை-பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

பூவார்மலர்கொண் டடியார்தொழுவார் புகழ்வார்வானோர்கள்
மூவார்புரங்க ளெரித்தவன்று மூவர்க்கருள்செய்தார்
தூமாமழைநின் றதிரவெருவித் தொறுவினிரையோடு
மாமாம்பிணைவந் தணையுஞ்சார லண்ணாமலையாரே.

அல்லாடரவ மியங்குஞ்சார லண்ணாமலையானை
நல்லார்பரவப் படுவான்காழி ஞானசம்பந்தன்
சொல்லான்மலிந்த பாடலான பத்தும்மிவைகற்று
வல்லாரெல்லாம் வானோர்வணங்க மன்னிவாழ்வாரே.

திருச்சிற்றம்பலம்.

மங்கைபாகர் திருவருளால் வணங்கிப்போந்து வடதிசையிற்
செங்கண்விடையார் பதிபலவும் பணிந்துபுகலிச் செம்மலார்
துங்கவரைக டாம்பலவுங் கடந்துதொண்டைத் திருநாட்டிற்
றிங்கண்முடியா ரினிதமருந் திருவோத்தூரைச் சேர்வுற்றார்.

(இ-ள்.) மங்கைபாகர் திருவருளால் வணங்கிப்போந்து = உமாதேவிபாகராகிய அண்ணாமலையாரது திருவருளினால் அத்திருவண்ணாமலையைப் பணிந்து அங்குநின்று மெழுந்தருளி; வடதிசையிற் செங்கண்விடையார்பதி பலவும் பணிந்து = அதன்வடக்கிலுள்ள சிவந்தகண்களையுடைய இடபத்தை யூர்தியாகக்கொண்ட பெருமானுடைய பலதிருப்பதிகளையும் வணங்கி; புகலிச் செம்மலார் = சீகாழியிலவதரித்த ஆளுடையபிள்ளையார்; துங்கவரைகள் தாம்பலவும்பணிந்து = உயர்ந்தமலைகள் பலவற்றையும் வணங்கி; தொண்டைத்திருநாட்டில் திங்கள்முடியார் இனிது அமரும் திருவோத்தூரைச் சேர்வுற்றார் = வளம்பொருந்திய தொண்டைநாட்டிற் பிறையையணிந்த திருமுடியையுடைய வேதநாயகனினிதாக வெழுந்தருளிய திருவோத்தூரென்னுந் திருப்பதியை யடைந்தருளினார்.—எ-று. (௯௭௩)

Koviloor Digital Library

தேவர்முனிவர்க் கோத்தளித்த திருவோத்தூரிற் றிருத்தொண்டர்
தாவில்சண்பைத் தமிழ்விரகர் தாமங்கணையக் களிசிறந்து
மேவுங்கதலி தோரணங்கள் விளக்குநிறைத்து நிறைகுடமும்
பூவும்பொரியுஞ் சுண்ணமுமுன்கொண்டுபோற்றியெதிர்கொண்டார்.

(இ-ள்.) தேவர் முனிவர்க்கு ஒத்து அளித்த திருவோத்தூரில் திருத்தொண்டர் = தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் வேதத்தைத்தந்தருளிய திருவோத்தூரிலுள்ள அடியார்கள்; தாவில் சண்பைத் தமிழ்விரகர்தாம் அங்கு அணையக் களிசிறந்து = துன்பமில்லாத சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையாரங்கெழுந்தருளுதலால் மகிழ்ச்சியடைந்து; மேவும் கதலிதோரணங்கள் விளக்குநிறைத்து = பொருந்திய வாழைகளையுந் தோரணங்களையுந் திருவிளக்குகளையும்வரிசையாகவைத்து; நிறைகுடமும் பூவும்பொரியும் சுண்ணமுமுன் கொண்டு = பூரணகும்பங்களையும் பூவையும் பொரியையும் பொற்சுண்ணங்களையும்பிள்ளையார் திருமுன்னே தாங்கிக்கொண்டு; போற்றி எதிர்கொண்டார் = துதித்தெதிர்கொண்டுவந்தார்கள்.—எ-று. (௯௭௪)

சண்பைவேந்தர் தண்டரளச் சிவிகைநின்று மிழிந்தருளி
நண்பின்மிக்க சீரடியார் சூழநம்பர் கோபுரஞ்சூழ்
விண்பிறக முன்னோங்கும் வியன்பொற்புரிசை வலங்கொண்டு
பண்புநீடிப் பணிந்தெழுந்து பரமர்கோயி லுள்ளடைந்தார்.

(இ-ள்.) சண்பைவேந்தர் தண்தரளச்சிவிகைநின்றும் இழிந்தருளி = சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார் குளிர்ந்த முத்துச்சிவிகையினின்றுமிறங்கியருளி; நண்பின்மிக்க சீர்அடியார் சூழ = தம்மிடத்து நேயமிக்க மேம்பட்ட அடியார்கள் அருகிற்சூழ்ந்துவர; நம்பர் கோபுரஞ்சூழ் = வேதநாதேசரது திருக்கோபுரத்தைச்சூழ்ந்து; விண்பிறக முன்னோங்கும் வியன்பொற்புரிசை வலங்கொண்டு = மேகமண்டலமும் பிற்பட முற்பட்டோங்கிய பெரியவிசாலமாகிய அழகிய திருமதிலை வலங்கொண்டு; பண்புநீடிப் பணிந்து எழுந்து பரமர்கோயில் உள்அடைந்தார் = அன்பு மிகுதலால் வணங்கியெழுந்து அப்பெருமானது திருக்கோயிலுளடைந்தருளினார்.—எ-று.

வாரணத்தி னுரிபோர்த்த மைந்தருமையாள் மணவாள
ராரணத்தி னுட்பொருளாய் நின்றார்தம்மு னணைந்திறைஞ்சி
நாரணற்கும் பிரமற்கு நண்ணற்கரிய கழல்போற்றுங்
காரணத்தின் வருமின்பக் கண்ணீர்பொழியக் கைதொழுதார்.

(இ-ள்.) வாரணத்தின் உரிபோர்த்த மைந்தர் உமையாள் மணவாளர் = (கயாசுரனென்னும்) யானையினது உரியைப்போர்த்தருளியவரும் உமாதேவியாருக்கு நாயகருமாய்; ஆரணத்தின் உட்பொருளாய் நின்றார்தம் முன்

Koviloor Digital Library

தனைந்த நின்றந்தி = வேதத்திருட்பொருளாய் நின்ற இறைவரது திரு முன்னேயடைந்து வணங்கி; காரணர்க்கும் பிரமர்க்கும் காணுதற்கரிய கழல் போற்றும்=திருமாலுக்கும் பிரமனுக்கு மடைதற்கரியதிருவடிகளை வணங்கும்; காரணத்தின் வரும் இன்பக்கண்ணீர்பொழியக் கைதொழுதார்=காரணத்தா லவரும் ஆனந்தக்கண்ணீர் சொரியும்படிக் கைகூப்பிவணங்கினர்.—எ-று. ()

தொழுதுவிழுந்து பணிந்தெழுந்து சொன்மாலைகளாற் றுதிசெய்து
முழுதுமானா ரருள்பெற்றுப் போந்துவைகி முதல்வர்தமைப்
பொழுதுதோறும் புக்கிறைஞ்சிப் போற்றிசெய்தங் கமர்வார்முன்
னழுதுவணங்கி யொருதொண்ட ரமணர்திறத்தொன் றறிவிப்பார்.

(இ-ள்.) தொழுது விழுந்து பணிந்து எழுந்துசொல் மாலைகளாற் றுதிசெய்து=கைகூப்பி நிலத்தின்மேல்விழுந்து வணங்கியெழுந்து திருப்பதி கங்களாற்றுதித்து; முழுதுமானார் அருள்பெற்றுப்போந்து வைகி = எப் பொருள்களுமாய் நிறைந்த வேதநாதேசரது திருவருளைப்பெற்றுப் புறம்பே சென்று அங்குள்ள திருமடத்திலெழுந்தருளி; முதல்வர் தமைப்பொழுது தோறும் புக்கு இறைஞ்சிப்போற்றிசெய்து அங்கு அமர்வார்முன் = அச்சிவ பெருமானைக் காலந்தோறுஞ்சென்று வணங்கித்துதிசெய்து அங்கெழுந்தரு ளியிருக்கும் பிள்ளையார்முன்னே; அழுது வணங்கி ஒருதொண்டர் அமணர் திறத்து ஒன்று அறிவிப்பார்=தாமழுது அவர் திருவடிகளில் வணங்கி யோர் திருவடியார் சமணர்களது தொகுதியிற் றமக்கு விளைந்த வொருசெயலை யறி விப்பாராயினர்—எ-று. (களஎ)

அங்கையனலேற் றவர்க்கடியே னாக்கும்பனைக ளானவெலா
மங்குலுறநின் றாண்பனையாய்க் காயாதாகக் கண்டமணா
ரிங்குநீரிட் டாக்குவன காய்த்தற்கடைவுண் டோவென்று
பொங்குநகைசெய் திழித்துரைத்தா ரருளவேண்டு மெனப்புகல.

(இ-ள்.) அங்கை அனல் ஏற்றவர்க்கு அடியேன் ஆக்கும்பனைகள் ஆன வெலாம்=அழகிய திருக்கரத்தி லனலையேந்திய சிவபெருமானுக்கு அடியேன் வைத்துவளர்த்த பனைகளெல்லாம்; மங்குலுற நின்று ஆண்பனையாய்க் காயாதாகக்கண்டு அமணர்=மேகமண்டலமளவு முயர்ந்து ஆண்பனைகளாய்க் கா யாதிருக்க அதனைக்கண்டு சமணர்கள்; இங்கு நீர் இட்டு ஆக்குவன காய்த் தற்கு அடைவுண்டோ என்று=இவ்விடத்து நீர் இட்டுவளர்த்த ஆண்பனைகள் காய்த்தற்கொருபாயமுண்டோவென்று; பொங்கு நகைசெய்து = மிக அவ மதிச்சிரிப்புச்செய்து; இழித்து உரைத்தார் அருளவேண்டும் எனப்புகல= இழிவுசெய்து பேசினர்கள் அவ்விழிவுதீர அருளிச்செய்யவேண்டுமென்று இரந்துகூற.—எ-று. (களஅ)

Kovjloor Digital Library

பரமனூர்தந் திருத்தொண்டர் பண்புநோக்கிப் பரிவெய்தி
விரவுகாத லொடும்விரைந்து விமலர்கோயில் புக்கருளி
யரவுமதியும் பகைதீர வணிந்தார்தம்மை யடிவணங்கி
யிரவுபோற்றித் திருப்பதிக மிசையிற்பெருக வெடுத்தருளி.

(இ-ள்.) பரமனூர்தம் திருத்தொண்டர் பண்புநோக்கிப் பரிவு எய்தி=சிவபெருமான் திருவடியாரது ஆராமைக்குணத்தைப்பார்த்து அவர் மேற் கிருபைகூர்ந்து; விரவுகாதலொடும் விரைந்து விமலர் கோயில்புக்கருளி = மிக்கபெருவிருப்போடு விரைவாய் வேதநாதேசர் திருக்கோயிலுட் சென்றருளி; அரவும் மதியும் பகைதீர அணிந்தார் தம்மை அடிவணங்கி= பாம்பையுஞ் சந்திரனையுந் தம்முட் பகை நீங்கத்தரித்தருளிய சிவபெருமானது திருவடிகளைவணங்கி; இரவுபோற்றித் திருப்பதிகம் இசையிற் பெருக எடுத்தருளி =இரவின்கண் துதித்துப் "பூத்தேர்ந்தாயன" என்னுந் திருப்பதிகத்தை யிசையினுற்பெருகும்படி யெடுத்துப் பாடியருளி.—எ-று. (களக)

விரும்புமேன்மைத் திருக்கடைக்காப் பதனில்விமல ரருளாலே
குரும்பையாண் பனையீனு மென்னும்வாய்மை குலவுதலா
னெருங்கும் ஏற்றுப் பனையெல்லா நிறைந்தகுலைக ளாய்க்குரும்பை
யரும்புபெண்ணையாகியிடக் கண்டோரெல்லா மதிசயித்தார்.

(இ-ள்.) விரும்பும் மேன்மைத் திருக்கடைக் காப்பதனில்=யாவரும் விரும்பு மேன்மையையுடைய திருக்கடைக்காப்பில்; விமலர் அருளாலே= சிவபெருமான் திருவருளால்; குரும்பை யாண்பனையீனும் என்னும் வாய்மை குலவுதலால்="குரும்பையாண்பனையீன் குலையோத்தூர்" என்னும் வாய்மை விளங்குதலால்; நெருங்கும் ஏற்றுப்பனையெல்லாம் நிறைந்த குலைகளாய்= நெருங்கிய ஆண்பனைகளெல்லாம் நிறைந்தகுலைகளையுடையனவாய்; குரும்பை அரும்பு பெண்ணையாகியிடக்கண்டோரெல்லாம் அதிசயித்தார்=குரும்பைகளை யீனுகின்ற பெண்பனையாக அதனைக்கண்ட யாவரு மதிசயமடைந்தார்கள்.—எ-று. (கஅ0)

திருவோத்தூர் - ஆண்பனை - பெண்பனையான
திருப்பதிகம் - பழந்தக்கராகம்.
திருச்சிற்றம்பலம்.

பூத்தேர்ந்தாயன கொண்டுநின் பொன்னடி
யேத்தாதாரில்லை யெண்ணுங்கா
லோத்தூர்மேய வொளிமழு வாளங்கைக்
கூத்தீரும்ம குணங்களே. (க)

Koviloor Digital Library

இடையிர் போகாவிள முலையாளையோர்
புடையிரோ புள்ளிமானுரி
யுடையிரோ யும்மையேத்துது மோத்தூர்ச்
சடையிரோ யுமதாளே. (௨)

உள்வேர் போல நொடிமையினுற
கொள்விரல்குலோர் கோவண
மொள்வாழைக் கனிதேன் சொரியோத்தூர்க்
கள்விரோயுமகாதலே. (௩)

தோட்டிரோ துத்திபைந்தலை நாகத்தை
யாட்டிரோ யடியார்வினை
யோட்டிரோ யும்மை யேத்துது மோத்தூர்
நாட்டிரோ யருணல்குமே. (௪)

குழையார் காதிர் கொழுமழுவாட்படை
யுழையாள் விர்திருவோத்தூர்
பிழையாவண்ணங்கள் பாடிநின்றுடுவா
ரழையாமே யருணல்குமே. (௫)

மிக்கார்வந்து விரும்பிப்பலியிடத்
தக்கார்தம்மடியீர் களென்
றுட்காதாருளரோ திருவோத்தூர்
நக்கிரோயருணல்குமே. (௬)

தாதார்கொன்றை தயங்குமுடியுடை
நாதாவென்று நலம்புகழ்ந்
தோதாதாருளரோ திருவோத்தூ
ராதிரோ யருணல்குமே. (௭)

என்றானிம்மலை யென்றவரக்கனை
வென்றார் போலும் விரலினா
லொன்றார்மும் மதிலெய்தவ னோத்தூ
ரென்றார் மேல்வினை யேகுமே. (௮)

நன்றுநான்மறை யானொடு மாலுமாய்ச்
சென்றார் போலுந்திசை யெலா
மொன்றாயொள்ளெரி யாய்மிகவோத்தூர்
நின்றீரோயுமை நேடியே. (௯)

Koviloor Digital Library

காரமண் கலிங்கந் துவராடையர்
தேரர் சொல்லவை தேறன்மி
னோரம்பா லெயிலெய்தவ னோத்தூர்ச்
சீரவன் கழல் சேர்மினே. (ய)

குரும்பையாண் பனையீன்குலை யோத்தூ
ரரும்பு கொன்றை யடிகளைப்
பெரும் புகலியுள் ஞானசம்பந்தன் சொல்
விரும்புவார் வினைவீடே. (யக)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - வேதநாதேசர். தேவியார் - இளமுலையம்மை.

சீரின்மன்னுந் திருக்கடைக்காப் பேற்றிச்சிவனா ரருள்பெற்றுப்
பாரினீடு மப்பனைமுன் காய்த்துப்பழுக்கும் பண்பினா
னேருமன்பர் தங்கருத்து நேரேமுடித்துக் கொடுத்தருளி
யாருமுவகைத் திருத்தொண்டர் போற்றவங்கணினிதமர்ந்தார்.

(இ-ள்.) சீரின் மன்னும் திருக்கடைக்காப்பு ஏற்றிச் சிவனார் அருள் பெற்று = சிறப்புமிக்க திருக்கடைக்காப்பில் வைக்கப்பெற்று அதனாற் சிவபெருமானது திருவருளையடைந்து; பாரில் நீடும் அப்பனைமுன் காய்த்துப் பழுக்கும் பண்பினால் = நிலவுலகத்தில் வளர்ந்த அப்பனைகள் முன்னே பெண்பனைகளாய்க் காய்த்துப்பழுக்குந் தன்மையினால்; நேரும் அன்பர் தம் கருத்து நேரேமுடித்துக்கொடுத்தருளி = தம்மைக் குறையிரந்த அவ்வடியாரது மனக்கருத்தைத் தடையின்றி யப்பொழுதே முடித்துக்கொடுத்து; ஆரும் உவகைத்திருத்தொண்டர்போற்ற அங்கண் இனிது அமர்ந்தார் = நிறைந்த மகிழ்ச்சியையுடைய திருவடியார்கள் துதிக்கும்படி யத்திருப்பதியி லினிதாக வெழுந்தருளியிருந்தார்.—எ-று.

அப்பனை காய்த்துப்பழுக்கும் பண்பினால் சிவனாரருள்பெற்றுநேருமன்பர் தங்கருத்துமுடித்துக்கொடுத்தெனக்கூட்டுக. (ருஅக)

தென்னாட்டமணா சறுத்தார்தஞ் செய்கைகண்டு திகைத்தமண
ரந்நாட்டதனை விட்டகல்வார் சிலர்தங்கையிற்குண்டிகைக
ளென்னுவனமற் றிவையென்று தகர்ப்பாரிறைவ னேறுயர்த்த
பொன்னார்மேனிப் புரிசடையா னன்றேயென்று போற்றினார்.

(இ-ள்.) தென்னாட்டு அமண் ஆசு அறுத்தார் தம் செய்கைகண்டு திகைத்து அமணர் = பாண்டிநாட்டிலுள்ள சமணமொன்றும் குற்றத்தையறுத் தருளியபிள்ளையாரது செய்கையைக்கண்டு மயங்கிச் சமணர்கள்; அந்நாட்ட

Koviloor Digital Library

தனைவிட்டு அகல்வார் = அத்திருவோத்தூரைவிட்டு நீங்குவாராயினர் ; சிலர் தம்கையிற் குண்டிகைகள் என் ஆவன மற்றிவை என்று தகர்ப்பார் = சிலர் தமதுகையிலுள்ள கமண்டலங்களை இவை யாதுபயன்கொடுப்பனவென்று உடைப்பாராய் ; இறைவன் ஏறு உயர்த்த பொன்னார்மேனிப் புரிசடையான் அன்றே என்றுபோற்றினர்=முதற்கடவுள் இடபக்கொடியையுயர்த்த பொன் போலுந் திருமேனியையும் முறுக்குப்பொருந்திய சடையையுமுடையவனேயென்று துதித்தார்கள்.—எ-று. (௬அ௨)

பிள்ளையார் தந்திருவாக்கிற் பிறத்தலாலே தாலமுமுன்
புள்ளபாசம் விட்டகல வொழியாப்பிறவிதனை யொழித்துக்
கொள்ளுநீர்மைக் காலங்கள் கழிந்துச்சிவமே கூடினவாம்
வள்ளலார் மற்றவருளின் வாய்மைகூறின் வரம்பென்னும்.

(இ-ள்.) பிள்ளையார் தம் திருவாக்கிற் பிறத்தலாலே = ஆளுடைய பிள்ளையாரது திருவாக்கில் வைக்கப்பட்டதனால் ; தாலமும் முன்பு உள்ள பாசம்விட்டு அகல = அப்பனைகளும் முன்புள்ள (ஆணவாதி) பாசங்கள் தம்மைவிட்டு நீங்க ; ஒழியாப்பிறவிதனை ஒழித்து=தம்மை நீங்காதிருந்த பிறவியை நீக்கி ; கொள்ளும் நீர்மைக்காலங்கள்கழித்து = தாமுலகிற்பொருந்திப் பிராரத்தம் புசிக்குங்காலத்தை நீக்கிப் பின்பு ; சிவமே கூடினவாம் = சிவத்தையடைந்தனவாம் (அதனால்) ; வள்ளலார் மற்றவர் அருளின் வாய்மை கூறின் வரம்பு என்னும் = வள்ளற்றன்மையையுடைய ஆளுடையபிள்ளையாரது திருவருளின்பெருமையையெடுத்துச் சொல்லப்புகின் அதற்களவு எவ்வாறும்.—எ-று.

பிள்ளையாரது வாக்கின்பெருமைதோன்றத் திருவாக்கிற்பிறத்தலாலென்றும் ; தாலம் நிலையியற்பொருளாதலின், தாலமுமென இழிவுசிறப்பும்மையாற் சிறப்பித்தும் ; ஆணவாதிபாசங்களின் அநாதிதோன்ற முன்புள்ள பாசமென்றும் ; அக்காரணம் நீங்கக் காரியமாகிய பிறவியொழியுமென்னும் நியமந்தோன்ற விட்டகல வொழியாப்பிறவிதனையொழித்தென்றும்; பாசங்கள் நீங்கினும் பிராரத்தம் புசித்தன்றி முத்திசித்திக்காவென்று முறைமைதோன்றக்கொள்ளுநீர்மைக் காலங்கள் கழித்துச் சிவமேகூடினவாம் என்றும் ; அருளின்வாய்மை அளவுபடாமையின் வரம்பென்னுமென்றுங் கூறினர். (௬அ௩)

அங்கணமரர் பெருமானைப் பணிந்து போந்தாடரவினுடன்
பொங்குகங்கை முடிக்கணிந்தார் மகிழும்பதிகள் பலபோற்றி
மங்கைபாகரயர் தருளும் வயன்மாகறலை வழுத்திப் போய்க்
கொங்குமலர் நீர்க்குரங்கணின் முட்டத்தைச் சென்றுகுறுகினர்.

Koviloor Digital Library

(இ-ள்.) அங்கண் அமரர் பெருமானைப்பணிந்துபோந்து=அத்திருப் பதியிலெழுந்தருளிய வேதநாதேசரை வணங்கிச்சென்று; ஆடு அரவினுடன் பொங்குகங்கைமுடிக்கு அணிந்தார் மகிழும்பதிகள் பலபோற்றி=ஆடுகின்ற பாம்புடன் விளங்குங்கங்காநதியைத் திருமுடியிலணிந்த பெருமானார் மன மகிழ்ந்து வாழும் பலதிருப்பதிகளையுந் துதித்து; மங்கைபாகர் அமர்ந்தருளும் வயல்மாகரலைவழுத்திப்போய்=உமாதேவிபாகராகிய கலகங்காத்த வரதேசரெழுந்தருளிய வயல்சூழ்ந்த திருமாகரலென்னுந் திருப்பதியைத்துதித்துச்சென்று; கொங்குமலர் நீர்க்குரங்கணின் முட்டத்தைச்சென்று குறுகினார்=வாசனைபொருந்திய பூக்கள் நிறைந்த நீர்சூழ்ந்த குரங்கணின் முட்டமென்னுந் திருப்பதியைச்சென்றடைந்தருளினார்.—எ-று. (கூஅச)

திருமாகரல் - திருவிராகம் - பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

விங்குவிளை கழனி மிகுகடைசியர்கள் பாடல்விளை யாடலரவ, மங்குலொடு நீள்கொடிகள் மாடமலி நீடுபொழின் மாகரலுளான் கொங்குவிரி கொன்றையொடு கங்கைவளர் திங்களணி செஞ்சடையினன், செங்கண்விடை யண்ணலடி சேர்பவர் கடீவினை கடீருமுடனே.

கடைகணெடு மாடமிகவோங்கு கமழ் வீதிமலிகாழி யவர்கோ, னடையும் வகையாற் பரவியரனையடி கூடுசம்பந்த னுரையான், மடைகொள்புன லோடுவயல் கூடுபொழின் மாகரலுளா, னடியையேயுடைய தமிழ்பத்து முணர்வாரவர் கடொல்வினைக ளொல்குமுடனே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - கலகங்காத்தவரதேசர்.

தேவியார் - புவனநாயகியம்மை.

ஆதிமுதல்வர் குரங்கணின்முட் டத்தையணைந்து பணிந்தேத்தி
நீதிவாழுந் திருத்தொண்டர் போற்றநிகரில் சண்பையினில்
வேதமோடு சைவநெறி விளங்கவந்த கவுணியனார்
மாதொர்பாகர் தாமன்னு மதில்சூழ்காஞ்சி மருங்கணைந்தார்.

(இ-ள்.) ஆதிமுதல்வர் குரங்கணில் முட்டத்தை அணைந்து பணிந்து ஏத்தி = ஆதிகருத்தாவாகிய வாலீசரெழுந்தருளிய குரங்கணின் முட்டமென்னுந் திருப்பதியையடைந்து பணிந்து துதித்து; நீதிவாழும் திருத்தொண்டர் போற்ற = முறைமையோடு வாழுகின்ற திரு அடியார்கள் துதிக்க; நிகரில்

Koviloor Digital Library

சண்பையினில் வேதமோடு சைவநெறி விளங்கவல்ல கவுணியனூர் = ஒப்பற்ற சீகாழியில் வேதங்களுடன் சைவமார்க்கம் விளங்கும்படி அவதரித்த ஆளுடையபிள்ளையார்; மாதொர்பாகர் தாம் மன்றும் மதில்சூழ் காஞ்சிமருங்கு அணைந்தார்=உமாதேவிபாகராகிய ஏகாம்பரேசரெழுந்தருளிய மதில்சூழ்ந்த காஞ்சிபுரத்தின் பக்கலி லடைந்தருளினார்.—எ-று. முட்டம்—ஊர். குரங்கு மணிலும் பூசித்தவூர் ஆதலில் குரங்கணின் முட்டம் எனவாயிற்று. (கஅ௫)

குரங்கணின்முட்டம்-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

விழுநீர் மழுவாட் படையண்ணல் விளங்கும்
கழுநீர் குவளை மலரக் கயல்பாயுங்
கொழுநீர் வயல்சூழ்ந்த குரங்கணின் முட்டந்
தொழுநீர் மையர்தீதுறு துன்ப மிலரே.

கல்லார் மதிற்காழியுள் ஞான சம்பந்தன்
கொல்லார் மழுவேந்தி குரங்கணின் முட்டஞ்
சொல்லார் தமிழ்மாலை செவிக்கினி தாக
வல்லார்க் கெளிதாம் பிறவா வகைவீடே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - வாலீசர். தேவியார் - இறையார்வளையம்மை.

வேறு.

நீடுகாஞ்சி வாணரு நிலவுமெய்ம்மை யன்பரு
மாடுசண்பை வள்ளலார் வந்தணைந்த வோகையாற்
கூடுகின்ற வின்பநேர் குலாவுவீதி கோலினார்
காடுகொண்ட பூகம்வாழை காமர்தோரணங்களால்.

(இ-ள்.) நீடுகாஞ்சி வாணரும் நிலவும் மெய்ம்மை அன்பரும்=பெருமைபொருந்திய காஞ்சிநகரத்தில் வசிக்கின்றவர்களும் விளங்குகின்ற மெய்ம்மைபொருந்திய சிவனடியார்களும்; மாடு சண்பைவள்ளலார் வந்து அணைந்த ஓகையால் = தந்திருப்பதியின் மருங்கு சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையாரெழுந்தருளிவந்த மகிழ்ச்சியினால்; கூடுகின்ற இன்பம் நேர்குலாவு வீதி கோலினார் = தம்முட்கூடுகின்ற வின்பமுடையராய் விளங்குகின்ற வீதியை யலங்கரித்தார்கள்; காடுகொண்ட பூகம்வாழை காமர் தோரணங்களால் = காடாக நிறைந்த கமுகுகளினாலும் வாழைகளினாலும் விரும்பத்தக்க தோரணங்களினாலும்.—எ-று. இவைகளால்வீதியைக்கோலினாரெனக்கூட்டுக.

கொடிநிரைத்த வீதியிற் கோலவேதி கைப்புறங்
கடிகொண்மாலை மொய்த்தபந்தர் கந்தநீர்த் தசும்புடன்

Koviloor Digital Library

மடிவில்பொன் விளக்கெடுத்து மாதர்மைந்தர் மல்குவார்
படிவிளங்கு மன்பரும் பரந்தபண்பி லீண்டுவார்.

(இ-ள்.) கொடி நிரைத்த வீதியில் கோலவேதிகைப்புறம் = கொடிகளை வரிசையாக நிறுத்திய வீதியின்கணுள்ள அழகிய வேதிகையின் புறத்தே; கடிகொள்மாலை மொய்த்தபந்தர் = மணம்பொருந்திய பூமாலைகள் தூக்கிய பந்தலினிடத்து; கந்த நீர்த்தசும்புடன் = வாசனைபொருந்திய நீர் நிறைந்த பூரணகும்பங்களுடன்; மடிவில் பொன்விளக்கு எடுத்து=கெடுதலில்லாத பொன்னாலாகிய திருவிளக்குகளை யேந்திக்கொண்டு; மாதர்மைந்தர் மல்குவார் = பெண்களும் ஆடவர்களும் நிறைந்திருப்பார்கள்; படிவிளங்கும் அன்பரும் பரந்தபண்பில் ஈண்டுவார் = பூமியின்கண் விளங்கிய அடியார்களும் நிறைந்த பேரன்போடு நெருங்குவார்கள்.—எ-று. (கூஅஎ)

கோதைமாத ராடலுங் குலாவுதொண்டர் பாடலும்
வேதகீத நாதமு மிக்கெழுந்து விம்மவே
காதனீடு காஞ்சிவாணர் கம்பலைத் தெழுந்துபோய்
மூதெயிற் புறம்புசென் றணைந்துமுன் வணங்கினார்.

(இ-ள்.) கோதைமாதர் ஆடலும் குலாவுதொண்டர்பாடலும்=மாலையையணிந்த மகளிரது நடனமும் விளங்குகின்ற தொண்டர்களது பாடலும்; வேதகீத நாதமும் மிக்கெழுந்து விம்மவே=வேதங்களையோதுதலாகிய ஒலியும் அதிகரித் தெழுந்தெங்கும் பரவ; காதல் நீடுகாஞ்சி வாணர் கம்பலைத்து எழுந்துபோய் = விருப்புமிக்க காஞ்சிபுரத்தில் வாழுகின்றவர்கள் அரவென ஆரவாரித்து எழுந்து சென்று; மூது எயிற்புறம்பு சென்று அணைந்து முன் வணங்கினார் = பழமைபொருந்திய திருமதிலின்புறம்பே வந்தடைந்து பிள்ளையார் திருமுன்னேவணங்கினார்கள்.—எ-று. (கூஅஅ)

சண்பையாளு மன்பர்முன்பு தொண்டர்வந்து சார்தலும்
பண்புநீடி யானமுன் பிழிந்திறைஞ்சு பான்மைகண்
டெண்பெருக்கு மிக்கதொண்ட ரஞ்சலித் தெழுந்தசொன்
மண்பரக்க விழுந்தெழுந்து வானமுட்ட வார்த்தனர்.

(இ-ள்.) சண்பையாளும் அன்பர் முன்பு தொண்டர்வந்து சார்தலும் = சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார் திருமுன்பு அடியார்கள் வந்து சேரவும்; பண்பு நீடு யானமுன்பு இழிந்து இறைஞ்சு பான்மைகண்டு=குணமிக்கதிருமுத்துச் சிவிகையினின்றும் பிள்ளையார் இறங்கியருளித் தம்மை வணங்குதலைக்கண்டு; எண்பெருக்கு மிக்க தொண்டர் அஞ்சலித்து எழுந்தசொல் = அளவில்லாத மேன்மைபொருந்திய அடியார்கள் அஞ்சலி கூப்பித் தொழுது அரவென வொலித்த ஓசையானது; மண்பரக்கவீழ்ந்து

Koviloor Digital Library

எழுந்து வானமுட்ட ஆர்த்தனர் = நிலவுலகத்திற்பரவ விழுந்து தொழுது ஆகாயத்தைமுட்டும்படி ஆரவாரித்தார்கள்.—எ-று. (கஅக)

சேணுயர்ந்த வானநீடு சீர்கொள்சண்பை மன்னனார்
வாணிலாவு நீற்றணி விளங்கிட மனத்தினற்
பூணுமன்பர் தம்முடன் புகுந்திடப் புறத்துளோர்
காணுமாசை யிற்குவித்த கைந்நிரை யெடுத்தனர்.

(இ-ள்.) சேண் உயர்ந்த வான நீடு சீர்கொள்சண்பைமன்னனார்= நெடுந்தூரமுயர்ந்த விண்ணுலகையடையுமிருந்த புகழையுடைய சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார்; வாள் நிலாவு நீற்றணி விளங்கிட=ஒளிவிளங்கும் விபூதியின் அழகு பிரகாசிக்க; மனத்தினற் பூணும் அன்பர் தம்முடன் புகுந்திட=மனங் காரணமாகப் பொருந்து மெய்யன்பினையுடைய அடியார்களோடு (அக்காஞ்சி நகரினுள்ளே) எழுந்தருளுங்கால்; புறத்துளோர் காணும் ஆசையிற்குவித்த கைநிரை எடுத்தனர் =அங்கேர்ப்புறத்துவந்து கூடிய சனங்கள் பிள்ளையாரைத்தரிசிக்கும் விருப்பால் கூப்பியகரங்களை வரிசையாகச் சிரசின்மேலேறச்செய்தார்கள்.—எ-று. (கஅ௦)

வியனெடுந் தெருவினூடு மிக்கதொண்ட ரார்ப்பெழக்
கயனெடுங்கண் மாதருங் காதனீடு மாந்தரும்
புயல்பொழிந்த தாமெனப் பூவினோடு பொற்சுண
மியலுமாறு வாழ்த்தெடுத் திருமருங்கும் வீசினர்.

(இ-ள்.) வியன்நெடும் தெருவினூடுமிக்கதொண்டர் ஆர்ப்பு எழ= இடமகன்று நீண்ட வீதியினிடத்து மேன்மை மிக்க அடியார்கள் அரவென ஆரவாரிக்க; கயல்நெடுங்கண்மாதரும் காதல் நீடுமாந்தரும் = கயல்போலும் நீண்ட கண்ணையுடைய மகளிரும் விருப்பமிக்க ஆடவர்களும்; புயல் பொழிந்த தாமெனப்பூவினோடு பொற்சுணம்=மழைபொழிந்தாற்போலப் பூவோடுகலந்த பொற்சுண்ணத்தை; இயலுமாறு வாழ்த்து எடுத்து இருமருங்கும் வீசினர் = பிள்ளையார்க்கேற்றவகையால் வாழ்த்தொலிகூறி யிருபக்கமுஞ் சொரிந்தார்கள்.—எ-று. (கஅக)

இன்னவண்ண மியாவரு மின்பமெய்த வெய்துவார்
பின்னுவார்சடைமுடிப் பிரான்மகிழ்ந்த கோயில்கண்
முன்னுறப் பணிந்துபோய் மொய்வரைத் திருமகண்
மன்னுபூ சனைமகிழ்ந்த மன்னர்கோயின் முன்னினார்.

(இ-ள்.) இன்னவண்ணம் யாவரும் இன்பம் எய்த எய்துவார்=இவ்வாறு அந்நகரிலுள்ள யாவரு மகிழும்படி யெழுந்தருளு மாளுடையபிள்ளையார்; பின்னுவார் சடைமுடிப்பிரான் மகிழ்ந்தகோயில்கள் = பின்னல்பொ

Koviloor Digital Library

ருந்திய நீண்ட சடைமுடியையுடைய சிவபெருமான் மகிழ்ந்தெழுந்தருளும் (அவ்வீதிமருங்குள்ள) ஆலயங்களின் ; முன்னுறப்பணிந்துபோய் = முன்பு நிலமுறச் சாட்டாங்கமாய் வணங்கிச்சென்று ; மொய்வரைத்திருமகள் மன்னுபூசனை மகிழ்ந்தமன்னர்கோயின் முன்னினார் = நெருங்கிய சிகரங்களையுடைய மலையரயன் புத்திரியாகிய காமாட்சிதேவியார் பாகம்பெறும்படி செய்த நிலைபெற்ற பூசையை மகிழ்கூர்ந்த ஏகாம்பரநாதரது திருக்கோயிலையடைந்தருளினார்.—எ-று. (கசுஉ)

கம்பவாணர் கோயில்வாயில் கண்டுகை குவித்தெடுத்
தும்பரோங்கு கோபுரத்தின் முன்னிறைஞ்சி யுள்ளணைந்
தம்பொன்மாளி கைப்புறத்தி லன்பரோடு சூழவந்
திம்பர்ஞால முய்யவந்த பிள்ளையா ரிறைஞ்சுவார்.

(இ-ள்.) கம்பவாணர் கோயில்வாயில் கண்டு கைகுவித்து எடுத்து= திருவேகம்பரது திருக்கோயிலின் திருவாயிலைக்கண்டு திருக்கரங்களைச் சிரசின்மேற்கூப்பி யெடுத்து ; உம்பர் ஓங்கு கோபுரத்தின்முன் இறைஞ்சி உள் அணைந்து = மேகமண்டலமளவுமுயர்ந்த திருக்கோபுரத்தின்முன் வணங்கியுள்ளே சென்று ; அம்பொன் மாளிகைப்புறத்தில் அன்பரோடு சூழவந்து= அழகிய பொன்னாலாகிய திருமாளிகையின்பக்கத்தி லடியாரோடு வலமாய் வந்து ; இம்பர்ஞாலம் உய்யவந்த பிள்ளையார் இறைஞ்சுவார்=இந்நிலவுலக முய்யும்படி எழுந்தருளிய ஆளுடையபிள்ளையார் வணங்குவாராயினார்-எ-று. கம்பவாணரென்பது, திருவேகம்பத்துள் வாழுநர் என்றபடி. (கசுஙு)

வேறு.

செம்பொன்மலைக் கொடிதழுவக் குழைந்தருளுந் திருமேனிக்
கம்பரைவந் தெதிர்வணங்குங் கவுணியர்தங் காவலனார்
பம்புதுளிக் கண்ணருவி பாய்ந்துமயிர்ப் புளகம்வரத்
தம்பெருகு மனக்காத றள்ளநிலமிசைத் தாழ்ந்தார்.

(இ-ள்.) செம்பொன் மலைக்கொடி தழுவக்குழைந்தருளும் திருமேனி=சிவந்தபொன்மலையரசனுடைய இமவான் புத்திரியாகிய காமாட்சிதேவி தழுவுங்காரணத்தாற் குழைந்த திருமேனியையுடைய ; கம்பரைவந்து எதிர் வணங்கும் கவுணியர் தம் காவலனார்=திருவேகம்பரையடைந்து திருமுன் வணங்கும் ஆளுடையபிள்ளையார் ; பம்புதுளிக்கண் அருவிபாய்ந்து மயிர்ப் புளகம்வர=மிகத்துளிக்கு மானந்தக்கண்ணீரருவி திருமேனியிற் பாய்தலால் உரோமமுகிளிப்ப ; தம்பெருகுமனக்காதல் தள்ள நிலமிசைத்தாழ்ந்தார்= தமது மிக்க திருவுள்ளத்தின்கணுள்ள பெருவிருப்பானது அவசமாக்கப் பூமியில் விழுந்தார்.—எ-று. (கசுச)

Koviloor Digital Library

பலமுறையும் பணிந்தெழுந்து பங்கயச்செங் கைம்முகிழ்ப்ப
மலருமுக மளித்ததிரு மணிவாயான் மறையானென்
றுலகுய்ய வெடுத்தருளி யுருகியவன் பென்புருக்க
நிலவுமிசை முதற்றுள நிரம்பியநீர்மையி னிகழ.

(இ-ள்.) பலமுறையும்பணிந்து எழுந்து பங்கயச்செங்கை முகிழ்ப்ப=பலதரமுஞ்சாஷ்டாங்கமாகவணங்கி யெழுந்து தாமரைமலர்போலுஞ் சிவந்த திருக்கரங்கள் சிரமேற்குவிய; மலரும்முகம் அளித்த திருமணிவாயால்=மலர்ந்த திருமுகத்திற்றோன்றிய அழகிய திருவாக்கினால்; மறையான் என்று உலகு உய்ய எடுத்தருளி="மறையானை" என்று உலகத்தாருய்ய முதலெடுத்தருளி; உருகிய அன்பு என்பு உருக்க=மனமுருகுதற்குக்காரணமான பேரன்பானது என்பினையுருகச்செய்ய; நிலவு மிசைமுதற்றாளம் நிரம்பிய நீர்மையின் நிகழ=விளங்கிய வேழிசை முதலியவற்றோடு தாளமுங் குறையாத வியல்பாற் பொருந்தும்படி.—எ-று. ஈண்டு, வாயென்றது வாக்கின் மேனின்றது. (௧௧௫)

திரு ஏகம்பம் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

மறையானை மாசிலாப் புன்சடை மல்குவெண்
பிறையானைப் பெண்ணோ டாணாகிய பெம்மானை
யிறையானை யேர்கொள்கச் சித்திரு வேகம்பத்
துறைவானை யல்லதுள் காதெனது ள்ளமே.

அந்தண்பூங் கச்சியேகம்பனை யம்மானைக்
கந்தண்பூங் காழியூரன்கலிக் கோவையாற்
சந்தமே பாடவல்ல தமிழ் ஞானசம்
பந்தன் சொற்பாடி யாடக் கெடும்பாவமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-ஏகாம்பரநாதர். தேவியார்-காமாட்சியம்மை.

பாடினார் பணிவுற்றார் பரிவுறுமா னந்தக்கூத்
தாடினா ரகங்குழைந்தா ரஞ்சலிதஞ் சென்னியின்மேற்
சூடினார் மெய்ம்முகிழ்த்தார் சுரமுமன்னமுமாய்த்
தேடினா ரிருவர்க்குந் தெரிவரியார் திருமகனார்.

(இ-ள்.) பாடினார் பணிவுற்றார் = திருப்பதிகம்பாடியருளினார் வணங்கியருளினார்; பரிவுறும் ஆனந்தக்கூத்து ஆடினார் = அன்புமிக்க ஆனந்தக்

Koviloor Digital Library

கூத்தை யாடியருளினுர்; மனம்குழைந்தார் = மனங்குழை வடைந்தார்; அஞ்சலி தம் சென்னியின்மேற் சூடினுர் = கூப்பிய திருக்கரங்களைத்தமது திருமுடியின்மேற் சேர்த்தருளினுர்; மெய் முகிழ்த்தார் = புளகாங்கித முடையரானுர்; சூகரமும் அன்னமுமாய்த் தேடினுர் இருவர்க்கும் தெரிவரியார் திருமகனுர் = பன்றியு மன்னமுமா யடியையு முடியையுந் தேடிய திருமால்பிரமனென்னு மிருவருக்கு மறிதற்கரிய சிவபெருமானுரது புதல்வராகிய ஆளுடையபிள்ளையார்.—எ-று. அஞ்சலி, இருகரங்களையுங் குவியச் சேர்த்தல். (கககூ)

மருவியவே ழிசைபொழிய மனம்பொழியும் பேரன்பாற்
பெருகியகண் மழைபொழியப் பெரும்புகலிப் பெருந்தகையா
ருருகியவன் புள்ளலைப்ப வுமைதழுவக் குழைந்தவனைப்
பருகியமெய் யுணர்வினெடும் பரவியே புறத்தணைந்தார்.

(இ-ள்.) மருவிய ஏழிசை பொழிய மனம்பொழியும் பேரன்பால் = பொருந்திய ஏழிசைகளு மிக்கோங்க மனதிலுதித்த பேரன்பினுல்; பெருகிய கண்மழைபொழிய=பெருக்கெடுத்த ஆனந்தக்கண்ணீரானது சொரியும்படி; பெரும்புகலிப் பெருந்தகையார் = பெரிய சீகாழியிலவதரித்த ஆளுடைய பிள்ளையார்; உருகிய அன்பு உள் அலைப்ப = மனமுருகுதற்குக் காரணமான பேரன்பு தம்முள்ளத்தை யலையச்செய்ய; உமைதழுவக் குழைந்தவனை = காமாட்சி தேவியார் தழுவுங்கால் திருமேனிகுழைந்தருளிய திருவேகம்பனை; பருகிய மெய்யுணர்வினெடும்பரவியே புறத்து அணைந்தார் = தமது திருக்கண்களாற்பருகிய மெய்யுணர்ச்சியுடன் துதித்துப் புறம்பேவந்தருளினுர்.—எ-று. (ககள)

புறத்தணைந்த தொண்டருடன் போந்தமைந்த திருமடத்திற்
பெறற்கரும்பே றுலகுய்யப் பெற்றருளும் பிள்ளையார்
மறப்பரிய காதலுடன் வந்தெய்தி மகிழ்ந்துறைவா
ரறப்பெருஞ்செல்வக் காமக் கோட்டமணைந் திறைஞ்சினுர்.

(இ-ள்.) புறத்து அணைந்த தொண்டருடன் போந்து அமைந்ததிரு மடத்தில் = ஆலயத்தின் புறம்பேவந்து அடியார்திருக்கூட்டத்துடனெழுந்தருளி அங்குள்ள திருமடத்தில்; பெறற்கரும் பேறு உலகு உய்யப்பெற்றருளும் பிள்ளையார் = யாவராலும் பெறுதற்கரிய சிவஞானத்தை யுலகத்தாருய்யும்பொருட்டுத் தாம்பெற்ற ஆளுடையபிள்ளையார்; மறப்பரிய காதலுடன் வந்து எய்தி மகிழ்ந்து உறைவார் = மறத்தற்கரிய பெருவிருப்போடு அங்கெழுந்தருளிவந்து மகிழ்ந்து இருந்தருளுவாராய்; அறப்பெருஞ்செல்வக் காமக்கோட்டம் அணைந்து இறைஞ்சினுர் = பின்பு அறங்களை வளர்

Koviloor Digital Library

ச்சுமிக்க செல்வத்தையுடைய திருக்காமக் கோட்டத்தையடைந்து வணங்கியருளினர்.—எ-று. பிள்ளையார் திருமடத்தி லுறைவாராய்க் காமக் கோட்டமடைந் திறைஞ்சினரெனக்கூட்டுக. (௬௬அ)

திருவேகாம் பரத்தமர்ந்த செழுஞ்சுடரைச் சேவடியி
லொருபொழுதுந் தப்பாதே யுள்ளுருகிப் பணிகின்றார்
மருவுதிரு வியமகமும்வளரிருக்குக் குறண்மற்றும்
பெருகுமிசைத் திருப்பதிகத்தொடைபுனைந்தார் பிள்ளையார்.

(இ-ள்.) திரு ஏகாம்பரத்து அமர்ந்த செழும் சுடரை = திருவேகாம்பரமென்னு மாலயத்திலெழுந்தருளிய செழுமைபொருந்திய சோதிவடிவரான ஏகாம்பர நாதரை; சேவடியில் ஒருபொழுதும் தப்பாதேயுள் உருகிப் பணிகின்றார்=சிவந்ததிருவடிகளி லொருகாலமுந் தவறாமல் மனமுருகி வணங்குகின்றவராய்; மருவு திரு இயமகமும் வளர் இருக்குக்குறள் மற்றும்=மேன்மைபொருந்திய திரு இயமகமும் திருவிருக்குக் குறளும் இவையல்லாத பிறவுமாகிய; பெருகும் இசைத்திருப்பதிகத்தொடை புனைந்தார் பிள்ளையார்= மிக்க இசைபொருந்திய திருப்பதிகமாலையையும் ஆளுடையபிள்ளையார் பாடியருளினர்.—எ-று. பணிகின்றாராய்ப்பிள்ளையார் பாடினரெனக்கூட்டுக. அவ்வாலயம் ஒருமாமரமுடைமையால் திரு ஏகாம்பரமென்றும்; திருவேகம்பமென்றும் பெயர் பெறும். சிவபெருமானும் திருவேகாம்பரர், திருவேகம்பர் என வாழுமுரிமையாற் பெயர்பெறுவர். (௬௬௯)

திருவேகம்பம்-திரு இயமகம்.

திருச்சிற்றம்பலம்.

பாயுமால்விடைமேலொருபாகனே பாவைதன்னுருமேலொருபாகனே, தூயவானவர் வேதத்துவனியே சோதிமாலெரி வேதத்துவனியே, யாயுநன்பொரு ளுண்பொருளாதியே யாலகீழ லரும்பொருளாதியே, காயவின்மதன் பட்டதுகம்பமே கண்ணுதற்பரமற் கிடங்கம்பமே.

கந்தமார்பொழில் சூழ்தருகம்பமே காதல்செய்பவர் தீர்த்திடுகம்பமே, புந்திசெய்து விரும்பிப்புகலியே பூசுரன்றன் விரும்பிப்புகலியே, யந்தமில்பொரு ளாயினகொண்டுமே யண்ணலின்பொரு ளாயினகொண்டுமே, பந்தனின்னியல் பாடியபந்துமே பாடவல்லவராயினபந்துமே.

திருச்சிற்றம்பலம்.

Koviloor Digital Library

திருவிருக்குக்குறள்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

கருவார் கச்சித், திருவே கம்பத்
தொருவா வென்ன, மருவா வினையே.
கொச்சை வேந்தன், கச்சிக்கம்ப
மெச்சுஞ் சொல்லை, நச்சும்புகழே.

திருச்சிற்றம்பலம்.

நீடுதிருப் பொழிற்காஞ்சி நெறிக்காரைக் காடிறைஞ்சிச்
சூடுமதிக் கண்ணியார் துணைமலர்ச்சே வடிபாடி
யாடுமவ ரினிதமரு மனேகதங்காவதம் பரவி
மாடுதிருத் தானங்கள் பணிந்தேத்தி வைகுநாள்.

(இ-ள்.) நீடுதிருப்பொழிற் காஞ்சி நெறிக்காரைக்காடு இறைஞ்சி= மிக்க திருவினையுடைய சோலைசூழ்ந்த திருக்காஞ்சியிலுள்ள திருநெறிக்காரைக் காட்டைவணங்கி; சூடுமதிக்கண்ணியார் துணைமலர்ச்சேவடிபாடி= சூடுகின்ற மூன்றும் பிறையாகிய கொண்டைமாலையையுடைய காரைத்திருநாதரது இரண்டுமலர்போலுந் திருவடிகளைத்துதித்து; ஆடுமவர் இனிது அமரும் அனேகதங்காவதம் பரவி=திருத்தஞ்செய்தருளுஞ் சிவபெருமானெழுந்தருளிய அனேகதங்காவதமென்னுந் திருப்பதியைத்துதித்து; மாடுதிருத்தானங்கள் பணிந்து ஏத்திவைகும் நாள்=அத்திருக்கச்சித் திருப்பதியினருகிலுள்ள பிற திருப்பதிகளையும் வணங்கித் துதித்து அங்கெழுந்தருளியிருக்கும் நாளில்.—எ-று. (௧000)

எண்டிசையும் போற்றிசைக்குந் திருப்பதிமற் றதன்புறத்துத்
தொண்டருட னினிதேத்தித் தொல்லைவிட முண்டிருண்ட
கண்டர்மகிழ் மேற்றளியு முதலான கலந்தேத்தி
மண்டுபெருங் காதலினல் வணங்கிமீண் டணைந்திருந்தார்.

(இ-ள்.) எண்திசையும் போற்றிசைக்கும் திருப்பதிமற்று அதின்புறத்து=எட்டுத்திக்கிலுள்ளாருந் துதிசெய்யுந் திருப்பதியாகிய அத்திருக்காஞ்சியின் பக்கத்திலுள்ள தலங்களில்; தொண்டருடன் இனிது ஏத்தி=அடியார் திருக்கூட்டங்களுட னினிதாகத் துதித்து; தொல்லைவிடம் உண்டு இருண்ட கண்டர் மகிழ்மேற்றளியுமுதலான கலந்து ஏத்தி=முன்னாளில் ஆலாலத்தையுண்டு அதனாற் கருகிய திருமிடற்றையுடைய சிவபெருமான் மகிழ்ந்து வீற்றிருக்குந் திருக்கச்சி மேற்றளியும் திருவோணகாந்தன்றளியுமுதலிய பலதிருப்பதிகளையுமடைந்து துதித்து; மண்டு பெருங்காதலினால் வணங்கி மீண்டு அணைந்து இருந்தார்=மிக்க பெருவிருப்பால் வணங்கி மீண்டு முன்போலத் திருமடத்தையடைந்தெழுந்தருளியிருந்தார்.—எ-று. (௧00௧)

Koviloor Digital Library

அப்பதியில் விருப்பினொடு மங்கணனைப் பணிந்தமர்வார்
செப்பரிய புகழ்ப்பாலித் திருநதியின் றென்கரைபோய்
மைப்பொலியுங் கண்டர்திரு மாற்பேறு மகிழ்ந்திறைஞ்சி
முப்புரஞ்செற் றவர்தம்மை மொழிமாலை சாத்தினார்.

(இ-ள்) அப்பதியில் விருப்பினொடும் அங்கணனைப்பணிந்து அமர்வார் = அத்திருக்காஞ்சித் திருப்பதியிற் பெருவிருப்புடன் ஏகாம்பரநாதனை வணங்கி யெழுந்தருளியிருக்கும் பிள்ளையார்; செப்பரிய புகழ்ப்பாலித் திருநதியின் றென்கரைபோய் = சொல்லுதற்கரிய புகழையுடைய திருப்பாலி நதியின் றென்கரையே சென்றருளி; மைப்பொலியுங்கண்டர் திருமாற்பேறு மகிழ்ந்து இறைஞ்சி = கருமைவிளங்குந் திருமிடற்றையுடைய மால்வணங்கீ செழுந்தருளிய திருமாற்பேற்றை மகிழ்கூர்ந்து வணங்கி; முப்புரம் செற்றவர் தம்மை மொழிமாலை சாத்தினார் = முப்புரங்களையு மெரித்த அம்முதல்வனைத் திருப்பதிகமாலை சாத்தியருளினார்.—எ-று. (௧௦௦௨)

திருமாற்பேறு - பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

ஊறி யார்தரு நஞ்சினை யுண்டுமை
நீறுசேர்திரு மேனியர்
சேறுசேர்வயற் றென்திரு மாற்பேற்றின்
மாறிலாமணி கண்டரே.

மன்னிமாலொடு சோமன் பணிசெயு
மன்னுமாற்பேற் றடிகளை
மன்னுகாழியுண் ஞானசம்பந்தன் சொற்
பன்னவேவினை பாறுமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-மால்வணங்குமீசர். தேவியார்-கருணைநாயகி.

திருமாற் பேருடையவர்தந் திருவருள்பெற் றெழுந்தருளிக்
கருமாலுங் கருமாவாய்க் காணரிய கழலுங்கி
வருமாற்றன் மழவிடையார் திருவல்லம் வணங்கித்தம்
பெருமாற்குந் திருப்பதிகப் பெருந்தொடையை லணிவித்தார்.

(இ-ள்.) திருமாற் பேறுடையவர் தம் திருவருள்பெற்று எழுந்தருளி = திருமாற்பேற்றிலெழுந்தருளிய மால்வணங்கீசரது திருவருளைப்பெற்றங்குநின்று மெழுந்தருளி; கருமாலும் கருமாவாய்க் காணரிய கழல்தா

Koviloor Digital Library

ங்கி = கருநிறத்தையுடைய திருமாலும் பன்றிவடிவெடுத்துக் காணுதற்கரிய திருவடிகளைச்சுமந்து வருகின்ற வலிய இளமைபொருந்திய தருமவிடையை யுடைய வல்லநாத ரொழுந்தருளிய திருவல்லமென்னுந் திருப்பதியை வணங்கி ; தம்பெருமாற்குத் திருப்பதிகப் பெரும்பிணையல் அணிவித்தார்=தமது முதல்வராகிய அவ்வல்லநாதருக்குத் திருப்பதிகமாகிய பெருமைபொருந்திய மாலையை யணிவித்தலைச்செய்தார்.—எ-று. (கoooங)

திருவல்லம் - பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

எரித்தவன் முப்புர மெரியின் மூழ்கத்
தரித்தவன் கங்கையைத் தாழ்சடைமேல்
விரித்தவன் வேதங்கள் வேறுவேறு
தெரித்தவ னுறைவிடந் திருவல்லமே.

கற்றவர் திருவல்லங் கண்டுசென்று
நற்றமிழ் ஞானசம் பந்தன்சொன்ன
குற்றமில் செந்தமிழ் கூறவல்லார்
பற்றுவ ரீசன்பொற் பாதங்களே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-வல்லநாதர். தேவியார் - வல்லாம்பிகை.

அங்குள்ள பிறபதியி லரிக்கரியார் கழல்வணங்கிப்
பொங்குபுனற் பால்யாற்றின் புடையில்வட பாலிறைவ
ரொங்குமுறை பதிபணிவா ரிலம்பயங்கோட் டூரிறைஞ்சிச்
செங்கண்விடை யுகைத்தவரைத் திருப்பதிகம் பாடினார்.

(இ-ள்.) அங்கு உள்ள பிறபதியில் அரிக்கு அரியார்கழல்வணங்கி = அத்திருப்பாலித்திருநதியின் தென்கரையிலுள்ள பிற திருப்பதிகளில் திருமாலுக்குக் காண்டற்கரிய சிவபெருமானது திருவடிகளைவணங்கி ; பொங்குபுனற் பால்யாற்றின் புடையில் வடபால்=மிக்க நீர்நிறைந்த பால்யாற்றின் கரையின்வடபக்கத்தில் ; இறைவர் உறைபதி எங்கும் பணிவார் = சிவபெருமானெழுந்தருளிய திருப்பதியெங்கும் வணங்குங்கருத்துடைய பிள்ளையார்; இலம்பயங்கோட்டூர் இறைஞ்சி=இலம்பயங்கோட்டூரைவணங்கி ; செங்கண் விடைஉகைத்தவரைத் திருப்பதிகம்பாடினார் = சிவந்தகண்ணையுடைய இடபத்தைவாகனமாகக் கொண்ட சந்திரசேகரரைத் திருப்பதிகத்தாற் பாடியருளினார்.—எ-று. (கoooச)

Koviloor Digital Library

திருஇலம்பயங்கோட்டூர்-பண்-குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்.

மலையினார் பருப்பதந் துருத்திமாற் பேறு மாசிலாச் சீர்மறைக் காடுநெய்த் தான, நிலையினா னெனதுரை தனதுரை யாக நீறணிந் தேறுகந் தேறிய நிமலன், கலையினார் மடப்பிணை துணையொடுந் துயி லக் கானலம்பெடைபுல்கிக் கணமயிலாலு, மிலையினார் பைம்பொழி லிலம்பயங் கோட்டூ ரிருக்கையாப் பேணியென் னெழில்கொள்வ தியல்பே.

கந்தனைமலிகனை கடலொலிஓ யோதங் கானலங் கழிவளர் கழும லமென்னு, நந்தியாருறைபதி நான்மறை நாவனற்றமிழ்க் கின்றுணை ஞான சம்பந்த, னெந்தையார் வளநக ரிலம்பயங் கோட்டூரிசையொடு கூடிய பத்தும்வல் லார்போய், வெந்துயர் கெடுகிட விண்ணவ ரோ டும் வீடுபெறின்மையில் வீடெளிதாமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - சந்திரசேகரேசுவரர்.

தேவியார் - கோடேந்துமுலையம்மை.

திருத்தொண்டர் பலர்சூழத் திருவிற் கோலமும்பணிந்து
பொருட்பதிகத் தொடைமாலை புரமெரித்த படிபாடி
யருட்புகலி யாண்டகையார் தக்கோல மணைந்தருளி
விருப்பினொடுந் திருவூறல் மேவினார் தமைப்பணிந்தார்.

(இ-ள்.) திருத்தொண்டர் பலர் சூழத் திருவிற்கோலமும் பணிந்து= திருவடியார்கள் பலர்சூழும்படித் திருவிற்கோலமென்னுந் திருப்பதியையும் வணங்கி; பொருட்பதிகத்தொடை மாலை புரம் எரித்தபடி பாடி = பொருணி றைந்த திருப்பதிகமாகிய தொடைபொருந்திய மாலையில் திரிபுரமெரித்ததிரு க்கோலச் சிறப்பைப் பாடியருளி; அருட்புகலி ஆண்டகையார் தக்கோலம் அணைந்தருளி = கருணைபொருந்திய ஆளுடையபிள்ளையார் தக்கோலத்தை யடைந்தருளி; விருப்பினொடும் திருவூறல் மேவினார் தமைப்பணிந்தார் = விருப்பத்தோடு திரு வூறலிலெழுந்தருளிய உமாபதிசனா வணங்கியருளி னார்.—எ-று. (௧௦௦௫)

திருவிற்கோலம்-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

உருவினா ருமையொடு மொன்றி நின்றதோர்
திருவினான் வளர்சடைத் திங்கள் கங்கையான்

Koviloor Digital Library

வெருவிவா னவர்தொழ வெகுண்டு நோக்கிய
செருவினு னுறைவிடந் திருவிற் கோலமே.

கோடல்வெண் பிறையனேக் கூக மேவிய
சேடன செழுமதிற் றிருவிற் கோலத்தை
நாடவல் லஃதமிழ் ஞானசம் பந்தன
பாடல்வல்லார்களுக் கில்லே பாவமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-புராந்தகேசுவரர். தேவியார்-புராந்தரியம்மை.

தொழுதுபல முறைபோற்றிச் சுரர்குருவுக் கிளையமுனி
வழுவிறவம் புரிந்தேத்த மன்னினூர் தமைமலர்ந்த
பழுதில்செழுந் தமிழ்மாலைப் பதிகவிசை புனைந்தருளி
முழுதுமளித் தவாருளாற் போந்தனர்முத்தமிழ்விரகர்.

(இ-ள்.) தொழுது பலமுறைபோற்றி=நிலமுறச் சாட்டாங்கமாய்ப் பலமுறைவணங்கித் துதித்து ; சுரர்குருவுக்கு இளையமுனி=தேவகுருவாகிய வியாழமுனிக்குத் தம்பியாகிய சம்வர்த்தமுனி ; வழுவில் தவம்புரிந்து ஏத்த மன்னினார்தமை = குற்றமற்ற தவஞ்செய்து துதிக்கும்படி யெழுந்தருளிய உமாபதீசனை ; மலர்ந்த பழுதில் செழும் தமிழ்மாலைப்பதிக இசைபுனைந்தருளி = விளங்கிய குற்றமற்ற செந்தமிழ்ச்சொல்லானுய திருப்பதிகமாலையை இசையோடு சாத்தியருளி ; முழுதும் அளித்தவர் அருளாற்போந்தனர் முத்தமிழ்விரகர்=இயங்கியற்பொருளும் நிலையியற்பொருளுமாகிய வெல்லாப்பொருள்களையு முண்டாக்கிய அச்சிவபெருமானது திருவருளினுல் அங்குநின்று ஆளுடையபிள்ளையா ரெழுந்தருளினர்.—எ-று. தேவகுருவாகிய வியாழனுக்குத் தம்பி புலத்தியமுனி கசமுனிமுதலியோருமாகச் சம்வர்த்தன் சிவபத்தியுடைய முனிச்சிரேட்டனுதலில் ஈண்டுக் கூறப்பட்டனன். (கூ௦௦கூ)

திரு ஊறல்-பண்-வியாளக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

மாறிலவுண ரரணம்மவை மாயவோர் வெங்கணையாலன்று
நீறெழ வெய்த வெங்கணி மலனிடம் வினவிற்
றேற விரும்பொழி லுந்திகழ் செங்கயல் பாய்வயலுஞ் சூழ்ந்த
வூற லமர்ந்த பிரானுெலி யார்கழ லுள்குதுமே.

கோட விரும்புறவிற் கொடிமாடக் கொச்சையர் மனமெச்ச
வோடுபுனல்சடைமேல் கரந்தான் றிருவூறல்

Koviloor Digital Library

காட வரும்புகழான் மிகுஞான சம்பந்தன் சொன்ன நல்ல
பாடல்கள் பத்தும்வல்லார் பரலோகத் திருப்பாரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-உமாபதீசர். தேவியார் - உமையம்மை.

குன்றநெடுஞ் சிலையாளர் குலவியபல் பதிபிறவும்
நின்றவிருப் புடனிறைஞ்சி நீடுதிருத் தொண்டருடன்
பொன்றயங்கு மணிமாடப் பூந்தராய்ப் புரவலனார்
சென்றணைந்தார் பழையனூர்த் திருவாலங் காட்டருகு.

(இ-ள்.) குன்றநெடும் சிலையாளர் குலவியபல்பதிபிறவும்=மாமேருவாகிய நீண்டவில்லையுடைய சிவபெருமானெழுந்தருளிய பல திருப்பதிகள் பிறவற்றையும்; நின்ற விருப்புடன் இறைஞ்சி=நிலைபெற்ற விருப்புடன் வணங்கி; நீடு திருத்தொண்டருடன்=மிக்க திருவடியார்கூட்டத்துடன்; பொன் தயங்குமணிமாடப் பூந்தராய்ப் புரவலனார் = பொன்போல் விளங்குகின்ற அழகிய மாடங்களையுடைய சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார்; சென்று அணைந்தார் பழையனூர்த் திருஆலங்காட்டருகு = சென்றடைந்தருளினார் பழையனூரின்கணுள்ள திருவாலங்காடென்னுந் திருப்பதியின் மருங்கு.—எ-று. திருவாலங்காட்டின்கண் சென்றடைந்தாரெனக்கூட்டுக.(௧௦௦௭)

இம்மையிலே புவியுள்ளோர் யாருங்காண வேழுலகும் போற்றிசைப்ப வெம்மையாளு, மம்மைதிருத் தலையாலே நடந்துபோற்று மம்மையப்பர் திருவாலங் காடாமென்று, தம்மையுடை யவர்மூதூர் மிதிக்கவஞ்சிச் சண்பைவருஞ் சிகாமணியார் சாரச்சென்று செம்மைநெறி வழுவாத பதியின்மாடோர் செழும்பதியி லன்றிரவு பள்ளி சேர்ந்தார்.

(இ-ள்.) இம்மையிலே புவியுள்ளோர் யாரும் காண=இப்பிறப்பிலே பூமியிலுள்ள யாவருங் கண்டுக் காணவும்; ஏழு உலகும் போற்றிசைப்ப=ஏழுலகின்கணுள்ளாருந் துதிசெய்யவும்; எம்மையாளும் அம்மை திருத்தலையாலே நடந்துபோற்றும்=எம்மையாளுந் தன்மையையுடைய காரைக்காலம்மையார் திருத்தலையால் நடந்து துதிக்கும்; அம்மை அப்பர் திருவாலங்காடாமென்று = அம்மையப்பராகிய தேவசிங்காரது திருவாலங்காடிதுவாமென்று; தம்மை உடையவர் மூதூர் மிதிக்க அஞ்சி = தம்மையாளாகவுடையவர்த்தாண்டவேசரது பழையதிருப்பதியை மிதித்தற் கச்சமுற்று; சண்பைவருஞ்சிகாமணியார் சாரச்சென்று=சீகாழியிலவதரித்த ஆளுடையபிள்ளையார் அத்திருப்பதியின் சமீபத்தைப்பொருந்தச்சென்று; செம்மை நெறி வழுவாத பதியின்மாடு=நன்மார்க்கம் வழுவாத மரபினர்கள் வாழு மத்திரு

Koviloor Digital Library

ப்பதியின்பக்கத்து; ஓர் செழும்பதியில் அன்று இரவுபள்ளிசேர்ந்தார் = ஒரு செழுமைபொருந்திய ஊரில் அன்றிரவுபள்ளிகொண்டருளினர்.—எ-று. அம்மை, இம்மையில் யாருங்காண வேழுலகும் போற்றிசைப்பத்தலையால் நடந்துபோற்றுமாலங்காடெனக் கூட்டுக. அம்மையும் அப்பருமாய் ஆன்ம கோடிகளைப்பெற்றமையால் அம்மையப்பரென்றும்; காரைக்காலம்மையார் வழிபட்டமையால் அம்மையப்பரென்றும் பொருள்போதரும். (௧௦௦௮)

மாலையிடை யாமத்துப் பள்ளிகொள்ளு மறையவனார் தம்முன் புகனவிலேவர், தாலவனத் தமர்ந்தருளு மப்பர்நம்மை யயர்த்தனை யோபாடுதற்கென் றருளிச்செய்ய, ஞாலமிரு ணீங்கவரும் புகலிவே ந்தர் நள்ளிருள்யா மத்தினிடைத் தொழுதுணர்ந்து, வேலைவிடமுண் டவர்தங் கருணைபோற்றி மெய்யுருகித் திருப்பதிகம் விளம்பலுற்றார்.

(இ-ள்.) மாலை இடை யாமத்துப்பள்ளிகொள்ளும் மறையவனார் தம் முன்பு=மாலைக்காலத்தோடுகூடிய நடுயாமத்திற் பள்ளிகொண்டருளும் ஆளு டையபிள்ளையார் முன்னே; கனவிலேவந்து ஆலவனத்து அமர்ந்தருளும் அப்பர் = கனவிலேயெழுந்தருளித் திருவாலங்காட்டில் வாழ்கின்ற ஊர்த்த தாண்டவேசர் நம்மை அயர்த்தனையோ பாடுதற்கென்று அருளிச்செய்ய = நம்மைப்பாடுதற்கு மறந்தாயோவென்று அருளிச்செய்ய; ஞாலம் இருள் நீங்க வரும்புகலிவேந்தர் = நிலவுலகத்தார் அஞ்ஞான இருளினின்றும் நீங் கும் வண்ணமவதரித்த சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார்; நள் இருள் யாமத்தினிடைத்தொழுது உணர்ந்து=செறிவான இருள்பொருந்திய நடுயாமத்தில் துயிலுணர்ந்துவணங்கி; வேலைவிடம் உண்டவர் தம்கருணை போற்றி = சமுத்திரத்திலுதித்த ஆலாகலத்தையுண்ட அச்சிவபெருமானது திருவருளைத்துதித்து; மெய் உருகித் திருப்பதிகம் விளம்பலுற்றார் = அன் பால் திருமேனியுருகித் திருப்பதிகம்பாடியருளினர்.—எ-று. கருணைபோ ற்றியென்றது, அம்மைதலையால் நடந்த திருப்பதியெனத் தாமப்பதியிற் செலற்கஞ்சி நிற்கவுஞ் சொற்பனத்திற்றாமே சென்று தரிசனங்கொடுத்துப் பாடச்செய்த பெருங்கருணையைத் துதித்தென்றபடி. (௧௦௦௯)

துஞ்சவரு வாரொன்றே யெடுத்தவோசைச் சுருதிமுறைவழுவா மற்றொடுத்தபாட, லெஞ்சலிலா வகைமுறையே பழையனூரா ரியம் புமொழிகாத்தகதை சிறப்பித்தேத்தி, யஞ்சனமா கரியுரித்தா ரரு ளாமென்றே யருளும்வகை திருக்கடைக்காப் பமையச்சாத்திப், பஞ் சுரமாம் பழையதிறங்கிழமைகொள்ளப் பாடினார் பாரொல்லா முய்ய வந்தார்.

(இ-ள்.) துஞ்சவருவாரொன்றே எடுத்த ஓசைச்சுருதி முறைவழுவா மற்றொடுத்தபாடல்="துஞ்சவருவார்" என்று முதலெடுத்தவோசையோடு

Koviloor Digital Library

சுருதியும் நிலைதவறுமற் றெடுத்த திருப்பதிகப்பாடலில்; எஞ்சலிலாவகை முறையே பழையனூரார் இயம்புமொழிகாத்தகதை சிறப்பித்து எத்தி=குறை யாதவண்ணம் பழையனூர் வேளாளர் தாம் வணிகனுக்குக் கூறிய உறுதி மொழியைத் தவறுமற் காத்தகதையையுஞ் சிறப்பித்துத் துதித்து; அஞ்சன மாகரியுரித்தார் அருளாம் என்றே அருளும் வகை திருக்கடைக்காப்பு அமை யச்சாத்தி = கருமை நிறத்தையுடைய பெரியயானையையுரித்த ஊர்த்த தாண்டவேசரது திருவருளாமென்று அவர் தமக்குச் சொற்பனம் நிகழ்த்திப் பாடச்செய்த வகைமையும் திருக்கடைக்காப்பிற் பொருந்தப்பாடி; பஞ்சுர மாம்பழையதிறம்=பல்லுயிருந்துயர் நீங்கப்பாடியருளிய பண்ணமைந்த திருப்பதிக விசையாலாய பழமைபொருந்திய பயனை; கிழமை கொள்ளப் பாடினர் பாரெல்லாம் உய்யவந்தார்=(சமண்பாட்டில் புத்தர் சமணர்கட்கு) முரிமைபொருந்தும்படி பாடியருளினார் உலகெல்லாமுய்யவந்த ஆளுடையபிள்ளையார்.—எ-று. "வஞ்சப்படுத்தொருத்தி வாணாள் கொள்ளும்வகைகேட், டஞ்சும் பழையனூர்" என்றதனால், வேளாளர் வணிகனுக்குக்கூறிய உறுதிமொழிகாத்திறந்தமையும்; "வேந்தனருளாலே" என்னுந் திருக்கடைக்காப்பால் சொற்பனம் நிகழ்த்திய பொருண்மையும், "போழம்பலபேசிப்போது சாற்றித் திரிவாரும், வேழம் வருமளவும் வெயிலே துற்றித் திரிவாருங், கேழல் வினைபோகக்கேட்பிப்பாரும்" என்னுஞ் சமண்பாட்டால் அச்சமண் புத்தர்கட்குத் திருப்பதிகவிசை தீவினையைப் போக்குமென்பதும் போதருதலில், ஈண்டிந்நூலாசிரியர் அத்திருப்பதிகப்பொருளை விரித்துக்கூறியருளினார்.—எ-று.

திரு ஆலங்காடு-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

துஞ்ச வருவாருந் தொழுவிப்பாரும் வழுவிப்போய்
நெஞ்சம் புகுந்தென்னை நினைவிப்பாரும் முனைநட்பாய்
வஞ்சப் படுத்தொருத்தி வாணாள்கொள்ளும் வகைகேட்
டஞ்சும் பழையனூ ராலங்காட்டெம் மடிகளே.

போழம் பலபேசிப் போதுசாற்றித் திரிவாரும்
வேழம் வருமளவும் வெயிலேதுற்றித் திரிவாருங்
கேழல் வினைபோகக் கேட்பிப்பாருங் கேடிலா
வாழ்வர் பழையனூ ராலங்காட்டெம் மடிகளே.

சாந்தங் கமழ்மறுகிற் சண்பைஞான சம்பந்த
னந்தன் பழையனூ ராலங்காட்டெம் மடிகளை

Koviloor Digital Library

வேந்த னருளாலே விரித்தபாட லிவைவல்லார்
சேர்ந்த விடமெல்லாந் தீர்த்தமாகச் சேர்வாரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-ஊர்த்ததாண்டவர். தேவியார்-வண்டார்குழலி.

நீடுமிசைத் திருப்பதிகம் பாடிப்போற்றி நெடுங்கங்கு லிருணீங்கி நிகழ்ந்தகாலை, மாடுதிருத் தொண்டர்குழா மணைந்தபோது மாலையினிற் றிருவால வனத்துமன்னி, யாடுமவ ரருள்செய்தபடியையெல்லா மருளிச்செய் தகமலரப் பாடியேத்திச், சேடர்பயி றிருப்பதியைத் தொழுதுபோந்து திருப்பாசூ ரதன்மருங்கு செல்லலுற்றார்.

(இ-ள்.) நீடும் இசைத்திருப்பதிகம்பாடிப்போற்றி=மிக்க இசைபொருந்திய திருப்பதிகத்தைப்பாடித் துதிசெய்து; நெடும் கங்குல் இருள் நீங்கி நிகழ்ந்தகாலை=பெரிய நடுயாம இருள் நீங்கி விடிந்தகாலத்தில்; மாடுதிருத் தொண்டர்குழாம் அணைந்தபோது=பிள்ளையாரை யெதிர்கொள்ளும்படி யவரிடத்திலடியார்கள் வந்தகாலத்து; மாலையினில் திருவாலவனத்து மன்னி ஆடுமவர்=இரவில் திருவாலவனத்தெழுந்தருளி ஆடியருளும் பெருமானார்; அருள்செய்தபடியையெல்லாம் அருளிச்செய்து = அருளிச்செய்தவகைமையையெல்லாமவ்வடியர்க்கருளிச்செய்து; அகம் மலரப்பாடி ஏத்தி=திருவுளக்களிப்புடன் பாடித்துதித்து; சேடர்பயில் திருப்பதியைத் தொழுது போந்து=பெருமையுடையோர் வாழுமத்திருப்பதியைத் தொழுது அங்கு நின்று மெழுந்தருளி; திருப்பாசூ ரதன்மருங்கு செல்லலுற்றார்=திருப்பாசூரென்னுந் திருப்பதியையடைந்தருளினார்.—எ-று. தம்மையெதிர்கொள்ளவந்த அடியார்களுக்கு ஊர்த்ததாண்டவேசர் தரிசனங்கொடுத்துப் பாடமறந்தனையோவென்றருளியதை யவர்க்கருளிச்செய்து மேலும் பதிகம்பாடித் துதித்து அப்பதியிற்செல்லாது வணங்கிப்போந்தாரென்று பொருள். (௬௦௧௧)

திருப்பாசூ ரணைந்தருளி யங்குமற்றச் செழும்பதியோ ரெதிர்கொள்ளச் சென்றுபுக்குப், பொருப்பரையன் மடப்பாவை யிடப்பாகத்துப் புராதனர்வேயிடங்கொண்ட புனிதர்கோயில், விருப்பினுடன் வலங்கொண்டு புக்குத்தாழ்ந்து வீழ்ந்தெழுந்து மேனியெலா முகிழ்ப்பநின்றே, யருட்கருணைத் திருவாள ஞமஞ்சிந்தை யிடையாரென் றிசைப்பதிக மருளிச்செய்தார்.

(இ-ள்.) திருப்பாசூர் அணைந்தருளி அங்கு மற்றச்செழும்பதியோர் எதிர்கொள்ளச்சென்று புக்கு = திருப்பாசூரென்னுந் திருப்பதியை யடைந்தருளி யவ்விடத்து அந்தச் செழுமைபொருந்திய திருப்பதியிலுள்ளாரெதிர்கொள்ளும்படி சென்றடைந்தருளி; பொருப்பரையன் மடப்பாவை இடப்

Koviloor Digital Library

பாகத்துப் புராதனர் வேய் இடங்கொண்ட புனிதர்கோயில் = மலையரையன் புத்திரியாகிய உமாதேவியை வாமபாகத்துடைய பழையவரானவேயிடங் கொண்ட நாதரது திருக்கோயிலை; விருப்பினுடன் வலங்கொண்டு புக்குத் தாழ்ந்து விழ்ந்து எழுந்து=விருப்போடு வலமாகவந்து உள்ளே யெழுந்தருளி நிலமுறவணங்கியெழுந்து; மேனியெலாம் முகிழ்ப்பநின்றே=திருமேனிமுழுது முரோமமுகிழ்க்கும்படியாக நின்றருளி; அருட்கருணைத் திருவாளன் நாமம்=திருவருளாகிய கருணைச்செல்வத்தையுடைய பாசூர் நாதரது புகழை; சிந்தையிடையாரென்று இசைப்பதிகம் அருளிச்செய்தார் = "சிந்தையிடையார்" என்று முதலெடுத்துத் திருப்பதிகமருளிச்செய்தார்,—எ-று.

திருப்பாசூர்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

சிந்தையிடையார் தலையின் மிசையார் செஞ்சொலார்
வந்துமாலை வைகும்போழ்தென் மனத்துளார்
மைந்தர்மணாள ரென்னமகிழ்வா ரூர்போலும்
பைந்தண்மாதவி சோலைசூழ்ந்த பாசூரே.

ஞானமுணர்வான் காழிஞான சம்பந்தன்
தேனும்வண்டு மின்னிசைபாடுந் திருப்பாசூர்க்
கானமுறைவார் கழல்சேர்பாட லிவைவல்லா
ரூனமிலரா யும்பர்வானத் திருப்பாரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-பாசூர்நாதர். தேவியார்-பசுபதிநாயகி.

மன்னுதிருப் பதிகவிசை பாடிப்போற்றி வணங்கிப்போந் தப்பதியில் வைகிமாடு, பின்னுநகர்தம் வெண்பாக்க முதலாயுள்ள பிறபதிகள் பணிந்தணைவார் பெருகுமன்பான், முன்னிறைந்த திருவாய்மஞ் சனநீராட்டு முதல்வேடர்கண்ணப்பநாயனாரை, யுன்னியொளிர் காளத்தி மலைவணங்க வுற்றபெரு வேட்கையுட னுவந்துசென்றார்.

(இ-ள்.) மன்னுதிருப்பதிக இசைபாடிப்போற்றி=நிலைபெற்ற திருப்பதிகத்தை யிசையோடுபாடித் துதித்து; வணங்கிப் போந்து அப்பதியில் வைகி=வணங்கி ஆலயத்தின் புறம்பேவந்து அத்திருப்பதியிலெழுந்தருளி; மாடு பின்னுநகர் தம் வெண்பாக்கம் முதலாயுள்ள பிறபதிகள் பணிந்து அணைவார்=அதன் மருங்குள்ள சிவபெருமான் மகிழ்ந்தருளுந் திருவெண்பாக்க முதலாயுள்ள பிறதிருப்பதிகளையும் வணங்கி யெழுந்தருளும் பிள்ளையார்; பெருகும் அன்பால் முன் நிறைந்த திருவாய்மஞ்சன நீர் ஆட்டும் = மிக்க

Koviloor Digital Library

அன்பினால் திருவாயில் நிறைந்த திருமஞ்சன நீரைக் காளத்தியாருக்கு அபி டேகஞ்செய்யும்; முதல்வேடர் கண்ணப்பநாயனாரை = முதன்மைபொருந் திய வேடர்குலத்திலவதரித்த கண்ணப்பநாயனாரை; உன்னி ஒளிர்காளத்தி மலைவணங்க=அவர் பத்திமை காரணமாகக் கருதி விளங்குகின்ற திருக்கா ளத்திமலையைத் தாமும் வணங்க; உற்ற பெருவேட்கையுடன் உவந்துசென் றார்=உண்டான பெருவிருப்போடு மனமகிழ்ந்து சென்றருளினார்—எ-று.

மிக்கபெருங்காதலுடன் தொண்டர்சூழ மென்புனனாட் டினைய கன்று வெற்புங்கானுந், தொக்கபெரு வன்புலக்கா னடைந்துபோ கிச் சூலகபா லங்கரத்துச் சுடருமேனி, முக்கண்முதற் றலைவனிட மாகியுள்ள முகினெருங்கு காரிகரை முன்னர்ச்சென்று, புக்கி றைஞ்சிப் போற்றிசைத்தப் பதியில்வைகிப் பூதியரோ டுடன்மகிழ்ந் தார் புகலிவேந்தர்.

(இ-ள்.) மிக்கபெருங்காதலுடன் தொண்டர்சூழ = மேம்பட்ட பெ ருவிருப்போடு அடியார்கள் சூழும்படி; மென்புனனாட்டினையகன்று = மிரு துவான நீர்வளமிக்க பாலிவடகரை நாட்டைநீங்கி; வெற்பும் கானும் தொ க்க பெருவன்புலக்கான் அடைந்துபோகி = மலையுங்காடும் நெருங்கிய பெரிய குறிஞ்சிநிலக்காட்டை யடைந்து சென்றருளி; சூலகபாலக் கரத்துச்சுடரும் மேனி முக்கண்முதற்றலைவன் இடமாகியுள்ள = சூலமுங் கபாலமும் வலமி டமாய்த் திருக்கரத்திற்பொருந்தி விளங்குந் திருமேனியையு மூன்றுகண் களையுமுடைய முதற்கடவுளான சிவபெருமானுக்கு வாழுமிடமாயுள்ள; முகி னெருங்கு காரிகரை முன்னர்ச்சென்று = மேகங்கள்நெருங்கிய திருக்காரிக ரையென்னுந் திருப்பதியை யடைந்து; புக்கு இறைஞ்சிப் போற்றிசைத்து அப்பதியில்வைகி=ஆலயத்துட்புகுந்து வணங்கித் துதித்து அத்திருப்பதியி லெழுந்தருளி; பூதியரோடு இனிது அமர்ந்தார் புகலிவேந்தர் = விபூதியை யணிந்த திருவடியார்களோடு மகிழ்ந்தருளினார் ஆளுடையபிள்ளையார்.-எ-று. காரிகரை, வைப்புத்தலங்களிலொன்று. (௧௦௧௪)

இறைவர் திருக்காரிகரை யிறைஞ்சியப்பா லெண்ணில்பெரு வரைகளிரு மருங்குமெங்கும், நிறையருவி நிரைபலவாய் மணியும் பொன்னும் நிறைதுவலை புடைசிதறி நிகழ்பவாகி, யறைகழல்வான வர்க்கிறைவன் குலிசவேற்று லற்றசிறை பெற்றவன்மே லெழுவத ற்குச், சிறகடித்துப் பறக்கமுயன் றுயர்ந்த போலுஞ் சிலைநிலத்தி லெழுந்தருளிச் செல்லா நின்றார்.

(இ-ள்.) இறைவர் திருக்காரிகரை இறைஞ்சி அப்பால் = சிவபெரு மானெழுந்தருளிய திருக்காரிகரையென்றுந் திருப்பதியை வணங்கி யதற்கப் பால்; எண்ணில் பெருவரைகள் இருமருங்கும் எங்கும் = அளவில்லாத பெ

Koviloor Digital Library

ரியமலைகள் வழியினது இருமருங்கு மெவ்விடத்தும் ; நிறை அருவி நிரைபல வாய் மணியும்பொன்னும் நிறைதவலைபுடை சிதறி நிகழ்பவாகி=நிறைந்த அருவியினது வரிசைகள் பலவுடைத்தாய் மணிகளும் பொன்னும் நிறைந்த திவலைகளை யருகிற் சிந்திப்பெருகுதலுடைத்தாய் ; அறைகழல் வானவர்க்கு இறைவன் குலிசவேற்றால் அற்ற சிறைபெற்று=ஒலிக்கின்ற வீரக்கழலையணி ந்த தேவர்க்கிறைவனாகிய இந்திரன் குலிசாயுதத்தால் அறுக்கப்பட்டு நீங்கிய சிறகைத் (தாம்) பெற்று ; அவன்மேல் எழுவதற்கு அவ்விந்திரன்மேல் போர் செய்யும் நிமித்தமெழும்படி ; சிறகடித்துப் பறக்கமுயன்று உயர்ந்தபோ லும் = சிறகுகளையடித்துப் பறத்தற்கு முயற்சிசெய்து நிமிர்ந்தாற்போலும்; சிலைநிலத்தி லெழுந்தருளிச் செல்லாநின்றார்=குறிஞ்சிநிலத்தின்கண்ணெழுந் தருளிச் செல்கின்றாராயினர்.—எ-று. மலைகள் முற்காலத்துச்சிறகு பெற் றுப் பறக்குங்கால் இமயமலையின் புத்திரனான மைநாக மொழிந்த மலைகள் இந்திரன் வச்சிராயுதத்தால் சிறகற்றனவெனப் புராணங்கூறுதலில், குலிச வேற்றால் அற்றசிறையென்றும் ; இருமருங்கும் பல அருவிகள் நிறைந்துதி வலைசிதறி வீழ்தல், அற்றசிறைபெற்றாற் போலென்பார் பெற்றென்றும்; அத னால் அவ்விந்திரன் மேற்போர் கருதிச்சிறகடித்துப் பறக்கமுயன்றாற் போ லுமென்றுங்கூறினர். (௧0௪டு)

மாதவர்க ணெருங்குகுழாம் பரந்துசெல்ல மணிமுத்தின் பரிச் சின்னம் வரம்பின்றாகப், பூதிநிறை கடலணைவ தென்னச்சண்பைப் புரவல றெழுந்தருளும் பொழுதுசின்னத், திதிலொலி பலமுறை யும் பொங்கியெங்குந் திருஞான சம்பந்தன் வந்தானென்று, நாத நிறை செவியினவாய் மாக்களெல்லா நலமருவு நினைவொன்றாய் மருங்குநண்ண.

(இ-ள்.) மாதவர்கள் நெருங்குகுழாம் பரந்துசெல்ல = அடியார்க ளது நெருங்கிய திருக்கூட்டமெவ்விடத்தும் பரம்பிச்செல்லவும் ; மணிமுத் தின் பரிச்சின்னம் வரம்பு இன்றாக=அழகிய முத்தாலாய விருதாவலிகள் அள வின்றி நெருங்கப்பூதிநிறைகடல் அணைவது என்ன=விபூதியால் நிறைந்தவோர் சமுத்திரம் வந்தாற்போல ; சண்பைப்புரவலனார் எழுந்தருளும்பொழுது= சீகாழியி லவதரித்த ஆளுடையபிள்ளையார் எழுந்தருளுங்காலத்து ; சின்னத் திதில் ஒலி பலமுறையும்பொங்கி எங்கும்=திருச்சின்னங்களினது குற்றமற்ற ஒலியானது பலகாலு மேம்பட்டு எவ்விடங்களிலும் ; திருஞானசம்பந்தன் வந்தானென்று நாதநிறைசெவியினவாய்=ஆளுடையபிள்ளையார் எழுந்தருளி னாரென்று குறிப்பிக்கும்படி யூதுகின்ற நாதத்தால் நிறைந்த காதையுடைய னவாய் ; மாக்களெல்லாம் நலமருவு நினைவு ஒன்றாய் மருங்குநண்ண = விலங்குகளெல்லாம் நன்மைமிக்க தங்கெண்ணங்க ளொன்றுபட்டு அருகிற் சூழ.—எ-று. பரிச்சின்னமாவன-சந்த, சாமரா, குடை, கொடிமுதலியன.

Koviloor Digital Library

கானவர்தங் குலமுலகு போற்றவந்த கண்ணப்பர் திருப்பாதச்
செருப்புத்தோய, மானவரிச்சிலை வேட்டை யாடுங்கானும் வான்
மறையநிலைபெரிய மரமுந்தூறு, மேனையிமை யோர்தாமு மிறைஞ்சி
யேத்தி யெய்தவரும் பெருமையவா மெண்ணிலாத, தானமுமற்ற
வைகடந்து திருக்காளத்தி சாரவெழுந் தருளினார் சண்பைவேந்தர்.

(இ-ள்.) கானவர்தம் குலம் உலகுபோற்றவந்த=வேடர்குலத்திலுலகுள்ளார் யாவருந்துதிக்க அவதரித்த ; கண்ணப்பர் திருப்பாதச்செருப்புத்தோய=கண்ணப்பநாயனார் தமது திருவடிகளிற் செருப்புப்பொருந்தும்படி; மானவரிச்சிலை வேட்டையாடும்கானும்=வலியோடு வரிந்துகட்டிய வில்லால் வேட்டையாடுகின்ற காடும் ; வான்மறைய நிலைபெரிய மரமும் தூறும்=ஆகாயமறையும்படி யுயர்ந்த பெரிய மரங்களுஞ் செடிகளும் ; ஏனை இமையோர் தாமும் இறைஞ்சி ஏத்தி=அவற்றிற்கு வேறான தேவர்களும் வணங்கித் துதித்து ; எய்த வரும்பெருமையவாம் எண்ணிலாத தானமும் = அடைதற்கரிய பெருமையையுடைய வெண்ணிறந்த விடங்களும் ; மற்றவைகடந்து திருக்காளத்திசார எழுந்தருளினார் சண்பைவேந்தர்=ஆகிய அவ்விடங்களை நீங்கித் திருக்காளத்தி மலையைப்பொருந்தவெழுந்தருளினார் ஆளுடையபிள்ளையார்.— எ-று. அசரவுயிர்களும் அவையல்லாத தேவர்களும் இனம்பற்றி மனிதரும் பிறவுயிர்களும் வாழும் நிலைமையாலும், வணங்கு நிலைமையாலு மடையும் பெருமையையுடைய தென்கயிலையென்னும் பெருமைதோன்ற, ஏத்தியெய்தவரும் பெருமையவாமென்றும் ; அவ்வாறான திருவெல்லைக்கண் பலவிசேட தலங்களுடைமையில், அதனுண்மைதோன்ற எண்ணிலாத தானங்களென்றுங் கூறினார். தென்கயிலையென்றதென்னை? புத்திரசோகத்தால் வருந்திய வசிட்டமுனிவர், கசாரணியமென்னும் திருக்காளத்தியில் அச்சோகநீங்க அருந்தவஞ்செய்யுங்கால் சிவபிரான் பிரசன்னராய் அவர்க்குத்தோன்ற அவரைவணங்கியித்தலத்திற்றேசோரூபமான இவ்விலிங்கவடிவோடு எழுந்தருளியிருக்கவெனக் கேட்கக்கல்லாலவிருட்சத்தின்கீழ்த் தட்சணாமூர்த்தியாய் வசிட்டருக் குபதேசித்துத் தேசோமயரூபமாய் இலிங்கமூர்த்தியா யெழுந்தருளினார். அந்த உமாதேவியாரெழுந்தருளி ஞானப்பூங்கோதையென்னும் பெயரடைந்திருந்தார். மேல்விநாயகர், சுப்பிரமணியர், வீரபத்திரர், வைரவர், ஐயனார், உருத்திரர், சிவகணங்கள்யாவரும் ஞானப்பூங்கோதையோடு சிவபெருமா னெழுந்தருளியகசவனத்தை யடைந்திருந்தார்கள். அப்பொழுது மேருமலையோடு திருக்கயிலாயமும் வந்திருந்தது. அதனாற்றென்கயிலையெனப் படுமென்க. (கசுகஎ)

அம்பொன்மலைக் கொடிமுலைப்பால் குழைத்தஞானத் தமு
துண்டபிள்ளையா ரணைந்தாரென்று, செம்பொன்மலை வில்லியார் திரு
க்காளத்தி சேர்ந்ததிருத் தொண்டர்குழா மடையவீண்டிப், பப்புச
டைத் திருமுனிவர் கபாலக்கையர் பலவேடச் சைவர்குல வேடர்

Koviloor Digital Library

மற்று, மும்பர்தவம் புரிவாரப்பதியிலுள்ளோ ருடன்விரும்பி யெதிர்கொள்ள வுழைச்சென்றுற்றார்.

(இ-ள்.) அம்பொன்மலைக்கோடி முலைப்பால் குழைத்த=அழகிய மலையரயன் புத்திரியாகிய உமாதேவியார் திருமுலைப்பாலோடு குழைத்த; ஞானத்தமுதுண்ட பிள்ளையார் அணைந்தாரென்று = சிவஞானமாகிய அமுதத்தையுண்ட ஆளுடையபிள்ளையா ரெழுந்தருளினாரென்று; செம்பொன்மலைவில்லியார் திருக்காளத்தி சேர்ந்த திருத்தொண்டர்குழாம் அடைய ஈண்டி= மேருமலையை வில்லாகவுடைய காளத்தியீசரெழுந்தருளிய திருக்காளத்தியென்னுந் திருப்பதியில் வாழுமடியார் திருக்கூட்டங்களொருங்குகூடி; பம்புசடைத்திருமுனிவர் = நெருங்கிய சடைமுடியையுடைய சைவமுனிவரும்; கபாலக்கையர்=கபாலத்தையேந்திய கையையுடைய காபாலிகரும்; பலவேடச்சைவர் = அவரல்லாத மாவிரதவேடம் வைரவவேடம் பூண்டசைவர்களும்; குலவேடர்=வேடர்குலத்திலுயர்ந்தவர்களும்; மற்றும் உம்பர் தவம்புரிவார்=(அவரன்றி) அம்மலையின்மேல் தவஞ்செய்கின்றவர்களும்; அப்பதியிலுள்ளோருடன் விரும்பி எதிர்கொள்ள உழைச்சென்றுற்றார்=அத்திருப்பதியிலுள்ளாருடன் விரும்பி யெதிர்கொள்ளும்படியாக அத்திருப்பதியினுள்ளே சென்றருளினார்.—எ-று. தொண்டர்குழாமீண்டி திருமுனிவருங் கபாலக்கையரும் பலவேடச்சைவரும் வேடருந்தவம் புரிவாரும் பதியிலுள்ளாருமாகிய இவருடன் விரும்பி யெதிர்கொள்ளப் பிள்ளையார் சென்றாரெனக்கூட்டுக.

திசையனைத்து நீற்றினொளி தழைப்பமண்மேற் சிவலோகமணைந்ததெனச் சென்றபோது, மிசைவிளங்கு மணிமுத்தின் சிவிகை நின்றும் வேதபா ரகரிழிந்து வணங்கிமிக்க, வசைவில்பெருந் தொண்டர்குழாந்தொழுது போற்றி யரவெனுமோ சையிலண்ட நிறைப்ப வன்பா, லிசைவிளங்குந் தமிழ்விரகர் திருக்காளத்தித் திருமலையின் மலைகளில்யா தென்று கேட்டார்.

(இ-ள்.) திசையனைத்தும நீற்றின் ஒளிதழைப்ப=திக்குகளெல்லாம் விபூதியினொளி பரம்ப; மண்மேற்சிவலோகம் அணைந்ததெனச் சென்றபோது = இவ்வுலகின்கண் சிவலோக மடைந்ததென்றுகூற அத்திருப்பதியிலெழுந்தருளுங்கால்; மிசைவிளங்கும் அணிமுத்தின் சிவிகை நின்றும்=மேலேவிளங்கு மொளியினை யுடைய அழகிய திருமுத்துச் சிவிகையினின்றும்; வேதபாரகர் இழிந்து வணங்கி = வேதங்களாகிய சமுத்திரத்தின் கரையையடைந்த ஆளுடைய பிள்ளையாரிறங்கி வணங்கி; மிக்க அசைவில் பெருந்தொண்டர் குழாம் தொழுது போற்றி = மேலான மனக்கலக்க மற்ற பெருமைபொருந்திய திருத்தொண்டர் கூட்டம் வணங்கித்துதித்து; அர எனும் ஓசையில் அண்டம் நிறைப்ப = அரவென்று கூறுமாரவாரத்தால் விண்ணுலகை நிறையச்செய்ய; அன்பால் இசைவிளங்கு தமிழ்விரகர் = பேரன்பால்

Koviloor Digital Library

புகழ்மிக்கு விளங்கும் ஆளுடைய பிள்ளையார்; திருக்காளத்தித் திருமலை இம் மலைகளில் யாதென்று கேட்டார் = திருக்காளத்தித் திருமலை யிந்தமலைகளில் யாதென்று அவ்வடி யார்களை வினவியருளினார்:—எ-று. (௪0௧௧)

வந்தணைந்த மாதவத்தோர் வணங்கித்தாழ்ந்து மறைவாழ்வே சைவசிகாமணியே தோன்று, மிந்தமலை காளஞோ டத்திதம்மி லிகலி வழி பாடுசெய விறைவர்மேவு, மந்தமில்சீர்க் காளத்தி மலையா மென்ன வவனிமேற் பணிந்தெழுந்தஞ் சலிமேற் கொண்டு, சிந்தை களி மகிழ்ச்சிவரத் திருவிராகம் வானவர்க டானவவொன் றெடுத்துச் செல்வார்.

(இ-ள்.) வந்து அணைந்த மாதவத்தோர் வணங்கித்தாழ்ந்து=பிள்ளை யாரையெதிர் கொண்டு சென்றடைந்த பெரிய தவத்தையுடைய அடியார்கள் நிலமுறத் தாழ்ந்து வணங்கி; மறைவாழ்வே சைவசிகாமணியே = வேதங் களின் வாழ்வே சைவசமயத்திற்கோர் சிகாமணியே; தோன்றும் இந்தமலை= (நம்முன்பு) காணப்படுமிந்த மலையானது; காளஞொடு அத்திதம்மில் இகலிவ ழிபாடுசெய = பாம்புடன்யானை (தம்முள்ளே) மாறுகொண்டு பூசைசெய்யும் படி; இறைவர் மேவும் அந்தமில் சீர்க்காளத்தி மலையாம் என்ன=காளத்திசர் எழுந்தருளிய அளவில்லாத சிறப்பினையுடைய திருக்காளத்தி மலையாமென்று கூற; அவனிமேற் பணிந்து எழுந்து அஞ்சலி மேற்கொண்டு=பூமியின் மேற் சாட்டாங்கமாக வணங்கி யெழுந்து கூப்பிய கரங்களைச் சிரசின்மேலேறச் செய்து; சிந்தைகளி மகிழ்ச்சிவரத் திருவிராகம் வானவர்கடானவ ரென்று எடுத்துச்செல்வார்=திருவுள்ளத்தில் களிப்புடன் மகிழ்ச்சியுண்டாகத் திரு விராகத்திருப்பதிகத்தை "வானவர்கடானவர்கள்" என்றுமுதலோடு எடுத் துப்பாடிக்கொண்டு செல்வாராயினார்.—எ-று. (௪0௨0)

திருக்காளத்தி - திருவிராகம் - பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

வானவர்க டானவர்கள் வாதைபட வந்ததொரு மாகடல்விடந்
தானமுது செய்தருள் புரிந்தசிவன் மேவுமலை தன்னைவினவி
லேனமின மானினொடு கிள்ளைதினை கொள்ளவெழி லார்கவணினாற்
கானவர்த மாமகளிர் கனகமணி யிலகுகாளத்திமலையே.

காடதிட மாகநட மாடுசிவன் மேவுகாளத்திமலையை
மாடமொடு மாளிகைக ணீடுவளர் கொச்சைவய மன்னுதலைவ
ஞடுமலி நீடுபுகழ் ஞானசம்பந்தனுரை நல்லதமிழின்
பாடலொடு பாடுமிசை வல்லவர்க ணல்லர்பர லோகமெளிதே.

திருச்சிற்றம்பலம்.

Koviloor Digital Library

திருந்தியவின் னிசைவகுப்புத் திருக்கண்ணப்பர் திருத்தொண்டு சிறப்பித்துத் திகழப்பாடிப், பொருந்துபெருந் தவர்கூட்டம் போற்றவந்து பொன்முகலிக் கரையணைந்து தொழுதுபோகி, யருந்தவர் களெம்மருங்கு மிடைந்துசெல்ல வாளுடைய பிள்ளையா ரயன்மாறேடு, மருந்துவெளி யேயிருந்த திருக்காளத்தி மலையடிவாரஞ் சாரவந்துதாழ்ந்தார்.

(இ-ள்.) திருந்திய இன்னிசைவகுப்புத் திருக்கண்ணப்பர் திருத்தொண்டு சிறப்பித்துத் திகழப்பாடி=திருந்தமான இனிய இசையோடுகூடிய திருப்பதிகங்களைக் கண்ணப்பநாயனாரது திருத்தொண்டைச்சிறப்பித்து (அவரது பத்திமை) விளங்கப்பாடியருளி; பொருந்து பெருந்தவர்கூட்டம் போற்றவந்து=தம்மைச்சூழ்ந்த மிக்க தவத்தையுடைய அடியார் திருக்கூட்டங்கள் துதிக்கவெழுந்தருளி; பொன் முகலிக்கரை அணைந்து தொழுது போகி=பொன்முகலியாற்றினது கரையையடைந்து அதனை வணங்கி யங்குநின்று மெழுந்தருளி; அருந்தவர்கள் எம்மருங்கும் மிடைந்துசெல்ல=அரியதவத்தையுடைய அடியார்கள் எப்பக்கத்தும் நெருங்கிவர; ஆளுடையபிள்ளையார் அயன்மால் தேடும் மருந்து வெளியே இருந்த=ஆளுடையபிள்ளையார் திருமால் பிரமனென்னு மிருவர் தேடுகின்ற சிவபெருமானாகிய ஓர் மருந்து வெளிப்பட்டெழுந்தருளியிருந்த; திருக்காளத்திமலை அடிவாரம் சாரவந்துதாழ்ந்தார்=திருக்காளத்தித் திருமலையினது அடிவாரத்தைப் பொருந்தவெழுந்தருளிச் சாட்டாங்கமாய் வணங்கியருளினார்.—எ-று. (௧௲௨௧)

தாழ்ந்தெழுந்து திருமலையைத் தொழுதுகொண்டே தடஞ்சிலாதலசோபானத்தாலேறி, வாழ்ந்திமையோர் குழாநெருங்கு மணிநீள் வாயின் மருங்கிறைஞ்சி யுட்புகுந்து வளர்பொற்கோயில், சூழ்ந்துவலங் கொண்டிறைவர் திருமுன்பெய்தித் தொழுதுதலை மேற்கொண்டசெங்கைபோற்றி, விழ்ந்தெழுவார் கும்பிட்ட பயன் காண்பார் போன் மெய்வேடர் பெருமானைக் கண்டுவீழ்ந்தார்.

(இ-ள்.) தாழ்ந்து எழுந்து திருமலையைத் தொழுதுகொண்டே=வணங்கியெழுந்து திருக்காளத்தித் திருமலையைக் கைகூப்பி வணங்கிக்கொண்டு; தடம்சிலாதல சோபானத்தால் ஏறி = பெரியகற்பாறையாகிய சோபானவழியே மேலேயேறி; வாழ்ந்த இமையோர் குழாம்நெருங்கும் மணிநீள்வாயில் மருங்கு இறைஞ்சி=வாழ்வடைந்த தேவர்குழாம் நெருங்கிய அழகிய நீண்டதிருவாயிலின் பக்கலில் வணங்கி உள்ளேயெழுந்தருளி; வளர் பொற்கோயில் சூழ்ந்து வலங்கொண்டு = உயர்ந்த பொன்மயமான திருக்கோயிலைச்சுற்றி வலமாகவந்து; இறைவர் திருமுன்பு எய்தி=காளத்தியார் திருமுன்புசென்று; தொழுது தலைமேற்கொண்ட செங்கைபோற்றி = அஞ்ச

Koviloor Digital Library

லியாய்ச் சிரமேற்குவித்த திருக்கரங்களோடு துதித்து; வீழ்ந்தெழுவார் = நிலமுறவணங்கி யெழும் ஆளுடையபிள்ளையார் = கும்பிட்டபயன் காண்பார்போல் மெய்வேடர் பெருமானைக்கண்டு வீழ்ந்தார் = தாம்வணங்கிய பயனைக் கண்ணாரக்காண்பவர்போல் மெய்ப்பத்தியையுடையகண்ணப்பநாயனாரை யங்குக்கண்டு பரவசராய் (நிலமுற) வீழ்ந்தருளினார்.—எ-று. கும்பிட்ட பயன் பேரானந்தப் பெரும்பயன். காளத்தியப்பரைப் பகலிரவு தோன்றாது ஆறுநாள் வழிபட்டு அப்பயனடைந்த கண்ணப்பநாயனாரைக் காண்டல் அப்பெரும் பயனைக்கண்டாற்போலு மென்பார் கும்பிட்டபயன்காண்பார்போலென்றார்.

உள்ளத்திற் றெளிகின்ற வன்பின்மெய்ம்மை யுருவினையு மவ்வன்பி னுள்ளேமன்னும், வெள்ளச்செஞ்சடைக்கற்றை நெற்றிச்செங்கண் விமலனையு முடன்கண்ட விருப்பும்பொங்கிப், பள்ளத்திழி புனல்போற் பரந்துசெல்லப் பைம்பொன்மலை வல்லிபரிந் தளித்த செம்பொன், வள்ளத்தில் ஞானவாரமுதமுண்டார் மகிழ்ந்தெழுந்து பலமுறையும் வணங்கிநின்றார்.

(இ-ள்.) உள்ளத்தில் தெளிகின்ற அன்பின்மெய்ம்மை உருவினையும் = திருவடியார்களது திருவுள்ளத்திற் றெளிவாய்விளங்குகின்ற மெய்யன்பெல்லா மொருங்கு திரண்டாற்போன்ற கண்ணப்பநாயனாரது மெய்ப்பத்திவடிவையும்; அவ்வன்பின் உள்ளே மன்னும் வெள்ளச்செஞ்சடைக் கற்றைநெற்றிச் செங்கண் விமலனையும் = அவ்வன்பினிடத்துக் கலந்துநிற்குங் கங்காநதிபெருக்கெடுக்குஞ் செந்நிறம்பொருந்திய சடைத்தொகுதியையுஞ் சிவந்த நெற்றிக் கண்ணையுமுடைய திருக்காளத்தியப்பனையும்; உடன்கண்ட விருப்பும் பொங்கி = ஓரிடத்துத் தரிசித்த விருப்பமுமேம்பட்டு; பள்ளத்தில் இழிபுனல்போற் பரந்துசெல்ல = பள்ளத்தின்கண் வீழும் நீர்போலப் பரவிப்பெருக; பைம்பொன்மலை வல்லிபரிந்து அளித்த செம்பொன்வள்ளத்தில் = பசிய பொன்மலையரசன் புத்திரியாகிய உமாதேவிவிரும்பிக் கொடுத்த சிவந்த பொற்கிண்ணத்தில்; ஞான ஆரமுதம் உண்டார் = நிறைந்த சிவஞானமாகிய திருவமுதையுண்ட ஆளுடையபிள்ளையார்; மகிழ்ந்து எழுந்து பலமுறையும் வணங்கிநின்றார் = பரவசம்நீங்கி மகிழ்ச்சியோடெழுந்து பலமுறையட்டாங்கமாய் வணங்கிநின்றருளினார்.—எ-று. யாவரேனுந் தம்முடம்பினுள்ள என்பு விறகாய் அவ்வுடம்பின் இறைச்சியை யறுத்து எரியிலிட்டுத் தவஞ்செய்யினும் அன்பாலன்றிச் சிவபெருமானை யறிதல் கூடாமையில் அவ்வன்பு சிறந்ததென்பார், உள்ளத்திற்றெளிகின்ற அன்பென்றும்; அவ்வன்பே கண்ணப்பநாயனார் திருமேனி பிறிதன்றென்பார், அவ்வன்பின் மெய்ம்மையுருவென்றும்; அவ்வன்பில் சிவபெருமான் விரவிநிற்பா ரென்பார், அவ்வன்பினுள்ளேமன்னும் விமலனையென்றும்; அன்பையுஞ் சிவபெருமானையு மோரிடத்துப் பிரித்துக்காணுத லரிதென்பார், உடன்கண்ட விருப்பென்றும்; அவ்விருப்பின் தடையின்மையும் இடையீடின்மையுந் தோன்றப் பள்ளத்தி லிழிபுனல்போற் பரந்து செல்லவென்றுங் கூறினார். (௧௦௨௩)

Koviloor Digital Library

பங்கயக்கண் ணருவிநீர் பாயநின்று பரவுமிசைத்திருப்பதிகம்பா டியாடித், தங்குபெருங் களிகாதல் தகைந்துதட்பத்தம்பெருமான்கழ ல்போற்றுந் தன்மைநீட, வங்கிரிதிற் புறம்போந்தங் கயன்மால்போ ற்ற வரியார்தந் திருமலைக்கீ ழணைந்திறைஞ்சிப், பொங்குதிருத்தொ ண்டர்மடங் காட்டவங்குப் புக்கருளி யினிதமர்ந்தார் புகலிவேந்தர்.

(இ-ள்.) பங்கயக்கண்ணருவி நீர்பாயநின்று பரவும் இசைத்திருப்ப திகம்பாடி ஆடி=தாமரைமலர்போலுந் திருக்கண்களினின்றும் ஆனந்த அருவி நீர் பெருக்கெடுக்க நின்று பரம்பிய இசையையுடைய திருப்பதிகத்தைப் பா டிக் கூத்தாடி; தங்குபெருங்களிகாதல் தகைந்துதட்ப = திருவுள்ளத்திற் பொருந்திய களிப்புடன் பெருவிருப்பானது தம்மைவலிந்து தடுக்க; தம்பெ ருமான் கழல்போற்றுந் தன்மைநீட = தமது முதல்வராகிய காளத்திசரது திருவடிகளைத் துதித்தலாலாய ஆனந்தமேற்பட; அங்கு அரிதிற்புறம்போ ந்து = அவ்வாலயத்தில் நின்றும் ஆராமையோடு புறம்பேசென்று; அங்கு அயன்மால்போற்ற அரியார்தம் திருமலைக்கீழ் அணைந்து இறைஞ்சி=அங்குத்தி ருமால்பிரமன் அடிமுடிதேடித் துதிக்க அரியகாளத்தியாரது திருமலைக்கீழ டைந்து வணங்கி; பொங்குதிருத்தொண்டர் மடம்காட்ட அங்கு புக்கருளி இனிது அமர்ந்தார் புகலிவேந்தர் = பொலிவுபொருந்திய திரு அடியார்கள் வசித்தற்குத் திருமடத்தைக்காட்ட அத்திருமடத்திலுட்புகுந்தருளி யினிதாக எழுந்தருளியிருந்தார் ஆளுடையபிள்ளையார்.—எ-று. (௧0௨௪)

யாவர்களு மறிவரிய விறைவன்றன்னை யேழுலகு முடையானை யெண்ணிலாத, தேவர்கடம் பெருமானைத் திருக்காளத்தி மலையின் மிசை விற்றிருந்த செய்யதேனைப், பூவலரும் பொழில்புடை சூழ்சண் பையாளும் புரவலனார் காலங்க டோறும்புக்குப், பாமலர்கொண் டடிபோற்றிப் பருகியார்ந்து பண்பினிய திருப்பதியிற் பயிலுநாளில்.

(இ-ள்.) யாவர்களும் அறிவரிய இறைவன் தன்னை=(அடியார்களை யன்றி) எவ்வகை மேம்பாட்டாரு மறிதற்கரியமுதல்வனை; ஏழுலகும் உடையா னை=ஏழுலகிற்கு முதலாயுள்ளவனை; எண்ணிலாததேவர்கள்தம்பெருமானை= அளவிறந்த தேவர்களுக்கெல்லாந் தலைவனை; திருக்காளத்தி மலையின்மிசை விற்றிருந்த செய்யதேனை = திருக்காளத்தியென்னுந் திருமலையின்மீது எழுந் தருளியிருந்த சிவந்தகோற்றேனை; பூவலரும் பொழில்புடைசூழ் சண்பை ஆளும் புரவலனார் காலங்கள்தோறும் புக்கு = காலைஎண்பகல் மாலை நடுயாம முதலிய காலங்கள்தோறும் ஆலயத்திலெழுந்தருளி; பாமலர்கொண்டு அடி போற்றிப்பருகியார்ந்து=பாவாகிய மலர்மாலையாற் திருவடிகளைத் துதித்துப் பேரானந்தத்தைப்பருகி (அதனால்) நிறைவடைந்து; பண்பினிய திருப்பதி யிற் பயிலும் நாளில்=பண்போடு இனிமைபொருந்திய திருக்காளத்தித் திருப் பதியிலெழுந்தருளியிருக்கும் நாளில்.—எ-று. (௧0௨௫)

Koviloor Digital Library

அங்கண்வட திசைமேலுங் குடக்கின்மேலு மருந்தமிழின் வழக்கங்கு நிகழாதாகத், திங்கள்புனை முடியார்தந் தானந்தோறுஞ் சென்றுதமிழ் பாடலுறுஞ் செய்கைபோல, மங்கையுடன் வானவர்கள் போற்றிசைப்ப வீற்றிருந்தார் வடகயிலை வணங்கிப்பாடிச், செங்கமல மலர்வாவித் திருக்கேதாரந் தொழுதுதிருப்பதிகவிசை திருந்தப்பாடி.

(இ-ள்.) அங்கண் வடதிசை மேலும் குடக்கின்மேலும் = அத்திருக்காளத்தியின் வடக்குத்திக்கிலு மேற்குத்திக்கிலும் உள்ள தேயங்களில்; அருந்தமிழின் வழக்கு அங்கு நிகழாதாக=அரியதமிழ் வழக்கமந்நாடுகளில் வழங்காதிருக்க; திங்கள்புனை முடியார்தம் தானந்தோறும் = சந்திரனைச்சூடிய திருமுடியையுடைய சிவபெருமானெழுந்தருளிய திருப்பதிகள்தோறும்; சென்று தமிழ்பாடலுறும் செய்கைபோல=எழுந்தருளித் திருப்பதிகம்பாடியருளுந் தன்மைபோல; மங்கையுடன்வானவர்கள் போற்றிசைப்ப வீற்றிருந்தார் வடகயிலைவணங்கிப்பாடி; உமாதேவியாருடன் தேவர்கள் துதிக்க வீற்றிருந்தருளுஞ் சிவபெருமானது திருக்கயிலாயத்தைவணங்கித் திருப்பதிகம்பாடி; செங்கமலமலர்வாவித் திருக்கேதாரம் தொழுது திருப்பதிக இசை திருந்தப்பாடி=சிவந்ததாமரைமலர்கள் பொருந்திய வாவிகளையுடைய திருக்கேதாரத்தைவணங்கித் திருப்பதிகத்தை யிசையோடு பொருந்தப்பாடியருளி.—எ-று. (க0உசு)

ஸ்ரீகயிலாசம்-பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

பொடிகொளுருவர் புலியினதளர் புரிநூ றிகழ்மார்பிற்
கடிகொள்கொன்றை கலந்தநீற்றர் கறைசேர் கண்டத்த
ரிடியகுரலா லிரியுமடங்க லொடுங்கு முனைச்சாரற்
கடியவிடைமேற் கொடியொன்றுடையார் கயிலை மலையாரே.

போரார்கடலிற் புனல்சூழ்காழிப் புகழார் சம்பந்தன்
காரார்மேகங் குடிகொள்சாரற் கயிலை மலையார்மேற்
றேராதுரைத்த செஞ்சொன்மாலை செப்புமடியார்மேல்
வாராபிணிகள் வானோருலகின் மருவு மனத்தாரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-கயிலாயநாதர். தேவியார்-பார்வதியம்மை.

திருக்கேதாரம்-பண்-செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

தொண்டரஞ்சுங் களிறும்மடக்கிச் சுரும்பார்மல
ரிண்டைகட்டி வழிபாடு செய்யுமிட மென்பரால்

Koviloor Digital Library

வண்டுபாட மயிலால மான்கன்று துள்ளவ்வரிக்
கெண்டைபாயச் சுனைநீல மொட்டலருங் கேதாரமே.

வாய்ந்தசெந்நெல் விளைகழனி மல்கும்வயற் காழியா
னேய்ந்தநீர்க்கோட் டிடையோருறை கின்றகேதாரத்தை
யாய்ந்துசொன்னவ் வருந்தமிழ்கள் பத்தும்மிசை வல்லவர்
வேந்தராகி யுலகாண்டு வீடுகதி பெறுவரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-கேதாரேசுவரர். தேவியார்-கௌரியம்மை.

கூற்றுதைத்தார் மகிழ்ந்தகோகரணம்பாடிக் குலவுதிருப் பருப்பதத்தின் கொள்கைபாடி, யேற்றின்மிசை வருவாரிந்திரநீலப் பருப்பதமும் பாடிமகிழ்ந் திறைவர்தானம், போற்றியசொன் மலர்மாலை பிறவும்பாடிப் புகலியர்தம் பெருந்தகையார் புனிதமாகு, நீற்றினணி கோலத்துத் தொண்டர்சூழ நெடிதுமகிழ்ந் தப்பதியி னிலவுகின்றார்.

(இ-ள்.) கூற்று உதைத்தார் மகிழ்ந்தகோகரணம்பாடி=திருக்காளத்திக்கு மேற்குத்தேயங்களிலுள்ள இயமனையுதைத்த மகாபலேசரெழுந்தருளிய திருக்கோகரணத்தையும்பாடியருளி; குலவு திருப்பருப்பதத்தின் கொள்கைபாடி=விளங்கிய ஸ்ரீசைலத்தினது சிறப்பையும்பாடியருளி; ஏற்றின் மிசைவருவார் இந்திர நீலப்பருப்பதமும்பாடி=இடபத்தைவாகனமாகக்கொண்டருளும் நீலாசல நாதரது திரு இந்திர நீலப்பருப்பதத்தையும் பாடியருளி; மகிழ்ந்து இறைவர் தானம்போற்றிய = மகிழ்ச்சியோடு சிவபெருமானெழுந்தருளியதிருப்பதிகளைத் துதித்த; சொல் மலர்மாலை பிறவும்பாடி= சொல்லாலாய பிறதிருப்பதிகமாலைகளையும்பாடி; புகலியர்தம் பெருந்தகையார்=சீகாழிப்பதியிலவதரித்த ஆளுடையபிள்ளையார்; புனிதமாகும் நீற்றின் அணி கோலத்துத் தொண்டர்சூழ நெடிது மகிழ்ந்து அப்பதியில் நிலவுகின்றார்=பரிசுத்தமான விபூதியால் அழகிய திருக்கோலத்தையுடைய அடியார்கள் சூழும்படி மிகவுமகிழ்ந்து அத்திருக்காளத்தியிலெழுந் தருளியிருந்தார்.—எ-று.
பதிகமுடைய வனேகதங்காவதமும் பதிகமிறாதனவாய்த் திருக்காளத்தியின் வடக்கிலு மேற்கிலு முள்ளபலதிருப்பதிகளுமடங்கப் பிறவும்பாடியென்றார்.

திருக்கோகரணம் - திருவிராகம் - பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

என்றுமரி யானயல வர்க்கிய லிசைப்பொருள்க ளாகியெனதுள்
நன்றுமொளி யானொளி சிறந்தபொன் முடிக்கடவு ணண்ணுமிடமா
மொன்றிய மனத்தடியர் கூடியிமை யோர்பரவு நீடரவமார்
குன்றுகணெ ருங்கிவிரி தண்டலை மிடைந்துவளர் கோகரணமே.

Koviloor Digital Library

கோடலர வினும்விரி சாரன்மு னெருங்கிவளர் கோகரணமே
யீடமினி தாகவுறை வானடிகள் பேணியணி காழிநகரா
ளுடிய தமிழ்க்கிளவி யின்னிசைசெய் ஞானசம்பந்தன்மொழிகள்
பாடவல பத்தரவ ரெத்திசையு மாள்வர்பர லோகமெளிதே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - மகாபலேசர். தேவியார் - கோகரணநாயகியம்மை.

திரு இந்திரநீலப்பருப்பதம் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

குலவுபாரிடம் போற்றவீற்றிருந்
திலகுமாமழு வேந்துமங்கையர்
நிலவுமிந்திர நீலப்பருப்பதத்
துலவினனடி யுள்கநல்குமே.

கந்தமார்பொழில் சூழ்ந்தகாழியா
னிந்திரன்றொழு நீலபர்ப்பதத்
தந்தமில்லியை யேத்துஞானசம்
பந்தன்பாடல்கொண் டோதிவாழ்மினே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - நீலாசலநாதர். தேவியார் - நீலாம்பிகையம்மை.

திருப்பருப்பதம் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

சுடுமணி யுமிழ்நாகஞ் சூழ்தர வரைக்கசைத்தா
னிடுமணி யெழிலானே யேறல னெருதேறி
விடமணி மிடறுடையான் மேவிய நெடுங்கோட்டுப்
படுமணி விடுசுடரார் பருப்பதம் பரவுதுமே.

வெண்செநெல் விளைகழனி விழவொலி கழுமலத்தான்
பண்செலப் பலபாட லிசைமுரல் பருப்பதத்தை
நன்சொலி னற்பரவு ஞானசம்பந்தனல்ல
வொண்சொலி னிவைமாலை யுருவெணத் தவமாமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - பருப்பதேசுவரர். தேவியார் - பிரமராம்பிகை.

Koyiloor Digital Library

திருவனேகதங்காவதம்-பண் இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

நீடன்மேவு நிமிர்புன்சடைமே லோர்நிலாமுளை
சூடன்மேவு மறையின்முறைபா லோர்சுலாவழ
லாடன்மேவு மவர்மேயவனேகதங்காவதம்
பாடன்மேவு மனத்தார்வினை பற்றறுப்பார்களே.

தொல்லையூழிப் பெயர்தோன்றிய தோணிபுரத்திறை
நல்லகேள்வித் தமிழ்ஞான சம்பந்த னல்லார்கண்மு
னல்லறீரவுரைசெய்தவனேகதங்காவதஞ்
சொல்லநல்ல வடையும்மடையா சுடுதுன்பமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-அருள்மன்னர். தேவியார்-மனோன்மணியம்மை.

தென்றிசையிற் கயிலையெனுந் திருக்காளத்திபோற்றியினி தமர் கின்றார் திரைசூழ்வேலை, யொன்றுதிரு வொற்றியூ ருறைவார்தம்மை யிறைஞ்சுவது திருவுள்ளத் துன்னிபங்க, ணின்றமிழின் விரகருள் பெற்றுமீள்வா ரெந்தையா ரிணையடியென் மனத்தவென்று, பொன் றாளங் கொழித்திழிபொன் முகலிகூடப் புனைந்ததிருப் பதிகவிசை போற்றிப்போந்தார்.

(இ-ள்.) தென்றிசையில் கயிலையெனும் திருக்காளத்தி போற்றி இனி து அமர்கின்றார் இன்தமிழின்விரகர்=தெற்கின்கட் கயிலையென்று (புராணங் கூறும்) திருக்காளத்தியென்னுந் திருப்பதியைத் துதித்தினிதாக எழுந்தருளு பவராகிய ஆளுடையபிள்ளையார்; திரைசூழ்வேலை ஒன்று திருவொற்றியூர் உறைவார்தம்மை இறைஞ்சுவது திருவுள்ளத்து உன்னி = அலைகள் சூழ்ந்த கடற்கரையிலுள்ள திருவொற்றியூரி லெழுந்தருளும் படம்பக்க நாதரை வணங்குங் கருத்தைத்தமது திருவுள்ளத்தின்கண் கருதி; அங்கண் அருள் பெற்று மீள்வார்=அத்திருக்காளத்தியில் (காளத்தியீசர்) திருவருள்பெற்று அங்கு நின்று மெழுந்தருளுபவராய்; எந்தையார் இணையடி என்மனத் தவென்று=எமது தந்தையாகிய காளத்தியீசர் திருவடி யிரண்டுமென் மனத் தின்கண்ணவென்று; பொன்தாளம் கொழித்து இழிபொன்முகலிகூடப் புனை ந்ததிருப்பதிக இசைபோற்றிப் போந்தார் = பொன்னையுமுத்தையுந் திரைக்க ரத்தாற் கரையிற் கொழித்தப்பெருகுகின்ற பொன்முகலியையுஞ் சிறப்பித்து ப்பாடியருளிய "சந்தமாரகிலொடுசாடு" என்று முதலையுடைய திருப்பதிகத் தை யிசையோடு துதித்து அங்குநின்று மெழுந்தருளினார்.—எ-று. தமர்கி ன்றாராகிய இன்றமிழ்விரகர் அருள்பெற்று மீள்வாராய்த் திருப்பதிக இசை பாடிப் போந்தாரெனக்கூட்டுக. (௧௦௨௮)

Koviloor Digital Library

மன்னுபுகழ்த் திருத்தொண்டர் குழாத்தினோடு மறைவாழ வந்தவர்தா மலையுங்கானு, முன்னணைந்த பதிபிறவுங் கடந்துபோந்து முதல்வனுருறை பதிகள் பலவும் போற்றிப், பன்மணிகள் பொன்வரன்றி யகிலுஞ்சந்தும் பொருதலைக்கும் பாலிவட கரையினீடு, சென்னிமதி யணிவார்தந் திருவேற்காடு சென்றணைந்தார் திருஞான முண்ட செல்வர்.

(இ-ள்.) மன்னுபுகழ்த் திருத்தொண்டர் குழாத்தினோடு = நிலைபெற்ற புகழையுடைய திருவடியார் திருக்கூட்டத்தோடு ; மறைவாழவந்தவர் தாம் மலையும் கானும் = வேதங்கள் வாழும்படி யவதரித்த ஆளுடையபிள்ளையார் மலைகளுங் காடுகளுமாய் ; முன் அணைந்த பதிபிறவும் கடந்துபோந்து= தாம் முன்னேயெழுந்தருளிய பிறபதிகளையும் நீங்கிச்சென்று ; முதல்வனார் உறைபதிகள் பலவும் போற்றி=சிவபெருமா னெழுந்தருளிய பலதிருப்பதிகளையுந் துதித்து ; பன்மணிகள் பொன்வரன்றி = பலரத்தினங்கள் பொன்னோடுவாரிக்கொண்டு ; அகிலும் சந்தும்பொருது அலைக்கும்=அகிலமரங்களையுஞ் சந்தனமரங்களையுங் கரையில்மோதி யலைவீசும்; பாலிவடகரையில் நீடு= பாலியாற்றின் வடகரையிற்பொருந்திய ; சென்னிமதி அணிவார்தம் திருவேற்காடு சென்று அணைந்தார் திருஞானமுண்ட செல்வர் = சிரசின்கணிளம் பிறையையணிந்த வேற்காட்டீசரெழுந்தருளிய திருவேற்காடென்னுந் திருப்பதியைச் சென்றடைந்தருளினார் சிவஞானத்தை யமுதுசெய்த ஆளுடைய பிள்ளையார்.—எ-று. (௬0௨௧)

திருவேற்கா டமர்ந்தசெழுஞ் சுடர்பொற்கோயில் சென்றணைந்து பணிந்துதிருப் பதிகம்பாடி, வருவேற்று மனத்தவுணர் புரங்கள்செற்றார் வலிதாயம் வந்தெய்தி வணங்கிப்போற்றி, யுருவேற்றாரமர்ந்துறையு மோதவேலை யொற்றியூர் கைதொழச்சென் றுற்றபோது, பெருவேட்கை தருவாழ்வு பெற்றதொண்டர் பெரும்பதியோ ரெதிர்கொள்ளப் பேணிவந்தார்.

(இ-ள்.) திருவேற்காடு அமர்ந்த செழுஞ்சுடர் பொற்கோயில் சென்று அணைந்து பணிந்து திருப்பதிகம்பாடி = திருவேற்காடென்னுந் திருப்பதியிலெழுந்தருளிய செழுமைபொருந்திய சோதிருபரான வேற்காட்டீசரது திருக்கோயிலை வந்தடைந்து அவரைவணங்கித் திருப்பதிகம்பாடி ; வருவேற்று மனத்தவுணர் புரங்கள்செற்றார் வலிதாயம் வந்தெய்தி வணங்கிப்போற்றி= மாறுகொண்டுவரும் வேற்றுமனத்தையுடைய அசுரர்களது முப்புரங்களையு மெரித்தருளிய சிவபெருமா னெழுந்தருளிய திருவலிதாயத்தை வந்தடைந்து வணங்கித்துதித்து ; உரு ஏற்றார் அமர்ந்துறையும் ஓத வேலை ஒற்றியூர் கைதொழச்சென்று உற்றபோது = தோற்றமமைந்த இடபவூர்தி

Koviloor Digital Library

யையுடைய பணம்பக்காதரெழுந்தருளுங் கடற்கரையிலுள்ள திருவொற்றி யூரைவணங்கும்படி சென்றடைந்த காலத்து ; பெருவேட்கைதருவாழ்வுபெற்ற தொண்டர் பெரும்பதியோர் எதிர்கொள்ளப் வேணிவந்தார் = மிக்க சிவ நேயத்தாலுண்டாகும் பேரானந்த வாழ்வைப்பெற்ற சிவனடியார்களும் அத் திருப்பதியில் வாழ்பவரும் பிள்ளையாரை யெதிர்கொள்ளும்படி விரும்பிவந் தார்கள்.—எ-று. (௧௦௩௰)

திருக்காளத்தி - பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

சந்தமா ரகிலொடு சாதிதேக் கும்மா
முந்துமா முகலியின் கரையினி லுமையொடு
மந்தமார் பொழில்வளர் மல்குவண்காளத்தி
யெந்தையா ரிணையடி யென்மனத் துள்ளவே.

அட்டமா சித்திக ளணைதரு காளத்தி
வட்டவார் சடையனை வயலணி காழியான்
சிட்டநான் மறைவல ஞானசம்பந்தன்சொ
லிட்டமாப் பாடுவார்க் கில்லையாம் பாவமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-காளத்திசுவரர். தேவியார்-ஞானப்பூங்கோதையம்மை.

மிக்கதிருத் தொண்டர்தொழு தணையத்தாமுந் தொழுதிழிந்து விடையவனென் றெடுத்துப்பாடி, மைக்குலவு கண்டத்தார்மகிழ்ந் தகோயின் மன்றுதிருக் கோபுரத்து வந்துதாழ்ந்து, தக்கதிருக்கடைக்காப்புச் சாற்றித்தேவர் தம்பெருமான் திருவாயி லூடுசென்று, புக் கருளி வலங்கொண்டு புனிதர்முன்பு போற்றெடுத்துப் படியின் மேற் பொருந்த வீழ்ந்தார்.

(இ-ள்.) மிக்கதிருத்தொண்டர் தொழுது அணையத்தாமும் தொழுது இழிந்து = மேன்மைமிக்க திருவடியார்கள் வணங்கி யெதிர்கொண்டுவரத் தாமுமவரையெதிராக வணங்கித் திருச்சிவிகையினின்று மிறங்கியருளி; விடையவன் என்று எடுத்துப்பாடி = "விடையவனென்று" திருப்பதிக முதலெடுத் துப்பாடியருளி; மைக்குலவுகண்டத்தார் மகிழ்ந்தகோயில் மன்றுதிருக்கோபுரத்து வந்துதாழ்ந்து = கருமைபொருந்திய திருமிடற்றையுடைய பணம்பக்காதரெழுந்தருளிய திருக்கோயிலிலுள்ள திருக்கோபுரத்தின்கண்வந்து வணங்கி ; தக்க திருக்கடைக்காப்புச் சாற்றி = பெருமைபொருந்திய திருக்கடைக்காப்பைப் பாடியருளி ; தேவர்தம்பெருமான் திருவாயிலூடுசென்று = தே

Koviloor Digital Library

வர்பிரானுகிய பணம்பக்காதரது திருக்கோயில் வாயிலின் வழிச்சென்று; புக்கருளி வலங்கொண்டு புனிதர்முன்பு போற்றெடுத்துப் படியின்மேற் பொருந்த விழ்ந்தார்=உள்ளேபுகுந்தருளி வலமாகவந்து அச்சிவபெருமான் திருமுன்புறதித்துப் பூமியின்மேற் பொருந்தும்படிச் சாட்டாங்கமாய் வணங்கியருளினர்.—எ-று. (௫௦௬௧)

திருவேற்காடு - பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

ஒள்ளிதுள்ளக் கதிக்காமிவனொளி
வெள்ளியா னுறைவேற்கா
டுள்ளியாருயர்ந் தாரிவ்வுலகினிற்
றெள்ளியா ரவர்தேவரே.

விண்டமாம்பொழில் சூழ்தருவேற்காடு
கண்டுநம்பன் கழல்பேணிச்
சண்பைஞானசம்பந்தனசெந்தமிழ்
கொண்டுபாடக் குணமாமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - வேற்காட்டீசர். தேவியார் - வேற்கண்ணியம்மை.

பொற்றிரள்கள் போல்புரிந்த சடையார்தம்பாற் பொங்கியெழுங்காதன்மிகப் பொழிந்துவிம்மிப், பற்றியெழு மயிர்ப்புளக மெங்குமாகிப்பரந்திழியுங் கண்ணருவி பாயநின்று, சொற்றிகழுந் திருப்பதிகம் பாடியேத்தித் தொழுதுபுறத் தணைந்தருளித் தொண்டரோடுமொற்றிநகர் காதலித்தங் கினிதுறைந்தா ருலகுய்ய வுலவாதஞானமுண்டார்.

(இ-ள்) பொன்திரள்கள்போல் புரிந்தசடையார் தம்பாற்பொங்கி எழும்காதல் மிகப்பொழிந்து விம்மி = வடித்தபொன்னின் திரட்டுப்போன்ற முறுக்குப்பொருந்திய சடையையுடைய பணம்பக்காதரிடத்து அதிகரித்தெழுகின்ற பெருவிருப்பானது மிகப்பெருகி விம்மி; பற்றியெழும் மயிர்ப்புளகம் எங்குமாகிப் பரந்து இழியும்கண் அருவிபாய நின்று = பொருந்தி யெழுகின்ற மயிர்க்கூச்சு எங்குமாய்த் திருமேனிமுழுதும் பரம்பிச்சொரிகின்ற ஆனந்தக்கண்ணீரருவியானது பாயும்படி நின்று; சொல் திகழும் திருப்பதிகம்பாடி ஏத்தி = சொல்லால்விளங்கிய திருப்பதிகத்தைப் பாடித்துதித்து; தொழுதுபுறத்து அணைந்தருளித் தொண்டரோடும் = திருக்கரங்களைச்சேர்த்துக்கூப்பித் தொழுது புறம்பேசென்றருளி அடியார் திருக்கூட்டத்தோடும்;

Koviloor Digital Library

ஒற்றிநகர் காதலித்து அங்கு இனிது உறைந்தார் உலகு உய்ய உலவாதஞானம் உண்டார்=திருவொற்றியூரைவிரும்பி யங்கு இனிதாக வெழுந்தருளியிருந்தார் உலகத்தா ருய்யும்பொருட்டுக் கெடாதஞான அமுதையுண்ட ஆளுடையபிள்ளையார்.—எ-று. (௧0௬உ)

வேறு.

இன்னதன்மையிற் பிள்ளையாரிருந்தன ரிப்பாற்
பன்னுதொல்புகழ்த் திருமயிலாபுரிப் பதியின்
மன்னுசீர்ப்பெரு வணிகர்தந்தோன்றலார் திறத்து
முன்னமெய்திய தொன்றினை நிகழ்ந்தவா மொழிவாம்.

(இ-ள்.) இன்னதன்மையில் பிள்ளையார் இருந்தனர் இப்பால் = இவ்வாறு ஆளுடையபிள்ளையாரெழுந்தருளியிருந்தார் இதன்மேல்; பன்னுதொல் புகழ்த்திருமயிலாபுரிப்பதியில்=யாவரும் புகழத்தக்க பழைய புகழையுடைய திருமயிலாபுரியென்னுந் திருப்பதியில்; மன்னுசீர்ப்பெருவணிகர்தம் தோன்றலார் திறத்து=நிலைபெற்ற சிறப்பினையுடைய பெருமைபொருந்திய சிவநேசச்செட்டியாரிடத்து; முன்னம் எய்தியது ஒன்றினை நிகழ்ந்தவாமொழிவாம்=முன்னடந்த சரிதமொன்றை நிகழ்ந்தவண்ண மீண்டுகூறுவாம். ()

அருநிதித்திறம் பெருக்குதற்கருங்கலம் பலவும்
பொருகடற்செலப் போக்கிபொருட்குவை நிரம்ப
வருமரக்கல மணிப்படப்பணைக்கரை நிரைக்கு
மிருநிதிப்பெருஞ் செல்வத்தினெல்லையின் வளத்தார்.

(இ-ள்.) அருநிதித்திறம் பெருக்குதற்கு அருங்கலம் பலவும் = அரிய பொன்மணிமுதலிய பொருள்களின் பகுதியை விருத்திசெய்வதற்கு அரிய மரக்கலங்கள் பலவற்றையும்; பொருகடற்செலப்போக்கிய பொருட்குவை நிரம்ப = அலைவீசுகின்ற சமுத்திரத்தின்கண் செல்லும்படியாக விட்டதனாலாய திரவியத்தினது குவியல்கள் நிரம்பும்படி; வருமரக்கலம் மணிப்படப் பணைக்கரை நிரைக்கும்=திவாந்தரங்களினின்றும் வருகின்ற மரக்கலங்கள் அப்பொருள்கள் செட்டியார் மனையிற்சேரும்படியுயர்ந்த சமுத்திரக்கரையில் வரிசையாகவைக்கப்படும்; இருநிதிப்பெரும் செல்வத்தின் எல்லையின் வளத்தார்=சங்கநிதி பதுமநிதிக்கொப்பான மிக்க செல்வத்தினாலுண்டான அளவில்லாத வளத்தையுடையவர்.—எ-று. மரக்கலங்கள் கரைநிரைக்குஞ் செல்வத்தின் வளத்தாரெனக்கூட்டுக. (௧0௬௪)

தம்மையுள்ளவா றறிந்தபின்சங்கரற் கடிமை
மெய்ம்மையேசெயும் விருப்புடன்மிக்கதோ ரன்பாற்
பொய்ம்மைநீக்கிமெய்ப் பொருளிதுவெனக்கொளு முள்ளச்
செம்மையேபுரி மனத்தினர் சிவநேச ரென்பார்.

Koyiloor Digital Library

(இ-ள்.) தம்மை உள்ளவாறு அறிந்தபின் = தமதுயிரியல்பைஆகம அனுமானங்களாற் செயலற்றதென்றுஞ் சிவனுக்குடைப்பொருளென்றும் நன்குணர்ந்தபின்பு; சங்கரற்கு அடிமைமெய்ம்மையே செயும் விருப்புடன் =சிவபெருமானுக்கு அடிமைத்திறமான தொண்டைப் பொய்யின்றிச்செய் யும்விருப்போடு; மிக்கதோர் அன்பால்=மிகுந்த அன்பினால்; பொய்ம்மை நீக்கி மெய்ப்பொருள் இதுவெனக்கொளும் உள்ளச்செம்மையே புரிமனத் தினர் சிவநேசரென்பார்=உலகியல்களை நீக்கி மெய்ப்பொருளாகிய வீடுகூடும் நெறியிது வென்று உணர்ச்சிவாயிலாய்க் கொள்ளு முள்ளத்திடத்தையே விரும்பிய மனத்தையுடையவர் (அவர் யாரென்றால்) சிவநேசச்செட்டியா ரென்னும் பெயரையுடையவர்.—எ-று. பொய்ம்மை நீக்கி மெய்ப்பொருள் இதுவெனக்கொளு மென்னுங்கால், பொய்ச்சமய நெறியை நீக்கிச் சைவநெ றியாகிய இதுவே மெய்ப்பொருளென்று கொள்ளுகின்ற வென்றுரைப்பினு மமையும். தம்மை உள்ளவாறறிந்தபின்னென்றதனால் தேகமே ஆன்மாவெ ன்பாரும், இந்திரியமே ஆன்மாவென்பாரும் புத்தியே ஆன்மாவென்பாரும், விஞ்ஞானமே ஆன்மாவென்பாருந் தம்மையுள்ளவாறுணராமையால் மறு க்கப்பட்டனர். (க0ருரு)

கற்றைவார்சடை முடியினாடியவர் கலப்பி
லுற்றசெய்கையி லொழிவின்றியுருகிய மனமும்
பற்றிலாநெறிப் பரசமயங்களைப் பாற்றுஞ்
செற்றமேவிய சீலமுமுடையராய்த் திகழ்வார்.

(இ-ள்.) கற்றைவார் சடைமுடியினார் அடியவர்கலப்பில் = கூட்ட மான நீண்டசடைமுடியையுடைய சிவபெருமானது அடியாரது சேர்க்கையி லும்; உற்ற செய்கையில் ஒழிவின்றி உருகியமனமும் = அவர்க்கேற்ற பணி விடைகளிற் குறைவின்றிச் செய்தற்குருக்கமடைந்தமனமும்; பற்று இலா நெறிப் பரசமயங்களைப் பாற்றும் செற்ற மேவிய சீலமும் உடையராய்த்திக ழ்வார்=தமக்கென வோருறுதியில்லாத மார்க்கத்தையுடைய சமணபவுத்தர் முதலிய புறச்சமயங்களைக்கெடுக்கும் வீரம்பொருந்திய வொழுக்கத்தையுமு டையவராய் விளங்குவார்.—எ-று. (க0ருசு)

ஆனநாட்செல வருமறைக்கவுணியர் பெருமான்
ஞானபோனக நுகர்ந்ததுநானில முய்ய
வேனைவெஞ்சமண் சாக்கியமிழித்தழித் ததுவு
மூனமில்புக ழடியர்பாற்கேட்டுவந் துள்ளார்.

(இ-ள்.) ஆனநாள்செல அருமறைக்கவுணியர் பெருமான் = அவ்வா றான நாட்கள் பலசெல்ல அரியவேதங்களை யுணர்ந்த கவுணியகோத்திரத்தலை வராகிய ஆளுடையபிள்ளையார்; ஞானபோனகம் நுகர்ந்ததும்=பெரியநாயகி யார் அளித்தஞான அடிசிலைப்புசித்ததும்; நானிலம் உய்ய ஏனை வெம்சமண்

Koviloor Digital Library

சாக்கியம் இழித்து அழித்ததுவும்=அகன்ற நிலவுலகமுய்யும்பொருட்டுப் புறம்பான கொடிய சமணரையும் பவுத்தரையு மிழிவுசெய்து கெடுத்ததும்; ஊனமில்புகழ் அடியர்பாற்கேட்டு உவந்துள்ளார்=குற்றமில்லாத புகழையுடைய அடியார்களிடத்தக்கேள்வியுற்று மனமகிழ்ச்சி யடைந்தவராயினர்.

செல்வமல்கிய சிரபுரத்தலைவர்சே வடிக்கீ
ழெல்லையில்லதோர் காதலினிடையறு வுணர்வா
லல்லுநண்பகலும்புரிந்தவரருட் டிறமே
சொல்லவுஞ்செயல் கேட்கவுந்தொழிலின ராஞர்.

(இ-ள்.) செல்வம் மல்கிய சிரபுரத்தலைவர் சேவடிக்கீழ் = செல்வமிக்க சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார் சிவந்த திருவடிக்கீழ்; எல்லை இல்லதோர் காதலின் இடையறு உணர்வால்=அடங்காத பெருவிருப்போடு நீங்காத வுணர்ச்சியினால்; அல்லும் நண்பகலும் புரிந்து அவர் அருட்டிறமே=இரவும்பகலும் விரும்பி அவரது திருவருளின் திறத்தையே; சொல்லவும் செயல்கேட்கவும் தொழிலினர் ஆனுர்=நாவாற்கூறவும் காதாலவரது சரிதங்களைக்கேட்கவுந் தொழிலுடையவரானர்.—எ-று. (கoாகூஅ)

நிகழுமாங்கவர் நிதிப்பெருங்கிழவனின் மேலாய்த்
திகழுநீடிய திருவினிற்சிறந்துள ராகிப்
புகழுமேன்மையி லுலகினிற் பொலிந்துளாரெனினு
மகவிலாமையின் மகிழ்மனைவாழ்க்கையின் மருண்டு.

(இ-ள்.) நிகழும் ஆங்கவர் நிதிப்பெருங்கிழவனின்மேலாய்=இவ்வாறொழுகுமச்செட்டியார் மிக்கசெல்வத்திற் குரியகுபேரனிலுமேம்பட்டு; திகழும் நீடிய திருவினிற் சிறந்துளராகி=விளங்குகின்ற மிக்க செல்வத்தாற் சிறப்புடையராய்; புகழும் மேன்மையில் உலகினிற்பொலிந்துளாரெனினும்= யாவரும் புகழுமேன்மையோடு உலகத்திற் பொலிவடைந்துள்ளாரேனும்; மகவு இலாமையின் மகிழ்மனைவாழ்க்கையின் மருண்டு=புத்திரனில்லாமையினால் தாம் விரும்பிய இல்வாழ்க்கை நிலையில் மயக்கமுற்று.—எ-று. (கoாகக)

அரியநீர்மையி லருந்தவம்புரிந்தா னடியார்க்
குரியவர்ச்சனை யுலப்பிலசெய்தவந் நலத்தால்
கரியவாங்குழன் மனைவியார்வயிறெனுங் கமலத்
துரியபூமக ளனையவொருபெண்கொடி யுதித்தாள்.

(இ-ள்.) அரியநீர்மையில் அருந்தவம்புரிந்து = யாவருஞ் செய்தற்கரிய நிலைமையிற் றவவிரதங்களையநுட்டித்து; அரன் அடியார்க்கு உரிய அர்ச்சனை உலப்பில செய்த=சிவனடியார்களுக்குரிய பூசனைகள் பலவற்றைச்செய்த; அந்நலத்தால் = அப்பயனுல்; கரியவாம் குழல்மனைவி

Koviloor Digital Library

யார் வயிறெனும் கமலத்து = கருமைபொருந்திய கேசத்தையுடைய அவர் மனைவியாரது வயிறென்று கூறுந்தாமரை மலரின்கண்ணே; உரிய பூமகளென ஒரு பெண்கொடி உதித்தாள்=அம்மலரினிடத்து வசித்தற்குரிய திருமகளென்று சொல்லும்படி யொருபுத்திரி பிறந்தாள்.—எ-று. (க0சுo)

நல்லநாள்பெற வோரையினலமிக வுதிப்பப்
பல்பெருங்கிளை யுடன்பெருவணிகர்பார் முழுது
மெல்லையில்தன முகர்துகொண்டியாவரு முவப்ப
மல்லலாவண மறுகிடைப்பொலிந்துள மகிழ்ந்தார்.

(இ-ள்.) நல்லநாள்பெற ஓரையில் நலமிக உதிப்ப=மங்கலதினம்வர இலக்கினத்தி னன்மையானது மிகும்படி யப்புத்திரராவுண்டாகுங்கால்; பல்பெருங்கிளையுடன் பெருவணிகர் = பலமிக்க சுற்றத்தாருடன் பெருமைபொருந்திய சிவநேசச்செட்டியார்; பார்முழுதும் எல்லையில் தனம் முகந்துகொண்டு யாவரும் உவப்ப=நிலவுலகமுழுது மெண்ணிறந்த திரவியங்களை வாரிக்கொண்டு எல்லோரு மகிழும்படி; மல்லல் ஆவண மறுகிடைப்பொலிந்து உளமகிழ்ந்தார்=வளம்பொருந்திய ஆவணவீதியின்கண் இறைத்து மனமகிழ்ந்தார்.—எ-று. வணிகர் பார்முழுதும் யாவருமுவப்பத்தன முகந்துகொண்டுமறுகிடைப்பொழிந்து மகிழ்ந்தாரெனக்கூட்டுக. (க0சுக)

ஆறுசூடிய முடியினாரடியவர்க் கன்பி
லீறிலாதபூசனைகளியாவையு மிகச்செய்து
மாறிலாமறை யவர்க்குவேண்டினவெலா மளித்துப்
பேறுமற்றிது வேயெனும்பெருங்களி சிறந்தார்.

(இ-ள்.) ஆறுசூடிய முடியினார் அடியவர்க்கு=கங்காநதியையணிந்த திருமுடியினையுடைய சிவபெருமா னடியார்களுக்கு; அன்பில் ஈறிலாத பூசனைகள் யாவையு மிகச்செய்து = அன்போடு எண்ணிறந்த வழிபாடுகள் முழுவதை மிகவுஞ்செய்து; மாறிலாமறையவர்க்குவேண்டின எல்லாம் அளித்து=மாறுபாடில்லாத வேதியர்க்கு வேண்டும்பொருள்களையெல்லாங் கொடுத்து; பேறுமற்று இதுவே எனும் பெருங்களிசிறந்தார் = இதுவே பெறும் பேறென்று சொல்லும்படி மிகக் களிப்படைந்தார்.—எ-று. (கூசுஉ)

சூதநல்வினை மங்கலத்தொழின்முறை தொடங்கி
வேதநீதியில் விதியுளிவழாவகை விரியச்
சாதகத்தொடு சடங்குகள்தசதினஞ் செல்லக்
காதன்மேவிய சிறப்பினிற்கடிவிழா வயர்ந்தார்.

(இ-ள்.) சூதநல்வினை மங்கலத்தொழில் முறைதொடங்கி = பிரசவகாலத்திற்செய்கின்ற (சாந்திருத்தசெபம் கிரகசெபம் ஓமம் தானமுதலிய) நல்ல கருமங்களை மங்கல வாத்தியத்தின் ஒலியோடு முறைப்படிதொடங்கி;

Koviloor Digital Library

வேதநீதியில் விதிபுரி விழாவகைவிரிய = வேதத்திற்கூறிய முறை தவறாத வண்ணம் விரிவாய்; சாதகத்தொடுசடங்குகள் தசதினஞ்செல்ல = சாதகன் மத்தோடுகூடிய சடங்குகளைப் பத்துத்தினமளாவும்; காதல்மேவிய சிறப் பினிற் கடிவிழாவயர்ந்தார் = பிரியத்தோடு பொருந்திய சிறப்பினால் மங்கல விழாவாகச்செய்தார்.—எ-று. பிறந்தவுடன்செய்யுஞ் செப, தான, ஓமங்களை யெயன்றிச் சாதகன்மத்தோடு செய்யுந் தனபான முதலியனவும், ஆறும் நாளிற் செய்யும் விக்கினசாந்தியும், ஒன்பதாம் நாளிற்செய்யும் பலியும், பத் தாம் நாளிற்செய்யு மன்னதானமுமடங்கத் தசதினஞ்செல்லவெனக்கூறினர். தசதினமென்றது, தீட்சையுடைய அரசர், வணிகர், வேளாளர்க்கும் பத்து நாளாசௌசமென்னும் போதாயனர் கருத்தாற்போலும். (௧௦௪௩)

யாவரும்பெரு மகிழ்ச்சியாலின்புறப் பயந்த
பாவைநல்லுறுப் பணிகிளர்பண்பெலா நோக்கிப்
பூவினாளென வருதலிற்பூம்பாவை யென்றே
மேவுநாமமும் விளம்பினர்புவியின் மேல்விளங்க.

(இ-ள்.) யாவரும் பெருமகிழ்ச்சியால் இன்புற = எல்லாரு மிக்கமகி ழ்ச்சியினாலே யின்பமடையும்படி; பயந்தபாவைநல் உறுப்பு அணிகிளர் பண்பெலாம் நோக்கி=தான்பெற்ற அப்புத்திரியினது நல்ல அவயவங்களில் அழகோடுகூடிய விலக்கணங்களையெல்லாம்பார்த்து; பூவினாளெனவருதலிற் பூம்பாவையென்றே = இலக்குமிபோலப் பூமியிற் பிறத்தலினா லிப்புத்திரிக் குப் பூம்பாவையென்று; மேவு நாமமும் விளம்பினர் புவியின்மேல்விளங்க= பொருந்தியபெயரையுமிட்டார் நிலவுலகத்தில் விளங்கும்படி.—எ-று. ()

திங்கடோறுமுன் செய்யுமத்திருவளர் சிறப்பின்
மங்கலம்புரி நல்வினைமாட்சியிற் பெருக
வங்கண்மாநக ரமைத்திடவாண்டெதி ரணைந்து
தங்குபேரொளிச் சீறடிதளர்நடை பயில.

(இ-ள்.) திங்கள்தோறும் முன்செய்யும் அத்திருவளர்சிறப்பின்=மா தந்தோறு முற்பட்டுச்செய்யுமந்த செல்வமிக்க சிறப்பினையுடைய; மங்கலம் புரிநல்வினைமாட்சியிற்பெருக=மங்கலத்தை விளைக்கும் நற்கருமங்கள் பெரு மையோடு மிகும்படி; அங்கண்மாநகர் அமைத்திட = அழகிய இடமகன்ற பெரிய திருமயிலையின்கண் சிவநேசர்செய்விக்க; ஆண்டெதிர் அணைந்து தங் குபேரொளிச்சீறடி தளர்நடைபயில=ஓராண்டின்கண் தாய் தந்தையர் முன் னடைந்து மிக்க ஒளிபொருந்திய சிறியகால்கள் தளர்ந்த நடையையடை யும்படி.—எ-று. மாதந்தோறுஞ் சன்மதினத்தில் வருடமளவில் செய்யுமிர ட்சாபந்தனமும், முதல்மாதத்திற்செய்யும் தொட்டிலேற்றும், மூன்றுமாதத் திற்செய்யுஞ் சூரியதரிசனமும், ஐந்தாமாதத்திற்செய்யும் உபநிஷ்கிரமண மும், ஏழாமாதத்திற்செய்யு மன்னப்பிராசனமுதலியனவு மடங்க, திங்கடோறு

Koviloor Digital Library

ஞ்செய்யும் மங்கலம்புரி நல்வினையென்றும்; அவை குறைவின்றிச் செய்த லில் மாட்சியிற்பெருகவென்றுங்கூறினர். (௧௦௪௫)

தளருமின்னினங் குரமெனத்தமனியக் கொடியின்
வளரிளந்தளிர்க் கிளையெனமணிகிள ரொளியி
னளவிலஞ்சுடர்க் கொழுந்தெனவணைவுறும் பருவந்
திளவனப்பிணை யனையவர்க்கேழியாண் டெய்த.

(இ-ள்.) தளரும் மின்னின் அங்குரமென=ஒசிகின்ற மின்னற்கொடியினது அங்குரத்தைப்போலவும்; தமனியக்கொடியின் வளரிளந்தளிர்க்கிளையென=வல்லிசாதகக்கொடியில் வளருகின்ற இளந்தளிரோடுகூடிய ஓர்கிளைபோலவும்; மணிகிளரொளியின் அளவிலஞ்சுடர்க்கொழுந்தென=மாணிக்கத்தினின்று மேலெழுந்த செவ்வொளியினது மிக்கஅழகிய சுடர்க்கொழுந்தைப்போலவும்; அணைவுறும்பருவத்து இளவனப்பிணையனையவர்க்கு ஏழியாண்டெய்த = அடைகின்ற மகப்பருவத்தையுடைய இளமைபொருந்திய வனத்தின்கண்வாழும் பெண்மான்கன்றையொத்த அப்புத்திரியார்க்கு ஏழுவருடஞ்செல்ல.—எ-று. பேதைப்பருவம்வர என்றபடி. தளர்நடைபயில எதிரணைந்து அணைவுறும் பருவத்தவர்க்கேழியாண்டெய்தவெனக்கூட்டுக(௧௦௪௬)

அழகின்முன்னிளம் பதமெனவணிவிளக் கென்ன
விழவுகொண்டெழும் பேதையருடன்விளை யாட்டிற்
கழலொடம்மனை கந்துகமென்றுமற் றினைய
மழலைமென்கிளிக் குலமெனமனையிடை யாடி.

(இ-ள்.) அழகின்முன் இளம்பதமென=அழகினது முற்பட்ட ஓரிளம்பதமென்னும்; படிக்கும்; அணிவிளக்கென்ன = அழகிய விளக்கென்று சொல்லும்படிக்கும்; விழவுகொண்டு எழும்பேதையருடன் விளையாட்டில்= விழாக்கொண்டுவருஞ் சிறுமியர் குழாத்தோடு விளையாடுங்கால்; கழலொடு அம்மனை கந்துகம் என்றுமற்று இனைய = கழற்காயுடன் அம்மனையும் பந்துமெனக் கூறுமிவைபோல்வனவற்றை; மழலைமென்கிளிக்குலமென மனையிடை ஆடி = மழலைவார்த்தைபேசுமிருதுவான கிளிக்கூட்டம்போலவீட்டினிடத்து விளையாடி.—எ-று. (௧௦௪௭)

பொற்றொடிச்சிறு மகளிராயத்தொடும் புணர்ந்து
சிற்றின்முற்றவு மிழைத்துடனடுந்தொழிற் சிறுசோ
றுற்றவுண்டிகள் பயின்றொளிமணியூச லாடி
மற்றுமின்புற வண்டலாட்டயர் வுடன்வளர.

(இ-ள்.) பொற்றொடிச் சிறுமகளிர் ஆயத்தொடும் புணர்ந்து=பொன்னாலாய வளையலையணிந்த சிறுமியர் குழாத்தோடுகூடி; சிற்றில் முற்றவும்

Koviloor Digital Library

இழைத்து = மணற்சிற்றிலமுழுவதஞ்செய்து ; உடன் அடுந்தொழிற் சிறு சோறு=அவருடன் சமைக்குந்தொழிலாலுய சிறுசோறுடன் ; உற்ற உண்டி கள் பயின்று=பொருந்திய நால்வகையுண்டிகளையும் பழகி ; ஒளி மணி ஊச ல் ஆடி=ஒளிபொருந்திய மணிகளழுத்திய ஊஞ்சலிலாடி ; மற்றும் இன்புற வண்டலாட்டு அயர்வுடன்வளர=அதுவன்றி யின்புறும்படி யேனையமகளிரா டலைச்செய்தலோடு வளருங்கால்.—எ-று. மற்றும் வண்டலாட்டென்றத னால், மரப்பாவைக்கு நீராட்டல் உணவூட்டல் முதலியனவுங்கொள்க. (௧௦௪௮)

தந்தையாருமத் தளரிளங்கொம்பனு டகைமை
யிந்தவையகத் தின்மையிலின்புறு களிப்பு
வந்தசிந்தையின் மகிழ்ந்துமற்றிவண்மணம் பெறுவா
னந்தமில்லென தருநிதிக்குரியனென் றறைந்தார்.

(இ-ள்.) தந்தையாரும் அத்தளர் இளங்கொம்பனாள் தகைமை=சிவ நேசச்செட்டியாருமந்த ஒசிகின்ற விளங்கொம்புபோலும் பூம்பாவையி னது தகுதி ; இந்த வையகத்து இன்மையில்=இந்த நிலவுலகத்தின்கண் யா வரிடத்துமில்லாமையால் ; இன்புறுகளிப்புவந்த சிந்தையில் மகிழ்ந்து=இன் பத்தால் மிக்ககளிப்படைந்த மனதில் மகிழ்கூர்ந்து ; மற்று இவள் மணம் பெறுவான் = இப்புத்திரியினது வதுவையைப் பெறுகின்றவன் ; அந்தமில் எனது அருநிதிக்கு உரியனென்று அறைந்தார்=அளவில்லாத வெனது செல் வத்திற்குரிமையுடையானென்று சொன்னார்.—எ-று. எழியாண்டெய்த மனை யிடையாடி ஆயத்தொடு புணர்ந்து இழைத்து பயின்று ஊசலாடி வளருங் கால் தந்தையாருமகிழ்ந்து மணம்பெறுவானிதிக்குரிய னென்றறைந்தாரெ னக்கூட்டுக. திக்கடோறுமென்பது முதல் 'தந்தையாருமென்றுஞ் செய்யு ளிறுவாய் ஐந்துசெய்யுளுங் குளகம். (௧௦௪௯)

ஆயநாள்களி லமண்பயில்பாண்டிநா டதனைத்
தூயஞானமுண் டருளியதோன்றலா ரணைந்து
மாயவல்லமண் கையரைவாதில்வென் றதுவு
மேயவெப்பிடர் மீனவன்மேலொழித் ததுவும்.

(இ-ள்.) ஆயநாள்களில் அமண்பயில் பாண்டிநாடதனை=அந்நாளிற் சமணர்கள் வாழும் பாண்டிநாட்டை ; தூய ஞானமுண்டருளிய தோன்ற லார் அணைந்து=தூய்மையான மெய்ஞ்ஞானத்தை யமுதுசெய்தருளிய ஆளு டையபிள்ளையாரடைந்து ; மாயவல்லமண் கையரை வாதில் வென்றதுவும்= மாயத்தொழிலில்வல்ல சமணர்களாகிய கீழோரை வாதினிடத்து வென்றது வும் ; மேயவெப்பிடர் மீனவன்மேல் ஒழித்ததுவும்=பொருந்திய சுரநோ யைப் பாண்டியனிடத்து நீக்கியதும்.—எ-று. (௧௦௫௦)

நெருப்பிலஞ்சினார் தங்களைநீரிலோட் டியபின்
மருப்புரீள்கழுக் கோலின்மற்றவரையேற் றியதும்

Koviloor Digital Library

விருப்பினுற்றிருநீறு மீனவற்களித் தருளிப்
பொருப்புவில்லியார் சாதனம்போற்றுவித் ததுவும்.

(இ-ள்.) நெருப்பில் அஞ்சினுர் தங்களை நீரில் ஒட்டியபின்=நெருப்பிற்செய்த வாதிற்றேற்ற சமணர்களை நீரில் வாதுசெயும்படி உடன்படச்செய்தபின்; மருப்பு நீள்கழுக்கோலின் மற்றவரை ஏற்றியதும் = கொம்பினுல் நீண்ட கழுக்கோலின்கண் அச்சமணர்களை யேற்று வித்ததும்;] விருப்பினுற்றிருநீறு மீனவற்கு அளித்தருளி=விருப்பத்தோடு திருவெண்ணீற்றைப் பாண்டியனுக்குக் கொடுத்தருளி; பொருப்புவில்லியார் சாதனம் போற்றுவித்ததுவும்=மாமேருவை வில்லாகவுடைய சிவபெருமானது விபூதிருத்திராட்சமென்னுஞ் சாதனங்களை யாவருந் தரிக்கும்படிச் செய்ததும்.—எ-று.(௧௦௫௧)

இன்னவாறெலா மறிந்துளாரெய்தியங் கிசைப்பச்
சொன்னவர்க்கெலா மிருநிதிதூசுட னளித்தே
மன்னுபூந்தராய் வள்ளலார்தமைத்திசை நோக்கிச்
சென்னிமேற்கரங் குவித்துவீழ்ந்தெழுந்துசெந் நின்று.

(இ-ள்.) இன்னவாறெலாம் அறிந்துளார் எய்தி அங்கு இசைப்ப=இவ்வித சரிதங்களையெல்லா மறிந்தவர்கள் தம்மிடத்து வந்துசொல்ல=சொன்னவர்க்கெலாம் இருநிதி தூசுடன் அளித்து = இச்சரிதத்தைவந்து சொன்னவர்க்கெல்லா மிக்க பொருள்களைப் பட்டாடையுடன் கொடுத்து; மன்னுபூந்தராய் வள்ளலார் தமைத்திசைநோக்கி=நிலைபெற்ற சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையாரை யவரெழுந்தருளியிருக்குந் திக்கைநோக்கி; சென்னிமேற் கரங்குவித்து விழ்ந்து எழுந்து செந்நின்று = சிரசின்மே லிருகாரங்களையுங்குவித்து நிலமுறவணங்கி யெழுந்து செவ்வனின்று.—எ-று. ()

சுற்றநீடிய கிளையெலாஞ் சூழ்ந்துடன் கேட்பக்
கற்றமாந்தர்வாழ் காழிநாடுடையவர்க் கடியேம்
பெற்றெடுத்தபூம் பாவையும்பிறங்கிய நிதியு
முற்றுமென்னையுங் கொடுத்தனன்யானென்று மொழிவார்.

(இ-ள்.) சுற்றநீடிய கிளையெலாம் சூழ்ந்து உடன்கேட்ப = சுற்றத்தாரோடு மிக்க கிளைஞருமாகிய யாவருந் தம்மைச் சூழ்ந்துகொண்டு கேட்கும்படி; கற்றமாந்தர் வாழ்காழிநாடு உடையவர்க்கு = எல்லாநூல்களையுங் கற்றுணர்ந்த மனிதர்கள் வாழுகின்ற சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையாருக்கு; அடியேன்பெற்றெடுத்த பூம்பாவையும் = அடியேன் தவத்தாற் பெற்றெடுத்த பூம்பாவையென்னுய புத்திரியையும்; பிறங்கிய நிதியும்=விளங்கிய செல்வத்தையும்; முற்றும் என்னையும் கொடுத்தனன் யானென்று மொழிவார்=முழுதுமென்னையு மவருக்குயான் கொடுத்தேனென்று மொழிவாராயினுர்.—எ-று. என்னையு மென்றதனுல், யானென்னுஞ் செருக்கு நீக

Koviloor Digital Library

ழ்தற்குரிய வுடம்பையும் யானென்று முயிரையுங் கொடுத்தனனென்றும். எனவே பொருளுடலாவி மூன்றையுங் கொடுத்தானெனப் போந்தவாறு காண்க. ஆயநாள்களில் என்பது முதல் சுற்ற நீடியவென்ப திறுவாய்நாங்கு செய்யுளுங் குளகம். (௧௦௫௩)

எல்லையில்பெருங் களிப்பினுலிப்பரி சியம்பி
முல்லைவெண்ணகை முகிழ்முலையாளுடன் முடியா
மல்குசெல்வத்தின் வண்மையுமறையவர் புகலிச்
செல்வரேயுடை யாரெனுஞ்சிந்தையான் மகிழ்ந்தார்.

(இ-ள்.) எல்லையில்பெருங் களிப்பினுல் இப்பரிசு இயம்பி = எண்ணிறந்த மிக்க களிப்பினு லிவ்வாறு யாவருமறியக்கூறி; முல்லைவெண்ணகை முகிழ் முலையாளுடன் = முல்லையரும்புபோலும் வெள்ளியபற்களையு முகிழ்த்த முலைகளையுமுடைய பூம்பாவையுடன்; முடியாமல்கு செல்வத்தின் வண்மையும் = அழியாத நிறைந்த செல்வத்தினது வளத்தையும்; மறையவர்புகலிச் செல்வரே உடையாரெனுஞ் சிந்தையால் மகிழ்ந்தார் = மறையவர்கள்வாழுஞ் சீகாழியிலவதரித்த ஆளுடையபிள்ளையாரே யுடையவரென்னுஞ் சிந்தையோடு மகிழ்ச்சியடைந்தார்.—எ-று. (௧௦௫௪)


ஆற்றுநாள்களி லணங்கனார்கன்னிமா டத்தின்
பாற்றடம்பொழின் மருங்கினிற்பனிமலர் கொய்வான்
போற்றுவார்குழற் சேடியருடன்புறம் போந்து
கோற்றொடித்தளிர்க் கையினுன்முகைமலர் கொய்ய.

(இ-ள்.) ஆற்றும் நாள்களில் அணங்கனார் = இவ்வா றொழுகிவரும் நாட்களில் தெய்வமகளையொத்த பூம்பாவையார்; கன்னிமாடத்தின்பாற் றடம்பொழில் மருங்கினிற் பனிமலர்கொய்வான் = கன்னிமாடத்தின் கண்ணுள்ளபெரியசோலையின் பக்கலிற் குளிர்ந்த மலர்களைக் கொய்யும்படி; போற்றுவார்குழற் சேடியருடன் புறம்போந்து = தம்மைச்சூழ்ந்துவருகின்ற நீண்ட கூந்தலையுடைய தாதிப்பெண்களுடன் புறம்பேவந்து; கோற்றொடித்தளிர்க்கையினுல் முகைமலர் கொய்ய = கோலிய வளையலணிந்த தளிர்போன்ற கரத்தினுல் முகைவிண்டு மலர்ந்த பூக்களைக்கொய்யுங்கால்.—எ-று. ()

அன்பரின்புறு மார்வத்தினளித்தபாங் கல்லாற்
பொன்பிறங்குநீர்ப் புகலிகாவலர்க்கிது புணரா
தென்பதுட்கொண்ட பான்மையோவெயிற்றிளம் பணியாய்
முன்பணைந்தது போலவோர்முள்ளெயிற் றரவம்.

(இ-ள்.) அன்பர் இன்புறும் ஆர்வத்தின் அளித்த பாங்கு அல்லால் = சிவநேசச் செட்டியாரின்பு மிகவிருப்போடு கொடுத்த வகைமையேயன்றி;

Koviloor Digital Library



திருமயிலையில் பூம்பாவையார் கபாலீசருக்காக புஷ்பங்கொய்யுங்கால் பாம்புகடித்திறக்க அவ்விடம் யாவராலுந் திராமைகண்டு தகனஞ்செய்து அவ்வென்பை திருஞானசம்பந்த சுவாமிகளுக்காககுடத்தில் பாணித்து வைத்தது.

Koviloor Digital Library

பொன்பிறங்கு நீர்ப்புகலி காவலற்கு இதுபுணராது என்பது = பொன்போல விளங்குகின்ற காவிரி நீர் சூழ்ந்த சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையாருக்கு (அவர்கருதிய எண்ணமாகிய) இது பொருந்ாதென்பதை ; உட்கொண்ட பான்மை = தம்முட்கருதிய வோரெண்ணமானது ; ஓர் எயிற்று இளம் பணியாய் முன்பு அணைந்ததுபோல ஓர்முள் எயிற்று அரவம் = ஒரு பற்களையுடைய இளமைபொருந்திய பாம்பாய் முன்னே வந்தாற்போல ஒருமுட்போலும் பற்களையுடைய பாம்பானது.—எ-று. (கoருசு)

மௌவன்மாதவிப் பந்தரின்மறைந்துவந் தெய்திச்
செவ்விநாண்முகை கவர்பொழுதினின்மலர்ச் செங்கை
நவ்விவாள்விழி நறுநுதற்செறிநெறி கூந்தற்
கொவ்வைவாயவண் முகிழ்விரல்கவர்ந்தது குறித்து.

(இ-ள்.) மௌவல் மாதவிப் பந்தரில் மறைந்துவந்து எய்தி=முல்லைப்பந்தரினு மாதவிப்பந்தரினுந்தான் மறைந்துவந்து கிட்டி ; செவ்விநாள் முகைகவர் பொழுதினில் = சிறந்த அன்றலர்ந்த மலர்களைக் கொய்யுங்கால்; மலர்ச்செங்கை நவ்விவாள் விழிநறு நுதற்செறி நெறிகூந்தல் = மலர்போலுஞ் சிவந்தகைகளையுமான் நோக்கம்போலு மொளிபொருந்திய கண்களையும் நல்லநெற்றியையும் நெருங்கி நெறித்த கேசங்களையும் ; கொவ்வைவாயவள் முகிழ்விரல் கவர்ந்தது குறித்து = கொவ்வைப் பழம்போலும் வாயையுமுடையஅப்பூம்பாவையினது முகிழ்த்தவிரலைச் சுட்டிக்கடித்தது.—எ-று. பூக்கொயயுங்கால் விரல்களொருங்கு சேர்ந்திருத்தலில், முகிழ்விரலென்றார். ஆற்றுநாள்களி லென்பதுமுதல் மௌவன்மாதவிப்பந்தரினிறுவாய் மூன்று செய்யுளுங் குளகம். (கoருஎ)

நாலுதந்தமு மென்புறக்கவர்ந்துநஞ் சுகுத்து
மேலெழும்பணம் விரித்துநின்றுடிவே றடங்க
நீலவல்விடந் தொடர்ந்தெழநேரிழை மென்பூ
மாலைதீயிடைப் பட்டதுபோன்றுள மயங்கி.

(இ-ள்.) நாலுதந்தமும் என்புறக்கவர்ந்து நஞ்சு உகுத்து = நாலு பற்களுமென்பைச் சேரும்படிகடித்து நஞ்சைக்கக்கி ; மேல் எழும்பணம் விரித்து நின்று ஆடிவேறு அடங்க = மேலெடுத்தபடத்தை விரித்து நின்றுடிப்பின் வேறிடத்துப்பாம்பு மறைய ; நீலவல்விடம்தொடர்ந்து எழ=நீலநிறம்பொருந்திய கொடியவிடமானது எலும்பைப்பற்றி மேற்கொண்டெழ; நேரிழைமென்பூமாலை தீயிடைப்பட்டதுபோன்று உளம் மயக்கி=பூம்பாவையானவள் மிருதுவான பூமாலையானது நெருப்பினிடைப்பட்டாற்போல் மனமயக்கமுற்று.—எ-று. (கoருஅ)

Koviloor Digital Library

தரையில்வீழ்தரச் சேடியர்வெருக்கொடு தாங்கி
வரைசெய்மாடத்தி னுட்கொடுபுகுந்திட வணிக
ருரையுமுள்ளமு நிலைபழிந்துறுதுயர் பெருகக்
கரையில்சுற்றமுந் தாமுமுன்கலங்கினர் கலுழ்ந்தார்.

(இ-ள்.) தரையில் வீழ்தரச்சேடியர் வெருக்கொடு தாங்கி=நிலத்தில் விழத் தாதிப்பெண்கள் அச்சமுற்று எடுத்து; வரைசெய்மாடத்தின் உட்கொடு புகுந்திட = மலையையொத்த கன்னிமாடத்தினுள்ளே கொண்டுசெல்ல; வணிகர்உரையும் உள்ளமும் நிலையழிந்து = சிவநேசச்செட்டியார் வார்த்தையு மனமும் நிலைகலங்கி; உறுதுயர்பெருக = மிக்கதுயரமதிகரிக்க; கரையில் சுற்றமும் தாமும் முன்கலங்கினர் கலுழ்ந்தார்=எண்ணிறந்த சுற்றத்தாருந் தாமு முன்னேகலக்கமடைந்து அழுதார்.—எ-று. (௧0௫௧)

விடந்தொலைத்திடும் விஞ்சையிற்பெரியரா மேலோ
ரடர்ந்ததீவிட மகற்றுதற்கணைந்துளா ரனேகர்
திடங்கொண்மந்திரந் தியானபாவகநிலை முட்டி
தொடர்ந்தசெய்வினை தனித்தனித்தொழிலராய்ச் சூழ்வார்.

(இ-ள்.) விடம் தொலைத்திடும் விஞ்சையிற் பெரியராம் மேலோர்= விடவேகத்தைத் தடுக்குங் காருடவித்தையிற் பெரியரான அறிஞர்கள்;அடர்ந்த தீவிடம் அகற்றுதற்கு அணைந்துளார் அனேகர் = நெருங்கிய கொடியவிடத்தை நீக்குதற்கு வந்த அனேகர்களும்; திடங்கொள்மந்திரம் = திடமாகக்கொண்ட மந்திரங்களும்; தியானபாவகம்முட்டி நிலை = கருடத்தியானமுதலியனவு மவைகளின் பாவனையு மவற்றோடு கூடிய முட்டி நிலையுமாகிய; தொடர்ந்த செய்வினை தனித்தனித் தொழிலராய்ச் சூழ்வார் = ஒன்றோடொன்றியைந்த விஷம் நீக்கும் வினையில் வெவ்வேறு தொழிலுடையராய்ச் சூழ்வாராயினர்.—எ-று. மேலோராய்வந்த அனேகரெனக் கூட்டுக. மந்திரமு மதன் தியானமு மம்மூர்த்திபாவனையு மதனோடு சேர்ந்த முட்டிநிலையு மொன்றோடொன்று சம்பந்தமுடைமையில், தொடர்ந்த செய்வினையென்றும்; அம்மந்திரங்களும் தியானபாவனைகளும் பலவாதலில், தனித்தனித் தொழிலரா யென்றுங் கூறினர். முட்டியாவது, விடவேகந்தலைக் கொண்டுழியவ்வேகங்கள் தணிதற்பொருட்டு அங்குட்ட விரல்விடுத்து நான் குவிரலை யுமடக்கி யுச்சிமுதற் கடிவாயிருகப்பரிசிப்பது. நிலைமுட்டியென்றதை, முட்டிநிலையென மாற்றப்பட்டது. (௧0௫௨)

மருந்துமெண்ணில மாறிலசெய்பவும் வலிந்து
பொருந்துவல்விட மேழுவேகமுமுறை பொங்கிப்
பெருந்தடங்கண்மென் கொடியனுடலைமிசைப் பிறங்கித்
திருந்துசெய்வினை யாவையுங்கடந்துசீர்ந் திலதால்.

Koviloor Digital Library

(இ-ள்.) மருந்தும் எண்ணில மாறிலசெய்யவும்=(மந்திரமேயன்றி) மருந்து மளவிறந்தன வொப்பில்லனவாய்ச் செய்யவும்; வலிந்துபொருந்துவல் விடம் ஏழுவேகமும் முறைபொங்கி=வலியடைந்துநிற்குங் கொடிய விடமானதுமுதல் வேகமுதலேழாம் வேகமீறாக ஒன்றன்பின்னொன்று அதிகரித்து; பெருந்தடங்கண் மென்கொடியனாள் தலைமிசைப்பிறங்கி=பெரிய விசாலமான கண்களையுடைய மிருதுவான பூங்கொடியையொத்த அப் பூம்பாவையினது தலைக்கண்சேர்ந்து; திருந்து செய்வினையாவையும் கடந்து நீங்கிலது = திருத்தமான செயல்கள் யாவையுஞ் செய்தும் நீங்காதிருந்தது. ()

ஆவிதங்குபல் குறிகளுமடைவில வாக

மேவுகாருட விஞ்சைவித்தகரிது விதியென்

றேவும்வேலையி லுறுபெருஞ்சுற்றமு மலறிப்

பாவைமேல்விழுந் தழுதனர்படரொலிக் கடல்போல்.

(இ-ள்.) ஆவிதங்கு பல்குறிகளும் அடைவு இலவாக=உயிர்தங்குதலையுணர்த்தும் பலகுறிகளும் பொருந்தாதொழிய; மேவுகாருடவிஞ்சை வித்தகர் இது விதியென்று = பொருந்திய காருட நூலுணர்ச்சியில் மிக்க மருத்துவர்களிது விதியேயென்று; ஏவும்வேலையில் உறுபெருஞ்சுற்றமும் அலறிப்பாவைமேல் விழுந்து அழுதனர் படர் ஒலிக்கடல்போல்=தாஞ் செய்யுந்தொழிலினின்று நீங்குங்காலத்து மிக்க பெரிய சுற்றத்தாரும் அப்புத்திரியின்மேல் விழுந்து அலறியழுதார்கள் பரம்பிய வொலியையுடைய கடலைப்போல.-எ-று. விடவேகத்தாலுயிர்தங்கியதென்றுணருங்குறி, நசியமுதலியவற்றாலாய குறி. அவைபலவாதலிற் பலகுறியென்றும்; காருடம், பூதமுதலிய தந்திரங்கள் மணிமந்திர மருந்துகளையுணர்த்தலில், காருடவிஞ்சை வித்தகரொன்றும்; காலக்கடி நீங்காமையில் விதியென்றுரொன்றுங் கூறினர். (௬0௬௨)

சிந்தைவெந்துய ருறுசிவநேசருந் தெளிந்து

வந்தசெய்வினை யின்மையில்வையகத் துள்ளோ

ரிந்தவெவ்விட மொழிப்பவர்க்கிவனென் னுடைய

வந்தமின்னிதிக் குவையெனப்பறையறை வித்தார்.

(இ-ள்.) சிந்தைவெந்துயர் உறு சிவநேசருந்தெளிந்து = மனதிற் பெருந்துயரமடைந்த சிவநேசச் செட்டியாருந் துயர்சிறிது நீங்கி; வந்த செய்வினை இன்மையில் வையகத்துள்ளோர்=தாஞ்செய்தற்குரிய செயல்வேறில்லாமையினு லிவ்வுலகத்துள்ளோரில்; இந்தவெவ்விடம் ஒழிப்பவர்க்கு = இக்கொடியவிடத்தை நீக்குபவருக்கு; ஈவன் = கொடுப்பன்; என்னுடைய அந்தமில் நிதிக்குவையெனப்பறை யறைவித்தார்=என்னுடைய அளவில்லாத பொருட்குவைகளையென்று பறையடிப்பித்தார்.—எ-று. (௬0௬௩)

Kaviloor Digital Library

முரசியம்பிய மூன்றுநாளகவையின் முற்ற
வரசர்பாங்குளோ ருட்படவவனிமே லுள்ள
கரையில்கல்வியோர் யாவருமணைந்துதங் காட்சிப்
புரையில்செய்கையிற் றீர்ந்திடாதொழிந்திடப் போனார்.

(இ-ள்.) முரசு இயம்பிய மூன்றுநாள் அகவையின் முற்ற = பறை யறைவித்த மூன்று நாளளவில் முழுதும்; அரசர்பாங்குளோர் உட்பட = அரசர்கள் பக்கலிலுள்ள மருத்துவர்களுட்பட; அவனிமேல் உள்ள கரையில் கல்வியோர் யாவரும் அணைந்து = இவ்வுலகத்திலுள்ள அளவில்லாத காருடமுதலிய வித்தைவல்லவ ரியாவருமடைந்து; தங்காட்சிப்புரையில் செய்கையிற் றீர்ந்திடாது ஒழிந்திடப்போனார் = தாம்விடநீங்கும்படி பார்க்கும் பார்வை யென்னும் குற்றமற்றசெய்கையினுந் தீராதொழியப் போனார்கள்.—எ-று. காருடாவகன், கண்ணூற்குறித்துப் பார்க்கும் பார்வையால் விஷம்போதல்வழக்கென்பது தோன்றக் காட்சிப்புரையில் செய்கையிலென்றார்.. (௧௦௬௪)

சீரின்மன்னிய சிவநேசர்கண்டுள மயங்கிக்
காரின்மல்கிய சோலைசூழ்கழுமலத் தலைவர்
சாருமவ்வள வும்முடற்றழலிடை யடக்கிச்
சேரவென்பொடு சாம்பல்சேமிப்பது தெளிவார்.

(இ-ள்.) சீரின்மன்னிய சிவநேசர்கண்டு உளம் மயங்கி = சிறப்பால் நிலைபெற்ற சிவநேசச்செட்டியாரதைக்கண்டு மனமயக்குற்று; காரின்மல்கிய சோலைசூழ்கழுமலத்தலைவர் = மேகங்களால் நிறைந்த சோலைசூழ்ந்த சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார்; சாரும் அவ்வளவும் உடல் தழலிடை அடக்கி = இத்தலத்திற்கு எழுந்தருளுமளவு மிவ்வுடம்பை நெருப்பினிடத்தடங்கச்செய்து; சேர என்பொடு சாம்பல் சேமிப்பது தெளிவார் = ஒருங்கு எலும்போடு சாம்பலைச் சேமஞ்செய்து வைப்பதைத் தெளிவாராய்.—எ-று.

உடையபிள்ளையார்க் கெனவிவ டனையுரைத் ததனு
லடைவுதுன்புறு வதற்கில்லையாநமக் கென்றே
யிடரொழிந்தபின் னடக்கிய வென்பொடு சாம்பல்
புடைபெருத்தகும் பத்தினிற்புகப்பெய்து வைப்பார்.

(இ-ள்.) உடையபிள்ளையார்க்கென இவள்தனை உரைத்ததனால் = ஆளுடையபிள்ளையாருக்கென் றிப்புத்திரியை யாவருமறியவெடுத்துச்சொன்ன தனால்; துன்பு உறுவதற்கு அடைவு நமக்கு இல்லையாம் என்றே = துன்பமடைதற்கு முறைமை நமக்கில்லையென்று; இடர் ஒழிந்தபின் அடக்கிய என்பொடு சாம்பல் = துன்பம் நீங்கியபின்பு எரியினிடத்து வேவச்செய்த வெலும்புடன் சாம்பலை; புடைபெருத்தகும்பத்தினில் புகப்பெய்து வைப்பார் =

Koviloor Digital Library

இடமகன்ற குடத்தின் கணிட்டுவைப்பாராயினர்.—எ-று. சிவநேசர் தெளிவாராய்வைப்பாராயினரெனக் கூட்டுக. (கoசுசு)

கன்னிமாடத்தின் முன்புபோற்காப்புற வமைத்துப்
பொன்னுமுத்துமே லணிகலன்பூந்துகில் சூழ்ந்து
பன்னுதூவியின் பஞ்சணைவிரைப்பள்ளி யதன்மேன்
மன்னுபொன்னரி மாலைகளணிந்து வைத்தனரால்.

(இ-ள்) கன்னிமாடத்தின்முன்பு போற்காப்புற அமைத்து = கன்னிமாடத்தின்கண் முன்போலத்தாதியர்கள் காக்கும்படி யமைத்து; பொன்னும் முத்தும் மேல் அணிகலன் பூந்துகில் சூழ்ந்து=பொன்னையு முத்தையு மதன்மேல் ஆபரணங்களையும் வஸ்திரங்களையு மலங்கரித்து; பன்னுதூவியின் பஞ்சணைவிரைப் பள்ளியதன்மேல் =மிருதுவாயிருக்கின்ற அன்னத்தூவியாலாய மெத்தையில் வாசனைப்பொருள்களா லமைத்த படுக்கையின்மேல்; மன்னு பொன்னரிமாலைகள் அணிந்து வைத்தனரால் = சிறப்புப்பொருந்திய பொன்னரிமாலைகளா லலங்காரஞ்செய்து சிவநேசர்வைத்தனர்.—எ-று. (கoசுஎ)

மாலைசாந்தொடு மஞ்சனநாடொறும் வழாமைப்
பாலினேர்தரும் போனகம்பகல்விளக் கினைய
சாலுநன்மையிற் றருவனநாடொறுஞ் சமைத்தே
யேலுமாசெய யாவரும்வியப்பெய்து நாளில்.

(இ-ள்.) மாலைசாந்தொடு மஞ்சனம் நாள்தொறும் வழாமை=மாலை சந்தனத்தோடு திருமஞ்சனமிவைகள் நாடொறுங்குறையாமல்; பாலினேர் தரும் போனகம் பகல்விளக்கு இனைய = பாலால் நன்கமைத்த அமுதும் பகல்விளக்குமாகிய இவைபோல் வனவற்றை; சாலும் நன்மையில் தருவன நாள்தொறும் சமைத்தே = தக்கநன்மையினு லுரியனவற்றை நாடோறுஞ் செய்து; ஏலுமா செயயாவரும் வியப்பெய்தும் நாளில் = பொருந்தும்வண்ணம் பூசிக்க அந்நகரத்துள்ளார் யாவரு மதிசயமடைந்திருக்கும்நாளில். ()

சண்பைமன்னவர் திருவொற்றியூர்நகர் சார்ந்து
பண்புபெற்றநற் றொண்டர்களுடன்பணிந் திருந்த
நண்புமிக்கநல் வார்த்தையந்நற்பதி யுள்ளோர்
வண்புகழ்ப்பெரு வணிகர்க்குவந்துரை செய்தார்.

(இ-ள்.) சண்பைமன்னவர் திருவொற்றியூர் நகர்சார்ந்து = ஆளுடையபிள்ளையார் திருவொற்றியூரென்னுந் திருநகரத்தையடைந்து; பண்பு பெற்ற நற்றொண்டர்களுடன் பணிந்திருந்த = சிவநேசமமைந்த நல்ல திருவடியார்களுடன் வணஙகி யெழுந்தருளியிருந்த; நண்புமிக்க நல்வார்

Koviloor Digital Library

த்தை = யாவருக்கும் நட்பை விளைவித்த நல்லவார்த்தையை; அந்நற்பதியுள்ளோர் = அத்திருவொற்றியூரி லிருக்கின்றவர்கள்; வண்புகழ்ப் பெருவணிகர்க்கு வந்துரைசெய்தார் = ஈகையாலாயபுகழையுடைய பெருமைபொருந்திய சிவநேசச் செட்டியாருக்கு வந்துசொன்னார்கள்.—எ-று. வியப்பெய்தும் நாளில் நற்பதியுள்ளோ ருரைசெய்தாரெனக் கூட்டுக. (௧௦௬௯)

சொன்னவர்க்கெலாந் துசொடுகாசுபொன் னளித்தே
யின்னதன்மையா ரெனவொணாமகிழ்சிறந் தெய்தச்
சென்னிவாழ்மதி யார்திருவொற்றியூ ரளவுந்
துன்றுநீணடைக் காவணந்துகில் விதானித்து.


(இ-ள்.) சொன்னவர்க்கெலாம் துசொடுகாசுபொன் அளித்தே = தன்னிடத்துவந்து சொன்னவர்களுக்கெல்லாம் அவர் வஸ்திரத்தோடு மணிகளையும் பொன்னையுங்கொடுத்து; இன்னதன்மையாரெனவொணா மகிழ்சிறந்து எய்த = (கண்டார்) இவர் இத்தன்மையாரென்று சொல்லுதற்கரிய மகிழ்ச்சி மிக்குநிற்க; சென்னிவாழ்மதியார் திருவொற்றியூரளவும் = திருமுடியில் வாழுகின்ற இளம்பிறையையுடைய படம் பக்கநாதரது திருவொற்றியூரென்னுந் திருப்பதியளவும்; துன்றுநீள் நடைக் காவணம் துகில்விதானித்து = நெருங்கிய நீண்டநடைக்காவணத்தையும் வஸ்திரத்தாலாய மேற்கட்டிகளையுங்கட்டி.—எ-று. துன்றுதல் - இடைபொடுதொடர்தல். (௧௦௭௦)

மகரதோரணம் வண்குலைக்கமுகொடு கதலி
நிகரில்பல்கொடித் தாமங்களணிபெற நிறைத்து
நகரநீண்மறு கியாவையுநலம்புனை பணியாற்
புகரில்பொன்னுல கிழிந்ததாமெனப்பொலி வித்தார்.

(இ-ள்.) மகரதோரணம் வண்குலைக்கமுகொடுகதலி = மகரதோரணங்களையும் வளம்பொருந்திய குலைகளையுடைய கமுக மரத்துடன் வாழைமரங்களையும்; நிகரில் பல்கொடித் தாமங்கள் அணிபெறநிறைத்து = ஒப்பற்ற பலகொடிகளோடு மாலைகளையு மழகுபெறச்செய்து; நகர நீள்மறுகுயாவையும் நலம்புனைபணியால் = திருமயிலாபுரியின்கணுள்ள வீதிகளையெல்லாம் நன்மைமிக்க வலங்காரத்தால்; புகரில் பொன்னுலகு இழிந்ததாமெனப் பொலிவித்தார் = குற்றமற்றபொன்னுலகம் வந்தாற்போல அலங்கரித்தார்.—எ-று. அவர் அளித்து மகிழ்சிறந்து பொருந்த விதானித்து நிறைத்துப் பொலிவித்தாரெனக்கூட்டுக. (௧௦௭௧)

இன்னவாறணி செய்துபல்குறைவறுப் பேவி
முன்னமொற்றியூர் நகரிடைமுத்தமிழ் விரகர்
பொன்னடித்தலந் தலைமிசைபுனைவனென் றெழுவா
ரன்னகர்ப்பெருந் தொண்டருமுடன்செல வணைந்தார்.

Koviloor Digital Library



திருஞான சம்பந்தசுவாமிகள் தலயாத்திரைசெய்து திருவொற்றியூரடைந்த செய்தி சிவநேசச்செட்டியாரறிந்து ஒற்றியூர்க்கும் மயிலைக்கும் நடைக்காவணப் பந்தலிட்டு சுவாமிகளை அழைப்பித்து பூம்பாவைக்கு நிகழ்ந்ததை விளம்பியது.

Koviloor Digital Library

(இ-ள்.) இன்னவாறு அணிசெய்துபல் குறைவறுப்பு ஏவி=இவ்வாறு அலங்காரஞ்செய்தவேண்டிய பலகுறைகளையு முடிக்கும்படி (பரிசனர்களை) ஏவி ; முன்னம் ஒற்றியூர் நகரிடை முத்தமிழ் விரகர்=முன்னே திருவொற்றியூர் நகரிற் சென்று முத்தமிழ் விரகராகிய ஆளுடையபிள்ளையாரது ; பொன்னடித்தலம் தலைமிசைபுனைவனென்று எழுவார்=பொன்போலுந் திருவடிகளைச் சிரசின்மேற் சூடுவனென்று எழுகின்ற அச்சிவநேசர் ; அந்நகர்ப்பெருந்தொண்டரும் உடன்செல அணைந்தார்=அத்திருமயிலை நகரத்திலிருக்கும் பெருமைபொருந்திய திருவடியார்களுந் தம்முடன்செல்லும்படித் திருவொற்றியூரையடைந்தார்.—எ-று. எழுவார், அணைந்தார் எனக்கூட்டுக. (கஎஉ)

ஆயவேலையி லருமறைப்புகலியர் பிரானு
மேயவொற்றியூர் பணிபவர்வியனக ரகன்று
காயல்சூழ்கரைக் கடன்மயிலாபுரி நோக்கித்
தூயதொண்டர்தங் குழாத்தொடுமெதிர்வந்து தோன்ற.

(இ-ள்.) ஆய வேலையில் அருமறைப்புகலியர்பிரானும்=அதுசமயத்திலரிய வேதங்களையோதாதுணர்ந்த ஆளுடையபிள்ளையாரும் ; மேய ஒற்றியூர் பணிபவர்=மேன்மைபொருந்திய திருவொற்றியூரை வணங்குபவராய் ; வியன் நகர் அகன்று = இடமகன்ற அத்திருவொற்றியூரை நீங்கி ; காயல் சூழ் கரைக்கடல் மயிலாபுரிநோக்கி=கழிநிலஞ் சூழ்ந்த கடற்கரையின்கணுள்ள திருமயிலாபுரியென்னுந் திருப்பதியைக் கருதி ; தூயதொண்டர் தம் குழாத்தொடும் எதிர்வந்துதோன்ற=பரிசுத்தமான அடியார் கூட்டங்களுடன் சிவநேசச்செட்டியார் முன் திருமுத்தின் சிவிகையிலெழுந்தருளிவந்து தோற்றப்பட.—உ-று. (கஎஙு)

மாறில்வண்பெரு வணிகருந்தொண்டரு மலர்ந்த
நீறுசேர்தவக் குழாத்தினைநீளிடைக் கண்டே
யாறுசூடினர் திருமகனாரணைந் தாரொன்
றீறிலாததோர் மகிழ்ச்சியினால்விழுந் திறைஞ்ச.

(இ-ள்.) மாறில்வண்பெரு வணிகரும் தொண்டரும் = ஒப்பில்லாத வளம்பொருந்திய பெரிய சிவநேசச்செட்டியாருமவருடன் சென்ற திருவடியார்களும் ; மலர்ந்த நீறுசேர்தவக் குழாத்தினை நீளிடைக்கண்டே = திருமேனியின்கண் விளங்கிய விபூதியானது சேர்ந்த திருக்கூட்டங்களை நெடுந்தூரத்திற்கண்டு ; ஆறுசூடினர் திருமகனார் அணைந்தாரொன்று = கங்காநதியணிந்த சிவபெருமானது புதல்வராகிய ஆளுடையபிள்ளையாரெழுந்தருளினாரென்று ; ஈறிலாததோர் மகிழ்ச்சியினால் விழுந்து இறைஞ்ச=அளவுபடாத பெருமகிழ்ச்சியினால் நிலமுறவிழுந்து சாட்டாங்கமாய்வணங்க.—எ-று. ()

Koviloor Digital Library

காழிநாடருங் கதிர்மணிச்சிவிகைநின் றிழிந்து
சூழிரும்பெருந் தொண்டர்முன்றொழுதெழுந் தருளி
வாழிமாதவர் வணிகர்செய்திறஞ்சொலக் கேட்டே
யாழிசூழ்மயி லாபுரித்திருநக ரணைந்தார்.

(இ-ள்.) காழிநாடரும் கதிர்மணிச்சிவிகைநின்று இழிந்து=சீகாழித் தலைவராகிய ஆளுடையபிள்ளையாரு மொளிபொருந்திய திருமுத்துச்சிவிகை யினின்று மிறங்கி; சூழ் இரும்பெருந்தொண்டர்முன் தொழுது எழுந்தருளி= தம்மைச்சூழ்ந்தவரும் பெருமைபொருந்திய திருவடியார்முன்னே வணங்கி யெழுந்தருளி ; வாழிமாதவர் வணிகர் செய்திறம் சொலக்கேட்டே = சிவ நேசருடன்சென்ற மிக்க தவத்தையுடைய அடியார்கள் அவர்செய்தசெய லின் பகுதியைச் சொல்லக்கேட்டருளி; ஆழிசூழ்மயிலாபுரித் திருநகர் அணை ந்தார் = கடல்சூழ்ந்த திருமயிலாபுரியென்னுந் திருநகரத்தையடைந்தருளி னார்.—எ-று. வாழி-அசை. தோன்ற, கண்டணைந்தானொன் றிறைஞ்சக்காழி நாடர் சிவிகையிழிந்து முன்றொழுதெழுந்தருளிச் சொல்லக்கேட்டணைந்தா ரெனக்கூட்டுக. (௬௦௭௫)

அத்திறத்துமுன் னிகழ்ந்தது திருவுள்ளத் தடைத்துச்
சித்தமின்புறு சிவநேசர்தஞ்செயல் வாய்ப்பப்
பொய்த்தவச்சமண் சாக்கியர்புறத்துறை யழிய
வைத்தவப்பெருங் கருணைநோக்கான்மகிழ்ந் தருளி.

(இ-ள்.) அத்திறத்துமுன் நிகழ்ந்தது திரு உள்ளத்து அடைத்து= அவ்வடியர்கூறியவாறு முன்னடந்ததைத்தமது திருவுள்ளத்தின்கணடைத் தருளி ; சித்தம் இன்புறு சிவநேசர் தஞ்செயல்வாய்ப்ப = தமதுளத்தின்ப மிக்க சிவநேசச்செட்டியாரது செய்திவாய்க்கும்படிக்கும் ; பொய்த்தவச் சமண்சாக்கியர் புறத்துறை அழிய = பொய்யொழுக்கத்தையுடைய சமண ருஞ் சாக்கியருமாகிய புறமார்க்கங்களழியவும் ; வைத்த அப்பெருங்கருணை நோக்கால் மகிழ்ந்தருளி = திருவுள்ளத்தடைத்தவப் பெருங்கருணை வழித் தான திருநோக்கோடு மகிழ்கூர்ந்தருளி.—எ-று. (௬௦௭௬)

கங்கைவார்சடை யார்கபாலீச்சரத் தணைந்து
துங்கநீள்சுடர்க் கோபுரந்தொழுதுபுக் கருளி
மங்கைபங்கர்தங் கோயிலைவலங்கொண்டு வணங்கி
செங்கைசென்னிமேற் குவிந்திடத்திருமுன்பு சேர்ந்தார்.

(இ-ள்.) கங்கைவார்சடையார் கபாலீச்சரத்து அணைந்து=கங்காநதி தங்கிய நீண்டசடைமுடியையுடைய கபாலிசரெழுந்தருளிய கபாலீச்சரத் தையடைந்து ; துங்கநீள் சுடர்க்கோபுரந்தொழுது புக்கருளி=உயர்ந்தமிக்க

Koviloor Digital Library.

வொளிபொருந்திய திருக்கோபுரத்தைவணங்கி யுள்ளே புகுந்தருளி; மங்கை பங்கர் தங்கோயிலை வலங்கொண்டு வணங்கி=உமாதேவிபாகராகிய கபாலீச ரது திருக்கோயிலை வலமாகவந்து வணங்கி; செங்கைசென்னிமேற்குவித் திடத்திருமுன்புசேர்ந்தார் = சிவந்த திருக்கரங்கள் சிரமேற்குவியக் கபாலீ சர் திருமுன்படைந்தருளினார்.—எ-று. அத்திறத்தென்னுஞ் செய்யுளு மிச் செயுளுங்குளகம். பிள்ளையார் சேர்ந்தாரெனக்கூட்டுக. (க0எஎ)

தேவதேவனைத் திருக்கபாலீச்சரத் தமுதைப்
பாவைபாகனைப் பரிவுறுபண்பினிற் பரவி
மேவுகாதலின் விரும்பியவிரைவினால் விழுந்து
நாவின்வாய்மையிற் போற்றினர்ஞானசம்பந்தர்.

(இ-ள்.) தேவதேவனைத் திருக்கபாலீச்சரத்தமுதை=தேவர்க்கெல் லாந் தேவனைத் திருக்கபாலீச்சரத்திலெழுந்தருளிய அமுதொப்பானை; பா வை பாகனைப் பரிவுறுபண்பினிற் பரவி=உமாதேவிபாகனை யன்புமிக்ககுண த்தாற்றுதித்து; மேவுகாதலின் விரும்பிய விரைவினால் விழுந்து = பொருந் திய பெருவிருப்பால் திருவுள்ளத்திற்கொண்ட கருத்தின் வேகத்தாலும் விரைவால் நிலமுறவிழுந்து வணங்கி; நாவின்வாய்மையிற் போற்றினர் ஞா னசம்பந்தர் = நாவினால் மெய்ம்மையோடு திருப்பதிகத்தாற்றுதித்தருளினார் ஆளுடையபிள்ளையார்.—எ-று. (க0எஅ)

போற்றிமெய்யருட் டிறம்பெறுபரிவுடன் வணங்கி
நீற்றின்மேனியி னிறைமயிர்ப்புளகங்க ணெருங்கக்
கூற்றடர்த்தவர் கோயிலின்புறம்புபோந் தருளி
யாற்றுமிந்நருள் வணிகர்மேற்செலவருள் செய்வார்.

(இ-ள்.) போற்றி மெய்யருட்டிறம் பெறுபரிவுடன் வணங்கி=துதி த்துத் தாங்கருதிய மெய்ம்மையான திருவருளின் றிறத்தைப் பெறும் விருப் புடன் வணங்கியருளி; நீற்றின்மேனியில் நிறைமயிர்ப்புளகங்கள் நெருங்க= விபூதியையணிந்த திருமேனியில் நிறைந்த உரோமாங்கிதநெருங்கும்படி; கூற்றடர்த்தவர் கோயிலின் புறம்புபோந்தருளி = இயமனையுதைத்த கபாலீ சர் திருக்கோயிலின்புறம்பு சென்றருளி; ஆற்றும் இன்னருள் வணிகர்மேற் செல அருள்செய்வார் = அவர் கருதியவாறு செய்யும் திருவருள் அச்சிவ நேசரிடத்துச்செல்ல அருளிச்செய்வாராயினார்.—எ-று. ஞானசம்பந்த ரரு ளிச்செய்வாராயினாரெனக் கூட்டுக. (க0எக)

ஒருமையுய்த்தநல் லுணர்வினீருலகவ ரறிய
வருமையாற்பெறு மகளென்புநிறைத்தவக் குடத்தைப்
பெருமயானத்து நடம்புரிவார்பெருங் கோயிற்
றிருமதிட்புற வாய்தலிற்கொணர்கென்று செப்ப.

Koviloor Digital Library

(இ-ள்.) ஒருமை உய்த்த நல்லுணர்வினீர் = ஒருநெறிப்படுத்த நல்லறிவினையுடையீர்; உலகவர் அறிய அருமையாற்பெறுமகன் என்பு நிறைத்த அக்குடத்தை = உலகத்தாரறியும்படி நீர் அருமைப்பாட்டாற் பெற்றபுத்திரியினது எலும்பு நிறைத்த அந்தக்குடத்தை; பெருமயானத்து நடம்புரிவார் பெருங்கோயில் = பெரிய மசானத்தின்கணுடியருளுங் கபாலீசரது பெரிய திருக்கோயிலின்; திருமதிற்புறவாய்தலிற் கொணர்கென்று செப்ப = திருமதிலின் புறம்பு சந்நிதிவாயிலினேரே கொண்டு வருகவென்று கூறியருள.

அந்தமில்பெரு மகிழ்ச்சிபாலவனிமேற் பணிந்து
வந்துதந்திரு மனையினின்மேவியம் மருங்கு
கந்தவார்பொழிற் கன்னிமாடத்தினிற் புக்கு
வெந்தசாம்பலோ டென்புசேர்குடத்தைவே றெடுத்து.

(இ-ள்.) அந்தமில் பெருமகிழ்ச்சியால் அவனிமேற்பணிந்து = எண்ணிறந்த மிக்கமகிழ்ச்சியோடு பூமியின்மேல்வணங்கி; வந்துதந்திருமனையினின்மேவி = அங்கு நின்றுபோய்த் தமது திருமாளிகையினிடத்துச்சென்று; அம்மருங்கு கந்தவார்பொழிற் கன்னிமாடத்தினிற் புக்கு = அம்மனையருகில் வாசனைபொருந்திய நீண்ட சோலைசூழ்ந்த கன்னிமாடத்திற்போய்; வெந்தசாம்பலோடு என்புசேர்குடத்தை வேறெடுத்து = தீயில் வெந்தசாம்பலுடனெலும்புசேர்ந்த குடத்தை வேறாகவெடுத்து.—எ-று. (௪௦௮௧)

மூடுபன்மணிச் சிவிகையுட்பெய்துமுன் போத
மாடுசேடிய ரினம்புடைசூழ்ந்துவந் தணைய
வாடன்மேவினார் திருக்கபாலீச்சர மணைந்து
நீடுகோபுரத் தெதிர்மணிச்சிவிகையை நீக்கி.

(இ-ள்.) மூடுபன்மணிச் சிவிகையுட்பெய்து முன்போத = மூடிய பலமணிகளாற் செய்த சிவிகையினுள்ளே வைத்து அச்சிவிகைமுன்னே வரவும்; மாடுசேடியரினம்புடை சூழ்ந்துவந்து அணைய = அதனருகிற்றோழியர் கூட்டம் பாம்பிச்சூழ்ந்துவரவும்; ஆடல்மேவினார் திருக்கபாலீச்சரம் அணைந்து = நிருத்தத்தைச் செய்தருளு மிறைவரது திருக்கபாலீச்சரத்தைத் தானடைந்து; நீடுகோபுரத்து எதிர்மணிச்சிவிகையை நீக்கி = பெரிய திருக்கோபுரத்தெதிரே அக்குடத்தை யமைத்த சிவிகையை நீக்கியெடுத்து.—எ-று. (௪௦௮௨)

அங்கணார்த மதிமுகத்தினிலடி யுறைப்பாள்
மங்கையென்புசேர் குடத்தினைவைத்துமுன் வணங்கிப்
பொங்குசீர்புனற் புகலிகாவலர் புவனத்துத்
தங்கிவாழ்பவர்க் குறுதியாகிலமைசாதிப்பார்.

Koviloor Digital Library

(இ-ள்.) அங்கணுளர்தம் அபிமுகத்தினில் அடி உறைப்பால் மங்கையெ ன்பு சேர்குடத்தினைவைத்து முன்வணங்கி = கபாலீசரது சந்நிதிக்கெதிரி லடியுறைக்கும்படிப் பூம்பாவையினது என்படைத்த குடத்தைவைத்துப் பிள் ளையார் திருமுன்னேவணங்க ; பொங்குநீள்புனற் புகலிகாவலர் = பொலிவு பொருந்திய மிக்க நீர்சூழ்ந்த சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார் ; புவனத்துத் தங்கிவாழ்பவர்க்கு உறுதியாம் நிலைமைசாதிப்பார்=உலகத்தின் கண்பொருந்தி வாழ்கின்ற மனிதருக்குயிர்க்குறுதியாம் நிலைமையைச்சாதி ப்பாராயினர்.—எ-று. ஒருமையென்பதுமுதல் அங்கணுள ரென்றுமிச்செய் யுளிறுவாய் நான்குசெய்யுளுங் குளகம். (கoஅரு)

மாடமோங்கிய மயிலைமாநகருளார் மற்று
நாடுவாழ்பவர் நன்றியில்சமயத்தி னுள்ளோர்
மாடுசூழ்ந்துகாண்பதற்கு வந்தெய்தியே மலிய
நீடுதேவர்க ளேனையோர்விசும்பிடை நெருங்க.

(இ-ள்.) மாடம் ஓங்கிய மயிலைமாநகருளார்=மாடங்களுயர்ந்த திரு மயிலை மாநகரத்தி லுள்ளவர்களும் ; மற்றும் நாடுவாழ்பவர்=அவரன்றி நா டுகளில் வாழ்கின்றவர்களும் ; நன்றியில் சமயத்தினுள்ளோர் = நன்மையி ல்லாத புறச்சமயத்திலுள்ளவர்களும் ; மாடுசூழ்ந்து காண்பதற்குவந்து எய் தியேமலிய = அருகிற்சூழ்ந்து காணும்படி வந்தடைந்துசூழ ; நீடுதேவர்கள் ஏனையோர் விசும்பிடைநெருங்க=மிக்கதேவர்களும்விச்சாதரர் கின்னரர் முத லியோரு மாகாயத்தில் நெருக்கும்படிக்கு.—எ-று. (கoஅச)

தொண்டர்தம்பெருங் குழாம்புடைசூழ்தரத் தொல்லை
யண்டர்நாயகர் கோபுரவாயினே ரணைந்து
வண்டுவார்குழ லாளென்புநிறைந்தமட் குடத்தைக்
கண்டுதம்பிரான் கருணையின்பெருமையே கருதி.

(இ-ள்.) தொண்டர்தம் பெருங்குழாம் புடைசூழ்தர = அடியார்க ளது பெரிய திருக்கூட்டம் பக்கத்திற்சூழ; தொல்லை அண்டர்நாயகர் கோபுர வாயில் நேரணைந்து =பழமைபொருந்திய தேவர்க்கு முதல்வராகிய கபாலீசர துதிருக்கோபுரவாயிலின் முன்னடைந்து ; வண்டுவார்குழலாள் என்பு நிறை ந்த மட்குடத்தை = வண்டுகள்விழும் நீண்ட அளகத்தையுடைய பூம்பாவை யினது எலும்பு நிறைந்த மண்குடத்தை ; கண்டு தம்பிரான்கருணையின் பெ ருமையேகருதி = பார்த்தருளிச் சிவபெருமானது காருண்ணியத்தின்பெ ருமையைத் திருவுள்ளத்துக்கருதி.—எ-று. (கoஅரு)

இந்தமாநிலத் திறந்துளோரென்பினைப் பின்னு
நந்துஞான்னெறிப் படுத்திடநன்மையாந் தன்மை

Koviloor Digital Library

யந்தவென்பொடு தொடர்ச்சியாமெனவரு ளோக்காற்
சிந்துமங்கமங் குடையபூம்பாவைபேர் செப்பி.

(இ-ள்.) இந்தமாநிலத்து இறந்துளோர் என்பினை=இப்பெரிய நிலவுலகத்தி லிறந்தோ ரெலும்பை; பின்னும் நந்து நன்னெறிப்படுத்திட நன்மையாந்தன்மை = பின்பு முயர்ந்த நன்மார்க்கத்திற் சேர்க்க நன்மைவருந்தன்மை; அந்த என்பொடு தொடர்ச்சியாமென = அந்தவுடலினெலும்போ டவ்வுயிர்க்குள்ள சம்பந்தமாமென்று; அருள்நோக்காற் சிந்தும் அங்கம் அங்கு உடைய பூம்பாவை பேர்செப்பி = திருவருணோக்காற் சிதறுமெலும் பையக்குடத்தின் கண்ணுடைய பூம்பாவையினது நாமத்தைக்கூறி.—எ-று. பின்னென்றதனாற் சரீர சமஸ்காரத்தின்பின்னென்றும்; நன்னெறிப்படுத்த வென்றதனால் நல்ல தீர்த்தவிசேடந்தலவிசேடங்களிற் சேர்க்கவென்றும் பொருள்கொள்க. (௧0அ௬)

மண்ணினிற்பிறந் தார்பெறும்பயன்மதி சூடு
மண்ணலாரடி யார்தமையமுதுசெய் வித்தல்
கண்ணினாலவர் நல்விழாப்பொலிவுகண் டார்த
லுண்மையாமெனி லுலகர்முன்வருகென வுரைப்பார்.

(இ-ள்.) மண்ணினிற்பிறந்தார் பெறும்பயன் = நிலவுலகத்திற்பிறந்த மக்கள் அப்பிறப்பாற் பெறும்பயன்; மதிசூடும் அண்ணலார் அடியார்தமை அமுதுசெய்வித்தல் = மூன்றாம்பிறையைச்சூடிய சிவபெருமான் திருவடியாரைத் திருவமுதுசெய்வித்தலும்; கண்ணினால் அவர் நல்விழாப்பொலிவுகண்டு ஆர்தல் = கண்ணாலச் சிவபெருமானது நல்ல திருவிழாப்பொலிவைத் தரிசித்துக் களிப்படைதலும்(எனவிவ்விரண்டுமே); உண்மையாமெனில் உலகர் முன்வருகென உரைப்பார் = அவை உண்மைப்பொருளாமெனில் இவ்வுலகத்தார் முன்பு வரக்கடவாயென் றுரைப்பாராயினர்.—எ-று. வீடடைதற்குரிய புருடார்த்தமென்றும் பயன் மூன்றனுளறஞ் சிறந்தனவென்றும்; அப்பலவேறு வகைப்பட்ட அறத்துளிவ்விரண்டுமே சிறந்தனவென்பார், அண்ணலா ரடியார்தமை யமுதுசெய்வித்தலென்றும்; கண்ணினாலவர் நல்விழாப் பொலிவுகண்டார்தலென்றுங் கூறினரொன்றொன்றும். அவ்வாறு கூறவே பதிகமுதற்பாடலுள் உருத்திரபல் கணத்தார்க் கட்டிட்டலென்றும் பொருளும், இரண்டாம்பாடல்முதல் ஒன்பதாம்பாடலளவும் விழாப்பொருளாய் வருவனவும் அடங்குமாறுகாண்க. மாடமோங்கிய வென்பதுமுதல் இதனாறும் நான்குசெய்யுளுங் குளகம். (௧0அ௭)

மன்னுவார்சடை யாளமுன்றெழுது மட்டிட்ட
வென்னுநற்பதி கத்தினிற்போதியோ வென்று
மன்னமெய்த்திரு வாக்கெனுமமுதமவ் வங்கந்
துன்னவந்தவர் தருவமாய்த்தொக்கதக் குடத்துள்.

Koyiloor Digital Library

(இ-ள்.) மன்னுவார்சடையானை முன்தொழுது=நிலைபெற்ற நீண்ட சடை முடியையுடைய கபாலீசனை வணங்கி; மட்டிட்ட என்னும் நற்பதிகத்தினில்="மட்டிட்ட" என்னுமுதலையுடைய திருப்பதிகத்தில்; போதியோஎன்னும் அன்னமெய்த்திருவாக்கெனும் அமுதம்="போதியோ பூம்பாவாய்" எனவிறுதியில் முடித்த திருவாக்கென்னு மமுதமானது; துன்ன அவ்வங்கம் உருவமாய் வந்துவந்து அக்குடத்துள் தொக்கது = அடையுங்கா லவ்வெலும்பானது வடிவமாய் வந்துவந்து அக்குடத்துட்சேர்ந்தது.—எ-று. மட்டிட்டவென்னும் பதிகத்தில், மன்னுவார் சடையானைத்தொழுது போதியோவென்னுந்திருவாக்கெனு மமுதமெனக் கூட்டுக. இதனாற்பதிகமுதலு மீறுங்கபாலீசர்திருநாமமும் போந்தவாறு காண்க. ()

ஆனதன்மையி னத்திருப்பாட்டினி னடைவே
போனவாயுவும் வடிவமும்பொலிவொடு நிரம்பி
யேனையக்குடத் தடங்கிமுன்னிருந்தெழு வதன்முன்
ஞானபோனகர் பின்சமண்பாட்டினை நவில்வார்.

(இ-ள்.) ஆனதன்மையின் அத்திருப்பாட்டினின் அடைவே = அவ்வென்பு வடிவமாய் வருமுறையி லத்திருப்பதிகப்பாட்டின் முறையே; போனவாயுவும் = நீங்கியபிராணவாயுவும்; வடிவமும் பொலிவொடு நிரம்பி = அவயவங்களும் பொலிவுடனிரம்பப் பெற்று; ஏனை அக்குடத்து அடங்கி முன் இருந்து எழுவதன்முன்=மேற்கூறிய அக்குடத்தில் முன்னேயடங்கியிருந்து வரமுன்பு; ஞானபோனகர்பின் சமண்பாட்டினை நவில்வார் = சிவஞானத்தை யமுதுசெய்த ஆளுடையபிள்ளையார்பின் சமண்பாட்டை யருளிச்செய்வாராய்.—எ-று. போனவாயுவும் வடிவமும் பொலிவொடு நிரம்பி அத்திருப்பாட்டினிலான தன்மையினடைவே இருந்தெழுவதன் முன்னவில்வாராயெனக் கூட்டுக. (கoஎக)

தேற்றமில்சமண் சாக்கியத்திண்ணரிச் செய்கை
யேற்றதன்றென வெடுத்துரைப்பாரென்ற போது
கோற்றொடிச்செங்கை தோற்றிடக்குடமுடைந் தெழுவாள்
போற்றுதாமரைப் போதவிழ்ந்தெழுந்தனள் போன்றாள்.

(இ-ள்.) தேற்றமில்சமண் சாக்கியத்திண்ணர் = தெளிவில்லாத சமணர்களுஞ் சாக்கியரொன்றுங் குண்டர்களும்; இச்செய்கை ஏற்றதன்றென எடுத்து உரைப்பார் என்றபோது=இவர்செய்யும் இச்செய்கை செய்தற்குரியதன்றென வெடுத்துச்சொல்வாரென் றருளியபோது; கோற்றொடிச்செங்கை தோற்றிடக் குடம்உடைந்து எழுவாள் = கோலியவளையலையணிந்த சிவந்த கைகள் தோற்றும்படி யக்குடமுடைந்து எழுமப்பூம்பாவை; போற்றுதாமரைப்போது அவிழ்ந்தெழுந்தனள் போன்றாள் = யாவருந்துதிக்குந் தாமரைமல ரலர்ந்துஎழுந்த இலக்குமியை யொத்தாள்.—எ-று. (கoஎo)

Koviloor Digital Library

எடுத்தபாட்டினில் வடிவுபெற்றிருநான்கு திருப்பாட்
டடுத்தவம்முறைப் பன்னிரண்டாண்டள வணைந்து
தொடுத்தவெஞ்சமண் பாட்டினிற்றோன்றிடக் கண்டு
விடுத்தவேட்கையர் திருக்கடைக்காப்புமேல் விரித்தார்.

(இ-ள்.) எடுத்தபாட்டினில் வடிவுபெற்று = "மட்டிட்ட" எனவெடுத்த திருப்பாடலி லுருவுபெற்று; இருநான்குதிருப்பாட்டு அடுத்த அம்முறை பன்னிரண்டு ஆண்டு அளவு அணைந்து; =எட்டுத் திருப்பாட்டுச்சேர்ந்த அம்முறையிலே பன்னிரண்டு வயதளவடைந்து; தொடுத்த வெஞ்சமண் பாட்டினிற் றோன்றிடக்கண்டு=அதன்பின்பாடியருளிய கொடியசமண்பாட்டில் வெளிப்பட்டுவர; விடுத்தவேட்கையர் திருக்கடைக்காப்புமேல் விரித்தார் = வேட்கைநீங்கிய பிள்ளையார் திருக்கடைக்காப்பை மேலே அருளிச்செய்தார். எ-று. முன் மன்றுவார்சடையானைத்தொழுதமட்டிட்டவென்னும் பாட்டிலுருவமாய்த் தோக்கதெனக் கூறியவதனை, ஈண்டுமெடுத்த பாட்டிலென்றது. ஆண்டினளவு கூறுமுகத்தாற் கூறுதலிலறுவாதம்.

திருமயிலைப்பூம்பாவைதிருப்பதிகம்-பண்-சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.


மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச்சரமமர்ந்தா
னொட்டிட்ட பண்பி னுருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோபூம்பாவாய். (க)

மைப்பயந்த வொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பயந்த நீற்றான் கபாலீச்சர மமர்ந்தா
னைப்பசி யோணவிழாவுமருந்தவர்க
டுய்ப்பனவுங்காணாதே போதியோ பூம்பாவாய். (௨)

வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகிற்
றுளக்கில் கபாலீச்சரத்தான் றொல்கார்த்திகை நாட்
டளத்தேந் திளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய். (௩)

ஊர்திரைவேலை யுலாவுமுயர்மயிலைக்
கூர்தருவேல் வல்லார்கொற்றங்கொள்சேரிதனிற்
கார்தருசோலைக் கபாலீச்சரமமர்ந்தா
னார்திரைநாள்காணாதே போதியோபூம்பாவாய். (௪)

Koviloor Digital Library



திருஞான சப்பந்தசுவாமிகள் திருவருளைத் துதித்து திருப்பதிகமோதி எலும்பைப் பெண்ணாக்கியது.

Koviloor Digital Library

மைப்பூசு மொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசுநீற்றான் கபாலீச்சர மமர்ந்தா
னெய்ப்பூசு மொண்புழுக்க னேரிழையார் கொண்டாடுந்
தைப்பூசங் காணாதேபோதியோ பூம்பாவாய். (ரு)

மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலீச்சரமமர்ந்தா
னடலானே றூரு மடிக ளடிபரவி
நடமாடல் காணாதே போதியோ பூம்பாவாய். (சு)

மலிவிழாவீதி மடநல்லார் மாமயிலைக்
கலிவிழாக் கண்டான் கபாலீச்சர மமர்ந்தான்
பலிவிழாப் பாடல் செய்பங்குனி யுத்திரநா
ளொலிவிழாக் காணாதே போதியோ பூம்பாவாய். (எ)

தண்ணாவரக்கன்றோள் சாய்த்துகந்த தாளினான்
கண்ணார்மயிலைக் கபாலீச்சர மமர்ந்தான்
பண்ணார்பதினெண் கணங்கடம் மட்டமிநாட்
கண்ணாரக் காணாதே போதியோ பூம்பாவாய். (அ)

நற்றாமரைமலர் மேலான் முகனு நாரணனு
முற்றாங் குணர்கிலா மூர்த்தி திருவடியைக்
கற்றார்க ளேத்துங் கபாலீச்சர மமர்ந்தான்
பொற்றாப்புக் காணாதே போதியோ பூம்பாவாய். (கூ)

உரிஞ்சாய வாழ்க்கை யமணுடையைப் போர்க்கு
மிருஞ்சாக் கியர்க ளெடுத்துரைப்ப நாட்டிற்
கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச் சரமமர்ந்தான்
பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய். (க0)

கானமர் சோலைக் கபாலீச்சரமமர்ந்தான்
றேனமர்பூம்பாவைப் பாட்டாகச் செந்தமிழான்
ஞானசம் பந்த னலம்புகழ்ந்த பத்தும்வல்லார்
வானசம்பந்தத் தவரோடும் வாழ்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் கபாலீசர்-தேவியார்-கற்பகவல்லியம்மை.

Koviloor Digital Library

வேறு.

ஆங்கன மெழுந்துநின்ற வணங்கினை நோக்குவார்க
ளீங்கிது காணீரென்ன வற்புத மெய்தும்வேலை
பாங்குசூழ் தொண்டரானோ ரரகர வென்னப்பார்மே
லோங்கிய வோசையும்பர் நாட்டினை யுற்றதன்றே.

(இ-ள்.) ஆங்கனம் எழுந்து நின்ற அணங்கினை நோக்குவார்கள் = அவ்வாறு பன்னிரண்டாண்டு நிரம்பிக்குடத்தினின்று மெழுந்த திருமகள் போலும் பூம்பாவையைப் பார்க்கின்றவர்கள் ; ஈங்கு இதுகாணீரென்ன அற்புதம் எய்தும்வேலை = இவ்விடத் திதனைக் காண்பீராகவென்றதிசயமடையுங்காலத்து ; பாங்குசூழ் தொண்டரானோர் அரகர என்ன=பிள்ளையார் மருங்கிற்சூழ்ந்த அடியார்களரகரவென்று கூற ; பார்மேல் ஓங்கிய ஓசை உம்பர் நாட்டினை உற்றதன்றே = நிலவுலகத்திற் பரம்பியவோசையானது விண்ணுலகத்தையடைந்தது.—எ-று. (௧௦௬௨)


தேவரு முனிவர் தாமுந் திருவருட் சிறப்புநோக்கி
பூவரு விரைகொண்மாரி பொழிந்தன ரொழிந்தமண்ணோர்
யாவரு மிருந்தவண்ண மெம்பிரான் கருணையென்றே
மேவிய கைகளுச்சி மேற்குவித் திறைஞ்சிவீழ்ந்தார்.

(இ-ள்.) தேவரும் முனிவர்தாமும் திருவருட்சிறப்புநோக்கி=தேவர்களு முனிவர்களுஞ் சிவபெருமான் திருவருட் சிறப்பைப்பார்த்து ; பூவரு விரைகொள் மாரிபொழிந்தனர் = பூவாலாய வாசனைபொருந்திய மழையைச் சொரிந்தார்கள் ; ஒழிந்த மண்ணோர்யாவரும் = அவரல்லாத நிலவுலகத்திலுள்ளோர் யாவரும் ; இருந்தவண்ணம் எம்பிரான்கருணையென்றே= இவ்வாறுதலெமது கடவுளான சிவபெருமானது திருவருளென்று ; மேவிய கைகள் உச்சிமேற்குவித்து இறைஞ்சிவிழ்ந்தார் = பொருந்தியகைகளைச் சிரமேற்கூப்பி வணங்கிப் பூமியிற்பொருந்த விழுந்தார்கள்.—எ-று.(௧௦௬௩)

அங்கவ ளுருவங்காண்பா ரதிசய மிகவுமெய்திப்
பங்கமுற் றாரேபோன்றார் பாசம யத்திலுள்ளோ
ரெங்குள செய்கைநான்மற் றென்செய்த வாறிதென்று
சங்கையா முணர்வுகொள்ளுஞ் சமணர்தள்ளாடிவீழ்ந்தார்.


(இ-ள்.) அங்கவள் உருவம் காண்பார் பரசமயத்திலுள்ளோர் அதிசயம் மிகவும் எய்தி=அப்பூம்பாவையினது திருவுருவத்தைக்காணுகின்றவராகிய பவுத்தர்முதலிய புறச்சமயத்திலுள்ளோர் மிக்கவியப்படைந்து ; பங்கமுற்றாரேபோன்றார்=சேற்றில் அமிழ்ந்தினவரையொத்தார் ; எங்குளசெய்கைநா

Koviloor Digital Library



திருஞான சம்பந்தசுவாமிகள் எலும்பைப்பெண்ணாக்கிய அற்புதக்காட்சியைக்காண அக்
காலத்துள்ள சிவனடியார்கள் யாவரும்வந்து அங்கம்பூம்பாவையார் முதலானவர்களைத் தரிசித்தது.

Koviloor Digital Library



ஷை அற்புதத்தை திருமயிலையிலுள்ள அடியார்கள் தரிசித்தது.

Koviloor Digital Library

ன்மற்று என்செய்தவாறு இதென்று = இச்செய்கை எவ்விடத்துண்டா னது இது எவ்வாறு செய்யப்பட்டதென்று; சங்கையாம் உணர்வு கொள்ளும் சமணர் தள்ளாடி விழ்ந்தார் = ஐயவுணர்வடைந்த சமணர்கள் தள்ளாட்டமடைந்து (நிலத்தில் மயங்கி) விழுந்தார்கள்.—எ-று. அங்கவளுரு வங் காண்பாராகிய பரசமயத்திநுள்ளார் பங்கமுற்றூர் போன்றுரென்றுஞ் சமணர் தள்ளாடி விழ்ந்தாரென்றுங் கூட்டுக. பங்கமுற்றுன், தானமுழ்ந்திய சேற்றுனய விடர்கண்டு துயருற்றுக் கரையேறுதற் கெத்தனஞ்செய்தல் போலப் புறச்சமயிகள் தன்னிலேயி னிழிபுணர்ந்து முட்டுற்றுய்யும்நெறி நேடினராதலிற் பங்கமுற்றூர்போலென்றும்; தம்முன்னேராலுந் தம்மாலு மிதுகாறுஞ்செய்யப்படாத மிக்கவற்புத நோக்கிச்சங்கை யடைந்தாரென்பார், சங்கையா முணர்வுகொள்ளுஞ் சமணரென்றுங் கூறினர். (௧௦௬௪)

கன்னிதன் வனப்புத்தன்னைக் கண்களான் முடியக்காணூர்
முன்னுறக் கண்டார்க்கெல்லா மொய்கருங் குழலின்பார
மன்னிய வதனசெந்தா மரையினிற் கரியவண்டு
துன்னிய வொழுங்குதுற்ற சூழல்போ லிருண்டுதோன.

(இ-ள்.) கன்னிதன்வனப்புத் தன்னைக்கண்களால் முடியக்காணூர் = அப்பூம்பாவையினது அழகைத் தங்கண்களால் முழுதுங்காணூராய்; முன்னுறக்கண்டார்க்கெல்லாம் = முற்படப் பார்த்தவர்க்கெல்லாம்; மொய்கருங்குழலின் பாரம் = மொய்த்த கரிய அளகத்தின்பாரமானது; மன்னியவதன செந்தாமரையினில் = பொருந்திய முகமென்னுஞ் செந்தாமரைமலரில்; கரியவண்டுதுன்னிய ஒழுங்குதுற்ற சூழல்போல் இருண்டு தோன்ற = கருமைபொருந்திய வண்டுகளின் நெருங்கிய ஒழுங்கானது வரிசையாய்ச் சூழ்ந்திருந்தாற்போலக் கருநிறமடைந்து காணப்படவும்.—எ-று. குழலின் பாரந்தோன்ற வெனக்கூட்டுக. (௧௦௬௫)

பாங்கணி சுரும்புமொய்த்த பனிமல ரளகப்பந்தி
தேங்கம ழாரஞ்சேருந் திருநுதல் விளக்கநோக்கிற்
பூங்கொடிக் கழகின்மாரி பொழிந்திடப் புயற்கிழிட்ட
வாங்கிய வானவில்லின் வளரொளிவனப்புவாய்ப்ப.

(இ-ள்.) பாங்கணிசுரும்பு மொய்த்த பனிமலர் அளகப்பந்தி = அருகிலழகிய வண்டுகள்நெருங்கிய குளிர்ந்த மலர்களை முடித்த அளகபந்தியோடு; தேங்கமழ் ஆரஞ்சேரும் திருநுதல் விளக்கம்நோக்கில் = வாசனைகமழுந் திலகமணிந்த அழகிய நெற்றியினது பொலிவைப்பார்க்கில்; பூங்கொடிக்கு அழகின்மாரிபொழிந்திட=பூங்கொடிபோல் வாளுக்கழகினமழை பொழியும்படிக்கு; புயற்கிழ் இட்டவாங்கிய வானவில்லின் வளர் ஒளிவனப்புவாய்ப்ப=மேகந்தன் கிழிட்டவளைந்த இந்திரவில்லினது மிக்கவொளியின

Koviloor Digital Library

தழகையுடையவும்.—எ-று. நுதல்விளக்கம் வாய்ப்பவெனக்கூட்டுக. நோக்குமிடத்து அளகபந்தியோடு கூடியநுதல் விளக்கமானது, பூங்கொடிக்கு மழைபெய்யவிட்ட வானவிற்போல அளகமாகிய புயல் இப்பூங்கொடிபோல் வாளுக்கழகின் மழைபொழியும்படி யிட்ட வானவில்லின் வனப்பையுடைய வென்றவாறாயிற்று. (௧௦௧௬)

புருவமென் கொடிகள்பண்டு புரமெரித் தவர்தநெற்றி
யொருவிழி யெரியினீறா யருள்பெற வுளதாங்காமன்
செருவெழுந் தநுவதோன்றுஞ் சேமவில் லொன்றுமாக
விருபெருஞ் சிலைகண்முன்கொண் டெழுந்தனபோலவொப்ப.

(இ-ள்.) புருவமென்கொடிகள்=புருவமென்று மிருதுவானகொடிகள்; பண்டுபுரம் எரித்தவர் தம்நெற்றி ஒருவிழி எரியின் நீறாய் = முன்னு விலசுரர்களது முப்புரங்களையுமெரித்த சிவபெருமானது நெற்றியின்கணுள்ள வொருதழற்கண்ணெருப்பில் சாம்பராய்; அருள்பெற உளதாம் காமன்= அவர் திருவருளைப் பெறுங்கால் வடிவுபெற்றுத்தோன்று மன்மதனுடைய செருவெழும் தநுவதோன்றும் சேமவில் ஒன்றும்=செருவின்கண் பிடித்தெழாநின்றகருப்புவில்லொன்று மதற்குச் சேமவில்லாகிய பூவில்லொன்றுமாக; இருபெருஞ்சிலைகள் முன்கொண்டு எழுந்தனபோல ஒப்ப=இரண்டுபெரியவிற்கள்முன்னே தோன்றி யெழுந்தாற்போலத் தோன்ற.—எ-று. இருபெருஞ்சிலைகள்முன்கொண்டெழுந்தனபோலப் புருவமென்கொடிகளொப்ப எனக்கூட்டுக. சேமவில், கையிற்பிடித்தவில் இற்றழிப்பாதுகாப்பாய்ப்பிடிக்கவைக்கும்வில். மன்மதனுக்குக்கருப்புவில்லும் பூவில்லுமெனவில்லிரண்டுள்ளன. பிடித்தவில் கருப்புவில்லாகச் சேமவில் பூவில்லென்றொன்றும். முன்கொண்டெழுதல் = முற்பட்டெழுதல். (௧௦௧௭)

மண்ணிய மணியின்செய்ய வளரொளி மேனியாடன்
கண்ணிணை வனப்புக்காணிற் காமரு வதனத் திங்கட்
டண்ணொளி விரிந்தசோதி வெள்ளத்திற் றகையினீள
வொண்ணிறக் கரியசெய்ய கயலிரண் டொத்துலாவ.

(இ-ள்.) மண்ணியமணியின்செய்ய வளர் ஒளிமேனியாள்தன்=சிறப்பித்தமாணிக்கமணிபோலுஞ் சிவந்த மிக்கவொளிபொருந்திய மேனியையுடைய பூம்பாவையினது; கண் இணைவனப்புக்காணில்=இருகண்களினழகைக்காணுமிடத்து; காமருவதனத்திங்கள் தண்ணொளிவிரிந்தசோதிவெள்ளத்தில்= அழகியமுகமென்னுஞ் சந்திரனது குளிர்ச்சிமிக்கவொளிவெள்ளத்தில்; தகையில் நீள ஒண்ணிறக்கரிய செய்யகயல் இரண்டு ஒத்து உலாவ=பெருமையினையுடைய நீண்ட ஒள்ளிய நிறம்பொருந்திய கருமையுஞ் செம்மையும் விராய சேல்மீன்களிரண்டினையொத்துச் சஞ்சரிக்க.—எ-று. கண்ணிணைவனப்புச் சோதி வெள்ளத்தில் கயலிரண்டினையொத்துலாவவெனக்கூட்டுக. (௧௦௧௮)

Koviloor Digital Library

பணிவள ரல்குற்பாவை நாசியும் பவளவாயு
நணியபே ரொளியிற்றேன்று நலத்தினை நாடுவார்க்கு
மணிநிறக் கோபங்கண்டு மற்றது வவ்வத்தாழு
மணிநிறக் காமரூபி யணைவதா மழகுகாட்ட.

(இ-ள்.) பணிவளர் அல்குற்பாவை நாசியும் பவளவாயும்=பாம்பின் படம்போல வளர்ந்தகடிதடத்தையுடைய பூம்பாவையினது மூக்கும்பவளம் போலும் வாயும்; நணியபேர் ஒளியிற்றேன்றும் நலத்தினை நாடுவார்க்கு = பொருந்திய பேரொளியினால் விளங்குகின்ற அழகைப் பார்ப்பவர்களுக்கு; மணிநிறக்கோபம் கண்டு = மாணிக்கமணியி னிறத்தையுடைய இந்திரகோபத்தைப்பார்த்து; மற்றது வவ்வத்தாழும் = அவ் விந்திரகோபத்தைக் கவரும்படி தாழ்ந்த; அணிநிறக்காமரூபி அணைவதாம் அழகுகாட்ட=அழகியநிறம்பொருந்திய பச்சோந்தியானது அடைந்திருக்கு மழகினைக்காட்ட— எ-று. நாசியும் பவளவாயுங் காட்டவெனக்கூட்டுக. இந்திரகோபம்=தம்பலப்பூச்சி. ஒன்றனை வவ்வுங்கால், பச்சோந்திதாழ்ந்துவவ்வுமாதலில், தாழுங்காமரூபியென்றார். (௧௦௧௧)

இளமயி லனையசாய லேந்திழை குழைகொள்காது
வளமிகு வனப்பினாலும் வடிந்ததா ளுடைமையாலுங்
கிளரொளி மகரவேறு கெழுமிய தன்மையாலு
மளவில்சீ ரனங்கன்வென்றிக் கொடியிரண் டனையவாக.

(இ-ள்.) இளமயிலனையசாயல் ஏந்திழை குழைகொள்காது = இளமைபொருந்திய மயிலையொத்த தோற்றத்தையுமேந்திய ஆபரணத்தையுமுடைய பூம்பாவையினது குண்டலத்தையணிந்த காதானது; வளமிகுவனப்பினாலும் வடிந்ததாள் உடைமையாலும்=வளமிக்க அழகினாலும் வடிந்த காதுத்தண்டையுடைத்தாயிருத்தலினாலும்; கிளர் ஒளி மகர ஏறு கெழுமிய தன்மையாலும்=மிக்க வொளியினையுடைய சுறவேறானது பொருந்தியதன்மையினாலும்; அளவில் சீர் அனங்கன் வென்றிக்கொடி இரண்டு அனையவாக=அளவில்லாத சிறப்பினையுடைய மன்மதனது வெற்றிக்கொடியிரண்டையொத்தனவாக.—எ-று. காதுகொடியிரண்டனையவாகவெனக் கூட்டுக. வடிந்ததாளென்றுங்கால், கொடிபரத்தில் வடிந்த அடியையுடையதென்றும்; காதுபரத்தில் வடிந்த காதத்தண்டையுடையதென்றும்; மகரவேறென்றுங்கால், கொடிக்குச் சுறவேறென்றும்; காதுக்கு மகரகுண்டலமென்றுங்கொள்க. வனப்பு, இரண்டற்குமொக்கும். காதுத்தண்டாவது, மகரக்குழையிடும்படிப் பதப்படுத்திய காதினடி. (௧௧௦௦)

விற்பொலி தரளக்கோவை விளங்கிய கழுத்துமீது
பொற்பமை வதனமாகும் பதுமநன் னிதியம்பூப்ப

Koviloor Digital Library

நற்பெரும் பணிலமென்னு நன்னிதியொன்றுதோன்றி
யற்பொலி கண்டர்தந்த வருட்கடை யாளங்காட்ட.

(இ-ள்.) விற்பொலிதரளக்கோவை விளங்கியகழுத்து=ஒளிபொருந்திய முத்தமாலை பிரகாசிக்கின்ற கழுத்தானது நோக்குமிடத்து; மீதுபொற்பு அமைவதனமாகும் பதுமநன்னிதியம்பூப்ப = தன்மீதுவடிவமைந்தமுகமென்றும் நல்ல பதுமநிதியமலரும்படி ; நற்பெரும் பணிலமென்னும் நன்னிதி ஒன்றுதோன்றி=அதன்கீழ் நல்ல பெரிய சங்கநிதியென்னும் நல்லநிதியொன்று தோன்றப்பெற்று ; அற்பொலிகண்டர்தந்த அருட்கு அடையாளம் காட்ட=இருள்போலுங் கருநிறம்பொருந்திய கண்டத்தையுடைய சிவபிரான் கொடுத்த அருளுக்கோ ரடையாளத்தைக் காட்ட.—எ-று. கழுத்து காட்டவெனக்கூட்டுக. அற்பொலிகண்டர்தந்த அருட்கடையாளங்காட்ட என்றது, சிவபிரான் திருவருளாலிப் பூம்பாவையையுதிப்பித்தலால் பதுமநிதியுஞ் சங்கநிதியுமாகிய இருநிதிகளை முறையே முகமுங் கழுத்துமாய் இவளுக் கிருக்கச்செய்த அருளினது அடையாளத்தைக்காட்டவென்றபடி. (கக0க)

எரியவிழ் காந்தண்மென்பூத் தலைதொடுத் திசையவைத்துத்
திரள்பெறச் சுருக்குஞ்செச்சை மாலையோ தெரியின்வேறு
கருநெடுங் கயற்கண்மங்கை கைகளாற் காந்திவெள்ள
மருகிழிந் தனவோவென்னு மதிசயம் வடிவிற்றோன்ற.

(இ-ள்.) கருநெடும் கயற்கண்மங்கைவடிவில் = கருமைபொருந்திய நீண்ட கயல்போலுங் கண்ணையுடைய பூம்பாவையின் வடிவில்; கைகளால்= (நோக்குவார்க்குக்) கைகள் காரணமாக ; எரி அவிழ்காந்தள்மென் பூத்தலைதொடுத்து இசையவைத்து=எரிபோல அலர்ந்த மிருதுவான செங்காந்தட்பூவை நுனியின்கண்தொடுத்துப் பொருந்தவைத்து; திரள்பெறச் சுருக்கும் செச்சைமாலையோ = அதன்மேலுருட்சிபெறக்கட்டும்வெட்சிப்பூமாலையோ; வேறுதெரியின் = (அதுவன்றி) வேறாராயுங்கால் ; அருகுகாந்திவெள்ளம் இழிந்தனவோ என்றும் அதிசயம் தோன்ற = இருமருங்கிலு முடம்பின்கணுள்ள நிறத்தின்வெள்ளம் மிக்குவழிந்தனவோ என்றும் வியப்புத்தோன்றப்பட.—எ-று. கைகளால் அதிசயந்தோன்றப்படவெனக்கூட்டுக. (கக0௨)

ஏர்கெழு மார்பிற்பொங்கு மேந்திளங்கொங்கைநாகக்
கார்கெழுவிடத்தைநீக்குங் கவுணியர் தலைவர்நோக்கா
லார்திரு வருளிற்பூரித் தடங்கிய வமுதகும்பச்
சீர்கெழு முகிழைக்காட்டுஞ் செவ்வியிற் றிகழ்ந்துதோன்ற.

(இ-ள்.) ஏர்கெழுமார்பிற்பொங்கும் ஏந்து இளங்கொங்கை = அழகு பொருந்திய மார்பினிடத்துப் பொலிவடையுமேந்திய இளமைபொருந்திய

Koviloor Digital Library

முலைகள் ; நாகக்கார்கெழு விடத்தை நீக்கும் கவுணியர் தலைவர் நோக்கால்= பாம்பினது கருமைபொருந்திய விடத்தை நீக்கியருளும் ஆளுடையபிள்ளையாரது திருநோக்கால் ; ஆர் திரு அருளிற் பூரித்து அடங்கிய அமுதகும்பச் சீர் கெழுமுகிழை=பொருந்திய திருவருளிற் பூரிக்கப்பட்டுள்ளடங்கிய அமுதகும்பங்களின் வாயிலடைத்த சிறந்தகுமிழை ; காட்டும் செவ்வியிற்றிகழ்ந்துதோன்ற=காட்டுமழகால் விளங்கித்தோன்ற.—எ-று. கொங்கைதோன்றவெனக்கூட்டுக. முலைகள் பாலுடைமையில், திருவருளிற்பூரித்தென்றும்; பேதைப்பருவத்திலவை புலப்படாமையில், அடங்கிய அமுதகும்பமென்றும்; அப்பருவத்திற்குரிய வடிவம் புலப்பட, அதனது முகிழென்றுங்கூறினர். ஆபரணங்கள் மார்பிற்சேராது தான்சுமத்தலில் ஏந்திளங்கொங்கை என்றார்.

காமவே ளென்னும்வேட னுந்தியிற் கரந்துகொங்கை
நேமிபம் புட்கடம்மை யகப்பட நேரிதாய
தாமநீள் கண்ணிசேர்த்த சலாகைதூக் கியதேபோலும்
வாமமே கலைசூழ்வல்லி மருங்கின்மே லுரோமவல்லி.

(இ-ள்.) காமவேள் என்னும் வேடன் உந்தியிற்கரந்து = மன்மதனென்னும் வேடனானவன் உந்தியினுள்ளே மறைந்து=கொங்கை நேமி அம்புட்கள் தம்மை அகப்பட=தனங்களென்னுஞ் சக்கரவாகப் புட்களையகப்படுத்தும்பொருட்டு ; நேரிதாயதாம நீள்கண்ணிசேர்த்த சலாகை தூக்கியதேபோலும் ; நேரான கயிறுகளில் நீண்ட கண்ணிகளைக்கோத்த ஓர் சலாகையைத் தூக்கியதையொக்கும்; வாமமேகலைசூழ் வல்லிமருங்கின்மேல் உரோமவல்லி=அழகிய மேகலை சூழ்ந்த பூம்பாவையினது உந்திமேனின்றெழுமுரோமத்தினது ஒழுங்கு.—எ-று. நேரிதாய சலாகையென இயையும். தூக்கியதேபோலும் உரோமவல்லிதோன்ற என வெச்சச்சொற்பெய்து முடிக்க. உந்தியுமிடையாதலின் அதில் நின்று முரோமவல்லி யெழுதலானு மருங்கென்புழி உந்தியின்மேலெனப் பொருள்கூறப்பட்டது. இந்நூலாசிரியரும் ஈண்டு உந்தியிற் கரந்தென்றுகூறி, மருங்கின்மேலு ரோமவல்லியெனக் கூறுதலின். (கக0௪)

பிணியவிழ் மலர்மென்கூந்தற் பெண்ணமு தனையாள்செம்பொ
னணிவள ரல்குறங்க ளரவுசெய் பிழையாலஞ்சி
மணிகிளர் காஞ்சிசூழ்ந்து வனப்புடை யல்குலாகிப்
பணியுல காளுஞ்சேடன் பணம்விரித் தடைதல்காட்ட.

(இ-ள்.) பிணி அவிழ் மலர்மென்கூந்தற் பெண்ணமுதனையாள்= பிணிப்பு விட்டலர்ந்த பூக்களை முடித்த மிருதுவான அளகத்தையுடைய மகளிருள் அமுதத்தையொத்த பூம்பாவையினது; செம்பொன் அணிவளர் அல்குல்=சிவந்த பொன்போலு மழகுவளர்கின்ற நிதம்பமானது ; பணி உலகாளுஞ்சேடன்=பாதலத்தை யரசாளுமாதிசேடன் ; தங்கள் அரவுசெய்பிழை

Koviloor Digital Library

யால் அஞ்சி=தன் சத்ருமாகிய பாம்பு பூம்பாவைக்குச் செய்த குற்றத்தால் நாணச்சமுற்று ; மணிகிளர்காஞ்சி சூழ்ந்து=இரத்தினங்கள் விளங்குகின்ற எண்கோவை மணியாற் சூழப்பெற்று ; வனப்புடை அல்குலாகி = அழகினையுடைய அல்குல் ருபமாய் ; பணம்விரித்து அடைதல்காட்ட=படத்தைவிரித் தடைதலைக்காட்ட.—எ-று. சேடன் காட்டவெனக்கூட்டுக. (௧௧௦௫)

வருமயி லனையசாயன் மங்கைபொற் குறங்கின்மாமை
கரியிளம் பிடிக்கைவென்று கதலிமென் றண்டுகாட்ட
தெரிவுறு மவர்க்குமென்மைச் செழுமுழுந் தாளின்செவ்வி
புரிவுறு பொற்பக்தென்னப் பொலிந்தொளி விளங்கிப்பொங்க.

(இ-ள்.) வருமயிலனையசாயல் மங்கைபொற்குறங்கின் மாமை=வருகின்ற மயிலையொத்த தோற்றத்தையுடைய பூம்பாவையினது பொன்னிறமான தொடையினது நிறம் ; கரி இளம் பிடிக்கைவென்று = யானை யிளம் பிடியினது துதிக்கையைவென்று; கதலிமென் தண்டுகாட்ட=வாழையினது மிருதுவான இளந்தண்டையுவமிக்க ; தெரிவுறுமவர்க்கு மென்மைச் செழுமுழந்தாளின் செவ்வி = ஆராய்வார்க்கு மிருதுவான செழுமைபொருந்திய முழந்தாள்களினழகு; புரிவுறுபொற்பந்தென்னப் பொலிந்து ஒளிவிளங்கிப்பொங்க=கைசெய்த பொன்னலாய பந்துபோலப் பொலிவெய்தி யொளியோடு விளக்கமுற்றுச் சிறப்படைய.—எ-று. (௧௧௦௬)

பூவலர் நறுமென்கூந்தற் பொற்கொடி கணைக்கால்காம
னுவனா ழிகைபோலு மழகினின் மேன்மையெய்த
மேவிய செம்பொற்றட்டின் வனப்பினை மிதிட்டென்று
மோவியர்க் கெழுதவொண்ணுப் பரட்டொளி யொளிவுற்றோங்க.

(இ-ள்.) பூவலர் நறுமென்கூந்தற் பொற்கொடிகணைக்கால்=பூக்கள் மலர்ந்த நறுமணங்கமழு மிருதுவான அளகத்தையுடைய பூம்பாவையினது கணைக்காலானது ; காமன் ஆவநாழிகைபோலும் அழகினின்மேன்மை எய்த = மன்மதனது அம்புக்கூட்டைபொத்த அழகால்மேன்மையடைய; மேவியசெம்பொற்றட்டின் வனப்பினை மிதித்து இட்டு என்றும்=பொருந்திய செம்பொன்னலாய தராசுத்தட்டினழகைவென்று எப்பொழுதும்; ஓவியர்க்கு எழுதவொண்ணுப் பரடு ஒளி ஒளிவுற்று ஓங்க = சித்திரக்காரருக்கெழுதற்கரிய பரடுகளின்ஒளியானது விளங்கித்தோற்ற.—எ-று. கணைக்கால் மேன்மையெய்தவும் பரட்டொளியோங்கவுமெனக் கூட்டுக. (௧௧௦௭)

கற்பக மீன்றசெவ்விக் காமரு பவளச்சோதிப்
பொற்றிரள் வயிரப்பந்திப் பூந்துணர் மலர்ந்தபோலு
கற்பகம் பொலிவுகாட்ட ஞாலமும் விசும்புமெல்லா
மற்புத மெய்தத்தோன்றி யழகினுக் கணியாய்நின்றாள்.

Koviloor Digital Library

(இ-ள்.) கற்பகம் ஈன்ற செவ்விக்காமருபவளச்சோதி = கற்பகதரு வீன்ற இளமைபொருந்திய அழகிய பவள வண்ணத்தில்; பொற்றிரள்வயி ரப்பத்திப் பூந்துணர் மலர்ந்தபோலும் = பொன்றிரட்சியோடு வயிரவொ ழுங்குகளையுடைய பூங்கொத்துகள் மலர்ந்தாற்போலும்; நற்பதம் பொலிவு காட்ட = நல்ல பாதங்கள் தோற்றத்தைக்காட்ட; ஞாலமும் விசும்பும் எல் லாம்=நிலவுலகமும் விண்ணுலகமுமாகிய வெல்லா வுலகமும்; அற்புதமெய் தத்தோன்றி அழகினுக்கு அணியாய் நின்றாள் = ஆச்சரியமடையும்படி வெ ளிப்பட்டு அழகுக் கழகாய் நின்றாள்.—எ-று. பொலிவுகாட்டத்தோன்றி நின்றாளெனக்கூட்டுக. கன்னிதன்வனப்பென்பது முதல் இச்செய்யுளிறு வாய் பதினொன்றுங் குளகம். எச்சங்களை முடித்துக்கொள்க. கால்கள் சிவப் பும் பொன்மையும் நகங்களிடத்து வெண்மையு முண்மையின், பவளச்சோ திப் பொற்றிரள் வயிரப்பத்திப் பூந்துணர் மலர்ந்தபோலு மென்றார். (கக0அ)

எண்ணிலாண் டெய்தும்வேதாப் படைத்தவ ளெழிலின்வெள்ள
நண்ணுநான் முகத்தாற்கண்டா னவளினு நல்லாடன்பாற்
புண்ணியப் பதினாறாண்டு பேர்பெறும் புகலிவேந்தர்
கண்ணுதல் கருணைவெள்ள மாயிர முகத்தாற்கண்டார்.

(இ-ள்.) எண்ணில் ஆண்டு எய்தும் வேதா = அளவிறந்த ஆண்டை யடையும் பிரமனானவன்; படைத்து அவள் எழிலின் வெள்ளம் = தான் படைத்ததிலோத்தமையென்னும் பெண்ணினது அழகின் வெள்ளத்தை; நண் ணும் நான்முகத்தாற் கண்டான்=தன்னிடத்துப் பொருந்திய நான்குமுகங்க ளாற் பார்த்தான்; அவளினும் நல்லாள் தன்பால் = அப்பெண்ணினும் நல்ல இப்பூம்பாவையினிடத்து; புண்ணியப்பதினாறு ஆண்டுபேர் பெறும்புகலி வேந்தர்=புண்ணியவடிவமாய்ப் பதினாறாண்டெனப் பேர்பெற்ற ஆளுடைய பிள்ளையார்; கண்ணுதல் கருணைவெள்ளம் ஆயிரம் முகத்தாற்கண்டார்=சிவ பெருமானது திருவருள் வெள்ளத்தையனேகமுகத்தாற் பார்த்தருளினார்.— எ-று. மானிடவருடமொன்று தேவர்க்கிராப்பகல். அப்பகல் முந்நூற்றறு பதுகொண்டது தேவர்களுக்கோர்வருடம். அப்படி தேவவருடம் பன்னி ராயிரங்கொண்டது ஒருதேவயுகம். இத்தேவயுகம் இரண்டாயிரங்கொண்டது பிரமனுக்கொருநாள். இவ்வாறான ஓர் நாளுடையன் பிரமனாதலில் அவனாயுள் வருட மெண்ணிறந்தமையில், எண்ணிலாண்டெய்தும் வேதா என்றும்; அப் பிரமன்தான் படைத்ததிலோத்தமையென்னும் பெண்ணினழகை யிச்சித் துப்பார்த்தலில், எழிலின் வெள்ள நண்ணு நான்முகத்தாற்கண்டானென்றும்; இப்பூம்பாவை யத்திலோத்தமையினுஞ் சிறந்தாளென்பது தோன்ற, அவ ளினு நல்லாளென்றும்; அப்பிரமனது வயோவிருத்தமும் பிள்ளையாரது உணர்வு விருத்தமுந்தோன்ற, பதினாறாண்டு பேர்பெறுமென்றும்; அழகின் வெள்ளம் நோக்கப் பிரமனது நான்முகமுமமையும், கருணைவெள்ளம் நோக் கத் திருவருட்குறி சிவநோக்காலன்றி யமையாதென்பார், கருணைவெள்ளமா யிரமுகத்தாற் கண்டாரென்றுங்கூறினர். (கக0க)

Koviloor Digital Library

வேறு.

இன்னணம் விளங்கிய வேர்கொள் சாயலா
டன்னைமுன் கன்னுறக் கண்ட தாதையார்
பொன்னணி மாளிகைப் புகலி வேந்தர்தாள்
சென்னியிற் பொருந்தமுன் சென்று வீழ்ந்தனர்.

(இ-ள்.) இன்னணம் விளங்கிய ஏர்கொள்சாயலாள் தன்னை=இவ்வாறு பிரகாசிக்கின்ற அழகுபொருந்திய மயிலின்சாயலையுடைய அப்பூம்பாவையை; முன்கன்னுறக்கண்ட தாதையார்=கன்முன்னுறக்கண்டசிவநேசச்செட்டியார்; பொன்னணிமாளிகைப் புகலிவேந்தர்தாள் = பொன்னாலழகு விளங்கிய மாளிகைகள் பொருந்திய சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார் திருவடிகள்; சென்னியிற்பொருந்த முன்சென்று வீழ்ந்தனர்= தமது சிரசிற்பொருந்தும் படிதிருமுன்னேசென்று நிலமுறவிழுந்து வணங்கினர்.—எ-று. (ககக0)

அணங்கிறு மேம்படு மன்ன மன்னவள்
பணம்புரி யரவணாப் பரமர் முன்பணிந்
திணங்கிய முகின்மதிற் சண்பை யேந்தலை
வணங்கியே நின்றனண் மண்ணுளோர்தொழ.

(இ-ள்.) அணங்கிறுமேம்படும் அன்னமன்னவள் = சீதேவியிறுமேம்பட்ட அன்னம்போலும் நடையையுடைய அப்பூம்பாவையானவள்; பணம்புரி அரவு அணைப்பரமர் முன்பணிந்து = படம்பொருந்திய அரவைப்பிணித்த திருவரையையுடைய கபாலீசர் திருமுன்னே வணங்கி; முகில் இணங்கிய மதிற்சண்பை ஏந்தலை=மேகங்கள்பொருந்திய மதில்சூழ்ந்த சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையாரை; வணங்கியே நின்றனள் மண்ணுளோர் தொழ=நிலமுறவணங்கி நின்றாள் நிலவுலகத்தார் வணங்கும்படி.—எ-று. ()

சீர்கெழு சிவநேசர் தம்மை முன்னமே
கார்கெழு சோலைசூழ் காழிமன்னவ
ரேர்கெழு சிறப்பினும் மகளைக்கொண்டினிப்
பார்கெழு மணையினிற் படர்மி னென்றலும்.

(இ-ள்) சீர்கெழுசிவநேசர் தம்மைமுன்னமே = சிறப்புப்பொருந்திய சிவநேசச்செட்டியாரை முற்பட்டே; கார்கெழுசோலைசூழ் காழிமன்னவர் = மேகங்கள் தவழுஞ் சோலைசூழ்ந்த சீகாழித்தலைவரான ஆளுடையபிள்ளையார்; ஏர்கெழுசிறப்பின் நம்மகளைக்கொண்டு = அழகு மிக்கசிறப்பினையுடைய உமது புத்திரியை யழைத்துக்கொண்டு; இனிப்பார்கெழு மனை

Koviloor Digital Library

யினிற் படர்மின் என்றலும் = இனிப்பூமியின்கண்ணுள்ள உமது வீட்டிற் செல்லுமென்றருளிச் செய்யவும்.—எ-று. காழிமன்னவர் நும்மகளை முன்னமே கொண்டு மனையிற் படர்மினென்றலுமெனக் கூட்டுக. (ககக௨)

பெருகிய வருள்பெறும் வணிகர்பிள்ளையார்
மருவுதா மரையடி வணங்கிப் போற்றிநின்
றருமையா லடியனேன் பெற்றபாவையைத்
திருமணம் புணர்ந்தருள் செய்யுமென்றலும்.

(இ-ள்.) பெருகிய அருள்பெறும் வணிகர் = பிள்ளையாரது மிக்க திருவருளைப்பெற்ற சிவநேசச்செட்டியார்; பிள்ளையார்மருவு தாமரைஅடி வணங்கிப் போற்றி நின்று = ஆளுடையபிள்ளையாரது தாமரைமலர்போலுந் திருவடிகளைவணங்கித் துதித்து நின்று; அருமையால் அடியனேன் பெற்ற பாவையை = அருமைப்பாட்டா லடியேன்பெற்ற இப்பூம்பாவையை; திரு மணம் புணர்ந்து அருள்செய்யும் என்றலும் = திருக்கலியாணஞ்செய் தடியேனுக்கருள்செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்கவும்.—எ-று. வணிகர் அடிவணங்கிப் போற்றிநின்று மணம்புணர்ந் தருள்செய்யுமென்றலு மெனக்கூட்டுக. (கககஙு)

மற்றவர் தமக்குவண் புகலி வாணர்நீர்
பெற்றபெண் விடத்தினால் வீந்த பின்னையான்
கற்றைவார் சடையவர் கருணை காண்வர
உற்பவிப் பித்தலா லுரைத காதெனா.

(இ-ள்.) மற்றவர்தமக்கு வண்புகலிவாணர்=அச்சிவநேசச் செட்டியாருக்கு வளம்பொருந்திய சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார்; நீர்பெற்ற பெண்விடத்தினால் வீந்தபின்னை = நீர்பெற்ற புத்திரிவிடத்தாலிறந்தபின்பு; யான் கற்றைவார்சடையவர் கருணை காண்வர = நான்கூட்டமான நீண்ட சடைமுடியையுடைய கபாலீசரது திருவருளின் பெருமையை (உலகத்தார்) காணும்படி; உற்பவிப்பித்தலால் உரைதகாதெனா= குடத்தில் நின்று முதிப்பித்தலால் நீர்கூறும் அவ்வுரை தகாதென்று மறுக்க.—எ-று. (கககச)

வணிகருஞ் சுற்றமு மயங்கிப் பிள்ளையா
ரணிமல ரடியில்விழ்ந் தரற்ற வாங்கவர்
தணிவினீள் பெருந்துயர் தணிய வேதனாற்
றுணிவினை யருள்செய்தார் தூய வாய்மையார்.

(இ-ள்.) வணிகரும் சுற்றமும் மயங்கி = சிவநேசச்செட்டியாரும் அவர்சுற்றத்தாரு மவ்வார்த்தைகேட்டு மனமயங்கி; பிள்ளையார் அணிமலர் அடியில் விழ்ந்து அரற்ற = ஆளுடைய பிள்ளையாரது அழகிய தாமரைமலர்

Koviloor Digital Library

போலுந் திருவடியில் விழுந்தழ; அங்கவர் தணியில் நீள்பெருந்துயர் தணிய=அவர்களது அடங்காத பெருந்துயர மடங்கும்படி; வேதநூற்று ணிவினை அருள்செய்தார் தூயவாய்மையார் = வேதநூலின் சம்மதத்தை யவர்க்கருளிச் செய்தார் அழுக்கற்ற மெய்ம்மொழியையுடைய ஆளுடைய பிள்ளையார்.—எ-று தூயவாய்மையா ரருள்செய்தாரெனக் கூட்டுக. சீர் கெழு என்பதுமுதலிது காறும் நான்குசெய்யுளுங்குளகம். வேதநூற்றுணி வாவது. புத்திரியாம் தன்மையையுடைய மகளினை விவாகஞ்செய்தல் பொ ருந்தாதென மறுத்தல். பூம்பாவையைத்திருவருளால் பிள்ளையார் உதிப்பி த்தாராதலில் பிள்ளையார்க்கு புத்திரியாயினளென்க.

தென்றனீ தியின்முறை கேட்ட சீர்க்கிளை
வெள்ளமும் வணிகரும் வேட்கை நீத்திடப்
பள்ளநீர்ச் செலவெனப் பரமர்கோயிலி
னுள்ளெழுந்தருளின ருடைய பிள்ளையார்.

(இ-ள்.) தென்றும் நீதியின் முறைகேட்ட = தெளிவான அறத்தின் முறையைப் பிள்ளையாரால் கேள்விப்பட்ட; சீர்க்கிளைவெள்ளமும் = சிறந்த சுற்றத்தாரது கூட்டமும்; வணிகரும் சிவநேசச்செட்டியாரும்; வேட்கை நீத்திட = பிள்ளையார்க்குப் பூம்பாவையைத் திருமணஞ்செய்து கொடுக் கும் விருப்பம் நீங்க; பள்ளம் நீர்ச்செலவென = பள்ளத்தில் விழும் நீரின் வேகம்போல; பரமர்கோயிலின் உள் எழுந்தருளினர் உடையபிள்ளையார் = சபாபிசரது திருக்கோயிலினுள் ளெழுந்தருளினர் ஆளுடையபிள்ளையார்.எ-று.

பான்மையால் வணிகரும் பாவை தன்மண
மேனையோர்க் கிசைகிலே னென்று கொண்டுபோய்
வானுயர் கன்னிமா டத்து வைத்தனர்
தேனமர் கோதையுஞ் சிவத்தை மேவினாள்.

(இ-ள்.) பான்மையால் வணிகரும் பாவைதன்மணம் = முறைமை யால் சிவநேசச்செட்டியாரும் பூம்பாவையினுடைய விவாகத்தை; ஏனை யோர்க்கு இசைகிலேன் என்று கொண்டுபோய் = வேறு சுற்றத்தார்க்குச் செய்யவுடன் படேனென்று (அப்புத்திரியை) அழைத்துக்கொண்டு சென்று; வான்உயர் கன்னிமாடத்து வைத்தனர் = விண்ணுலகளாவுயர்ந்த கன்னிமா டத்தின்கண் வைத்தார்; தேன் அமர்கோதையும் சிவத்தைமேவினாள் = தேன்பொருந்திய மாலையையணிந்த அப்பூம்பாவையும் சிலநாட்சென்று சிவ பெருமானையடைந்தாள்.—எ-று. (௧௧௧௭)

வேறு.

தேவர்பிரா னமர்ந்தருளுந் திருக்கபா லீச்சரத்து
மேவியஞானத்தலைவர் விரிஞ்சன்முத லெவ்வுயிர்க்கும்

Koviloor Digital Library

காவலனார்பெருங்கருணை கைதந்த படியென்று
பாவலர்செந் தமிழ்பாடிப் பன்முறையும் பணிந்தெழுவார்.

(இ-ள்) தேவர்பிரான் அமர்ந்தருளும் திருக்கபாலீச்சரத்து = தேவர்கட்குத் தலைவரான சிவபெருமானெழுந்தருளிய திருக்கபாலீச்சரமென்னு மாலயத்து ; மேவியஞானத்தலைவர் = பொருந்திய சிவஞானத்தலைவராகிய ஆளுடையபிள்ளையார் ; விரிஞ்சன் முதல் எவ்வுயிர்க்கும் காவலனார் பெருங் கருணை கைதந்தபடியென்று = பிரமன்முதலெவ்வுயிர்களுக்கு முதல்வராகிய கபாலீசரது பேரருளானது செய்தபடி யிவ்வாறென்று; பாவலர் செந்தமிழ் பாடிப் பன்முறையும் பணிந்து எழுவார் = பாவால் மலர்ந்தசெந்தமிழ்ப்பதிகம்பாடிப் பலதரமும் வணங்கி யெழுவாராயினர்.—எ-று. (கககஅ)

தொழுதுபுறம் போந்தருளித் தொண்டர்குழாம் புடைசூழப்
பழுதில்புகழ்த் திருமயிலைப் பதியிலமர்ந் தருளுநாண்
முழுதுலகுந் தருமிறைவர் முதற்றானம் பலவிறைஞ்ச
வழுதுலகை வாழ்வித்தா ரப்பதியின் மருங்ககல்வார்.

(இ-ள்.) தொழுதுபுறம் போந்தருளித்தொண்டர்குழாம்புடைசூழ= வணங்கி ஆலயத்தின் புறம்பேயெழுந்தருளித் திருவடியார்குழாமருகிற்சூழ ; பழுதில் புகழ்த்திருமயிலைப் பதியில் அமர்ந்தருளும் நாள்=குற்றமற்ற புகழையுடைய திருமயிலையென்னுந் திருப்பதியி லெழுந்தருளியிருக்கும் நாளில் ; முழுது உலகும் தரும் இறைவர் முதற்றானம்பல இறைஞ்ச=எல்லாவுலகங்களையும் படைக்குஞ்சிவபெருமானெழுந்தருளிய முதன்மைபொருந்திய திருப்பதிகள் பலவற்றையும் வணங்க; அழுது உலகைவாழ்வித்தார் அப்பதியின் மருங்கு அகல்வார் = தாமழுதுலகத்தையுய்யச்செய்த ஆளுடையபிள்ளையாரத்திருமயிலையினின்று புறம்பே நீங்குவாராயினர்.—எ-று. (கககக)

திருத்தொண்ட ரங்குள்ளார் விடைகொள்ளச் சிவநேசர்
வருத்தமகன் றிடமதுர மொழியருளி விடைகொடுத்து
நிருத்தருறை பிறபதிகள் வணங்கிப்போய் நிறைகாத
லருத்தியொடுந் திருவான்மி யூர்பணிய வணைவுற்றார்.

(இ-ள்.) அங்குள்ளார் திருத்தொண்டர் விடைகொள்ள = அங்குள்ளாராகிய திருவடியார்கள் விடைபெற்றுக்கொள்ளவும் ; சிவநேசர் வருத்தம் அகன்றிடமதுரமொழி அருளி விடைகொடுத்து = சிவநேசச்செட்டியாரது வருத்தம் நீங்க அவர்க்கு இனியவார்த்தையையருளிச்செய்து விடைகொடுத்தருளியும்; நிருத்தர் உறைபிறபதிகள் வணங்கிப்போய்=சிவபெருமானெழுந்தருளும் பிறதிருப்பதிகளைத் தொழுதுபோய் ; நிறைகாதல் அருத்தியொடும் திருவான்மியூர் பணிய அணைவுற்றார்=நிறைந்த பெருவிருப்பாலாய அன்புடன் திருவான்மியூரைவணங்க அடைந்தருளினர்.—எ-று. (ககஉ0)

Koviloor Digital Library

திருவான்மி யூர்மன்னுந் திருத்தொண்டர் சிறப்பெதிர
வருவார்மங் கலவணிகண் மறுகுநிரைத் தெதிர்கொள்ள
அருகாக விழிந்தருளி யவர்வணங்கத் தொழுதன்பு
தருவார்தங் கோயின்மணித் தடநெடுங்கோ புரஞ்சார்ந்தார்.

(இ-ள்.) திருவான்மியூர் மன்னும் திருத்தொண்டர் சிறப்பு எதிர வருவார் = திருவான்மியூரில் வாழுந் திருவடியார்கள் சிறப்போடெதிர்கொள்ள வருவாராய்; மங்கல அணிகள் மறுகு நிரைத்து எதிர்கொள்ள=மங்கலமான அலங்காரங்களை வீதியிலலங்கரித்து எதிர்கொண்டுவர; அருகாக இழிந்தருளி அவர் வணங்கத்தொழுது = அப்பதியின் மருங்கு திருச்சிவிகையினின்று மிறங்கியருளியவர் தம்மை வணங்கத் தாமுமெதிர்தொழுது; அன்பு தருவார் தங்கோயில் மணித்தட நெடுங்கோபுரஞ்சார்ந்தார் = பேரன்பைத் தமக்குக் கொடுக்கும் வான்மீசரது கோயிலின்கணழகிய விசாலமான நீண்ட கோபுரத்தையடைந்தருளினார்.—எ-று. (௧௧௨௧)

மிக்குயர்ந்த கோபுரத்தை வணங்கிவியன் திருமுன்றில்
புக்கருளிக் கோயிலினைப் புடைவலங்கொண் டுள்ளணைந்து
கொக்கிறகு மதிக்கொழுந்துங் குளிர்புனலு மொளிர்கின்ற
செக்கர்நிகர் சடைமுடியார் சேவடியின் கீழ்த்தாழ்ந்தார்.

(இ-ள்.) மிக்கு உயர்ந்த கோபுரத்தைவணங்கி = மேற்கொண்டுயர்ந்த திருக்கோபுரத்தைவணங்கி; வியன்றிருமுன்றில் புக்கருளி=இடமகன்ற திருமுற்றத்தையடைந்தருளி; கோயிலினைப் புடைவலங்கொண்டு உள் அணைந்து = திருக்கோயிலினை மருங்கில் வலமாகவந்துள்ளேபுகுந்து; கொக்கு இறகும் மதிக்கொழுந்தும் குளிர் புனலும் ஒளிர்கின்ற=கொக்கிறகுஞ் சந்திரகலையுங்குளிர்ந்த கங்காநதியும் விளங்குகின்ற; செக்கர் நிகர்சடை முடியார் சேவடியின் கீழ்த்தாழ்ந்தார்=செக்கர்போலுஞ் சடைமுடியையுடைய அச்சிவபெருமானது திருவடியின் கீழ்ப்பணிந்தருளினார்.—எ-று. (௧௧௨௨)

தாழ்ந்துபல முறைபணிந்து தம்பிரான் முன்னின்று
வாழ்ந்துகளி வரப்பிறவி மருந்தான பெருந்தகையைச்
சூழ்ந்தவிசைத் திருப்பதிகச் சொன்மாலை விளைவுணாயால்
வீழ்ந்தபெருங் காதலுடன் சாத்திமிக வின்புற்றார்.

(இ-ள்.) பலமுறை தாழ்ந்துபணிந்து = பலகால் நிலமுற விழுந்து வணங்கி; தம்பிரான் முன்னின்று=வான்மீசர் திருமுன்னின்று; வாழ்ந்து களிவர=அனந்த வாழ்வடைந்து களிப்புண்டாக; பிறவி மருந்தான பெருந்தகையை = பிறவிக்கு மருந்தாயுள்ள பெருமையிற் சிறந்தோரை; சூழ்ந்த இசைத்திருப்பதிகச்சொல் மாலை விளைவுணாயால் = இசையோடு பொருந்திய திருப்பதிகமென்னும் பாமாலையை விளைவுணாயினல்; வீழ்ந்த பெருங்காத

Koviloor Digital Library

லுடன் சாத்தி மிக இன்புற்ருர் = சிவபெருமானையடைந்த பெருவிருப்புடன் அணிந்து மிகவு மின்பமடைந்தார்.—எ-று. (ககஉரு)

திருவான்மியூர்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

கரையுலாங்கட லிற்பொலிசங்கம் வெள்ளிப்பிவன்
றிரையுலாங்கழி மீனுகளுந்திரு வான்மியூ
ருரையுலாம்பொரு ளாயுலகாளுடையீர்சொலீர்
வரையுலாமட மாதுடனாகிய மாண்பதே.

மாதொர்கூறுடை நற்றவனைத்திரு வான்மியூ
ராதியெம்பெரு மானருள்செய்யவினாவுரை
போதியென்றெழு காழியுள்ஞானசம் பந்தன்சொல்
நீதியானினை வார்நெடுவானுல காள்வரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-மருந்தீசர். தேவியார்-திரிபுரசுந்தரி.

பரவிவரு மானந்த நிறைந்ததுளி கண்பனிப்ப
விரவுமயிர்ப் புளகங்கள் மிசைவிளங்கப் புறத்தணைவுற்
றரவநெடுந் திரைவேலை யணிவான்மி யூரதனுட்
சிரபுரத்துப் புரவலனுர் சிலநாளங் கினிதமர்ந்தார்.

(இ-ள்.) பரவிவரும் ஆனந்தம் நிறைந்த துளிகண்பனிப்ப=பரந்துவருகின்ற நிறைவான ஆனந்தக்கண்ணீர் கண்களினின்றுந் துளிப்ப; விரவுமயிர்ப்புளகங்கள் மிசைவிளங்க = நெருங்கிய உரோமாங்கிதங்கள் திருமேனியிற் பிரகாசிக்க; புறத்து அணைவுற்று=புறம்பேசென்றருளி; அரவநெடுந்திரைவேலை அணிவான்மியூர் அதனுள் = ஒலிக்கும் நீண்ட அலைகளையுடைய கடற்கரையினணித்தான திருவான்மியூரினிடத்து; சிரபுரத்துப் புரவலனுர் சில நாள் அங்கு இனிது அமர்ந்தார்=சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார் சிலநாளவ்விடத்தினிதாக எழுந்தருளியிருந்தார்.—எ-று. (ககஉச)

அங்கணமர் வாருலகா ளுடையாரை யருந்தமிழின்
பொங்குமிசைப் பதிகங்கள் பலபோற்றிப் போந்தருளிக்
கங்கையணி மணிமுடியார் பதிபலவுங் கலந்திறைஞ்சிச்
செங்கண்விடைக் கொடியார்தம் மிடைச்சுரத்தைச் சேர்வுற்ருர்.

(இ-ள்.) அங்கண் அமர்வார் உலகாளுடையாரை = அவ்விடத்தமர்ந்தருளு மாளுடையபிள்ளையார் உலகங்களை யாளுந் தன்மையையுடைய வான்

Koviloor Digital Library

பிசனை ; அருந்தமிழின் பொங்கும் இசைப்பதிகங்கள் பலபோற்றிப்போந் தருளி = அரியதமிழாகிய மிக்க இசையையுடைய திருப்பதிகங்கள் பலவற்றைத் துதித்தங்கு நின்று மெழுந்தருளி ; கங்கையணிமணிமுடியார் பதிபலவும் கலந்து இறைஞ்சி = கங்காநதியையணிந்த அழகிய திருமுடியையுடைய சிவபெருமானெழுந்தருளிய திருப்பதிகள் பலவற்றையுமடைந்து வணங்கி ; செங்கண்விடைக்கொடியார் தம் இடைச்சுரத்தைச் சேர்வுற்றார்=சிவந்தகண்ணையுடைய இடபக்கொடியையுயர்த்தருளிய இடைச்சுரநாதரது திருவிடைச்சுரமென்னுந் திருப்பதியையடைந்தருளினார்.—எ-று. (௧௧௨௫)

சென்னியிள மதியணிந்தார் மருவுதிரு விடைச்சுரத்து
மன்னுதிருத் தொண்டர்குழா மெதிர்கொள்ள வந்தருளி
நன்னெடுங்கோ புரமிறைஞ்சி யுட்புகுந்து நற்கோயி
றன்னைவலங் கொண்டணைந்தார் தம்பிரான் றிருமுன்பு.

(இ-ள்.) சென்னி இளமதி அணிந்தார் மருவு திரு இடைச்சுரத்து= திருமுடியின்கணிளம்பிறையையணிந்த சிவபெருமானெழுந்தருளிய திருவிடைச்சுரமென்னுந் திருப்பதியில் ; மன்றுதிருத்தொண்டர்குழாம் எதிர்கொள்ளவந்தருளி = வாழுந் திருவடியாரது கூட்டமெதிர்கொள்ளும்படி யங்கு சென்றருளி ; நன்னெடுங் கோபுரம் இறைஞ்சி உள்புகுந்து = நல்ல நீண்ட திருக்கோபுரத்தைவணங்கி யுள்ளேபுகுந்து ; நற்கோயில் தன்னை வலங்கொண்டு அணைந்தார் தம்பிரான் திருமுன்பு = நல்ல திருக்கோயிலை வலமாக வந்து அடைந்தார் சிவபெருமானது திருமுன்பு—எ-று. (௧௧௨௬)

கண்டபொழு தேகலந்த காதலாற் கைதலைமேற்
கொண்டுதல முறவிழுந்து குலவுபெரு மகிழ்ச்சியுடன்
மண்டியபே ரன்புருகி மயிர்முகிழ்ப்ப வணங்கியெழுந்
தண்டர்பிரான் றிருமேனி வண்ணங்கண் டதிசயித்தார்.

(இ-ள்.) கண்டபொழுதே கலந்தகாதலாற் கைதலைமேற்கொண்டு= இடைச்சுரநாதரைத் தரிசித்தபொழுதே தம்மிடத்துப் பொருந்திய பெருவிருப்பாற் திருக்கரங்களைச் சிரமேற்கூப்பி; தலமுறவிழுந்து = நிலமுறச் சாட்டாங்கமாய் வணங்கி ; குலவுபெரு மகிழ்ச்சியுடன்=விளங்கு மிக்க மகிழ்ச்சியுடன் ; மண்டியபேரன்பு உருகி மயிர்முகிழ்ப்பவணங்கி எழுந்து=நெருங்கிய பேரன்போடு மனமுருகி உரோமமுகிழ்ப்பத்தொழுதெழுந்து ; அண்டர் பிரான் திருமேனிவண்ணம் கண்டு அதிசயித்தார் = தேவர்பிரானாகிய இடைச்சுரநாதரது திருமேனி நிறத்தைக்கண்டதிசயமடைந்தார்.—எ-று. ()

இருந்தவிடைச் சுரமேவு மிவர்வண்ண மென்னேயென்
றருந்தமிழின் றிருப்பதிகத் தலர்மாலை கொடுபரவித்
திருந்துமனங் களிசிறந்து திருக்கடைக்காப் புச்சாத்திப்
பெருந்தனிவாழ் வினைப்பெற்றார் பேருலகின் பேறுனார்.

Koviloor Digital Library

(இ-ள்.) இடைச்சுரம் இருந்த இவர்மேவும் வண்ணம் என்னே என்று = இடைச்சுரத்தின்கணெழுந்தருளியிருந்த இவரடைந்த வண்ண மென்னவென்று; அருந்தமிழின் திருப்பதிகத்து அலர்மாலை கொடுபரவி = அரியதமிழானுய திருப்பதிக மலர்மாலையாற் றுதித்து; திருந்து மனங்கரைந்து உருகத் திருக்கடைக்காப்புச் சாத்தி = திருத்தமான மனங்கரைந்துரு கும்வண்ணந் திருக்கடைக்காப்பைச் சாத்தியருளி; பெருந்தனிவாழ் வினைப்பெற்றுர் பேருலகின்பேருனர் = பெரிய ஒப்பற்றவாழ்வை யடைந்தார் பெரியவுலகங்களுக்கும் பெரும்பேருக அவதரித்த பிள்ளையார்.—எ-று. ()

திருவிடைச்சுரம்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

வரிவள ரவிரொளி யரவரை தாழ வார்சடை முடிமிசை வளர்மதிசூடிக், கரிவளர் தருகழற் கால்வல னேந்திக் கனலெரி யாடுவர் காடரங்காக, விரிவளர் தருபொழி லிளமயிலால வெண்ணிறத் தருவிக டிண்ணெனவீழு, மெரிவள ரினமணி புனமணிச் சாரலிடைச் சுரமேவிய விவர்வணமென்னே.

மடைச்சுரமறிவன வாழையுங் கயலு மருவிய வயறனில் வரும்புனற் காழிச், சடைச்சுரத் துறைவதோர் பிறையுடை யண்ணல் சரிதைகள் பரவிநின் றுருகுசம் பந்தன், புடைச்சுரத் தருவரைப் பூக்கமழ் சாரற் புணர்மட நடையவர் புடையிடை யார்ந்த, விடைச்சுர மேத்தியவிசையொடு பாட லிவைசொலவல்லவர் பிணியிலர் தாமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-இடைச்சுரநாதர். தேவியார்-இமயமடக்கொடியம்மை.

நிறைந்தார்வ வேட்கையினு னின்றிறைஞ்சிப் புறம்போந்தங்
குறைந்தருளிப் பணிகின்ரு ருமைபாக ரருள்பெற்றுச்
சிறந்ததிருத் தொண்டருட னெழுந்தருளிச் செந்துருதி
யறைந்தளிகள் பயில்சாரற் றிருக்கழுக்குன் றினையணைந்தார்.

(இ-ள்.) நிறைந்து ஆராவேட்கையினுல் நின்று இறைஞ்சிப் புறம் போந்து அங்கு உறைந்தருளி = நிறைவடைந்து அடங்காக்காதலாற் றிருமுன்னின்று வணங்கிப் புறம்பே யெழுந்தருளி யத்திருப்பதியில் வசித்து; பணிகின்ருர் உமைபாகர் அருள்பெற்று=(நாடோறும்) வணங்குகின்ற ஆளுடையபிள்ளையார் இடைச்சுர நாதரது திருவருளைப் பெற்று; சிறந்ததிருத் தொண்டருடன் எழுந்தருளி=சிறப்படைந்த திருவடியாருட னங்கு நின்று மெழுந்தருளி; செந்துருதி அறைந்து அளிகள் பயில்சாரற் றிருக்கழுக்குன்

Koviloor Digital Library

நிலை யடைந்தார் = செந்துருதி யென்னும் பண்ணைவண்டுகள் பாடிச் சஞ்ச ரிக்கின்ற சாரலையுடைய திருக்கழுக்குன்றமென்னுந் திருப்பதியை யடைந்த ருளினார்.—எ-று. செந்துருதி, காலத்தாற் பொருப்பன்னுபிறும் நிலத் தாற் குறிஞ்சிக் குரித்தாதலிற் செந்துருதியறைந்தளிகளென்றார். (கஉகூ)

சென்றணையும் பொழுதின்கட் டிருத்தொண்ட ரெதிர்கொள்ளப்
பொன்றிகழு மணிச்சிவிகை யிழிந்தருளி யுடன்போந்து
மன்றல்விரா நறுஞ்சோலைத் திருமலையை வலங்கொண்டு
மின்றயங்குஞ் சடையாரை விருப்பினுடன் பணிகின்றார்.

(இ-ள்.) சென்று அணையும்பொழுதின்கண் திருத்தொண்டர் எதிர் கொள்ள = அத்திருப்பதியை யடைந்தருளுங்காலத்தி லங்குள்ள திருத்தொ ண்டர்கள் எதிர்கொண்டுவர; பொன்திகழும் மணிச்சிவிகை இழிந்தருளி உடன்போந்து=அழகு விளங்குகின்ற திருமுத்துச்சிவிகையினின்று மிறங்கி யருளி யுடனேசென்று; மன்றல் விரைநறுஞ்சோலைத் திருமலையை வலங் கொண்டு = வாசனைகமழுகின்ற நல்லசோலைசூழ்ந்த அக்கழுக்குன்றத்தை வலமாகவந்து; மினதயங்கும் சடையாரை விருப்பினுடன் பணிகின்றார் = மின்போலவிளங்குகு சடையையுடைய வேதகிரீசரை விருப்பினுடன் வண ங்குகின்று ராயினார்.—எ-று. (ககஙo)

திருக்கழுக்குன் றத்தமர்ந்த செங்கனகத் தனிக்குன்றைப்
பெருக்கவளர் காதலினாற் பணிந்தெழுந்து போராத
கருத்தினுடன் காதல்செயுங் கோயில்கழுக் குன்றென்று
திருப்பதிகம் புனைந்தருளிச் சிந்தைநிறை மகிழ்வுற்றார்.

(இ-ள்.) திருக்கழுக்குன்றத்து அமர்ந்ததனிச்செங்கனகக் குன்றை= திருக்கழுக்குன்றின்கணெழுந்தருளிய ஒப்பற்ற சிவந்தபொன்னிறமான மலை யை; பெருக்கவளர் காதலினாற் பணிந்து எழுந்து = மிகவும் வளர்கின்ற காதலோடு வணங்கியெழுந்து; போராத கருத்தினுடன் காதல்செயுங் கோ யில்கழுக்குன்று என்று = நீங்காத திருவுள்ளக்கருத்தோடு "காதல்செய்யுங் கோயில் கழுக்குன்று" என்று இறுதியில் முடித்து; திருப்பதிகம் புனைந்த ருளிச் சிந்தைநிறை மகிழ்வுற்றார் = திருப்பதிகத்தைப் பாடியருளித் திருவு ள்ளத்தில் நிறைந்த மகிழ்ச்சியடைந்தார்.—எ-று. (ககஙக)

திருக்கழுக்குன்றம்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

தோடுடையா னொருகாதிற் றூய குழைதாழ
வேடுடையான் றலைகல னாக விரந்துண்ணு
நாடுடையா னள்ளிரு ளேம நடமாடுங்
காடுடையான் காதல்செய் கோயில் கழுக்குன்றே.

Koyiloor Digital Library

கண்ணுதலான் காதல்செய் கோயில் கழுக்குன்றை
நண்ணியசீர் ஞானசம்பந்தன் றமிழ்மாலை
பண்ணியல்பாற் பாடிய பத்து மிவைவல்லார்
புண்ணியராய் விண்ணவ ரோடும் புகுவாரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-வேதகிரீசர். தேவியார்-பெண்ணினல்லாளம்மை.

இன்புற்றங் கமர்ந்தருளி யீறில்பெருந் தொண்டருடன்
மின்பெற்ற வேணியின ரருள்பெற்றுப் போந்தருளி
யென்புற்ற வணிமார்ப னெல்லையிலா வாட்சிபுரிந்
தன்புற்று மகிழ்ந்ததிரு வச்சிறுபாக் கத்தணைந்தார்.

(இ-ள்.) இன்புற்று அங்கு அமர்ந்தருளி=இன்பமடைந்து அத்திருப்பதியிலெழுந்தருளி; ஈறில் பெருந்தொண்டருடன் = எண்ணிறந்த பெருமைபொருந்திய திருவடியாருடன்; மின்பெற்ற வேணியினர் அருள்பெற்றுப் போந்தருளி = மின்போல விளங்குகின்ற சடைமுடியையுடைய வேதகிரீசரது திருவருளைப்பெற்று அங்குநின்று மெழுந்தருளி; என்பு அணிவுற்றமார்பர் எல்லையிலா ஆட்சிபுரிந்து = என்பு மாலையாகிய ஆபரணத்தை யணிந்த பாக்கபுரேசர் அடங்காத கருணையைத் திருப்பதியில்வைத்து; அன்பு உற்று மகிழ்ந்த திரு அச்சிறு பாக்கத்து அணைந்தார் = விருப்படைந்து மகிழ்ந்து வீற்றிருக்கின்ற திரு அச்சிறுபாக்கமென்னுந் திருப்பதியை யடைந்தருளினார்.

ஆதிமுதல் வரைவணங்கி யாட்சிகொண்டா ரெனமொழியுங்
கோதில்திருப் பதிகவிசை குலாவியபா டலிற்போற்றி
மாதவத்து முனிவருடன் வணங்கி மகிழ்ந்தின்புற்று
தீதகற்றுஞ் செய்கையினர் சிலநாளங் கமர்ந்தருளி.

(இ-ள்.) ஆதிமுதல்வரை வணங்கி=எப்பொருளுக்குங் காரணரான அப்பாக்கபுரீசரை வணங்கி; ஆட்சிகொண்டாரென மொழியும் = "ஆட்சிகொண்டார்" எனச்செய்யுளிறுதியில் மொழிந்தருளும்; கோதில்திருப்பதிக இசைகுலாவிய பாடலிற்போற்றி = குற்றமற்ற திருப்பதிகத்தி லிசைபொருந்திய செய்யுட்களாற் றுதித்து; மாதவத்து முனிவருடன் வணங்கி மகிழ்ந்து இன்புற்று = பெரியதவத்தையுடைய திருவடியார்களோடு (அத்திருப்பதியை நாடோறுந்தொழுது) மகிழ்ந்தின்பமடைந்து; தீது அகற்றுஞ்செய்கையினர் சில்நாள் அங்கு அமர்ந்தருளி=குற்ற நீங்குஞ் செய்கையையுடைய ஆளுடையபிள்ளையார் சிலநா ளவ்விடத்தெழுந்தருளி.—எ-று. (ககஙங)

Koviloor Digital Library

திருஅச்சிறுபாக்கம்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பொன்றிரண்டன்ன புரிசடைபுரளப் பொருகடற்பவளமொ டழனிறம்புரையக், குன்றிரண்டன்ன தோளுடையகலங் குலாயவெண்ணூலொடு கொழும்பொடியணிவர், மின்றிரண்டன்ன நுண்ணிடையரிவை மெல்லியலாளையோர் பாகமாப்பேணி, யன்றிரண்டுருவ மாயவெம்மடிகளச் சிறுபாக்கம தாட்சிகொண்டாரே.

மைச்செறிகுவளை தவளைவாய்நிறைய மதுமலர்ப்பொய்கையிற் புதுமலர்கிழியப், பச்சுறவெறிவயல் வெறிகமழ்காழிப் பதியவரதிபதிகவுணியர்பெருமான், கைச்சிறுமறியவன் கழலலாற்பேணுக் கருத்துடைஞானசம் பந்தனறமிழ்கொண், டச்சிறுபாக்கத் தடிகளையேத்துமன் புடையடியவ ரருவினையிலரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - பாக்கபுரேசர். தேவியார்-அதிசுந்தரமின்னாளம்மை.

ஏறணிந்த வெல்கொடியா ரினிதமர்ந்த பதிபிறவு
நீறணிந்த தொண்டருட னெதிர்கொள்ள நேர்ந்திறைஞ்சி
வேறுபல நதிகானங் கடந்தருளி விரிசடையி
லாறணிந்தார் மகிழ்ந்ததிரு வரசிலியை வந்தடைந்தார்.

(இ-ள்.) ஏறு அணிந்த வெல்கொடியார் இனிது அமர்ந்த பதிபிறவும் = இடபத்தை யெழுதிய வெற்றிக்கொடியையுடைய சிவபெருமானினிதாக வெழுந்தருளிய பிறதிருப்பதிகளையும்; நீறு அணிந்த தொண்டருடன் எதிர்கொள்ள நேர்ந்து இறைஞ்சி=விபூதியையணிந்த திருவடியார்கள் எதிர்கொண்டுவர அத்திருப்பதிகளை நேரே வணங்கி; வேறு பல நதிகானங்கடந்தருளி=பல வேறு நதிகளையுங் காட்டையுங்கடந்தருளி; விரிசடையில் ஆறு அணிந்தார் மகிழ்ந்த திரு அரசிலியை வந்தடைந்தார்=விரிந்த சடையின்கண் கங்காநதியையணிந்த அரசிலிநாதரெழுந்தருளிய அரசிலியென்னுந் திருப்பதியை வந்தடைந்தருளினார்.—எ-று. (௧௧௬௪)

அரசிலியை யமர்ந்தருளு மங்கணரை சைப்பணிந்து
பரசியெழு திருப்புறவார் பனங்காட்டூர் முதலாய
விரைசெய்மலர்க் கொன்றையினார் மேவுபல பதிவணங்கித்
திரைசெய்நெடுங் கடலுடுத்த திருத்தில்லை நகரணைந்தார்.

(இ-ள்.) அரசிலியை அமர்ந்தருளும் அங்கண் அரசைப்பணிந்து= அரசிலியென்னுந் திருப்பதியை விரும்பி வீற்றிருந்தருளு மழகிய காருண்

Koviloor Digital Library

ணியத்தையுடைய சிவபெருமானை வணங்கி; பரசியெழு திருப்புறவார் பனங்காட்டூர் முதலாய=அடியார்கள் துதித்தெழாநின்றதிருப்புறவார்பனங் காட்டூர் முதலிய; விரைசெய்மலர்க்கொன்றையினார் மேவுபல பதிவணங்கி= வாசனை கமழுமலர்ந்த கொன்றைப்பூமாலையையுடைய சிவபெருமானெழுந் தருளிய பலதிருப்பதிகளையுந்தொழுது; திரைசெய்நெடுங்கடல் உடுத்த திருத்தில்லை நகர் அணைந்தார் = அலையெறிகின்ற நீண்ட கடல் சூழ்ந்த சிதம்பர மென்னுந் திருப்பதியையடைந்தருளினார்.—எ-று. (கசுடு)

எல்லையில்ஞா னத்தலைவ ரெழுந்தருள வெதிர்கொள்வார்
தில்லையில்வா ழந்தணர்மெய்த் திருத்தொண்டர் சிறப்பினொடு
மல்கியெதிர் பணிந்திறைஞ்ச மணிமுத்தின் சிவிகையிழிந்
தல்குபெருங் காதலுட னஞ்சலிசெய் தணைகின்றார்

(இ-ள்.) எல்லையில்ஞானத்தலைவர் எழுந்தருள எதிர்கொள்வார்=அளவிறந்த சிவஞானச்செல்வராகிய ஆளுடையபிள்ளையார் எழுந்தருளுங்காலவரை யெதிர்கொண்டுவருபவராய்; தில்லையில் வாழ் அந்தணர் மெய்த்திருத்தொண்டர்=தில்லைவாழந்தணரும் மெய்ம்மைபொருந்தியதிருவடியார்களும்; சிறப்பினொடு மல்கி எதிர்பணிந்து இறைஞ்ச=சிறப்புடனெருங்கித் திருமுன் நிலமுறத்தாழ்ந்துவணங்க; மணிமுத்தின் சிவிகை இழிந்து=அழகிய திருமுத்தின் சிவிகையினின்று மிறங்கியருளி; அல்குபெருங்காதலுடன் அஞ்சலி செய்து அணைகின்றார்=பொருந்திய பெருவிருப்போடு அஞ்சலிசெய்தவருடன் செல்வாராயினார்.—எ-று. (கசுசு)

திருவெல்லை யினைப்பணிந்து சென்றணைவார் சேண்விசும்பை
மருவிவிளங் கொளிதழைக்கும் வடதிசைவா யிலைவணங்கி
யுருகுபெருங் காதலுட னுட்புகுந்து மறையினொலி
பெருகிவளர் மணிமாடப் பெருந்திருவீ தியையணைந்தார்.

(இ-ள்.) திருவெல்லை யினைப்பணிந்து சென்றுஅணைவார்=திருத்தில்லையின் திருவெல்லையைவணங்கி வந்தணையும் ஆளுடையபிள்ளையார்; சேண் விசும்பைமருவி விளங்கு ஒளிதழைக்கும் வடதிசைவாயிலைவணங்கி=உயர்ந்தவிண்ணுலகையடைந்து விளங்குகின்ற காந்தியை வளர்க்கும் வடக்கின் கண்ணுள்ள திருக்கோபுரவாயிலைத்தொழுது; உருகுபெருங்காதலுடன் உட்புகுந்து=மனமுருகுதற்குக் காரணமான பெருவிருப்புட னுள்ளேபுகுந்து; மறையின் ஒலி பெருகிவளர் மணிமாடப்பெருந்திருவீதியை அணைந்தார்= வேதங்களினோசை மிக்குவளர்கின்ற அழகிய பெரியதிருமாடவீதியை யடைந்தருளினார்.—எ-று. (கசுஎ)

நலமலியுந் திருவீதி பணிந்தெழுந்து நற்றவர்தங்
குலநிறைந்த திருவாயில் குவித்தமலர்ச் செங்கையொடு

Koviloor Digital Library

தலமுறமுன்றாழ்ந் தெய்தித் தமனியமா ளிகைமருங்கு
வலமுறவந் தோங்கியபே ரம்பலத்தை வணங்கினார்.

(இ-ள்.) நலமலியுந் திருவீதி பணிந்து எழுந்து=நன்மைமிக்க திருவீதியை வணங்கியெழுந்து; நற்றவர்தங்குலம் நிறைந்ததிருவாயில் குவித்த மலர்ச்செங்கையொடு=நல்ல அடியார்குழாங்கள் நிறைந்திருக்குந் திருவாயிலிற் சிரசிற்கூப்பிய தாமரைமலர்போலுஞ் சிவந்த திருக்கரங்களுடன்; தலமுறமுன் தாழ்ந்து எய்தி=நிலமுறத்திருமுன்னே வணங்கிச்சென்று; தமனியமாளிகை மருங்குவலமுறவந்து=கனகசபையின் பக்கலில் வலமாகவந்து; ஓங்கியபேரம்பலத்தைவணங்கினார்=உயர்ந்தபேரம்பலத்தை வணங்கியருளினார்.—எ-று. (ககருஅ)

வணங்கிமிக மனமகிழ்ந்து மாலயனுந் தொழும்பூத
கணங்கண்மிடை திருவாயில் பணிந்தெழுந்து கண்களிப்ப
வணங்குதனிக் கண்டருளா வம்பலத்தே யாடுகின்ற
குணங்கடந்த தனிக்கூத்தர் பெருங்கூத்துக் கும்பிடுவார்.

(இ-ள்.) வணங்கி மிகமனமகிழ்ந்து=உயர்ந்தபேரம்பலத்தைவணங்கியருளினார்; மால் அயனும் தொழும் பூதகணங்கள் மிடைதிருவாயில் பணிந்து எழுந்து=திருமால் பிரமனுந் தொழத்தக்க பூதகணநாதர்கள் நெருங்கிய திருவனுக்கன்திருவாயிலைவணங்கி யெழுந்து; கண்களிப்ப அணங்குதனிக்கண்டருள=கண்களிக்கும்படிச் சிவகாமியார் தாமே யனவரதமுந் தரிசிக்கும்படி; அம்பலத்தே ஆடுகின்ற=கனகசபையின்கண் ஆனந்த நிருத்தஞ்செய்கின்ற; குணங்கடந்த தனிக்கூத்தர் பெருங்கூத்துக் கும்பிடுவார்=குணாதீதமான ஒப்பற்ற நடேசப்பிரானது பெரிய திருநடனத்தைத் தரிசிப்பாராய்.—எ-று. பணிந்தெழுந்து அணங்குகண்டருள ஆடுகின்ற கூத்தர் கூத்தைக்கண்களிக்கக் கும்பிடுவாராயெனக்கூட்டுக. குணங்கடந்த வென்னும் பெயரெச்சம் இடைநிலை. (ககஙக)

தொண்டர்மனம் பிரியாத திருப்படியைத் தொழுதிறைஞ்சி
மண்டுபெருங் காதலினா னோக்கிமுக மலர்ந்தெழுவா
ரண்டமெலா நிறைந்தெழுந்த வானந்தத் துள்ளலைந்து
கண்டபே ரின்பத்தின் கரையில்லா நிலையணைந்தார்.

(இ-ள்.) தொண்டர்மனம் பிரியாத திருப்படியைத் தொழுது இறைஞ்சி=திருவடியார்களது திருவுள்ளத்தை நீங்காதிருக்கின்ற பஞ்சாக்கரத் திருப்படியை நிலமுறவணங்கித் தொழுது; மண்டுபெருங்காதலினால் நோக்கி முகம் மலர்ந்து எழுவார்=நெருங்கிய பெருவிருப்பொடு நடேசப்பிரானைப் பார்த்துத் திருமுகமலர்ந்து எழுகின்ற பிள்ளையார்; அண்டமெலாம் நிறைந்து

Koviloor Digital Library

எழுந்த ஆனந்தத்துள் அலைந்து=அண்டங்களெல்லாம் வியாபித்துத் தன்னுள்ளே யெழுந்த சிவானந்த வெள்ளத்து அலைவடைந்து; கண்டபேரின்பத்தின் கரையில்லா நிலை அணைந்தார்=தரிசித்த பேரின்பத்தினது அளவு கடந்த நிலைமையை யடைந்தருளினார்.—எ-று. கும்பிடுவாராய் முகமலர்ந் தெழும் பிள்ளையார் அணைந்தாரெனக் கூட்டுக. (௧௧௪௦)

அந்நிலைமை யடைந்துநிளைத் தாங்கெய்தாக் காலத்தின்
மன்னுதிரு வம்பலத்தை வலங்கொண்டு போந்தருளிப்
பொன்னணிமா ளிகைவீதிப் புறத்தமர்ந்து போதுதொறு
மின்னிசைவண் டமிழ்பாடிக் கும்பிட்டங் கினிதிருந்தார்.

(இ-ள்.) அந்நிலைமை அடைந்து திளைத்து ஆங்கு எய்தாக்காலத்தில்=அவ்வாறு எல்லையில்லா ஆனந்தத்து நிலைபெறுதலை யடைந்து அதில் முழுகி அங்குநின்று நீங்குங்காலத்து; மன்னுதிரு அம்பலத்தை வலங்கொண்டு போந்தருளி நிலைபெற்ற கனகசபையை வலமாகவந்து அங்கு நின்றெழுந்தருளி; பொன் அணி மாளிகை வீதிப்புறத்து அமர்ந்து=பொன்னாலலங்கரித்த திருமாளிகைவீதியின் புறத்தெழுந்தருளியிருந்து; போதுதொறும் இன்னிசைவண் தமிழ்பாடிக் கும்பிட்டு அங்கு இனிது இருந்தார்=காலங்கள்தோறு மினிய இசையோடுகூடிய வளம்பொருந்திய தமிழ்ப்பதிகங்களைப்பாடியருளி நடேசப்பிரானைவணங்கி யங்கினிதாகவெழுந்தருளி யிருந்தார்.-எ-று எய்தாதகாலமென்னும் எதிர்மறைப்பெயரெச்சம், ஈற்றுயிர் மெய்கெட்டு வல்லெழுத்து மிக்கு எய்தாக்காலமென நின்றது. எய்துங்காலத்திற்கு எய்தாக்காலம் எதிர்மறையாதலின், நீங்குங்காலமெனப் பொருள்கூறப்பட்டது. வாராக்காலமென்முற்போற் கொள்க. (௧௧௪௧)

திருந்தியசீர்த் தாதையார் சிவபாத விருதயரும்
பொருந்து திருவளர் புகலிப்பூசுரரு மாதவரும்
பெருந்திரு மாலயன் போற்றும்பெரும் பற்றப்புலியூரி
லிருந்தமிழாகர ரணைந்தாரெனக் கேட்டுவந் தணைந்தார்.

(இ-ள்.) திருந்திய சீர்த்தாதையார் சிவபாத இருதயரும்=திருத்தமான சிறப்பினையுடைய தந்தையாராகிய சிவபாத இருதயரும்; பொருந்து திருவளர்புகலிப் பூசுரரும் மாதவரும்=மிக்க செல்வமோங்கிய சீகாழியின்கண் வாழும் மறையவரும் பெரியதவத்தினரும்; பெருந்திருமால் அயன்போற்றும் பெரும்பற்றப்புலியூரில்=பெருமைபொருந்திய திருமாலோடு பிரமனுந்துதிக்கும் பெரும்பற்றையுடைய சிதம்பரத்தில்; இருந்தமிழாகரர் அணைந்தாரெனக்கேட்டுவந்து அணைந்தார்=பெருமைபொருந்திய தமிழ்பிறத்தற்கிடமாகிய ஆளுடையபிள்ளையார் அடைந்தாரென்று கேள்வியுற்று அங்கு வந்தடைந்தார்.—எ-று. புறப்பற்றும் அகப்பற்றுமாய இவ்வகைப்பற்றும் பற்றறப்பற்றற்குரிய பற்றுதலிற் பெரும்பற்றப் புலியூரென்றார். (௧௧௪௨)

Koviloor Digital Library

ஆங்கவரைக் கண்டுசிறப் பளித்தருளி யவரோடுந்
தாங்கரிய காதலினாற் றம்பெருமான் கழல்வணங்க
வோங்குதிருத் தில்லைவா ழந்தணரு முடனாகத்
தேங்கமழ்கொன் றைச்சடையார் திருச்சிற்றம் பலம்பணிந்தார்.

(இ-ள்.) ஆங்கு அவரைக்கண்டு சிறப்பளித்தருளி அவரோடும்= அந்த அவர்களைப் பார்த்து (அவர்க்கேற்ற சிறப்பான)முகமன்வார்த்தையை யெடுத்தியம்பி அவருடன்; தாங்கரிய காதலினாற் றம்பெருமான் கழல்வணங்க=தரித்தற்கரிய பெருவிருப்போடு தமதுபிரானுகிய நடேசரது திருவடியை வணங்கும்படி; ஓங்குதிருத்தில்லைவாழந்தணரும் உடனாக=உயர்ந்த திருத்தில்லையில் வாழுமறையவர்களுந் தம்முடன்செல்ல; தேங்கமழ்கொன்றைச் சடையார் திருச்சிற்றம்பலம்பணிந்தார்=தேங்கமழுகின்ற கொன்றைப்பூமாலையை முடித்த சடாமுடியையுடைய நடேசப்பிரானது திருச்சிற்றம்பலத்தை வணங்கியருளினார்.—எ-று. (௧௧௪௯)


தென்புகலி யந்தணருந் தில்லைவா ழந்தணரு
மன்புநெறி பெருகுவித்த வாண்டகையா ரடிபோற்றிப்
பொன்புரிசெஞ் சடைக்கூத்த ரருள்பெற்றுப் போந்தருளி
யின்புறுதோ ணியினமர்ந்தார் தமைவணங்க வெழுந்தருள.

(இ-ள்.) தென்புகலி அந்தணரும் தில்லைவாழ்அந்தணரும்=சீகாழியின்கண்வாழு மந்தணருடனும் தில்லையின்வாழு மந்தணருடனும்; அன்புநெறி பெருகுவித்த ஆண்டகையார் அடிபோற்றி=அன்பின்வழியைப் பெருகச்செய்தபிரானாரது திருவடியைத்துதித்து; பொன்புரி செஞ்சடைக் கூத்தர் அருள் பெற்றுப் போந்தருளி=பொன்போலும் புரிபொருந்திய சிவந்த சடையையுடைய அந்த நடேசப்பெருமானது திருவருளைப்பெற்றுப் புறம்பேபோந்தருளி; இன்புறுதோணியில் அமர்ந்தார்தமை வணங்க எழுந்தருள=இன்பத்தை விளைக்குந் தோணியப்பரை வணங்கும்படி யெழுந்தருளுங்காரணமாக.

நற்றவத்தார் குழாத்தோடு நம்பர்திரு நடஞ்செய்யும்
பொற்பதியின் திருவெல்லை பணிந்தருளிப் புறம்போந்து
பெற்றமுயர்த் தவரமர்ந்த பிறபதியும் புக்கிறைஞ்சிக்
கற்றவர்கள் பரவுதிருக் கழுமலமே சென்றணைவார்.

(இ-ள்.) நற்றவத்தார் குழாத்தோடு = நல்லதவத்தையுடைய அடியார் திருக்கூட்டங்களுடன்; நம்பர் திருநடம் செய்யும் பொற்பதியின் திருவெல்லை பணிந்தருளிப் புறம்போந்து=சிவபெருமான் ஆனந்த நிருத்தஞ்செய்தருளு மழகிய திருத்தில்லையின் திருவெல்லையை வணங்கியருளிய தன்புறம்பேசென்று; பெற்றம் உயர்த்தவர் அமர்ந்த பிறபதியும் புக்கு இறை

Koviloor Digital Library



சீகாழித்தலம்.

Koviloor Digital Library

ஞ்சி=இடபக்கொடியையுயர்த்த சிவபிரானெழுந்தருளிய பிற திருப்பதிகளை யுமடைந்து துதித்து; கற்றவர்கள் பரவு திருக்கழுமலமேசென்று அடை வார் = மெய்ந்நூலைக் கற்றுணர்ந்தவர்கள் துதிக்குந் திருக்கழுமலமென்னு ந்திருப்பதியைச் சென்றடையுங் கருத்துடைய பிள்ளையார்.—எ-று. எழுந்த ருளுங் காரணமாய்ப் பணிந்தருளிப் புறம்போந்து புக்கிறைஞ்சிச் சென்ற டையும் பிள்ளையாரெனக் கூட்டுக. அடுக்கிய எச்சங்கள் சென்றடைவாரெ ன்னும் வினையாலணையும் பெயர்கொண்டது. வினையெச்சம் இருவகைமுற் றேயன்றி, உழுது வருதல், உழுதுவந்தவனென வினைப்பெயரோடு முடிதல். "வினையெஞ்சு கிளவிக்கு வினையுங் குறிப்பு, நினையத்தோன்றிய முடிபாகு ம்மே" என்னுஞ் சூத்திரத்தில் "நினையத்தோன்றிய" என்றதனாற்கொள்க.

பல்பதிகள் கடந்தருளிப் பன்னிரண்டு பேர்படைத்த
தொல்லைவளம் பூந்தராய் தூரத்தே தோன்றுதலு
மல்குதிரு மணிமுத்தின் சிவிகையிழிந் ததிர்வணங்கிச்
செல்வமிகு பதியதன்மேற் றிருப்பதிக மருள்செய்வார்.

(இ-ள்.) பல்பதிகள் கடந்தருளிப்பன்னிரண்டு பேர்படைத்ததொல் லைவளம் பூந்தராய் தூரத்தேதோன்றுதலும்=பலதிருப்பதிகளை நீங்கியருளிப் பன்னிரண்டு திருநாமங்களையுடைய பழமைபொருந்திய வளம் நிறைந்த சீகாழியென்னுந் திருப்பதிகட்புலமாந்தூரத்துத்தோன்றலும்; மல்குதிரு மணிமுத்தின் சிவிகை இழிந்து எதிர்வணங்கி=அழகு நிறைந்த திருமுத்தின் சிவிகையினின்று மிறங்கியருளி யத்திருப்பதியி னெதிரேவணங்கி; செல் வம் மிகுபதியதன்மேற்றிருப்பதிகம் அருள்செய்வார்=செல்வமிக்க அச்சீகா ழியின்மேல் திருப்பதிகத்தையருளிச்செய்வாராய்.—எ-று. (கசுசு)

மன்னுமிசை மொழிவண்டார் குழலரிவை யென்றெடுத்து
மின்னுசுடர் மாளிகைவிண் டாங்குவபோல் வேணுபுர
மென்னுமிசைச் சொன்மாலை யெடுத்தியம்பி யெழுந்தருளிப்
புன்னைமணங் கமழ்புறவப் புறம்பணையில் வந்தணைந்தார்.

(இ-ள்.) மன்னும் இசைமொழி=நிலைபெற்ற இசையோடுகூடிய மொ ழியையுடைய; வண்டார்குழல் அரிவை என்று எடுத்து="வண்டார்குழலரி வை" என முதலெடுத்து; மின்னுசுடர் மாளிகைவிண் தாங்குவபோல் வே ணுபுரம் என்னும்=விளங்குகின்ற ஒளியினையுடைய திருமாளிகைகள் "விண் டாங்குவபோல் வேணுபுரம்" என்னுமிறுதியையுடைய; இசைச்சொல் மாலை எடுத்து இயம்பி எழுந்தருளி=இசையோடுகூடிய திருப்பதிகத்தையெடுத்துப் பாடிச்சென்றருளி; புன்னைமணங்கமழ் புறவப்புறம்பணையில்வந்து அணைந் தார்=புன்னைமலர்கள் நறுமணங்கமழுகின்ற முல்லைநிலத்தினருகுவந்தடைந் தருளினர்.—எ-று. தென்புகலியந்தணரொன்பது முதலிதுகாறு நான்கு செய்

Koviloor Digital Library

புகுங் கூராகம். சென்றடைவாராகிய பிள்ளையாருள் செய்வாராய் வந்த னென்றாரெனக்கூட்டுக. (௧௧௪௭)

திருவேணுபுரம்-பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

வண்டார் குழலரிவை யொடும்பிரியா வகைபாகம்
பெண்டான் மிகவானன் பிறைச்சென்னிப் பெருமானூர்
தண்டா மரைமலரா ளுறைதவளந் நெடும்மாடம்
விண்டாங் குவபோலும் மிகுவேணு புரமதுவே.
வேதத்தொலி யானும்மிகு வேணுபுரந் தன்னைப்
பாதத்தி னின்மனம்வைத் தெழுபந்தன் றனபாட
லேதத் தினையில்லா விவைபத்தும் மிசைவல்லார்
கேதத் தினையில்லார் சிவகெதியைப் பெறுவாரே.

திருச்சிற்றம்பலம்.

வாழிவளர் புறம்பணையின் மருங்கணைந்து வரிவண்டு
சூழுமலர் நறுந்தீப தூபங்க ளுடன்றொழுது
காழிநகர் சேர்மினெனக் கடைமுடிந்த திருப்பதிக
மேழிசையி னுடன்பாடி யெயின்மூதா ருட்புகுந்தார்.

(இ-ள்.) வாழிவளர் புறம்பணையின் மருங்கு அணைந்து=சீகாழியின் புறம்புள்ள முல்லைநிலத்தின் பக்கத்திலடைந்து; வரிவண்டு சூழும் மலர் நறுந்தீபதூபங்களுடன்றொழுது=வரிபொருந்திய வண்டுகள் சுற்றும் பூக்களாலும் நல்ல தீபங்களோடுந் தூபங்களோடும் வணங்கி; காழிநகர் சேர்மின் எனக்கடைமுடிந்த திருப்பதிகம்=சீகாழியையடையுங்களென்றிறுதியில் முடித்ததிருப்பதிகத்தை; ஏழிசையினுடன்பாடி எயின்மூதூருட்புகுந்தார்=ஏழிசையும் பொருந்தப்பாடியருளி மதில் சூழ்ந்த பழையநகருட்புகுந்தருளினார்.—எ-று. (௧௧௪௮)

ஸ்ரீகாழி - திருவிராகம் - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

நம்பொருண மக்கௗென்று நச்சியிச்சை செய்துநீ
ரம்பர மடைந்துசால வல்லலுய்ப் பதன்முன
மும்பர்நாத னுத்தம னொளிம்மிகுந்த செஞ்சடை
நம்பன்மேவு நன்னகர் நலங்கொள்காழி சேர்மினே.

Koviloor Digital Library

தக்கனார் தலையரிந்த சங்கரன் றனதரை
யக்கினோ டரவசைத்த வந்திவண்ணர் காழியை
யொக்கஞான சம்பந்த னுரைத்தபாடல் வல்லவர்
மிக்கவின்ப மெய்திவீற் றிருந்துவாழ்தன் மெய்ம்மையே.

திருச்சிற்றம்பலம்.

சேணுயர்ந்த திருத்தோணி வீற்றிருந்த சிவபெருமான்
றாணினைந்த வாதரவின் றலைப்பாடு தனையுன்னி
நீணிலைக்கோ புரமணைந்து நேரிறைஞ்சிப் புக்கருளி
வாணிலவு பெருங்கோயில் வலங்கொண்டு முன்பணிந்தார்.

(இ-ள்.) சேண் உயர்ந்த திருத்தோணி வீற்றிருந்த சிவபெருமான்=விண்ணுலகளவுயர்ந்த திருத்தோணியென்னு மாலயத்திலெழுந்தருளியிருந்த சிவபிரானது; தாள் நினைந்த ஆதரவின் தலைப்பாடுதனை உன்னி=திருவடிகளை நினைந்த பெருவிருப்பின் மேம்பாட்டைக்கருதி; நீள் நிலைக்கோபுரம் அணைந்து நேர் இறைஞ்சிப்புக்கருளி=நீண்ட நிலைகளையுடைய திருக்கோபுரத்தையடைந்து நேரேவணங்கி யுள்ளேபுகுந்தருளி; வாள் நிலவு பெருங்கோயில் வலங்கொண்டு முன்பணிந்தார்=ஒளிவிளங்குகின்ற பெரியகோயிலை வலமாகவந்து திருமுன்னே வணங்கினார்.—எ-று. (கக௩க)

முன்னிறைஞ்சித் திருவருளின் முழுநோக்கம் பெற்றேறிப்
பொன்னிமயப் பாவையுடன் புணர்ந்திருந்த புராதனரைச்
சென்னிமிசைக் குவித்தகரங் கொடுவிழுந்து திளைத்தெழுந்து
மன்னுபெரு வாழ்வெய்தி மனங்களிப்ப வணங்குவார்.

(இ-ள்.) முன் இறைஞ்சித் திருவருளின் முழுநோக்கம் பெற்று ஏறி=திருமுன்னேவணங்கிச் சிவபிரான் திருவருளின் முழுப்பார்வையையடைந்து அதனாலாய ஆனந்தவாழ்வின் மேம்பட்டு; பொன் இமயப்பாவையுடன் புணர்ந்து இருந்த புராதனரை=பொன்னையடைந்த இமயத்தின் புத்திரியான பெரிய நாயகியாரோடு தோணியில் வீற்றிருந்த பழையவரை; சென்னிமிசைக்குவித்த கரங்கொடு விழுந்து திளைத்து எழுந்து=சிரசின்மேற் கூப்பிய திருக்கரங்களைக்கொண்டு நிலமுறவிழுந்து வணங்கி யானந்தவாழ்வி லழுந்தியெழுந்து; மன்னுபெருவாழ்வெய்தி மனங்களிப்ப வணங்குவார்=நிலைபெற்ற பெருவாழ்வடைந்து மனங்களிக்கும்படி வணங்கும்பிள்ளையார்.

பரவுதிருப் பதிகங்கள் பலவுமிசை யினிற்பாடி
விரவியகண் ணருவிநீர் வெள்ளத்திற் குளித்தருளி
யரவணிந்தா ரருள்பெருகப் புறம்பெய்தி யன்பருடன்
சிரபுரத்துப் பெருந்தகையார் தந்திருமாளிகை சேர்ந்தார்.

Koviloor Digital Library

(இ-ள்.) பரவுதிருப்பதிகங்கள் பலவும் இசையினிற்பாடி=துதிக்கின்ற திருப்பதிகங்கள் பலவற்றையும் இசையோடுபாடியருளி; விரவியகண்ணருவி நீர்வெள்ளத்திற்குளித்தருளி=நெருங்கிய ஆனந்த பாஷ்பவெள்ளத்தில் முழுகியருளி; அரவு அணிந்தார் அருள்பெருகப் புறம்பு எய்தி=சர்ப்பாபரணத்தையணிந்த தோணியப்பரது திருவருள்பெருகும்படி புறம்பேவந்து; அன்பருடன் சிரபுரத்துப் பெருந்தகையார் தந்திருமாளிகை சேர்ந்தார்=அடியார்களோடு சீகாழியிலவதரித்த ஆளுடைய பிள்ளையார் தமது திருமாளிகையை யடைந்தருளினார்.—எ-று. வணங்கும்பிள்ளையார் திருமாளிகை சேர்ந்தாரெனக்கூட்டுக. (௧௧௫௧)

மாளிகையி னுள்ளணைந்து மறையவர்கட் கருள்புரிந்து
தாள்பணியும் பெருங்கிளைக்குத் தகுதியினாற் றலையளிசெய்
தாளுடைய தம்பெருமா னடியவர்க ளுடனமர்ந்து
நீளவரும் பேரின்ப மிகப்பெருக நிகழுநாள்.

(இ-ள்.) மாளிகையின் உள் அணைந்து மறையவர்கட்கு அருள்புரிந்து=திருமாளிகையினுள்ளே புகுந்தருளித் (தம்மையழைக்கவந்த) சீகாழி மறையவர்க்கு (அவரவர் மனைபுகும்படி) அருள்செய்தருளி; தாள்பணியும் பெருங்கிளைக்குத் தகுதியினாற்றலையளிசெய்து=தமது திருவடிகளைவணங்குமிக்க சுற்றத்தாருக்கு மவரவர்க்கேற்ற வரிசையாலுபசாரஞ்செய்து; ஆளுடைய தம்பெருமான் அடியவர்களுடன் அமர்ந்து=தம்மை யாளாகவுடைய சிவபெருமானடியார்களுட னினிதாக வமர்ந்தருளி; நீளவரும் பேரின்பம் மிகப்பெருக நிகழும்நாள்=நீங்காதுவருகின்ற பேரின்பமானது மிக மேம்படும்படி யெழுந்தருளியிருக்கும் நாளில்.—எ-று. (௧௧௫௨)

காழிநா டுடையபிரான் கழல்வணங்கி மகிழ்வெய்த
வாழியினு மிகப்பெருகு மாசையுடன் றிருமுருகர்
வாழிதிரு நீலநக்கர் முதற்றொண்டர் மற்றனையோர்
சூழுநெடுஞ் சுற்றமுடன் றோணிபுரந் தொழுதணைந்தார்.

(இ-ள்.) காழிநாடு உடையபிரான் கழல்வணங்கி மகிழ்வு எய்த=சீகாழியைத் தமக்குத் திருநாடாகவுடைய ஆளுடையபிள்ளையாரது திருவடிகளைவணங்கி மகிழ்கூர; ஆழியினும் மிகப்பெருகும் ஆசையுடன் திருமுருகர்=கடலினு மிகப்பெருகு மாசையோடு திருமுருகநாயனாரும்; வாழிதிரு நீலநக்கர் முதற்றொண்டர் மற்று அனையோர்=திருநீலநக்கர் முதலான அடியார்கள் அவரல்லாத ஏனைய அடியார்கள்; சூழும் நெடுஞ்சுற்றமுடன் தோணிபுரம் தொழுது அணைந்தார்=தம்மைச்சூழ்ந்த பெருஞ்சுற்றத்தாரோடு திருத்தோணிபுரத்தை வணங்கியடைந்தருளினார்.—எ-று. (௧௧௫௩)

Koviloor Digital Library

வந்தவரை யெதிர்கொண்டு மனமகிழ்ந்து சண்பையர்கோ
னந்தமில்சீ ரடியார்க ளவரோடு மினிதமர்ந்து
சுந்தரவா ரணங்கினுடன் றோணியில்வீற் றிருந்தாரைச்
செந்தமிழின் பந்தத்தாற் றிருப்பதிகம்பலபாடி.

(இ-ள்.) வந்தவரை எதிர்கொண்டு மனம் மகிழ்ந்து சண்பையர்கோன்=தம்மைத்தரிசிக்கவந்த அத்திருவடியார்களை யெதிர்கொண்டு சென்று மனமகிழ்ச்சியடைந்து சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார்; அந்தமில் சீர் அடியார்கள் அவரோடும் இனிது அமர்ந்து=எண்ணிறந்த சிறப்பினையுடைய தமது திருக்கூட்டத்தாரோடு மினிதாக இருந்தருளி; சுந்தர ஆரணங்கினுடன் தோணியில் வீற்றிருந்தாரை=அழகிய பெரியநாயகியாருடன் திருத்தோணியிலெழுந்தருளியிருந்த முதல்வரை; செந்தமிழின்பந்தத்தால் திருப்பதிகம் பலபாடி=செப்பமான தமிழ்த்தொடையாற் பலதிருப்பதிகங்கள் பாடி.—எ-று. (௧௧௫௪)

பெருமகிழ்ச்சி யுடன்செல்லப் பெருந்தவத்தாற் பெற்றவரு
மருவுபெருங் கிளையான மறையவரு முடன்கூடித்
திருவளர் ஞானத்தலைவர் திருமணஞ்செய் தருளுதற்குப்
பருவமிது வென்றெண்ணி யறிவிக்கும் பாங்கணைந்தார்.

(இ-ள்.) பெருமகிழ்ச்சியுடன் செல்லப் பெருந்தவத்தால் பெற்றவரும்=(இவ்வாறு) மிக்க மகிழ்ச்சியோடு சிலகாலஞ்செல்லப் பெரியதவத்தாற் பிள்ளையாரைப்பெற்ற சிவபாத இருதயரும்; மருவுபெருங்கிளையானமறையவரும் உடன்கூடி=பொருந்திய மிக்க கிளைஞருமாகிய மறையவர்களுமுடன் சேர்ந்து; திருவளர் ஞானத்தலைவர் திருமணஞ்செய்தருளுதற்கு = அழகு வளருகின்ற சிவஞானத்தலைவராகிய ஆளுடையபிள்ளையார்திருக்கல்யாணஞ் செய்தருளுதற்கு; பருவம் இதுவென்று எண்ணி அறிவிக்கும் பாங்கு அணைந்தார்=பருவகாலமிதுவென்று தெரிவிக்குங்குணமுடையராய் அடைந்தார்கள்.

நாட்டுமறை முறையொழுக்க ஞானபோ னகருக்குங்
கூட்டுவது மனங்கொள்வார் கோதின்மறை நெறிச்சடங்கு
காட்டவரும் வேள்விபல புரிவதற்கோர் கன்னிதனை
வேட்டருள வேண்டுமென விண்ணப்பஞ் செய்தார்கள்.

(இ-ள்.) நாட்டு மறை முறை ஒழுக்கம்=நியமிக்கும் வேதவிதியாகிய ஒழுக்கத்தை; ஞானபோனகருக்கும் கூட்டுவது மனம் கொள்வார்=ஞானபோனகராகிய ஆளுடையபிள்ளையாருக்கும் புணர்ப்பதைத் தம்மனத்திற்கொண்ட அம்மறையவர்கள்; கோதில் மறைநெறிச்சடங்கு காட்டவரும் வேள்விபல புரிவதற்கு=குற்றமற்ற வேதநெறியிற் கிரியைகளாய் விதிக்க

Koviloor Digital Library

வருகின்ற யாகம் பலவற்றையுஞ் செய்வதற்கு; ஓர் கன்னிகையை வேட்டருள வேண்டுமென விண்ணப்பம் செய்தார்கள்=ஒரு கன்னிகையை விவாகஞ்செய்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தருளினார்கள்.—எ-று. அந்தணர் முதலியோர், பிரமசரியத்தின் பின் இல்லொழுக்கத்திலொழுகவென நியமித்தலில், நாட்டுமறை முறையொழுக்கமென்றும்; அவ்வுலகியலாய ஒழுக்கம் உலகியலைக்கடந்த பிள்ளையார்க்குக் கூட்டுதல் பயன்படாமையின், ஞானபோனகருக்குக்கூட்டுவது மனங்கொள்வாரென்றும்; பிரமசாரிக்குச் சமிதாதானமேயன்றி, ஔபாசனத்தி லதிகாரமின்மையில் இல்லொழுக்கம்பூண்டு அதுகாரணமாய் ஔபாசனமுதலிய நித்தியங்களும், கிருச்சிரமுதலிய நைமித்தியங்களுஞ்செய்யவேண்டுதலில், கோதின்மறை நெறிச்சடங்கு காட்டவரும் வேள்விபல புரிவதற்கென்றும்; அதன்பொருட்டுக்கன்னிகையை வேட்டருளவேண்டுமென்றும் விண்ணப்பஞ்செய்தனரென்றார். (கக௬சு)

மற்றவர்த மொழிகேட்டு மாதவத்தின் கொழுந்தனையார்
சுற்றமுறு பெரும்பாசத் தொடர்ச்சிவிடு நிலைமையராய்ப்
பெற்றமுயர்த்தவ ரருண்முன் பெற்றதினு லிசையாது
முற்றியதா யினுங்கூடா தென்றவர்முன் மொழிந்தருள.

(இ-ள்.) மற்றவர்தம் மொழிகேட்டு மாதவத்தின்கொழுந்தனையார்= அம்மறையவரது சொல்லைக்கேட்டுப் பெரியதவக்கொழுந்தையொத்த பிள்ளையார்; சுற்றமுறுபெரும்பாசத் தொடர்ச்சிவிடும் நிலைமையராய்=சுற்றத்தால் வரும் பெரிய பற்றுகிய பிணிப்புவிட்ட நிலைமையையுடையராய்; பெற்றம் உயர்த்தவர் அருள்முன்பெற்றதினுல் = இடபக்கொடியையுடைய தோணியப்பரது திருவருளை முன்னேபெற்றுக்கொண்டதனுல் (நீர் கூறியது) பொருந்தாது; முற்றியதாயினும் கூடாதென்று அவர்முன் மொழிந்தருள=முடிந்ததாயினு மெமக்கு அது பொருந்தாதென் றம்மறையவர் முன் மொழிந்தருளுங்கால்.—எ-று. (கக௬எ)

அருமறையோரவர்பின்னுங் கைதொழுதங்கறிவிப்பா
ரிருநிலத்து மறைவழக்க மெடுத்திர்நீ ராதலினல்
வருமுறையா லறுதொழிலின் வைதிகமா நெறியொழுகுந்
திருமணஞ்செய் தருளுதற்குத் திருவுள்ளஞ் செய்யுமென.

(இ-ள்.) அருமறையோர் அவர் பின்னும் கைதொழுது அங்கு அறிவிப்பார்=அரிய வேதங்களையுணர்ந்த அந்தணராகிய அவர்கள் பின்பும் பிள்ளையாரைவணங்கி விண்ணப்பஞ்செய்வார்; இரு நிலத்து மறை வழக்கம் எடுத்தீர் நீர் ஆதலினல்=பெரிய நிலவுலகத்தில் வேதவொழுக்கத்தைச் சிறந்ததென நிலைப்படுத்தினீர் அதனுல்; வரும் முறையால் அறுதொழிலின் வைதிகமாம் நெறி ஒழுகும்=அவ்வேதங்கூறு முறையாலாறுதொழில்களோடு வேத மார்க்கநெறியில் நடத்தற்கு (நிமித்தமான); திருமணம் செய்தருளு

Koviloor Digital Library

தற்குத் திருவுள்ளம் செய்யுமென=திருக்கல்யாணத்தைச் செய்தற்குத் திருவுள்ளஞ்செய்தருளுமென்று கூற.—எ-று. இவ்வுலகியல் உமக்குப் பொருந்தாதேனும் மறைவழக்கை யுலகில் நிலைப்படுத்தினீராதலில், அம்மறைகூறு முறையா லறுதொழிலோடு கூடிய வைதிகமார்க்கத்தி லொழுகுதற்குத் திருமணஞ்செய்தருளவேண்டுமென்று ரென்றவாறு. அறுதொழில்கள் ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றலென்பன. (ககடுஅ)

மறைவாழ வந்தணர்தம் வாய்மையொழுக்கம் பெருகுந்
துறைவாழச் சுற்றத்தார் தமக்கருளி யுடன்படலும்
பிறைவாழுந்திருமுடியிற் பெரும்புனலோ டரவணிந்த
கறைவாழுங் கண்டத்தார் தமைத்தொழுது மனங்களித்தார்.

(இ-ள்.) மறைவாழ அந்தணர்தம் வாய்மை ஒழுக்கம் பெருகும் துறைவாழ=வேதங்கள் வாழவும் மறையவர்களது மெய்ம்மையான வொழுக்கமிக்க அந்நிலைகள் வாழ்வடையவும்; சுற்றந்தார் தமக்கருளி உடன்படலும்=(ஆளுடையபிள்ளையார்) சுற்றத்தாராகிய மறையவர்களுக் கவ்வாறாகவென அருளிச்செய்து உடன்படவும்; பிறைவாழும் திருமுடியிற் பெரும்புனலோடு அரவு அணிந்த=இளம்பிறைவாழுகின்ற திருமுடியின்கண் பெருமைபொருந்திய கங்காநதியோடு பாம்பினையணிந்த; கறைவாழும் கண்டத்தார் தமைத் தொழுது மனம் களித்தார்=நஞ்சுபொருந்திய திருமிடற்றையுடைய சிவபிரானை யம்மறையவர்கள் வணங்கி மனங்களிப்படைந்தார்.—எ-று. மற்றவர் என்னுஞ் செய்யுள் முதலிம்மூன்றுங் குளகம். (ககடுகூ)

திருஞான சம்பந்தர் திருவுள்ளஞ் செய்ததற்குத்
தருவாய்மை மறையவருந் தாதையருந் தாங்கரிய
பெருவாழ்வு பெற்றாராய்ப் பிஞ்ஞகனா ருருளென்றே
யுருகாநின் றின்பமுறு முளமகிழ்ச்சி யெய்துவார்.

(இ-ள்.) திருஞானசம்பந்தர் திருவுள்ளம் செய்ததற்கு=ஆளுடைய பிள்ளையார் திருமணஞ்செய்யத் திருவுள்ளமிசைந்ததற்கு; தருவாய்மை மறையவரும் தாதையரும்=மெய்ம்மைபொருந்திய அச்சீகாழிமறையவரும் தந்தையாராகிய சிவபாத இருதயரும்; தாங்கரிய பெருவாழ்வு பெற்றாராய்=தாங்குதற்கரிய மிக்கவாழ்வினைப்பெற்றவராய்; பிஞ்ஞகனார் அருளென்றே=சிவபெருமானார் திருவருளென்று; உருகாநின்று இன்பமுறும் உளமகிழ்ச்சிஎய்துவார்=மனமுருகி நின்றின்பமடைந்த தமதுமனதில்மகிழ்ச்சியடைவாராய்.

ஏதமில்சீர் மறையவரி லேற்றகுலத் தோடிசைவால்
நாதர்திருப் பெருமணத்து நம்பாண்டார் நம்பிபெறுங்
காதலியைக் காழிநா டுடையபிரான் கைப்பிடிக்கப்
போதுமவர் பெருந்தன்மை யெனப்பொருந்த வெண்ணினார்.

Koviloor Digital Library

(இ-ள்.) ஏதமில் சீர்மறையவரில் ஏற்ற குலத்தோடு இசைவால்= குற்றமற்ற சிறப்பினையுடைய மறையவர்களில் விவாகஞ்செய்தற்குரிய கோத்திரத்தோடு பொருத்தமுடைமையால்; நாதர் திருப்பெருமணத்து நம்பாண்டார் நம்பிபெறும்=சிவலோகத்தியாகரெழுந்தருளிய திருப்பெருமணத்தில் நம்பாண்டார் நம்பியென்னு மறையவர் பெற்ற; காதலியைக் காழிநாடு உடையபிரான் கைப்பிடிக்க=புத்திரியைச் சோழநாட்டிற்குத் தலைவராகிய ஆளுடையபிள்ளையார் பாணிக்கிரகணஞ்செய்ய; போதுமவர் பெருந்தன்மையெனப் பொருந்த எண்ணினார்=அவரது பெருந்தன்மையானது அமையுமென்று பொருந்தும்படி யோசித்தார்கள்.—எ-று. மறையவருந் தாதையரு மகிழ்ச்சியெய்து வாராய்ப் பொருந்தவெண்ணினாரெனக்கூட்டுக. (௧௧௯௧)

திருஞான சம்பந்தர் சீர்பெருக மணம்புணரும்
பெருவாழ்வு திருத்தொண்டர் மறையவர்கள் மிகப்பேணி
வருவாரும் பெருஞ்சுற்ற மகிழ்சிறப்ப மகட்பேசத்
தருவார்தண் பணைநல்லூர் சார்கின்றார் தாதையார்.

(இ-ள்.) திருஞானசம்பந்தர் சீர்பெருக மணம்புணரும்=ஆளுடைய பிள்ளையார் சிறப்புமிகும்படித் திருக்கல்யாணஞ்செய்யும்; பெருவாழ்வு திருத்தொண்டர் மறையவர்கள்=மிக்கவாழ்வினைத் திருவடியார்களு மறையவர்களும்; மிகப்பேணிவருவாரும்=கேள்வியுற்று மிகவும் பேணிவருகின்றவர்களும்; பெரும் சுற்றம்=பெரிய சுற்றத்தாரும்; மகிழ்சிறப்ப மகட்பேசத்தருவார்=மகிழ்ச்சிமிகும்படி மணமகளைப் பேசும்படி செல்வாராய்; தாதையார் தண்பணை நல்லூர் சார்கின்றார்=சிவபாத இருதயர் குளிர்ந்த வயல்சூழ்ந்த திருநல்லூரையடைகின்றாராயினார்.—எ-று. வாழ்வினைத் திருத்தொண்டரு மறையவரு மிகப்பேணி வருவாரும் பெருஞ்சுற்றமு மகிழ்சிறக்கத் தாதையார் தருவாராய் நல்லூரைச் சார்கின்றாராயினாரெனக்கூட்டுக. தருவார் என்புழி தருக்கள் நிறைந்தவென்றுரைப்பினு மமையும். (௧௧௯௨)

மிக்கதிருத்தொண்டர்களும் வேதியரு முடனேகத்
திக்குநிகழ் திருநல்லூர்ப் பெருமணத்தைச் சென்றெய்தத்
தக்கபுகழ் நம்பாண்டார் நம்பிதா மதுகேட்டுச்
செக்கர்முடிச் சடையார்தந் திருப்பாதந் தொழுதெழுவார்.

(இ-ள்.) மிக்க திருத்தொண்டர்களும் வேதியரும் உடன் ஏக=மேன்மைபொருந்திய திருவடியார்களு மறையவர்களுந் தம்முடன்செல்ல; திக்குநிகழ் திருநல்லூர்ப் பெருமணத்தைச்சென்று எய்த=திசைகடோறும் விளங்குகின்ற சிறப்பினையுடைய திருநல்லூர்ப் பெருமணமென்னுந் திருப்பதியைச் சென்றடையுங்கால்; தக்க புகழ் நம்பாண்டார் நம்பிதாம் அதுகேட்டு=ஏற்ற புகழையுடைய நம்பாண்டார் நம்பியென்னு மறையவ ரதனைக்கேள்வியுற்று;

Koviloor Digital Library

செக்கர் முடிச்சடையார் தம் திருப்பாதம் தொழுது எழுவார்=செக்கர்போலுஞ் சடைமுடியையுடைய சிவலோகத்தியாகர் திருவடிகளைவணங்கியவரையெதிர்கொள்ளும்படி யெழுவாராய்.—எ-று. (ககசுஈ)

ஒப்பரிய பேருவகை யோங்கியெழு முள்ளத்தா
லப்புநிறை குடம்விளக்கு மறுகெல்லா மணிபெருக்கிச்
செப்பரிய வார்வமிகு பெருஞ்சுற்றத் தொடுஞ்சென்றே
யெப்பொருளு மெய்தினே னெனத்தொழுதங் கெதிர்கொண்டார்.

ஒப்பரிய பேர் உவகை ஓங்கி எழும் உள்ளத்தால்=நிகரற்ற பெருமகிழ்ச்சியானது மிக்கெழுகின்றவுள்ளத்தோடு; அப்புநிறைகுடம் விளக்கு மறுகெல்லாம் அணிபெருக்கி=நீர் பூரித்த குடங்களையுந் திருவிளக்குகளையும் வீதிகளெல்லாம் வைத்து அழகுசெய்து; செப்பரிய ஆர்வம் மிகுபெருஞ் சுற்றத்தொடும் சென்றே=தாமுஞ்சொல்லுதற்கடங்காத விருப்பு மிக்கபெரிய சுற்றத்தாரோடு போய்; எப்பொருளும் எய்தினேன் எனத்தொழுது அங்கு எதிர் கொண்டார்=(இம்மைப்பயனும் மறுமைப்பயனுமாகிய) எல்லாப் பொருளையுமடைந்தேனென்று கூறி வணங்கி யவ்விடத்தவரையெதிர்கொண்டார்.—எ-று. நம்பாண்டார் நம்பி தொழுதெழுவாரா யெதிர்கொண்டாரெனக்கூட்டுக. ()

எதிர்கொண்டு மணிமாடத் தினினெய்தி யின்பமுறு
மதுரமொழி பலமொழிந்து வரன்முறையாற் சிறப்பளிப்பச்
சதுர்முகனின் மேலாய சண்பைவரு மறையவரு
முதிருணர்வின் மாதவரு மணைந்ததிற மொழிகின்றார்.

(இ-ள்.) எதிர்கொண்டு மணிமாடத்தினின் எய்தி=அவர் வரவைத் தா மெதிர்கொண்டு அவருடனழகிய திருமாளிகையின்கணடைந்து; இன்பமுறும் மதுரமொழி பலமொழிந்து=இன்பத்தை விளக்கு மதுரமான பல மொழிகளைக்கூறி; வரன் முறையாற் சிறப்பு அளிப்ப=வரலாற்று முறையால் அவர்க்கு வரிசைகளைச்செய்ய; சதுர்முகனின் மேலாய சண்பைவரும் மறையவரும்=பிரமனினுமேம்பட்டவராகிய சீகாழியினின்றும் வந்த சிவபாத இருதயர் முதலிய மறையவர்களும்; முதிர் உணர்வின் மாதவரும்=மிக்க அறிவினையுடைய திருவடியார்களும்; அணைந்ததிறம் மொழிகின்றார்=தாம் வந்த திறத்தைக் கூறுவாராயினர்.—எ-று. (ககசுரு)

ஞானபோ னகருக்கு நற்றவத்தி னொழுக்கத்தா
லூனமில்சீ லத்தும்பான் மகட்பேச வந்ததென
வானபே றந்தணர்பா லருளுடைமை யாமென்று
வானளவு நின்றபெரு மனமகிழ்ச்சி யொடுமொழிவார்.

Koviloor Digital Library

(இ-ள்.) ஞானபோனகருக்கு நற்றவத்தின் ஒழுக்கத்தால் = ஞானபோனகராகிய ஆளுடையபிள்ளையாருக்கு நல்ல தவத்தோடு கூடிய ஒழுக்கத்தால்; ஊனமில் சீலத்து உம்பால் = குறைவில்லாத ஒழுக்கத்தையுடைய உம்மிடத்து; மகட்பேசவந்தது என = புத்திரியை நாம் மணம்பேசவந்ததென்று கூற; ஆனபேறு அந்தணர்பால் அருளுடைமையாம் என்று = நீவிரவ்வாறு வந்த பேறனது இம்மறையவர்களிடத்து வைத்த கருணையாமென்று; வான் அளவும் நின்ற பெருமன மகிழ்ச்சியொடு மொழிவார் = விண்ணுலகளவுயர்ந்த மிக்க மனமகிழ்ச்சியுடன் கூறுவாராயினர்.—எ-று. (௧௧௬௬)

உம்முடைய பெருந்தவத்தா லுலகனைத்து மீன்றளித்த
வம்மைதிரு முலைப்பாலிற் குழைத்தவா ரமுதுண்டார்க்
கெம்முடைய குலக்கொழுந்தை யாமுய்யத் தருகின்றோம்
வம்மினென வுரைசெய்து மனமகிழ்ந்து செலவிடுத்தார்.

(இ-ள்.) உம்முடைய பெருந்தவத்தால் உலகனைத்தும் ஈன்றளித்த = உங்கள் பெரியதவத்தினா லுலகமுழுவதையும் பெற்றுக்காத்தருளிய; அம்மை திருமுலைப்பாலிற் குழைத்த ஆரமுது உண்டார்க்கு = பெரிய நாயகியார் திருமுலைப்பாலோடு குழைத்த நிறைவான சிவஞான அமுதையுண்ட ஆளுடைய பிள்ளையாருக்கு; எம்முடைய குலக்கொழுந்தை யாம் உய்யத்தருகின்றோம் = எமது குலத்திற்குக் கொழுந்தாயவதரித்த புத்திரியை யாமெல்லா முய்யும் பொருட்டு விவாகஞ்செய்துகொடுக்கின்றோம்; வம்மினெனவுரைசெய்து மனம் மகிழ்ந்து செலவிடுத்தார் = வாருங்களென்று உடன்பாடுகூறி மனமகிழ்ச்சியடைந்து அவரைச் சீகாழிக்குச் செல்லும்படியனுப்பினார்.—எ-று. (௧௧௬௭)

பேருவகை யாலிசைவு பெற்றவர்தா மீண்டணைந்து
காருலவு மலர்ச்சோலைக் கழுமலத்தை வந்தெய்திச்
சீருடைய பிள்ளையார்க் கவர்நேர்ந்த படிசெப்பிப்
பார்குலவுந் திருமணத்தின் பான்மையினைத் தொடங்குவார்.

(இ-ள்.) பேர் உவகையால் இசைவுபெற்றவர் தாம் மீண்டு அணைந்து = மிக்க மகிழ்ச்சியால் நம்பாண்டார் நம்பியது உடன்பாட்டைப்பெற்ற சிவபாத இருதயர் மீண்டு சென்று; கார் உலவு மலர்ச்சோலைக் கழுமலத்தை வந்தெய்தி = மேகங்கள் தவழுகின்ற சோலைசூழ்ந்த திருக்கழுமலத்தைவந்தடைந்து; சீருடையபிள்ளையார்க்கு அவர் நேர்ந்தபடிசெப்பி = சிறப்பினையுடைய ஆளுடையபிள்ளையார்க்கு நம்பாண்டார் நம்பிமகட்கொடுக்க உடன்பட்டமையைக்கூறி; பார்குலவும் திருமணத்தின் பான்மையினைத்தொடங்குவார் = நிலவுலகின்கண் விளங்குந் திருக்கல்யாணத்தின் முறைமையைத் தொடங்குவாராய்.—எ-று. (௧௧௬௮)

திருமணஞ்செய் கலியாணத் திருநாளுந் திகழ்சிறப்பின்
மருவியவோ ரையுங்கணித மங்கலநூ லவர்வகுப்பப்

Koviloor Digital Library

பெருகுமண நாளோலை பெருஞ்சிறப்பி னுடன்போக்கி
யருள்புரிந்த நன்னளி லணிமுளைப்பா லிகைவிதைத்தார்.

(இ-ள்.) திருமணம் செய்கல்யாணத் திருநாளும்=திருக்கல்யாணஞ் செய்தற்குரிய திருநாளும்; திகழ்சிறப்பின் மருவிய ஓரையும்=விளங்குகின்ற சிறப்போடுகூடிய இலக்கினமும்; கணித மங்கல நூலவர் வகுப்ப=மங்கலமான கணிதநூலில் வல்லவர்கள் நியமிக்க; பெருகும் மணநாள் ஓலைபெருஞ் சிறப்பினுடன் போக்கி=மிக்க திருமணத்திற்குரிய முகூர்த்த ஓலையைப் பெரிய சிறப்புடனனுப்பி; அருள்புரிந்த நன்னளில் அணிமுளைப்பாலிகைவிதைத்தார்=நியமித்த நல்ல முகூர்த்தத்தில் அழகிய முளைப்பாலிகைகளை விதைத்தார்.—எ-று. பெற்றவர் தொடங்குவாராய் விதைத்தாரெனக்கூட்டுக. ()

செல்வமலி திருப்புகலிச் செழுந்திருவீ திகளெல்லா
மல்குநிறை குடம்விளக்கு மகரதோ ரணநிரைத்தே
யெல்லையிலா வொளிமுத்து மாலைகளெங் கணுநாற்றி
மல்குபெருந் திருவோங்க வணிசிறக்க வலங்கரித்தார்.

(இ-ள்.) செல்வம் மலி திருப்புகலிச் செழும் திருவீதிகள் எல்லாம்=செல்வமிக்க சீகாழியின் செழுமைபொருந்திய திருவீதிகளெல்லாம்; மல்கு நிறைகுடம் விளக்கு மகரதோரணம் நிரைத்தே=நெருங்கிய பூரணகும்பங்களையுந் திருவிளக்குகளையு மகரதோரணங்களைம் வரிசையாகச்செய்து; எல்லையிலா ஒளிமுத்துமாலைகள் எங்கணும் நாற்றி = அளவில்லாத ஒளிபொருந்திய முத்துமாலைகளை யெவ்விடத்துந்தூக்கி; அல்குபெரும் திரு ஓங்க அணி சிறக்க அலங்கரித்தார்=நிறைந்த பேரழகானது மிகும்படி யலங்காரத்துடன் சிறக்க அச்சிவபாத இருதயர் அலங்கரித்தார்.—எ-று. (கக௭0)

அருந்தவத்தோ ரந்தணர்க ளயலுள்ளோர் தாமுய்யப்
பொருந்துதிரு நாளோலை பொருவிறந்தார் கொண்டணையத்
திருந்துபுகழ் நம்பாண்டார் நம்பிசிறப் பெதிர்கொண்டு
வருந்தவத்தான் மகட்கொடுப்பார் வதுவைவினை தொடங்குவார்.

(இ-ள்.) அருந்தவத்தோர் அந்தணர்கள் அயலுள்ளோர்தாம் உய்ய= அரியதவத்தையுடைய அடியார்களும் மறையவர்களும் ஏனையோர்களு முய்யும்படி; பொருந்து திருநாள் ஓலை பொருவிறந்தார்கொண்டு அணைய=பொருத்தமான முகூர்த்தஓலையை யெண்ணிறந்த மறையவர்கள் கொண்டுவர; திருந்து புகழ்நம்பாண்டார் நம்பி சிறப்பு எதிர்கொண்டு=திருந்தியபுகழையுடைய நம்பாண்டார் நம்பியென்பவர் சிறப்பொடு அத்திருமுகத்தைப் பெற்றுக்கொண்டு; வருந்தவத்தால்மகட் கொடுப்பார் வதுவைவினை தொடங்குவார்=முன்செய்யவந்த தவங்காரணமாகப் புத்திரியைப் பிள்ளையார்க்கு விவாகஞ்செய்து கொடுப்பாராய் மணவினைத்தொழிலைத் தொடங்குவாராயினர்—எ-று.(கக௭க)

Koviloor Digital Library

மன்னுபெருஞ் சுற்றத்தா ரெல்லாரும் வந்தீண்டி
நன்னிலைமைத் திருநாளுக் கெழுநாளா நன்னாளிற்
பன்மணிமங் கலமுரசம் பல்லியங்க ணிறைந்தார்ப்பப்
பொன்மணிப்பா லிகைமீது புனிதமுளை பூரித்தார்.

(இ-ள்.) மன்னுபெருஞ் சுற்றத்தார் எல்லாரும்வந்து ஈண்டி=நிலை பெற்ற மிக்க சுற்றத்தாரெல்லாரும் வந்துகூடி; நன்னிலைமைத் திருநாளுக்கு எழுநாளாம் நன்னாளில்=நல்ல நிலைமையோடுகூடிய திருக்கல்யாணதினத்தி ற்கு ஏழுதினத்திற்குமுன்பு நல்லநாளில்; பன்மணிமங்கலமுரசம் பல்லியங் கள் நிறைந்துஆர்ப்ப=பலமணிகளழுத்திய மங்கலகரமான முரசப்பறையும் பலவாத்தியங்களும் நிறைந்தாரவாரிக்க; பொன்மணிப்பாலிகைமீது புனித முளைபூரித்தார்=அழகிய மணிகளழுத்திய பாலிகைகளினிடத்துச் சுத்தமான முளைகளை நிறைத்தார்.—எ-று. அங்குரார்ப் பணஞ்செய்தாரென்றபடி. பாலி கையென்றது-முளை. ஈண்டுப்பாலிகையென்றது, ஆகுபெயராய்ப் பாலிகை முளை தெளிக்குங் கிண்ணத்திற்காயிற்று. (ககஎஉ)

சேணுயரு மாடங்கடிருப்பெருகு மண்டபங்க
ணீணிலைய மாளிகைக ணிகரிலணி பெறவிளக்கிக்
காண்வருகை வினைவண்ணங் கவினோங்கும் படிபெழுதி
வாணிலவு மணிக்கடைக்கண் மங்கலக்கோ லம்புனைந்து.

(இ-ள்.) சேண்உயரும் மாடங்கள் திருப்பெருகு மண்டபங்கள் = மிகவுமுயர்ந்த மாளிகைகளும் அழகுமிக்க மண்டபங்களும்; நீள் நிலையமா ளிகைகள் நிகரில் அணிபெறவிளக்கி=நீண்டநிலை மாளிகைகளையும் மிக்க அழகுபெறும்படி விளக்கச்செய்து; காண்வருகைவினைவண்ணம் கவின்ஓங் கும்படி எழுதி = காணத்தக்க கைத்தொழிலாகிய உருவங்களை யழகுவிளங் கும்படி யெழுதி; வாள்நிலவு மணிக்கடைக்கண் மங்கலக்கோலம்புனைந்து= ஒளிவிளங்குகின்ற மணிகளழுத்திய முதல்வாயிலில் மங்கலகரமான அலங் காரத்தைச் செய்து.—எ-று. (ககஎங)

நீடுநிலைத் தோரணங்க ணீண்மறுகு தொறுநிரைத்து
மாடுயருங் கொடிமாலை மணிமாலை யிடைபோக்கிச்
சேடுயரும் வேதிகைகள் செழுஞ்சாந்து கொடுநீவி
பீடுகெழு மணிமுத்தின் பெரும்பந்தர் பலபுனைந்தார்.

(இ-ள்.) நீடும் நிலைத்தோரணங்கள் நீள்மறுகுதொறும் நிரைத்து= நீண்ட நிலைத்தோரணங்களைப் பெரியவீதிகள்தோறும் வரிசையாக நிறுத்தி; மாடு உயரும் கொடிமாலை மணிமாலை இடைபோக்கி=பக்கங்களில் உயர்ந்த கொடிவரிசைகளையு மிரத்தினமாலைகளையுமிடையிடையேகட்டி; சேடு உயரும் வேதிகைகள் செழும் சாந்து கொடுநீவி=திரண்டுயர்ந்த திண்ணைகளைச் செழு

Koviloor Digital Library

மைபொருந்திய கலவைச்சார்தாற் பூசி ; பீடுகெழும் மணிமுத்தின் பெரும்ப ந்தர் பலபுனைந்தார்=அதன்மீது பெருமைமிக்க அழகிய முத்தாலாகிய பெரிய பந்தல் பலவற்றை அலங்கரித்தார்.—எ-று. (கஎ௲)

மன்றல்வினைத் திருமுளைநா டொடங்கிவரு நாளெல்லா
முன்றிறொறும் வீதிதொறு முகநெடுவா யில்கடோறு
நின்றொளிரு மணிவிளக்கு நிறைவாசப் பொற்குடங்க
டுன்றுசுடர்த் தாமங்க டூபங்க டுதைவித்தார்.

(இ-ள்.) மன்றல்வினைத் திருமுளைநாள் தொடங்கி வரும் நாள் எல்லாம்=திருக்கல்யாணத்திற்கு அங்குரமிட்ட நாள்முதல் வருகின்றநாளெல்லாம் ; முன்றில்தொறும் வீதிதொறும் முகநெடுவாயில்கள்தோறும்=முற்றங்கள்தோறும் வீதிகள்தோறும் நீண்ட தலைக்கடைவாயில்கள்தோறும்; நின்று ஒளிரும் மணி விளக்கு நிறைவாசப் பொற்குடங்கள்=நின்று விளங்குகின்ற அழகிய தூண்டாவிளக்குகளையும் நீர் நிறைந்த வாசனைபொருந்தியபொற்குடங்களையும் ; துன்று சுடர்த்தாமங்கள்=நெருங்கிய ஒளியைவீசும் பொன்னரிமாலைகளையும் ; தூபங்கள்துதைவித்தார்=தூபங்களையும் நெருங்கவைத்தார். ()

எங்கணுமெய்த் திருத்தொண்டர் மறையவர்களேனையோர்
மங்கலநீண் மணவினைநாள் கேட்டுமிக மகிழ்வெய்திப்
பொங்குதிருப் புகலிதனி னாடோறும் புகுந்தீண்டி
யங்கணைந்த வர்க்கெல்லாம் பெருஞ்சிறப்பு மிகவளித்தார்.

(இ-ள்.) எங்கணும் மெய்த்திருத்தொண்டர் மறையவர்கள் ஏனையோர்=எவ்விடத்தும் மெய்ம்மைபொருந்திய திருவடியார்களும் வேதியர்களுமிவரல்லாத மற்றையரும்; மங்கலநீள் மணவினைநாள்கேட்டு மிகமகிழ்வெய்தி=மங்கலமிக்க திருக்கல்யாணத் திருநாளைக் கேள்வியுற்று மிகவுமகிழ்வடைந்து ; பொங்குதிருப்புகலிதனில் நாள்தோறும் புகுந்து ஈண்டி = பொலிவுபொருந்திய சீகாழித் திருப்பதியில் நாள்தோறும் வந்துகூடி ; அங்கு அணைந்தவர்க்கெல்லாம் பெருஞ்சிறப்பு மிக அளித்தார்=அத்திருநல்லூருக்கு வந்தவர்களுக்கெல்லாம் பெரியசிறப்பினை மிகவுஞ் செய்தார்.—எ-று.(கஎசு)

மங்கலதூ ரியநாத மறுகுதொறு நின்றியம்பப்
பொங்கியநான் மறையோசை கடலோசை மிகப்பொலியத்
தங்குநறுங் குறையகிலின் றழைத்தசெழும் புகையினுடன்
செங்கனலா குதிப்புகையுந் தெய்வவிரா மணம்பெருக.

(இ-ள்.) மங்கலதூரியநாதம் மறுகுதொறும் நின்று இயம்ப=மங்கல வாத்தியங்களினது ஒலியானது வீதிகள்தோறும் நிலைபெற்று ஒலிக்கவும் ; பொங்கிய நான்மறை ஓசை கடல்ஓசை மிகப்பொலிய=மேற்பட்டநான்குவே

Koviloor Digital Library

தங்கரவின் ஒலியானது கடலொலிபோல மிகவும் விளங்க; தங்குநறுங் குறைய கிலின் தழைத்த செழும் புகையிருடன்=நறுமணம்பொருந்திய அகிலந்துண் டுகளினுற் கிளைத்த செழுமைபொருந்திய புகையொடு; செங்கனல் ஆகுதிப் புகையும் தெய்வவிரா மணக்கமழ=சிவந்த தீயிற்செய்யுமாகுதியினாலாய புகையுந் தெய்வத்தன்மையான வாசனையைச் செய்யவும்.—எ-று. (கஎஎ)

எண்டிசையி லுள்ளோருமீண்டுவளத் தொடுநெருங்கப்
பண்டநிறை சாலைகளும் பலவேறு விதம்பயில
மண்டுபெரு நிதிக்குவைகண் மலைப்பிறங்க லெனமலிய
வுண்டிவினைப் பெருந்துழனி யோவாத வொலியோங்க.

(இ-ள்.) எண்திசையில் உள்ளோரும் ஈண்டு வளத்தொடும் நெருங்க=எட்டுத்திக்கிலுள்ளோரும் நெருங்கிய பலவளத்தோடுந் தொகுதலால்; பண்டம் நிறை சாலைகளும் பலவேறு விதம்பயில=பலபண்டங்களும் நிறைந்தமாளிகைகளும் பற்பல வேறுவிதங்களாகப் பொருந்த; மண்டு பெருநிதிக் குவைகள் மலைப்பிறங்கலென மலிய=நெருங்கிய பெரிய பொன் மணி முதலிய நிதிக்குவியல்கள் சிறுமலைகள்போலப் பொருந்த; உண்டிவினைப்பெருந்துழனி ஓவாத ஒலிஓங்க=உணவுசெய்யுங்கால் படைபடையெனக் கூறும் பெரிய ஓசையானது நீங்காத ஒலியாய் மிகவும்.—எ-று. உண்டிவினைத்துழனி, உண்டிவினைசெய்வார் உரையாடாதும் ஒலியெழாதும் புசிப்பராதலின், அவர்க்கு அட்டிற்றொழிலாளரைப்படைபடையென ஏவுமொலியேயாமென்க.

மாமறைநூல் விதிச்சடங்கில் வகுத்தமுறை நெறிமரபின்
றாமணநல் லுபகரணஞ் சமைப்பவர்தந் தொழிறுவன்றத்
தாமரையோ னனையபெருந் தவமறையோர் தாமெடுத்த
பூமருவு பொற்கலசப் புண்ணியநீர் பொலிவெய்த.

(இ-ள்.) மாமறைநூல் விதிச்சடங்கில்=பெருமைபொருந்திய வேதநூலில் விதித்த கல்யாணச்சடங்கில்; வகுத்தமுறைநெறிமரபின்=வகுத்தவிதி வழி முறையே; தூமணநல்லுபகரணம் சமைப்பவர் தந்தொழில் துவன்ற=நல்லமணத்தோடுகூடிய ஏமப்பொருள்களை யமைப்பவர்களது தொழில்நெருங்கவும்; தாமரையோன் அனைய பெருந்தவமறையோர் தாமெடுத்த=பிரமனையொத்த பெருமைபொருந்திய தவத்தையுடைய மறையவர்கள் (நம்பாண்டார் நம்பியைக்காறும்படி) கையிற்றாங்கிய; பூமருவு பொற்கலசப் புண்ணியநீர் பொலிவெய்த=மலர்களோடுசேர்ந்த பொற்கலசங்களில் நிறைந்த புண்ணியத்தையுடைய நீரானது பொலிவையடையவும்.—எ-று. (கஎக)

குங்குமத்தின் செழுஞ்சேற்றின் கூட்டமைப்போ ரினங்குழுமப்
பொங்குவிரைப் புதுக்கலவைப் புகையெடுப்போர் தொகைவிரவத்
துங்கநறுங் கர்ப்பூரச் சுண்ணமிடிப் போர்நெருங்க
வெங்குமலர்ப் பிணைபுனைவோ ரீட்டங்கண் மிகப்பெருக.

Koviloor Digital Library

(இ-ள்.) குங்குமத்தின் செழுஞ் சேற்றின் கூட்டு அமைப்போர் இனம் குழும = குங்குமப்பூவின்செழுமைபொருந்திய குழம்பின் கூட்டை யமைக்கின்றவர்களது இனம்நெருங்கவும்; பொங்குவிரைப்புதுக்கலவைப் புகை எடுப்போர் தொகைவிரவ = பொலிவினையுடைய வாசனைபொருந்திய கலவைப்பொருள்களாலாகிய புகையையெடுக்கின்றவர்களது தொகுதிநெருங்கவும்; துங்கநறுங் கற்பூரச் சுண்ணம் இடிப்போர் நெருங்க=உயர்ந்த நறுமணங்கமழுங் கற்பூரச்சுண்ணத்தை யிடிக்கின்றவர்கள் கூடவும்; எங்கும் மலர்ப்பிணைபுனைவோர் ஈட்டங்கள் மிகப்பெருக=எவ்விடத்து மலராலாய பிணையல் மாலைகளைத்தொடுப்போரது தொகுதிகள் மிகவும்பெருகவும்.—எ-று. ()

இனையபல வேறுதொழி லெம்மருங்கு நிரைத்தியற்று
மனைவளரு மறுகெல்லா மணவணிசெய்மறைமூதூர்
நினைவரிய பெருவளங்க ணெருங்குதலா னிதிக்கோமான்
றனையிறைவர் தாமேவச் சமைத்ததுபோ லமைந்துளதால்.

(இ-ள்.) இனையபல வேறுதொழில் எம்மருங்கும் நிரைத்து இயற்றும் = இவ்வகையான பலவேறுவகைக் கைத்தொழில்கள் எவ்விடத்தும் வரிசையாய்ச் செய்யும்; மனைவளரும் மறுகு எல்லாம் மண அணி செய் மறை மூதூர்=மாளிகைகளோங்கிய வீதிகளெல்லாம் மணவணியைக்காட்டுமறையவர்கள் வாழுமவ்வூர்; நினைவரிய பெருவளங்கள் நெருங்குதலால்=நினைத்தற்கரிய மிக்கவளங்கள்நெருங்கியிருத்தலால்; நிதிக்கோமான் தனை இறைவர்தாம் ஏவச்சமைத்ததுபோல் அமைந்துளதால்=நிதிக்கிழவனாகிய குபேரனைச் சிவபெருமான் அனுப்ப அவ்வளங்களை யவனமைத்ததுபோல இருந்தது.-எ-று. மங்கலதூரியமென்பது முதலிதுகாறைந்து செய்யுளுங்குளகம். (௧௧௮௧)

வேறு.

மாறிலாநிறை வளந்தருபுகலியின் மணமீக்
கூறுநாளின்முன் னாளினில்வேதியர் குழாமு
நீறுசேர்திருத் தொண்டருநிகரிலா தவருக்
காறுசூடினா ரருட்டிருக்காப்புநா ணணிவார்.

(இ-ள்.) மாறிலா நிறைவளம் தரு புகலியின் மணமீக்கூறும்நாளின் முன்னாளினில்=நிகரற்ற நிறைந்த வளம்பொருந்திய சீகாழியின்கண் மணத்தை மேற்கொள்ளும் திருநாளின் முதனாளில்; வேதியர்குழாமும் நீறுசேர் திருத்தொண்டரும்=மறையவர் தொகுதியும் விபூதியணிந்த திருவடியார்களும்; நிகர் இலாதவருக்கு ஆறுசூடினார் அருட்டிருக்காப்புநாண் அணிவார்=ஒப்பற்ற ஆளுடையபிள்ளையார்க்குக் கங்காநதியைத் திருமுடியிற் சூடிய சிவபிரானது திருவருள் வடிவான திருக்காப்பு நாணைத் (திருமணத்தின்பொருட்டு) அணிவாராயினர்.—எ-று. காப்பு நாண்=கௌதுகபந்தனம். (௧௧௮௨)

Koviloor Digital Library

வேதவாய்மையின் விதியுளிவினையினால் விளங்க
வோதநீருலகி யன்முறையொழுக்கமும் பெருகக்
காதனீடிருத் தொண்டர்கண்மறையவர் கவினார்
மாதர்மைந்தர்பொற் காப்புநாணகர்வலஞ் செய்தார்.

(இ-ள்.) வேதவாய்மையின் விதியுளி வினையினால் விளங்க=வேதவாக்கியத்திற் கூறும் விதிகள் இச்செயலால் விளங்கவும்; ஓதநீர் உலகியன் முறை ஒழுக்கமும் பெருக=பிரவாகிக்கும் கடல்சூழ்ந்த உலகாடையின் முறையான வொழுக்கங்களும் விருத்தியடைய; காதல்நீள் திருத்தொண்டர்கள் மறையவர்=அன்பு மிக்க திருவடியார்களும் வேதியர்களும்; கவினார் மாதர்மைந்தர்கள்=சிறந்த மகளிரும் ஆடவரும் ஆகிய அவர்கள்; பொன்காப்பு நாண்நகர் வலஞ் செய்தார்=பொன்னாலாய கௌதுகபந்தனம் செய்தற்பொருட்டு நகரத்தை வலஞ்செய்வித்தார்கள்.—எ-று. வலஞ்செய்தாரென்புழி, பிறவினை தொக்கது. "குடிபொன்றிக் குற்றமுமாங்கேதரும்." என்றாற் போலக்கொள்க. (௧௧௮௩)

நகர்வலஞ்செய்து புகுந்தபினவமணி யணிந்த
புகரில்சித்திர விதானமண்டபத்தினிற் பொலியப்
பகரும்வைதிக விதிச்சமாவர்த்தனப் பான்மை
திகழமுற்றிய செம்மலார்திருமுன்பு சேர்ந்தார்.

(இ-ள்.) நகர்வலஞ்செய்து புகுந்தபின்=நகரத்தை வலமாகவந்து திருமாளிகை புகுந்தபின்பு; நவமணி அணிந்த புகரில் சித்திரவிதானமண்டபத்தினிற்பொலிய=நவரத்தினங்களினாலலங்கரித்த குற்றமற்ற சித்திர விதானத்தையுடைய மேற்கட்டி கட்டிய மண்டபத்திற் பொலிவெய்த; பகரும் வைதிக விதிச்சமாவர்த்தனப் பான்மை=வேதநூல் கூறும் வைதிக விதியாகிய சமாவர்த்தனக்கிரியையை; திகழமுற்றிய செம்மலார் திருமுன்பு சேர்ந்தார்=முறையற விதிப்படி முடித்த ஆளுடையபிள்ளையார் திருமுன்பு மறையவர்கள் யாவரும் ஒருங்குகூடினார்.—எ-று. (௧௧௮௪)

செம்பொனின்பரி கலத்தினிற்செந்நெல்வெண் பரப்பின்
வம்பணிந்தநீள் மாலைசூழ்மருங்குற வமைத்த
வம்பொன்வாசநீர்ப் பொற்குடமரசிலை தருப்பை
பம்புநீள்சுடர் மணிவிளக்கொளிர்தரும் பரப்பில்.

(இ-ள்.) செம்பொனின் பரிகலத்தினில்=சிவந்தபொன்னாலாய பாத்திரத்தில்; செந்நெல்வெண்பரப்பின்=வெள்ளிய சம்பாநெல்லின் பரப்பின் மேல்; வம்பு அணிந்த நீள் மாலைசூழ் மருங்குற அமைத்த=வாசனைபொருந்திய நீண்ட மலர்மாலைகள் சூழ்ந்த மண்டபத்தின் மருங்குபொருந்தும்படி வைத்த; அம்பொன் வாசநீர்ப்பொற்குடம்=அழகிய பொன்னாற்செய்த வாசனைபொருந்திய நீர் நிறைத்த பூரணகும்பங்களும்; அரசிலை தருப்பை

Koviloor Digital Library

பம்பு நீள்சுடர் மணிவிளக்கு=அரசிலையுந் தருப்பையும் பொதிந்த நீண்ட ஒளி பொருந்திய இரத்தின தீபங்கள்; ஒளிர்தரும் பரப்பில்=விளங்குகின்ற இடத்தில்.—எ-று. (ககஅரு)

நாதமங்கல முழக்கொடு நற்றவ முனிவர்
வேதகீதமும் விம்மிட விரைகமழ் வாசப்
போதுசாந்தணி பூந்துகில்புனைந்தபுண் ணியம்போன்
மீதுபூஞ்சய னத்திருந்தவர்முன்பு மேவி.

(இ-ள்.) நாதமங்கல முழக்கொடு=மங்கலவாத்தியங்களி னொலியோடு; நற்றவமுனிவர் வேதகீதமும் விம்மிட=நல்ல தவத்தையுடைய மறையவர்களது வேதங்களினிசையுமதிகரிக்க; விரைகமழ் வாசப்போது சாந்து அணி பூந்துகில் புனைந்த புண்ணியம்போல்=மணங்கமழுகின்ற வாசனைபொருந்திய புட்பங்களுஞ் சந்தனமுமாபரணமும் பொலிவுபொருந்திய பட்டாடையுமணிந்த புண்ணியவடிவம்போல்; மீதுபூஞ்சயனத்திருந்தவர் முன்புமேவி=மலரணையின்மேல் எழுந்தருளியிருந்த ஆளுடையபிள்ளையார் திருமுன்பு அம்மறையவர்கள் அடைந்து.—எ-று. (ககஅசு)

ஆர்வமிக்கெழு மன்பினான்மலரய னனைய
சீர்மறைத்தொழிற் சடங்குசெய்திருந்துநூன் முனிவர்
பார்வழிப்பட வருமிருவினைகளின் பந்தச்
சார்பொழிப்பவர் திருக்கையிற்காப்புநாண் சாத்த.

(இ-ள்.) ஆர்வம் மிக்கு எழும் அன்பினால்=விருப்பு மிக்கெழுகின்ற அன்போடு; மலர் அயன் அனைய சீர் மறைத்தொழிற் சடங்குசெய்திருந்து நூல்முனிவர்=பிரமனையொத்த சிறந்த வேதவொழுக்கமான சடங்குகளைச் செய்கின்ற திருத்தமான நூலையணிந்த அம்மறையவர்கள்; பார்வழிப்பட வரும் இருவினைகளின் பந்தச்சார்பு ஒழிப்பவர்=நிலவுலகினுதிக்கவருகின்ற நல்வினை தீவினைகளின் பந்தமாகிய சார்பை நீக்கியருளும் ஆளுடையபிள்ளையாரது; திருக்கையிற் காப்பு நாண்சாத்த=திருக்கரத்தில் (விவாகத்தின் பொருட்டுக்) காப்பு நாணையணிய.—எ-று. (ககஅஎ)

கண்டமாந்தர்கள் கடிமணங்காணவந் தணைவார்
கொண்டவல்வினைப் பாப்பவிழ்கொள்கைய வான
தொண்டர்சிந்தையும் வதனமுமலர்ந்தன சுருதி
மண்டுமாமறைக் குலமெழுந்தார்த்தன மகிழ்ந்தே.

(இ-ள்.) கண்டமாந்தர்கள் சிந்தையும் வதனமும் மலர்ந்தன=தரிசித்த மனிதர்களது இதயமு முகமுமலர்ந்தன; கடிமணம் காணவந்து அணைவார் சிந்தையும் வதனமும் மலர்ந்தன; புதிதான திருமணத்தைத்தரிசிக்கவந்தணைந்

Koviloor Digital Library

நவர்களது இதயமு முகமு மலர்ந்தன; கொண்ட வல்வினைப்பரப்பு அவிழ் கொள்கைய ஆனதொண்டர் சிந்தையும் வதனமும் மலர்ந்தன=தம்மைப்பற் றிய தீவினைப்பகுதிகள் நீங்குங் கொள்கையையுடைய அடியார்களது இதய மும்முகமும் மலர்ந்தன; சுருதி மண்டு மாமறைக்குலம் எழுந்து ஆர்த்தன மகி ழ்ந்தே=வேதமும் நெருங்கிய மறையவர் தொகுதியு மகிழ்ச்சியடைந்தெழுந் தாரவாரித்தன.—எ-று. கண்டமாந்தர்கள் சிந்தையும் வதனமு மலர்ந்தன வென்றும்; கடிமணங்காணவந்தணைவார் சிந்தையும் வதனமுமலர்ந்தனவெ ன்றும் பிரித்துக்கூட்டப்பட்டன. ஐயுங் கண்ணுமாகிய உருபுகள்-ஈற்றிற் றொகுதலேயன்றி, ஆறுமுருபு ஈற்றிற்றொகாதேனின் ஈண்டு தழாத்தொட ராய்க் கூட்டியுரைப்புழி வேற்றுமைச்சந்தியாய்த் தொக்கதன்றியல்பாற்றொ க்கதன்றென்க. (௧௧௮௫)

நிரந்தகங்குலி னிதிமழை விதிமுறை யெவர்க்கும்
புரந்தஞானசம் பந்தர்தாம் புன்னெறிச் சமய
வரந்தைவல்லிரு ளகலவந்தவதரித் தாற்போற்
பரந்தபேரிரு டுரந்துவந்தெழுந்தனன் பகலோன்.

(இ-ள்.) நிரந்த கங்குலில் நிதிமழை விதிமுறை எவர்க்கும்=(நிலவுல கிற்) பரந்த சமணிருளினிடத்து நிதிமழைபோலும் வேதவிதியின் முறைமை யை யாவர்க்கும் (சார்ந்து); புரந்த ஞானசம்பந்தர் தாம்=பெய்து காத்தரு ளிய ஆளுடையபிள்ளையார்; புன்னெறிச்சமய அரந்தை வல் இருள் அகல= அப்பவழியாகிய அந்தப் புறச்சமயங்களென்னுந் துன்பத்தை விளைக்குங்கொ டிய இருள் நீங்க; வந்து அவதரித்தாற்போல்=நிலவுலகின்கண் ணெழுந்தருளி யவதாரஞ்செய்தாற்போல்; பரந்த பேரிருள் துரந்துவந்து எழுந்தனன் பக லோன்=பரம்பிய பெரிய இருளை நீக்கிச் சூரியன்வந்துதித்தான்.—எ-று. ()

அஞ்சிறைச்சுரும் பறைபொழிற்சண்பையாண் டகையார்
தஞ்சிவத்திரு மணஞ்செய்தவஞ்செய்நா ளென்று
மஞ்சனத்தொழில் புரிந்தெனமாசிருள் கழுவிச்
செஞ்சுடர்க்கதிர்ப் பேரணியணிந்தன திசைகள்.

(இ-ள்.) அஞ்சிறைச் சுரும்பு அறைபொழிற்சண்பை ஆண்டகையார் தம்=அழகிய சிறகினையுடைய ஆண்வண்டுகளொலிக்குஞ் சோலைசூழ்ந்த சீகா ழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையாரது; சிவத்திருமணம் செய்த தவம்செய் நாள் என்று=மங்கலமான திருமணஞ்செய்தற்குத் தவத்தைச்செய்த நாளிது வென்று; மஞ்சனத்தொழில் புரிந்தென=தாமும் திருமஞ்சனமாடுந் தொழி லைச்செய்தாற்போல; மாசிருள்கழுவி=குற்றம்பொருந்திய இருளைக்கழுவி; செம் சுடர்க்கதிர்ப் பேரணி அணிந்தன திசைகள்=சிவந்த ஒளிபொருந்திய சூரியகிரணமென்னும்பெரிய அலங்காரத்தைத்திக்குகளணிந்தனவாயின-எ-று பிள்ளையார் திருமணஞ்செய்தற்குரிய நாளாதலிலவர் தெய்வத்தன்மை விளக்

Koviloor Digital Library

கிய திக்குகள் மேகத்தாலும் புழுதியாலுமாய மலினமின்றி விளங்கின என்பார், மாசிருள் கழுவிக் கதிர்ப்பேரணி யணிந்தனவென உருவகித்துக்கூறினர்.

பரம்புதம்வயி னெங்கணுமுள்ளபல் வளங்க
ணிரம்பமுன்கொணர்ந் தெண்டிசையவர்நெருங் குதலாற்
றரங்கடந்தவர் தந்திருக்கல்லியா ணத்தின்
வரம்பிறன்பயன் காட்டுவதொத்தது வையம்.

(இ-ள்.) பரம்பு தம் வயின் எங்கணும் உள்ள பல்வளங்கள்=பரம்பித் தம்மிடத் தெங்கணு முள்ள பலவளங்களை; நிரம்ப முன் கொணர்ந்து எண்டிசையவர் நெருங்குதலால்=நிரம்பும்படி முன்னே கொண்டுவந்து எட்டுத் திக்கிலுள்ளவர்களும் நெருங்குதலினால்; தரம் கடந்தவர் தம் திருக்கல்லியாணத்தின்=தமக்கு ஒப்பாரில்லாத ஆளுடையபிள்ளையாரது திருமணத்தில்; வரம்பில் தன்பயன்காட்டுவது ஒத்தது வையம்=எண்ணிறந்த தனது வளங்களை நிலவுலகமானது காட்டுவதையொத்திருந்தது.—எ-று. வையம், தம்வயினுள்ள பலவளங்களை யெண்டிசையவர் கொண்டுவந்து நெருங்குதலால், தன்பயன் காட்டுவதொத்ததெனக் கூட்டுக. (௧௧௯௧)

நங்கள்வாழ்வென வருந்திருஞானசம் பந்தர்
மங்கலத்திரு மணவெழுச்சியின்முழக் கென்னத்
துங்கவெண்டிரைச் சுரிவளையார்ப்பொடு சூழ்ந்து
பொங்குபேரொலி முழக்குடனெழுந்தது புணரி.

(இ-ள்.) நங்கள் வாழ்வென வரும் திருஞானசம்பந்தர்=நமது வாழ்வென்றுகூற; எழுந்தருளும் ஆளுடையபிள்ளையாரது; மங்கலத் திருமண எழுச்சியின் முழக்கென்ன=மங்கலகரமான திருமணவெழுச்சியிலுதிக்கும் வாத்தியத்தினொலிபோல; துங்க வெண் திரைச் சுரிவளை ஆர்ப்பொடுசூழ்ந்து = உயர்ந்த வெள்ளியதிரையினிடத்துள்ள சுரித்த சங்குகளினாரவாரத்தோடு கரையிலலைகளைவீசி; பொங்குபேரொலி முழக்குடன் எழுந்தது புணரி=பொங்குகின்ற பேரொலியாகிய முழக்குடன் சமுத்திரமெழுந்தது.-எ-று. இதுவுஞ் சுபக்குறி. புணரி, முழக்குடன் சூழ்ந்தெழுந்ததெனக்கூட்டுக. ()

அளக்கரேழுமொன் றுமெனும் பெருமையெவ் வுலகும்
விளக்குமாமண விழாவுடன் விரைந்துசெல்வனபோற்
றுளக்கில்வேதிய ராகுதிதொடங்கிடா முன்னம்
வளர்க்கும் வேதியில் வலஞ்சுழித்தெழுந்தது வன்னி.

(இ-ள்.) அளக்கர் ஏழும் ஒன்றுமெனும் பெருமை=எழுகடலுமொருங்கு சென்றாற்போலும் பெருமை; எவ்வுலகும் விளக்கும் மாமணி விழாவுடன் விரைந்து செல்வனபோல்=எவ்வுலகத்திலும் விளங்கச்செய்யும் பெருமைபொருந்திய திருக்கல்யாண விழவுடன் தாமும் விரைந்துசெல்லக் கருதி

Koviloor Digital Library

னபோல்; துளக்கில் வேதியர் ஆகுதி தொடங்கிடாமுன்னம் = சலிப்பற்ற மறையவர்கள் (செய்முதலிய) ஆகுதிகளைத் தொடங்குமுன்; வளர்க்கும் வேதியில் வலஞ்சுழித்தெழுந்தது வன்னி=தம்மைவளர்க்கும் யாககுண்டத்தில் வலமாகச் சுழித்துச் சொலித்தது ஓமாக்கினி.—எ-று. தக்கணாக்கினி, காருகபத்தியம், ஆகவனியமென நித்தியாக்கினி மூன்றாதலில், செல்வன போலென்றும்; அவை மந்திர சமஸ்காரமுடைமையில் அதன் சானித்தியத்தால் ஆச்சிடவாகுதிசெய்யுமுன் வலஞ்சுழித்தெழுதலில், ஆகுதி தொடங்கிடாமுன்னம் வலஞ்சுழித்தெழுந்ததென்றுங் கூறினர். வலஞ்சுழித்தெழுதல், திவ்வியகந்தமுடைத்தாதல் முதலியன, சுபசூசனமாதலிலவ்வாறு கூறப்பட்டது. ()

சந்தமென்மலர்த் தாதணிநீறுமெய் தரித்துக்
கந்தமேவுவண் டொழுங்கெனுங்கண்டிகை பூண்டு
சிந்தைதூயவன்பர்களுடன்திரு மணம்போத
மந்தசாரியின் மணங்கொணர்ந்தெழுந்தது மருத்து.

(இ-ள்.) சந்தம் மென்மலர்த் தாதணிநீறுமெய் தரித்து=அழகியமிருதுவான பூந்தாதென்று மணியத்தக்க விபூதியை யுடம்பின்கண்ணேபூசி; கந்தம் மேவு வண்டு ஒழுங்கெனும் கண்டிகை பூண்டு=கூட்டமாகவருகின்ற வண்டின் வரிசையென்று முருத்திராக்கத்தைப்பூண்டு; சிந்தைதூய அன்பர்களுடன் திருமணம்போத = மனத்தூய்மைபொருந்திய திருவடியார்களுடன் திருமணஞ்செல்ல; மந்தசாரியின் மணம் கொணர்ந்து எழுந்தது மருத்து=மந்தகதியோடு வாசனையை வசித்துக்கொண்டு காற்றுவீசியது.—எ-று. இது புழுதியோடு வாயுவருதல் மங்கலமின்மையில் இவ்வாறு வந்ததென அதனுலாயசுபத்தைக் குறித்தது. (௧௧௧௪)

எண்டிசைத்திறத் தியாவரும் புகலிவந் தெய்தி
மண்டுமத்திரு மணவெழுச்சியினணி வாய்ப்பக்
கொண்டவெண்ணிறக் குருஉச்சுடர்க்கொண்டல்க ளென்னும்
வெண்டுகிற்கொடி நிரைத்ததுபோன்றது விசும்பு.

(இ-ள்.) எண்திசைத்திறத்து யாவரும் புகலிவந்து எய்தி=எட்டுத்திக்கின் பகுதிகளில்வாழும் யாவருஞ் சீகாழியின்கண் வந்தடைந்து; மண்டும் அத்திருமண எழுச்சியின் அணிவாய்ப்ப=நெருங்கிய அத்திருமணத்தின தெழுச்சியின் அழகு பொருந்த; கொண்டவெண்ணிறக்குருஉச்சுடர்க்கொண்டல்கள் என்னும்=மிகுந்த வெண்மையான நிறம்பொருந்திய ஒளியினையுடைய மேகங்களென்கின்ற; வெண்துகிற்கொடி நிரைத்ததுபோன்றது விசும்பு=வெள்ளியகொடியாடைகளை நிரைத்தாற்போன்றது ஆகாயம்.—எ-று. குருஉச்சுடர்க்கொண்டல்களென்னும் வாய்ப்பக்கொண்ட கொடியெனக்கூட்டுக. இதனால் ஆகாயம் மலினமின்மை குறித்தது. (௧௧௧௫)

Koviloor Digital Library

ஏலவிந்நலம் யாவையுமெழுச்சிமுன் காட்டுங்
காலைசெய்வினை முற்றிய கவுணியர் பெருமான்
மூலமாகிய தோணிமேன்முதல்வனை வணங்கிச்
சீலமார்திரு வருளினுன் மணத்தின்மேற் செல்வார்.

(இ-ள்.) ஏல இந்நலம் யாவையும் எழுச்சி முன்காட்டும் காலை=பொருந்தும்படி இவ்வாறான சுபசூசனங்கள் எல்லாவற்றையும் திருமணவெழுச்சியின் முன்புகாட்டுகின்ற அவ்வுதயகாலத்தில்; செய்வினைமுற்றிய கவுணியர்பெருமான்=தாஞ்செய்யுஞ் சந்தியாவந்தனமுதலிய கன்மங்களைச் செய்துமுடித்தகவுணிய கோத்திரத்துத் தலைவராகிய ஆளுடையபிள்ளையார்; மூலமாகிய தோணிமேல் முதல்வனை வணங்கி = எப்பொருட்குங் காரணராகிய தோணியப்பனைவணங்கி; சீலம் ஆர் திரு அருளினுல் மணத்தின்மேற் செல்வார்=சிறப்பமைந்த திருவருளின் வழித்தாய்த் திருமணத்திற் கெழுந்தருளுவாராயினர்.—எ-று. (கககசு)

காழிமாநகர் வேதியர் குழாத்தொடுங் கலந்து
சூழுமன்பர்க ளேனையோர்துதைந்துமுன் செல்ல
வாழிமாமறைமுழங்கிடவளம்பதி வணங்கி
நீவெண்சுடர்சித்திலச் சிவிகைமேற் கொண்டார்.

(இ-ள்.) காழி மாநகர் வேதியர் குழாத்தொடும் கலந்து=சீகாழியின்கண் வாழுமறையவர் தொகுதியோடு நெருங்கி; சூழும் அன்பர்கள் ஏனையோர்துதைந்து முன்செல்ல=சுற்றுகின்ற அடியார்களு மற்றையோரும் நெருங்கி முன்னேசெல்ல; வாழிமாமறை முழங்கிட வளம்பதி வணங்கி= பெருமைபொருந்திய வேதங்களொலிக்க வளம்பொருந்திய சீகாழிப்பதியை வணங்கி; நீளவெண்சுடர் சித்திலச்சிவிகைமேற் கொண்டார் = மிக்கவெள்ளிய ஒளிபொருந்திய திருமுத்துச்சிவிகைமே லெழுந்தருளினர்.—எ-று. ()

ஆனவாகன மேறுவார்யாருமேற் கொள்ளக்
கானமாகிய தொங்கல் பிச்சங்குடை கவரி
மேனெருங்கிட விசும்பினுநிலத்தினு மெழுந்த
வானதுந்துபி முழக்குடன்மங்கல வியங்கள்.

(இ-ள்.) ஆனவாகனம் ஏறுவார் யாரும் மேற்கொள்ள = அவரவற்கேற்ற வாகனங்களிலேறுகின்றவர்கள் யாவரும் அவ்வாகனங்களை யிவர்ந்துவர; கானமாகிய தொங்கல் பிச்சம் குடை கவரி=திரளாகிய மயிற்பீலியும் வெண்குடையுமேனைய நிறம்பொருந்திய குடைகளுஞ் சாமரமும்; மேல் நெருங்கிட=மேலேநெருங்கவும்; வானதுந்துபி முழக்குடன் மங்கல இயங்கள் விசும்பினும் நிலத்தினும் எழுந்த=தேவதுந்துபி முழக்கோடு மங்கலவாத்தியங்கள் ஆகாயத்தினும் நிலவுலகத்தினு முறையேயொலித்தன.—எ-று. (கககஅ)

Koviloor Digital Library

வேறு.

சங்கொடு தாரைசின்னந் தனிப்பெருங் காளந்தாளம்
வங்கிய மேனைமற்று மலர்துளைக் கருவியெல்லாம்
பொங்கிய வொலியினோங்கப் பூசுரர் வேதகீத
மெங்கணு மெழுந்துமல்கத் திருமண மெழுந்ததன்றே.

(இ-ள்.) சங்கொடு தாரை சின்னம் தனிப்பெருங்காளம் தாளம்=சங்குடன் தாரையுஞ் சின்னமு மொப்பற்ற பெரியகாளமுந் தாளமுமாகிய இவைகளோடு; வங்கியம் ஏனை மற்றும் மலர்துளைக்கருவி எல்லாம்=இசைக்குழலு மிவையல்லாத வேறுதுளைக்கருவிகளுமாகிய எல்லாவாத்தியங்களும்; பொங்கிய ஒலியின் ஓங்க=பரம்பிய ஒலியோடு மேம்பட; பூசுரர்வேதகீதம் எங்கணும் எழுந்து மல்க=மறையவர்களது வேதகீதமெவ்விடத்து மெழுந்து நிறைய; திருமணம் எழுந்ததன்றே=திருக்கல்யாண விழவு எழுந்தது.--எ-று.

கோதையர் குழல்சூழ்வண்டின் குழாத்தொலி யொருபாற்கோல
வேதியர் வேதவாய்மை மிகுமொலி யொருபான்மிக்க
வேதமில் விபஞ்சிவீணை யாழொலி யொருபாலேத்து
நாதமங் கலங்கள்கீத நயப்பொலி யொருபாலாக.

(இ-ள்.) கோதையர் குழல்சூழ்வண்டின் குழாத்தொலி ஒருபால்=மகளிரது கேசபாரத்திற் சூழ்ந்தவண்டின் கூட்டங்களினோசை யொருபுடையும்; கோலவேதியர் வேதவாய்மை மிகும ஒலி ஒருபால்=அழகிய மறையவர்களது வேதத்தின் உண்மைமிக்க ஒலியானது ஒருபுடையும்; மிக்க ஏதமில் விபஞ்சி வீணையாழ் ஒலி ஒருபால்=மேலான குற்றமற்ற இசையை வளர்க்கும் வீணையும் யாழுமாகிய இவைகளினோசை யொருபுடையும்; ஏத்துநாத மங்கலங்கள் கீதநயப்பொலி ஒருபாலாக=துதிக்கின்ற இசையோடு கூடியமங்கலவாழ்த்துகளுங் கானஞ்செய்கின்ற நயப்பான ஓசையு மொருபுடையுமாக.—எ-று. (௬௨௦௦)

விண்ணினை விழுங்கமிக்க வெண்டுகிற் பதாகைவெள்ளங்
கண்வெறி படைப்பமிக்க கதிர்விரி கவரிக்கான
மண்ணிய மணிப்பூணிட் மரிசன மலிந்தபொற்பி
னெண்ணிலா வண்ணத்துகின் பொதிப்பரப் பெங்குநண்ண.

(இ-ள்.) மிக்கவெண்துகிற்பதாகை வெள்ளம் விண்ணினை விழுங்க=மிக்கவெள்ளிய துகிற்கொடிகளின் கூட்டம் ஆகாயத்தை மூடவும்; மிக்க கதிர்விரி கவரிக்கானம் கண்வெறிபடைப்ப=மிகுதியான ஒளிவீசுகின்ற சாமரத்தொகுதிகள் கண்களை வெறிபிதாகச்செய்யவும்; மண்ணிய மணிப்பூண் நீடும் அரிசனம் மலிந்தபொற்பில்=அலங்கரிக்கத்தக்க இரத்தினாபரணங்களினும்மிக்க மஞ்சட்பூசிய அழகினையுடைய; எண்ணிலாவண்ணத்துகின் பொதிப்பரப்பு எங்கும் நண்ண=அளவில்லாத நிறம்பொருந்தியபட்டாடைகளின் பொதியின் செறிவு மெவ்விடத்தும் பொருந்தவும்.—எ-று. (௬௨௦௧)

Koviloor Digital Library

சிகையொடு மான்றோறுங்கும் கிடையுமா சானுஞ்செல்வார்
புகைவிடும் வேள்விச்செந்தீ யில்லுடன் கொண்டுபோவார்
தகைவிலா விருப்பின்மிக்க பதிகங்கள் விளம்பிச்சார்வார்
வகைபறு பகையுஞ்செற்ற மாதவ ரியல்பின்மல்க.

(இ-ள்.) சிகையொடு மான்தோல் தாங்கும் கிடையும் ஆசானும் செல்வார்=சிகையுடன் கருமான்றோலைப் பூணூலுடன் தரித்த ஓதுஞ்சிறுவரு முபாத்தியாயருமொருபாற் செல்லவும்; புகைவிடும் வேள்விச்செந்தீ இல்லுடன் கொண்டுபோவார்=புகைவிடுகின்ற ஔபாச னக்கினிகளை மனையாளுடனெடுத்துக்கொண்டுடன்போகவும்; தகைவிலா விருப்பின் மிக்க பதிகங்கள் விளம்பிச்சார்வார்=அடங்காத விருப்போடு மேன்மைபொருந்திய திருப்பதிகங்களையோதி யொருபாற் செல்லவும்; வகையறு பகையும் செற்ற மாதவர் இயல்பின்மல்க=கூறுபாடான அறுவகைப்பகையையுங்கடிந்த மிக்கதவத்தையுடையோர் இயல்பால் நெருங்கவும்.—எ-று. செல்வார், போவார், சார்வார், என்பன முற்றெச்சம். (கஉ0உ)

அறுவகைவிளங்குஞ்சைவத்தளவிலாவிரதஞ்சாரு
நெறிவழிநின்ற வேடநீடிய தவத்தினுள்ளோர்
மறுவறு மனத்திலன்பின் வழியினல் வந்தயோகக்
குறிநிலைபெற்றதொண்டர் குழாங்குழாமாகியேக.

(இ-ள்.) அறுவகை விளங்கும் சைவத்து அளவு இலா விரதம் சாரும்=அறுவகையுட் சமயமாய் விளங்குகின்ற சைவத்திலெண்ணிறந்த விரதத்தைச் சேர்ந்த; நெறிவழிநின்றவேடம் நீடியதவத்தினுள்ளோர் = ஒழுக்கவழியில் நின்றவேடமிக்க தவத்தினையுள்ளோரும்; மறு அறு மனத்தில் அன்பின்வழியினல்வந்த = குற்றமற்ற மனதிலன்பு காரணமாய்வந்த; யோகக்குறிநிலை பெற்றதொண்டர் குழாம் குழாமாகி ஏக=யோகக்குறிநிலைபெற்ற அடியார்கள் தொகுதிதொகுதியாய்ச் செல்லவும்.—எ-று. அறுவகைச்சைவர்க்கும் நியமமும் விரதமும்பலவாதலில், அளவிலா விரதஞ்சாரு நெறிவழிநின்றவேட நீடியதவத்தினுள்ளோரென்றும்; ஒருவழிப்படுதல் சத்துவகுணத்தாலன்றியாகாமையின், மறுவறுமனமென்றும்; பிராகிருதயோகிகள் சத்துவகுணமுடையோனுஞ் சிவபிரானிடத்தன்பின் வழிவந்த யோகரன்மையின், அன்பின்வழியினல்வந்த யோகமென்றும்; இடைபிங்கலைகளினியக்கறுத்துக்கும் பகர்த்தாவுணருமுபதேசக்குறியாதலில், குறியென்றும், அதன்சாத்திய இயல்புதோன்ற நிலைபெற்ற தொண்டரென்றுங்கூறினர். (கஉ0௩)

விஞ்சையரியக் கர்சித்தர் கின்னரர் மிடைந்ததேவ
ரஞ்சனநாட்ட வீட்டத் தரம்பைய ருடனுயுள்ளோர்
தஞ்சுடர்விமானமேறித் தழைத்தவா தரவினேடு
மஞ்சுறை விசும்பின்மீது மணவணி காணச்சென்றார்.

Koviloor Digital Library

(இ-ள்.) விஞ்சையர் இயக்கர் சித்தர் கின்னரர் மிடைந்த தேவர்=வித்தியாதரரு மியக்கருஞ் சித்தருங் கின்னரரும் நெருங்கிய தேவர்களும்; அஞ்சன நாட்ட நாட்டத்து அரம்பையர் உடனுய் உள்ளோர்=கரியகண்களையுடைய கூட்டமான தேவப்பெண்களுடன் கூடினவர்களாய்; தம்சுடர் விமானம் ஏறித் தழைத்த ஆதரவினோடு = தமது ஒளிபொருந்திய விமானத்தின்கணேறிக் கொண்டு மிக்கவிருப்போடு; மஞ்சுறைவிசும்பின்மீது மண அணிகாணச்சென்றார்=மேகங்கள் தவழ்கின்ற ஆகாயத்தின்கண் திருக்கல்யாணத்தினது பொலிவைக்காணும்படிவந்தார்கள்.—எ-று. (௧௨௦௪)

மற்றவர் மிடைந்துசெல்லு மங்கலவனப்பின் காட்சி
முற்றவித்தலத்தினுள்ளோர் மொய்த்துடன்படரும்போதி
லற்புதநிகழ்ச்சிபெய்த வணைதலான்மணமேற்செல்லும்
பொற்பமை மணத்தின்சாயைபோன்றுமுன்பொலியச்செல்ல.

(இ-ள்.) மற்று அவர் மிடைந்து செல்லும் மங்கல வனப்பின்காட்சி= அத்தேவச்சாதியர்கள் மணங்காணும்பொருட்டுக் கூடி மணத்துடன் செல்லுகின்ற மங்கலகரமான அழகின்றோற்றம்; முற்ற இத்தலத்தின் உள்ளோர் மொய்த்து உடன்படரும்போதில் = முழுதுமிந்நிலவுலகத்திலுள்ளோர் திரண்டு திருமணத்துடன் செல்லுங்கால்; அற்புதநிகழ்ச்சி எய்த அணைதலால்= ஆச்சரியம் நிகழும்படியிருத்தலால்; மணமேற்செல்லும்பொற்பு அமை மணத்தின் சாயைபோன்று முன்பொலியச்செல்ல = மணத்தில் நின்று மேற்சென்ற அழகிய அம்மணத்தினது சாயையையொத்து முன்னே பொலிவடையச்செல்லவும்.—எ-று. சாயை=பிரதிவிம்பம். (௧௨௦௫)

தவவரசாளவுய்க்குந் தனிக்குடை நிழற்றச்சாரும்
பவமறுத்தாளவல்லார் பாதமுள்ளத்துக்கொண்டு
புவனங்கள்வாழவந்த பூந்தராய் வேந்தர்போந்து
சிவனமர்ந்துறையும்நல்லூர்த்திருப்பெருமணத்தைச்சேர்ந்தார்.

(இ-ள்.) தவ அரசாள உய்க்கும் தனிக்குடை நிழற்ற=தவமாகிய அரசுரிமையையாளும்படி பிடிக்குமொப்பற்ற திருமுத்தின்குடை நிழலைச்செய்யவும்; சாரும் பவம் அறுத்து ஆளவல்லார் பாதம் உள்ளத்துக்கொண்டு=தம்மைச்சார்ந்த சனன மரணங்களை நீக்கி அடிமைகொள்ளவல்ல சிவபிரானது திருவடிகளைத் தமது திருவுள்ளத்தின்கண் சிந்தித்துக்கொண்டு; புவனங்கள் வாழவந்த பூந்தராய் வேந்தர்போந்து=பலஉலகங்கள் வாழும்படி அவதரித்த சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையாரெழுந்தருளி; சிவன் அமர்ந்து உறையும் நல்லூர்த் திருப்பெருமணத்தைச் சேர்ந்தார் = சிவலோகத்தியாகரெழுந்தருளிய திருநல்லூர்ப் பெருமணத்தை யடைந்தருளினார்.—எ-று. கோதையென்பது முதலிய காரேழுசெய்யுளுங் குளகம் (௧௨௦௬)

பெருமணக்கோயிலுள்ளார் மங்கலம் பெருகுமாற்றால்
வருமணத் திறத்தின்முன்னர் வழிபெதிர் கொள்ளச்சென்று

Koviloor Digital Library

திருமணம்புணரவெய்துஞ் சிரபுரச்செம்மலார்தா
மிருண்மறைத்திலங்கு கண்டத்திறைவர்தங்கோயில்புக்கார்.

(இ-ள்.) பெருமணக்கோயில் உள்ளார் மங்கலம் பெருகும் ஆற்றல்= திருநல்லூர்ப் பெருமணத் திருக்கோயிலினுள்ள அடியார்கள் மங்கல மானது மிகும்வழியால்; வருமணத்திறத்தின் முன்னர்=வருகின்றமண எழுச்சியின் முன்பு; வழி எதிர்கொள்ளச் சென்று=வழியிலெதிர் கொள்ளும்படி சென் றருளி; திருமணம்புணர எய்தும் சிரபுரச்செம்மலார்தாம்=திருக்கல்யாணத் தைச்செய்ய வெழுந்தருளுஞ் சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார்; இருள் மறைத்து இலங்கு கண்டத்து இறைவர்தம் கோயில் புக்கார்=ஆலா கலத்தாலாகிய கருமையைத் திருமிடற்றின் கண்மறைத்து விளங்குகின்ற கண்டத்தையுடைய சிவலோகத்தியாகரது திருக்கோயிலை யடைந்தார்.—எ-று.

நாதரைப் பணிந்துபோற்றி நற்பொருட் பதிகம்பாடிக்
காதன்மெய்யருண் முன்பெற்றுக் கவுணியர் தலைவர்போந்து
வேதியர் வதுவைக்கோலம் புனைந்திட வேண்டுமென்னப்
பூதநாயகர்தங் கோயிற் புறத்தொரு மடத்திற்புக்கார்.

(இ-ள்.) நாதரைப்பணிந்து போற்றி நற்பொருட் பதிகம்பாடி=சிவ பிரானை வணங்கித் துதித்து நல்லபொருள் நிறைந்த திருப்பதிகத்தைப்பாடி; காதல் மெய்யருள் முன்பெற்று=விருப்போடு கூடிய மெய்ம்மை பொருந்திய திருவருளை முன்புபெற்று ; கவுணியர் தலைவர் போந்து=ஆளுடைய பிள்ளை யார் ஆலயத்தினின்றும் புறம்பே யெழுந்தருளி ; வேதியர்வதுவைக்கோலம் புனைந்திட வேண்டும் என்ன=அச்சீகாழி மறையவர் திருமணக்கோலத்தை யணிய வேண்டு மென்றுகூற ; பூதநாயகர்தம் கோயிற்புறத்து ஒருமடத்திற் புக்கார்=பூதங்கட்கு நாயகரான சிவலோகத்தியாகரது திருக்கோயிலின் புற த்துள்ள ஒருதிருமடத்திற் புகுந்தருளினார்.—எ-று. (கஉ0அ)

பொற்குடநிறைந்த வாசப் புனிதமஞ்சன நீராட்டி
விற்பொலி வெண்பட்டாடை மேதகவிளங்கச் சாத்தி
நற்றிரு வுத்தரீய நறுந்துகில் சாத்திநானப்
பற்பல கலவைச்சாந்தம் பான்மையி னணிந்தபின்னர்.

(இ-ள்.) பொற்குடம் நிறைந்த வாசப்புனித மஞ்சனநீர் ஆட்டி=பொ ற்குடங்களில் நிறைத்த வாசனைபொருந்திய பரிசுத்தமானதிருமஞ்சன நீரால் முழுக்காட்டி ; விற்பொலிவெண் பட்டாடை மேதகவிளங்கச்சாத்தி = ஒளி பொருந்திய வெள்ளிய பட்டாடையை மேன்மை பொருந்த அழகாகத்திரு அரையிற்சாத்தி ; நற்றிரு உத்தரீய நறுந்துகில் சாத்தி=நல்லதிருவுத்தரீய மென்றும் வாசனை பொருந்திய பட்டாடையைத் தோளின்மேற்சாத்தி; நானப் பற்பல கலவைச்சாந்தம் பான்மையில் அணிந்தபின்னர்=கஸ்தூரிசேர் த்த பலபல கலவைச்சாந்துகளை முறைமையோடு பூசியபின்பு.—எ-று. ()

Koviloor Digital Library

திருவடி மலர்மேற்பூத்த செழுநகைச் சோதியென்ன
மருவிய தாளக்கோவை மணிச்சரி யணையச்சாத்தி
விரிசுடர்ப் பரட்டின்மீது விளங்குபொற் சரட்டிற்கோத்த
பெருகொளி முத்தின்றாமம் பிறங்கியதொங்கல் சாத்தி.

(இ-ள்.) திருவடி மலர்மேல் பூத்த செழும் நகைச்சோதி என்ன = திருவடித் தாமரைகளி லலர்ந்த செழுமைபொருந்திய விளக்கமானசோதியைப்போல; மருவிய தாளக்கோவை மணிச்சரி அணையச்சாத்தி=பொருந்திய முத்துக்கோவைகளையுடைய இரத்தினத்தாலாய காற்சரியை பொருந்த அணிந்து; விரிசுடர்ப் பரட்டின்மீது விளங்கு பொன் சரட்டிற்கோத்த= விரிந்த ஒளிபொருந்திய திருவடிப்பரட்டின்மேல் விளக்கமான பொன்னூணிற்கோத்த; பெருகு ஒளி முத்தின்தாமம் பிறங்கிய தொங்கல் சாத்தி= மிக்க ஒளிபொருந்திய முத்துவடத்தில் விளங்குகின்ற குச்சங்களை யணிந்து.-எ-று. தொங்கல், குஞ்சமாய்ப்பரடைச்சூழ்ந்துநிற்குமணி. (கஉகo)

தண்சுடர்ப்பரியமுத்துத்தமனியநாணிற்கோத்த
கண்கவர்கோவைப்பத்திக் கதிர்க்கடிசூத்திரத்தை
வெண்சுடர்த்தரள மாலைவிரிசுடர்க் கொடுக்கின்மீது
வண்டிருவரையி னீடுவனப்பொளிவளரச்சாத்தி.

(இ-ள்.) தண்சுடர்ப் பரியமுத்துத் தமனிய நாணிற்கோத்த=ஒளிபொருந்திய பருத்த முத்துக்களைப் பொன்னூணிற்கோத்த; கண்கவர் கோவைப்பத்திக் கதிர்க்கடி சூத்திரத்தை=கண்டாரது கண்ணைக் கவரத்தக்க கோவை வரிசைகளையுடைய ஒளிபொருந்திய அரைஞாணை; வெண்சுடர்த்தரள மாலை விரிசுடர்க் கொடுக்கின்மீது=வெள்ளிய ஒளிபொருந்திய முத்தின் வரிசைகள் விரிந்த ஒளியைக் காலும்பின் கச்சத்தின்மேல்; வண்திரு அரையின் நீடு வனப்பு ஒளி வளரச் சாத்தி=அழகியதிருவரையின்கண் மிக்க அழகோடு ஒளிவிளங்க அணிந்து.—எ-று. கடி சூத்திரத்தைக் கொடுக்கின்மீது சாத்தி யெனக்கூட்டுக. கொடுக்கென்பது=பின்கச்சம். அப்பின்கச்ச வஸ்திரவுடையின் கரையில் முத்தின்பந்திகள் இழைக்கப்படுதலில், தரளமாலை விரிசுடர்க் கொடுக்கென்றார். (கஉகக)

ஒளிர்கதிர்த் தரளக்கோவை யுதரபந் தனத்தின்மீது
தளிரொளி தளும்புமுத்தின் சன்னவீரத்தைச் சாத்திக்
குளிர்நில வெறிக்குமுத்தின் பூணநூற் கோவைசாத்தி
களிர்கதிர் முத்துமாலை நற்சுட ராரஞ்சாத்தி.

(இ-ள்.) ஒளிர்கதிர் தரளக்கோவை உதரபந்தனத்தின்மீது=விளங்குகின்ற கிரணங்களையுடைய முத்துவடங்களாலாகிய உதரபந்தனத்தின்மீது; தளிர் ஒளி தளும்பும் முத்தின் சன்னவீரத்தைச் சாத்தி=தளிர்த்த ஒளிததும்

Koviloor Digital Library

புகின்ற முத்தாலாகிய சன்னவீரமென்னு மாபரணத்தைக் (கழுத்தினின்று திருவுந்தியளவுந் தாழும்படியணிந்து) ; குளிர்நிலவு எறிக்கும் முத்தின்பூணநூற்சோவைசாத்தி = குளிர்ந்த நிலவைவீசு முத்தாலாகிய பூணூல் வடங்களைத்திருமார்பிலணிந்து ; நளிர்கதிர் முத்துமாலை நற்சுடர் ஆரம் சாத்தி= குளிர்ந்த ஒளிவீசுகின்ற முத்துமாலையாகிய நல்ல பிரகாசம்பொருந்திய ஆரத்தையணிந்து.—எ-று. சன்னவீரம், திரண்டவடிவாய்க் கழுத்திலின்று நாபியளவும்பொருந்த அணியுமோரணி. (௧௨௧௨)

வாள்விடுவயிரக்கட்டு மணிவிரலாழிசாத்தித்
தாளுறுதடக்கை முத்தின்றண்டையுஞ்சரியுஞ்சாத்தி
நீளொளிமுழங்கைப் பொட்டுநிரைசுடர்வடமுஞ்சாத்தித்
தோள்வளைத்தரளப்பைம்பூண்சுந்தரத்தோண்மேற்சாத்தி.

(இ-ள்.) வாள்விடு வயிரக்கட்டு மணிவிரல் ஆழிசாத்தி = ஒளிவீசுகின்ற வயிரமணியாற்கட்டிய அழகிய மோதிரங்களை யணிந்து ; தாளுறு தடக்கைமுத்தின் தண்டையும் சரியும்சாத்தி=முழந்தாளையடைந்த நீண்ட திருக்கரத்தில் முத்தாலாய தண்டையையுங் கைச்சரியையு மணிந்து ; நீள்ஒளிமுழங்கைப் பொட்டு நிரைசுடர்வடமும் சாத்தி=மிக்க ஒளிபொருந்திய முழங்கைப் பொட்டோடு வரிசையான மணிவடங்களையு மணிந்து ; தோள்வளை தரளப் பைம்பூண் சுந்தரத்தோள் மேற்சாத்தி=தோள்வளையையு முத்தாலாகிய தோட்பூணையு மழகிய தோளின்மேலணிந்து.—எ-று. (௧௨௧௩)

திருகழுத்தாரந் தெய்வக் கண்டிகைமாலை சேரப்
பருத்தமுத் தொழுங்கு கோத்த படரொளிவடமுஞ் சாத்திப்
பெருக்கிய வனப்பின் செவ்விபிறங்கிய திருவார்காதில்
வருக்கவெண் டாளத்தொத்தின் வடிக்குழை விளங்கச் சாத்தி.

(இ-ள்.) திருக்கழுத்து ஆரம் தெய்வக்கண்டிகைமாலைசேர = திருக்கழுத்தின்கண் பதக்கத்தையுந் தெய்வத்தன்மைபொருந்திய இரத்தினக்கண்டிகைமாலையோடு பொருந்தும்படி ; பருத்தமுத்து ஒழுங்கு கோத்த படர்ஒளி வடமும்சாத்தி=பரியமுத்துக்களை வரிசையாகக் கோத்தபரம்பிய ஒளிபொருந்திய முத்துவடத்தையு மணிந்து ; பெருக்கிய வனப்பின் செவ்வி பிறங்கிய திரு ஆர் காதில்=மிக்க அழகோடு இலக்கணமமைந்த அழகிய நீண்டகாதில்; வருக்கவெண் தரளத்தொத்தின் வடிக்குழை விளங்கச்சாத்தி=ஒருசாதியான வெள்ளியமுத்துக் கொத்தினாலாய வடித்துச்செய்த மகர குண்டலத்தை விளங்கும்படி யணிந்து.—எ-று. (௧௨௧௪)

நீற்றொளி தழைத்துப்பொங்கி நிறைதிரு நெற்றிமீது
மேற்பட விரிந்தசோதி வெண்சுட ரெழுந்ததென்னப்
பாற்படுமுத்தின் பாரப்பனிச் சுடர்த்திரளை சாத்தி
யேற்பவைத் தணிந்தமுத்தி னெழில்வளர்மகுடஞ் சேர்த்தார்.

Koviloor Digital Library

(இ-ள்.) நிற்றொளி தழைத்துப் பொங்கி நிறை திருநெற்றிமீது=விபூதியினொளி மிக்குப் பொலிவடைந்து நிறைந்த திருநெற்றியின்மீது; மேற்படவிரிந்த சோதிவெண்சுடர் எழுந்தது என்ன=மேலாகவிரிந்த ஒளிபொருந்திய வெள்ளிய சுடரெழுந்தாற்போல; பாற்படு முத்தின் பாரப்பனிச்சுடர்த்திரளை சாத்தி=அத்திருநெற்றியினிடத்துச் சேர்ந்தமுத்தாலாய பரிய குளிர்ந்த ஒளிபொருந்திய திரளையை யணிந்து; ஏற்ப வைத்து அணிந்த முத்தின் எழில்வளர் மகுடம் சேர்த்தார் = பொருந்தும்படியாக நிறைத்தணி பெறச் செய்த முத்தாலாய அழகு விளங்குங் கிரீடத்தை யணிந்தார்கள்.-எ-று. ()

இவ்வகை நம்மையாளு மேர்வளர் தெய்வக்கோலங்
கைவ்வினை மறையோர் செய்யக்கடிகொள்செங் கமலத்தாதின்
செவ்விநி டாமமார்பர் திருவடை யாளமாலை
யெவ்வுல கோரு மேத்தத் தொழுதுதா மெடுத்துப்பூண்டார்.

(இ-ள்) இவ்வகை நம்மை ஆளும் ஏர்வளர் தெய்வக்கோலம்=இவ்வாறு நம்மை யடிமைகொள்ளு மழகு வளருகின்ற தெய்வத்தன்மை பொருந்திய திருமணக்கோலத்தை; கைவினை மறையோர்செய்ய = அலங்கரிக்குந் தொழிலில் வல்ல வேதியர்கள் செய்யுங்கால்; கடிகொள் செங்கமலத்தாதின் செவ்விநிள்தாம மார்பர்=வாசனைபொருந்திய செந்தாமரைப் பூவாலாகிய தாதுடன் அழகுமிக்க மாலையையணிந்த திருமார்பையுடையபிள்ளையார்; திரு அடையாளமாலை எவ்வுலகோரும் ஏத்தத்தொழுது தாம் எடுத்துப் பூண்டார்=உருத்திராக்க கண்டிகைமாலையை யெவ்வுலகத்தாருந் துதிக்க வணங்கித்தாமே திருக்கரத்தாலெடுத் தணிந்தருளினார்.—எ-று. சிவசாதனத்துளொன்றாதலின், உருத்திராக்கமாலையைத் திரு அடையாள மாலையென்றும்; அதைப் பிறர் அலங்கரித்தல் மரியாதையன்மையின், தொழுது தாமெடுத்துப் பூண்டாரென்றுங் கூறினர். (௧௨௧௧)

அழகினுக்கணியாம் வெண்ணீ றஞ்செழுத்தோதிச் சாத்திப்
பழகிய வன்பர்சூழ ப்படரொளி மறுகிலெய்தி
மழவிடை மேலோர் தம்மை மனங்கொள வணங்கிவந்து
முழவொலி யெடுப்பமுத்தின் சிவிகைமேற் கொண்டபோது.

(இ-ள்.) அழகிறக்கு அணியாம் வெண்ணிறு அஞ்செழுத்தோதிச் சாத்தி=அழகுக்கு அழகாய் விளங்குந் திருவெண்ணீற்றைத் திருவைந்தெழுத்தை யோதித் தரித்து; பழகிய அன்பர்சூழப் படரொளி மறுகில் எய்தி=தம்முடன்பழகிய திருக்கூட்டத்தார் சூழும்படி பரம்பிய ஒளிபொருந்திய திருவீதியிலெழுந்தருளி; மழவிடைமேலோர்தம்மை மனங்கொளவணங்கிவந்து=இளமைபொருந்திய இடபத்தை யூர்ந்தருளுஞ் சிவலோகத்தியாகரைத் திருவுள்ளம்பொருந்த வணங்கி மீண்டெழுந்தருளி; முழவு ஒலி எடுப்ப முத்

Koviloor Digital Library

தின் சிவிகைமேற் கொண்டபோது=மங்கலமுழவமொலிக்கத் திருமுத்தின் சிவிகையின்மே லெழுந்தருளுங் காலத்தில்.—எ - று. எவ்வகைப் பேரணி யுடையார்க்கும் பூதியணியின்றேல், அவ்வணிகளாலாய அழகுபயன்படாமை யின், அழகிறுக்கணியாம் வெண்ணீறென்றும்; அது தரிக்குங்கால் ஐந்தெழு த்தோதித் தரிக்கவேண்டுமென்னும் மரபுதோன்ற, அஞ்செழுத்தோதிச்சாத்தி யென்றுங் கூறினர். (கஉகஎ)

எழுந்தன சங்கநாத மியம்பின வியங்களெங்கும்
பொழிந்தன விசும்பில் விண்ணோர் கற்பகப்புதுப்பூமாரி
தொழுந்தகை முனிவர்தொண்டர் சுருதியின்வாழ்த்துப் பொங்கி
வழிந்தன திசைகண்மீது மலர்ந்தன வுலகமெல்லாம்.

(இ-ள்.) எழுந்தன சங்கநாதம் இயம்பின இயங்கள் எங்கும்=சங்கத் தின் ஒலியானது உண்டாயின மங்கலவாத்தியங்க ளெவ்விடத்து மொலித் தன; பொழிந்தன விசும்பில் விண்ணோர் கற்பகப் புதுப்பூமாரி=ஆகாயத் திற் றேவர்கள் தூவுங் கற்பகவிருட்சத்தினது புதிய பூமழை சொரிந்தன; தொழுந்தகை முனிவர் தொண்டர் சுருதியின் வாழ்த்துப்பொங்கி வழிந்தன திசைகள்மீது=பிறரால் வணங்கும் பெருமையையுடைய முனிவர்களுந் தொ ண்டர்களுமோதும் வேதங்களின் வாழ்த்தானது திக்குகளிற் பொங்கிவழிந் தன; மலர்ந்தன உலகம் எல்லாம்=எல்லாவுலகங்களு மகிழ்ச்சியடைந்தன.

படர்பெருந் தொங்கல் பிச்சம் பைங்கதிர்ப் பீலிப்பந்த
ரடர்புனை செம்பொற் பாண்டிலணிதுகிற் சதுக்கமல்கக்
கடலின் மீதெழுந்து நிற்குங் கதிர்நிறை மதியம் போல
வடநிரை யணிந்தமுத்தின் மணிக்குடை நிழற்றவந்தார்.

(இ-ள்.) படர் பெருந்தொங்கல் பிச்சம் பைங்கதிர்ப் பீலிப்பந்தர்= நெருங்கிய பெரிய புடைவைக்குச்சங்களும் வெண்குடையும் பசிய ஒளிவீசு கின்ற மயிற்றோகைகளின் கூட்டங்களும்; அடர்புனை செம்பொற்பாண்டில் அணிதுகிற் சதுக்கம் மல்க = நெருங்க அலங்கரித்த சிவந்த பொற்றகட்டா லாய வட்டங்களையுடைய அழகிய வஸ்திரமேற்கட்டிகளும் நெருங்க; கடலின் மீது எழுந்து நிற்கும் கதிர்நிறை மதியம்போல=கடலினிடத் துதித்து நிற்கி ன்ற கலைநிறைந்த சந்திரன்போல; வடம்நிரை அணிந்தமுத்தின் மணிக்குடை நிழற்றவந்தார்=முத்துவடங்களி னிரைகளா லலங்கரித்த திருமுத்துக்குடை நிழல்செய்ய வெழுந்தருளினார்.—எ-று. துகிற்சதுக்கமென்றது, நடைவி தானம். நடைப்பந்தலெனினு மமையும். அதனுள் விருத்தவடிவாய்ப் பொற்ற கடுகளால் நெருங்கப்புனைதலில், அடர்புனை செம்பொற்பாண்டி லணிதுகிற் சதுக்கமென்றார். (கஉகஅ)

சீரணிதெருவினூடுதிருமணஞ்செல்லமுத்தி
னேரணிகாளஞ்சின்னமிலங்கொளிர்தாரையெல்லாம்

Koviloor Digital Library

பேரொலிபெருகமுன்னேபிடித்தனமறைகளோடு
தாரணியுய்யஞானசம்பந்தன்வந்தானென்று.

(இ-ள்.) சீர் அணிதெருவினூடு திருமணம்செல்ல = சிறப்புபொருந்திய வீதியின்கண் திருமண மெழுந்தருளுங்கால்; முத்தின் ஏர் அணிகாளம் சின்னம் இலங்கு ஒளித்தாரை எல்லாம் = முத்தினாலழகு விளங்குகின்ற காளமுஞ் சின்னமும் விளங்கிய ஒளியையுடைய தாரையுமாகிய சின்னங்கள் மூன்றும்; பேர் ஒலிபெருக முன்னே பிடித்தன = மிக்க ஒலிவளரப் பிள்ளையார் திருமுன்னே ஊதப்பட்டன; மறைகளோடு தாரணி உய்ய ஞானசம்பந்தன் வந்தானென்று = வேதங்களுடனிவ்வுலகத்தாரு முய்யும்பொருட்டு ஆளுடையபிள்ளையா ரெழுந்தருளினாரென்று.—எ-று. (௧௨௨௦)

மண்ணிறைக் கிடுக்கண்டீர வந்தவர் திருநாமங்க
ளெண்ணில பலவுமேத்திச் சின்னங்க ளெழுந்தபோதவ்
வண்ணலார் வதுவைசெய்ய வலங்கரித் தணையப்பெற்ற
புண்ணிய மறையோர் மாடமங்கலம் பொலிந்துபொங்க.

(இ-ள்.) மண்ணிறைக்கு இடுக்கண்தீர வந்தவர் திருநாமங்கள் = நிலவுலகத்தார்க்குத் துன்பநீங்க அவதரித்த ஆளுடையபிள்ளையாரது திருநாமங்கள்; எண்ணில பலவும் ஏத்திச் சின்னங்கள் எழுந்தபோது = பாலறாவாயன் முதலளவில்லாத பலதிருநாமங்களையுந் துதித்து முத்துச்சின்னங்களொலிக்கும்பொழுது; அவ்வண்ணலார் வதுவைசெய்ய அலங்கரித்து அணையப்பெற்ற = அவ்வாளுடைய பிள்ளையார் திருமணஞ்செய்யும்பொருட்டு மணக்கோலமா யலங்காரஞ்செய்து எழுந்தருளப்பெற்ற; புண்ணியமறையோர் மாடமங்கலம் பொலிந்து பொங்க = புண்ணியத்தையுடைய நம்பாண்டார்நம்பி திருமாளிகையானது மங்கலகரமடைந்து மேம்படவும்.—எ-று. அணையப்பெற்ற மறையோனென இயையும். ஆளுடையபிள்ளையார் திருமணஞ்செய்தற் கெழுந்தருளுதல் பெரும்பேறாதலின், புண்ணியமறையோரென்றார். (௧௨௨௧)

முற்றுமெய்ஞ் ஞானம்பெற்ற மூர்த்தியார் செங்கைபற்ற
நற்பெருந் தவத்தினீர்மை நலம்படைத் தெழுந்ததெய்வக்
கற்பகப் பூங்கொம்பன்னார் தம்மையுங் காப்புச் சேர்த்துப்
பொற்புறு சடங்குமுன்னர்ப் புரிவுடன் செய்தவேலை.

(இ-ள்.) முற்றும் மெய்ஞ்ஞானம்பெற்ற மூர்த்தியார் செங்கைபற்ற = நிறைந்த மெய்ஞ்ஞானத்தைப் பெற்ற ஆளுடையபிள்ளையார் திருக்கல்யாணஞ் செய்ய; நற்பெருந்தவத்தின் நீர்மை நலம்படைத்து எழுந்த = நல்ல பெரிய தவத்தின் பெருமையாகிய நலத்தைப் பொருந்தியவதரித்த; தெய்வக்கற்பகப்பூங் கொம்பு அன்னார் தம்மையும் காப்புச்சேர்த்து = தெய்வத்தன்மைபொருந்திய தேவதருவின் பூங்கொம்பையொத்த அப்புத்திரியாரையுங் காப்பு

Koviloor Digital Library

க்கட்டி ; பொற்புறு சடங்குமுன்னர்ப் புரிவுடன் செய்த வேலை = அழகியசங்கற்ப முதலிய கல்யாணச் சடங்குகளை முன்பு விருப்போடுசெய்த பொழுது.—எ-று. (கஉஉஉ)

செம்பொன்செய்வாசிச் சூட்டுத்திருமணிப் புனைபூண்செல்வப்
பைம்பொனின் மாலைவேய்ந்த பவளமென் கொடிபொப்பாரை
நம்பன்ற னருளேவாழ்த்தி நல்லெழில் விளங்கச்சூட்டி
யம்பொன்செய்தீபமென்ன வழகலங் கரித்துவைத்தார்.

(இ-ள்.) செம்பொன் செய்வாசிச் சூட்டுத் திருமணிப்புனை பூண் = சிவந்த பொன்னாலாய நுதலணிமாலையையு மழகிய இரத்தினங்க ளழுத்திய ஆபரணங்களையும்; செல்வப் பைம்பொனின்மாலைவேய்ந்த பவளமென் கொடி ஒப்பாரை=செல்வ மிக்க பசியபொன்னரிமாலையையுஞ் சூடிய மிருதுவான பவளக்கொடிபோன்ற புத்திரியை ; நம்பன் தன்அருளே வாழ்த்தி நல்எழில் விளங்கச்சூட்டி=சிவபிரானது திருவருளையே வாழ்த்தி நல்ல அழகு விளங்க ஆபரணங்களைச்சூட்டி ; அம்பொன்செய் தீபம் என்ன அழகு அலங்கரித்து வைத்தார்=அழகிய பொன்னாற்செய்த தீபத்தைப்போல அழகுக் கலங்காரஞ் செய்து வைத்தார்கள்.—எ-று. அக்கன்னிகையாற்குச் செய்த அலங்காரம் அழகுக்கலங்காரஞ்செய்தநுபோலாதலில், அழகலங்கரித்து வைத்தாரென்றார். வாசிச்சூட்டு-வாசியாகிய சூட்டு.நுதலணிமாலையென்றுபொருள். ()

மாமறை மைந்தரெல்லா மணத்தெதிர் சென்றுமன்னுந்
தூமலர்ச் செம்பொற் சுண்ணந் தொகுநவமணியும்வீசத்
தாமரை மலரோன்போல் வாரரசிலை தருப்பைதோய்ந்த
காமர்பொற் கலசநன்னீ ரிருக்குடன் கலந்துவீச.

(இ-ள்.) மாமறை மைந்தரெல்லாம் மணத்து எதிர்சென்று = பெருமைபொருந்திய மறையவர்கள் சிறுவரெல்லாம் திருமணத்தை யெதிர்கொண்டு சென்று ; மன்னும் தூமலர்ச் செம்பொற்சுண்ணம் தொகு நவமணியும் வீச=நிலைபெற்ற தூயமலரோடுகூடிய பொற்சுண்ணத்தையுங் கூட்டமான நவமணிகளையுந் தூவ ; தாமரைமலரோன் போல்வார் = தாமரையின்கண் வாழும் பிரமனையொத்த மறையவர்கள் ; அரசிலை தருப்பை தோய்ந்த= அரசிலையுந் தருப்பையுஞ்சேர்ந்த ; காமர் பொற்கலச நன்னீர் இருக்குடன் கலந்துவீச=அழகிய பொற்கலசங்களில் நிறைத்த நன்னீரை வேதமந்திரத்துடன் கலந்துவீசவும்.—எ-று. கலந்துவீச என்றாரேனும், வேதமந்திரங் கூறி வீசவென்றது கருத்து. (கஉஉச)

விண்ணவர் மலரின்மாரி விசும்பொளி தழைப்பவீச
மண்ணக நிறைந்தகந்த மந்தமாருத மும்வீசக்

Koviloor Digital Library

கண்ணொளி விளக்கமிக்கார் காமர்தோ ரணங்களூடு
புண்ணியவிளைவு போல்வார் பூம்பந்தர் முன்புசார்ந்தார்.

(இ-ள்.) விண்ணவர் மலரின்மாரி விசும்பு ஒளிதழைப்ப வீச=தேவர்கள் கற்பகதருவின் மலர்மழைகளை ஆகாயமொளி தழைக்கும்படி சொரியவும்; மண்ணகம் நிறைந்த கந்த மந்தமாருதமும் வீச=நிலவுலகத்தினிறைந்த வாசனைபொருந்திய சிறுதென்றற்காற்று வீசவும்; கண் ஒளி விளக்கம் மிக்கு ஆர் காமர்தோரணங்களூடு=கண்ணுக்கொளியானது விளக்கமாக மிக்கு நிறைந்த அழகிய தோரணங்களினடுவே; புண்ணியவிளைவுபோல்வார்=புண்ணியத்திரண்ட பயன்போலும் ஆளுடையபிள்ளையார்; பூம்பந்தர்முன்பு சார்ந்தார்=பூம்பந்தரின் முன்படைந்தருளினார்.—எ-று. தோரணங்களினடுவேயுள்ள பூம்பந்தரெனக் கூட்டுக. (௧௨௨௫)

பொன்னணி சங்கின்வெள்ளம் பொலிவுடன் முழங்கியார்ப்ப
மன்னிய தரளப்பந்தி வளர்மணிச் சிவிகைநின்றும்
பன்மலர்நறும் பொற்சுண்ணம் பரந்தபா வாடைமீது
முன்னிழிந் தருளிவந்தார் மூவுலகுய்ய வந்தார்.

(இ-ள்.) பொன் அணி சங்கின் வெள்ளம் பொலிவுடன் முழங்கி ஆர்ப்ப=பொன்னாலலங்கரித்த சங்குகளின் கூட்டங்கள் மங்கலத்தோடு முழங்கி யாரவாரிக்க; மன்னிய தரளப்பந்தி வளர்மணிச் சிவிகைநின்றும்=முத்தின் வரிசைகள்நிறைந்தமிக்க அழகினையுடைய திருமுத்துச்சிவிகையினின்றும்; பன்மலர் நறும்பொற்சுண்ணம் பரந்தபாவாடைமீது=பலமலர்களும் நறுமணம்பொருந்திய பொற்சுண்ணமும் பரப்பிய பாவாடையின்மேல்; முன் இழிந்தருளிவந்தார் மூவுலகு உய்யவந்தார்=முன்னே இறங்கியருளிவந்தார் மூவுலகத்தாருமுய்ய அவதரித்த ஆளுடைய பிள்ளையார். (௧௨௨௬)

மறைக்குல மனையின்வாழ்க்கை மங்கலமகளி ரெல்லா
நிறைத்தநீர்ப் பொற்குடங்க ணிரைமணி விளக்குத்தூப
நறைக்குலமலர்சூழ் மாலைநறுஞ்சுடர் முளைப்பொற் பாண்டி
லுறைப்பொலிகலவை யேந்தியு டனெதிரேற்றுநின்றார்.

(இ-ள்.) மறைக்குலமனையின் வாழ்க்கை மங்கலமகளிர் எல்லாம்=மறையவர்குலத்தி லில்வாழ்க்கை நிலையின்கண் வாழ்தலையுடைய மங்கலத் தன்மைபொருந்திய பார்ப்பனிகளெல்லாம்; நிறைத்தநீர்ப் பொற் குடங்கள் நிரைமணிவிளக்கு=நீர் நிறைத்த பொன்னாலாகிய பூரணகும்பங்களையும் வரிசையாக அழகிய விளக்குகளையும்; தூபம் நறைக்குலமலர்சூழ்மாலை=தூபத்தோடு தேன்பொருந்திய உயர்ந்தமலர்களாற் றொடுத்த மாலைகளையும்; நறுஞ்சுடர் முளைப்பொன் பாண்டில்=நல்ல ஒளிபொருந்தியமுளைகளை வைத்த பொற்றட்டுகளையும்; உறைப்பொலி கலவை ஏந்தி உடன் எதிர்

Koviloor Digital Library

ஏற்றுநின்றார் = குழம்பாய்ப் பொலிவடைந்த கலவைச்சாந்தையுமேந்திக் கொண்டு எல்லாருமொருங்கு பிள்ளையாரை வரவெதிர்கொண்டு நின்றார்கள்.

ஆங்குமுன்னிட்ட செம்பொ னணிமணிப் பீடந்தன்னி
லோங்கிய ஞானவெள்ள முண்ணிறைந் தெழுந்ததென்னத்
தாங்கிய முத்தின்பைம்பூண் டண்ணிலா வெறிப்பவேறிப்
பாங்கொளிபரப்பிநின்றார் பரசமயங்கள்வீழ்த்தார்.

(இ-ள்.) ஆங்குமுன் இட்டசெம்பொன் அணிமணிப்பீடந்தன்னில்= அவ்விடத்தில் பிள்ளையார் திருமுன்னேயிடப்பட்ட சிவந்தபொன்னாற்செய்த அழகிய பீடத்தினிடத்து; ஓங்கிய ஞானவெள்ளம் உள்நிறைந்து எழுந்த தென்ன=உயர்ந்த சிவஞானமென்னும் வெள்ளமானது உள்ளத்து நிறைந்து புறத்துவழிந்தாற்போல; தாங்கிய முத்தின் பைம்பூண் தண்நிலா எறிப்ப= திருமேனியிற்றரித்த பசிய முத்தாபரணங்கள் குளிர்ந்த நிலவைவீச; ஏறிப் பாங்கு ஒளிபரப்பி நின்றார் பரசமயங்கள்வீழ்த்தார்=அப்பீடத்திலிவர்ந்தரு ளிப் பக்கங்களி லொளியைவீசி நின்றருளினார் புறச்சமயங்களையழித்த ஆளு டையபிள்ளையார்.—எ-று. பரசமயங்கள் வீழ்த்தார் தண்ணிலா வெறிப்ப ஏறி ஒளிபரப்பி நின்றாரெனக்கூட்டுக, (கஉஉஅ)

எதிர்வர வேற்றசாய லிளமயி லனையமாதர்
மதுரமங்கல முன்னூன வாழ்த்தொலி யெடுப்பவந்து
கதிர்மணிக் கரகவாசக் கமழ்புன லொழுக்கிக்காதல்
விதிமுறை வலங்கொண்டெய்தி மேவுநல்வினைகள் செய்தார்.

(இ-ள்.) எதிர்வரவு ஏற்றசாயல் இளமயில் அனையமாதர்=பிள்ளை யாரை எதிர்கொண்டுநின்ற இளமயில்போலுஞ் சாயலையுடைய அப்பார்ப்பன மகளிர்; மதுரமங்கலமுன் ஆனவாழ்த்தொலி எடுப்பவந்து=மதுரம்பொருந் திய மங்கலத்தை முன்னிட்ட வாழ்த்தொலிகள் மேம்படவந்து; கதிர்மணிக் கரகவாசக் கமழ்புனல் ஒழுக்கி=ஒளிபொருந்திய அழகிய கமண்டலத்திலு ள்ள வாசனைபொருந்திய நறும்புனலைத் திருமுன்னேபெய்து; காதல்விதி முறை வலங்கொண்டு எய்தி மேவுநல்வினைகள் செய்தார்=விருப்போடு விதிப் படி வலமாகவந்து பொருந்திய நீராஞ்சனமுதலிய மங்கலவினைகளைச்செய் தார்கள்.—எ-று. நீராஞ்சனம், திருட்டிதோட பரிகாரத்தின்பொருட்டுச் செய்யும் ஆலத்தி. (கஉஉக)

மங்கலம் பொலியவேந்தி மாதரார் முன்புசெல்லக்
கங்கையின் கொழுந்துசெம்பொ னிமவரை கலந்ததென்ன
வங்கவர் செம்பொன்மாடத் தாதிபூமியி னுட்புக்கா
ரெங்களை வாழமுன்னா ளேடுவைகையினி லிட்டார்.

Koviloor Digital Library

(இ-ள்.) மங்கலம் பொலிய ஏந்தி மாதரார்முன்புசெல்ல=அட்டமங்கலங்களைப் பொலியும்படி தாங்கிக்கொண்டு பார்ப்பனிகள் முன்னேசெல்ல; கங்கையின் கொழுந்துசெம்பொன் இமவரைகலந்தது என்ன=கங்கையினுடைய பிரவாகத்தாரை சிவந்த பொன்மலையான இமயத்திற்சேர்ந்தாற்போல; அங்கவர் செம்பொன்மாடத்து ஆதிபூமியினுள் புக்கார்=அவ்விடத்து நம்பாண்டார் நம்பியது சிவந்த பொன்னாலாகிய திருமாளிகையில் விவாகபூமியுட் புகுந்தருளினார்; எங்களைவாழ முன்னாள் ஏடுவைகையினில் இட்டார்=அடியேங்களை வாழச்செய்யும்பொருட்டு முன்னாளில் திருமுகப்பாசுரத்தை வைகையாற்றிலிட்டருளிய ஆளுடையபிள்ளையார்.—எ-று. பிள்ளையாரது தெய்வத்தன்மையுந்தூய்மையும் விளக்கிய அவரைக் கங்கையின் கொழுந்தெனவும்; அக்கொழுந்து தேவர்களையு மிரத்தினங்களையுந் திவ்வியோஷதிகளையுமுடைய மலையரசனென்று மிமயத்தன்றிச் செல்லாமைபோல் மணஞ்செய்யப் பிள்ளையாரெழுந்தருளிய நம்பாண்டார் நம்பியினது திருமாளிகையை அவருயர்வும் பெருமையுந் தோன்ற இமயமாகவும் உவமைகூறினர். (கஉ௱ம)

அகினறுந்தூபம் விம்மவணி கிளர்மணியால் வேய்ந்த
துகில்புனைவி தானநீழற்றூ மலர்த்தவிசின் மீது
நகிலணிமுத்து மாலைநகை முகமடவார் வாழ்த்த
இகலில் சீர்மறையோர் சூழவினிதினங் கிருந்தவேலை.

(இ-ள்.) அகில் நறுந்தூபம்விம்ம = அகிலந்துண்டுகளினது நறுமணம் பொருந்திய தூபமானது மேம்பட; அணிகிளர் மணியால்வேய்ந்த= அழகுவிளக்கு மிரத்தினங்களாலலங்கரித்த; துகில்புனைவிதானநீழல் = வஸ்திர மேற்கட்டியின்கீழ்; தூமலர்த்தவிசின்மீது = தூய்மை பொருந்தியபூந்தவிசின்மேல்; நகில் அணிமுத்தமாலை நகைமுகமடவார்வாழ்த்த = தனங்களின்மேலணிந்த முத்துமாலைகளையு மொளிபொருந்திய முகத்தையுமுடைய மகளிர் வாழ்த்தொலிகூற; இகலில் சீர்மறையோர்சூழ இனிதின் அங்கு இருந்த வேலை=மாறுபாடில்லாத சிறப்பினையுடைய மறையவர்கள் சூழும்படி யினிதாக அங்கு எழுந்தருளியிருந்தபொழுது.—எ-று. (கஉ௱க)

திருமகட் கொடுக்கப்பெற்ற செழுமறை முனிவர்தாமு
மருமையான் முன்செய் மெய்ம்மையருந்தவ மனைவியாரும்
பெருமகிழ்ச்சி யினற்பாதம் விளக்குவார் பிள்ளையார்முன்
னுரிமையால் வெண்பாற்றூ நீருடனெடுத் தேந்திவந்தார்.

(இ-ள்.) திருமகட்கொடுக்கப்பெற்ற செழுமறைமுனிவர்தாமும்=அழகமைந்த புதல்வியைக்கொடுக்கும்படிபெற்ற செழுமைபொருந்திய வேதங்களையுணர்ந்த நம்பாண்டார் நம்பியும்; அருமையால் முன்செய்மெய்ம்மை அருந்தவமனைவியாரும்=அப்புதல்வியைப் பெறுதற்கு அருமையோடு முன் செய்த மெய்ம்மையான பெரியதவத்தையுடைய அவர் மனைவியாரும்;

Koviloor Digital Library

பெருமகிழ்ச்சியி னூற் பாதம்விளக்குவார் பிள்ளையார்முன் = மிக்கமகிழ்ச்சியோடு பிள்ளையார் திருவடிகளை விளக்குங் கருத்துடையராய் ஆளுடையபிள்ளையார் திருமுன்பு; உரிமையால் வெண்பால் தூநீர் உடன் எடுத்து ஏந்தி வந்தார்=உரிமையுடன் வெள்ளியபாலைத்தூய நீருடனெடுத்துக்கையிலேந்திவந்தார்கள்.—எ-று. கொடுக்கு முதன்மை நம்பாண்டார் நம்பியதாதலில், அவர் தவந்தோன்றக் கொடுக்கப்பெற்ற மறைமுனிவரொன்றும்; அவர் கொடுக்க அப்புத்திரியைப்பெறுதல் அம்மனைவியார் தவமாதலில், முன்செய்மெய்ம்மையருந்தவமனைவியாரென்றுங் கூறினர். (௧௨௩௨)

வந்துமுன் னெய்தித்தாமுன் செய்தமாதவத்தி னன்மை
நந்துநம் பாண்டார்நம்பி ஞானபோனகர் பொற்பாதங்
கந்தவார் குழலினார்பொற்கரக நீரொடுத்து வார்ப்பப்
புந்தியானினை தியானம்புரி சடையா னென்றுன்னி.

(இ-ள்.) வந்துமுன் எய்தி=மனைவியாரோடும்வந்து பிள்ளையார் திருமுன்னடைந்து; தாம் முன்செய்த மாதவத்தின் நன்மை=தாமுற்பவத்திற் செய்த பெருந்தவத்தினது நன்மையானது; நந்துநம்பாண்டார் நம்பி=உயர்வடையும் நம்பாண்டார் நம்பியென்றுமறையவர்; ஞானபோனகர்பொற்பாதம்=ஆளுடையபிள்ளையாரது அழகிய திருவடிகளை; கந்தவார்குழலினார்பொற்கரகநீர் எடுத்துவார்ப்ப=வாசனைபொருந்திய நீண்ட அளகத்தையுடைய மனைவியார் பொன்னாலாகிய கரகத்திலிருக்கும் நீரையெடுத்துப்பெய்ய; புந்தியால் நினை தியானம் புரிசடையான் என்று உன்னி = மனதினாற்குறிக்குந்தியான முறைக்குப்பொருந்திய சடையையுடைய சிவபெருமானென்று கருதி.—எ-று. மகட்கொடுப்பான் பிள்ளையார் திருவடிகளை விளக்குகின்றாராதலில், அவர்செய்த நன்மை யப்போது மேன்மேலுயர்ந்தவென்பார், நன்மை நந்து நம்பாண்டார் நம்பியென்றும்; மணமகனைச் சிவபிரானாகப் பாவனைசெய்யு முறைமை அறமாமென்பார், புந்தியானினை தியானம் புரிசடையானென் றுன்னியென்றுங்கூறினர். (௧௨௩௩)

விருப்பினால் விளக்கிமிக்க புனிதநீர்தலை மேற்கொண்டு
பொருப்புறு மாடத்துள்ளும் புறத்துள்ளுந் தெளித்தபின்ன
ருருப்பொலி யுதரத்துள்ளும் பூரித்தாருவகை பொங்கி
யருப்புறு கிளைஞர்மேலுந் தெளித்தன ரார்வத்தோடும்.

(இ-ள்.) விருப்பினால் விளக்கிமிக்க புனிதநீர்தலைமேற்கொண்டு=விருப்போடு பிள்ளையார் திருவடிகளை விளக்கி மேலாய தூய்மைபொருந்திய பாததீர்த்தத்தைச் சிரமேற் றெளித்துக்கொண்டு; பொருப்புறு மாடத்துள்ளும் புறத்துள்ளும் தெளித்தபின்னர்=மலைபோலுமுயர்ந்த திருமாளிகையினுள்ளும் புறத்திலுந்தெளித்தபின்பு; உருப்பொலி உதரத்துள்ளும் பூரித்தார்=அழகமைந்தவயிற்றினுள்ளும் நிறைத்தார்; உவகைபொங்கி அருப்புறு

Koviloor Digital Library

கிளைஞர்மேலும் தெளித்தனர் ஆர்வத்தோடும்=விருப்புமிக்கு உரோமமுகிழ்த்தலைப் பெறாஞ் சுற்றத்தார்மேலும் பிரியத்தோடு தெளித்தார்.—எ-று. பாத தீர்த்தம் மிகத்தூயதாதலிற் புனிதநீரென்றார். அதை யுதரத்திற் பூரித்தல் அகத்தூய்மையாதற்பொருட்டு மேனைய இடங்களிற்றெளித்தல் புறந்தூய்மையாதற்பொருட்டென்றுங்கொள்க. அரும்பென்னுந் தல்விகுதி கெட்டமுதனிலைத்தொழிற்பெயர், அரும்பெனவிகாரமாய் நின்று உரோமமுகிழ்த்தலை யுணர்த்திற்று.மகிழ்ச்சியானு முரோமமுகிழ்த்தலில். (௧௨௬௪)

பெருகொளி ஞானமுண்ட பிள்ளையார் மலர்க்கைதன்னின்
மருவுமங்கல நீர்வாசக்கரக முன்னேந்தி வார்ப்பார்
தருமறைக் கோத்திரத்தின் றங்குலஞ்செப்பி யென்ற
னருநிதிப் பாவையாளைப் பிள்ளையார்க்களித்தே னென்றார்.

(இ-ள்.) பெருகு ஒளிஞானம் உண்ட பிள்ளையார் மலர்க்கைதன்னின்=மிக்க ஒளிபொருந்திய சிவஞான அமுதையுண்டருளிய ஆளுடைய பிள்ளையாரது மலர்போலுந் திருக்கரத்தில்; மருவும் மங்கல நீர்வாசக்கரகம் முன் ஏந்தி வார்ப்பார்=மங்கலம்பொருந்திய நீரைவாசனையோடும் பொற்கரகத்தில் திருமுன்னே தாங்கிக்கொண்டு வார்க்கும் நம்பாண்டார் நம்பி; தரும் மறைகோத்திரத்தின் தங்குலம் செப்பி=வேதத்திற்கூறுங் கோத்திரங்களுள் தமது கோத்திரத்தைச்செப்பி; என்றன் அரும் நிதிப்பாவையாளைப் பிள்ளையார்க்கு அளித்தேன் என்றார்=எனது அரிய நிதிபோலு மிக்கன்னிகையை கவுணியகோத்திரத்தவராகிய ஆளுடையபிள்ளையார்க்குக் கொடுத்தேனென்றுகூறினார்.—எ-று. இன்னகோத்திரத்தனாகிய இன்னான் என்புத்திரியை இன்னகோத்திரத்தனாகிய இன்னானுக்குக் கொடுக்கின்றேனெனமூவருக்கங் கூறிக்கொடுக்கும் வழக்குபற்றி இவ்வாறுகூறினர். (௧௨௬௫)

நற்றவக் கன்னியார்கை ஞானசம்பந்தர் செங்கை
பற்றுதற் குரியபண்பிற் பழுதினற்பொழுது நண்ணப்
பெற்றவருடன் பிறந்தார் பெருமணப் பிணையன்னாளைச்
சுற்றமுன் சூழ்ந்துபோற்றக் கொண்டுமுன் றுன்னினார்கள்.

(இ-ள்.) நற்றவக் கன்னியார்கை ஞானசம்பந்தர்செங்கை=நல்ல தவத்தையுடைய அக்கன்னிகையாரது திருக்கரத்தை ஆளுடையபிள்ளையார் தமது திருக்கரத்தால்; பற்றுதற்குரிய பண்பிற்பழுதில் நற்பொழுது நண்ண=பிடித்தற்குரிய குணத்தோடு கூடிய குற்றமற்ற நல்லமுகூர்த்தம்வர; பெற்றவர் உடன்பிறந்தார் பெருமணப்பிணை அன்னாளை=பெற்ற தாய்தந்தையரும்சகோதரரும் பெருமைபொருந்திய மணக்கோலங்கொண்ட மான்பிணைபோல்வாளை; சுற்றம் முன் சூழ்ந்து போற்றக் கொண்டுமுன் துன்னினார்கள்=சுற்றத்தார் முன்னே சூழ்ந்துவாழ்த்த அழைத்துக்கொண்டு மணச்சாலைமுன் வந்தார்கள்.—எ-று. (௧௨௬௬)

Koviloor Digital Library

ஏகமாஞ் சிவமெய்ஞ்ஞான மிசைந்தவர் வலப்பாலெய்தி
நாகமார் பணப்பேரல்கு னற்றவக் கொழுந்தன்னாை
மாகமார் சோதிமல்க மன்னிவீற்றிருந்த வெள்ளை
மேகமோடிசையு மின்னுக்கொடி யெனவிளங்க வைத்தார்.

(இ-ள்.) ஏகமாம் சிவமெய்ஞ்ஞானம் இசைந்தவர் வலப்பாலெய்தி= ஒன்றாகிய மெய்ம்மைபொருந்திய சிவஞானத்தைப்பெற்ற ஆளுடையபிள்ளையாரது வலப்பக்கத்து அடைந்து; நாகமார்பணப்பேர் அல்குல் நற்றவக் கொழுந்தன்னாை = பாம்பின்படம்போலும் பரந்த கடிதடத்தையுடைய நல்ல தவக்கொழுந்து போலு மப்பிராட்டியாரை ; மாகமார் சோதிமல்க மன்னிவீற்றிருந்த=விண்ணுலகத்து நிறைந்த ஒளிவிளங்கும்படி பொருந்தியிருந்த ; வெள்ளை மேகமோடு இசையும் மின்னுக்கொடியென விளங்கவைத்தார்=வெள்ளை நிறம்பொருந்திய மேகத்தோடு கூடியமின் கொடிபோல விளங்கும்படி வைத்தார்கள்.—எ-று. (கஉகஎ)

புனிதமெய்க் கோல நீடு புகலியர் வேந்தர்தம்மைக்
குனிசிலைப் புருவமென் பூங்கொம்பனா ருடனேகூட
நனிமிகக் கண்டபோதி னல்லமங் கலங்கள்கூறி
மனிதருந் தேவரானார் கண்ணிமை யாதுவாழ்த்தி.

(இ-ள்.) புனிதமெய்க்கோலம் நீடுபுகலியர் வேந்தர்தம்மை=பரிசுத்தமான திருமேனிப்பொலிவு மிக்குவிளங்குஞ் சீகாழித்தலைவராகிய ஆளுடைய பிள்ளையாரை; குனிசிலைப்புருவமென் பூங்கொம்பனார் உடனேகூட=வளைந்தசிலைபோலும் புருவத்தையுடைய மிருதுவான பூங்கொம்புபோலும் பிராட்டியாருடனே சேர ; நனிமிகக்கண்டபோதில் நல்லமங்கலங்கள் கூறி=மிக்கவியப்போடு தரிசித்தபொழுது நன்மைபொருந்திய மங்கல வாழ்த்துகளைக்கூறி; மனிதரும் தேவரானார் கண் இமையாதுவாழ்த்தி=மனிதர்களும் வானவர்களானார்கள் கண்ணிமையாது வாழ்த்துதல் செய்து.—எ-று. மனிதரும் மங்கலங்கள்கூறிக் கண்ணிமையாது வாழ்த்தித் தேவரானாரெனக்கூட்டுக. திருமணக்கோலத்தை மிக்க மகிழ்ச்சியால் கண்ணிமையாது நோக்கலில், கண்ணிமைப்போர் இயல்பால் கண்ணிமையாத தேவர்போலாயினரென்றது. (கஉகஅ)

பத்தியிற் குயிற்றும்பைம்பொற் பவளக்காற் பந்தர்நாப்பண்
சித்திரவிதானத்தின்கீழ்ச் செழுந்திருநீலநக்கர்
முத்தமிழ் விரகர்முன்பு முதன்மறை முறையினோடு
மெய்த்தநம் பெருமான்பாத மேவுமுள்ளத்தாற்செய்ய.

(இ-ள்.) பத்தியிற்குயிற்றும் பைம்பொற் பவளக்காற் பந்தர்நாப்பண்=வரிசையாலிழைத்த பசியபொன்னையுடைய பவளக்காற்பந்தரினடுவே; சித்திரவிதானத்தின்கீழ்ச் செழுந்திருநீலநக்கர்=பலநிறங்களோடு கூடியமேற்கட்டியின்கீழ் பெருமைபொருந்திய திருநீலநக்க நாயனார் ; முத்தமிழ்விரகர்முன்பு=முத்தமிழின் கூறுபாட்டையுணர்ந்த ஆளுடையபிள்ளையார் திரு

Koviloor Digital Library

முன்பு ; முதன்மறை முறையினோடு = முதன்மைபொருந்திய மறையிற்கூறுஞ் சடங்குகளை முறைமையால் ; மெய்த்தநம் பெருமான் பாதமேவும் உள்ளத்தாற் செய்ய = மெய்ம்மைபொருந்திய நமது பெருமானாகிய முத்தித்தியாகரது திருவடிகளில் கலந்த உள்ளத்தோடு செய்யவும்.—எ-று. (௧௨௩௯)

மறையொலிபொங்கி யோங்க மங்கலவாழ்த்துமல்க
நிறைவளைச் செங்கைபற்ற நேரிழையவர்முனந்தப்
பொறைபணி முந்நூன்மார்பர் புகரில்வெண் பொரிகையட்டி
யிறைவரை யேத்தும்வேலை யெரிவலங் கொள்ளவேண்டி.

(இ-ள்.) மறையொலி பொங்கியோங்க மங்கலவாழ்த்துமல்க=வேதங்களினோசை மேற்பட்டோங்கவும் மங்கலவாழ்த்துக்க ளிருமருங்கும் நிறையவும் ; நிறைவளைச் செங்கைபற்ற=நிறைந்த வளையலையணிந்த அப்பிராட்டியாரது திருக்கரத்தைப் பிடிக்குங்கால் ; நேரிழையவர்முன்=நேர்ந்த ஆபரணங்களையணிந்த அப்பிராட்டியார் முன்பு ; அந்தப் பொறையணி முந்நூல்மார்பர்=முந்நூலின் பொறையையணிந்த மார்பையுடைய அந்தத் திருநீலநக்கநாயனார் ; புகரில்வெண் பொரி கையட்டி=குற்றமற்ற வெள்ளிய பொரியைக் கையால் ஹோமத்தியிற்பெய்து ; இறைவரை ஏத்தும்வேலை=சிவபிரானைத் துதிக்குஞ் சமயத்து ; எரிவலங் கொள்ளவேண்டி = ஓமாக்கினியை வலமாகவர விரும்பி.—எ-று. (௧௨௪௰)

அருப்புமென் முலையினார்த மணிமலர்க் கைபிடித்தங்
கொருப்படு முடையபிள்ளை யார்திரு வுள்ளந்தன்னில்
விருப்புறு மங்கியாவார் விடையுயர்த் தவரேயென்று
திருப்பெரு மணத்தைமேவுஞ் சிந்தையிற் றெளிந்துசெல்வார்.

(இ-ள்.) அருப்புமென் முலையினார்தம் அணிமலர்க்கை பிடித்து=அரும்புபோலு மிருதுவான முலையையுடைய அப்பிராட்டியாரது அழகிய மலர்போலுங் கையைத் திருக்கரத்தாற்பற்றி ; ஒருப்படும் உடையபிள்ளையார் திருவுள்ளம் தன்னில்=வலம்வருதற் கொருப்பட்ட ஆளுடையபிள்ளையார் தமது திருவுள்ளத்தின்கண் ; விருப்புறும் அங்கியாவார் விடை உயர்த்தவரே என்று=விரும்பத்தக்க வன்னிமூர்த்தியாயு மிருப்பவர் இடபக்கொடியையுயர்த்த சிவபெருமானேயென்று ; திருப்பெரு மணத்தைமேவும் சிந்தையிற்றெளிந்து செல்வார் = திருநல்லூர்ப் பெருமணமென்னு மாலயத்தையடைகின்ற திருவுள்ளத்தோடு தெளிந்து செல்வாராய்.—எ-று. (௧௨௪௧)

மந்திரமுறையாலுய்த்த வெரிவலமாகமாதர்
தந்திருக்கைபைப்பற்றுந் தாமரைச்செங்கையாள
சிந்தையில் லொழுக்கம்வந்து சூழ்ந்ததே யிவடன்னோடு
மந்தமில் சிவன்றாள் சேர்வனென்று மாதாவுபொங்க.

Koviloor Digital Library

(இ-ள்.) மந்திரமுறையால் உய்த்த எரிவலமாக = மந்திரவிதியால் வளர்த்த அவ்வக்கினியை வலமாகும்பொழுது; மாதர் தந்திருக்கையைப் பற்றும் தாமரைச் செங்கையாளர் = அப்பிராட்டியாரது திருக்கரத்தைப் பிடிக்குந் தாமரைமலர்போலுந் திருக்கரத்தையுடைய ஆளுடையபிள்ளையார்; இந்த இல்லொழுக்கம் வந்து சூழ்ந்ததே = இந்த இல்வாழ்க்கை நிலையானது எம்மை வந்தடைந்ததே; இவள் தன்னோடும் அந்தமில் சிவன்தாள் சேர்வன் என்னும் ஆதரவு பொங்க = இப்பத்தினியோடு மழிவில்லாத சிவபெருமானது திருவடிகளை யடைவேனென்னும் விருப்பானது மேம்பட.—எ-று. சூழ்ந்ததெ என்றது சூழ்தல் பழுதென்பது குறித்து நின்றது. (௧௨௪௨)

மலர்பெருங் கிளையுந்தொண்டர் கூட்டமு மல்கிச்சூழ
வலகின்மெய்ஞ் ஞானத்தெல்லை யடைவுறுங் குறியாலங்க
ணுலகினெம் மருங்குநீங்க வுடனணைந்தருள வேண்டிக்
குலமணம் புரிவித்தார்தங் கோயிலை நோக்கிவந்தார்.

(இ-ள்.) மலர்பெருங்கிளையும் தொண்டர்கூட்டமும் மல்கிச்சூழ = மிக்கபெரிய உறவினரு மடியார் கூட்டமும் நெருங்கிச்சூழும்படி; அலகில் மெய்ஞ்ஞானத்து எல்லை அடைவுறும் குறியால் = அளவுபடாத சிவஞானத்தினது வரம்பை யடையுங் குறிப்பினால்; அங்கண் உலகின் எம்மருங்கும் நீங்க = அவ்விடத்து உலகங்களில் எவ்வுலகமுந் தன்னை நீங்க; உடன் அணைந்து அருளவேண்டி = சிவபிரானுடன் தாமடைந் தருளுதலைக்கருதி; குலமணம் புரிவித்தார்தங் கோயிலைநோக்கிவந்தார் = குலத்திற்கிசைந்த திருமணத்தைச் செய்வித்த முத்தித்தியாகரொழுந்தருளும் திருக்கோயிலைக் குறித்து வந்தருளினார்.—எ-று. பத்தியிற்குயிற்றும் என்பதுமுதல் இதுகாறைந்துசெய்யுளுங் குளகம். சாலோகமாதிபத முத்திகளு நீங்கவென்பார், உலகினெம்மருங்கு நீங்கவென்றும்; சாயுச்சியமென்னும் பரமுத்தியையடைய வென்பார்; உடனணைந்தருளவென்றுங் கூறினர். (௧௨௪௩)

சிவனமர்ந்தருளுஞ் செல்வத்திருப்பெரு மணத்துளெய்தித்
தவநெறிவளர்க்க வந்தார்தலைப்படுஞ் சார்வுநோக்கிப்
பவமறவென்னை முன்னாளாண்ட வப்பண்புகூட
நவமலர்ப் பாதங்கூட்டு மென்று நல்லுணர்வுநல்க.

(இ-ள்.) சிவன்அமர்ந்தருளும் செல்வத்திருப்பெருமணத்துள் எய்தி = முத்தித்தியாகரொழுந்தருளும் செல்வம் நிறைந்த திருநல்லூர்த் திருப்பெருமணமென்று மாலயத்திலெழுந்தருளி; தவநெறி வளர்க்கவந்தார் தலைப்படுஞ் சார்வுநோக்கி = தவமார்க்கத்தை வளர்க்கும்படி அவதரித்த ஆளுடையபிள்ளையார் தாம் பரமுத்தியிற் றலைப்படுதற்குக் காரணமான திருவருட்சார்பைக் குறித்து; பவமறவென்னைமுன்னாள் ஆண்ட அப்பண்புகூட = பிறவிநீங்க என்னை முன்னாளில் அடிமைகொண்ட அத்திருவருளுக்கு இயைய; நவம

Kovilpoor Digital Library

வற்பாதங்கூட்டும் என்றும் நல்லுணர்வு நல்க=புதிதான தாமரைமலர்போலுந் திருவடியை யடைவிக்குமென்றும் நல்ல மெய்யுணர்வானது திருவுள்ளத்ததிக்க.—எ-று. (௧௨௪௪)

காதன்மெய்ப் பதிகங்கல்லூர்ப் பெருமணமெடுத்துக் கண்டோர்
தீதுறுபிறவிப்பாசந் தீர்த்தல்செம் பொருளாக்கொண்டு
நாதனேநல்லூர்மேவும் பெருமண நம்பனேயுன்
பாதமெய்ந் நீழல்சேரும் பருவமீ தென்றுபாட.

(இ-ள்.) காதன்மெய்ப்பதிகம் கல்லூர்ப் பெருமணம் எடுத்து=விருப்புமிக்க மெய்ம்மைபொருந்திய திருப்பதிகத்தைக் "கல்லூர்ப்பெருமணம்" என முதலெடுத்து; கண்டோர்தீதுறுபிறவிப்பாசந் தீர்த்தல்செம் பொருளாக்கொண்டு = அத்திருப்பதிகத்தில் தம்மை அத்திருமணத்திற் றரிசித்தவர்களது குற்றம்பொருந்திய பிறவிக்குக் காரணமானமலமாயைகன்மங்களைநீக்குதலைச் செப்பமான பொருளாகக்கொண்டு; நாதனே நல்லூர்மேவும் பெருமண நம்பனே=எல்லாவற்றிற்குங் காரணரே திருநல்லூரின் கண்ணுள்ளபெருமணமென்னு மாலயத்தின்கண்ணெழுந்தருளியவரே ; உன்பாதமெய்ந் நீழல்சேரும் பருவமீதென்றுபாட=உனது திருவடியாகிய மெய்ம்மை பொருந்திய நிழலை யடையும் பருவமிதுவென்று பாடியருள.—எ-று. (௧௨௪௫)

நல்லூர்ப்பெருமணம் - பண் - அந்தாளிக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.


கல்லூர்ப்பெருமணம் வேண்டாகழுமலம்
பல்லூர்ப்பெருமணம் பாட்டுமெய்யாய்த்தில
சொல்லூர்ப்பெருமணஞ் சூடலரேதொண்டர்
நல்லூர்ப்பெருமணமேய நம்பானே. (௧)

தருமணலோதஞ் சேர்தண்கடனித்திலம்
பருமணலாக்கொண்டு பாவைநல்லார்கள்
வருமணங்கூட்டி மணஞ்செயுநல்லூர்ப்
பெருமணத்தான் பெண்ணோர்பாகங் கொண்டானே.

அன்புறுசிந்தை யராகியடியவர்
நன்புறுநல்லூர்ப் பெருமணமேவிநின்
றின்புறுமெந்தை யிணையடியேத்துவார்
துன்புறுவாரல்லர் தொண்டுசெய்வாரே. (௩)

வல்வியந்தோலுடை யார்ப்பதுபோர்ப்பது
கொல்லியல்வேழத் துரிவிரிகோவணம்

Koviloor Digital Library



திருஞானசம்பந்தசுவாமிகள் திருமணம்.

Koviloor Digital Library

நல்லியலார்தொழு நல்லூர்ப்பெருமணம்
புல்கியவாழ்க்கை யெம்புண்ணியனுர்க்கே. (ச)

ஏறுகந்தீர்கொட்டெரி யாடிவெண்
ணீறுகந்தீர்நிரையார் விரிதேன்கொன்றை
நாறுகந்தீர்திரு நல்லூர்ப்பெருமணம்
வேறுகந்தீருமை கூறுகந்தீரே. (ரு)

சிட்டப்பட்டார்க்கெளியான் செங்கண்வேட்டுவப்
பட்டங்கட்டுஞ்சென்னி யான்பதியாவது
நட்டக்கொட்டாட்டறு நல்லூர்ப்பெருமணத்
திட்டப்பட்டாலொத்திரா லெம்பிரானீரோ. (சா)

மேகத்தகண்டனென்றோளன் வெண்ணீற்றுமை
பாகத்தன்பாய் புலித்தோலொடுபந்தித்த
நாகத்தனல்லூர்ப் பெருமணத்தானல்ல
போகத்தன்யோகத்தையே புரிந்தானே. (எ)

தக்கிருந்தீரன்று தாளாலரக்கனை
யுக்கிருந்தொல்கவுயர் வரைக்கீழிட்டு
நக்கிருந்தீரின்று நல்லூர்ப்பெருமணம்
புக்கிருந்தீரொமைப் போக்கருளீரோ. (அ)

ஏலுந்தண்டாமரை யானுமியல்வுடை
மாலுந்தம்மாண்பறி கின்றிலர்மாமறை
நாலுந்தம்பாட் டென்பர்நல்லூர்ப்பெருமணம்
போலுந்தங்கோயில் புரிசடையார்க்கே. (கூ)

ஆதரமணொடுசாக்கியர் தாஞ்சொல்லும்
பேதைமைகேட்டுப் பிணக்குறுவீர்வம்மி
னுதனைநல்லூர்ப் பெருமணமேவிய
வேதனதாடொழ வீடெளிதாமே. (கம)

நறும்பொழிற்காழி யுள்ஞானசம்பந்தன்
பெறும்பதநல்லூர்ப் பெருமணத்தானை
யுறும்பொருளாற் சொன்னவொண்டமிழ் வல்லார்க்
கறும்பழிபாவ மவலமிலாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - சிவலோகத்தியாகர். தேவியார் - உமையம்மை.

Koyiloor Digital Library

தேவர்கள் தேவர்தாமுந் திருவருள் புரிந்து நீயும்
பூவையன் னாருமிங்குன் புண்ணிய மணத்தின்வந்தார்
யாவருமெம்பாற்சோதி யிதனுள்வந் தெய்துமென்று
மூவுல கொளியால்விம்ம முழுச்சுடர்த் தாணுவாகி.

(இ-ள்.) தேவர்கள் தேவர்தாமுந் திருவருள்புரிந்து=தேவர்கட்கெல்லாம் அதிதேவராகிய சிவலோகத்தியாகரும் பிள்ளையாரது வேண்டுகோட்கிசையத்திருவருள்செய்து; நீயும் பூவை அன்னாரும்=நீயும் நாகணவாய்ப்புட்போல மொழியினையுடைய உனது பன்னியும்; இங்கு உன் புண்ணியமணத்தின்வந்தார் யாவரும்=இங்கே உனது புண்ணியருபமான திருமணத்தில் வந்த எல்லாரும்; எம்பாற்சோதியிதனுள் வந்தெய்துமென்று = எம்மிடத்திற்றோன்றும் ஒளிப்பிழம்பினிடத்துவந்தடையுங்களென்று; மூவுலகொளியால்விம்ம முழுச்சுடர்த்தாணுவாகி=மூவுலகும் தன்னொளியினால் விளங்க நிறைந்த திவ்வியசோதிலிங்கமாய்.—எ-று. எம்பால் என்பதனால், அவ்வாலயத்தில் சிவலிங்கப்பெருமானிடத்தினின்றுதித்த தென்றும்; சோதியென்றதனால், ஒளியாலனேக சூரியர்கள்போலவும், தண்மையினாலனேக சந்திரர்கள் போலவும், நிறைந்த ஒளியென்றுமாம். (கஉசசு)

கோயிலுட் படமேலோங்குங் கொள்கையாற் பெருகுஞ்சோதி
வாயிலை வகுத்துக்காட்ட மன்னுசீர்ப் புகலிமன்னர்
பாயினவொளியானீடு பரஞ்சுடர்த் தொழுது போற்றி
மாயிரு ஞாலமுய்ய வழியினை யருளிச்செய்வார்.

(இ-ள்.) கோயிலுட்படமேலோங்குங் கொள்கையாற் பெருகுஞ்சோதி=திருக்கோயில் தன்னுள்ளடங்க அதன்மேலுமுயர்ந்த குணத்தினால் மிக்க அந்த ஞானலிங்கமானது; வாயிலைவகுத்துக்காட்ட=தன்னிடத்திலோர் திருவாயிலைப்பகுத்துக்காட்ட; மன்னுசீர்ப்புகலிமன்னர்=நிலைபெற்ற புகழையுடைய சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார்; பாயினஒளியால்நீடு பரஞ்சுடர்த்தொழுதுபோற்றி=பரம்பிய திவ்விய ஒளிப்பிழம்போடுவளர்ந்த அச்சிவபரஞ்சுடரை நிலமுறச் சாஷ்டாங்கமாய்ப் பணிந்துதுதித்து; மாயிரு ஞாலமுய்ய வழியினையருளிச்செய்வார்=மிக்கபெருமைபொருந்திய உலகத்திலுள்ளார் உய்யும்பொருட்டுமுத்திசாதனநெறியை அருளிச்செய்வாராயினர்.

ஞானமெய்ந் நெறிதான்யார்க்கும் நமச்சிவாயச் சொலாமென்
றானசீர் நமச்சிவாயத் திருப்பதிகத் தையங்கண்
வானமு நிலனுங்கேட்க வருள்செய்திம் மணத்தில் வந்தோ
ரீனமாம்பிறவிதீர யாவரும் புகுகவென்ன.

(இ-ள்.) ஞானமெய்ந்நெறிதான்யார்க்கும் நமச்சிவாயச் சொலாமென்று=சிவஞானத்தைக் கொடுக்குமுண்மைநெறியாவது எவ்வகையார்க்கும்

Koviloor Digital Library

திருவைந்தெழுத்தேயாமென்று; ஆனசீர் நமச்சிவாயத் திருப்பதிகத்தை அங் கண்=சிறப்பமைந்த நமச்சிவாயத்திருப்பதிகத்தை அவ்விடத்து ; வானமும் நிலனும்கேட்க அருள்செய்து=விண்ணுலகத்தாரும் மண்ணுலகத்தாரும் கேட் கும்படிஅருளிச்செய்து ; இம்மணத்தில்வந்தோர்=இத்திருமணத்தில்வந்தவர் கள்; யாவரும் ஈனமாம்பிறவிதீரப்புகுக என்ன=எல்லாரும் துன்பத்தை விளை விக்கும்பிறவி நோயானது நீங்கும்படி புகக்கடவீரென்று அருளிச்செய்ய.

நமச்சிவாயத்திருப்பதிகம் - பண் - கவுசிகம்.

திருச்சிற்றம்பலம்.

காதலாகிக்கசிந்து கண்ணீர்மல்கி
யோதுவார்தமை நன்னெறிக்குய்ப்பது
வேதநான்கினு மெய்ப்பொருளாவது
நாதனுமநமச்சி வாயவே. (க)

நம்புவார்நமர் நாமநவிற்றினல்
வம்புநாண்மலர் வார்மதுவொப்பது
செம்பொனார்தில தம்முலகுக்கெலா
நம்பனும நமச்சிவாயவே. (உ)

நெக்குளார்வ மிகப்பெருகிநினைந்
தக்குமாலைகொடங்கையி லெண்ணுவார்
தக்கவான வராத்தகுவிப்பது
நக்கனும நமச்சிவாயவே. (ங)

இயமன்றூதரு மஞ்சுவரின்சொலா
னயம்வந்தோத வல்லார்தமைநண்ணினு
னியமந்தானினை வார்க்கினியானெற்றி
நயனனும நமச்சிவாயவே. (ச)

கொல்வாரேனுங் குணம்பலநன்மைக
ளில்லாரேனு மியம்புவராயிடி
லெல்லாத்தீங்கையு நீக்குவரென்பரா
னல்லார்நாம நமச்சிவாயவே. (ரு)

மந்தராமன்ன பாவங்கண்மேவிய
பந்தனையவர்தா மும்பகர்வரேற்
சிந்தும்வல்வினை செல்வமுமல்குமா
நந்திநாம நமச்சிவாயவே. (சா)

Koviloor Digital Library

நரகமேழ்புக நாடினராயினு
முரைசெய்வாயின ராயினுருத்திரர்
நிரவிபேபுகு வித்திடுமென்பாரால்
வரதனும நமச்சிவாயவே. (எ)

இலங்கைமன்ன னெடுத்தவடுக்கன்மேற்
றலங்கொள்கால் விரல்சங்கரனூன்றலு
மலங்கிவாய்மொழி செய்தவனுய்வகை
நலங்கொணும நமச்சிவாயவே. (அ)

போதன்போதன கண்ணனுமண்ணறன்
பாதந்தான்முடி நேடியபண்பரா
யாதுங்காண்பரி தாகியலந்தவ
ரோதுநாம நமச்சிவாயவே. (௯)

கஞ்சிமண்டையர் கையினுண்கையர்கள்
வெஞ்சொன்மிண்டர் விரவிலரென்பரால்
விஞ்சையண்டர்கள் வேண்டவமுதுசெய்
நஞ்சுண்கண்ட னமச்சிவாயவே. (௧0)

நந்திநாம நமச்சிவாயவெனுஞ்
சந்தையாற்றமிழ் ஞானசம்பந்தன்சொற்
சிந்தையான்மகிழ்ந்தேத்தவல்லாரெல்லாம்
பந்தபாசமறுக்க வல்லார்களே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

வருமுறைப் பிறவிவெள்ளம் வரம்புகாணாதழுந்தி
யுருவெறுந் துயரக்கூட்டி லுணர்வின்றி மயங்குவார்க
டிருமணத் துடன்சேவித்து முன்செலுஞ் சிறப்பினாலே
மருவிய பிறவிநீங்க மன்னுசோதியி னுட்புக்கார்.

(இ-ள்.) வருமுறைப்பிறவி வெள்ளம் வரம்புகாணாதழுந்தி = அலை போல் மாறிவரும் முறைமையினையுடைய பிறவிக்கடலின் கரையைக்காணாம லதனுள்ளழுந்தி; உருவெறுந் துயரக்கூட்டில் உணர்வின்றிமயங்குவார்கள் = உடம்பென்னுந் துயர்க்கிடமான கூட்டினுள் அறிவின்றி மயங்குமனிதர்கள்; திருமணத்துடன் சேவித்து முன்செலும் சிறப்பினாலே = பிள்ளையார் திருமணத்தோடு சேவைசெய்து அவர் திருமுன் வருஞ்சிறப்பினால்; மருவிய பிறவிநீங்க மன்னுசோதியினுட்புக்கார் = தம்மையடைந்த பிறவியானது நீங்கும்படி நிலைபெற்ற அச்சோதிலிங்கத்தினுள்ளே புகுந்தார்கள்.—எ-று. (௧உ௬௧)

Koviloor Digital Library

சீர்பெருகு நீலநக்கர் திருமுருகர் முதற்றொண்ட
ரேர்கெழுவு சிவபாதவிருதயர் நம்பாண்டார்சீ
ரார்திருமெய்ப் பெரும்பாணர் மற்றெனையோ ரணைந்துளோர்
பார் நிலவு கிளைசூழப் பன்னி களோடுடன் புக்கார்.

(இ-ள்.) சீர்பெருகு நீலநக்கர் திருமுருகர் முதற்றொண்டர்=சிறப்பு மிக்க திருநீலநக்கநாயனார் திருமுருகநாயனார் முதலடியார்களும்; ஏர்கெழுவு சிவபாத இருதயர் நம்பாண்டார்=அழகமைந்த சிவபாத இருதயரும் நம்பாண்டார் நம்பியும்; சீரார்திருமெய்ப்பெரும்பாணர்=புகழ்நிறைந்த திருநீலகண்டப்பெரும்பாணரும்; மற்றெனையோர் அணைந்துளோர் = வந்தவர்களாகிய ஏனையோர்களும்; பார்நிலவு கிளைசூழப் பன்னிகளோடுடன்புக்கார்= நிலவுலகின்கண் விளங்குகின்ற சுற்றத்தார் சூழும்படி பத்தினிகளுடன்புகுந்தார்கள்.—எ-று. (கஉ௫0)

அணிமுத்தின் சிவிகைமுத லணிதாங்கிச் சென்றோர்கள்
மணிமுத்த மாலைபுனை மடவார் மங்கலம் பெருகும்
பணிமுற்று மெடுத்தார்கள் பரிசனங்கள் வினைப்பாசந்
துணிவித்தவுணர் வினராய்த்தொழுதுடன் புக்கொடுங்கினர்.

(இ-ள்.) அணிமுத்தின் சிவிகைமுதல் அணிதாங்கிச்சென்றோர்கள்= அழகிய திருமுத்தின் சிவிகைமுதலான விருதுகளைத் தாங்கிச்சென்றவர்களும்; மணிமுத்தமாலைபுனைமடவார் = மணிகளோடு கூடிய முத்துமாலையையணிந்த மகளிரும்; மங்கலம்பெருகும் பணிமுற்றும் எடுத்தார்கள் பரிசனங்கள்=மங்கல மிக்க நீராஞ்சன முதலிய பணிகள் முழுவதையும் எடுத்த மகளிர்களும் பணிவிடைக்காரர்களும்; வினைப்பாசம் துணிவித்த உணர்வினராய்த் தொழுதுடன் புக்கொடுங்கினர்=தீவினையை விளைக்கும் ஆணவமலத்தைக் கெடுத்த அறிவினையுடையராய் வணங்கி ஒருங்குகூடி ஒளியினுட் புகுந்து சிவபிரானிடத்து ஒடுங்கினர்கள்.—எ-று. (கஉ௫க)

ஆறுவகைச் சமயத்திலருந்தவரு மடியவருங்
கூறுமறை முனிவர்களுங் கும்பிடவந்தணைந்தாரும்
வேறுதிருவருளினால் வீடுபெற வந்தாரு
மீறில்பெருஞ் சோதியினு ளெல்லாரும் புக்கதற்பின்.

(இ-ள்.) ஆறுவகைச்சமயத்தில் அருந்தவரும் அடியவரும் = சைவ முதலிய உட்சமயமாறின்வழி யொழுகும் அரியதவத்தையுடையவர்களும் அடியவர்களும்; மறைகூறு முனிவர்களும் கும்பிடவந்தணைந்தாரும்=வேதங்களையோதும் முனிவர்களும் திருமணம் தரிசிக்கவந்தவர்களும்; வேறுதிருவருளினால் வீடுபெறவந்தாரும்=இவர்கட்கு வேறாய திருவருள் வசத்தால் வீட்டை யடையவந்தவரும்; ஈறில் பெருஞ்சோதியினுள் எல்லாரும் புக்கத

Koviloor Digital Library

ந்பின்=அழிவில்லாத பெரிய அச்சோதிலிங்கத்திருள் அனைவரும் புகுந்த பின்பு.—எ-று. (௧௨௫௨)

காதலியைக் கைப்பற்றிக் கொண்டுவலங் கொண்டருளித்
தீதகற் றவந்தருளுந் திருஞானசம்பந்தர்
நாதனெழில் வளர்சோதி நண்ணியதனுட் புகுவார்
போதநிலை முடிந்தவழிப் புக்கொன்றியுடனானார்.


(இ-ள்.) காதலியைக்கைப்பற்றிக்கொண்டு வலங்கொண்டருளி=பத்தினியாரைத் திருக்கரத்தாற்பிடித்துக்கொண்டு அச்சோதிலிங்கத்தைவலமாக வந்து; தீதகற்றவந்தருளும் திருஞானசம்பந்தர்=குற்றத்தை யாவர்க்கும் நீக்கும்படி அவதரித்த ஆளுடையபிள்ளையார்; நாதன் எழில்வளர்சோதி நண்ணியதன் உட்புகுவார்=சிவபிரானது அழகு மிக்க சோதிலிங்கத்தையடைந்து அதனுள்ளேபுகுந்து; போதநிலைமுடிந்தவழிப் புக்கொன்றியுடனானார்=சிவபோதம் முடிந்தபோதாந்தமென்னும் வழியில் புகுந்து சிவபிரானுடன் கலந்து ஒன்றானார்.—எ-று. ஒன்றி என்பதனால் தமது வியாபகவறிவுவிளங்கப்பெற்றார் எனவும், உடனானார் என்றதனால், ஒத்து நிற்கும் அத்துவிதவியல்புடையரானாரெனவுங்கொள்க. ஒன்றி உடனாய் நிற்கும் அத்துவிதவியல்பு தம்மைப்போற்று மடியார்க்கின்பளிப்பதொன்றாம் திருக்கடைக்காப்பாலுணர்க. ()

பிள்ளையா ரெழுந்தருளிப்புக்கதற்பின் பெருங்கூத்தர்
கொள்ளுநீடிய சோதிக்குறிநிலை யவ்வழிகரப்ப
வள்ளலார் தம்பழைய மணக்கோயி றோன்றுதலுந்
தெள்ளுநீ ருலகத்துப்பெற்றிலார் தெருமந்தார்.

(இ-ள்.) பிள்ளையாரெழுந்தருளிப் புக்கதற்பின் = ஆளுடையபிள்ளையார் அச்சோதியினுள் கலந்துடனானபின்; பெருங்கூத்தர்கொள்ளும் நீடிய சோதிக்குறிநிலை அவ்வழிகரப்ப=பெரிய பஞ்சகிருத்திய நிருத்தஞ்செய்தருளும் சிவபிரான்கொண்ட நீண்ட சோதிலிங்கத்தின் நிலைமை அவ்விடத்து மறைய; வள்ளலார்தம் பழையமணக்கோயில் தோன்றுதலும்=முத்தித்தியாகேசரது பழமையான நல்லூர்ப்பெருமண மென்னும் ஆலயம் வெளிப்படவும்; தெள்ளுநீர் உலகத்துப் பெற்றிலார் தெருமந்தார்=தெளிவுபொருந்திய கடல்சூழ்ந்த நிலவுலகத்து அப்பெரும்பேற்றை யடையாதாரெல்லாரும் மனமயக்கமடைந்தார்.—எ-று. முன்தாணுவாம் என்றதனாலும், ஈண்டு சோதிக்குறிஎன்றதனாலும் அது, ஓர்ஜோதிலிங்கஸ்தம்பாகிருதி உடையதென்றுணர்க.

கண்ணுதலார் திருமேனியுடன்கூடக் கவுணியனார்
நண்ணியது தூரத்தேகண்டு நலுகப்பெறு
விண்ணவரு முனிவர்களும் விரிஞ்சனே முதலோரு
மெண்ணியவரே சரவுதிரவெடுத் தேத்தினார்.

Koviloor Digital Library



பிள்ளையார் அடியார் திருக்கூட்டத்துடன் சோதியிற்கலந்தது (மோட்சம்)

Koviloor Digital Library

இ-ள்.) கண்ணுதலார்திருமேனி உடன்கூடக்கவுணியனுர்=சிவபிரானது சிவரூபத்துடன் ஆளுடையபிள்ளையார் கலந்துடனானதை; தூரத்தே கண்டு ஈனுகப்பெரு=தூரத்தே தரிசித்துத் தாமதனைப்பெருத; விண்ணவரும் முனிவர்களும் விரிஞ்சனே முதலோரும்=தேவர்களும் இருடிகளும் பிரமன் மால் முதலியோருமாகிய எண்ணிறந்தவர்களும்; ஏசரவுதீர எடுத்து ஏத்தினர்=தமது மனத்துயர் நீங்கப் பிள்ளையார் பெருமையை எடுத்துத்துதித்தார்கள்.—எ-று. (கஉருரு)

அருந்தமிழா கரர்சரிதை யடியேனுக் கவர்பாதந்
தரும்பரிசா லறிந்தபடி துதிசெய்தேன் ருரணிமேற்
பெருங்கொடையுந் திண்ணனவும் பேருணர்வுந் திருத்தொண்டால்
வருந்தகைமைக் கலிக்காம ஞர்செய்கை வழுத்துவேன்.

(இ-ள்.) அருந்தமிழாகரர் சரிதை=அரியதமிழ் பிறத்தற்கிடமான ஆளுடையபிள்ளையாரது சரித்திரத்தை; அடியேனுக்கு அவர் பாதம் தரும்பரிசால்=அடியேனுகிய எனக்கு அவரது திருவடிதந்த திருவருள் விளக்கத்தால் அறிந்தபடி துதிசெய்தேன்=யான் அறிந்தவாறு துதித்தேன்; தாரணிமேல் பெருங்கொடையும் = நிலவுலகின்கண் மிகுகொடையும்; திண்ணனவும் = உறுதிப்பாடான பத்தியும்; பேருணர்வும்=பெரிய மெய்யுணர்ச்சியும்; திருத்தொண்டால்வரும் தகைமைக்கலிக்காமனர் செய்கைவழுத்துவேன்=திருத்தொண்டாலாய பெருமையினையுமுடைய ஏயர்கோன் கலிக்காமநாயனாரது திருத்தொண்டைமேற் கூறுவேன்.—எ-று. (கஉருசு)

திருச்சிற்றம்பலம்.

உலகெலாமுணர்ந்தோதற்கரியவ
னிலவுலாவியநீர்மலிவேணிய
னலகில்சோதியனம்பலத்தாடுவான்
மலர்சிலம்படிவாழ்த்திவணங்குவாம்.

திருச்சிற்றம்பலம்.

ஆளுடையபிள்ளையார்புராணமுற்றிற்று.

சென்னபட்டணம் பெத்துநாயக்கன்பேட்டை அண்ணாபிள்ளைவீதி
கஎ-வது கதவிலக்க வீட்டில் சி. த. முத்தையபிள்ளை அவர்களது
ஸ்ரீவரஸ்ஷாமிர்த அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

Koviloor Digital Library

சிவமயம்.

தலத்தின் அட்டவணையும் அவ்வப்பதியிலோதிய பண்ணும் தேவாரமுதலடியும்.

பக்கம்.	தலம்.	பண்.	பதிகமுதலடியும்.
௩௮	* திருப்பிரமபுரம் ...	நட்டபாடை ...	தோடுடையசெவியன்விடையேறியோர்தூவெண்மதி
௫௧	* திருக்கோலக்கா ...	தக்கராகம் ...	மடையில்வாளைபாயமாதரார். [குடி.
௫௫	சீகாழி ...	தக்கராகம் ...	பூவார்கொன்றைப்புரிபுன்சடையீர்.
,,	திருக்கழுமலம்-திருத்தாளச்சதி ...	வியாளக்குறிஞ்சி ...	பந்தத்தால்வந்தெப்பால்பயின்றுநின்றவும்பர்.
௫௯	திருநனிபள்ளி ...	பியந்தைக்காந்தாரம்...	காரைகள்கூகைமுல்லைகளவாகைபீகைபடர்தொடரி.
௬௨	திருவலம்புரம் ...	பழம்பஞ்சுரம் ...	கொடியுடைமும்மதிலூடுருவக்குனிவெஞ்சிலைதாங்கி.
௬௩	திருச்சாய்க்காடு ...	சீகாமரம் ...	மண்புகார்வான்புகுவர்மனமிளையார்பசியாலும்.
௬௪	ஷை ...	இந்தளம் ...	நித்தலுநியமஞ்செய்துநீர்மலர்தூவி.
௬௫	திருவெண்காடு ...	சீகாமரம் ...	கண்காட்டுநுதலானுங்கனல்காட்டுங்கையானும்.
௬௬	தென்திருமுல்லைவாயில் ...	பியந்தைக்காந்தாரம்...	துளிமண்டியுண்டுநிறம்வந்தகண்டனடமன்னுதுன்னு.
௬௮	திருமயேந்திரப்பள்ளி ...	கொல்லி ...	திரைதருபவளமுஞ்சீர்திகழ்வயிரமும்
௮௨	கோயில் ...	குறிஞ்சி ...	கற்றாங்கெரியோம்பிக்கலியைவாராமே.
௮௪	திருவேட்களம் ...	தக்கராகம் ...	அந்தமுமாதியுமாகியவண்ணலாரழலங்கையமர்ந்தில
௮௫	திருக்கழிப்பாலை ...	இந்தளம் ...	புனலாடியபுன்சடையாயரணம். [ங்க.
௮௭	திருக்கோயில் ...	காந்தாரபஞ்சமம் ...	ஆடினாய்நறுநெய்யொடுபாலயிரந்தணர் பிரியாத சிற்
௯௦	திருஎருக்கத்தம்புலியூர் ...	குறிஞ்சி ...	படையார்தருபூதப்பகடாருரிபோர்வை. [றம்பலம்.
௯௧	திருமுதுகுன்றம் ...	நட்டபாடை ...	மத்தாவரைநிறுவிக்கடல்கடைந்தவ்விடமுண்ட.
௯௨	ஷை திருவிருக்குக்குறள் ...	குறிஞ்சி ...	நின்றுமலர்தூவி.
௯௩	ஷை திருமுக்கால் ...	சாதாரி ...	முரசதிர்ந்தெழுதருமுதுகுன்றமேவிய.

Koviloor Digital Library

பக்கம்.	தலம்.	பண்.	பதிகமுதலடியும்.
௯௪	திருத்தூங்கானைமாடம் ...	பழந்தக்கராகம் ...	ஒடுங்கும்பிணிபிறவிகேடென்றிவையுடைத்தாய.
௧0௪	* திருநெல்வாயில்-திருஅறத்துறை ...	பியந்தைக்காந்தாரம் ...	எந்தையீசனெம்பெருமானேறமர்கடவுளென்.
௧௧௫	திருப்பழுவூர்-திருவிராகம் ...	இந்தளம் ...	எண்ணுமோரெழுத்துமிசையின்கிளவிதேர்வார்.
௧௧௬	திருவிசயமங்கை ...	காந்தாரபஞ்சமம் ...	கீதமுன்னிசைதரக்கிளரும்வீணையர்.
”	திருவைகா-திருவிராகம் ...	சாதாரி ...	கோழைமிடறாககவிகோளுமிலவாகவிசைகூடும்வகை.
௧௧௭	திருப்புறம்பயம் ...	சாதாரி ...	மறம்பயமலைந்தவர்மதிட்பரிசறுத்தனை.
௧௨0	திருச்சேய்ஞலூர் ...	பழந்தக்கராகம் ...	பீரடைந்தபாலதாட்டப்பேணுதவன்றுதை.
௧௨௧	திருப்பனந்தாள் திருத்தாடகையீச்சரம் ...	பஞ்சமம் ...	கண்பொலிநெற்றியினான்றிகழ்கையிலோர்வெண்மழு.
”	திருப்பந்தண நல்லூர் ...	இந்தளம் ...	இடறினார்கூற்றைப்பொடிசெய்தார்மதிலையிவைசொலி.
”	திருஓமாம்புலியூர் ...	புறநீர்மை ...	பூங்கொடிமடவாளுமையொருபாகம்புரிதருசடைமுடி.
௧௨௨	திருவாழ்கொளிபுத்தூர் ...	தக்கராகம் ...	பொடியுடைமார்பினர்போர்விடையேறிப்பூதகணம்.
௧௨௩	திருநாரையூர் ...	பழம்பஞ்சுரம் ...	காம்பினைவென்றமென்றோளிபாகங்கலந்தானலந்தாங்கு
௧௨௫	திருக்கருப்பறியலூர்-திருவிராகம் ...	இந்தளம் ...	சுற்றமொடுபற்றவைதுயக்கரவறுத்து.
௧௩௨	* சீகாழி ஸ்ரீபஞ்சாக்கரப்பதிகம் ...	காந்தாரபஞ்சமம் ...	துஞ்சலுந்துஞ்சலிலாதபோழ்தினும்.
௧௩௮	† திருமொழிமாற்று ...	வியாழக்குறிஞ்சி ...	காடதணிகலங்காரரவம்பதிகாலதனில்.
”	ஒடி	திருமாலைமாற்று ...	யாமாமாநீயாமாமா.
௧௩௯	† திருவழிமொழித்திருவிராகம் ...	சாதாரி ...	சுரருலகுநரர்கள்பயிறரணிதலமுரணழியவரணம்.
௧௪0	† திருக்கோமூத்திரி ...	காந்தாரம் ...	பூமகனூர்புத்தேளுக்கிறைவனூர்குறைவிலா.
”	† திருக்கழுமலம் ...	இயமகம் ...	உற்றுமைசேர்வதுமெய்யினையேயுணர்வதுநின்னருள்.
௧௪௧	† திரு ஏகபாதம் ...	வியாளக்குறிஞ்சி ...	பிரமபுரத்துறைபெம்மானெம்மான்.
௧௪௩	† திருப்பிரமபுரம் ...	திருவிருக்குக்குறள் குறிஞ்சி ...	அரனையுள்குவீர்.

Koviloor Digital Library

பக்கம்.	தலம்.	பண்.	பதிகமுதலடியும்.
,,	† திருவெழுகூற்றிருக்கை ...	௦	ஓருருவாயினைமானாங்காரத்தீரியல்பாயொருவிண்.
௧௪௪	† ஈரடிமேல்வைப்பு ...	காந்தாரபஞ்சமம் ...	தக்கன்வேள்விதகர்த்தவன்பூந்தராய்.
,,	† நாலடிமேல்வைப்பு ...	௦	இயலிசையெனும்பொருளின்திறமாம்.
௧௪௫	திருச்சண்பைநகர்-திருவிராகம் ...	சாதாரி ...	எந்தமதுசிந்தைபிரியாதபெருமானெனவிறைஞ்சி.
,,	ஷை திருச்சக்கரமாற்று ...	காந்தாரம் ...	விளங்கியசீர்ப்பிரமனூர்வேணுபுரம்புகலிவெங்குரு.
௧௪௯	திருக்கண்ணார் கோயில் ...	குறிஞ்சி ...	தண்ணார்திங்கட்பொங்கரவந்தாழ்புனல்சூடி.
,,	திருப்புள்ளிருக்கும் வேளூர் ...	சீகாமரம் ...	கள்ளார்ந்தபூங்கொன்றைமதமத்தமதிமதியம்.
௧௫௦	திருநின்றியூர் ...	நட்டபாடை ...	சூலம்படைசுண்ணப்பொடிசாந்தஞ்சுடுநீறு.
௧௫௧	திருப்புன்கூர் ...	தக்கராகம் ...	முந்திநின்றவினைகளவைபோக.
௧௫௨	திருமணஞ்சேரி ...	இந்தளம் ...	அயிலாருமம்பதனாற்புரமூன்றெய்து.
௧௫௩	திருத்துருத்தியும்-திருவேள்விக்குடியும்	சாதாரி ...	ஓங்கிமேலுழிதருமொலிபுனற்கங்கையையொருசடை.
௧௫௪	திருக்கோடிகா-திருவிராகம் ...	நட்டராகம் ...	இன்றுநன்றுநாளைநன்றென்றுநின்றவிச்சையால்.
௧௫௫	திருமங்கலக்குடி ...	இந்தளம் ...	சீரினார்மணியுமகில்சந்துஞ்செறிவரை.
,,	திருவியலூர் ...	நட்டபாஷை ...	குரவங்கமழ்நறுமென்குழலரிவையவள்வெருவ.
௧௫௬	திருந்துதேவன்குடி ...	கொல்லி ...	மருந்துவேண்டில்லிவை மந்திரங்கள்ளிவை.
௧௫௭	திரு இன்னம்பர்- திருமுக்கால் ...	சாதாரி ...	எண்டிசைக்கும்புகழின்னம்பர்மேவிய.
௧௫௮	திருக்குரங்காடுதுறை ...	ஷை	கோங்கமேகுரவமேகொழுமலர்ப்புன்னையே.
௧௫௯	திருப்பழனம் ...	தக்கேசி ...	வேதமோதிவெண்ணூல்பூண்டுவெள்ளையெருதேறி.
௧௬௦	திருவையாறு ...	மேகராகக்குறிஞ்சி ...	புலனைந்தும்பொறிகலங்கிநெறிமயங்கியறிவழிந்திட்டு.
௧௬௨	திருவையாறு ...	இந்தளம் ...	கோடல்கோங்கங்குளிர்கூவிளமாலைகுலாயசீர்.
,,	திருப்பெரும்புலியூர் ...	தக்கராகம் ...	மண்ணுமோர்பாகமுடையார்மாலுமோர்பாகமுடையார்
௧௬௩	திருநெய்த்தானம் ...	நட்டபாஷை ...	மையாடியகண்டன்மலைமகள்பாகமதுடையான்.
௧௬௪	திருமழபாடி ...	கௌசிகம் ...	அங்கையாரழலன்னழகார்சடை.

Koviloor Digital Library

பக்கம்.	தலம்.	பண்.	பதிகமுதலடியும்.
௧௬௫	திருக்காறூர் ...	தக்கேசி ...	வானூர்சோதிமன்னுசென்னிவன்னிபுனக்கொன்றை.
௧௬௬	திருஅன்பிலாலந்துறை ...	தக்கராகம் ...	கணைநீடெரிமாலரவம்வரைவில்லா.
௧௬௭	திருமாந்துறை ...	நட்டராகம் ...	பெருகுசந்தனங்காரகில்பீலியும்பெருமரங்களுமிர்ந்து.
௧௭௧	* திருப்பாச்சிலாச்சிராமம் ...	தக்கராகம் ...	துணிவளர்திங்கள்துளங்கிவிளங்கச்சுடர்ச்சடை.
௧௭௫	திருப்பைஞ்ஞீலி ...	காந்தாரபஞ்சமம் ...	ஆரிடம்பாடிலரடிகள்காடலால்.
௧௭௬	திருஈங்கோய்மலை ...	தக்கேசி ...	வானத்துயர்தண்மதிதோய்சடைமேல்மத்தமலர்சூடி
௧௭௮	திருக்கொடிமாடச்செங்குன்றூர் ...	வியாழக்குறிஞ்சி ...	வெந்தவெண்ணீறணிந்துவிரிநூல்திகழ்மார்பினல்ல.
,,	திருநணா ...	காந்தாரம் ...	பந்தார்விரலிமடவாள்பாகமாநாகம்பூண்டு.
௧௮௨	திருக்கொடிமாடச்செங்குன்றூர் திருநீலகண்டத்திருப்பதிகம் ...	வியாழக்குறிஞ்சி ...	அவ்வினைக்கிவ்வினையாமென்றுசொல்லுமஃதறிவீர்.
௧௮௫	திருப்பாண்டிக்கொடுமுடி ...	காந்தாரம் ...	பெண்ணமர்மேனியினாரும்பிறைமல்குசெஞ்சடையாரு
௧௮௬	திருக்கருவூர்த்திருவானிலை ...	இந்தளம் ...	தொண்டொலாமலர்தூவியேத்தநஞ்சு.
௧௮௭	திருப்பராய்த்துறை ...	மேகராகக்குறிஞ்சி ...	நீறுசேர்வதோர்மேனியர்நேரிழை.
௧௮௮	திருக்கற்குடி ...	தக்கராகம் ...	வடந்திகழ்மென்முலையாளைப்பாகமதாகமதித்து.
௧௮௯	திருமூக்கீச்சரம் ...	செவ்வழி ...	சாந்தம்வெண்ணீறெனப்பூசிவெள்ளஞ்சடைவைத்தவர்
௧௯0	திருச்சிராப்பள்ளி ...	குறிஞ்சி ...	கைம்மகவேந்திக்கடுவனொடிக்கழைபாய்வான்.
,,	திருஆனைக்கா ...	இந்தளம் ..	செங்கட்பெயர்கொண்டவன்செம்பியர்கோன்.
௧௯௧	திருமயேந்திரமும் கயிலாயமும் திருவானைக்காவும் திருவாரூரும். கூடச்சதுக்கம் ...	ஷை	மண்ணதுவுண்டரிமலரோன்காணு.
௧௯௨	திருப்பாற்றுறை ...	பழந்தக்கராகம் ...	காரார்கொன்றைகலந்தமுடியினர்.
௧௯௩	திருநெடுங்களம் ...	தக்கராகம் ...	மறையுடையாய்தோலுடையாய்வார்சடைமேல்வளரும்
௧௯௪	மேலைத்திருக்காட்டுப்பள்ளி ...	கொல்லி ...	வாருமன்னும்முலைமங்கையோர்பங்கினன்.

Koviloor Digital Library

பக்கம்.	தலம்.	பண்.	பதிகமுதலடியும்.
௧௯௬	திருக்கண்டியூர் ...	கொல்லி ...	வினவினேனறியாமையிலுரைசெய்ம்மினீரருள்வேண்
௧௯௭	திருச்சோற்றுத்துறை ...	தக்கராகம் ...	செப்பநெஞ்சேசெறிகொள்சிற்றின்பம். [டுவீர்
௧௯௮	திருவேதிகுடி-திருவிராகம் ...	சாதாரி ...	நீறுவரியாடரவோடாமைமனவென்புநிரைபூண்பர்.
௧௯௯	திருவெண்ணி ...	இந்தளம் ...	சடையானைச்சந்திரனோடுசெங்கணரா.
௨௦௦	திருச்சக்கரப்பள்ளி ...	கொல்லி ...	படையினார்வெண்மழுப்பாய்புலித்தோலரை.
௨௦௨	திருப்புள்ளமங்கை-திருவாலந்துறை ...	நட்டபாடை ...	பாலுந்துறுதிரளாயினபரமன்பிரமன்றான்.
௨௦௪	திருநல்லூர்-திருவிராகம் ...	சாதாரி ...	வண்டிரியவிண்டமலர்மல்குசடைதாழவிடையேறி.
௨௦௫	ஷை	குறிஞ்சி ...	கொட்டும்பறைசீராற்குழுமவனலேந்தி.
௨௦௬	திருக்கருகாவூர் ...	கவுசிகம் ...	முத்திலங்குமுறுவல்லுமையஞ்சவே.
௨௦௭	திரு அவளிவணல்லூர்-திருவிராகம் ...	சாதாரி ...	சொம்பிரியவண்டுலவுகொன்றைபுரிநூலொடுகுலாவி.
௨௦௮	திருப்பருதிநியமம் ...	பழம்பஞ்சுரம் ...	விண்கொண்டதூமதிசூடிநீடுவிரிபுன்சடைதாழ.
௨௦௯	திரு ஆவூர் ...	நட்டபாடை ...	புண்ணியர்பூதியர்பூதநாதர்புடைபடுவார்தம்மனத்தார்.
௨௧௧	திருவலஞ்சுழி ...	நட்டராகம் ...	விண்டெலாமலரவிரைநாறுதண்டேன்விம்மி.
௨௧௮	* திருப்பட்டீச்சரம் திருவிராகம் ...	சாதாரி ...	பாடன்மறைசூடன்மதிபல்வளையோர்பாகமதில்.
௨௨௧	திரு இரும்பூளை ...	இந்தளம் ...	சீரார்கழலேதொழுவீரிதுசெப்பீர்.
௨௨௨	திரு அரதைப்பெரும்பாழி ...	கொல்லி ...	பைத்தபாம்போடரைக்கோவணம்பாய்புலி.
,,	திருச்சேறை-திருவிராகம் ...	சாதாரி ...	முறியுறுநிறமல்குமுகிழ்முலைமலைமகள்வெருவ.
௨௨௩	திருநாலூர்மயானம் ...	சீகாமரம் ...	பாலூருமலைப்பாம்பும்பனிமதியுமத்தமும்.
,,	திருக்குடவாயில் ...	இந்தளம் ...	திகழுந்திருமாலொடுநான்முகனும்.
௨௨௪	திருநறையூர் ...	பியந்தைக்காந்தாரம் ...	நேரியனாகுமல்லனொருபாலுமேனியரியான்முனைய.
,,	திருப்புத்தூர் ...	தக்கராகம் ...	வெங்களவிம்முவெறியார்பொழிற்சோலை.
௨௨௫	திருச்சிவபுரம் ...	வியாழக்குறிஞ்சி ...	இன்குரலிசைகெழுமியாழ்முரல.
௨௨௬	திருக்குடமூக்கு ...	பஞ்சமம் ...	அரவிரிகோடனீடலணிகாவிரியாற்றயலே.

ஞ

Koviloor Digital Library

பக்கம்.	தலம்.	பண்.	பதிகமுதலடி.
உஉஅ	குடந்தைக்காரோணம் ...	தக்கேசி ...	வாரார்கொங்கைமாதோர்பாகமாகவார்சடை.
உஉக	திருநாகேச்சரம் ...	இந்தளம் ...	பொன்னேர்தருமேனியனேபுரியும்.
உ௩0	திருஇடைமருது ...	தக்கராகம் ...	ஓடேகலனுண்பதுமூரிடுபிச்சை.
உ௩க	ஷை திருவிராகம் ...	வியாழக்குறிஞ்சி ...	விரிதருபுலியுரிவிரவியவரையினர்.
,,	ஷை ...	0	நடைதருதிரிபுர மெரியவுண்ணகைசெய்த.
உ௩உ	ஷை ...	0	மருந்தவன் வானவர்தானவர்க்கும்.
,,	திருக்குரங்காடுதுறை ...	இந்தளம் ...	பரவக்கெடும்வல்வினைபாரிடஞ்சூழ.
உ௩எ	*திருவாவடுதுறை நாலடிமேல்வைப்பு	காந்தாரபஞ்சமம் ...	இடரினுந்தளரினுமெனதுறுநோய்
உசஉ	திருக்கோழம்பம் ...	இந்தளம் ...	நீற்றானைநீள்சடைமேல் நிறைவுள்ளதோ.
உச௩	திருவைகல்மாடக்கோயில் ...	காந்தாரபஞ்சமம் ...	துளமதியுடைமறிதோன்றுகையினர்.
,,	திருநல்லம் ...	குறிஞ்சி ...	கல்லானிழன்மேயகறைசேர்கண்டாவென்று
உசச	திருஅழுந்தூர் ...	இந்தளம் ...	தொழுமாறுவல்லார்துயர்தீரநினைந்து
உசரு	திருத்துருத்தி-திருவிராகம் ...	நட்டராகம் ...	வரைத்தலைப்பசும்பொனோடருங்கலங்களுந்திவந்து.
உசகா	திருமயிலாடுதுறை ...	தக்கராகம் ...	கரவின்றிநன்மாமலர்கொண்டு.
உசஎ	திருச்செம்பொன்பள்ளி ...	தக்கராகம் ...	மருவார்குழலிமாதோர்பாகமாய்.
உசஅ	திருவிளமர் திருவிராகம். ...	சாதாரி ...	மத்தகமணிபெறமலர்வதோர்மதிபுரைநுதல்கரம்.
,,	திருப்பதியலூர் ...	மேகராகக்குறிஞ்சி ...	கருத்தன்கடவுள் கனலேந்தியாடும்.
உரு0	திருவேட்டக்குடி ...	பஞ்சமம் ...	வண்டிரைக்குமலர்க் கொன்றைவிரிசடைமேல்மதியர
உருஉ	*திருத்தருமபுரம். ...	யாழ்மூரி ...	மாதர்மடப்பிடியு மடவன்னமுமன்னதோர்நடை. [வம்
உருக	திருநள்ளாறு	பழந்தக்கராகம் ...	போகமார்த்த பூண்முலையாடன்னொடும்.
உசு௩	திருச்சாத்தமங்கை ...	பஞ்சமம் ...	திருமலர்க்கொன்றைமாலைதிளைக்குமதிசென்னி.
உசுரு	திருநாகைக்காரோணம் ...	செவ்வழி ...	கூனற்றிங்கட்குறுங்கண்ணிகான்றநெடுவெண்ணிலா.
உசுசு	திருக்கீழ்வேளூர் ...	நட்டராகம் ...	மின்னுலாவியசடையினர்விடையினர்மலிர்தரும்.

Koviloor Digital Library

பக்கம்.	தலம்.	பண்.	பதிகமுதலடி.
உகஅ	திருச்செங்காட்டங்குடி	பஞ்சமம்	பைங்கோட்டுமலர்ப்புன்னைப்பறவைகாள்பயப்பூர.
உஎ௫	*திருமருகல்	இந்தளம்	சடையாயெனுமால்சரணீயெனுமால்.
உஎக	திருச்செங்காட்டங்குடியும் திருமருகலும் வினவுரை.	நட்டபாடை	அங்கமும்வேதமுமோதுநாவரந்தணர்நாளுமடிபரவ.
உஅக	திருப்புகலூர்	செவ்வழி	வாழ்ந்தநாளும்மினிவாழுநாளும்மிவையறிதிரேல்.
உஅஉ	ஷ	பியந்தைக்காந்தாரம்	ஈசனேறமர்கடவுளின்னமுதெந்தையெம்பெருமான்.
உஅ௫	திருவாரூர்	வியாழக்குறிஞ்சி	பாடலனான்மறையன்படிபட்டகோலத்தன்திங்கள்.
உஅசு	திருவிற்குடி-வீரட்டம்	நட்டராகம்	வடிகொண்மேனியர்வானமாமதியினர்மதுவார்ந்த.
,,	திருவாரூர்	வியாழக்குறிஞ்சி	உள்ளமோரிச்சையினானுகந்தேத்தித்தொழுமின்கள்
உஅஎ	ஷ திருவிராகம்	நட்டராகம்	பருக்கையானைமத்தகத்தரிக்குலத்துகிர்ப்புக.
உஅஅ	ஷ திருவிருக்குக்குறள்	குறிஞ்சி	சித்தந்தெளிவீர்காள்.
உஅகூ	ஷ	கவுசிகம்	அந்தமாயுலகாதியுமாயினான்.
உகூச	திருவலிவலம் திருவிராகம்	வியாழக்குறிஞ்சி	பூவியல்புரிகுழல்வரிசிலைநிகர்நுதல்.
,,	திருக்கோளிலி	பழந்தக்கராகம்	நாளாயபோகாமே நஞ்சணியுங்கண்டனுக்கே.
உகூசு	திருவாரூர்	காந்தாரம்	பவனமாய்ச்சோடையாய்நாவெழாப்பஞ்சுதோய்ச்சு
உகூஎ	திருப்பனையூர்	தக்கராகம்	அரவச்சடை மேன்மதிமத்தம்.
உகூகூ	திருப்புகலூர்	நட்டபாடை	குறிகலந்தவிசைபாடலினானிசையாலிவ்வுலகெல்லாம்
௩0உ	திரு அம்பர்மாகாளம்	சாதாரி	அடையார் புரமூன்று மனல்வாய்விழவெய்து.
௩0௩	ஷ	குறிஞ்சி	புல்குபொன்னிறம்புரிசடைநெடு.
௩0ச	ஷ	நட்டராகம்	படையுளார்விடையினர்பாய்புலித்தோலரி.
,,	திரு அம்பர்ப்பெருந்திருக்கோயில்	காந்தாரபஞ்சமம்	எரிதரவனல்கையேந்தி.
௩0௫	திருக்கடவூர்-திருவீரட்டானம்	காந்தாரபஞ்சமம்	சடையுடையானெய்யாடலானஞ்சரிகோவணை.
௩0சு	திருக்கடவூர்மயானம்	காந்தாரம்	வரியமறையார்பிறையார்மலையோர்சிலையாவணக்கி.

Koviloor Digital Library

பக்கம்.	தலம்.	பண்.	பதிகமுதலடி.
௩௦௭	திரு ஆக்கூர்-தான்றோன்றிமாடம் ...	சீகாமரம் ...	ஆக்கிருந்தவாரமுமடையவனம்மையும்.
௩௦௮	திருமீயச்சூர் ...	காந்தாரம் ...	காயசெவ்விக்காமற்காய்ந்துகங்கையை.
௩௦௯	திருப்பரம்புரம் ...	தக்கராகம் ...	சீரணிதிகழ்திருமார்பில்வெண்ணூலர்திரிபுரமெரி.
௩௧௦	திருவீழிமிழலை ...	தக்கராகம் ...	அரையார்விரிகோவணவாடை.
௩௧௨	திருவீழிமிழலை ...	நட்டபாடை ...	சடையார்புனலுடையானொருசரிகோவணமுடையா.
௩௧௭	ஸ்ரீ புகலியும் திருவீழிமிழலையும் வினாவுரை	நட்டபாடை ...	மைம்மருபூங்குழற்கற்றைதுற்றவாணுதன்மான்விழி.
௩௨௪	*திருவீழிமிழலை திருவிருக்குக்குறள் ...	குறிஞ்சி ...	வாசிதீரவே
௩௨௭	திருவாஞ்சியம் ...	இந்தளம் ...	வன்னிகொன்றைமதமத்தமெருக்கொடுகூவிளம்.
,,	திருப்பெருவேளூர் ...	பஞ்சமம் ...	அண்ணாவுங்கழுக்குன்றுமாயாமலையவையாள்வார்.
௩௨௮	திருக்கரவீரம் ...	பழந்தக்கராகம் ...	அரியும்நம்வினையுள்ளனவாசற.
,,	திருவிளமர்-திருவிராகம் ...	சாதாரி ...	மத்தகமணிபலமலர்வதோர்மதிபுனைநுதல்கர.
௩௨௯	திருக்காறாயில் ...	இந்தளம் ...	நீரானேநீள்சடைமேலொருநிரைகொன்றை
,,	திருத்தேவூர் ...	காந்தாரம் ...	பண்ணிலாவியமொழியுமைபங்கனெம்பெருமான்.
௩௩௦	ஷை திருவிராகம் ...	சாதாரி ...	காடுபயில்வீடுமுடையோடுகலன்மூடுமுடையாடை.
,,	திருநெல்லிக்கா ...	இந்தளம் ...	அறத்தாலுயிர்க்காவலமர்ந்தருளி.
,,	திருக்கைச்சினம் ...	சீகாமரம் ...	தையலோர்கூறுடையான்றண்மதிசேர்செஞ்சடையான்
௩௩௧	திருத்தெங்கூர் ...	பியந்தைக்காந்தாரம்..	புரைசெய்வல்வினைதீர்க்கும் புண்ணியர்பண்ணவர்போற்ற
,,	திருக்கொள்ளிக்காடு ...	காந்தாரபஞ்சமம் ...	நிணம்படுசுடலையினீறுபூசிநின்று.
௩௩௨	திருக்கோட்டூர் ...	நட்டராகம் ...	நீலமார்தருகண்டனேநெற்றியோர்கண்ணனேயொற்றை.
,,	திருவெண்டுறை ...	பஞ்சமம் ...	ஆதியனாதிரையனனலாடியவாரழகன்.
௩௩௩	திருத்தண்டலைநீணெறி ...	கவுசிகம் ...	விரும்புந்திங்களுங்கங்கையும்விம்மவே.
,,	திருக்களர் ...	சீகாமரம் ...	நீருளார்கயல்வாவிசூழ்பொழினீண்டமாவயலீண்டுமாமதில்

Koviloor Digital Library

பக்கம்.	தலம்.	பண்.	பதிகமுதலடி.
௩௪௦	*திருமறைக்காடு ...	இந்தளம் ...	சதுரம்மறைதான்றுதிசெய்துவணங்கும்.
௩௪௫	திருவாய்மூர் ...	நட்டராகம் ...	தளிரிளவளரொளிதனதெழில்தருதிகழ்மலைமகள்... எம்மிடவோர்தழல்.
௩௪௬	திருமறைக்காடு ...	பியந்தைக்காந்தாரம் ..	பொங்குவெண்மணற்கானற்பொருகடற்றிரைதவழ்.
௩௫௪	ஷை வேயுறுதோளி ...	பியந்தைக்காந்தாரம்...	வேயுறுதோளிபங்கன்விடமுண்டகண்டன்மிகநல்லவீ
௩௫௧	திருவகத்தியான்பள்ளி ...	காந்தாரம் ...	வாடியவெண்டலைமாலைசூடிமயங்கிருள். [ணே.
,,	திருக்கடிக்குளம் ...	நட்டராகம் ...	பொடிகொண்மேனிவெண்ணூலினர்புரியுரியதளாடை.
௩௬௦	திருஇடும்பாவனம் ...	நட்டபாடை. ...	மனமார்தருமடவாரொடுமகிழ்மைந்தர்கண்மலர்தூய்
௩௬௧	திருஉசாத்தானம் ...	கொல்லி. ...	நீரிடைத்துயின்றவன்றம்பிரன்சாம்புவன்.
௩௬௯	திருக்கொடுங்குன்றம் ...	நட்டபாடை. ...	வானிற்பொலிவெய்துமழைமேகங்கிழித்தோடி.
௩௭௧	* திருவாலவாய் §...	புறநீர்மை. ...	மங்கையர்க்கரசிவளவர்கோன்பாவைவரிவளைக்கைமட
௩௮௨	* ஷை திருவிருக்குக்குறள் §...	குறிஞ்சி. ...	நீலமாமிடற்று. [மானி
௩௯௭	* ஷை §...	கௌசிகம். ...	செய்யனேதிருவாலவாய்மேவிய.
௪௧௯	* ஷை நாலடிமேல்வைப்பு §...	கௌசிகம். ...	காட்டுமாவதுரித்துரிபோர்த்துழல்.
௪௩௭	* ஷை §...	பழம்பஞ்சுரம் ...	வேதவேள்வியைநிந்தனைசெய்துழல்.
௪௨௫	* திருப்பிரமபுரம்-திருச்சக்கரமாற்று§	காந்தாரம். ...	பிரமனூர்வேணுபுரம்புகலிவெங்குருப்பெருநீர்த்தோணி
௪௨௧	* திருவாலவாய் §...	கொல்லி. ...	மானினேர்விழிமாதராய்வழுதிக்குமாபெருந்தேவிகேள்
௪௩௨	* ஷை திருநீற்றுப்பதிகம் §...	காந்தாரம் ...	மந்திரமாவதுநீறு வானவர்மேலதுநீறு.
௪௪௧	* திருநள்ளாறு §...	தக்கராகம் ...	போகமார்த்தபூண்முலையாள்தன்னோடும்பொன்னகலம்
௪௪௪	* ஷை திருவிராகம் §...	சாதாரி ...	தளிரிளவளரொளிதனதெழில்தருதிகழ்மலைமகள்.
௪௬௭	* திருவாலவாய் §...	கவுசிகம் ...	வாழ்கவந்தணர்வானவராினம்.
௪௮௭	* திருவேடகம் § ..	கொல்லி ...	வன்னியுமத்தமுமதிபொதிசடையினன்.
௪௯௩	திருவாலவாய்-திருவிராகம் §...	கௌசிகம் ...	வீடலாலவாயிலாய்விழுமியார்கணின்கழல்.
௪௯௯	ஷை §...	திருவியமகம் ...	ஆலநீழலுகந்ததிருக்கையேயானபாடலுகந்ததிருக்கையே.

Koviloor Digital Library

பக்கம்.	தலம்.	பண்.	தலமுதலடி.
௫00	† திருக்கழுமலம்	கொல்லி	மண்ணினல்லவண்ணம்வாழலாம்வைகலும்.
௫0௨	திருப்பரங்குன்றம்	குறிஞ்சி	நீடலர்சோதிவெண்பிறையொடுநிறைகொன்றை.
௫0௩	திருஆப்பனூர்	குறிஞ்சி	முற்றுஞ்சடைமுடிமேன்முதிராவிளம்பிறையன்.
,,	திருப்புத்தூர்	தக்கராகம்	வெங்கள்விம்முவெறியார்பொழிற்சோலை.
௫0௪	திருப்பூவணம்	தக்கேசி	அறையார்புனலுமாமலருமாடரவார்சடைமேல்.
,,	திருக்கானப்பேர்	கொல்லி	பிடியெலாம்பின்செல்லப்பெருங்கைமாமலைதழீஇ.
௫0௫	திருக்குற்றாலம்	குறிஞ்சி	வம்பார்குன்றநீடுயர்சாரல்வளர்வேங்கை.
,,	திருக்குறும்பலா	காந்தாரம்	திருந்தமதிசூடித்தெண்ணீர்சடைக்கணிந்துதேவிபாகம்
௫0௬	திருநெல்வேலி-திருவிராகம்	காந்தாரபஞ்சமம்	மருந்தவைமந்திரம்மறுமைநன்னெறியவை.
௫0௭	திருஇராமேச்சரம்	காந்தாரபஞ்சமம்	அலைவளர்தண்மதியோடயலேயடக்கியுமை.
௫0௯	திருக்கோணமாமலை	புறநீர்மை	நிரைகழலரவஞ்சிலம்பொலியலம்புநிமலர்நீறணிதிரு.
,,	திருக்கேதீச்சரம்	நட்டராகம்	விருநுகுன்றமாமேருவினாணரவாவனலெரியம்பால்.
௫௧0	திரு ஆடானை	,,	மாதோர்கூறுகந்தேறதேறிய
,,	திருப்புனவாயில்	காந்தாரபஞ்சமம்	மின்னியல்செஞ்சடைவெண்பிறையன்விரிநூலினர்.
௫௧௩	திருப்பாதாளிச்சரம்	குறிஞ்சி	மின்னியல்செஞ்சடைமேல்விளங்குமதிமத்தமொடு.
௫௧௫	* திருக்கொள்ளம்பூதூர்-ஈரடிமேல் வைப்பு	காந்தாரபஞ்சமம்	கொட்டமேகமழுங்கொள்ளம்பூதூர்.
௫௪௬	† திருக்கழுமலம்-திருஇயமகம்	,,	உற்றுமைசேர்வதுமெய்யினையேயுணர்வதுநின்னருள்.
௫௫0	திருமாணிகுழி-திருவிராகம்	சாதாரி	பொன்னியல்பொருப்பனாயன்மங்கையொருபங்கர்
,,	திருப்பாதிரிப்புலியூர்	செவ்வழி	முன்னநின்றமுடக்கால்முயற்கருள்செய்துநீள்.
௫௫௧	திருவடுகூர்	குறிஞ்சி	சுடுகூரெரிமாலையணிவர்சுடர்வேடர்.
௫௫௨	திருவக்கரை	பஞ்சமம்	கறையணிமாமிடற்றான்கரிகாடரங்காவுடையான்.
,,	திருஇரும்பைமாகாளம்	செவ்வழி	மண்டுகங்கைசடையிற்கரந்துமதிசூடிமான்.

Koviloor Digital Library

பக்கம்.	தலம்.	பண்.	தலமுதலடி.
௫௪௩	திருஅதிகைவிரட்டானம் ...	தக்கராகம் ...	குண்டைக்குறட்பூதங்குழமவனலேந்தி.
௫௪௪	திருவாமாத்தூர் ...	சீகாமரம் ...	குன்றவார்சிலைநாணராவரிவாளிகூரெரிகாட்டி.
௫௫௫	திருக்கோவல்வீரட்டம்-திருவிராகம். .	நட்டராகம் ...	படைகொள்கூற்றம்வந்துமெய்ப்பாசம்விட்டபோதின்
,,	திருஅறையணிநல்லூர் ...	காந்தாரம் ...	பிடியெலாம்பெரியார்களும்பேசமைகெடுத்திலா.
௫௫௭	திருவண்ணாமலை ...	நட்டபாடை ...	உண்ணாமுலையுமையாளொடுமுடனாகியவொருவன்.
௫௫௮	திருவண்ணாமலை ...	தக்கேசி ...	பூவார்மலர்கொண்டடியார்தொழுவார்புகழ்.
௫௬௧	*திருவோத்தூர் ...	பழந்தக்கராகம் ...	பூத்தேர்ந்தாயனகொன்றுநின்பொன்னடி.
௫௬௫	திருமாகறல்-திருவிராகம் ...	சாதாரி ...	விங்குவிளைகழனிமிகுகடைசியர்கள்பாட்டல்விளையாடல்
௫௬௬	குரங்கணின்முட்டம் ...	தக்கராகம் ...	விழுநீர்மழுவாட்படையண்ணல்விளங்கும்.
௫௭௦	திரு ஏகம்பம் ...	இந்தளம் ...	மறையானைமாசிலாப்புன்சடைமல்குவெண்.
௫௭௨	ஷை திருவியமகம் ...	,,	பாயுமால்விடைமேலொருபாகனேபாவைதன்னுருமே [லொருபாகனே.
௫௭௩	திருஏகம்பம்-திருவிருக்குக்குறள் ...	கொல்லி ...	கருவார்கச்சி.
௫௭௪	திருமாற்பேறு ...	பழந்தக்கராகம் ...	ஊறியார்தருநஞ்சினையுண்டுமை
௫௭௫	திருவல்லம் ...	வியாழக்குறிஞ்சி ...	எரித்தவன்முப்புரமெரியின்மூழ்க.
௫௭௬	திருஇலம்பயங்கோட்டூர் ...	குறிஞ்சி ...	மலையினார்பருப்பதந்துருத்திமாற்பேறுமாசிலாச்சீர்.
,,	திருவிற்கோலம் ...	காந்தாரபஞ்சமம் ...	உருவினாருமையொடுமொன்றிநின்றதோர்.
௫௭௭	திருவூறல் ...	வியாளக்குறிஞ்சி ...	மாறிலவுணரரணம்மவைமாயவோர்வெங்கணை.
௫௮௦	திருவாலங்காடு ...	தக்கராகம் ...	துஞ்சவருவாருந்தொழுவிப்பாரும்வழுவிப்போய்.
௫௮௨	திருப்பாசூர் ...	காந்தாரம் ...	சிந்தையிடையார்தலையின்மிசையார்செஞ்சொலார்.
௫௮௭	திருக்காளத்தி-திருவிராகம் ...	சாதாரி ...	வானவர்கடானவர்கள்வாதைபடவந்ததொருமாகடல்.
௫௯௧	ஸ்ரீகயிலாயம் ...	தக்கேசி ...	பொடிகொளுருவர்புலியினதளர்புரிநூறிசழ்மார்பில்.
,,	திருக்கேதாரம் ...	செவ்வழி ...	தொண்டரஞ்சுங்களிறுமடக்கிச்சுரும்பார்மலர்.
௫௯௨	திருக்கோகரணம்-திருவிராகம் ...	சாதாரி ...	என்றுமரியானயலவர்க்கிசைப்பொருள்களாஎனதுள்.

Koviloor Digital Library

பக்கம்.	தலம்.	பண்.	தலமுதலடி.
௫௬௩	திரு இந்திரநீலப்பருப்பதம் ...	இந்தளம் ...	குலவுபாரிடம்போற்றவீற்றிருந்த
,,	திருப்பருப்பதம் ...	வியாழக்குறிஞ்சி ...	சுடுமணியுமிழ்நாகஞ்சூழ்தரவரைக்கசைத்தான்.
௫௬௪	திருவனேகதங்காவதம் ...	இந்தளம் ...	நீடன்மேவுநிமிர்புன்சடைமேலோர்நிலாமுளை.
௫௬௬	திருக்காளத்தி ...	கொல்லி ...	சந்தமாரகிலொடுசாதிதேக்குமரம்.
௫௬௭	திருவேற்காடு ...	பழந்தக்கராகம் ...	ஒள்ளிதுள்ளக்கதிக்காமிவனொளி.
௬௨0	*திருமயிலை ...	சீகாமரம் ...	மட்டிட்டபுன்னையங்கானன்மடமயிலை.
௬௩௫	திருவான்மியூர் ...	இந்தளம் ...	கரையுலாங்கடலிற்பொலிசங்கம்வெளிப்பிவன்.
௬௩௭	திருவிடைச்சுரம் ...	குறிஞ்சி ...	வரிவளரவிரொளியரவரைதாழவார்சடை.
௬௩௮	திருக்கழுக்குன்றம் ...	குறிஞ்சி ...	தோடுடையானொருகாதிற்றூயகுழைதாழ.
௬௪0	திரு அச்சிறுபாக்கம் ...	குறிஞ்சி ...	பொன்றிரண்டன்னபுரிசடைபுரள.
௬௪௬	திருவேறூபுரம் ...	நட்டபாடை ...	வண்டார்குழலரிவையொடு.
,,	* ஸ்ரீகாழி-திருவிராகம் ...	நட்டராகம் ...	நம்பொருண்மக்களென்றுநச்சியிச்சைகொண்டு
௬௮௪	* நல்லூர்ப்பெருமணம் ...	அந்தாளிக்குறிஞ்சி ...	கல்லூர்ப்பெருமணம்வேண்டாகழுமலம்.
௬௮௭	ஷை ...	கவுசிகம் ...	காதலாகிக்கசிந்துகண்ணீர்மல்கி.

* இக்குறியிட்டது பதிக முழுமையும் போட்டிருக்கின்றது.
† இக்குறியிட்டதெல்லாம் சீகாழி.
§ இக்குறியிட்டதெல்லாம் (திருவாலவாய்) மதுரை.

Koviloor Digital Library

திருஞானசம்பந்தசுவாமிகள் புராணத்தின் ஐதிக திருவுருப்படங்களின் அட்டவணை.

படங்களின் எண்.	படங்களின் விவரம்.	பக்கம்.
௧	திருஞானசம்பந்தசுவாமிகள்திருவுருவம் ...	௧
௨	சிவபிரான்திருமுலைப்பாலூட்டவருளியது ...	௩௧
௩	பிதாபிள்ளையாரைக்கோபிக்கசிவபெருமானைக்காட்டியது....	௩௭
௪	திருக்கோலக்காவில்பொற்றாளமருளப்பெற்றது ...	௫௧
௫	திருமாறன்பாடியில்முத்துச்சிவிகைஅளிக்கப்பெற்றது ...	௧௦௩
௬	ஜெகதீசரளித்தசிவிகையின்மீதுபிள்ளையாராரோகணித்தது.	௧௦௬
௭	ஸ்ரீ ஞானசம்பந்தர்சிகாழியிலுபநயனஞ்செய்துக்கொண்டது	௧௨௯
௮	கொல்லிமழவன்பெண்பிணியைப்பிள்ளையார்பாலுணைத்தது	௧௭௦
௯	சுவாமிகள்திருப்பதிகம்ஓதியக்கன்னியின்பிணியைநீக்கியது	௧௭௩
௧௦	திருச்செங்கோட்டில்அடியார்களின்சுரம்தெரிந்துகொண்டது	௧௮௧
௧௧	திருஞானசம்பந்தர்திருப்பதிகம்ஓதி அப்பிணியைநீக்கினது.	௧௮௧
௧௨	திருப்பட்டீச்சரத்தில்முத்துப்பந்தல்பெற்றது ...	௨௧௬
௧௩	சிவகணங்களளித்தமுத்துப்பந்தலைபிள்ளையார்நமஸ்கரித்தது.	௨௧௭
௧௪	பிராயாகத்திற்குபூதகணம்பொற்கிழிபலிபீடத்தில்வைத்தது	௨௩௧
௧௫	ஸ்ரீ ஞானசம்பந்தர்அப்பொற்கிழியைதந்தைபாலளித்தது. ...	௨௪௦
௧௬	திருநீலகண்டப்பெரும்பாணர்யாழைமோதவுடைத்தது. ...	௨௫௫
௧௭	பிள்ளையார்பதிகத்தையாழில்வாசித்தக்காட்டியது. ...	௨௫௬
௧௮	திருமருகலில்செட்டியார் விஷந்தீண்டியிறக்கதுக்கித்தது....	௨௭௪
௧௯	பிள்ளையார்திருப்பதிகமோதிச்செட்டியாரையெழுப்பியது. ...	௨௭௭
௨௦	பிள்ளையார்செட்டியாருக்குமணஞ்செய்யவிடையளித்தது...	௨௭௭
௨௧	ஸ்ரீ சம்பந்தருக்கும்அப்பருக்கும்படிக்காசுக்குஅசரீரிகூறியது	௩௨௦
௨௨	அப்பருக்கும்சம்பந்தருக்கும்படிக்காசளிக்கநமஸ்கரித்தது...	௩௨௯
௨௩	ஸ்ரீ சம்பந்தர்படிக்காசுவாசிதீரும்படி பதிகமோதியது [டியது	௩௨௪
௨௪	திருக்காப்பிட்டகதவைத்திறக்கபிள்ளையார்அப்பரைவேண்	௩௩௬
௨௫	டி கதவுசாத்ததிறக்கபதிகமோத அப்பர்வேண்டியது ...	௩௩௮
௨௬	பிள்ளையார்பால்மங்கையர்க்கரசிபாங்கிகளைஅனுப்பினது. ...	௩௫௦
௨௭	திருமறைக்காட்டில் அரசிகூறியதைவிளம்பியது. ...	௩௫௭
௨௮	திருஞானசம்பந்தர்மதுரைக்குச்சென்றது ...	௩௬௭
௨௯	பிள்ளையார்வரவுகண்டுமந்திரியார்எதிர்கொண்டது ...	௩௭௦
௩௦	மங்கையர்க்கரசியார்எதிர்கொண்டுபிள்ளையாரைவணங்கியது..	௩௭௭
௩௧	பிள்ளையார்திருமடத்தைசமணர்தீத்தொழில்விளைத்தது. ...	௩௯௫
௩௨	பாண்டியன்சுரத்தைசமணர்தீர்க்காமையால்வெறுத்தது. ...	௪௦௩
௩௩	பாண்டியன்தன்அரண்மனைக்குசுவாமிகளைஅழைத்துவரும் படிமந்திரியைஅனுப்பினது. ...	௪௧௧
௩௪	பிள்ளையார்பாண்டியன்அரண்மனைக்கெழுந்தருளியது ...	௪௨௪
௩௫	ஆளுடையவள்ளல்பாண்டியன்சுரத்தைநீக்கினது. ...	௪௩௪
௩௬	பாலாராவாயர்அக்கினியிலிட்டது ...	௪௪௧
௩௭	பரசமயகோளரியார்ஏடுவைகைஎதிர்த்துச்சென்றது. [து	௪௫௬
௩௮	சம்பந்தசுவாமிகள்வைகையிலிட்டஏடுஎதிர்நோக்கிச்சென்ற	௪௬௯
௩௯	ஷை திரு ஏடகத்தில் ஏடுதங்கபதிகமோதியது ...	௪௮௯
௪௦	சமணர்களைகழுவேற்றியது ...	௪௮௮

Koviloor Digital Library

படங்களின் எண்.	படங்களின் விவரம்.	பக்கம்.
சக	பிள்ளையார்அடியாருடன்ஒடத்திலெழுந்தருளியது	ருகச
சஉ	பிள்ளையார்போதிமங்கையில் புத்தன் தலைஇடறச்செய்தது	ருருஉ
சங	பிள்ளையார்சம்பந்தசரணாலயனைக்கொண்டுபவுத்தனைவென் [றது.	ருஙரு
சச	பிள்ளையார்பவுத்தர்களைச்சைவர்களாக்கியது.	,,
சரு	பிள்ளையார் திருப்பூந்துருத்திக் கெழுந்தருளஅப்பர்சிவிகை [தாங்கியது	ருஙசு
சசு	திருஞானசம்பந்தர் அப்பரைத்தழுவியது.	,,
சஎ	பிள்ளையார் திருவோத்தூருக் கெழுந்தருளியது. ...	ருசு௦
சஅ	பிள்ளையார் ஆண்பனையைப்பெண்பனையாக்கியது ...	ருசுங
சகூ	திருமயிலையில் பூம்பாவையார் பூக்கொய்தது. ...	சு௦சு
ரு௦	திருமயிலைக்குத் திருவொற்றியூருக்கும் நடைகாவணமிட்டுப்பிள்ளையாரைச் சிவநேசர் வரவழைத்தது. ...	சுகஉ
ருக	சுவாமிகள் எலும்பைப் பெண்ணாக்கியது. ...	சுஉ௦
ருஉ	ஷை அற்புதத்தைச் சிவனடியார்கள் தரிசித்தது. ...	சுஉஉ
ருங	ஷை அற்புதத்தைத்திருமயிலையிலுள்ள அடியார்கள் தரிசித்த [து	,,
ருச	சீகாழித்தலம்.	சுசரு
ருரு	திருஞானசம்பந்தசுவாமிகள் திருமணம். ...	சுஅச
ருசு	பிள்ளையார் அடியார் திருக்கூட்டத்துடன் சோதியிற் கலந்தது (மோட்சம்.) ...	சுகூக

திருஞானசம்பந்தசுவாமிகள் திருநக்ஷத்திரம்

வைகாசி மூலம்.

நடுவில்விடுபட்டவைகள்.

சகங - வது. பக்கத்தில உ-வரியில் திக்குப்பாலகரெண்மருக்குப் பின் வசுக்களெண்மரும் "எனச்சேர்த்துக் கொள்ளவும்."

ருஉஎ-வது. பக்கத்தில் ௯ - வது. வரியில்கந்தங்களினழிவே என்றுமொழியின்பின் முத்தியெனவுரைசெய்தான் எனச்சேர்த்துக்கொள்ளவும்.

ருஉஅ-வது. பக்கத்தில் கச-வது. வரியில் அநுவாதஞ்செய்து, என்று மொழியின்பின் அவனைநோக்கி என்பதைச் சேர்த்துக்கொள்ளவும்.

ருஉஅ-வது. பக்கத்தில் ரு-வது வரியில் கூறப்படும் என்று மொழிக்குப்பின்சூத்திரபிடகம் இரகஸ்யர் ஒழுக்கங்களைக் கூறுவது. அவிதன்மபிடகம் பஞ்சகந்தப்பொருளியல்பு கூறுவது. "எனச்சேர்த்துக் கொள்ளவும்."

ருஎஎ-வது. பக்கத்தில் உச-வது. வரியில் வியாழனுக்குத்தம்பி என்பதன்பின் புலத்திய முனியை உசத்திய முனியுமாகச் சேர்த்துக்கொண்டு, கசமுனி என்பதைத் தள்ளிப்போடவும்.

Koviloor Digital Library

பரிசோதனபத்திரம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்
௫	௯௯	தேறுன்றும்படி ...	தேறுன்றும்படி.
௧௪	௧	நெறியையபெருக ...	நெறியைப்பெருக.
௨0	௨0	வையாருளாலே ...	மையாருளாலே.
,,	௨௧	பேருலகிறுக்கென ..	பேறுலகிறுக்கென.
,,	௨௫	ஷெ	ஷெ
௨௨	௧௫	கரங்களைதட்டுதலும் ...	கரங்களைத்தட்டுதலும்.
,,	௯௨	விசும்பினிறைந்த ...	விசும்புநிறைந்த.
௪௫	௭	பாடும்தொழும்பு ...	பாடுதொழும்பு.
௫௯	௯	பெருகொளி ...	பெருகொலி.
௫0	௧௨	போதத்தைதிருமுலை ...	போதத்தைத்திருமுலை.
,,	௧௯	அரிவரிய ...	அறிவரிய.
௫௫	௨0	தக்காரம் ...	தக்கராகம்.
,,	௨௨	கென்றை ...	கொன்றை.
௫௭	௨௫	உபசாரங்களை செய்தற் கிடறுப ...	உபசாரங்களைச்செய்தற்கிடறுப
௬௯	௧0	துதித்துசிரசின்மேல் ...	துதித்துச்சிரசின்மேல்
௬௬	௨௮	கண்படைமன்று ...	கண்டனடமன்று
௬௮	௧0	நவில்பவரும்பராரோதிர்கொள ...	நவில்பவரும்பராரொதிர்கொள
௬௧	௨௭	ஐபர் ...	ஐயர்.
௭௨	௨	அமிர்தமுண்டார் ...	அமிர்தமுண்டார்.
,,	௮	காழியர் ...	காழியார்.
௭௯	௧௫	திருவருள்பெற்று திருதில்லை ...	திருவருள்பெற்றுத்திருத்தில்லை
௮௪	௨௮	எளியவர் ...	எளிவர
௮௨	௮	முதலவர்க் குரியமைத் தொழில் ...	முதல்வர்க்குரிமைத்தொழில்
௮௭	௪	திருவாயிலிறுள் ...	திருவாயிலிறுள்
,,	௨௪	பின்றும்பதிகத்தினில் ...	பின்றும்அப்பதிகத்தினில்
௯௧	௨௫	காட்டபாவை ...	கட்டபாவை
௯௪	௨௭	தம்முடன்திரு வரத்துறை. ...	தம்முடன்திருவரத்துறை.
௧௨0	௮	பிரவைடந்த ...	பிரவைடந்த.
௧௨௫	௧	தேவாரம் ...	திருவிராகம்-இந்தளம்.
௧௨௯	௨௫	சருப்பையும் ...	சருப்பையையும்.
௧௨௮	௧௧	நம்பரன் ...	நம்பரன்.
௧௩௪	௨௪	தன்னிலணைந்தனர் ...	தன்னிலணைந்தனர்.
௧௯௯	௧௧	0	இ-ன்.
௧௩௧	௨௧	சாயுச்சிந்யதை ...	சாயுச்சியத்தை.
௧௪௭	௧௮	அத்தலத்தில்னின் ...	அத்தலத்தில் நின்றும்.
௧௫௩	௨௫	மொழி ...	மொலி.
,,	௯௯	கோடிக்காவிலமர்ந்த ...	கோடிகாவிலமர்ந்த.
௧௫௫	௧	திருமக்கலக்குடி ...	திருமங்கலக்குடி.
,,	௭	மந்திரமாம் ...	மந்தமாம்.

Koviloor Digital Library

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
,,	௬௨	பாடுந்தமிழ் ...	கூடுந்தமிழ்.
௧௫௬	௨௧	கெடுக்கும் ...	கொடுக்கும்.
௧௫௮	௩	ஞானசம்பந்தன்'நற்றமிழ்	ஞானசம்பந்தனநற்றமிழ்.
,,	௩௨	குவலநாயகி ...	குவலயநாயகி.
௧௫௯	௧௪	உகூகூ ...	உகூகூ.
௧௫௯	௨௨	திறவான். ...	திறலான்.
௧௬௦	௬	களிப்பனோடு ...	களிப்பினேடு.
௧௬௧	௨௭	ஐயாறுடையையனெயென்று ...	ஐயாறுடையயனேயென்று.
௧௬௨	௭	வல்லார்சள் ...	வல்லார்கள்.
,,	௨௮	விமலா ...	விமலர்.
௧௬௩	௧௫	படநெறி ...	படருநெறி.
௧௬௬	௧௦	இனையா ...	இலையா.
,,	௩௧	மருத்துகளும் ...	மருத்துக்களும்.
௧௬௮	௭	பிணிமுயலகன்பாடு ...	பிணியாதுமுயலகன்.
௧௬௯	௧௬	நகரம்மலங்கரிமின் ...	நகரமலங்கரிமின்.
,,	௫௨	புக்காள் ...	புக்கான்.
௧௭௧	௧௧	தனிவில்பிணி ...	தணிவில்பிணி.
,,	௧௩	அணிகிளார் ...	அணிகிளர்.
,,	௨௩	திங்கனென்றும் ...	திங்களென்றும்.
,,	௩௦	துலங்கி ...	துளங்கி.
௧௭௨.	௧௯	ஏழைவைாட ...	ஏழையைவாட.
,,	௨௩	றென்னறங்கிள ...	றென்னங்கிள.
௧௭௪	௨௦	பயின்றுர் ...	மகிழ்ந்தார்.
௧௭௫	௨	நாடர்வந்று ...	நாடர்வந்து.
,,	௧௦	நிலமை ...	நிலைமை.
,,	௨௦	பணி ...	பயில்.
,,	௨௫	பரவி ...	பரவு.
௧௭௬	௯	மெஞ்ஞான ...	மெய்ஞ்ஞான.
,,	௧௧	மெஞ்ஞான ...	மெய்ஞ்ஞான.
,,	௧௮	விழிவாரொலி ...	விழவாரொலி.
௧௭௮	௧௦	மூவிளையாள் ...	மூவிலையான்.
௧௭௯	௨௬	தலைதுளி ...	தலைபனித்துளி.
,,	௫௧	மெய் ...	மொய்.
௧௮௨	௧௮	இவ்வினையாமொன்று ...	இவ்வினையாமென்று.
௧௮௪	௨௫	கொடிமுடி ...	கொடுமுடி.
௧௮௬	௧௦	சிந்தையுற்றுயராவதிர்வோ ...	சிந்தையிற்றுயராவதிர்வரோ.
,,	௧௪	மங்கிலை ...	அங்கிலை.
,,	௫௪	அங்கத்தவாவாயினள் ...	அங்கத்தயர்வாயினள்.
௧௯௧	௬	காணுவும்மை ...	காணுவுண்மை.
௧௯௨	௪	மணியம்மருங்கு ...	மணிமையம்மருங்கு.

Koviloor Digital Library

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௧௯௧	௨௯	அங்குள்ளன ...	அங்குள்ளன.
௨௦௧	௨௨	சேஞ்ஞாருடன் ...	சேஞாருடன்
,,	௨௯	ஷெ	ஷெ
,,	௩௦	ஷெ	ஷெ
௨௦௫	௮	சம்பந்தனன்றும் ...	சம்பந்தனன்றும்.
௨௦௯	௯	திருக்சருக்காலூர் ...	திருக்கருகாலூர்.
௨௧௧	௨௬	இத்தளம் ...	நட்டராகம்.
௨௧௩	௨௦	தேம்பிவயல் ...	சேம்பியயல்.
௨௨.௩	௬	சந்நிதியப்பர் ...	செந்நெறியப்பர்.
௨௨௬	௨௫	தயலேமர ...	தயலே.
௨௨௯	௨௬	விரிபோது ...	மரவிரிபோது.
௨௨௮	௩௧	சண்பாகாண்ணியேசனா	சண்பகாரண்ணியேசனை.
௨௩௧	௨௭	இளமுகில். ...	இனமுகில்.
௨௪௨	௩	இன்னிசை ...	இன்னிசை.
,,	௨௬	வைகலின்கருள்ள ...	வைகலின்கணுள்ள.
௨௪௩	௨௪	திருவழுத்தூர் ...	திருவழுந்தூர்.
௨௪௫	௩௨	திருவுள்ளத்திணிறைந்த .	திருவுள்ளந்திளிறைந்த.
௨௪௭	௧௧	பாடியருனினர் ...	பாடியருளினார்.
௨௪௧	௪	அலம்பிறப்பு ...	அவலமறும்பிறப்பு.
௨௫௩	௧௦	அவர்குணர ...	அவர்க்குணர.
௨௫௮	௨௦	கங்கையென்லும் ..	கங்கையென்றும்.
௨௬௦	௭	பொழிதின்சண் ...	பொழுதின்கண்.
,,	௪௧	பாணனார்தாங் ...	பாணனார்தாம்.
,,	௧௭	வல்லார் ...	வள்ளலார்.
,,	௨௯	போற்றிச் ...	போற்றி.
௨௬௧	௪	அணைந்து ...	அணைந்து.
௨௬௨	௨௦	பாணருந்தக் ...	பாணருந்தங்க
௨௬௩	௮	அருளிச்செயதார் ...	அருளிச்செய்வார்.
௨௬௪	௬	விருப்வால் ...	விருப்பால்.
,,	௨௯	நாவைககாரோணம் [ளி	நாகைக்காரோணம்.
௨௬௭	௧௨	கண்டத்தைக்கொண்டரு	கண்டத்தைக்கொண்டருளி.
௨௬௮	௨௭	அங்ரு ...	அங்கு.
௨௭[illegible]	௪௯	தயின்றவரும் ...	தயின்றாறும்
,,	௨௨	ஆபரணணத்தை ...	ஆபரணத்தை.
௨௭௧	௧௩	மலரும் ...	பலரும்.
௨௭௭	௧௧	கூப்பித்கொண்டு ...	கூப்பிக்கொண்டு.
௨௮௦	௧	கணபதியிச்சரம் ...	கணபதியீச்சரம்.
,,	௨௬	அத்திருத்தொண்டநாயனாரும் ...	அச்சிறுத்தொண்டநாயனாரும்.
௨௮௧	௭	மெய்மை ...	மெய்ம்மை.
௨௮௨	௨௭	முப்போது செயமுடி மேல் ...	முப்போதுஞ்செய்முடிமேல்.
,,	௨௮	வாசமலர் ...	வாசமாமலர்.
௨௮௩	௩௯	விளம்பி ...	வினவி.

Koviloor Digital Library

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௨௮௪	௯	விளம்பி ...	வினவி.
௨௯௦	௨௭	ஏன்றுகொள்ளுங்கோல்...	என்றுகொளுங்கோல்.
,,	௩௨	உலகாதியர் ...	உலகாதியும்.
௨௯௧	௧௯	மெ:ப்மை ...	மெய்ம்மை.
௨௯௪	௮	பதிதளையும் ...	பதிகளையும்.
,,	௨௨	இன்னியகழுமலம் ...	இன்னியல்கழுமலம்.
,,	௨௪	பொருடகுமே ...	பொருடருமே.
௨௯௯	௧௧	மெய்மைப்பகுதியைதெ	மெய்ம்மைப்பகுதியைத்தெளி
;,	௨௭	மெய்மை [ளிய	மெய்ம்மை. [ய.
௩௦௨	௬	நீலைகலங்காத ...	நிலைகலங்காத.
௩௦௮	௨௩	பகிக ...	பதிக.
௩௦௯	௨௯	திபதூபம் ...	தூபதீபம்.
௩௧௪	௧௯	மறையவர்கள் ...	மறையவர்.
௩௧௫	௨	பிள்ளையார் ...	பிள்ளையார்.
,,	௨௨	கூறியருளினுர் ...	கூறியருளினுர்.
,,	௨௯	மேவுவேதியர் ...	மேவும்வேதியர்.
௩௧௬	௩௩	முன்ணங்குமாறுபோல...	முன்வணங்குமாறுபோல.
௩௧௭	௮	திரண்டத்தனங்கள் ...	திரண்டதனங்கள்.
௩௨௩	௩௩	மெய்மை ...	மெய்ம்மை.
௩௨௫	௨௪	காசுஅவை ...	காசும் அவை
௩௩௬	௨௨	டிவில ...	முடிவில்.
,,	௩௬	காப்புக்செய்து ...	காப்புசெய்து.
௩௩௯	௧௭	சன்னிதி ...	சந்நிதி.
௩௩௮	௧௮	மறப்புரி ...	மறம்புரி.
௩௪௭	௩௫	கடிட்ய ...	கட்டிய.
௩௫௧	௧௦	சொன்னுர்கன் ...	சொன்னுர்கள்.
௩௫௭	௨௧	நிறைந்ததண்றே. ...	நிறைந்ததன்றே.
௩௬௫	௩௨	முன்னுட்தீக்குணம் ...	முன்னுந்தீக்குணம்.
௩௬௬	௩௬	புறததினின்றுங் தசமவ ணமுனிவரும்	புறத்தினின்றும்வந்தசமணமு னிவரும்.
௩௬௭	௨௪	தகாங்து ...	தகர்த்து.
௩௭௨	௩௨	மூன்றுலமேயன்றி ...	மூன்றுலகமேயன்றி.
,,	௩௪	உணர்விறுற்றுகாால் ...	உணர்வினிற்றுகளால்.
௩௭௫	௨௯	சிவபுரச்செல்வர் ...	சிரபுரச்செல்வர்.
௩௭௮	௧௪	ரெடுகோபுரம் ...	நெடுங்கோபுரம்.
௩௭௯	௯	பணியுசிறபபித்து ...	பணியுஞ்சிறப்பித்து.
௩௮௭	௨௮	வான்மதி ...	வான்பதி.
௩௮௮	௨௨	அழிவுறு ...	அவர்அழிவுறு.
௩௯௧	௯	அவனையே ...	அதனையே.
,,	௧௧	பெண்ணம் ...	எண்ணம்.
௩௯௨	௧௭	வக்த ...	வந்த.
,,	௨௪	இருகக்கட்டிய ...	இறுகக்கட்டிய.
௩௯௩	௨	சேர்ந்து ...	சேர்ந்ததுன்னுவதுமதியாகும்
,,	௩௯	ஒழிவமென்ருர் ...	ஒழிவதென்ருர்.

Koviloor Digital Library

பக்கம்	வரி.	பிழை.	திருத்தம்.
௯க௪	உஎ	தளந்தார் ...	தளர்ந்தார்.
௪0௬	உஎ	மறைத்திறுவர் ...	மறைச்சிறுவர்.
௪கஉ	க	சமணாகள் ...	சமணர்களை.
௪௩௯	அ	ஐவருபிரீதியடைவார்கள்	ஐவரும்பிரீதியடைவார்கள்.
௪௪எ	ரு	உள்ளத்தாராகியும் ...	உள்ளத்தராகியும்.
௪ரு௯	க௪	மெஞ்ஞானம் ...	மெய்ஞ்ஞானம்.
௪௬௬	௩௬	பிறிதென்றன ...	பிறிதன்றென.
௪எஅ	உரு	சிறக்தது ...	சிறந்தது. [நாயனார்.
ரு0எ	௯	குலச்சிறைநாயனார் ...	மெய்யன்புடையகுலச்சிறை
ருகஉ	கஅ	போகுதற்கு ...	போதுதற்கு.
,,	,,	வணக்கி ...	நீக்கி.
ரு௨அ	௩௨	இலலையேயவறுணர்ச்சி...	இல்லையேலவனுணர்ச்சி.
ரு௪௪	உக	சாதலின்முன் ...	காதலின்முன்.
ரு௪௩	உஎ	திருக்கடைகாப்பு ...	திருக்கடைக்காப்பு.
ருரு௩	உஅ	சிருமறைசசிறுவர் ...	சிறுமறைச்சிறுவர்.
ருருஅ	உக	பணிந்து ...	கடந்து
ரு௯உ	ரு	நொடிமையினற ...	நொடிமையினார்திறம்.
ருஅஉ	கக	வனத்திருப்பாரே ...	வானத்திருப்பாரோ.
ரு௯0	உ0	அறிவறிய ...	அறிவரிய.
,,	உரு	அறிவறிய ...	அறிவரிய.
௬0௩	க	நல்லினை ...	நல்வினை.
௬௩௪	க	சிறப்வெதிர ...	சிறப்பெதிர.
௬௩எ	௬௯	வரிவளர் ...	விரிவளர்.
௬௪உ	க௬	வணங்யருளினர் ...	வணங்கியருளினார்.
௬௪ரு	உஅ	வண்டார்குழலரிவை ...	வண்டார்குழலரிவை.
௬ரு௪	உஎ	மிக்ச ...	மிக்க.
௬௬உ	உரு	மணஞ்செய்த ...	மணஞ்செய.
,,	௩0	செய்த ...	செய.
௬௬ரு	கஎ	நிவெள்சுடர் ...	நீளவெண்சுடர்.
௬எக	உ0	திருகழுத்த ...	திருக்கழுத்து.
௬எ௯	உரு	புந்திபானிறைதியானம்..	புந்தியாணிலை தியானம்.
௬அரு	கக	எஞ்ஞோான் ...	எஞ்ஞோான்.

Koviloor Digital Library

திருநள்ளாறுந்திருவாலவாயும். பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

† பாடகமெல்லடிப்பாவையோடு படுபிணக்காட்டிடம்பற்றிநின்று
நாடகமாடு நள்ளாறுடையநம்பெருமானிது வென்கொல்சொல்லாய்
சூடகமுன்கை மடந்தைமார்கடுணைவரொடுந்தொழுதேத்திவாழ்த்த
வாடகமாடநெருங்கு கூடலாலவாயின் கணமர்ந்தவாறே.

அன்புடையானையரனைக் கூடலாலவாய் மேவிய தென்கொ லென்று
நன்பொனைநாதனை நள்ளாற்றானை நயம்பெறப்போற்றி நலங்குலாவு
பொன்புடை சூழுமாடக் காழிப்பூசுரன் ஞானசம்பந்தன் சொன்ன
வின்புடைப்பாடல்கள்பத்தும்வல்லாரிமையவரேத்தவிருப்பர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

திருத்தெளிச்சேரி. பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

§ பூவலர்ந்தனகொண்டு முப்போதுமுன்பொற்கழ
றேவர்வந்துவணங்கு மிகுதெளிச்சேரியீர்
மேவருந்தொழிலாளொடு கேழல்பின்வேடனாம்
பாவகங்கொடுநின்றது போலுநும் பான்மையே.

திக்குலாம்பொழில் சூழ்தெளிச்சேரியெஞ் செல்வனை
மிக்ககாழியுள் ஞானசம்பந்தன் விளம்பிய
தக்கபாடல்கள் பத்தும்வல்லார் கடமுடி
தொக்கவானவர் சூழவிருப்பவர்சொல்லிலே.

திருச்சிற்றம்பலம்.

திருநெறிக் காரைக்காடு. பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

‡ வாரணவும்முலை மங்கைபங்கினராயங்கையிற்
போரணவும் மழுவொன்றங் கேந்திவெண்பொடியணிவார்
காரணவுமணிமாடங்கடைநவின்றகலிக்கச்சி
தாரணவுமலர்ப் பொய்கை நெறிக் காரைக்காட்டாரே.

கண்ணாருங் கலிக்கச்சிநெறிக்காரைக் காட்டுறையும்
பெண்ணாருந்திருமேனிப் பெருமானதடிவாழ்த்தித்

† இக்குறியிட்டிருக்குந் திருப்பதிகத்தை (ருசஅ) வது பக்கத்தில் (கூட) வது பாட்டின்பின் சேர்த்துக் கொள்ளவும்.

§ இக்குறியிட்டிருக்குந்திருப்பதிகத்தை (ருகூ) வது பக்கத்தில் (கூட) வது பாட்டின்பின்சேர்த்துக்கொள்ளவும்

‡ இக்குறியிட்டிருக்குந்திருப்பதிகத்தை ([illegible]) வது பக்கத்தில் ([illegible]) வது பாட்டின்பின் சேர்த்துக்கொள்ளவும்.

Koviloor Digital Library

தணை றாநய்பொழிறகாழித் தமிழ்ஞானசம்பந்தன்
பண்ணுறுநந்தமிழ்வல்லார் பரலோகத்திருப்பாரே.

திருச்சிற்றம்பலம்

திருவலிதாயம் - பண் - நட்டபாடை

** பத்தரோடுபலரும் பொலியம்மலரங்கைப்புனல்தூவி
யொத்தசொல்லியுலகத்தவர்தாந்தொழுதேத்தவுயர்சென்னி
மத்தம்வைத்தபெருமான்பிரியாதுறைகின்றவலிதாயஞ்
சித்தம்வைத்தவடியாரவர் மேலடையாமற்றிடர்நோயே.

வண்டுவைகும்மணமல்கியசோலைவளரும்வலிதாயத்
தண்டவாணனடிபுள்குநலாலருமாலைந்தமிழாகக்
கண்டல்வைதுகடற்காழியுள்ஞானசம்பந்தன்தமிழ்பத்துங்
கொண்டுவைகியிசைபாடவல்லார் குளிர்வானத்துயர்வாரே,

திருச்சிற்றம்பலம்.

திருவொற்றியூர் - பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

|| விடையவன் விண்ணுமண்ணுந் தொழநின்றவன் வெண்மழுவாட்
படையவன் பாய்புலித் தோலுடை கோவணம் பல்கரந்தைச்
சடையவன் சாமவேதன் சசிதங்கிய சங்கவெண்டோ
டுடையவன்றூன மில்லியுறையும் மிடமொற்றியூரே.

ஒண்ணு ... மல்கு சென்னியிறைவன் னுறைவொற்றியூரைச்
சண்பையர் தந்தலைவன் றமிழ்ஞானசம்பந்தன் சொன்ன
பண்புனைபாடல் பத்தும் பரவிப் பணிந்தேத்தவல்லார்
விண்புனைமேலுலகம் விரும்பெய்துவர் வீடெளிதே.

திருச்சிற்றம்பலம்.

** இத்திருப்பதிகத்தைத் திருப்பதிகத்தை (ருகஙு)வது பக்கத்தில் (கOஙக) வது பாட்டின்முன்சேர்த்துக்கொள்ளவும்.

|| இத்திருப்பதிகத்தைத் திருப்பதிகத்தை (ருகஙு) வது பக்கத்தில் (கOஙக) வது பாட்டின்பின் சேர்த்துக்கொள்ளவும்.

... இந்-வது. பக்கத்திலிருக்கும் "ஒள்ளிநள்ளக்கதிக்காமிவனொளி" என்னும் திருப்பதிகத்தை (ருகச) வது பக்கத்தில் (கUஉஅ) வது பாட்டின் பின் சேர்த்துக்கொள்ளவும்.

ருகஎ-வது. பக்கத்திலிருக்கும் "சந்தமாரகிலொடு சாதிதேக்கும்மர" என்னுந் திருப்பதிகத்தை (ருகஙு) வது பக்கத்தில் (கOஙO) வது பாட்டின்பின் சேர்த்துக்கொள்ளவும்.

Koviloor Digital Library